வெண்முரசு

மகாபாரதம் நாவல் வடிவில்

# களிற்றியானை நிரை

ஜெயமோகன்

# களிற்றியானை நிரை - 1

## பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள்-**1**



தொலைவுகள் அறியமுடியாதவை. ஆகவே ஊழ் என, சாவு என, பிரம்மமே என மயங்கச்செய்பவை. குழவிப்பருவத்தில் அருகே வந்தணையும் ஒவ்வொரு பொருளும் விந்தையே. அறியத் தந்து முற்றறியவொண்ணாது விலகி விளையாடுபவை. பொருட்களால் கவ்வி அழுத்தி மண்ணோடு பிணைக்கப்படுகிறது குழவி. ஒவ்வொன்றும் தானாகி ஒவ்வொன்றிலும் தங்கி மீள்கிறது. அப்போதும் ஒவ்வொரு கணமும் அதை தொலைவு ஈர்த்தபடியே இருக்கிறது. ஒவ்வொன்றிலிருந்தும் விழிதூக்கி அது தொலைவைத்தான் பார்க்கிறது.

அத்தனை குழவிகளும் கைநீட்டி 'அங்கே அங்கே' என்கின்றன. அன்னையர் அதை புரிந்துகொள்வதில்லை. "அதுவா?" என்கிறார்கள். "அங்கா?" என்று சுட்டிக் கேட்கிறார்கள். அத்தையா? தந்தையா? தாதனா? அவ்வையா? எவர்? நீ கோருவது எதை? அவர்கள் சுட்டிக்காட்டுவது ஒவ்வொன்றும் தொலைவுக்கு இப்பாலுள்ளது. குழவி மேலும் மேலும் என விழைகிறது. தொலைவு என்பதே மேலும் என்பதன் மறுவடிவம்தான். இங்கிருக்கும் அனைத்துக்கும் அப்பால். இங்கிலாதவற்றாலான ஒரு வெளி. அது அன்னை இடையிலிருந்து எம்பி எம்பி தாவுகிறது. தந்தை தோளிலிருந்து பறந்தெழ விழைகிறது. அவர்கள்

இறுகப்பிடித்துக்கொள்கிறார்கள். புகையை வான் என ஈர்க்கிறது குழவியை தொலைவு.

ஆதன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து நெடுந்தொலைவை பார்க்கமுடிந்தது. அவனுடைய சிற்றூரில் மிகத் தொலைவை பார்க்கத் தக்க இடம் அது ஒன்றுதான். இல்லையேல், முழு நாளும் நடந்து கடற்கரைக்குச் செல்லவேண்டும். அவன் கடற்கரைக்கு செல்வதில்லை. அங்கே தொலைவை அலைகள் மறைத்துவிடுகின்றன. தொலைவுக்கு முன் அமைதிகொள்ள அறியாதது கடல். தொலைவான் கவிந்து ஊழ்கத்தில் அமர்ந்த கடல் ஒன்று எங்கோ இருக்கக்கூடும். நீர்வெளி உறைந்து படிகப்பரப்பென்று ஆகி உருவாவது அது. அவன் அதை தன் கற்பனையில் உருவாக்கிக் கொள்வதுண்டு. இக்கடல்களுக்கு அப்பால் அது உள்ளது. ஆனால் இந்த அலைகள் வழியாக அங்கே செல்லவியலாது.

அந்தச் சிறுகுன்றை ஊரில் சித்தன்மேடு என்றார்கள். அங்கே எப்போதும் சித்தர் என ஒருவர் இருப்பதுண்டு. அவர் அங்கிருக்கும்வரை அவரை கிழவர் என்றோ பண்டாரம் என்றோ கூறுவார்கள். அவர் குன்றிறங்கி தெருக்களில் நடந்து இல்லந்தோறும் நாடிவந்து “அன்னையே, அன்னமென வருக!” என்று குரலெழுப்பினால் மட்டும் அவருடைய திருவோட்டில் பிடியரிசியை போடுவார்கள். அவரை வணங்குவதோ அவரிடமிருந்து வாழ்த்துபெறுவதோ இல்லை. அவர் அந்த மேட்டிலெழுந்த மரங்கள்போல் ஒருவர். அவர் ஒருநாள் அங்கே உயிரிழந்து கிடந்தால் அக்கணமே அவரை சித்தர் என்பார்கள். அவருடைய உடல் மண்புகுந்த இடத்தில் சிறு சிவக்குறியை நாட்டுவார்கள். முழுநிலவுநாளில் ஒருமுறை அங்கே பூவும் நீரும் அன்னமும் கொண்டு வழிபடுவார்கள். ஆனால்

ஓராண்டில் அவரை முற்றிலும் மறந்துவிட்டிருப்பார்கள். சித்தன்மேடு என்னும் சொல்லை மட்டும் சூடி அச்சிறுகுன்று ஊருக்கு மேல் உறைந்த அலையென எழுந்து மரங்கள் செறிந்து, பாறைகள் சூடி நின்றிருக்கும்.

நெடுநாள் பிந்துவதில்லை, பிறிதொருவர் கையில் திருவோட்டுடன், புழுதிபடிந்த கால்களுடன், சடைமுடிக்கொண்டை அணிந்து தன்னந்தனியராக அங்கே வந்துசேர்வார். தனக்குரிய சிறு குடிலை அங்கே கட்டிக்கொள்வார். அவர் அங்கே வந்திருப்பதை குன்றின்மேல் அடுபுகை எழுவதைக் கண்டு ஊரார் அறிவார்கள். அவர் முகத்தை பார்ப்பதற்கு மட்டும் ஆவல்கொள்வார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே முகம். ஆகவே வேறுபாடுகளை பேசிக்கொள்வார்கள். “அவரைப்போல இவர் மேனிவண்ணம் கொண்டவரல்ல” என்பார்கள். “அவரிடம் இருந்த நிமிர்வு என்ன!” என வியப்பார்கள். “அவர் கண்கள் தீக்கங்குகள் அல்லவா?” என்பார்கள். அப்பேச்சினூடாக புதியவரை அன்றாடத்துள் கொண்டுவந்து அமையச்செய்வார்கள். அதனூடாக அவருக்கு ஒரு பெயரை சூட்டுவார்கள். அப்பெயரில் அவரை அடைத்தபின் அவர் கப்பரையுடன் தெருக்களில் வந்தால் இயல்பாக கடந்துசெல்ல முடியும். அப்பெயரை உதறி அவர் எழும்போதுதான் அவர் சித்தர்.

ஆதன் சிறுவனாக இருந்தபோது அங்கே முதியவர் ஒருவர் இருந்தார். அவரை பானைச்சித்தர் என்றனர். அவர் மறைந்த பின்னர் இன்றிருப்பவர் வந்தார். அவருக்கு வெற்றிலைச்சித்தர் என்று பெயரிட்டிருந்தனர். அவர்களுக்கு அந்த இடம் எப்படி தெரிகிறது என்பது அவனுக்கு என்றும் விந்தைதான். ஊருக்கு அப்பால் உமணர்களின் வண்டிப்பாதை செல்கிறது. அங்கே

நின்று நோக்கினால் சித்தன்மேடும் அதன் நெற்றி என எழுந்த கவளப்பாறையும் தெரியும். அது அவர்களை அழைக்கிறது போலும் என எண்ணிக்கொள்வான். ஆனால் அவன் அச்சாலையில் நின்று நோக்கியபோது அது செறிந்த முள்மரங்களுக்குமேல் எழுந்த ஒரு மேடு என்றன்றி ஏதும் தோன்றவில்லை.

ஊரிலிருந்து எவரும் அங்கே செல்வதில்லை. மேட்டின் சரிவெங்கும் சித்தர்களின் நிறைவிடங்கள் புதர்களுக்குள் எழுந்த சிறிய சிவக்குறிகளாக நின்றிருந்தன. திருத்தப்படாத நிலமாகையால் முட்புதர் மண்டியிருந்தது. அங்கே சென்று பாம்பு தொட்டு மறைந்தவர்கள் பலர். அவன் இளமையிலேயே அங்கே வரத்தொடங்கிவிட்டிருந்தான். முதல்முறை பானைச்சித்தர் மறைந்தபின் நிகழ்ந்த வழிபாட்டுக்காக முழுநிலவுநாளில் அன்னையுடன் அங்கே வந்தான். நிலவொளியில் எழுந்து வான்நோக்கி நின்ற கவளப்பாறையையே நோக்கிக்கொண்டிருந்தான். மழை விழுந்து அரித்து நீண்ட கோடுகளும் பொருக்குகளுமாக கருமைகொண்டு எழுந்து நின்ற புடைப்பு. அறிந்த எந்த வடிவங்களுடனும் அதை ஒப்பிட முடியாது. பெரும்பாலான பாறைகளுக்கு அவை ஒப்புமைகொள்ளும் ஒன்றுடன் இணைத்தே அங்கே பெயர்களிருந்தன. எவற்றுடனும் ஒப்பிட இயலாத அது வெறும் உருளை எனப்பட்டது.

அவன் முதலில் அதைப் பார்த்ததும் எவரோ புதர்களுக்கு அப்பாலிருந்து மெல்ல தலைதூக்குவதாகவே எண்ணினான். மிகப் பெரிய ஒரு விலங்கு. அவன் அதையே நோக்கிக்கொண்டிருந்தான். அதை முன்னரே கண்டிருக்கிறோம் எனத் தோன்றியது. அன்றுவரை அவன் நோக்கி அறிந்த

எதிலும் இல்லாத ஒன்று அதில் இருந்தது. அது என்ன என்று எண்ணும் அகவையை அவன் அடைந்திருக்கவில்லை. அவன் அன்னையிடம் கைசுட்டி அப்பாறையை காட்டினான். அன்று அவன் பேசத்தொடங்கியிருக்கவில்லை. அவனுக்கு ஐந்து அகவை முடிந்துவிட்டிருந்தது. அவன் அன்னைக்கு அவனொருவனே மைந்தன். பொற்கொல்லராக இருந்த அவன் தந்தை இறந்தபின் அவன் ஒருவனே அவள் வாழ்வின் பிடிப்பு என்றிருந்தான். அவனை பேசவைப்பதற்காகவே அவள் அனைத்து ஆலயங்களுக்கும் அழைத்துச் சென்றாள்.

பார்க்கும் பொருட்கள் அனைத்தையும் கூர்ந்து நெடும்பொழுது நோக்கிக்கொண்டிருப்பது அவன் வழக்கம். அவன் நோக்கு நிலைகுத்தியிருப்பதைக் கண்டு அவன் அன்னையும் அயலாரும் அவனுக்கு வலிப்பு வந்துவிட்டதென எண்ணியதுண்டு. அவன் அன்னை வெறிகொண்டு கூவியபடி அவனை தூக்கி குலுக்குவாள். அவன் கலைந்து அவளை நோக்கி புன்னகைசெய்யும்போது உளமுடைந்து அழுவாள். அவனை நெஞ்சோடணைத்தபடி புலம்புவாள். பின்னர் அது அவன் இயல்பென்று தெளிந்தாள். அவன் பொருட்கள் எதையும் எடுக்க முற்படுவதில்லை. கைநீட்டுவதுகூட இல்லை. நோக்கியபடி அமர்ந்திருப்பான். அப்பொருள் அளிக்கும் மலர்வு அவன் முகத்தில் தெரியும்.

அவனை அன்னை மூத்த பொற்கொல்லரின் பட்டறையில் கல்விக்கு சேர்த்தாள். அவன் அங்கிருந்து நழுவி தனித்து நடந்து சித்தன்மேட்டின்மேல் ஏறி கவளப்பாறைக்குமேல் சென்று அமர்ந்து தொலைவை நோக்கிக்கொண்டிருந்தான். பகலெல்லாம் அவனைக் காணாமல் ஊரெல்லாம் தேடிய அவன் அன்னை ஊர்ச்சாவடியில் மயங்கி விழுந்தாள். ஊரார்

நான்கு பக்கமும் தேடினர். கள்வர்கூட்டமோ இரவலர்குழுக்களோ பிடித்துக்கொண்டு சென்றிருக்கக்கூடும் என்றனர் சிலர். ஊருக்கு வடக்கே அமைந்த ஏரியிலோ கைவிடப்பட்ட தொன்மையான ஊருணியிலோ விழுந்திருக்கலாகும் என்றனர் சிலர். எவரும் செய்வதற்கேதும் இருக்கவில்லை. “நீர் அவனை கொண்டுவருவது வரை காத்திருக்கவேண்டியதுதான்” என்று ஊர்முதல்வர் சொன்னார். “அல்லது அரசக்காவலர்கள் அவனை கண்டுபிடித்து மீட்டுவரவேண்டும்… எங்குள்ளவன் என்று சொல்வதற்கும் நாவற்றவன் என்பதனால் அது நிகழப்போவதில்லை.”

அன்று மாலை சித்தன்மேட்டில் புகை எழுந்தது. “புதிய சித்தர் போலும்… எங்கிருந்துதான் இவர்கள் வருகிறார்களோ!” என்றார் ஊர்முதல்வர். “தொலைவிலிருந்து ஒருவர் தோன்றி முழுத்து அணைவதை ஒருநாள் கண்டேன்… முதல் மழையின் முதல் மழைத்துளி விசும்பிலிருந்து வருவது போலிருந்தது” என்று முதியவரான மிளையன் சொன்னார். மறுநாள் சித்தன்மேட்டிலிருந்து நிமிர்ந்த மெல்லிய உடலும் நெஞ்சில் படர்ந்த கரிய தாடியும் சுருட்டி தலைமேல் கட்டிய சடைப்புரிகளும் கொண்ட துறவி தோளில் அவனை தூக்கியபடி ஊர்ச்சாவடி நோக்கி வந்தார். “உச்சிப்பாறைமேல் இவனை பார்த்தேன்” என்றார். அவன் அன்னை வெறியுடன் கூச்சலிட்டபடி ஓடிவந்து அவனை ஓங்கி ஓங்கி அறைந்து கதறி அழுதாள். அவன் “அங்கே, மிகத் தொலைவு!” என்று கைநீட்டி சொன்னான். “மிகப் பெரிய வானம்… நிறைய வெயில்!” அன்னை மேலும் கதற ஒரு பெண்மணி “கருப்பி, அவன் பேசுகிறான்!” என்றாள்.

அதன் பின்னரே அன்னை அவன் குரலை செவிகளால் கேட்டதை உணர்ந்து நெஞ்சில் கைவைத்து விக்கித்தாள். அவள் அவன் குரலை தன்னுள் எப்போதும் கேட்டுக்கொண்டிருந்தவள். அக்குரலை அவனுடையதென ஏற்க அப்போதும் அவள் அகத்தால் இயலவில்லை. அவள் வெறித்து நோக்கிக்கொண்டிருக்க ஒரு கிழவி அருகணைந்து "என்ன பார்த்தாய்?" என்றாள். "நெடுந்தொலைவு!" என்று அவன் சொன்னான். "அங்கே, நெடுந்தொலைவு..." அன்னை அழுதபடி தளர்ந்து மண்ணில் உடல்படிய படுத்துவிட்டாள். ஒவ்வொரு பெண்ணாக வந்து அவனை சூழ்ந்துகொண்டார்கள். "நீ எப்படி அங்கே சென்றாய்?" "அங்கே நாகங்களை பார்த்தாயா?" "இரவு எங்கே துயின்றாய்?" அவன் அவர்களை மாறிமாறி பார்த்து ஒற்றைச் சொற்களில் மறுமொழி உரைத்தான்.

அந்நிகழ்வை எவ்வகையிலும் பொருட்படுத்தாமல் துறவி கப்பரையுடன் ஊருக்குள் அரிசிகொள்ளச் சென்றார். "நன்று, அங்குள்ள சித்தர்களின் அருளே என்று கொள்க!" என்றார் ஊர்த்தலைவர். அன்னை துயரா களிப்பா என்றறியாத நிலையில் நெடுநேரம் இருந்தாள். எங்குளாள், எவ்வகையில் என்றே அறியாதவள்போல. அவனை அள்ளி அணைத்து காற்றுக்கு சுடரை என முந்தானையால் மூடிக்கொண்டு இல்லத்திற்கு கொண்டுசென்றாள். "எரிபொரி காட்டி சுற்றிப்போடு... எத்தனை விழிகள் பட்டிருக்குமோ" என்றாள் முதுமகள் ஒருத்தி. அன்னை அவனை முத்தமிட்டுக்கொண்டே இருந்தாள். இல்லத்திற்குள் கொண்டுசென்று அவனை அமரச்செய்து அன்னம் பரிமாறியபின் அருகமர்ந்து வினாக்களை எழுப்பிக்கொண்டே இருந்தாள். விடைகள் அவளுக்கு புரியவில்லை. அவன் குரலொன்றே அவளுக்கு போதுமானதாக இருந்தது.

ஆனால் அதன்பின் அவன் பொற்கொல்லர் கூடத்திற்கு செல்லவில்லை. பெரும்பாலான நாட்களில் கவளப்பாறைமேல் சென்றமர்ந்துகொண்டான். முதலில் அதை கடிந்து தடுத்த அன்னை பின்னர் சீற்றம் கொள்ளலானாள். துறவியிடமும் கடுஞ்சொல் உரைத்தாள். அவர் எவர் சொல்லையும் செவிகொள்பவரல்ல. அவனை தடுக்கமுடியாது என அவள் புரிந்துகொள்ள ஈராண்டாகியது. அதன்பின் அவள் அமைதியடைந்தாள். பகலோ இரவோ அவன் இல்லம் திரும்பும்போது ஒரு சொல்கூட பேசாமல் சென்று தாலமெடுத்திட்டு அன்னம் பரிமாறினாள். அவன் கிளம்பும்போது எங்கு செல்கிறாய் என்று கேட்காமலானாள். எவரேனும் அவனைப்பற்றி உசாவினால் ஒரு சொல்லும் மறுமொழி உரைப்பதில்லை.

ஆதன் அத்துறவியிடம் பேசிக்கொண்டிருப்பான். அவர் பெரும்பாலான வினாக்களுக்கு வெடித்துச் சிரிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆயினும் அவரிடம் பேசவே அவனுக்கு பிடித்திருந்தது. ஊரில் அவன் கண்ட அனைவரும் ஒற்றைமுகமும் ஒற்றைவிழிகளும் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசும் சொற்களும் ஒன்றே. இளமையில் அவன் அத்துறவியிடம் “அவர்கள் அனைவரும் ஏன் ஒன்றுபோல் இருக்கிறார்கள்?” என்று கேட்டான். அவர் கண்களில் நகைப்புடன் தாடியை உருவியபடி “வேறுபட்டிருந்தால் தனித்திருக்கவேண்டுமே?” என்றார். அவன் அதை உடனே புரிந்துகொண்டான். அவனுக்கு புரிகிறது என்று அவருக்கும் தெரிந்தது. “நீர் தன்னை கலக்கிக்கொண்டே இருக்கிறது” என்று அவர் மீண்டும் சொன்னார். “நெருப்பு தன்னில் எதுவும் கலக்க விடுவதில்லை.”

அவன் அச்சொற்களினூடாக நெடுந்தொலைவு சென்றான். ஊரிலுள்ள அனைவரும் ஓயாது உரையாடிக்கொண்டிருந்தனர். ஒருவர் தனித்திருந்தால் இன்னொருவர் அருகே வந்தமர்ந்து பேசத் தொடங்கினார். அவர்கள் பூசலிடுவதும் அணுகுவதன்பொருட்டே. பேசிப்பேசி தங்களை கலந்துகொண்டே இருந்தனர். மானுடமே இடைவிடாது தன்னை ஒன்றுடனொன்று இணைத்துக்கொண்டே இருக்கிறது. பேசுகிறது, பாடுகிறது, நடிக்கிறது, அழுகிறது, சிரிக்கிறது. "தனித்திருந்தால் என்ன ஆகும்?" என்று அவன் அவரிடம் கேட்டான். "நீர் மண்ணெங்கும் பரவுகிறது. வேர்களும் அன்னமும் மலர்களும் தேனும் மணமும் ஆகிறது. நெருப்பு விண்ணிலேறி முகிலாகிறது. கரைந்து விண்ணே ஆகிவிடுகிறது" என்று அவர் சொன்னார்.

அவன் அவரிடம் மட்டுமே பேசிக்கொண்டிருந்தான். பின்னர் அப்பேச்சும் நின்றுவிட்டது. அவன் அங்கே வந்து அவர் இருப்பதை இயல்பாக உணர்ந்து அங்கே தானுமிருந்தான். ஊரிலும் எவரிடமும் அவன் பேசுவதில்லை. அவன் பேசுவதில்லை என்பதனால் அவனுக்கு செவி கேட்கும், மொழி தெரியும் என்பதையே ஊர்மக்கள் மறந்தார்கள். அவன் முன் எந்தத் தடையுமில்லாமல் பேசத்தொடங்கினர். அதன் பின்னர் அவன் அவர்கள் தங்கள் மொழியால் மறைத்துக்கொண்டிருந்தவற்றை கேட்கலானான். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் அகத்தைக் கலந்து அழித்ததுமே வெறுமைகொண்டு தங்களுக்கென ஓர் அகத்தை சமைத்துக்கொள்ளலாயினர். அது ஆணவத்தாலானதாக இருந்தது. அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் தன்னைப்பற்றித்தான். அதன் நூறாயிரம் நுண்வடிவங்களைப்

பற்றி மட்டும்தான். அங்கே அவர்கள் அனைவரைப்பற்றியும் அறிந்தவனாக அவன் ஒருவனே இருந்தான்.

அவர்கள் அவனை மிக எளிதாக அவன் தந்தை என ஆக்கிக்கொண்டார்கள். அவர் விடுத்துச்சென்ற இடத்தில் அவன் சரியாகப் பொருந்தினான். அவன் தந்தை பொருள்மெய்க்கலை பயில்பவராக இருந்தார். அவருக்கு பொன்னுருக்கும் கலை கற்றுக்கொடுத்த முன்னோடிகளில் ஒருவர் இரும்பை பொன்னாக்க முயன்று அதில் கலம் வெடித்து உயிர்துறந்தார். அவருடைய சுவடிகள் அவன் தந்தையிடம் வந்தன. இளமையிலேயே மிகக் குறைவாகப் பேசுபவராக இருந்த அவருக்கு விழிநாகன் என்று அங்குள்ளோர் பெயரிட்டிருந்தனர். ஒரு அணிநகையை உறுத்து சிலகணங்கள் நோக்கிவிட்டாரென்றால் எந்த அளவுகளும் இல்லாமல் அதை திரும்ப உருவாக்கிவிடுபவர் என்று புகழ்பெற்றிருந்தார். அந்தச் சிற்றூரில் எங்கும் அவர் சென்றமர இடமிருக்கவில்லை. அவருக்கான இடம் அச்சுவடிகளில் இருந்தது.

பன்னிரு ஆண்டுகள் அவர் அச்சுவடிகளில் இருந்து பொருள்மெய்க்கலையை நிகழ்த்திக்காட்ட முயன்றார். ஓய்வுப்பொழுதுகளில் தன் இல்லத்துக்குப் பின்புறம் அமைத்த கொட்டகையில் அப்பணியை செய்துவந்தவர் பின்னர் முழு நேரமும் அங்கே வாழலானார். ஒவ்வொருநாளுமென அவரிடம் சொல் அடங்கியது, விழிகள் ஒளிகொண்டன. அவர் அவர்களின் விழிகளுக்கு முன்னிருந்து மறைந்தே போனார். ஒருநாள் இரவு கலம் கருகி எழுந்த நச்சுப்புகையால் இருமித் துடித்து அவர் உயிர்துறந்ததையே அவருடைய துணைவி மறுநாள்தான் அறிந்தாள். அவள் சென்று பார்த்தபோது அவர் உடல் நீலமாக இருந்தது. கண்களில் நிலைகுத்திய வெறிப்பு எஞ்சியிருந்தது.

பொன்னாக்கும்பொருட்டு அவர் எடுத்துவைத்திருந்த பொருட்களில் ஒன்று குதிரையின் லாடம் என்பதை ஊர்த்தலைவர் கண்டார்.

அவர்கள் அந்த இறப்பை ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தனர். "பொருட்களின் மெய் என்பது ஒன்றே என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த மெய்யை சுவையென, வடிவென, வண்ணமென, அசைவென வகுத்து அவற்றின் இணைவையும் பிரிவையும் நெறிப்படுத்தியிருக்கிறது பிரம்மம். மானுடர் வாழும் உலகம் அந்த வகைமாறுபாடுகளால் ஆனது. பொருட்களை அவற்றின் மெய்மட்டுமே என ஆக்கலாகும் என நம்புகின்றனர் இவர்கள். அது பிரம்மத்திற்கு எதிரானது என்று நான் சொன்னேன். இச்சிற்றூரிலேயே பல தலைமுறைகளாக அந்த ஆய்விலிறங்கி உயிர்நீத்தோர் பலர்" என்றார் ஊர்த்தலைவர்.

மிளையன் "இரும்பை பொன்னாக்கியபின் என்ன செய்வீர் என்று நான் அவரிடம் கேட்டேன். அதை உம்மிடம் கொடுத்து பெரும்பணம் பெற்றுக்கொள்வேன். அதைக்கொண்டு பொன்னை இரும்பாக்குவேன். ஒரு கழஞ்சு இரும்பு பொன்னானால் அதைக்கொண்டு ஒரு வண்டிச்சகடமளவு பொன்னை இரும்பாக்க முடியும் என்றார்" என்றார். பிறிதொரு தருணத்திலென்றால் பொருளற்றவை எனத் தோன்றி சிரிக்கவைத்திருக்கக்கூடிய அச்சொற்கள் அப்போது அனைவரையும் திகைக்க வைத்தன. "எண்ணுக, இப்புவியில் உள்ள பொன்னெல்லாம் இரும்பாகிவிட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?" என்று மிளையன் கேட்டார். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தனர். "அனைத்தும் அனைத்துமாகும் என்றால் எதுவும் இல்லையென்றாகுமென்றால் இங்கே என்னதான் எஞ்சும்?" என்று மிளையன் மீண்டும் கேட்டார்.

அவர்களை சொல்லடங்கச் செய்துவிட்ட நிறைவு அவரிடமிருந்தது.

அவன் அவரை அப்பால் நின்று நோக்கிக்கொண்டிருந்தான். அவர் அவனை அருகே அழைத்து “ஆனால் ஒன்று, இந்தச் சிறுவனின் கண்களிலும் அவன் தந்தையிடமிருந்த அதே திகைப்பு இருக்கிறது...” என்றார். அனைவரும் அவனை திரும்பி நோக்கினர். “அவன் ஏன் பேசவே இல்லை தெரியுமா? அவன் தந்தை அவனிடம் பேசவேயில்லை என்பதனால்தான். சில குழந்தைகள் அன்னையிடமிருந்தும் சில குழந்தைகள் தந்தையிடமிருந்தும் மொழியை கற்றுக்கொள்கின்றன” என்றார். அவருடைய பேச்சுக்கு நெறி என ஒன்றில்லை. அறிவும் அறிவின்மையும் ஒன்றே எனத் தோன்றுவது அது என்று ஊரில் கூறப்படுவதுண்டு. “இவனும் எட்டாத எதற்கோ கைநீட்டவிருக்கிறான்... ஐயமே தேவையில்லை.” ஊரில் எவரும் அவனிடம் பேசாமலான பின்னரும்கூட அவர் மட்டும் அவனிடம் விடாமல் பேசிக்கொண்டிருந்தார்.

அங்கிருந்தவர்களில் மிளையன் மட்டுமே வேறுபட்டிருந்தார். பிறர் கூறாத, முன்பிலாத ஒரு சொல் எழும் வாய் எனத் திகழ்ந்தார். ஆகவே அவர்கள் அவரை அஞ்சினர். பெருவம்பர் என்று அவரைப்பற்றி சொல்லிக்கொண்டனர். ஆனால் எந்தப் பேச்சிலும் அவர் புகுந்தால் அதை தன் நாவால் சுழற்றி மேலே கொண்டுசென்றார். அங்கே அனைவரையும் கழற்சிக்காய்களென சுழற்றி விளையாடினார். “அவருடைய தனிமையை அவர் எவ்வண்ணம் எதிர்கொள்கிறார்?” என்று அவன் துறவியிடம் கேட்டான். “தீமைபோல் இயல்பான நற்றுணை வேறில்லை” என்றார் அவர். அச்சொல் அவனை திடுக்கிடச் செய்தது. மிளையனின் ஒவ்வொரு சொல்லிலும் மெலிதாக ஊறி வரும்

தீமையை எப்போதும் அவன் உணர்ந்திருந்தான். அது கசப்பென, பகடி என, குத்தல் என வெளிப்பட்டது. அதை தொட்டவர்கள் பிறகெப்போதும் அதை மறக்கவில்லை.

அவன் கவளப்பாறைமேல் அமர்ந்து பகல்தொடங்கி இருளடைவதுவரை தொடுவானை நோக்கிக்கொண்டிருந்தான். அவன் எதை பார்க்கிறான் என அவனே உணர்ந்ததில்லை. பலமுறை மிளையன் “அங்கே என்னதான் செய்கிறாய்?” என்றார். அவன் மறுமொழி உரைத்ததே இல்லை. ஒருமுறை மிளையன் குன்றேறி வந்து அவன் கவளப்பாறையின்மேல் அமர்ந்திருப்பதைக் கண்டபின் அவனிடம் “நீ எதை பார்க்கிறாய்?” என்று கேட்டபோதும் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர் சலித்து கீழிறங்கிச் சென்ற பின்னர் துறவி அவனிடம் “அவர் கேட்பதுவரை நான் எண்ணவில்லை. நீ எதை பார்க்கிறாய்?” என்றார்.

அவன் “தொலைவை” என்று சொன்னான். அது மிக இளமையில் அவன் சொன்ன மறுமொழி. நாவில் இயல்பாகவே அது எழுந்தது. அதேபோலவே கைசுட்டி அவன் அவ்வாறு சொன்னான். ஆனால் சொன்னதுமே அது சரியான மறுமொழி என்று தெளிவடைந்தான். அதன் பொருள் அவனுள் தெளிவடைந்துகொண்டே வந்தது. “தொலைவில் எதை?” என்று அவர் மீண்டும் கேட்டார். “தொலைவை…” என்று அவன் சொன்னான். அவர் புன்னகைத்தார்.

அதன்பின் அவன் அகச்சொற்கள் தெளிவடைந்தன. அதுவரை ஒன்றுடனொன்று முட்டிப்பெருகிச் சென்றுகொண்டிருந்த உள்ளோட்டம் சீரடைந்து எண்ணங்கள் என ஆயிற்று. அவ்வெண்ணங்களை அப்பாலிருந்து அவன் நோக்கிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு எண்ணத்தையும்

முன்பிருந்த எண்ணங்களுடன் கோத்துக்கொண்டான். சொற்கள் பெருகிப்பெருகி தன் அகத்தை நிறைத்தபோது அவன் ஒருமுறை சலிப்புடன் துறவியிடம் கேட்டான் “இச்சொற்களை என்ன செய்வது? இப்போது நான் தொலைவை பார்க்கவில்லை, அச்சொற்களைத்தான் உணர்ந்துகொண்டிருக்கிறேன் என நினைக்கிறேன்.” அவர் “அதை அவ்வண்ணமே விட்டுவிடு” என்றார். “நீராவி பனித்து துளிக்கும்… அசைவன அனைத்தும் அமையவே விரும்புகின்றன. காத்திரு!”

அவன் பல நாட்கள் காத்திருந்தான். தன் சொற்களை அளைந்தபடி, விண்சரிவு வரை விரிந்த தொலைவை பார்த்தபடி. தொலைவு, தொலைதலுக்குரியது, தொன்மையானது. அது கனியுமொரு தருணம் அமையும். எவ்வண்ணம் அது துளிவடிவு கொள்ளும்? இவ்விழைவே பொய்யோ? இந்தப் பறதியால் நான் அதை தள்ளி ஒதுக்குகிறேனா? ஆயினும் வேறுவழியில்லை. இங்கே இருந்து அதை காத்திருப்பதை தவிர. ஒருநாள் துறவி மறைந்தார். அவருடைய மண்மேட்டில் சிவக்குறி எழுந்தது. அவருக்கான சித்தர்கொடை நிகழ்ந்தது. அவர் மறக்கப்பட்டார். பிறிதொருவருக்காக அங்குள்ள மரங்களும் பாறைகளும் காத்திருந்தன. அவன் அகவை முதிர்ந்து விழிகள் மேலும் ஒளிகொள்ள உடல் வற்றிச்சுருங்கி உள்ளொடுங்க அங்கே அமர்ந்திருந்தான். ஒருநாள் முற்புலரியில் அவன் தொலைவு சுருங்கி உருக்கொண்ட அச்சொல்லை கேட்டான்.

# களிற்றியானை நிரை - 2

**பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள்-**2**

அச்சொல் அவனில் ஒரு கனவாக நிகழ்ந்தது. அவன் சாலையோரம் நின்றிருந்தான். உமணர்களின் வண்டிகள் நிரையாக சென்றுகொண்டிருந்தன. எடைகொண்ட வண்டிகளை இழுத்த காளைகளின் தசைகள் இறுகி நெளிந்தன. வால்கள் சுழன்றன. ஆரங்களில் உரசி அச்சு ஒலித்துக்கொண்டிருந்தது. அவன் ஒரு சொல்லை கேட்டான். விழித்துக்கொண்டபோது அச்சொல் என்ன என்பது மறந்துவிட்டிருந்தது. அவன் திகைப்புடன் அச்சொல்லுக்காக அகத்தை துழாவினான். அது எப்போதைக்குமாக என மறைந்துவிட்டிருந்தது. அவன் புலரியின் கருக்கிருளில் நிழலுருக்களாகச் சூழ்ந்திருந்த புதர்களை நோக்கியபடி கவளப்பாறைமேல் அமர்ந்திருந்தான்.

உமணர்களின் வண்டிகள் கோடைகாலம் முழுக்க அவன் ஊரை கடந்துசென்றுகொண்டிருக்கும். அவ்வோசையை ஊரார் விரும்பினர். இரவில் அது ஒவ்வொருவர் செவிகளிலும் என ஒலிக்கும். விரிந்து பரந்த பெருநிலம் துயிலும் குழவியிடம் அன்னை என அவ்வூரிடம் பேசுவதாக மிளையன் ஒருமுறை சொன்னார். வணிகப்பாதையில் இருப்பதனாலேயே அவ்வூருக்கு அயலவர் வந்தனர். செய்திகள் அணைந்தன. புதிய பொருட்கள் கிடைத்தன. கோடைக்குள் அவ்வூரில் ஒவ்வொருவரும் மழையெழுகையில் வேளாண்மை செய்வதற்கான பொருளை சேர்த்துவிட்டிருப்பார்கள். அவ்வப்போது வணிகர்குழுக்களுடன் இளையோர் கிளம்பிச் சென்றுவிடுவதுண்டு. அதுவும் நன்றே என அவர்கள் எண்ணினர். சென்றவர்கள் மிக விரைவிலேயே பொன் முடித்த மடிச்சீலைகளுடன் திரும்பி வந்தனர்.

அவனுள் அச்சொல் வந்தது. அது தோன்றவில்லை, அங்கேயே முன்னரே இருந்திருந்தது. அதை அவன் பலமுறை பார்த்த பின்னரும் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருந்தான். அவன் அதை நோக்கி உவகையுடன் சென்று திகைத்து நின்றான். 'அஸ்தினபுரம்.' ஓர் ஊரின் பெயர். எங்கோ இருக்கும் அறியாத ஊர். உமணர்கள் பேசிச்சென்றபோது அச்சொல் எழுந்ததா என்ன? அந்நிகழ்வு கனவில் விரிவதற்கு முன்பு எப்போதோ மெய்யாக நிகழ்ந்திருக்கவேண்டும். ஆனால் நினைவில் இல்லை. நினைவில் நிற்குமளவுக்கு அதில் ஒன்றுமில்லை. வெறும்பெயர். அவ்வப்போது செவிகளில் விழுவதுதான் அது. எவ்வகையிலும் அவன் உளம்கொண்டது அல்ல. செய்திகள் அவனுக்கு ஒரு பொருட்டெனத் தெரிந்ததே இல்லை. கதைகளை தொடர்ந்து கேட்க அவனால் இயன்றதேயில்லை. அவன் மானுடரையும் பொருட்களெனவே பார்த்துக்கொண்டிருந்தான். முகங்களின் தசையசைவுகளை, விழிதுள்ளல்களை, கையசைவுகளை, உடலில் எழும் மெய்ப்பாடுகளை. அவன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையே உணர்ந்ததில்லை.

செம்மஞ்சள்பெருக்கென காலை எழுந்தபோது அவன் அச்சொல்லுடன் கவளப்பாறை உச்சியில் நின்றிருந்தான். அஸ்தினபுரி. அச்சொல்லை உள்ளம் சொல்லிச்சொல்லி வெறும் தாளமென்றே ஆக்கிக்கொண்டிருந்தது. அதற்கு என்ன பொருள்? அச்சொல் தன்னுள் ஏன் எழுந்தது? அல்லது அது ஓர் உளமயக்கா? தேடிக்கொண்டிருந்ததன் சலிப்பால் சிக்கியதை அதுவென எண்ணிக்கொள்கிறேனா? இல்லை, முன்பொருமுறைகூட அப்படி ஒரு சொல் வந்து நின்றது இல்லை. அதுவே என்று தோன்றியதில்லை. அச்சொல் குறிக்கும் நகரத்தின் மெய்ப்பொருள்தான் என்ன? எண்ணி

எண்ணிச் சலித்து வெம்மைகொண்ட வெயிலில் வியர்வை வழிய அவன் நின்றிருந்தான்.

பின்னர் குன்றிறங்கி வந்தபோது மேலும் சலித்திருந்தான். பொருளே அற்ற சொல். அதைச் சென்றடையவா இத்தனை காத்திருப்பு? ஆனால் ஒன்றை அவன் உணர்ந்தான். அவனுள் பெருகிப்பெருகி முகில்குவைகள் என முடிவிலாக் கட்டடங்களாக அமைந்திருந்த சொற்கள் அனைத்தும் மறைந்துவிட்டிருந்தன. அந்த ஒற்றைச்சொல்லே அங்கே திகழ்ந்தது. அவன் தன் முந்தைய எண்ணங்களை சென்று தொட பலமுறை முயன்றான். காற்றில் வீசிச் சிக்கிக்கொண்ட முட்புதர்களைப்போல ஒற்றைச்சிடுக்குப்பரப்பென ஆகிவிட்ட அச்சொற்களை நினைவுகூரவே இயலவில்லை. எனில் இதுவே அச்சொல். ஆனால் பொருளற்றது, ஒரு வெறும் இடம், கதைகளில் திகழுமொரு நகரம்.

அவன் கீழிறங்கி வந்தபோது எதிரே மிளையனை பார்த்தான். அவர் காலையிலேயே பனைமரத்தடிக்குச் சென்று கள் அருந்திவிட்டு கலயத்தில் மேலும் கள்ளை வாங்கிக்கொண்டு வந்துகொண்டிருந்தார். அவனைக் கண்டதும் “மேலே சித்தர் எவரும் இன்னமும் வரவில்லையா?” என்றார். அவன் “அஸ்தினபுரி என்றால் என்ன?” என்றான். அவர் திகைத்து “தொலைவு, நெடுந்தொலைவு” என்றார். அவன் உள்ளம் அதிர வாய் திறந்து நோக்கி நின்றான். “அது வடக்கே கங்கைக்கரையில் உள்ள மாநகர். மாமன்னர் ஹஸ்தியால் கட்டப்பட்டது. அழிவற்றது” என்று மிளையன் சொன்னார். “அங்கே துரியோதனன் என்னும் மாமன்னர் ஆட்சிசெய்கிறார். பாரதவர்ஷத்தின்மேல் புரவியுலா வேள்வியை அவர்

இயற்றினார். அரசப்பெருவேள்வியை அதன்பின் நிறைவுசெய்து மும்முடிசூட்டிக்கொண்டார்.”

“ஆம், கேட்டிருக்கிறேன்” என்று அவன் முனகலாக சொன்னான். “நீ கேட்காத பல செய்திகளுண்டு… அஸ்தினபுரியின் முடியுரிமைக்கென ஒரு பூசல் நிகழ்ந்தது. மாமன்னர் துரியோதனனின் தந்தை திருதராஷ்டிரருக்கு உரியது மணிமுடி. அவருக்கு விழியில்லை என்பதனால் அது அவருடைய இளையோன் பாண்டுவுக்கு அளிக்கப்பட்டது. திருதராஷ்டிரரின் மைந்தர் துரியோதனன் பதினெட்டு அகவைநிறைவை அடையும்போது மணிமுடி அவரிடம் வந்துவிடவேண்டும் என்பது அன்று அளிக்கப்பட்ட சொல்.” ஆதன் “தெரியும்” என்று சலிப்புடன் சொல்லி நடக்க அவர் பின்னால் வந்து “நீ அறியாதவை சில உண்டு… அவற்றையே சொல்லவந்தேன்” என்றார். “பாண்டுவிடமிருந்து துரியோதனனுக்கு மணிமுடி கைமாறப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பிறவிநாள்கணக்கில் பாண்டுவின் மைந்தர் யுதிஷ்டிரனே மூத்தவர். ஆகவே அவருக்கே முடியுரிமை என்று சொல்லப்பட்டது.”

“அதையும் அறிவேன்” என்று ஆதன் சொன்னான். “நீ இன்னும் அறியாத ஒன்று உண்டு. அஸ்தினபுரியின் முடிப்பூசலை அத்தனை சிற்றூர்களிலும் பாணர்கள் பாடியிருப்பார்கள். அவர்கள் பாடாத ஒரு கதை உண்டு. என்னிடம் ஒரு முதிய பாணன் இக்கதையை சொன்னான்” என்று அவர் அவன் தோளை தொட்டார். “உடன்பிறந்தோர் போரிட்டு அழியலாகாதென்பதனால் சான்றோர் கூடி முடிப்பூசலை நாற்களம் விளையாடி முடித்துக்கொள்வது என்று முடிவுசெய்தனர். யுதிஷ்டிரன் தனக்குரிய பகடையை அமைக்கும்பொருட்டு அமைச்சர்களிடம் உசாவினார். அரசே,

அறுதியாக வெல்வது அறமே என்று அவர்கள் சொன்னார்கள். அறத்தில் நின்று உயிர்துறந்த முனிவர் ஒருவரின் எலும்புகளால் உங்கள் பகடைகளை அமையுங்கள். அவை வெல்லற்கரியவை என்றனர்.”

அவன் நின்று செவிகொடுத்தான். மிளையன் “இக்கதையை பலர் அறிந்திருக்கமாட்டார்கள். ஏனென்றால் தகுதியானவர்கள் மட்டுமே அறியத்தக்கது இது” என்று தொடர்ந்தார். “யுதிஷ்டிரன் கானகந்தோறும் முனிவர்களை தேடிச்சென்றார். தண்டகாரண்யத்தில் வேதம் முற்றோதும்பொருட்டு சென்று தங்கிய காத்யர் என்னும் முனிவரைப்பற்றி அவரிடம் சொன்னார்கள். அவர் வேதம் ஓதத்தொடங்குகையில் ஓர் உறுதிமொழி எடுத்தார். முற்றோதாமல் அந்த இடம்விட்டு அகல்வதில்லை என்று. அவருடன் நூற்றெட்டு முனிவர்கள் அவ்வுறுதிமொழியை எடுத்தனர். அவ்வாண்டு தண்டகாரண்யத்தில் மழை பொழியவில்லை. அடுத்த ஆண்டும் மழை பொய்த்தது. மூன்றாண்டுகள் முற்றாகவே மழை நின்றுவிட்டபோது பசுமை மறைந்தது. முனிவர்கள் ஒவ்வொருவராக கடந்துசென்றனர். எழுவர் மட்டுமே எஞ்சினர்.”

“அவர்கள் சிற்றுயிர்களைப் பிடித்து வேள்வியில் அவியாக்கி அந்த அவிமிச்சத்தை உண்டபடி வேதமோதுதலை தொடர்ந்தனர். பின்னர் சிற்றுயிர்களும் மறைந்தன. ஏழாமாண்டில் அனைத்து முனிவர்களும் விலகிச்செல்ல காத்யர் மட்டும் அங்கேயே இருந்தார். வேதத்தை அதன் அனைத்து கிளைகளுடன், அனைத்து துணைகளுடன், அனைத்து விளக்கங்களுடன், அனைத்து நீட்சிகளுடன் ஓதிமுடிக்கும் நிலையில் அவர் இருந்தார். ஒருதுளி நீரும் அங்கே எஞ்சாமலாயிற்று. உண்பதற்கு காய்ந்த சருகோ

எறும்புகளோகூட அங்கே இருக்கவில்லை. இறுதியாகச் சென்றவர்கள் அவரிடம் எழுக, வருக என்று மன்றாடினர். அவர் வேதச்சொல்லில் இருந்து சித்தம் விலக்கவில்லை.”

“மெய்யாகவே இக்கதையை நீ கேட்டிருக்கமாட்டாய்” என்று மிளையன் சொன்னார். “காத்யர் தன் கையை வெட்டி அக்குருதியையே விடாய்நீராக உண்டார். தன் தொடைத்தசைகளை வெட்டி அவியாக்கி அந்த அவிமிச்சத்தையே உணவாகக்கொண்டார். வேதத்தை அவர் முற்றோதி முடித்ததும் வானில் மின்னலெழுந்தது. இடியோசை முரசொலி என முழங்க வெண்களிற்றில் இந்திரன் தோன்றினான். அவரை முகில்தேரில் ஏற்றி விண்ணுக்குக் கொண்டுசென்றான். அவருடைய உடல் மண்ணில் கிடந்தது. வான்நிறைத்துப் பெய்த மழையில் அது சேற்றில் புதைந்தது.”

“காத்யரின் எலும்புகள் இருக்குமிடத்தை முனிவர்களிடமிருந்து உசாவி அறிந்து யுதிஷ்டிரன் அங்கே வந்தார். ஏழுமுறை மண்ணை அகற்றியபோது எலும்புகள் அங்கே கிடப்பதை கண்டார். அவை வெண்பளிங்கால் ஆனவைபோல் தூய்மையாக இருந்தன. அவர் காத்யரின் தொடை எலும்பிலிருந்து தன் பகடையை உருவாக்கிக்கொண்டு அஸ்தினபுரிக்கு மீண்டார்” என்றார் மிளையன். “யுதிஷ்டிரன் முனிவரின் எலும்பாலான பகடையுடன் வந்திருப்பதை துரியோதனன் அறிந்தார். அதை வெல்லும் பகடையை உருவாக்கவேண்டும் என்று விழைந்தார். அதை கண்டுபிடிப்பது எப்படி என்று தன் நிமித்திகர்களிடம் கேட்டார். அரசே, காலவடிவமானது காகம். அளியற்றது. எங்கே அதுவும் இரக்கம் கொள்கிறதோ அங்கே அகழ்க என்று அவர்கள் சொன்னார்கள்.”

“அப்படியொரு இடத்தைத் தேடி துரியோதனன் வடபுலத்தின் வறுநிலத்தில் அலைந்தார். காகங்களின் எல்லையற்ற பசியை கண்டார். அதுவே காலப்பசி என்று உணர்ந்தார். வேள்வியன்னத்தை அவை திருடி உண்டன. மலத்தைக் கிண்டி பொறுக்கின. கைக்குழவியின் கையிலிருந்து உணவை தட்டிச்சென்றன. சிம்மத்தை துரத்தித்துரத்தி அதன் புண்ணைக் கொத்தித் தின்றன. சோர்ந்து தளர்ந்து அவர் ஒரு முள்மரத்தடியில் தங்கியபோது உடல்மெலிந்த நாய் ஒன்று தன்னை இழுத்துக்கொண்டு ஒரு சிறு மரத்தடியில் சென்று படுத்ததை கண்டார். அதைச் சூழ்ந்திருந்த காகங்கள் கரைந்துகொண்டிருந்தன. ஆனால் சென்று அதன் புண்களை கொத்தவில்லை. நாய் உயிர்விட்ட பின்னரும் அவை அணுகவில்லை.”

“அதுவே இடமென்று கண்டு துரியோதனன் அவ்விடத்தை அகழ்ந்தார். அங்கே ஓர் அன்னையின் எலும்புக்கூடு இருந்தது. அவள் நெஞ்சோடு கவ்விக்கொண்டு மடிந்த குழவியின் எலும்பும் பிரித்தறியமுடியாதபடி கலந்துவிட்டிருந்தது. அவ்வன்னை அருகிருந்த சிற்றூர் ஒன்றில் வாழ்ந்தவள். வற்கடம் வந்து அவ்வூர் மக்கள் கிளம்பிச்சென்றபோது அவள் கருவுற்றிருந்தாள். அவர்களிடம் அவளை ஏற்றிச்செல்ல ஊர்தியோ விலங்கோ இருக்கவில்லை. ஆகவே அவளை அவர்கள் கைவிட்டுச்சென்றனர். அவள் அங்கே கைக்குச் சிக்கிய சிற்றுயிர்களை உண்டபடி வாழ்ந்தாள். குழவியை ஈன்றெடுத்தாள். அக்குழவியுடன் அவள் அப்பாலைநிலத்தின் சாலையோரம் நின்றாள். அவ்வழி வணிகர்கள் வருவது நின்றுவிட்டிருந்தது. வழிதவறி வந்த ஒருவனை அருகழைத்து அவனை கல்லால் அறைந்து கொன்று சங்கைக்கடித்து குருதியுண்டாள். அக்குருதியை முலைப்பாலாக்கி தன்

குழவிக்கு அளித்தாள். அவன் ஊனை வெட்டி சுட்டு உண்டாள். எஞ்சியதை வெயிலில் உலர்த்தி சேர்த்துக்கொண்டாள். அவ்வண்ணம் அவள் உயிர்வாழ்ந்தாள்.”

“அவ்வண்ணம் ஏழு வழிப்போக்கர்களைக் கொன்று ஏழு மாதம் அவள் அங்கே உயிர்வாழ்ந்தாள். ஒரு விலங்கோ ஊர்தியோ வருமென்றால் அங்கிருந்து கிளம்பிச்செல்லலாம் என்று எண்ணியிருந்தாள். ஆனால் அங்கே எவருமே வராமலாயினர். நாற்பத்தெட்டு நாட்கள் அங்கே அவள் எவரேனும் வருவார்கள் என எதிர்பார்த்திருந்தாள். தன் உடலில் இருந்த இறுதித்துளி குருதியையும் குழவிக்குப் பாலென்று அளித்தாள். பின்னர் அந்த முள்மரத்தடியிலேயே உயிர்துறந்தாள். உலர்ந்து வற்றில் மண்ணில் புதைந்து வெள்ளெலும்பானாள். அவளுக்காக காகங்களும் இரங்கின. ஏனென்றால் அவளை அழைத்துச்செல்ல வந்த எமன் இரங்குவதை அவை கண்டிருந்தன.”

“அவள் எலும்பிலிருந்து பகடையை உருவாக்கிக்கொண்டு துரியோதனன் நகர்மீண்டார். அஸ்தினபுரி நகரில் மாபெரும் நாற்களப்போட்டி நடைபெற்றது. அதில் யுதிஷ்டிரன் உருட்டிய ஒவ்வொரு பகடையையும் துள்ளித்துள்ளி தோற்கடித்தது துரியோதனன் சார்பில் அவர் மாமன் சகுனி உருட்டிய பகடைகள். நூறுமுறை அவை வென்றன. யுதிஷ்டிரன் தன் நாட்டையும் இளையோரையும் துணைவியையும்கூட பணயம் வைத்து ஆடி இழந்தார். அவருக்கு உயிரையும் தம்பியரையும் துணைவியையும் அளித்து கானேகும்படி ஆணையிட்டார் துரியோதனன். நிலம்செழிக்க நாடுகொழிக்க அஸ்தினபுரியை ஆட்சிசெய்கிறார்” என்று மிளையன் சொன்னார்.

“கானேகிய பாண்டவர்கள் உளமுடைந்திருந்தனர். அவர்கள் காட்டில் வசிட்டரை கண்டனர். யுதிஷ்டிரன் துயருடன் ஏன் என் பகடைகள் தோற்றன, வேதமாமுனிவர் தோற்கும் காலம் வந்தமைந்துவிட்டதா என்ன என்று கேட்டார். வசிட்டர் சொன்னார். இன்றல்ல என்றும் பசித்தவர்களுக்கே அறம் இரங்கி வரும். சொல்திகழ்வதற்குரியதல்ல நிலம், உயிர் தழைப்பதற்குரியது என்று. ஆனால் சொல் அல்லவா என்றும் நிலைகொள்வது என்றார் யுதிஷ்டிரன். அப்படியென்றால் ஓடு, இனி சொல்லைத் தின்றே உயிர்வாழ் என்றார் வசிட்டர். என் சொல்லில் உண்மை இருந்தால் அது எனக்கு அன்னமும் நீரும் ஆகுக என்றார் யுதிஷ்டிரன்.”

“அவர்கள் காட்டில் அலைந்தனர். பசித்தபோது யுதிஷ்டிரன் வானைநோக்கி வேதச்சொல்லால் ஆணையிட்டார். விடாய்நீருக்கு வேதச்சொல்லையே எடுத்தார். சொல் சொல்லென்றே இருந்தது. அன்னம் அதை அறியவே இல்லை. அவர்கள் காட்டில் பசித்து அலைந்து உயிர்விட்டார்கள். அவர்களின் உடல்களைக் கவ்வி இழுத்து நரிகள் உண்டன. யுதிஷ்டிரனின் எலும்புகளை கவ்விச் சப்பிய நரி ஒன்று தன் குழந்தையிடம் இதற்கு எரிபுகையின் மணம் இருக்கிறது. அடுமனையாளன் போலும் என்றது. அருகே நின்ற முதிய நரி அவன் வேதவேள்விகளில் அமர்ந்து உடல்நிறைத்தவன், அஸ்தினபுரியின் அரசனாக இருந்தவன் என்றது. நல்லவேளை, அவன் அரசனாகவில்லை. இல்லையேல் அஸ்தினபுரியின் மக்கள் புகையுண்டு உயிர்வாழ வேண்டியிருந்திருக்கும் என்றது அன்னைநரி. குழவிநரி வான்நோக்கி மூக்கை நீட்டி ஊளையிட்டுச் சிரித்தது.”

ஆதன் சிரித்து “நல்ல கதை, மிகப் புதியது” என்றான். “நான் இதைக் கேட்டு நெடுநாட்களாகின்றது. இதை இப்போதுதான் சொல்கிறேன்” என்றார் மிளையன். “நல்ல கதை, பொருளுள்ளது. அரசசபைகளில் இதைச் சொல்லும்படி பாணர்களிடம் சொல்லவேண்டும்.” மிளையன் “அவர்கள் சொன்னாலும் சொல்வார்கள்” என்றார். “அவர்களுக்கென்ன? அவர்கள் எல்லாவற்றையும் பாட்டாக ஆக்கிவிடுகிறார்கள். பாட்டில் வருவன எல்லாம் பழங்கதை என அரசர்கள் எண்ணுகிறார்கள். பழங்கதை என்பது சித்திரத்துப்புலி, பதுங்கும் பாயாது” என்றபின் “நீ அஸ்தினபுரியைப்பற்றி என்ன கேட்டாய்?” என்றார். “என் நினைவில் அச்சொல் எழுந்தது” என்று அவன் சொன்னான். “அது நெடுந்தொலைவில் உள்ளது… தொலைவு என்றால்…” அவர் திரும்பி வடக்கே நோக்கி “சென்றுகொண்டே இருக்கவேண்டிய தொலைவு” என்றார்.

அவன் அங்கேயே நின்று நோக்கிக்கொண்டிருந்தான். “இல்லத்திற்குத்தானே, நானும் வருகிறேன் வா” என்று மிளையன் அழைத்தார். அவன் அவர் சொற்களை கேட்கவில்லை. அங்கே நின்று அவர் சுட்டிய திசையை நோக்கிக்கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் பெருகியெழுந்த அலை அமைந்ததும் அவன் உணர்ந்தான் தொலைவு என்பது ஒரு ஊர் என ஆகிவிட்டிருந்தது. அவர் மேலும் அப்பால் சென்று நின்று உரக்க “என்ன கிளம்பவிருக்கிறாயா? அஸ்தினபுரிக்கா போகிறாய்?” என்றார். அவன் திடுக்கிட்டுத் திரும்பி அவர் விழிகளை பார்த்தான். அதிலிருந்த நச்சுப்பகடி அவனை விழிதளரச் செய்தது. “காசியும் கயிலையும் இவ்வாறு பலரை அழைப்பதுண்டு… முதல்முறையாக அஸ்தினபுரி ஒருவரை அழைக்கிறது. நன்று, அதற்கு உன்னை தேவைப்படுகிறது போலும்” என்றார்.

அவன் நெடுநேரம் அங்கேயே நின்று வெயில் எரியத்தொடங்கிய வடதிசைச் செம்புலத்தை பார்த்துக்கொண்டிருந்தான். கோடைகாலத் தொடக்கம், உமணர்களின் வண்டிகள் வரத்தொடங்கிவிட்டிருந்தன. உப்பை அளித்து சிற்றூரின் பொருட்களை பெற்றுக்கொள்பவர்கள். பின்னர்தான் கப்பல்பொருட்களைக் கொண்டுவருபவர்களின் வண்டிகள் வரும். மக்கள் கையிலிருக்கும் பொருளைக் கொடுத்து முதலில் உப்பை வாங்கிக்கொள்வார்கள். இந்த வண்டிகள் எங்கே செல்கின்றன? உமணர்களுக்கு நாட்டு எல்லைகள் இல்லை. அவர்கள் செலுத்தும் சுங்கத்தால் அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளர்களாக ஆகிவிடுகிறார்கள். இவர்கள் பாண்டிய நாட்டுக்குள் செல்வார்கள். அதற்கும் அப்பால் நெடுந்தொலைவில் சோழநாடு. அப்பால் கீழைப்பல்லவநாடு. வேங்கடம். அதற்கும் அப்பால்…

அவன் திரும்பி ஊருக்குள் வந்தபோது அனைவர் விழிகளும் மாறிவிட்டிருப்பதை கண்டான். அதை அவன் உடலே உணர்ந்தது. எவரும் எதுவும் பேசவில்லை. ஊரில் அனைவருக்குமே அவனை காணாமல் கடந்துசெல்லும் கண்கள் வாய்த்திருந்தன. அன்று அத்தனை விழிகளும் அவன்மேல் பதிந்தன. நிலைத்து அவன் கடந்துசெல்வதுவரை நீடித்தன. நோக்குகள் உடலைத் தொடும் என அவன் அன்று உணர்ந்தான். ஒருவர் அவனைக் கண்டதும் விந்தையான கனைப்பொலி ஒன்றை எழுப்பினார். ஒருவர் இன்னொருவரிடம் ஒரு சொல் உரைத்தார்.

தன் சிற்றில் திண்ணையில் அமர்ந்திருந்த காரிக்கிழவி மட்டும் எழுந்து கைநீட்டி "அறிவில்லாதவனே, அந்த நச்சுக்கிழவன் சொன்னதைக் கேட்டு அஸ்தினபுரிக்கா செல்லப்போகிறாய்?" என்றாள். அவன் திகைத்து அவளை நோக்கிவிட்டு தலைகுனிந்து நடந்தான். "அவன் இங்கிருந்து ஒவ்வொருவரையாக கிளப்பிவிட்டுக்கொண்டே இருக்கும் பேய். அவன் மட்டும் இங்கிருந்து அகலவே மாட்டான்... கீழ்மகன் சொல் கேட்டு எவரும் நலமடைந்ததில்லை..." என்று காரிக்கிழவி அவன் முதுகுக்குப் பின் கூவினாள். அவள் அவன் தந்தையின் சிற்றன்னை. "இரும்பை பொன்னாக்குகிறேன் என்று உன் தந்தை செத்தான். நீ எதை பொன்னாக்கப் போகிறாய்?" என்று அவள் ஓலமிட்டதை அவன் கேட்டான். "குலதெய்வங்களே, இக்குடியைப் பற்றியிருக்கும் அந்தப் பேயை ஓட்டமாட்டீர்களா? இன்னும் எத்தனை தலைகொள்வீர் நீங்கள்?"

அவனுக்கு எதிரே உருளியில் ஆலயப்படையல் அன்னத்துடன் வந்த ஊரந்தணர் கௌசிகர் "கிளம்புவது நன்று. எதன்பொருட்டென்றாலும். மீண்டு வந்தாலும் நன்று, வராவிடிலும் நன்று. ஆனால் கிளம்புகையில் தெளிவிருக்கவேண்டும். எங்கு செல்வதென்று, எதன்பொருட்டு என்று. தெளிவில்லாமல் கிளம்புபவனை அலைக்கழித்து அழிப்பவை எட்டுத் திசைகளும் என நூல்கள் சொல்கின்றன" என்றார். அவன் நின்று அவர் சொல்வதை கேட்டான். "என் சொற்களுக்கு என்ன பயன் என்று நான் அறியேன். உன் தந்தையும் என்னை செவிகொண்டதில்லை. நான் சொல்லவேண்டியதை ஒருபோதும் தவிர்த்ததில்லை" என்றார். அவன் பெருமூச்சுடன் நின்றான்.

“அஸ்தினபுரிக்குச் செல்வதாகச் சொன்னார்கள்” என்று அவர் தொடர்ந்தார். “அவ்வண்ணம் ஒரு நகரம் மெய்யாகவே அங்குள்ளதா என்பதே ஐயம்தான். தொல்கதைகளில் அவ்வண்ணம் பலநூறு பெருநகர்கள் உள்ளன. அவை மானுடர் சொல்லிச்சொல்லி மொழியில் உருவாக்கியவை. நாம் இளமையில் அந்திமுகிலில் மாபெரும் மாடமாளிகைகள் கொண்ட நகர்களை பார்ப்போம். என்றேனும் விண்ணில் பறந்தேறி அங்கு சென்றுவிடவேண்டும் என கனவு காண்போம். அதைப் போன்றதே உன் கனவும். விண்ணில் இருப்பது முகில் எனும் மாயத்தோற்றம். மண்ணிலிருப்பவர்களுடன் தெய்வங்கள் அவ்வாறு விளையாடுகின்றன. அதற்கப்பால் நான் உன்னிடம் ஒன்றும் சொல்வதற்கில்லை.”

அவன் “அந்நகருக்குச் சென்றுவந்தவர்களும் உள்ளனர்” என்றான். “ஆம், அவ்வண்ணம் ஒரு நகர் இருக்கக்கூடும். சொல்லப்போனால் களிற்றுநகர் என பல நகர்கள் உள்ளன. ஆனால் நீ அங்கே சென்று காணப்போவது நீ எண்ணியிருக்கும் அஸ்தினபுரியை அல்ல” என்று அவர் சொன்னார். “கதைகள் நமக்குத் தேவை. கதைகள் இல்லையேல் தொன்மையும் அறமும் நிலைகொள்வதில்லை. ஆனால் கதைகளை நாம் போர்வையென வைத்திருக்கவேண்டும். என் தந்தை அடிக்கடி அதை சொல்வார். குளிருக்கு எடுத்துப் போர்த்தியபின் மடித்து பெட்டிக்குள் வைத்துவிடவேண்டும். உச்சிக்கோடைவெயிலில் போர்த்திக்கொண்டு அலைந்தால் பித்தன் என்றே சொல்வார்கள்.” அவன் புன்னகைத்துவிட்டு மேலே நடந்தான்.

இல்லத்தில் முகப்பில் அவன் காலடியோசை கேட்டதும் அன்னை வெளியே வந்தாள். அவன் கால் கழுவ நீர் கொண்டுவந்து வைத்தாள். அவன் தன் அன்னை ஏதேனும்

சொல்வாள் என எதிர்பார்த்தான். ஆனால் அவள் ஒருசொல்லும் உரைக்கவில்லை. அவளும் அறிந்துவிட்டிருந்தாள் என்பதை அவளுடைய அசைவுகளே காட்டின. வழக்கம்போல் அவனுக்கு உணவை எடுத்துவைத்தாள். அவன் உண்ண அமர்ந்ததும் நீர் ஊற்றியபடி அருகே அமர்ந்தாள். அவள் ஏதேனும் சொல்வதற்காக அவன் காத்திருந்தான். அவள் ஏதேனும் சொல்லப்போகிறாள் என்னும் உளத்தோற்றமேகூட தன்னிடம் எழவில்லை எனக் கண்டு அவன் விழிதூக்கி நோக்கினான். அவள் கண்களைக் கண்டதும் திகைத்தான். உடனே விழிகளை தழைத்துக்கொண்டான். அதுவரை அவன் கைகள் சோற்றை அளைந்துகொண்டிருந்தன. அள்ளி அள்ளி அதை உண்டான். எழுந்து கைகழுவிக்கொண்டு சென்று திண்ணையில் அமர்ந்தான்.

அவள் வெளிவருவாள், ஏதேனும் சொல்வாள் என அப்போதும் அவன் எதிர்பார்த்தான். ஆனால் அவ்வண்ணம் நிகழாதென்றும் அகத்தே அறிந்திருந்தான். அவள் விழிகளை மீண்டும் நினைவிலெடுக்க அஞ்சினான். அன்று முழுக்க அப்படியே திண்ணையில் அமர்ந்திருந்தான். நூறுமுறை அந்த நோக்கைச் சென்று தொட்டு திடுக்கிட்டு மீண்டான். மெல்ல கண்ணயர்ந்து பக்கவாட்டில் விழுந்தான். கனவில் அக்கண்களை மேலும் அருகே கண்டான். எழுந்தபோது தெளிந்துவிட்டிருந்தான். அவற்றிலிருந்தது விடுதலை. நெடுங்காலம் வளைத்துக் கட்டப்பட்டிருந்த கழையின் நிமிர்வுபோல் ஒன்று. அவன் அப்போது உணர்ந்தான், அவனால் அவ்வில்லத்தில் அதற்குமேல் தங்க முடியாது என்று.

# களிற்றியானை நிரை - 3

## பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 3

கிளம்புவது என்று முடிவெடுத்தபின் ஆதன் ஊர்முதல்வரான முதுசாத்தனை சென்று பார்த்தான். அவரை அவன் இளமையிலிருந்தே பார்த்துவந்தாலும் மிகமிகக் குறைவாகவே பேசியிருந்தான். அவர் அவனை காணும்போதெல்லாம் பெரும்பாலும் இனிய புன்னகை ஒன்றுடன் கடந்துசெல்வதே வழக்கம். அவனும் அதை வெறுமனே நோக்கிய பின் விழிதாழ்த்திக்கொள்வான். முதுசாத்தன் பன்னிரு தலைமுறைகளாக அவ்வூரின் தலைக்குடியாக திகழும் மரபில் மூத்தவர். எங்கும் முதற்சொல் அவருடையதாகவும் தலைச்சொல்லும் அவருடையதேயாகவும் இருந்தாலும் எப்போதும் பணிவு மாறாத குரல் கொண்டிருந்தார். குடிமரபென கற்றறிந்த நெறிகளில் அச்சிற்றூரை நிலைநிறுத்தி வந்தார்.

அவர் அச்சிற்றூரின் குறுகிய எல்லைக்கு அப்பால் ஒரு போதும் கால் வைத்தவரல்ல. “மேற்கே செங்குன்று, கிழக்கே வெறித்த செம்புலம், தெற்கே கடல், வடக்கே ஆரல்கணவாய் திறந்திருக்கும் இந்திரமலை. இவ்வெல்லைக்குள் திகழ்வது ஒரு முழு உலகம்” என்று அவர் கூறுவதுண்டு. “எல்லையற்றது காற்றுவெளி. எல்லையற்றது புவி. நாம் அள்ளும் மூச்சு சிறிதே. நாம் அமையும் இல்லமும் சிறிதே. எல்லை வகுத்துக்கொள்ளாமல் வரையறை செய்ய இயலாது, வரையறுக்கப்படாமல் நெறி திகழ முடியாது. நெறி திகழும் நிலத்திலேயே வாழ்க்கை எழ முடியும்.” அவன் அவர் பேசுவது பல தருணங்களில் தனக்காகவே என்று உணர்ந்திருந்தான்.

“பதியெழு அறியா பழங்குடிகளிலேயே நெறி திகழ முடியும். நிலைக்கோளே நெறி. நிலைகொள்வதே நிலம்.”

ஆலயமுகப்பின் ஆல்மேடையில் அமர்ந்து அவர் சொன்னார் “என் எல்லைக்கு அப்பாலிருந்து ஒரு சொல்லும் என்னை வந்து அடைந்ததில்லை, ஏனென்றால் வந்தடைந்த அத்தனை சொற்களையும் நான் என் சொற்களாக மாற்றிக்கொண்டிருக்கிறேன். என் இல்லத்திற்குள் எனக்கு உற்றாரன்றி எவருமில்லை.” புன்னகையுடன் நரைமீசையை நீவியபடி “ஏனென்றால் எவர் என்னை நாடி வந்தாலும் வாசல் நிலையிலேயே அவர்களை என் உறவினராக்கிக் கொள்கிறேன்” என்றார். அவன் அவர் விழிகளை அஞ்சினான். அவற்றில் அவன் தவிர்க்க விழைவன இருந்தன. அவை அவனை நோக்கி எப்போதும் புன்னகை கொண்டிருந்தன. அப்புன்னகையை எப்போதேனும் அவன் கனவில் காண்பதுண்டு.

அவர் இல்லத்திண்ணையில் தன் பெயர்மகவுகளுடன் விளையாடிக்கொண்டிருந்தார். பின்னுச்சிப்பொழுது மயங்கிக்கொண்டிருந்தது. அவர் கனைத்ததும் அவருடைய இல்லமகள் வந்து குழவியரை வாங்கிக்கொண்டு சென்றாள். அவர் கையசைவால் அவனை வரவேற்று அமரச்சொன்னார். அவன் அமர்ந்ததும் இல்லச்சிறுமி ஒருத்தி அவனுக்கு குளிர்மோர் கொண்டுவந்து தந்தாள். அவன் விடாயமைந்த பின்னரும் சொல்லெடுக்காமல் அமர்ந்திருந்தான். அவர் அவனை புன்னகையுடன் நோக்கியபடி காத்திருந்தார். அவன் இயல்பாக விழிதூக்கி அவர் கணகளை நோக்கிய பின் திரும்பிக்கொண்டு “நான் கிளம்புகிறேன்” என்றான். அவர் ஏதும் கேட்கவில்லை. அவனே அனைத்தையும் சொன்னான். “இங்கிருந்து கிளம்பியாகவேண்டும். இங்கே நான் இனி

இருக்கமுடியாது. அச்சொல் என்னை அழைக்கிறது. தொலைவிலுள்ள அந்த ஊர். அதைப்பற்றி ஏதுமறியேன். ஆனால் அதிலிருந்து என்னால் தப்ப முடியாது.”

ஊரில் எவரிடமும் அதை அவன் சொல்லியிருக்க இயலாது என அவன் அறிந்திருந்தான். முன்பு அவன் அவ்வாறு சொல்வதுண்டு. “இங்கே இருப்பதில் பொருளில்லை” என்று. “கிளம்பவேண்டியதுதான்” என்று. பேச்சுவாக்கில் அவன் நாவில் அச்சொற்கள் எழும். உடனே கேட்பவர்களின் விழிகள் அதிர்ச்சியுடன் மாறுபடுவதை அவன் கண்டிருந்தான். மறுகணமே அவன் கையை பற்றிக்கொண்டு “நீ உதறிச்செல்வது உன் அன்னையை. நீ சென்ற பின்னர் உன் அன்னை இங்கு பாழடைந்து இழிந்தழியும் இல்லம்போல் ஆவாள். எண்ணுக, கிளம்பிச்சென்றவர்கள் திரும்பி வரவே முடியாது! மறுசொல் எண்ணி நீ திரும்பி வரலாம். வென்று மீளலாம். ஆனால் நீ விட்டுச் சென்ற எதுவும் இங்கிருக்காது. கிளம்புகையில் அக்கணம் வரையான வாழ்க்கையை முற்றாக தவிர்த்துவிட்டு துறந்துவிட்டே கிளம்புகிறாய்” என்பார்கள்.

கிளம்புதல் என்னும் சொல் ஊரில் ஏன் அவ்வளவு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது என்று அவன் எண்ணியதுண்டு. பின்னர் அறிந்தான், ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்திற்குள் மீளமீள கிளம்பிச்சென்றவர்கள் என்று. கிளம்பிய மறுகணமே துறக்கவிருப்பவை அனைத்தும் பல்லாயிரம் கைகொண்டு பற்றியிழுத்து அவர்களை அங்கேயே நிறுத்திவிடுகின்றன. அனைவருமே கிளம்புதல் என்னும் சொல்லை அவன் சொன்னதுமே சென்று மீள்வதைக் குறித்தே பேசினார்கள். மீளாதுசெல்லுதல் என ஒன்று அவர்களின் உள்ளத்தில் எழவே இல்லை. “நான் மீளப்போவதில்லை” என்று அவன் சொன்னான்.

“மீளாது செல்லுமிடம் ஒன்றே… சாவு” என்றார் ஒருவர். “நான் செல்லப்போவது தொலைவுக்கு… தொலைவு என்பது சாவுதான்” என்று அவன் சொன்னான்.

ஊர்நாவுகளில் இருந்து அவன் அன்னை அவனுள் இருந்த அவ்விழைவை தெரிந்துகொண்டிருந்தாள். ஒருபோதும் அவள் அவனிடம் கேட்டதில்லை. ஆனால் எப்போது அவள் கண்களை பார்த்தாலும் அதில் அந்த மன்றாட்டு இருந்தது. அவன் நெஞ்சைப் பிழிவது போன்ற துயர். “உனக்கென்ன வேண்டும்? இனி நான் என்னதான் அளிக்கவேண்டும்?” தன் அன்பின் முழு மாயத்தாலும் அவனுக்கென ஓர் உலகை உருவாக்க அவள் சித்தமாக இருந்தாள். தனக்கென எதுவும் வைத்துக்கொள்ளாதவளாக, அவனையன்றி எதையும் அறியாதவளாக. காற்றென்றும் ஒளியென்றும் பொருள்வெளி என்றும் அவனை முற்றாகச் சூழ்ந்திருப்பதே தன் இயல்பென. அன்னையர் எப்படி பொருள்வெளியாக, இயற்கையாக, ஊராக, வீடாக உருமாற்றம் கொள்கிறார்கள்?

அன்னையரில் தனித்தவர்கள் உண்டா? தனிமை கொள்கையில் அவர்கள் அன்னையர் அல்லாமல் ஆகிறார்கள். கைவிரித்து உலகனைத்தையும் அணைக்கவும் முற்றாக சூழ்ந்துகொள்ளவுமே அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அப்போது மட்டுமே அன்னையென்றிருக்கிறார்கள். தொலைவு திரண்டு எழும் அறியாச் சொல்லின் அழைப்பைக் கேட்ட அனைவருமே அன்னையரிடமிருந்து பிடுங்கப்படுகிறார்கள். அன்னையிலிருந்து கிளம்பாமல் எவரும் அச்சொற்களை சென்றடைய இயலாது. அவன் அன்னையால் பற்றப்பட்டிருந்தான். ஆனால் ஏதோ ஒரு கணத்தில் மரம் கனியை கைவிட்டுவிடுகிறது. அதைத்தான் நாடி

ஏங்கியிருந்தான். ஆனால் அக்கணத்தில் துணுக்கென்றிருந்தது. அதில் ஆணவம் புண்பட்டது. செல்க என்னும் சொல்போல் இரக்கமற்றது வேறில்லை.

அவன் முதுசாத்தனிடம் சொன்னான் “இங்கு கிளம்பியவர்களே மிகுதி, அகன்றவர்கள் அரியர். நான் அறியாச் சொல்லொன்றின் அழைப்பால் இங்கு அமர்ந்திருக்க முடியாதவனாகிவிட்டேன்.” முதுசாத்தன் சிரித்து “இங்கே முழுதமைந்தவர்கள் சிலர், உதறி எழுந்தவர்கள் அதனினும் சிலர், இரண்டுக்கும் நடுவே அலைக்கழிவு கொள்பவர்களே அனைவரும். அமைந்தவர்களால் கிளம்புபவர்களை புரிந்துகொள்ள இயலும்” என்றார். “அவன் நான் கிளம்பலாமா?” என்றான். “அதற்கு உனக்கிருக்கும் தடை என்ன?” என்றார். “என் அன்னையை காட்டுகிறார்கள். பெரும்பழி இயற்றியவன் ஆவேன் என்கிறார்கள். என்னை அச்சுறுத்துவது நான் செல்லவிருக்கும் நெடுந்தொலைவு. இவ்வழியெங்கும் இக்குற்ற உணர்ச்சியை கொண்டு செல்வேன் எனில் கணந்தோறும் பெருகி என் முதுகெலும்பை ஒடிப்பதாக அது ஆகிவிடக்கூடும்” என்றான்.

“அக்குற்றவுணர்ச்சியை கடக்க உன்னால் இயலும். அது ஒரு வெறும் ஆணவம். மானுடர் பிறருக்கு பொறுப்பேற்றுக்கொள்வதாக எண்ணுவது ஆணவத்தால் மட்டுமே. எவரும் பிறரை இயற்றவில்லை, எவரும் பிறரை சுமந்திருக்கவும் இல்லை. ஒவ்வொருவரையும் அவ்வாறு நம்பவைத்து அவரவர் இடங்களில் அவரவர் வலைக்கண்ணிகளில் அமைய வைத்திருக்கிறது மாயை. எழுக!” அச்சொல் அவனை விதிர்ப்படையச் செய்தது. எழுக! அவன் அவரிடம் “நான் இவ்வண்ணம் பலமுறை வந்து இச்சொற்களை உங்களிடம் சொல்வதை என்னுள்

நிகழ்த்திக்கொண்டிருக்கிறேன். பிறிதொன்று எண்ணாமல் இங்கிருந்து கிளம்ப இயலுமென்று எனக்கு இப்போதுதான் தோன்றுகிறது. பிறிதொருபோதும் மீள முடியாமல் செல்வதும் எனக்கு இயல்வதே” என்றான். “எனில் கிளம்புக!” என்று அவர் சொன்னார்.

அவன் வணங்கி எழுந்தான். பின்னர் தயங்கிநின்று “நான் மிளையரை சந்திக்க விழைகிறேன்” என்றான். “அவரைச் சந்திப்பது குறித்து அஞ்சிக்கொண்டிருந்தேன். அந்த அச்சத்துடன் இங்கிருந்து செல்லக்கூடாது என இப்போது தோன்றுகிறது. அவர் அளிப்பது சிறுதுளி நஞ்சு என்றால் அதுவே எனக்கு வழித்துணையாகவேண்டும்.” முதுசாத்தன் புன்னகைத்தார். அவன் அங்கிருந்து மிளையனை தேடிச்சென்றான். அவர் ஊருக்கு வெளியே இருக்கும் சோலைக்குச் சென்றிருப்பதாக சொன்னார்கள். அவன் அங்கே சென்றபோது மரங்களிலிருந்து உதிர்ந்துகிடக்கும் வேப்பம்பழங்களை பொறுக்கிச் சேர்த்துக்கொண்டிருந்தார் .அவனைக் கண்டதும் புன்னகைத்து “கிளம்புகிறாயா?” என்றார். “துரியோதன மாமன்னர் நூறு கைகள் கொண்டவர் என்கிறார்கள். நூறு கைகளுக்கு ஒற்றைத்தலைதானா என்று என் பெயர்மைந்தன் கேட்டான். நூறு கையிருந்தால் தலையே தேவையில்லை என்று நான் சொன்னேன்” என்றார்.

அவன் “நான் கிளம்புகிறேன்” என்றான். அவர் “எனில் கிளம்புக!” என்றபின் உரக்க நகைத்து “கிளம்புவது நன்று. கிளம்பி மீண்டவர்கள் தொலைவு என்னும் அந்த மாயைக்குள் மீண்டும் செல்லாமல் அதை ஒரு கனவென்றாக்கி அங்கே வேறொருவராகப் புழங்கியபடி இங்கே வாழ்கிறார்கள். அதுவும் ஒரு விடுதலையே” என்றார். அவன் சில கணங்கள் அவரை

நோக்கி நின்ற பின் மீண்டும் “நான் கிளம்புகிறேன்” என்றான். அவர் சிரிப்பு மறைய கண்களைச் சுருக்கி “நன்று” என்றார். அவன் அவரை வணங்கி திரும்பி இடையிலிருந்த கச்சையை அவிழ்த்து தலையில் கட்டிக்கொண்டு அங்கிருந்தே கிளம்பி நடந்தான். ஒற்றையடிப்பாதையில் நடந்து உமணர்களின் வண்டிப்பாதையை சென்றடைந்தான். அவன் செல்வதை மார்பில் கைகளைக் கட்டியபடி மிளையன் பார்த்திருந்தார். ஒருமுறைகூட அவன் திரும்பவில்லை.

மையச்சாலைக்கு வந்து அங்கிருந்து உமணர்களின் வண்டித் தொடரொன்றை அடைந்து அவர்களுடன் இணைந்துகொண்டபோது அவன் ஒன்றை உணர்ந்தான். ஓர் மெல்லிய ஆடையை உடலிலிருந்து அகற்றும் அளவுக்குக்கூட அந்த விட்டுச்செல்லுதல் அவனுக்கு கடினமாக இருக்கவில்லை. துளியும் இழப்புணர்வு தோன்றவில்லை. கிளையசையாது எழுந்து பறக்கும் ஒரு பறவைபோல் அவன் அனைத்தையும் விட்டு நீங்கினான். அவ்வாறு நீங்குபவர்களை உமணர்கள் முன்னரும் கண்டிருந்தார்கள். அவர்கள் எங்கிருந்து அவ்வெண்ணம் தோன்றியதோ அங்கிருந்து அக்கணத்திலிருந்து கிளம்பியவர்களாக இருப்பார்கள். மறுகணத்திற்கென எதுவும் அவர்களிடம் இருப்பதில்லை.

ஆகவே அவர்களிடம் எங்கு செல்கிறீர்கள் என்று கேட்கலாகாது என்ற உளப்பயிற்சி அவர்களுக்கு இருந்தது. அவர்கள் அவனுக்கு உணவளித்தார்கள். இயல்பாகவே அவர்களுடன் அவனும் பணியாற்றினான். சுமைகளை வண்டியிலேற்றினான். வண்டிமாடுகளை சுனைநீரில் கழுவிக் கட்டி புல்லூட்டினான். வடக்கே திறந்த பெரும்பாலையில் அவர்களுடன் செல்கையில் அறிந்தவையும் கொண்டவையும் ஒவ்வொன்றாக அகன்று

மறைந்த பின்னரும் அவனிடம் எஞ்சிய அச்சொல் மேலும் மேலும் தெளிவுகொண்டபடியே வந்தது. அஸ்தினபுரி.

ஆதன் கிளம்பி ஒன்பது மாதங்களுக்குப் பின் வேங்கடத்தைக் கடந்து விஜயபுரியின் நகர்எல்லைக்கு வெளியே முதற்காவல்மாடத்தின் அருகே தொலைவணிகர்களுக்காகக் கட்டப்பட்டிருந்த கொட்டகைக்கு வெளியே வெறும் வெளியில் தங்கியிருந்த நாடோடிகளுடன் தங்கியிருந்தபோது சூழ ஒலித்துக்கொண்டிருந்த ஒலி கரைந்து ஒற்றை ரீங்காரம் என்றாகி அவனை சுழியிழுத்து மூழ்கடித்துக்கொண்டிருந்தபோது ஒன்றை உணர்ந்தான். அங்கே ஒலித்த மொழிகளில் ஒவ்வொரு வார்த்தையும் பிறிதொன்றை நிகர் செய்து ஒலியின்மையை உருவாக்கிக்கொண்டிருக்க எஞ்சியது ஒரு சொல் – அஸ்தினபுரி.

அப்போது நெடும்பயணத்தின் முதிர்வால் உளமயக்குகள் ஒழிய எங்கிருந்து அச்சொல் தன்னை வந்தடைந்தது என்று புறம்கணித்து நோக்க அவனால் இயன்றது. ஊரில் அச்சொல்லை எங்கோ எவரோ எப்போதும் சொல்லிக்கொண்டேதான் இருந்திருக்கிறார்கள். நினைவறிந்த நாளிலேயே ஊருக்குள் வரும் கதை சொல்லிகளிடமிருந்து அதை கேட்டிருந்தான். பெருங்களிறுகளின் நகர். அனைத்து நகரங்களுமே பெருங்களிறுகளுக்குரியவை. கோட்டைகளை கூத்தர் களிற்றியானைநிரை என்பதுண்டு. அங்காடியை மணிமிடைபவளம் என்பார்கள். அரண்மனைச்சூழலை நித்திலக்கோவை என்று. மாநகர் மதுரையின் இல்லங்கள் யானை முதுகுகள்போல என்று அவர்கள் பாடுவார்கள். எழுந்த மத்தகங்கள் என காவல்மாடங்கள். யானை உயிர்கொண்ட

கல்மண்டபம். யானைகளின் நகர். அச்சொல்லைக் கேட்டிராத எவரேனும் ஊரிலிருக்க இயலுமா?

ஒரு சொல் திறந்துகொள்வதென்பது இப்புவியை கட்டியிருக்கும் பொருள்வயப் பெருக்கு தன் அடிப்படை நெறிகளில் ஒன்றை இல்லாமலாக்கிக்கொள்வதுதான். ஒன்று உடைகையில் பிறிதொன்றை உடைக்கிறது. கணம் கோடியென உடைந்து பொருளில்லா பெருவெளியாக மாறிவிடுகிறது. அச்சொல் என்று தன்னுள் உடைவு கொண்டது என்று அவன் எண்ணிக்கொண்டான். கூர்கொண்ட சொல்லில் இருந்து எவரால் விடுபட இயலும்? அது மறுக்க முடியாத அழைப்பு. தட்ட முடியாத நச்சு உபசரிப்பு.

அவன் பயணம் முழுக்க அஸ்தினபுரி என்னும் சொல் அவனுடன் வந்தது. அவன் அதையே எண்ணினான். எண்ணிச்சலிக்கையில் உதறமுயன்றான். உதறமுடியாதென உணர்ந்து சினம்கொண்டு தன்னை பழித்தான். சற்றேனும் அச்சொல் அகன்றதென்றால் அதை இழந்துவிட்டோமோ என்று எண்ணி அஞ்சி ஓடிச்சென்று அதை அள்ளி எடுத்து ஆரத்தழுவிக்கொண்டான். காதலர் அவ்வாறு துணையர் பெயரிலேயே திளைத்து வாழ்வதுண்டு என்று அவன் பாணர்பாடல்களில் கேட்டிருந்தான். காதலூட்டும் ஒவ்வொன்றும் அவ்வண்ணமேதான் போலும் என தெளிந்தான். அனைத்துக் காதல்களும் உளப்பிறழ்வுகளே. இன்பமென்றோ துன்பமென்றோ வகுக்கவொண்ணா அலைக்கழிதல்களே. இன்பமென்றும் துன்பமென்றும் மாறிமாறி நிகழும் மாயங்களே.

அவன் தன் வழியெங்கும் அவ்வண்ணம் எங்கோ சென்றுகொண்டிருப்பவர்களை கண்டான். திருவரங்கத்திற்கும் அண்ணாமலைக்கும் செல்பவர்கள். பிறிதனைத்தையும் துறந்து

காசிக்குச் செல்பவர்கள். அனைவரும் அவ்வூரின் பெயரால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார்கள். ஊரே அத்தெய்வமென்றாகிவிட்டிருந்தது. அரங்கனும் அண்ணாமலையனும் காசிநாதனும் என தெய்வங்கள் முகம்கொண்டன. அவர்கள் பெருநெகிழ்வுடன் விழிமல்க முகம்மலர கூவி அழைப்பது அவ்வூரைத்தான் என்று அவனுக்குத் தோன்றியது. அவ்வண்ணமே தன்னுள்ளும் அஸ்தினபுரி திகழ்கிறது. அவன் அஸ்தினபுரியின் பெயரை ஒழியாமல் சொல்லிக்கொண்டிருந்தான். சொல்லச்சொல்லப் பெருகுவதே எச்சொல்லும். சொல்லுந்தோறும் சொல்லென்றாகி நின்றிருப்பது சொல்லை விலக்கி தன்னைக் காட்டுகிறது.

அவன் பன்னிரு நகர்களின்வழியாக மதுரையை அடைந்து அங்கிருந்து நகர்களினூடாக காஞ்சிக்கு வந்து வேங்கடத்தைக் கடந்து மேலும் சென்றபோது தொலைவில் இருக்கும் ஊர்களுக்கு எப்படி முடிவில்லாத மர்மங்கள் அமைகின்றன என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தான். அறியாத ஊர்களைப் பற்றிய கனவுகளே இல்லாதவர்கள் ஒருவகையில் நல்லூழ் கொண்டவர்கள். வாழும் நிலம் அவர்களை முழுமையாக கவ்விக்கொள்கிறது. அவர்களின் வேர்கள் ஆழத்துளைத்துச் செல்கின்றன. அந்நிலமே கணம் ஒன்றென தன்னை மாற்றிக் காட்டி அவர்களை மகிழ்விக்கிறது. அங்கேயே வைத்திருந்து அமையும் கணத்தில் வாங்கி அமிழ்த்திக்கொள்கிறது. அறியாத நிலங்கள் சொல்சூடாதவை. வண்ணங்களும் வடிவங்களும் உயிர்த்துடிப்பும் மட்டுமாக எஞ்சுபவை. சொற்களில் ஏறி நெடுந்தொலைவு செல்பவை.

மலைச்சாரலில் பூத்து ஊருக்குள் நறுமணத்தை காற்றில் அனுப்பிவைக்கும் பாலைமரம் போன்றது அறியா நகர்.

பாலையின் மணம் கூரியது. தொலைவில் நறுமணம், அணுகுந்தோறும் கெடுமணம் என மாயம் காட்டுவது. பாலையை மரங்களில் ஒரு தெய்வமென்றே ஊர் எண்ணியது. யக்ஷிகளின், கந்தர்வர்களின் ஊர்தி. தொலைவில் இருந்து பார்க்கையில் மலை தன் மடியில் வைத்திருக்கும் சிறு பொற்கலம் போன்றிருக்கிறது பூத்த கள்ளிப்பாலை. அணுகிச்செல்கையில் மலை சூடிய குடைபோல் மாறுகிறது. அருகே நெருங்குகையில் மலர்களாலான கூடாரம்போல் இருளை உள்ளடக்கி காத்திருக்கிறது. உள்ளே நுழைந்தபின் அதன் மலர்கள் அல்ல, நறுமணமே உடைக்க முடியாத பெருஞ்சுவர் என்று உணர்கிறோம். நள்ளிரவில் பாலைமரத்தை சென்று கண்ட எவரேனும் திரும்பி வந்ததுண்டா?

ஒரு சொல் முடிவிலாது வளரவேண்டுமெனில் அது நோக்கும் கருத்தும் சென்று எட்டாத தொலைவில் இருந்து வரவேண்டும். ஒரு நூறு நாவுகளும் செவிகளும் கடந்து அணுக வேண்டும். ஒரு சொல்லென ஒரு ஊர் சுருங்கலாகும். அச்சொல்லிலேயே அவ்வூரின் அனைத்தும் இருக்கும். அவ்வூரின் பருவடிவங்கள் ஒருவேளை இருக்காது. வண்ணங்கள் இருக்காது. இயல்புகளும் திகழ்கையும்கூட இல்லாமல் இருக்கக்கூடும். அவ்வூரிலிருந்து எழுந்து சொல்லென பரவுவது எது? அவ்வூர் தன் கனவில் தன்னை எப்படி கண்டுகொண்டிருக்கிறதோ அப்படி. அவ்வூரை விண்வாழ் தேவர்கள் எப்படி பார்க்கிறார்களோ அப்படி. காலம் கடந்து தலைமுறைச் சரடின் மறு எல்லையில் எவரோ அந்த ஊரை எப்படி அறியப்போகிறார்களோ அப்படி.

தொலைதூர ஊர்கள் நச்சுப்பொய்கைகள். உலகெங்குமிருந்து மானுடரை அவை மாபெரும் சுழியென ஈர்த்து கொண்டுவந்து உள்ளடக்கிக்கொள்கின்றன. அறியா ஊர்கள் தீச்சொற்கள்போல.

ஒருமுறை வந்தடைந்த பின் அள்ளிக்கொண்டு செல்லாமல் அவை நீங்குவதில்லை. அறியா ஊர்களாலானது இப்புவியெனும் பெருவெளி. அறிந்த ஒவ்வொரு ஊரையும் உதற வைக்கின்றன அறியாத ஊர்கள். அறிந்த ஊர் அன்னைபோல் கனிந்தது, அன்னமூட்டுவது, அணைப்பது, ஆறுதல் கூறுவது. அறியா ஊர் வஞ்சக் காமமகள். விளையாடுபவள், ஆட்கொள்பவள், அலைக்கழிப்பவள், அழிப்பவள். அள்ளி தன்னுள் அடக்கிக்கொண்டு, அகன்று செல்கையிலும்கூட முகமறிவிக்காதவள். தன்மேல் பித்துகொண்டு அணையும் எவரையும் தான் சற்றும் அறிந்திராதவள்.

அத்தனை பேரிடமும் அஸ்தினபுரியெனும் சொல் திகழ்வது எங்ஙனம்? இச்சொற்ச்சுழலைச் சலித்து என் செவி அதைமட்டும் தொட்டு எடுத்துக்கொள்கிறதா என்ன? அப்போது முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகள் அவன் காதில் விழுந்துகொண்டிருந்தன. கிளம்பி நிலங்களைக் கடந்து வர வர மொழிகளும் செறிந்தன. ஒரு மொழி பிறிதொரு மொழியை மதகளிறு பிறிதொன்றையென வெருண்டு விலக்குவதை அவன் கண்டான். புது மொழியை பொருளிலா ஓசையென்றாக்குவது அறிந்த மொழி. மத்தகத்தால் முட்டி வெளித்தள்ளுகிறது, சினந்து தன் எல்லைக்குள் துதிக்கை செவி விசிறி தலைகுலுக்கி அலைக்கழிகிறது. பிளிறி ஆர்ப்பரிக்கிறது. தம் எல்லைகளின்மேல் முழு விசையுடன் முட்டிக்கொண்டே இருக்கின்றன அனைத்து மொழிகளும்.

அறியா மொழியை அறிந்த மொழியினூடாகவே உணர முடிகிறது. அறியா மொழி பொருளிலா ஓசையென அலைக்கொப்பளித்துக் கொண்டிருக்கையில் தெறித்து துமியென

வரும் ஒரு சொல் அறிந்த மொழியில் சென்று அமைகிறது. கடல் பவளத்தை உதிர்ப்பதுபோல். ஓடிச்சென்று அதை எடுத்து இது அறிந்த சொல் அல்லவா, இது நான் பொருள்கொள்ளும் ஒலியல்லவா என்று உளம் கொப்பளிக்கையில் அறியா மொழி அப்பால் பெருகி நின்று புன்னகைக்கிறது. அதன் கோட்டைவாயில் திறக்கிறது. அறிந்த சொற்களினூடாக அறியா மொழிகளுக்குள் நுழைகிறோம். மேலும் மேலும் தன்னை நிகழ்த்தி அறிதலாக மாறும் புதிய மொழி அறிந்த மொழியுடன் உருகி இணைந்து ஒற்றை மொழியாக ஆகிறது.

அப்போது அவனுள் பத்துக்கும் மேற்பட்ட மொழிகள் திரண்ட ஒரு மொழி நிறைந்திருந்தது. அது வெளிப்படும் தருணத்திலேயே தன் சொற்களை கண்டடைந்தது. அவனுடன் பேசுபவன் எந்த மொழியில் பேசினானோ அந்த மொழியை அவன் உணர்வதற்குள்ளாகவே நா தெரிந்தெடுத்தது. தனித்துப் படுத்திருந்து தன்னைச் சூழ்ந்து ஒலிக்கும் மொழிகளைக் கேட்டபடி இருக்கையில் அவன் ஒன்றை உணர்ந்தான். ஒரு மொழி பிறிதொரு மொழியிடமிருந்து மிகச் சிறிய அளவிலேயே வேறுபடுகிறது. ஒலிகளில், கட்டமைப்பில். ஆகவே ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்குச் செல்வதைப்போல் எளிது பிறிதொன்றில்லை. அமைந்த மொழியை கைவிட கற்றுக்கொண்டிருக்க வேண்டும், அவ்வளவுதான். மொழியை உதறுபவனுக்கு மொழிகள் எளிதாக வசப்படுகின்றன.

இனி எனக்கு புது மொழி தேவையில்லை என்று அவன் விஜயபுரியை வந்தடைந்தபோது எண்ணிக்கொண்டான். அப்போதே அவனுக்கு பதினேழு மொழிகள் நெஞ்சில் நிறைந்திருந்தன. இன்னும் மொழிகள் உள்ளே சென்று

அமையும் என்றால் என் அகமொழி மலைத்தொடர்களைப்போல் ஒருபோதும் முழுதுறப் பார்க்க இயலாததாக மாறிவிட்டிருக்கும். நான் அதன் மேல் சிற்றெறும்பென ஊர்ந்துகொண்டிருக்க நேரிடும். ஆனால் மொழிகள் உள்ளே வருவதற்கான அனைத்து வாயில்களையும் அவனே திறந்துவிட்டிருந்தான். அவனை மீறி அவை உள்ளே வந்து பெருகி நிறைந்துகொண்டிருந்தன. மொழிகளை அகத்தே வராது தடுப்பதற்கு ஒரே வழி அறிந்த மொழியில் ஓயாது பேசுவதுதான் என்பதை அவன் அறிந்தான்.

ஆனால் அவன் கிளம்பிய நாளிலிருந்தே பேச்சு நின்றுவிட்டிருந்தது. பிறர் பேச்சை கேட்பதற்காகவே அவனுக்கு மொழிகள் பயன்பட்டன. மொழி தன்னைச்சுற்றி நிரம்பி ததும்பிக்கொண்டிருக்கையில் நடுவே ஒரு சொல்லின்மையின் சுழிப்பென அவன் அமர்ந்திருந்தான். மனிதர்களை அவர்களின் மொழி வழியாக சென்று தொட்டான். அவர்கள் பேசும் மொழிகள் அவர்களின் விழிகளை பொருளுள்ளவையாக்கின. அவர்கள் புன்னகைகளில் ஒளி நிரப்பின. அம்மொழியினூடாகவே அவர்கள் உள்ளமும் முன் வாழ்வும் வாழ்ந்த நிலமும் கொண்டவர்களாக மாறினார்கள். அவர்களை மீண்டும் விலக்கி வெறும் முகங்களாக, வெற்றுத்திரளாக ஆக்கினாலொழிய மொழிகளிலிருந்து விலக முடியாது.

அந்தச் சொற்களை தவிர்ப்பதற்கு ஒரே வழி அவற்றை ஒன்றுடன் ஒன்று இணைத்து ஒற்றைப்பெரும் முழக்கமென எண்ணிக்கொள்வதுதான். ஒற்றைப் பெருமுழக்கம் என்ற சொல்லை தனக்குத்தானே சொல்லி தன் செவிகளுக்கு அவ்வாணையை அனுப்பினான். பருந்தெடுத்துச் செல்லும் கோழிக்குஞ்சை கல்லெறிந்து கீழே வீழ்த்திப் பிடிப்பது அவன்

சிற்றூரில் வழக்கம். அது எழுந்த திகைப்பில் விழுந்த அதிர்ச்சியில் தான் இறந்துவிட்டதாக தானே நம்பிக்கிடக்கும். வெண்கலப்பானையை அதன் மேல் கவிழ்த்து சிறு கரண்டியால் மெல்ல அடித்து சூழும் ரீங்காரத்தை எழுப்புவார்கள். பின்னர் கலம் விலக்கி நோக்குகையில் எழுந்து திகைத்து நின்றிருக்கும்.

அது ஓங்காரம் என்று மிளையன் கூறுவதுண்டு. "இங்குள்ள ஒலிகள் அனைத்தும் சென்று விழுந்து ஒன்றான பெருங்கடல். ஒற்றைச் சொல்லின் முடிவிலி. ஒவ்வொரு உயிருக்கும் அது வாழ்வதற்கான ஒற்றைச் சொல்லொன்று உள்ளது. பிறிதெவருக்கும் இல்லாத சொல். அப்பெரும் பரப்பிலிருந்து அவர்களிடம் வந்து மீண்டும் சென்றுவிடுகிறது. அது அச்சொல்லை இழந்து இங்கே கிடந்தது. இவ்வோங்காரத்திலிருந்து அச்சொல்லை மீண்டும் பெற்றுக்கொண்டது. இனி அதை அது தனக்குத்தானே சொல்லிக்கொள்ளும். ஒருமுறை சொன்னதை மீண்டும் சொல்ல இயலாது. அணுவிடை வேறுபாடுகளால் ஒரு சொல்லையே மொழியென ஆக்கிக்கொள்ள முடியும். அகமென பெருக்க முடியும். முடிவிலி வரை கொண்டு செல்ல முடியும்."

"மானுடருக்கு மட்டுமல்ல புழு பூச்சிகளுக்கும் இடையறா மொழிப்பெருக்கென்று அகம் அமைந்துள்ளது என்று உணர்க! சிறு கோழிக்குஞ்சு வெளிவந்ததும் சலிக்காது ஒற்றைச் சொல்லை சொல்லிக்கொண்டிருக்கிறது. பிறகு அச்சொல் அதன் உள்ளே வாழத்தொடங்குகிறது. அச்சொல் என அதற்குரிய தெய்வம் எழுகிறது, ஆட்கொண்டு அழைத்துச்செல்கிறது." அவன் மிளையனின் சொற்களைத்தான் அடிக்கடி நினைத்துக்கொண்டான். அன்னையர், நல்லறிவூட்டும்

ஆசிரியர்கள், சான்றோர்கள் சொன்னவை அனைத்தும் கரைந்தழிந்த பின்னரும் அவருடைய சொற்கள் மட்டும் எஞ்சியிருந்தன. அவற்றிலிருந்த நஞ்சு அவற்றை அழிவற்றவையாக்கியது. அவன் அவருடைய விழிகளின் கூர்புன்னகையுடனேயே அச்சொற்களை நினைவுகூர்ந்தான்.

“அஸ்தினபுரியையும் குருக்ஷேத்ரத்தையும் பிரிக்கமுடியாதென்று உணர்க! திருதிகழ் மாநகர் அக்குருதிநிலத்தால்தான் ஊட்டப்படுகிறது, காக்கப்படுகிறது. செங்குருதிநிலம் அங்கே எழவிருக்கும் பெரும்போர் ஒன்றுக்கென காத்திருக்கிறது என்கிறார்கள். உன் குருதியும் அங்கு விழவேண்டும் என தெய்வங்கள் எண்ணுகின்றன போலும்.” அவர் தயங்காத சிரிப்புடன் அவன் விழிகளை நோக்கி சொன்னார். “நம் ஏரியின் முதலைகளுக்கு உணவாக வடபுலத்திலிருந்து வந்துசேர்கின்றன பறவைகள். அவை கிளம்பும்போதே அனைத்தும் வகுக்கப்பட்டுவிட்டிருக்கின்றன. பறவை அவற்றை அறியமுடியாது. சிறகு விரித்தெழுக, பறந்து திசைகொள்க என்று மட்டுமே தெய்வங்கள் அதனிடம் சொல்கின்றன.”

சிதறிச்சிதறி பொருளென்றும் பொருளின்மையென்றும் சென்றுகொண்டிருந்த எண்ணங்களில் உழன்று அவன் விழி அயர்ந்து துயில்கொண்டபோது அவன் முகம் மலர்ந்திருந்தது. தன் கனவுக்குள் அவன் அஸ்தினபுரியை கண்டான். அதன்மேல் ஓசையே இல்லாமல் செங்குருதிமழை பொழிந்துகொண்டிருந்தது. செம்பட்டுநூல்கள் என மழைத்தாரைகள் நின்றுலைந்தன. குவைமாடங்கள் வெட்டிஎடுத்த நெஞ்சக்குலைகள். கூரைவிளிம்புகளிலிருந்து அரளிமொட்டுகள் என குருதித்துளிகள் சொட்டின.

# களிற்றியானை நிரை - 4

## பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 4

ஆதன் ஊரைவிட்டுக் கிளம்பி பன்னிரண்டு நாட்களுக்குப் பின்னரே அஸ்தினபுரிக்குச் செல்வதென்று அறுதியாக முடிவெடுத்தான். அவனை கேட்காமலேயே அவன் மதுரைக்குச் செல்பவன் என உமணர்கள் எண்ணிக்கொண்டனர். அவன் அண்ணாமலையானை நாடிச்செல்லும் வழியில் மதுரையில் சின்னாள் தங்குபவன் என்று கருதினர். உமணர்களின் வண்டிநிரையுடன் அவர்களின் ஏவலனாக அவன் சென்றான். அவர்கள் சில நாட்களிலேயே அவனுடைய இயல்பை புரிந்துகொண்டு அவனுக்குரிய தனிமையை அளித்தனர். அவன் சருகுப்படுக்கை அமைத்து படுத்துக்கொள்கையில் எவரும் அருகே வருவதில்லை. இரவில் விழித்து வான்நோக்கி அமர்ந்திருக்கையில் ஏதும் கேட்பதுமில்லை.

“இறையூர் தேடிச் செல்பவர்கள் ஒவ்வொன்றாக எடுத்துநோக்கி ,ஏங்கி, துணிந்து வீசிவிட்டு விடுதலைகொண்டு முன்செல்பவர்கள்” என்று வணிகரான மருதர் சொன்னார். “ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு கணத்தில் ஒன்றைத் தொட்டு உள்ளிருந்து எடுத்து அதை உதறமுடியாது என எண்ணி அக்கணமே திரும்பிச் செல்பவபவர்களும்கூட…. சென்றமுறை வந்த ஒருவர் புளிக்காய் பச்சடியை தொட்டு நாவில் வைத்தார். மகளே என வீரிட்டபடி எழுந்து ஈரக்கையுடன் தெற்குநோக்கி ஓடி மறைந்தார்.” அவன் புன்னகை புரிந்தான். “ஆனால் மீள்பவர்களைக் கண்டு நான்

ஏளனம் செய்வதில்லை. கிளம்பவேண்டும் எனத்தோன்றுதல் மாண்புடையது. திரும்பிச்செல்லுதல் அதனினும் மாண்புடையது. தெய்வத்தைவிட பெரிய ஒன்றை இல்வாழ்க்கையிலேயே கண்டடைபவன் நல்லூழ் கொண்டவன் அல்லவா?”

மதுரையில் அவன் அஸ்தினபுரியைப் பற்றிய புதியசெய்தி ஒன்றை அறிந்தான். மதுரையின் கூலவணிகர் தெருவினூடாகச் சென்றுகொண்டிருக்கையில் வடபுலத்துப் பாணன் ஒருவன் பாடிய அயல்மொழி செவியில் விழ அவன் நின்றான். அவன் பாடி முடித்ததும் அவ்வரிகளை மதுரைப்பாணன் தமிழில் பாடினான். “செங்குருதி கொழுங்குருதி அனற்குருதி புனற்குருதி எழுகிறது அறநிலத்தில். அரசகுடி அரக்ககுடி அசுரகுடி அல்லார்குடி அனைத்தும் திரள்கின்றன குருநிலத்தில்!” என்று பாணன் பாடினான். “மதகளிற்றுப்பெருநகரில் எழுகிறது போர். மாநிலத்து தலைநிலத்தில் எழுகிறது பெரும்போர்.”

அவன் கூட்டத்தில் சேர்ந்து நின்று அதை சொல் சொல் என செவியுற்றான். இளைய யாதவர் தேர்ச்சகடம் தேய, தன் கால்குறடு தேய அஸ்தினபுரிக்கு மும்முறை தூதுசென்றார். சூடிய பீலி தாழ தலைவணங்கி அரசவையிலும் குடியவையிலும் அந்தணர் அவையிலும் மன்றாடி போரை நிறுத்த முயன்றார். அறுதியாக அதுவே ஊழென்றால் அவ்வண்ணமே ஆகுக என்று தன் கால்பொடியைத் தட்டி வீசியெறிந்துவிட்டு அஸ்தினபுரியிலிருந்து கிளம்பினார். செல்லும் வழியிலேயே பாஞ்சஜன்யத்தை எடுத்து மும்முறை முழக்கி அஸ்தினபுரியின்மேல் போரை அறிவித்தார்.

அவ்வோசையை ஏற்று ஆயிரம் முரசுகளும் பன்னீராயிரம் கொம்புகளும் ஒலித்தன.

ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கென அவ்வறைகூவல் பரவ அன்றிரவு ஆரியப்பெருநிலமே விண்ணைநோக்கி போர்க்கூவல் எழுப்பியது. இரவில் வெளித்த விண்மீன்களுக்குக் கீழே மிதந்தலைந்த தேவர்கள் அவ்வோசையைக் கேட்டு நடுங்கினர். முனிவர்கள் தங்கள் ஊழ்கத்திலிருந்து விழித்தெழுந்தனர். அந்தணர் திகைத்தபின் மேலும் ஓசையுடன் வேதம் ஒலித்தனர். பாரதவர்ஷத்தின் அத்தனை பேரரசர்களும் கௌரவர்களின் தரப்பையே தேர்ந்தனர். பாஞ்சாலமும் விராடமும் மட்டுமே பாண்டவர்களுடன் இணைந்துள்ளன. மதயானைக்கூட்டமென திரண்டுள்ளனர் ஆரியவர்த்தத்தின் அரசர்கள். வில்லேந்தி காய்த்த கைகள் கொண்டவர்கள். முடிசூடித் தழும்பேறிய நெற்றிகொண்டவர்கள்.

கூடிநின்றவர்களிடமிருந்து எழுந்த ஓசை வியப்பா அச்சமா உவகையா என அவனால் பிரித்தறியமுடியவில்லை. பாணன் அவர்களை விழிசுழற்றி நோக்கியபின் சொன்னான் “வில்பெருவீரனாகிய கர்ணன், உருத்திரவடிவினனாகிய அஸ்வத்தாமன், பெருந்திறலோனாகிய ஜயத்ரதன், தோள்வலியனாகிய துரியோதனன், நூற்றுவர் தம்பியர் நிரை. அவர்களுடன் துணைநின்றிருக்கிறார்கள் பிரஜாபதியாகிய பீஷ்மர், பிரம்மவடிவமாகிய துரோணர், அருந்தவத்தாராகிய கிருபர், பெருந்தந்தையாகிய பால்ஹிகர், தாய்மாமனாகிய சல்யர். இதைப்போல் இத்தனை மாவீரர் ஒருதரப்பில் திரண்டதில்லை.”

கூட்டம் திகைத்துச் சொல்லடங்க பாணன் தொடர்ந்தான் “ஆனால் எவர் வெல்வார் என்பதை எவரும் சொல்லமுடியாது

என்கின்றனர் அறிந்தோர். பாண்டவர்களின் தரப்பில் வில்விஜயனும் பெருந்தோள் பீமனும் உள்ளனர். திருஷ்டத்யும்னனும் சாத்யகியும் சிகண்டியும் திகழ்கின்றனர். ஆயினும் எதிர்த்து நிற்போரை எண்ணினால் அவர்கள் ஆற்றலற்றோரே. ஆற்றலெனத் திகழ்பவர் இளைய யாதவர். விண்ணவனே மண்வடிவெடுத்தான் என பெரும்புலவர் வாழ்த்தும் கோமகன். எங்கு வில்லவனும் சொல்வலனும் இணைகிறார்களோ அங்கே வெற்றிமகள் வந்தமர்வாள் என்பது உறுதி எனப் பாடுகின்றனர்." கூட்டத்திலிருந்து ஆரவாரம் எழுந்தது. அதுவும் ஏன் என்று அவனால் உணரமுடியவில்லை. அவன் முகங்கள் ஒவ்வொன்றையாக பார்த்தான். அவற்றிலிருந்த உணர்வென்ன என்று அவனால் உய்த்துணரக் கூடவில்லை.

பின்னர் அவன் அறிந்தான், அவர்களிடமிருந்தது ஒற்றை உணர்வே என. அது கதைகேட்கும் குழவியரின் உணர்வு. விந்தைநிலை. துயர், அச்சம், தவிப்பு, சீற்றம், உவகை, நிறைவு அனைத்துமே விந்தையெனவே அவர்களில் வெளிப்படும். கதைகளுக்குரியது அந்த ஒற்றை உணர்வே. கதையின்ல் எழும் வலியும் இழப்பும் நோயும் சாவும் இனியதே. கதையில் அனைத்தும் சுவையே. அவன் மதுரையில் வைகைக்கரையில் அமைந்த செங்கல்படிக்கட்டில் அமர்ந்து நீலநீர் சுழித்தோடுவதை பார்த்துக்கொண்டிருந்தான். மதுரையிலிருந்து கிளம்பிவிடவேண்டும் என்ற முடிவை அப்போதுதான் எடுத்தான்.

மதுரையில் அவன் தன் வணிகக் குழுவிடமிருந்து பிரிந்து பிறிதொரு வணிகக்குழுவுடன் இணைந்து கொண்டான். வணிகர்குழுத் தலைவர் அவனைப்பற்றி புதிய வணிகக்குழுத்

தலைவரிடம் “இவர் சென்றுகொண்டிருப்பவர் என்று அறிமுகப்படுத்தினார். சென்றுகொண்டிருப்பவன்! அச்சொல் ஆதனுக்கு ஒரு சிறு திடுக்கிடலை உருவாக்கியது. சென்று கொண்டிருப்பவன் எனும் சொல்லைப்போல தன்னைப்பற்றி சொல்ல பிறிதொரு சொல்லில்லை என்பதை அவன் உணர்ந்தான். அவ்வாறு அவர்களுடன் இணைந்து பிரிந்து சென்றவர்களின் பெரும்பட்டியலிலிருந்து அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கும் சொல் போலும் அது. சென்றுகொண்டிருப்பவர்கள். அவர்கள் செல்வதை மட்டுமே வணிகர்கள் காண்கிறார்கள்.

நாடெங்கும் சாலைகளில் வணிகக்குழுக்கள் ஒரு குழுவின் கொடி இன்னொரு குழு காண, ஒரு குழுவின் ஓசை இன்னொருகுழு கேட்க தொடர்ந்து சென்றுகொண்டிருந்தார்கள். அவ்வணிகக் குழுக்களினூடாக பல்லாயிரம்பேர் அவ்வாறு சென்றுகொண்டிருக்கக்கூடும். பாரதவர்ஷம் முழுக்க பல்லாயிரம் பல்லாயிரம் பேர் சென்றுகொண்டே இருக்கிறார்கள். அவர்களை சந்தித்தால்கூட அடையாளம் காண முடியாது. அடையாளம் கண்டுகொண்டால்கூட அவர்களிடம் சொல்வதற்கு அவனிடம் சொற்களென ஏதும் இருக்காது. ஒவ்வொருவரும் முற்றிலும் தனித்தவர்கள். பிறரிடம் சொல்வதற்கென சொற்களேதும் இல்லாதவர்கள். சென்றுகொண்டே இருப்பவர்கள்.

அச்சொல் அவனை கவ்விக்கொண்டது. அதுவரை தன்னை அவன் எவ்வகையிலும் வரையறுத்திருக்கவில்லை. அக்கணமே அது அவனுடைய வரையறையாக மாறியது. அச்சொல்லையே தன் பெயராகவும் கொள்ளவேண்டும் என்று அவன் எண்ணிக்கொண்டான். புதிய வணிகக்குழுவுடன் சோழ நாட்டில்

சென்றுகொண்டிருக்கையில் சிற்றூர் ஒன்றிலிருந்து வந்து அக்குழுவில் சேர்ந்துகொண்ட இளைஞன் அவனிடம் “மூத்தவரே, தாங்கள் செல்வதெங்கே?” என்றான். முதல் முறையாக அவ்வினாவை எதிர்கொண்ட ஆதன் உளம் திகைத்து வெற்றுவிழிகளால் அவனை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் கையைப்பற்றி உலுக்கி “தாங்கள் செல்வதெங்கே? நானும் அங்கு வருகிறேன்” என்றான். “என் பெயர் அழிசி. நான் தச்சன். என் கைகளுக்கு எங்குசென்றாலும் சோறு.”

“நீ எதற்காக கிளம்பினாய்?” என்றான். “அச்சிற்றூரில் நாங்கள் வாழ்ந்தோம்... அங்கே இன்று அவ்வூர் இல்லை” என அவன் கைசுட்டிச் சொன்னான். “என் அன்னையும் தந்தையும் கொள்ளையரால் கொல்லப்பட்டனர். மலையிறங்கி வந்த கொள்ளையர்கள் எங்கள் ஊரை அழித்து தீவைத்து அனைத்துப் பொருட்களையும் சூறையாடிச் சென்றனர். முதியவர்கள் அனைவரையும் கொன்றனர். இளம்பெண்களையும் இளைஞர்களையும் சிறைப்படுத்திச் சென்றனர். கோழிக்கூடு ஒன்றுக்குள் பதுங்கி நான் உயிர் தப்பினேன். என் ஊரில் எஞ்சியவன் நான் மட்டுமே. அவர்கள் சென்றபின் அங்கிருந்து கிளம்பினேன். அந்த ஊரின் நினைவில்லாத எங்கேனும் செல்ல வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.”

ஆனால் அவன் தன் இயல்பால் அதையும் துயரில்லாத இளங்குரலில் சொன்னான். ஆதன் அவனை கூர்ந்து நோக்கி “கிளம்பிய பிறகு அதன் நினைவு குறைகிறதா?” என்று கேட்டான். “குறையாதென்றுதான் எண்ணினேன். ஆனால் அங்கிருந்து விலகுந்தோறும் அவ்வூர் சிறுத்துச் சிறுத்து நினைவின் ஆழத்தில் எங்கோ செல்கிறது. அவ்வூருடன்

எனக்கு இனி தொடர்புகள் ஏதும் இல்லை என்று தோன்றுகிறது" என்றான் அழிசி. "மற்றபடி இன்பம் துன்பம் என்பன அனைத்தும் சொற்களே. அச்சொற்களால் நாம் சுட்டும் புறவுலக நிகழ்வுகளுடன் நமக்கான தொடர்பென்ன என்பதே கேள்வி. நமக்குத் தொடர்பில்லாத இன்பமும் துன்பமும் நமக்கு ஒரு பொருட்டே அல்ல. இந்நாட்களில் நான் கற்றுக்கொண்டது அதுதான்."

"அதன்பின்னர்தான் நெடுந்தொலைவு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை அடைந்தேன். தொலைவு நம்மை நாம் கொண்டிருக்கும் அனைத்தில் இருந்தும் அகற்றுகிறது. நெடுந்தொலைவு சென்றுவிட்டேன் என்றால் என் இழப்பும் துயரும் மிகமிகச்சிறிதென்று ஆகிவிடும். இங்கிருப்பவர்களில் நெடுந்தொலைவு செல்பவர் நீங்கள் என்பதை உணர்ந்தேன். ஆகவேதான் கேட்டேன்" என்றான் அழிசி. "அதை எப்படி உணர்ந்தாய்?" என்று ஆதன் கேட்டான். அவன் திகைத்து, குழம்பி, பின் சிரித்து "தெரியவில்லை. உண்மையில் அதை அப்படி வகுத்துரைக்கும் அளவுக்கு எனக்கு மொழித்திறன் இல்லை. எவ்வகையிலோ உணர்ந்தேன் என்று மட்டும்தான் என்னால் சொல்ல முடியும்" என்றான்.

பின்னர் "என்னிடம் அதை சொன்னவர் பெரியவர் என தோன்றுகிறது. அவர் உங்களை சென்றுகொண்டே இருப்பவர் என்று வரையறுத்தார். அச்சொல் எனக்கு ஒரு பெருந்திறப்பாக அமைந்தது. சென்றுகொண்டே இருத்தல் என்பது நெடுந்தொலைவு செல்வதுதானே?" என்று அவன் சொன்னான். ஆதன் சிரித்தபடி "மிக அருகே இருக்கும் ஓரிடத்திற்கும் ஒருவன் சென்றுகொண்டே இருக்கலாமே?" என்றான். அவனுக்கு அது புரியவில்லை. "ஆம் அப்படியும் சிலர்

இருக்கக்கூடும்” என்றான். ஆதன் “உன்னுடைய சிறிய அறிதல்களைக்கொண்டு அறியக்கூடிய ஒன்றல்ல இது” என்றான். அவன் மேலும் சிரித்து “உண்மைதான்” என்றான்.

ஆதன் பேச்சைத் தவிர்த்து விலக முனைய அவன் ஆதனின் ஆடையைப் பற்றியபடி உடன் ஓடிவந்து “கூறுக! நீங்கள் செல்லுமிடம் எது?” என்று மீண்டும் கேட்டான். அக்கணத்தில் தன்னுள் ஓயாது திகழும் அச்சொல்லில் முட்டிக்கொண்டு “அஸ்தினபுரி” என்று அவன் சொன்னான். “ஆம், நான் அதை கேட்டிருக்கிறேன். வடக்கே நெடுந்தொலைவில் இருக்கிறது அந்த ஊர். பெருங்களிறுகளின் நகர் அது. பல்லாயிரம் களிறுகள் சேர்ந்து அதை கட்டின என்கிறார்கள். அதை எழுப்பிய மாமன்னர் ஹஸ்தி யானைகளுக்கு ஆணையிடும் சொல் கொண்டிருந்தார். காட்டிலிருந்து ஒரு பெரும் படையென திரண்டு வந்து அவருக்காக அந்நகரை உருவாக்கின.”

அவன் ஆதனின் கைகளை பற்றிக்கொண்டு “மூத்தவரே, நானும் வருகிறேன். நான் விரும்பும் ஊர் அதுதான்” என்றான். “நான் அங்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை இப்போதுதான் உறுதியாக அடைந்தேன். ஆனால் மெய்யாகவே அங்கு செல்வேனா என்று எனக்குத் தெரியவில்லை” என்று ஆதன் சொன்னான். அழிசி மெல்ல குதித்தபடி “நீங்கள் அங்குதான் செல்கிறீர்கள், நன்கு தெரிகிறது. நீங்கள் வேறெங்கும் செல்ல முடியாது. இந்த ஊர்கள் மிகச்சிறியவை. இந்தப் பாதை மிக மிக பழகியது. இந்த வழியாக ஒருவர் நெடுந்தொலைவு செல்ல வேண்டுமெனில் அஸ்தினபுரிக்கே செல்லவேண்டும். அல்லது பாரதவர்ஷத்திற்கு செல்லவேண்டும்” என்றான்.

ஆதன் நகைத்து “எங்கு?” என்றான். “பாரதவர்ஷத்திற்கு” என்று அவன் சொன்னான். “சரி, நீ எங்கிருந்து வருகிறாய்?” என்றான்.

“நான் பாண்டி நாட்டிலிருந்து வருகிறேன்… மதுரைக்குக் கிழக்கே” என்றான். “மதுரை எங்கிருக்கிறது?” என்றான் ஆதன். “நீர்வழிபாட்டுக்கு நீ கற்ற பழம்பாடல் இருக்குமே, சொல்!” அவன் கண்களை மூடி எண்ணி நோக்கி “வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும், தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும், குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும், குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும், கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற்கட்டின் நீர்நிலை நிவப்பின்…” என்று சொல்லி நிறுத்தி “மதுரையும் பாரதவர்ஷமே” என்றான்.

பின்னர் “ஆனால் நான் பாரதவர்ஷத்தை கதைகளில் மட்டும்தான் கேட்டிருக்கிறேன். அனைத்து வளங்களும் நிறைந்த நாடு, தெய்வங்கள் மண்ணிறங்கி வாழும் நாடு என்கிறார்கள்” என்றான். “அனைத்து நிலங்களும் அவ்வாறுதான்” என்று ஆதன் சொன்னான். “மெய்யாகவே நானும் பாரதவர்ஷத்தில்தான் இருக்கிறேனா?” என்று அழிசி கேட்டான். “அவ்வாறு எண்ணிக்கொண்டால் அதுவே” என்று ஆதன் சொன்னான். அவன் விழிகளை மேலேற்றி உவகையுடன் “பாரதவர்ஷம்!” என்றான். பின்னர் “நெடுந்தொலைவிலிருக்கிறது! நெடுந்தொலைவு!” என்றான்.

நெடுந்தொலைவு எனும் சொல் அவனையும் ஆட்டுவிப்பதை ஆதன் புரிந்துகொண்டான். “நான் தங்களுடன் வருகிறேன். தங்களுடன் அஸ்தினபுரி வரைக்கும் வருவேன்” என்றான். “நான் அஸ்தினபுரிக்குச் செல்வதென்றால் உன்னையும் அழைத்துக்கொண்டே செல்வேன்” என்று ஆதன் சொன்னான். “மெய்யாகவா? என்னை விட்டுவிட்டுச் செல்ல மாட்டீர்கள் அல்லவா?” என்றான் அழிசி. ஆதன் இல்லை என தலையசைத்தான். “நீங்கள் அன்புடையவர் என்று

தோன்றுகிறது, ஆனால் விட்டுச்செல்பவர் என்றும் தோன்றுகிறது" என்றான். ஆதன் சிரித்தான். "சிரிக்கிறீர்கள்... ஆகவேதான் அப்படித் தோன்றுகிறது" என்றான் அழிசி.

அதன் பின் அழிசி அவனுடன் ஒட்டிக்கொண்டான். அவனுக்கு பணிவிடைகளை செய்தான். துயில் பொழுதில் இலைகளைப் பறித்து அவனுக்கு படுக்கை அமைத்தான். காலையில் அவனுக்கு முன்னரே எழுந்து அவனுக்காக காத்திருந்தான். அவன் ஆடைகளை தூய்மை செய்தான். உணவு சமைத்து பரிமாறினான். அவனுடைய உறவு தனக்கு எத்தனை அணுக்கமாயிருக்கிறது என்று ஆதன் வியந்தான். கிளம்பிய மறுகணமே ஓர் உறவை உருவாக்கிக்கொள்வதென்பது விந்தையானது என்று தோன்றியது. ஆனால் உறவுகள் தேவைப்படுகின்றன. உறவுகளினூடாகவே இங்கே திகழ முடிகிறது. எங்குமல்ல, ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும் பாதையில்கூட திகழவேண்டுமெனில் ஓர் உறவு தேவையாகிறது. அப்போது அவனுக்கு தோன்றியது, எங்கு செல்லவேண்டுமென்ற இலக்கையே உறவென ஒன்று அமைந்த பின்னர்தான் சொல்ல முடிகிறது. உறவென எவருமில்லையேல் எங்கு செல்வதென்ற தெளிவும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

வாககன் என அவனை அழைத்தார்கள். செல்லும் வழியெங்கும் அழிசி அவனிடம் அஸ்தினபுரியைப் பற்றியே சொல்லிக்கொண்டு வந்தான். கதைகளில் அவன் கேட்டிருந்த அப்பெருநகர் சொல்லச்சொல்ல வளர்ந்தது. அதன் தெருக்களனைத்தும் உருக்கி வீழ்த்தப்பட்ட வெண்கலத்தாலானவை. அதன் கோட்டைச் சுவர்

இரும்பாலானது. அங்குள்ள மாளிகைகளின் முகடுகள் அனைத்தும் தங்கம். காலையில் பொன்னொளியில் அந்நகர் செம்முகில் திரள் போல ஒளிவிடும். அங்கு இரவும் பகலும் வேதச்சொல்லே ஒலித்துக்கொண்டிருக்கும். நகருக்கு மேல் முகில்குவை என வேள்விப்புகை மாறாது நிலைத்திருக்கும். அங்குள்ள கிள்ளைகளும் வேதச்சொல் எனவே கூவும். காகங்களும் வேதச் சொல்லையே தங்கள் மொழி எனக் கொண்டிருக்கும். வேத நாதமென பசுக்கள் ஓசையிடும். வேதம் ஒரு பருவடிவு கொண்டு நகரென்று ஆனதுபோல் திகழ்வது அது.

ஆதன் முதலில் மெல்லிய புன்னகையுடன் அந்தப் பேச்சை செவிகொண்டான். ஒவ்வொரு முறையும் அவனை கேலி செய்யும் பொருட்டு ஏதேனும் சொன்னான். ஆனால் அழிசி எந்த இளிவரலையும் பொருட்படுத்தும் அளவுக்கு கூர் கொண்டிருக்கவில்லை. அறிவின்மையா என அவன் எண்ணினான். ஆனால் அழிசியிடமிருக்கும் ஒளிகொண்ட அகத்தெளிவை அவன் பலதருணங்களில் வியப்புடன் உணரவும் செய்தான். அழிசியின் உள்ளம் தன்னியல்பாக நேர்பாதையில் சென்றது. நேர்பாதையில் மெல்லுணர்வுகளும் பேருணர்வுகளுமே உள்ளன, அங்கே பகடிக்கும் அங்கதத்திற்கும் இடமில்லை. அனைத்துக்கும் மேல் ஒரு மெல்லிய ஐயத்தை அடைபவனுக்கு உரியது பகடி. பகடியை அணிந்தவனுக்கு மேன்மைகள் என எதுவும் முழுமையாக சிக்குவதில்லை. பகடியை அணிந்தவன் தன் துயருக்குக் கூட உளம் முற்றழிந்து கண்ணீர் விடுவதில்லை.

மெல்ல மெல்ல அழிசியின் சொற்களே தன்னுள்ளும் திகழ்வதை அவன் உணர்ந்தான். அதனூடாக அஸ்தினபுரியை

அவன் பேருருவாக தனக்குள் எழுப்பிக்கொண்டான். அதுவரை வெறும் சொல் என திகழ்ந்தது காட்சிவடிவம் கொள்ளலாயிற்று. அவன் இருமுறை கனவில் அந்நகரை கண்டான். அதன் பொன்னொளிர் தெருக்களில் மிதப்பவன்போல் நடந்தான். ஆயினும் அவனால் உறுதியாக முடிவெடுக்க இயலவில்லை. காஞ்சியை அடைந்தபோது அங்கிருந்து வேறெங்காவது செல்லமுடியுமா என்னும் எண்ணம் எழுந்தது. “இந்த வணிகக்குழு இங்கிருந்து மேற்காகத் திரும்பி ரேணுநாடு செல்கிறது. நாம் செல்லவேண்டியது வடக்கே, வேங்கடம் கடந்து விஜயபுரி வழியாக” என்று அழிசி சொன்னான். அவன் எண்ணத்தில் ஆழ்ந்து அமர்ந்திருக்க “நாம் இவர்களிடமிருந்து பிரிந்து பிறிதொரு குழுவை நாடியாகவேண்டும்” என்றான்.

வணிகக்குழு கிளம்புவதற்காக பொதிகளை கட்டிக்கொண்டிருக்க அவன் காஞ்சியின் தெருக்களில் தனித்து அலைந்தான். பிறைவடிவப் பெருநகரின் தெருக்கள் அனைத்துமே ஆற்றைநோக்கிச் சென்று வில்வடிவமான மாபெரும் படித்துறையை அடைந்தன. வேகவதியில் நீர் வெள்ளிக்கம்பிச் சுருள்கள் என முறுகி விரிந்து குவிந்து எழுந்து வளைந்து விழுந்து சென்றுகொண்டிருந்தது. படித்துறையில் காலோய்ந்து அமர்ந்தபோது அவன் அப்பால் அஸ்தினபுரி என்னும் சொல்லை கேட்டான். அங்கே பாணன் ஒருவன் கிணைமுழக்கி உரைச்சொல் வடிவில் கதை நிகழ்த்திக்கொண்டிருந்தான். அங்கிருந்தவாறே ஆதன் அச்சொற்களை செவிகொண்டான்.

“நாவின்மேலும் முகத்தின்மீதும் இறுதி ஆணைகொண்டவர்கள் உண்டு. அவர்கள் மாபெரும் அரசியலாளர்கள். எந்தையே, நீர் உணர்வுகள்மேலும் எண்ணத்தின்மீதும் ஆணை கொண்டவர். யோகியாக அமரவேண்டியவர், இங்கமர்ந்து அரசுசூழ்கிறீர்.”

அச்சொற்களைச் சொல்பவன் யார்? கதைகளில் வாழும் ஒருவன். தேவர்கள் கேட்க, இன்னும் பிறக்காதவர்களும் செவிகொள்ள பேசும் ஆற்றல் பெற்றவன் "சிற்றெறும்புகளின் களிக்களத்தில் பெருங்களிறு என நுழைகிறீர். தந்தையே, உற்றோ உவந்தோ ஊழாலோ நீங்கள் பற்றியிருப்பனவற்றை முற்றாக கைவிடுக! எனக்குப்பின் என்னவாகும் என அஞ்சுவது எளிய மானுடரின் முதற்பெரும் மாயை. இப்புவிமேல் கொண்ட காதலையே அவர்கள் குடிமேலும் மைந்தர்மேலும் குமுகம்மேலும் கொண்ட பற்றென்று எண்ணிக்கொள்கிறார்கள். அந்த மாயையிலா யோகத்தை அறிந்த எந்தையும் உழல்வது?"

அதை பிரத்யும்னன் இளைய யாதவரிடம் சொல்கிறான் என அவன் புரிந்துகொண்டான் "கானேகுங்கள். அணுகி வந்துகொண்டிருக்கிறது பெரும்போர். ஆயிரங்கள் இலக்கங்கள் அழியக்கூடும். குருதிப் பெருக்கும் விழிநீர் பெருக்கும் எஞ்சக்கூடும். அதை நிகழ்த்துவது அஸ்தினபுரியின் நிலவுரிமைப் பூசல் அல்ல. அவர்களிட்ட வஞ்சினமும் அல்ல. மெய்யான ஏது நீங்கள்தான். இன்று பாரதவர்ஷமே திரிந்துள்ளது. பாற்கலத்தில் பிடியுப்பு என அதை திரித்தது உங்கள் இருப்பு. உங்கள் மேல் அச்சம் கொண்டவர்களே இங்குள்ள அரசர்கள் அனைவரும். அதன்பொருட்டே அவர்கள் அங்கே அணிசேர்கிறார்கள். இப்போர் இத்தனை பெரிதாவது உங்களால். இங்கே பேரழிவு நிகழுமென்றால் அது உங்களால்தான்."

கூடியிருந்தவர்களின் முகங்களை ஆதன் நோக்கினான். அங்கே கதைகேட்கும் உணர்வுக்குமேல் பிறிதொன்று தோன்றியிருந்தது. அணுகிவரும் இடர் ஒன்றை உணர்ந்துகொண்ட பதற்றம். சிலர் அங்கிருந்து

விலகிச்சென்றுவிட விழைபவர்போல் உடல்மொழி கொண்டிருந்தனர். ஆனால் எவரும் அச்சொற்களிலிருந்து விலகவில்லை. பாணன் சொன்னான் “தாங்கள் மட்டும் சற்றே அகன்றால் அத்தனை முடிச்சுகளும் அவிழ்ந்துவிடும். ஒவ்வொருவரும் அச்சங்களும் ஐயங்களும் ஒழிந்து மண்ணில் அமைந்து எண்ணத் தலைப்படுவர். யோகியர் வாழவேண்டிய இடம் காடே என வகுத்தவர் மூடர்கள் அல்ல. யோகியர் குடியும் உடைமையும் கொள்வது இழுக்கு என நூல்கள் சொல்வதும் வெறுமனே அல்ல. யோகியர் கோரினால் இவ்வுலகு போதாது. அவர்கள் பெருகினால் இங்கு பிறருக்கு இடமில்லை. ஆகவே விலகுக, அகல்க! இவ்வெளிய மக்களை வாழவிடுக!”

அவன் எழுந்து மீண்டும் தெருவை அடைந்தபோது அழிசி எதிரே வந்தான். “நமது குழு கிளம்பிக்கொண்டிருக்கிறது மூத்தவரே, நாம் கிளம்புகிறோமா?” என்றான். ஆதன் அவனை பொருள்நிகழா விழிகளால் நோக்கிவிட்டு “நாம் வடபுலம்செல்லும் குழுவொன்றை தேர்வோம்” என்றான். “ஆம், அதையே நானும் எண்ணினேன். அவ்வண்ணம் ஒரு குழுவை தெரிந்தெடுத்துவிட்டேன். அவர்கள் விஜயபுரி வரை செல்பவர்கள்…” என்றான். ஆதன் “நன்று” என்றான். “நாம் அஸ்தினபுரிவரை செல்கிறோம் அல்லவா?” என்றான் அழிசி. “ஆம்” என்றான் ஆதன். “அங்கே போர் நிகழவிருக்கிறது என்கிறார்கள்…” என்று அழிசி சொன்னான் “நாம் செல்வதற்குள் போர் தொடங்கிவிடுமா என்ன?” ஆதன் புன்னகைத்தான்.

“அவர் இப்போரை நடத்தவிருக்கிறார் என்கிறார்கள்” என்று அழிசி பேசிக்கொண்டே உடன்வந்தான். “துவாரகையின் அரசர். அவர் பௌண்டரிக வாசுதேவனையும் ஜராசந்தனையும்

கொன்றார். ஆகவே ஷத்ரியர்கள் அவரை வஞ்சம்தீர்க்க எண்ணுகிறார்கள். சூழ்ச்சியால் அவர் போரில் படைக்கலம் ஏந்தக்கூடாது என்று உறுதிமொழி எடுக்கச்செய்துவிட்டார்கள்." ஆதன் "எவர் சொன்னது?" என்றான். "இப்போதுதான் கதைகேட்டுவிட்டு வருகிறேன். அவர் படைக்கலம் எடுக்கமாட்டேன் என தன் மூத்தவருக்கு கால்தொட்டு ஆணையிட்டுவிட்டார். படைக்கலமில்லாமல் போர்க்களம் சென்றால் அவரை அவர்கள் வென்றுவிடுவார்கள்."

அழிசி நின்று கைதூக்கி "ஆனால் அவரை எவரும் வெல்லமுடியாது. படைக்கலமில்லாமல் போர்க்களம் செல்வது அவரல்ல, அவருடைய மாயைவடிவு. அவர் படையாழி ஏந்தி களம்செல்வார்." ஆதன் "அது சொல்மீறுதல் அல்லவா?" என்றான். அழிசி உரத்த குரலில் "இல்லை, அவருடைய மாயைவடிவம்தான் போருக்குச் செல்லும். அது படைக்கலம் ஏந்தியிருக்கும்" என்றான். ஆதன் சிரித்து அவன் முதுகில் தட்டி "வா" என்றான்.

# களிற்றியானை நிரை - 5

### பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 5

காஞ்சியிலிருந்து வடபுலம் நோக்கி கிளம்பிய ஓரிரு நாட்களிலேயே ஆதன் அஸ்தினபுரிக்குச் செல்லும் செய்தி அவ்வணிகக்குழுவில் பரவிவிட்டது. அழிசியால் அதைப்பற்றி சொல்லாமல் இருக்கமுடியவில்லை. "எவரிடமும் கூறிவிடவேண்டாம், இது மந்தணமெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் இதை அவர் இன்னும்கூட எவரிடமும்

சொல்லவில்லை. ஆகவே நான் சொன்னால் நன்றாக இருக்காது” என்று அவன் அனைவரிடமும் அதை சொல்லிவிட்டான். அவர்கள் ஆதனிடம் இயல்பாக பேச்சைத் தொடுத்து அது வளர்ந்தெழும் ஒழுக்கின் நடுவே அஸ்தினபுரிக்கா அவன் செல்கிறான், அவ்வாறு ஒரு தோற்றம் வருகிறதே என பேசத் தொடங்கினார்கள். பின்னர் அப்பேச்சு மெல்லமெல்ல வலுத்தது. அதைப்பற்றி மட்டுமே அவனிடம் பேசுவதென்றாயிற்று.

அவ்வணிகக்குழு வெவ்வேறு ஊர்களில் இருந்து காஞ்சிக்கு வந்து ஒன்றாக இணைந்துகொண்ட ஏழு வணிகர்குழுக்களின் தொகை. அவர்கள் வேங்கடத்தைக் கடந்து சென்றுகொண்டிருந்தார்கள். கோடை எழுந்துவிட்டிருந்தமையால் வழியெங்கும் செம்மண் வெந்து கிடந்தது. புழுதி படிந்த மரங்கள் கானலில் ஆடி நெளிந்தன. சருகுகளையும் மணலையும் அள்ளி வீசிக்குவித்து காற்று ஊளையிட்டது. உடல் உருகிவழிந்துவிடும்போல் எரிந்தது. ஆனால் மாலையில் இனிய காற்று வீசியது. வானம் விண்மீன்பெருக்காகச் செறிந்திருந்தது. அவர்கள் அந்திக்குள்ளாகவே தங்குமிடம் தேர்ந்து அமைவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். “இரவில் பயணம் செய்தால் நன்று, நல்லொளி உள்ளது” என்று அழிசி சொன்னான். “ஆம், ஆனால் அது நாகங்கள் வெளியே வரும் பொழுது. நாகமனைய கொள்ளையருக்கும் உகந்தது” என்று முதிய வணிகரான பூதநாதர் சொன்னார்.

வணிகக்குழுவில் எல்லா பேச்சும் அஸ்தினபுரியைப் பற்றியதாக மெல்லமெல்ல மாறியது. அந்தியில் நீர் வற்றி சேற்று அலையென விரிந்துகிடந்த ஓர் ஏரியருகே அனல்மூட்டி

சுற்றியமர்ந்து உணவுகொள்கையில் ”இவர் அஸ்தினபுரிக்குச் செல்கிறார்” என்று இளைஞனாகிய புலியன் சொன்னான். அனைவரும் கைகளில் சுட்ட அப்பங்களுடன் அவனை நோக்கி திரும்பினார்கள். “அஸ்தினபுரியா? அது மிக வடக்கே அல்லவா உள்ளது? செல்லும் வழியில் பனிமூடிய நூற்றெட்டு மலைகள் உள்ளன. அவற்றைக் கடந்து செல்லவேண்டுமே” என்று முதுவணிகரான காத்தன் சொன்னார்.

“எங்கோ கேட்டுவிட்டு உளறுகிறார். அஸ்தினபுரியைக் கடந்து மேலும் வடக்கே சென்றால்தான் இமையமலையை அடையமுடியும்” என்றார் இன்னொரு வணிகரான முத்தர். “அப்படியானால் என்னிடம் சொன்னவன் அறிவிலியா? நேற்று நாம் கண்ட வணிகர்கள்கூட பெருமலைகள் நடுவே உள்ளன என்றார்களே?” என்றார் காத்தன். “எவர்?” என்றார் அப்பாலிருந்த திருவடியர். “வடபுலம் நாடும் வணிகர்கள்…” என்றார் காத்தன். புதிதாக வந்து சேர்ந்துகொண்ட இளைய வணிகரான இருளர் “அவை விந்திய மலைகள். அவற்றில் பனி இல்லை” என்றார். “பனி அங்கே உண்டு, பனியில்லாத மலையா?” என்றார் காத்தன். உரையாடல்கள் ஒன்றிலிருந்து ஒன்றென தொடுத்துக்கொண்டு விரிந்தன.

“பனி என்றால் அது உப்பு போலிருக்கும்.” “பனியா? அது புகைத்திரைபோல எனலாம். எப்படி உப்புபோல் ஆகும்? எதையாவது உளறிவிடுகிறார்கள்.” “நீர் சொல்வது மூடுபனி… இது நீர் விழுந்து உறைந்து பனியாவது.” “நான் கங்கைவரை சென்றிருக்கிறேன். குளிர் என்றால் என்னவென்றும் அறிந்திருக்கிறேன். அங்கும் பனி மூடுதிரைதான். உப்புக்கல்லெல்லாம் இல்லை…” “உறைந்த பனி அவ்வாறிருக்கும்… பார்த்து வந்தவரே சொல்லியிருக்கிறார்.

நம்மூரில் தேங்காயெண்ணை உறைந்து அவ்வாறு ஆகிறதல்லவா?" "ஆம், நெய்யும் உறைந்துவிடுகிறது. உறைவன அனைத்தும் படிகம்போல் ஆகிவிடுகின்றன." "நீர் உறைந்து பனிமலைமுகடுகள் உருவாகின்றன."

"நீர் எப்படி உறைய முடியும்?" என்றார் பெரிய தலைப்பாகை அணிந்திருந்த புலவரான பெருங்கந்தர். அவர் தன் கிணைப்பறையையும் சுவடிப்பேழையையும் பொக்கணத்தையும் கழியையும் அருகிலேயே வைத்திருந்தார். அவருடைய குரல் மேடைகளுக்காக தீட்டப்பட்டது. எனவே அனைவரும் அமைதி அடைந்தனர். "ஏன்?" என்று சந்திரர் கேட்டார். "ஏனென்றால் நீரை ஆக்குவது நீர்மை என்னும் அதன் மெய்யியல்பு. நீர்மையின் குணங்கள் நான்கு. எங்கும் நில்லாதிருத்தல், தனக்கென நிறமும் சுவையும் மணமும் ஒளியும் இல்லாதிருத்தல், வடிவமற்றிருத்தல், தண்மை கொண்டிருத்தல். ஆகவேதான் அது அனைத்து இடங்களிலும் நிலைகொள்ளவும் அனைத்து நிறங்களையும் சுவைகளையும் மணங்களையும் வடிவங்களையும் தான் கொள்ளவும் வல்லதாகிறது. வெம்மைகொண்டு அனலென்றே ஆகிறது. இது தொல்நூலோர் வகுத்தது."

காத்தன் "நீர் வெம்மைகொண்டால் ஆவியாகி மறைகிறது" என்றார். பெருங்கந்தர் "ஆம், அப்போது அது தன் நீர்மைத்தன்மையை கைவிடுகிறது. நீர்மை இருக்கும் வரைதான் அது நீர். அதை இழந்தால் அது பிறிதொரு பொருள்…" என்றார். "தன் பொருளியல்பிலிருந்து எழுந்து பிறிதொன்றாகும் இயல்பு அனைத்துப் பொருட்களுக்கும் உண்டு. பொருளியல்பென்பது ஒரு காலஇடத்தில் தோன்றும் ஒரு நிலை. அது ஒரு தோற்றம் மட்டுமே என்பதும் உண்டு.

அந்தக் காலஇடம் மாறும் என்றால் பொருளும் மற்றொன்றாகும்” என்றார் பெருங்கந்தர்.

அதுவரை பேசாதிருந்த ஒருவர் “நான் வெண்பனியை கையில் எடுத்திருக்கிறேன்” என்றார். அனைவரும் அவரை நோக்கி திரும்பினர். அவர் அன்றுதான் அக்குழுவுடன் இணைந்திருந்தார். தனித்தலையும் நாடோடி என்று தெரிந்தது. “நீர் கடுங்குளிரில் உறைந்து மணல்துகள்கள் போலாகிறது. வானிலிருந்து பொழிந்து படிந்து இறுகி உப்புப்பரல்போல ஆகிறது. எடைகொண்டு பளிங்குக்கல் போலவே ஆகிவிடுகிறது. கல்லைப்போலத்தான் இருக்கும். எடுத்து அறைந்து யானை மருப்பையே உடைக்கலாம். செதுக்கிக் கூராக்கி அதைக்கொண்டு மரக்கிளையைக்கூட வெட்டலாம். அடுக்கி வீட்டுச்சுவராகக் கட்டலாம்… நான் இமையமலைகளுக்குமேல் சென்று அதை நேர்கண்டு கைகளால் இயற்றி அறிந்தவன்.”

இளைஞனாகிய மதியன் “நீங்கள் சொல்வது புரிகிறது. எங்களூரில் வானிலிருந்து நீர்மணிக்காய்கள் விழுவதுண்டு. அதை கையில் எடுப்போம். எரிப்பதுபோன்ற தண்மை கொண்டிருக்கும். கரைந்து நீரென்றே ஆகி மறையும்” என்றான். “விண்ணிலிருக்கும் நீரே நீர்மணிகளாக உதிர்கிறது. அதுதான் பனி என்பது” என்றார் நாடோடி. பெருங்கந்தர் “உமது பெயர் என்ன? நீர் கற்றறிந்த சொல்வழி என்ன? மையநூல் என்ன?” என்றார். நாடோடி புன்னகையுடன் “என்னிடம் சொல்பொருத விழைகிறீர் போலும்” என்றார். “ஆம், உம்மை மறுக்க விழைகிறேன்” என்றார் பெருங்கந்தர். “பெயர் வழி நூல் ஏதுமில்லாதவன், அலைபவன். என் சொல்லை நீர் ஒதுக்கலாம்” என்றார் நாடோடி. “நிலையிடம் இல்லாதவன் அவையெழுந்து

பேசலாகாது” என்றார் பெருங்கந்தர். “எனில் நான் பேசவே இல்லை என்றே கொள்க!”

“அதெப்படி? உமது சொற்கள் ஒலித்துவிட்டன. எதிரில் எவருமில்லாதபோது சொல்லாடுவதற்கென்று ஒரு முறைமை உள்ளது. என் முன்னாலுள்ள ஒரு பொருளை உமது பெயர் எனக் கொள்கிறேன்.” அவர் சுற்றிலும் நோக்கி “இதோ இப்புகை. உமது பெயர் புகையன். ஆகவே உமது குருவழி அனலுக்குரிய பிருகுகுலம். உமது நூல் நான் கொள்ளும் அதே நூல், தொல்நூலாகிய அளவைநூறு, இல்லையேல் நீர் மாற்றுநூல் கூறும்” என்றார் பெருங்கந்தர். அந்தக் கூட்டம் அமைதிகொண்டது. அவ்வமைதி மெல்லிய மூச்சொலிகளாக நீடிக்க பெருங்கந்தர் “நீர் ஏற்றீர் என்றே கொள்கிறேன். உம்மை இவ்வண்ணம் நான் மறுக்கிறேன். நீர் உறைந்த பனிக்கல்லை நீர் தொட்டு எடுத்து அறிந்திருக்கிறீர் என்கிறீர். அதை புலன்வழி அறிதல் என வகுக்கின்றன நூல்கள்” என்றார்.

“புலன்வழியறிதல் அறிதலின் முதல்நிலை மட்டுமே. அதற்கு அறிதலை தொடங்கிவைக்கும் இயல்பு மட்டுமே உண்டு. அறிதல் அதில் நிலைகொள்ள முடியாது. அதில் மட்டுமே நிலைகொள்வது அறிவல்ல, மாயை மட்டுமே” என்றார் பெருங்கந்தர். “புலன்வழி அறிதல் உய்த்தறிதலால் தொகுக்கப்பட்டு விளக்கப்படவேண்டும். சொல்லறிதலால் முன்பிருக்கும் அறிவுகளுடன் இணைக்கப்படவேண்டும். அறிதல்கள் அனைத்தும் அறிவெனும் முழுமையின் ஒரு பகுதி என பிசிறின்றி முயங்கியாகவேண்டும்.” நாடோடி புன்னகைத்தார்.

“அவ்வாறு ஒன்றென ஆக்குவது அளவைநெறி. அளவைநெறியின் வரையறைகளின்படி பொருளென்பது அதன்

பொருண்மையின் நாமறியத்தக்க வெளிப்பாடு மட்டுமே. நீர் பிறிதொன்றாக ஆகும் என்றால் அது நீரே அல்ல. விதை மரமாகலாம், ஆனால் அது மரம் அல்ல. மரம் எரிந்து சாம்பலாகலாம், அது மரமல்ல சாம்பல் என்னும் இன்னொரு பொருள் மட்டுமே. ஆகவே நீர் பனியாகும் என்பது பிழை. நீரிலிருந்து பனி எழுகிறதென்பதே மெய்." அவர் கைநீட்டி புகையைச் சுட்டி "ஆகவே இந்தச் சிற்றவையில் என் சொல் சொல்மையமென நிலைகொள்க! பொருளின் உள்ளுறையான பொருள்தன்மையை அது கடக்குமென்றால் அது அப்பொருள் அல்ல. இது மறுக்கப்படாதவரை இதுவே மெய்யென்று ஆகுக!" என்றார்.

நாடோடி புன்னகைத்து தலையை மட்டும் அசைத்தார். அவர் மறுத்து ஏதேனும் பேசுவார் என பெருங்கந்தர் எதிர்பார்த்தார். பின்னர் "ஒருமுறை இருமுறை மூன்றுமுறை... என் சொல்மையம் மறுக்கப்படவில்லை. ஆகவே அது இங்கே நிறுவப்படுகிறது. பொருளின் பொருள்தன்மையை அது கடக்குமென்றால் அது அப்பொருள் அல்ல" என்றார். எவரும் அதற்கு மறுமொழி கூறவில்லை. "அப்படியென்றால் அரிசியும் சோறும் வேறுவேறு பொருட்கள்" என்று அழிசி சொன்னான். முதுவணிகர் "ஓசையிடாதே" என அவனை அதட்டினார். அவன் மற்றவர்களை நோக்கிய பின் மேலும் பேச விழைந்தான். முதுவணிகரை ஒருமுறை நோக்கிவிட்டு தலைதாழ்த்திக்கொண்டான்.

"இங்கே நிலைநாட்டப்பட்டது எளிய உண்மை அல்ல என்பதை உணர்க!" என்று பெருங்கந்தர் தொடர்ந்தார். "விவர்த்தவாதம் பரிணாமவாதம் என்று இச்சொற்களத்தை அறிஞர்கள் விரித்துக் கொண்டுசெல்வதுண்டு. ஒரு அடிப்படைக் கருத்து ஏதேனும்

ஒன்றில் நிறுவப்பட்டுவிட்டது என்றால் அது அனைத்திலும் நிறுவப்பட்டுவிட்டது என்பதே பொருள். நீர் பனிக்கட்டியோ நீராவியோ ஆவதில்லை என்றால் பிரம்மம் புடவியோ காலமோ ஆவதில்லை என்றும்தான் பொருள்.” அனைவரும் நாடோடியை நோக்க அவர் மறுமொழி ஏதும் சொல்லவில்லை. “ஆகவே இது இங்கே நிறுவப்பட்டுவிட்டது. ஆம் அவ்வாறே ஆகுக!” என்றார் பெருங்கந்தர்.

அப்பேச்சில் தொடர்பிலாது அப்பாலிருந்து விறகு கொண்டுவந்து எரியில் அடுக்கியபின் இளைஞனாகிய பரியன் “அஸ்தினபுரிக்கு அருகே கங்கை ஓடுகிறது. கடல் தன் கையை நிலத்திற்குள் நீட்டியதைப் போலிருக்கும் என்று அதைப் பற்றி சூதன் ஒருவன் பாடினான்” என்றான். அனைவரும் அச்சொல்லால் அந்த இறுக்கத்திலிருந்து விடுபட்டு புன்னகைத்தனர். அழிசி சிறுவர்களுக்குரிய உரத்த குரலில் “மலையிலிருந்து வானம் வழிந்திறங்கியது போலிருக்கும் என்று கேட்டிருக்கிறேன்” என்றான். புன்னகையுடன் அவனைப் பார்த்து தலையசைத்துவிட்டு நாடோடி “நான் பெரிய நதிகளை பார்த்திருக்கிறேன். கங்கை நான் அறிந்த எந்த நதியை விடவும் நூறு மடங்கு பெரிது” என்றார். “கண்களால் பார்த்து அப்படி சொல்லிவிடமுடியாது” என்று ஒரு குரல் சொன்னது. பலர் திரும்பி நோக்கினர். சீற்றத்துடன் பெருங்கந்தர் அத்திசையை வெறித்துப்பார்த்தார்.

ஆதன் நாடோடியிடம் “நீங்கள் அஸ்தினபுரிக்கு சென்றிருக்கிறீர்களா?” என்றான். அவர் ஆம் என்று தலையை அசைத்தார். “அது பெருநகரம் அல்லவா?” என்றான் ஆதன். “ஆம்” என்றார் நாடோடி. அவன் “அங்கு சென்று என்ன செய்யப்போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால்

அங்கு செல்லவேண்டும் என்னும் உள்விளி எனக்கு எழுந்தது. அதற்கு என்னை அளித்து சென்றுகொண்டிருக்கிறேன்” என்றான். அவர் தலையசைத்து “நன்று” என்றார். அவர் அஸ்தினபுரியைப்பற்றி ஏதேனும் சொல்லவேண்டும் என்று அவன் எதிர்பார்த்தான். செல்வதற்கான வழியைப்பற்றியாவது சொல்வார் என்று காத்திருந்தான். அவர் பேசாமல் இன்னொரு சுட்ட அப்பத்தை அனலில் இருந்து எடுத்து தன் தாலத்தில் வைத்துக்கொண்டார்.

“அஸ்தினபுரிதான் இப்புவியிலுள்ள நகர்களிலேயே மிகப் பெரியது, மிகத் தொன்மையானது” என்று முதுவணிகரான காத்தன் சொன்னார். “ஆம், அது ஆயிரம் மாடக்குவைகளின் நகர் என அழைக்கப்படுகிறது. வெண்ணிற மாடக்குவைகள் முகில்திரள்போல தோன்றும்” என்று இளைஞனாகிய அம்மூவன் சொன்னான். அனைவரும் ஊக்கம் கொண்டு பேசத்தொடங்கினர். ஒவ்வொருவருக்கும் கங்கை குறித்தும் இமையமலை குறித்தும் அஸ்தினபுரி குறித்தும் கருத்துக்களும் காட்சிவடிவுகளும் இருந்தன. சூதர்களும் பாணர்களும் பாடிக்கேட்டு பெருக்கிக்கொண்டவை. அதை தங்களுக்குள் வியந்து வியந்து சொல்லிச் சொல்லி ஒவ்வொருவரும் அதை ஒரு புதிய திசைக்கு கொண்டு சென்றார்கள். ஒருவர் ஒன்றைச் சொல்ல இன்னொருவர் அதை பாய்ந்து பற்றி பெருக்கிக் கொண்டுசென்றார்.

கிணைப்பறையுடன் அமர்ந்திருந்த நாடோடிப்பாணரான பூதி தனக்கான இடம் கோரி கிணைத்தோலின் மேல் கையை வைத்து இழுத்தார். அனைவரும் அவரை திரும்பி நோக்க காத்தன் “கூறுக பாணரே, அஸ்தினபுரி தோன்றிய கதையை!” என்றார். “இது ஒரு தொல்கதை. நூல்களில் நில்லாது

நாவுகளில் பரவிச்செல்வது” என்று பூதி சொன்னார். அவர் கைவிரல்கள் கிணைமேல் துடித்தன.

“அஸ்தினபுரிக்கு நிகரான நகர்கள் விண்ணில்தான் உள்ளன. கிழக்கே இந்திரனின் அமராவதி அமைந்துள்ளது. தென்கிழக்கே அனலவனின் தேஜோபுரி. தெற்கே யமனின் சம்யமனி. தென்மேற்கே நிருதியின் கிருஷ்ணாஞ்சனை. மேற்கே வருணனின் சிரத்தாவதி. வடமேற்கே வாயுதேவனின் கந்தவதி. வடக்கே குபேரனின் மஹோதயமும் வடகிழக்கில் சிவனின் யசோவதியும். விண்ணில் செல்லும் கந்தர்வர்களும் தேவர்களும் அஸ்தினபுரி அந்நகர்களில் ஒன்றோ என ஐயம்கொண்டு அவ்வப்போது இறங்கி வந்துவிடுவதுண்டு.”

அஸ்தினபுரி உருவாக்கப்பட்ட வரலாறு இது. முன்பு மாமன்னன் ஹஸ்தி ஆரியவர்த்தத்தை முழுதாக வென்று தன் கருவூலத்தை செல்வத்தால் நிறைத்தான். அனைத்து புகழ்களையும் அடைந்த அவன் தன் சொல் நிலைகொண்டுவாழும் ஒரு தலைநகரை உருவாக்கவேண்டும் என்று விழைந்தான். பாரதவர்ஷத்தின் தலைசிறந்த நகர்ச்சிற்பிகளை தன் அவைக்கு வரவழைக்க விழைந்தான். எவ்வண்ணம் சிற்பிகள் தன்னைத் தேடிவரச் செய்வது என்று தன் அமைச்சரும் வசிட்டகுலத்து அந்தணருமான ஸ்ரீதமரிடம் கேட்டான். ஸ்ரீதமர் “அரசே, பெருஞ்சிற்பிகள் பணத்திற்காகவும் புகழுக்காகவும் எதையும் செய்யமாட்டார்கள். ஆகவே பரிசோ, பட்டமோ அறிவிப்பதனால் பயனில்லை” என்றார். “எனில் எதைச் சொல்லி அவர்களை ஈர்ப்பது?” என அரசன் கேட்டான்.

“அரசே, அனைத்தையும் மண்ணில் கால்நட்டு நின்று அறிவது விலங்கு நோக்கு. தன் மூதாதையர் தோள்மேல் காலூன்றி ஏறி நின்று பார்ப்பது மானுட நோக்கு. அனைத்தையும் விண்ணிலிருந்து குனிந்து காண்பது தேவர்நோக்கு. விலங்குநோக்கு காலஇடத்தில் மட்டுமே அமைவது. நேற்றும் நாளையும் அதற்கில்லை. மானுடநோக்கு கொண்டவன் தன் தந்தையர் அறிந்த அனைத்தையும் தான்பெற்று தன்னுடையதையும் சேர்த்து மைந்தனுக்கு அளித்துச் செல்கிறான். பல்லாயிரம் கண்களும் செவிகளும் கொண்ட பேருருவனே கற்கும் மானுடன் என்கிறார்கள். தன்னைத் தான் அடுக்கியபடி பெருகிச்செல்லும் முடிவிலாக் காலமும் முடிவிலா வெளியும் கொண்டது அவன் அறிதல். ஆனால் தேவர்நோக்கு என்பது அதற்கும் மேம்பட்டது. அதுவும் காலமும் இடமும் அற்றது. ஒட்டுமொத்தத்தையும் சாரத்தையும் அறியும் ஆற்றல்கொண்டது”.

“கற்றல் நிகழும் கணங்களில் தான் மானுடன் என்னும் நிலையிலிருந்து ஒரு கணம் எழுந்து பிறிதொருவனாக ஆகி மீள்வதை கற்போன் அறிகிறான். அந்தப் பெருமகிழ்விற்காகவே அவன் கற்கிறான். கற்றுக்கற்று அவன் தேவநிலையை தொட்டுவிடுகிறான். தேவர்போல் நினைத்தவிடத்தில் தோன்றவும், உளம்கொண்டவற்றை இயற்றவும் ஆற்றல்மிக்கவனாகிறான். பிரம்மன் படைத்தவற்றை மேம்படுத்தவும் அழியாதவற்றை ஆக்கவும் தன்னால் இயலும் என உணர்கிறான். அதன்பின் அவனால் எளிய மானுடருடன் இணைந்திருக்க இயல்வதில்லை. கற்றோன் விழைவது ஒன்றே, தேவநிலை. கவிஞனாயினும் சிற்பியாயினும் இசைஞனாயினும் அவர்களின் வாழ்வை

மானுடநிலையிலிருந்து அமரநிலை நோக்கிய நாட்டம், ஓயா ஊசலாட்டம் என வகுத்துவிடலாம்.”

“கற்றோன் அமரன் ஆவதற்கான வாய்ப்பு ஒன்றுள்ளது. பெருவேள்வியென ஆகும் செயலொன்றை இயற்றுதல். அக்கனவு அவர்கள் அனைவருள்ளும் திகழ்கிறது. அதற்கான வாய்ப்பை அளிப்போம் என முரசறைவோம்” என்றார் அமைச்சர். “இங்கே அமையும் பெருநகரம் அதன் சிற்பி தன்னுள் கண்ட வடிவத்தின் முழுமையை அடைய அரசு அனைத்தையும் அளிக்கும் என்போம். செல்வமெனில் செல்வம், தவம் எனில் தவம். ஒருபோதும் இதன் பணி இடைநிற்காது, எதன் பொருட்டும் முழுமையன்றி ஒன்றில் நிறைவுறாது என அறிவிப்போம். அவர்கள் இங்கே வருவார்கள்.” மாமன்னர் ஹஸ்தி அவ்வண்ணமே அறிவித்தார். அவ்வறிவிப்பு பாரதவர்ஷமெங்கும் பரவிச்சென்றது.

அதை ஏற்று ஆயிரம் சிற்பிகள் அஸ்தினபுரிக்கு வந்தனர். இறுதியாக தேவசிற்பியாகிய ஹஸ்திபதன் நகர்நுழைந்தார். அவரைக் கண்டதுமே பிறர் தலைவணங்கி தாங்கள் போட்டியிட விழையவில்லை என அறிவித்தனர். மயனின் வழிவந்தவராகிய ஹஸ்திபதன் பதினெட்டு மாநகர்களை அமைத்தவர். ஒவ்வொன்றிலும் ஒரு குறை இருக்கக் கண்டு உளம்சோர்ந்து காட்டுக்குச் சென்று தவம்செய்து வந்தவர். அவர் தன்னிடம் ஒரு வாஸ்துமண்டலம் இருப்பதை காட்டினார். அது நூற்றெட்டு கன்றுத்தோல்களிலாக வரையப்பட்டிருந்தது. அதை நோக்கிய அரண்மனைச் சிற்பிகள் மானுடர் அதற்கிணையான நகர் ஒன்றை கற்பனை செய்ததே இல்லை என்றார்கள். ஹஸ்திபதனுக்கு பன்னிரண்டாயிரம் தங்கக்காசுகளைக் கொடுத்து பணிதொடங்கும்படி அரசர் ஆணையிட்டார்.

ஆனால் ஹஸ்திபதன் நூற்றெட்டு நாட்களைக் கடந்தும் பணி தொடங்கவில்லை. பதினெட்டுமுறை நாள்குறிக்கப்பட்டு ஒத்திப்போடப்பட்டது. ஒரு கட்டத்தில் அரசர் சினந்து “பணிகள் தொடங்கப்போகின்றனவா இல்லையா?” என உசாவினார். “அந்த வாஸ்துமண்டலம் குறையுடையது, அதை இயற்ற நான் விழையவில்லை, வேறு சிற்பியை நோக்குக!” என்று கூறிவிட்டு ஹஸ்திபதன் தன் பொதிகளுடன் நாட்டைவிட்டு அகன்றார். அரசரும் பிறரும் உடன் வந்து மன்றாடி பொறுத்தருளும்படி சொன்னார்கள். மாணவர்கள் உடன்வருவதாக மன்றாடினார்கள். அவர் எவரையும் செவிகொள்ளவில்லை.

விடாது பின்னால் வந்த அமைச்சரிடம் “அந்தணரே, அந்த வாஸ்துமண்டலம் என் கலையால் நான் இயற்றியது. கலை என்பது பிறிதொன்றுக்குச் செல்லும் வழி மட்டுமே. அவ்வழியிலேயே நான் நின்றுவிட்டிருக்கிறேன்” என்றார் ஹஸ்திபதன். “அந்த வாஸ்துமண்டலத்தை எட்டுத் திசையிலிருந்தும் நோக்கி நோக்கி முழுமை செய்தேன். மையத்திலிருந்தும் விண்ணிலிருந்தும் நோக்கி குறையகற்றினேன். அது பழுதற்றது என நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால் ஒருநாள் கனவில் அதன் மாடமொன்றின் மேல் தலைகீழாகத் தொங்கும் வௌவாலாக நான் மாறி அந்நகரை நோக்கினேன். ஒன்றுடன் ஒன்று பொருந்தாது மண்ணில் தொங்கிக்கிடக்கும் குலைகளாக அந்நகரை நான் கண்டேன்.”

“விழித்தெழுந்து ஓடிச்சென்று அந்த வாஸ்துமண்டலத்தை நோக்கினேன். அதன் குறைகளனைத்தும் எனக்குத் தெரியலாயின. அவை ஒவ்வொன்றையும் தீர்த்து செம்மைசெய்ய முயன்றேன். அந்நாளில் பிறிதொரு கனவு

எழுந்தது. அந்நகரின் நிலத்துக்கு அடியில் வாழும் நாகம் ஒன்றாக மாறி வளையில் அமர்ந்து மேலே நோக்கிக்கொண்டிருந்தேன். ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு மெல்ல சரிந்துகொண்டிருக்கும் கற்குவைகளாக இந்நகரைக் கண்டேன். அந்த நோக்கில் மீண்டும் இந்த வரைவில் பலநூறு குறைகளைக் கண்டேன். அக்குறைகளை என்னால் களையமுடியாதென்றும் உணர்ந்தேன்" என்று ஹஸ்திபதன் சொன்னார்.

"ஒரு நகர் மானுடருக்கு மட்டும் உரியது அல்ல. அங்குள்ள அனைத்து உயிர்களுக்கும் அதுவே இயல்பான உறைவிடம். புட்கள், பூச்சிகள், புழுக்கள் உள்ளிட்ட அனைத்துயிரும் தனக்கு உகந்தது என்றும் தன் நோக்கில் அழகியது என்றும் எண்ணும் நகரே முழுமைகொள்கிறது. அமுதத்துளி உயிர்களனைத்துக்கும் இனியதாவதைப்போல. அத்தகைய நகரை ஆக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. ஏனென்றால் நான் கற்றது மானுட அறிவை மட்டுமே" என்று ஹஸ்திபதன் தொடர்ந்தார். "முழுமையான கலையாக்கம் ஒன்றை எவராலும் எண்ணி எண்ணி செதுக்கிச் செதுக்கி அமைத்துவிட முடியாது. எண்ண எண்ண குறையும். செதுக்கச் செதுக்க பிழைபெருகும். நிறைக்க நிறைக்க எஞ்சிக்கொண்டிருக்கும். அது பித்தெடுத்து அழியவே வழிவகுக்கும்."

"கற்றறிவதே கலை. கற்றவை அனைத்தையும் பொருளில்லாதாக்கி கடந்துசெல்வதே உயர்கலை. அதற்கான தவத்தை மட்டுமே மண்ணில் இயற்றமுடியும். விண்ணிலிருந்து அமுதத்துளி என அது சொட்டவேண்டும்" என்று ஹஸ்திபதன் சொன்னார். "ஒற்றைக்கணத்தில் அது நிகழவேண்டும். ஒரு கனவெழுவதுபோல. குறைதீர்ந்ததாக,

துளியும் அணுவும்கூட எச்சமில்லாததாக அது அவ்வண்ணமே தன்னை நிகழ்த்திக்கொள்ளவேண்டும். ஒருமுறை மீண்டும் கைவைக்கவேண்டும் என்றாலும் அது உயர்கலை அல்ல.”

“உயர்கலைக்குத் தடையாவது எது என்று இன்றுதான் கண்டடைந்தேன். என் உழலும் எண்ணங்கள் சென்று சலித்து அமர்ந்தபோது ஓர் எண்ணமென என்னில் நிகழ்ந்து உண்மை, மாற்றிலா மெய்மை என தன்னை நிறுவிக்கொண்டது அது. உயர்கலைக்கு தடை எளியகலை மட்டுமே” என்றபோது ஹஸ்திபதன் நகைத்தார். “பயிலாமல் கலை இல்லை, உயர்கலையோ பயிற்சியின் உச்சம். எனில் பயிற்சியின் ஒரு துளி கைகளிலோ சித்தத்திலோ கனவிலோ எஞ்சியிருந்தாலும் அது உயர்கலையை தடுத்துவிடும். பயின்று தேர்ந்து தான் எளிதில் இயற்றி வெல்லும் எளியகலை அளிக்கும் தன்மகிழ்வையும் ஆணவத்தையும் கலைஞன் துறக்க இயலாது. ஈன்று வளர்த்து தோளுக்குமேல் நின்றிருக்கும் மைந்தனை சங்கறுத்துக் கொல்வதற்கு நிகர் அது. மைந்தன் என்பவன் தன்னுடைய செம்மைவடிவுதான் என உணர்ந்த எந்தத் தந்தையும் அதை செய்ய முடியாது. அதைச் செய்யாதவனுக்கு உயர்கலையில் இடமும் இல்லை.”

“எளியகலை உயர்கலையை முற்றிலும் ஒத்தது, உயர்கலை அடையும் அனைத்துப் புகழையும் அதுவும் அடையமுடியும். அது பெருந்திரளை கொந்தளிக்கச் செய்யமுடியும். பொருட்குவைகளை ஈட்டமுடியும். இயற்றியவனும் ஏற்பவனும் அதுவே உயர்கலை என எண்ணி நிறைவடையும் ஒருமையையும் முழுமையையும் அதுவும் கொள்ள முடியும். ஆனால் அது காலஇடத்தில் அமைந்திருப்பது. உயர்கலை காலம் கடந்தது. இடமென அழிவிலாத ஓர் அகத்துளியை

கொண்டிருப்பது. எளியகலை படைத்தவனை எளிதில் கைவிடுவதில்லை. துணைவி என உடன்வரும். தந்தை என ஆறுதல்படுத்தும். மைந்தன் என பொறுப்பேற்றுக்கொள்ளும். உயர்கலை தான் நிகழ்ந்ததுமே படைத்தவனை அகற்றிவிடுவது. தன் முழுமையால் பிறிதொன்றின் தேவையில்லாமலாவது.”

“இந்த வாஸ்துமண்டலம் எளியகலை. கல்விப்பயன். கல்வி அளிக்கும் ஆணவத்தின் வெளிப்பாடு. எளியோர் இதன்முன் மலைப்பு கொள்வார்கள். கல்வியால் பெற்ற ஆணவம் கொண்டவர்கள் இதை பிரித்து அடுக்கி விளையாடுவார்கள். ஆடிமுன் நின்று நோக்கி நோக்கி உயிர்விடும் குருவிகள்போல் சிலர் இதிலேயே அழியவும்கூடும். உயர்கலை வாழச் செய்வது. தெய்வத்திடம் என அதன்முன் எளியோரும் கற்றோரும் ஒற்றை உணர்வடைந்து தானழிந்து நின்றிருப்பார்கள். அத்தகைய ஒன்றே வேள்வியென நிகழ முடியும். இந்த வாஸ்துவைக்கொண்டு நான் ஒரு பெருநகரை இங்கே படைக்கமுடியும். ஆனால் அதை நோக்கி விண்ணில் நின்று தேவர்கள் புன்னகைப்பார்கள். அவர்களின் கண்களின் இளிவரலை இப்போதே காண்கிறேன்.”

மறுசொல் இன்றி அமைச்சர் நின்றிருக்க ஹஸ்திபதன் விலகிச்சென்றார். துயருற்றவராக, தனியராக அவர் கங்கையின் கரையினூடாகச் சென்றார். இரவு முழுக்க கங்கையின் நீரில் விண்மீன்களைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். மறுநாள் காலை அவர் நடந்துசெல்கையில் கங்கை தொல்காலத்தில் வழிந்தோடி பின்னர் திசைமாறியமையால் உருவான மென்சதுப்பின் புல்வெளிமேல் முகில்நிழல் விழுவதை கண்டார். சலிப்புற்ற விழிகளுடன் அவர் அந்நிழலுருவை நோக்கியபடி நின்றார். அது

மாடமாளிகைகளுடன் ஒரு நகர்போல் தோன்றுவதை ஒரு கணத்தில் புரிந்துகொண்டார். திடுக்கிட்டு மேலே நோக்கிய கணம் அங்கே தெரிந்த விண்நகரம் ஒன்று மறைந்தது. கீழே நிழல் தன் உருத்தெளிவை இழந்தது.

அவர் கண்டது இந்திரனின் அமராவதியின் நிழல். ஏதோ ஒருகோணத்தில் கதிர் ஒளி அதன்மேல் பட அந்நிழல் மண்ணில் விழுந்த காட்சி அது. அவர் விண்ணை மீண்டும் மீண்டும் நோக்கியபடி அங்கே பித்தன்போல் ஓடினார். களைத்து மூச்சிரைத்தபடி விழுந்து அழுதார். இனி அது மீளாது என தெளிந்தபின் எழுந்து அமர்ந்து ஏங்கினார். ஒருநாள் முழுக்க அங்கேயே அமர்ந்திருந்தார். பின்னர் அவர் தானே சொன்ன சொற்களை நினைவுகூர்ந்தார். விண்ணிலிருந்து சொட்டும் அமுதத்துளி.

களிப்புடன் கூவியபடி எழுந்தோடிச்சென்று அச்சதுப்பு நிலத்தில் நின்று விண்ணை நோக்கி கைதூக்கினார். ஒரு கழியை எடுத்து வரையத் தொடங்கினார். விழிகளை மூடி, ஒருகணம் மட்டுமே கண்ட அமராவதியின் அவ்வடிவை கண்ணுக்குள் நிறுத்தி அதை வரைந்தார். அது அமராவதியின் நான்கு கோட்டைமுகப்புகளில் ஒன்று மட்டுமே. முழுக்க வரைந்தபின் விழிதூக்கி நோக்கியபோது அவர் மலைத்து நெஞ்சைப்பற்றியபடி அமர்ந்துவிட்டார். அன்று வரை அவர் கற்ற எவ்வடிவிலும் அது இல்லை. ஆனால் மாசற்ற முழுமைகொண்டிருந்தது.

பதினெட்டு நாள் அந்த நிலத்திலேயே மரத்தடியில் தங்கி தான் வரைந்த அந்த மண்டலத்தின் ஒழுங்கையும் நெறியையும் நோக்கிக் கற்று அதை எட்டுத் திசைக்கும் விரித்தெடுத்தார். ஒரு மாநகரின் வரைவை அமைத்தபின் திரும்பி ஹஸ்தியின்

அரண்மனையை அடைந்தார். “அரசே, நான் மண்ணில் இதுவரை நிகழ்ந்தவற்றிலேயே மாநகர் ஒன்றை உங்களுக்காக அமைத்துள்ளேன்” என்றார். “அது உங்கள் பெயராலும் என் பெயராலும் ஹஸ்தினபுரி என்றே அழைக்கப்படலாகுக! அங்கே அமுதத்துளி விழுந்ததனால் அது அமிர்தபுரி என்றும் பெயர் கொள்க! அதன் மையப்புள்ளியில் அமுதகலம் அமைக்கப்படவேண்டும். நாளும் அதற்கு மூவேளை பூசனை நிகழவேண்டும். அஸ்தினபுரியை ஆளும் அரசனின் கொடி அமுதகலமென்றே ஆகுக!”

“அவ்வாறுதான் அஸ்தினபுரி அமைந்தது” என்றார் பூதி. “அந்நகர் ஹஸ்தியால் கட்டப்பட்டு பிற அரசர்களால் அந்த சிற்பநெறியின்படி விரித்தமைக்கப்பட்டது. அந்நகரின் மையத்தில் அமுதகலத்துடன் திருமகள் அமர்ந்திருக்கிறாள். ஆகவே அதன் கருவூலம் ஒருபோதும் குறைவுபடுவதில்லை. அதன் அழகு வேளைக்கொரு வண்ணம் என பெருகுமே ஒழிய குன்றுவதில்லை.” அவர் புன்னகையுடன் கூட்டத்தை நோக்கிவிட்டு “ஆனால் ஒரு பெருவினா இன்றும் சிற்பிகளை அலைக்கழிக்கிறது. அந்நகரின் நான்கு முகப்புகளில் ஒன்றே விண்ணிலிருந்து விழுந்த வடிவம். பிற மூன்றும் அதன் நெறிகளைக் கொண்டு ஹஸ்திபதனால் உருவாக்கப்பட்டவை. அந்த முதல் கோட்டைவாயில் எது?” என்றார்.

“இந்திரனின் திசை கிழக்கு. ஆகவே அது கிழக்குவாயிலே” என்றார் பெருங்கந்தர். “இல்லை என்கிறார்கள் பேரறிஞர் பல்லாயிரவர்” என்றார் பூதி. “அந்நான்கு வாயில்களிலும் எது பேரழகுகொண்டதோ அது” என்றார் பெருங்கந்தர். சற்றே எரிச்சலுடன் “அனைத்தும் நிகரான அழகுகொண்டவை” என்றார் பூதி. “இது வெறும் சொல் விளையாட்டு. பருப்பொருள் ஒன்று

பிறிதொன்றே என ஆகவே முடியாது. சென்று அங்கே நின்றால் நுண்ணிய வேறுபாட்டை நாம் அறியமுடியும். தேவர்களால் அமைக்கப்பட்ட நகர் மானுடநகரைவிட சற்றே மேம்பட்டதாகவே அமைந்திருக்கும்.”

“தலைமுறை தலைமுறையாக சிற்பிகள் அதையே ஆராய்கிறார்கள்” என்றார் பூதி. “ஒவ்வொருவரும் ஒன்றை சுட்டுகிறார்கள். எது தேவர் அமைத்தது, எது மானுடன் அமைத்தது என்று கண்டடைய எந்த வழியும் இல்லை. ஏனென்றால் அதை அமைத்தபோது அந்த மானுடன் தேவனாகிவிட்டிருந்தான். இன்றும் அறியப்படாத ஒன்றாகவே அவ்வினா எஞ்சுகிறது.” அங்கிருந்தோர் அனைவரும் திகைப்புடன் பூதியை நோக்கிவிட்டு பெருங்கந்தரை நோக்கினர். அவர் ஒவ்வாமை தெரிய எழுந்துகொண்டு “பொழுதாகிறது. நீண்ட பயணத்தின் களைப்பு” என்றபடி தலைவணங்கி தன் சுவடிப்பேழையுடன் நடந்தார். அவருடைய மாணவன் பிற பொருட்களுடன் உடன் சென்றான். அனைவரும் அவரை நோக்கி அமர்ந்திருந்தனர்.

# களிற்றியானை நிரை - 6

### பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 6



பெருங்கந்தர் எழுந்து சென்றபின் சற்றுநேரம் அங்கே அமைதி நிலவியது. அனல் வெடித்து வெடித்து உலைந்தாடிக்கொண்டிருந்தது. உண்டு முடித்து ஓரிருவர் எழுந்து படுக்கும்பொருட்டு சென்றார்கள். அழிசி பூதியிடம் “பாணரே, அஸ்தினபுரியைப் பற்றி மேலும் பாடுக!” என்றான்.

“நாங்கள் இருவரும் அங்குதான் சென்றுகொண்டிருக்கிறோம்.” பூதி ஆதனை நோக்கி புன்னகைத்துவிட்டு “அது பெருங்களிறுகளின் நகரம்” என்றார். குறுமுழவில் விரலோட்டி அதை பேசவிட்டு அதனுடன் தன் பேச்சையும் இணைத்துக்கொண்டார்.

“அஸ்தினபுரி மண்ணுக்கு அடியில் ஆயிரத்தெட்டு மாபெரும் யானைகளால் தாங்கப்படுகிறது. அஸ்தினபுரியின் அமைப்பே யானைகளாலானது. அதன் கிழக்கே ஐராவதமும் அதன் பிடியாகிய அ்ஃபுருமையும் வெள்ளிக்குட வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. தென்கிழக்கே புண்டரீகன் அவன் துணைவி கபிலையுடன் செம்புக்குட வடிவில் நிறுவப்பட்டுள்ளான். தெற்கே வாமனன் என்னும் திசையானை தன் பிடியாகிய பிங்கலையுடன் வெள்ளீயத்தால் உருளைவடிவில் வார்க்கப்பட்டு நிறுவப்பட்டிருக்கிறான். தென்மேற்கே குமுதன் துத்தநாக உருளையாக வடிக்கப்பட்டான். அவன் துணைவி அனுபமை அருகே நின்றிருக்கிறாள். மேற்கே காரீய உருளையாக அஞ்சனன் தன் துணைவி தாம்ரகர்ணியுடன் அமைந்தான். வடமேற்கே புஷ்பதந்தன் ஒரு இரும்புக்கிண்ண வடிவில் துணைவி சு்ஃப்ரதந்தியுடன் நிறுவப்பட்டான். வடக்கே சார்வபௌமன் அங்கனையுடன் பாதரச உருளை வடிவில் நின்றிருக்கிறான். வடகிழக்கே சுப்ரதீகன் தன் பிடியாகிய அஞ்சனாவதியுடன் பொற்குடத்தின் வடிவில் அமைந்தான்.

ஹஸ்திபதன் தன் சங்கை எடுத்து ஒலித்ததும் அதைக் கேட்டு எட்டு திசையானைகளின் மைந்தர்களாகிய ஆயிரத்தெட்டு மதகளிறுகள் தங்கள் துணைவியருடன் காடுகளிலிருந்து இருள்பெருகி வழிந்தோடி வருவதுபோல வந்தன. தங்கள்

துதிக்கைகளால் பெருங்கற்களைத் தூக்கி அடுக்கி அந்நகரை கட்டின. அவை பிற யானைகளைவிட எட்டு மடங்கு எடைகொண்டவை. ஏனெனில் தவத்தால் தங்கள் உடம்பை அவை இரும்பென ஆக்கிக்கொண்டிருந்தன. யானை பாறையாக முயல்கிறது, பாறைகள் அனைத்தும் இரும்பாக முயல்கின்றன. தவம் கனிந்து தங்களை இரும்பாக ஆக்கிக்கொண்டவை அவை. அந்த ஆயிரத்தெட்டு யானையிணைகளும் வந்து நின்றபோது நிலம் தழைந்து அவற்றை உள்ளிழுத்துக்கொண்டது. அவை மண்ணுக்குள் புதைந்தன. அந்த யானைகளின் மேல் அமைந்திருக்கிறது அந்நகர். அவற்றால் தாங்கப்படுகிறது.

அரிதாக யானைகளில் ஒன்று மத்தகம் விலக்கிக்கொள்ளும்போது அந்நகர் சற்றே திடுக்கிடுகிறது. அதன் மாட மாளிகைகளிலிருந்து காரைகள் உதிர்ந்து விழுகின்றன. அங்குள்ள பறவைகள் திகைத்து சிறகடித்து வானில் எழுகின்றன. குழவிகள் கனவு கண்டு விழித்தெழுந்து அழுகின்றன. அப்போது இறந்துபோன எதையோ நினைவுகூர்தல்போல ஒரு திடுக்கிடல் ஏற்படும் என்கிறார்கள். இரவில் சுடர்கள் துணுக்குறுவதை காணலாகும். அது ஓர் அறிவிப்பு. அரசர் தலைமையில் மூத்த குடிகள் சென்று எட்டு திசையானைகளுக்கும் மைந்தர்களுக்கும் பலியும் கொடையும் அளித்து வணங்குவார்கள். அந்த யானைகள் பொறையிழக்கும்வரை அஸ்தினபுரி மண்மேல் நிலைகொள்ளும்.

"அஸ்தினபுரி கங்கையால் ஏழு முறை வளைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஏழுமுறை கங்கையைக் கடந்தாலன்றி அதை எவரும் அடையமுடியாது. எனவேதான்

ஆயிரம் ஆண்டுகளில் அஸ்தினபுரியை எவரும் வென்றதே இல்லை” என்று பூதி சொன்னார். இரு விரல்களால் சீரான தாளத்தை மீட்டி அஸ்தினபுரியின் கதையை பாடத்தொடங்கினார். அதன் மதில்நிரைகளின் அமைப்பை, சாலைகளின் பின்னலை, அங்காடிகளின் நெரிசலை, ஆலயங்களின் அமைதியை, அணிக்காடுகளின் குளிரை, மாளிகைகளின் செறிவை, அரண்மனையின் நிமிர்வை. அவர்கள் விழிகளும் செவிகளுமாக அதை கேட்டிருந்தனர்.

ஆதன் எழுந்துசென்று மரத்தடியில் படுத்துக்கொண்டான். சற்றுநேரத்தில் நாடோடியும் எழுந்து அவன் அருகே வந்து படுத்தார். இருவரும் ஒருவரை ஒருவர் உணர்ந்தபடி விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தார்கள். “உங்களுக்கு என்ன தோன்றுகிறது?” என்று மெல்ல நாடோடி கேட்டபோது ஆதன் திடுக்கிட்டான். “அந்நான்கு கோட்டைமுகப்புகளில் எது தெய்வங்களால் இயற்றப்பட்டது என எப்படி கண்டடைவீர்கள்?” ஆதன் “தெரியவில்லை” என்றான். “அங்ஙனம் நான்கு வாயில்கள் இருக்குமென்றால் நான்கில் எது அழகு குறைந்ததோ அதுவே தேவர்களால் கட்டப்பட்ட அமராவதியின் தோற்றம்” என்றார்.

ஆதன் “ஏன்?” என்றான். “தேவர்களின் அந்நகரின் நிழலே மண்ணில் விழுந்தது. அது குறைவுபட்டதே. மண்ணுக்காக இறங்கிவந்தமையாலேயே அது மானுடத்தன்மைகொண்டது. அதைக் கண்டு தேவருலகை கற்பனை செய்து சிற்பி சமைத்தது அவன் எல்லைகளைக் கடந்து அமரத்தன்மை கொண்டது. அவன் அமரனாகி நின்று அமைத்த பிற மூன்றும் தேவருலகுக்கு நிகரானவை, அல்லது அவற்றையும் கடந்துசெல்பவை.” ஆதன் புன்னகை செய்தான். அவர்

“இவ்விரவில் துயில முடியுமெனத் தோன்றவில்லை. சற்று குளிர்கிறது, எனவே நாளை வெயில் கடுமையாகவே இருக்கும்” என்றார்.

ஆதன் “நீங்கள் எங்கு செல்கிறீர்?” என்றான். நாடோடி மறுமொழி சொல்லவில்லை. ஆனால் சற்றுநேரம் கழித்து “நீங்கள் அஸ்தினபுரிக்குச் செல்வது உறுதியா என்ன?” என்றார். “ஆம்” என்றான் ஆதன். “நீங்கள் செல்கையில் அங்கே அஸ்தினபுரி இருக்குமா என்பதே ஐயம்தான்” என்றார். ஆதன் திகைப்புடன் “ஏன்?” என்றான். “அங்கே பெரும்போர் தொடங்கிவிட்டது. எத்தனை காலம் அது நிகழும், எவ்வண்ணம் முடியும் என எவரும் இன்று சொல்லிவிட முடியாது” என்றார் நாடோடி. ஆதன் திடுக்கிட்டான். “போரா?” என்றான். “ஏன், நீர் அங்கே போர்மூளுமென எண்ணவே இல்லையா?” என்றார் நாடோடி.

“இல்லை, அங்கே போர்சூழ்ந்துகொண்டிருப்பதை அறிந்தேன். ஆனால் இரு தரப்பும் இணையான வல்லமையுடன் எழுந்தால் போரிடத் தயங்குவார்கள் என்று எண்ணினேன். அதன் அழிவை எண்ணி இரு தரப்பிலும் முனிவரும் அறிஞரும் சான்றோரும் சொல்லி விலக்கிவிடுவார்கள் என்றுதான் தோன்றியது.” நாடோடி “அது நடந்தது, நெடுங்காலம். இப்போர் உண்மையில் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. அன்று முதல் முனிவரும் அறிஞரும் சான்றோரும் சொல்லிச் சொல்லி அதை தவிர்த்தனர். தெய்வ வடிவமான யாதவர் அவரே மும்முறை தூதுசென்று போர் ஒழியும்படி முயன்றார். ஆனால் போர் அகத்தே தொடங்கிவிட்டதென்றால் அதை எவராலும் புறத்தே நிகழாமல் நிறுத்திவிட முடியாது” என்றார்.

“போர் நிகழ்கிறது என எவர் கூறினார்கள்?” என்று அவன் கேட்டான். நாடோடி ஒன்றும் சொல்லவில்லை. அவன் அவர் பேசுவதற்காக எதிர்பார்த்திருந்தான். அப்பால் பாணன் பாடி முடிக்க ஒவ்வொருவராக படுக்கைக்கு சென்றுகொண்டிருந்தனர். “நானே பார்த்தேன்” என்று நாடோடி சொன்னபோது ஆதன் திடுக்கிட்டான். “ஆம், என் விழிகளால் நானே நேரில் பார்த்தேன். நான் அங்கே சென்ற தென்புலப் பாணர்களில் ஒருவன். நாங்கள் ஏழுபேர் ஒரு சூதர்குழுவாக குருக்ஷேத்ரத்திற்கு சென்றோம். குருக்ஷேத்ரத்தில் போர் தொடங்குவதுவரை நாளும் இரவில் போர்க்கதைகளை சொன்னோம். வீரர்கள் போர்க்கதைகளை கேட்க விரும்பினார்கள். கதைகளைக் கேட்டு கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். அவர்கள் ஒரு மாபெரும் விழாவில் இருப்பதைப்போல் களிகொண்டிருந்தார்கள்.”

போர் தொடங்குவதற்கு முந்தையநாள் இரவில் நாங்கள் விருத்திரனை இந்திரன் வென்ற கதையை சொன்னோம். அன்றிரவு அனைவரும் துயின்ற பின்னர் நாங்கள் கண்ணுக்கெட்டிய தொலைவுவரை ஒளிப்பந்தங்களின் நிரையாக விரிந்துகிடந்த குருக்ஷேத்ரத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தோம். குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. அன்று நான் அறிந்த அந்த இனிமையையும் நிறைவையும் பிறிதெப்போதும் அடைந்ததில்லை. ஏன் அவ்வாறு என இன்றுவரை எண்ணிக்கொண்டே இருக்கிறேன். உள்ளம் அனைத்து விசைகளையும் இழந்து இனிய சோர்வுடன் தளர்ந்துகிடந்தது. ஒரு சொல் எஞ்சவில்லை. இருத்தல் அத்தனை எடையின்றி இருந்தது. அத்தனை மென்மையாக இல்லையென்றேபோல உடல் மண்ணில் படிந்திருந்தது. மண்ணில் எவருக்கும் விண்ணில் எவருக்கும் எவ்வகையிலும்

கடன்பட்டவனல்ல என்று தோன்றியது. நேற்று முற்றாக அகன்று நாளை என்பது சற்றும் தோன்றாமல் ஒரு பெருநிலை.

மறுநாள் போர் தொடங்கியபோது நாங்கள் ஒரு பின்புலத்துக் காவல்மாடத்தில் ஏறி அமர்ந்திருந்தோம். இரு படைநிரைகளும் வண்ணப்பெருக்காக அணிவகுத்து எதிரெதிர் நின்றதைக் கண்டு அது ஒரு பெருவிழவு என்றே என் உள்ளம் எண்ணிக்கொண்டிருந்தது. அதன் அழகையும் நேர்த்தியையும் கண்டு விழிவீசி நோக்கி நோக்கி அள்ளி அள்ளி எடுத்து ஆற்றாமைகொண்டு தவித்தது. இன்னும் சற்றுநேரம் இன்னும் சற்றுநேரம் என்று தெய்வங்களிடம் இறைஞ்சியது. கதிர்விளிம்பு எழுந்ததும் போர்முரசுகள் ஒலிக்கத் தொடங்கின. விண்பேருருக் கொண்ட இரு விலங்குகள் பெருங்காதலுடன் ஒன்றைஒன்று தழுவிக்கலந்தன.

அதை அங்கிருந்து நோக்கிக்கொண்டிருந்தபோது நெடுநேரம் அந்நிகழ்வின் அழகைத்தான் அறிந்துகொண்டிருந்தேன். அது கட்டின்மையின், வடிவின்மையின் அழகு. பெருங்காடுகள், மலைத்தொடர்கள் அவ்வாறு எண்ணம் மலைக்கும் அழகு கொண்டவை. கடல் அவ்வாறான அழகு கொண்டது. அப்படைப்பெருக்கின் வழிவுகளை ஒழுக்குகளை சுழிப்புகளை நோக்கிக்கொண்டிருந்தேன். தன்னைத்தான் தழுவி தன்னைத்தானே கவ்வி தன்னுள் தானே ததும்பி அது அங்கே நிகழ்ந்துகொண்டிருந்தது. மெல்லமெல்ல என் உள்ளம் குருதியை உணரத்தொடங்கியது. செம்மண் தரை குருதியை எளிதில் வெளிக்காட்டுவதில்லை. இறுதித்துளிவரை உறிஞ்சி குடித்துவிடுகிறது. ஆனால் மெல்ல மெல்ல அதன் களங்களும் நிறைந்தன. செம்மண் நிணச்சேறாகியது. மிதிபட்டுக் கொப்பளித்தது.

அந்தியில் போர் முடிந்தபோது கொம்போசை கேட்டுத்தான் பொழுதுணர்ந்தேன். என் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. மலமும் நீரும் விந்துவும் வெளியேறியிருந்தது. கைகளைக் கூப்பி நெஞ்சோடு அணைத்து இறுக்கியிருந்தேன். என்னுடனிருந்த சூதர்களில் மூவர் மட்டுமே நிலையழிவில்லாதவராக இருந்தனர். அவர்களில் ஒருவர் களிவெறி கொண்டிருந்தார். கைகளை விரித்துக்கொண்டு “எழுந்தாள் அன்னை! செங்குருதி கொழுங்குருதி நாடும் கொற்றவை! கொல்வேல் வெல்வேல் கொடுங்காளி!” என்று கூவியபடி வெறிநடனமிட்டார். மற்றவர்கள் அவருடன் இணைந்துகொண்டார்கள். நாங்கள் நால்வர் கால்குழைந்து நின்றோம். பாடிவீடு திரும்பும் வீரர்கள் கருவறைக்குருதிபூசி வெளிவந்த மகவுகள் என்று தோன்றினர். உலகம் அவர்களுக்கு முற்றிலும் புதியதாகத் தெரிந்ததுபோல அவர்கள் விழிகள் திகைப்பு கொண்டிருந்தன.

எங்களில் ஒருவர் நெஞ்சைப் பற்றிக்கொண்டு விழுந்தார். அவரை எழுப்ப முயன்றபோது வாயில் குருதிவழிய அவர் இறந்துவிட்டிருப்பதை கண்டேன். அங்கிருந்து உடனே விலகிவிடவேண்டும் என்றே தோன்றியது. எஞ்சிய இருவரும் என்னுடன் வருவதாகச் சொன்னார்கள். நாங்கள் காட்டுக்குள் செல்வதை எவரும் தடுக்கவில்லை. குருக்ஷேத்ரத்தை விட்டு விலகுவது வரை எங்கள் உள்ளம் மலைத்து செயலற்றிருந்தது. விலகியதும் பதறித்தவிக்கத் தொடங்கியது. நாங்கள் காட்டுக்குள் அஞ்சிய எலிகள்போல புதர்களை ஊடுருவி ஓடினோம். எங்களைப் போலவே பலர் அவ்வாறு அஞ்சி ஓடிக்கொண்டிருப்பதை கண்டோம். படைவீரர்கள் ஏவலர் காவலர் சூதர் என அவர்களில் அனைவருமே இருந்தனர்.

அனைவரும் முற்றிலும் தனிமையில் பிற எவரையும் விழிநோக்காமல் சென்றுகொண்டிருந்தனர்.

காட்டில் நெடுந்தொலைவு வந்து ஓர் ஓடைக்கரையில் அமர்ந்தோம். ஓடைநீரையும் கைக்குச் சிக்கிய கிழங்குகளையும் உண்டோம். புல்பரப்பில் படுத்து துயின்றோம். விழித்துக்கொண்டபோது என்னுடன் வந்த சூதர்களில் ஒருவர் எழுந்து அமர்ந்திருப்பதை கண்டேன். “என்ன?” என்று கேட்டேன். “கனவு” என்றார். நானும் கனவில் குருக்ஷேத்ரத்தைக் கண்டு விழிப்படைந்திருந்தேன். “நான் கிளம்புகிறேன்” என அவர் எழுந்தார். “எங்கே செல்வீர்? இவ்விருளில் எங்கும் செல்ல முடியாது” என்றேன். “நான் மீண்டும் குருக்ஷேத்ரத்திற்கே செல்கிறேன்” என்றார். “என்ன சொல்கிறீர்?” என்று நான் திகைப்புடன் கேட்டேன். அவர் பதைப்புடன் “அன்றாடத்தின் வெறுமைக்கு திரும்புவதா? வெறுமைதான் மெய்மை என்றால் அதையே துறப்பதுதான்” என்றார். “உங்கள் உள்ளம் குலைந்துள்ளது, அமர்க!” என்றேன்

“என் உள்ளம் நிலைகொண்டுதான் உள்ளது. சொல்லுங்கள், நான் மீண்டுசென்றால் எனக்கு என்னதான் எஞ்சுகிறது அங்கே? பயின்றுதேறிய பழகிய சொற்கள், கைத்தடம் விழுந்த கிணைப்பறை. வேறென்ன? அங்கே முற்றிலும் நானறியாத ஒன்று நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அழிவே ஆயினும் கொடிதே ஆயினும் அது ஒரு பெருந்தோற்றம். பெருந்தோற்றங்கள் எல்லாமே தெய்வங்கள்தான். மண்ணில் தெய்வம் நிகழ்கையில் எதற்காக அஞ்சி ஓடவேண்டும்? உயிருக்காகவா? நான் இழப்பதற்கு ஏது உள்ளது, உயிரன்றி?” என்றார். அவர் சொல்வது அத்தனையும் உண்மை என்று தோன்றியது. ஏனென்றால் நான் அப்போது அவ்வண்ணம்தான் எண்ணிக்கொண்டிருந்தேன்.

அவர் செல்வதை வெறுமனே நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தேன். அவரை அழைக்கவேண்டும் என்றும் அவருடன் செல்லவேண்டும் என்றும் மாறி மாறி தோன்றிக்கொண்டிருந்தது. என்னுடன் இருந்த சூதர் எழுந்து "வயல்களில் அறுவடை எப்போது?" என்றார். நான் துணுக்குற்றேன். "என்ன கேட்கிறீர்?" என்றேன். "கன்றுகளை எப்போது கட்டுவார்கள்? அதன் பிறகுதானே கதைசொல்லல்?" என்றார். அவருடைய உள்ளம் பேதலித்திருப்பதை கண்டேன். அது என் ஊசலாட்டத்தை நிறுத்தியது. அங்கே சென்றால் நானும் அவ்வண்ணமே ஆகிவிடுவேன். அவரை அங்கேயே விட்டுவிட்டு நான் மட்டும் கிளம்பி கங்கைக்கரைக்கு மீண்டேன்.

"கங்கை வழியாக வங்கநாடு வந்தேன். பீதர்மரக்கலம் ஒன்றில் தொற்றிக்கொண்டு பூம்புகாருக்கு மீண்டேன். அங்கிருந்து மேலும் தென்புலம் நாடினேன். மதுரை செல்லும் வணிகர்குழுவை தேடினேன். இவர்களை கண்டேன். வேங்கடம் செல்லலாம் என இவர்களுடன் சேர்ந்தேன்" என்றார் நாடோடி. "அதன்பின் நான் போர்ச்செய்திகள் எதற்கும் செவிகொடுக்கவில்லை. கப்பலிலும் கரையிலும் வெறிகொண்டு பணியாற்றுவதே என் வழக்கம். இந்நேரம் அங்கே போர் முடிந்துவிட்டிருக்கக்கூடும். ஏனென்றால் இரு சாராருமே ஒருவரை ஒருவர் முற்றழிக்கும் ஆற்றல்கொண்டவர்கள். அங்கே களத்தில் எவரும் உயிருடன் எஞ்ச வாய்ப்பே இல்லை."

ஆதன் "ஒவ்வொருநாளும் என செய்தி பெருகியே வருகிறது" என்றான். "ஏன் இதை உம்மிடம் சொல்கிறேன் என எண்ணிக்கொண்டேன். உம் வடிவில் நான் மீண்டும் அஸ்தினபுரிக்குச் செல்கிறேன் என்று படுகிறது" என்றார்

நாடோடி. பின்னர் கண்களை மூடிக்கொண்டு நீள்மூச்செறிந்தார். “தெய்வங்களே” என்று முனகிக்கொண்டார். ஆதன் அவரை நெடுநேரம் நோக்கிக்கொண்டிருந்தான். ஒரு முகம் பழைய கிழிந்த மிதியடிபோல் ஆகிவிடமுடியும். அது நடந்த தொலைவெல்லாம் அதில் திகழ முடியும். அம்முகம் போலத்தான் தன் முகமும் ஆகப்போகிறது என எண்ணியபோது அவன் இருளில் புன்னகை புரிந்தான்.

விஜயபுரியை அடைந்தபோது ஆதன் அஸ்தினபுரியில் நடந்த அப்பெரும் போரைப்பற்றிய செய்திகளை விரிவாக அறிந்தான். அப்போது நாடோடி அவனுடன் இல்லை. அவர் வழியிலேயே திரும்பி வேங்கடத்தை நாடி சென்றுவிட்டிருந்தார். வடபுலத்திலிருந்து வந்த சூதர் ஒருவர் அப்போரின் கதையை சிறுதுடியை விரல்களால் மீட்டி பாடிக்கொண்டிருந்தார். முதலில் அவன் வழக்கமான போர்ப்பரணிகளில் ஒன்றென்றே எண்ணினான். பின்னர் அதில் ஒலித்த ஒற்றைச்சொல் அவனைக் கவர அருகணைந்து அதை கேட்டான். அஸ்தினபுரி! போர் முடிந்துவிட்டிருந்தது. அஸ்தினபுரி பாற்கடல் கடைந்தபோது அமுதம் திரண்டு எழுந்ததுபோல் அப்போரிலிருந்து எழுந்துவிட்டது.

சூதர் உணர்ச்சி மிகுந்த குரலில் போர்க்களக் காட்சியை விரித்துரைத்தார். “உத்தரனை நோக்குக! அவன் களத்தை அறிந்துவிட்டான். வெற்றிவேல்! வீரவேல்! என்று பெருங்குரலெழுப்பியபடி செல்க! செல்க! என்று தன் பாகனை ஊக்கினான். தேர் அதற்கென படைபிளந்துகொண்டு அமைந்த பாதையினூடாக விரைந்து முன்னகர்ந்தது.” அவர் கைமுழவின் ஒலியில் தேர்ச்சகட தாளம் எழுந்தது. “விம் விம் விம் என

ஒலித்தது அவன் கையிலிருந்த வில். விராடநாட்டில் பிறந்து உயிர்துறந்த மூதெருமை ஒன்றின் தோலில் ஈர்ந்த நாண் அது. எருமை அதில் தோன்றி உறுமியது.”

போர்முரசுபோல குறுமுழவை மீட்டி சூதர் பாடினார் “அம்புகளை ஆவக்காவலரிடமிருந்து வாங்கி வாங்கி நாணேற்றி காதளவு இழுத்துச் செலுத்தினான். ஒவ்வொரு அம்புடனும் தன்னுள் ஒரு துளி எழுந்து விம்மிச்செல்வதை கண்டான். அது சென்று தைத்து சரித்த வீரனை முற்பிறவிகளில் அறிந்திருந்தான். கொல்பவனுக்கும் கொல்லப்படுபவனுக்கும் நடுவே அவ்விறுதிக் கணத்தில் நிகழும் விழித்தொடர்பு எத்தனை விந்தையானது! தெய்வங்கள் தெய்வங்களை அங்ஙனம்தான் அணுகுகின்றன போலும்.”

“பீஷ்மரை அணுகுக! பீஷ்மரை அணுகுக!” என்று உத்தரன் கூவினான். பாகன் சவுக்கை வீசி புரவிகளை ஊக்கி தேரை அணிபிளந்து செலுத்தி பீஷ்மரை நோக்கி கொண்டுசென்றான். அதோ பீஷ்மரின் முதிய முகம். பின்புறம் எழுந்த சூரியனின் ஒளியில் பொற்கம்பிகளாக கூந்தலிழைகள் மின்ன வெண்ணிறத் தாடி பறக்க மூதாதை தெய்வம் ஒன்று எழுந்து வந்ததுபோல் தெரிகின்றது அது” என்று சொல்லி நிறுத்தி நீண்ட அகவலாக சூதர் பாடினார்.

“நீரலைபோல் மின்னிக்கொண்டிருந்தது அவர் ஊர்ந்த தேர். துள்ளி நடமிடும் வில்லை விழிகொண்டு நோக்க எவராலும் இயலவில்லை. வலக்கை அம்பறாத்தூணிக்கும் நாணுக்குமென சுழல்வது பறக்கும் பறவையின் சிறகென ஓர் அரைவட்டமாக, பளிங்குத்தீற்றலாக, நீர்வளையமாக தெரிந்தது. அவரிலிருந்து எழுந்த அம்புகள் தீப்பொறிபோல் இருபுறமும் சிதறித் தெறித்து படைவீரர்களை சாய்த்தன. ஒற்றைக்கணத்தில் வெடித்து

விழிநோக்கவே பதினாறு முப்பத்திரண்டு அறுபத்துநான்கு என்று பெருகும் அம்புகளை அவர் வில் தொடுப்பது போலிருந்தது. அவர் சென்ற வழியெங்கும் எரிசென்ற பாதை என வெறுந்தடமே எஞ்சியது.”

அவர் பாடப்பாட ஆதன் அவர் அருகே சென்று “சூதரே, இப்போரை நீங்கள் நேரில் பார்த்தீர்களா?” என்று கேட்டான். விரல்கள் கிணை மேல் அசைவற்று நிற்க அவனை திரும்பி நோக்கிய சூதர் தன் சிவந்த விழிகள் நிலைக்க நோக்கி “சூதர்கள் தங்கள் ஊன் விழிகளால் பார்ப்பதில்லை” என்றார். “பின் எவர் பார்த்தார்கள்?” என்றான் ஆதன். “சூதன் என்பது ஒரு பேருருவம். பல்லாயிரம் விழிகளும் செவிகளும் கொண்டது. பல்லாயிரம் பல்லாயிரம் நாவுகள் கொண்டது. முடிவிலா நினைவுகொண்டது. அதை நிறைக்கும் மொழிகொண்டது. எங்கோ ஒருவர் பார்த்தால் அனைவரும் அறிவோம். ஒருவர் பாடும் சொல் அனைவர் நாவிலும் திகழும்” என்றார் சூதர்.

“மெய்யாகவே இப்போர் நிகழ்ந்ததா? இப்பேரழிவிற்குப் பின் அங்கு நகரென ஏதேனும் எஞ்சியுள்ளதா?” என்று அவன் கேட்டான். “அஸ்தினபுரி அழிவதில்லை. அது அழிந்தால் இங்கு மானுடர் வாழ்வதற்கான இலக்கென்று ஒன்றும் இல்லாமல் ஆகிவிடுகிறது. இங்கு இத்தனை பேர் உண்டும் நுகர்ந்தும் அழித்த பின்னரும், பூசலிட்டும் போரிட்டும் சிதைத்த பின்னரும் நிலமெங்கும் திரு எஞ்சுகிறது” என்று சூதர் சொன்னார். “தெய்வங்கள் மானுடரை முற்றாகக் கைவிடுவதே இல்லை என்பதாலேயே இங்கு மானுடம் வாழ்கிறது.”

“இப்பெரும்போருக்குப் பின் அங்கு நகரென ஏதும் எஞ்சுவதற்கு வாய்ப்பில்லை என்றார்கள்” என்று ஆதன் மீண்டும் சொன்னான். சூதர் “மானுடரால் ஆனதல்ல அஸ்தினபுரி. மானுடர்

அதன்மேல் வீசிச்செல்லும் காற்றும் தூசும் போன்றவர்கள்” என்றார். ஆதன் “அறியேன். நான் அங்கு சென்று அதை பார்க்கலாம் என்று இருக்கிறேன்” என்றான். சூதர் வெடித்து நகைத்து “இல்லாத நகரையா?” என்றார். அதிலிருந்த வேடிக்கையை அதன் பின்னரே உணர்ந்து ஆதனும் உரக்க நகைத்தான்.

அக்கதையைக் கேட்டு திரும்பி வருகையில் அழிசி அவனிடம் “மெய்யாகவே அத்தனை பெரும்போர் நிகழ்ந்திருக்கலாகுமா?” என்றான். “ஏன்?” என்றான் ஆதன். “அவ்வாறு நிகழ வாய்ப்பே இல்லை. அத்தனை பெரிய போர் நிகழ்ந்தால் அதன் அழிவைக் கண்டதுமே அதை நிறுத்திவிடமாட்டார்களா என்ன? அவர்கள் கற்றோர், நெறியறிந்தோர் அல்லவா? தங்களைத் தாங்களே முற்றழித்துக்கொள்ளும் வரை அப்போரை நீட்டிக்கொண்டு செல்வார்களா?”

ஆதன் திரும்பி அவன் கண்களைப் பார்த்து “மனிதர்கள் அப்படி எதையேனும் எப்போதேனும் பாதியில் நிறுத்தியிருக்கிறார்களா?” என்றான். அவன் உள்ளம் திகைப்படைவது தெரிந்தது. பின்னர் மெல்லிய குரலில் “மாட்டார்களா?” என்றான். ”நீ இன்னும் அகவை நிறைவை அடையவில்லை. மெல்ல உணர்ந்துகொள்வாய்” என்றான் ஆதன். அழிசி தலையசைத்தான். எண்ணி ஆழ்ந்து உழன்றபடி உடன் நடந்தான். அவன் ஒரேநாளில் மாறிவிட்டிருப்பதாகத் தெரிந்தது. அவன் நடையே மாறிவிட்டிருந்தது. பலமடங்கு எடைகொண்டவன்போல. அகத்துலா நிலையழிவு கொண்டதுபோல.

இரண்டுநாள் அழிசி அவன் அருகே வரவேயில்லை. பெரும்பாலும் தனித்து அமர்ந்திருந்தான். விஜயபுரிக்கு மேலும்

ஒருநாள் இருக்கையில் அவன் ஆதனின் அருகே வந்தான். ஆதன் புன்னகைத்து அருகமர கைகாட்டினான். அவன் அமர்ந்தபின் “நான் ஒன்று எண்ணினேன்” என்றான். “சொல்” என்றான் ஆதன். “அஸ்தினபுரி வரைக்கும் நாம் எதற்கு செல்லவேண்டும்? நாம் செல்லும்போது அங்கு அவ்வாறு ஒரு நகர் இல்லையெனில் இதுகாறும் நாம் இருந்த அனைத்தையும், பெருக்கிக்கொண்டு வந்த அனைத்தையும் இழந்தவர்களாவோமே?” என்று அழிசி கேட்டான்.

ஆதன் வெறுமனே நோக்க அழிசி சொன்னான் “நாம் அங்கு செல்லாமல் இருக்கலாம். நம்மில் அந்நகர் அழியாமல் இருக்கும்.” ஆதன் “ஆனால் செல்லாமல் தவிர்ப்பது நமக்கு இயல்வதல்ல” என்றான். “ஏன்?” என்று அழிசி கேட்டான். “இதுநாள் வரை மானுடனை இயக்கும் விசை அதுதான். தனக்கு அழிவையே துயரையே அளிப்பதாயினும் அறிவை ஒருபோதும் மனிதனால் வேண்டாமென்று சொல்ல இயலாது. அறிவின் நுனி தெரிந்துவிட்டால் முழுமை வெளியாகும் வரை அமைதிகொள்ளவும் இயலாது” என்றான் ஆதன்.

“மெய்யாகவா? தன்னை அழிக்கும் அறிவையும் மானுடர் விரும்புவார்களா?” என்றான் அழிசி. “அறிவில் பெரும்பகுதி மானுடனை அழிப்பதே. அதை வேண்டி விரும்பி இல்லத்தில் கொண்டு வந்து சேர்க்கும் மானுடர்களே இப்புவியில் மிகுதி” என்று ஆதன் சொன்னான். “எனில் ஏன் அறிவை நாடுகிறான் மானுடன்?” என்று அழிசி கேட்டான். “அறிவில்லை என்றால் அவன் மானுடனாக உணரமாட்டான் என்பதனால்” என்று ஆதன் சொன்னான். அழிசி அவன் இளம்விழிகளில் திரண்ட துயருடன் நோக்கினான்.

“விலங்கல்லாமல் தன்னை ஆக்கிக்கொள்ளும் பொருட்டு மானுடன் இயற்றியவையே பண்பாடு என நாம் அறிவன அனைத்தும். ஶ்ரீதமரின் சொல்லை கேட்டிருப்பாய். நேற்றும் நாளையும் இல்லாது அறிவது விலங்கியல்பு. அதிலிருந்து மீளும்பொருட்டு நாம் அனைத்தையும் நேற்றுடனும் நாளையுடனும் பிணைக்கிறோம். அதன்பொருட்டு அறிவை உருவாக்கிக்கொள்கிறோம். அறிவை சுமந்தலைகிறோம். செல்வமாக, படைக்கலமாக, வசிப்பிடமாக. அறிவன அனைத்தையும் அறிந்தவற்றினூடாக மட்டுமே அறியும்நிலையை சென்றடைகிறோம். உலகையே கைவிடுவோம், ஈட்டிய அறிவை கைவிடமாட்டோம்.”

அன்று அழிசி அவனருகே படுத்து பெருமூச்சுகள்விட்டபடி புரண்டுகொண்டிருந்தான். பின்னிரவில் அவன் விழித்துக்கொண்டபோது அழிசி கண் திறந்து விண்மீன்களைப் பார்த்து படுத்திருப்பதை கண்டான். “என்ன?” என்று கேட்டான். “மூத்தவரே, நான் இங்கிருந்தே கிளம்புகிறேன்” என்றான். “ஏன்?” என்று அவன் கேட்டான். “என்னால் உங்களுடன் வர இயலாது. உங்களுக்குள் நான் அஞ்சும் பிறிதொன்று உள்ளது. அந்த அச்சம்தான் இதுவரை உங்களிடம் என்னை ஈர்ப்புகொள்ள வைத்தது. ஆனால் நீங்கள் சொல்வதுபோல் அது என்னை கொல்லும் அறிதல்.”

ஆதன் “ம்” என்றான். “நான் இங்கிருந்து வேறெங்காவது செல்ல இருக்கிறேன்” என்றான் அழிசி. “வேறெங்காவது என்றால்?” என்று ஆதன் கேட்டான். “நீர் நிறைந்த பசுமை திகழும் ஒரு சிற்றூர்” என்றான் அழிசி. ஆதன் புன்னகைத்து “அழகிய பெண்கள், சிறிய இல்லம், சில பசுக்கள்” என்றான். “ஆம், அதற்கென்ன? எளிய இனிய வாழ்க்கையைப் பற்றி உங்களைப்

போன்றோர் கொள்ளும் இந்த இகழ்ச்சி என்னை சீற்றமடையச் செய்கிறது” என்று அழிசி சீற்றத்துடன் சொன்னான். “எளிய வாழ்க்கையில் வாழ்பவர்கள் நின்றுவிட்டவர்கள் என்றே நீங்கள் எண்ணுகிறீர்கள். அதனூடாக அவர்கள் செல்லும் தொலைவைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?”

“நான் எதையும் இகழவில்லை. எனக்குரியதை தேர்வு செய்கிறேன். நீ உன் வழி செல்க!” என்றான் ஆதன். “என்றேனும் நீங்கள் திரும்பி வருகையில் இங்கு நானிருப்பேன். நீங்களும் நானும் சென்ற தொலைவு என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்வோம்” என்று அழிசி சொன்னான். அது என்ன வகையான வஞ்சினம் என்று ஆதனுக்குப் புரியவில்லை. “நான் வரவே வாய்ப்பில்லை” என்றான். “வந்தால்…” என்றான் அழிசி. “எனில் நாம் சந்திப்போம்…” என்று ஆதன் சொன்னான். “உறுதியாக சந்திப்போம். அவ்விழைவு இருக்குமெனில் அச்சந்திப்பு நிகழும்” என்றான் அழிசி.

மறுநாள் காலையில் ஆதன் விழித்து நோக்கியபோது அக்குழுவில் அழிசி இல்லை. முதிய வணிகர் காத்தன் “இன்று முதற்காலையிலேயே தன் தோல் முடிச்சுடனும் கழியுடனும் அவன் கிளம்பிச்சென்றுவிட்டான். உங்களுக்குள் ஏதேனும் பூசலா?” என்று கேட்டார். “இல்லையே” என்று அவன் சொன்னான். “பூசல் நிகழ்ந்து செல்வதாயின் திரும்பி வருவார்கள். பூசல் நிகழாது விட்டுச் செல்வதெனில் அவன் திரும்பி வரப்போவதில்லை” என்றார். “நன்று” என்று ஆதன் கூறினான்.

# களிற்றியானை நிரை - 7

## பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 7

வடபுலம் நோக்கி செல்லச் செல்ல ஆதன் அங்கு நிகழ்ந்த பெரும்போரைப் பற்றிய செய்திகளை மேலும் மேலுமென அறிந்துகொண்டிருந்தான். முதலில் துளிச்செய்திகள் வந்தன. விந்திய மலையைக் கடந்த பின் அனைத்து திசைகளிலிருந்தும் அறையும் மழையென அப்பெரும்போரைப் பற்றிய கதைகள் வந்தபடியே இருந்தன. அதிலிருந்த காட்சிகளையும் விரித்துரைப்புகளையும் அவன் எண்ணி எண்ணி தன்னுள் கோத்து அமைத்துக்கொண்டான். அதன்பொருட்டு அவன் அப்போரை தன்னுள் மீளமீள நிகழ்த்திக்கொண்டான்.

ஒவ்வொரு செய்தியும் அவனை வந்தடைந்தபோது அது என்றோ நிகழ்ந்த தொல்கதை போன்ற கட்டுக்கோப்பையும் அழகையும் கொண்டிருந்தது. அக்கட்டுக்கோப்பும் அழகும் அது மிக அகன்றிருந்தமையால்தான் என்று பின்னர் உணர்ந்துகொண்டான். தொலைவில் தெரியும் குன்றின் வடிவ முழுமைபோல் அதன் ஒவ்வொரு சொல்லும் கூர்கொண்டிருந்தது. ஒவ்வொரு உணர்வுக்கும் இலக்கிருந்தது. ஒவ்வொரு நிகழ்வும் ஒன்றுடன் ஒன்று இயல்பாக ஒருங்கிணைந்து ஒற்றைப் பெருக்கென்று, ஒருமைகொண்ட கட்டமைவென்று ஆயிற்று.

ஆனால் மேலும் மேலும் செய்திகள் வந்து பெருகும்தோறும் பொருள் சிதறியது. ஒவ்வொரு நிகழ்வும் வெவ்வேறு கோணங்களில் சொல்லப்பட்டது. ஒவ்வொரு உணர்வும் பிறிதொரு உணர்வால் சிதறடிக்கப்பட்டது. ஒவ்வொரு

பெருவீரனும் தன் ஒளிமிகுந்த முகத்துடன் எழுந்த கணமே இருள் கவியும் முகிலொன்று அவன் தலைக்குமேல் தோன்றியது. அறம் திகழும் நிகழ்வை கீழ்மையின் உச்சமென பிறிதொரு நிகழ்வு ஈடு செய்தது. எங்கும் ஒரு கணமும் நிலைக்கவிடாது மலைவெள்ளச் சுழிப்பென அப்போரின் கதைகள் அவனை அலைக்கழித்தன.

தண்டகாரண்யத்தில் சூதனொருவன் உணர்வு கொப்பளிக்க நெஞ்சில் அறைந்து வான்நோக்கி வீறிடும் ஒலியுடன் குருக்ஷேத்ரப் பெரும்போரில் பீஷ்மர் களம்பட்ட கதையைச் சொல்லி நிறுத்தியபோது சற்று அப்பால் இலைப்படுக்கையில் கையில் தலைவைத்து வானை நோக்கி படுத்திருந்த அவன் மெல்ல சிரித்தான். அவ்வோசை கேட்டு அவனருகே படுத்திருந்த பிறிதொரு வழிப்போக்கன் திரும்பி "சிரிக்கிறீர்களா?" என்றான். ஆதன் "சிரித்திருக்கலாகாது. ஆனால் இத்தகைய பெருங்கொந்தளிப்புக்குப் பின் அறுதியாக ஒரு சிரிப்பன்றி வேறேதும் எஞ்சாதென்றும் தோன்றுகிறது" என்றான்.

"நான் இக்கதைகளை கேட்கத்தொடங்கி நெடுநாளாகிறது. போர் முடிந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்குள் செவிகளிலிருந்து செவிகளுக்கென பெருகி இக்கதைகள் எங்கெங்கோ சென்றுவிட்டன. இக்கதைகள் ஒலிக்காத நாவே இன்று பாரதவர்ஷத்தில் இல்லையென்று தோன்றுகிறது" என்றான். "ஆம், நானும் இக்கதையை இருமுறை கேட்டுவிட்டேன்" என்றான் வழிப்போக்கன். "பெருகிப் பெருகி பொருளழிதல்" என்று ஆதன் சொன்னான். வழிப்போக்கன் அச்சொல்லை சரிவர புரிந்துகொள்ளாமல் "ஆம், பாரதவர்ஷமே இப்போர்க்கதையால் நிறைந்துள்ளது" என்றான்.

தனக்குத்தானே தலையை அசைத்த பின் வழிப்போக்கன் “யார் வீரர், யார் கோழை, யார் அறத்தார், யார் அறம் மறந்தவர் என்று எவராலும் கூறமுடியாதாகிவிட்டது. வெறும் பதினெட்டு நாட்கள். இன்னும் சில நாட்களில் பாரதவர்ஷத்தில் எவரும் எதையும் இப்போரின் கதை என சொல்லலாம் என்று ஆகும். எதுவும் எவரும் சொல்லாமலும் ஆகும்” என்றான். “சூதர்களால் கதையை பெருக்காமலிருக்க முடியாது. அறிந்தவற்றை தேவைக்கேற்ப பெருக்கிச் சொல்வது அவர்கள் தொழில். சொல்லச்சொல்ல எழும் உணர்வு சொல்லப்படுவனவற்றை விரிக்கிறது. அது தெய்வமெழுந்து சொல்லுதல் என்று அவர்கள் கூறுகிறார்கள்.”

“நேற்று ஒருவன் சொல்லிக்கொண்டிருந்த கதை இந்திரவிஜயம் என்னும் நூலில் உள்ளது. விருத்திரனுக்கும் இந்திரனுக்குமான போர். அவன் அதை அர்ஜுனனுக்கும் பால்ஹிகருக்குமான போராக மாற்றிவிட்டான்” என்று அப்பால் ஒருவர் இருட்டிலிருந்து சொன்னார். ஆதன் “மேலும் பெருகும், பின்னர் கதைகள் குறையத்தொடங்கும்” என்றான். “ஏன்?” என்று வழிப்போக்கன் கேட்டான். “இதிலுள்ள இப்பெரும் பொருளின்மையை இப்போதே ஒவ்வொருவரும் உணரத் தொடங்கிவிட்டனர். அறிந்த கதைகளைத் திரட்டி விழுப்பொருளை வகுக்காமல் நம்மால் அவற்றை உள்ளத்தில் வைத்துக்கொள்ள இயலாது. இவ்வண்ணம் கதைகள் பெரும்புயலாக வீசுகையில் எவராலும் அதை செய்ய முடியாது.”

“பொருளின்மையை எவரும் விரும்பமாட்டார்கள்” என்றான் வழிப்போக்கன். “ஆம், கதை கேட்பவர்கள் அதை கடைந்து திரட்டி வெண்ணெயுடன் வீடு திரும்பவே விரும்புவார்கள்.

கேட்ட கதையை தானறிந்த விழுப்பொருளுடன் திரும்பச் சொல்வார்கள். அவ்வாறு பல்லாயிரம்பேர் சொல்கையிலும் மாறாத பொதுவிழுப்பொருளை அடைந்த கதைகளே நீடிக்கின்றன" என்றான் ஆதன். "இக்கதைகள் சிதறிப் பரந்திருக்கின்றன. ஒரு மாபெரும் ஓலம்போல். பல்லாயிரம் குரல்கள் நெஞ்சு வெடித்து விண்ணோக்கி எழுப்பும் ஓலம். இதற்கென்ன பொருள்? வெறும் கண்ணீர், வெறும் சினம், வெறும் விழைவு. அவற்றால் எவருக்கென்ன பயன்? மானுடனை ஆட்டி வைக்கும் விசைகளை நேருக்கு நேர் காண்பதன்றி அவற்றால் கேட்போன் பெறும் நன்மை என்ன?"

"எனில் என்ன நிகழும்?" என்று வழிப்போக்கன் கேட்டான். "அறியேன். ஆனால் இவ்வண்ணம் நிகழ்கையில் எல்லாம் பெருங்கவிஞன் ஒருவன் எழுந்து வருகிறான். இவ்வனைத்தையும் தொட்டுச் சேர்த்து அவன் ஒரு பெருங்காவியத்தை படைக்கக்கூடும். அங்கே ஒவ்வொன்றுக்கும் பிறிதொன்றுடன் பிரிக்கமுடியாத உறவிருக்கும். ஒவ்வொன்றும் பொருள் கொண்டிருக்கும். மானுடர் எல்லைதீட்டப்பட்டிருப்பார்கள். நிகழ்வுகள் ஒருங்கமைக்கப்பட்டிருக்கும். எண்ணங்கள் உரிய சொற்களை கண்டடைந்திருக்கும். வடிவம் சிதறல்களாகவும் சிதறல்கள் அறுதி வடிவமாகவும் மாறும் இயக்கம் ஒன்று அதில் அமைந்திருக்கும்."

"அத்தகைய பெருங்காப்பியம் ஒன்று எழுதப்படுமெனில் ஆழ்பிலத்தில் நதிகள் சென்று மறைவதுபோல் இந்தக் கதைகள் அனைத்தும் அதற்குள் சென்று ஒடுங்கும். பின்னர் அதுவே கதைகளை உருவாக்கும். காலமறியாத ஒரு நாவென அது பிறந்து பிறந்தெழும் மானுடத்திடம் இக்கதைகளை

சொல்லிக்கொண்டிருக்கும். மறுபிறப்பெடுக்கும் கதைகளே வாழ்கின்றன. இன்று வாழ்ந்து குருக்ஷேத்ரத்தில் மடிந்த அனைவரும் அக்காவியத்தினூடாக மறுபிறப்பெடுத்து வருவார்கள். அன்று அவர்கள் இன்றுள்ள பொருளின்மையை உணரமாட்டார்கள். தங்கள் பிறப்பும் இறப்பும் எவ்வண்ணம் கோக்கப்பட்டிருக்கிறதென்பதை அறிந்த தெளிவு அவர்களுக்கிருக்கும்.”

“காவியத்தில் எழுபவர்களுக்கு அழிவில்லை என்பார்கள். நாளை இங்கே எழவிருக்கும் ஒவ்வொருவரும் அவர்களை சொல்லிச் சொல்லி பெருக்குவார்கள். பெருகுவதெல்லாம் தெய்வமே. அவர்கள் ஒவ்வொருவரும் தெய்வமாகலாம். எத்தனை முகங்கள்! துரியோதனன், அர்ஜுனன், பீமன், யுதிஷ்டிரன், சகுனி... அவர்கள் அனைவருமே தெய்வமாவார்கள். இங்கு அவர்களை பற்றிய கதைகள் தொட்டுத் தொட்டு பெருகும்” என்றான் ஆதன். வழிப்போக்கன் “அதுவரை காத்திருக்க வேண்டியதுதான். இந்தப் புயலோசையை எவ்வளவு நேரம்தான் தாங்குவது!” என்றான்.

“என்னாலும் இக்கதைகளின் ஓசையை தாளமுடியவில்லை. ஆகவேதான் எப்போதும் இக்கதைகளை அருகிருந்து கேட்பதில்லை. இங்கு கதை கேட்பவர்களை பாருங்கள். சூதனின் அருகிருந்து ஒவ்வொரு சொல்லையும் தலையசைத்து மெய்ப்பாடு காட்டி கேட்பவர்கள் அக்ககதையிலேயே வாழ்பவர்கள். சற்றே சலித்தவர்கள் அச்சொல் மட்டும் செவியில் விழும் அளவுக்கு அகன்றிருக்கிறார்கள். அக்கதையை கேட்காமலிருக்க விரும்புபவர்கள், ஆனால் கேட்காமலிருக்க இயலாதவர்கள் அவர்கள். அக்கதை ஒலிக்கையில் அதனுடன் எத்தொடர்பும் இன்றி

அகன்றிருப்பவர்கள் அக்கதையில் முழுமையாகவே சலித்துவிட்டவர்கள்.”

அவன் அப்பால் அடுமனைப்பணியிலும் புரவி நோக்குதலிலும் சகடம் சீர்செய்வதிலும் ஈடுபட்டிருந்த மக்களை நோக்கிய பின் “ஆனால் ஒருமுறைகூட இக்கதைகளை செவிகொள்ளாதவர்கள் இந்நிலத்தில் பல கோடி. அவர்களின் மொழிகளில் இக்கதைகள் இன்னும் எத்தனை யுகங்களுக்குப் பின் சென்று சேரும் என்று தெரியவில்லை. இன்று அவர்களுக்கும் நமக்கும் இடையே இருப்பவை சில சொற்கள். சில ஆணைகள், சில உசாவல்கள், சில மறுமொழிகள். நாணயங்கள்போல அவை புழங்குகின்றன. அவற்றில் எந்தக் கதையும் சென்றமர இயலாது” என்றான். அடுகலத்துடன் சென்ற நாகர்குலத்து இளைஞனைச் சுட்டி “அவனுக்கு கர்ணனின் பெயர் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை” என்றான்.

“அவர்கள் ஒருவகையில் நல்லூழ் கொண்டவர்கள். இன்று மட்டும் வாழ்கிறார்கள். அவர்களுக்கு சொல்லின் எக்களிப்பும் துயரும் இல்லை. இயல்பாகப் புவிதிகழ்ந்து மறையக்கூடியவர்கள்” என ஆதன் தொடர்ந்தான். “அதற்கும் அப்பால் இச்சொல்லிலிருந்து அகன்றிருப்பவர்கள் சொல்கடந்தவர்கள், முனிவர்கள். இதற்கு முன் தங்கிய இடத்தில் நான் ஒருவனை பார்த்தேன். கர்ணன் களத்தில் கவசங்களும் குண்டலங்களுமின்றி நின்றிருக்கும் கொடுந்துயரக் காட்சியை சூதன் சொல்லிக்கொண்டிருந்தபோது மிக அப்பால் மரத்தடியில் இலைப்பரப்பில் அமர்ந்து ஊழ்கத்திலிருந்தான். அரைக்கணம் திரும்பி அவன் விழிகளை பார்த்தேன். அதிலிருந்த மலர்வு என்னை திகைக்கச் செய்தது.

அது தன்னுள் தான் நிறைந்தவனின் உளமறியும் உவகையின் வெளிப்பாடு.”

“அக்கணத்தில் ஒன்றை உணர்ந்தேன், யோகியின் முகத்திலிருக்கும் ஒளிபோல் இப்புவியில் எளிய மானுடருக்கு எதிரான ஒன்றில்லை என. கொலைவாளின் மின் போன்றது. இங்குள்ள அனைத்திற்கும் எதிரான தெய்வத்தின் இளிவரல். எழுந்து சென்று இங்கு குருதி இவ்வண்ணம் பெருகி வழிகையில் உனக்கு யோகம் எதை அளிக்கிறது, அறிவிலி என்று கூவ வேண்டும் போலிருந்தது. துயரமும் அழிவும் சிறுமையும் இழிவும் பெருகிச் சூழ்ந்திருக்கையில் அங்கே அவ்வண்ணம் அமர்ந்து நெஞ்சில் ஒரு சுடரை பேணிக்கொள்வதில் தவிர்க்க இயலாத ஒரு கீழ்மை ஒன்று உள்ளது என்று தோன்றியது. அங்கிருந்து நெடுநேரம் உளம் கொதித்துக்கொண்டிருந்தேன்” என்றான் ஆதன்.

“ஆனால் எழுந்து சென்று அவரிடம் அதை கேட்கவில்லை அல்லவா?” என்றான் வழிப்போக்கன் மெல்லிய சிரிப்புடன். “ஆம், அவ்வுணர்வுகள் எனக்கு உவப்பானவை என்பதனால் அவற்றை தொட்டுத் தொட்டு வளர்த்துக்கொண்டேனே ஒழிய அவை மெய்யானவை அல்ல என்று எப்போதுமே அறிந்திருந்தேன். மானுடர் தங்கள் உள நாடகங்களில் உணர்வுகளில் அடித்துச் செல்லப்படுகிறார்கள். ஆனால் அவற்றின் புற மதிப்பென்ன என்பதை அவர்கள் எப்போதும் உணர்ந்திருக்கிறார்கள்.”

அன்று துயில்கையில் விண்ணில் நிறைந்திருந்த விண்மீன்களை ஆதன் நெடுநேரம் பார்த்துக்கொண்டிருந்தான். காலையில் அவன் எழுந்தபோது வழிப்போக்கன் அருகே இல்லை. அவன் நீராடி வந்து மரவுரியை மாற்றிக்கொண்டு

அன்னநிலையில் உணவருந்தி உச்சிப்பொழுது உணவுக்கான உலருணவு உருளைகளை பெற்றுக்கொண்டு குடுவையில் நீர் நிறைத்து எடுத்துக்கொண்டு மற்ற வழிப்போக்கருடன் இணைந்துகொண்டான்.

அவர்களில் ஒருவன் பாடிக்கொண்டு வந்தான். பயிலாத் தொண்டை மட்டுமே உருவாக்கும் இனிமை கொண்ட பாடல். மொழி புரியவில்லை. அது புலரியைக் குறித்தும், பறவைகளைக் குறித்தும், உழுத வயல்களைக் குறித்தும், ஒளிரும் விழிகள் கொண்ட கன்றுகளைக் குறித்துமாகவே இருக்கும் என்று அவன் எண்ணிக்கொண்டான். ஆனால் சற்று நடந்து செவி கொண்டபோது அது குருக்ஷேத்ரப் போர்ப்பரணி என்று தெரிந்தது. சற்று திகைப்படைந்து மேலும் அருகணைந்து பாடுபவனை பார்த்தான். பதினேழு வயது இளைஞன். விழிகளில் குழந்தைமை ஒளி கொள்ள உடலெங்கும் துள்ளல் நிறைந்திருக்க கைகளைத் தட்டி அவன் பாடிக்கொண்டிருந்தான்.

சிறுவர்களுக்குரிய குரல் பெண்களைப் போன்றது. ஆனால் குழைவுகள் எல்லாம் வாள்சுழலல்கள் என விசைகொண்டிருப்பது. குருக்ஷேத்ரத்தில் எழுந்த வடவைமுகப் பேரனலின் தோற்றத்தை விரித்துரைக்கும் வரிகளை அவன் பாடிக்கொண்டிருந்தான். அவ்வரிகளை அவன் எப்படி ஒரு நடன தாளமாக, வழிநடைப் பாடலாக மாற்றிக்கொள்கிறான் என்று அவன் வியந்தான். பின்னர் புன்னகையுடன் அவன் எண்ணிக்கொண்டான். குழந்தைகள் அனைத்துப் பாடல்களையும் குழந்தைப்பாடலாக மாற்றிக்கொள்வது போலத்தான். இங்கு இனி இப்பெரும்போர் அனைத்துமாகலாம். மண்ணைக்கொண்டு இல்லங்களும் அடுகலங்களும்

அமைப்பதுபோல். அதைக்கொண்டே இங்கு வாழ்க்கை அமைக்கப்படலாம்.

விந்தியனுக்கு அப்பால் இருந்த விரிநிலத்தை அடைந்த பின்னர்தான் அத்தனை மக்கள் அஸ்தினபுரி நோக்கி சென்றுகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். உண்மையில் கோதையின் கரையிலிருந்தே அஸ்தினபுரி நோக்கி செல்பவர்களின் நிரை தொடங்கிவிட்டிருந்தது. அவர்கள் உதிரிகளாக, தனியர்களாக, பிறருடன் உரையாடாதவர்களாக இருந்தமையால் அதை தனித்தறிய இயலவில்லை. தண்டகாரண்யத்தை அடைந்த பின்னர் வணிகர்களும் நாடோடிகளும் துறவிகளும் வடபுலம் நோக்கி சென்றுகொண்டிருந்ததை அவன் கண்டான். இயல்பான மக்கள் ஒழுக்கென்று அவன் எண்ணினான். வடபுலத்திலிருந்து குளிர்காலத்தில் பறவைகள் விண்ணலைகளென தெற்கு நோக்கி வருவதுபோல.

மேலும் வடக்கே வந்தபோதுதான் ஊர்களிலிருந்து மக்கள் கிளம்பி திரண்டு வழிகளை நிறைத்து பெருஞ்சாலைகளில் ஊறி நிறைந்து ஒழுகிக்கொண்டிருப்பதை கண்டான். தானும் அப்பெருக்கில் ஒரு துளி என ஆகி சென்றுகொண்டிருப்பதையே அவன் பின்னர்தான் உணர்ந்தான். “எங்கு செல்கிறார்கள் இவர்கள்?” என்று தன்னுடன் வந்த முதியவர் ஒருவரிடம் கேட்டான். “அஸ்தினபுரிக்குத்தான்” என்று அவர் சொன்னார். “நான் அஸ்தினபுரிக்குத்தான் செல்கிறேன்” என்று அவன் சொன்னான். உரக்க நகைத்து “இங்கு அனைவரும் அங்குதான் செல்கிறார்கள்” என்றார் முதியவர்.

“ஆனால் நான் கிளம்பும்போது அந்நகர் எங்கிருக்கிறது என்றே தெரிந்திருக்கவில்லை. எதன் பொருட்டு அங்கு செல்கிறேன், அங்கே என்ன நிகழ்கிறது என்பது எதுவுமே எனக்கு தெரிந்திருக்கவில்லை. அப்பெயரன்றி எதுவும் என்னில் இருக்கவில்லை” என்றான். “இங்குள்ள பெரும்பாலானவர்கள் அப்படித்தான். இளமையிலேயே அப்பெருநகரைக் குறித்த செய்தி அவர்களை வந்தடைந்திருக்கிறது. என்றோ ஒருநாள் செல்லவேண்டிய இடம் எனும் எண்ணம் இருந்திருக்கலாம்” என்று முதியவர் சொன்னார். “அப்பெயருக்குள் அவ்வாறு ஓர் அழைப்பு உள்ளது” என்றான் ஆதன்.

“இவர்கள் அனைவரும் தாங்கள் இருந்த இடங்களில் இருந்து வெளியேற விரும்பியவர்கள். வெளியேறுவதற்கான விசை ஒன்றுக்காக காத்திருந்தவர்கள். இன்று கதைகளினூடாக அஸ்தினபுரி பேருருவம் கொண்டிருக்கிறது. அதன் ஈர்ப்பை அவர்களால் தவிர்க்க இயலவில்லை. அவ்விசைக்கு தங்களை ஒப்புக்கொடுத்துவிட்டார்கள்” என்று முதியவர் சொன்னார். “கிளம்பிவிட்டதன் விடுதலையை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். செல்லுமிடம் என்ன என்பது இப்போது அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.”

அவன் தன்னைச் சுற்றிலும் புழுதி படிந்த உடைகளுடன், மரத்தாலான காலணிகளுடன், தோளில் மூட்டைகளுடன், இடையில் நீர்க்குடுவைகளுடன் சென்றுகொண்டிருப்பவர்களை பார்த்தான். பலர் குழந்தைகளையும் மனைவியரையும்கூட உடன் அழைத்துக்கொண்டிருந்தனர். பாணர்கள் இசைக்கலன்களுடனும் இல்லறப் பொருட்களுடனும் சென்றனர். சிறு வண்டிகளில் முதியவர்களையும்

பெண்களையும் ஏற்றிக்கொண்டு அதைப் பிடித்தபடி உடன் சென்றனர். அத்திரிகளில் குழந்தைகளை ஏற்றிச் சென்றனர்.

“இத்தனை பேர் அங்கு சென்று என்ன செய்யப்போகிறார்கள்?” என்று ஆதன் கேட்டான். “அங்கு ஏதோ திருவிழா நிகழ்கிறது என்று இவர்கள் அனைவரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்” என்று அவன் அருகே சென்ற ஒருவன் சொன்னான். “திருவிழாவேதான். குருகுலத்து யுதிஷ்டிரனின் முடிசூட்டுவிழா நிகழப்போகிறது என்கிறார்கள்” என்றார் ஒரு முதியவர். “இல்லை, இது ராஜசூயம்” என்று இன்னொருவர் சொன்னார். “அவர் ஏற்கெனவே இந்திரப்பிரஸ்தத்தின் அரசர். ஆகவே முடிசூட்டுவிழா நடத்தவேண்டியதில்லை. அவர் அஸ்தினபுரியின் மணிமுடியையும் சூடும் விழாதான் நிகழப்போகிறது” என்றார் இன்னொருவர்.

“அவர் ராஜசூயம் நிகழ்த்தக்கூடும் என்று பேச்சிருக்கிறது” என்றான் அருகே வந்த உயரமான மனிதன். ஆதன் ராஜசூயம் பற்றி கேள்விப்பட்டிருக்கவில்லை. அவன் விழிகளில் அதைக் கண்ட முதியவர் “அஸ்வமேதமும் ராஜசூயமும் மும்முடி சூடும் அரசர்களுக்குரிய நெறிகள். இன்று பாரதவர்ஷத்தின் பேரரசர் யுதிஷ்டிரனே. அதை நிறுவ அவர்கள் விரும்புவார்கள். இப்போருக்குப் பின் பாரதவர்ஷத்தில் அவர்களின் புரவிகளை பிடித்துக்கட்ட எவருமில்லை. அவர்களின் புரவிகள் இந்நேரம் அஸ்தினபுரியிலிருந்து நான்கு திசைகளுக்கும் எழுந்து சென்றிருக்கும். அவை திசைவெற்றி அடைந்து திரும்பி வருகையில் அஸ்தினபுரியில் மும்முடிசூடி அரியணை அமர்வதற்கு அரசரும் ஒருக்கமாக இருப்பார்.”

“ராஜசூயம் நிகழ்கையில் தன் கருவூலத்தில் ஒரு பொன் நாணயம்கூட எஞ்சாது அவர் கொடையளித்துவிடவேண்டும்”

என்றார் ஒருவர். “ஒரு நாணயம் கூட எஞ்சாமலா?” என்று திகைப்புடன் அவன் கேட்டான். “ஆம், ஒரு நாணயம் கூட எஞ்சலாகாது” என்று முதியவர் சொன்னார். “ஆனால் அஸ்வமேதம் செய்த மன்னனின் கருவறை பெருகி நிறைந்துகொண்டுதான் இருக்கும். அஸ்வமேதம் செய்யாது எவரும் ராஜசூயம் செய்வதில்லை. உண்மையில் ராஜசூயம் என்பது அஸ்வமேதத்தால் வரும் பெரும் செல்வத்தை வைப்பதற்கு இடம் தேடி கருவூலத்தை ஒழிப்பதுதான் என்கிறார்கள்.”

ஆதன் தென்னாட்டு அரசர்கள் எவரேனும் எப்போதேனும் ராஜசூயமோ அஸ்வமேதமோ செய்து இருக்க முடியுமா என்று எண்ணினான். அவ்வெண்ணத்தை உணர்ந்ததுபோல் “தெற்கே எந்த அரசனும் அவற்றை செய்ய இயலாது. வடக்கே ஆரியவர்த்தம் ஒற்றைப் பெருநிலம். அரசுகள் சந்தைக்கூட்டமென செறிந்திருப்பது கங்கை நிலம். அங்கு அஸ்வமேதம் செய்து முழு வெற்றி அடைவதற்கு ஓராண்டுகூட வேண்டியதில்லை. இங்கே ஒருவன் புரவியை திறந்துவிட்டால் அது மக்களில்லாத பெருநிலத்திற்குச் சென்று நீரிலாது அழிந்து சாகவேண்டியிருக்கும்” என்றார் முதியவர்.

ஆதன் புன்னகைத்தான். ”இப்பெருந்திரள் செல்வதற்கு இன்னொரு நோக்கமும் உள்ளது” என்று தொடங்கினார் முதியவர். “அங்கே அப்பெரும்போரில் பல்லாயிரம் பேர் உயிர் துறந்திருக்கிறார்கள். பெரும் நிலங்கள் ஒழிந்துவிட்டிருக்கின்றன. போருக்கு அஞ்சியும் போரின் இழப்புகளை மறக்கும் பொருட்டும் அங்குள்ள சிற்றூர்களிலிருந்தெல்லாம் மக்கள் திரள் என கிளம்பி அறியா நிலங்களுக்குச் சென்று குடியேறியிருக்கிறார்கள்.

தண்டகாரண்யத்தின் உள்காடுகளிலெல்லாம் புதிய ஊர்கள் உருவாகியிருக்கின்றன. அவர்களால் கைவிடப்பட்ட ஊர்களுக்கு இங்குள்ள மக்கள் சென்று குடியேறுகிறார்கள்.”

“வாழ்வுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும் என்று எளிய மக்கள் எப்போதும் காத்திருக்கிறார்கள்” என்றான் நெடியவன். “யுதிஷ்டிரனுக்கும் அங்கே குடிமக்கள் தேவை. ஆகவே ராஜசூயத்தை பெருமளவு நிகழ்த்துவார் என்று தோன்றுகிறது.” இன்னொருவன் “அங்கே இந்நேரம் பாரதவர்ஷமெங்குமிருந்து மக்கள் வந்து செறிந்திருப்பார்கள். எரியூட்டி பூச்சிகளை துரத்துவதுபோல நம்மை அகற்றப்போகிறார்கள்” என்றான். அந்த அச்சம் அனைவரிடமும் இருந்ததுபோல அவர்கள் அமைதி அடைந்தனர்.

ஆதன் அந்த மக்கள் திரளை மாறிமாறி நோக்கிக்கொண்டு நடந்தான். அணுகிப் பேசி ஒவ்வொருவரிடமும் அவர்களின் இலக்கென்ன என்பதை உசாவி அறிந்தான். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கற்பனையிலிருந்தனர். அங்கு செல்பவர்கள் அனைவருக்கும் கைப்பிடியளவு பொன்னும் குடியிருக்க வீடும் உழுவதற்கு நிலமும் யுதிஷ்டிரனால் அளிக்கப்படுகின்றன என்று ஒருவன் சொன்னான். “ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பசுக்கள்!” என்று ஒருவன் கைதூக்கி உரக்க சொன்னான்.

“நிகரில்லாத போரில் வெற்றி அடைந்த அரசர் அவர். அப்போரைக் கண்டு மகிழ்ந்த தேவர்கள் அதை வாழ்த்தி விண்ணிலிருந்து பொன்மழை பெய்யவைத்தனர். அப்பொன்னை அள்ளிச் சேர்த்து மலையென குவித்து வைத்திருக்கிறார்கள். நூறு ஏவலரை நிறுத்தி மரக்கால்களால் அள்ளி பொன்னை அளிக்கிறார்கள். பொன் பெற்றவர்கள் அவர்களே வந்து சொன்ன

செய்தி இது!” என்று ஒருவன் சொன்னான். “மரக்கால்களில் பொன்னா?” என்று இன்னொருவன் சிரித்தான். “ஒவ்வொருவருக்கும் நூறு கழஞ்சு என்றார்கள்” என்றான் அப்பால் ஒருவன்.

ஒவ்வொருவரும் அங்கே ஒரு மாயம் நிகழுமென எதிர்பார்த்தார்கள். “அறம் வென்றதென்று தெய்வங்கள் ஆணையிடுகின்றன. அறத்தோன் முடிசூடும் நிலத்தில் செல்வம் பெருகும். ஆகவே அங்கு செல்கிறோம்” என்றார் ஒரு அந்தணர். “வேதம் நிலைகொள்கிறது அங்கே. வேதம் ஓங்கிய நிலத்தில் செல்வமும் நிலைகொள்ளும்.”

அவன் அத்திரளின் உணர்வுகளை தானும் அடையமுடியாமல் அகம் தவித்தான். அந்த ஒழுக்கில் முழுமையாக தானும் கலந்துகொள்ள முயன்றான். அவர்களுடன் பேசிச் சிரித்தான். வழிநடைப்பாடலுக்கு கைதட்டி நடனமிட்டான். களைத்துச் சோர்ந்து அந்தியில் துயில்கொள்ளும்பொருட்டு அமர்கையில் அதுவரை திகழ்ந்த தன்னிடமிருந்து தான் விலகி துணுக்குற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவனைச் சூழ்ந்திருந்தது உவகையும் கொண்டாட்டமும்தான். புது வாழ்க்கை குறித்த கனவுகளின் மகிழ்வு. நேற்றுவரை பீடித்திருந்த அனைத்தையும் உதறிவிட்ட விடுதலை.

பாணர்களின் பாடலை அவன் கேட்டுக்கொண்டிருந்தான். துரோணர் அம்புகள் தைத்து களத்தில் சரியும் காட்சி. அதை கைகளை தட்டிக்கொண்டு சூதன் ஒருவன் பாட பலநூறுபேர் கைதட்டி ஏற்றுப்பாடினார்கள். அச்சொற்களின் பொருளறியாதவர்கள் அது அறுவடைப்பாடல் போலவோ மங்கலச் சடங்குப்பாடல் போலவோ கூட்டுக்களியாட்டுக்குரியது என்றே எண்ணிக்கொள்வார்கள்.

# களிற்றியானை நிரை - 8

## பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 8



அஸ்தினபுரியின் எல்லைக்கு வெளியே புறங்காட்டில் ஆதன் ஏழு நாட்கள் தங்கியிருந்தான். அங்கு வெளியூர்களிலிருந்து வந்துகொண்டே இருந்த மக்கள் ஈச்சைஓலைத் தட்டிகளாலும் கமுகுப் பாளைகளாலும் இலைகளாலும் தாழ்வான குடில்களை அமைத்து தங்கியிருந்தார்கள். அவ்விடம் ஒரு சந்தையென இடைவெளியில்லாமல் இரைந்துகொண்டிருந்தது. ஒவ்வொருவரும் அலையலையென எழுந்த உளத்திளைப்பில் இருந்தனர். அக்கூட்டமே அஸ்தினபுரி அஸ்தினபுரி என்று முழக்கமிட்டுக்கொண்டிருந்தது. ஒரு போர்க்குரல்போல. விண்ணை நோக்கிய அறைகூவல்போல. இரவுகளில் ஊழ்கம்போல. விண்ணிலிருந்து தேவர்கள் குனிந்து பார்க்கையில் “ஆம், அஸ்தினபுரி! அஸ்தினபுரியேதான்!” என மக்கள் அவர்களை நோக்கி கூவுவதுபோல் தோன்றியது.

அங்கிருக்கும் எவரும் அஸ்தினபுரியை பார்த்ததில்லை என்பது அவனுக்கு தெரிந்தது. கதைகளினூடாக அறிந்த பெருநகர். கதைகள் எப்போதுமே பெருகிக்கொண்டிருப்பவை. ஊழிப்பெருவெள்ளம்போல கதைகள் பெருகத்தொடங்கியபோது அவர்கள் தங்கள் ஊர்களிலிருந்து கிளம்பி வரத்தொடங்கினர். சொல்லென அறிந்து கனவென விரித்துக்கொண்ட அந்நகரை நோக்கி செல்கிறோம் என்ற உணர்வே அதுவன்றி பிறிதெதையும் எண்ணவிடாமல் ஆக்கியது. ஒரு சொல்.

அஸ்தினபுரி எனும் ஒற்றை ஒலி. அது எங்கே ஒலித்தாலும் செவி அங்கே திரும்பியது. அந்நகர் குறித்த அனைத்துச் செய்திகளையும் தொகுத்து ஒன்றுடன் ஒன்று இணைத்து பேருருவாக்கி அகநகர் ஒன்றை சமைத்தது.

அவர்கள் அங்கிருந்து செல்லவிருப்பது வெளியே அமைந்திருக்கும் ஒரு புறநகர் நோக்கி. கல்லால், மண்ணால், மரத்தால் ஆன நகர். விலங்குகளால், மானுடரால் ஆன நகர். அதை அவர்கள் தங்களுக்குள் திகழும் சொல்நகராக ஆக்கிக்கொள்ள முடியும். சொல் ஒளி. நொடியில் திசைதொட்டு திசைதாவும் விசை அதற்குண்டு. புவிநிறைக்கும் வீச்சு உண்டு. சுடர் எழுப்பும் ஒளி விண்ணை ஊடுருவலாம். அதன் முன் சுடர் பொருண்மையால் சிறையிடப்பட்ட சிறுநிகழ்வு. அவன் ஒவ்வொருவரையாக பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் அஸ்தினபுரியை எப்படி எதிர்கொள்வார்கள்? அவர்களுக்குள் இருப்பது கிளையும் விழுதும் நிறைந்த பெருமரம். அங்கே காத்திருப்பது அதன் விதை மட்டுமே. அவர்கள் அங்கு சென்று அந்நகரை பார்க்கையில் ஏமாற்றம் அடையாமலிருக்க முடியாது.

அவர்கள் அந்நகரைக் கண்டதும் திகைத்து சொல்லிழந்துவிடக்கூடும். அது அஸ்தினபுரி அல்ல என்று அவர்கள் எண்ணக்கூடும். “இதுவா? இதுவா!” என ஒவ்வொருவரும் பிறரிடம் கேட்கலாம். அவ்வாறு கேட்பது இழிவென்று உணர்ந்தால் தங்களுக்குள் அச்சொல்லை முழக்கிக்கொள்ளலாம். அங்கிருப்பது ஒரு தொல்நகர். மாமதுரை போல், புகார் போல், காஞ்சி போல், விஜயபுரி போல். தொல்நகர்கள் அனைத்துமே சிறியவைதான். மூதாதையர் ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையானவற்றை மட்டுமே

உருவாக்கிக்கொண்டார்கள். தங்கள் ஆணவத்திற்குரியதை அல்ல. ஆணவத்திற்குரியதை உருவாக்கிக்கொண்டவர்கள் அரக்கர்கள். மாகிஷ்மதியை, மகேந்திரபுரியை, இலங்கையை.

அசுரமாநகர்கள் அவர்களின் ஆணவம் போலவே எல்லையற்றவை. அவை விம்மி விம்மி மண்ணிலிருந்து விண்ணுக்கெழுந்தன. அத்தனை பேருருக்கொண்டு, அத்தனை ஒளிகொண்டு. அத்தனை செல்வம் செழிக்கையில் அவற்றுக்கு மண்ணில் பதிய இயலாதாகிறது. வேர்கள் ஒவ்வொன்றாக அறுந்து விடுபடுகின்றன. மாகிஷ்மதி விண்ணில் எழுந்தது என்பார்கள். பின்னர் அங்கிருந்து அது உடைந்து மண்ணில் சிதறியது. நூற்றெட்டுச் சிதறல்களாக அப்பெருநகர் பாரதவர்ஷத்தில் விழுந்து மண்ணில் அறைந்து புதைந்து உள்ளே சென்றுவிட்டது என்பார்கள். மண்ணுக்கடியிலிருக்கும் தங்கள் தொல்நகரின் துண்டுகளைப்பற்றி அசுரர்களின் பாடல்கள் மீள மீள சொல்கின்றன.

அங்கிருந்து அவை மீண்டும் முளைத்தெழும், மீண்டும் ஒளி கொண்டு பெருகி மண்ணிலுள்ள பிற அனைத்தையும் சிறிதென்றாக்கி நிலைகொள்ளும் என்று அவர்களின் கனவுகள் கூறுகின்றன. மீண்டும் அவை விண்ணுக்கெழும். விண்ணுக்கெழுபவை மண்ணில் உடைந்து விழுந்தாகவேண்டும் என்பது மாறா நெறி. அஸ்தினபுரி அரக்க நகரல்ல. அது மானுடர்கள் உருவாக்கியது. அது ஒரு எளிய உணவுக்கலம்போல அங்கு ஒழிந்து விண்நோக்கி வாய் திறந்திருக்கலாம். அல்லது நீர் பிடித்து வைத்த குடம். அல்லது ஒரு சிறு படைக்கலம். நகரங்கள் படைக்கலங்கள் அல்ல, நகரங்கள் சிறு ஊர்திகள்போல. அவை அசைவிலாதிருப்பதுபோல் தோன்றும், ஆனால்

சென்றுகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கணமும் தாங்கள் இருந்த இடத்தை பிறிதொன்றாக மாற்றிக்கொண்டு அவை காலத்தில் பயணம் செய்கின்றன.

இவர்கள் அனைவரும் அங்கு சென்றதுமே நிலைகுலையப் போகிறார்கள். விழிநீர் சிந்தப்போகிறார்கள். இத்தனை நாள் அவர்களை ஆட்டிப்படைத்த பெருங்கனவுகள் அனைத்தும் சிதறி கீழே விழுந்துகிடப்பதை காணவிருக்கிறார்கள். உண்மையில் அஸ்தினபுரியும் வீங்கி வீங்கி விண்ணுக்கெழுந்தது. பொன்னொளிர் முகிலென வானில் நின்றது. இறுதியில் தேவர்களால் அது உடைத்தெறியப்பட்டது. அங்கிருந்து மண்ணில் சுருண்டு விழுந்தது. பரவிக் கிடக்கும் பல்லாயிரம் துண்டுகளில் ஒன்றை நீங்கள் பார்க்கவிருக்கிறீர்கள். இது முளைத்தெழும் என்று நம்புக! இது மீளும், ஒளியும் ஆற்றலும் கொண்டு விண்ணிலெழும் என்று எண்ணுக!

அஸ்தினபுரிக்குள் செல்லவிருந்த மக்கள் பெருக்கை நகரை அணுகும் பாதைகளில் அமைக்கப்பட்டிருந்த பெரிய காவல்மாடங்களில் புரவிப்படைகளை நிறுத்தி தடுத்திருந்தார்கள். பெரும்பாலான காவல்மாடங்களில் காவலராக பெண்டிரே இருப்பதை ஆதன் முன்னரே பார்த்திருந்தான். விதர்ப்பத்திலும் மாளவத்திலும்கூட காவல் பணியை பெண்டிரே புரிந்தனர். பெரும்பாலான ஆண்கள் உயிர்துறந்துவிட்டிருப்பார்கள் போலும். அவனுடன் வந்த முதிய வீரன் “படைக்கலம் எடுக்கும் கை கொண்ட அனைவருமே களத்திற்கு சென்றிருக்கிறார்கள். சென்றவர்களில் ஒருவர்கூட மீளவில்லை. இங்கிருப்போர் கோழைகள்,

உடல்குறை கொண்டோர், மூளை சிதைவடைந்தோர். இனி அவர்களின் குருதியே முளைக்கவிருக்கிறது” என்றார்.

இளைஞன் ஒருவன் நகைத்து “புதுவெள்ளம்போல பாரதவர்ஷத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் பெருகி அஸ்தினபுரிக்குள் நுழைகிறார்கள். புத்தம்புதிய குருதி” என்றான். ஆதன் அப்போதுதான் அந்தத் தெளிவை அடைந்து “ராஜசூயம் இயற்றப்படும் செய்தி பாரதவர்ஷம் முழுக்க எப்படி சென்றது? அஸ்தினபுரியிலிருந்து அனுப்பப்பட்டதா?” என்றான். “சூதர்கள் பாடி அலைகிறார்களே?” என்றான் ஒருவன். “சூதர்களை அவ்வாறு பாடச்செய்ய முடியுமா?” என்றான் ஆதன். முதியவர் “முடியும், எவ்வண்ணம் எதை சொன்னால் அவர்கள் எப்படி பாடுவார்கள் என்பதை அறிந்த ஒருவரால் இயலும். அச்செய்தி பாரதவர்ஷம் முழுக்க பரவவிடப்பட்டிருக்கிறது” என்றார்.

ஒரு வணிகர் “நாடெங்குமிருந்து திறனுடையோர் இங்கு வருகிறார்கள். இங்கு வருபவர் ஒவ்வொருவரும் இத்தொலைவு நடந்து கடக்கும் ஆற்றலுடையவர்கள். அத்தொலைவுக்கு அப்பாலிருக்கும் ஒன்றை கனவு காணும் உளமுடையவர்கள். எல்லை கடப்பவர்கள், புதுமை நாடுபவர்கள். அவர்களிடமிருந்து பாரதவர்ஷத்தின் குருதி மீண்டும் முளைத்தெழ வேண்டுமென்று எண்ணுகிறார்கள்” என்றார். “கைவினைஞர், வேள்வலர், ஆயர்முதல்வர், சொல்வலர்... இங்கு வருபவர்கள்தான் இன்றைய பாரதவர்ஷத்தின் வெண்ணை போன்றவர்கள்” என்றார் புலவர் ஒருவர். “ஆரியவர்த்தத்தின் குளம் நோக்கி ஓடைகள் எனப் பாயும் விந்து” என்றான் ஆதன்.

அக்கோணத்தில் முதியவர் எண்ணியிருக்கவில்லை. திகைப்புடன் ஆதனை பார்த்த பின் வாய்விட்டு நகைத்து “நன்று! நீங்கள் உங்கள் மைந்தர் பிறக்கும் நிலம் நோக்கி

செல்கிறீர்கள்” என்ற பின் சூழ நோக்கி “எத்தனை ஆயிரம் பல்லாயிரம் பிறவா உயிர்கள். அவைதான் இவ்வுடல்களை ஊர்தியாகக் கொண்டு அங்கே சென்றுகொண்டிருக்கின்றன. தங்கள் இலக்கை நாடி பொறுமையிழந்து கொண்டிருக்கின்றன. பிரம்மத்தின் ஆணை” என்றார். அனைவரும் வெடித்து நகைக்க முதியவர் “அவைதான் போரை உருவாக்கி அங்கிருந்தோரை அழித்து தாங்கள் சென்றமையும் இடத்தை உருவாக்கிக்கொண்டனவா?” என்றபின் மீண்டும் வெடித்து நகைத்தார்.

ஆனால் பிறர் திகைப்புடன் அவரை நோக்கினர். ஆதன் தன்னுள் ஓர் அச்சத்தை உணர்ந்தான். அங்கு வந்து சேர்வதற்கு சில நாட்களுக்கு முன்னரே அஸ்தினபுரி எனும் சொல்லை அவன் அஞ்சத்தொடங்கிவிட்டிருந்தான். அச்சொல் இனித்து இனித்து வளர்ந்து பேருருக்கொண்டு அவனை தன் கையில் எடுத்து விளையாடி பின் அவனை சலித்து வீசிவிட்டிருந்தது. அச்சொல்லின் பேருரு அவனை அச்சுறுத்தியது. அது தன்னை ஈர்த்து கொண்டு செல்வதும் நல்லதற்கல்ல என்று அவன் எண்ணினான். செல்ல வேண்டியதில்லை என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். தொடக்கத்திலேயே அதை உணர்ந்து விலகிச்சென்ற அழிசி தன்னைவிட வாழ்வு குறித்த தெளிவு கொண்டவன் போலும். அவனைவிட அதிகம் கற்றிருந்தாலும் அவனைவிட அதிகம் சொல்லாடத் தெரிந்திருந்தாலும் அவனளவுக்கு தெளிவு தனக்கு வந்திருக்கவில்லை போலும்.

அழிசி நூல் கற்காதவன். ஆகவே ஆணவமற்றிருக்கிறான். ஆணவத்தால் மறைக்கப்படாத தெளிவுடனிருக்கிறான். இப்போதுகூட பிந்திவிடவில்லை. இந்த மையச்சாலையில் வந்து சேரும் ஒவ்வொரு கிளைச்சாலையும் பிரிந்து செல்வதும்

கூடத்தான். ஒவ்வொன்றிலும் சிற்றூர்கள் இணைக்கப்பட்டுள்ளன. அறியா நிலங்கள், புதிய மானுடர். ஆனால் ஒவ்வொரு சிற்றூரிலும் அங்கிருந்து கிளம்பிச்சென்ற சிலர் இருப்பார்கள். அங்கு சென்று சேரும் ஒருவன் அவர்கள் இடத்தை தான் அடைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அவர்கள் விட்டுச் சென்றதை அவன் அடையக்கூடும். இல்லங்களை, குழந்தைகளை, துணைவியரைக்கூட. எதை தாளமுடியாமல் அவர்கள் விட்டுச் சென்றார்களோ அவற்றை அடைவதுதான் அத்தனை நீண்ட பயணத்தின் பயனா?

இப்படியே முன்னால் செல்லத்தான் தன்னால் முடியும். சென்று கொண்டிருப்பவன். அஸ்தினபுரியை அடைந்து அங்கிருந்தும் கடந்து சென்றால் நான் விடுபட்டேன். இதை என்னால் விடமுடியாது. இத்தனை தொலைவுக்கு உருவேற்றி வளர்த்த பின்னர் இந்நகரை சென்று காணாமல் என்னால் கடந்து செல்ல இயலாது. நெடுந்தொலைவிலிருக்கிறது களிற்றுப்பெருநகர். களிற்றுப்பெருநகர். அவன் அங்கே செல்வது வகுக்கப்பட்டுவிட்டது. அவன் அவ்வூரை தெரிவுசெய்யவில்லை. அது அவனை எடுத்துக்கொண்டது.

அவன் இரவுகளில் விண்மீன்களைப் பார்த்தபடி அச்சொல்லை மிக அருகிலும் எல்லை கடந்த வெளிக்கப்பாலும் என உணர்ந்து கொண்டிருந்தான். “நீங்கள் அஞ்சுகிறீர்கள். நீங்கள் எண்ணியிருக்கும் பெருநகர் அங்கு இல்லை என்று ஏமாற்றம் அடைவீர்கள். அந்த ஏமாற்றத்தை தவிர்ப்பதற்காக அதை ஒத்திப்போட எண்ணுகிறீர்கள்” என்று அவனுடன் வந்த இளம் நாடோடியான காமன் சொன்னான். “ஏன், நீ எண்ணவில்லையா? நீ எண்ணியிருக்கும் நகர் அங்கு உள்ளது என்று எண்ணுகிறாயா?” என்றான் ஆதன். அவன் வெடித்து நகைத்து

“இங்குள்ள ஒவ்வொருவரும் அவர்கள் எண்ணியிருக்கும் நகர் அங்கு இருக்காது என்பதை அறிவார்கள். கற்பனையில் அந்நகரை வளர்த்துக்கொள்வது தங்கள் விழைவாலும் சலிப்பாலும்தான் என்பதை அறியாத எவருளர்?” என்றான்.

“தென்னகத்தாரே, ஒவ்வொருவரும் இங்கு சூழ்ந்திருந்திருக்கும் பருவடிவப் புவியால் சலிப்புற்றிருக்கிறார்கள். ஆகவேதான் இதை கதைகளால் நிரப்பிக்கொள்கிறார்கள். மொழியை அறியும் குழவி சூழ்ந்திருக்கும் உலகை அறியும்போதே கதையை அறியத்தொடங்குகிறது. உலகை அறிவதற்கும் மேலாக கதைகள் அதற்கு தேவைப்படுகின்றன. எக்குழவியாவது சூழ்ந்திருக்கும் கதையை அவ்வண்ணமே விரித்துச் சொல்லும் ஒரு கதையை விரும்பியிருக்கிறதா? பொருண்மையின் எல்லைகளை கடத்தல், இயல்கையின் மறு எல்லை வரை செல்லுதல். அதுதானே இன்றுவரை கதைகளாக இங்கு உள்ளன? இங்குள்ள அனைவருமே பகற்கனவுகளில் வாழ்பவர்கள். கதைகளில் வாழ்பவர்கள். கதை வேறு கனவு வேறு. அவை வாழ்வல்ல என்று அறியாத எவருளர்?”

“பெருந்திரளென இவர்கள் சென்று அந்நகரை பார்ப்பார்கள். அங்கே மழையால் கருகிய கோட்டையும், தாழ்ந்த தொன்மையான குவைமாடங்களும், குறுகிய தெருக்களும், ஒன்றோடொன்று தோள் ஒட்டி நின்றிருக்கும் தொன்மையான சுதை பூசிய மாடங்களும் கொண்ட ஒரு சிறு நகர் இருக்கும். அது அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்காது. ஏனெனில் அது பருப்பொருள். அது வேறு. அதுவே அங்கிருக்கும் என்று அவர்கள் நன்கு அறிவார்கள். அது ஒருபோதும் அவர்களுக்குள்ளிருக்கும் அஸ்தினபுரி எனும் கனவை கலைக்காது. மிக இயல்பாக அங்கு சென்று அங்குள்ள சிறு

இடங்களில் அடித்துப்புரண்டு தங்களை செருகிக்கொண்டு தங்கள் வாழ்க்கைக்கான வழிகளைக் கண்டடைந்து பிளவுகளில் வேரோடி இலை விரித்தெழும் ஆலமரம்போல அந்நகரில் தங்களை நிறுவிக்கொள்ள ஒவ்வொருவரும் முயல்வார்கள்.”

“ஐயம் தேவையில்லை. அந்நகரைக் கண்டு விழிநீர்விட்டு நெஞ்சறைந்து எவரும் அழப்போவதில்லை. எவரும் இது அல்ல நான் தேடி வந்த நகர் என்று அங்கிருந்து திரும்பிப் போகப்போவதும் இல்லை” என்றான் காமன். அதுவும் உண்மையென்றே அவனுக்கு தோன்றியது. அவன் தன்னைச் சூழ்ந்து அலைகொண்டு அங்கே சென்றுகொண்டிருந்த மக்களை பார்த்தான். அவர்கள் இதற்கு முன் இத்தனை பெருங்கனவுகளை கண்டிருக்கமாட்டார்களா என்ன? ஒவ்வொரு முறை வயலில் விதைக்கும்போதும் கூடவே பெருங்கனவுகளை விதைப்பதுதான் வேளாண்குடியின் வழி என்பார்கள். நூறு முறை அவர்களின் வயல்கள் கருகியிருக்கும். மறுமுறை விதைக்கையில் விதையுடன் கனவையும் சேர்த்து அள்ள கை குவியாமல் இருப்பதில்லை.

இதோ இந்தப் பெண்மணி தன் இளமையில் கண்ட கணவனைத்தான் அடைந்திருக்கிறாளா? இவ்விளைஞன் தான் எண்ணிய இல்லத்தைத்தான் அமைத்திருக்கிறானா? கனவுகளை மிக ஆழத்தில் நுரை என வளரவிட்டு, அதில் ஓர் உலகை அமைத்து, அங்கு சென்று இளைப்பாறக் கற்றிருக்கிறார்கள் மனிதர்கள். சிறுகால் வைத்து மண்ணில் இரைதேடும் பறவைகள் நொடிப்போசைக்கும் அஞ்சி சிறகடித்தெழுந்து தங்கள் மரங்களுக்குத் திரும்பிவிடுவதுபோல் கனவுகளை நாடுகிறார்கள்.

ஆனால் அவனால் அஸ்தினபுரியை தன் உள்ளம் எளிதாக எதிர்கொள்ளும் என்று எண்ணிக்கொள்ள இயலவில்லை. மிகத் தெளிவாகவே அஸ்தினபுரியின் மெய்யான வடிவை அவன் தன்னுள் வகுத்துக்கொண்டிருந்தான். அதை கூறவும் சூதர்கள் இருந்தனர். இளிவரல் சூதர்களிடம் எந்த மிகையும் இருக்கவில்லை. இசைப்பாடல்களும் பரணிகளும் பாடுபவர்கள் பாடிப் பாடிப் பெருக்கி, உணர்வுச்சங்களில், கனவின் ஒளியில் நிறுத்திவிட்ட ஒன்றை மறுகணமே திருப்பி களியாட்டெ‌ன, பொருளின்மையென, இளிவரலென, இழிவென மாற்றிக்காட்டிவிட்டார்கள்.

உண்மையில் அங்கிருந்த அனைவருக்கும் அதுவும் தேவைப்பட்டது. போர்க்களத்தில் அஸ்வத்தாமனின் இணையற்ற வீரத்தைக் கேட்டு உளம் நெகிழ்ந்து விழிநீர் சிந்தும் ஒருவன் அன்று மாலை ஓர் இளிவரல் கவிஞன் அஸ்வத்தாமனின் உடலில் பத்து துளைகள் உள்ளன, ஐந்தவித்து பத்தை மூடி தவம்செய்கிறான் என்று பகடி உரைக்கையில் வெடித்து நகைத்தனர். அப்பகடியினூடாக நெடுந்தொலைவு சென்று இளைப்பாறி மீண்டு அக்கனவுகளுக்கு வந்தனர். அவன் அப்பகடிகளையும் அஞ்சினான். அக்கனவுகளிலிருந்தது அவர்களின் எளிமையும் இயலாமையும் என்றால் அப்பகடியில் கசப்புடன் காழ்ப்புடன் வெளிப்பட்டது அவ்வெளிமையும் இயலாமையும்தான்.

எளியோராக இருக்கையில் மட்டுமே திகழும் கசப்பு அது. பெரியவை, உயர்ந்தவை, அரியவை எவையும் தங்களுக்குரியவை அல்ல என்று தங்களைத் தாங்களே முடிவெடுத்துக்கொண்டவர்களின் கருவியே பகடி என்பது. பகடியினூடாக துயரங்களை கடந்து செல்கிறார்கள்.

சிறுமைகளை கடந்து செல்கிறார்கள். பகடியினூடாக கடந்து செல்ல முடியாத ஒன்றே ஒன்றுதான் உண்டு, கழிவிரக்கம். கழிவிரக்கம் இல்லாத பகடியாளர்கள் எவரும் புவியில் இருக்க இயலுமா என்ன?

அஸ்தினபுரியின் காவல்மேடையில் நின்றிருந்த பெண்டிர் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் பெருங்கூட்டத்தைக் கண்டு சலிப்புற்றிருந்தார்கள். அவர்களை எப்படி கையாள்வதென்று பயின்றும் இருந்தார்கள். அஸ்தினபுரிக்குள் செல்ல வேண்டியவர்களை அவர்கள் தெரிவு செய்து உள்ளே அனுப்பினார்கள். ஒவ்வொரு நாளும் எத்தனை பேர் உள்ளே செல்லவேண்டுமென்பதை முன்னரே கணித்து அவர்களுக்கு ஆணை அனுப்பப்பட்டிருந்தது. உள்ளே செல்பவர்களை எண்ணி அவ்வெண்ணிக்கையை ஓலைகளில் பொறித்து ஒவ்வொரு காவல்மாடத்திலிருந்தும் அஸ்தினபுரிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள் என்று தெரிந்தது.

மூன்று நாழிகைகளுக்கு ஒருமுறை காவல்மாடத்திலிருந்து புறாக்கள் எழுந்து பறப்பதை அவன் கண்டான். அங்கு வரும் அனைவருமே அஸ்தினபுரிக்குள் செலுத்தப்பட்டனர். பின்னர் ஓரிரு நாட்களுக்குப் பின்னர் அங்கிருந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்களை நோக்கி நடத்தப்பட்டனர். செல்லும் அனைவருக்கும் நிலமும் பரிசும் கிடைக்கும் என்பது அதற்குள் அங்கு அனைவருக்கும் பேச்சாக வந்துவிட்டிருந்தது. அஸ்தினபுரியின் புரவிகள் சென்ற திசை அனைத்துமே அஸ்தினபுரி நாடென்பதனால் உள்ளே வந்து பெய்துகொண்டிருந்த மக்கள்திரள் அனைத்தும் சென்று அடங்கிய பிறகும் மேலும் மேலுமென அஸ்தினபுரி திறந்திருந்தது.

உள்ளே சென்றுகொண்டிருந்த திரளைப் பார்த்தபடி அவன் மரத்தடியில் தலைக்கு கை கொடுத்து அமர்ந்திருந்தான். அவனுடன் வந்தவர்கள் முதல் நாளே உள்ளே சென்றுவிட்டார்கள். “நீங்கள் வரவில்லையா, தென்னகத்தாரே?” என்று முதியவராகிய ஊஷ்மளன் கேட்டார். “செல்லுக! நான் இன்னும் சற்று பிந்தும்” என்றான். “ஏன்?” என்றார் ஊஷ்மளன். “நான் இன்னும் முடிவு எடுக்கவில்லை” என்றான். “என்ன முடிவு?” என்றார் ஊஷ்மளன். அவன் ஒன்றும் சொல்லவில்லை. “நகருக்குள் செல்லவா வேண்டாமா என்ற முடிவா?” என்று ஊஷ்மளன் நகைத்தார். ஆமென்று அவன் தலையசைத்துச் சொன்னதும் திகைத்து பின் மீண்டும் நகைத்து “பொய்!” என்றார்.

“மெய்யாகவே” என்றான் ஆதன். “மெய்யாகவே அந்த முடிவை எடுத்துவிடாதீர்கள். இங்கிருந்து ஒரு வெறியில் கிளம்பி திரும்பச் சென்றுவிடவும் கூடும் நீங்கள். உங்கள் இயல்பு அது என்று இத்தனை காலம் உடன் வந்த எனக்கு தெரியும். ஆனால் அது நல்ல முடிவல்ல. பின்னர் அஸ்தினபுரியை மட்டுமே எண்ணிக்கொண்டிருப்பீர்கள். அஸ்தினபுரி பெருகி உங்களை சிறைப்படுத்திவிடும். அஸ்தினபுரியை உதறவேண்டுமெனில்கூட அதை நீங்கள் பார்த்தாக வேண்டும்” என்றார். “செல்க!” என்று ஆதன் சொன்னபோது அவனுக்கு சினம் எழுந்திருந்தது. அச்சினம் அது உண்மை என்பதனால் என்று உணர்ந்தான். அவர் சிரிப்புடன் திரும்பி அஸ்தினபுரி நோக்கி சென்றார்.

அதன்பின் ஒவ்வொரு நாளும் காலையில் அன்று கிளம்பி உள்ளே சென்றுவிடவேண்டியதுதான் என்றுதான் எழுந்தான். அதை ஒத்திப்போட்டு ஒத்திப்போட்டு அந்தியாக்கினான். மறுநாள் “ஆம், இன்று” என்று விழித்தெழுந்தான்.

அஸ்தினபுரிக்குச் செல்பவர்கள் மட்டுமே அங்கிருந்தார்கள். அங்கிருந்து திரும்பும் எவரும் அவ்வழியே வரவில்லை. அவர்களுக்கு வேறு வழிகள் வகுக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து கிளம்பி அஸ்தினபுரியிலிருந்து வெளியேறுபவர்களை சென்று கண்டு அவர்களுடன் சற்று தொலைவு நடந்து மீண்டால் நன்று என்று அவனுக்குத் தோன்றியது. அவர்கள் அங்கே கண்டதென்ன, எதை பெற்றார்கள், அதற்கு முன் எதை இழந்தார்கள்?

பலமுறை அவன் அங்கிருந்து கிளம்பி அஸ்தினபுரியை விட்டு நீங்கும் வழிகளில் எதையோ ஒன்றை சென்றடையலாம் என்று எண்ணிக்கொண்டான். அதற்கும் அவனால் இயலவில்லை. அங்கேயே அவன் உள்ளம் தயங்கி தேங்கி நின்றது. ஏழாம் நாள் அவன் மிகத் தொலைவில் ஒரு முரசொலியை கேட்டான். அது அவனை திடுக்கிடச் செய்தது. அந்த முரசொலியின் பொருளென்ன என்று அறிவதற்குள்ளாகவே அவன் அதை ஒரு ஆணையாக எடுத்துக்கொண்டான். உள்ளே செல்வதற்கான நீண்ட நிரையில் சென்று நின்றான். அதன் பின்னரே அம்முரசொலியின் பொருள் என்ன என்று கேட்டான்.

“வடதிசைக்கு புரவியுடன் ஏகிய இளைய பாண்டவர் பீமன் திரும்பி வருகிறார்” என்றான் ஒருவன். “நான்கு வேள்விப்புரவிகள்! நான்கு புரவிகள் நான்கு திசைகளிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. அனைத்துப் புரவிகளும் நகர் திரும்பிய பின்னர் ராஜசூயம் நிகழும்.” அவன் சூழ நோக்கியபின் “வைதிகர்களும் பிறரும் கண்ணுக்குப் படவில்லையே?” என்று கேட்டான். “அவர்களுக்குரிய பாதை வேறு. இன்று அஸ்தினபுரி நூறு பாதைகளின் மைய முடிச்சு மட்டுமே” என்றான் ஒரு சூதன்.

அவன் காவல்முகப்பை அடைந்தபோது அங்கிருந்த முதிய பெண்மணி அவனிடம் “எங்கிருந்து வருகிறீர்?” என்றாள். “தெற்கே குமரிமுனையிலிருந்து” என்று அவன் சொன்னான். “குமரி!” என்றபின் “நெடுந்தொலைவு!” என்றாள். “ஆம், மலைகளுக்கும் நதிகளுக்கும் அப்பால்” என்றான். “எங்கு செல்கிறீர்?” என்றாள். “அஸ்தினபுரியின் வழியாக கடந்துசெல்கிறேன். செல்லுமிடம் அறியேன்” என்றான். அவள் புன்னகைத்து “முன்பும் குமரியிலிருந்து இங்கு வந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வழி சென்றவர்கள் பற்றிய பல கதைகள் இங்கு உள்ளன” என்றபின் “செல்க!” என்றாள். அவன் தலைவணங்கி உள்ளே செல்லும் குழுவுடன் இணைந்துகொண்டான்.

# களிற்றியானை நிரை - 9

### பகுதி ஒன்று : ஆயிரம் காலடிச்சுவடுகள் – 9

கட்டற்றுப் பெருகி சாலையை நிறைத்துச் சென்றுகொண்டிருந்த மக்கள்திரள் சீப்பால் வகுந்ததுபோல எட்டு நிரைகளாக மாறி அஸ்தினபுரியின் கிழக்குக் கோட்டைமுகப்பு நோக்கி சென்றது. வலது ஓரம் எருதுகள் இழுத்த வண்டிகள். அதையொட்டி பொதியேற்றிய அத்திரிகளும் கழுதைகளும் அடங்கிய மக்கள்திரள். இடதுஎல்லை புரவிகளுக்குரியது. பிற நிரைகள் நடந்துசெல்பவர்களுக்குரியவை. நிரைகளின் நடுவே இரு வடங்கள் இணைசேர்த்து நீட்டிக் கட்டப்பட்டிருந்தன. அரசத்தேர்கள் செல்வதென்றால் அந்த இரு வடங்களையும்

இழுத்து விலக்கி இடைவெளி உருவாக்கினர். நிரைபிளந்து உருவான பாதையில் தேர்கள் சகட ஓசையுடன் பட்டுத்திரைகள் நலுங்க, கொடிகள் துவள கடந்துசென்றன. அவற்றின் முன்னால் சென்ற கொம்பூதிகள் உரக்க ஓசையெழுப்பி செல்பவர்களை அறிவித்தனர்.

எட்டு நிரைகளும் அஸ்தினபுரி அஸ்தினபுரி என்று அலைபாய்ந்து கொப்பளித்துக்கொண்டிருந்தன. ஒவ்வொருவரும் பிறரிடம் எதையேனும் சொல்ல விழைந்தார்கள், ஒருவரை ஒருவர் நோக்கி கூச்சலிட்டார்கள். ஏனென்றறியாமல் வெற்று வியப்பொலிகளையும் களியாட்டொலிகளையும் எழுப்பினர். கொம்போசையுடன் எண்நிரை பிளந்து வழியமைய ஒரு சிறிய தேர் ஊர்ந்து சென்று விசைகொண்டது. அதன் கொம்பூதி அறிவித்தது என்ன என்று ஆதனுக்கு புரியவில்லை. ஆனால் படைவீரர்கள் பணிந்து வழிவிடுவதைக் கண்டான். “யார் அது?” என்று தன் அருகே நின்றிருந்த பாணனிடம் கேட்டான்.

“அரசகுடியினர்” என்று பாணன் சொன்னான். “அது தெரிகிறது, எக்குலத்தார்?” என்று அவன் கேட்டான். “நானறிந்த கொடி அல்ல” என்று பாணன் சொல்ல அவனுக்கு அப்பால் நடந்துகொண்டிருந்த முதியவர் “அது சிபிநாட்டுக் கொடி... அங்கிருந்து வந்திருக்கிறார்கள்” என்றார். “அங்கிருந்தா? அது பெரும்பாலைகளுக்கு அப்பாலுள்ள நிலமல்லவா?” என்றான் முன்னால் சென்றுகொண்டிருந்த வணிகன். “நெடுந்தொலைவிலிருந்தெல்லாம் வந்துகொண்டிருக்கிறார்கள். அந்தணர்கள்கூட வருகிறார்கள். நான் நேற்று பேசிய ஓர் அந்தணர்குழு காம்போஜத்தில் இருந்து நடந்தே வந்தது. அவர்கள் ஊர்திகளில் ஏறா நோன்பு கொண்டவர்கள்.”

“நீரால் சுமக்கப்படும் படகுகளில் மட்டுமே அவர்கள் ஏறமுடியும். உயிர்கள் மேல் அவர்கள் ஏறலாகாது” என்றார் முதியவர் ஒருவர். “ஆம், ஆனால் அவர்களிடம் அதற்கு பணமில்லை” என்றான் வணிகன். பாணன் “இங்கே எதற்காக இப்படி பெருகி வருகிறார்கள்?” என்றான். முதியவர் “எண்ணிப்பார், அஸ்தினபுரியின் அரசகுடியினரில் எஞ்சியிருப்பவர் எவர்? கௌரவர் நூற்றுவரும் அவர்களின் மைந்தரும் களம்பட்டனர். பாண்டவ மைந்தரிலும் எவருமில்லை. அரசகுருதியினர் அனைவருமே களம்சென்று உயிர்விட்டிருப்பார்கள். ஆனால் நகர் என்றால் அரசகுடியினர் தேவை. அவர்களின் சொல்லுக்கே மறுக்கப்படாத விசை உண்டு. அவர்கள் இங்கே நூற்றுக்கணக்கில் தேவைப்படுகிறார்கள்…” என்றார். அவர் குரல் தழைந்தது. “ஆனால் ஷத்ரியநாடுகள் எங்கும் அரசகுடியினர் இல்லாமலாகிவிட்டிருக்கிறார்கள். பரசுராமரின் படையெடுப்புக்குப் பின் ஷத்ரியகுடி முற்றழிந்தது இப்போரில்தான் என்கிறார்கள்.” மேலும் குரல் தழைய “ஆகவேதான் சிபிநாட்டிலிருந்தும் மத்ரநாட்டிலிருந்தும் மலைக்குடியினர் அரசகுடியினர் என்று சொல்லி வந்து நகரில் நிறைந்துகொண்டிருக்கிறார்கள்” என்றார்.

“அவர்கள் அரசகுடியினர் அல்லவா?” என்று பாணன் கேட்டான். “நீ தென்னகப் பாணன். உனக்கு நான் சொல்வது புரியாது” என்றார் முதியவர். இன்னொருவர் “அவர்கள் தங்களின் நிலத்தில் அரசகுடியினர். பாரதவர்ஷத்திற்கு அல்ல” என்றார். ஆதனுக்கு அது புரியவில்லை. அவன் “அப்படியென்றால்?” என்றான். “எண்ணுக, அசுரர், அரக்கர், நிஷாதர், கிராதர், யவனர் என எல்லா குலங்களிலும் அவர்களுக்குரிய அரசர்கள் உண்டு. அவர்கள் தங்களுக்குரிய நிலத்தை வென்று அங்கே

அரசமைத்துக்கொண்டவர்கள். முடிசூடி கோலேந்தி அரியணை அமர்ந்து அப்பகுதியை ஆள்பவர்கள். ஆனால் அவர்கள் ஷத்ரியர்கள் அல்ல. பாரதவர்ஷத்தின் அரசகுடியினர் ஷத்ரியர்கள் மட்டுமே.”

ஆதன் “வெல்பவர்கள், ஆள்பவர்கள் அல்லவா ஷத்ரியர்கள்?” என்றான். “அல்ல” என்றார் முதியவர். “வேதத்தின்பொருட்டு வெல்பவர்கள், வேதத்தை நிறுவி ஆள்பவர்கள் மட்டுமே ஷத்ரியர்கள்.” அவர்கள் அனைவருமே குழம்பி ஒருவரை ஒருவர் நோக்கினர். “ஆகவேதான் ஷத்ரியர்களால் அரக்கர்களும் அசுரர்களும் பிறரும் தொடர்ந்து வெல்லப்படுகிறார்கள். ஆழிவெண்சங்கு ஏந்திய அண்ணலே ரகுகுலத்தில் ராமன் எனப் பிறந்து அசுரர்களையும் அரக்கர்களையும் வென்று வேதத்தை நிலைநிறுத்தினான்.”

ஒரு முதியவர் மெல்லிய நடுக்குடன் இருவரை தோளால் உந்தி முன்வந்தார். “ஆம், நான் வந்ததே அதை பார்க்கத்தான். இங்கே நடப்பதென்ன? இதோ ஷத்ரியர்கள் தங்களைத் தாங்களே கொன்று அழித்திருக்கிறார்கள். அந்த இடங்களில் மலைமக்களும் நிஷாதர்களும் கிராதர்களும் வந்து அரசகுடியென அமர்கிறார்கள். எஞ்சும் அரசகுடியினருக்கு வேறுவழியில்லை. அவர்களிடமிருந்து குருதிபெற்றாகவேண்டும். இனி இங்கே ஷத்ரியக்குருதி என்று ஒன்று இல்லை... ஆம்.” அவருக்கு மூச்சிரைத்தது. “குருதி செத்துவிட்டது. தூய குருதி என ஏதுமில்லை இங்கே.”

அவர் ஏதோ சொல்வதற்குள் இன்னொரு முதியவர் “ஷத்ரியர் அகன்ற நகரில் யாதவர் சென்று நிறைகிறார்கள். இன்று பாரதவர்ஷத்தில் வென்றுநின்றிருக்கும் குலம் யாதவர்களே. அவர்கள் தங்களை முதன்மை ஷத்ரியர் என

அறிவித்துக்கொள்கிறார்கள். எதிர்க்க இங்கே எவருமில்லை” என்றார். இன்னொருவர் “ஆம், இங்கே முடிசூடியிருப்பதே யாதவ அன்னையின் குருதிதானே?” என்றார். இன்னொருவர் “நான்கு புரவிகள் கிளம்பிச் சென்றிருக்கின்றன. நான்கு புரவிகள். இந்த யாதவக்குருதியினரால் செலுத்தப்படுகின்றன அவை. அவை சென்ற இடங்களிலெல்லாம் ஷத்ரியர் தலைவணங்குகிறார்கள். கப்பம் கொண்டுவந்து காலடியில் குவிக்கிறார்கள். அவர்களை எதிர்க்க இங்கே ஷத்ரியர்களிடம் வாளும் வில்லும் இல்லை. யாதவர்கள் பாரதவர்ஷத்தை உரிமைகொண்டாடுகிறார்கள் இன்று…” என்றார்.

அந்த உணர்ச்சிகள் ஆதனுக்கு விந்தையாக இருந்தன. அப்படியொரு எதிரெழுச்சி அங்கே இருக்கும் என்பதை அவன் எண்ணியதே இல்லை. அவன் அவர்களின் முகங்களை மாறிமாறி நோக்கினான். எத்தனை சீற்றம்! எத்தனை கண்ணீர்! அவர்கள் அனைவருமே முதியவர்கள். பெரும்பாலானவர்கள் வேளாண்குடியினர். அவர்கள் எதன்பொருட்டு அஸ்தினபுரிக்கு செல்கிறார்கள்? இதை கேட்கத்தான் என்று அவர்களே சொன்னாலும் அப்படி கேட்கும்பொருட்டு கிளம்புபவர்கள் அல்ல அவர்கள். வேளாண்குடியினர் ஒருபோதும் தனித்தனியாக எதிர்ப்பதில்லை. ஒட்டுமொத்த அலையாக எழுந்து அவ்வண்ணமே அடங்குவதே அவர்களின் இயல்பு. அவர்கள் நிலத்துடன் கட்டப்பட்டவர்கள். ஒருபோதும் புதியன நாடி எழும் உளம்திரளாதவர்கள். எத்தனை திறையிட்டாலும் எவ்வளவு சூறையாடினாலும் மீண்டும் அரசுக்கு அடிபணிபவர்கள் உழவர்களே.

அவர்கள் நிலம்நாடி அன்றி ஊரிலிருந்து கிளம்பியிருக்க முடியாது. ஆனால் வந்த வழியில் யாதவர்களின்

மேன்மையைக் கண்டு உளம் நைந்திருப்பார்கள். இந்தப் பாதையில் நகரை அணுக அணுக அந்த உணர்ச்சியை எதன்பொருட்டோ மிகையாக்கிக் கொள்கிறார்கள். ஏற்பவர்களுக்கு உருவாகும் தன்னிழிவினாலாக இருக்கலாம். தாங்கள் தாழ்ந்து இறங்கவில்லை என தங்களுக்குள் சொல்லிக்கொள்ள விழையலாம். யாதவர்கள் வென்றெழுவதை வேளாண்குடியினர் பல தலைமுறைகளாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். யாதவ நாடுகள் முன்னரே உருவாகிவிட்டன. யாதவ அரசுகள் புகழடைந்துவிட்டன. அவன் புன்னகையுடன் "ஆனால் இப்போது ஆழிமணிவண்ணனே யாதவர்குலத்தில் பிறந்துவிட்டதாக அல்லவா சொல்லப்படுகிறது?" என்றான்.

அவர்கள் அமைதியடைந்தனர். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். முகங்களில் எச்சரிக்கையும் இறுக்கமும் தோன்றியது. ஓர் இளைஞன் "ஆனால் அவரை யாதவர்கள் அரசர் என ஏற்றுக்கொள்ளவில்லை. போர்முடிந்து மூன்று மாதங்கள் கடந்தும் அவர் இங்கே அஸ்தினபுரியில்தான் இருக்கிறார். துவாரகைக்கு அவர் இங்கிருந்து படையுடன் செல்வார் என்று எதிர்பார்த்தார்கள். இதோ இதோ என்று பேச்சிருக்கிறது. கிளம்பவில்லை" என்றான். முதியவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. இன்னொரு இளைஞன் "தன் மைந்தருக்கு எதிராக அவர் படைகொண்டு செல்லவேண்டுமா என்ன?" என்றான். "ஆனால் வேறுவழியில்லை. அவர் தன் நகரை கைவிட்டால் அவருக்கு எங்கே இடம்?" என்றான் முதல் இளைஞன்.

முதியவர்கள் இளைய யாதவரைப் பற்றி பேச அஞ்சுவதை அவன் கண்டான். இளைஞன் "அவர் ஏதோ திட்டம்

வைத்திருப்பார். அவர் காத்திருக்கிறார். இப்போது அஸ்தினபுரியின் நான்கு மாவீரர்களும் நான்கு திசைகளையும் வென்று வந்துகொண்டிருக்கிறார்கள். யுதிஷ்டிரன் இங்கே மும்முடிசூடி சக்ரவர்த்தியாக அமர்ந்த பின்னர் துவாரகையால் எதிர்த்து நிற்கமுடியாது…” என்றான். முதல் இளைஞன் “ஆனால் அவர்களையும் சிலர் ஆதரிக்கக்கூடும்” என்றான். “வாய்ப்பே இல்லை. அவர்கள் யாதவர்கள். எதிர்த்துப் படைகொண்டு செல்வது ஷத்ரியர்களான அஸ்தினபுரியினர் என்றால் எவரும் அங்கே சென்று சேரமாட்டார்கள். எப்படியாயினும் இன்னும் ஒரு போர் காத்திருக்கிறது.”

“இதையெல்லாம் நாம் பேசுவதில் பொருளில்லை” என்று முதியவர் சொன்னார். “இவற்றை நம்மால் கணிக்கவே முடியாது. நாம் பேசுவதெல்லாம் நமது கற்பனைகளையும் ஆற்றாமைகளையும்தான்.” இளைஞர்கள் அமைதியடைந்தார்கள். “இங்கே நிகழவிருக்கும் மும்முடிசூடுதல் ஷத்ரியர்களுக்குரியதல்ல” என்று இன்னொரு முதியவர் சொன்னார். “இது வேதம் நிறுவப்படுவதற்கான வேள்வி அல்ல. இந்த ராஜசூய வேள்வியை அந்தணர்கள் இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. பாரதவர்ஷத்தின் தொன்மையான அந்தணகுலங்கள் எதிலும் இருந்து எவரும் இங்கே வேள்விக்கென வரவில்லை. ஆகவேதான் தொலைவிலிருந்து அறியாக் குலத்து அந்தணர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.”

“ஏனென்றால் இங்கே நிறுவப்படவிருப்பது மலைகள் உருவாவதற்கு முன்னரே, மொழிகள் நாவில் திரள்வதற்கு முன்னரே, மானுடசித்தம் நான் என உணர்வதற்கு முன்னரே எழுந்த நால்வேதம் அல்ல. இது துவாரகையின் யாதவன் உரைத்த ஐந்தாம் வேதம் என்கிறார்கள். வேதமுடிபு என அதை

அவர்கள் சொல்கிறார்கள். குருக்ஷேத்ரத்தில் நிகழ்ந்த போரில் அது வென்று இந்நிலத்தில் நிறுவப்பட்டுவிட்டது என்று அறைகூவுகிறார்கள்.” எவரும் அதை எதிர்த்து எதுவும் சொல்லவில்லை. “வேள்விக்குதிரையின் மேல் அந்த ஐந்தாம்வேதத்தின் அடையாளமாக ஒரு தர்ப்பைச்சுருள் முடிச்சிட்டு வைக்கப்பட்டுள்ளது. ஆரியவர்த்தம் முழுக்க ஷத்ரியர்கள் நிரைநிரை என வந்து வணங்கி தலைசூடுவது அதைத்தான். கப்பம் கட்டுவது அதற்குத்தான். நான்கு திசையும் எழுந்து வென்றுகொண்டிருப்பது அந்தப் புதிய வேதத்தின் சொல்லே” என்றார் முதியவர்.

“அந்த வேதத்தை அறிந்தவர் எவர்?” என்று ஆதன் கேட்டான். “எவருமில்லை. அவர் மட்டுமே அறிவார்” என்றார் ஒருவர். இளைஞன் “அது செருவென்றது மெய்” என்றான். “அதற்கு எதிராகவே ஷத்ரியர் வாளெடுத்தனர். அணியணியாகச் சென்று குருக்ஷேத்ரத்தில் உயிர்கொடுத்தனர். இங்கே தம்பியர் நூற்றுவர் சூழ அமர்ந்து கோலோச்சிய மாமன்னர் துரியோதனன் நால்வேத நெறியின்பொருட்டு நின்று பொருதியவர். அவருடைய துணைவர் அங்கநாட்டரசர் கர்ணன் அதன்பொருட்டே களம்பட்டார். பிதாமகர் பீஷ்மரும் ஆசிரியர் துரோணரும் வேதம் காக்கவே வில்லேந்தினர். அவர்கள் வீழவேண்டும் புதிய வேதம் எழவேண்டும் என்பது ஊழின் நெறி.”

“புதிய வேதம்” என்று ஒருவன் சொன்னான். “பழைய வேதமும் நாம் அறியாததுதான். தலைமுறை தலைமுறைகளாக அது நம்மை ஆண்டது. ஆளவிருப்பது புதிய வேதம். அது நம்மை எங்கு கொண்டுசெல்லும் என்றும் அறியோம். அதற்கு எப்படி நம்பி ஒப்புக்கொடுத்தோமோ அதைப் போலவே இதற்கும்

நம்மை ஒப்புக்கொடுப்பதொன்றே செய்யக்கூடுவது.” அவர்கள் அனைவரும் எண்ணிக்கொண்டிருந்ததாக அது இருந்தமையால் இயல்பாக அமைதியடைந்தனர். அவர்களின் காலடியோசைகள் கேட்டுக்கொண்டிருந்தன. காற்றில் மிக அப்பாலிருந்து மக்களின் ஓசைகள் வந்து பொழிந்தன.

ஆதன் “இதை அந்தணர் ஏற்பார்களா? முனிவர் ஒப்புவார்களா?” என்றான். முதியவர் “தெய்வங்கள் ஒப்பவேண்டும், பிறகெல்லாம் நிகழும்” என்றார். “தெய்வங்கள் எல்லா வேதங்களையும் ஒப்புகின்றன” என்று இன்னொரு முதியவர் சொன்னார். “அசுரவேதத்திற்கும் அரக்கவேதத்திற்கும் தெய்வங்கள் தோன்றி நற்சொல் அளித்தமையை கதைகள் சொல்கின்றன.” ஓர் இளைஞன் “இந்தப் புதிய வேதம் அசுர, நாக, அரக்க வேதங்கள் அனைத்திலிருந்தும் சொல்திரட்டி எழுந்தது என்கிறார்கள். ஆகவே அனைத்துக் குடிகளுக்கும் உரியது என்கிறார்கள்” என்றான்.

“எவர்?” என்று முதியவர் சீற்றத்துடன் கேட்டார். “எவர் சொல்வது அதை?” இளைஞன் மறுமொழி சொல்லவில்லை. “யாதவர், வேறு யார்?” என்றான் இன்னொருவன். “இனி பாரதவர்ஷத்தில் வேதத்தின்பொருட்டு போர் நிகழப்போவதில்லை. இனி இங்கே மானுடர் அனைவரும் ஒற்றைச்சொற்சரடால் கோக்கப்படுவார்கள் என்கிறார்கள் சூதர்கள்” என்றான். “யாதவர்களின் பொருள்பெற்று பேசிக்கொண்டிருக்கும் சூதர்கள்” என்றார் முதியவர். “ஆம், அதனாலென்ன? சூதர்கள் எவராயினும் எங்கேனும் பொருள்பெற்றுக்கொண்டிருப்பார்கள்.”

ஆதன் “மெய்யாகவே அஸ்தினபுரி எதிர்கொள்ளும் இடர் என்பது இந்த வேதத்தை அந்தணரும் முனிவரும்

ஏற்கவேண்டும் என்பதே” என்றான். “ஆகவேதான் இந்த ராஜசூயம் குறித்த செய்தி பரவவிடப்படுகிறது. இங்கே வருபவர்கள் தங்கள் பழைய வாழ்க்கையை உதறி எழுந்து அணைபவர்கள். மாற்றத்துக்கான உளப்பாங்கு கொண்டவர்கள். அவர்கள் புதிய வேதத்தை ஏற்பார்கள். பொருள் கொடுத்து ஏற்கவைக்கவும் முடியும். இத்தனை பெரிய மக்கள்பெருக்கு புதிய வேதத்தை ஏற்றுக்கொண்டதென்றால் எவராலும் அதை மறுக்க முடியாது. மறுத்தாலும் அம்மறுப்பு காட்டுக்குள் ஒலித்து அடங்கவேண்டியதுதான். இத்திரளே அனைத்தையும் மண்ணில் நிறுவிவிடும்” என்றான்.

முதியவர் “அவ்வண்ணம் அனைத்தையும் உதறிவிட்டுச் செல்ல நாங்கள் சித்தமாகப் போவதில்லை” என்றார். “நாங்கள் எங்களூரில் இருந்து கிளம்பியது நிலம்கொள்ளத்தான். ஆனால் அதன்பொருட்டு ஆயருக்கும் பாலைநிலத்து நாடோடிகளுக்கும் அடிபணிந்து வாழ எங்களால் இயலாது.” ஆதன் “எவரும் எவருக்கும் அடிபணியவேண்டியதில்லை” என்றான். “புதிய வேதம் எவரும் எவருக்கும் கீழல்ல என்கிறது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பனைத்தும் செய்தொழிலால் மட்டுமே என்கிறது.” இளைஞன் “நீர் அதை அறிவீரா? கற்றறிந்தீரா?” என்றான். “இல்லை, ஆனால் அதை என்னால் உணரமுடிகிறது” என்றான் ஆதன்.

அதன்பின் எவரும் எதுவும் சொல்லவில்லை. அவர்கள் அப்போது பேசியவை அவர்களின் உள்ளங்கள் அல்ல. அவர்களின் எண்ணங்களும் அல்ல. கோட்டைநோக்கி சென்றுகொண்டிருந்த அந்தத் தருணத்தின் கொந்தளிப்பை கடக்க விழைந்தனர். அந்த உணர்வுகளின் அயன்மையை, ஒவ்வாமையை அதனூடாக நிகர்செய்துகொண்டனர். பேசிப்பேசி

உணர்வுகளைப் பெருக்கி அவை பெருகியதுமே நேருக்குநேர் எனக் கண்டு அவை பொய்யென உணர்ந்து திரும்பிக்கொண்டனர். சொல்லவிந்ததும் ஒவ்வொருவரும் தனித்தவர்களானார்கள். தங்கள் அகத்தே ஒலித்த எண்ணங்களும் அவிய ஓசையில்லா பெருக்காக அகம் சென்றுகொண்டிருக்க எடையிலாதாகிக்கொண்டிருந்த உடல்களுடன் அவர்கள் நடந்தனர்.

ஆதனின் அருகே நடந்த ஓர் இளைஞன் தணிந்த குரலில் கேட்டான் “தென்னகத்தாரே, பழைய வேதத்திற்கும் இப்புதிய வேதத்திற்கும் நீர் காணும் வேறுபாடு என்ன?” அவன் திரும்பி நோக்கி “இரண்டையும் நான் கற்கவில்லை” என்றான். “நீர் உணர்வதென்ன? அதை சொல்க! நாம் என்றுமே அவற்றை கற்கப்போவதில்லை” என்றான். “பழைய வேதம் படைக்கலம் ஏந்தியது. இப்புதிய வேதம் அருள் மட்டுமே கொண்டது” என்றான் ஆதன்.

கோட்டையை அணுக அணுக அக்கூட்டத்திலிருந்த தவிப்பும் அலைத்திளைப்பும் அடங்கின. ஓசைகள் முற்றழிந்தன. காலடி ஓசைகளும், சகட ஓசைகளும் மட்டுமே கேட்கும் ஒரு உடற்பெருக்காக நகர் நோக்கி செல்லும் பாதையில் வழிந்தனர். ஒவ்வொருவரும் தங்களை முற்றிழந்தபோது அவர்கள் ஒருவரோடொருவர் முட்டித்ததும்பவில்லை. எங்கும் நிரை முடிச்சு விழவில்லை. தேனொழுக்கு என அதை ஆதன் எண்ணிக்கொண்டான். பெருந்திரள் மானுடரை கரைத்தழிப்பது. இன்மையென்று ஒருகணமும் பேருரு என மறுகணமும் அவர்களை எண்ணவைப்பது.

தொலைவில் அஸ்தினபுரியின் கோட்டைமுகப்பை ஆதன் பார்த்தான். கரிய யானைகள் மத்தகங்கள் முட்டி சேர்ந்து நிரையாக நிற்பது போலவே தோன்றியது. ஒவ்வொரு காவல் மாடமும் ஒரு மத்தகம். அம்பாரியில் விற்களும் வேல்களும் ஏந்திய வீரர்கள் அமர்ந்திருந்தனர். இருபுறமும் கோட்டை மதில் அலையலையாக எழுந்தமைந்து சென்று எல்லைகளில் மடிந்து மறைந்தது. கோட்டையை ஒட்டி அமைந்திருந்த குறுங்காடுகளிலிருந்து பறவைகள் எழுந்து கோட்டைமேல் பறந்து அப்பால் சென்றன. அவர்கள் தள்ளாடி நடந்தமையால் கோட்டை மெல்ல மிதந்து அசைவதுபோல, மாபெரும் மரக்கலம்போல தோன்றியது. அதன் உப்பரிகைகளில் எல்லாம் கூரிய படைக்கலங்கள் பின்காலை வெயிலொளியில் மின்னிக்கொண்டிருந்தன. கொடிகள் காற்றில் எழுந்து பறந்து தொய்ந்து மீண்டும் உதறிக்கொண்டன.

அவன் தான் பார்த்த கோட்டைகளை எண்ணிக்கொண்டான். அந்தப் பயணத்தில் அவன் நூற்றுக்கு மேற்பட்ட கோட்டைகளை பார்த்தான். முதன்முதலாகப் பார்த்தது நெல்வேலிக் கோட்டை. அது தொலைவிலிருந்து நோக்கியபோது கரிய பாறைவரிசை என்றே தோன்றியது. அதற்குள் நுழையும்போது மறுபக்கம் மீண்டுமொரு வெளி இருக்கும் என்றே எண்ணினான். உள்ளே சென்ற பின்னர்தான் கோட்டை அவ்வூரைச் சூழ்ந்திருப்பதை உணர்ந்தான். பெரிய கலம் ஒன்றுக்குள் வாழ்வதுபோல என்று தோன்றியது. அரக்கப் பேருரு ஒன்றின் கைகளின் அணைப்புக்குள் வாழ்வதுபோல. அவனுக்கு அது அச்சத்தையும் திணறலையும் உருவாக்கியது. அவன் அக்கோட்டைக்குள் அந்தியுறங்கவில்லை.

அதன்பின் அவன் அத்தனை கோட்டைகளையும் தவிர்த்தே வந்தான். இரவில் கோட்டைக்கு வெளியே வந்து துயில்கொண்டான். மதுரைக்கோட்டை மலையடுக்குகள்போல் ஒன்றன்மேல் ஒன்றென எழுந்து வான்தொட பெருகியிருந்தது. புகாரின் கோட்டைக்கு அப்பால் கடல் பெருகி வந்து அறைந்து நுரை சிதறிக்கொண்டிருந்தது. காஞ்சியின் கோட்டைக்குச் சுற்றும் மேலும் மேலுமென ஏழு கோட்டைகள் இருந்தன. விஜயபுரியின் கோட்டை மலையடிவாரத்தில் மலையின் ஒரு சிறுபகுதி என தோன்றியது.

அவன் அத்தனை கோட்டைகளிலிருந்தும் அஸ்தினபுரியை வேறுபடுத்த முயன்றுகொண்டே இருந்தான். அது பிறிதொன்று, முற்றிலும் இன்னொரு வகையானது என மீளமீள சொல்லிக்கொண்டான். ஆனால் அஸ்தினபுரி அவன் கண்ட அத்தனை கோட்டைகளையும் போலத்தான் இருந்தது. அதை பலமுறை முன்னரே கண்டுவிட்டான் என்றே உணர்ந்தான். உள்ளே சென்றால் அதன் அனைத்து இடங்களும் அவன் ஏற்கெனவே சென்றமைந்ததாகவே இருக்கும். ஆனால் அது அவ்வண்ணம் இருப்பது அவனுக்கு நிறைவளித்தது. அவன் அதை நோக்கியதுமே உள்ளே சென்றுவிட்டான். கணம் கணம் என பல வாழ்க்கைகளை அதற்குள் முடித்துவிட்டான்.

அவன் முதலில் தன் உள்ளம் சொல்லின்றி, அசைவின்றி இருப்பதைப்போல் உணர்ந்தான். பின்னர் தன்னிடம் இருக்கும் ஆழ்ந்த அமைதியை எண்ணி தானே வியந்தான். அங்கிருக்கும் அனைவரும் ஆலய முகப்பிற்குச் சென்று நிற்கும் பக்தர்கள்போல தோன்றினார்கள். சிலர் விழி விரித்து வாய் திறந்து நோக்க, பலர் உளம் கசிந்து அழுதனர். அவர்கள் அதைக் கண்டு ஏமாற்றம் அடையவில்லை. அது கருவறைக்குள்

நின்றிருக்கும் தெய்வம். கருவறைத்தெய்வங்கள் சிறிதாயினும் ஏமாற்றம் அளிப்பதில்லை. தெய்வத்தை வழிபடுபவர்கள்போல அவர்கள் நெஞ்சை கையுடன் அழுத்தி தள்ளாடும் கால்களுடன் கோட்டையை நோக்கி சென்றனர். அருகே ஒரு பெண் விம்மியழுதுகொண்டிருந்தாள். அவளை அழச்செய்வது எது? கேட்டறிந்த கதைகளா? அன்றி அதன் பேரமைப்பா? அவன் அதை எப்போதும் கண்டிருந்தான். எளிய மக்கள், துயர்மிக்கவர்கள், எழுந்து ஓங்கிய எதன் முன்னரும் உளம்சோர்ந்து அழுதுவிடுகிறார்கள். அது கொலைவெறிகொண்டு எழும் கொடுந்தெய்வமே ஆனாலும். தங்கள் எளிமையாலேயே அவர்கள் வல்லமை முன் அடைக்கலம் தேடுபவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

அணுகுந்தோறும் கோட்டை பெரிதாகி வந்தது. அது ஒரு முதிய அன்னைபோல் தோன்றியது. மானுட அன்னையல்ல, பிடியானை. பெற்றுப் பெருக்கி உடல் நைந்து சோர்ந்து நிலம் படிய விழுந்து துதிக்கை செவியசைத்துச் கிடக்கும் மெலிந்த பேருரு. ஏன் இந்த கோட்டை இத்தனை அமைதியை தனக்குள் ஏற்படுத்துகிறது என்று அவன் கேட்டுக்கொண்டான். பதற்றம் இல்லை. அக்கோட்டைக்கு அப்பால் என்ன உள்ளது என்னும் ஆவல்கூட இல்லை. முன்பு அந்நகர் நோக்கி வந்த அத்தனை சூதர்களும் அது முதற்கணத்தில் எழுப்பும் அச்சத்தைப் பற்றி கூறியிருந்தார்கள். புதர் மறைவிலிருந்து கூர்ந்து நோக்கும் களிற்றின் பார்வையை அதில் முன் உணர முடியுமென்று சூதர்கள் பாடினார்கள். அதன் செவியசைவை, மூச்சொலியை பின்னர் கேட்போம். ஆனால் அவன் உள்ளம் இனிய சோர்வுபோல் அமைதிகொண்டிருந்தது.

இப்போது எது மாறியிருக்கிறது? இன்று அது எதை இழந்திருக்கிறது? அல்லது எதை அடைந்திருக்கிறது? அவன் அதை எவரிடம் கேட்பதென்று எண்ணி பின்னர் தவிர்த்தான். கோட்டையின் முகப்பு எழுந்து பெருகி கரிய பரப்பாகி இருளாகி அருகே அணைந்து வந்தது. எட்டு நிரைகளாக வந்தவர்கள் காவலர்களின் வேல்களால் பகுக்கப்பட்டு காவல்வீரர்களால் உசாவப்பட்டு, உளம் கணிக்கப்பட்டு, தோளில் கடுக்காய்மையின் அழியாக் கறையால் முத்திரையிடப்பட்டு உள்ளே அனுப்பப்பட்டனர்.

அந்த முத்திரையைப் பெறுவதற்கு முன் ஒவ்வொருவரும் இறுக்கமாயினர். அது பதியும்போது விதிர்த்தனர். பெற்றபின் இயல்படைந்து உடல் தளர மறுபக்கம் சென்றனர். தங்கள் உற்றாருக்காக அங்கே காத்திருக்கையில் விடுதலை பெற்ற முகத்துடன் புன்னகைகொண்டிருந்தனர். அந்த முத்திரையை பலமுறை நோக்கினர். அது அக்கோட்டையின் தொடுகை. அது அவர்களை ஏற்றுக்கொண்டுவிட்டிருக்கிறது. அவன் அந்தப் பெண்ணை பார்த்தான். அவள் அப்போதும் அழுதுகொண்டுதான் இருந்தாள். ஆனால் முகம் சிரிப்பது போலிருந்தது. எவரையோ கைவீசி அழைத்தாள். அவளை சிலர் திரும்பிப்பார்த்ததும் முகத்தின்மேல் ஆடையை இழுத்துப்போட்டுக்கொண்டு நாணினாள்.

“முற்றிலும் மாறிவிட்டிருக்கிறது அஸ்தினபுரியின் கோட்டை” என்றொருவன் சொன்னான். அவன் வணிகன் என்பதை ஆதன் உணர்ந்தான். திரும்பி அவனை பார்த்தான். பெருந்திரள் என்று ஆகும்போது மானுடர் தனித்தனியாக எண்ணம் ஓட்ட இயலாது போலும். அங்கிருக்கும் அனைவரும் அதைத்தான் எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் பார்த்ததும் வணிகன் புன்னகைத்து “முன்பு கோட்டைக்கு அப்பால் கைவிடுபடைகள் கொலையம்புகளைத் தாங்கி நாணும் வில்லும் இறுகிச்செறிந்து காத்து நின்றிருந்தன. இது தாக்கும் பொருட்டு கொம்பு தாழ்த்தி தலை தாழ்த்தி நின்றிருக்கும் யானை என்று எனக்கு பலமுறை தோன்றியிருக்கிறது. படைக்கலம் ஏந்திய கோட்டை என்று இதை என் முன்னோடிகள் சொல்லியிருக்கிறார்கள். படமெடுத்த நாகம் என்றும், உகிர்கொண்ட யக்ஷி என்றும் சொல்வார்கள். இக்கோட்டைமுகப்பையே சினம்கொண்டு சொல்லுக்குத் திறந்த வாய் என்று ஒரு சூதன் பாடினான். இன்று அக்கைவிடுபடைகள் அங்கில்லை” என்றான்.

“ஏன்?” என்று ஆதன் கேட்டான். “அவையனைத்தும் செலுத்தப்பட்டுவிட்டன. இக்கோட்டை தான் காத்திருந்த குருதிபலியை அடைந்துவிட்டது. ஆகவேதான் அம்பு எழுந்த வில்லென அஸ்தினபுரி தளர்ந்து நின்றிருக்கிறது.” ஆதன் மீண்டும் பார்த்தபோது அவனுக்கு அந்தக் கோட்டை ஏன் அந்த அமைதியை உருவாக்குகிறது என்று புரிந்தது. புன்னகையுடன் அவன் அக்கோட்டைவாயிலை நோக்கி சென்றான்.

# களிற்றியானை நிரை - 10

### பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 1



அஸ்தினபுரியின் கிழக்குக்கோட்டை முகப்பில் காவல்மாடத்தில் நின்றபடி சம்வகை கீழே மையச்சாலையில் கரை நிரப்பிப் பெருகி வந்து, முகமுற்றத்தை செறிய நிரப்பி, அதிலிருந்து கிளைத்தெழுந்து சிறு சுழி போலாகி,

கோட்டைவாயிலை அடைந்து, எட்டு புரிகளாகப் பிரிந்து உள்ளே நுழைந்து, நகர் முகப்பின் பெரிய முற்றத்தையும் அலைகொண்டு நிரப்பி அதிலிருந்து பிரியும் எட்டுச் சாலைகளையும் பற்றிக்கொண்டு வழிந்து நகருக்குள் நிறைந்துகொண்டிருந்த மக்களை பார்த்துக்கொண்டிருந்தாள். முற்றிலும் அறியாத மக்கள். முற்றிலும் அறியாத மொழி. அப்படி ஒரு பெருக்கு அங்கே நிகழக்கூடும் என அவள் எண்ணியிருக்கவே இல்லை. அவளால் அந்த முகங்களை தனித்து அடையாளம் காண முடியவில்லை.

போர் அறிவிக்கப்பட்ட நாள் முதலே அஸ்தினபுரியின் குடிகள் தொடர்ந்து நகரொழிந்து வெளியேறிச் சென்றுகொண்டிருந்தனர். போரின்போது படைகள் கிளம்பிச்செல்ல கூடவே மக்களில் பெரும்பகுதியினர் சென்றனர். போர் நிகழ்ந்த நாளில் வெளியேற்றம் குறைவாக இருந்தது. நகரம் கொந்தளித்து தன்னுள் தான் அலைகொண்டிருந்தது. போர்முடிவுச் செய்தி வந்தது முதல் மீண்டும் வெளியொழுக்கு தொடங்கியது. ஒவ்வொருநாளும் அது வலுத்தது. தெருக்களினூடாக மக்கள் திரள் பொக்கணங்களுடனும் குழந்தைகளுடனும் செல்லும் காட்சியே செல்க செல்க என்னும் அறைகூவலாக ஒவ்வொருவருக்கும் அமைந்தது. அதைக் கண்ட ஒவ்வொருவரும் செல்வதைப்பற்றி மட்டுமே எண்ணச்செய்தது.

ஒன்றை எண்ணத் தொடங்கினால் அதைச் சார்ந்த பார்வைகள் வலுப்பெறத் தொடங்குகின்றன. இத்தனை பேர் செல்கிறார்கள் என்றால் செல்வதே உகந்தது. செல்பவர்களுக்கு மேலும் சிறந்த வாழ்க்கை எங்கோ அமைகிறது. சென்றவர்கள் விடுபடுகிறார்கள். செல்லாதொழிதல் ஆற்றலின்மையை, உறவுகளின்மையை, உளஉறுதியின்மையை மட்டுமே

காட்டுகிறது. செல்பவர்களுக்கு அவர்களை இட்டுச்செல்லும் நல்ல தலைமை அமைந்துள்ளது. அவர்களின் தெய்வங்கள் வந்து அவர்களை வழிநடத்துகின்றன. செல்பவர்கள் சிறந்தவர்கள், இருப்பவர்கள் எவ்வகையிலோ சற்று குறைவுபட்டவர்கள். செல்பவர்கள் தங்கள் நெறிகளின்படி வாழும் உறுதிகொண்டவர்கள். தங்குபவர்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள்.

செல்பவர்களின் ஓசை நகரில் நிறைந்திருந்தது. கலத்தில் நீர் ஒழிய வெற்றிடம் வந்து நிறைவதுபோல அவர்கள் சென்றபின் நகரமெங்கும் வெறுமை மண்டியது. அந்த வெறுமை தங்கியவர்களைச் சூழ்ந்து அழுத்தியது. அவர்கள் கொண்டிருந்த துயர்களை பெருக்கியது. ஐயங்களை அழுத்தமாக்கியது. இந்நகர் முற்றாகக் கைவிடப்படும். இனி இங்கே வணிகமும் தொழிலும் செழிக்க வாய்ப்பில்லை. கைவிடப்பட்ட நகர்கள் பலவற்றை பயணிகள் கண்டிருந்தனர். அவை இடிந்து சரிந்து சென்றகாலப் பெருமையை சாற்றும் நிகழ்கால அவலம் என நின்றிருக்கும். முட்செடிகள்போல சிற்றுயிர்கள்போல அங்கே மக்கள் திகழ்வார்கள். விழி செத்து உடல் வெளிறி அஞ்சும் பாவனை கொண்டவர்கள். புதியனவற்றை அஞ்சுபவர்கள். அயலாரை ஒழிபவர்கள். அறுகுளத்தில் சேறுடன் மடியும் மீன்களைப் போன்றவர்கள்.

அவ்வெறுமையில் ஒரு குரல் எழும். குலத்தலைவர்களில் ஒருவர் “எழுக, என் குடியே! நம் தெய்வத்தின் ஆணை வந்துள்ளது. நம் தொல்நிலம் தேடிச்செல்வோம்” என்று கூவுவார். காத்திருந்ததுபோல் அத்தனை பேரும் அவரை சூழ்ந்துகொள்வார்கள். இன்னொருவர் “எண்ணுக… நாம் செல்வது எங்கே? நிலைகொண்ட மண்ணை உதறிச்செல்பவர்கள்

அரசனின் கோல் அளிக்கும் காப்பை தவிர்த்துச் செல்கிறார்கள் என உணர்க! நம்மை காக்க இனி படைக்கலங்கள் இல்லை. கள்வரும் அரக்கரும் அசுரரும் நிஷாதரும் நிறைந்த விரிநிலத்தில் நாம் கைவிடப்பட்டு நின்றிருப்போம்” என்று கூவுவதை எவரும் செவிகொள்ளமாட்டார்கள். அன்னையரில் எவரேனும் “நம் மகளிரையும் குழவியரையும் எண்ணுக… நாய்நரிகள் கழுகுகாகங்கள் சூழ்ந்தது வெளிநிலம்” என்று கூறினால் “நாவை அடக்கு. நீ வேண்டுமென்றால் இங்கேயே தங்கிக்கொள்” என அதட்டி அமரச்செய்வார்கள். முதியோர் அஞ்சித் தயங்கியிருக்கையில் இளையவரில் ஒருவர் “கிளம்புவோம். ஒரு புதிய நிலத்தை கண்டடைவோம். என்னை நம்புபவர்கள் வருக!” என கச்சை முறுக்கி கிளம்பினாலும் குடி உடன் எழுந்தது.

அவர்கள் செல்வதை சம்வகை கோட்டை மேலிருந்து நோக்கிக்கொண்டிருந்தாள். நீர்க்கடன் செய்வதற்காகச் சென்றவர்கள் திரும்பவரவில்லை. அதன் பின்னர்தான் உடைமைகளுடன் செல்லும் பெருக்கு தொடங்கியது. “செல்பவர்கள் அஸ்தினபுரியின் செல்வத்துடன் அல்லவா செல்கிறார்கள்? அவர்களை தடுக்கலாமா?” என்று அவள் யுயுத்ஸுவிடம் கேட்டாள். “இல்லை, அது அவர்களின் செல்வம். கருவூலச்செல்வம் மட்டுமே அரசருக்கு உரிமை உடையது” என்று அவன் சொன்னான். “அவர்களின் செல்வத்தை பிடுங்கிவிட்டு செல்லவிடுவது எளிது. ஆனால் அவர்கள் நம் மீது பழிச்சொல் உரைத்து விலகிச்செல்வார்கள். செல்லும் நிலமெங்கும் அந்தப் பழியை பெருக்குவார்கள்.” சம்வகை “ஆனால் செல்பவர்கள் பெரும்பகுதியினர் நம்மை பழித்துரைத்த பின்னரே அகல்கிறார்கள்” என்றாள். யுயுத்ஸு

“விரைவிலேயே அவர்கள் நம் நிலத்தை எண்ணி கண்ணீர்விடுவார்கள்” என்றான்.

கோட்டைச்சுவர்மேல் காவல்பாதை வழியாக சுற்றிவருகையில் நகர் எந்த அளவுக்கு ஒழிகிறது என்பதையே அவள் உளம்கொண்டாள். போரில் அஸ்தினபுரியின் பெரும்படை முழுக்கவே அழிந்துவிட்டிருந்தது. ஏவலர் திரளிலும் பெரும்பகுதியினர் படைவீரர்களாகி களம்பட்டுவிட்டிருந்தனர். ஆகவே வீரர் கொட்டகைகளும் ஏவலர் இல்லநிரைகளும் முன்னரே ஒழிந்துவிட்டிருந்தன. புராணகங்கையின் உள்ளே ஒன்றிலிருந்து ஒன்றெனக் கிளைத்து காட்டின் விளிம்புவரைக்கும் பெருகியிருந்த காந்தாரக் குடியிருப்புகளில் ஒருவர்கூட எஞ்சியிருக்கவில்லை. அங்கே இல்லங்கள் ஏற்கெனவே பழுதடைந்து சரியதொடங்கிவிட்டிருந்தன. காடு கொடிகளாக கைநீட்டி அருகணைந்து இல்லங்களைப் பற்றியது. பின்னர் இறுக்கி நொறுக்கியது. செடிகள் முளைத்து புதர்களாகி வீடுகள்மேல் எழுந்தன. பறவைகளும் சிற்றுயிர்களும் குடியேறின. நாகங்களும் நரிகளும் வந்தன. பின்னர் சிறுத்தை உலவத் தொடங்கியது. வடக்குவாயிலின் எல்லைவரை புராணகங்கையின் செறிகாட்டின் விளிம்பு வந்தணைந்தது.

எப்போதும் மக்கள்ஓசைகள் நிறைந்திருந்த அங்காடிகள் அமைதியடைந்தன. சூதர் தெருக்களும் ஆயர் தெருக்களும் உழவர் தெருக்களும் நெரிசல் மிகுந்தவை. கோட்டை மேலிருந்து பார்க்கையில் அங்கே தேனீக்கூட்டின் ரீங்காரம் எப்போதும் எழுந்து கொண்டிருக்கும். அவை ஒழியத்தொடங்கி மெல்ல மெல்ல முற்றிலும் வெறுமை கொண்டன. கோட்டையின் சில வளைவுகளில் எப்போதும் நகரின் முழக்கம் விந்தையான ஒரு ரீங்காரமாக குவிந்து ஒலிக்கும்.

அங்கு நின்று அந்நகரை நோக்கும் வழக்கம் உண்டு. அந்த மூலைகள் அமைதியாயின. நீர் மடிந்த அருவியின் வெற்றுப்பாறைத் தடம்போல அவ்விடங்கள் தோன்றின. ஒருமுறை அவள் தெற்குக்கோட்டை காவல்மாடத்திலிருந்து நோக்குகையில் சூதர் தெருவில் ஒரு மானுட அசைவுகூட தென்படாததைக் கண்டு காவல்பெண்டிடம் “அங்கு என்ன நிகழ்கிறது? சூதர்கள் அனைவரும் எங்காவது சென்றிருக்கிறார்களா?” என்றாள்.

அவள் “அவர்கள் நகரை ஒழிந்து அயல்நிலங்களை நோக்கி சென்றுகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள்” என்றாள். “ஆம் அறிவேன், ஆனால் இந்தக் காலைநேரத்தில் ஒருவர்கூட இல்லாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது” என்றாள் சம்வகை. “ஒருவரும் எஞ்சாமல் ஆலயங்களையும் கைவிட்டுச் செல்கிறார்களா?” என வியந்துகொண்டாள். “தெய்வங்களை உடன்கொண்டு செல்கிறார்கள்” என்றாள் காவல்பெண்டு. அவள் நோக்கியபடி நடந்து மேடைக்கு வந்தாள். ஏவல்பெண்டை அனுப்பி “ஒற்றர்கள் சென்று சூதர் தெருவில் என்ன நிகழ்கிறது என்று பார்த்து வருக!” என்று ஆணையிட்டாள். அவள் தலைவணங்கி அகன்றதும் இன்னொரு ஏவற்பெண்டை அழைத்து “பன்னிரு ஒற்றர்கள் உடனடியாகக் கிளம்பி எந்தெந்த தெருக்களில் குடியினர் ஒழிந்து சென்றிருக்கிறார்கள் என்பதை பார்த்து வரவேண்டும். உடனே” என்றாள்.

மூன்று நாழிகை பொழுதில் ஒற்றர்கள் திரும்பி வந்து சூதர் தெரு முற்றாக ஒழிந்துவிட்டதென்றும், ஆயர் தெருவில் பாதி அளவே மக்கள் இருக்கிறார்கள் என்றும், உழவர்களும் கைக்கோளரும் மிகச் சிலரே எஞ்சியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். தங்கியவர்களும் கிளம்பிச்செல்லும்

உளநிலையில் இருக்கிறார்கள் என்றார்கள். ”அங்கே கிழப்பாணன் ஒருவனை கண்டேன். மக்கள் எங்கே என்றேன். கிளம்பிவிட்டார்கள். இருப்பவர்களும் கிளைநுனியில் சிறகு உலைய அமர்ந்திருக்கும் பறவைகள் என பொறுமையிழந்திருக்கிறார்கள் என்றான்” என்று கூறினான் ஒற்றன். உளவுப்பெண் ஒருத்தி “பெரும்பாலானவர்கள் முதியவர்களை என்ன செய்வதென்று தெரியாமையால்தான் நகரில் எஞ்சியிருக்கிறார்கள்” என்றாள். “பல குடியினர் முதியவர்களையும் நோயுற்றவர்களையும் அப்படியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். அவர்களின் தெய்வங்கள் அவ்வண்ணம் ஆணையிட்டிருக்கின்றன.” இன்னொருத்தி “பல இல்லங்களுக்குள் கைவிடப்பட்ட முதியவர்களின் ஓசைகளை கேட்டேன். பல இல்லங்களுக்குள் அவர்கள் ஏற்கெனவே இறந்து கெடுமணம் எழத்தொடங்கியிருக்கிறது” என்றாள்.

அச்செய்தியை ஒட்டி என்ன செய்வது என்று அவளுக்கு தெரியவில்லை. ஏற்கெனவே அச்செய்தி தொகுக்கப்பட்டு சுரேசருக்கும் யுயுத்ஸுவுக்கும் சென்றிருக்கும் என்று தெரிந்திருந்தது. ஆயினும் அதைப்பற்றி ஒருமுறை தானும் சுரேசரிடம் கூறிவிடவேண்டும் என்று அவள் எண்ணிக்கொண்டாள். அவர்கள் என்ன முடிவெடுக்கவிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு நகரை குடிகள் கைவிட்டால் அரசரோ அமைச்சரோ என்னதான் செய்ய முடியும்? “நகர்முழுக்க காவலர்கள் செல்லட்டும். இல்லங்களில் இறந்த உடல்கள் இருக்குமென்றால் கொண்டுசென்று தெற்குக்காட்டில் அவர்களின் குலமுறைப்படி இறுதி செய்க! கைவிடப்பட்ட முதியோரை திரட்டிக்கொண்டுசென்று ஓரிடத்தில் சேர்த்து வையுங்கள்.

அரண்மனையிலிருந்து அவர்களுக்குரிய உணவும் மருந்தும் வரட்டும்.”

நகரில் அத்தனை முதியவர்கள் உயிரிழந்து இருண்ட இல்லங்களுக்குள் மட்கிக்கொண்டிருப்பார்கள் என சம்வகை எண்ணியிருக்கவேயில்லை. அவர்களின் உடல்கள் மட்கிய கெடுமணம் தெருக்களில் நிறைந்திருந்தது. ஆனால் அஸ்தினபுரியெங்கும் பரவியிருந்த பொதுவான கெடுமணத்தில் அது இயல்பாக கலந்துவிட்டிருந்தது. புழுதியின், கெட்டுப்போன உணவுப்பொருட்களின், மட்கும் சருகுகளின் கெடுமணம். மானுடர் புழங்காமலாகும் எவ்விடத்திலும் அந்தக் கெடுமணம் சில நாட்களிலேயே உருவாகிவிடுகிறது. அது காற்றின் அடிச்சேற்றின் வாடை. “காலத்தின் வண்டலின் வாடை. அங்கே உயிரிழந்தவையும் அசைவற்றவையும் சென்று படிந்துவிடுகின்றன. காலமே உயிர். காலமின்மையே சாவு.” எங்கோ ஒரு சூதன் பாடிய வரி. அத்தகைய வரிகளை நினைவின் அடுக்குகள் மறப்பதே இல்லை.

தெற்குக்கோட்டை வாயில்மேல் நின்று சம்வகை உடல்கள் மூங்கில் பாடைகளில் தெற்குநோக்கி செல்வதை நோக்கிக்கொண்டிருந்தாள். கோட்டையின் பிற மூன்று வாயில்கள் வழியாகவும் மக்கள் வெளியேறிக்கொண்டிருந்தார்கள். இது உயிரற்றோர் வெளியேறுவதற்கான வழி. அவள் அருகே நின்ற காவல்பெண்டிடம் “இத்தனை உடல்கள் இங்கே கிடந்திருக்கின்றன!” என்றாள். “நகரின் பல தெருக்களில் எவருமே செல்லாமலாகிவிட்டிருக்கின்றனர். இன்று கோட்டையை ஒருமுறை சுற்றிவந்து காவல் காக்கக்கூட எவருமில்லை” என்றாள். சம்வகை வெறுமனே

தலையசைத்தாள். அவள் அதை உணர்ந்துகொண்டுதான் இருந்தாள். கோட்டையின் காவல்பெண்டுகளே குறைந்துகொண்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் சொல்லாமல் கிளம்பிச்சென்றனர்.

அஸ்தினபுரியின் கிழக்குக்கோட்டையை ஒட்டி படைவீரர்கள் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான கொட்டகைகள் ஒழிந்து கிடந்தன. நகர் முழுக்க சென்ற காவலர்படையினர் அங்கிருந்து முதியவர்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வந்து அக்கொட்டகைகளில் படுக்கவைத்தனர். அரண்மனை ஊட்டுபுரையிலிருந்து அவர்களுக்கு வண்டிகளில் உணவு வந்தது. உணவுபெறுபவர்கள் கூடிக்கூடி வரவே இன்னொரு கொட்டகையில் அவர்களுக்கான உணவைச் சமைக்க சம்வகை ஆணையிட்டாள். ஆனால் அதன்பின் அதுவரை தயங்கிக்கொண்டிருந்தவர்களும் முதியவர்களை கொண்டுவந்து அங்கே விட்டுவிட்டுச் செல்லத் தொடங்கினர். “செல்பவர்களை நாமே ஊக்குவிப்பதுபோல தோன்றுகிறது” என்றாள் காவல்பெண்டு. “செல்பவர்கள் செல்லட்டும்… அவர்கள் உள்ளத்தால் சென்றுவிட்டவர்கள்” என்றாள் சம்வகை. “அவர்கள் இந்நகரை கைவிடுவதற்கு முடிவெடுத்தபோதே இந்நகர் அவர்களை கைவிட்டுவிட்டது.”

“முன்பு சால்வனின் நகர் இவ்வாறு கைவிடப்பட்டது. அன்று கொற்றவை என அம்பையன்னை எழுந்து அவன் மேல் இட்ட தீச்சொல்லால் அவன் குடியே அழிந்தது. தெய்வப்பழியும் வேதப்பழியும் நீத்தார்பழியும் மூத்தார்பழியும் அந்தணர்பழியும் சான்றோர்பழியும் பெண்பழியும் இரவலர்பழியும் ஆபழியும் என பழிகள் ஒன்பது. பழி கொண்ட நாட்டில் மக்கள் வாழக்கூடாது என்பது நெறி” என்று முதிய காவல்பெண்டான சந்திரிகை

கோட்டைக் காவல்மேடையில் பந்த ஒளியில் அமர்ந்திருக்கையில் சொன்னாள். அவளைச் சூழ்ந்து காலோய்வு கொள்ளும் காவல்பெண்டுகள் அமர்ந்திருந்தனர். சுடரில் அவர்களின் முகங்கள் அலைபாய்ந்தன. தொலைவில் நகரிலிருந்து நரியின் ஊளை கேட்டது.

“இங்கு எந்தப் பழி கொள்ளப்பட்டுள்ளது?” என்று இருளுக்குள் எவரோ கேட்க அவள் திரும்பி நோக்கி சில கணங்கள் நிலைகொண்டபின் “அதை அறியாதோர் எவர் இங்கே? இது வேதப்பழிகொண்ட நாடு. ஆகவே அந்தணர்பழி வந்தமைந்துள்ளது. நீத்தோருக்கும் மூத்தோருக்கும் சான்றோருக்கும் பெரும்பழி இழைக்கப்பட்டுள்ளது” என்றாள். எவரும் ஒன்றும் சொல்லவில்லை. சம்வகை சீற்றத்துடன் “எவர் சொன்னது பழி சூழ்ந்துள்ளது என்று? போருக்குரிய நெறிகள் வேறு. அங்கே நன்றுதீதை முடிவெடுப்பவை களத்திலெழும் தெய்வங்கள்” என்றாள். எவரும் ஒன்றும் சொல்லாமலிருக்க அவள் மேலும் சீற்றத்துடன் “ஆம், பழி கொண்டுள்ளோம். எனில் இசைவிலாதோர் கிளம்பிச்செல்லலாம். இசைவுள்ளோர் தேடிவருவார்கள்” என்று கூவினாள்.

சந்திரிகை “நான் எவர் மேலும் பழி சொல்லவில்லை. என் மைந்தர் எழுவர் களத்தில் மடிந்தனர். இருந்தும் வேல்கொண்டு இந்த நகரைக் காக்க இங்கே நின்றிருக்கிறேன்” என்றாள். “ஏனென்றால் இது மாமன்னர் ஹஸ்தியின் நகர். இங்கே ஒருகாலத்தில் பேரறம் முப்பூ விளைந்துள்ளது. என் மூத்தார் வாழ்ந்த மண் இது. இங்கே மீண்டும் அறம் எழும் என நான் நினைக்கிறேன்” என்றாள். “இன்று அறம் என்னவாயிற்று? அறத்திற்கு என்ன குறை இங்கே?” என்று அவள் கூவ

முதுமகள் “நான் எவரிடமும் சொல்லாட விழையவில்லை, அறம் இங்கே விளையும் என்றால் இந்நகர் வாழும். இல்லையேல் ஒழிந்த கலம் என உடைந்து அழியும். நாம் செய்வதற்கொன்றும் இல்லை” என்று தன் வேலை எடுத்துக்கொண்டு எழுந்தாள். அங்கிருந்தோர் பெருமூச்சுடன் அகன்றனர். சம்வகை அவர்களை நோக்கியபடி வெறுமனே நின்றிருந்தாள்.

சம்வகை சுரேசரை ஒவ்வொரு நாளும் சந்தித்தாள். அவர் நூறு செயல்களில் சுழன்றுகொண்டிருந்தார். அவளிடம் “புதுச் செய்தி இருந்தால் மட்டும் கூறுக!” என்றார். “வழக்கம்போலத்தான்” என்று அவள் சொன்னாள். அவர் “நன்று” என்று திரும்பிக்கொண்டார். அவள் தயங்கி நின்றாள். “சொல்க!” என்றார். “மேற்கு வாயிலை ஒட்டி மலைக்குறக் குடிகள் சற்று குறைந்த அளவில் இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே கிளம்பும் எண்ணம் இல்லாதிருக்கிறார்கள்” என்று சொன்னாள். அவள் எண்ணுவதை அறிந்துகொண்டு சுரேசர் புன்னகைத்து “நான் அறிவேன். ஒவ்வொரு நாளும் இங்கிருந்து எத்தனை பேர் வெளியே செல்கிறார்கள் என்கிற கணக்கு எனக்கு வந்துகொண்டிருக்கிறது. நகர் பெரும்பாலும் ஒழிந்துவிட்டது” என்றார்.

சம்வகை “அவர்களை தடுக்கவேண்டுமென்றால்…” என்றாள். “அதற்கு எந்த வழியும் இல்லை. குடிகளை சிறைவைத்து ஓர் அரசு நிகழ இயலுமா என்ன?” என்றார் சுரேசர். “அரசு என்பது தோட்டம் அல்ல காடு என்று நூல்கள் சொல்கின்றன. இங்கே செடிகளையும் மரங்களையும் நாம் நட்டு வளர்ப்பதில்லை. அவற்றுக்கான நெறிகள் காடெனும் ஒட்டுமொத்தத்தால்

வகுக்கப்பட்டு அவற்றிலேயே உறைகின்றன.” சம்வகை சற்றே சீற்றத்துடன் “குடிகளின்றியும் ஓர் அரசு நிகழ இயலாது” என்றாள். “உண்மை. ஆனால் இவர்கள் செல்வதை தடுக்க நமக்கு உரிமை இல்லை. அஸ்தினபுரி அவர்களுக்கு துயர் மிகுந்த நினைவுகளின் நிலம். இதை விட்டு அகலுந்தோறும் அவர்கள் விடுதலை பெறுவார்கள்” என்றார் சுரேசர். “அதைவிட இங்கே பெரும்பாலான குடிகளில் ஆண்களே இல்லை. பிற குடிகளிலிருந்து குருதி பெறுவதற்கு அவர்களுக்கு விருப்பம் இருக்காது. ஏனென்றால் குலத் தூய்மையை கொடியடையாளமாகக் கொண்ட தொல்குடியினர் இவர்கள்” என்றார்.

அதை சம்வகை எண்ணியிருக்கவில்லை. “எங்கே செல்கிறார்கள் இவர்கள்?” என்றாள். “இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு நிலங்களில் இருந்து இங்கே வந்து குடியேறியவர்கள். அன்று அவர்கள் கொண்டுவந்தது குடியடையாளத்தை மட்டுமே. அன்று அதன் அடிப்படையிலேயே அவர்களுக்கு இங்கே இடமளிக்கப்பட்டது. தாங்கள் எங்கிருந்து வந்தோம் என்பதை கதைகளாகவும் ஆசாரங்களாகவும் குடித்தெய்வங்களாகவும் அவர்கள் இன்றுவரை பேணிக்கொண்டிருந்தார்கள். இன்று இங்கிருந்து கிளம்பி தங்கள் குருதிவழியினரின் தொல்லூர்களுக்கு திரும்புகிறார்கள். அவர்கள் அறிந்தது அது ஒன்றே” என்றார் சுரேசர்.

சம்வகை “எஞ்சியவர்களில் முதியவர்கள் அனைவரும் பழைய படைக்கொட்டில்களில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள்” என்றாள். “ஆம், அச்செய்திகளை நோக்கினேன்” என்றார் சுரேசர். “இன்னும் சில நாட்களில் அரசர் யுதிஷ்டிரன் நகர்புகக்கூடும் என்கிறார்கள்” என்றாள். சுரேசர் அப்போதுதான் அவள்

எண்ணுவதை புரிந்துகொண்டு நிலைத்த விழிகளுடன் நோக்கினார். “அவர் இங்கே நகர்நுழைவுகொள்கையில் காணப்போவது என்ன? இந்த ஒழிந்த நகரா? வாழ்த்துரைக்கக்கூட இங்கே இன்று மக்கள் இல்லை. அவர் வருகையில் ஒரு காவல் அணிவகுப்பைக்கூட நம்மால் ஒருங்கமைக்க முடியாது. கோட்டைக்காவலுக்கும் அரண்மனைக்காவலுக்கும்கூட நம்மிடம் போதிய படைவீரர்கள் இல்லை.”

சுரேசர் அதுவரை அவரை அள்ளிச்சுழற்றிய அகவிசை முற்றாக அணைய அப்படியே அமர்ந்துவிட்டார். “நான் அதை எண்ணவே இல்லை” என்றார். “நான் எண்ணியிருக்கவேண்டும். நமக்கு மிகுதியான நாட்கள் இல்லை.” அவர் துணையமைச்சர் சாரிகரை கையசைத்து அழைத்தார். இருபது அகவை தோன்றிய சாரிகர் தென்னிலத்து அந்தணன் எனத் தோன்றினார். கன்னங்கரிய முகத்தில் பெரிய விழிகள் வெண்சிப்பிகளாகத் தெரிந்தன. “அரசர் நகர்புக நாள் முடிவுசெய்துவிட்டார்களா?” என்றார். “இன்னும் ஆறு நாட்கள்... ஆவணிமாதம் பன்னிரண்டாம், நிலவுநாள். ஆனால் அதை இன்று உச்சிப்பொழுதுக்குள் உறுதிசெய்வதாக சொல்லியிருக்கிறார்கள்” என்றார் சாரிகர். “ஆறு நாட்கள்... ஆறு இரவுகளும் ஐந்து பகல்களும் நம்மிடம் உள்ளன” என்றார் சுரேசர்.

சம்வகை “இனி அஸ்தினபுரியைவிட்டு எவரும் வெளியே செல்லக்கூடாது என ஆணையிடலாம்” என்றாள். “கூடாது... பிழை நிகழும். இங்கே தங்களை சிறையிட்டிருப்பதாக மக்கள் எண்ணினால் சினம்கொள்ளக்கூடும்... வாழ்த்துச்சொல் எழாமலிருந்தாலும் பழிச்சொல் எழலாகாது” என்றார். சாரிகர்

“நாம் பிற நாடுகளிலிருந்து வணிகர்களையும் பிறரையும் பொன் கொடுத்து அழைத்துவரலாம்” என்றார். “வணிகர்கள் வரமாட்டார்கள். பிற குடியினரை அழைத்துவர நமக்குப் பொழுதில்லை” என்றார் சுரேசர். சம்வகை “அரசர் நகர்புகுந்த பின்னர் அனைவருக்கும் பொற்கொடை வழங்குவார் என அறிவிக்கலாம். அதை பெற்றபின் நகர்நீங்கலாம் என்று சிலர் எண்ணக்கூடும்” என்றாள்.

சுரேசர் “ஆம், அது உகந்த எண்ணம்” என்றார். “அதை செய்யலாம். இங்கே இருப்போரில் பலரிடம் வழிச்செலவுக்கு பணம் இருக்காது. அதன்பொருட்டு தயங்கிக்கொண்டிருப்பார்கள். பொன் அவர்களை நிறுத்தும். நகரில் எஞ்சிய அனைவரையும் திரட்டி கொண்டுவந்து சாலையோரங்களில் நிறுத்தலாம்…” சம்வகை தலையசைத்தாள். “யுயுத்ஸு இங்கே நாளை காலை வரக்கூடும்… இவ்வறிவிப்பை நான் இப்போதே வெளியிட்டுவிடுகிறேன்” என்றார் சுரேசர். “இன்றிருக்கும் உளநிலையில் அவர்களில் சிலர் பொன்னை அளிப்பது தங்களை இழிவுசெய்வது என்றுகூட எண்ணக்கூடும்” என்று சாரிகர் சொன்னார். சுரேசர் “அவ்வண்ணம் நிகழாது. என்றும் அஞ்சியும் தயங்கியும் எஞ்சியிருப்போர் இழிந்தோராகவே இருப்பார்கள்” என்றார்.

அவ்வண்ணமே ஆயிற்று. அன்று மாலையிலேயே அரசமுரசுகள் மாமன்னர் யுதிஷ்டிரன் நகர்நுழையவிருப்பதை அறிவித்தன. அவர் நகர்காணுலா முடித்து அரண்மனை நுழைந்து அவையமர்வு கொண்டபின் அந்தியில் நிகழும் குடிகாண் மங்கலத்தில் அனைவருக்கும் ஐந்து பொற்காசுகள் வழங்க முடிவெடுத்திருப்பதாக முரசறிவிப்போன் கூவியபோது கூடிநின்றவர்களிடம் கூச்சல்கள் எழுந்தன. “எனில்

கருவூலத்தில் பொன் உள்ளது! அத்தனை பொன் அங்கே உள்ளது!” என்று ஒருவன் கூவினான். “அதை இப்போதே கொடுங்கள்… அது எங்களுக்குரியது!” என்று இன்னொருவன் கூவினான். கூடிநின்றவர்கள் கைநீட்டி ஆர்ப்பரித்தனர். பழிச்சொற்களைக் கூவினர். “அது எங்கள் அரசரின் செல்வம். பறவைமுட்டையை நாகம் உண்பதுபோல அந்த யாதவ இழிமகன் அதை கைக்கொள்ள விடமாட்டோம்” என்று ஒரு முதியவர் கூச்சலிட்டார்.

“அவர்களின் கொந்தளிப்பு ஓயட்டும். அவர்கள் இங்கே நீடிப்பார்கள்” என்றார் சுரேசர். “அவர்கள் பொன்னை வெறுக்கவில்லை. பொன்னை பொருட்படுத்தாமலும் இல்லை. அது போதும்.” பின்னர் தன் முகவாயை வருடியபடி “பொன் அவர்களை இங்கே நிலைநிறுத்தும் என்றால் கனவுகளும் அவ்வண்ணமே நிலைநிறுத்தும். அவர்களுக்கு கனவுகளை அளிப்போம்” என்றார். சம்வகை அப்போது அந்த அறைக்குள் சுவர் அருகே நின்றிருந்தாள். அவளை நோக்கி திரும்பி “இன்று இங்கே நாற்குடிகளில் நான்காம் குடியினள் நீயே. சொல்க, அவர்களை இங்கே நிலைநிறுத்தும் சொல் எதுவாக இருக்கும்?” என்றார். அவள் அந்த நேர்க்கேள்வியால் திகைத்தாள். பின்னர் “என்னால் சொல்லமுடியவில்லை” என்றாள். அவளை சில கணங்கள் கூர்ந்து நோக்கிய சுரேசர் “ஏனென்றால் நீ நாற்குடிகளில் இருந்து மேலெழுந்துவிட்டாய். இன்று பதவியும் புகழும் உனக்கு முதன்மையாகிவிட்டிருக்கும்” என்றார். சம்வகை எவ்வுணர்வையும் காட்டவில்லை.

சுரேசர் வெளியே நின்றிருந்த காவல்பெண்டை அழைத்துவர கைகாட்டினார். அவள் உள்ளே வந்ததும் “சொல்க, உனக்கு இப்போது தேவையாக இருப்பது எது?” என்றார். அவள் விழிக்க

“இன்று இந்நகரில் நீ எதை இழக்கிறாய்?” என்றார். அவள் மீண்டும் விழிக்க “நீ இந்நகரில் இன்று அலைகையில் எதை எண்ணிக்கொள்வாய்?” என்றார் சுரேசர். அவள் விழிகள் விரிய “முன்பு இங்கே பெருந்திருவிழவுகள் நிகழும். இந்திரவிழவில் நாங்கள் இரவும்பகலும் மறந்து ஐந்து நாட்கள் களியாடுவோம். தெருவெங்கும் கள்ளும் ஊன்சோறும் நிறைந்திருக்கும். சூதர்களின் இசையும் கூத்தர்களின் நடனமும் அறுபடாது நிகழும்” என்றாள்.

சுரேசர் “ஆம், அதுவே. விழவு. விழவு கொண்டாடப்போகிறோம் என அறிவிப்போம். அரசர் முடிசூடியபின் பதினெட்டு நாட்கள் விழவு நிகழும். ஊனும் கள்ளும் பெருகும். இசையும் களியாட்டும் நிறைந்திருக்கும். பாரதவர்ஷமெங்குமிருந்து சூதரும் கலைஞரும் வந்து குழுமுவார்கள்…” என்றார். “அதை நாமே அறிவிப்பதென்றால்…” என்று சாரிகர் தயங்க “நாம் அறிவிக்க வேண்டியதில்லை. அதை செவிச்செய்தியாக இங்கே பரப்புவோம். அது மெய்யென நம்பச்செய்ய வேண்டியவற்றை செய்வோம். பெருவிழவு ஒன்று இங்கே நிகழப்போகிறது என்று காட்டும் ஒருக்கங்கள் தொடங்கட்டும். தெருக்களில் மேடைகள் அமையட்டும். சூதர்கள் தங்குவதற்குரிய குடில்கள் கட்டப்படட்டும். நகரில் நூறு ஊட்டுபுரைகள் ஒருங்கட்டும். அங்கே அரண்மனையிலிருந்து மாபெரும் அடுகலகங்கள் கொண்டுசென்று அனைவர் விழிகளிலும் படும்படி வைக்கப்படட்டும்” என்றார் சுரேசர்.

# களிற்றியானை நிரை - 11

**பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 2**

சுரேசரின் ஆணைப்படி நகர் விழாக்கோலம் பூண்டது. ஆனால் அவர் எண்ணியதுபோல் எதுவும் நிகழவில்லை. அதை அவருடைய அலுவலவையில் அவர் ஆணையை ஏற்று நின்றிருக்கையிலேயே சம்வகை உணர்ந்தாள். நகரில் அப்போது கோட்டைக்காவலுக்குக்கூட போதிய காவல்பெண்டுகள் இருக்கவில்லை. முதிய பெண்களே அரண்மனையிலும் அடுமனையிலும் பணிபுரிந்தனர். ஆகவே விழவொருக்கங்கள் அரைகுறையாக நிகழ்ந்தன. அவற்றைச் செய்பவர்களுக்கு தாங்கள் மெய்யான ஒரு பணியைச் செய்கிறோம் என்னும் நம்பிக்கை இருக்கவில்லை. ஆகவே அவர்களிடம் விழவுக்குரிய கொண்டாட்டமே வெளிப்படவில்லை. எரிச்சலுடன் கூவியபடியும் பிறரை வசைபாடியபடியும் அவர்கள் பந்தல்களும் மேடைகளும் தொங்கல்களும் தோரணங்களும் அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள்.

அவர்களை வேறு பணிகளுக்கு அழைக்கவேண்டியிருந்தது. ஆகவே அனைத்து அணிவேலைகளும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. கூத்துமேடைகளுக்குரிய கால்கள் நாட்டப்பட்டு தறிகளாகவே விடப்பட்டன. கொடிகளும் தோரணங்களும் ஆங்காங்கே கட்டப்பட்டு அறுந்து கிடந்து ஆடின. சூதர்கள் விழவுகுறித்த செய்திகளைப் பாடியபோது இளிவரல் ஓசைகள் எழுந்தன. “இந்நகரில் என்ன விழவு இது? முதுமகள் பூச்சூடிக்கொண்டதுபோல மேலும் மங்கலமின்மையையே அது உருவாக்குகிறது” என்றாள் முதிய காவல்பெண்டான சந்திரிகை. சம்வகை “இது அரசப்பழி. இதற்கு தண்டனை உண்டு” என்று சினந்தாள். “சாட்டையாலடித்து எவரையும் நகைக்க வைக்கமுடியாது” என்றபடி சந்திரிகை எழுந்துசென்றாள்.

ஆனால் சுரேசர் “ஆம், அதை நானே பார்த்தேன். ஆனால் அது நிகழட்டும்… அடுகலங்கள் தெளிவான செய்தியை உரைப்பவை. பல்லாயிரம் சொற்களுக்கு நிகரானவை. நாளும் வண்டிகளில் அவை தெருக்களினூடாக ஓர் இடத்திலிருந்து இன்னொன்றுக்கு கொண்டுசெல்லப்பட வேண்டும்” என்றார். ஒவ்வொரு நாளும் மிகப் பெரிய நிலைவாய்களும் குட்டுவங்களும் உருளிகளும் வண்டிகளில் ஏற்றப்பட்டு நகரத்தெருக்களினூடாக சென்றன. சுரேசர் சொன்னதுபோல அவை விழவு குறித்த எதிர்பார்ப்பை உருவாக்கவில்லை. எவரும் அவற்றால் மகிழ்வுறவில்லை. பல தருணங்களில் இளிவரலையே உருவாக்கின. ஆனால் மெல்ல மெல்ல என்ன நிகழவிருக்கிறது என்று நோக்கும் ஆர்வம் உருவாகியது. அது மக்களை அஸ்தினபுரியிலேயே நிலைகொள்ளச் செய்தது.

யுதிஷ்டிரன் வந்துகொண்டிருக்கும் செய்திகள் அஸ்தினபுரியை வந்தடைந்தன. முக்தவனத்தில் நிகழ்ந்த நீர்க்கடனுக்குப் பின் மறுநாளே அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள். நேராக அஸ்தினபுரிக்கு வந்துசேர்வதாகத்தான் பேசப்பட்டது. ஆனால் ஒவ்வொருநாளும் செய்திகள் மாறிக்கொண்டிருந்தன. நகரில் அவர் நுழைவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக வந்த யுயுத்ஸு “அரசர் வரும்போது நகரம் ஒருங்கியிருக்கவேண்டும்” என்றான். ஆனால் நகர் விரைவாக ஒழிந்துகொண்டிருந்தது. “அவர்கள் நீர்க்கடன் புரிய கங்கைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். அங்கேயே துயர்காக்கவும் கூடும். அவர்கள் திரும்பட்டும்” என்று அவன் அரசரின் வருகையை ஒத்திவைத்தான். யுதிஷ்டிரன் கங்கைக்கரையிலேயே வெவ்வேறு சிற்றூர்களில் இறங்கி தங்கி செய்திக்காக காத்திருந்தார். அரசி திரௌபதி நேராக இந்திரப்பிரஸ்தத்திற்கே சென்றுவிட்டிருந்தாள்.

மேலும் மேலும் நகர் ஒழிந்துகொண்டிருந்தது. யுயுத்ஸு "இத்தனை பேர் செல்கிறார்கள். அரசர் ஒழிந்த நகரில்தான் குடியேறவேண்டியிருக்கும் போலும்" என்று சலித்துக்கொண்டான். சுரேசர் "இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து மக்களை கொண்டுவரலாம்" என்றார். யுயுத்ஸு "அது நல்ல எண்ணம்" என்று கூறியபின் இந்திரப்பிரஸ்தத்திற்கு தூதர்களை அனுப்பினான். ஆனால் அந்நகரமும் ஒழிந்துகொண்டிருப்பதாக செய்தி வந்தது. "அதுவும் விதவைகளின் நிலமாக மாறிவிட்டிருக்கிறது. அங்கே மங்கலம்கொண்டோர் எவருமில்லை" என்று ஒற்றன் சொன்னான். யுயுத்ஸு சீற்றத்துடன் அவனிடம் "அதை நான் அறிவேன்... அங்கிருந்து அடுமனையாளர்களையாவது இங்கே கொண்டுவர முடியுமா?" என்றான். "எங்கிருந்தாயினும் இன்று பெருநோயாளிகள், கள்மகன்களை மட்டுமே திரட்டமுடியும். ஆரியவர்த்தமே ஒழிந்துகிடக்கிறது" என்று ஒற்றன் அஞ்சாமல் அவன் விழிகளை நோக்கி சொன்னான்.

யுயுத்ஸு சினத்துடன் ஏதோ சொல்ல நாவெடுத்த பின் அப்பால் நின்றிருந்த சம்வகையை நோக்கி "நீ என்ன செய்கிறாய்? கோட்டையை திறந்துவைத்து அத்தனை பேரையும் வெளியே அனுப்புகிறாயா?" என்றான். "வேண்டுமென்றால் மூடிவிடுகிறேன்" என்றாள் சம்வகை. யுயுத்ஸு "எனில் சென்று மூடு... அதற்கு என் ஆணை வேண்டுமா?" என்றான். "ஆம், வேண்டும். அவர்கள் எவரை பழிக்கவேண்டும் என அறிந்தாகவேண்டும். நான் அப்பழியை கொள்ளமுடியாது" என்று சம்வகை சொன்னாள். யுயுத்ஸு ஒருகணம் சொல்லிழந்த பின்னர் "செல்க, எவரும் என் முன் நிற்கவேண்டியதில்லை! செல்க!" என்று கூவினான். "என்ன ஆயினும் சரி இன்னும் சில நாட்களில் அரசர் நகர்புகுவார். செல்பவர் செல்லட்டும், நகர்

இங்கிருக்கும் அல்லவா?” சுரேசர் சம்வகையிடம் செல்க என்று விழிகாட்ட அவள் தலைவணங்கி அறையைவிட்டு வெளியேறினாள்.

அறைக்குள் யுயுத்ஸு “என்ன நிகழ்கிறது என்று எனக்குத் தெரியாமல் இல்லை. இப்போது சொல்கிறேன், இன்று இந்நகரை விட்டுச்செல்லும் குடி எதுவாயினும் அது அஸ்தினபுரிக்கு வஞ்சம் இழைத்ததுதான். அவர்களோ அவர்களின் நூறு தலைமுறையினரோ இந்நாட்டுக்குள் இனி நுழைய முடியாது” என்று கூவினான். “அவர்கள் அறிக, ஒருநாள் அஸ்தினபுரியின் படைகள் அவர்களைத் தேடி வரும்… அன்று அவர்கள் அஸ்தினபுரிக்கு எதிர்தரப்பாக இருப்பார்கள். அஸ்தினபுரியின் வஞ்சத்தின் வெம்மையை அப்போது அவர்கள் அறிவார்கள்.” சுரேசர் “நாம் இனிமேல் வஞ்சம்கொள்ள நம் குடிகள் மட்டுமே எஞ்சியிருக்கிறார்கள்” என்றார். யுயுத்ஸு “என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? அந்தணர் என்றால் நாவில் நஞ்சுகொள்ளலாம் என்று எண்ணமா?” என்று மேலும் உரக்க கூவினான்.

யுதிஷ்டிரன் நகர்நுழைந்த நாளில் சுரேசர் அவரால் இயன்ற அளவுக்கு அனைத்தையும் ஒருக்கியிருந்தார். கங்கைக்கரையிலிருந்து அத்தனை குகர்களையும் திரட்டி நகருக்குள் கொண்டுவந்தார். நெடுஞ்சாலைகளில் தங்கியிருந்த நாடோடிகளை வீரர்கள் பிடித்துக் கொண்டுவந்து சேர்த்தனர். அவர்களுக்கு நல்லாடைகளும் தலைப்பாகைகளும் வழங்கப்பட்டன. நகரின் கோட்டைமுகப்பும் அரசர் செல்லும் பாதையும் மட்டும் அணிசெய்யப்பட்டன. நகர்க்குடிகளில் எஞ்சியவர்கள் அனைவரையும் சுரேசர் சென்று சந்தித்தார். குடித்தலைவர்களின் அவைகளுக்கு அவரே சென்று பேசினார்.

“அரசர் நகர்புகும்போது நற்சொல் கூறி வரவேற்போம். இந்நகரை அவருடைய செங்கோல் மீட்கும் என்ற உறுதியை நான் அளிக்கிறேன். அவர் குருகுலத்துக் குருதி என்பதை மறக்கவேண்டியதில்லை” என்றார்.

அவர்கள் வெறித்த விழிகளுடன் நோக்கி அமர்ந்திருந்தார்கள். “அனைவருக்கும் ஒரு சொல்லை நான் அளிக்கிறேன். அரசர் நகர்நுழைந்ததும் கருவூலவாயில் திறக்கும். அஸ்தினபுரியின் கருவூலம் நாகருலகு வரை திறக்கும் ஆழம் கொண்டது என்னும் சொல்லை கேட்டிருப்பீர்கள். அதிலிருந்து உங்களுக்கு நிறைவளிக்கும் வரை பொன்னும் மணியும் எழுந்துவரும்.” அவர்களின் விழிகளில் எந்த உணர்வும் தெரியவில்லை. சுரேசர் “இங்குள்ள கட்டடங்கள் அனைத்தும் மீட்டுக் கட்டப்படும். நகருக்குள் வரும் வணிகர்களுக்கு சுங்கம் தவிர்க்கப்படும். எனவே பொருட்கள் மலிவுவிலையில் இங்கே குவியும். இங்கு இன்னும் சில நாட்களிலேயே செல்வம் செழிக்கும். சூதர்களும் விறலியரும் வந்து குழுமுவார்கள். பெருவிழவுகள் எழும்” என்றார். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

சுரேசர் சலிப்புடன் எழமுயன்றபோது ஒரு முதியவர் “நாங்கள் அரசரை வரவேற்கிறோம். அவர் எங்களுக்கு உகந்த அரசர் என்பதற்காக அல்ல. அவர் எங்களுக்கு அள்ளி வழங்கவிருக்கிறார் என்பதற்காகவும் அல்ல. இந்நகரைக் கட்டியவர்கள் எங்கள் முன்னோர் என்பதனால். இங்கே அவர்களின் எலும்புகள் மண்ணுக்குள் இருக்கின்றன என்பதனால்” என்றார். சுரேசர் சொல்லவிந்து அவர்களை நோக்கிக்கொண்டிருந்தார். “நாங்கள் இங்கே வாழ்ந்து பழகிவிட்டோம். இக்கலம் மூழ்குமென்றாலும்கூட

உடன்மூழ்கவே எண்ணுகிறோம்” என்றார் இன்னொருவர். “இது உங்கள் மண். உங்கள் மண்ணை ஆள்கிறோம் என்னும் பொறுப்புணர்வு என்றும் மாமன்னரிடம் இருக்கும்” என்றார் சுரேசர்.

திரும்பும்போது அவர் சம்வகையிடம் “இவர்கள் போதும். ஏதேனும் ஒரு பற்று எஞ்சியிருந்தால் போதும் அதை பிற அனைத்தின் மீதும் பற்றென வளர்த்தெடுத்துக்கொள்ள முடியும்” என்றார். “இவர்கள் அரசரை வரவேற்கையில் முகப்பில் நிற்கட்டும். திரட்டிவந்த பிறர் பின்னணியில் நின்றிருக்கட்டும்.” சம்வகை “ஆனால் இவர்கள் வாழ்த்தொலி எழுப்பாமல் நின்றிருக்கக்கூடும்” என்றாள். “ஆம், ஆனால் இவர்களின் முகங்களில் எதிர்ப்பும் வெறுப்பும் இல்லை. அது போதும். நாம் வாழ்த்தொலி எழுப்புவோம்” என்றார் சுரேசர். “யுதிஷ்டிரன் அஸ்தினபுரியை நன்கறிந்தவர். இம்மக்களின் முகமும் அகமும் அவருக்குத் தெரியும். நாம் அயலவரை முன்னிறுத்த முடியாது.” சம்வகை “அவ்வண்ணமே” என்றாள்.

“இவர்கள் அஸ்தினபுரியை விரும்புபவர்கள். நம் வரவேற்பொலியில் அஸ்தினபுரிக்கான வாழ்த்து ஓங்கி ஒலிக்கட்டும். இந்நகரை ஆண்ட மன்னர்களின் பெயர்கள் தொடரட்டும். இறுதியில் யுதிஷ்டிரனின் பெயரும் வந்தமைகையில் இவர்களால் அதை தவிர்க்கமுடியாது. ஆம், அப்போது ஓசை சற்றே தணியும். அதை நாம் கடந்துசெல்வோம். இவர்கள் போதும். இவர்களில் இருந்து அஸ்தினபுரியை நாம் மீட்டு எடுத்துவிடமுடியும்.” சம்வகை “வெவ்வேறு வகையான மானுடரை நகரில் சேர்த்திருக்கிறோம். அவர்களில் எவரேனும் அரசரை நோக்கி ஏதேனும் அவச்சொல்லை உரைத்துவிடக்கூடும்” என்றாள். “செவிகேட்காத

தொலைவில் அவர்கள் நிற்கட்டும். அவர்கள் வீசும் அரிசியும் மலரும் மட்டும் அரசர்மேல் பொழிந்தால் போதும்” என்றார் சுரேசர்.

சம்வகை முந்தையநாள் பகலிலேயே நகரை ஒருக்கத் தொடங்கினாள். நகரின் சாலையெங்கும் மக்கள்திரளைக் காட்டுவது எளிதல்ல என்று தெரிந்தது. அஸ்தினபுரி எத்தனை பெரிய நகர் என அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. அது மக்கள்திரளால் நெரிந்துகொண்டிருந்தபோது மிக இடுங்கலான தெருக்களுடன் சிறியதாகத் தெரிந்தது. அப்போது தெருக்கள் ஒழிந்த களங்கள் என விரிந்துகிடந்தன. களங்கள் மறுஎல்லை தெரியாப் பாலைகள் போலிருந்தன. அவள் ஒவ்வொன்றாகச் செய்து அதை மதிப்பிட்டு திருத்திக்கொண்டே இருந்தாள். ஒன்றை இயற்றியபின் அந்த அணிவகுப்பு அவ்வழியே நிகழ்வதாக கற்பனை செய்தபோதுதான் பிழைகள் தெரிந்தன. பிழைகள் தெரிந்த பின்னரே வாய்ப்புகளும் தெரியலாயின.

“அரசர் பட்டத்துயானை மேல் அணிவலம் செல்லவேண்டியதில்லை. அவ்வுயரத்தில் நெடுந்தொலைவு கண்களுக்குப்படும். அத்தனை இடங்களை நம்மால் அணிசெய்யவோ மக்களால் நிரப்பவோ முடியாது” என்று அவள் சுரேசரிடம் சொன்னாள். “ஆம், அதை நானும் எண்ணினேன்” என்றார் சுரேசர். சம்வகை “அரசர் தேரில் செல்லட்டும்… தேவையான இடங்களில் தேர் சற்று விரைவாகக் கடக்கவும் வேண்டும்” என்றாள். சுரேசர் அதை புரிந்துகொண்டார். மறுநாள் அவள் “தேரின் பின்புறம் திரைச்சீலைகள் தொங்கவேண்டும்” என்றாள். சுரேசர் “ஏன்?” என்றார். “அரசரை கோட்டைமுகப்பில் வரவேற்பவர்கள் கோட்டைக்காவலர். அவர் கடந்துசென்றதும்

உடனே அவர்கள் காவல்பணிக்கு மீளவேண்டும்” என்றாள். சுரேசர் பெருமூச்சுவிட்டார்.

சம்வகை சாலையோரத்தில் இருந்த அனைத்து இல்லங்களிலும் தோரணங்களும் மலர்மாலைகளும் கொண்டு அணிசெய்தாள். மூடியிருந்த இல்லங்களைத் திறந்து அங்கே சிலரை நிற்கும்படி ஆணையிட்டாள். அரசர் செல்லும் சாலை எங்கும் இருபுறமும் தூண்களை நட்டு தோரணங்களும் பட்டங்களும் தொங்கும்படி செய்தாள். தோரணங்களும் பட்டங்களும் இல்லாத இடங்களில் சிறுகுழுக்களாக மக்கள் நின்றிருக்கும்படி வகுத்தாள். பின்னர் அதை மேலும் தெளிவுறுத்தி சாலையிணைவுகளிலும் வளைவுகளிலும் மட்டும் மக்கள் நின்றால் போதும் என ஆணையிட்டாள். நேரான சாலையில் மக்கள் நின்றாலும் திரளென தெரிவதில்லை. அங்கே அணித்தூண்கள் மட்டும் போதும். அப்பகுதியில் தேர் சற்று விரைவுகொள்ளலாம். அப்பகுதியில் மட்டும் அரிசியும் மலரும் மழையென விழுந்தால் போதும். மீண்டும் எண்ணிக்கொண்டு அரிசிமலருடன் மஞ்சள்பொடியும் வீசப்படலாம் என முடிவெடுத்தாள். “இச்சாலையே மேலிருந்து பொழிவனவற்றால் மறைந்துவிடவேண்டும்…” என்றாள். அங்குள்ள பெரிய மாளிகைகளின் உப்பரிகைகளில் அரிமலரை மஞ்சள்பொடியுடன் பொழிய ஏவலரை நிறுத்தினாள். பெரிய கலங்களில் அரிமலரும் மஞ்சள்பொடியும் அங்கே கொண்டுசென்று வைக்கப்பட்டன.

அணிவலங்களுக்குரிய சிறுமுரசுகளுக்கும் முழவுகளுக்கும் கொம்புகளுக்கும் மாறாக அனைத்துப் பெருமுரசுகளும் முழங்கவேண்டும் என்று ஆணையிட்டாள். தொலைவிலிருந்த காவல்மாடங்களில் இருந்தெல்லாம் பெருமுரசுகளை

நகருக்குள் கொண்டுவரச் செய்தாள். அரண்மனையின் வைப்பறைகளில் இருந்து தோல் கிழிந்து கலம் உடைந்து கைவிடப்பட்ட பெருமுரசங்களை எடுத்துக்கொண்டு வந்தாள். “முடிந்தவரை அவற்றை சீரமையுங்கள். ஓசையெழுந்தாக வேண்டும்… முறையான தாளக்கட்டு வெளிப்பட வேண்டியதில்லை” என்றாள். கருவூலக்காப்பாளரான சிற்றமைச்சர் சுந்தரர் “பெருமுரசுகள் விழவுகளின்போது மட்டுமே ஒலிப்பவை” என்று சொன்ன போது “இடைவெளிகளை ஓசை நிரப்பட்டும்” என்று சம்வகை சொன்னாள். அவருக்கு அவள் கூறியது புரியவில்லை. அவளுடைய புன்னகையைக் கண்டபின் தலையசைத்தார்.

புரவியில் சாலை வழியாகச் செல்லும்போது தன் நினைவிலிருந்த காட்சிகளை மீட்டிக்கொண்டிருந்தாள். அணிவலம் என்றால் அணியானை நிரை என்றே தன் உள்ளம் எண்ணிக்கொள்வதை உணர்ந்தாள். அஸ்தினபுரி யானைகளின் நகர். நிரைநிரையென முகபடாம் மின்ன நின்றிருக்கும் யானைகளின் நிரைகளால்தான் அந்நகர் பொலிவு கொண்டிருக்கிறது. அவ்வெண்ணம் வந்ததும் கடிவாளத்தை இழுத்து நின்றுவிட்டாள். அரண்மனைக் கொட்டிலில் அப்போது முதுமையடைந்த ஓரிரு யானைகள் மட்டுமே இருந்தன. அவள் அரண்மனைக்குச் செல்வதற்குள் செய்யவேண்டுவன என்ன என முடிவெடுத்துவிட்டாள். அரண்மனை பொருள்வைப்பகத்தில் யானைகளுக்குரிய நெற்றிப்பட்டங்களும் புறச்சால்வைகளும் குவிந்துகிடந்தன. அவள் எண்ணியதைவிட பலமடங்கு. மிகப் பழைய நெற்றிப்பட்டங்களும் புறச்சால்வைகளும் தூசு மண்டி பழுதடைந்திருந்தன. எடுக்க எடுக்க அவை வந்தபடியே இருந்தன.

“அணியானைகள் உயிர்துறக்கையில் அவற்றின் முகபடாம்களை பிற யானைகளுக்கு பயன்படுத்துவதில்லை, காவலர்தலைவியே. அந்த முகபடாம்களிலும் மணிச்சால்வைகளிலும் அந்த யானையின் அசைவு அதன் ஆத்மா என எஞ்சியிருக்கும். பிறிதொரு யானையுடன் அது இசைவுகொள்வதில்லை. நெற்றிப்பட்டம் மாற்றிக் கட்டப்பட்ட யானைகள் சித்தமழிந்து மதம்கொள்ளும் என்பார்கள். ஆகவே ஓர் யானை மறையும்போது அதன் அணிகளை மொத்தமாகக் கழற்றி வைப்பறைக்குள் கொண்டுசென்று போட்டுவிடுவார்கள். இவை நாநூறாண்டுகளாக இங்கே குவிந்திருக்கின்றன” என்று கருவூலக்காப்பாளரான சிற்றமைச்சர் சுந்தரர் சொன்னார். சம்வகை தன் தலைக்குமேல் எழுந்திருந்த அந்த அணிகளின் குன்றை நோக்கியபின் “மறைந்த களிறுகள் அனைத்தும் எழுக! அஸ்தினபுரிக்கு இப்போது அவை அனைத்தும் தேவையாகின்றன” என்றாள்.

இருபது ஏவலர்கள் இரவும்பகலும் பணியாற்றி அனைத்து முகப்படாம்களையும் வெளியே எடுத்தனர். “பழுதுநோக்க நமக்கு பொழுதில்லை. புழுதிமட்டுமே களையப்படவேண்டும்” என்று சம்வகை சொன்னாள். ஏவலர் மூக்கில் ஈரத்துணியை கட்டிக்கொண்டு அவற்றை அள்ளி நீண்ட கொடிகளில் இட்டு உலுக்கி புழுதி களைந்தனர். ஈரத்துணியால் வெண்கலக் குமிழ்களையும் பிறைகளையும் துலக்கி ஒளிபெறச் செய்தனர். கோட்டைமுதல் அரண்மனைவரை அரசப்பாதை முழுக்க நெருக்கமாக மூங்கில்களை நட்டு அவற்றில் குறுக்கே கட்டப்பட்ட கழியில் முகபடாம்களை தொங்கவிடும்படி ஆணையிட்டாள். அவள் சொன்னதை ஏவலர் முதல் முகபடாமை அமைத்ததுமே புரிந்துகொண்டனர். காற்றில் அசைந்த முகபடாம் ஒரு கணப்பொழுதில் அங்கே ஒரு

யானையை உருவாக்கி நிறுத்தியது. “ஆ! யானை!” என அதைக் கட்டிய ஏவலனே வியந்து பின்னடைந்தான்.

அவர்கள் அனைவரிலும் உளவிசை எழுந்தது. மூங்கில்கவைகளில் முகபடாம்கள் தொங்கவிடப்பட்டன. அவற்றுக்குப் பின்னால் வளைக்கப்பட்ட இரு மூங்கில்கள் மேல் அணிச்சால்வை போர்த்தப்பட்டது. மறைந்த யானைகள் எழுந்து வந்தபடியே இருந்தன. “ஆ, இது அங்காரகன். நான் சிறுவனாக இருந்தபோது மறைந்த பெரும்கொம்பன்!” என்று ஒரு முதிய ஏவலர் கூவினார். “இது காளன், மாளவத்திலிருந்து அளிக்கப்பட்ட நெடுந்தலையன்!” அறிந்த யானைகள், அறியாத மூதாதை யானைகள். “யானை என்பது அதன் அசைவே. அவ்வசைவை ஒற்றி எடுத்துக்கொண்டவை இந்த அணிகலன்கள்!” என்று சூதன் ஒருவன் சொன்னான். “வேங்கைக்காடு பூத்ததுபோல! முகில்நிரைகளில் செவ்வொளி எழுந்ததுபோல!”

முதற்காலையின் ஒளியில் சாலையைப் பார்க்க வந்த சுரேசர் திகைத்து விழிவிரித்து நின்றுவிட்டார். “யானைகளா!” என்றார். உடனே புரிந்துகொண்டு “தெய்வங்களே” என்றார். நீள்மூச்செறிந்தபடி நோக்கிக்கொண்டே நின்றார். “அவை எங்கும் செல்லவில்லை. இங்கேயே இருந்திருக்கின்றன. நம் காப்பறையின் இருளுக்குள்…” அவர் சம்வகையின் தோளைப் பற்றிக்கொண்டு “நீ அறிந்திருப்பாய், இந்நகரம் மண்ணுக்குள் புதைந்த பல்லாயிரம் யானைகளால் தாங்கப்படுகிறது என்பார்கள். அவை அங்கிருந்து இங்கே எழுந்துவந்துவிட்டதுபோல் தோன்றுகிறது” என்றார். சம்வகை புன்னகைத்தாள். அவர் கைகளைக் கூப்பியபடியே அந்தச் சாலையில் சென்றார். உணர்வெழுச்சியுடன் “இது போதும்…

அவரை வரவேற்க மண்ணுக்குள் வாழும் மூதாதை யானைகள் எழுந்துள்ளன. இது போதும்” என்றார்.

யுயுத்ஸூதான் முதலில் அஸ்தினபுரிக்கு வந்தான். சம்வகை அவன் சாலையில் வருவதை கோட்டை மேலிருந்து கண்டு கீழிறங்கி வந்தாள். அவன் அவளைக் கண்டதும் புரவியிலிருந்து இறங்கி “அவர்கள் கங்கைப்படித்துறையில் வந்து இறங்கிவிட்டனர். அங்கே அம்பையன்னைக்கு குருதிக்கொடை அளித்து பூசை நிகழ்கிறது. அதை முடித்துவிட்டு தேர்களில் இங்கே வருவார்கள்” என்றான். சம்வகை “எனில் அவர்கள் இங்கே வந்தணைய வெயில் ஏறிவிடும்” என்றாள். “நற்பொழுது அல்லவா?” என்று யுயுத்ஸூ கேட்டான். “ஆம், இன்று அந்திவரை நற்பொழுது என்றுதான் சொன்னார்கள்” என்று அவள் சொன்னாள். அவன் பெருமூச்சுவிட்டு “இந்த நாளை சாகும்வரை மறக்கப்போவதில்லை” என்றான். அவள் அவன் அவ்வாறு தனிப்பட்ட முறையில் பேசுவதை எதிர்பார்க்கவில்லை. ஆகவே பேசாமல் நின்றாள்.

“நேற்று மாலை தொடங்கியது இந்த நாள்... இரவும் பகலும்” என்று அவன் சொன்னான். “ஒவ்வொரு கணமும் அலைக்கழிதல். நகர்நுழைவுக்கான பொழுது இது என தௌம்யர் வகுத்தார். ஆனால் நகர்நுழைவுக்குரிய சூழல் இங்கில்லை என செய்தி வந்தது. நகரிலிருந்து மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்றார்கள். அரசர் தயங்கினார். ஆனால் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிட்டன என்று சுரேசரின் செய்தி வந்தது. அது அவருக்கு துணிவை அளித்தது. கிளம்புவதற்கான அனைத்து

ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருந்தபோது ஒரு சூதரின் பாடலை அவர் கேட்டார். அச்சூதர் அவர் காதுபட வேண்டுமென்றே பாடியிருக்கலாம்.”

அந்தச் சூதர் விழியற்றவர். விழியற்ற சூதர்கள் அச்சமூட்டும் ஆழம்கொண்டவர்கள். அஸ்தினபுரியில் யுதிஷ்டிரனுக்கு தடைகளே இல்லை என்று ஒரு பாடல். அவர் கடலில் காற்றுபோல செல்கிறார். அவரை தடுக்க எவருமில்லை. அவர் முன் நிற்க எவருமில்லை. அவரன்றி எவரும் நகரில் இல்லை. அந்த வஞ்சப்புகழ்ச்சியைக் கேட்டு அரசர் உளமொடுங்கிவிட்டார். “நான் நகர்நுழையப் போவதில்லை!” என்று சொல்லி சோர்ந்து அமர்ந்தார். “இளையோர் எவரேனும் முடிசூடட்டும்” என்றார். சகதேவன் “எங்களில் எவரும் எந்நிலையிலும் முடிசூடப் போவதில்லை என நீங்களே அறிவீர், மூத்தவரே” என்றார். “எனில் யுயுத்ஸு முடிசூடட்டும், வசைபெற்று நான் அரசாளப்போவதில்லை” என்று அரசர் சொன்னார்.

“இத்தனை காத்து, இத்தனை இழந்து அடைவது இந்த வசை மட்டும்தானா?” என்று சொல்லி விம்மி அழுதார். அவரை எப்படித் தேற்றுவதென்று தெரியவில்லை. கிளம்புவதற்குரிய ஆணைகளைக் காத்து ஊரே படகுத்துறையில் நின்றிருந்தது. இறுதியாக பீமசேனன் வந்தார். “ஏன் கிளம்பவில்லை?” என்று கேட்டார். நிகழ்ந்தவற்றைச் சொன்னதும் சினம்கொண்டு கூச்சலிட்டார். “மூத்தவரே, நாம் களம்வென்று அடைந்தது நம் நகர். அதை கைவிடும் உரிமை உங்களுக்கில்லை. உங்கள்பொருட்டு களம்பட்டவர்கள் அனைவரும் இதோ நுண்வடிவில் நம்மைச் சூழ்ந்து நின்றிருக்கிறார்கள். அந்நகரை ஆண்டு அங்கே வளமும் ஞானமும் பொலியச் செய்தாலொழிய

உங்கள் கடன் நிகராகாது. துறந்து செல்லலாம். செல்லுமிடமெல்லாம் அக்கடன் கொடுந்தெய்வமென பின்தொடர்ந்து வரும்” என்றார்.

அச்சொற்கள் அரசரை நிலைமீளச் செய்தன. “ஆம், என் கடனை நான் துறக்கமுடியாது” என்றார். “அச்சுமையுடன் நான் எங்கும் செல்லமுடியாது” என நீள்மூச்செறிந்தார். என்னிடம் “சரி, கிளம்புவோம்” என்றார். நான் வெளியே ஓடி ஆணைகளை பிறப்பித்தேன். படகில் வரும் வழியிலும் இதுவே பேச்சு. “அங்கே எவர் இருக்கிறார்கள்? என் குடியினர் என்னை ஏன் கைவிட்டனர்? யாதவர்கள் கூடவா அங்கே இல்லை?” நான் சொல்லிச்சொல்லி அலுத்துவிட்டேன். அவர் எதிர்பார்ப்பது என்ன என்று தெரியவில்லை. “என் குடிகள் நான் நகர்நீங்கும்போது உடன் வந்தவர்கள். எனக்காகக் காத்திருப்பதாக சொல்லளித்தவர்கள். அவர்கள் எப்படி என்னை விட்டுச்சென்றார்கள்?”

தௌம்யர் வழியில் படகுத்துறையில் அமர்ந்த அம்பையன்னைக்கு குருதிபலி கொடுத்து நகர்மீள வேண்டும் என்றார். அதைக் கேட்டு மீண்டும் அரசர் சினம்கொண்டார். “அவள் என் அன்னை அல்ல. அவள் உரைத்த பழிச்சொல்லால் அழிந்தது என் குலம். என் நகர் பாழடைந்தது. அவளுக்குரிய குருதியை அவள் கொண்டுவிட்டாள். இனியும் அடங்கவில்லை அவள் எனில் என் நெஞ்சு பிளந்து குருதிகொள்ளட்டும்... ஒருபோதும் அவள் முன் நான் கைகூப்பி நிற்கமாட்டேன்” என்று கூவினார். “அரசே, அவள் நம் அன்னை. நம் குடித்தெய்வமென அவளை வழிபடுகிறோம். தெய்வங்களை நாம் வழிபட நமக்கு அவை நன்றுசெய்யவேண்டும் என்பதில்லை. அவை தெய்வங்கள் என்பதே போதும்” என்றார்

தௌம்யர். “தெய்வங்களின் பாதையை மானுடர் அறியமுடியாது” என்று நான் சொன்னேன்.

“முடியாது, என்னால் அவள் முன் ஒருபோதும் தலைகுனிய முடியாது. அவள் முன் சென்றுநின்றால் ஒருவேளை நான் வசைச்சொல்லையே உதிர்க்கக்கூடும்” என்று அரசர் சொன்னார். “அவளை வழிபட்டுத்தான் நகர்நுழைய வேண்டும் என்றால் நகர்நுழைவே தேவையில்லை. திருப்புக படகை!” என்று கூவினார். பின்னால் வந்த படகில் இளைய யாதவர் இருந்தார். நான் அவரிடம் சென்று சொன்னேன். அவர் அரசரிடம் வந்து “அன்னையை வணங்கிச் செல்க, அரசே!” என்றார். புன்னகையுடன் “நான் கொண்ட அளவுக்கு குருதி அவள் கொள்ளவில்லை அல்லவா?” என்றார். அரசர் திகைத்துவிட்டார். கைகள் நடுங்க தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.

“படகுத்துறைவரை வந்தபோது நான் உணர்வலைகளால் களைத்திருந்தேன். அங்கே பூசனை நிகழத்தொடங்கியதும் நேராக கிளம்பி இங்கே வந்தேன். பூசனை முடிந்திருக்கும், அவர் வந்துகொண்டிருக்கிறார் என்றே நம்புகிறேன். ஆனால் வழியில் எதுவும் நிகழக்கூடும்” என்றான். “இளைய யாதவரும் வருகிறாரா?” என்று சம்வகை கேட்டாள். “இல்லை. அவரும் இளைய பாண்டவர் அர்ஜுனனும் நகர்நுழையவில்லை. அவர்கள் துரோணரின் குருநிலைக்குச் செல்கிறார்கள். பிற நால்வரும் நகர்நுழைகிறார்கள்” என்று யுயுத்ஸு சொன்னான். “இங்கே நீங்கள் என்ன செய்துவைத்திருக்கிறீர்கள்? அரசர் இன்றிருக்கும் உளநிலையில் அவர் எண்ணுவதென்ன என்று எவரும் சொல்லமுடியாது. அவருடைய உள்ளத்திலிருப்பது மக்கள்திரண்டு பொலிந்த பழைய அஸ்தினபுரி.”

யுயுத்ஸு அவளிடம் பேசியதனால் மெல்ல தன் உணர்வுகளிலிருந்து விடுபட்டான். “இங்கு வந்தால் சற்றே எளிதாகிறேன். இந்நகரில் நானிருந்த பழைய நாட்கள் நினைவில் எழுகின்றன. கோட்டைவாயிலைக் கண்டதுமே இயல்பாகிவிட்டேன். உண்மையில் கோட்டையைக் கண்டதுமே உன் நினைவை அடைந்தேன்” என்றான். அதன் பின்னர்தான் அவன் யானைநிரையைக் கண்டான். “என்ன இது!” என்றான். “என்ன இது? எங்கிருந்தன இவை?” அவன் உடல் நடுங்கியது. “யானைகள் என்றே எண்ணினேன்… தெய்வங்களே… யானைகள் போலவே தோன்றுகின்றன.” அவன் கைகளை நெஞ்சோடு சேர்த்து நின்றுவிட்டான். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. வாய் மூச்சுக்கென திறந்து மூடியது.

பின்னர் அவன் வெறிகொண்டு அவளை நோக்கி கூவினான். “எவர் செய்தது இதை? அகற்றுக… உடனே அகற்றுக…” என்று கூச்சலிட்டான். “இவை இங்கிருக்கலாகாது… இவற்றைக் கண்டால் அரசர் அஞ்சி நிலையழிந்துவிடக்கூடும்.” சம்வகை “ஏன்?” என்றாள். “இவை இந்நகரைக் கட்டிய யானைகள்… இந்நகரின் ஆழத்தில் வாழும் யானைகள்” என்று அவன் கூவினான். “மூதாதை யானைகள்! அவை திரண்டு வந்து நின்றிருக்கின்றன…” சம்வகை “ஆம், அவை எழ விழைந்தன. அந்த ஆணையை எனக்கு அளித்தன” என்றாள். ”அவற்றை அவரால் எதிர்கொள்ள முடியாது… வேண்டாம். என் நெஞ்சே நடுங்குகிறது” என்றான் யுயுத்ஸு. “இளவரசே, அவை மூதாதையர் என்றால் அவற்றுக்கு நாம் ஆணையிட முடியாது. அவை அங்குதான் இருக்கும்” என்று சம்வகை சொன்னாள். யுயுத்ஸு அவளை இமைக்கா விழிகளுடன் நோக்கினான். “அரண்மனைக்குச் செல்க! அங்கே இயற்றவேண்டியவற்றை ஒருக்குக!” என்று சம்வகை புன்னகையுடன் சொன்னாள்.

“இவ்வழியே செல்ல அஞ்சுகிறீர்கள் என்றால் இதோ வடக்குவாயில் வழியாக சுற்றிச் செல்லலாம்.” யுயுத்ஸு அவளை நோக்கி தலை நடுங்க உதடுகள் இறுக சில கணங்கள் நின்றுவிட்டு புரவியில் ஏறிக்கொண்டான்.

# களிற்றியானை நிரை - 12

### பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 3

சம்வகை கோட்டைமேல் காவல்மாடத்தில் நின்று நோக்கிக்கொண்டிருந்தாள். அவளருகே நின்றிருந்த சந்திரிகை “அரசரின் தேர் அணுகுவதை தெரிவிக்க அங்கே காவல்மாடத்தில் பெருமுரசுகள் இல்லை” என்றாள். “அனைத்துப் பெருமுரசுகளும் இங்கே கொண்டுவரப்பட்டுவிட்டன” என்று அப்பால் நின்றிருந்த காவல்பெண்டு சொன்னாள். சம்வகை ஒன்றும் சொல்லாமல் இடையில் கை வைத்துப் பார்த்தபடி நின்றிருந்தாள். விழிதொடும் தொலைவுவரை காட்டின் இலைத்தழைப்பு காற்றில் கொந்தளித்துக்கொண்டிருந்தது. “அங்கே கொம்பொலி எழும். இருவர் இங்கே நின்று நோக்கிக்கொண்டிருங்கள்” என ஆணையிட்டுவிட்டு அவள் படிகள் வழியாக கீழிறங்கினாள்.

கீழே அவளைக் காத்து ஏவற்பெண்டிரும் காவலர்களும் நின்றிருந்தனர். அவள் புரவியை நோக்கி செல்ல அவளுடன் நடந்தபடி அவர்கள் நகரில் நிகழ்வனவற்றை சொன்னார்கள். திரட்டப்பட்ட மக்கள் அனைவரும் உரிய இடங்களில் நிறுத்தப்பட்டுவிட்டனர். முரசுகள் பீடங்களில் அமைந்துவிட்டன. மாளிகைமுகப்புகளிலும்

காவல்மாடங்களிலும் அரிமலரும் மஞ்சள்பொடியும் குவிக்கப்பட்டு அள்ளிவீச ஏவலர் அமர்த்தப்பட்டுள்ளனர். அவள் நின்று திரும்பி கைவிடுபடைகளின் மேடையை பார்த்தாள். அவள் பார்த்த பின்னரே மற்றவர்கள் அதை நோக்கினர். ஏவற்பெண்டு “கைவிடுபடைகளின் பீடங்கள்… அம்புகள் ஒழிந்தபின் அவற்றை எவரும் அணுகவில்லை” என்றாள்.

சம்வகை சில கணங்கள் அவற்றை நோக்கியபடி நின்றாள். பின்னர் “இங்கே சில தோரணங்களும் பட்டுப் பாவட்டாக்களும் கட்டப்படட்டும்” என்றாள். பின்னர் புரவியில் ஏறிக்கொண்டாள். மீண்டும் திரும்பி நோக்கி “வேண்டாம், அவை அவ்வாறே இருக்கட்டும்…” என்றாள். “இல்லை தலைவி, தாங்கள் சொன்ன பின்னர்தான் பார்க்கிறோம். நாண் தளர்ந்த பெருவிற்கள் கண்ணுக்கு உவப்பானவையாக இல்லை” என்றாள் காவற்பெண்டு. “அது அங்ஙனமே இருக்கட்டும்… அது நம் நகரின் அடையாளம்” என்றபின் சம்வகை புரவியை செலுத்தினாள். சாலையின் விளிம்பை அடைந்தபின் திரும்பிப் பார்த்தாள். அந்த மேடைகள் அத்தனை பெரியவை என்பதை அப்போதுதான் உணர்ந்தாள். அவற்றின்மேல் நாண் தொய்ந்த பெருவிற்கள் கொடிமரங்கள்போல எழுந்து நின்றன. சகடங்கள் துருப்பிடித்து அசைவிழந்திருந்தன.

அஸ்தினபுரியின் அனைத்து ஒருக்கங்களும் செவ்வனே முடிந்துவிட்டிருந்தன. அவள் மையச்சாலையினூடாகச் சென்றபோது இருபுறமும் யானைகள் மத்தகம் உலைத்து நின்றன. நேர்விழிநோக்குக்கு அவை வெறும் அணிகள் என்று தோன்றினாலும்கூட சற்றே விழிவிலக்கி வேறொன்றை நோக்குகையில் அவற்றை யானைநிரை என்றே உள்ளம் உணர்ந்தது. ஒவ்வொரு கணமும் விழி திரும்பி அவற்றின்

ஒட்டுமொத்தத்தை சந்திக்கையிலும் திடுக்கிட்டது. அவள் அரண்மனையைச் சென்றடைந்தபோது யானைநிரை நடுவே வந்த உணர்வையே உள்ளம் கொண்டிருப்பதை உணர்ந்தாள். “இளவரசர் யுயுத்ஸு என்ன செய்கிறார்?” என்று ஏவல்பெண்டிடம் கேட்டாள். “அவர் தன் அறைக்குச் சென்று படுத்துவிட்டார்” என்று அவள் மறுமொழி சொன்னாள். “அவர் ஏனோ நடுங்கிக்கொண்டிருக்கிறார். அறைக்குள் தாழிட்டுக் கொண்டிருக்கிறார்.”

சுரேசரிடம் அவள் அனைத்தும் முறையாக நிகழ்வதை சொன்னாள். சுரேசர் பதற்றங்கள் அனைத்தும் அடங்க அமைதியாகத் திகழ்ந்தார். “செய்வன அனைத்தையும் செய்துவிட்டோம். இனி எதையும் திருத்தவோ மாற்றவோ பொழுதில்லை. நாம் செய்யக்கூடுவன ஏதுமில்லை. இனி தெய்வங்களுக்கு அனைத்தையும் அளித்து நம் பணியை மட்டும் ஆற்றுவோம்” என்று அவர் அனைவரிடமும் சொல்லிக்கொண்டிருந்தார். அவள் நிற்பதைப் பார்த்து திரும்பி “சொல்” என்றார். சம்வகை “கோட்டைமுகப்பில் வாளுடன் நின்று அரசரை வரவேற்க படைத்தலைவர் ஒருவர் தேவை என்று சொல்லியிருந்தேன். இங்கே முதன்மைக் காவலர்தலைவர்கள் எவருமில்லை” என்றபின் “நாம் முன்னர் முடிவுசெய்திருந்ததன்படி இளவரசர் யுயுத்ஸுவே முன்னின்று அரசரை வாள்தாழ்த்தி வரவேற்கவேண்டும். அவருடைய பொறுப்பில்தான் இந்த அரண்மனையும் நகரும் இன்று உள்ளது என்பதனால் அதுவே முறை. ஆனால் அவர் இன்றிருக்கும் நிலையில் அது இயலுமெனத் தோன்றவில்லை” என்றாள். சுரேசர் அதை புரிந்துகொண்டு “ஆம், வேறு எவர்?” என்று சூழ நோக்கியபின் “நீயே கோட்டைத்தலைவி. நீ சென்று வாள்தாழ்த்தி வரவேற்பு அளி” என்றார். சம்வகை திகைத்து

“நானா?” என்றாள். “ஏன், உன் பொறுப்பில் அல்லவா கோட்டை இன்று உள்ளது?” என்றார் சுரேசர்.

“ஆம், ஆனால் இன்றுவரை பெண்கள் அச்சடங்கை செய்ததில்லை” என்றாள் சம்வகை. “மெய், ஆனால் இன்றுவரை இன்றுள்ள நிலைமை இங்கே உருவானதுமில்லை” என்றார் சுரேசர். “ஆனால்…” என்று மீண்டும் தயங்கிய சம்வகை “நான் ஷத்ரிய குலத்தவளும் அல்ல. நான் அவ்வாறு செய்வதற்கான மரபுமுறைமையே இங்கில்லை” என்றாள். “இல்லையென்றால் உருவாகட்டும்…” என்றார் சுரேசர். “நீயே அதை செய்யவேண்டும். பழைய வேதம் அகன்றது, புதிய வேதம் எழுந்துள்ளது. இது அனைவருக்கும் வழி தெளிப்பது. ஒவ்வொருவருக்கும் மெய்மையை தேடிச்சென்று ஊட்டுவது. அசுரருக்கும் அரக்கருக்கும் நிஷாதருக்கும் கிராதருக்கும் நாகருக்கும் உரியது. பிறகென்ன?” என்றார். சம்வகை மேலும் ஏதோ சொல்ல நாவெடுக்க “இதுவே அறுதி முடிவு. நீ சென்று அரசரை எதிர்கொள். ஊர் அறியட்டும், அனைத்தும் இங்கே மாறிவிட்டிருக்கின்றன என்று…” என்றார்.

சுரேசர் அச்சொற்களால் அவரே ஊக்கம் கொண்டார். “ஆம், நீ முன்னிற்பதை அனைவரும் காணட்டும். அவர்கள் எண்ணுவதைவிட பெரிய மாற்றங்கள் வரப்போகின்றன என அவர்கள் அறியட்டும். நேற்றைய முறைமைகள் இனி இல்லை. நேற்றைய தளைகளும் இல்லை. இது புதிய சொல் எழுந்த காலம். போரை மட்டுமே மக்கள் அறிந்திருக்கிறார்கள். போரில் அழிந்தவை பழையவை, மட்கியவை. காட்டெரியில் மண்ணில் புதைந்த விதைகள் அழிவதில்லை. அவை முளைத்தெழுந்து கிளை பரப்புவதற்குரிய வான்வெளியையே நெருப்பு உருவாக்கி அளிக்கிறது… அதை அனைவரும் அறியவேண்டுமென்றால் நீ

வாளுடன் முன்னிற்கவேண்டும்.” அவர் திரும்பி அருகே நின்ற ஏவலனிடம் “காவலர்தலைவி கவச ஆடை அணியட்டும். முழுதணிக்கோலத்தில் உடைவாளுடன் அரசரை எதிர்கொண்டு வரவேற்கட்டும்” என்றார்.

ஏவலன் தலைவணங்க சம்வகை “அவ்வாறே ஆகுக!” என்றாள். “உன் உடைவாள் எளிய காவல் படைக்கலம். அரசச் சடங்குகளுக்குரியது அல்ல. எங்கே சாரிகர்?” பல குரல்கள் ஒலிக்க மற்றொரு அறையிலிருந்து சாரிகர் ஓடிவந்தார். “கருவூலத்திற்குச் செல்க! காவலர்தலைவிக்கு அஸ்தினபுரியின் படைத்தலைவர்களுக்குரிய அணிவாட்களில் ஒன்றை எடுத்து கொடு.” அவர் மேலும் எண்ணம் ஓட்டி “படைத்தலைவர் வஜ்ரதந்தருக்குரிய நீண்ட அணிவாள் ஒன்று உண்டு. கைப்பிடியில் எழுபத்திரண்டு மணிகள் பொருத்தப்பட்டது. அஸ்தினபுரியின் அமுதகல முத்திரை பொறிக்கப்பட்டது. அதை எடுத்து காவலர்தலைவியிடம் கொடு” என்றார். சாரிகர் சம்வகையை நோக்கி புன்னகைபுரிந்துவிட்டு “ஆணை” என்றார்.

சுரேசர் முகம் மலர்ந்து, உள எழுச்சியின் விளைவான மெல்லிய திக்கலுடன் “வாள் மட்டுமல்ல, அருமணிகள் பொருத்தப்பட்ட கவசங்களும் தோளிலைகளும் அங்கு உள்ளன. அவற்றையும் எடுத்து காவலர்தலைவி அணியும்பொருட்டு அளி. அனைத்து அணிகளும் தேவை… என் ஆணையை ஓலையில் பொறித்துக்கொள். அதை கருவூல அமைச்சரிடம் அளித்து அங்கே பதிவுசெய்துகொள்ளச் சொல்” என்றார். சம்வகை எண்ணங்கள் அனைத்தும் அமிழ்ந்து மறைந்து உள்ளம் ஒழிந்துகிடப்பதுபோல் உணர்ந்தாள். சுரேசர் “சொல், என்ன எண்ணுகிறாய்?” என்றார். “இல்லை, இளவரசர் யுயுத்ஸுவிடம் ஒரு சொல் உசாவுவது நன்று” என்றாள். “இது

என் முடிவு, நான் அரசமுறைமைகளை வகுக்கும் நிலைகொண்ட அந்தணன், ஆகவே ஆணைகளை பெற்றுக்கொள்வதில்லை" என்றார் சுரேசர். சம்வகை தலைவணங்கினாள்.

அவள் வெளியே வந்து நிற்க உள்ளே சுரேசர் ஆணையைச் சொல்லி கற்றுச்சொல்லிகள் அதை எழுதிக்கொண்டார்கள். அவள் வெளியே பொழிந்துகொண்டிருந்த இளவெயிலை நோக்கியபடி நின்றாள். அவளுக்குள் எந்த எண்ணமும் எழவில்லை. இத்தருணத்தில் உவகை கொள்ளவேண்டுமா என்ன? இது தன் குலத்தோர் தலைமுறை தலைமுறைகளாக காத்திருந்த தருணமாக இருக்கலாம். இப்போது விண்ணுலகில் அவர்கள் மகிழ்ந்து கொண்டாடலாம். காற்றில் அவர்களின் வாழ்த்துக்கள் நுண்வடிவில் நிறைந்திருக்கலாம். இப்போது தந்தை இருந்திருந்தால் என்ன செய்வார்? அழுது தளர்ந்து விழுவார். மூதாதையரின் இடுகாட்டுக்குச் சென்று மண்படிய விழுந்து வணங்குவார். தன் குடியினர் தெருவெங்கும் நிறைத்து களியாடுவார்கள். ஆனால் எவருமே அஸ்தினபுரியில் எஞ்சியிருக்கவில்லை. அவள் உள்ளத்தில் அவ்வெண்ணங்கள்கூட எவருடையனவோ என்றே தோன்றின. அவை எவ்வகையான உணர்வெழுச்சியையும் உருவாக்கவில்லை.

சாரிகர் வெளியே வந்து "செல்வோம்" என்றார். அவள் அவருடன் நடந்தாள். "கருவூலக் காவலர் திகைக்கப்போகிறார்" என்று அவர் சொன்னார். "அவர்கள் புதைந்திருக்கும் மானுடர். அவர்களுக்கு வெளியே என்ன நிகழ்கிறதென்று தெரியாது." அவள் ஒன்றும் சொல்லாமல் அவருடன் நடந்தாள். "ஆனால்

அங்குள்ள உடைவாள்களும் கவசங்களும் குறடுகளும் எல்லாமே ஆண்களுக்குரியவை. பெரும்பாலானவர்கள் பயின்று உடல்பெருத்தவர்கள். பெண்களுக்குரிய படைக்கலன்களும் கவசங்களும் இருக்குமா என்பது ஐயத்திற்குரியது. இளமைந்தர்களுக்குரியவை இருக்கலாம். அவை ஒருவேளை பெண்களுக்கும் பொருந்துவனவாக இருக்கக்கூடும். எப்படியாயினும் ஏதோ ஒரு படைக்கலம் உனக்குரியது அங்கே இருக்கும்... தேடவேண்டும்" என்றார்.

அரண்மனைக்குள் நுழைந்து ஓலையையும் முத்திரைக் கணையாழியையும் காட்டி ஒப்புதல் பெற்று கருவூலத்திற்குச் செல்லும் படிக்கட்டில் இறங்கிச்சென்றபோது "உண்மையில் இந்த இடம் என்னை அச்சுறுத்துகிறது. திருமகள் குடிகொண்டிருக்கும் இடம். ஆனால் குருதிமணம் வீசுவதாக எனக்கு ஒரு நினைப்பு" என்றார் சாரிகர். அவள் அந்தச் சுவர்களின் தண்மை ஏறிவருவதை உணர்ந்தாள். கருவூலக்காப்பாளரான சிற்றமைச்சர் சுந்தரர் அங்கே இருந்தார். அவர் சாரிகர் அளித்த ஓலையை நோக்கிவிட்டு சம்வகையை ஏறிட்டுப் பார்த்தார். "பெண்களுக்குரிய படைக்கலங்களோ கவசங்களோ இங்கே இல்லையே" என்றார்.

"சிறுவர்களுக்குரியது இருந்தால் அளிக்கலாமே" என்றார் சாரிகர். "அமைச்சரே, படைக்கலங்களும் கவசங்களும் அந்தந்த பணிநிலைகளுக்கும் அரசுப்பொறுப்புகளுக்கும் உரியவை. இங்குள்ள சிறார்படைக்கலங்களும் கவசங்களும் அரசகுடியினருக்குரியவை. அரசகுடியினருக்குரிய படையணிகளை காவலர்தலைவர்களோ படைத்தலைவர்களோ அணிய முடியாது" என்றார் சுந்தரர். சாரிகர் எரிச்சல் அடைந்து "இது அமைச்சரின் ஆணை. அந்த ஓலையில் இருப்பவற்றை

செய்வோம்” என்றார். “ஆம், எனக்கென்ன. நான் வஜ்ரதந்தரின் படைக்கலங்களையும் கவசங்களையும் அளிக்கிறேன். எவர் கண்டது, ஏதேனும் தெய்வ அருளால் இந்தப் பெண் அவற்றுக்கேற்ப வளரவும் கூடுமே” என்றார் சுந்தரர்.

சிறு கைவிளக்குடன் காவலன் உள்ளே செல்ல உடன் சுந்தரர் சென்றார். சாரிகரும் உடன்செல்ல சற்று தயங்கியபின் சம்வகையும் உள்ளே சென்றாள். “இது பெரும் கருவூலம். இங்கே வந்ததுமே ஒவ்வொன்றும் பழைமை கொள்கின்றன. அனைத்தையும் மூடியிருக்கும் புழுதியால் வாங்கிக்கொள்ளப்படுகின்றன” என்று அவர் சொன்னார். நீண்ட இடைநாழியின் இருபுறமும் உயரம் குறைந்த இரும்புக் கதவுகள் பெரிய நாழிப்பூட்டுகள் சூடி புழுதிபடிந்து இறுகி அமைதியில் நின்றிருந்தன. அவர் ஓர் அறையின் முன் நின்று “இதுதான்” என்றார். ஏவலன் அந்தக் கதவின்மேல் படிந்திருந்த புழுதியை மென்மயிர் துடைப்பத்தை வீசி அகற்றினான். சுந்தரரும் சாரிகரும் மேலாடையால் முகத்தை மூடிக்கொண்டார்கள். சாரிகர் இருமுறை இருமினார்.

சுந்தரர் நாழிப்பூட்டுக்குள் தாழ்க்கோலை விட்டு அதற்குரிய நுண்சொல்லை நினைவுகூர்ந்து ஓசையின்றி வாய் அசைய தன்னுள் சொன்னபடி திருப்பினார். எட்டுமுறை வெவ்வேறு வகையில் திருப்பியபோது உள்ளே மெல்லிய மணியோசை கேட்டது. “தெய்வம் நம் சொல்லை ஏற்றுக்கொண்டுவிட்டது” என்று அவர் சொன்னார். அவர் விலக ஏவலன் கதவை தள்ளித்திறந்தான். ஓர் அடி அளவு தடிமன் கொண்டிருந்த இரும்புக்கதவு பித்தளை கீல்களில் ஓசையின்றி சுழன்று திறந்தது. மண்டியிட்டு உள்ளே செல்லவேண்டுமா எனத் தோன்றும்படி அது சிறிதாக இருந்தது. சுந்தரர் “சில

தருணங்களில் நம் சொற்களை இத்தெய்வங்கள் முற்றிலும் மறுத்துவிடும். இங்குள்ள கருவூல அறைகளில் பாதிக்குமேல் எப்போதும் எவராலும் திறக்கப்படாதவை” என்றார்.

ஏவலன் தன் கைவிளக்கை கையில் இருந்த கழியில் கட்டி அறைக்குள் நீட்டினான். சுடர் அணையவில்லை என்று கண்டு திரும்பி தலையசைத்தான். “உள்ளே தீயதெய்வங்கள் குடிகொள்ளக்கூடும். நம் வரவை அவை விரும்பவில்லை என்றால் ஓரிரு கணங்களிலேயே நம் மூச்சை அவை உறிஞ்சிவிடும். விளக்கு எரிகிறதென்றால் அங்கே திருமகள் குடியிருக்கிறாள் என்று பொருள். மானுடரை அவள் காப்பாள்” என்றார் சுந்தரர். உள்ளே செல்ல பக்கவாட்டில் நின்று வலக்காலை உள்ளே தூக்கி வைத்து உடலை நன்றாக வளைத்து நுழையவேண்டியிருந்தது. சாரிகரும் நுழைந்தபின் சம்வகை உள்ளே சென்றாள். “ஒவ்வொரு பொருளுக்கும் அதற்குரிய தெய்வங்கள் உண்டு. படைக்கலங்களில் பல தெய்வங்கள் வாழ்கின்றன. எனில் இது தெய்வங்கள் செறிந்த இருள்” என்றார் சுந்தரர்.

காவலன் அந்த விளக்கை கொண்டுசென்று சுவரிலிருந்த ஆடித்தொகை முன் வைத்தான். அதுவரை அந்த நீள்சதுரவடிவமான அறையின் கல்லால் ஆன கூரைமேல் வளைந்து நின்றிருந்த அவர்களின் நிழல்கள் குறுகி கீழிறங்கின. அங்கிருந்த பேழைகளின் வெண்கல முனைகள் ஒளிகொண்டன. பின்னர் மரப்பரப்புகள் மின்கொண்டன. சுந்தரர் ஒவ்வொரு பெட்டியாக தொட்டுச்சென்று ஒன்றின் முன் நின்று “இதுதான்… அண்மையில் திறக்கப்பட்டதுதான்… ஆகவே பூட்டு ஊடுவதற்கு வாய்ப்பில்லை” என்றார். எளிதில் பூட்டு திறந்துகொண்டது. அவர் கைகாட்ட ஏவலன் ஒரு சிறிய

மரப்பெட்டியை எடுத்துப்போட்டு அதன்மேல் ஏறி நின்று உள்ளிருந்து பொருட்களை எடுத்து வெளியே வைத்தான். பொற்செதுக்குகள் கொண்ட இரும்பு உறைகளுக்குள் செருகப்பட்ட உடைவாட்கள் விந்தையான மீன்கள் போலிருந்தன. அவற்றின் பிடிகளிலிருந்த மணிகள் விளக்கொளியை ஏற்று கனல்கொள்ளத் தொடங்கின. கவசங்களின் வளைவுகளில் சுடர் மின்னியது.

கவசங்கள் துண்டுபட்ட உடலுறுப்புகள் என திகைப்பூட்டின. பின்னர் இருளுக்குள் எஞ்சிய உடலை விழிகள் நிரப்பிக்கொள்ள அங்கே மண்மறைந்த மானுடரின் உடல்கள் இருப்பதுபோலத் தோன்றியது. விழிதிருப்பி மீண்டபோது அவர்கள் வெட்டுண்டு குவிக்கப்பட்டிருப்பதுபோல உளம் பதறியது. சாரிகர் “போர்க்களம்போல் தோன்றுகிறது” என்றார். சுந்தரர் “மெய்யாகவே களத்தில் வெட்டுண்ட உடலுக்கும் வெற்றுக்கவசங்களுக்கும் வேறுபாடு தெரியாது என்பார்கள்” என்றார். “உடல்கள் தங்கள் வடிவை விட்டுச்சென்றிருக்கின்றன. உடல் என்பது உள்ளுறையும் உயிர் மட்டுமல்ல. அவ்வுடல் என அமைந்த வடிவும் கூடத்தான். உயிர் அகன்றபின் அவ்வடிவு மட்டும் இங்கே நுண்வடிவில் எஞ்சுகிறது என்பார்கள்.” “இவ்விருளாழத்தில் அமர்ந்து நீங்கள் இத்தகைய நூல்களை பயிலத்தான் வேண்டுமா?” என்றார் சாரிகர்.

“இதுதான்” என்று சுந்தரர் சுட்டிக்காட்டினார். ஏவலன் எடுத்து வைத்த உடைவாள் மிக நீளமாக இருந்தது. சம்வகை குனிந்து அதை எடுத்துக்கொண்டாள். அவளுடைய மார்பளவுக்கு அது உயரம் கொண்டிருந்தது. அதன் கைப்பிடி மணிகள் செறிந்து ஒளிவிட்டன. அவள் அதைப் பற்றி உறையிலிருந்து இழுத்தாள். உள்ளிருந்து நீர்வழிந்து நீள்வதுபோல நீல ஒளியுடன் வாள்நா

வெளிவந்தது. “மிகக் கூரியது, உரிய வாள்பழக்கம் இல்லை என்றால் அதை வெளியே எடுக்காமலிருப்பதே நன்று” என்றார் சுந்தரர். சம்வகை அதை உருவி வெளியே எடுத்து சுடர் நோக்கி நீட்டினாள். அதில் விழுந்த செவ்வொளி அவள் முகத்திலும் உடலிலும் அசைந்தது. வாளை அவள் அசைக்க கூரைவழியாக மின்னிச் சென்றது.

“இது வழக்கமான இரும்பு அல்ல, இதை வெட்டிரும்பு என்பார்கள்” என்று சுந்தரர் சொன்னார். “கரியும் காரீயமும் வெள்ளீயமும் கலந்து உருவாக்கப்படுவது இது. உருக்கி வார்க்கப்பட்ட வாள்நா மெல்லமெல்ல குளிர்ந்து இறுகவைக்கப்படுகிறது. செம்பிழம்பு நிலையிலிருந்து கைபொறுக்கும் சூடுவரை வருவதற்கு ஒருமாத காலமாகும். அதன்பின் படிக உருளைகளால் தேய்த்து ஒளிரவைக்கிறார்கள். அப்போதே கூர்கொள்ளச் செய்வார்கள். வெம்மை அணைந்தபின் வெள்ளியொளி கொள்ளும். அதன்பின் எத்தனை வெட்டினாலும் முனை மழுங்குவதில்லை. எத்தனை காலமாயினும் வடுக்கொள்வதோ ஒளிமங்குவதோ இல்லை.” அவள் வாளை காற்றில் இருமுறை சுழற்றினாள். அது நாகச்சீறலுடன் சுழன்றது. தன் உலோக உறுதியை இழந்து பட்டுநாடாபோல ஆகிவிட்டதெனத் தோன்றியது. சுழற்சியை கூட்டியபோது வெள்ளித்திரையென ஆகியது. நீர்ப்படலம் என, ஒளிப்பரப்பு என ஆகி பின் நோக்கிலிருந்து மறைந்தது.

அவள் மீண்டும் அதை உறையிலிட்டபோது சுந்தரரின் முகம் மாறிவிட்டிருந்தது. “நீ நன்கு பயின்றிருக்கிறாய். மிக எளிதில் வாள் உனக்கு தன்னை அளித்துவிட்டது. இத்தகைய வாள்கள் எளிதில் தன்னை ஒப்புக்கொடுப்பதில்லை” என்றார். “இது வஜ்ரதந்தரின் வாள். அவர் வாள்திறன்மிக்க வீரர்.

இரக்கமற்றவர் என்றும் சொல்கிறார்கள்" என்றார் சுந்தரர். "ஷத்ரியப் பெருமிதம் கொண்டவர். போர்களில் ஷத்ரியர் அல்லாத குலத்தவர் பங்கெடுப்பதை விரும்பாதவர். போரில் கைப்பற்றப்படும் ஷத்ரியர் அல்லாதவர்களை அக்கணமே தலைவெட்டி கொன்றுவிட ஆணையிட்டிருக்கிறார். அவர்களை அடிமைகளாகக்கூட வாழவிடலாகாது என்பது அவருடைய கருத்து. படைக்கலம் எடுத்தவன் எப்போதுமே போர்வீரன்தான். படைக்கலமெடுத்த குலமிலிகள் அனைவருமே ஷத்ரியர்களுக்கு எதிரிகள் என்று முன்பு அவையிலேயே அறிவித்திருக்கிறார்."

சாரிகர் "பெண்கள் படைக்கலம் எடுப்பதை அவர் விரும்பியிருக்க வாய்ப்பில்லை" என்றார். "ஆம், அதுவே எனக்கும் விந்தையாக இருக்கிறது" என்றார் சுந்தரர். "அவர் பணியாற்றியது பேரரசி சத்யவதியின் படையில்" என்றாள் சம்வகை. "ஆம், உண்மை. அதை நான் எண்ணிப்பார்க்கவில்லை" என்றார் சுந்தரர். படைவீரன் எடுத்துவைத்த கவசங்களில் ஒன்றை கையில் எடுத்த சாரிகர் "மிகுந்த எடைகொண்டிருக்கிறது" என்றார். "இது ஒரு பகுதிதான். தோளிலைகளும் முதுகுக்காப்பும் புயக்காப்பும் மணிக்கைக் காப்பும் தொடையலகுகளும் தனித்தனியாக உள்ளன. அவர் பேருடலர்" என்றார் சுந்தரர். சாரிகர் திரும்பி சம்வகையை பார்த்துவிட்டு "இவள் எப்படி இத்தனை எடையை அணிந்துகொள்ளமுடியும்?" என்றார். சுந்தரர் "அதையே நானும் எண்ணினேன்" என்றார்.

"அணிந்துகொள்வேன்" என்றாள் சம்வகை. "உன்னால் அசையவே முடியாது" என்றார் சுந்தரர். "பார்ப்போம்" என்றாள் சம்வகை. "நீ அவற்றை அணிந்துகொண்டால் கூண்டுக்குள் இருக்கும் அணில்போல் தோன்றுவாய். நோக்குபவர் எவரும்

நகையாடும்படி தெரிவாய்” என்றார் சுந்தரர். “எவரேனும் இளிவரல் உரைக்கக்கூடும். இங்கே அனைவருமே இளிவரலுரைக்கும் உளநிலையில்தான் உள்ளனர். பெண்டிர்மேல் ஒவ்வாமைகொண்ட கிழவர்களுக்கும் குறைவில்லை.” சம்வகை “நான் இவற்றை அணிவேன்…” என்றாள். “ஆம், அமைச்சரின் ஆணை அது எனில் அவ்வாறே ஆகட்டும்” என்றார் சாரிகர். அவள் ஏவலனிடம் “இக்கவசங்களைத் துடைத்து முகப்பறைக்கு கொண்டுவருக!” என ஆணையிட்டாள். உடைவாளை மட்டும் தன் கையில் எடுத்துக்கொண்டாள்.

அவர்கள் திரும்பும்போது அமைதிகொண்டிருந்தனர். சாரிகர் “நான் விடைகொள்கிறேன், சுந்தரரே” என்றார். சுந்தரர் சம்வகையிடம் தலையசைத்து விடைகொடுத்தார். சம்வகை முகப்பறைக்கு வந்து அமர்ந்தாள். சாரிகர் “அரசரின் அணி நெருங்கிக்கொண்டிருக்கிறது என எண்ணுகிறேன்” என விடைபெற்றார். சம்வகை அந்த உடைவாளை மென்துகிலால் துடைத்துக்கொண்டிருந்தாள். துடைக்கத் துடைக்க அது மென்மைகொண்டது. அதன் பொற்செதுக்குகள் ஒளிவிட்டன. குளித்துவிட்டு வந்த சிறுகுழந்தை என்று அவளுக்குத் தோன்றியது. அதை விரலால் மெல்ல வருடிக்கொண்டிருந்தாள். அந்த அருமணிகள் மீன்விழிகள்போல, செவ்வரளி மொக்குகள்போல, நீர்த்துளிகள்போல, குருதிமணிகள்போல தெரிந்தன. ஒவ்வொரு அருமணியும் ஒவ்வொரு வடிவம். ஒவ்வொன்றும் ஒரு வண்ணம். ஆனால் அவை இணைந்து ஒரு மலர்வடிவை உருவாக்கியிருந்தன. மலர்வடிவல்ல. வேறொன்று. நன்கு அறிந்த ஒன்று.

அவள் வாளை உருவி அதன் கூர் மேல் தன் விரலை ஓட்டினாள். இழுத்துக் கட்டப்பட்ட பட்டுநூல் என அதன் கூர்வளைவு. அல்லது வீணை நரம்பு. அதை திருப்பி நோக்கினாள். ஒளிக்கு மட்டுமே அத்தனை கூர் இயல்வது என்று தோன்றியது. மிகுகூர் கொண்ட நா. ஒரு தொடுகையில் வெட்டித் துண்டுபடுத்தும் தன்மைகொண்டது. ஆனால் நீர் என தண்மையும் ஒளியும் கொண்டிருக்கிறது. அவள் தன் சுட்டுவிரலை அதன்மேல் வைத்து மெல்ல அழுத்தினாள். மெல்லிய எரிச்சல் ஏற்பட்டது விரலை அகற்றிக்கொண்டபோது குருதித்துளி ஊறி முழுத்துச் சொட்டியது. அவள் அக்குருதி மரத்தரையில் விழுந்து மலர்போல் சிதறுவதை பார்த்தாள். மீண்டும் வாள்முனையை பார்த்தாள். அது அக்கணம் வார்த்ததுபோல் தூய்மையாக இருந்தது.

# களிற்றியானை நிரை - 13

### பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 4

சம்வகை கவசங்கள் அணிந்துகொண்டு அறையைவிட்டு வெளிவந்தபோது எதிர்ப்பட்ட முதற்காவல்பெண்டு திகைத்து உடனே தலைவணங்கினாள். அவளில் நிகழ்ந்த அந்த அதிர்வை ஒரு கணத்தில் மிக அணுக்கமாக சம்வகை கண்டாள். அந்தக் கவசங்களை அவளுக்கு அணிவித்த ஏவல்பெண்டு “எடைமிக்கது” என்றாள். அவள் “உம்” என்றதும் மேற்கொண்டு பேசாமல் அவளுக்கு அதை அணிவித்தாள். முதலில் நெஞ்சக்கவசம். அது இரும்பாலானது. இரு இரும்புத் தகடுகளுக்கு நடுவே நுரைபோல கம்பிகள் பின்னி

அமைக்கப்பட்டது. அதை ஏவற்பெண்டு தோளில் பொருத்தும்போது அவ்வெடையால் இழுக்கப்பட்டு அவள் கால்கள் தள்ளாடினாள். முழு விசையாலும் உடலை இழுத்து நிலைகொள்ளவேண்டியிருந்தது.

முதுகுக்கவசத்தை அணிவித்தபோது நெஞ்சக்கவசத்தின் எடையை அது ஈடுசெய்தது. அவள் அக்கவசங்களின் அமைப்பை புரிந்துகொண்டாள். அவை ஒன்றோடொன்று நிகர்செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை அணிந்தவரின் உடலுக்கேற்ப அவை வடிக்கப்பட்டிருந்தமையால் அவருக்கு அவற்றை நிகர்செய்வது எளிதாக இருந்திருக்கும். அவள் விழிகளை மூடி தன் உடல்மேல் கவசங்கள் அளித்த எடையை உணர்ந்தாள். தோளிலைகள், புயக்காப்புகள், தொடைக்குவளைகள் என ஒவ்வொன்றும் இன்னொன்றை நிகர்செய்தன. அனைத்துக் கவசங்களையும் அணிந்த பின்னர் அவள் இடப்பக்கமாக இழுக்கப்பட்டவள்போல் உணர்ந்தாள். விழிகளை மூடியபோது புவிப்பரப்பே இடப்பக்கமாகச் சரிந்திருப்பதுபோல தோன்றியது. காலெடுத்து வைத்தபோது வலத்தோளில் உதைவிழுந்ததுபோல் அவள் இடப்பக்கமாக சரிந்து விழப்போனாள்.

காலூன்றி நிலத்தில் தன்னை உறுதிசெய்துகொண்டபோது ஓர் எண்ணம் எழுந்தது. அந்த வாளின் எடையையும் சேர்த்தே கவசம் வடிவமைக்கப்பட்டிருக்கவேண்டும். வலக்கைக்கு உகந்த முறையில் இடப்பக்கம் வாளை தொங்கவிட்டிருக்கக்கூடும். அவள் தன் கச்சையை திருப்பி அதிலிருந்த இரும்புக்கொக்கியை வலக்கை அருகே கொண்டுவந்தாள். வாளுக்காக கைநீட்டினாள். ஏவற்பெண்டு அளித்த வாளை வலக்கையருகே கச்சையில் கட்டிக்கொண்டு நின்றபோது உடல்

நிலைகொண்டதுபோலத் தோன்றியது. நன்றாக உளம்கணித்து மெல்ல காலடி எடுத்து வைத்தாள். அலைகொள்ளும் நீர்க்கலத்தை உடலெங்கும் ஏந்தியிருப்பதுபோல தள்ளாடினாள். இருமுறை அறைச்சுவர் வரை நடந்து வந்தபோது அவளுக்கு அந்த எடைகளின் இசைவு புரிந்துவிட்டது. அவள் புரிந்துகொள்வதற்கு முன்னரே உடல் அறிந்துகொண்டது.

சம்வகை புரவியை அணுகினாள். அவளுடைய மணத்தை அறிந்த அது கனைப்பொலி எழுப்பியது. அவளுக்கு கடிவாளத்தை நீட்டிய ஏவற்பெண்டின் முகம் மாறியிருந்தது. அவள் புரவிமேல் ஏறியபோது தன் உடலும் மாறிவிட்டிருப்பதை கண்டாள். புரவியின் நடையின் அசைவும் ஓசைகளும் மாறியிருந்தன. அது அந்த எடையால் உருவானதாக இருக்கலாம். ஆனால் அப்போது புரவியில் சென்றுகொண்டிருப்பவர் பிறிதொருவர் என்று அவளுக்கு பட்டது. வஜ்ரதந்தரே எழுந்துவந்துவிட்டார் போலும். கவசங்களிலும் வாளிலும் அவர் வாழ்கிறார். அவள் சாலையில் சென்றபோது இரு மருங்கும் செறிந்து நிரைகொண்ட யானைமருப்புகள் அவளை அடையாளம் கண்டவை என அசைந்தன. சாலையில் திரண்டுநின்ற மக்கள் திகைத்த விழிகளுடன் அவளை பார்த்தனர்.

கோட்டைமுகப்பை அவள் அடைந்தபோது காவலர்கள் ஓடிவந்து சிறு நிரையாக நின்றுவிட்டிருந்தனர். அவர்களின் விழிகளில் அவளை முன்பு அறிந்த உணர்வே தெரியவில்லை. அவள் இறங்கி அவர்களை நோக்கி சென்றாள். சந்திரிகை அவளை அணுகி “தலைவி, அரசரும் படையினரும் அணுகிவிட்டனர். இன்னும் சற்றுநேரத்தில் அவர்கள் கோட்டைக்குள் நுழைவார்கள்” என்றாள். அவள் “ஆணைகளைப்

பரப்புபவர்கள் அனைவரும் ஒருங்கிணைவு கொண்டிருக்கவேண்டும்…” என்றபடி கற்படிகளில் ஏறி மேலே சென்றாள். அவள் உடல் எடையை ஒவ்வொரு அணுவிலும் உணர்ந்துகொண்டிருந்தது. எடைமிக்க காவடி ஒன்றை கொண்டுசெல்வதுபோல. ஆனால் உடலின் நிகர்நிலை மிகுந்துவிட்டிருப்பதாகவும் தோன்றியது. காலில் அணிந்திருந்த இரும்புக்குறடு ஒரு கல்லில் உரசியபோது அனற்பொறி எழுந்தது. மேலே சென்று காவல்மாடத்தில் நின்று தொலைவை நோக்கினாள். காட்டிலிருந்து பறவைகள் சிறகடித்து எழுந்து காற்றில் சுழல்வது தெரிந்தது. மெல்லிய புகைச்சுருள்போல. அங்கே யுதிஷ்டிரனின் படையினர் வந்துகொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள்.

முகப்பு முற்றத்தில் அகவை முதிர்ந்த யானையான சங்குலன் முகபடாம் அணிந்து அசைந்தபடி நின்றிருந்தது. அதன் கால்களில் இருந்த புண்ணால் அது கொட்டிலைவிட்டே வெளியே கொண்டுசெல்லப்படாமலிருந்தது. அந்தப் புண்மேல் கட்டுபோட்டு அதன்மேல் பட்டுத்துணி சுற்றி கொண்டுவந்து நிறுத்தியிருந்தனர். அதன் முதுகின்மேல் செம்பட்டுச்சால்வை கிடந்தது. அதன் செவிகள் வீசி அவ்வப்போது ஒலிக்காக நின்று மீண்டும் அசைந்தன. நிலையற்று அதன் துதிக்கை மண்ணை துழாவியது. யானைக்கு இருபுறமும் மங்கலத்தாலங்களுடன் சேடியர் நூற்றெண்மர் நின்றனர். அவர்கள் அரண்மனையிலிருந்து அளிக்கப்பட்ட அணியாடைகளை பூண்டிருந்தனர். அவர்களுக்குப் பின்னால் இசைச்சூதர்கள் தங்கள் ஐங்கலங்களுடன் நின்றனர். அவர்களிலும் பல முகங்கள் அயல்நாட்டவர் என்று காட்டின. தலைமைதாங்கிய முதுசூதரான காஞ்சனர் துயில்நீத்தவர்போல தொய்ந்த

தலையுடன் வளைந்த உடலுடன் எழுவெயிலில் வியர்வை வழிய நின்றிருந்தார்.

யானைக்கு முன் வலப்பக்கம் பதினெட்டு அந்தணர்கள் நிறைகுடங்களுடன் நின்றனர். அவர்கள் வேசரநாட்டிலிருந்து சில நாட்களுக்கு முன்னர் அஸ்தினபுரிக்கு வந்தவர்கள். அஸ்தினபுரியின் அந்தணர்குலமே நகரை ஒழிந்துவிட்டிருந்தது. அவர்கள் கைவிட்டுச்சென்ற இல்லங்களில் அயல்நிலத்து அந்தணர் குடியேற்றப்பட்டனர். அவர்கள் அறிந்த சடங்குமுறைகள் அனைத்தும் மாறுபட்டன. சுரேசர் பழைய அந்தணர்குலத்தின் இளையோனாகிய ஊர்மிளனை அழைத்துச்சென்று அவர்களுக்கு சடங்குகளுக்கு பயிற்சி அளிக்கச் சொன்னார். ஏழு நாட்களாக நிறைகுடம் காட்டி வேதம் ஓதுவதற்கான பயிற்சியை அவர்களுக்கு அளித்த ஊர்மிளன் “அவர்கள் அதர்வவேதத்தில் மட்டுமே சொல்லுரிமை கொண்டவர்கள். அதை பாடினால் போதும் என்றேன். அதிலும் அனைத்துச் சடங்குகளுக்கும் உரிய பாடல்கள் உள்ளன” என்றான்.

கோட்டைக்குள் முகமுற்றத்தில் இரண்டு நிரைகளாக தொல்குடியினர் நின்றனர். குடிமூத்தோர் முன்னால் நிற்க குடிகள் என ஆக்கப்பட்டவர்கள் பின்னால் நின்றனர். அவர்கள் அனைவருமே வெயிலில் களைத்திருந்தனர். வியர்வை வழிந்துகொண்டே இருந்தது. வெயிலின் எடை மிகுந்துவிட்டிருப்பதாகப் பட்டது. மரக்கிளைகளில் அமர்ந்திருந்த காகங்கள் அலகு திறந்து உள்நா தெரிய மூச்சிளைத்தன. புரவிகளும் அத்திரிகளும் தலைதாழ்த்தி எச்சில் ஒழுக்கின. அத்தனை வெப்பம் வெயிலுக்கு எப்படி வந்தது என்று சம்வகை எண்ணிக்கொண்டாள். மழை நின்று ஒரு மாதம்

ஆகிவிட்டிருந்தது. மண் உலர்ந்துவிட்டது. புற்கதிர்களும் பசுமையை இழந்துவிட்டிருந்தன. அவளுக்கு விடாய் எழுந்தது. நீர் கொண்டுவரும்படி சொல்ல அவள் எண்ணியபோது முரசொலியை கேட்டாள்.

தொலைவில் அஸ்தினபுரியின் அமுதகலக்கொடி எழுந்து தெரிந்தது. வெண்ணிறமான ஒற்றைப்பறவைபோல அது காட்டின் பசுந்தழைப்பின் நடுவே சிறகுலைத்து மிதந்து வந்தது. அவள் கையை தூக்க அவ்வாணையை ஏற்று பின்னணியில் கொம்பு முழங்கியது. தொடர்ந்து நகரெங்கும் முரசுகள் ஒலிக்கத்தொடங்கின. அலையலையாக எழுந்த ஓசை செவிகளை நிறைத்து உடலை பதறச்செய்தது. புறங்கழுத்தில் ஓசையின் அதிர்வை காற்றென உணர முடிந்தது. அவள் படியிறங்கி கீழே வந்தபோது அணிவகுத்து நின்றிருந்த காவலர்களும் காவற்பெண்டிரும் வாள்களை உருவி நீட்டினர். அவள் அவர்களின் முகப்பில் வந்து நின்றாள். காவலர்களின் நிரை நீண்டு சென்று கோட்டைமுகப்பில் நிலைகொண்டது.

தொலைவில் வெண்புரவி அணுகுவதை சம்வகை கண்டாள். அதன்மேல் இருந்த முழுக் கவசஉடை அணிந்த வீரன் உயர்ந்த மெல்லிய மூங்கிலில் வெண்பட்டாலான கொடியை பிடித்திருந்தான். அஸ்தினபுரியின் அமுதகலம் அதில் நெளிந்தது. தொடர்ந்து வந்த புரவிவீரன் இந்திரப்பிரஸ்தத்தின் மின்படை பொறித்த இளஞ்செந்நிறக் கொடியை பிடித்திருந்தான். கவச உடையணிந்த புரவிவீரர்கள் வேல்களுடன் நான்கு நிரைகளாக வந்தனர். வேல்முனைகள் வெயிலில் சுடரலைவு கொண்டன. அதைத் தொடர்ந்து வந்த திறந்த தேரில் இசைச்சூதர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் எழுப்பிய இசை கோட்டைக்குள் கொந்தளித்த

முரசுமுழக்கத்தில் மறைய அவர்களின் உடலசைவுகளும் முகங்களின் உணர்வுகளும் மட்டுமே தெரிந்தன. அவர்கள் வலிப்புகொண்டவர்கள்போல, அலைபாயும் திரைச்சீலையின் ஓவியங்கள்போலத் தோன்றினர்.

இரண்டு காவல்தேர்கள் தொடர்ந்து வந்தன. அவற்றில் வில்லேந்திய வீரர்கள் நின்றிருந்தனர். தொடர்ந்து யுதிஷ்டிரனின் பொன்முகடுகொண்ட அணித்தேர் வந்தது. அது துரியோதனனின் தேர். அஸ்தினபுரியிலிருந்து அந்தத் தேர் முன்னரே கங்கைக்கரைக்கு கொண்டுசெல்லப்பட்டு காத்திருந்தது. அதற்கென அங்கே ஒரு கொட்டகை அமைக்கப்பட்டது. அதன் பழுதற்ற வில்தாங்கிகளால் சாலையிலிருந்து சகடம் கொண்ட அதிர்வுகள் வாங்கப்பட்டமையால் நீரில் ஒழுகுவதுபோல அது மிதந்து அணுகியது. அதன் விரைவே விழிகளுக்கு தென்படவில்லை.

கொடியேந்தியவர்கள் அருகே வந்ததும் காத்துநின்றிருந்த சூதர்கள் இசைமுழக்கினர். கவசப்படையினரும் சூதர்தேரும் வந்து இடப்பக்கமாகத் திரும்பின. யுதிஷ்டிரனின் தேர் அணுகியதும் அந்தணர்நிரை வேதம் ஓதியபடி சென்று கங்கைநீர் தெளித்து வாழ்த்தியது. கைகூப்பியபடி தேரிலிருந்து யுதிஷ்டிரன் இறங்கினார். அவருடன் நகுலனும் சகதேவனும் தேரிலிருந்து இறங்கி கைகூப்பியபடி பின்னால் வந்தனர். அவர்களுக்குப் பின்னால் தனித்தேரில் பீமன் வந்தான். யுதிஷ்டிரன் அந்தணரை அணுகி தலைவணங்கினார். அணிப்பரத்தையர் மங்கலத்தாலங்களுடன் அவர்களை எதிர்கொண்டார்கள். பின்னணியில் கூடிநின்றிருந்தவர்கள் வாழ்த்தொலி எழுப்பினர். அனைத்து ஒலிகளுக்கும் மேல் முரசொலி எழுந்துகொண்டிருநதது. அது நீர்ப்பரப்பென

அலைகொள்ள அதில் மூழ்கி வாயசைத்து நீந்தும் மீன்கள் போலிருந்தனர் அனைவரும்.

யுதிஷ்டிரன் குடிகளை வாழ்த்தியபடி நடந்துவர சம்வகை தன் சிறு காவல்படையுடன் அவரை அணுகினாள். அவர் அவர்களை இயல்பான பார்வையுடன் நோக்கினார். அவள் அருகணைந்து தன் உடைவாளை உருவி முறைப்படி மும்முறை சுழற்றி நிலம்நோக்கி சரித்து தலைவணங்கி வாழ்த்துரைத்தாள். அப்போதுதான் யுதிஷ்டிரன் அவள் பெண் என்பதை உணர்ந்தார். திகைப்புடன் “நீ யார்?” என்றார். “நான் கோட்டைக்காவலர்தலைவி. என் பெயர் சம்வகை” என்று அவள் சொன்னாள். அவருடைய புருவங்கள் சுழித்தன. “கேள்விப்பட்டேன்” என்றார். “எவரோ உன்னைப்பற்றி சொன்னார்கள். யுயுத்ஸு என எண்ணுகிறேன்.” அவருடைய விழிகள் மாறுபட்டன. அவர் மேலே சொல்வதற்குள் சகதேவன் ஊடே புகுந்து முகமலர்ச்சியுடன் “நன்று, புதிய முறைமை எழுந்துள்ளதை அஸ்தினபுரியின் குடிகள் அறியட்டும். ஷத்ரிய நாடுகளெங்கும் செய்தி செல்லட்டும்” என்றான். யுதிஷ்டிரன் சிறுதடுமாற்றத்துடன் “ஆம், இந்த மாற்றம் உலகறியவேண்டிய ஒன்று” என்றார். படைகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து வாள் தாழ்த்தியபடி நிற்க அவர் கைகூப்பியபடி நடுவே சென்றார்.

அவர்கள் கடந்துசென்றதும் சம்வகை கைகாட்டி தன் படையினரை பிரிந்து கோட்டைக்காவலுக்குச் செல்லும்படி ஆணையிட்ட பின் அவருக்குப் பின்னால் சென்றாள். கோட்டைக்குள் யுதிஷ்டிரன் நுழைந்ததும் பேரொலியுடன் வாழ்த்துக் கூச்சல்கள் எழுந்தன. மஞ்சளரிசியும் மலர்களும் பொழிந்தன. மஞ்சள்பொடி செம்முகிலென எழுந்து அப்பகுதியை மூடியது. யுதிஷ்டிரன் அவளை நோக்கி திரும்பி

“நகரில் போதிய மக்கள் இருக்கிறார்களா?” என்றார். “வந்துகொண்டும் இருக்கிறார்கள்” என்று அவள் சொன்னாள். அவர் சிறு துணுக்குறலுடன் அவளை நோக்கியபின் “நல்ல மறுமொழி. நீ தேர்ந்தவள்” என்றார். “யுயுத்ஸு எங்கே?” என்று நகுலன் கேட்டான். “அவருக்கு சற்று உடல்நலமில்லை. அரண்மனையில் இருக்கிறார்” என்றாள் சம்வகை. அவர்கள் தேரில் ஏறிக்கொண்டார்கள்.

மையத்தேர்ச்சாலையில் அவர்களின் அணிவலம் சென்றபோது அந்தத் தெருவே விழவுக்கோலம் கொண்டு வாழ்த்தொலி எழுப்பி ஆர்ப்பரித்துக் கொண்டாடுவதுபோலத்தான் தோன்றியது. சம்வகைக்கே அது பெருங்களியாட்டுதான் என உளமயக்கு எழுந்தது. விழிகளை நிறைத்து ஆடிநின்றன களிற்றுப்பட்டங்கள். மேலிருந்து அரிமலர்மழையும் செம்பொடியும் பெய்திறங்கி காற்றை நிறைத்த திரைக்கு அப்பாலிருந்து வாழ்த்தொலிகள் எழுந்தன. தேர்கள் சற்று விரைவாகவே சாலையை கடந்தன. திரும்பும் முனைகளிலெல்லாம் கூடியிருந்தவர்கள் வாழ்த்தொலி எழுப்பினர். யுதிஷ்டிரன் மகிழ்ந்துவிட்டார் என்பதை சம்வகை கண்டாள். அவர் கைகூப்பியபடி தேர்மேடையில் எழுந்து நின்றார்.

அரண்மனைக்குச் செல்லும் திருப்பத்தில்தான் நகரின் தொல்குடிகளை சம்வகை நிற்க வைத்திருந்தாள். அரண்மனைக் களமுற்றம் வரை இடைவெளியில்லாமல் நிற்கும் அளவுக்கு அவர்களின் எண்ணிக்கை இருந்தது. அவர்களைக் கண்டதும் யுதிஷ்டிரன் தேரை நிறுத்தச்சொல்லி இறங்கினார். தன் பட்டுச்சால்வையை இழுத்துச் சுற்றியபடி மலர்ந்த முகத்துடன்

கைகூப்பியபடி அவர்கள் நடுவே சென்றார். அவர்கள் வாழ்த்தொலியை எழுப்பிக்கொண்டே இருந்தார்கள். சம்வகை அவர்களின் முகங்களை மாறிமாறி நோக்கியபடி நடந்தாள். இன்னும் சற்று தொலைவுதான். அரண்மனை முகப்பில் பட்டம் கட்டிய யானையும் கவசப்படைவீரர்களும் அணிப்பரத்தையரும் இசைச்சூதர்களும் காத்துநிற்பது தெரிந்தது. தேரில் என்றால் கால்நாழிகைக்குள் செல்லும் தொலைவு. நடந்தால் அரைநாழிகை. இன்னும் சற்றுபொழுது. சில காலடிகள்…

அவள் “இன்னும் சில காலடிகள்… இன்னும் சில காலடிகள்…” என்று சொல்லிக்கொண்டே இருந்தாள். அவள் எண்ணம் கூருந்தோறும் அவர் செல்லும் விரைவு குறைந்தது. அடிமேல் அடிவைத்து. ஒவ்வொருவரையாக நலம் உசாவி… செல்க! செல்க! செல்க! அவர் ஒவ்வொரு முகத்தையாக பார்க்கிறார். சிரிக்கிறார். என்ன எதிர்பார்க்கிறார்? ஒரு வசையையா? நச்சுச்சொல்லையா? அது இல்லையேல் அவருடைய உள்ளம் நிறைவடையாதா? அவருக்கு இன்று தேவைதான் என்ன? தன்னை உலகமே வெறுக்கிறது என எண்ணிக்கொள்ள விழைகிறாரா? உலகால் வெறுக்கப்படும் அறத்தான். அவள் ஒவ்வொரு முகத்தையும் ஒரு திடுக்கிடலுடன் நோக்கினாள். அவற்றிலுள்ளது என்ன வகையான உணர்வு என கணிக்க முடியவில்லை. சில முகங்கள் விழி சுருங்கி வாய் இறுகி சொல்லை கரந்திருந்தன. சில முகங்களில் அனைத்துத் தசைகளும் நெகிழ நகையாட்டு நிறைந்திருந்தது. சிலர் வெறுமனே மலர்ந்திருந்தனர். சிலர் அவர்களை அரசர் அடையாளம் கண்டதனால் பெருமிதம்கொண்டு மற்றவர்களை பார்த்தனர். அத்தருணத்தில் சொல்லவேண்டியது என்ன என்று எவருக்கும் தெரியவில்லை.

அவள் அவனை அடையாளம் கண்டு உள்ளம் குளிர்ந்து உறைய நின்றாள். அக்கணமே அவன் "யுதிஷ்டிரரே! நன்று! நீங்கள் ஆள்வதற்குரிய நகர்தான் இது!" என்றான். யுதிஷ்டிரன் திகைத்து நின்றார். "நல்ல நகரம்... இன்று இதன் குடிகள் முழுக்க நாடோடிகள். நானும் நாடோடியே. பதினான்காண்டுகாலம் காட்டிலுழன்ற நாடோடியால் ஆளப்படுவது உவகை அளிக்கிறது!" என்றான். சம்வகை காவலர்கள் எவரேனும் அங்கே இருக்கிறார்களா என்று பார்த்தாள். "நான் நாடோடி... என்னை இங்கே இழுத்து வந்தார்கள். அரசரை வாழ்த்த இங்கே நகரில் மக்கள் எவருமில்லை என்றார்கள். நாடோடியை நாடோடியன்றி எவர் வாழ்த்துவார் என்று நானும் வந்துவிட்டேன்" என்றான். "ஆனால் நாடோடிகள் நெடுங்காலம் ஒரே இடத்தில் வாழலாகாது. ஒரே இடத்தில் வாழ்ந்த காலத்தை நீங்களும் மறந்துவிட்டிருப்பீர்கள்..." என்று அவன் தன் கறைபடிந்த பற்களைக் காட்டினான்.

சம்வகை அறியாமல் அவனை நோக்கி செல்ல அவளை யுதிஷ்டிரன் கைகாட்டி நிறுத்தினார். "நமக்கென்ன? ஊரே நம் நிலம். நாடோடிக்கு அடையாளங்களைப்போல சுமை வேறில்லை. இந்நகரை நீங்களும் துறப்பீர்கள். நானும் இன்றே துறந்துசென்றுவிடுவேன்" என்றான் நாடோடி. "ஆனால் நான் எதையும் கொண்டுசெல்லப் போவதில்லை. நீங்கள் இங்குள்ள கருவூலத்தை பிற நாடோடிகளுக்கு திறந்துவிட்டுவிட்டு செல்லவிருக்கிறீர்கள்." சம்வகை தன் வாளில் கைவைத்து அவனை நோக்கி செல்ல யுதிஷ்டிரன் "உம்" என உறுமினார். அவன் "இவள் காவலர்தலைவியா? நன்று! பெண்கள் கோட்டைமேல் ஏறிவிட்டனர். சத்யவதியின் விழைவு நிறைவேறிவிட்டது... இவள் மச்சர்குலம் என்று வேறு

சொன்னார்கள். மிக நன்று!” என்றபின் “செல்க, உணவுண்டு ஓய்வுகொள்க! நானும் ஊட்டுபுரைக்குத்தான் செல்லவேண்டும்” என்றான்.

யுதிஷ்டிரன் “அவ்வாறே” என கைகூப்பியபடி சொல்லி சம்வகையிடம் “நற்சொல் உரைத்த இவர் நலமாக இந்நகரிலிருந்து மீள்வது உன் பொறுப்பு” என்றார். “ஆணை” என்று சம்வகை தலைவணங்கினாள். யுதிஷ்டிரன் கைகூப்பியபடி முன்னால் சென்றார். நாடோடி “ஒன்றை சொல்ல விட்டுவிட்டேன், அரசே. நகர் ஒழிந்திருப்பதாக எண்ணவேண்டியதில்லை. உண்மையில் இந்நகர் நிறைந்து வழிகிறது. செத்தவர்கள் வாழும் பெருநகர் இதுபோல புவியில் பிறிதில்லை. செத்த வீரர்கள் மட்டுமல்ல. செத்த யானைகள்கூட. பார்த்திருப்பீர்கள், செத்த பின்னரும் அவை அணிகொண்டு நிரைவகுத்து நின்று அசைகின்றன. செத்தவர்களுக்குமேல் உங்கள் ஆணை செல்லுபடியாகின்றது என்றுதானே அதற்குப் பொருள்!” என்றான். யுதிஷ்டிரன் “ஆம்” என கைகூப்பியபடியே தலையசைத்து முன்னால் சென்றார். சம்வகை திரும்பி அங்கே நின்றிருந்த ஒற்றனை தன்னை தொடரச்சொல்லிவிட்டு நடந்தாள்.

யுதிஷ்டிரன் அரண்மனை முற்றத்தை அடைந்ததும் மெல்ல தளர்ந்து கைகளை கீழிறக்கினார். பெருமூச்சுவிட்டபடி தலைகுனிந்து நடந்தார். நகுலனும் சகதேவனும் அவர் அருகே சென்று மெல்லிய குரலில் பேசினர். அரண்மனை முகப்பிலிருந்து சுரேசர் வாழ்த்துரைத்தபடி யுதிஷ்டிரனை நோக்கி வந்தார். அவர் அருகே யுயுத்ஸு அரசணிக்கோலத்தில் நின்றிருந்தான். சம்வகை தன்னருகே வந்த ஒற்றனிடம் “அந்த நாடோடி யார்?” என்றாள். அவன் “நோக்குகிறேன்” என்றான்.

“அவன் இந்நகர் நீங்குவதுவரை நலமாக இருக்கவேண்டும்” என்றாள். “ஆம், நகர் எல்லையை கடந்ததும் நிறைவேற்றிவிடுகிறேன்” என்றான். சம்வகை பெருமுச்சுடன் “எது வகுக்கப்பட்டுள்ளதோ அது நிகழும். நம்மால் தடுக்க முடியாது. ஆனால் ஒரு மீறல் ஒருபோதும் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது” என்றாள். அதை அவள் தனக்காக சொல்லிக்கொண்டாள். நாடோடி அவளை நோக்கி “காவல்பெண்டே, கேள்! எனக்கு சாவில் அச்சமில்லை” என்றான். அவனைச் சூழ்ந்து நின்றவர்கள் என்ன நிகழவிருக்கிறது என உணர்ந்தவர்களாக அமைதியடைந்து இறுகிய முகத்துடன் நின்றார்கள். சம்வகை அவனை நோக்கி புன்னகைத்துவிட்டு முன்னால் சென்றாள்.

முகமன்களும் முறைமைகளும் நிகழ்கையில் யுதிஷ்டிரன் இறுக்கமாகவே இருந்தார். சம்வகை அவரை ஒவ்வாமையுடன் நோக்கியபடி நின்றாள். இது அவர் கேட்டுப் பெற்றது. இது நிகழுமென அவர் அறிவார். நானும் அறிவேன். இப்பேரழிவை நிகழ்த்திய பின் ஒரு சொல்லும் பெறாது மணிமுடிசூட இயலாது என அறியாதவர் எவர்? இவர் இக்குற்றவுணர்வை என் மேல் சுமத்துவார். ஒரு கணம்கூட அதை நான் பெற்றுக்கொள்ளப்போவதில்லை. அவள் கைகள் உடைவாளின் பிடியில் உழற்றிக்கொண்டிருந்தன. வியர்வை வழிந்து கவசத்திற்குள் வெம்மையை நிறைத்தது. யுயுத்ஸு அவளை பலமுறை திரும்பி நோக்குவதை அவள் கண்டாள். அவன் விழிகளை சந்தித்தபோது யுயுத்ஸு நோக்கை மாற்றிக்கொண்டான்.

அரண்மனைக்குள் நுழைந்ததும் யுதிஷ்டிரன் திரும்பி நோக்கி “எங்கே அந்தப் பெண்?” என்றார். சம்வகை அருகே சென்று

தலைவணங்கினாள். “உன் ஒருக்கங்கள் நன்று” என்று சற்றே கோணலாக இழுபட்ட உதடுகளுடன் யுதிஷ்டிரன் சொன்னார். “நானே நெடுநேரம் நகர் வாழ்த்தொலிகளாலும் களியாட்டாலும் நிறைந்திருக்கிறது என எண்ணிக்கொண்டேன். அந்த நாடோடி சொன்னதை பொருட்படுத்தவேண்டியதில்லை. அவர்கள் அவ்வாறு சொல்லும் உள்ளத்தை பேணிக்கொள்பவர்கள்... இங்குள்ள அனைத்தின் மேலும் கசப்புகொண்டவர்கள்” என்றார். உடனே நகைத்து “வழக்கமாக அணிமங்கலங்களில் நாடோடிகளையும் இளிவரல் சூதர்களையும் இரவலர்களையும் வெளியேற்றுவார்கள். இம்முறை அவர்கள் உள்ளே கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நிகழவேண்டும் என இருந்திருக்கிறது” என்றார்.

அவருக்குள் சினம் நிறைந்திருப்பதை அச்சொற்கள் வழியாக சம்வகை உணர்ந்தாள். “இத்தருணத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள். அவர் பேசும்போது நான் அங்குள்ள குடித்தலைவர்களைத்தான் நோக்கினேன். அச்சொற்கள் அவர்களுக்கு திகைப்பையும் சினத்தையும் உருவாக்குகின்றனவா என்று... இல்லை. அதுதான் எனக்கு சற்றே உறுத்துகிறது. அவர்களில் சிலரை உடனே என் சிற்றறைக்கு அழைத்துவர ஆணையிடு!” சம்வகை தலைவணங்கி திரும்ப “நீ செல்லவேண்டாம். நீ சொல்பயிற்றி அனுப்புபவர் எனக்குத் தேவையில்லை. அவர்களில் மூவர் இயல்பாக தெரிவுசெய்யப்படவேண்டும். எவரேனும் மூவர். உன் ஏவலர் எவரையேனும் அனுப்பு. ஓர் ஏவலன் வெளியே சென்று இங்கே வரும் பொழுது மட்டுமே அளிக்கப்படுகிறது” என்றார்.

சம்வகை தலைவணங்கினாள். யுதிஷ்டிரன் சகதேவனின் தோளை தொட்ட பின் உள்ளே செல்ல நகுலன் சுரேசரிடம்

மெல்லிய குரலில் ஏதோ சொன்னபடி தொடர்ந்தான். யுயுத்ஸு நின்று அவளிடம் விரைவான குரலில் “நீ செய்த ஏற்பாடுகள் அவருக்கு சினத்தையே அளிக்கும் என நான் அறிந்திருந்தேன். அதை சொல்ல நீ எனக்கு இடமளிக்கவில்லை. ஆனால் அவருக்கு உன்மேல் சினமேதுமில்லை. அவ்வகையில் நன்று” என்றான். சம்வகை “அவருக்கு சினமிருந்தாலும் எனக்கு ஒன்றுமில்லை. நான் செய்யக்கூடுவதை செய்தேன்... அவச்சொற்கள் அவர் விரும்பிப் பெற்றவை” என்றாள். யுயுத்ஸு “உன் ஆணவத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை” என்றான். பின்னர் “ஆனால் இக்கவசஉடைக்குள் நீ இயல்பாக இருக்கிறாய். வஜ்ரதந்தரை எனக்கு நன்றாகவே தெரியும். நீ நடந்து வரும்போது அவருடைய அசைவு புலப்படவில்லை. நீயென்றே தோன்றுகிறாய்” என்றான். அவள் புன்னகைத்தாள்.

# களிற்றியானை நிரை - 14

### பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 5

மூன்று குடித்தலைவர்களுடன் ஏவற்பெண்டு சம்வகையின் அருகே வந்து நின்றாள். சம்வகை அவர்களிடம் “வருக!” என்று சொல்லிவிட்டு நடந்தாள். அவர்களில் ஒருவர் “நாங்கள் எப்பிழையும் ஆற்றவில்லை” என்றார். “பிழையால் அல்ல” என்று சம்வகை சொன்னாள். “அரசர் நகரின் நிலை குறித்து உங்களிடம் உசாவ விழைகிறார், அவ்வளவுதான்.” அவர் “நகரின் நிலையை எங்களிடம் ஏன் உசாவவேண்டும்? உப்பரிகையில் ஏறிநின்று ஒருமுறை நோக்கினால் போதுமே” என்றார். சம்வகை “அதை அவரிடம் கூறுக!” என்றாள். அவர்

“நான் கூற அஞ்சப்போவதில்லை. இந்நகரில் இனி நாங்கள் எதையும் அஞ்சவேண்டியதில்லை” என்றார்.

அவர்கள் யுதிஷ்டிரனின் சிற்றறை வாயிலை அடைந்தனர். யுதிஷ்டிரன் அறைக்குள் நுழைந்து மஞ்சத்தில் அமர்ந்திருக்கவில்லை. ஏவலன் சென்று சொன்னதும் அவர்களை உள்ளே அழைத்தார். சம்வகையும் உடன் சென்றாள். அவர்கள் சென்று வாழ்த்துரைத்து வணங்கியதும் “அமர்க!” என்றார் யுதிஷ்டிரன். “இல்லை, முறைமைகள் தொடரட்டும். அவையிலன்றி வேறெங்கும் அரசர்முன் அமரும் வழக்கம் அஸ்தினபுரியில் இல்லை” என்றார் அவர்களில் மூத்தவரான குடித்தலைவர். யுதிஷ்டிரன் பெருமூச்சுடன் மஞ்சத்தில் அமர்ந்தார். அவருக்குப் பின்னால் இரு சிறு மஞ்சங்களில் நகுலனும் சகதேவனும் அமர்ந்தனர். யுயுத்ஸு சாளரத்தருகே நின்றான். சுரேசர் யுதிஷ்டிரனின் வலக்கைப்பக்கம் நின்றார். அறைக்குள் வேறு அமைச்சர்கள் எவரும் இருக்கவில்லை.

யுதிஷ்டிரன் மிகவும் களைத்திருந்தார். அவர் உடலில் வியர்வை பெருகி மஞ்சள்பொடியையும் அரிமலர்சிதர்களையும் நீண்ட கோடுகளாக வழியச் செய்தது. ஏவலன் ஒருவன் குளிர்ந்த மரவுரியுடன் வந்து அவர் உடலை துடைத்தான். அவர் சூடிவந்த மணிமுடி அப்பால் சிறிய பீடத்தில் அருகே உடைவாளுடன் வைக்கப்பட்டிருந்தது. யுதிஷ்டிரன் தலையை உலுக்கி கூந்தல்கற்றைகளை தோளுக்குமேல் தள்ளினார். வெளியே இருந்து இழுக்கப்பட்ட சரடு தலைக்குமேல் தொங்கிய பெரிய விசிறியை அலைபாயச் செய்தது. ஆயினும் அறைக்குள் வெம்மையுடன் நிறைந்திருந்த காற்றில் அசைவேதும் நிகழவில்லை. யுதிஷ்டிரன் வாயைக் குவித்து

ஊதியபடி “கடும் வெப்பம்” என்றார். “மழை வரக்கூடும்” என்றார் சுரேசர். “ஆம், மழையைத்தான் செடிகளும் எதிர்பார்க்கின்றன” என்றார் யுதிஷ்டிரன்.

சொற்களினூடாக அவர்கள் தங்களை எளிதாக்கிக்கொண்டார்கள். யுதிஷ்டிரன் “நான் தங்களை அழைத்தது ஒன்று உசாவவே” என்று குடித்தலைவரிடம் சொன்னார். “நான் அறியவேண்டுவது ஒன்றே. இன்னும் எத்தனை குடிகள் நகரை விட்டுச்செல்வதாக உள்ளன?” அவர்கள் பேசாமல் நின்றனர். “சொல்க!” என்றார். இளையவரான ஆயர்குடித்தலைவர் சக்ரர் “பிறரைப்பற்றி எங்களுக்குத் தெரியாது. நாங்கள் நாளையோ மறுநாளோ கிளம்புவதாக உள்ளோம்” என்றார். யுதிஷ்டிரன் இமைக்காமல் அவரை நோக்கிய பின் “ஏன்?” என்றார். “கருவூலத்திலிருந்து கொடையளிப்பு நிகழக்கூடும் என்றனர். எங்கள் குடிகள் வழிச்செலவுக்குப் பொன் இல்லாமல்தான் இங்கே காத்திருந்தனர். அது கிடைத்தால் அதன்பின் இங்கே தங்கியிருக்க மாட்டோம்” என்றார்.

“ஏன் என்று என்னிடம் சொல்லலாமா?” என்றார் யுதிஷ்டிரன். “நான் என்ன பிழை செய்தேன்? நீங்கள் இந்நகரை உதறிவிட்டுச் செல்வது ஏன்?” சக்ரர் “உங்கள் பிழை அல்ல, எங்கள் ஊழ். எங்கள் குடிகளில் ஒருவரேனும் உயிர்விடாத எந்த வீடும் இங்கில்லை. இந்நகர் எங்கள் நினைவுகளால் நிறைந்தது. எங்கள் மைந்தர் ஓடிவிளையாடிய தெருக்கள். அவர்கள் களியாடிய நிலங்கள். இங்கே இனி நாங்கள் உளம்நிறைந்து வாழமுடியாது. இங்கிருந்து செல்வதொன்றே இந்நினைவுகளைத் துறப்பதற்கான வழி” என்றார். யுதிஷ்டிரன் “ஆம், அது மெய்” என்றார். “இந்நகரில் நுழைந்தபோதே என்

நெஞ்சை அறுப்பதுபோல் உணர்ந்தேன். இந்நகரின் நினைவுகள் எழுந்து என்னை மண்ணோடு அழுத்தின.” சக்ரர் “நாங்கள் ஒவ்வொருவரும் கிளம்புவது அதன்பொருட்டே” என்றார். “செல்லும் நிலம் எதுவாயினும் அங்கே புதிய நினைவுகளை நாங்கள் உருவாக்கிக்கொள்ள முடியும். எங்கள் மகளிர் கருவறைகளில் புதிய மைந்தர் எழுவாராயின் சில ஆண்டுகளிலேயே அனைத்தையும் மறந்து புதிய வாழ்க்கையை நாங்கள் அடையவும்கூடும்.”

யுதிஷ்டிரன் “புதிய மைந்தர் பிறந்தால் இந்நகரம்கூட இனிதாகக்கூடும்” என்றார். முதியவரான வேளாண்குடித் தலைவர் பிருதர் சீற்றத்துடன் முன்னால் வந்து “எவரிடமிருந்து? இங்கே வந்து குழுமும் நாடோடிகளிடமிருந்தா?” என்றார். அந்த மதிப்பின்மை யுதிஷ்டிரனை திகைக்க வைத்தது. சகதேவன் ஏறிட்டு நோக்கினான். “எங்கள் குடி தொன்மையானது. இந்த அஸ்தினபுரியைவிடவும் தொன்மையானது. நாங்கள் இந்நகரை தூய குருதியால் நிறைத்தோம். அது சீர்கெட ஒருபோதும் ஒப்பமாட்டோம்” என்றார். “நாங்கள் இங்கிருந்து எங்கள் தொல்நிலத்திற்கே மீள்கிறோம். அங்கே கோபுர உச்சியின் விதைநெல் என எங்கள் தூய குருதி இன்னும் எஞ்சியிருக்கிறது. அதிலிருந்து மீண்டும் முளைத்தெழுவோம்.” யுதிஷ்டிரன் “ஆம், அதுவே முறை” என்று மெல்லிய குரலில் சொன்னார்.

மூன்றாமவரான வேளாண்குடித் தலைவர் பூர்வர் “ஒன்று மட்டும் நான் கேட்கிறேன். நாங்கள் எதை நம்பி இங்கே வாழமுடியும்? இந்நகர் முன்பு படைக்கலம் ஏந்தி கருவறை அமர்ந்த கொற்றவை போலிருந்தது. இன்று நகர்முகப்பில்

கைவிடுபடையின் விற்கள் தளர்ந்து நின்றுள்ளன. இந்நகர் தன் அனைத்து ஆற்றல்களையும் இழந்திருக்கிறது. இனி இது வீரம்கொண்டு எழப்போவதில்லை. உங்கள் கோல்கீழ் இது ஒரு ஊட்டுபுரைபோலவே இருக்கப்போகிறது” என்றார். யுதிஷ்டிரன் “ஆம், இனிமேல் இந்நகரம் படைக்கலம் ஏந்தப்போவதில்லை” என்றார். “அன்னை சத்யவதியின் காலத்தில் பூட்டப்பட்ட விற்கள் அவை. அவைதான் இப்பேரழிவை நோக்கி நகரையும் குடிகளையும் செலுத்திக்கொண்டிருந்தன. எடுக்கப்பட்ட படைக்கலம் குருதியின்றி அமையாது.”

“அப்படைக்கலம் வெளிப்பகையிலிருந்து காப்பது மட்டும் அல்ல” என்றார் பூர்வர். “அது பெரும்பழி எனக் கண்டது குடிக்கலப்பை. குலச்சீர்குலைவுக்கே அது பெருந்தண்டனைகளை அளித்தது. இங்கு நிலைகொண்ட வேதத்தைக் காக்கும்பொருட்டு எழுந்த படைக்கலம் அது. அது அங்கில்லை என்றால் இங்கே என்ன நிகழும்? குருதிச்சீரழிவு. வேறொன்றுமில்லை.” அவர் உணர்வெழுச்சியால் மூச்சுத் திணறியபடி முன்னால் வந்தார். “புதிய வேதம் குலக்கலப்பை முன்வைக்கிறது என்கிறார்கள். மானுடர் அனைவரும் தங்கள் இயல்புகளாலும் செயல்களாலும் மட்டுமே வகுக்கப்படவேண்டும் என்று அது சொல்கிறது என்கிறார்கள்.” அவரால் பேசமுடியவில்லை. இருமி இருமி உடல் அதிர்ந்தார்.

சக்ரர் ஏதோ சொல்ல வாயெடுக்க கையமர்த்தி அவரைத் தடுத்து “இன்றுவரை எங்களை ஆளும் அரியணையாக, நெறிசொல்லும் செங்கோலாக, காக்கும் கோட்டையாக நின்றிருந்தது வேதம். அது அகன்றபின் இந்நிலத்தில் எங்களுக்கு என்ன இடம்? வேதம் திகழும் நிலம்தேடிச் செல்கிறோம்” என்றார். சக்ரர் ஊடே புகுந்து “இங்கே உங்கள்

குடிகளென நிஷாதரும் கிராதரும் அரக்கரும் அசுரரும் வந்து குழுமுவார்கள். அவர்கள் முயங்கி புதிய குலங்களென ஆவார்கள். எங்களுக்கு இங்கே இடமில்லை. நாங்கள் செல்கிறோம்” என்றார். “எங்களுக்கு உங்கள் பொன் வேண்டியதில்லை... இன்றே இப்போதே கிளம்புகிறோம்” என்றார் பிருதர். சக்ரர் “எங்களுக்கு எவருடைய செல்வமும் தேவையில்லை. இக்கருவூலத்தில் உள்ளது எங்கள் முன்னோர் செலுத்திய வரிச்செல்வம்...” என்றார்.

யுதிஷ்டிரன் புன்னகையுடன் எழுந்துகொண்டு “உங்களுக்குரியதை அளிக்கும்படி ஆணையிடுகிறேன், குடித்தலைவர்களே. இங்கே வாழ்ந்து இந்நகரை செழிப்புறச் செய்தீர்கள். இதை உதறிச் செல்லுமிடமும் செழிப்புறுக! உங்கள் குடி பெருகி நிறைக!” என்றார். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கினர். அவர்கள் செல்லலாம் என்று யுதிஷ்டிரன் தலையசைத்து கைகூப்பினார். சம்வகை அவர்கள் வெளியேறலாம் என்று கைகாட்ட அவர்கள் தலைவணங்கி மூச்சு இரைக்க உடல் வியர்வையில் நனைந்து வெக்கைவிட வெளியே சென்றனர். வெளியே வந்ததும் சக்ரர் “இனிய சொற்கள், கலியின் மைந்தன் இனிய சொற்கள் கொண்டவன் என்கிறார்கள்” என்றார்.

“யார்? யார் கலியின் மைந்தன்?” என்றாள் சம்வகை. “இவர்தான்... வேறெவர்? இதோ கலியுகம் பிறந்துவிட்டிருக்கிறது. இந்த யுகத்திற்கான வேதம். அதை நிறுவும் அரசர்...” சம்வகை புன்னகையுடன் “நீங்கள் எங்கு செல்கிறீர்கள்? இந்த யுகத்தைவிட்டு நீங்கி காலத்தில் பின்னால் செல்கிறீர்களா?” என்றாள். சக்ரர் திகைத்து பின் சீற்றத்துடன் “ஆம், காலத்தில்தான் பின்னால் செல்கிறோம். இந்த யுகத்தில் எங்கள்

அறங்களுக்கு இடமில்லை. அறம்மீறி குருதிபெருக்கி முடிசூடிய இவருக்குக் கீழே குடிகளென அமைய எங்களுக்கு உளமில்லை” என்றார்.

“உங்கள் வழிதேர்க!” என்றாள் சம்வகை. “எந்த ஊழ் இவற்றை சமைக்கிறதோ அதுவே அடுத்ததையும் திட்டமிட்டிருக்கும். அவ்வாறே ஆகட்டும்” என்று சக்ரர் முனகினார். பிறர் தளர்ந்த நடையுடன் செல்ல சக்ரர் அவளை சீற்றத்துடன் திரும்பித் திரும்பி நோக்கியபடி சென்றார். இடைநாழியின் விளிம்பை அடைந்ததும் “இதோ நீயே அதற்குச் சான்று. மாவீரர்கள் அணிந்த கவசத்தையும் வாளையும் சூடி நாணிலாது நின்றிருக்கிறாய். கலியுகத்தில் பெண்கோழி பறக்கும் என்கின்றன பாடல்கள்” என்றார். தன்னை மீறி சம்வகை புன்னகைத்தாள். அவர் அவள் சிரிப்பைக் கண்டு மேலும் சீற்றம்கொண்டு பின்னர் சொல்லடக்கி வெளியே சென்றார்.



சம்வகை சுரேசரின் அறைக்குள் நுழைந்தபோது அங்கே சிற்றமைச்சர்கள் கூடியிருந்தனர். அவளைக் கண்டதும் அவர் புன்னகைத்து “அந்தக் கவச உடையை கழற்றிவிட்டாயா? மெய்யாகவே அது உனக்கு மிகப் பொருத்தமாக இருந்தது. நீ அதை நிறைத்துவிட்டிருந்தாய்” என்றார். அவள் புன்னகைத்து “இன்னும் முடிசூட்டுவிழா நிகழ்ச்சிகள் உள்ளன. அப்போது அணிகிறேன்” என்றாள். அவர் “என்ன நிகழ்கிறது? குடிகள் சென்றுகொண்டிருக்கின்றனவா?” என்றார். “ஆம், நாமே வழிப்பொருளை அளித்து அனுப்பிக்கொண்டிருக்கிறோம்” என்றாள். அவர் “அது அரசாணை. அவரால் அப்படித்தான் சொல்லமுடியும். செல்பவர்கள் செல்லட்டும் என்கிறார்” என்றார். அவளை நோக்கி குனிந்து புன்னகைத்து

“குடிகளிடமிருந்து வசைச்சொற்களைப் பெற்றபோது அவருடைய ஆழம் நிறைவுற்றது என நினைக்கிறேன்” என்றார்.

“ஆனால் நகர் முற்றொழிந்துள்ளது” என்றாள் சம்வகை. “தெருக்களில் அசைவே இல்லை. இல்லங்கள் பாழடையத் தொடங்கிவிட்டன.” சுரேசர் “என்ன செய்யலாம் என்கிறாய்?” என்றார். “சில நாட்கள் இந்நகரை மூடிவிடலாம். இது ஒரு உடனடி உள எழுச்சி. இதை சில மாதங்கள் ஒத்திப்போட்டாலே போதும். அஸ்தினபுரியில் இவர்கள் இதுவரை வாழ்ந்தது இது அழகான நகர் என்பதனாலோ தெய்வங்கள் உறையும் இடம் என்பதனாலோ அல்ல. இது மாபெரும் அங்காடி என்பதனால்தான். இங்கே வணிகர்கள் வரட்டும். அங்காடிகளில் பொருட்கள் நிறையட்டும். இக்குடிகள் இங்கேயே உளம் அமைவார்கள்.”

சுரேசர் “நீ சொல்வது உண்மை. ஆனால் இம்முறை அது முழு உண்மை அல்ல” என்றார். “அவர்கள் குடித்தூய்மையை அஞ்சி செல்கிறார்கள் என்றால் எதுவும் அவர்களை தடுக்காது.” சம்வகை “அவர்கள் இங்கே குடித்தூய்மையைப் பேணி வாழ்ந்தார்களா என்ன? இந்திரவிழவில் குருதிக்கு என்ன கட்டுப்பாடு?” என்றாள். “எங்கே கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளனவோ அங்கேதான் அத்தகைய கரவுப்பாதைகளும் அமைக்கப்பட்டிருக்கும். அணைக்கட்டின் மிகைநீர் மதகு அது” என்றார் சுரேசர். “அவர்கள் தங்கள் தொல்குடி அடையாளத்தையே செல்வமென எண்ணிக்கொள்பவர்கள். முன்பொருமுறை இளிவரல்சூதன் ஒருவன் பாடினான். அஸ்தினபுரியில் தொல்குடிகள் அன்றி எவருமே இல்லை. உள்ளே நுழைகையிலேயே நாம் தொல்குடியினராக ஆகிவிடுவோம் என்று.”

சுரேசரின் உதவியாளர்கள் புன்னகைத்தனர். “நீ அறிந்திருக்கமாட்டாய், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்களின் மூதாதையர் இங்கு வந்தனர். மாமன்னர் ஹஸ்தி இந்நகரை அமைத்தபோது இந்நகரில் குடியேறுவதற்கு எட்டு திசைக்கும் மங்கலச்செய்தியாளர்களை அனுப்பி அனைத்து மக்களையும் அழைத்தார். பதியெழுதல் என்பது அன்று பெரும்பிழை என்றே கருதப்பட்டது. போராலோ பஞ்சத்தாலோ நெருப்பாலோ வாழுமிடம் முற்றழிந்தாலன்றி எவரும் கிளம்புவதில்லை. அவ்வாறு வேறு வழியின்றி கிளம்பி வருபவர்களைக் கொண்டு ஒரு நகர் அமைத்தால் அது ஆற்றல் மிக்கதாக அமைவதும் இல்லை. அத்துடன் இன்னொரு மன்னரின் நிலத்திற்குள் தூதனுப்பி குடிகளை அழைப்பதும் இயலாது. குடிகள் பெயர அவர்கள் விடுவதுமில்லை.”

“ஆகவே இங்கு மாமன்னர் ஹஸ்தி ஒரு பெருவேள்வி நடத்தினார். ராஜசூயவேள்வி என்று கேட்டிருப்பாய். கருவூலம் முற்றொழிவது வரை அள்ளி அனைவருக்கும் பகிர்வது அது. வேள்விச்செய்தியை எங்கும் அறிவிக்கலாம். வேள்விக்கெனச் செல்வது பிழையென கருதப்படுவதில்லை. அவர்களை அரசர்கள் தடுப்பது வேதப்பழி கொள்வது. வேள்வியழைப்பு எட்டுத் திசைகளுக்கும் சென்றபோது மக்கள் இங்கு வரத்தொடங்கினார்கள். தகுதியானவர்கள் பலர் வந்தனர். சிற்பிகள், கலைஞர்கள், கைக்கோளர்கள், ஆயர்கள், உழவர்கள் என வந்தபடியே இருந்தனர். படைத்திறன் கொண்டவர்களும் அவர்களில் நிறைந்திருந்தனர். ஒரு மாதத்தில் அஸ்தினபுரி தன் முதன்மைக்குடிகளை கண்டடைந்துவிட்டது.”

“உண்மையில் தாங்கள் வாழுமிடத்தில் தங்களுக்கு உரிய மதிப்பில்லை என்று உணர்பவர்கள்தான் இத்தகைய

அறிவிப்பைக் கேட்டு முதலில் கிளம்புவார்கள். ஏனெனில் மெய்யாகவே அவர்கள் வாழுமிடத்தில் அவர்களுக்கு அத்தகைய மதிப்பு அளிக்கப்பட்டிருக்காது. ஒரு ஊர் அதன் தேவைக்கேற்பவே திறனாளர்களை உருவாக்கிக்கொள்கிறது. அது நிறைவுகொண்டு அங்கே அமைந்திருக்கிறது. மேலும் திறனாளர்கள் அங்கு உருவாகும்போது அத்தனை திறனாளர்களும் அவர்களின் மிகுதிறனும் அவ்வூருக்கு தேவையிருப்பதில்லை. ஆகவே என்ன செய்வதென்றறியாமல் அவ்வூரும் திணறிக்கொண்டிருக்கும். அது தனக்குத் தேவையான அளவுக்கு திறனுள்ளவர்களை நிறுத்திக்கொள்ளவே முயலும். ஆகவே அவர்கள் எப்போதும் பிறர் திறனை குறைத்துக் கூறுவார்கள். அந்த மிகைத்திறன் இளிவரலுக்கு உள்ளாக்கப்படும். அம்மிகைத்திறன் கொண்டவர்கள் அவ்வூரிலிருந்து கிளம்பியே ஆகவேண்டும்.”

“அவ்வாறு ஒவ்வொரு ஊரிலிருந்தும் கிளம்புபவர்களே அவ்வூரின் தலைசிறந்த திறன் கொண்டவர்கள். நிறை வயலிலிருந்து கதிர் மணிகள் எழுவதுபோல என்று ராஜ்ய சூத்திரம் அதைப்பற்றி கூறுகிறது. உருவாகி வரும் புதிய நகர்களுக்குத் தேவையானவர்கள் அவர்களே. ஒரு நகர் உருவாவதென்பது என்ன? அன்று வரை இருந்த ஊர்களும் நகர்களும் போதாமல் கூடுதலாக ஒன்று உருவாகிறதென்றுதானே பொருள்? ஆகவே அது அன்றுவரை இல்லாதிருந்த ஒன்றுதான். அன்று வரை இருந்த ஒன்றை ஒருபோதும் மானுடர் திரும்பப் படைப்பதில்லை. தன் நினைவிலிருந்து அல்ல, கனவிலிருந்தே புதியன படைக்கப்படுகின்றன. அவ்வாறு உருவாகி வந்த புதிய நகருக்கு புதிய திறனாளர்கள் தேவை. மேலும் கனவு கொண்டவர்கள் தேவை. அவர்கள் இவ்வாறு நாடெங்கிருந்தும் மிகையென

எழுந்து வருபவர்களாகவே இருப்பார்கள். ராஜசூயம் என்பது அதன் பொருட்டு நிகழ்த்தப்படும் வேள்வி.”

“தன் அரசில் மிகுதிறன் கொண்டவர்கள் வரவேண்டும் என்று விழையும் அரசர்கள் ராஜசூயத்தை நிகழ்த்துகிறார்கள். அவ்வேள்வியில் அளிக்கப்படும் பொன்னென்பது கொடையல்ல, ஒரு பெரும் முதலீடு” என்றார் சுரேசர். “ராஜசூய வேள்வி மாமங்கல நிகழ்வு எனப்படுகிறது. மாமாங்கம் என்றும் அதை சொல்வதுண்டு. மண்ணில் மனிதர் புரியும் மங்கல நிகழ்வுகளில் அதுவே முதன்மையானது. அதில் அறுபத்துநான்கு கலைகளின் அரங்கமும் கூட்டப்பட வேண்டும். அனைத்துத் துறைகளிலும் போட்டிகள் நிகழவேண்டும். ஒவ்வொன்றிலும் திறனாளர்கள் முன்பு எங்குமிராத அளவுக்கு பரிசளித்து மதிப்புறுத்தப்படவேண்டும். அதில் வெல்பவர்கள் அனைவரும் அந்நகரத்திலேயே தங்குவார்கள் என்று சொல்ல முடியாது. அதில் ஒரு சாரார் அங்கு தங்கினாலே அந்நகரம் செழிப்புறும்.”

அவர் உள்ளத்தை புரிந்துகொண்டு “இங்கு ராஜசூய அறிவிப்பு நிகழவிருக்கிறதா?” என்று சம்வகை கேட்டாள். “விரைவில்” என்று சுரேசர் புன்னகைத்தார். “அதை நான் யுயுத்ஸுவிடம் முன்னரே கூறிவிட்டேன். அவர் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் கருவூல நிலையை ஒருமுறை பார்த்துவிட்டு அறுதி முடிவெடுக்கலாம் என்றார். அறுதிப்பொன் வரை அளித்தாகவேண்டும் என்பது நெறி. ஆனால் பெரும்பாலான ராஜசூயங்களில் மேலும் தொடர்ந்து அரசு சூழ்வதற்கான பொருளை பிற இடங்களில் நோக்கி வைத்த பின்னரே அதை செய்வார்கள். நமக்கும் ஊற்று ஒழியாத ஆறுகள் பல உள்ளன” என்றார் சுரேசர். “அஸ்தினபுரியின் கருவூலம் ஆழம் மிக்கது.

ஆயினும் ராஜசூயம் என்பது பெருவேள்வி. பாரதவர்ஷம் முழுவதிலும் இருந்து மக்கள் வந்து கூடுவார்கள். அவர்கள் அனைவருக்கும் இல்லையெனாது அளிக்கவேண்டும். அதைச் செய்யும் ஆற்றல் அரசருக்குத் தேவை.”

“நாம் இங்கே குன்றும்பொருளை கொண்டுவந்தாகவேண்டும்” என்றார் சுரேசர். “ஆகவே ராஜசூயத்திற்கு முன் அஸ்வமேதம் செய்யப்படுகிறது. அஸ்தினபுரியிலிருந்து நான்கு திசைக்கும் வேள்விகுதிரைகளை அனுப்பலாம். இன்று அஸ்தினபுரியின் வேள்விப் புரவிகளை பிடித்துக் கட்டும் துணிவுள்ள எவரும் ஆரியவர்த்தத்தில் இல்லை. அனைவரும் ஆற்றலிழந்து உடைந்துகிடக்கிறார்கள். நம் போர்வெற்றி கண்டு அஞ்சியிருக்கிறார்கள். நம்முடைய படைக்கு நிஷாதரும் கிராதரும் அசுரரும் அரக்கரும் மேலும் வருவார்கள் என்றால் நம்மை எவரும் எதிர்க்கமுடியாது. ஐம்பத்தாறு நாடுகளும் கப்பம் கட்டுவார்கள் எனில் கருவூலத்தை ஒழிய ஒழிய நிறைக்கமுடியும்.” சம்வகை நீள்மூச்செறிந்தாள். “விரைவிலேயே அவ்வறிவிப்பு வெளிவரும், அஞ்சற்க!” என்றார் சுரேசர்.

சம்வகை புன்னகைத்தாள். “திறன் கொண்டோர் நாடி வருவார்கள் என்று எதிர்பார்ப்போம்” என்றாள். “அஸ்தினபுரி நிறைந்து கொப்பளிப்பதை காண்பாய்” என்றார் சுரேசர். “அஸ்தினபுரி தன்னை புதுப்பித்துக்கொள்கிறது. பழையன கழிய புதியன புக உயிர் அவ்வாறே இங்கு நீடிக்கிறது” என்றார். அவருடைய உள்ளம் மேலும் ஊக்கம் கொண்டது. “இங்கே வருபவர்கள் இந்நகரை மீண்டும் படைத்தெழுப்புவார்கள். ஹஸ்தியின் கைகளால் உருவான இந்நகரம் இப்படியே காலத்தில் மறையும். முற்றிலும் புதிய மாநகர் ஒன்று இங்கே

எழும். இது ஒரு மறுபிறப்பு.” அவர் முகம் கூர்கொண்டது. “ஏனென்றால் இந்நகர் எரிபுகுந்து மீள்கிறது. உலைமீளும் பொன் ஒளிகொண்டிருக்கும்.” சம்வகை அவருடைய உணர்ச்சிகளை விந்தையாக நோக்கியபடி “வருபவர்களுக்கு அஸ்தினபுரியைப்பற்றி என்ன தெரியும்? இங்குள்ள நெறிமுறைகள் மாறிவிடும். இங்குள்ள வரலாறு மறக்கப்பட்டுவிடும். இங்கு பேசப்படும் மொழியே மறைந்துவிடக்கூடும். முற்றிலும் புதிய ஒரு நகராக இது ஆகிவிடலாம்” என்றாள்.

“அவ்வாறல்ல” என்று சுரேசர் புன்னகையுடன் சொன்னார். “இங்கு வரும் அனைவரும் அஸ்தினபுரியைப் பற்றிய பெரிய கனவுகளுடன் வருகிறார்கள். அக்கனவுகள் இங்கிருந்து எழுந்து சென்ற கதைகளிலிருந்து அவர்கள் பெற்றவை. அஸ்தினபுரி இங்கிருந்து கதைகளை உருவாக்கி நாற்புறமும் பெருக்கிக்கொண்டிருக்கிறது, அன்னை மரம் விதைகளை சிதறடிப்பதுபோல. இங்கு வருபவர்கள் அஸ்தினபுரி கொடுத்த புதிய எண்ணங்களுடன், திட்டங்களுடன் வருகிறார்கள். அவர்கள் இங்கு உருவாக்கும் அஸ்தினபுரி முன்பிருந்த அஸ்தினபுரியின் கனவிலிருந்து எழுந்த ஒன்றாகவே இருக்கும், அதன் இயல்பான நீட்சியாக, அதைவிட ஒளியும் விசையும் கொண்டதாக. ஒருபோதும் அதைவிட குறைவானதாக அமையாது.”

“இங்கு வருபவர்கள் ஒவ்வொருவரும் அஸ்தினபுரி அஸ்தினபுரி என்று தங்கள் உள்ளத்திற்குள் ஊழ்கநுண்சொல்போல் சொல்லிக்கொண்டுதான் வருவார்கள். இங்கு வந்து இந்நகரைக் கண்டதுமே ஏமாற்றம் கொள்வார்கள். இதுவல்ல அவர்கள் கண்ட கனவென்று உணர்ந்ததுமே அக்கனவென இதை

ஆக்கும்பொருட்டு அவர்களின் உள்ளம் உறுதிகொள்ளும். நோக்குக இன்னும் ஓராண்டுக்குள் இந்நகர் முன்பொருபோதும் இருந்திராதபடி பொலிவுற்று எழும். பழைய அஸ்தினபுரியின் நினைவுகள் முற்றாக அகன்று அது கண்ட கனவே நனவென இங்கு எழுந்திருக்கும். பட்டுப்புழுவின் கனவிலிருந்து ஏழுவண்ணச் சிறகுகள் எழுவதுபோல!”

சம்வகை அவருடைய அந்த ஊக்கத்தை தானும் அடையவில்லை. ஆனால் அவர் என்ன சொல்கிறார் என்று அவளுக்கு புரிந்தது. புன்னகையுடன் எழுந்து தலைவணங்கி “ஆனால் ஒவ்வொன்றுக்கும் இங்கு ஒரு வழி வைத்திருக்கிறார்கள். ஒவ்வொன்றும் முன்னரே நிகழ்ந்துவிட்டிருக்கிறது என்கிறார்கள்” என்றாள். “மெய். போரால் நகரங்கள் முற்றழிவதென்பது பலமுறை முன்னரும் நிகழ்ந்ததே. முளைத்தெழுவதும் அவ்வாறே” என்றார் சுரேசர். அவள் கிளம்பும்போது சுரேசர் புன்னகையுடன் “சூத இளவரசர் உன்னைப் பற்றி கேட்டார்” என்றார். அவள் நின்று அவரை நேரில் நோக்கி “என்னைப் பற்றியா?” என்றாள்.

“ஆம், அவர் கோட்டைமுகப்புக்குச் சென்றபோது நீ அங்கே இல்லை என்றார். என்னிடம் நீ எங்கு சென்றாய் என்று கேட்டார். சற்று முன்னர் வரைக்கும் கோட்டை முகப்பில் இருந்தாள், இல்லம் மீண்டிருப்பாள் என்று சொன்னேன். அவள் இல்லத்தில் யார் இருக்கிறார்கள் என்றார். இல்லத்தில் உனக்கென எவருமில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே அவ்வினாவின் பொருளென்ன என்று எனக்குத் தெரிந்தது. அவளுக்குத் துணைவனென எவரும் இன்னும் அமையவில்லை என்றேன். அதை கேட்காதவர்போல் பேச்சை மாற்றி செய்தியுடன் வரும் ஒற்றர்களை என் அறைக்கு

அனுப்புக என்று சொல்லிவிட்டுச் சென்றார். ஆனால் அந்த வினா பொருள் உள்ளது” என்றார்.

சம்வகை அவரை நோக்கி “எவ்வகையில்?” என்றாள். சுரேசர் உரக்க நகைத்து ”அறியேன்” என்றார். அவள் தலைவணங்கி வெளியே சென்றாள்.

# களிற்றியானை நிரை - 15

### பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 6

சுரேசரிடம் பேசிவிட்டு மீண்ட பின்னரே சம்வகை நகருக்குள் வந்துகொண்டிருந்த மக்களை கூர்ந்து நோக்கத்தொடங்கினாள். ஏற்கெனவே பலவகையான மக்கள் உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். நகரிலிருந்து மக்கள் விலகிச்செல்கிறார்கள் என்னும் செய்தியே பலரை உள்ளே வரச்செய்ய போதுமானதாக இருந்தது. முன்பு வந்துகொண்டிருந்தவர்கள் இரவலரும் நாடோடிகளுமாக தெரிந்தனர். பின்னர் சிறுவணிகர்களும் கைவலரும் சூதர்களும் வரலாயினர். பின்னர் ஆயரும் உழவுக்குடியினரும்கூட தென்பட்டார்கள். அஸ்தினபுரியில் புதியவர்களுக்கு இடமிருக்கிறது என்னும் செய்தியை அந்நகரைவிட்டுச் சென்றவர்கள் பரப்பினர். அங்கே பழைய குலநெறிகள் அழிந்துவிட்டன என அவர்கள் தூற்றிச் சொன்னது ஒரு புதிய வாய்ப்பு என சிலருக்குத் தென்பட்டது.

மெல்லமெல்ல நிஷாதர்களும் கிராதர்களும் வரத்தொடங்கினர். அசுரகுடியினரும் அரக்கர்களும் தென்படவில்லை. “அவர்கள்

தங்கள் குடித்தொன்மை மேலும் நிலப்பிடிப்பு மேலும் பெருமிதம் கொண்டவர்கள். பாரதவர்ஷம் ஒருநாள் தங்கள் மூதாதையரால் மீண்டும் ஆளப்படும் என்று நம்புபவர்கள். ஆகவே பிற நிலங்களை அவர்கள் நாடுவதில்லை" என்றார் சாரிகர். "அவர்கள் பிற நிலங்களை படையெடுத்துச் சென்று கைப்பற்றுவதில்லை. தங்கள் நாட்டை விரிவாக்கிக்கொள்வதுமில்லை. பிறர் படைகொண்டுவந்தாலொழிய போரிடுவதில்லை. எதிரிகளை மட்டுமே கொள்ளையிடுகிறார்கள். தங்கள் நிலத்தில் அயல்வேதம் ஊடுருவினால் மட்டுமே எதிர்த்து எழுகிறார்கள். அவர்களின் தெய்வங்கள் அவர்களுடைய நிலங்களுக்கு அப்பால் ஆற்றல்கொண்டவை அல்ல என்று சொல்லப்படுகிறது."

அவர்கள் காலையில் கோட்டைமேல் நின்றிருந்தார்கள். அரண்மனையிலிருந்து அத்திரளை பார்ப்பதற்காகவே சாரிகர் தன் தோழன் சுதமனுடன் வந்திருந்தார். சாரிகர் சொன்னார் "இனி காடுகளெங்கும் அசுரர்களும் அரக்கர்களும் வலுப்பெறுவார்கள். அவர்களை வெல்லும் ஷத்ரிய குடிகள் அனைத்தும் முற்றழிந்தன. உண்மையில் இன்று பாரதவர்ஷத்தின் ஷத்ரிய மன்னர்கள் அனைவரும் அவர்கள் தங்களைத் தாக்கலாகாது என்று அஞ்சி ஒடுங்கியிருக்கிறார்கள். இனி அவர்கள் ஆற்றல்கொண்டு படைதிரட்டி எழ பல தலைமுறைகள் ஆகும். ஷத்ரியர்களே இல்லையென்ற நிலை வந்துள்ளது." சம்வகை கீழே சென்றுகொண்டிருந்த மக்கள் திரளை நோக்கிக்கொண்டு நின்றிருந்தாள். மக்கள் என்னும் ஒழுக்கு. அவள் நோக்கத் தொடங்கியது முதல் அது ஒழுக்காகவே நிகழ்ந்தது. சுழிப்பாக அல்ல, அலையாக அல்ல.

“முன்பு முதலாம் பரசுராமரின் காலத்தில் அவர் சீற்றம்கொண்டு மழுவேந்தி வந்து ஷத்ரியர்களை முற்றழித்தார் என்கிறார்கள். அவர்களின் குருதியைக் கொண்டு குருக்ஷேத்ரத்தில் ஐந்து வாவிகளை அமைத்தார். அந்த வாவிகள் அங்கே இன்றும் உள்ளன. இன்றும் ஆயிரத்தெட்டு ஷத்ரிய குடிகள் அங்கே தங்கள் முன்னோர்களுக்குரிய நினைவுச்சடங்குகளை செய்கின்றன. அந்நிலத்தில் மீண்டும் ஷத்ரியகுலம் முற்றழியும் என நெடுங்காலமாக நிமித்திகக் கணிப்பு இருந்தது. பாரதவர்ஷமெங்கும் ஷத்ரிய குடிகள் பரவி கிளைநாடுகளாகி வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கையில் அங்கே ஐந்து வாவிகளின் கரையில் அமர்ந்து யாரோ ஒரு சூதன் வரப்போகும் அந்த அழிவைப்பற்றி பாடிக்கொண்டே இருந்திருக்கிறான். தலைமுறை தலைமுறையாக.”

“நானும் அப்பாடலை ஒருமுறை கேட்டிருக்கிறேன்” என்று சாரிகர் சொன்னார். “அதைக் கேட்டபோது என் மெய் சிலிர்த்தது. அச்சத்தில் கண்களை மூடிக்கொண்டு நடுங்கினேன். ஆனால் எந்தை என்னை ஆற்றுப்படுத்தினார். அது வெறும்சொல் என்றார். வேதம் காக்கும் ஷத்ரியர்களுக்கு வேதமே காப்பு. வேதம் உள்ளளவும் அவர்கள் அழியப்போவதில்லை என்றார். எனில் ஏன் பரசுராமர் அவர்களை அழித்தார் என்றேன் நான். அவர்கள் வேதம் மறந்தனர். வேதப்புறம்பாக தங்களை நிலைநாட்டிக்கொண்டனர். வாளும் வேலும் சொல்லுக்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும். அவை தங்கள் வழியை தாங்கள் தேர்கையில் அழிவு தொடங்கிவிடுகிறது என்று எந்தை சொன்னார். ஆகவேதான் ஷத்ரியர்களை பரசுராமர் அழித்தார். சொல் படைக்கலம் ஏந்தினால் அதை எவரும் எதிர்க்கவியலாது என்று காட்டினார். சொல்லில் இருந்து எழுந்தது அனல். அனலே

படைக்கலங்களில் முதன்மையானது. மழுவால் நிலைநாட்டப்பட்ட அனற்குலத்து ஷத்ரியர் எழுந்து வந்து வேதக்காவலர்களானார்கள் என்றார்.”

“அன்று அவர் சொன்னதை நான் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் நான் பயிலுந்தோறும் அவ்வுறுதிப்பாட்டையே அடைந்தேன். ஷத்ரிய குடி பெருகிக்கொண்டிருக்கிறது. அவர்களின் ஆற்றல் என வேதம் நிலைகொள்கிறது. அவர்களை எவரும் வெல்லமுடியாது. அதற்கேற்ப மாபெரும் அசுரச்சக்கரவர்த்திகள் அழிந்துகொண்டிருந்தார்கள். பாணாசுரரின் தோல்வியே அதில் இறுதியானது. இனி ஒன்றும் நிகழப்போவதில்லை என்று எண்ணினேன். ஒருமுறை கரைமூடிப் பெருகியோடிய கங்கையின் கரையில் என் சாலைமாணாக்கர்களிடம் பேசிக்கொண்டிருக்கையில் அதை சொன்னேன். அப்போது அங்கே சற்று அப்பால் ஒரு நாடோடி நீராடிக்கொண்டிருந்தார். துறவி அல்ல, ஆனால் துறவியருக்குரிய முகம் கொண்டிருந்தார். அவர் புன்னகைத்தார். அதை நான் கண்டேன்.”

அனைவரும் பிரிந்துசெல்ல நான் அவரைத் தொடர்ந்துசென்றேன். அவரை அணுகி தோளைப்பற்றி நிறுத்தி “சொல்லுங்கள், நீங்கள் நகைத்தது ஏன்?” என்று கேட்டேன். அவர் புன்னகையுடன் “நீங்கள் சொல்வதை கேட்டேன். விரும்புவதை நம்ப மானுடர் கொள்ளும் உறுதியைப் பற்றி எண்ணிக்கொண்டேன்” என்றார். நான் அவரிடம் ”எனில் சொல்லுங்கள், எவ்வண்ணம் ஷத்ரியகுலம் அழியக்கூடும்? அவர்கள் வேதத்தை கைவிடப்போகிறார்களா? அல்லது வேதம் அவர்களை விட்டு அகலப்போகிறதா? அல்லது வேதம் தோற்கடிக்கப்படுமா?” என்று கேட்டேன். அவர் “வெல்லற்கரிய

தந்தையை மைந்தன் வெல்வான் என்று தொல்கூற்று உள்ளது. வேதத்தின் கூர் என எழும் ஐந்தாம் வேதத்தால் நால்வேதம் வெல்லப்படும் என்கிறார்கள்” என்றார்.

அச்சொல்லில் இருந்த உண்மை என்னை நாவடங்கச் செய்தது. “வெல்லற்கரியவர்களை வெல்ல தெய்வங்கள் அவர்களையே ஏவுகின்றன என்றும் ஒரு சொல் உண்டு. ஷத்ரியர்களை இம்முறை ஷத்ரியர்களே வெல்வார்கள்” என்றார். நான் அவரை விட்டுவிட்டேன். அவர் செல்வதை வெறுமனே நோக்கிக்கொண்டு நின்றேன். ஒருகணத்தில் பாரதவர்ஷத்தில் நிகழ்வன அனைத்தும் எனக்கு புரிந்தது. நான் என் குருநிலையில் இருந்துகொண்டு இப்பூசலை ஒவ்வொருநாளுமென நோக்கி அறிந்துகொண்டிருந்தேன். இந்த அலைக்கொந்தளிப்பில் எழும் அமுதம் என்ன என்று தேடிக்கொண்டிருந்தேன். அது ஒரு நூல் என்றனர். இளைய யாதவரால் யாக்கப்பட்டது என்றும் இளைய பாண்டவர் அர்ஜுனன் அதை கற்றார் என்றும் சொன்னார்கள்.

நான் அதைத் தேடி சாந்தீபனி குருநிலைக்குச் சென்றேன். அங்கே எவருக்கும் அந்நூல் குறித்து தெரிந்திருக்கவில்லை. அது ஞானநூல் அல்ல, ஊழ்கநூல் என்றனர். விந்து கருப்பைக்கு என ஆசிரியரிடமிருந்து மாணவருக்கு அது செல்லவேண்டும் என்றனர். சாந்தீபனி குருநிலையில் எட்டு மாதம் இருந்தேன். அங்கே அந்த புதிய வேதம் மலர்ந்தெழுந்த மரம் என்ன என்று கற்றேன். அங்கிருந்து குருக்ஷேத்ரப் போர்க்களத்துக்கே கிளம்பிச்சென்றேன். அங்கே பரசுராமர் அமைத்த ஐங்குளத்தின் கரையில் ஒரு மாதம் தங்கியிருந்தேன். அப்போது ஒரு நாடோடித் துறவியின் நாவில் எழுந்த ஈரடியை கேட்டேன். அதன் இசையழகும் சொல்லழகும் என்னைக் கவர

எழுந்துசென்று அது என்ன என்று அவரிடம் உசாவினேன். அதை ஒரு சூதர் நாவிலிருந்து கற்றதாக அவர் சொன்னார். அது இளைய யாதவர் இயற்றிய புதிய வேதத்தின் சொல் என்றார். இமைக்கணக் காட்டில் அது எழுந்தது என அறிந்தேன். சொல்க, அவ்வரிகளை சொல்க என்று பெருவிடாயுடன் கேட்டேன். இரண்டு வரிகள். எட்டு சொற்கள். நான் அந்த வேதத்தை கண்டுகொண்டேன்.

"அங்கிருந்து நேராக இங்கே வந்தேன். நான் வரும்போதே குருக்ஷேத்ரத்தில் போர் தொடங்கிவிட்டது. அதன் செய்திகள் எதையும் அறிந்துகொள்ள நான் அக்கறை கொள்ளவில்லை. அதில் எவர் வெல்வார், எச்சொல் நிலைபெறும் என்று நன்கு தெளிந்திருந்தேன். புதிய வேதத்தின் பொருட்டு வாழ்வதற்காக நான் அஸ்தினபுரியை நாடினேன்" என்றார் சாரிகர். சம்வகை அவருடைய உணர்ச்சிகளை விந்தையாக நோக்கிக்கொண்டிருந்தாள். "இந்நகர்தான், இந்நிலம்தான் அதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இங்கு அச்சொல் முளைவிட்டு எழும். அதன் களத்தில் நானும் இருப்பேன்" என்றார். சம்வகை "அந்த வரிகள் எவை?" என்றாள். திடுக்கிட்டதுபோல அவளை நோக்கிய சாரிகர் புன்னகைத்து "அதைச் சொல்ல எனக்கு ஒப்புதல் இல்லை" என்றார். சம்வகை "பொறுத்தருள்க, நான் அறியாதவள். அவ்வாறு கேட்டிருக்கலாகாது" என்றாள். சாரிகர் "உன் வரியை நீ கண்டடையக்கூடும்" என்றார்.

அவர்கள் அருகே நின்றிருந்த புதிய சிற்றமைச்சரான சுதமன் "நாங்கள் பாரதவர்ஷத்தின் கிழக்கு விளிம்பில் வாழ்பவர்கள்" என்றார். "பெருநதியான பிரம்மபுத்திரன் தொடங்குமிடத்தில். பசிய மலைகளின் அடிவாரத்தில். எங்களைச் சூழ்ந்து

நாகர்களும் கின்னரர்களும் வாழ்கிறார்கள்” என்றான். “நாங்கள் பாரதவர்ஷத்தின் மையநிலத்துக்கு அயலார். எங்கள் நெறிகள் வேறு. அங்கே செய்திகள் மெல்லமெல்லத்தான் வந்துசேரும். ஒருநாள் பெருஞ்சாலையில் நான் சந்தித்த துறவி ஒருவர் சொன்னார். மரம் விதையாகிறது, விதை முளைக்கவிருக்கிறது என. எழும் புதிய வேதத்தின் செய்தியை அவ்வாறு நான் அடைந்தேன். அவர் என்னிடம் மரம் ஒரு விதையில் தன்னை திரட்டிக்கொள்கிறது, தன் தகவுகளையும் கனவுகளையும் என்றார். அச்சொற்களிலிருந்து நெடுந்தொலைவு சென்று நான் அந்த வேதத்தை என் கனவில் கண்டேன்.

நான் கண்ட வேதம் இனிய சிறுகுழவி. நீலப்பீலியை தலையில் சூடி கையில் குழலேந்தியது. கண்மலர்ந்து புன்னகைப்பது. அதைக் கண்டபின் நான் ஐயமற்றவனானேன். எங்கள் நெடுந்தொலைவு நிலத்திற்கு கசிந்து வந்துசேரும் உதிரிச் செய்திகளை தொகுத்து ஒற்றை நிகழ்வாக ஆக்குவது சிலராலேயே இயலும். அவர்களில் ஒருவனாக நான் ஆனேன். என்னைச் சூழ்ந்து என் குலத்தோர் என்ன நிகழ்கிறதென்று கேட்டுக்கொண்டிருப்பார்கள். அஸ்தினபுரியில் ஒருங்குகூடிக்கொண்டிருந்த போரின் செய்திகளை தொகுத்து ஒற்றைக் கதையாக ஆக்கி அவர்களுக்கு விளக்கினேன். நாடோடிப்பாடகர்கள் சொன்ன கதைகள். வணிகர்கள் சொன்ன கதைகள். பெரும்பாலான கதைகள் வாய்செவி என பரவியவை. உயிரிழந்தவை உண்டு. புத்துயிர்கொண்டு வளர்ந்தவையும் உண்டு. நான் அவற்றிலிருந்து மெய்மையின் சரடை எடுப்பவனாகத் திகழ்ந்தேன்.

பின்னும் பலர் வந்து சொல்லத்தொடங்கினர். ஆனால் என் கதையிலிருந்த ஒருமை அவர்களின் கதைகளில்

இருக்கவில்லை. ஏனென்றால் நான் அனைத்தையும் புதிய வேதத்தின் எழுகையாகவே விளக்கினேன். அந்தச் செய்தி எங்களை எழுச்சி கொள்ளச்செய்தது. புதிய வேதத்தின் வெற்றிக்காக நாங்கள் ஒவ்வொருநாளும் வேள்விசெய்தோம். இறைவேண்டினோம். ஏனென்றால் எங்கள் நாடு நால்வேதத்தின் மையநிலத்திற்கு அப்பாலிருந்தது. ஐம்பத்தாறு நாடுகளின் பட்டியலில் எங்கள் நாடு இல்லை. எங்கள் அரசர்கள் ஷத்ரியர்களாகக் கொள்ளப்படவில்லை. எங்கள் அந்தணர்கள் எவருக்கும் வேள்வியவைகளில் முன்னிலை இருக்கவில்லை. நாங்கள் பரசுராமர்களால் உருவாக்கப்பட்ட அனல்குலத்து அந்தணர். எங்கள் வேதச்சொல் கூர் கொண்டது. எங்கள் சடங்குகள் பிழையற்றவை. எங்கள் நோன்புகள் முழுமை கூடியவை. ஆயினும் நாங்கள் அவைகளில் பின்னிலை கொண்டோம்.

ஏனென்றால் எங்களுக்கு வேதமுன்னிலை அளிக்கப்படுமென்றால் எங்கள் அரசருக்கும் குலமுன்னிலை அமையும் என அஞ்சினர் ஷத்ரியர். ஆகவே அவர்களால் பேணப்பட்ட அந்தணர் எங்களை அகற்றினர். வேதமெனும் சரடால் கோக்கப்பட்டவர்கள் பரதகண்டத்து அந்தணர். ஆனால் எவர் மையமணியாகவேண்டும் எவர் ஓரத்திலமையவேண்டும் என மாறா நெறிகள் சில அமைந்துவிட்டிருக்கின்றன. இப்போது வேதம் தன்னைத் தானே குலைத்து மறு ஆக்கம் செய்துகொள்கிறதென்றே பொருள்கொண்டோம். இங்கே போர் முடிவதற்கு முன்னரே நாங்கள் கிளம்பிவிட்டோம். நெடுந்தொலைவுகளை நடந்தே கடந்து அஸ்தினபுரியை வந்தடைந்தோம். இங்கு எழும் புதிய வேதம் எங்களை அமரவைக்கும் என உறுதிகொண்டுள்ளோம்.

“நான் அஸ்தினபுரிக்கு வரும்போது இந்நகரைப்பற்றி இவ்வண்ணம் எண்ணியிருக்கவில்லை. கதைகளில் இந்நகரைப்பற்றி அறிந்தவர்கள் நேரிலறிகையில் ஏமாற்றம் கொள்கிறார்கள் என்றார்கள். கதைகளையே அறிந்த எங்களுக்கு இந்நகர் திகைப்பூட்டுமளவுக்கு பெரிதாக இருந்தது. ஏனென்றால் நாங்கள் கண்ட நகர்களெல்லாம் மூங்கில்கோட்டையமைந்த சிற்றூர்கள்தான். ஐந்தாறு சிற்றூர்களை இணைத்து ஒருநகரை கற்பனை செய்திருந்தோம்” என்றார் சுதமன். சாரிகர் கீழே நோக்கி “இதோ ஒவ்வொருவர் விழிகளிலும் ஒவ்வொரு அஸ்தினபுரி. பல்லாயிரம் அஸ்தினபுரிகள் உள்ளே நுழைந்துகொண்டிருக்கின்றன” என்றார்.

ராஜசூயம் நிகழ்வதற்கான முறையான அறிவிப்பு வெளியாகவில்லை. ஆனால் அஸ்வமேதம் தொடங்கிவிட்டிருந்தது. அதுவே ராஜசூயத்திற்கான அறிவிப்பாக ஆகியது. இளையவர் நால்வரின் தலைமையில் புரவிகள் நான்கு திசைகளுக்கும் கிளம்பிச் சென்றன. “ஆரியவர்த்தம் முழுக்க புரவிகள் சென்றாலே அஸ்வமேதம் முழுமையடைகிறது என்று பொருள். ஆரியவர்த்தத்தின் நாடுகள் அனைத்துமே ஏற்கெனவே நம்மிடம் போரில் தோல்வியடைந்தவைதான். அவர்களுக்கு ஓலையை அனுப்பிவிட்டுக் கிளம்பலாம்” என்று சுரேசர் சொன்னார். “அவர்கள் அஞ்சுவார்கள். நம் புரவி செல்வதற்கு முன்னரே அங்கே கப்பம் ஒருங்கியிருக்கும்.”

ஆனால் தௌம்யர் “அஸ்வமேதம் தொடங்குவதற்கு முன்னர் ஏழு சடங்குநிலைகள் உள்ளன. வேதம் விளைந்த காடுகள் அனைத்திற்கும் தூது அனுப்பப்பட்டு ஒப்புதல்

பெறப்படவேண்டும். வேதம் திகழும் நிலத்திற்கு மட்டுமே புரவியெழுகைக்கு ஒப்புதல் உண்டு. இல்லையேல் அப்புரவியை ஷத்ரிய மன்னர்கள் அனைவரும் சேர்ந்து பிடித்து அமைக்கவேண்டும் என்பது நெறி” என்றார். “அனைத்து வைதிகர்களும் அமரும் வேள்வி ஒன்று இங்கே நிகழவேண்டும். அதில் தேவர்கள் இறங்கி வரவேண்டும். நான்கு திசைகளுக்கும் உரிய தேவர்களின் ஒப்புதல் பெறவேண்டும். ஒவ்வொரு திசைக்கும் அதற்குரிய வண்ணம் கொண்ட புரவி செல்லவேண்டும். ஒவ்வொரு புரவியும் அதற்குரிய முறையில் அந்தணரால் பன்னிரு நாட்கள் வழிபடப்பட்டு வேதவடிவென்றே ஆக்கப்பட்டு கடிவாளம் நீக்கப்படவேண்டும். அதைத் தொடர்ந்து நால்வகைப் படைகளும் கொடிகளுடன் செல்லவேண்டும். அது வேதத்தின் புரவி, அதற்கு எந்த அரசமுத்திரைகளும் இருக்கக்கூடாது. அதன் உடலில் மானுடர் அணிவித்த எந்த அணிகளும் கூடாது. அது வேதம் போலவே தூயதாக இருக்கவேண்டும்.”

அவையில் அதைக் கேட்டு யுதிஷ்டிரன் திகைப்புடன் அமர்ந்திருந்தார். சுரேசர் தணிந்த குரலில் “இது முறையான அஸ்வமேதம் அல்ல” என்றார். “எனில் அது அஸ்வமேதம் அல்ல, அச்சொல்லை பயன்படுத்தலாகாது. அஸ்வமேதத்தில் முன்செல்வது வேதம். படைகொண்டு பின்செல்பவன் வேதக்காவலன். அந்நிலையில் மட்டுமே அவனுக்கு பிறர்மேல் படைமேற்கொள்ளும் உரிமை வாய்க்கிறது” என்றார் தௌம்யர். “இன்று நம்மை அனைத்து வேதியர்களும் ஏற்பார்களா என்பது ஐயத்திற்குரியது. அஸ்தினபுரி ஐந்தாவது வேதத்திற்காக நிலைகொள்கிறது என்று சொல்லப்படுகிறது” என்றார் யுதிஷ்டிரன். “ஆம், ஆனால் அது நான்குவேத மெய்மையே ஒழிய வேத மறுப்பு அல்ல” என்றார் தௌம்யர்.

“மெய், ஆனால் அதை இன்னமும் முழு வேதியர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களை அவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்வது எளிதும் அல்ல. தொடர்ச்சியான வேதஅவைகள் வழியாக, சொல்லுசாவி பொருள்தெளிதலினூடாகவே அதை செய்ய முடியும். அதற்கு இந்நகரம் வேரூன்றவேண்டும். இங்கே வேள்விகள் நிகழ்ந்து வேதியர்கள் அனைவரும் நாடிவரும் நிலை உருவாகவேண்டும். அதன்பொருட்டே இதை தொடங்குகிறோம்” என்றார் யுதிஷ்டிரன். அவர் சொல்வதை தௌம்யர் புரிந்துகொள்ளவில்லை. “வேள்விகள் என்றாலே அது வேதியர் அனைவரும் ஒப்புக்கொள்ளும் நிகழ்வுதான். வேதியர் அவை ஏற்காத எவரும் வேள்வி இயற்றலாகாது” என்றார்.

சுரேசர் “ஆம், அந்தணமுதல்வர் சொல்வது உண்மை, நமக்கு வேதியர்களின் ஒப்புதல் தேவை. அவர்களின் ஐயங்களைக் களைந்து அவர்களிடமிருந்து ஏற்பு பெறுவதற்கு தகுதியான மெய்யறிவர் ஒருவர் முன்னெழவேண்டும். கற்றறிந்தவரும் நெறிநிற்பவரும் வேதச்சொல் தேர்ந்தவருமாகிய தௌம்யர் அதை செய்வதே உகந்தது. அவர் அரசரின்பொருட்டு இதை செய்யவேண்டும்” என்றார். தௌம்யர் “என் கடமை அது…” என்று தயங்கி “ஆனால் அவ்வண்ணமொரு வேதப்பொருள் அவையில் இளைய யாதவரின் பொருட்டு சொல்லாடுவதற்கான பயிற்சி எனக்கு இல்லை என்று படுகிறது” என்றார். “சொல்லுசாவி நிறைவுசெய்து நாம் எதையும் தொடங்கவியலாது. அஸ்தினபுரியில் நிகழும் வேதக்கூடல்களில் பங்குகொள்ள வேதியரிடமிருந்து ஒப்புதல் பெற்றாலே போதும். அவர்கள் இங்கே வந்தால் எஞ்சியதை நாம் முன்வைக்கும் மெய்மையே நிறைவேற்றிக்கொள்ளும்” என்றார் சுரேசர்.

“மூத்தவர், தொன்மையான குருநிலைகளை நன்கறிந்தவர் என்னும் முறையில் தௌம்யர் இதை எளிதில் செய்ய முடியும்” என்று சகதேவன் சொன்னான். “ஆம், முயல்கிறேன்” என்றார் தௌம்யர். ஆனால் அவர் நம்பிக்கையிழந்துவிட்டது தெரிந்தது. “எனில் நாளையே தௌம்யர் கிளம்பட்டும். அவருடைய மாணவர்களும் உடன்செல்ல ஒருக்கங்கள் செய்க! அனைத்து வேதக்காடுகளுக்கும் உரிய முறையில் பரிசில்கள் செல்லட்டும்” என்றர் யுதிஷ்டிரன். தௌம்யர் “என் கடன்” என்றார். அவையில் அதற்கான ஆணையோலைகள் பொறிக்கப்பட்டன. “அவர்களின் ஒப்புதலுடன் அனைத்தையும் செய்வோம். இங்கே ராஜசூயம் நிகழ்கையில் அனைத்து வேதியர்குலங்களில் இருந்தும் ஒருவரேனும் வந்து பங்குகொண்டார்கள் என்றால் நாம் நிறைவுற்றோம். அஸ்தினபுரி மீண்டும் பொலிந்தெழும். தௌம்யரையே நம்பியிருக்கிறோம்” என்றார் சுரேசர்.

அன்று தன் அமைச்சுநிலையில் இருக்கையில் சுரேசரிடம் சம்வகை “அஸ்வமேதம் உடனே நிகழவில்லையா என்ன? படைகளைத் திரட்டவேண்டியிருக்கும் என எண்ணினேன்” என்றாள். “இல்லை, தௌம்யர் கிளம்பியதுமே அஸ்வமேதத்திற்கான ஒருக்கங்கள் தொடங்கப்படவேண்டும். இங்குள்ள அயல்நிலத்து அந்தணரைக்கொண்டே வேள்விச்சடங்குகளை செய்யவைப்போம். நமக்கு வேறுவழியில்லை. அவரை நகரைவிட்டு அகற்றவேண்டியே வேதியர்நிலைகளுக்கு அனுப்புகிறோம்” என்றார். சுதமன் “அவர் சினம்கொள்ளக்கூடும்” என்றார். “அரசியல் சூழ்ச்சிகளை புரிந்துகொள்பவர் அல்ல. அவருக்கு செய்தி தெரியும்போது நம் புரவிகள் நெடுந்தொலைவு சென்றிருக்கும்” என்றார்.

“இது அவரை சிறுமைசெய்வது ஆகாதா?” என்று அவள் மீண்டும் கேட்டாள். “அவர் சிறிதளவேனும் வெற்றிபெற்றால் நாம் ராஜசூயத்தில் வேதியர்களை அமரச்செய்யவும் முடியும்” என்றார் சுரேசர். “வெற்றிபெற்று ராஜசூயம் தொடங்கி அதில் தலைமை வேதியர் என தௌம்யரை அமரச்செய்தால் அவருடைய சினம் மறைந்துவிடும். அவர் அதற்கு அப்பால் எண்ணாதவர்.” அவளிடம் மட்டுமாக புன்னகைத்து “பொதுவாக சடங்குகளில் ஆழ்ந்திருப்பவர்களுக்கு அந்தந்த தருணங்களுக்கு அப்பால் எண்ண வாய்ப்பதில்லை. ஏனென்றால் சடங்குகள் என்பவையே நுண்ணியவையும் கடந்தவையுமான ஒவ்வொன்றையும் அந்தந்த தருணங்களில் கண்கூடான செயல்களில் நிலைநிறுத்துவதன் பொருட்டு செய்யப்படுவனதான்” என்றார். அவர் சொல்வதை புரிந்துகொள்ளாமல் அவள் பொதுவாக புன்னகைத்தாள்.

தௌம்யர் தன் பதினெட்டு மாணவர்களுடனும் அஸ்தினபுரியின் அரசர் யுதிஷ்டிரன் ஒவ்வொரு வேதநிலைக்கும் தனித்தனியாக அளித்த பொற்கொடை ஓலைகளுடனும் கிளம்பிச்சென்றார். அதற்கு மறுநாளே அஸ்தினபுரியிலிருந்து புரவிகள் கிளம்புவதற்கான ஒருக்கங்கள் தொடங்கின. நகரின் நான்கு வாயில்களிலும் நான்கு சிறுவேள்விகள் நிகழ்த்தப்பட்டன. வேசரநாட்டிலிருந்தும் காமரூபத்திற்கு அப்பாலிருந்தும் வந்திருந்த அயல்நிலத்து அந்தணர் அச்சடங்குகளை செய்தார்கள். அஸ்தினபுரியின் அரண்மனை முற்றத்தில் அமைந்த வேள்விப்பந்தலில் ஆகவனீயம், கார்கபத்யம், தட்சிணம் என்னும் மூவெரியும் எரிகுளங்களில் எழுந்தன. வேள்விக்காவலனாக யுதிஷ்டிரன் அமர்ந்தார். வேள்விக்குரிய தர்ப்பைக் கொடி பந்தல்மேல்

எழுந்தது. இணையாக அஸ்தினபுரியின் அமுதகலக்கொடி ஓங்கியது.

அங்கிருந்து கொண்டுசென்ற அனலால் கோட்டையின் நான்கு வாயில்களிலும் நான்கு வேள்விப்பந்தல்களில் அமைக்கப்பட்ட எரிகுளங்கள் சுடர்கொண்டன. வடக்குவாயிலில் அமைக்கப்பட்ட வேள்விப்பந்தலின் நடுவே இரு பொற்குடங்களின் வடிவில் குபேரன் தன் இணையான பத்ரையுடன் நிறுவப்பட்டான். அங்கே வேள்விக்காவலனாக பீமன் அமர்ந்தான். ஐந்து அணியிலக்கணங்கள் கொண்ட வெண்ணிறப் புரவியான ரஜதை அங்கே வேள்விப்பரியாக நிலை கொண்டது. தெற்குவாயிலில் யமன் தன் இணையான யமியுடன் மயில்தோகையின் வடிவில் நிறுவப்பட்டான். அங்கே சாரதை என்னும் கரிய புரவி வேள்விப்பரியாக வந்தது. சகதேவன் அங்கே வேள்விக்காவலனாக அமர்ந்தான்.

கிழக்கே இந்திரன் தன் தோழியான சாசியுடன் வேள்வித்தெய்வமென அமைந்தான். பூத்த வேங்கைமரக்கிளையும் கொன்றைமரக்கிளையும் அவர்களின் வடிவாகியது. பொன்னிறப் புரவியான ஹிரண்யை அங்கே வேள்விப்பரியென வந்தது. அதைக் காக்கும் காவலனாக வில்லுடன் அர்ஜுனன் அமர்ந்தான். நகுலன் உருவிய வாளுடன் காவலனாக அமர மேற்கே வருணன் தன் தேவியான வாருணியுடன் எழுந்தான். வலம்புரிச் சங்குகள் அவர்களின் வடிவாக நிறுவப்பட்டன. கபிலை என்னும் மாந்தளிர்நிறப் புரவி அங்கே வேள்விப்பரியாகியது. அந்தணர் வேதம் ஓதி அவியளிக்க நெய்ப்புகை எழுந்து பந்தல்கள்மேல் மணிமுடிபோல் ஒளிசூடி நின்றது. நான்கு வாயில்களிலும்

நான்குவகை படையினரும் படைக்கலங்கள் ஏந்தி காவல் நின்றனர்.

வேள்விநிறைவில் பதிட்டைகளில் தேவர்களின் வருகை நிகழ்ந்தது. பொற்குடங்களின் மேல் விண்ணொளி விழுந்தது. மயிற்பீலி காற்றில் உலைந்தது. மலர்க்கிளைகள் மலருதிர்த்தன. சங்குகளில் காற்று நுழைந்து ஓங்காரமெழுப்பியது. “தெய்வங்களின் ஆணை! எழுக புரவி!” என்று வேதியர்கள் ஆணையிட்டனர். பீமனும் அர்ஜுனனும் நகுலனும் சகதேவனும் வாளால் புரவியைக் கட்டியிருந்த தோல்வாரை வெட்டி அதை விடுவித்தனர். வேள்வித்தலைவர் வலம்புரிச்சங்கை ஊதி வேள்விப்பரி கிளம்புவதற்கு ஆணையிட்டார். பீமன் தன் கதையை தூக்கியதும் முரசுகளும் கொம்புகளும் மணிகளும் முழங்கின. “எழுக வேள்விப்பரி! எழுக அஸ்தினபுரியின் கொடி! அமுதகலக்கொடி எழுக! வெல்க வெற்றித்திருநகர்! வெல்க மாமன்னர் யுதிஷ்டிரன்! வெல்க பாரதவர்ஷத்தின் காவலன்!” என்று வாழ்த்தொலிகள் எழுந்தன.

பீமனால் விடுவிக்கப்பட்ட ரஜதை நான்கு அகவை நிறைந்த கன்னிப்புரவி. வேள்விக்கென பல நாட்களாக அது பேணப்பட்டு வந்தது. மானுடர் ஒருமுறைகூட அதன் மேல் ஏறியிருக்கவில்லை. சேணத்திற்கு பழகியிருக்கவுமில்லை. கடிவாளத்தை மென்றபடி அது வேள்விப்பந்தலுக்கு வந்தபோதே பலமுறை மிரண்டு துள்ளி பக்கவாட்டில் குதித்து கால்களை உதறிக்கொண்டது. அதை இருபுறமும் இருவர் இழுக்க முன்பக்கம் இன்னொருவர் இழுக்க அடக்கி கொண்டுவந்தனர். பலமுறை அது அவர்களைத் தூக்கி அப்பால் வீசிவிட்டு திரும்பி ஓட முற்பட்டது.

வேள்விப்பந்தலை அணுகியபோது அஞ்சி கனைத்தபடி பாய்ந்து திரும்ப முயன்றபோது அங்கே நின்றிருந்த பீமன் தன் தொடையில் ஓங்கி அறைந்தான். அவ்வோசை கேட்டு அது திகைத்து நின்று உடல் விதிர்த்தது. அவன் அருகணைந்து அதன் பிடரியில் மெல்ல அறைந்து கடிவாளத்தைப்பற்றி இழுத்து உள்ளே கொண்டுசென்றான். அது வேள்விப்பந்தலில் தறியில் கட்டப்பட்டபோது அங்கிருந்த நெய்மணத்தையும் மலர்ப்பொடியையும் முகர்ந்து தும்மியது. மூக்குத்துளைகளை விரித்து தலைதூக்கி நாற்புறமும் நோக்கி நடுநடுங்கி சுழன்றுவந்தது.

வேள்விக்களங்களில் எரி எழுந்து வேதம் ஒலிக்கத் தொடங்கியபோது அதன் அச்சம் அடங்கியது. அந்த ஒலியொழுக்கில் கொண்டுசெல்லப்பட்டதுபோல விதிர்க்கும் தோல்பரப்புடன் அதிர்ந்து திரும்பும் செவிகளுடன் அவ்வப்போது நீள்மூச்செறிந்தும் வால்சுழற்றி கால்மாற்றிக்கொண்டும் நின்றது. வேள்வி அவிமிச்சத்தை அதற்கு வேதியர் கொண்டு வந்து அளித்தபோது தயங்கி பின் நா நீட்டி சுழற்றி எடுத்து உண்டது. அதன் தொங்கிய தாடை சுவையறிந்து மீண்டும் முன்னெழுந்தது. தன் பெரிய தலையை வேதியரின் தோள்மேல் வைத்து மூச்செறிந்தது.

பீமன் அதன் தோல்வாரை வெட்டியபோது அது திகைத்து பின்னடைந்து விழியுருட்டியது. அவன் அதன் கடிவாளத்தை அகற்றினான். உருவிவிட்ட மின்னும் உடலுடன் அது பஞ்சாலானதுபோல் தோன்றியது. பிடரி அதிர்ந்துகொண்டிருக்க அது அங்கேயே நின்றது. வாழ்த்தொலிகளும் முரசுகொம்புகோட்டோசைகளும் எழுந்ததும் திரும்பி அவர்களை நோக்கியது. வேறேதோ ஒலிக்குச்

செவிகூர்வதுபோல தலைதூக்கிய பின் துள்ளிப் பாய்ந்து இரு வீரர்களின் தலைக்குமேல் எழுந்து வடக்குநோக்கி ஓடத்தொடங்கியது. பீமன் உரக்கக் கூச்சலிட்டபடி தன் புரவியிலேறிக்கொண்டு அதை தொடர்ந்து சென்றான். முரசொலியும் கொம்பொலியும் போர்க்கூச்சலுமாக படையினர் அதைத் தொடர்ந்து சென்றனர்.

கைவிடப்பட்ட காந்தாரப் படைவீடுகளின் நடுவிலூடாக அது புராணகங்கைக்குள் நுழைந்து மறைய படையினரும் பின்தொடர்ந்து சென்று பசுமைக்குள் மூழ்கினர். கோட்டைவாயிலிலும் காவல்மாடங்களிலும் நின்றிருந்தவர்கள் வாழ்த்தொலிகளை ஒலித்துக்கொண்டே இருந்தனர். கிழக்குவாயிலில் இருந்து அர்ஜுனன் ஹிரண்யையை தொடர்ந்து சென்றான் என சம்வகை அறிந்தாள். மேற்கிலிருந்து நகுலன் கபிலையை தொடர்ந்து சென்றான். அவள் தெற்கே செல்லும்போது கரிய புரவியான சாரதையை சகதேவன் கொண்டுவந்து வேள்விப்பந்தலுக்கு வெளியே நிறுத்தினான். அதன் கழுத்தை வருடி ஏதோ சொன்னான். கடிவாளத்தை அவன் அகற்றியதும் அது பிடரி மயிர் நலுங்க, புட்டத்தசைகள் திமிர்க்க, தோள்தசைகள் இறுகி நெகிழ, காலெடுத்துவைத்து நடந்து முன்சென்றது. முரசொலியும் போர்க்கூச்சலுமாக சகதேவனின் படை உடன் சென்றது.

# களிற்றியானை நிரை - 16

**பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 7**

புரவிகளைத் தொடர்ந்த படைகள் ஒருநாளிலேயே அஸ்தினபுரியின் எல்லையை கடந்துவிட்டன என்று செய்தி வந்தது. கிழக்கே அவை மகதத்திற்குள் நுழைந்தன. மேற்கே சிந்துவை நோக்கி சென்றன. வடக்கே குருநாட்டை கடந்தன. தெற்கே மச்சர்நிலங்களுக்குள் புகுந்தன. அவை செல்லும் பாதையை அஸ்தினபுரியின் அரண்மனையில் ஒரு பலகையில் படமாக வரைந்திருந்தனர். அவை செல்வதற்கு ஏற்ப அதில் வண்ணத்தால் அடையாளப்படுத்தினர். ஒவ்வொரு நாளும் அரண்மனை ஊழியர்கள் அதன்முன் வந்து நின்று ஆர்ப்பரிப்பதைக் கண்ட யுதிஷ்டிரன் அதை அரண்மனைக்கு வெளியே மிகப் பெரிய பலகை ஒன்றில் வரையும்படி ஆணையிட்டார். அதன் முன் எந்நேரமும் மக்கள் திரள் நின்றிருந்தது. அதில் செல்லும் படைகளின் நிலை சற்றே மாற்றியமைக்கப்படுகையில் ஆரவாரம் எழுந்தது.

ஒவ்வொரு நாட்டு எல்லையிலும் அந்நாட்டு அரசனே தன் அமைச்சர்களுடன் வந்து காத்து நின்று புரவியை எதிர்கொண்டான். அதற்கு பொன், பட்டு, மலர், சுடர், நீர் என ஐந்து மங்கலங்கள் காட்டி, அதன் முன் வாள் தாழ்த்தி வரவேற்றான். அஸ்தினபுரிக்குரிய திறையைச் செலுத்தி முடி தழைத்தான். செல்லும் நாடுகளில் நால்வரும் பெற்ற செல்வம் உடனே சிறிய படையுடன் அஸ்தினபுரிக்கு அனுப்பப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அவர்களிடம் சிறிய படைத்துணை ஒன்றை பெற்றுக்கொண்டு அது மேலே சென்றது. எனவே செல்லுந்தோறும் பெருகியது. ஆரியவர்த்தத்தின் எல்லைகளை அடைந்தபோது பன்மடங்காகிவிட்டிருந்தது. அதை எதிர்க்க எவரும் துணியவில்லை.

அஸ்தினபுரிக்கு வந்துகொண்டிருக்கும் பொருள்வண்டிகள் வெளிப்படையாக, கொம்பு முழவு அறிவிப்புகளுடன் வரட்டும் என்று சுரேசர் ஆணையிட்டர். “இந்நிலம் பொன் கொழிப்பது என்று மக்கள் அறியட்டும்” என்றார். “ஆனால் கிளம்பிச்சென்றவர்கள் பொன்னோ பொருளோ குறைகிறது என்பதனால் செல்லவில்லை” என்றாள் சம்வகை. “மெய், ஆனால் மக்களின் உள்ளத்தில் பொன் என்பது திரு. நலமும் அழகும் திருமகளே. திருமகள் தேடிவரும் நாட்டில் பிற அனைத்தும் சிறப்புறும் என்றே எண்ணுவார்கள். நோக்குக, இங்கு செல்வம் வருந்தோறும் தேடிவருபவர்களும் பெருகிக்கொண்டேதான் இருப்பார்கள்!” என்றார் சுரேசர்.

ராஜசூயம் குறித்த அறிவிப்பை அவர் வேண்டுமென்றே பிந்தச்செய்தார். “அதை அறிவித்தால் வேதியர்கள் சினம்கொள்ளக்கூடும். அவர்கள் ஒட்டுமொத்தமாக அஸ்தினபுரியை புறக்கணித்தால் அவர்களை நாம் வெல்வது கடினம். அவர்களில் ஒரு சாராரையாவது தௌம்யர் வென்றெடுத்துவிட்டாரென்றால் நன்று” என்றார். ஆனால் ராஜசூயம் பற்றிய செய்திகள் பரவவிடப்பட்டன. பெருவேள்விக்குரிய அவிப்பொருட்கள் பலரும் அறியும்படி சேர்க்கப்பட்டன. அதற்குரிய பந்தல்களும் முனிவரும் அந்தணரும் தங்குவதற்கான குடில்களும் அமைக்கப்பட்டன. சூதர்கள் வழியாக அச்செய்தி நாடெங்கும் பரவிச்சென்றது.

வேள்விப்பரிகள் நிலம்வென்று சென்றுகொண்டிருந்தமை குடிகளின் உள்ளத்தில் உருவாக்கிய மாற்றத்தை சம்வகை நாளுமெனக் கண்டாள். அவர்கள் குருக்ஷேத்ரப் பெரும்போரை வெறும் அழிவென, தங்கள் குடிகளுக்கு இழப்பென மட்டுமே அதுவரை அறிந்திருந்தார்கள். அது அஸ்தினபுரிக்கு

பாரதவர்ஷத்தின் மேல் அளித்த மேல்கோன்மையை, பெருமிதத்தை அவர்கள் உணரத் தொடங்கினர். “கோன்மை என்பது செல்வம், செல்வம் என்பது துய்ப்பு. துய்ப்புபோல் எளிதாகப் புரியும் பிறிதொன்று இல்லை. உடலே அதன்பொருட்டுதான் உருவாகியிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரவருக்கான துய்ப்பின்பங்கள் உள்ளன. நாணிலாது கொண்டாடுவது உடல். அடக்கமே இல்லாது களியாடுவது. நோக்குக, சின்னாட்களிலேயே இங்கே துய்ப்பு மேலோங்கும்! பிற அனைத்தும் மறக்கப்படும்” என்று சுரேசர் சொன்னார்.

அவள் அச்சொற்களை முதலில் சற்று வெறுத்தாள். ஆனால் அதை கண்முன் என கண்டாள். நகரின் மையச்சாலைகளில் எல்லாம் பெரிய பலகைகளில் வேள்விப்பரிகளின் வழி வரைந்து இடப்பட்டது. பறவைச்செய்திகள் வருந்தோறும் அவை மாற்றியமைக்கப்பட்டன. மாற்றியமைப்பதற்கான செய்தி முரசொலியினூடாக பரப்பப்பட்டது. ஒவ்வொரு பலகை முன்னும் மக்கள் கூடி நின்று களிவெறிக்கூச்சலிட்டார்கள். பின்னர் முரசொலியிலிருந்தே அவர்கள் செய்திகளை அறிந்துகொண்டு ஆர்ப்பரித்தார்கள். செய்திகளை பல பகுதிகளாகப் பிரித்து காலையிலும் உச்சியிலும் மாலையிலும் என பதிவுசெய்யச் சொன்னார் சுரேசர். பின்னர் நாழிகைக்கு ஒருமுறை செய்திகள் மாற்றப்பட்டன.

“மெய்யான செய்திகளுக்காக காத்திருக்க வேண்டியதில்லை. அங்கே நிகழ்வனவற்றை சற்று உய்த்துணர்ந்து மாற்றலாம், பிழையில்லை. பிறிதொன்று நிகழப்போவதில்லை” என்றார் சுரேசர். மேலும் சில நாட்களில் அச்செய்திகளின் அமைப்பு சற்றே சலிப்பூட்டத் தொடங்கியபோது கற்பனையால் இடர்கள்

உருவாக்கப்பட்டன. “உய்த்துணர்வது சற்றே விடுதலை பெறட்டும். நாம் விரும்புவது அங்கே நிகழட்டும். விரும்பாதவையும் அவற்றின் எல்லைக்குள் நிகழட்டும்” என்று சுரேசர் சொன்னார். “ஏனென்றால் எந்தப் போரும் விளையாட்டே. எல்லா விளையாட்டுக்களும் போரே என்பதுபோல.”

சாரிகர் “குருக்ஷேத்ரப் போர் இன்னும் நினைவில் அழியவில்லை” என்றார். “ஆம், அந்தப் போர் தொடங்குவது வரை இங்கே இம்மானுடர் கொந்தளித்து களியாடிக்கொண்டுதான் இருந்தனர். இவர்களின் வாழ்க்கையில் கலப்பற்ற இன்பத்தில் இவர்கள் திளைத்த நாட்கள் அவை மட்டுமே” என்றார் சுரேசர். “போர் ஒரு மாபெரும் திருவிழா. எல்லா விழாக்களும் அறுவடையின் கொண்டாட்டங்களில் இருந்து தொடங்கியவை என்று நூல்கள் சொல்கின்றன.” சாரிகர் “அவர்கள் உண்மையை அறியும்போது சீற்றம் கொள்ளக்கூடும்” என்றார். “அவர்கள் நாம் சொல்வனவற்றை மேலும் பெருக்கிக் கொள்வார்கள். நெடுந்தொலைவு செல்வார்கள். கற்பனையே ஆனாலும் நெடுந்தொலைவு சென்றபின் எவராலும் மீளமுடியாது” என்றார் சுரேசர்.

“விதர்ப்பநாட்டு குடிகளில் ஒரு சாரார் தங்கள் குடித்தலைவனின் தலைமையில் புரவியை எதிர்க்கிறார்கள்” என்றது செய்தி. அவர்களை சகதேவன் வென்று சென்றது மறுநாள் அறிவிக்கப்படும்வரை அஸ்தினபுரி செய்திக்காக கொந்தளித்துக்கொண்டிருந்தது. அர்ஜுனனால் பிரம்மபுத்திர பெருநதியை கடக்கமுடியவில்லை. படகுகளில் வந்து மச்சர்கள் தாக்குகிறார்கள் என்று இன்னொரு செய்தி அறிவித்தது. புரவியுடன் எப்படி நதியைக் கடப்பது என்று அஸ்தினபுரியினர்

அனைவரும் கூடி அமர்ந்து பேசி கொப்பளித்தனர். வடக்கே பனிமலைகளின் கணவாய் ஒன்றில் பீமனின் வேள்விப்பரி காணாமலாகிவிட்டது என்றது இன்னொரு செய்தி. அது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டபோது நகரம் வெறிகொண்டு கூத்தாடியது. கலங்களையும் பெட்டிகளையும் அறைந்து ஓசையெழுப்பி நடனமிட்டார்கள் மக்கள்.

சாரிகர் தன் அறையில் இருந்து அச்செய்திகளை உருவாக்கிக்கொண்டிருந்தார். "இங்கிருந்துகொண்டு அவர்களிடம் விளையாடுகிறேன். என்னிடம் இவ்வண்ணம் புதிய செய்திகளை உருவாக்கும்படி சுரேசர் சொன்னார். அவரே ஓரிரு செய்திகளை உருவாக்கி வழிகாட்டினார். எனக்கு முதலில் இது ஒவ்வாமையை உருவாக்கியது. ஆனால் நகரில் நிலவும் சோர்வைத் தீர்க்க இது ஒன்றே வழி என்றார். அது மெய் என்று அங்கே கேட்கும் கூச்சல்கள் எனக்குக் காட்டுகின்றன. உண்மையில் விருப்பமில்லாமல்தான் தொடங்கினேன். ஆனால் இன்று என்னை இந்த விளையாட்டு உள்ளிழுத்துக்கொண்டுவிட்டது" என்றார்.

"ஒரு கூட்டுமுழக்கமாக மட்டுமே அவர்களை உணர்ந்துகொண்டிருக்கிறேன். முதலில் ஒரு திரள் என தோன்றி இப்போது ஓர் ஆளுமை என அவர்களை உணர்கிறேன். ஆகவே எழுந்துசென்று அவர்களின் முகங்களைப் பார்ப்பதை தவிர்க்கிறேன்" என்றார் சாரிகர். "நான் இங்கே ஒரு செய்தியை உருவாக்குகிறேன். என் கற்பனையை ஓட்டி. அது புதிதாக இருக்கவேண்டும். ஆனால் எல்லை கடக்கக்கூடாது. அவர்கள் எதிர்பாராததாக இருக்கவேண்டும், ஆனால் அவர்களால் நம்பமுடியாததாக ஆகிவிடக்கூடாது.

அவர்களை பதற்றம்கொள்ளச் செய்யவேண்டும், ஆனால் நம்பிக்கையிழக்க வைக்கக்கூடாது. ஒரு மாபெரும் ஆடல்.”

“இங்கே என்னை அரசன் என முதலில் உணர்ந்தேன். பின்னர் பிரம்மன் என எண்ணிக்கொண்டேன். பாரதவர்ஷத்தை முழுமையாக விண்ணில் நின்று நோக்குகிறேன். என் கையசைவால் அனைத்தையும் மாற்றியமைக்கிறேன். அவை இந்தச் சிறிய வரைபடத்தில் நிகழ்கின்றன. சற்றுநேரத்திலேயே நகரில் பேருருவாக விரிகின்றன. நகரிலிருந்து முழக்கம் எழுந்து என்னை வந்தடைகிறது. எனக்கு மறுமொழி அளிக்கிறது இந்நகரம். வானுருக்கொண்ட ஒரு நகரத்திடம் சொல்லுக்குச் சொல் என உரையாடிக்கொண்டிருக்கிறேன்” என்றார். “இது பொய். இது கற்பனை. ஆனால் வரலாறும் தொல்கதைகளும் பொய்யும் கற்பனையும்தான்.”

“நேற்று இங்கிருக்கையில் ஒரு கணத்தில் ஒரு பேருணர்வை அடைந்தேன். இங்கே நான் நிகழ்த்தும் இந்த ஆடலை நூறுமடங்கு ஆயிரம் மடங்கு பல்லாயிரம் மடங்கு பெரிதாக எவரோ நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்று. கிருஷ்ண துவைபாயன மகாவியாசனைப் பற்றி நாம் கேட்டிருக்கிறோம். சாவற்றவர். எங்கோ இருந்து அனைத்தையும் அறிந்து சொல்லாக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய நாவிலிருந்து ஒரு பெருங்காவியம் எழுந்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. நிகழ்வனவற்றுக்குப் பின் அது உருவாகவில்லை. நிகழ்வனவற்றுக்கு முன்னரேகூட, நிகழ்வனவற்றுக்கு இணையாகக்கூட அது உருவாகிக்கொண்டிருக்கிறது. அது இன்றுடன் பேசவில்லை, நாளையுடனும் பேசிக்கொண்டிருக்கிறது. நேற்றும் இன்றும் நிகழ்வனவற்றை

அது சமைக்கவில்லை, நாளை நிகழ்வனவற்றையும் சமைத்துக்கொண்டிருக்கிறது.”

அவளுடைய விழிகளின் திகைப்பைக் கண்டு அவர் சிரித்தார். “வேடிக்கையாக சொன்னேன். என் உள்ளம் இன்னமும் கலங்கிவிடவில்லை. ஆனால் இந்த அரசுசூழ்கையின் கணக்குகளை உதறிவிட்டு பித்தெடுத்து வரலாற்றுப்பரப்பில் அலைவதைப்போல விடுதலை ஒன்றில்லை.” அவள் புன்னகைத்து எழுந்துகொண்டாள். “காவல் எவ்வண்ணம் நிகழ்கிறது?” என்று அவர் கேட்டார். “முற்றிலும் புதிய முகங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எதையுமே கணிக்கமுடியவில்லை. மெய் சொல்வதென்றால் இப்போது காவல் என்பது ஒரு பாவனை மட்டுமே. காவல் உண்டு என இவர்களை நம்பச்செய்கிறோம். முற்றிலும் புதியவர்களாலான இந்நகரில் காவல் என்பது இன்று இயல்வதே அல்ல” என்றாள் சம்வகை.

“இன்னொரு பெரும்புனைவு” என்று சாரிகர் வெடித்து நகைத்தார். “நன்று. அங்கே அரசரும் இப்புனைவையே விழைகிறார் என்கிறார்கள். அவருக்கு மெய்யான செய்தி செல்கிறது. ஆனால் அவர் அதில் சலிப்புற்றுவிட்டார். அதை ஒருமுறை நோக்கிவிட்டு இப்புனைவுச் செய்திகளை கண்டு களியாடிக்கொண்டிருக்கிறார். உண்மையில் சொல்லக்கேட்டபோது எனக்கே திகைப்பாக இருந்தது. நேற்று அர்ஜுனனை மலைக்குடிகள் நச்சு அம்புகளால் தாக்குவதாக சொன்னேன். அது பொய்ச்செய்தி என அரசர் நன்கறிவார். ஆனால் பதறி உடல்வெம்பி காய்ச்சல் வந்து படுத்துவிட்டார். என்ன நிகழ்கிறது என்பதை உடனுக்குடன் சென்று சொல்ல ஆணையிட்டார்.”

“உடனே அக்கதையை முடித்துவிடும்படி என்னிடம் யுயுத்ஸு வந்து ஆணையிட்டார். ஆனால் நான் மேலும் மேலும் விளையாடினேன். எல்லைவரை சென்றேன். நான்குமுறை யுயுத்ஸு வந்து என்னிடம் பூசலிட்டார். என்ன செய்வது, நச்சு அம்புகளை நான் தடுக்க இயலாதே என்றேன். உண்மையில் நானும் அப்புனைவுக்குள் இருந்தேன். புனைவு தொடங்கும் வரைதான் நான் வெளியே இருக்கிறேன். அது வழிதேர்ந்து திசைகொண்டுவிட்டால் நான் அதன் வழியே செல்கிறேன். மாலையில் அரசருக்கு மெல்லிய வலிப்பு வந்தது. இளையோனே இளையோனே என அரற்றிக்கொண்டிருந்தார். விழிநீர் வழிய மஞ்சத்தில் கிடந்தார். நகரமே கண்ணீருடன் வேண்டிக்கொண்டிருந்தது.”

“மெய்யென்ன தெரியுமா, நானும் அவ்வண்ணமே வேண்டிக்கொண்டேன். என் விழிகளிலும் நீர் வழிந்துகொண்டிருந்தது. பின்னிரவில் அர்ஜுனன் நச்சு அம்புகளைக் கடந்து மூங்கில் காட்டுக்குள் செல்வதை, அங்கே காட்டுக்குடியினரால் கைப்பற்றப்பட்டிருந்த வேள்விப்பரியை மீட்பதை அறிவித்தபோது நான் நடுங்கிக்கொண்டிருந்தேன். வேள்விப்பரி ஹிரண்யை எந்த வடுவும் இன்றி அன்று பிறந்தவள்போல் மீட்கப்பட்டதை அறிவித்தபின் எழுந்து நின்று கைதூக்கி ஆர்ப்பரித்தேன். என்னைச் சூழ்ந்து நகரம் வெடிப்போசை எழுப்பிக்கொண்டிருந்தது” சாரிகர் சொன்னார்.

சம்வகை புன்னகைத்தாள். சாரிகர் உரக்க நகைத்து “நான் இரவு களைத்து துயின்றேன். காலையில் எழுந்தால் என் உள்ளம் சலித்துக்கிடந்தது. மேலுமொரு கொந்தளிப்புக்காக அது ஏங்கியது. உச்சிப்பொழுதில் சகதேவனின் பரியான சாரதையை தெற்கே தண்டகாரண்யத்தில் ஒரு சிம்மக்கூட்டம் தாக்கியது”

என்றார். சம்வகை “இவ்வண்ணம் பல பித்துகளினூடாகத்தான் திரும்பி வரமுடியும்போலும். நம் முன் விரிந்துள்ள உண்மை அத்தனை கொடியது, அத்தனை பெரியது” என்றாள்.

நகருக்குள் வரும் அனைவருமே அயலாரெனும் ஒற்றைச்சொல்லால் வரையறுக்கப்பட்டிருந்தார்கள். ‘அவர்கள்’ என்னும் சொல் ஓர் அடையாளமென்றே ஆகியது. அச்சொல் எப்படி அவர்களை விலக்கி எல்லை வகுக்கிறது என சம்வகை உணர்ந்தாள். அவர்கள். ஆனால் மிக விரைவிலேயே இந்நகரமாக ஆகப்போகிறவார்கள். இவர்கள் என சொல்லப்படுவார்கள். எங்கே அவர்கள் இங்குளோர் ஆகிறார்கள்? இங்குள்ள எதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்? என்றோ ஒருநாள் இங்கிருந்து சென்றவர்கள் அயலார் ஆக இங்கு நுழையும்போது இவர்கள் இங்குளோர் ஆகிவிடுவார்கள்.

அதன் பின்னரே அவள் அவர்களின் இயல்புகளை உளம்குறிக்கத் தொடங்கினாள். அவர்கள் வெவ்வேறு மொழியில் பேசினார்கள். வெவ்வேறு வகை ஆடைகளை அணிந்திருந்தார்கள். அவர்களின் வண்ணமும் தோற்றமும் அசைவுகளும் வெவ்வேறு வகையாக இருந்தன. ஒற்றைத்திரள் என ஒன்றாகத் தோன்றியவர்கள் நோக்குந்தோறும் மாறுபாடு கொண்டனர். மானுடர்களை தனித்தனியாக நோக்கி அவர்களின் அடையாளங்களை அறிந்து தொகுத்து அவ்வடையாளங்களின் அடிப்படையில் அவர்களை மீண்டும் சிறுகுழுக்களாக தொகுக்கவேண்டியிருந்தது. திசையால், இனத்தால், வண்ணத்தால், உடைகளால், வேறு பழக்கங்களால் அவர்களுக்கு அடையாளமிட வேண்டியிருந்தது. பெயரிடப்பட்டதும் அவர்கள்

அக்குழுவாக இயல்பாக ஆனார்கள். அக்குழு ஒன்றாகவே செயல்பட்டது, ஒற்றையுடல் என புழங்கியது.

தெற்கு நாடுகளிலிருந்து வந்தவர்கள் கரிய நிறமும் பெரிய மின்னும் விழிகளும் உறுதியான வெண்பற்களும் கொண்டிருந்தார்கள். ஆழ்ந்த கார்வை கொண்ட குரலில் பேசினார்கள். வண்ணங்கள் குறைவான இறுக்கமற்ற ஆடைகளை அணிந்திருந்தார்கள். கிழக்கு நிலத்திலிருந்து வந்தவர்கள் சிறிய உடலும் மஞ்சள் கலந்த வண்ணமும், பதிந்த மூக்கும், மெல்லிய உதடுகளும் கொண்டிருந்தார்கள். மூக்கொலி கலந்து பேசினார்கள். மையநிலத்திலிருந்து வந்தவர்கள் செங்கல் வண்ணமும், ஒடுங்கி கூர்கொண்ட முகமும், சற்றே வளைந்த எடையற்ற உடலும் கொண்டிருந்தார்கள். மேற்கிலிருந்து வந்தவர்கள் வெண்ணிறத் தோலும், நீலக்கண்களும், உயர்ந்த உடலும், விரிந்த பெருந்தோள்களும், மெல்லிய கோட்டு உதடுகளும், புடைத்தெழுந்த கூர்மூக்கும் கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவரின் மொழியும் வெவ்வேறு உயிரினங்களின் ஓசைபோல் முற்றிலும் வேறுபட்டிருந்தது. முழவுகளின், குறும்பறைகளின், உடுக்கின், ஏழ்நரம்பு யாழின், மூங்கில் குழலின் ஒலிகள் என தோன்றின குரல்கள். ஆனால் அவ்விசைக்கலங்கள்கூட உயிர்களின் ஓசைகளிலிருந்து உருவானவை எனத் தோன்றியது பின்பு. அவர்கள் ஒற்றைப்பெருக்கென்றாகி வந்தமையாலேயே ஒருவரோடொருவர் பேசத் தொடங்கிவிட்டிருந்தனர். பொதுவான ஒற்றைச் சொற்களை கண்டடைந்தனர். அச்சொற்களைக் கோத்து மொழிக்குள்ளிருந்து ஒரு சிறு தனிமொழியை உருவாக்கிக்கொண்டனர். அந்த மொழி அவர்கள்

இருவரும் சென்று சந்தித்து மீளும் பொது இடமாக இருந்தது. மெல்ல அது சொல்பெருகி வளர்ந்தது. அவர்கள் நகரை அணுகும்போது புதிய மொழியாக உடன் வந்தது.

கங்கைக்கரையில் அமைந்த தபதி என்னும் அன்னையின் சிற்றாலயத்துப் பெண்பூசகர் நீராடுவதற்கென்று கங்கையில் மூங்கில்களை நாட்டி நீர்ப்பரப்பிற்கு உள்ளேயே ஒரு சிறு குளத்தை உருவாக்கியிருப்பார்கள். அதை சிறு வயதில் சம்வகை கண்டிருந்தாள். அன்னையிடம் அது ஏன் என்று அவள் கேட்டாள். "அன்னைப்பூசகர் நீராடும்போது உடன் எவரும் நீராடலாகாதென்று நெறி" என்று அன்னை சொன்னாள். "ஆனால் இருபுறமும் படித்துறைகளில் பல்லாயிரம் பேர் நீராடுகிறார்கள். அந்நீர்தான் அதற்குள் செல்கிறது" என்று அவள் சொன்னாள். "இல்லை, அந்த மூங்கில் வட்டத்திற்கு ஞான வாபி என்று பெயர். அதை ஒரு தனிச்சுனையாகவே கருதுகிறார்கள்" என்று அன்னை சொன்னாள். "பெருக்குக்குள் தனிச் சுனை" என்று அவள் வியக்க "எல்லா சுனைகளும் மண்ணுக்கு அடியிலிருக்கும் ஒற்றைப்பெருக்குமேல் அமைந்தவை அல்லவா?" என்று அன்னை சொன்னாள்.

பெருக்குக்குள் தனி சுனை என்று அந்த எண்ணம் அவளை நெடுங்காலம் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு மொழிக்குள்ளும் சிறு மொழி வட்டம் ஒன்றை உருவாக்க முடியும். மொழி முழுமையாக செயல்படாதபோது அந்தச் சிறு வட்டத்தை எடுத்து புழக்கத்தில் விடமுடியும். ஒவ்வொரு பெரிய வட்டத்திற்குள்ளும் ஒரு சிறுவட்டம் உருவாகும். அவ்வண்ணம் ஒரு சுழி உருவாகாமல் எந்தப் பரப்பும் செயல்பட முடியாது. அவள் அந்தப் புதிய மொழியை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டாள். அதில் வருபவர்களுடன்

உரையாடினாள். அந்த மொழி விரைவிலேயே புதிய அஸ்தினபுரியின் பேச்சுமொழியென நிலைகொள்ளும் என புரிந்துகொண்டாள். அதில் அன்னையர் தாலாட்டுவார்கள். ஆயரும் உழவரும் பாடுவார்கள். சூதர்கள் இசைப்பார்கள். அதில் காவியங்கள் எழும்.

அவள் அந்தப் புது மொழியைப் பற்றி எண்ணியபடி அக்கூட்டத்தை நோக்கி அமர்ந்திருந்தாள். அந்த மொழி வேதங்களை எப்படி சென்று சந்திக்கும்? பிறந்து விழிதிறந்த புலிக்குருளை தன் சீற்றம் மிக்க தந்தையைச் சென்று சந்திப்பதுபோல அச்சமே இன்றி அணுகுமா? அந்தக் கற்பனையே அவளுக்கு விந்தையாக இருந்தது. வேதம் அந்தப் புது மொழிக்கென தன்னை மாற்றிக்கொள்ளுமா? கங்கை அங்குதான் ஓடிக்கொண்டிருக்கிறது. கால்வாய்கள் அதை நகர்களுக்குள் கொண்டுசெல்கின்றன. வேதமெய்மை அந்தப் புதிய மொழிக்குள் முற்றிலும் புதிய மொழியில் சென்றமையக்கூடும். வேதத்தில் இருந்து தனக்குரிய பகுதியை அந்த மொழி வெட்டி எடுத்துக்கொள்ளக்கூடும். முருங்கை என உடலெங்கும் முளைவிடும் ஆற்றல்கொண்டது வேதம் என்பார்கள்.

அன்று அவள் யுதிஷ்டிரனை சந்தித்தாள். அவர் கோட்டைக்காவலை நோக்கும்பொருட்டு வந்திருந்தார். கீழே பெருகிச்சென்ற கூட்டத்தை நோக்கியபடி நின்றார். அவள் அவர்களிடம் பேசி ஆணைகளை இட்டுவிட்டு மேலே வந்து அவரை வணங்க “அவர்கள் ஒரு பெருமுழக்கமாக மட்டுமே எனக்கு தெரிகிறார்கள். முகங்களாகக் கூட திரளவில்லை” என்றார். “ஆம், ஆனால் அவர்களை ஆட்சிசெய்யப்போகிறவர் தாங்கள்” என்றாள் சம்வகை. “நீ அவர்களிடம் எந்த மொழியில்

பேசினாய்?” என்று அவர் கேட்டார். “அது அவர்களின் பாதையிலேயே திரண்டு வந்த ஒரு புது மொழி… குழந்தைபோல அன்னையின் இடையிலேயே இருக்கிறது. ஓரிரு சொற்களே பேசுகிறது. ஆனால் இனியது” என்று அவள் சொன்னாள்.

யுதிஷ்டிரன் அவளை களைத்த கண்களால் பார்த்தார். “மிக விரைவாக கற்றுக்கொள்லலாம். இந்தக் கோட்டைமுகப்பில் ஒருநாள் பகலந்திவரை நின்றாலே போதும். இங்குள்ள காவலர் அனைவருமே அதை கற்றுக்கொண்டிருக்கிறார்கள்” என்றாள். “பயிலாப் பெருந்திரள்” என்றார் யுதிஷ்டிரன். “அவர்களில் திறன்மிக்கவர்களை மட்டுமே இந்நகரில் நாம் நிறுத்திக்கொள்ளப்போகிறோம். அவர்களுக்கு இங்குள்ள உயர்மொழியை கற்றுக்கொடுக்கவேண்டும். அதற்குரிய ஆசிரியர்களை கண்டடைவோம், கல்விநிலைகளை அமைப்போம். தௌம்யர் திரும்பிவந்ததும் பேசவேண்டும். சஞ்சயனின் தலைமையில் கல்விநிலைகள் செயல்படலாம்.”

சம்வகை அவர் விழிகளை ஏறிட்டு நோக்கி “இல்லை அரசே, நீங்கள்தான் இவர்களின் மொழியை கற்றுக்கொள்ளவேண்டும்” என்றாள். அவர் அந்த நேர்மொழியில் திகைத்து “ஏன்?” என்றார். “அவர்களை புரிந்துகொள்ளும் பொறுப்பு இருப்பது உங்களுக்கே” என்று அவள் சொன்னாள். “இந்த மொழி இந்நகருக்கென உருவாகி வந்தது. இதுவே இனி இந்நகரின் மொழியாக திகழப்போகிறது. இதை தெய்வங்கள் உருவாக்கியிருக்கின்றன. இத்தருணத்திற்காக பிறந்து வந்துள்ளது. இதை அழிக்கவோ மாற்றவோ மானுடரால் இயலாது.” யுதிஷ்டிரன் அவளை சில கணங்கள் உற்று நோக்கிவிட்டு திரும்பி கீழே பெருகிச்சென்றுகொண்டிருந்தவர்களை நோக்கியபடி “மெய்”

என்றார். பின்னர் “புதிய வேதம் திகழும் மேடைபோலும் இந்த மொழி” என்றார்.

# களிற்றியானை நிரை - 17

**பகுதி இரண்டு : பதியெழு பழங்குடி – 8**

ராஜசூயத்திற்கான அறிவிப்பு முறைப்படி வெளியிடப்படுவதற்கு முன்னரே கூட்டம் பல மடங்கு பெருகத்தொடங்கியது. பாதைகள் கரைதொட்டு நிரம்பின. அவர்கள் ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டு பகுப்பது கைவிடப்பட்டது. வந்துகொண்டிருப்பவர்கள் அனைவரும் அஸ்தினபுரிக்குள் தங்குவதும் இயலாதாயிற்று. முதலில் வந்தவர்கள் தங்கள் குல அடையாளங்களுக்கேற்ப ஒழிந்து கிடந்த தெருக்களில் இருந்த இல்லங்களில் குடியேற்றப்பட்டார்கள். ஆயர் தெருக்கள் முதலில் நிறைந்தன. வேளாண் தெருக்கள் இறுதியாக பெருகின. சூதர் தெருக்களிலும் மறவர் தெருக்களிலும் மீண்டும் தலைகள் செறிந்தன.

மேலும் மேலும் கூட்டம் பெருகியபோது சுரேசர் அவர்களை வடக்கே காந்தாரக் குடியிருப்புகளுக்குள்ளும், மேலும் அப்பால் புராணகங்கைக்குள்ளும், மேற்கு குறுங்காட்டுக்குள்ளும் பரவி குடிலமைக்க ஆணையிட்டார். கூட்டம் மேலும் வலுக்க அவர்களை அருகிருந்த சிற்றூர்களுக்கு அனுப்பினார். கிழக்குக் கோட்டையினூடாக உள்ளே வந்து நகரில் பரவி இருந்த மக்கள் மேற்கு வாயில் முகப்பை நோக்கி ஆற்றுப்படுத்தப்பட்டார்கள். அங்கே பதினெட்டு மேடைகளிலாக

அமைச்சர்கள் அமர்ந்து அவர்களின் குலம் குடி அடையாளங்களையும் பெயர்களையும் பொறித்துக்கொண்டு பொற்காசுகளை கொடையளித்து மேற்குவாயிலினூடாக வெளியேற்றினர். கிழக்கு வாயிலினூடாக உள்ளே வந்த பெருக்குக்கு இணையாகவே மேற்கு வாயிலினூடாக வெளியே சென்று கொண்டும் இருந்தது.

அவர்களை தொலைதூர நிலங்களுக்கு கொண்டு சென்று குடியேற்றும் பொருட்டு காவலர் உடன் சென்றனர். அஸ்தினபுரியால் கைப்பற்றப்பட்ட புதிய நிலங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. அந்த ஒவ்வொரு நிலத்திலும் அங்கு வந்து சேர்பவர்களுக்கு தெருக்களையும் நிலங்களையும் பகிர்ந்துகொடுக்கும்பொருட்டு ஆணைத்தலைவர்கள் நிறுத்தப்பட்டனர். ஏதேனும் தனித்திறன்கொண்டவர்கள் மட்டும் நகரில் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு பித்தளையில் அரசமுத்திரை பொறித்த வில்லைகள் அடையாளமாக அளிக்கப்பட்டன. நூல்தேர்ந்தோர், வில்லாளர், அடுமனையாளர், கைவினைஞர், பரிக்கலையும் கரிக்கலையும் கற்றோர், தச்சர், சிற்பிகள், ஏவற்பணி அறிந்தோர் என நகருக்குள் திறனாளர் பெருகி அவர்களுக்குரிய தெருக்களை நிறைத்தனர்.

“இன்று அஸ்தினபுரியின் நாடு நிறைந்துகொண்டிருக்கிறது. நல்லாட்சி ஒன்று நிகழக்கூடும் என்ற எண்ணம் மட்டுமே இத்தனை பேரையும் உள்ளே கொண்டு வருகிறது” என்று சுரேசர் சொன்னார். பின்னர் சம்வகையிடம் குனிந்து “உண்மையில் இதிலொரு தீயது உள்ளது. மானுட இயல்பான தீமை அது. யுதிஷ்டிரன் பிற அரசர்களை வென்று நிகரற்ற வீரர் என இங்கு நிறுவப்பட்டுவிட்டார் என்று இவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவ்வாறு நிறுவப்பட்டவர் வேலொடு

நின்று வழிவணிகரை கொள்ளையிடுவதுபோலத்தான் இங்குள்ள அனைத்து அரசர்களிடமிருந்தும் அவர் கப்பம் பெறுவார். அச்செல்வத்தில் தங்களுக்கு பங்கு கிடைக்கும் என்றே இத்தனை பேர் வருகிறார்கள்” என்றார்.

“ஆனால் அது பழி அல்ல. பொருள்விழைவென்பது உலகியல் பேறுக்கான அடிப்படை. மேலும் மேலும் பொருள் விழையும் மக்களால் அஸ்தினபுரி நிறையப்போகிறது. அவர்கள் கொடியின் சுருள்முனை போன்று உயிர்த்துடிப்பு தேடலாக வெளிப்படுபவர்கள். புதுக் கன்றுபோல நிலைகொள்ளாதவர்கள். கனவு காண்பவர்கள். பல நூறு ஆண்டுகளாக இங்கு வாழ்ந்தவர்கள் தங்கள் முன்னோர் வாழ்ந்து வாழ்ந்து உருவாக்கிய தடத்தில் அறியாது ஒழுகுபவர்களாக மாறிவிட்டிருந்தார்கள். நிலைகொண்ட பதிகளில் நெறிகள் மாறாதவையாக இருக்கும். மாறா நெறிகள் இருக்கும் இடத்தில் மானுட வாழ்க்கை முன்னகர்வதில்லை” என்றார் சுரேசர். அவர் கோட்டைமேல் நின்று கீழே நோக்கிக்கொண்டிருந்தார். புலரிவெளிச்சம் எழுந்துகொண்டிருந்தது. இரவில் மூடப்பட்டிருந்த கோட்டைக்கதவங்கள் திறக்க மதகிலறையும் ஏரிப்பெருக்கு என வெளிப்புற மக்கள் கோட்டைவாயிலை மோதினர். உள்ளே பீறிட்டு வந்து பிரிந்து ஒழுகினர்.

“இனி இந்நகரத்தில் பழைய நெறிகளுக்கு இடமில்லை. புதிய நெறிகள் உருவாகும் வரை இங்கு கொந்தளிப்பும் பூசலும் நிகழும். உருவாகும் புதுநெறி பழைய நெறிகளிலிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் கடந்ததாக இருக்கும். முற்றிலும் புதிய ஒரு வாழ்வு இங்கு உருவாகும். இன்னும் சில நூறு ஆண்டுகாலம் அஸ்தினபுரியை எவராலும் வெல்ல இயலாது. பொருள் விழைவும் வெற்றி வேட்கையும் பழைய

நெறிகளைக் கடந்த விடுதலையும் கொண்ட மக்கள் இங்கு குடியேறவிருக்கிறார்கள். அவர்கள் அஸ்தினபுரியை தங்கள் படைக்கலமாகக் கொள்வார்கள். அவர்கள் உருவாக்கும் அஸ்தினபுரி நேற்றுவரை இருந்த அஸ்தினபுரிக்கு சிறகு முளைத்ததுபோல. அது மேலும் நச்சுக்கொடுக்குகள் கொண்டது. பற்களும் நகங்களும் கொண்டது.”

“அறிக, மகதம் முன்பு பிருகத்ஷத்ரன் நடத்திய ராஜசூயத்திற்குப் பிறகுதான் பெருகி எழுந்து மாநகராகியது! ராஜசூயத்திற்கான அறிவிப்பு எழும்போது பாரதவர்ஷத்திலுள்ள நூலறிந்தோர் அனைவரும் ஒன்றை உணர்வார்கள். அது மலைவிளிம்பில் வந்து நின்று நிலத்தை ஓங்கி அறைந்து பிளிறும் சிங்கத்தின் ஓசை. அதற்கு பசியெழுந்திருக்கிறதென்று பொருள். அக்காடனைத்தும் அதற்கு இரையே என்று பொருள். எதிர்ப்பவர் எவரும் எதிர்நிற்கலாகாதென்று பொருள். அஸ்தினபுரி அறைகூவுகிறது!” என்றார் சுரேசர். அவர் முகத்திலிருந்த கனவின் பித்து சம்வகைக்கு வியப்பை அளித்தது. அவரிடமிருந்து விழிகளை விலக்கவே இயலவில்லை.

கோட்டை விளிம்பில் நின்றபடி சம்வகை முழங்கிக்கொண்டிருந்த அஸ்தினபுரியை பார்த்தாள். கண்ணுக்குத் தெரியாத கழிகளால் மீட்டப்படும் பெருமுரசு போலிருந்தது அது. அலையலையென எழுந்த முழக்கம். அதன் மேல் இருந்த காற்றின் அலைகளை கண்ணாலேயே பார்த்துவிட முடியும் போலிருந்தது. பாரதவர்ஷத்தை நோக்கி அது முழங்கிக்கொண்டிருக்கிறது என்று எண்ணியபோது அவள் மெய்ப்பு கொண்டாள்.

சம்வகை கீழிறங்கி வந்தபோது கோட்டைமுகப்பிலிருந்த காவலனிடம் தன் வருகையொப்பை அளித்த பின்னர் உள்ளே வந்த இளைஞனை பார்த்தாள். அவன் தோற்றம் தன் விழிகளை கவர அவனை அருகே அனுப்பும்படி காவலனுக்கு கைகாட்டினாள். காவலன் அவனிடம் கோட்டை தலைவி அழைப்பதாகக் கூறினான். அவன் அவளை ஏறிட்டு நோக்கி அவள் பெண் என்பதைக் கண்டு விழிகள் சற்றே விரிய அருகே வந்தான். சம்வகை அவனிடம் “நீங்கள் எந்த ஊர்?” என்றாள். அவள் புதுமொழியில் கேட்க தானும் அம்மொழியிலேயே பேசுவதை தானே உணராமல் அவன் “முக்கடல்” என்றான்.

“தென்குமரியா?” என்று அவள் வியப்புடன் கேட்டாள். “அத்தனை தொலைவிலிருந்தா?” என்றாள். “ஆம்” என்று அவன் சொன்னான். “அங்கு வரை இந்நகரின் செய்தி சென்றடைந்துவிட்டதா?” என்று அவள் கேட்டாள். அவள் கொண்ட திகைப்பில் இருந்தே அவள் எண்ணுவதென்ன என்று அவனுக்கு புரிந்தது. புன்னகையுடன் “எங்களூரும் பாரதமே” என்றான். “இல்லை, நான் கேட்பது பிறிதொன்று. தங்கள் ஊர் வரை அஸ்தினபுரியில் ராஜசூயம் நிகழவிருக்கும் செய்தி வந்துவிட்டதா?” என்றாள். “இல்லை, நான் கிளம்பும்போது இங்கு போர்நிகழும் செய்தி கூட எனக்குத் தெரியாது” என்றான். “பிறகெப்படி கிளம்பினீர்? ஒருவேளை வேறெங்காவது செல்லும் வழியில் செய்தி அறிந்து இங்கு வந்திருக்கிறீர் போலும்” என்றாள். “இல்லை, இந்நகருக்காகவே நான் கிளம்பினேன்” என்று அவன் சொன்னான்.

அவள் குழப்பத்துடன் அவனை பார்த்தாள். ”எனக்கு ஓர் அழைப்பு வந்தது. அது எவ்வண்ணம் என் உள்ளத்தில்

தோன்றியது என்று எனக்குத் தெரியவில்லை. கிளம்பி இந்நகருக்கு வரும் வரை இந்நகரின் பெயர் மட்டுமே என்னிடம் இருந்தது" என்றான். "அது இளமையிலேயே கதைகளினூடாக நான் அறிந்த பெயர். விந்தையானதொரு கனவுநகரத்தை அச்சொல்லிலிருந்து நான் உருவாக்கிக்கொண்டிருந்தேன். அதை நோக்கி கிளம்புக என்னும் ஆணை எனக்கு கிடைத்தது. கிளம்பி நெடுநாட்களுக்குப் பின்னரே இங்கு முடிப்பூசல் நிகழ்வதை அறிந்தேன். அதன் பின்னரே இப்போர் பற்றி அறிந்தேன். விந்திய மலையைக் கடந்த பின்னரே இங்கு வேள்வி நடக்கும் செய்தி எனக்கு கிடைத்தது."

"எவ்வாறு வந்தது அந்த அழைப்பு?" என்று அவள் கேட்டாள். "அறியேன், அது என்னுள்ளிருந்து எழுந்தது" என்று அவன் சொன்னான். அவள் சிறிது நேரம் நோக்கிவிட்டு "தங்கள் பெயர் என்ன?" என்றாள். "ஆதன்" என்று அவன் சொன்னான். "தலைவன் என்றும் தந்தை என்றும் பொருள். எங்கள் நிலத்தில் கல்லால மரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் தென்றிசைமுதல்வனுக்கும் இப்பெயர் உண்டு." அவள் "வாழ்க, நகரில் நீங்கள் நலமுறுக!" என தலைவணங்கினாள். அவன் புன்னகையுடன் "நகரின் காவல் என பெண்கள் அமைந்திருப்பதே அமைதியை அளிக்கிறது" என்றான். அவள் வாய்விட்டு நகைத்து "செல்க, இந்நகர் உங்கள் கனவிலிருக்கும் நகரென்றே ஆகுக!" என்றாள்.

அவன் தலைவணங்கி மீண்டு தோழர்களுடன் சென்று சேர்ந்துகொண்டான். அவளால் அவ்வியப்பை கடக்க இயலவில்லை. அறியா உள்ளழைப்பு ஒன்று மானுடரை இங்கு கொண்டுவந்து சேர்க்கிறதென்றால் என்ன பொருள்? அவள் சூழ

நோக்கி, உள்ளே ஏட்டுச் சுவடியில் திரள் குறித்த செய்திகளை எழுதிக்கொண்டிருந்த சபரன் என்னும் அந்தணரை அருகே அழைத்தாள். அவர் வந்து “கூறுக, தலைவி!” என்றதும் அவள் “இங்கு வரும் திரளில் மிக நெடுந்தொலைவில் இருந்து எவர் வந்திருக்கக் கூடுமோ அவர்களை சுட்டிக்காட்டி அருகழையுங்கள்” என்றாள். அவர் தலையசைத்தபின் கூட்டத்தில் விழியோட்டி பீதன் என தோன்றிய ஒருவனைச் சுட்டி “இவன் அப்பால் மணிபூரக நாட்டிலிருந்து வந்திருக்கக்கூடும். அல்லது அதற்கும் அப்பால் மாமேருவின் நாட்டிலிருந்து” என்றார்.

சம்வகை அவனை அருகே அழைத்தாள். அவன் வந்து வணங்கி தன் பெயரையும் நாட்டையும் சொன்னான். அவன் காமரூபத்துக்கும் அப்பால் உள்ள மலைநாட்டைச் சேர்ந்தவன். அவன் பெயர் வெறும் ஒலியாகவே அவளுக்குக் கேட்டது. “உங்களால் மையநிலத்து மொழி எதையாவது பேச முடியுமா?” என்றாள். “நான் காமரூப மொழியை பேசுவேன்” என்றான். “காமரூப மொழி எனக்குத் தெரியும்” என்றாள் சம்வகை. “கூறுக, தாங்கள் எதன் பொருட்டு இந்நகருக்கு வருகிறீர்? இந்நகரின் அழைப்பு அங்கு வரை வந்து சேர்ந்ததா? ராஜசூயம் பற்றிய செய்தியை அறிந்தீரா?” என்றாள்.

“இல்லை, அரசி” என்று அவன் சொன்னான். “நான் வங்கநாடு வந்தபோது தான் இங்கு ராஜசூயம் நிகழும் செய்தி வந்தது. காமரூபத்திற்குள் நுழையும்போதுதான் இங்கு போர் நிகழும் செய்தியை அறிந்தேன். எங்கள் ஊரில் இந்நகர் வெறும் ஒரு பெயர் மட்டும்தான்.” அவள் “உங்கள் ஊரிலிருந்து இந்நகருக்கு உங்களைப்போல் பலர் கிளம்பி வருவதுண்டா?” என்றாள். “இல்லை, அரிதாக எவரேனும் வந்திருக்கக் கூடும். அதை நான்

அறியவில்லை. நான் கிளம்பியது என்னுள்ளிருந்து எனக்கெழுந்த ஆணையொன்றால்” என்றான். அவள் அவனை சொல்க என்னும் பாவனையில் நோக்கினாள்.

“நான் ஊழ்கம் பயின்றுகொண்டிருந்தேன். ஏனோ இச்சொல்லே திரும்பத் திரும்ப என் நாவில் எழுந்தது. என்றோ கதைகளில் கேட்டிருந்த ஒரு பெயர். என் ஆசிரியரிடம் இதைப்பற்றி கேட்டேன். ஒரு சொல் அவ்வாறு உன்னில் திரும்பத் திரும்ப திகழ்கிறது எனில் அது உன்னை அழைக்கிறதென்று பொருள். கிளம்பி அஸ்தினபுரிக்கு செல்க என்றார். அன்றே அங்கிருந்து கிளம்பிவிட்டேன்.” அவள் தலைவணங்கி அவன் செல்லலாம் என்று சொன்னாள். அவன் செல்வதை நோக்கி நின்றபோது வியப்புகொண்டிருந்தாள். சபரனிடம் “மீண்டும் ஒரு எல்லைக் குடிமகனை சுட்டுக! இம்முறையும் இம்மறுமொழியே வருமெனில் நான் எண்ணியதை உறுதி செய்துகொள்வேன்” என்றாள்.

அவர் வெண்பளிங்குபோல் வெளிறி சிவந்த புள்ளிகள் கொண்ட தோலும், நீலக்கண்களும், குருதி வெட்டுபோல் வாயும், ஒடுங்கிய நீள்மூக்கும் கொண்ட ஒருவனைச் சுட்டி “அவனை அழையுங்கள், அவன் மேற்குநிலத்து சோனகனோ யவனனோ” என்றார். அருகணைந்த அவன் பெரும்பாலைநாட்டுக்கு அப்பால் விரிந்துள்ள யவன நிலத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னான். காந்தார மொழியை அவனால் பேச முடிந்தது. அவனும் அதையே சொன்னான். உள்ளிருந்தெழும் ஓர் ஆணை அஸ்தினபுரியை நோக்கி தன்னை செலுத்தியது என்று. “நான் கிளம்பி ஏழாண்டுகளாகின்றன” என்று அவன் சொன்னபோது அவள் திகைப்புடன் அவனை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தாள்.

அவனை அனுப்பியபின் சம்வகை அவ்வெண்ணத்தின் எடை தாளாதவள்போல் சென்று கோட்டை படிக்கட்டில் அமர்ந்தாள். சபரன் “இதில் விந்தையென ஏதுமில்லை, தலைவி. எப்போதும் பாரதவர்ஷத்திலிருந்து இந்நகர் நோக்கி வந்து கொண்டுதான் இருக்கிறார்கள்” என்றார். சம்வகை அவருக்கு மறுமொழி கூறாமல் சென்று புரவிமேல் ஏறிக்கொண்டாள். நகரின் நெரிசலினூடாக அரண்மனை நோக்கிச் செல்வதற்கு தனிப் பாதை ஒன்றை அவள் வகுத்திருந்தாள். மையச்சாலையை ஒட்டியிருந்த ஊடுபாதை ஒன்றை புரவிகள் செல்வதற்கும் வருவதற்கும் மட்டுமே வைத்து அதற்கு காவலிட்டிருந்தாள். அதனூடாக குளம்படிகள் எதிரொலிக்க சென்றுகொண்டிருந்தபோது அவள் எண்ணி வியந்துகொண்டிருந்தாள். இவர்கள் அனைவரையும் அஸ்தினபுரியை நோக்கி செலுத்தும் அந்த விசை எண்ணுவதென்ன? ஒருவேளை மீண்டும் ஒரு போரா? அதை எவராலும் தடுக்க முடியுமா என்ன?

அவள் புரவியை சுரேசரின் அறைவாயிலில் நிறுத்தி உள்ளே சென்றாள். தன் அறைக்குள் சுரேசர் பதற்றத்தில் இருந்தார். பதினாறு கைகள் கொண்டவர்போல், எட்டு முகங்கள் கொண்டவர்போல் அறையை நிரப்பியிருந்தார். ஒரே பொழுதில் நான்கு ஆணைகளை பிறப்பித்தார். பதினாறு செயல்களை செய்தார். அறைக்குள் நுழைந்து சம்வகை ஓரமாக ஒதுங்கி நின்றாள். ஒற்றர்கள் ஒவ்வொருவருக்கும் ஆணைகளை பிறப்பித்து அனுப்பி, நடுவே கற்றுச்சொல்லிகளுக்கு ஆணை ஓலைகளைக் கூறி, கைகளால் சிறு ஓலைகளில் முத்திரை இட்டு ஏவலரிடம் அளித்து, மெல்ல ஓய்ந்து திரும்பி சம்வகையிடம் “யார்? என்ன வேண்டும்?” என்று கேட்டார்.

அவள் தலைவணங்கிய பின்னர்தான் புரிந்துகொண்டு “நீயா?” என்று கேட்டார். பிறர் செல்லலாம் என்று கைகாட்டினார். அவர்கள் தலைவணங்கி விலக பீடத்தில் இயல்பாக அமர்ந்து உடலை எளிதாக்கிக்கொண்டார். சம்வகை புன்னகைத்தாள். “என்ன சிரிப்பு?” என்று அவர் கேட்டார். “பேருடல் சுருக்கி சிறிதானபின் பேசத்தொடங்குகிறீர்” என்றாள். “மெய்யாகவே செயலாற்றுகையில் பேருருவனாகிறேன். அதன் பொருட்டே இத்தனை செயல்களையும் நானே இழுத்துப் போட்டுக்கொள்கிறேன். இத்தனை செயல்களையும் ஆற்றாமல் இருந்தால் உடல் திறந்து இறந்துவிடுவேன் என்று தோன்றுகிறது” என்றார் சுரேசர். "சொல்க, என்ன செய்தி?"

சம்வகை “ராஜசூய அறிவிப்பு இன்னும் வரவில்லை. அதற்குள் நகர் நிறைந்துவிட்டது. இன்னமும்கூட வந்துகொண்டிருக்கிறார்கள். இன்று ஒருவரை பார்த்தேன். தெற்கே முக்கடல் முனம்பிலிருந்து வந்திருக்கிறார். இங்கு போர் நிகழ்ந்த செய்திகூட அவர் சிற்றூருக்குச் சென்று சேரவில்லை. ஆனால் இந்நகர் நோக்கி அவரை எழுப்பும் ஓர் அழைப்பு சென்றிருக்கிறது. தன்னுளிருந்து ஒரு குரல் அஸ்தினபுரிக்கு என்று சொன்னதாக அவர் சொன்னார். அது மீண்டும் நிகழ்ந்திருக்கிறதா என்று இருமுறை நோக்கினேன். கிழக்கிலும் மேற்கிலும் இரு எல்லையிலிருந்து கிளம்பி வந்திருக்கிறார்கள். அவர்களையும் அறியாச் சொல்லொன்று அஸ்தினபுரி நோக்கி அழைத்து வந்திருக்கிறது” என்றாள்.

எதையும் பகுத்தெண்ணும் சுரேசர் சற்று மலைத்தவர் போலிருந்தார். பின்னர் “இதை நானும் எண்ணினேன்” என்றார். “உண்மையில் இதை சில முறை கணித்து நோக்க வேண்டுமென்று நேற்றிரவு எண்ணியதேகூட நினைவிருக்கிறது.

நேற்று உச்சிப்பொழுதில் நான் ஒருவரை பார்த்தேன். வடக்கே கின்னர நாட்டிலிருந்து வந்தவர். அஸ்தினபுரிக்குள் நுழைவது வரை இங்கு ஓர் போர் நிகழ்ந்த செய்தியே அவரிடம் சென்று சேரவில்லை. அஸ்தினபுரிக்குச் செல் எனும் ஆணையை தன் குலதெய்வங்கள் பூசகர் உடம்பில் வந்து கூறியதாகவும் அந்த ஆணையை ஏற்று இங்கு வந்ததாகவும் சொன்னார். நிலமெங்கும் தெய்வங்கள் அவ்வாணையை அளித்திருக்கின்றன" என்றார்.

நிலைகொள்ளாமல் எழுந்து அறையைச் சுற்றிவந்து "இந்நிலம் அவ்வாறு பொலியவேண்டும் என்பது தெய்வங்களின் ஆணையெனில் அவ்வாறே நிகழ்க!" என்றார். சம்வகை "தெய்வங்களை எவ்வாறு நம்புவது? இதுவரை அவை அஸ்தினபுரிக்கு நன்மை எதுவும் செய்யவில்லை" என்றாள். சுரேசர் சற்று திடுக்கிட்டதுபோல் அவளைப் பார்த்து "நன்றோ தீதோ, நாம் நம்பியே ஆகவேண்டும். தெய்வங்களுக்கு முன் நம் கணிப்புகளுக்கு எப்பொருளுமில்லை. நாம் காலத்தில், இடத்தில் கட்டுப்பட்டவர்கள். தெய்வங்களின் முழுமைநோக்கு நமக்கு அமைவதில்லை. முற்றளிப்பதன்றி நமக்கு வேறு வழியில்லை. இதோ மண்ணில் உலாவிக்கொண்டிருக்கின்றன பல்லாயிரம் எறும்புகள். மானுடரின் கால்களின் திசையையும் அசைவையும் கணித்து அவை அங்கு வாழ முடியுமா என்ன?" என்றார்.

சம்வகை "அறியேன், நான் கண்டதை உங்களிடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்று தோன்றியது" என்றாள். "நன்று. ஆனால் இத்தகைய உளக்குழப்பங்களுக்கு ஆளாவது காவல்தலைவிக்கு நன்றல்ல. கண்ணுக்கும் கருத்துக்கும் சிக்குவனவற்றை மட்டுமே பொருட்படுத்தினால் போதும். அதற்கப்பால் உள்ளவற்றை நிமித்திகர்களிடம்

விட்டுவிடுவோம்” என்று சுரேசர் சொன்னார். அதிலிருந்த மெல்லிய அறிவுறுத்தலை புரிந்துகொண்டு அவள் தலைவணங்கினாள். சுரேசர் அவளிடம் “மிக விரைவாக நீ காவலர்தலைவி அல்லாமலாகி வருகிறாய்” என்றார். அவள் திகைத்து திரும்ப “அரசுசூழ்தலில் ஈடுபடுகிறாய். ஊழ் கணிக்கிறாய். உன் பொழுதுகள் பெரும்பாலும் அமைச்சர்களுடன் கழிகின்றன” என்றார். அவள் குழப்பத்துடன் நோக்க “அஸ்தினபுரிக்கு ஏதோ எண்ணமிருக்கிறது” என்றார்.

அவள் அவ்வறையிலிருந்து வெளியே வரும்போது எதிரே யுயுத்ஸு விரைந்த காலடிகளுடன் வருவதை கண்டாள். தலைவணங்கி சுவர் ஓரமாக ஒதுங்கி நின்றாள். யுயுத்ஸு தொலைவிலேயே அவளை பார்த்துவிட்டிருந்தான். அவள் அருகே வந்து “உன்னைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். இந்நகருக்குள் வந்த மொத்த மக்களின் எண்ணிக்கை என்ன என்பதை கூற முடியுமா?” என்றான். “ஒவ்வொரு நாளும் அந்தியில்தான் அக்கணக்கு முடிக்கப்படுகிறது. தொகுத்து ஒற்றை எண்ணாக ஆக்குவதற்கு மறுநாள் உச்சிப்பொழுதாகும். நேற்று அந்தி வரை வந்தவர்களின் கணக்கை இன்னும் ஒரு நாழிகைக்குள் அளிக்கமுடியும்.”

“நகருக்குள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது வெறும் எண்ணிக்கை” என்று யுயுத்ஸு சொன்னான். “எத்தகையவர்கள் இருக்கிறார்கள், அவர்களின் இயல்பென்ன என்று ஏதேனும் கணிப்பிருக்கிறதா?” என்றான். “இயல்பென்ன என்றால்?” என்று அவள் கேட்டாள். யுயுத்ஸு “அவர்கள் எந்த உளநிலையில் இருக்கிறார்கள் என்பது பற்றி” என்றான். மேலும் புரியாமல் அவள் வெறுமனே நோக்கி நின்றாள். “எதற்கென்றால்…” என்று யுயுத்ஸு தயங்கினான். “இன்று காலை அரசரை பார்த்தேன்.

அவர் நேற்றிரவு கண்ட கனவுகளால் உளம் நைந்திருக்கிறார்.” அவள் “என்ன?” என்றாள்.

“நான் இந்நகரம் அயல்குடிகளால் நிரம்பியிருப்பதை சொன்னேன். குடிகள் என்று கூறவேண்டியதில்லை, மானுடர் என்று கூறுக என்றார். குடிகள் என்பவர் இந்நகரின் மக்களாக தங்களை நினைத்துக்கொள்பவர்கள். இதன் அரசரை தங்கள் அரசராக எண்ணுபவர்கள். இக்கொடியின், இவ்வடையாளத்தின் முன் உளம் திரண்டவர்கள். நகரை நிறைத்திருக்கும் பெருந்திரளை என்னால் அவ்வாறு எண்ண இயலவில்லை. உப்பரிகையில் நின்று நகரை நோக்கியபோது விந்தையானதோர் பெருவெள்ளம் வந்து நகர் நிறைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது என்றார்” என்றான் யுயுத்ஸு. “அறியா மொழி பேசும் இத்திரளுக்கு முன் தான் முற்றிலும் அயலானவன் என அவர் உணர்கிறார். புரியாத மொழியில் கூவியபடி அவர்கள் அரண்மனையைச் சூழ்வதுபோல் கனவுகண்டிருக்கிறார்.”

“அவர்கள் அனைவருமே அஸ்தினபுரி எனும் பெருங்கனவுடன் இங்கு வந்தவர்கள்” என்று சம்வகை சொன்னாள். “ஆம், அதைத்தான் சுரேசர் சொன்னார். ஆனால் அவர்கள் அந்த அஸ்தினபுரியின் அரசராக ஏற்பவர் யார்? அவர் யுதிஷ்டிரன்தானா? அரசர் கேட்பது அந்தக் கேள்வியைத்தான்.” சம்வகை “அவர் நகர்நுழைந்தபோது நிகழ்ந்தனவற்றை இன்னும் மறக்கவில்லை என்று நினைக்கிறேன்” என்றாள். யுயுத்ஸு முகம் மாறி “அதை எளிதில் மறக்க இயலாதுதான். எந்த அரசருக்கும் அதைப்போல் ஒரு சிறுமதிப்பு நிகழல் கூடாது” என்றான். “நிமிர்ந்தோர் ஒவ்வொரு சிறுமையிலும் உயிர்துறக்கிறார்கள், மீண்டும் பிறந்தெழுகிறார்கள் என்று

கூறப்படுவதுண்டு. குறை உயிருடனேயே அரசர் அரண்மனையில் வாழ்கிறார்.”

“அந்நிகழ்வுக்குப்பின் தன் அரண்மனையிலிருந்து அவர் பல நாட்கள் வெளி வரவில்லை” என்று யுயுத்ஸு சொன்னான். “அஸ்வமேதமும் ராஜசூயமும் இயற்றுவது நன்றென்று அவரிடம் சொன்னபோதுகூட அவர் நம்பிக்கை கொள்ளவில்லை. இளைய யாதவர் அவ்வாறு இயற்றலாம் என்று கூறி செய்தி அனுப்பியமையால்தான் ஒப்புதல் அளித்தார்.” சம்வகை “இவர்களின் உள்ளத்தை நாம் அறிவதற்கு வழியொன்றுமில்லை” என்று தணிந்த குரலில் சொன்னாள். “அதற்குரிய வழிகளை ஒருவேளை சுரேசர் கூறக்கூடும்.” யுயுத்ஸு திரும்பி நோக்கிய பின் “அவரிடம் எனக்கு பேசவே பொழுதில்லை” என்றான்.

சுரேசர் அவர்களின் பேச்சுக்குரல் கேட்டு தன் அறையில் இருந்து வெளிவந்தார். யுயுத்ஸு “இம்மக்களின் உளநிலை என்னவாக இருக்கிறதென்று அரசர் அறிய விரும்புகிறார்” என்றான். “இன்று அவர்கள் ஒற்றை உணர்வென திரளவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு உளநிலையிலிருப்பார்கள். ஒவ்வொருவரின் உள்ளிருக்கும் அஸ்தினபுரி ஒவ்வொன்று. அவர்களை ஒன்றாக்குவது உடனே இயல்வதல்ல” என்றார். “அவர்களை ஒன்றாக்க வேண்டியதில்லை. அஸ்தினபுரியின் பேரரசரென அவர்கள் யுதிஷ்டிரனை ஏற்றுக்கொள்கிறார்களா என்று மட்டும் அரசர் அறிய விரும்புகிறார்” என்றான் யுயுத்ஸு. “அவர்களை திரட்டலாம். அதன் பின்னர் நாம் விரும்பும் உணர்வுகளை அவர்களிடம் உருவாக்கலாம். அதற்குரிய வழி விழவுகளே அஸ்வமேதமும் ராஜசூயமும்” என்றார் சுரேசர்.

யுயுத்ஸு “ஆம், அதுதான் அவரிடம் மீளமீளச் சொல்லப்படுகிறது” என்றான். சுரேசர் “அவ்விழவுகள் இங்கே நிகழும்போது அக்கொண்டாட்டம் அவர்கள் அனைவரையும் ஒன்றாக்கும். நாம் விரும்பும் விளைவை அவர்களிடம் உருவாக்கும்” என்றார். யுயுத்ஸு “தாங்கள் எண்ணுவதென்ன?” என்றான். சுரேசர் “அரசர்கள் எங்குமே தகுதியால் ஏற்கப்படுவதில்லை. ஊழே அவர்களை அங்கே அமர்த்துகிறது. அதை நான் நம்புகிறேன்” என்றபின் திரும்பிச் சென்றார். யுயுத்ஸு சம்வகையை திகைப்புடன் நோக்க அவள் தலைவணங்கி விடைகொண்டாள்.

# களிற்றியானை நிரை - 18

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 1**

யுயுத்ஸு இடைநாழியினூடாக பதற்றமாக நடந்தான். அவனைத் தொடர்ந்து சாரிகர் விரைவு நடையாக சென்றார். செல்லும்போதே யுயுத்ஸு ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருக்க ஏவலர் அவன் அருகே வந்து ஆணைகளை பெற்றுக்கொண்டு விலகினர். யுயுத்ஸு “நகரம் முழுக்க காவல் எவ்வாறு உள்ளது என்னும் செய்தி எனக்கு உடனே வந்தாகவேண்டும். இப்போது நமது பொறுப்பு மிகமிகக் கூடியிருக்கிறது” என்றான். காவலர்தலைவன் தலைவணங்கினான். “இந்நகரில் இதுவரை இருந்த பெருந்திரள் உரிய காவல் இல்லாமலேயே இருந்திருக்கிறது. அனைவரும் அயலவர். வெறுங்கையுடன் உள்ளே வந்தவர். காட்டுக்கு ஏன் வேலி என்று அப்போது தோன்றியது. இப்போது

நாடெங்கிலுமிருந்து உயர்குடியினர், கற்றோர், அந்தணர், முனிவர் வந்துகொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கு ஒரு சிறு தீங்கு ஏற்பட்டால்கூட அஸ்தினபுரிக்கு பெருங்களங்கமாக அது ஆகிவிடும்.”

யுயுத்ஸுவின் உடலே பதற்றப்படுவதற்குரியதாக மாறிவிட்டிருந்தது. சற்றே கூன் விழுந்த தோள்களும், காற்றில் துழாவுவதுபோல் முன் நீண்டு அசைந்த கைகளும், முன் நோக்கி விழுந்துகொண்டே இருப்பது போலவோ காற்றில் சுழற்றி அடித்துச் சென்று கொண்டிருப்பது போலவோ விரைந்த நடையும், அவ்வப்போது நின்று பெருமூச்சுவிட்டு சூழ நோக்கி ஏதோ சொல்ல நாவெடுத்து மீண்டும் விரையும் இயல்புமாக அவன் நோக்குபவர்களிடமும் பதற்றத்தை உருவாக்குபவனாகத் தோன்றினான். அரிய செய்தி ஒன்றை சொல்லச் செல்பவன் போலவோ, மறந்துவிட்ட ஒன்றை தேடி எடுக்கச் செல்பவன் போலவோ, தண்டனை பெற்றுக்கொள்ள தயங்கி நிற்பவன் போலவோ அவன் முகம் தோன்றியது.

சாரிகர் யுயுத்ஸுவையே கூர்ந்து நோக்கிக்கொண்டு உடன்சென்றார். யுயுத்ஸு பெரும்பாலான தருணங்களில் அத்தருணத்திற்குரிய பொது முடிவொன்றை சென்று எட்டுவதையே அவர் அறிந்திருந்தார். முதற்கணம் தோன்றும்போதே எவருக்கும் உள்ளத்தில் எழும் முடிவு அது. ஆனால் அதை யுயுத்ஸு நூறு வழிகளில் உலவி, ஆயிரம் முறை உசாவி, பல்லாயிரம் முறை ஐயுற்று அதன் பின்னரே சென்றடைந்தான். அதன் பின் அதை ஒவ்வொருவரிடமும் உசாவி மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டான். ஆனால் உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் சிறு குழந்தைகள் அன்னையை கவ்விப் பற்றிக்கொண்டிருப்பதுபோல

அம்முடிவில் உறுதியாக இருந்தான். அதன் பொருட்டு சினந்தான், சொல்லாடினான், ஒரு தருணத்திலும் அதை மாற்றிக்கொள்ள மறுத்தான்.

முதலில் அவ்வியல்பு சாரிகருக்கு சிறு ஒவ்வாமையை அளித்தது. அந்த அகவையில் விந்தையான முடிவுகளும் குறுக்கு வழிகளுமே சாரிகர் உள்ளத்தை மின்னச்செய்தன. ஒரு தருணத்தில் முற்றிலும் எதிர்பாராத திசையை திறப்பவர்கள், விண்ணிலிருந்து பறந்திறங்குவதுபோல சூழலின் மையத்தை சென்றடைபவர்கள், ஒரு இழுப்பில் அனைத்து முடிச்சுகளையும் அவிழ்ப்பவர்களே அறிவாளிகள் என்று அவருக்குத் தோன்றியது. தன்னை ஓர் அமைச்சனாக, கூரறிவோனாக எண்ணிக்கொண்டார். அவைகளில் அறியப்படாதவனாக பின்னிரை தேர்வதே அவர் வழக்கம். குரல்கள் ஒலிக்கையில் அதில் மறைந்துகொள்வார். ஆனால் அவருள் ஆணவம் எழுந்து ஓங்கி நின்றிருக்கும். ஒவ்வொருவரையாக அவர் மாறிமாறி நோக்கிக்கொண்டிருப்பார். ஒவ்வொரு கூற்றையும் மறுப்பார், ஒவ்வொரு எண்ணத்தையும் ஏளனத்துடன் ஒதுக்குவார்.

காமம்சார்ந்த பகற்கனவுகள் அவரை அலைக்கழித்தன. ஆனால் அதைவிடப் பலமடங்கு தன்முனைப்பு சார்ந்த பகற்கனவுகள் அவருள் நுரைத்தன. அவற்றில் ஒரு துளியை எவரேனும் உணர்ந்தால் அவரை கீழ்மகனிலும் கீழ் என்றே எண்ணுவார்கள் என ஒருமுறை அவர் எண்ணிக்கொண்டார். “நான் அறிவன், நான் அமைச்சன், என்னை நீங்கள் நாளை அறிவீர்கள், வரலாறு என்னை நோக்கி வந்துகொண்டிருக்கிறது, இங்கேதான் முளைத்து எழுந்துகொண்டிருக்கிறேன்.” தன்னைச் சூழ்ந்து பேசப்படும் எல்லா சிக்கல்களுக்கும் அவர் தனக்குரிய விடைகளை வைத்திருந்தார். பெரும்பாலான தருணங்களில்

அவற்றை அவர் சொல்வதில்லை. சொல்லும்போது அவரை அறியாமலேயே அவர் குரல் தழைந்து முகம் சிவந்து கண்களில் நீர்மல்கியது.

தன் எண்ணங்களைச் சொன்னதுமே அவர் அவற்றை சொல்லியிருக்கலாகாதோ என நாவை கடித்துக்கொண்டார். எவரேனும் அவர் எண்ணங்களை எதிர்த்துப் பேசினால் சுருங்கி உள்ளொடுங்கிக்கொண்டார். ஆனால் உள்ளே அவர் அவர்கள்மேல் ஆலகாலம் என எழும் கடும்வெறுப்பை வளர்த்துக்கொண்டார். அவர்களிடம் மீண்டும் விழிகொடுத்துப் பேச அவரால் இயல்வதில்லை. அதை உணர்ந்து அவர்கள் அவரிடம் தோளில் கைபோட்டு அன்புடன் பேசுகையில் அழுகை வர தலைகுனிந்து உதடுகளை கடித்துக்கொண்டார். தன் எண்ணங்களை பொருட்படுத்தாதவர்களை அவர் உள்ளூர கேலிப்பாவைகளாக மாற்றிக்கொண்டார்.

பிற இடர்கள் செவிகளில் படாதபோது அவரே விந்தையான சிக்கல்களை கற்பனை செய்து அவற்றை ஒரே கணத்தில் சீரமைத்தார். தானே முட்டிநின்றுகொள்ளும் சிக்கல்களை கண்டடைந்து திகைத்து அவற்றுக்கு எளிய விடைகளைக் கண்டடைந்து அவற்றை முன்வைக்கும் ஒரு நாடகத் தருணத்தை கற்பனை செய்து அதில் நடித்து தருக்கி எழுந்து நிற்கையில் அவர் யுயுத்ஸுவை குனிந்து நோக்கினார். தனக்கென அறிவும் தனித்த நோக்கும் இல்லாதவன் யுயுத்ஸு. எளியவனாகப் பிறந்தவன், குருதியுறவால் அரண்மனைச் சூழலில் எழுந்தவன். தருணங்களினூடாக வடிவெடுத்தவன். தன் வாழ்க்கை முழுக்க அவன் எதிர்கொண்டது அந்தந்த தருணங்களுடன் சரியாகப் பொருத்திக்கொள்ளும்

அறைகூவலை மட்டுமே. அவன் அடைந்த வெற்றிகள் எல்லாம் கடந்துசெல்லுதல் மட்டுமே.

ஆனால் ஏதோ ஒரு கணத்தில் அரசனுடைய இயல்பென்பது அனைவருக்குமான பொது முடிவுகளுக்கு சென்று சேர்வதே என்று அவர் உணர்ந்துகொண்டார். யுயுத்ஸு சொல்சூழ்ந்து பதறி நிலைதடுமாறி “இதைச் செய்யலாம், இதுவே உகந்தது” என ஒரு முடிவைச் சென்றடைந்தபோது அவர் நிறைவடைந்தார். யுயுத்ஸு அம்முடிவிலேயே உறுதியாக நிலைகொள்வான் என அறிந்திருந்தமையால் அந்த ஆறுதல் வலிமைபெற்றது. அப்போது அவர் உணர்ந்தார், அதுவே அரசன் ஆற்றவேண்டிய பணி என. அரசன் என்பவன் வழிகாட்டியோ மெய்யறிதல் கொண்டவனோ அல்ல. அவன் பல்லாயிரம் துலாக்கோல்கள் நடுவே நின்றிருக்கும் முள். அவனது பணி நிலை நிறுத்துவது மட்டுமே. நெடுங்காலமாக இருந்து வந்தவற்றின் தொடர்ச்சி அவன். புதியனவற்றை கண்டு தயங்குதலே ஓர் அரசனுக்குரிய முதன்மை இயல்பு.

“அனைத்திற்கும் ஆயிரம் தரப்புண்டென்றும் ஒவ்வொரு உண்மைக்கும் மறுஉண்மை உண்டென்றும் உணர்ந்தவனே அரசன்” என்று அவர் ஒருமுறை சொன்னார். சுரேசர் நகைத்தபடி “அவன் அரசன் அல்ல, அமைச்சன்கூட அல்ல. வைசியகுலத்தில் எழுந்த சூதன்” என்றார். அவர் திகைத்தார். ஏன் தனக்கு அவ்வாறு தோன்றியது? உடனே உளம் உறுதிகொள்ள “ஆம், ஆனால் அவருடையது அரசர்களின் இயல்பு” என்றார். “எது அரசர்களின் இயல்பு?” என்று சுரேசர் கேட்டார். “ஓர் இறுதி முடிவெடுத்தபின் அவர் அதை எதன்பொருட்டும் மாற்றிக்கொள்ளவில்லை. அதற்காக நிலைகொள்கிறார். எவர் முன்பும் எந்நிலையிலும்” என்று அவர்

சொன்னார். “அமைச்சர்கள் தங்கள் தரப்பை ஒரு கூற்றாகவே முன்வைக்கிறார்கள், நிலைபாடாக அல்ல. நிலைகொள்ளும் ஆற்றலே அரசனுக்குரியது.”

சுரேசர் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவர் உள்ளத்தில் அவர் சொல் தைத்தது என அவர் உணர்ந்தார். சுரேசருக்கும் பிற சிற்றமைச்சர்களுக்கும் யுயுத்ஸுவின்மேல் பெருமதிப்பு ஏதும் இருக்கவில்லை. அவனுடைய குலம் அளிக்கும் மதிப்பின்மை ஒருபக்கம் எனினும் அதற்கப்பால் அவனுடைய மிகைப்பதற்றமும் அதை இயல்பாக வெளிப்படுத்துகையில் தோற்றம் தரும் ஆற்றலின்மையும் அதற்கு மேலும் வழி வகுத்தன. சுரேசர் எப்போதும் அனைத்து புது வழிகளிலும் துணிந்து சென்று எண்ணிப் பார்ப்பார். புது வழிகள் எதுவும் அமையவில்லை எனில் “ஆம், யுயுத்ஸு சொன்னதையே செய்வோம்” என்றார். ஒருமுறை அவர் “கிளிக்குறி உரைப்பவனின் கூண்டிலிருந்து வெளிவரும் கிளி போன்றவர் யுயுத்ஸு” என்றார். “அக்கிளி எப்போதும் ஒரே ஓலைச்சுருளையே எடுக்கிறது. ஓலைகளை மாற்றி மாற்றி வைத்து ஒவ்வொரு முறையும் அது வெவ்வேறு தெரிவுகளை செய்வதுபோல் காட்டுவது அந்தக் குறியுரைப்போனின் திறன்.”

அறையில் அப்போது அவரைச் சுற்றி கூடி நின்றவர்கள் புன்னகைத்தனர். “எப்போதும் ஒத்திப்போடுவதைப் பற்றியே யுயுத்ஸு எண்ணுகிறார். ஒத்திப்போடும் பொருட்டே கணக்கிடுவோம், முழுமைச் செய்திக்காக காத்திருப்போம், தனிப்பட்ட முறையில் இன்னொரு முறை எண்ணுவோம் என்கிறார். ஆனால் உண்மையில் பெரும்பாலான அரசியல் சிக்கல்களுக்கு ஒத்திப்போடுவதே உகந்த தீர்வு” என்றார் சுரேசர். “ஆனால் ஆயிரத்தில் ஒன்று ஒத்திப்போடப்படுவதனாலேயே

பெரிதாகும். அணையை உடைத்துவிட்டு நீரை நிறுத்த முயல்வதுபோல அதன் பின் பதறுவோம். ஊழின்மேல், தெய்வங்களின்மேல் பழிபோடுவோம்.”

யுயுத்ஸு அப்போது அஸ்தினபுரியில் உள்ளே வந்துகொண்டிருக்கும் பெருந்திரளை எப்படி கையாள்வது என்பதை சொல்லிவிட்டுச் சென்றிருந்தான். “இங்கே அனைத்து இடங்களிலும் போட்டிகள் நிகழட்டும். விற்போரும் வாட்போரும் சொல்லாடலும் களமாடலும் ஒருங்கமையட்டும். வெல்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படட்டும். நகரத்தில் இருக்கும் இல்லங்களும் அவற்றுடன் இணைந்த நிலங்களும் பிறவும் பரிசாக அளிக்கப்படவேண்டும். ஏதேனும் ஒரு போட்டியில் வென்றவர்களுக்கு மட்டுமே நகரத்துக்குள் இடம் அளிக்கப்படவேண்டும்” என்று அவன் சொன்னான். சுரேசர் சலிப்பை அடக்கிக்கொண்டபடி “ஆம், அம்முடிவை முன்னரே எடுத்துவிட்டோம். இதை தங்களின் ஆணையெனக் கொள்கிறோம்” என்றார்.

அவன் சென்ற பின் “அது ஒரு பொதுவான ஆணை. ஆனால் அறுதியான நெறியாக அதை கொள்வோம் என்றால் பேரிழப்பே எஞ்சும்” என்றார். “ஏனென்றால் எப்போட்டியிலும் கலந்துகொள்ளாதவர்கள் இருப்பார்கள். போட்டியை ஒரு அளவீடாகக்கொண்டால் நாம் எப்போதும் இரண்டாம் நிலையினரையே தேர்வு செய்வோம். போட்டிகளை சற்றே விலகி நின்று பார்ப்பவர்கள், போட்டிகளை இவ்வுலகு சார்ந்தது என்று எண்ணுபவர்கள், தங்கள் திறனை மதிப்பிட்டு தங்களுக்கோ பிறருக்கோ நிறுவிக்கொள்ள விழையாதவர்களே முதல் நிலையினர். ஒரு மெய்யறிந்த நூல்வலன், தன் கையறிந்த சிற்பி, புரவியுள்ளம் அறிந்த சூதன் போட்டிக்கு

எழுவதில்லை” என்றார். “எந்நகரிலும் அவர்களே தலைநிற்கவேண்டும். திறனுடையோர் இன்றுக்கு உதவுவோர். கனவுள்ளோரே நாளையை சமைப்போர். அவர்கள் இன்றைய போட்டிகளில், வெற்றிகளில், உவகைகளில் ஆர்வம்கொண்டிருப்பதில்லை.”

“அவர்களை எப்படி கண்டுபிடிப்பது?” என்று சாரிகர் கேட்டார். “அவர்களை நாம் கண்டடையவேண்டும். அவர்கள் நம் அவைக்கு வரும்படி எதையேனும் ஒருக்கவேண்டும். அங்கே அவர்களது திறனை அகன்று நின்று நாம் கணிக்கவேண்டும்” என்றார் சுரேசர். “அதை எவ்வாறு கணிப்பது?” என்று சாரிகர் மீண்டும் கேட்டார். “எண்ணுக, ஒரு திறனுடையாளன் மட்டுமே பிறிதொரு திறனுடையாளனை கணிக்க முடியும்! ஆனால் நிகர் திறனுடையவனை கணிப்பதில் அவர்களின் பொறாமை ஊடே புகும். எனினும் அவர்களால் எதிர்நிகர் கொண்டவரை மறுக்கமுடியாது. மிகுதிறன் கொண்டவர்கள் பிறரை அஞ்சாதவர்கள். அவர்களே திறனுடையோரை கண்டறியும் ஆற்றல்கொண்டவர்கள். இங்கு புரவித்திறனாளர்களை கணிக்கும் ஆற்றல் இளையவர் நகுலனுக்கு உண்டு. நிமித்த திறன் கொண்டவரை சகதேவன் கணிக்க முடியும். அடுமனையாளர்களை, தோள்வலரை பீமசேனன் கணிக்க முடியும். வில்லவரை கணிப்பதற்கு அர்ஜுனனை விட்டால் எவர்?”

“ஆம், நூலோரை யுதிஷ்டிரன் கணிக்க முடியும்” என்று இளம் அமைச்சராகிய சுப்ரதன் சொன்னார். சுரேசர் அவரை நோக்கி திரும்பி புன்னகைத்து “அல்ல, நூல்வலரை மட்டும் பிறிதொரு நூல்வலர் கணிக்க இயலாது. ஏனென்றால் நூல்வலர் கருத்துக்களால் ஆனவர்கள். அவருக்கு நிகரான பிறிதொரு

நூல்வலர் அவரது கருத்தை மறுப்பவராக இருப்பார். தன்னை மறுப்பவரை சற்றே குறைத்து எடைபோடுவது நூல்வலரின் இயல்பு. நூல்திறன் என்பது பொதுமேடையில் ஐயமற நிறுவுதற்குரியதும் அல்ல" என்றார். "நூல்வலரை கணிப்பதற்கு அவரிடம் இருந்து எதையேனும் கற்றுக்கொள்ளும் இளையோரே முற்றிலும் தகுதி கொண்டவர்கள். ஆகவே நீங்கள் கணிக்க முடியும். நூல்வலரை யுயுத்ஸுவோ மன்னர் யுதிஷ்டிரனோ கணிக்க இயலாது."

"போட்டிகள் இல்லையெனில் என்ன செய்வது?" என்று சாரிகர் மீண்டும் கேட்டார். "பேரவைகளை கூட்டுவோம். திறனும் அறிவும் மெய்நாடலும் திகழும் அவைகள். அந்த அவைகளுக்கு முதல்நிலையோர் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் அறிதலுக்கான ஆவலே செலுத்தும். ஆகவே அறிதலுக்குரிய அவைகளை அவர்களால் தவிர்க்கவே முடியாது" என்றார் சுரேசர். சாரிகர் "ஆனால் இளைய பாண்டவர் அர்ஜுனன் நகர்நுழைவதில்லை என்று உறுதி கொண்டிருக்கிறார். அங்கே துரோணரின் குருகுலத்தில் இருக்கிறார்" என்றார். "அதுவும் நன்றே. அங்கே வில்லவர்கள் தேடி செல்லட்டும். அவர்களிலிருந்து முதல்நிலையாளரை நாம் தெரிவு செய்வோம்" என்றார்.

"இந்த அவைகளை கூட்டுவதற்கு உரிய நோக்கங்கள் இருந்தாகவேண்டும். இப்போது அஸ்தினபுரி நிறைந்துள்ளது. கள்கலம்போல் இது கொப்பளித்து வழிந்துகொண்டிருக்கிறது. அஸ்தினபுரியில் ராஜசூயம் தொடங்குவதற்கு முன் இங்குள்ள அனைத்து தெய்வங்களையும் நிறைவு செய்யவேண்டும் என்று நெறி உள்ளது" என்றபின் புன்னகைத்து "அல்லது அவ்வாறு ஒரு நெறியை உருவாக்கிக்கொள்வோம். ஒவ்வொரு

தெய்வத்தையும் நிறைவு செய்யும் பூசனைகளை ஒட்டி இந்த அவைகள் அமையட்டும். மின்வில்கொண்ட இந்திரனில் இருந்து நுரைவில் ஏந்தும் வருணன் வரை விற்திறனுக்குரிய பதினெட்டு தெய்வங்கள் இங்குள்ளன. புரவிகளுக்குரிய ஒன்பது தெய்வங்கள் உள்ளன. இங்குள்ளன ஹயக்ரீவனிலிருந்து அஸ்வினிதேவர்கள் வரை. நிமித்திகர்களுக்கான தெய்வங்கள் பிரம்மதேவனிலிருந்து ஹிரண்யாக்ஷர் வரை இங்குள்ளன" என்றார்.

"அவர்களுக்கான பூசனைகள் நிகழட்டும். அவற்றை ஒட்டி பேரரங்குகள் கூடட்டும். அவற்றில் பங்குகொள்ள அறிஞர்கள் வருவார்கள். நாம் அவர்களை தொட்டு எடுத்துக்கொள்வோம்" என்றார் சுரேசர். "அஸ்வமேத செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சகதேவன் சதகர்ணிகளின் நாடு வரைக்கும் புரவிகொண்டு சென்றிருக்கிறார். நாற்பத்துஇரண்டு மன்னர்கள் பணிந்து கப்பம் செலுத்தியிருக்கிறார்கள். அச்செல்வம் திரட்டப்பட்டு அஸ்தினபுரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வடபுலம் ஏகிய பீமசேனர் இன்னும் சில நாட்களில் கின்னர நாட்டை சென்றடைவார். கிழக்கு நோக்கி சென்ற அர்ஜுனன் இப்போது வங்கத்தில் இருக்கிறார். ஐந்து நாட்களில் அவர் காமரூபத்தை சென்றடைவார். மேற்கு நோக்கி சென்ற நகுலன் சிபி நாட்டிலிருக்கிறார். காந்தாரம் ஏற்கெனவே நமக்கு பணிந்துவிட்ட நாடு. தெற்கே சகதேவன் விஜயபுரியை அணுகிவிட்டார். இது எல்லா விழவுகளுக்கும் உரிய பொழுது."

"நகரமெங்கும் ஓயாது வெற்றிமுரசு கொட்டச் செய்வோம். களியாட்டுக்கும் உண்டாட்டுக்கும் ஒருங்கு செய்வோம். அக்கொண்டாட்டத்தில் இம்மக்கள் பங்கெடுப்பார்கள். இன்று

அவர்களுக்கிருக்கும் உளநிலை என்பது எதையேனும் கொண்டாடுவது. இந்நகரை கண்களால் காண்பது வரை தங்கள் கற்பனைகளில் திளைத்திருந்தார்கள். கண்களால் கண்டதும் சோர்வுற்று அச்சோர்விலிருந்து எங்ஙனமேனும் மீள வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிறார்கள். விழா அறிவிப்புகள் அவர்களை மகிழ்வுறச் செய்யும். மீண்டும் அவர்கள் கனவுகள் நுரைத்தெழ அது ஒரு சிறந்த வாய்ப்பு” என்று சுரேசர் சொன்னார்.

யுயுத்ஸுவிடம் அவ்வெண்ணம் சொல்லப்பட்டதும் “விழவுகளா?” என்று திகைத்தான். “இங்கே இன்னமும் இளவரசர்கள் களம்பட்டு ஓராண்டு ஆகவில்லை. கொண்டாட்டங்கள் நிகழ நூலொப்புகை உண்டா?” சுரேசர் “எதற்கும் எங்கேனும் நூலொப்புதல் இருக்கும்” என்றார். யுயுத்ஸு பதற்றத்துடன் “என்னால் அதை எண்ணவே முடியவில்லை. ஏற்கெனவே இங்கே ஒரு கொண்டாட்ட நிலை உள்ளது. அது முறையா என்றே ஐயுறுகிறேன். ஏனென்றால் இங்கே கொண்டாடிக்கொண்டிருப்பவர்கள் எவருக்கும் அஸ்தினபுரியுடன் எந்த உறவும் இல்லை. இவர்கள் இப்போது வந்தவர்கள். எந்த இழப்பும் அற்றவர்கள். அஸ்தினபுரியிலிருந்து அதன் குடிகள் ஒழிந்துபோக எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் வந்து களியாடுகிறார்கள். அனலுக்குமேல் மணலைக்கொட்டி மூடியதுபோல உள்ளது” என்றான்.

“அனல் அல்ல, குருதி. அதன்மேல் புது மணலை கொண்டுவந்து விரிப்பது காற்றும் மழையும்தான். அதை நம்மால் தடுக்கமுடியாது” என்று சுரேசர் சொன்னார். “காட்டில் அத்தனை செத்த உடல்களுக்கு மேலும் சிறுமலர்ச்செடிகள் எழுகின்றன.” யுயுத்ஸு நிலையழிவுடன் கைகளை பிசைந்தான். “அரசரிடம்

பேசவேண்டும். அவர் என்ன எண்ணுகிறார் என்று பார்க்கவேண்டும்” என்றான். “நாம் கூறவேண்டிய வகையில் கூறினால் அவர் ஏற்பார், ஏற்றாகவேண்டும்” என்றார் சுரேசர். “நான் கூறுகிறேன். எதற்கும் இவ்வெண்ணம் இப்படியே இருக்கட்டும். இதன் எல்லா பக்கங்களையும் எண்ணுவோம். இது முறையென்றால் இயற்றுவோம்” என்று யுயுத்ஸு சொன்னான். சுரேசர் புன்னகையுடன் “அவ்வண்ணமே” என்றார்.

அவர் எதிர்பார்த்ததுபோலவே இரண்டு நாட்களுக்குப் பின் யுயுத்ஸு தெளிவடைந்துவிட்டிருந்தான். “அரசரிடம் பேசினேன். அவருக்கு ஐயமிருந்தது. ஆனால் பேசியபோது தெளிந்தது. இங்கே திறவோர் அவையும் சான்றோர் அவையும் கற்றோர் அவையும் அந்தணர் அவையும் கூடட்டும் என அவர் ஆணையிட்டிருக்கிறார்.” அவன் அவ்வெண்ணம் தன்னில் தோன்றியதுபோல முகம் மலர்ந்து “ஒவ்வொரு நாளும் இங்கு வெற்றிச்செய்திகள் அறிவிக்கப்படட்டும். அஸ்தினபுரி பேருருவம் கொள்ளப்போகிறதென்னும் நம்பிகை இங்கு பெருகட்டும். இங்கு வந்திருக்கும் அனைவரையும் இணைப்பது அந்நம்பிக்கைதான். அவர்கள் இறந்தகாலங்களை முற்றாக உதறவேண்டும். தங்கள் குல அடையளங்கள், குடிப்பெருமைகள், இழந்த ஊர்கள், விட்டுவந்த அனைத்தையும் மறக்கவேண்டும். நாளை எனும் கனவில் அவர்கள் ஒன்றாக வேண்டும். அதற்கு தொடர் வெற்றிவிழா அன்றி வேறு வழியில்லை” என்றான்.

முற்றத்தில் இறங்கி தேரிலேறிக்கொண்டதும் யுயுத்ஸு சற்று அமைதியடைந்தான். இருபுறமும் மாறிமாறி நோக்கியபடி “அஸ்தினபுரி இத்தனை நெரிசலுடன் கொந்தளித்து முன்னர் கண்டதில்லை. முன்பு நிகழ்ந்த இந்திரவிழாவும்

கொற்றவையூட்டும் எல்லாம் இதன் முன் சிறுகூட்டங்களே” என்றான். “இத்தனை பெருங்கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் படைத்திரள் நம்மிடம் உள்ளதா?” சாரிகர் அது அவன் தனக்குத்தானே கேட்டுக்கொள்வது என உணர்ந்து மறுமொழி சொல்லவில்லை. “இவ்வாறு வருபவர்களிடமிருந்தே படைகளை திரட்டிக்கொண்டிருக்கிறோம். அனைவரும் வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்து சேர்பவர்கள். ஒரு படையெனத் திரளக் கற்காதவர்கள். நிலைகொண்ட படைகளின் ஒழுங்கு அவர்களிடம் இருப்பதில்லை.”

சாலையின் இருபக்கமும் நெரித்த கூட்டத்தை பார்த்தபடி “ஆனால் இதற்குள் இங்கே ஒரு பொதுமொழி உருவாகிவிட்டிருக்கிறது. விந்தையானது, ஆனால் மிக எளியது. நாமறிந்த மொழிகளிலுள்ள சொற்கள்தான். அவை மிகமிக எளிய ஓர் இலக்கணத்துடன் இணைந்து மொழிவடிவு கொண்டிருக்கின்றன. அந்த மொழி இக்கூட்டத்தை இணைப்பதை எண்ணி எண்ணி வியந்துகொண்டிருந்தேன். நிலைபெற்ற தொல்மொழிகளுக்கு இணையான அதே இணைப்பாற்றலை இந்தப் புது மொழியும் கொண்டிருக்கிறது” என்றான். சாரிகர் “அது இயல்பே. இந்தப் புதுமொழி இப்போது அனைவருக்கும் பொதுவானது. இதில் இன்னமும் மேல்கோன்மை உருவாகவில்லை” என்றார். “ஆகவே அவர்கள் இம்மொழியை இன்னமும் அஞ்சத்தொடங்கவில்லை.”

யுயுத்ஸு திரும்பிப்பார்த்தான். “எங்கும் மேல்கோன்மை பிளவுகளை உருவாக்குகிறது. மேல் கீழ் என அடுக்குகிறது. ஒரு பகுதியைக் காத்து பிற பகுதியை எல்லைகட்டி விலக்குகிறது. மொழிக்குள் எழும் மேல்கோன்மை அதற்குரிய தனிமொழியை உருவாக்கிக் கொள்கிறது. அது தன்

இலக்கணத்தை மேலும் மேலும் சிக்கலாக்கிக்கொண்டே செல்லும். பொருட்செறிவை கூட்டிக்கொண்டே இருக்கும். மொழியிலேயே அரண்மனைகளும் குடிசைகளும் உண்டு. நிலவறைகளும் கரவுப்பாதைகளும் இருண்ட பிலங்களும் உண்டு” என்றார் சாரிகர். “அதை மக்கள் அஞ்சத்தொடங்குகிறார்கள். மேல்மொழிக்கு முன் தங்கள் மொழியுடன் நிற்க கூசுகிறார்கள். அதற்கு எதிராக தங்கள் மொழியை சிதைத்து விளையாடிக்கொள்கிறார்கள். மொழி சிதைந்து சிதைந்து பொருளுறுத்தாமல் ஆகிவிடுகிறது.” யுயுத்ஸு “ஆம்” என்றான். “இன்னும் சிலகாலம் இந்த மொழி அழகுடனும் இனிமையுடனும் நீடிக்கும். இதில் நட்பும் அன்பும் இயலும்” என்றார் சாரிகர்.

கோட்டைமுகப்பை அவர்கள் அடைந்தபோது சம்வகை இறங்கி வந்து அவர்களை எதிர்கொண்டாள். “காவல் எங்ஙனம் உள்ளது?” என்று யுயுத்ஸு கோட்டைமேல் நோக்கியபடி கேட்டான். “காவலர்படை பன்னிரு மடங்கு பெரிதாகிவிட்டிருக்கிறது. நாளையும் மறுநாளும் மேலும் புதியவர்களை எடுக்கவிருக்கிறோம்.” யுயுத்ஸு “தகுதியானவர்கள் கிடைக்கிறார்களா?” என்றான். “ஆம், சற்று பயிற்சி அளிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் காவல் என்பதில் பணியே பயிற்சியுமாகும்.” யுயுத்ஸு திரும்பி சம்வகையைப் பார்த்து “முற்றிலும் புதியவர்களிடம் கோட்டையை ஒப்படைக்கிறோமா?” என்றான். “இல்லை, அவர்கள் இந்நகரை தங்களுடையது என உணரத்தொடங்கிவிட்டிருக்கின்றனர். முன்பு இங்கு ஒவ்வொரு படிநிலையில் இருப்பவரும் தங்களுக்கு மேலான நிலை ஒன்றுக்கான தகுதி இருக்கிறது என எண்ணிக்கொள்வார்கள். இப்போது இங்கே பொருந்திக்கொள்ள அளிக்கப்படும் எந்த இடமும் நன்றே என

எண்ணுபவர்களே இங்கிருக்கிறார்கள்” என்று சம்வகை சொன்னாள்.

“சில நாட்களுக்கு முன்பு தெற்கே முக்கடல் முனையிலிருந்து ஒருவர் வந்தார். மெய்யறிவின் அழைப்புக்கு ஏற்ப நிலம்துறந்தவர். நேற்று அவரை அடுமனையில் கண்டேன். பெருங்கலங்களை துலக்கிக்கொண்டிருந்தார். மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டிருந்தார்” என்று சம்வகை தொடர்ந்தாள். “ஆம், அவர் கிளம்பிச்செல்லக்கூடும். ஆனால் அவரால் இயல்பாக இங்கே அவருக்கான இடத்தில் பொருந்திக்கொள்ளமுடிகிறது. ஆகவே இந்நகரில் இப்போது எந்த முரண்பாடும் நிகழ வாய்ப்பில்லை.” யுயுத்ஸு அதை நிறைவின்மையுடன் கேட்டு தலையை அசைத்தான். “ஆனால் இங்கே போட்டிகள் தொடங்கிவிட்டால் என்ன நிகழுமென சொல்லமுடியாது. மனிதனை மனிதனுக்கு எதிரியாக்குவது போட்டிதான்” என்றாள் சம்வகை.

யுயுத்ஸு “ஆம், ஆனால் நம்மால் அதை தவிர்க்கமுடியாது” என்றான். “போட்டிகளில் பூசல் எழாமல் நோக்கவேண்டும்” என்றபின் மீண்டும் கோட்டையை பார்த்தான். கவலைகொள்ள புதிய தளம் கிடைத்துவிட்டது என எண்ணி புன்னகை செய்தான். அதைக் கண்டு சம்வகையும் புன்னகை செய்தாள். யுயுத்ஸு “போட்டிகளை சிறப்பாக நடத்த உரிய காவல்படை ஒன்றை உருவாக்கவேண்டும். போட்டிகள் நகர் முழுக்க நடைபெறவிருக்கின்றன. இப்போதே போட்டிகள் பல தொடங்கிவிட்டன. முழு நகரத்தையும் ஆட்சிசெய்யும் ஓர் அமைப்பும் தலைமையும் தேவை” என்றான். சம்வகை “ஆம்” என்றாள். “அதை நீயே செய்யலாம். இந்நகரை நன்கறிந்தவள் நீ” என்றான் யுயுத்ஸு. “என் கடமை” என்றாள் சம்வகை.

# களிற்றியானை நிரை - 19

## பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 2

யுயுத்ஸு மீண்டும் தேரில் ஏறிக்கொள்ள சாரிகர் உடன் சென்று அமர்ந்தார். யுயுத்ஸு “என்ன நிகழ்கிறதென்றே தெரியவில்லை. இதைப்போல ஒரு பெருங்கொந்தளிப்பை அரசால் எந்நிலையிலும் கட்டுப்படுத்த முடியாது. அதற்கு நெடுநாளைய நம்பிக்கைகளும் ஒழுக்கநெறிகளும் தேவை. அஸ்தினபுரியில் முன்பு அது இருந்தது. அலைகடலை கரை என அது இந்நகரைக் காத்தது. இன்று இம்மக்கள் எங்கிருந்தெல்லாமோ வந்து கூடியவர்கள். இவர்களை நாம் அறியோம். இவர்களுக்கும் இங்குள்ள அரசையும் நெறிகளையும் தெரியாது…. ” என்றான்.

வெளியே நோக்கியபடி “இங்கே நிகழ்ந்துகொண்டிருப்பதென்ன? ஒரு பெரும் அலையெழுச்சி அன்றி வேறென்ன? இங்கே எதற்கும் எப்பொருளும் இல்லை. இவர்கள் வெறும் விழைவுகள், வெறும் வெறிகள், வெறும் ஆர்வங்கள். இவர்களை எப்படி நாம் ஆள முடியும்? இவர்களைக் கொண்டு ஒரு நகர் சமைக்க முடியும் என்று சுரேசர் எண்ணியது அறிவின்மை. ஐயமே இல்லை. தூய அறிவின்மை அது. அரசருக்கு தேவை மக்கள் அல்ல, குடிகள். இங்கே நிறைந்திருப்பவர்கள் வெறும் மானுடர்” என்றான்.

அவனுடைய புலம்பலை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார் சாரிகர். “சொல்க, நீர் எண்ணுவது என்ன?” என்று யுயுத்ஸு கேட்டான். “எந்தத் திரளையும் வெளியே இருந்து கட்டுப்படுத்த

முடியாது. கடலை கரை ஆளவில்லை, கரையை கடலே உருவாக்கிக்கொண்டிருக்கிறது. மீற நினைத்தால் மிக எளிதாகப் பொங்கி வந்து நகரங்களை விழுங்கவும் அதனால் இயலும்” என்றார் சாரிகர். “என்ன சொல்கிறீர்? இவர்களை நாம் எப்படி கட்டுப்படுத்த முடியும்?” என்றான் யுயுத்ஸு. ”நம் ஆணைகளுக்கு இவர்கள் அடிபணிவார்களா?”

“முதலில் நம் சொல் அவர்களுக்குச் சென்று சேரவேண்டும்” என்று சாரிகர் சொன்னார். “நான் யானைப்பயிற்சிகளை கண்டிருக்கிறேன். யானைக்கு மானுட மொழியை கற்பிக்கிறார்கள் என எண்ணிக்கொண்டிருந்தேன். மூத்த யானைச்சூதரான தீர்க்கர் என்னிடம் சொன்னார், அது யானைக்கும் மானுடருக்கும் நடுவே ஒரு மொழியை உருவாக்குவது மட்டும்தான் என. ஒற்றைப்படையாக மானுட மொழியை யானைமேல் செலுத்த முடியாது. யானை எதை புரிந்துகொள்கிறது என்று பார்க்கவேண்டும். எப்படி எதிர்வினையாற்றுகிறது என்று கூர்ந்து நோக்கிக்கொண்டே இருக்கவேண்டும். நம் சொல்லை யானை எப்படி மாற்றிக்கொள்கிறது என்பதை ஒட்டி நம் மொழி உருமாறிக்கொண்டே இருக்கவேண்டும். ஒரு புள்ளியில் யானைக்கும் நமக்கும் இடையே ஒரு மொழி உருவாகிவிடும். அது யானையிடம் நாம் பேசும் மொழி மட்டும் அல்ல, யானை நம்மிடம் பேசும் மொழியும்கூட.”

“இந்தப் பெருந்திரளின் மொழியென்ன என்று புரிந்துகொள்ளுவதே நாம் செய்யவேண்டியது. நம் ஆணைகளை இவர்கள்மேல் நாம் செலுத்த முடியாது. இவர்களுக்கும் நமக்கும் இடையே ஓர் உரையாடல் உருவாகவேண்டும். மக்களை புரிந்துகொள்வதுதான்

அரசியலின் முதல் பாடம். நாம் இன்றுவரை மக்களை நேரடியாகப் புரிந்துகொள்ள முயலவில்லை. மக்களை கூர்ந்து நோக்கி அவர்களை புரிந்து வகுத்து நம் முன்னோர் எழுதி வைத்தனர். அந்நூல்களையே அரசநூல்கள் என பயின்றோம். அந்நூல்களை ஒட்டி அரசாண்டோம். இப்போது அந்நூல்களுக்கு அயலான ஒரு பெருந்திரள் இங்கே கூடியிருக்கிறது.”

“இன்று நாம் அந்நூல்களை ஒரு வேதமெனக் கருதுவோம் என்றால், அவற்றுக்கு இம்மக்கள் அடிபணியவேண்டும் என எண்ணுவோம் என்றால் இம்மக்களுடன் மோதுகிறோம். இது பேருருவக் களிறு. நம்மை மோதி நசுக்கிவிட்டுச் செல்லும் ஆற்றல் கொண்டது. இது நம்மை ஏற்றாக வேண்டும். இதன்மேல் நாம் ஏறி அமர இது மத்தகம் தாழ்த்தியாக வேண்டும். அறிக, மானுடர் வென்ற அத்தனை விலங்குகளும் மானுடரால் புரிந்துகொள்ளப்பட்டவை! புரிந்துகொள்ள இடமளித்தவை. புரிந்துகொள்ள முடியாத கூர்கொண்டவையும் புரிந்துகொள்ள ஏதுமற்ற எளியவையும் மானுடரிடம் பழகவே இல்லை.”

யுயுத்ஸு புன்னகைத்து “நன்றாகப் பேசத் தெரிந்துகொண்டிருக்கிறீர். விரைவிலேயே முதன்மை அமைச்சராக ஆகமுடியும் உங்களால்” என்றான். “நீங்கள் அரசாளக் கூடும் என்று நான் எண்ணிக்கொள்வதுண்டு” என்றார் சாரிகர். யுயுத்ஸு விழிகள் மாறுபட “என்ன சொல்கிறீர்?” என்றான். “இது அரசவஞ்சம். இனி ஒரு சொல் உம் நாவில் இப்படி எழக்கூடாது.” சாரிகர் “அஸ்தினபுரியை ஆள்வதைப் பற்றி சொல்லவில்லை. அஸ்தினபுரி வெல்லும் அயல்நிலங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் ஆளக்கூடும்

அல்லவா?” என்றார். “அதற்கும் வாய்ப்பில்லை. நீரே அறிவீர், என் குலத்தை” என்றான்.

சாரிகர் “ஆம், ஆனால் நேற்றுவரை, உங்கள் தந்தையின் கோல் இங்கே திகழ்ந்ததுவரை அதற்கு வாய்ப்பில்லை. ஆனால் எழுந்துவிட்டிருப்பது புதிய வேதம். இனி புதிய அரசகுலங்கள் உருவாகி வரும். புதிய நிலங்கள் திறந்து விரியும். அரக்கர்களும் அசுரர்களும் நிஷாதரும் கிராதரும் கூட ஆட்சியமைப்பார்கள். அறிந்திருப்பீர்கள், துவாரகையின் குருதியிலேயே அசுரர்களின் குருதி கலந்துள்ளது. எழும் யுகம் ஆற்றலால், அறத்தால் முடிவுசெய்யப்படுவதே ஒழிய பிறப்பால், குலத்தால் அல்ல” என்றார். யுயுத்ஸு வெறுமனே நீள்மூச்செறிந்தான்.

“அன்று நீங்கள் இந்தப் பெண் சம்வகையை உங்கள் அரசியெனத் தெரிவு செய்யலாம்” என்று சாரிகர் சொன்னார். யுயுத்ஸு திடுக்கிட்டு திரும்பி நோக்கி “உளறுகிறீர்” என்றான். “இவள் சூத்திரக் குடியினள். ஆனால் தன் தகுதியால் அரசிக்குரிய ஆளுமையை வந்தடைந்திருக்கிறாள். இவளால் நெடுநிலங்களை ஆளமுடியும். முன்பு இந்நாட்டை ஆண்ட சத்யவதியின் குருதிவெம்மை அவளில் உள்ளது” என்று சாரிகர் சொன்னார். “உங்களிடம் அரசருக்குரிய நிலைபேறு உள்ளது. அவளிடமிருப்பது விசை. அரசன் ஒருகையில் ஏடும் மறுகையில் வாளும் ஏந்தியவன் என்கின்றது பாரத்வாஜநீதி. நீங்கள் நூலேந்தியவர். வாளேந்திய அவள் உங்கள் இடப்பக்கமாக அமைவது நன்று.”

“இப்பேச்சை விடுவோம். இதற்கெல்லாம் பொருளே இல்லை” என்று யுயுத்ஸு சொன்னான். “நான் என் எண்ணங்களை சொன்னேன்” என்று சாரிகர் சொன்னார். “என் எண்ணங்கள்

பெரும்பாலும் பொய்ப்பதில்லை. அவை முன்பின் அற்ற ஓர் உள்ளுணர்விலிருந்து வருகின்றன.” யுயுத்ஸு “இதைப்பற்றி பேசவேண்டாமே” என்றான். “ஏன்?” என்று சாரிகர் கேட்டார். “இதில் ஒரு மீறல் உள்ளது. அது நன்றல்ல” என்றான் யுயுத்ஸு. “கூறுக, இந்த மீறல் உங்கள் கனவுகளிலாவது நிகழ்ந்ததில்லையா?” யுயுத்ஸு சில கணங்களுக்குப் பின் “கனவுகளில் மீறல்கள் நிகழலாம். அவற்றை மானுடர் ஆளமுடியாது, அவை தெய்வங்களின் உலகம்” என்றான்.

தேர் சூதர்தெருக்களினூடாகச் சென்றது. அங்கே ஒரு சொல்லவை கூடியிருப்பதை யுயுத்ஸு கண்டான். “நிறுத்துக!” என ஆணையிட்டான். அவர்கள் இறங்கி அச்சொல்லவை நோக்கி சென்றார்கள். அங்கே பலநாட்டு சூதர்கள் கூடியிருந்தனர். பலவகையான தலைப்பாகைகள். பூசணிக்காய்போல, இரு தேங்காய்நெற்றுகளை சேர்த்துவைத்ததுபோல, தாலம் கவிழ்த்ததுபோல. மேலாடைகளையே விதவிதமாக அணிந்திருந்தனர். பெண்கள் அணிவதுபோல வலமிருந்து இடமாக சுற்றியிருந்தனர் சிலர். நீராடும் பெண்கள் போல சிலர் சுற்றியிருந்தனர். இரு தோள்களிலும் சுழற்றிக்கட்டியிருந்தனர்.

ஒவ்வொருவரும் அணிந்திருந்த குண்டலங்களும் மாறுபட்டன. ஒன்றன்மேல் ஒன்றென மூன்று முத்துக்கள் கொண்டவை திருவிடநாட்டுக் குண்டலங்கள். ஒற்றைப்பெரிய மணி கொண்டவை கிழக்குநாட்டைச் சேர்ந்தவை. வளையம்போல குண்டலம் அணிந்தவர்கள் வடமலை மக்கள். வெவ்வேறு வண்ணக் கற்களை செம்புக்கம்பியில் கோத்து அணிந்தவர்கள் மேற்குநிலத்துச் சூதர். பெரிய கொட்டகையில் அவர்கள்

ஒருவரோடொருவர் ஒட்டி அமர்ந்திருந்தனர். ஒருவர் ஏதோ பாடல் சொல்லிக்கொண்டிருந்தார். எந்த மொழி அது என்று தெரியவில்லை.

சூழ நின்றவர்களுடன் அவர்கள் சென்று சேர்ந்துகொண்டனர். அவர்களில் எவரும் யுயுத்ஸுவையும் அவரையும் அறிந்திருக்கவில்லை. பாடல் சொன்னவர் அதை அஸ்தினபுரிக்கென்று உருவாகி வந்த மொழியில் மீண்டும் சொன்னார். யுயுத்ஸு திரும்பி சாரிகரிடம் "அவர் சொல்வது என்ன?" என்றான். சாரிகர் "அவருடைய மொழியில் அமைந்த பாடலை இங்குள்ள மொழியில் சொல்கிறார்" என்றார். யுயுத்ஸு "ஆம், அது என்ன?" என்றான். "அழகிய நதி நெளியும்போது வெண்தாமரைகள் அசைகின்றன. அவை அன்னங்கள்போல் தோன்றுகின்றன. மீன்கள் விழிகளாகின்றன. பல்லாயிரம் அருமணிகளாலான மாலை ஒன்று நெளிகிறது. ஒரு சொல் மட்டும் எஞ்சுகிறது, வேலின் கூர்முனையின் ஒளித்துளிபோல" என்றார்.

"நன்று" என்று யுயுத்ஸு சொன்னான். "அவர் கவிஞர் என்று எண்ணுகிறேன்." அவர்கள் அருகே நின்றிருந்த முதியவர் "ஆனால் அவர் இங்குள்ள மொழியில் கூறியது வேறு. உங்களுக்கு இந்த மொழி இன்னமும் பழகவில்லை போலும்" என்றார். சாரிகர் "இல்லை, நான் சற்று அகன்றிருந்து சொற்கள் சொற்களாக கற்றுக்கொண்டிருக்கிறேன். இம்மக்களுடன் சிலநாட்கள் புழங்கினாலன்றி தெளிவுற இம்மொழியை உணரமுடியாது" என்றார். முதியவர் "நீங்கள் உங்களுக்குத் தெரிந்த மொழியில் நீங்கள் அறிந்த கவிதையின் வண்ணத்தை அளித்துவிட்டீர்கள்" என்றார்.

யுயுத்ஸு “சொல் சொல்லென அவர் சொன்னதை சொல்க!” என்றான். “அழகிய நதி ஒரு மலர். கொடிபோல நெளிவது. அன்னங்கள் அதில் நீந்துகின்றன. அவை மீன்களை தேடுகின்றன. நதி ஒரு மணிமாலை. அது வெறும் ஒரு சொல் மட்டுமே. வேலின் கூர்முனை போன்று ஒளிவிடுகிறது” என்றார். சாரிகர் “சொல்லுக்குச் சொல் அதுவே பொருளா?” என்றார். “ஆம், அவ்வளவுதான்” என்றார் முதியவர். “எனக்கு இணைவே இல்லாத சொற்களின் பொருத்தாகத் தோன்றியது. என் கற்பனையில் தோன்றிய பொருளால் இணைத்துக்கொண்டேன்” என்றான் யுயுத்ஸு.

சாரிகர் “வருக!” என்று யுயுத்ஸுவின் தோளில் தட்டிய பின் தேரை நோக்கி சென்றார். அவர்களுக்குப் பின்னால் அடுத்த பாவலரின் கவிதை முற்றிலும் அயலான கிழக்கு மொழியில் ஒலித்தது. பலர் வாழ்த்து கூவினர். “விந்தைதான், கவிதை கேட்க இத்தனைபேர் எப்போதுமே அஸ்தினபுரியில் கூடியதில்லை. இது படைக்கலங்களின், அணிகளின், ஊனின், கள்ளின், காமத்தின் நிலமாகவே இருந்துள்ளது” என்று யுயுத்ஸு சொன்னான். “இப்போது அவையனைத்தும் சொல்லில் திரண்டுள்ளன” என்று சாரிகர் சொன்னார். “எண்ண எண்ண வியப்பு மிகுகிறது. முன்பு இங்கிருந்தவர்களைவிட நுண்மையும் கூர்மையும் கொண்ட மக்கள் இப்போது வந்து திரண்டிருப்பவர்கள்” என்றான் யுயுத்ஸு.

அவர்கள் தேரை நோக்கி சென்றபோது யுயுத்ஸு நின்று “அவர்களைப் பார்த்தால் அக்கவிதை சொன்ன புலவரின் நாட்டவர் என்று தோன்றுகிறது. அவர்களை அழைத்து வருக!” என்று தேர்ப்பாகனிடம் சொன்னான். அவர்கள் தேர்ப்பாகனுடன் வந்தனர். “அஸ்தினபுரியின் இளவரசனாகிய யுயுத்ஸு. நீங்கள்

யார்? உங்கள் பேச்சில் சில சொற்கள் என் செவிகளில் விழுந்தன” என்று அவன் கேட்டான். “நாங்கள் தென்னகத்தார். இங்கு வணிகத்தின் பொருட்டு வந்தோம். பதினெட்டு ஆண்டுகளாக கங்கைக்கரை நாடுகளுடன் வணிகம் செய்கிறோம்” என்றார் அவர்களில் முதியவர். “உங்களுக்கும் இங்குள்ள செம்மொழி தெரியுமா?” என்றான் யுயுத்ஸு. அவர் “ஆம். நன்கு தெரியும். எனக்கு நூலாயும் வழக்கம் உண்டு” என்றார்.

“சொல்க, இங்கு சற்றுமுன் தென்னகத்துப் புலவர் பாடிய செய்யுளின் பொருள் என்ன?” என்று யுயுத்ஸு கேட்டான். அவர் “இச்செய்யுளை அக்கவிஞர் சொல்ல பலமுறை கேட்டிருக்கிறேன்” என்றார். உள்ளத்தில் சொல்கோத்த பின்னர் “நெளிந்துவரும் பொன்னிற நதியில் இரு வெண்தாமரை மொட்டுக்கள். அல்ல, ஊடும் முயங்கும் இணையன்னங்கள் அவை. வெள்ளிமீன்கள் அருமணிகளென்றாக நடையில் துவள்கிறது ஆரம். இனியவளே, இன்று உன் பெயர் ஒரு கொல்லும் கூர்வேல்” என்றார்.

யுயுத்ஸு “நன்று” என்றான். அவர்கள் தலைவணங்க அவன் தேரிலேறிக்கொண்டான். சாரிகர் அருகே அமர்ந்ததும் தேர் கிளம்பியது. யுயுத்ஸு சட்டென்று உரக்க நகைத்தான். “நன்று, ஒரு கவிதை மூன்றென்று ஆகி நம்மிடம் வந்தது. இங்குள்ள அத்தனை மொழிகளிலும் வெவ்வேறு கவிதைகளாக பெருகிக்கொண்டிருக்கும் இந்நேரம்” என்றான். சாரிகர் சிரித்து “நானும் அதையே எண்ணினேன். அக்கவிதை அங்குள்ள அத்தனை பேரையும் கவிஞர்களாக ஆக்குகிறது. கவிதை இவ்வண்ணம் பெருகிச்செல்லவேண்டும் போலும். இங்கே நாம்

மொழியை இலக்கணத்தால் தடுத்து அணைகட்டி தேங்க வைத்திருந்தோம்” என்றார்.

யுயுத்ஸுவின் கண்கள் மாறுபட்டன. “இலக்கணம் என்பது மொழியின் அறம் என்பார்கள்” என்றான். “ஆம், ஆனால் அறம் நெறியாகி, நெறி முறைமையாகி, முறைமை மாறாத சட்டமாக ஆகும்போது அனைத்தும் உறைந்து நின்றுவிடுகின்றன. அஸ்தினபுரியின் அவைகளைப்பற்றி நான் அறிவேன். அத்தகைய அவைகளில் ஒன்றிலேயே நான் பயின்றேன். இங்கே மொழியின் எழிலையும் சொற்சுவையையும் கற்றுக்கொள்வதற்கு முன்னரே இலக்கணம் கற்பிக்கப்படுகிறது. நன்மொழி என்பது இலக்கணம் பிழையாதது என்றே சொல்லப்படுகிறது. இலக்கணம் குறித்த அச்சம் மொழி கற்கும் ஒவ்வொருவரையும் ஆட்டுவிக்கிறது.”

“இலக்கணத்திற்கு ஓர் இயல்புண்டு, அது காற்றை வகுந்து நெசவுசெய்ய முயல்வது. ஆகவே ஒருபோதும் அது முழுமை பெறுவதில்லை. இலக்கணம் கற்கும்தோறும் கற்பவர் ஐயம்கொண்டவர் ஆகிறார். இரு இலக்கண அறிஞர்கள் நடுவே ஒரு கருத்து உருவாகவே வாய்ப்பில்லை என்றாகிறது. வகுக்குந்தோறும் பெருகும் ஒன்று அது. இலக்கணம் தன்னைத்தானே பகுத்துப் பகுத்து விரித்துக்கொள்கிறது. சொல்லிலக்கணம் எழுத்திலக்கணம் பொருளிலக்கணம் அணியிலக்கணம் காவிய இலக்கணம் என கிளைவிடுகிறது. வாழ்நாளெல்லாம் கற்றால்கூட எவரும் இலக்கணம்நிறைந்த ஒன்றை சொல்லிவிடமுடியாது. அதை மறுக்க இன்னொரு இலக்கணப்புலவர் அவையில் எழுவார்.”

“இங்கு நிகழும் அத்தனை சொல்லரங்குகளிலும் இளையோனாக வந்து அமர்ந்திருக்கிறேன். இந்த அவையில்

நிகழ்ந்துகொண்டிருக்கும் கொண்டாட்டத்தை ஒருமுறைகூட பார்த்ததில்லை. ஒவ்வொருவரும் மிகமிகக் கூரிய வாளை கையில் வைத்துக்கொண்டு எதிரியின் விழிகளை கூர்ந்து நோக்கியபடி எண்ணி எண்ணி காலடி வைத்து சுழன்றுவருவதை, ஓங்கி வீசி எதிரியை வீழ்த்தி தருக்கி நிமிர்வதை மட்டுமே கண்டிருக்கிறேன். இலக்கணம் திகழும் அரங்கில் கவிதை எழவியலாது. இலக்கணத்தைக் கற்ற ஒருவரால் கவிதையை உணரவே முடியாது.”

யுயுத்ஸு “நான் இலக்கணம் கற்றவன்” என்றான். “அதை உதறுக! இங்கு புதிய நகர் உருவாகி எழவேண்டுமென்றால் புதிய மொழியிலேயே இயலும். அது இலக்கணமற்ற மொழியாக அமைக!” என்று சாரிகர் சொன்னார். “அஸ்தினபுரி ஆயிரமாண்டுகளாக உறைந்துவிட்டிருந்தது. மாமன்னர் ஹஸ்தி இந்நகரை அமைக்கையில் நமது மொழியும் இளமையாக இருந்திருக்கும். கட்டற்றதாக, துள்ளிக்கொண்டிருப்பதாக. காமமும் மீறலும் கொண்டதாக. அதை இலக்கணமிடத் தொடங்கினோம். அதை பல்லாயிரம் சரடுகளால் கட்டி நிறுத்தினோம். உயிரிழக்கச் செய்தோம். இங்கே திகழும் மொழி கல்லால் ஆனது. இதில் எவரும் மூழ்க முடியாது. புதுப்புனல் போலிருக்கிறது இந்த வருமொழி. இது இங்கே பெருகட்டும்.”

“ஆனால் மொழி பொதுவான இலக்கணம் வழியாகவே தொடர்புறுத்தப்படுகிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “இல்லை, எத்தனை இலக்கணம் இருந்தாலும் மொழி கற்பனை வழியாகவே தொடர்புறுத்தப்படுகிறது. சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் நடுவே திகழ்வது கற்பனையின் மாயப் பாதை மட்டுமே” என்றார் சாரிகர். “கற்பனையை அணையச்செய்து நிலைப்பொருளை உருவாக்கும்பொருட்டே இலக்கணம்

உருவாகிறது. இலக்கணங்கள் அற்ற மொழி தன் ஒவ்வொரு சொல்லிணைவிலும் கவிதையை நிகழ்த்திக்கொண்டிருக்கும். கவிதைபோல எண்ணத்தையும் உணர்வுகளையும் உணர்த்தும் பிறிதொரு ஊடகம் இல்லை.”

“ஆகவேதான் இத்தனை இலக்கணநூல்களுக்கு அப்பாலும் இன்னமும் கவிதை அவ்வண்ணமே நீடிக்கிறது. இத்தனை அறநூல்களும் நெறிநூல்களும் தொழில்நூல்களும் மெய்நூல்களும் எழுந்த பின்னரும் கவிதைக்காக ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள் மானுடர். ஒவ்வொரு நாளும் கவிதை நிகழ்ந்துகொண்டிருக்கிறது இங்கே. ஒருநாள் புரவியில் வயல்வெளியினூடாகச் சென்றேன். நாற்றுநடுபவர்கள், ஏற்றம் இறைப்பவர்கள், சுமைதூக்கிச் செல்பவர்கள், தாலாட்டு பாடுபவர்கள், மோர் கடைபவர்கள் என செவியெங்கும் கவிதை வந்து நிறைவதை கேட்டேன். மக்கள் பேசிச்செல்லும் மொழியில் எல்லாம் மூதுரையாக, பழமொழியாக, சொல்வழக்காக கவிதை எழுந்தபடியே இருந்தது.”

“இப்புவியில் மானுடர் உருவாக்கிப் பெருக்கியவற்றில் முதன்மையானது கவிதைதானோ என எண்ணிக்கொண்டேன். எண்ண எண்ண வியப்பாக இருந்தது. உலகியலோர் எப்பயனும் அற்றது என்று எண்ணும் ஒன்று. எங்கும் நிலைகொள்ளாதது. எவ்வகையிலும் வகுக்க முடியாதது. சொல்பவருக்கும் கேட்பவருக்கும் நடுவே முற்றிலும் தன்னியல்பாக நிகழ்வது. ஆனால் அது இன்றி இங்கே வாழ்க்கை அமைவதில்லை. அன்றுதான் ஒன்றை உணர்ந்தேன், பொருள்மயக்கத்தால் தொடர்புறுத்தலை நிகழ்த்தும் கவிதையைக்கொண்டே இப்புவியில் மெய்யானவற்றை சொல்ல முடியும். அன்பை,

காதலை, துயரை, களிப்பை. உண்மையையும் மெய்மையையும் கூட.”

“இன்று இப்படி சொல்வேன், கவிதை மலர்களைப் போன்றது. இத்தனை கோடி மலர்கள் ஒருநாளில் ஒரு நாழிகையில் ஒரு கணத்தில் மலர்ந்து இப்புவியை நிறைக்க மானுடரால் விளக்கத்தக்க எந்த அடிப்படையும் இல்லை. அது தெய்வங்களின் ஆணை” என்று சாரிகர் சொன்னார். யுயுத்ஸு அவரை உறுத்து நோக்கியபடி அமர்ந்திருந்தான். “அங்கே இலக்கண வரையறை அழிந்ததும் சொல் பெருகியது. இந்நகரை ஆளும் தொன்மையான வரையறைகள் அனைத்தும் அவிழ்க! இந்நகர் தான் இதுகாறும் சூடிய அணிகள் அனைத்தையும் உதறுக! அந்த அணிகள் அதன் தளைகள். அது மீண்டும் பிறந்தெழுக! மழலைபேசி கூவி ஆர்ப்பரித்து வளர்க!”

“உங்களால் இயலும்” என தணிந்த குரலில் சாரிகர் சொன்னார். “உங்கள் தமையன்களால் இயலாது. இந்நகரின் இப்புதுவெள்ளத்துடன் அவர்களால் இணைய முடியாது. ஏனென்றால் அவர்களும் ஷத்ரியர்களே. அவர்களின் காலம் முடிந்துவிட்டது. அவர்கள் வென்று நிலைநிறுத்திய அப்புதிய வேதத்தால் படைக்கப்படும் உலகில் அவர்களுக்கு இடமில்லை. அவர்களின் பழைய உலகில் மூதாதையர் ஆணையிடும் கண்களுடன் துறித்து நோக்கி நின்றிருக்கிறார்கள். தெய்வங்கள் படைக்கலம் ஏந்தியிருக்கின்றன. அவர்கள் தங்கள் எடையால் மூழ்கி மறைந்தாகவேண்டும். காலத்தில், மண்ணில்.”

“நீங்கள் எடையற்றவர். உங்களால் நீங்கள் சூடிய அனைத்தையும் உதறி எழமுடியும். பிறிதொருவராக மாறமுடியும். உருவாகிவரும் புத்துலகில் நீந்தித்திளைக்க முடியும்” என்று சாரிகர் சொன்னார். யுயுத்ஸு பெருமூச்சுவிட்டு

நெளிந்தமர்ந்தான். தேருக்கு இருபுறமும் மக்கள் உரக்கக் கூச்சலிட்டு களியாடிக்கொண்டிருந்தார்கள். சீரான தாளமும் முழவுகளின் ஒலியும் சிரிப்பொலிகளுடன் சேர்ந்து ஒலித்தன. யுயுத்ஸு குனிந்து பார்த்தான். இந்திரனின் ஆலயத்தின் முன் அமைந்த பெருமுற்றத்தில் மஞ்சள்நிற உடலும் சிறிய விழிகளும் கொண்ட கீழைநிலத்து மக்கள் சிலர் கைகளைத் தட்டி நடனமிட்டனர். அவர்களின் வட்டத்திற்கு நடுவே ஒரு பெருமுழவை கைகளால் முழக்கியபடி ஒருவன் நின்று ஆடினான்.

அது ஏதோ தொல்குடி நடனம். அவர்கள் கைகளைத் தட்டியபடி முன்னும் பின்னும் கால்களை தூக்கி வைத்து, அதற்கேற்ப உடலை அசைத்து ஆடினார்கள். கூடிநின்றவர்கள் சிலகணங்களிலேயே அந்த ஆட்டத்தின் ஒழுங்கை இயல்பாக தங்கள் உடல்களில் அடைந்து அதில் இணைந்துகொண்டார்கள். கரியவர்களும் வெண்ணிறத்தவர்களும் சேர்ந்தனர். ஆடுபவர்கள் கூடிக்கூடி அந்த வட்டம் பெருகியபடியே வந்தது. தேர் நின்றுவிட யுயுத்ஸு நோக்கிக்கொண்டிருந்தான். அந்த வட்டம் மாபெரும் நதிச்சுழி என்றாகியது. அதன் விளிம்புகள் விரிந்தபடியே வந்தன.

“அவ்விளிம்புவட்டம் நம்மை அணுகுகிறது” என்று சாரிகர் சொன்னார். “நீங்கள் இறங்கிச் சென்று அதில் சேர்ந்துகொள்ளுங்கள்.” யுயுத்ஸு தயங்க சாரிகர் தேரிலிருந்து இறங்கினார். “நான் சென்று சேர்ந்துகொள்ளவிருக்கிறேன். நீங்களும் வருக!” யுயுத்ஸு அசையாமல் அமர்ந்திருந்தான். “இலக்கணங்களை கடந்து வருக! அரசகுடியினருக்குரிய அனைத்தையும் துறந்துவிடுக!” என்றபின் சாரிகர் கைகளைத் தட்டியபடி அந்தச் சுழலில் சேர்ந்தார். சற்றுநேரத்திலேயே

அதன் ஒழுக்கில் மறைந்தார். யுயுத்ஸு நோக்கியபடி அமர்ந்திருந்தான். அவன் உடலில் அந்தத் தாளம் நிகழ்ந்துகொண்டிருந்தது. அவன் விரல்கள் அதிர்ந்தன. அவன் வண்டியின் கூண்டை பற்றிக்கொண்டான்.

“செல்க!” என்று அவன் பாகனுக்கு ஆணையிட்டான். ஆனால் நாவிலிருந்து குரல் எழவில்லை. “செல்க! செல்க!” என்று அவன் சொல்லிக்கொண்டே இருந்தான். தேர் அசையாமல் நின்றிருந்தது. தன் உடல் அந்தத் தாளத்தில் துள்ளுவதை அவன் அச்சத்துடன் கண்டான். அவன் அன்னையின் முகம் நினைவிலெழுந்தது. யாழ்மீட்டுகையில் அவள் உடலில் எழும் தாளம். அவன் தேரிலிருந்து இறங்கி நின்றான். அன்னையின் கை மதலையை என அச்சுழல் அவனை அள்ளி தூக்கிக்கொண்டது.

# களிற்றியானை நிரை - 20

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 3**

சாரிகர் அரண்மனைக்குத் திரும்பியபோது புலரி எழுந்திருந்தது. அவர் யுயுத்ஸுவை பார்க்கவில்லை. அவர் ஓய்ந்து மையச்சாலைக்கு வந்தபோது அங்கே யுயுத்ஸுவின் தேர் நின்றிருக்கவில்லை. அவர் அதற்குமேல் எண்ணவுமில்லை. அவர் எண்ணங்கள் சேற்றில் புதைந்தவைபோல அசைவிழந்திருந்தன. தள்ளாடும் நடையுடன் சாலைக்கு வந்து அங்கே நின்றுகொண்டிருந்த அரசப்படைவீரன் ஒருவனிடம் தன் கணையாழியைக் காட்டி புரவியை வாங்கிக்கொண்டு அரண்மனைக்கு மீண்டார். செல்லும்

வழியிலேயே துயின்றுவிட்டார். புரவி அரண்மனைக்கு வந்து முற்றத்தில் நின்றபோதுதான் விழித்துக்கொண்டார். அதன் கழுத்தில் தலைசாய ஒசிந்து விழுவதுபோல் அமர்ந்திருந்தார்.

அவர் புரவியில் வந்தது வீரர்களிடையே மெல்லிய சலசலப்பை உருவாக்கியது. அந்தணர் அவ்வாறு விலங்குகள் மேல் ஏறுவது வழக்கமில்லை. அவர் இறங்கி சில கணங்கள் நின்று நிலைகொண்டு விழிதெளிந்தபின் ஒன்றும் பேசாமல் சென்று தன் அறைக்குள் படுத்துக்கொண்டார். அவர் மஞ்சம் மென்மையான முகில்பரப்பு போலிருந்தது. அவர் எங்கோ மிதந்துகொண்டிருந்தார். விந்தையான குரல்முழக்கம் அப்போதும் அவரைச் சூழ்ந்திருந்தது. ஒரு மாபெரும் யாழின் குடத்திற்குள் சிக்கிக்கொண்டதுபோல. உடலெங்கும் அந்த ஓசை புகுந்து நிறைந்து காதுகள் வழியாக வெளிவருவதுபோல, மூச்சென முழங்குவதுபோல தோன்றியது.

அவர் மேலும் ஆழ்ந்தபோது தான் ஒரு மரக்கலத்தில் படுத்திருப்பதுபோல உணர்ந்தார். அந்த அசைவில் அலை இருந்தது. எழுந்து நோக்கியபோது அது மரக்கலம் அல்ல, ஒரு நகரம்தான் என உணர்ந்தார். அவர் அறிந்த நகர்தான் அது. ஆனால் முற்றிலும் பிறிதொன்றாக இருந்தது. அதன் மாளிகைகள் எல்லாம் பொன்மகுடங்களுடன் சுதை மின்னும் வெண்சுவர்களுடன் முற்றிலும் புதிதாக இருந்தன. அத்தனை மாளிகைகளும் ஒளிரும் விழிகள் கொண்டிருந்தன. அவற்றின் மேல் கொடிகள் பறந்தன. அவை காற்றில் சீறிச் சிறகடித்துக்கொண்டிருந்தன. அவர் தொலைவில் நிலம் அகன்று செல்வதை கண்டார். அங்கே ஒரு பழைய நகரம் தெரிந்தது. அதை அஸ்தினபுரி என அடையாளம் கண்டார்.

“அஸ்தினபுரி” என்று அவர் சொல்லிக்கொண்டார். அதோ என எவருக்கோ சுட்டிக்காட்டினார். உள்ளறையிலிருந்து வெளியே வந்த தென்னகத்தான் “ஆம், அது பழைய நகர்” என்றான். சாரிகர் திரும்பி நோக்கி “இது?” என்றார். “இது புதியது” என்றான் அவன். கரிய உடலும், நீள்முகமும், உணர்ச்சிகள் மின்னும் பெரிய விழிகளும், மென்மையான தாடியும் கொண்டவன். எப்போதும் கனவிலிருப்பவன்போல தோன்றுபவன். அவன் பெயர் விந்தையானது. அது என்ன? “இந்நகர் சென்றுகொண்டிருக்கிறது” என்று அவன் சொன்னான். “இது தன் வழி தேர்ந்துவிட்டது.” சாரிகர் “எங்கே செல்கிறது?” என்றார். “எங்காயினும். ஆனால் நிலைகொண்ட நகரங்கள் வீழ்ச்சி அடையும். செல்வன மீண்டும் பிறக்கும். என்றுமென இங்கிருக்கும்.”

“உன் பெயர் ஆதன் அல்லவா?” என்று சாரிகர் கேட்டார். “நாம் ஒரு ஆடலில் சந்தித்தோம். நீ என் கைகளை பற்றிக்கொண்டு ஆடினாய்.” அவன் புன்னகைத்து “ஆம், அது நெடுங்காலத்திற்கு முன்பு” என்றான். “அந்நகரம் முற்றழியுமா?” என அவர் அகன்றுசெல்லும் நகரை நோக்கியபடி கேட்டார். “அழிந்தாலென்ன? அதன் அழகுகள் அனைத்தும் இந்நகரில் உள்ளன. அவ்வண்ணம் அழிந்த பெருநகர்கள்தான் எத்தனை! சூரபதுமனின் வீரமகேந்திரபுரியை நான் ஆயிரம் துண்டுகளாக தென்னகத்திலே பார்த்திருக்கிறேன். ஒவ்வொன்றும் சிற்றூர் என்றும் பெருநகரொன்றின் ஒரு சிறுபகுதி என்றும் தோன்றும். அங்கு வாழ்பவர்கள் அந்த எஞ்சிய இல்லா நகரை கனவுகளில் கண்டு நிறைவிலாமல் வாழ்கிறார்கள்.”

“ஆம்” என்று அவர் சொன்னார். “நரகாசுரனின் பிரக்ஜ்யோதிஷபுரம் கிழக்கே சிதறிக்கிடக்கிறது. பெருநகரங்கள் அனைத்தும் மண்ணில் சிதறிக்கிடக்கின்றன. ஏனென்றால்

அவற்றின் எடையை அவற்றால் தாளமுடிவதில்லை.” ஆதனின் விழிகள் அறிந்த விழிகள் என அவருக்குப் பட்டது. வேறு எவருடையவோ விழிகள் அவை. “அது இறந்தகாலத்தின் எடை. ஒரு நகரில் எத்தனை பேர் ஒவ்வொருநாளும் புதைக்கப்படுகிறார்கள்! எத்தனை பொருட்கள் பாழடைந்து வீசப்படுகின்றன! எத்தனை நிகழ்வுகள் மறக்கப்படுகின்றன! அவையெல்லாம் எங்கு செல்கின்றன? அடியில். அந்நகரின் ஆழத்தில். அவை நங்கூரம் என அந்நகரை கட்டி நிறுத்துகின்றன. பெரும்பாறை என உள்ளே இழுக்கின்றன.”

“எடை தாளாமல் அது உடையத் தொடங்குகிறது. அதன் சுவர்கள் விரிசலிடுகின்றன. அதன் கதவுகள் முனகுகின்றன. அதன் பல பகுதிகள் கைவிடப்பட்டு இருண்டு தூசுபடிகின்றன. பல இடங்கள் அறியப்படாமையின் அச்சமூட்டும் அமைதியை சென்றடைகின்றன. கூரியவை பல கனவில் எழுந்து வந்து அச்சுறுத்துகின்றன. அது மெல்லமெல்ல ஒரு கனவாக மாறுகிறது. கனவில் அனைத்துமே வியப்பு கலந்தவைதான். வியப்புகள் அனைத்துக்கும் அடியில் அச்சம் உள்ளது. ஒரு நகரம் கனவுத்தன்மை கொள்ளத் தொடங்கிவிட்டால் அது அழிந்துகொண்டிருக்கிறது என்று பொருள். அதன் பருவடிவம் மறையும். கனவென்று அது தன்னை எச்சம் வைத்துக்கொள்ளும். சொல்லில் நீடிக்கும்.”

அவர் கீழே ஒரு நகரை நோக்கினார். கடல்அலைகளுக்குமேல் அதன் மாடமுகடுகளின் உடைசல்கள் மட்டும் தெரிந்தன. “அது துவாரகை. முன்பு ஓர் அசுரன் ஆண்ட நிலம்.” அவர் திடுக்கிட்டு நோக்கினார். “அதுவா? அதுவா?” என்றார். “எல்லா அசுரப்பெருநகர்களையும்போல் அதுவும் பெரும்புகழ் பெற்றிருந்தது. செல்வத்தில், வெற்றியில் திளைத்தது.

மிகுசெல்வம் மிகுவெற்றி மிகுபுகழ் விரைவில் அழிவை கொண்டுவருகிறது.” அவர் அதை மூச்சடக்கி நோக்கிக்கொண்டிருந்தார். “அது அழியவேண்டியதுதான். அதை நிறுவிய யாதவனுக்கே அது நன்கு தெரிந்திருந்தது.” அவர் “ஆனால் அவர் அசுரர் அல்ல!” என்றார். “அல்ல, ஆனால் அவன் அசுரனாகவும் இருந்தான்.”

திடுக்கிடலுடன் சாரிகர் விழித்துக்கொண்டார். வியர்வையுடன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. எவரோ அருகே நின்றிருக்கும் உணர்வு ஏற்பட எழுந்தார். அவரருகே ஏவலனின் ஓலைக்குறிப்பு இருந்தது. “தங்களை அழைக்கவந்தேன். அரசரிடமிருந்து ஆணை.” அவர் எழுந்து நின்றார். அந்த ஓலை அங்கே வந்தமையால்தான் அந்தக் கனவா? அவர் வெளியே வந்தபோது ஏவலன் காத்து நின்றிருந்தான். அவனிடம் “எப்போது அழைப்பு வந்தது?” என்றார். “ஒரு நாழிகைக்கு முன்” என்றான் ஏவலன்.

“என்னை எழுப்பியிருக்கலாமே” என்று சாரிகர் சொன்னார். “அது எங்கள் நாட்டில் வழக்கமில்லை. இவ்வண்ணம் ஓர் ஓலையை கொண்டுவைத்தால் ஒரு நாழிகைக்குள் அது துயில்பவருக்கு தெரிந்துவிடும். அவர்களே விழித்துக்கொள்வார்கள்” என்று ஏவலன் சொன்னான். “எப்படி?” என்று சாரிகர் திகைப்புடன் கேட்டார். “அவர்களிடம் தெய்வங்கள் கூறும் என்பார்கள். அந்த ஓலையின் செய்தியையேகூட அவர்கள் எவ்வகையிலோ அறிந்துவிட்டிருப்பார்கள்.” சாரிகர் “அதெப்படி இயலும்?” என்றார். ஏவலன் “நான் அறியேன். இது எங்கள் நம்பிக்கை” என்றான்.

“நீ எந்த நாட்டைச் சேர்ந்தவன்?” என்று சாரிகர் கேட்டார். “வேசரநாட்டில் ராஜமகேந்திரபுரியின் வீரன் நான்…” சாரிகர் “அத்தனை தொலைவிலிருந்தா?” என்று வியந்த பின் “எப்போது

இங்கே வந்தாய்?” என்றார். “பதினெட்டு நாட்களாகின்றன. அங்கே நான் துறைமுகத்தின் பண்டநிலை காப்பாளனாக இருந்தேன். மேலும் வாய்ப்புள்ள பணிகள் இங்குள்ளன என்று சூதன் ஒருவன் பாடக்கேட்டு வந்தேன்” என்றான் ஏவலன். “இங்கே உனக்கு எவரைத் தெரியும்?” என்று சாரிகர் கேட்டார். “இந்நகரையே நான் ஒருமாதம் முன்புதான் கேட்டறிந்தேன்” என்றான் ஏவலன்.

சாரிகர் “பதினெட்டு நாட்களில் அரண்மனையின் ஏவலனாக ஆகிவிட்டிருக்கிறாய்” என்றார். “இங்கே படைக்கலமேந்தி அரசருக்கு காவல்நிற்பவர்களே எங்கள் ஊர்க்காரர்கள்தான். ஒரு வாரம் முன்பு இந்நகருக்குள் வந்தவர்கள் இருவர் அதிலுள்ளனர்.” சாரிகர் சிரித்துவிட்டார். “சரிதான், தொடங்கிவிட்டால் அதன்பின் அதற்குரிய கணக்குகளே வேறுதான்” என்றார். நீராடி உடைமாற்றி அவர் வந்தபோது அந்த ஏவலன் காத்து நின்றிருந்தான். “இளவரசர் யுயுத்ஸு வந்துவிட்டாரா?” என்று சாரிகர் கேட்டார். “அவர் புலரிக்குப் பின் அறைக்கு திரும்பினார். துயின்றுகொண்டிருக்கிறார். அவருக்கும் அரசரின் அழைப்பு வந்துள்ளது” என்று ஏவலன் சொன்னான்.

சாரிகருடன் செல்லும்போது ஏவலன் அவன் எவ்வண்ணம் தெரிவுசெய்யப்பட்டான் என்று சொன்னான். “என் படைக்கலத்திறனை ஆராய்ந்தனர். என்னால் விசையுடன் கணப்பொழுதில் வேலெறிய முடியும் என்று கண்டனர். என்னிடம் அமைச்சர் சுரேசர் அரைநாழிகைப்பொழுது பேசினார். அரண்மனைக்காவலனாக அமர்த்தினார்” என்றான் ஏவலன். “எங்களூரில் இருந்து பலர் வந்து இங்கே அடுமனைகளில், யானைக்கொட்டில்களில், புரவிக்கொட்டகைகளில் பணிபுரிகிறார்கள்.” சாரிகர் “அனைவரும் மகிழ்ச்சியாக

உணர்கிறார்களா?” என்று கேட்டார். “மகிழ்ச்சியென்றால்…” என்றபின் “மகிழ்ச்சிதான்” என்றான் ஏவலன்.

சாரிகர் “சரி, உங்களில் ஒருவன் இங்கே வாழ்வதைப்பற்றி சொன்ன வேறுபட்ட சொற்றொடர் ஒன்றை சொல்” என்றார். ஏவலன் எண்ணிநோக்கி “வேறுபட்டது என்றால்…” என தயங்கி “என் இளையோன் ஒருவன் இங்கே கோட்டைக்காவலில் இருக்கிறான். அவன் சொன்னான், எப்போதுமே சற்றுமுன் துயிலெழுந்ததுபோல உணர்வதாக” என்றான். சாரிகர் “நல்ல வரி” என்றார். “அவன் இங்கே மகிழ்ந்திருக்கிறான், மேலும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் எதிர்பார்க்கிறான் என்று பொருள்.” “ஆம், இங்கே அவனுக்கு மனைவியும் அமைந்துவிட்டாள்” என்று ஏவலன் சொன்னான். “நீ? உன் மனைவி எங்கே?” என்று சாரிகர் கேட்டார். “அவளையும் உடனழைத்து வந்தேன். அவள் இங்கே ஓர் ஆலயத்தில் பணிபுரிகிறாள்” என்று ஏவலன் சொன்னான். “எங்களுக்கு எட்டு குழந்தைகள். எண்மரும் உடன்வந்துள்ளனர்.”

“இங்கே உங்களை வரத்தூண்டியது எது?” என்று சாரிகர் கேட்டார். “வாய்ப்புகள் எங்கும் உள்ளன.” ஏவலன் “வாய்ப்புகள் மட்டுமல்ல, எங்களுக்கான இடமும் இங்கு உண்டு என்று சொல்லப்பட்டது” என்றான். “இடம் என்றால்?” என்றார். “நாங்கள் அந்தத் தொல்நகரில் அதன் மாறா நெறிகளுக்குள் கட்டுண்டிருந்தோம்” என்று அவன் சொன்னான். “நெறிகள் எங்களை நெரித்து உடைத்தன. அதிலிருந்து விடுதலையே இல்லை என்று தோன்றியது. எந்தையர் வாழ்ந்த அதே வாழ்க்கையே என் மைந்தர்களுக்கும் பெயர்மைந்தர்களுக்கும் என்பதைப்போல சலிப்பும் அச்சமும் ஊட்டும்

பிறிதொன்றில்லை. எண்ணி எண்ணி நோக்கி உள்ளம் ஓயும் வெறுமை அது.”

“இங்கே புதிய வேதம் பிறந்துள்ளது என்றார்கள்” என்று ஏவலன் சொன்னான். “அது மானுடரை அவர்களின் திறன்களின் அடிப்படையிலேயே வகுக்கப்போகிறது என்றார்கள். அதில் நால்வர்ணமும் தன் படைப்பே என்றும், ஆயின் இயல்பு, செயல் ஆகியவற்றாலேயே மானுடரை பகுக்கப்போவதாகவும் தெய்வக்குரல் சொல்வதாக அறிந்தேன். அதுவே இங்கே என்னை வரவழைத்தது. நான் மட்டுமல்ல, இங்கு பெருகி வந்துகொண்டிருக்கும் பல்லாயிரவர் அந்நம்பிக்கையில் வருபவர்களே.” சாரிகர் “அவ்வேதம் எவருடையதென்று அறிவீர்களா?” என்றார். “இல்லை, அவர் யாதவர் என்றும் முனிவர் என்றும் இங்கு வந்த பின்னரே அறிந்தேன்” என்றான்.

யுதிஷ்டிரன் அவருடைய சிற்றறைக்குள் இருந்தார். ஏவலன் சொல்ல காவலன் உள்ளே சென்று ஒப்புதல் பெற்று சாரிகரை உள்ளே அனுப்பினான். ஏவலனின் தோளைத்தொட்டு “நலம்சூழ்க!” என்று வாழ்த்தியபின் சாரிகர் உள்ளே சென்றார்.

யுதிஷ்டிரன் அவருடைய தாழ்வான சிறிய பீடத்தில் அமர்ந்து ஏடு நோக்கிக்கொண்டிருந்தார். அவரைச் சூழ்ந்து பலவகையான பீதர்நாட்டுப் பொருட்கள் பரவியிருந்தன. அவருடைய பார்வைக்காக அயல்வணிகர்கள் கொண்டுவந்து அளித்தவை. வெண்களிமண் பாவைகள், நீலப்பளிங்குக் கலங்கள், சிறிய களிப்பாவைகள், பொன்னணிகள், அரிய படிகக்கற்கள். சாரிகர் அந்தணமுறைப்படி அவரை வாழ்த்தினார். யுதிஷ்டிரன் அவரை அமரும்படி கைகாட்டினார். அவர் அமர்ந்ததும் “துவாரகையில்

என்ன நிகழ்கிறதென்று தெரியவில்லை. அதை பேசவே உங்களை அழைத்தேன்” என்றார்.

சாரிகர் மெல்ல திடுக்கிட்டார். அந்த உரையாடலையே முன்னர் எவரிடமோ நடத்தியதுபோல உணர்ந்தார். “துவாரகையின் செய்திகள் முழுமையாக இங்கே வருவதில்லை. நாம் அந்நகரில் ஒற்றர்கள் என எவரையும் அமைத்திருக்கவில்லை. பேரமைச்சர் விதுரரின் இரு மைந்தர்களும் அங்கேதான் இருந்தார்கள். அவர்கள் அளிக்கும் செய்திகளே நமக்குப் போதுமானதாக இருந்தன. இன்று அவர்களும் நம்முடன் தொடர்பில் இல்லை” என்று யுதிஷ்டிரன் தொடர்ந்தார். அவர் சொல்லவருவதென்ன என்று சாரிகருக்கு புரியவில்லை. அதை தன்னிடம் ஏன் தனியாக சொல்கிறார் என்னும் குழப்பம் அவரிடம் நீடித்தது.

“துவாரகைக்கு முறையான அரசுரிமை கொண்டவர் சத்யபாமையின் மைந்தன் பானு. ஷத்ரியமுறைப்படி முடியுரிமை ருக்மிணியின் மைந்தன் பிரத்யும்னனுக்கு செல்லும். அவன் விதர்ப்பநாட்டுப் படைகளின் ஆதரவை கொண்டிருக்கிறான். அவனுக்கு ஷத்ரிய அரசியரான லக்ஷ்மணை, பத்ரை ஆகியோரின் மைந்தர்களின் ஆதரவு உள்ளது. அவன் அசுரகுலத்து அரசன் சம்பரனை வென்று அவன் மகள் மாயாவதியை மணந்தான். மாயாவதியில் பிறந்த அவன் மைந்தன் அனிருத்தன் பாணாசுரரின் மகள் உஷையை மணந்தான். ஆகவே அவர்களுக்கு அசுரகுலத்தின் ஆதரவும் உள்ளது.”

“சத்யபாமையின் மைந்தர் பானுவுக்கு இளைய யாதவரின் தந்தை வசுதேவரின் ஆதரவும் அவர்களின் மூதாதையரின் ஆதரவும் உள்ளது. ஆகவே விருஷ்ணிகுலத்து யாதவக்குடிகள்

அவனுடன் நிலைகொள்கின்றன. ஆனால் இளைய யாதவரின் தமையன் பலராமன் ஜாம்பவதியின் மைந்தன் சாம்பனை ஆதரிக்கிறார். சாம்பனுக்கு யாதவர்களில் விருஷ்ணிகள் அல்லாத அனைவரின் ஆதரவும் உள்ளது. அங்கே என்ன அரசியல்கூட்டுகள் நிகழ்கின்றன, எவை உருமாறுகின்றன என எந்தத் தெளிவும் இல்லை.”

“ஆம், இவற்றை அறிந்திருக்கிறேன்” என்று சாரிகர் சொன்னார். “இச்சூழலில்தான் அஸ்தினபுரியின் இளவரசி கிருஷ்ணை சாம்பனை மணந்திருக்கிறாள். அவள் உள்ளம் இன்று எந்நிலையில் உள்ளது என்று தெரியவில்லை. ஒவ்வொன்றும் எண்ண எண்ண பெருகுகின்றன” என்று யுதிஷ்டிரன் சொன்னார். அவர் சொல்லவருவதை அணுகிக்கொண்டிருக்கிறார் என்று சாரிகர் உணர்ந்தார். அவருடைய விழிகள் மாறின. “அந்தணரே, நீங்கள் புதியவர். ஆகவே முழுமையாக அறிந்திருக்க வாய்ப்பில்லை. அர்ஜுனனின் யாதவ அரசி சுபத்ரை இப்போது துவாரகையில்தான் இருக்கிறாள் என்பதை அறிந்திருப்பீர்.”

“ஆம்” என்று சாரிகர் சொன்னார். “அவள் அங்கே சென்றது அவள் மைந்தனின் துணைவி உத்தரையின் கருவை பேணும்பொருட்டு” என்றார் யுதிஷ்டிரன். சாரிகர் “ஆம்” என்றார். அவர் செல்லுமிடம் தெளிவாகிவிட்டது, ஆனால் சொல்லப்போவதென்ன என்பது அப்போதும் அவருக்கு குழப்பமாகவே இருந்தது. “உத்தரை விராடநாட்டு இளவரசி. நாங்கள் அங்கே அறியா வாழ்க்கை வாழ்ந்தபோது அர்ஜுனன் அவளுக்கு நடனம் கற்பித்தான்.” அவர் சொல்லெண்ணுவது தெரிந்தது. கண்களில் எடைதூக்குவதுபோன்ற விசை தென்பட்டது.

“விராடர்கள் மச்சர்குலத்தவர்கள். அவர்கள் மிகத் தொன்மையான குலம். பெரும்புயல்களின் தெய்வங்களான நாற்பத்தொன்பது மருத்துக்களை வழிபடுபவர்கள். கஸ்யபருக்கு திதியில் பிறந்த தைத்யர்களான மருத்துக்களிலிருந்தே மச்சர்குலங்கள் பிறந்தன. நாற்பத்தொன்பது மருத்துக்களும் ஆவஹர், பிரபாஹர், பேபாஹர், பரபாஹர், உத்தஹர், சம்பஹர் என்னும் ஆறு குலங்களை சேர்ந்தவர்கள். அவர்களில் முதன்மையான ஆவஹ குலத்தைச் சேர்ந்தவர்கள் விராடர்கள். அவர்களுக்கு பிற ஏழு மச்சர்குலங்கள் மேலும் முழுமையான சொல்கோன்மை உண்டு. மையநிலத்தில் மிகப் பெரிய குலம் மச்சர்களே. நெடுங்காலம் முன்னரே படைதிரட்டி அரசுகளை அமைத்தவர்கள். எண்ணிக்கையில் ஷத்ரியர்களின் படைகளைவிடப் பெரியவை மச்சர் படைகள்.”

“போர் அணுகிவந்துகொண்டிருந்தது. நமக்கு ஷத்ரியர்களின் ஆதரவு இருக்கப்போவதில்லை என்ற எண்ணம் அப்போதே இருந்தது. நமக்கு ஆதரவாக இருந்த பெருங்குலம் யாதவர்கள் மட்டுமே. யாதவர்களிடையேகூட முழுமையான ஒற்றுமை இருக்கவில்லை. ஆகவே எண்ணிக்கையும் ஒற்றுமையும் கொண்ட மச்சர்களின் ஆதரவை தவிர்க்கவே முடியாது என்று எண்ணினோம். அவ்வெண்ணம் அனைத்து ஷத்ரியர்களிடமும் இருந்தது. மகதர்களும் வங்கர்களும் மட்டுமல்ல அஸ்தினபுரியின் அரசன் துரியோதனன்கூட விராடநாட்டு இளவரசியை தன் குடிக்கு மணமகளாகக் கொள்ள விழைந்தான்.”

“அதை உணர்ந்து விராடர் தன் மகளுக்கு மணத்தன்னேற்பை ஒருக்கினார். அது குலமேன்மையை விழையும் அத்தனை அரசர்களும் செய்வது. அவர்கள் இத்தகைய போர்ச்சூழல்களை

பயன்படுத்திக்கொள்வார்கள். அப்போது தங்கள் கூட்டை விழைபவர்களில் உயரிய குடியினரான ஷத்ரிய அரசருக்கு மகளை கொடுத்து குருதியுறவை உருவாக்கிக்கொள்வார்கள். ஆகவேதான் அர்ஜுனன் சென்று உத்தரையை கவர்ந்துவந்தான். அவளுடைய விழைவின்படி அது நடந்தது. அவளே அவன் வருவதற்கான அனைத்தையும் ஒருக்கி அவனுடன் கிளம்பி வந்தாள்.”

“அவள் அர்ஜுனனை மணக்க விழைந்திருக்கலாம்” என்றபோது யுதிஷ்டிரனின் குரல் மேலும் தழைந்தது. “ஆனால் விராடர் அதை விரும்பவில்லை. அர்ஜுனனின் மனைவியர் பலர், பல குடியினர். ஏற்கெனவே ஷத்ரிய அரசியும் யாதவ அரசியும் இருக்கையில் உத்தரை பணிப்பெண் போலவே இருக்கவேண்டியிருக்கும் என்று எண்ணினார். இவை வெளிப்படையாகப் பேசப்படவில்லை. ஆனால் இவையே முதற்சிக்கலாக திகழ்ந்தன. அதை உணர்ந்த அன்னை உத்தரையை அபிமன்யு மணக்கட்டும் என ஆணையிட்டார். வேறுவழியில்லாமல் அனைவரும் அதை ஏற்கவேண்டியிருந்தது.”

அவரை யுதிஷ்டிரன் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். சாரிகர் அவர் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தார். அவர் சாரிகர் எண்ணங்களை மதிப்பிடுகிறார் என்பது புரிந்தது. “அபிமன்யுவும் அவளும் இயல்பாகவே நல்ல இணையாக ஆயினர். அபிமன்யு இளைய அர்ஜுனனைப்போல என்று அறிந்திருப்பீர்.” யுதிஷ்டிரன் புன்னகைத்தபோது அது ஓர் உதட்டு நெளிவு போலவே தோன்றியது. கண்கள் அதே வேவுபார்க்கும் கூர்மையுடன் நிலைத்திருந்தன. “போருக்கு அவன் எழுந்தபோது அவன் குருதி அவளில் முளைவிட்டிருந்தது. ஆனால் அதை எவரும்

அறியவில்லை. அவன் மலர்ச்சூழ்கையில் கொல்லப்பட்ட செய்தியை அவள் அறிந்து நெஞ்சை அறைந்து அலறிவிழுந்தாள். மருத்துவச்சிகள் அவளை ஆற்றியபோதுதான் அவள் கருவுற்றிருப்பதை அறிந்து சொன்னார்கள்.”

“அவளுக்கு பதினாறு அகவை. உலகறியாதவள். உடன்கட்டை ஏறவிரும்பி கதறினாள். நெஞ்சிலறைந்து அழுதாள். அன்னை நிமித்திகரை வரவழைத்து அவள் வயிற்றில் எழுந்த மகவின் ஊழ் என்ன என்று வினவினார். நீளாயுள் கொண்டவன், முடிசூடி நாடாளவிருப்பவன் என்று அவர்கள் கணித்துச் சொன்னார்கள். அச்செய்தியை அவளிடம் உரைக்கும்படி அன்னை ஆணையிட்டார். நிமித்திகர் உரைத்த அச்செய்தி ஒன்றே அவளை அடங்கச் செய்தது. அவள் இந்திரப்பிரஸ்தத்தில் இருப்பது நன்றல்ல என்று இளைய யாதவர் எண்ணினார். அவளை துவாரகைக்கு அனுப்பும்படி ஆணையிட்டார்.”

“கருவுற்றவளை அத்தனை தொலைவுக்கு அனுப்பவேண்டுமா என்று நான் கேட்டேன். போர்ச்செய்திகளை அவள் அறியவே கூடாது என்று ஆணையிட்டார். அவள் முற்றிலும் தனிமையில் சேடியர் சூழ வாழட்டும் என்றார். இங்கே அரண்மனையில் ஒவ்வொரு நாளும் வந்துசேரும் சாவுச்செய்திகள், இருளில் முடங்கும் கைம்பெண்கள் எதையும் அவள் அறியவேண்டியதில்லை. போரில் வீசப்படும் ஒவ்வொரு அம்பும் நுண்வல்லமை கொண்டது. அதன் பருவல்லமை அடங்கினாலும் நுண்விசைகள் இங்கே நீடிக்கும். அவை கருப்புகுந்து குருதிக்குழவிகளையே கொல்லக்கூடும் என்றார்.”

“ஆகவே அவளை உரிய காவலுடன் துவாரகைக்கே அனுப்பினேன். துவாரகைக்கு வெளியே பாலைநிலச் சோலையில் அமைந்த அஸ்வபதம் என்னும் சிற்றூரில் உள்ள

அரண்மனையில் அவள் தங்கவைக்கப்பட்டிருக்கிறாள்” என்றார் யுதிஷ்டிரன். “அது மிகச் சிறந்த முடிவு என உணர்கிறேன். அவளுடைய கரு ஒன்றே இப்போது நீடிக்கிறது. அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் ஒரு வயிற்றில்கூட கருநிலைக்கவில்லை. பல குலங்கள் எச்சமின்றி அற்றுவிட்டன. இனி இங்கே கருநிலைக்காது என்று அஞ்சியே மக்கள் இந்நகர்விட்டுச் செல்கின்றனர்.” யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டார். அவருடைய உள்ளம் எளிதாகியது. இடர்மிக்க ஓரிடத்தை அவர் கடந்துவிட்டார் என்பது தெரிந்தது. அவர் முகம் எளிதாகியது.

“உத்தரை இன்னமும் கைம்பெண்நோன்பு கொள்ளவில்லை. என்ன நிகழ்கிறதென்று அறியாத பேதைநிலையில் இருந்துகொண்டிருக்கிறாள். அவள் கருவில் வாழும் குழவியின் நிலை என்ன என்று தெரியவில்லை. அங்கிருந்து வழக்கமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இப்போது குழவிக்கு ஆறுமாதம் கடந்திருக்கும். இங்கிருந்து அமைச்சர்நிலை கொண்ட எவரேனும் சென்று அவளை பார்க்கவேண்டும். அங்கிருந்து முறைப்படி செய்தியை அறிவிக்கவேண்டும். நீங்கள் உரிய திறன் கொண்டவர், உங்களை அனுப்பலாம் என்று எண்ணினேன்” என்றார் யுதிஷ்டிரன்.

சாரிகர் “ஆணை” என்றார். யுதிஷ்டிரன் மீண்டும் மெல்லிய தத்தளிப்பை அடைந்து “அபிமன்யுவுக்கும் அவளுக்கும் ஒரே அகவைதான் என எண்ணுகிறேன். அல்லது ஓரிரு ஆண்டுகள் வேறுபாடு இருக்கும். அவர்கள் சேர்ந்து வாழ்ந்தது ஆறுமாத காலம். அவளுடைய இழப்பு மிகப் பெரியது” என்றார். “ஆனால் அவள் கருவில் அபிமன்யு மீண்டும் எழுந்திருக்கிறான். அவன் நாடாள்வான் என்று நிமித்திகர் கூறியது

மெய்யாகிவிட்டிருக்கிறது. இன்று குருகுலத்தின் குருதியில் எஞ்சும் உயிர் அவள் வயிற்றிலிருப்பதுதான். அதை அவளிடம் கூறுக!"

சாரிகர் "ஆம்" என்றார். "நீங்கள் கிளம்பலாம். உரியவற்றை சுரேசரிடம் கோருக!" என்றார் யுதிஷ்டிரன். சாரிகர் எழுந்து வணங்கினார். யுதிஷ்டிரன் எழுந்து அவருடன் வாயில் நோக்கி நடந்தபடி "மச்சர்குடியினராயினும் விராடநாடு ஷத்ரியத் தகுதியை முன்னரே அடைந்துவிட்ட ஒன்று. அறிந்திருப்பீர், விராடர் முன்னரே கோசலத்து இளவரசியான சுரதையை மணந்தவர். அதனூடாக அவருடைய குலத்தகுதி மேம்பட்டது. ஆனால் அது அரசியல்சூழ்ச்சிகளால் நீடிக்கவில்லை. சுரதையின் இறப்புக்குப்பின் கேகயத்திலிருந்து சூதர்குலத்தவளாகிய சுதேஷ்ணையை விராடர் மணம்புரிந்தார். அவளுக்குப் பிறந்தவர்களே உத்தரனும் உத்தரையும்" என்றார்.

அவர் சொல்லவருவதை புரிந்துகொள்ளும் பொருட்டு சாரிகர் நின்றார். யுதிஷ்டிரன் "நான் இயல்பாக இதை சொல்கிறேன். மரபுகளின்படி உத்தரையை கோசலத்து ஷத்ரியகுடியின் அரசி சுரதையின் மகள் என்றும் சொல்லலாம். இளமைக்காலத்தில் அவள் கோசலத்தில் இருந்ததாக விராடநாட்டுச் சூதன் ஒருவன் சொன்னான்" என்றார்.

சாரிகர் அப்போதும் அவர் சொல்லவருவதை புரிந்துகொள்ளவில்லை. அவர் கேட்ட சொற்களெல்லாம் அவருள் ஒட்டுமொத்தமாக குவிந்துகிடந்தன. யுதிஷ்டிரன் அவர் அருகே வந்து "சென்றுவருக, செய்திகளை முறையாக தெரிவியுங்கள்!" என்றார். அவர் தலைவணங்கினார். "நூல் எழுதுவீரா?" என்றார் யுதிஷ்டிரன். "நானா?" என்று சாரிகர் திகைப்புடன் கேட்டார். "அந்தணர்களில் நூலெழுதும் விழைவு

இல்லாதவர்கள் இல்லை, ஆகவேதான் கேட்டேன்” என்று யுதிஷ்டிரன் புன்னகைத்தார். “நீங்கள் நூலெழுதும் தகுதி கொண்டவர். வேள்விப்பரிகளின் நகர்வு நீங்கள் எழுதாத காவியம். நான் அதில் பல நாட்கள் வாழ்ந்தேன்.”

சாரிகர் புன்னகைத்து தலைகுனிந்தார். யுதிஷ்டிரன் அவர் தோளை தட்டி “உங்கள் நூலை படிக்கும் ஆவல்கொண்டிருக்கிறேன்” என்றார். அவர் மீண்டுமொருமுறை வணங்கி வெளியே சென்றார்.

# களிற்றியானை நிரை - 21

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 4**



சாரிகர் சுரேசரின் அறைக்கு வெளியே காத்து நின்றார். அவர் உள்ளே அவரைச் சூழ்ந்திருந்த ஒற்றர்களிடம் ஆணைகளை பிறப்பித்துவிட்டு தலைநிமிர்ந்து அவரை நோக்கினார். மேலும் ஆணைகளை பிறப்பித்துவிட்டு தன் முன் குவிந்திருந்த ஓலைகளை மொத்தமாக அள்ளி அப்பால் தள்ளிவிட்டு அவரிடம் “வருக!” என்றார். சாரிகர் உள்ளே சென்று அவரை வணங்கினார். “ஆணை வந்தது” என்று சுரேசர் சொன்னார். “நீ இன்றே கிளம்பலாம். இங்கிருந்து அவந்திவரை விரைவுத்தேர். அங்கிருந்து பாலையைக் கடக்கும் வண்டிகள். பதினெட்டு நாட்கள் இயல்பான விரைவில். குறையவும் கூடும்.”

“நான் அரசரிடம் பேசிக்கொண்டிருந்தேன்” என்று சாரிகர் சொன்னார். “நான் அங்கு செய்யவேண்டியதென்ன என்று அவர்

சொன்னார். ஆனால் அதில் ஓர் அமைச்சர் செய்யவேண்டிய எதுவுமில்லை. எளிய ஒற்றர்களே செய்யக்கூடுவன அவை.” “அவ்வாறு எண்ணாது ஒன்றைச் செய்பவர் அல்ல யுதிஷ்டிரன்” என்றார் சுரேசர். “அவருக்கான கணிப்புகள் பல உள்ளன. அதை அவருடைய சொற்களில் இருந்து உணரமுடியும்.” சாரிகர் “என்னால் உணரக்கூடவில்லை” என்றார்.

சுரேசர் ஒருகணம் புன்னகையுடன் அமைந்து பின் “அறுதியாக என்ன சொன்னார்?” என்றார். “கிளம்பிச்சென்று நோக்கி செய்தி அனுப்பும்படி” என்றார் சாரிகர். “அதற்குப் பின்? குறிப்பிடும்படி அல்லாமல் எனத் தோன்றும்படி?” என்றார் சுரேசர். சாரிகர் எண்ணிநோக்கி முகம் மலர்ந்து “நூல் யாக்கும்படி சொன்னார். எல்லா அந்தணர்களுக்கும் அவ்விழைவு இருக்கும் என்றார்” என்றார். பின்னர் வாய்விட்டு நகைத்து “நான் அஸ்வமேதம் பற்றி உருவாக்கிய கதைகளைப் பற்றி சொல்லி என்னை ஒரு காவிய ஆசிரியன் என்றார்” என்றார்.

“அவர் சொன்னது அதைத்தான்” என்றார் சுரேசர். “எதை?” என்று சாரிகர் ஐயத்துடன் கேட்டார். “நீ துவாரகைக்குச் செல்வது காவியம் எழுதத்தான்” என்றார் சுரேசர். “எதைப் பற்றி?” என்று மீண்டும் சாரிகர் கேட்டார். “அவர் அதைப் பற்றித்தான் உன்னிடம் பேசியிருப்பார். அக்காவியத்தின் உள்ளடக்கம் என்ன, அது எதை முன்னிலைப்படுத்தவேண்டும் என்று. அதன் நோக்கமென்ன என்றுகூட சொல்லியிருப்பார்.” சாரிகர் கைகள் நடுங்க விரல்களை கோத்துக்கொண்டார். அவர் முகம் சிவந்து கண்களில் நீர் கோத்தது. “என்ன?” என்றார் சுரேசர். “ஒன்றுமில்லை” என்று சாரிகர் சொன்னார்.

“நீ என்ன எண்ணுகிறாய் என்று புரிகிறது” என்றார் சுரேசர். “நீ அக்காவியத்தை எழுதாமல் அப்படியே அகலலாம். வேறு

ஏதேனும் நாட்டைத் தேடிச்செல்லலாம். இங்கிருந்து வெளியேறுவதை அதற்கான வாய்ப்பாகக் கொள்ளலாம்.” சாரிகர் நடுங்கும் உதடுகளைக் கடித்தபடி அமர்ந்திருந்தார். “அவர் தனக்கான அரசியல் தேவையை சொல்கிறார். நீ காவியம் எழுதினால் அது இங்கே அரங்கேற்றப்பட்டு நாவுகளில், நினைவுகளில், வரலாற்றில் நிலைநிறுத்தப்படும் என்கிறார்” என்று சுரேசர் சொன்னார்.

சாரிகர் சீற்றம் மிக்க ஒலியுடன் எழுந்துகொண்டார். “ஏன்?” என்று சுரேசர் இளிவரல் நகைப்புடன் கேட்டார். “நான் சொல்லை வணிகம் செய்பவன் அல்ல” என்று அவர் கூவினார். “நான் பொய்யன் அல்ல… நான் நூல் கற்றது அறிவை அடிமையாக விற்பதற்கு அல்ல.” சுரேசர் “ஒன்றையே மும்முறை சொல்கிறாய், கவிஞன் ஆகிவிட்டாய்” என்றார். “அவர் சொன்னது அவருடைய தேவையை. அது அரசராக அவருடைய கடமை. அதை நீ ஏற்கலாம், அல்லது அஸ்தினபுரியை துறக்கலாம். உன்னை எவரும் தொடர்ந்து வரப்போவதில்லை” என்றார் சுரேசர்.

“நான் மெய்யை எழுதினால்?” என்று உடைந்த குரலில் சாரிகர் கூவினார். “மெய்யை முன்வைத்தால் என்ன செய்வார்கள்?” என்று மேலும் உரக்க கூச்சலிட்டார். “ஒன்றும் செய்யமாட்டார்கள். உன்னுடைய காவியம் வழக்கொழியும்படி இன்னொன்றை எழுதச்செய்து பரப்புவார்கள். உன்னுடைய காவியத்தை எவரும் நினைவில் நிறுத்தாமல் செய்வார்கள். அவ்வண்ணம் அழிந்துபோன பல்லாயிரம் நூல்கள் இங்குண்டு” என்றார் சுரேசர். “நானறிந்தவரை நூல்கள் வரலாற்றில் தங்குவது அவற்றின் தகுதியால் அல்ல, அவற்றின் தேவையால்தான்.”

சாரிகர் "என் நூலும் அழியட்டும். நான் மறக்கப்படட்டும். ஆனால் நான் உண்மையைத்தான் எழுதுவேன். அதை எழுதும்பொருட்டே துவாரகைக்கு செல்கிறேன். அதை குறுங்காவியமென யாத்து இங்கே வைக்கிறேன். உண்மைக்கு நிலைகொள்ளும் ஆற்றல் உண்டு எனில் அது வாழட்டும்" என்றார். சுரேசர் "நீ உன்னை மதிப்பிட்டுக்கொள்ள விழைகிறாய்" என்றார். "இல்லை, என்னை பிறர் மதிப்பிட்டிருப்பதை மறுக்கிறேன். என்னை பொய்யன் என்று மதிப்பிட்டிருக்கிறார். தன்னலம் நோக்கி சொல்லாளுபவன் என என்னிடமே சொல்கிறார்" என்று சாரிகர் சொன்னார். குரல் தழைய "என் பிழை... நான் விளையாட்டுக்கு என் கற்பனையை விரித்தேன். அது இப்படியாகுமென எண்ணவில்லை" என்றார்.

சுரேசர் "நான் இதில் ஒன்றும் சொல்ல விழையவில்லை. இது உனக்கு ஊழ் அளிக்கும் ஒரு வாய்ப்பு. இதில் நீ எவ்வண்ணம் வெளிப்படுகிறாய் என்பதே உன்னை வகுக்கவிருக்கிறது. உன்னிடமிருந்து எது வருகிறது என என்னால் இப்போது கூற இயலாது. உன்னாலும்கூட இயலாது. செல்க, உனது உள்ளம் செலுத்தும் திசையை தேர்க!" என்றார். சாரிகர் தலையை பற்றிக்கொண்டார். அவர் உடல் மெல்ல தளர்ந்தது. அவர் அகத்தில் எச்சொல்லும் நிற்கவில்லை. உடைந்து அழுதுவிடுவோம் என்று தோன்றியது. அழாமலிருக்கும் வழியென்பது நிலத்தை வெறுமனே கூர்ந்து நோக்கி அமர்ந்திருப்பதுதான் என எண்ணினார்.

"நீ கிளம்புவதற்குரிய அனைத்தையும் ஒருக்க ஆணையிட்டிருக்கிறேன். நீ உன் அறைக்கு செல்லலாம். அங்கே தனிமையில் இருந்து இந்த உளக்கொந்தளிப்பு அடங்கும்வரை காத்து எண்ணம் ஓட்டலாம். கிளம்பிய

பின்னரும்கூட உனக்கு பொழுதுள்ளது. துவாரகை வரை செல்லும் காலம் நீ தனிமையில்தான் இருப்பாய்” என்றார். “ஆனால் எதுவாயினும் நீ செய்வன அனைத்துக்கும் முழுப் பொறுப்பை எடுத்துக்கொள். பிறரையோ ஊழையோ தெய்வங்களையோ குற்றம்சாட்டாதிரு.”

சாரிகர் தலைவணங்கி எழுந்துகொண்டார். “உனக்கான ஓலையை எழுத சுதமனிடம் ஆணையிட்டிருக்கிறேன், பெற்றுக்கொள்” என்றார் சுரேசர். சாரிகர் அவரை சில கணங்கள் நோக்கிவிட்டு “அமைச்சரே, இதற்கு என் பெயரை நீங்கள் சொல்லவில்லை அல்லவா?” என்றார். சுரேசர் வாய்விட்டு நகைத்து “கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். ஆனால் அவரே மதிப்பிடும் திறன்கொண்டவர். அவருடைய சொற்களின் தெரிவிலும் இணைப்பிலும் இருந்த நுட்பத்தை நீயே உணர்ந்திருப்பாய்” என்றார். சாரிகர் மீண்டும் தலைவணங்கி வெளியே சென்றார்.

அவர் வெளியே சென்று சற்று தயங்கியபின் சுதமனின் அறை நோக்கி சென்றார். அவர் அங்கே ஏடுகளை அடுக்கிக்கொண்டிருந்தார். சாரிகரைக் கண்டதும் புன்னகைத்து “இன்றே கிளம்புகிறீர் போலும்” என்றார். “ஆம்” என்று சாரிகர் சொன்னார். களைப்புடன் அவர் முன் பீடத்தில் அமர்ந்தார். “என்ன சோர்வு?” என்றார் சுதமன். “ஒன்றுமில்லை” என்றார் சாரிகர். “நீண்ட பயணம், ஆயினும் நன்று. துவாரகை அரிய பெருநகர். அதை சென்றுபார்க்க வாய்ப்பு கிடைக்கிறது எனில் சிறப்பு” என்றார் சுதமன். “நான் செல்வதை விரும்புகிறேன். ஆனால் பிறருடைய ஆட்டங்களில் காயாக அமைவதை வெறுக்கிறேன்” என்றார் சாரிகர். “எவராயினும் பிறருடைய களங்களில் காயாக மாறியே ஆகவேண்டும்… நம்மை

நம்மைவிடப் பெரியவர்கள் வைத்து ஆடுவதை தவிர்க்கவே முடியாது” என்றார் சுதமன்.

“நான் ஆடுகிறேன்... இக்களத்தில் நான் அனைவரையும் வைத்து ஆடுகிறேன்” என்று சாரிகர் கூவினார். சுதமன் சுற்றிலும் நோக்கிவிட்டு “மெல்ல” என்றார். “என்ன ஆயிற்று?” என்று தணிந்த குரலில் கேட்டார். “ஒரு பொய்வரலாற்றை உருவாக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறேன்” என்றார் சாரிகர் . முகம் மலர்ந்து “வரலாற்றை உருவாக்கும்படியா? நன்றல்லவா அது? எவ்வளவு பெரிய பொறுப்பு!” என்றார் சுதமன். “பொய் சொல்வதா?” என்று சாரிகர் கூவினார். “பொய்யா மெய்யா என எவருக்குத் தெரியும்? நாமறிந்த வரலாறுகளை நாம் சரிபார்க்கவா இயலும்? பயனுள்ளவை நீடிக்கின்றன” என்றார் சுதமன்.

“எவருக்குப் பயனுள்ளவை?” என்று கூவினார் சாரிகர். “மெல்ல...” என்று சொன்னார் சுதமன். “ஏன் கூச்சலிடுகிறீர்? இங்கே எவரும் உரக்கப் பேசுவதில்லை” என்று சொல்லி “பயனுள்ளவை என்றால் அனைவருக்கும்தான். ஆள்பவர்களுக்கும் செல்வம்கொண்டவர்களுக்கும் பயனுள்ளவை மட்டுமே நிலைநிறுத்தப்படுகின்றன என்று சொல்வோம். அது மெய்யல்ல. ஆளப்படுபவர்களுக்கும் செல்வந்தர்களுக்கு பணிசெய்பவர்களுக்கும் அதில் நன்மை இல்லை என்றால் அது ஏற்கப்படாது. அவர்கள் இருவரும் ஒரு களத்தின் இரு பக்கங்களிலும் இருந்து ஆடுகிறார்கள். அவர்களுக்குப் பொதுவான ஒன்று திரண்டு வந்து நிற்கும். அதுவே ஏற்கப்படும்” என்றார்.

சாரிகர் “நான் என் உளமறிந்த உண்மையை சொல்கிறேன். எந்தத் தயக்கமும் இன்றி. எதன் முன்னும் அச்சமும் கூச்சமும்

இன்றி. இங்குள்ள மானுடர் எளியோர். இன்றிருந்து நாளை மறைவோர். மெய்மை அவர்களினூடாக செல்லும் காலப்பெருக்கு. அதை முன்வைக்கிறேன். அதன்பொருட்டே கிளம்பிச் செல்கிறேன்” என்றார். சுதமன் “நீர் எதன் பொருட்டு அனுப்பப்படுகிறீர் என ஓரளவு என்னால் உய்த்தறிய இயல்கிறது. அது தனிமானுடர் சிலரைப் பற்றியது. மெய்மை அவர்களை கொல்லும் நஞ்சாகலாம்” என்றார். “ஆம், சில தருணங்களில் மெய் அவ்வாறு விண்ணிலிருந்து பெய்யும் அனல்மழையாக இருக்கக்கூடும். ஆனால் நான் அறிந்ததை சொல்வேன். அதுவே என் கடன். இத்தருணம் எனக்காக அமைக்கப்பட்டதே அதன் பொருட்டுத்தான் என உணர்கிறேன்.”

“நன்று, நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை” என்றார் சுதமன். அவர் நீட்டிய ஓலையைப் பெற்று விரித்துப் படித்து மீண்டும் மூங்கில்குழாய்க்குள் போட்டு மூடி கையிலெடுத்துக்கொண்டு சாரிகர் தலைவணங்கி வெளியே சென்றார். அங்கே வந்ததே அவ்வறிவிப்பை இன்னொரு முறை சொல்லிக்கொள்ளத்தான் என்று தோன்றியது. சுரேசரிடம் சொல்லும்போது அதை பிறரிடம் சொன்னார், இப்போது தன்னிடமே. அவர் ஆம் ஆம் என தனக்குத்தானே சொல்லிக்கொண்டு சென்றார். சொல்லச்சொல்ல உள்ளம் உறுதியடைந்தது.

சாரிகர் அன்று மாலையே கிளம்பிச்செல்ல முடிவெடுத்தார். வழக்கமாக புலரியில்தான் நெடுந்தொலைவுப் பயணங்களை தொடங்குவார்கள். ஆனால் அவரால் அங்கிருந்து கிளம்பும் முடிவை எடுத்தபின் அங்கேயே நீடிக்க முடியவில்லை. தன் அறையில் அமர்ந்தும் எழுந்து உலவியும் படுத்தும் புரண்டு எழுந்தும் அலைகொண்ட பின் கிளம்பும்

முடிவை எடுத்து ஏவலனிடம் சொன்னார். அவர் ஆடையணிந்து தன் பேழையுடன் முற்றத்திற்கு வந்தபோது எட்டு புரவிவீரர்கள் தேருடன் ஒருங்கி நின்றிருந்தனர். அவர் ஏறி அமர்ந்துகொண்டார். “செல்க!” என ஆணையிட்டதும் தேர் உலுக்கிக்கொண்டு கிளம்ப அவர் அகம் திடுக்கிட்டது. அவர் அந்நகரிலிருந்து காம்பு இற்று உதிர்வதுபோலத் தோன்றியது.

தேர் கோட்டைமுகப்பைக் கடந்து வெளியே சென்றபோது அவர் திரும்பி அஸ்தினபுரியை நோக்கிக்கொண்டிருந்தார். அக்கனவு நினைவுக்கு வந்தது. அதில் தெரிந்தது போலவே அஸ்தினபுரி கருமைகொண்டு பழைமையாகத் தெரிந்தது. ஒளிப்பந்தங்கள் அலையடிக்க அகன்று அகன்று மறைந்தது. அவர் துவாரகையை கண்முன் கொண்டுவர முயன்றார். அதை அவர் நூல்களில் படித்தும் கதைகளில் கேட்டும் அறிந்திருந்தாலும் எண்ணத்தில் தொகுக்க முடியவில்லை. அவர் கண்களை மூடிக்கொண்டு அன்று நிகழ்ந்தவற்றை தன்னுள் ஓடவிட்டார். எந்த உளச்சித்திரமும் அகத்தில் எழவில்லை. ஆனால் தன்னை அவ்வாறு கூர்ந்து நோக்க நோக்க அகம் அமைதியடைந்தது. அதுவரை உடலை பதறச் செய்திருந்த அலைகள் அமைந்தன. அவர் ஆழ்ந்து உறங்கத் தொடங்கினார்.

காலையில் விழித்துக்கொண்டபோது உள்ளம் தெளிந்திருந்தது. முந்தையநாளின் உளக்கொந்தளிப்புகள் எல்லாம் எங்கோ என அகன்றிருந்தன. அந்த உளக்கொந்தளிப்புகளை எண்ணுந்தோறும் வேடிக்கையாகவும் இருந்தது. எதன்பொருட்டு அந்த உணர்வுகள்? அவரிடம் ஓர் அரசர் என்ன கேட்கமுடியுமோ அதுவே கேட்கப்பட்டது. அவ்வரசரின் ஊழியர் அவர். அவருக்கு ஆணையிட அவருக்கு உரிமை உண்டு. தலைப்பாகை அணிந்து அரசிடம் ஊழியம் செய்ய வரும் அந்தணன் தன்

அந்தண்மையில் ஒருபகுதியை இழந்துவிடுகிறான். வேதமன்றி எதற்கும் பணியாதவன், தன் சொல்லுக்கன்றி எதையும் ஆற்றாதவனே அந்தணன். எந்நிலையிலும் பின்னகர்ந்து தன் கடனை மேற்கொள்ள அவருக்கு உரிமை இருக்கிறது. பாரதவர்ஷத்தில் எவரும் அதை தடுக்கப்போவதில்லை.

அதை எவ்வகையிலும் எதிர்மறை எண்ணத்துடன் செய்யவேண்டியதில்லை. இது ஒரு வாய்ப்பு. இது வரலாற்றின் ஒரு துளியை மொழியில் பொறிக்கும் வாய்ப்பு. அதை காய்தல், உவத்தல் இன்றி செய்யலாம். எவருக்கும் அறைகூவலாக அல்ல. ஒரு பார்வையாளனாக. அவர் உள்ளம் தெளிந்துகொண்டே இருந்தது. அதன்பின் அவர் சூழ ஓடிக்கொண்டிருந்த காட்சிகளை பார்க்கலானார். மண்சாலைக்கு இருபுறமும் குறுங்காடு செறிந்திருந்தது. நூற்றுக்கணக்கான கொடிகள் தளிர்ச்சுருட்களை நீட்டி நின்றிருந்தன. மேலே கிளைகள் செல்லும் வண்டிகளின் விளிம்புகளால் சதுரமாக வெட்டப்பட்டிருந்தன.

சாலையோரத்தில் பாறைகளிலோ அல்லது நடப்பட்ட கற்பலகைகளிலோ அங்கிருந்து கிளைபிரிந்து செல்லும் ஊர்களின் பெயரும் அங்குள்ள மக்களின் குலச்சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அவர் அக்குலச்சின்னங்கள் ஏன் என்று எண்ணினார். மீண்டும் மீண்டும் நோக்கியபோது அவை அவர்களின் தொழில்களைக் காட்டுவன என்று தெரிந்தது. ஆயர்களுக்கு கன்றுகளின் கொம்புவளைவு வடிவங்கள். உழவர்களுக்கு மேழி. எண்ணைச்செக்கு, இரும்புலை என ஒவ்வொரு வடிவமும் அங்கே என்ன விற்கப்படும் எவை வாங்கப்படும் என்பதை காட்டின. சாலையில் வந்துகொண்டிருந்த வண்டிகளில் இருந்த வணிகர்கள்

அவற்றைக்கொண்டே அத்திசை நோக்கி திரும்பினர். அவர்கள் தங்கள் குழல்களை முழக்கி வருகையை ஊர்களுக்கு அறிவித்தனர். எல்லா வணிகவண்டிகளுடனும் வில்லும் வேலுமேந்திய காவலர் சென்றனர்.

சில இடங்களில் சாலையோரங்களிலேயே ஊர்கள் இருந்தன. ஊர்முகப்பில் மரத்தாலான பெரிய நுழைவாயிலும் அதற்குமேல் கோபுரமும் இருந்தன. மேலே உயரமான கம்பத்தில் அவ்வூரின் கொடி பறந்தது. ஊர்க்கோபுரங்களில் எச்சரிக்கை முரசுகளுடனும் அறிவிப்புக் கொம்புகளுடனும் எந்நேரமும் காவலர் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அணுகும் வண்டிகளுக்கு தொலைவிலேயே கொம்பூதி ஆணையிட்டனர். எல்லா ஊர்களிலும் புரவிக்காவலர் இருப்பதை அவர் கண்டார். ஊர்களுக்கு வெளியே காடுகளின் தொடக்கத்திலேயே உறுத்த விழிகளும் ஓங்கிய படைக்கலங்களுமாக காவல்தெய்வங்கள் நின்றிருந்தன.

நோக்கி நோக்கி அவர் அனைத்தையும் மறந்துவிட்டார். எங்கிருந்து கிளம்பினோம் எங்கே செல்கிறோம் என்பதை அவர் நினைக்கவேயில்லை. அந்தி சாய்வதற்கு முன்னரே சாலையோரத்து விடுதியொன்றில் அவர்கள் தங்கினர். அவருக்கு ஒரு தனி அறை அளிக்கப்பட்டது. அந்தணர் ஒருவர் அவருக்கான உணவை சமைத்து அளித்தார். நீண்ட பயணத்தின் அலுப்புக்குப் பின் சூடான உணவு இனிதாக இருந்தது. அவர் படுத்ததுமே துயின்று மறுநாள் புலரியில் விழித்தபோது உடல் புதிதாகப் பிறந்தெழுந்ததுபோல் இருந்தது. விழிகள் தெளிந்திருந்தன. அந்தக் காலைவேளையைப்போல இனிய ஒன்றை முன்பு அறிந்திருந்ததே இல்லை என்று தோன்றியது.

நீராடச் சென்றபோது பயணிகள் மெல்லிய குரலில் பேசிக்கொண்டே காடுகளுக்குள் செல்வதை அவர் கண்டார். அவர்கள் நிழலுருக்களாகத் தெரிந்தனர். சிலர் மெல்ல சிரித்தனர். நீர் குளிர்ந்து இருளுக்குள் ஒளியுடன் ஓடியது. நீராடி எழுந்தபோது ஏனோ இரு கைகளையும் விரித்து ஆர்ப்பரிக்கவேண்டும் என்று தோன்றியது. அவர் திரும்பி வந்தபோது சிரித்துக்கொண்டிருந்தார். நாவில் ஏதோ மெட்டு ஓட சரிவான மண்ணில் துள்ளி பாய்ந்தேறினார். நின்று நோக்கிவிட்டு பாய்ந்து கீழிறங்கி மீண்டும் துள்ளி ஏறினார். அவரைக் கடந்துசென்ற முதிய வணிகர் ஒருவர் நோக்கி புன்னகைத்துவிட்டுச் சென்றார். அவருடைய நோக்கு தன் மேல் பட்டதும் சாரிகர் கூச்சத்துடன் நின்றார். அவருடைய இனிய புன்னகை ஊக்கம் அளிக்க கையை வீசி ஓடி தாழ்வான கிளை ஒன்றைப் பற்றி தொங்கி ஊசலாடி இறங்கினார். தலைக்குமேல் மலர்கள் கொட்டின. கீழே உதிர்ந்த மலர்களில் கால் வைக்காமல் அப்பால் சென்றார். அவர் தலைமேல் மஞ்சள்நிறமான சிறிய மலர்கள் உதிர்ந்திருந்தன. அது என்ன மரம் என அவருக்குத் தெரியவில்லை.

அவர் அந்த மலரை கையிலெடுத்தபடி நடந்தார். அந்த மலரின் பெயர் என்ன என்று எவரிடமேனும் கேட்கவேண்டும். ஆனால் அந்தக் காட்டிலுள்ள எந்த மரத்தின் பெயரும் அவருக்கு தெரிந்திருக்கவில்லை. எந்தச் செடியையும் அடையாளம் காணக்கூடவில்லை. மேலே ஓசையிட்டுக்கொண்டிருந்த பறவைகளில் எதன் குரலையும் பிரித்தறிய முடியவில்லை. சூழ்ந்திருக்கும் இந்த வாழ்க்கையில் நான் அறிந்திருப்பதுதான் என்ன? நான் இதுகாறும் அமர்ந்து கற்றவற்றைக்கொண்டு இக்காட்டில் ஒரு சிறுபகுதியைக்கூட என்னால் அறியமுடியாது என்றால் அந்நூல்களின் பயன் என்ன?

அவர் ஓர் அலை என வந்தறைந்த அஸ்தினபுரியின் நினைவால் அசைவற்று நின்றார். மிகமிக அப்பால், மிகமிக மங்கலான நினைவாக அப்பெருநகரை நினைவுகூர்ந்தார். கிளம்பி ஒருநாள்கூட ஆகவில்லை. அதற்குள் அதை மறந்துவிட்டிருக்கிறேன். இருபதாண்டுகாலம் நான் பயின்றதெல்லாம் அந்நகரைச் சென்றடைய, அங்கே சிறப்புகொள்ள தேவையானவை மட்டுமே. அங்கு நின்று நோக்கியபோது அந்நகர் மிகச் சிறிய ஒரு கோப்பை என்று தோன்றியது. ஆமையின் ஓடுபோல. ஆமை தன்னால் உதறமுடியாத இல்லத்தைச் சுமந்து அலைவது. விடமுடியாவிடில் அது வீடே அல்ல சிறை. சிறைக்குள்ளேயே பிறப்பது, வாழ்நாளெல்லாம் தன்னுடன் சிறையை கொண்டுசெல்வது.

“ஆமைகள், ஆமைகள்” என்று அவர் தனக்குள் சொல்லிக்கொண்டிருந்தார். அவ்வாறு ஒரு சொல் தன்னுள் ஓடிக்கொண்டிருந்ததை உணர்ந்ததும் திகைத்து பின்னர் புன்னகையுடன் “ஆமை ஆமை” என்று சொல்லிக்கொண்டார். என்ன பொருள் அதற்கு? நாகம் வளரமுடியும், தன் தோலை உரித்து அகற்றமுடியும். ஆமையால் இயலாது. உதறமுடியாத எதுவும் பெருஞ்சுமையே. புலரியிலேயே விடுதி முற்றிலும் உயிர்கொண்டுவிட்டிருந்தது. முதலொளி எழுகையில் பெரும்பாலானவர்கள் நெடுந்தொலைவு சென்றுவிட்டிருப்பார்கள். வெயிலுக்கு முன் செல்லும் தொலைவே நாளின் பயணத்தில் பெரும்பகுதி. உண்மையில் அதுவே இனியதும்கூட. அந்தியின் இருளை அஞ்சுபவர்கள் காலையிருளில் மகிழ்ந்தனர். இக்கருமை எழும் ஒளியின் வண்ணம்.

விடுதியின் அந்தண ஏவலன் கோட்டப்பட்ட பனம்பாளையில் சூடான கஞ்சியை கொண்டுவந்து வைத்தான். இன்கிழங்கும் கனிகளும் போடப்பட்ட கஞ்சி மூக்கை நிறைத்து நாவூறச் செய்தது. அவர் கோட்டிய இலையால் அதை அள்ளி குடித்தார். உண்டு முடித்து கைகழுவிக்கொண்டிருந்தபோது அந்தண ஏவலன் அருகே வந்து நின்றான். அவர் ஒரு செம்புநாணயத்தை அவனுக்கு பரிசாக அளித்து "இனிய உணவு" என்றார். அந்தணன் புன்னகைத்து "பயணிக்கு எல்லா உணவும் இனிதே என்று சொல்லப்படுவதுண்டு" என்றான்.

"மெய்" என்று அவர் முகம் மலர்ந்து சொன்னார். "நேற்று உச்சிப்பொழுதில் நான் உலர்ந்த அப்பத்தை நீரில் தோய்த்து உண்டேன். அதுவும் சுவையுடன் இருந்தது." அந்தண ஏவலன் "அது பயணத்தின் சுவை" என்றான். அவர் வாய்விட்டு நகைத்து "உண்மையில் பயணத்தைத் தொடங்கியதுமே நான் உருமாறத் தொடங்கிவிட்டேன். ஒவ்வொரு இடத்திலும் என் உடலை விட்டு வெளியேறி பிறிதொருவனாக மேலே செல்கிறேன். என் கண்களும் காதுகளும் புதியனவாகிவிடுகின்றன. உள்ளச்சொற்கள்கூட முற்றிலும் மாறிவிடுகின்றன" என்றார்.

"தேங்கும் மூச்சை இழுக்காதொழிக என்று ஒரு பழமொழி எங்களூரில் உண்டு" என்று அந்தண ஏவலன் சொன்னான். "ஓர் ஊரிலேயே வாழ்பவன் தான் விட்ட மூச்சை திரும்ப இழுப்பவன்." சாரிகர் "நீர் பயணத்தில் இருக்கிறீரா?" என்றார். "ஆம், நான் மாளவத்திலிருந்து கிளம்பிச் செல்கிறேன்" என்றான். "செல்லும் வழியில் இவ்வண்ணம் விடுதிகளில் சிலநாட்கள் தங்குவேன். இங்கே அந்தண அடுமனையாளர்களுக்கு எப்போதுமே பணி உண்டு. பொருள் சற்று சேர்ந்ததும் கிளம்பிவிடுவேன்."

சாரிகர் “எங்கே செல்கிறீர்?” என்று கேட்டார். “எங்குமில்லை. நான் விழைவது புதிய மூச்சு மட்டுமே” என்று அவன் சொன்னான். சாரிகர் ஒருகணம் மெய்ப்புகொண்டார். “புதிய மூச்சு!” என்றார். அந்தண ஏவலன் புன்னகைத்தான். அவர் புதிய மூச்சு புதிய மூச்சு என்று தனக்குள் சொல்லிக்கொண்டே இருந்தார். அந்தண ஏவலன் தலைவணங்கி அப்பால் சென்று “என்றும் புதிய மூச்சு, ஒருபோதும் விட்ட மூச்சை திரும்ப இழுப்பதில்லை” என்றபின் விடுதிக்குள் சென்றான்.

தேரிலேறிக்கொண்டபோது சாரிகர் இனிய கனவொன்றிலிருந்து முழுக்க விழித்தெழாதவர் போலிருந்தார். தேர் மிதந்ததுபோல மண்சாலையில் சென்றது. இருபுறமும் மலர்க்காடுகள் வந்துகொண்டிருந்தன. அவற்றின்மேல் காலையொளி எழுந்தது. சிறுபூச்சிகள் பொற்றுகள்கள் என ஒளிவிட்டபடி மலர்ச்செண்டுகளில் இருந்து எழுந்து சுழன்றன. மலர்கள் உருகிச் சொட்டும் பொன் என உதிர்ந்தன. குளிர்காற்றில் இலைகள் பளபளத்து அசைந்தன. மென்னொளி நீர் என ஆகி அவற்றின் பரப்புகளில் வழிந்தது.

சிறு கீரி ஒன்று மென்மையான முடிப்பிசிறுகளுடன் வாலைத் தூக்கியபடி சாலைக்குக் குறுக்கே ஓடியபோது அவர் உள்ளம் அந்தப் பூமயிர் பரப்பின் மென்மையை மிகமிக நுண்மையாக உணர்ந்து சிலிர்த்தது. கூசுவதுபோல விதிர்த்து உடல் மெய்ப்பு கொண்டது. பற்கள் கிட்டித்தன. கைவிரல்கள் சுருட்டி உள்ளங்கையில் அழுந்தப் பதிந்தன. உடல் இனிமையில் திளைக்கும் நாவென மாறியிருந்தது. இனிய ஒளி, இனிய காடு, இனிய காற்று. இத்தருணத்தின் இனிமை. இது என் புதிய மூச்சு.

செம்மண்புழுதி படிந்த சாலையில் காலடிகள் பதிந்து கிடந்தன. அக்காலடிகளை தன் மேல் ஏற்றி மீண்டும் அவர் உடல் மெய்ப்புகொண்டது. ஓர் வலிப்பு எழுந்து அமைந்தது. நினைவிழந்தவர்போல விழிகள் திறந்து வெளிக்காட்சியை வெறித்திருக்க, கண்ணீர் வழிய அவர் தேர்த்தட்டில் படுத்திருந்தார். வண்டியின் சகடங்களின் ஒலியில் அவர் உடல் மெல்ல சுழன்றுகொண்டிருந்தது.

# களிற்றியானை நிரை - 22

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 5**

சாரிகர் துவாரகை பயணத்தில் முற்றிலும் பிறிதொருவனாக தன்னை உணர்ந்தார். அவர் உடல் புழுதிபடிந்து, வெயிலில் வெந்து கருமைகொண்டு, மயிர் பழுப்பேறி, உதடுகள் கருகி நீர்ப்பாவையை நோக்கியபோது முற்றிலும் பிறிதொருவன் தெரிந்தான். அவருடைய குரலை அவரே திகைப்புடன் அவ்வப்போது கேட்டார். அவருடைய நிழலசைவை திரும்பி நோக்கி யார் என திகைத்தார்.

அந்தப் பயணத்தின் பதினேழு நாட்களில் அவர் வெவ்வேறு நிலங்களில் வெவ்வேறு மானுடர்களாக பிறந்து வாழ்ந்தார். அவந்தியை அடையும்போது தன்னை ஒரு தொலைவணிகனாகவே எண்ணிக்கொண்டார். சூழ்ந்திருக்கும் ஒவ்வொரு பொருளும் வணிகத்திற்குரியதாக, ஒவ்வொரு சாலைத் திருப்பமும் வணிக வாய்ப்பாக தோன்றியது. வணிகன் என கற்பனை செய்து விற்று, வாங்கி, ஈட்டி, செலவழித்து, காத்திருந்து, கரவுசெய்து மீண்டார். வணிகர்குலத்துப் பெண்ணை

மணந்து குழவியருக்கு தந்தையாகி வளர்த்து அவர்களிடம் வணிகத்தை அளித்துவிட்டு மறைந்தார். மீண்டும் ஓரிடத்தில் பிறிதொரு வாய்ப்பில் பிறந்தெழுந்தார்.

அந்தணன் என்னும் அடையாளத்தை அஸ்தினபுரியிலிருந்து கிளம்பிய மூன்றாம் நாளே அவர் துறந்துவிட்டார். நான்காம் நாள் ஒரு விடுதியில் ஊனுணவு உண்டார். அவருக்கு உணவு கொண்டுவந்த ஏவலன் “அந்தணருக்குரிய உணவு…” என்று தொடங்க “நான் வணிகன். ஊனுணவு கொண்டுவருக!” என்று ஆணையிட்டார். ஊனுணவு அவர் முன்பு உண்ட ஏதோ காய்போலத்தான் இருந்தது. அவர் அகத்தை மாற்றிக்கொண்டிருந்தமையால் எவ்வகையிலும் ஒவ்வாமை தோன்றவில்லை. அவர் வணிகர்களுடன் பேசிக்கொண்டே பயணம் செய்தார். விடுதிகளில் வணிகர்களுடன் கொட்டகைகளுக்குள் மரவுரிகளில் படுத்தார்.

அவர் வணிகர்களிடம் தன்னை அஸ்தினபுரியின் வணிகன் என்றே அறிமுகம் செய்துகொண்டார். அவர் அந்தணனின் முகம் கொண்டிருப்பதாகச் சொன்னவர்களிடம் தன் அன்னை அந்தணப்பெண் என்றார். வணிகர்கள் அவரை நம்பவில்லை. ஆனால் அவரிடம் வணிகம் குறித்து பேசினார்கள். அவர் உசாவும்போது தெரிந்த ஆர்வம் அவர்களை பேச வைத்தது. அத்தனை வணிகர்களும் முதலில் வணிகம் இழப்பு மட்டுமே அளிப்பது என்றார்கள். முன்பிருந்த நல்ல நிலை இப்போது இல்லை என்றார்கள். தங்களிடம் பொன்னோ பொருளோ மிச்சமில்லை என்று சொல்லி மடியை விரித்துக் காட்டினார்கள். வாய்ப்புகளை தேடிச்செல்வதாக கூறினார்கள். அந்த நடிப்பை நெடுங்காலமாகச் செய்து அதை நம்பி அதுவாகத் திகழக் கற்றிருந்தார்கள்.

அத்தனை வணிகர்களுக்கும் நன்றாகப் பேசத் தெரிந்திருந்தது. இனிதாக, அணுக்கமாக, நம்பகமாக பேசினார்கள். அனைவருமே புன்னகைமுகம் கொண்டிருந்தனர். சிறிய நகைச்சுவைக்கும் வெடித்துச் சிரித்தனர். ஆனால் சிரிப்பின்போது விழிகள் அதில் ஈடுபடவில்லை. அவை வேவுபார்த்தபடி, கவலைப்பட்டபடி, கணித்தபடி அகன்றிருந்தன. அவர்களின் பயணங்கள் பேச்சுக்களால் ஆனவை. பேச்சு அவர்களுக்கு சொல்லவும் மறைக்கவும் உதவியது. ஆகவே அவர்கள் செய்திகளையும் கருத்துக்களையும் செதுக்கி அடுக்கியிருந்தனர். சொற்களை முன்னரே கோத்துவைத்திருந்தனர். அவர் அந்த உரையாடல்கள் வழியாக முற்றிலும் அறியாத உலகில் மேலும் மேலும் ஆழ்ந்து சென்றுகொண்டிருந்தார்.

நாடுகளின் நிலைமைகள், வழிகளின் சூழல், வணிகத்தின் ஏற்ற இறக்கங்கள் என அவர் ஒவ்வொரு நாளும் புதியனவற்றை அறிந்துகொண்டிருந்தார். பாரதவர்ஷமெங்கும் வணிகம் மீண்டும் புத்துயிர்கொள்ளத் தொடங்கியிருந்தது. போர் அணுகி வருகிறது என்னும் எண்ணத்தால் பெரும்பாலான வணிகர்கள் பயணங்களை ஆறு மாதத்திற்கும் மேலாக ஒத்திப்போட்டிருந்தார்கள். பெரும்பாலானவர்கள் தங்கள் குடும்பங்களுடன் சென்று சேர்ந்துகொண்டனர். செல்வங்களை பதுக்கிவிட்டு எளியோர் என புழங்கினர். அவர்கள் உறவுகொண்டாடுவது அப்போதுதான். குலதெய்வங்கள் பூசைகொள்வதும் அப்போதே. அவர்களின் குலதெய்வங்கள் எல்லாமே பெண்கள். அவர்களின் பெண்கள் ஆற்றியிருக்கக் கற்றவர்கள். எதிர்பார்ப்பை வாழ்வென எண்ணிக்கொள்ளப் பழகியவர்கள்.

“போர் எழுகிறதென்றால் அரசர்கள் கருவூலங்களின் மேல் கட்டுப்பாட்டை செலுத்துவார்கள். பொருட்கள் வாங்கப்படுவது நிலைக்கும். மக்களும் தங்கள் செல்வங்களை புதைத்துச் சேமிக்கவே முயல்வார்கள்” என்றார் கலிங்கநாட்டு வணிகரான கனகர். “அரசுதான் உண்மையில் மிகப் பெரிய பொருள் வாங்குநர். விற்பனையும் வாங்குதலும் என நிகழும் இச்சுழலில் இந்த வளையத்தில் ஒரு புள்ளியாக அரசு இருக்கும். அரசு அனைத்தையுமே வாங்குகிறது. உணவை, படைக்கலங்களை, ஆடைகளை, அணிகளை மட்டுமல்ல. அரசு வாங்காத பொருளென ஏதுமில்லை. ஒரு நாட்டில் பொருளை உருவாக்காத அனைவருமே அரசுடன் இணைந்தவர்களே. அரசு வாங்குவதை நிறுத்திவிட்டால் அந்த வட்டம் நின்றுவிடும். அதன்பின் வணிகம் இல்லை. வணிகம் ஒரு தறிபோல. அதன் அனைத்து நெசவும் இரு முனைகளை தொட்டு ஓடும் நூல்களால் ஆனது. உழவரும் அரசும்.”

முதிய வணிகரான குபேரர் “அரசுகள் போருக்கு ஒருங்குகின்றன என்றால் முதலில் எல்லைகளை இறுக்கி காவலமைப்பார்கள். வழிக்காவல் வணிகத்திற்கு நன்று. ஆனால் மிகைக்காவல் வணிகத்தை அழிக்கும். கண்காணிப்புகள் கூடும்போது காவலரிடம் கோன்மை மிகுகிறது. மிகுந்துசெல்லும் கோன்மை கரவுப்பொருள் சேர்ப்பதாகவே முடியும். இதற்கு விலக்கே எங்கும் இல்லை. காவலர்கள் பொருள் சேர்ப்பார்கள். தங்களை கண்காணிக்கும் மேல்நிலையாளர்களுக்கு அதில் பங்கைக் கொடுத்து தங்கள் வளையத்திற்குள் கொண்டுவராமல் அவர்களால் அதைச் செய்யமுடியாது. ஆகவே விழைவு காட்டி, மயக்கி, பொருளை கொடுத்து மேலிருக்கும் ஆட்சியமைப்புகளை அறமிழக்கச் செய்வார்கள்” என்றார்.

“அறுதியில் அமைச்சர்கள் வரை அந்த அறமின்மை சென்று சேரும். அரசு என்னும் அமைப்பே நெறியழியும். அரசு என்பது காவல் என்றும், அறம் என்றும், நிகர்நிலைப்படுத்தல் என்றும் சொல்லப்படுமென்றாலும் வணிகர்களின் நோக்கில் அது பொருள்கொள்ளும் அமைப்பே. பொருள்கொள்ளும் எந்த அமைப்பும் கொள்ளையிடும் உளநிலையே கொண்டிருக்கிறது. அரசு என்பது ஏற்கப்பட்ட திருட்டு. கொடுப்பவரும் ஒப்புகையில் அரசு நிலைகொள்கிறது. எந்த அரசும் கொள்ளையாக மாறும் வாய்ப்புள்ளதுதான். அரசு தன்னை தான் கட்டிவைத்திருக்கும் நெறிகளை சற்று அவிழ்க்கத்தொடங்கினாலும் நேரடிக்கொள்ளையாக ஆகிவிடும்.”

“போரிலிருக்கும் அரசு அந்த நெறியை எளிதில் கடந்துவிடுகிறது. அதனால் தன் வீரர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாது. ஏனென்றால் அரசு என்பது படைகளுக்கும் குடிகளுக்குமான ஒரு நிகர்நிலையை உருவாக்கிக்கொண்டே இருப்பது. குடிகள் ஓங்கினால் அரசு ஆற்றலிழக்கும். படைகள் ஓங்கினால் அரசு நெறியிழக்கும். போரில் படைகளின் சொல் ஓங்குகிறது. அவ்வாறாகாமல் அமைய வழியே இல்லை.” சாரிகர் திகைப்புடன் நோக்கிக்கொண்டிருந்தார். அவர் கற்ற எந்நூலிலும் அந்நோக்கை அறிந்ததில்லை. எந்த அவையிலும் அவை பேசப்பட்டதில்லை. “எந்த வணிகரும் அரசவையிலோ சந்தையிலோ மெய் சொல்லமாட்டார்கள்” என்றார் கனகர்.

மாளவநாட்டு வணிகரான சுந்தரர் “போர்க்கால அரசுகள் நேரடியாகவே சுங்கத்தை கூட்டுகின்றன. மறைமுகக் கொள்ளைகளை ஊக்குவிக்கின்றன. அரசர்களே கொள்ளையர்களை அனுப்புவதும் உண்டு. போர் தொடங்கும்

சூழல் அமைந்தாலே வணிகர்கள் அலை திரும்பிச்செல்வதுபோல பின்னடைந்து நுரைக்கொப்புளங்கள் மறைவதுபோல மறைந்துவிடுவார்கள். போருக்குப் பின் வெல்வது எவர் வீழ்வது எவர் வெற்றிக்குப் பின் எழுவது யார் என்பதைக் கணித்த பின்னரே மீண்டும் வணிகத்திற்கு எழுவார்கள்” என்றார். “வணிகர்களுக்கு நாடு என ஏதுமில்லை. அவர்களைக் காக்கும் கோல் நிலைகொண்டது அவர்களின் நாடு. கோல் நிலை தாழுமென்றால் அக்கணமே உதறிவிட்டுக் கிளம்பவும், செல்லும் நிலத்தில் மொழியையும் வாழ்வையும் கற்றுக்கொண்டு நிலைகொள்ளவும் அவர்களால் இயலும்.”

“போரில் வென்றவர்களுடன் சேர்ந்துகொள்வதுதான் வணிகர்கள் செய்யவேண்டியதா?” என்றார் சாரிகர். “போரில் வென்றவர்கள்தான் ஆற்றல்கொண்டு எழவேண்டும் என்பதில்லை. போரில் பொருதும் இரு தரப்புகளும் அழிய மூன்றாம் தரப்பு எழுந்து வரக்கூடும். போரினால் ஒரு வணிகப்புலம் முற்றழிய பிறிதொன்று உருவாகக்கூடும். பிருஹத்ஷத்ரனின் காலத்தில் மகதம் சர்மாவதியை ஆண்ட மச்சர்களுடன் போரிட்டது. மகதம் வென்றது. ஆனால் மச்சர்களின் அழிவால் அப்பாலுள்ள நிஷாதர்கள் ஆற்றல்கொண்டார்கள். அவர்களின் தோல்வணிகம் பெருகியது. மகதம் அவர்களிடம் கப்பம் பெற்றது, ஆனால் அவர்களை முற்றாள மகதத்தால் இயலவில்லை. ஏனென்றால் அவர்கள் மிக அப்பால், சர்மாவதியின் கரையோரக் காட்டுக்குள் இருந்தனர். அவர்கள் வணிகச்செல்வத்தால் அரசியலாற்றல் கொண்டனர். அவர்களின் நாடுகள் உருவாகி வந்தன” என்றார் சுந்தரர்.

“அரசியலை வணிகர்கள் எவ்வண்ணம் கணிக்கிறார்கள்?” என்றார் சாரிகர். “அரசியலில் என்ன நிகழுமென முன்னரே கணிக்க எவராலும் இயலாது. வணிகர்கள் அத்தகைய கணிப்புகளை நம்புவதுமில்லை. அது அந்தணர்களும் ஷத்ரியர்களும் தங்கள் உகிர்களையும் பற்களையும் கூர்தீட்டிக்கொள்ளும் பொருட்டு செய்யும் பயிற்சி. அந்தணர் பூனைகளைப்போல. ஒவ்வொரு நாளும் தங்களைத்தாங்களே நக்கிக்கொள்பவர்கள் அவர்கள். நாங்கள் கண்முன் பொருண்மையானவற்றை மட்டுமே கணிக்கிறோம். பொருளும் அவற்றை வாங்கும் பணமும் பொருண்மையானவை. எங்கள் தெய்வங்கள் கண்ணெதிரே வாழ்பவை. அவை மாற்றில்லாதவை அல்ல. நாங்கள் போருக்குப் பின் மெல்ல வெளியே இறங்கிப் பார்க்கிறோம். மழை நின்றுவிட்டதா என்று கைநீட்டி அறிகிறோம். மெல்ல காலடி வைக்கிறோம். சிறிய அளவில் தொடங்குகிறோம். செய்துநோக்கி விளைவுகளை உய்த்தறிந்து விரிவாக்கிக் கொள்கிறோம்.”

“இந்தப் போருக்குப் பின் அஸ்தினபுரி வல்லமை பெறும் என்பது உறுதியாகியிருக்கிறது” என்றார் கனகர். “அது உள்ளுணர்வால் தோன்றுவதுண்டா?” என்றார் சாரிகர். அவர் நகைத்து “அது ஒருவருக்குத் தோன்றும் எண்ணம் அல்ல. எண்ணி எண்ணிக் கணித்து, செய்திகளை திரட்டிப் பொருத்தி, ஒன்று நூறென்று நோக்கி பின் தெளிவது. சொல்லிச் சொல்லி நிறுவிக்கொள்வது” என்றார். சுந்தரர் “போரில் உள்ளுணர்வுக்கே முதலிடம் என்பார்கள். வணிகத்தில் உள்ளுணர்வை தவிர்ப்பதே பயிலவேண்டியது” என்றார். “எங்கள் மைந்தர்களிடம் உள்ளுணர்வு என வணிகனிடம் பேசுவது அவனை அழிக்கும் கொடுந்தெய்வம் என்று சொல்லுவோம். புறவுலகை நோக்கு, பருவடிவ உண்மைகளை திரட்டு, நீ அறிந்த அனைத்தும்

பிறராலும் அறிந்து நூறுமுறை நிறுவப்பட்டாகவேண்டும் என்று கற்பிப்போம்.”

சாரிகர் திகைத்து “ஏன்?” என்றார். “ஏனென்றால் வணிகனை ஆள்வது பொருள்விழைவு. குபேரன் மானுடரிடம் விளையாடும் அசுரன் என்பதை மறக்கவேண்டியதில்லை. உள்ளுணர்வு என்றும் தெய்வத்தின் ஆணை என்றும் அகத்திலிருந்து எழுவது மாறுதோற்றம் கொண்ட பெருவிழைவின் குரலே. அதை நம்பும் வணிகன் தனக்கு உகந்தவற்றை காண்பான். தனக்கு ஒவ்வாதனவற்றை விலக்குவான்” என்று சுந்தரர் சொன்னார். “வணிகனின் கனவுகள் என்ன என்று நோக்குக! அத்தனை பேருக்கும் புதையல்கள் சிக்குவதுபோல, கருவூலங்களுக்குள் வழிதவறிச் செல்வதுபோல, அள்ள அள்ளக் குறையாத பொற்குவைகள் அமைவது போன்ற கனவுகளே பாதி. அவையே உள்ளுணர்வு என்றும் வெளிப்படுகின்றன.”

சாரிகர் “ஆனால் இழப்பையும் தீங்கையும் உள்ளுணர்வுகள் சுட்டக்கூடுமே?” என்றார். “கவரப்படுவதுபோல, இழந்துவிடுவதுபோல, அனைத்தும் அகன்று வறுமைகொள்வதுபோல எழுவனவே வணிகர்களின் கனவுகளில் மீதி. ஒரு வணிகன் எக்கனவைக் காண்கிறான் என்பதுதான் அவனை வகுப்பதற்கான அடையாளம். வணிகத்தின் தொடக்கத்தில், வெற்றியின் உச்சத்தில் இழப்பைக் கனவுகாண்பவர்கள் உண்டு. இழப்புகளின் போதெல்லாம் புதையல் எடுத்துக்கொண்டிருப்பவர்களும் உண்டு. இழப்புக்கனவுகளும் வணிகனின் பெருவிழைவையே காட்டுகின்றன. விழைவு மிகுந்து செயலாற்றும் வணிகனும் அச்சம் கொண்டு செயலாற்றாமல் ஒழியும் வணிகனும் தோல்வியடைவான்.”

அவர்கள் உணவுண்டபடி அனலைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். அந்த விடுதியில் உணவு மிக எளியதாக இருந்தது. வேகவைக்கப்பட்ட கிழங்குகளும் கீரையும் கொண்ட கஞ்சி. ஆனால் வணிகர்கள் அதை ஒரு சொட்டும் எஞ்சாமல் உறிஞ்சிக் குடித்து கைகளை நக்கிக்கொண்டனர். “அஸ்தினபுரியின் வெற்றியை நீங்கள் எப்படி மதிப்பிட்டீர்கள்?” என்று சாரிகர் கேட்டார். “அஸ்தினபுரி வெற்றிபெறுவது அதன் படைவல்லமையால் அல்ல. அதன் செல்வத்திறனாலும் அல்ல. அதன் படைகள் அழிந்துவிட்டன. அதன் குடிகள் இடம்பெயர்ந்தார்கள். ஆகவே அவர்களின் செல்வம் ஊறிநிறைவது அல்ல. அவர்கள் வென்றெழுவது இதோ அங்கே சென்றுகொண்டிருக்கும் இந்த மக்கள்பெருக்கால்.”

“இது மாபெரும் செல்வம். இவர்கள் படைப்பவர்கள், வளர்ப்பவர்கள், சேர்ப்பவர்கள். அஸ்தினபுரி இவர்களால் மீண்டும் உருவாகி எழும். இன்னும் சில ஆண்டுகளிலேயே அந்நகரில் பொன் கொழிக்கும். ஆகவேதான் மீண்டும் வணிகத்தை தொடங்கியிருக்கிறோம்” என்றார் சுந்தரர். “இவர்களின் நம்பிக்கையை உருவாக்கியது எது?” என்று சாரிகர் கேட்டார். “அஸ்தினபுரியின் அரசர் யுதிஷ்டிரன் என்று சிலர் சொல்வார்கள். அரசி திரௌபதி என்று சொல்பவர்களும் உண்டு. மெய்யாகவே இந்நம்பிக்கையை உருவாக்கியது அங்கே எழுந்துள்ளது என்று சொல்லப்படும் புதிய வேதம்.”

“அது என்னவென்று எவருக்கும் தெரியாது. ஆனால் அது ஓர் அறைகூவல் என, ஆறுதல் என, அழைப்பு என ஒலிக்கிறது. அதுவே அங்கே இப்பெருந்திரள் ஒழுகிச்சென்றுசேர வழிவகுக்கிறது. அது அஸ்தினபுரியை எழச் செய்யும். அங்கே செல்லும் அனைவருக்கும் செல்வத்தை அளிக்கும்” என்றார்

சுந்தரர். “இன்று பாரதவர்ஷம் முழுக்கவே அஸ்தினபுரியை மையமாக்கி வணிகம் மேலெழுந்துகொண்டிருக்கிறது. ஒருவகையில் சொல்லப்போனால் வணிகம் முன்னைவிட பெரிதாக மாற வாய்ப்புள்ளது. நேற்றுவரை இல்லாத நெறிகள் உருவாகலாம். புதிய சந்தைகள் உருவாகி எழலாம். புதிய வணிகங்களேகூட தோன்றலாம். எழுவது என்ன என்று தெரியவில்லை. ஆனால் இருந்தவை அனைத்தும் உருமாற, எழுந்தவை அனைத்தும் நிலமடைய, பேருருக்கொண்டு புதியது ஒன்று களம்புகுவதை உணர முடிகிறது. அதன் காலடியோசைகளை கேட்டுக்கொண்டிருக்கிறோம்.”

சாரிகர் அவந்தியில் மூன்று நாட்கள் தங்க நேர்ந்தது. உஜ்ஜயினி நகருக்குள் நுழைந்து ஒருமுறை சுற்றிவந்தபோது அவர் அங்கே தன்னால் தங்கமுடியாது என்று உணர்ந்தார். அவர் உள்ளம் நாற்புறமும் திறந்துவிட்டிருந்தமையால் அந்நகரம் மிகச் சிறியதாகத் தோன்றியது. அவர் நகருக்கு வெளியே ஷிப்ரை ஆற்றின் கரையோரமாக விரிந்திருந்த மாபெரும் வயல்வெளியின் நடுவே அமைந்த உழவர்ச்சிற்றூர்களில் ஒன்றான கோபகுப்தத்தில் தங்கினார்.

கோபகுப்தம் நூறு இல்லங்களும் எட்டு தெருக்களும் மட்டும் கொண்ட சிற்றூர். மையத்தெருவின் கிழக்கே கொற்றவையின் ஆலயம் அமைந்திருந்தது. மேற்கு எல்லையில் ஊர்த்தலைவரின் சற்று பெரிய இல்லம். அனைத்து இல்லங்களுமே புல்வேய்ந்த தாழ்வான கூரையும் செம்மண் பூசப்பட்ட உப்பிய சுவர்களும் கொண்டவை. இல்லங்கள் அனைத்துக்கும் இணைப்புபோல தனியாக அடுமனையாக ஒரு குடில் இருந்தது. ஊருக்கு உரிய பசுக்களை ஒற்றை

வளைப்புக்குள் கட்டி அதைச் சுற்றி மூங்கில் வளைவாக வேலியமைத்திருந்தனர். பசுக்கொட்டிலுக்குள் நுழையும் வழியில் மூங்கிலால் ஆன வாயிலும் மேலே காவல்கோபுரமும் இருந்தன.

வயல் நடுவே சென்ற சாலை ஆற்றின் படித்துறையில் இருந்து உஜ்ஜயினி நோக்கி சென்றது. ஆற்றின் ஓரமாகவே வளைந்து சென்று அது பாலைக்குச் செல்லும் பாதையுடன் இணைந்தது. அந்த ஊரை அறிவிக்கும் பலகையை சாரிகர் கண்டார். அக்கணம் அங்கே தங்குவதைப் பற்றிய எண்ணம் வந்தது. "உழவர் ஊர்களில் எவரும் தங்குவதில்லை" என்று அவருடன் வந்த வீரர்கள் கூறினார்கள். "நான் அந்தணன் அல்ல, உழவர்குடித்தலைவன் என அறிவியுங்கள்" என்று சாரிகர் சொன்னார்.

வீரன் சென்று அறிவித்ததுமே அவ்வூரின் தலைவராகிய வியதர் தன் மைந்தனுடன் சாலைமுகப்புக்கு வந்து அவரை வரவேற்றார். அவர் ஊருக்குள் நுழைந்து அதன் நிரைதவறி அமைந்த, வைக்கோல்போர் போன்ற கருகிய கூரைகொண்ட இல்லங்களைக் கண்டதுமே அவற்றில் ஒன்றில் பிறந்து நெடுநாட்கள் வாழ்ந்ததைப்போல் உணர்ந்தார். "இங்கே முன்பு வந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டார். அவருடன் வந்த வீரர்கள் ஊருக்கு வெளியே பசுக்கொட்டிலின் அருகே அமைந்த காவலர்கொட்டகையிலேயே தங்கிக்கொள்வதாகச் சொன்னார்கள். அவருக்கு ஊர்த்தலைவரின் இல்லத்திலேயே இடமளிக்கப்பட்டது.

அங்கே எவருக்குமே துயில்வதற்கு அறை என ஏதும் இருக்கவில்லை. மரப்பலகைகளை எடுத்துப்போட்டு திண்ணையிலோ தெருவிலோதான் படுத்துக்கொண்டார்கள்.

அப்பலகைகளில் அமர்ந்தே உணவுண்டார்கள். அந்தியில் உணவுண்ணவும் துயிலவும் மட்டுமே அவர்கள் இல்லங்களுக்கு வந்தனர். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் முதியவர்களும் வயல்களில் ஒளியிருக்கும் பொழுது முழுக்க வேலை செய்தனர். வயலோரங்களில் வைக்கோல் தட்டிகளால் அமைக்கப்பட்ட இடம்பெயரும் சிறுகுடில்களில் ஓய்வெடுத்தனர். அவர்களின் வயல்களில் ஷிப்ரையின் நீர் நிறைந்திருந்தது. விழிதொடும் தொலைவுவரை நெற்பசுமை அலையடித்தது.

சாரிகர் அவர்களுடன் காலையிலேயே வயலுக்குச் சென்றார். அப்போது மூன்றாம் களையெடுப்பு நிகழ்ந்துகொண்டிருந்தது. களைகளைப் பிடுங்கி சேற்றிலேயே அழுத்தி மூழ்கடிக்கவேண்டும் என்பது அவருக்கு விந்தையாக இருந்தது. “அவை மட்கி உரமாக ஆகும்” என்று அவருடன் களைபிடுங்கிய இளைஞனாகிய பத்ரன் சொன்னான். “இது நீருள் இருந்து முளைக்காதா?” என்று சாரிகர் கேட்டார். “முளைக்கும், முளைப்பது நன்று. அது அடுத்த களையெடுப்பில் உரமாக ஆகும்” என்று பத்ரன் சொன்னான். “ஆகவே நாம் களை மிகவேண்டும் என்று வேண்டிக்கொள்ள வேண்டுமா?” என்றார் சாரிகர். “மெய்யாகவே அப்படித்தான். பசுங்களை எழுவதென்பது நெல்வயல் செழிப்புற்றிருப்பதற்கான அடையாளம்.”

பத்ரன் நகைத்து “களை நெல்லைவிட விரைவாக வளரும். களையெடுக்காவிட்டால் நெல்லைக் கடந்து எழுந்து அதை முற்றாக மறைத்து தான் நின்றிருக்கும். பிடுங்கப்படும் களை நெல்லை வளரச்செய்யும்” என்றான். சாரிகர் களைச்செடியை அள்ளி கையில் வைத்துப் பார்த்தார். அது நீர் நிறைந்த தடித்த தாள்களுடனும் பசுமையான தண்டுகளுடனும் இருந்தது.

“அறுவடை செய்து நெல்லை களம் சேர்க்கையில் களையையும் எண்ணிக்கொள்வோம். நிர்யாதை என்னும் அன்னை எங்கள் ஊர்களுக்கு வெளியே கோயில்கொண்டிருக்கிறாள். அவள் களைகளை வளர்ப்பவள். அவளுக்கு புதுநெல்லால் பொங்கலிட்டு வணங்குவோம்.” சாரிகர் அந்தக் களையையே நோக்கிக்கொண்டிருந்தார். பத்ரன் சொன்னான் “அறுவடைக்குப் பின் இவ்வயல்களில் களை பெருக விட்டுவிடுவோம். களை எழுந்து இடைவரை செழித்து நிற்கும். எருமைகளை விட்டு மேய வைப்போம். உண்ண உண்ண அவை எழுந்து எருமைகளுக்கு அன்னமாகும். அடுத்த உழவின்போது எருமை தசைவல்லமையுடன் இருக்கவேண்டுமென்றால் வயலில் களை பெருகியாகவேண்டும்.”

அவர்களின் வயல்களுக்கு மேல் வெயில் அசைவற்றதுபோல் நின்றிருந்தது. கரையில் அமர்ந்து நோக்கியபோது வெயில் ஒரு வெண்சுவர் என்றே தெரிந்தது. அதில் பறவைகள் நீந்திச் சென்றன. பல்லாயிரம் பறவைகள் வந்தமர்ந்து சேற்றைக் கிளறியும் குத்தியும் உணவு தேடின. அந்தியில் ஒவ்வொரு கூட்டமாக எழுந்து வானில் பறந்தகன்றன. அவர் இருட்டில் அவர்களுடன் ஊருக்குத் திரும்பியபோது உடல் களைத்து ஒவ்வொரு காலடியும் எடைமிகுந்திருந்தது. நீரோடையில் குளித்துவிட்டு குடிலுக்குச் சென்று பலகையில் படுத்து வானை நோக்கிக்கொண்டிருந்தார்.

அவர்கள் அனைவருமே முற்றங்களில் படுத்தபடி உணவை எதிர்நோக்கினர். அவர்கள் உரையாடிக்கொள்வதே அப்போதுதான். அவர் துவாரகைக்குச் செல்வதை அவர்கள் வியப்புடன் நோக்கினர். “துவாரகைக்கா? அங்கே இன்று எவரும்

செல்வதில்லை. உழவர் செல்வது விந்தைதான்" என்றார் அவர்களில் முதியவரன விசாலர். அவர் பலமுறை துவாரகைக்கு சென்றுவந்திருந்தார். "நான் நாடோடியாக அலைந்தேன். ஏன் என்று எனக்கே தெரியாது. இங்கே இச்சிற்றூரில் இவ்வண்ணம் முழுதமையவேண்டும் என்றால் என்னுள் இருந்த விசையனைத்தையும் செலவிட்டுவிடவேண்டும் போலும். நன்று" என்றார்.

"அது எங்களூருக்கு நன்று. வணிகர்களிடமும் சூதர்களிடமும் நாடோடிகளிடமும் பேசும் மொழியறிந்தவர் முதியவர். எங்களூரில் இருந்துகொண்டே எட்டுத் திசையையும் உணரும் ஆற்றல்கொண்டவர்" என்றான் இளையவனாகிய சதன். "ஏன் எவரும் துவாரகைக்குச் செல்வதில்லை?" என்று சாரிகர் கேட்டார். விசாலர் நகைத்து "ஏனென்றால் முற்றிலும் உழவே இல்லாத நகர் அது. வணிகமே அதன் மையத்தொழில். உழவரில்லாத நாடு மணலில் அடித்தளமிட்ட மாளிகை என்பார்கள் எங்கள் முன்னோர். அதை உண்மை என்று இப்போது உணர்கிறோம்" என்றார்.

"நெடுங்காலமாக வணிகர்களே அங்கே சென்றுகொண்டிருந்தார்கள். மாளவத்திலிருந்தும் அவந்தியிலிருந்தும். ஒருகாலத்தில் நிரைநிரையாக வணிகவண்டிகள் துவாரகைக்கு சென்றுகொண்டிருக்கும். இப்போது வணிகர்கள் அந்நகரை கைவிட்டுவிட்டார்கள். அரிதாக நாடோடிகளே அங்கே செல்கிறார்கள்" என்று அவர் தொடர்ந்தார். "ஏன்?" என்று சாரிகர் கேட்டார். "அங்கே வணிகக்கப்பல்கள் வருவது குறைந்துவிட்டிருக்கிறது. வணிகமே துவாரகையின் உயிர். இங்கிருந்து செல்பவர்கள் பொருளுக்கு எட்டு மடங்கு விலை கிடைக்கும், அவ்விலையும்

யவனப் பொன்னாகக் கிடைக்கும் என்பதனால்தான் சென்றார்கள். பீதர்நாட்டுப் பொருட்களும் யவனநாட்டு மதுவும் அங்கிருந்து இங்கு வந்தால் பன்னிருமடங்கு விலை. அதன் பொருட்டே பாலையில் நெடும்பயணத்தை மேற்கொண்டனர்.”

“இன்று துவாரகை வீழ்ந்துவிட்டது” என்றான் சதன். “வணிகம் என்பது நில்லா அலைபோல. கடல்மேல் நாவாய் செலுத்துவது போன்றது அங்கே ஓர் அரசை நடத்துவது. தேர்ந்த மாலுமியாகிய இளைய யாதவர் அதை ஆட்சிசெய்யும்வரை அங்கே செல்வம் கொழித்தது. உஜ்ஜயினி உழவில் ஊன்றிய நகர். இது தொன்மையானது. நிலையான நெறிகளால் ஆனது. இதை எவரும் ஆள வேண்டியதில்லை. வயல்களில் பயிர் விளையும். வரியென நெல் களஞ்சியத்தை வந்தடையும். பருவங்கள் மாறி வரும், ஆண்டுகள் சென்று மறையும், அரசகுடிகள் தோன்றி மறைவார்கள். எதுவும் மாறாது. வணிகநகரில் ஓராண்டிலேயே அனைத்தும் தலைகீழாக மாறிவிடும்.”

சாரிகர் அதை முன்னரே கேள்விப்பட்டிருந்தார். “துவாரகை இன்று இளைய யாதவரின் மைந்தர் சாம்பனின் ஆட்சியில் இருக்கிறது. அவருடனிருப்பவர்கள் ஆயர்குலத்துப் படையினர். அவர்கள் நின்று நிலத்திலூன்றி வாழ்ந்து பழகாதவர்கள். கொய்து கடந்துசெல்லும் இயல்பு கொண்டவர்கள். அவர்கள் அறிந்ததெல்லாம் வந்தணையும் கப்பல்களிலிருந்து சுங்கம் கொள்வது மட்டுமே. முன்பு இளைய யாதவரின் ஆட்சிக்காலத்தில் துவாரகையில் சுங்கம் கொள்ளப்படவில்லை. உலகமெங்கணுமிருந்து வணிகக்கப்பல்கள் அங்கே வந்தது அதன்பொருட்டே. சாம்பன் சுங்கம் கொள்ளத் தொடங்கினார். சுங்கம் வந்து கருவூலம் பெருகியபோது சுங்கத்தை மேலும்

கூட்டினார். மேலும் செல்வம் வந்து குவிந்தது. இளைய யாதவருக்கு அறிவில்லை, தனக்கு அறிவிருக்கிறது என அவர் மார்தட்டிக்கொண்டதாக சொல்கிறார்கள்.”

“சுங்கம் பெருகியபடியே சென்றது. ஆகவே சுங்கம் கொள்பவர்களிடமே அனைத்துப் பொறுப்பும் விடப்பட்டன. அவர்கள் நாளொன்றுக்கு இத்தனை பொன் கருவூலத்திற்கு அளித்தால் போதும் என வகுக்கப்பட்டது. அவர்கள் பால் கறக்கும் பசுவைக் கொன்று புசிக்கலாயினர். நாளுக்குநாள் வரும் கப்பல்கள் குறையத் தொடங்கின. கப்பல்கள் குறையும்தோறும் வரி மிகுந்தது. வரிமிகுந்தோறும் கப்பல்கள் குறைந்தன. ஏழு மாதங்களில் முற்றாகவே துறைமுகத்தில் கப்பல்கள் வராமலாயின.”

“ஆனால் நகரின் எச்செலவையும் குறைக்கமுடியவில்லை. காவலர்கள், ஏவலர்கள், அணியர்கள். அந்நகருக்குரிய அத்தனை பொருட்களும் தொலைவிலிருந்து படகுகள் வழியாகவும் பாலைநிலம் வழியாகவும் வந்துசேர வேண்டியவை. அவை விலையேறத் தொடங்கின. அவை வரும் வழிகளில் கொள்ளையர் எழுந்தனர். சிந்துநாட்டிலும் கூர்ஜரத்திலும் கொள்ளையர்களே சிறுசிறு ஆட்சியாளர்களாக ஆயினர். அவர்களை அடக்க சாம்பன் படைகொண்டு சென்றார். யானை வண்டுகளுடன் பூசலிடுவதுபோல. வண்டுபோல யானை பறக்க முனைந்தால் விரைவிலேயே களைத்துவிடும்.”

“இன்று துவாரகை மணலில் சகடம் புதைந்த வண்டிபோல நின்றுவிட்டிருக்கிறது. அங்கே எதுவுமே குறையவில்லை என்று சொல்கிறார்கள். கள்ளும் களியாட்டுமாகவே நகர் நுரைத்துக்கொண்டிருக்கிறது. அவர்களால் தாங்கள் அறிந்த வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முடியாது. வீழ்ந்துபடும்

குடிகளைப் போலத்தான் நகர்களும். வீழ்வதையே அறியாமலிருப்பார்கள். அது சிலகாலம்தான், விரைவிலேயே சரியாகிவிடும் என நம்புவார்கள். வீழ்வதை காட்டிக்கொண்டால் எதிரிகள் முன் குறைவுபட நேரிடும் என நாணுவார்கள். ஆற்றல் குறையவில்லை என நடிப்பார்கள். அதை தவிர்க்கவும் முடியாது. துவாரகை சற்று படைவல்லமையை குறைத்துக்கொண்டால்கூட எதிரிகளால் சூறையாடப்பட்டுவிடும்.”

சாரிகர் பெருமூச்சுவிட்டார். “எண்ணி ஏங்குவதில் பொருளில்லை. பெருநகர்கள் எழுந்து எழுந்து அமைவதை உஜ்ஜயினி பார்த்துக்கொண்டிருக்கிறது” என்றார் விசாலர். “ஏதோ அறியா தெய்வங்களின் ஆடல் என நகரங்கள் எழும். நாடுகளாகிப் பெருகும். வணிகம் சிறக்கும். மெய்மையும் அறிவும் வளரும். கலையும் களியாட்டும் பெருகும். தருக்கி நிமிர்ந்து உலகை வெல்ல அவை ஒருங்கும். ஒன்றோடொன்று போரிட்டு அழியும். வெற்றுச்சொற்களாக எஞ்சும். பாணர் பாடல்களில் ஏறி நிலமெங்கும் அலையும். உஜ்ஜயினி இங்கிருக்கும். இது இங்கே குன்றாது குறையாது என்றுமிருக்கும். இது உழவர்களின் நகர்.”

உணவின் மணம் எழுந்தது. அவர்கள் அனைவருமே சொல்லற்றவர்கள் ஆனார்கள். சற்று நேரத்திலேயே சூடான உணவு வந்தது. அவர்கள் வெறிகொண்டு உண்பது வழக்கம். சில கணங்களிலேயே உண்டு முடித்து அப்படியே படுத்து இன்னொரு சொல் இன்றி துயில்கொண்டுவிடுவார்கள். தன்னைச் சூழ்ந்து ஒலித்த குறட்டையோசைகளை கேட்டபடி விண்மீன்களை நோக்கி சாரிகர் படுத்திருந்தார்.

# களிற்றியானை நிரை - 23

## பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 6

அவந்தியின் எல்லை கடப்பது வரை சாரிகர் பாலை என்பது என்னவென்று அறிந்திருக்கவில்லை. நூல்களில் அந்நிலத்தைப் பற்றிய பலநூறு விவரிப்புகளை அவர் படித்திருந்தார். அவையெல்லாம் வெறும் சொற்கள் என்பதை அவ்விரிவின் முன் விழிதிகைத்து நின்றிருக்கையில்தான் உணர்ந்தார். பாலை தொடங்குவதை அவர் உணர்ந்திருக்கவில்லை. அவந்தியின் எல்லைவரை பாலை நிலம் இல்லை என்பதே அவர் அறிந்திருந்தது. ஆனால் பாலை என அறியப்படும் நிலம் நெடுந்தொலைவுக்கு முன்னரே நால்வகை நிலத்தின் திரிபென தெரியத்தொடங்கியது.

மரங்கள் குற்றிலைகளும் விறகென உலர்ந்த கரிய பட்டைகள் பொருக்கோடிய அடிமரங்களும், குறிய உடல்களும் கொண்டவையாக மாறின. புதர்கள் கரும்பச்சை வண்ணத்துடன், முட்களுடன் சிறு குவியல்கள்போல ஆங்காங்கே பரந்திருக்க நடுவே பொருக்கென பரவியிருந்த நிலத்தில் நுரையுடைந்து உருவான குழிகள் என திறந்த பல்லாயிரம் சிறுவளைகள் வழியாக எறும்புகள் வெளிவந்து உள்ளே சென்றுகொண்டிருந்தன. மென்மணல் குவைகளின்மேல் உடும்புகளின் கால்தடங்கள். முட்களில் சிலந்திவலைக்குழிகள். காற்றில் மண் எழுந்து வந்து முகத்தை அறைந்தது. வெந்த புழுதியின் மணம் அதிலிருந்தது.

ஆனால் அவர் விழிகளுக்குள் அவந்தியின் பசியவயல்களே எஞ்சியிருந்தன. மூன்று நாட்களில் உழவன் என முழு வாழ்வொன்றை வாழ்ந்து மீண்டு எழாமல் இருந்தார். கண்களுக்குள் வெயில் பொழிந்து நோக்கு அழியுமளவுக்கு பாலை கண்முன் விரிந்தபோதுதான் “அணுகிவிட்டோமா?” என்றார். “இதுதான் பாலை” என்று துணைவந்த அவந்திநாட்டு வழிகாட்டி சொன்னான். பாலையில் செல்வதற்குரிய அகன்ற மென்மரச் சகடங்கள் கொண்ட வண்டிகள். அவற்றை அத்திரிகள் இழுத்தன. அவற்றின் கால்களில் அகன்ற லாடங்கள் கட்டப்பட்டிருந்தன. வண்டிகள் மணல் நெரியும் ஒலியுடன் பாலைமேல் சென்றன.

“இன்னும் பன்னிரு நாட்கள்... ” வழிகாட்டி சொன்னான். “ஒவ்வொரு நாளும் உரிய சோலையை சென்றடையவேண்டும். ஒருமுறை பிந்தினால்கூட தப்பலாம். இருமுறை பிந்தினால் பாலை நம்மை கவ்விக்கொள்ளும்.” அவர் அந்நிலத்தை நோக்கிக்கொண்டு வண்டியில் அமர்ந்திருந்தார். இனிய நிலமெனத் தோன்றியது. மென்மையான அடிவயிறு போன்ற மணற்கதுப்புகள். உறுதியான புதர்கள். மணல்மேல் ஓர் ஓநாயின் காலடித்தடம் பக்கவாட்டில் அணிந்த பொற்சரம்போல ஓடிச்சென்றது.

அதன் அழகில் அவர் விழியிமைக்காமல் ஒன்றியிருந்தார். வெண்மையா பொன்னிறமா செம்மையா என அறியமுடியாமல் நிலத்தின் வண்ணம் மாறிக்கொண்டே இருந்தது. அவ்வப்போது வந்த பாறைகள் அள்ளிவைக்கப்பட்ட ஊன்கதுப்பென ஒருகணம் திகைக்கச் செய்தன. வெல்லம்போல நாவூறச் செய்தன மறுகணம். நெய்க்குவை என மென்மையாக வழிக்கப்பட்டவை. வெண்ணைப் படிவுகள் என அமைந்தவை. அரக்குப்பலகைகள்,

கல்லில் எழுந்த காளான்கள், குடைகள், பூதங்கள் செதுக்கிய விந்தை வடிவங்கள், கரைந்தழிந்த முகங்கள்.

“வழிமயக்கும் பலநூறு தெய்வங்களின் வெளி இது. இங்கிருந்து கிளம்பும்போது பதினெட்டு அடையாளங்களை குறித்துக்கொள்ள வேண்டும். ஒன்றுகூட பிழைபடலாகாது. ஒன்று பிழைத்தாலும் வழி விலகிவிடுவோம். அரை அடி பிழைத்தால் ஆயிரம் காதம் தவறும் வெளி இது என்பார்கள் முன்னோர். சற்று அப்பால் எங்கோ உப்புப்பாலை ஒன்று உள்ளது. வழிதவறிச் செல்பவர்களை விழுங்கி உண்ணும் வெண்பூதம் அது.” அவர் நெஞ்சு நிறைந்து பெருமூச்செறிந்தார். விழிவழியே நுழையும் காட்சி உடலை நிறைக்க முடியும் என முதல்முறையாக அறிந்தார்.

ஒருநாளுக்குள் அவர் பாலைநிலத்து நாடோடிகளில் ஒருவனாக மாறிவிட்டிருந்தார். அன்று மாலை அவர்கள் ஒரு சோலையில் தங்கினர். முன்பு அது பாலை வணிகர்களின் அந்திச்சோலையாக திகழ்ந்திருந்தது. முள்மரங்கள் செறிந்த சோலை சுழிப்பெனச் சரிந்து சென்று கலங்கிய நீர் நிறைந்த ஊற்றுச்சுனையை அடைந்தது. அதில் சருகுகள் மண்டி பச்சைநிறப் பாசி பரவிய நீர் நிறைந்திருந்தது. சூழ்ந்திருந்த மென்சேற்றுப்பரப்பில் பலநூறு காலடிகள். ஓநாய்கள், பாலைவன ஆடுகள், கீரிகள், ஒரு சிறுத்தையின் காலடிகூடத் தெரிந்தது. விலங்குகளுக்கு நீர்காட்டினார்கள். அவை செவிவிடைத்து நீள்மூச்செறிந்து உடல்விதிர்த்து மயிர்ப்படைந்தபடி நீர் அருந்தின.

“சுனையருகே தங்கலாகாது. இங்கே நீர் அருந்த விலங்குகள் வரும்” என்று வழிகாட்டி சொன்னான். “நீருடன் நாம் சென்று அந்தப் பாறைக்கு மறுபக்கம் அமரவேண்டும். அதுவே வழக்கம்.

அங்கே மணல்காற்றை பாறை தடுத்துவிடும்.” “இங்கே அனல் மூட்டினால் விலங்குகள் அணையாதல்லவா?” என்று சாரிகர் கேட்டார். “ஆம், ஆனால் அவை நீர் அருந்த முடியாது. பாலையில் எந்த உயிரின் குடிநீரையும் இன்னொரு உயிர் பறிக்கலாகாது. அதை கொடுங்காற்றுகளின் தெய்வங்கள் விரும்புவதில்லை.”

குடிநீரை கொப்பரைகளில் அள்ளிக்கொண்டு அவர்கள் நட்டுவைக்கப்பட்ட கற்பலகைபோல் சரிந்து எழுந்து நின்ற நிலைப்பாறைக்கு அருகே சென்றனர். அங்கே அதற்கு முன் தங்கியவர்கள் வைத்த கலங்களும் எஞ்சிய விறகும் உப்பும் இருந்தன. விலங்குகளுக்கு எட்டாத இடத்தில் பலர் உண்பதற்குரிய அரிசியும் பருப்பும் ஒரு துணியில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. நீரை மென்மணல் நிறைந்த குடுவையினூடாக விட்டு மும்முறை அரித்து தெளியவைத்து அருந்தினர். வீரர்கள் உணவு சமைக்கத் தொடங்கினர்.

சாரிகர் பாலையில் அந்தி அணைவதை நோக்கிக்கொண்டிருந்தார். கதிரவனை அத்தனை சிவப்பாக முன்பு கண்டதில்லை என்று தோன்றியது. முகில் இல்லாத வெட்டவெளியான நீலவானம். ஆனால் அது கலங்கி சிவந்து குருதிக்கடல் என ஆகியது. கதிரவன் மேல்திசை விளிம்பில் இறங்கிய பின்னரும் நெடுநேரம் ஒளி இருந்தது. தொடுவான் கோடு மாபெரும் வில் என வளைந்து சூழ்ந்திருந்தது. வானிலிருந்து அறியா ஒளியொன்று இறங்கி மண்ணை துலங்கச் செய்தது.

கண்கள் ஒளிர ஓர் ஓநாய் சுனைநீர் நோக்கி சென்றது. இருட்டு செறிவடையும்தோறும் விலங்குகளின் கண்மின்களும் உறுமலோசைகளும் செவியடிப்புகளும் கேட்டன.

பாலைச்சோலையே ஓர் உயிரென மாறி ஓசையிட்டுக்கொண்டிருந்தது. அப்பால் ஓர் உயிர் அணுகிவருவதை சாரிகர் கேட்டார். அதன் பின்னரே அதை கண்டார். “அது என்ன?” என்றார். “மானுடன்” என்று வழிகாட்டி சொன்னான். “பெரும்பாலும் ஏதோ தனித்த நாடோடி. அவன் வழிதவறியிருக்க வேண்டும்.”

அவன் வந்துகொண்டே இருந்தான். பின்னணியில் ஒளிவிட்ட பாலைநிலத்தின் பகைப்புலத்தில் அவன் உடல் துலங்கியது. தாடிமயிர்களைக்கூட காணமுடிந்தது. அவன் நின்று “நாடோடி, தனியன்” என்றான். “அணுகுக!” என்றான் வழிகாட்டி. அவன் அணுகி வர மேலும் பொழுதாகியது. மிகமிக மெல்ல அவன் வந்தான். அவர்கள் முன் வந்து நின்று மூச்சிளைத்தான். “அமர்க, நீர் அருந்துக!” என்று வழிகாட்டி சொன்னான். “உணவு ஒருங்கிக்கொண்டிருக்கிறது.” அவன் “என்னால் நெடுநேரம் உணவுண்ண முடியாது. நீர் மட்டுமே எனக்குத் தேவை” என்றான். பின்னர் கால்மடித்து மணலில் அமர்ந்தான். கைகளை ஊன்றி உடலை நிமிர்த்து வானை நோக்கினான்.

விண்ணில் மீன்கள் எழுந்துகொண்டிருந்தன. மழைத்துளிகள் அப்படியே வானில் தேங்கி நிலைகொண்டதுபோல. அத்தனை விண்மீன் செறிவை சாரிகர் அதற்கு முன் கண்டதில்லை. பெரிய விண்மீன்கள் பழங்கள்போல, கங்குகள்போல, கண்கள்போல, மணிகள்போல சுடர்கொண்டு நின்றன. இடைவெளிகள் முழுக்க மணல்போல மீன்குவைகள். மீன்களின் ஒளியே ஒவ்வொரு மணற்பருவையும் நோக்குவதற்குப் போதுமானதாக இருந்தது. நாடோடி அவர்கள் அளித்த நீரை வாங்கி அதில் ஓரிரு சொட்டுக்களை உதடுமேல் விட்டுக்கொண்டான். அவன் உடல் உலுக்கியது.

பெருமூச்சுகளுடன் மெல்ல தளர்ந்தான். பின்னர் "தெய்வங்களே" என முனகியபடி மீண்டும் சற்றுநீரை வாயில் விட்டுக்கொண்டான். நாவில் நீரை நிறுத்திக்கொண்டு ஊழ்கத்தில் என தலைகுனிந்து அமர்ந்திருந்தான். நெடும்பொழுது கழித்தே இன்னொரு மிடறு நீரை நாவில் விட்டான். "நீர் இனிது" என்றார் சாரிகர். "ஆம், நீரே இனிது" என்று நாடோடி சொன்னான். "நீரின்றி அமையாது உலகு." சாரிகர் புன்னகைத்தார். "எங்கள் குடியில் அனைத்து மங்கலங்களுக்கும் நீரையே சான்றாக்குவார்கள். அனைத்து உறுதிகளையும் நீர் தொட்டே செய்வார்கள்."

"நீர் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது, அனைத்துமாக தான் மாறுவது" என்று சாரிகர் சொன்னார். "ஆகவேதான் எங்கள் குலங்களில் அனலைச் சான்றாக்குகிறார்கள். அனல் அனைத்தையும் தன்னை நோக்கி இழுப்பது. அனைத்தையும் அழித்து நிலைகொள்வது. நூலோர் சொல்லும் சான்றோர் நெறியும் பெண்ணின் கற்பும் அனலால் நிலைநிறுத்தப்படுவன என்பது எங்கள் வழிமரபு." நாடோடி "ஆம், வடவர்க்கு அனலே தெய்வமென கேட்டிருக்கிறேன். அனலவனை முதல் தந்தை என்கிறார்கள் அவர்கள். ஆனால் எங்கள் தென்னிலத்தில் நீரே முழு முதல் அன்னை. முதன்மைத் தெய்வம்" என்றான்.

உணவு ஒருங்கியிருந்தது. மரக்குடுவைகளில் அரிசியும் பருப்பும் கீரையும் கிழங்கும் இட்ட கஞ்சியை கொண்டுவந்து அனைவருக்கும் அளித்தான் காவலன். சாரிகர் அதை அருந்தத் தயங்கியபடி அமர்ந்திருந்தார். நாடோடி "அருந்துக... நீங்கள் உண்பதைக் கண்டு என் நாவில் நீர் ஊறுமென்றால் நன்று" என்றான். அவர் உண்ணத்தொடங்கினார். அவர்கள் உண்ணும் ஓசைகள் அரையிருளில் ஒலித்தன. மெல்லிய காலடிகள்போல,

நீர்த்துளிகள் உதிர்வதுபோல, பல்லியோசைபோல. நாடோடி மீண்டும் மீண்டும் துளித்துளியாக நீரை அருந்திக்கொண்டிருந்தான்.

சாரிகர் விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தார். பாலையில் இருந்து காற்று வீசத்தொடங்கியது. அதன் ஓசை கடல் அலை என ஒலித்தது. மழை அணுகிவருவது போலிருந்தது. மழையென மணல் அறைந்தது. நிலைப்பாறை அவர்களை காத்தது. மணல் அலையை அது கிழித்தது. கிழிபட்ட முனைகள் துடிதுடித்தன. சீழ்க்கைகள், எக்களிப்புகள், சீறல்கள், அறைதல்கள், ஊளைகள். அவர் அதை கேட்டபடி துயில்கொண்டார். துயிலுக்குள் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உரிய ஓசைகள் என்று அறிந்தார். நான்கு பக்கமும் திறந்த நான்கு வாய்கள் கொண்ட ஆவகன், சுழிக்கும் வாய்கொண்ட பிரபாஹன், நாவுகள் எழுந்து சுழன்று பறக்கும் பீபஹன், சிம்மப்பிடரி கொண்ட பரபாகன், செங்குத்தாக எழுந்த பெருநாகம் போன்ற உத்தஹன், அலையலையென எழுந்த சம்பகன், கழுகுவடிவம் கொண்ட பரிபகன்.

அவர் விடாய்கொண்டு நடுங்கியபடி விழித்துக்கொண்டார். நாடோடி கையில் கஞ்சிக் குடுவையுடன் அமர்ந்திருந்தான். “நீர் வேண்டுமா?” என்று குடுவையை நீட்டினான். அவர் அதை வாங்கி விழுங்கினார். “நீரை சுவைத்து உண்ணவேண்டும். இப்புவியில் தெளிநீர்போல சுவையான பிறிதொன்றில்லை. அதை உணர பாலைக்கு வந்தாகவேண்டும்” என்று அவன் சொன்னான். அவர் நீரை வாயில் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார். நீர் ஓர் இனிய எண்ணம்போல் இருந்தது. ஒரு மந்தணம்போல.

“என் பெயர் பிம்பிகன்” என்று நாடோடி சொன்னான். “நான் கிழக்கே கலிங்கத்தைச் சேர்ந்தவன்.” சாரிகர் “வணிகம் செய்கிறீரா?” என்றார். “இல்லை, நாடோடி” என்றான் பிம்பிகன். “நாடோடி என்றால் ஏன் இந்தப் பாலைக்கு வரவேண்டும்?” என்று சாரிகர் கேட்டார். “இதற்கெல்லாம் மறுமொழி என உண்டா என்ன? தெற்கிலிருந்து வடக்கே செல்கிறார்கள். வடக்கிலிருந்து தெற்கே செல்கிறார்கள். அதைப்போல கிழக்கிலிலிருந்து மேற்கே செல்வதும் ஒரு வழக்கம். மறுஎல்லையில் விடுதலை உள்ளது என்னும் நம்பிக்கை மானுடனை என்றும் அலைக்கழிப்பது.” அவன் சிரித்து “இங்கே மேற்குப்பாலையில் இருந்து கலிங்கத்திற்கு வந்த ஒருவனிடமிருந்தே இங்கு வரவேண்டும் என்னும் எண்ணத்தை அடைந்தேன்” என்றான்.

“நீர் தனியாக பாலையில் வந்திருக்கலாகாது” என்று சாரிகர் சொன்னார். “ஆம், ஆனால் வந்த பின்னரே அது தெரிகிறது. நல்லவேளையாக இருட்டுவதற்கு முன் உங்கள் புகையை பார்த்தேன்.” சாரிகர் “நீர் உயிர்வாழவேண்டும் என்று ஊழ்” என்றார். “எனக்கு அதில் பெரிய வேறுபாடு ஏதும் தெரியவில்லை. வாழ்க்கைக்கு அப்படி ஆழ்பொருள் என ஏதும் இருப்பதாக நான் எண்ணவில்லை” என்றான் நாடோடி. சாரிகர் “நாடோடியாக நீர் கிளம்பியபின் அறிந்துகொண்டது என்ன?” என்று அவனிடம் கேட்டார். பிம்பிகன் சற்று நேரம் தலைகுனிந்து அமர்ந்திருந்தான். பின்னர் திரும்பி படுத்து துயில்கொண்டிருந்த வீரர்களை பார்த்தான். அப்பால் அத்திரிகள் பாறையுடன் உடல்சேர்த்து மூன்று கால்களில் தளர்ந்து நின்றிருந்தன.

சாரிகர் “கூற இயலாததவை எனில் தேவையில்லை” என்றார். “இல்லை, அவ்வாறல்ல” என்று அவன் சொன்னான். “நான் சொற்களாக அவற்றை சேர்த்துக்கொள்ளவில்லை. அல்லது சேர்த்துக்கொண்டிருந்த சொற்குவைகளை என் பயணத்தில் ஒவ்வொன்றாக இழந்துவிட்டேன். எஞ்சிய எண்ணத்திலிருந்து உருவான தெளிவுக்கு என்னிடம் சொற்கள் இல்லை.” சாரிகர் “இப்பயணத்தால் நீங்கள் அகம் மாற முடிந்ததா?” என்றார். “உருமாறுவேன் என்று எண்ணினேன். அகமும் மாறும் என்று மாறிய பின்னரே அறிந்தேன். இடம் மாறினால் அகம் மாறிவிடும். அகம் என்பது ஓர் ஆடிப்பாவை அசைவு மட்டுமே” என்றான் பிம்பிகன்.

“எனில் நன்று, நீர் அடைந்தது விடுதலை” என்றார் சாரிகர். “ஆம், மெய்யாகவே விடுதலை” என்று பிம்பிகன் சொன்னான். “மெய்யாகவே பெரிய விடுதலை. நீர் கண்விழிப்பதற்கு முன் அதைத்தான் எண்ணிக்கொண்டிருந்தேன்.” அவன் சிரித்து “என் வாழ்நாளில் இத்தனை பெரிய இன்பத்தை அடைந்ததில்லை. இன்பம் என்பது இந்நிலையிலேயே அடையப்பட முடியும். முழுமையான எடையின்மை இது. பொருட்சுமைகள் இல்லை. கடமைச்சுமைகள் இல்லை. எண்ணச்சுமைகள் இல்லை. நினைவுச்சுமைகளும் இல்லை. வெட்டவெளியில் விண்மீன்களுக்குக் கீழே அமர்ந்திருக்கிறேன். தெய்வங்களே இந்தத் தருணத்தை எனக்கு அளித்தீர்கள் என எண்ணிக்கொண்டேன்” என்றான்.

“மிக அப்பால் அவனை கண்டேன். பெரும்பாறைகளால் மண்ணோடு அழுத்தப்பட்டவன். திசைகள் சுவர்களென மாறிச் சூழ்ந்து நெருக்கப்பட்டவன். வெடித்துவிடும்படி உள்ளிருந்து விம்முபவன். அவனை எண்ணும்போது அத்தனை உளநெகிழ்வு

ஏற்படுகிறது. எத்தனை எளியவன், எத்தனை சிறியவன்! நன்று, இறுதியிலேனும் அவனுக்கு வாசல்கள் திறந்தன. வழிகள் தெளிந்தன. அவன்மேல் ஊழ் கனிவுகொண்டிருக்கிறது” என்றான் பிம்பிகன். அவர் கூர்ந்து நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தார். “அவனைப்பற்றி என்னால் சொல்லமுடியும். அவன் இன்றில்லை” என்று பிம்பிகன் சொன்னான்.

அவன் ஓர் வணிகனின் மைந்தன். உலகமறியாமல் தந்தை சேர்த்த செல்வத்தை செலவிட்டு வாழ்ந்தான். இசை பயின்றவன். யாழ் மீட்டுவான். நாடகக்கலையை அறிந்தவன். தந்தை அவனுக்கு மணம்புரிந்து வைத்தார். இரு மைந்தர் பிறந்தனர். ஒருநாள் தந்தை மறைந்தார். தந்தையுடன் இணைவணிகர் அவ்வூரின் முதல்வர். குடித்தலைவரும்கூட. அவர் ஒரே நாளில் அவனுடைய செல்வங்கள் அனைத்தையும் கவர்ந்துகொண்டார். அவரிடம் அதற்கான அத்தனை சான்றுகளும் இருந்தன. அவர் மன்றுகூடி நீர்தொட்டு ஆணையிட்டார். அவருக்கு அவன் தந்தை கடன்பட்டிருப்பதாக சொன்னார்.

அது பெரும் வஞ்சம் என அனைவரும் அறிந்திருந்தனர். ஆனால் செய்வதற்கு ஒன்றும் இல்லை. அவன் இல்லாளுடன், குழந்தைகளுடன் தன்னந்தனியனாக நின்றான். அவன் அவரை அணுகி மன்றாடினான். தன் குடியை அழித்துவிடவேண்டாம் என்று கண்ணீர்விட்டான். அவர் அவனை ஏளனம் செய்து துரத்திவிட்டார். சீற்றம் கொண்டு அவரை தாக்கினான். அவருடைய காவலர்கள் அவனை அடித்து குருதி வழிய தூக்கி வீசினர். முற்றிலும் செயலின்மையை உணர்கையில் மானுடர் சென்றுசேரும் இருள் ஒன்று உண்டு.

கண்ணீருடன், அனலென எரியும் வஞ்சத்துடன் அவன் தன் இல்லத்தின் இருளில் கிடந்தான். அவன் மனைவி அவனை தேற்றினாள். தன்னிடம் எஞ்சிய நகைகளை அவனுக்கு அளித்து தாம்ரலிப்திக்குச் சென்று ஏதேனும் சிறுவணிகம் செய்யும்படி சொன்னாள். பொருளீட்டி அப்பருவத்திற்குள் திரும்பி வரும்படியும் அதுவரை எஞ்சிய நகையுடன் அவ்வில்லத்தில் தான் வாழ்வேன் என்றும் கூறினாள். அவன் அந்நகையுடன் தாம்ரலிப்திக்கு சென்றான். ஆயிரம் முறை திரும்பி விழிநீர் வழியும் அவள் முகத்தை நோக்கினான். செல்லும் வழியெல்லாம் அவன் கண்ணீர் விழுந்தது.

அவனுக்கு வணிகம் தெரியவில்லை. சென்ற சிலநாட்களிலேயே வஞ்சம்பேசி அவனிடமிருந்த நகைகளை கொண்டுசென்றனர் உலுத்தர். அவன் துறைநகரில் அலைந்தான். அடிமையென தன்னை சேர்த்துக்கொண்டு மூட்டை சுமந்தான். வேறு எதுவும் அவனுக்கு தெரிந்திருக்கவில்லை. உடலுழைக்கப் பழகாதவன் ஆகையால் நோயுற்றான். நோக்க எவருமில்லாது துறைநகரின் தெருக்களில் கிடந்தான். இரவலனானான். வஞ்சம் கொண்டான். தீமை பயின்றான். தயங்காதவனாக மாறினான். திருடத் தொடங்கினான். கற்றுத்தெளிந்து எழுந்தான். சேர்த்த பணத்தால் சிறு வணிகமொன்றை தொடங்கினான். எவரையும் எப்போதும் ஏய்க்க ஒருங்கினான். வென்று பணமீட்டினான்.

பொன்னணிகளும் பட்டாடையும் அணித்தேரும் பேழைகளும் பொதிகளுமாக அவன் தன் ஊருக்குத் திரும்பினான். அங்கே அவன் மனைவி அவனை ஏமாற்றிய தந்தையின் தோழரின் ஆசைக்கிழத்தியாக வாழ்வதை கண்டான். அவர் இல்லத்தை ஒட்டிய சிறு வீட்டில் அவள் அவனுடைய இரு

மைந்தர்களுடன் வாழ்ந்தாள். அவன் தன் இல்லத்தைச் சென்றடைந்தபோது அது பிறிதொருவருக்கு உரியதாகியிருந்தது. அவளை உசாவி அறிந்து அவள் இல்லத்தின் முன் சென்று நின்றான். செல்லும் வழியிலேயே அவள் வாழும் முறையை அறிந்துகொண்டான்.

அவள் அவனைக் கண்டதும் திகைக்கவில்லை. உணர்ச்சி வறண்ட விழிகளால் நோக்கி அசையாமல் நின்றாள். அவன் மைந்தர்கள் இருவரும் அவளருகே வந்து நின்றனர். “நீதானா? நீதான் இப்படிச் செய்தாயா?” என்று அவன் கேட்டான். “என் மைந்தர் பட்டினியாக இருந்தனர்” என்று மட்டும் அவள் சொன்னாள். அந்தத் தயக்கமின்மை அவனை வெறிகொள்ளச் செய்தது. உடற்குருதி முழுக்க தலைக்கு ஏறியது. கூச்சலிட்டபடி தன் வாளை உருவிக்கொண்டு அவளை வெட்டும்பொருட்டு பாய்ந்தான். அவள் “கொல்லுங்கள், உங்கள் மைந்தர்களுக்கு அன்னையில்லாமலாகும்” என்றாள்.

அவன் வாள் தாழ்ந்தது. “உன்னை அல்ல, கொல்லப்படவேண்டியவன் அவன்” என்று கூவியபடி அவன் திரும்ப “உங்கள் மைந்தர் உண்டது அவர் அளித்த உணவை” என்று அவள் சொன்னாள். அவன் கையிலிருந்து வாள் உதிர்ந்தது. தலையில் ஓங்கி ஓங்கி அறைந்தபடி அவன் அங்கிருந்து ஓடினான். உடலெங்கும் மலம் பூசப்பட்டிருப்பதுபோல ஒருகணம் உணர்ந்தான். தன்னை எரியூட்டவேண்டும் என்று வெறிகொண்டான். கூவி அழுதபடி அவன் உடல் ஒடுக்கி ஆலயமுகப்பில் அமர்ந்தான். பின் அங்கிருந்து எழுந்து ஓடினான். அவ்வூரிலிருந்து அந்நிலத்திலிருந்து அகன்று செல்லவேண்டும் என்பதே அவன் இலக்காக இருந்தது.

நெடுநேரம் அமைதி நிலவியது. மீண்டும் பிம்பிகன் சொல்லத் தொடங்கினான். “அவன் நல்லூழ் கொண்டவன். கலங்குவது தெளியும் என்னும் நெறிப்படி அவன் விடுதலைகொண்டான்” என்று அவன் சொன்னான். “அவன் அலையும் வழியில் ஒருமுறை வறண்ட காட்டின் விளிம்பில் அமைந்த ஒரு சிறுகுடிலில் நுழைந்து குடிக்க நீர் கேட்டான். அங்கிருந்த முதியோள் அளித்த நீரில் ஒரு சிறு கொசுப்புழு துடித்தது. அவன் நீரை அருவருப்புடன் தாழ்த்த அம்முதியோள் ‘அருந்துக மைந்தா, கலங்காத கங்கை அமுதாவதில்லை!’ என்றாள். அவன் நீரை வீசிவிட்டு திரும்பி நடந்தான்.”

அவன் நீள்பெரும்பாலையில் அலைந்து ஆறு நாட்கள் நீரில்லாது தவித்து நாவறண்டு வெடித்து உடல் ஓய்ந்து சென்றமைந்த சிறுசுனையில் ஒரு செந்நாய் செத்து அழுகி மிதந்தது. அந்நீரை அள்ளி அள்ளி அமுதென அருந்தினான். விடாய் முடிந்து சூழ நோக்கியபோது அங்கிருந்த அத்தனை மரங்களும் வேர்நீட்டி அந்த நீரை அருந்திக்கொண்டிருப்பதை கண்டான். கலங்கி அமுதாகும் கங்கையை அவன் அப்போது உணர்ந்தான். அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் அதன் பெருங்கனிவை அறிந்தான். கண்ணீர் விட்டு அழுதான். அவனுடைய விடுதலை அங்கே நிகழ்ந்தது.

மீண்டும் நெடுநேரம் சொல் எழா அமைதி சூழ்ந்திருந்தது. “நான் இதிலிருந்து எதை புரிந்துகொள்ளவேண்டும்?” என்று சாரிகர் கேட்டார். அவன் திடுக்கிட்டவன்போல திரும்பி நோக்கி “சொல்லில் இருந்து எவரேனும் எதையேனும் புரிந்துகொள்ளமுடியுமா என்ன?” என்றான். சாரிகர் எரிச்சலுடன் “எனில் ஏன் இதை சொன்னீர்?” என்றார். “இச்சொல் வந்து உன்னை இடறும் ஒரு தருணம் அமையலாம்” என்றான்

பிம்பிகன். அவன் சொல்வதென்ன என்று சாரிகருக்கு புரியவில்லை. வாழ்வின்பொருட்டு நெறிகளைக் கடத்தல் முறையென்று புரிந்துகொண்டீர்களா என்று அவர் கேட்க எண்ணினார். ஆனால் பிம்பிகன் தன் வாயில்களை ஒவ்வொன்றாக சாத்திக்கொண்டு மிக மிக தொலைவுக்கு சென்றுவிட்டிருந்தான்.

நீண்ட பெருமூச்சுடன் சாரிகர் அசைந்து அமர்ந்தார். பிம்பிகன் கலைந்து திரும்பி நோக்கி சொன்னான் "துயில்வோம்… நாளை புலரியில் எழவேண்டும் அல்லவா?" சாரிகர் "ஆம்" என்றபடி படுத்துக்கொண்டார். சிலகணங்களிலேயே நாடோடியின் குறட்டை ஒலி கேட்கத்தொடங்கியது. அவர் விண்மீன்கள் இறங்கி இறங்கி வந்து தன்னைச் சூழ்ந்து அசையாத அகல்சுடர்கள் என நிறைந்து ஒளிவிடுவதை பார்த்தபடி படுத்திருந்தார். காற்று மீண்டும் ஊளையுடன் எழுந்து சூழ்ந்தது.

# களிற்றியானை நிரை - 24

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 7**



நினைத்திருந்ததைவிட துவாரகைக்கு தொலைவில் முன்னதாகவே அஸ்வபதம் அமைந்திருந்தது. அதை அணுகுவதுவரை பாலை முடிந்து புல்வெளி தொடங்குவதை சாரிகர் உணர்ந்திருக்கவில்லை. பாலை தொடங்கியதைப் போலவே முடிவுற்றதையும் அறியமுடியவில்லை. அவர் விழிகளும் செவிகளும் உள்ளமும் சூழ்ந்திருந்தவற்றிலிருந்து உருவாக்கிக்கொண்ட பாலைநிலத்திலேயே அவர் வாழ்ந்துகொண்டிருந்தார். பாலையிலேயே பிறந்து

வாழ்ந்துகொண்டிருப்பவர்போல. அதன் ஒவ்வொரு மண்பருவையும் நன்கறிந்தவர்போல. அந்நிலத்தின் பாறைகளில், செடிகளில், உயிர்களில் ஒன்று என.

காற்றின் இடைவிடாத ஓலம், மணல்மழை, கண்கூசும் பகலொளி, இரவின் மிளிர்வொளி, மண்வெந்த மணம், அரிக்கப்பட்டுநின்ற பாறைகள், குற்றிலை மரங்கள், முட்புதர்கள். பாலை என்பது ஒற்றைநிலம் அல்ல என அவர் அதற்குள் நுழைந்த பின்னரே புரிந்துகொண்டார். அதில் சோலைகள் இருந்தன. உப்பு பொரிந்த சிறு ஏரிகளும் இருந்தன. ஆகவே புல்வெளியையும் பாலையெனவே பார்த்துக்கொண்டிருந்தார். பாலையில் நுழைந்த பின்னர் அவர் நோக்கின் கோணம் மாறிவிட்டிருந்தது. அது நெடுந்தொலைவுகளை மட்டுமே சுழன்று வளைத்தெடுத்து சூழலை உருவாக்கியது. அண்மைக்காட்சிகளை அறியவில்லை.

புல்வெளியில் மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் அவர்களை நோக்கி ஓலமிட்டபடி கூட்டமாக அணுகிவந்தன. அவற்றைக் கண்டதும் முதல்முறையாக அவர் ஒரு துணுக்குறலை அடைந்தார். பசு ஒன்றைக் கண்டு நெடுநாட்கள் ஆகிவிட்டன என்று உணர்ந்தார். வண்டியிலிருந்து தலைநீட்டி சாரிகர் “எந்த இடம்?” என்றார். “நெருங்கிவிட்டோம். துவாரகை இன்னும் நான்கு காதம் தொலைவில்தான்” என்றான் காவலன். “அங்கே காவலர் எவருமில்லையா என்ன?” என்று சாரிகர் கேட்டார். அத்தனை அணுகிய பின்னரும்கூட எவரும் அவர்களிடம் எவரென உசாவவில்லை. காவலன் மறுமொழி சொல்லாமல் கண்மேல் கைவைத்து நோக்கி “அங்கே முறையான காவல் ஏதும் இல்லையென்றே தோன்றுகிறது” என்றான்.

அவர்கள் மேலும் அணுகியபோது அஸ்வபதத்தின் சிறிய கோட்டை கண்ணில் பட்டது. பாறைகளை வெட்டி அடுக்கி உருவாக்கப்பட்ட உயரமில்லாத கோட்டையின்மேல் மரத்தாலான காவல்மாடங்கள் இருந்தன. அவர்கள் அணுகுவதைக்கண்டு அதன்மேல் ஒரு கொடி எழுந்து அசைந்தது. காவலன் தன் கையிலிருந்த கொடியை அசைத்து மறுமொழி அளித்தான். அங்கிருந்து ஒரு புரவி கிளம்பி அணுகி வந்தது. அது அணுகுவதை நோக்கியபடி அவர்கள் சென்றனர். புரவியிலிருந்து இறங்கிய யாதவக் காவலர்தலைவன் "இங்கே எவரும் வருவதாக எங்களுக்கு செய்தி வரவில்லை" என்றான். சாரிகர் "முறையான தூது முன்னரே அளிக்கப்பட்டுவிட்டதே?" என்றார். அவன் குழம்பி "உண்மையில் துவாரகையிலிருந்து எந்தச் செய்தியும் வருவதில்லை" என்றான். "எங்கள் தூது அஸ்தினபுரியில் இருந்து. இவர் எங்கள் அமைச்சர்" என்றான் அவருடைய காவலர்தலைவன்.

யாதவக் காவலர்தலைவன் குழம்பினான். பின் அவனே எண்ணி முடிவெடுத்து "எதுவாயினும் வருக!" என்று சொல்லி அவர்களை அழைத்துச்சென்றான். அவனுடைய நடையிலேயே அவன் யாதவன் என்று தெரிவதை சாரிகர் மெல்லிய புன்னகையுடன் பார்த்தார். அவர்கள் பொறுமையானவர்கள், காத்திருக்கும் கலை கற்றவர்கள். ஆனால் முறைமைகளில், சுற்றிவளைக்கும் மரபுச்சொற்றொடர்களில் சலிப்புறுபவர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் படைக்கலப்பயிற்சிக்கும் அரசுப்பயிற்சிக்கும் அப்பாலிருந்து மிக எளிதாக வெளியே வருபவர்கள். அவர்களை எளிய சொற்கள் வழியாக எளிதில் அணுகிவிடமுடியும்.

“தங்கள் பெயர் என்ன?” என்று அவர் கேட்டார். “சங்கன்” என்று அவன் சொன்னான். அவ்வினாவிலேயே முகம் மலர்ந்துவிட்டான். “நீங்கள் விருஷ்ணிகுலத்தவர் அல்லவா?” என்று சாரிகர் கேட்டார். “ஆம், நான் இளைய யாதவர் பிறந்த அதே ஊரை சேர்ந்தவன். மதுவனத்தில் அவருடன் என் தந்தை விளையாடியிருக்கிறார்” என்று அவன் சொன்னான். “ஆம், நான் அவ்வாறே எண்ணினேன். அவருடைய உடலசைவின் சாயல் உங்களிடம் உள்ளது” என்றார் சாரிகர். “நீங்கள் அவரை பார்த்திருக்கிறீர்களா?” என்றான் சங்கன் “நான் அவருக்கு அணுக்கமானவன்” என்றார் சாரிகர். “அவர் ஆணைப்படியே வந்திருக்கிறேன்.”

சங்கன் அதை முழுமையாக நம்பியதை முகம் காட்டியது. “அவர் இங்கே வருவது எப்போது?” என்று அவன் கேட்டான். “இங்கே விருஷ்ணிகள் ஒவ்வொருவரும் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்போது பிற யாதவ குலத்தவர் ஒன்றாகச் சேர்ந்துவிட்டனர். விருஷ்ணிகள் ஒவ்வொரு நாளும் சிறுமைகொள்கிறோம். போஜர்களும் அந்தகர்களும் எங்களை துரத்திவிட்டு துவாரகையை கைப்பற்றிக்கொள்ளக்கூடும் என்று சொல்கிறார்கள். அவர் மட்டுமே எங்களை காக்கமுடியும்.” சாரிகர் “அவர் வருவார். ஷத்ரியகுடியை முற்றழித்து வென்றவரால் இயலாதது ஏதுமில்லை” என்றார். அவன் சிரித்து “ஆம், அதைத்தான் எதிர்பார்க்கிறோம்” என்றான். “அது குறித்த செய்தியுடன்தான் வந்துள்ளீர்களா?”

சாரிகர் “அதை சொல்லமுடியுமா?” என்றார். சங்கன் நாணி “ஆம், அதை கேட்கக்கூடாது. ஆனால் நான் முழுமையாக அப்படி தற்கட்டுப்பாட்டுடன் இருப்பதில்லை” என்றான். “அது

எவருக்கும் இயல்வதல்ல, மேலும் நாம் அயலாருமல்ல” என்று சொன்னார். சங்கன் நகைத்து “ஆம், அதை தங்களை பார்த்தபோதே எண்ணினேன்” என்றான். “இளைய யாதவர் சென்றபின் இந்நகரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இந்நகரை செலுத்திய விசை அவரே என்பதை அவர் சென்ற மறுநாளே அனைவரும் உணரத்தொடங்கினர். உண்மையில் அவர்மேல் இத்தனை காழ்ப்பையும் கசப்பையும் இவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்க அதுவே அடிப்படை.”

கோட்டையின்மேல் மணல் சரிவாக ஏறியிருந்தது. அதன் இடுக்குகளில் முட்செடிகள் படர்ந்திருந்தன. “இங்கே குடிநீர் ஊற்றுக்கள் உள்ளனவா?” என்று கேட்டார். “ஆம், இங்கே வற்றாத எட்டு ஊற்றுக்கள் உள்ளன. அவற்றால்தான் இவ்வூர் உருவாகியது. முன்பு இது குதிரைகளை மேய்த்துக்கட்டும் இடமாக இருந்தது” என்றான் காவலர்தலைவன். “இங்குதான் விராடநாட்டு இளவரசி இருக்கிறார் என்று கூறப்பட்டது” என்று சாரிகர் சொன்னார். “ஆம், யாதவ அரசியர் இருவருமே இங்குதான் இருக்கிறார்கள்” என்றான் சங்கன்.

சாரிகர் திகைத்து “யாதவ அரசியர் என்றால்? சத்யபாமையும் சுபத்ரையுமா?” என்றார். “ஆம், அவர்கள்தான் இளவரசியை பார்த்துக்கொள்கிறார்கள். யாதவ அரசி சத்யபாமை முன்பிருந்தே இங்கிருக்கிறார். சுபத்ரைதேவி நீர்க்கடன் முடிக்க அஸ்தினபுரிக்குச் சென்று மீண்டார்.” சாரிகர் “ஏன் துவாரகைக்கு இளவரசியை கொண்டுசெல்லவில்லை?” என்று கேட்டார். சங்கன் “அறியேன்” என்றான். “நீர் அறிவீர்” என்றார் சாரிகர். “நான் மெய்யாகவே அறியேன். ஆனால் இங்கே இளவரசி இருப்பது ஓர் அரசமந்தணமாகவே இருக்கிறது. அங்கே துவாரகையில் இருந்தால் மந்தணத்திற்கு வாய்ப்பில்லை

என்னும் எண்ணம் இருந்திருக்கலாம்” என்று சங்கன் சொன்னான்.

கோட்டைவாலுக்கு சங்கன் ஓடிச்சென்று அவர்களை அறிமுகம் செய்ய அவர்கள் எதுவும் கேட்காமல் வண்டியை உள்ளே அனுப்பினார்கள். உள்ளே ஓரளவு காவல் இருப்பதை சாரிகர் கண்டார். ஆனால் எந்த எதிர்ப்பையும் எதிர்பார்க்காமல் நீணாள் பணியாற்றும் காவலர்களுக்குரிய சலிப்பும் ஆர்வமின்மையும் அவர்களிடமிருந்தது. ஊரின் தெருக்கள் வெண்மணலால் ஆனவை. நடுவே வண்டிகள் செல்லும் பொருட்டு பலகை அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்பலகைகள் மேல் சகடங்கள் ஓடியபோது ஒலியே எழவில்லை. அதன் பின்னரே அவர் அவை செந்நிறக் கற்பலகைகள் என்பதை கண்டார். மரம் போலவே வரிவீச்சும் சுழிப்புகளும் அலைகளும் கொண்டவை.

அஸ்வபதத்தின் இல்லங்கள் அனைத்துமே அந்த வகையான செந்நிறக் கற்களை அடுக்கி சுவர் எழுப்பி மேலே மரக்கூரை இடப்பட்டவை. மரக்கூரைகளின் மேல் மணல் படிந்து வரிகளாக அமைந்திருந்தது. கூரைவிளிம்புகளில் இருந்து பூழி சிற்றலைகளாக விழுந்தது. பல இல்லங்கள் மூன்றடுக்கு மாளிகைகள் என்பதைக் கண்டு அவர் வியந்தார். அந்தச் சிறிய ஊரில் அத்தனை மாளிகைகள் அமைந்திருக்குமென தோன்றவில்லை. பல மாளிகைகளுக்கு முன்னால் பல்லக்குகளும் தேர்களும் நின்றிருந்தன. பல இல்லங்களிலிருந்து யாழிசையும் முழவொலியும் கேட்டன. சாலைகளில் புரவிகள் வால்சுழல சென்றன.

அவ்வூரில் அயலவர் வருவது குறைவு என்று தெரிந்தது. அங்கே வணிகமோ சந்தையோ இருப்பது போலவும் தெரியவில்லை. ஆகவே சாலைகளில் குறைவாகவே

நடமாட்டம் இருந்தது. பெரிய வண்ணத் தலைப்பாகையும் மெய்ப்பையும் அணிந்த மக்கள் தெருக்களின் ஓரமாக சுருங்கிய கண்களால் நோக்கியபடி ஓய்வாக அமர்ந்திருந்தனர். பலர் வாய்மணம் மென்றுகொண்டிருந்தனர். ஒரு சூதர்குழு கைகளில் இசைக்கலங்களுடன் பேசி நகைத்தபடி சென்றது. ஏதோ ஆலயத்திற்குரிய நெய்க்கலங்களுடன் நால்வர் பேசிக்கொண்டே சென்றனர். தலைவழியே சேலைகளை சுற்றிக்கொண்ட பெண்டிர் கூட்டம்கூட்டமாக ஆலயங்களுக்கு சென்றுகொண்டிருந்தார்கள்.

“அந்திக்கு இன்னும் பொழுதிருக்கிறது. இவர்கள் ஏன் ஆலயத்திற்கு செல்கிறார்கள்?” என்று அவர் கேட்டார். “இங்கே வேறு செயல்கள் ஏதுமில்லை. இது இன்று துவாரகையிலிருந்து பாலை வேட்டைக்கு வருபவர்கள் தங்குவதற்கான ஊர். இங்கே பாலையில் முயல்கள் நிறையவே உண்டு. புரவிகளில் சென்று ஈட்டிகளை எறிந்து முயல்களைப் பிடிப்பதும் பிடித்த முயல்களை ஒருவரிடமிருந்து இன்னொருவர் கைப்பற்றுவதும் இங்குள்ள விளையாட்டு. இங்குள்ள பெரும்பாலான மாளிகைகள் கணிகையருக்குரியவை. அவர்களின் வாழ்க்கையே ஆலயங்களைச் சார்ந்ததுதான்” என்றான் சங்கன்.

“இங்கே அங்காடிகள் ஏதுமில்லையா?” என்று சாரிகர் கேட்டார். “இங்கே எந்தப் பொருளும் விளைவிக்கப்படுவதில்லை. கைவினைஞரோ ஆயரோ இங்கில்லை. வேட்டைக்கு உதவும் காவலரும் ஏவலரும் சூதரும் நிமித்திகரும் பலவகையான விளையாட்டுக்காரர்களும் மட்டுமே இங்குள்ளனர். இது அரண்மனைக்கு வெளியே ஒரு தங்குமிடம் மட்டுமே. இங்கே ஊருக்குரிய எதுவும் இல்லை என்பார்கள். இங்குள்ள குடிகள்

அனைவருமே வெளியே இருந்து வந்து தங்கியிருப்பவர்கள். ஆகவே இங்கே விற்றுவாங்கும் அங்காடிகள் இல்லை. துவாரகையிலிருந்து வண்டிகளில் பொருட்கள் இங்கே வரும்” என்று சங்கன் சொன்னான். “இங்கே கொற்றவைக்கும் பாலைநிலத்து தெய்வங்களான ஆறு காற்றுகளின் அன்னையர்களுக்கும் ஆலயங்கள் உள்ளன. இங்கு ஆலயங்களில் எல்லா நாளும் ஏதேனும் விழாக்களோ கொண்டாட்டங்களோ இருக்கும்.”

ஊரின் நடுவே மரத்தாலான ஏழு அடுக்கு மாளிகை அமைந்திருந்தது. அது ஒரு பெரிய மரக்கலம்போல தோன்றியது. துவாரகையின் கருடக் கொடியும் விருஷ்ணிகளின் கன்றுக் கொடியும் அதன்மேல் பறந்தன. “இளைய யாதவர் இங்கிருந்தபோது அவ்வப்போது வந்து தங்குவார். அயல்வணிகர்கள் வந்து தங்கி வேட்டையாடி திரும்புவார்கள். அன்றெல்லாம் இம்மாளிகையில் எப்போதும் எவரேனும் தங்கியிருப்பார்கள். நாற்பது ஏவலர்களும் அறுபது சேடியரும் நூற்றைம்பது காவலர்களும் கொண்ட அரண்மனை… இப்போது வேட்டைக்கு வருபவர்கள் எவருமில்லை” என்று சங்கன் சொன்னான். “ஆனால் அரசி இங்கிருப்பதனால் துவாரகையிலிருந்து பொருள் வந்துகொண்டிருக்கிறது. ஆகவே செயலேதும் இன்றி இவ்வூர் ஓய்வுகொள்கிறது.”

அரண்மனைக்காவலர்கள் அவர்களை தொலைவிலேயே நிறுத்திவிட்டனர். அவருடைய அனைத்துச் செய்திகளையும் தெரிந்துகொண்ட பின் அவரிடமிருந்து ஓலையை பெற்றுக்கொண்டு உள்ளே சென்றார்கள். சாரிகர் மாடங்கள் ஒன்றன் மேல் ஒன்று தூக்கி அடுக்கப்பட்டது போன்ற அந்த மாளிகையைப் பார்த்துக்கொண்டு நின்றார். அதன் கூரை

சரிந்திறங்கி விளிம்பில் மலரிதழ்போல வளைந்து மேலேறி தெரிந்தது. ஏழு இதழடுக்குகள் கொண்ட ஒரு பெரிய மலரைக் கவிழ்த்ததுபோல. கூரையின் முனைகளில் பீதர்நாட்டு சிம்மநாகம் வாய் திறந்திருந்தது. “இது பீதர்களால் அவர்களின் மாளிகைகளைப்போல அமைக்கப்பட்டது. இந்த மரம்கூட அவர்களால் கப்பல்களில் கொண்டுவரப்பட்டதுதான்” என்று சங்கன் சொன்னான்.

வெயில் இறங்கத்தொடங்கியிருந்தது. மேற்கு நோக்கி அமைந்திருந்த மாளிகைமேல் சாய்கதிரொளி பட்டு அதன் மரப்பரப்புகள் பொன்போல் சுடர்ந்தன. மாளிகையின் அனைத்துச் சாளரங்களும் முற்றம் நோக்கி சற்றே குனிந்தவைபோல் திறந்திருந்தன. மர அழிகளாலான காலதர்களினூடாக அரண்மனைக்குள் நெய்விளக்குகள் ஏற்றப்பட்டுவிட்டதை காணமுடிந்தது. மையமாளிகைக்கு இரு பக்கமும் சிறகுகள்போல ஒற்றைமாடம் கொண்ட கட்டடங்கள் நீண்டிருந்தன. வலப்பக்கம் அமைச்சும் பிறவும் எனவும் இடப்பக்கம் ஏவலர்களுக்குரியது என்றும் தெரிந்தது. ஏவலர் பகுதியில் மக்கள் புழங்கும் அசைவுகள் தெரிந்தன. அமைச்சுநிலைகள் ஒழிந்து கிடப்பதுபோலத் தோன்றியது.

வெயில் செம்மை மிளிர்வு கொண்டதும் மாளிகைமுகப்பில் நின்றிருந்த மாந்தளிர் நிறமான புரவிகளும் அனல்போல் ஆயின. மாளிகையின் ஏழாவது அடுக்கின் நடுவே சிறிய கூம்புக்கூரைக்கு அடியில் தொங்கிய பெரிய பீதர்நாட்டு மணி ஓங்கார ஒலியெழுப்பி பொழுந்து மாறுவதை அறிவித்தது. தொடர்ந்து ஊரின் வெவ்வேறு ஆலயங்களிலிருந்து மணியோசைகள் எழுந்தன. ஊரே ஒரு மாபெரும் யாழ் என ஒலித்து கார்வையுடன் அடங்கியது. தொலைவில் சங்கொலி

எழுந்தது. மேலும் மேலும் சங்கொலிகள் எழுந்தன. முகில்துளியே அற்ற வானுக்குக் கீழே அந்தச் சங்கோசை ஓர் ஏக்கம் என எழுந்து கரைந்தமைந்தது.

புறாக்கள் மாளிகையின் மாடத்து இடுக்குகளிலிருந்து சிறகடித்துச் சுழன்று முற்றம் நோக்கி இறங்கின. அரண்மனையின் முகப்பு முற்றத்திலும் செந்நிறமான கற்பலகைகள் பரப்பப்பட்டிருந்தன. முற்றத்தில் நின்றிருந்த இரண்டு தேர்களில் குருதிநிறமான பட்டுத் திரைச்சீலைகள் காற்றில் அசைந்தன. பொன்னிறம் பூசப்பட்ட பிரம்புகளால் ஆன இரு பல்லக்குகள் வெண்ணிறப் பட்டுத் திரைச்சீலைகளுடன் நின்றன. ஒவ்வொன்றின் மேலும் மாலை வெளிச்சம் வழிந்தது. பித்தளைக் குமிழிகள் சுடர்கொண்டன. வெள்ளிச் செதுக்குகள் பொன்னாயின. செந்நிறக் கற்பரப்பின்மேல் உப்புத்தூள் பரப்பப்பட்டதுபோல மினுக்கம் விரவி விரிந்தது. மிக அரிதான ஓர் ஓவியக்காட்சி என அத்தருணத்தை அது மாற்றியது.

சாரிகர் அந்த மாலையொளியின் பொன்னிறத்துக்கு நிகராக அதற்கு முன் பார்த்திருக்கவில்லை. பாலையில் மாலை என்பது நெடும்பொழுது நீளக்கூடிய ஒன்று. பல படிகளாக, பல வண்ணங்களாக, பலவகையான ஒலிகளாக அது ஒன்றிலிருந்து ஒன்றுக்கு சென்றுகொண்டே இருக்கும். அந்தி எழுந்த பின்னரும் இருள் அமைய நெடும்பொழுதாகும். இருள் திசைகளின் எல்லைகளுக்கு அப்பால் தயங்கிக்கொண்டிருக்கும். கதிர் மறைந்த பின்னரும் தொடுவானம் ஒளிர்ந்துகொண்டிருக்கும். அதன் வட்டம் அணைந்த பின்னரும் வானிலும் மண்ணிலும் அறியா ஒளியொன்று எஞ்சியிருக்கும். விண்மீன்கள் எழுந்த பின்னரே இரவு அமைந்துவிட்டதை உணரமுடியும்.

ஆனால் பாலையில் மாலை வெளிச்சம் வெறுமையென விரிந்த நிலத்தின்மேல் வானிலிருந்து பொழிந்து பரவிக்கொண்டிருக்கும். அசைவிலாது மஞ்சள்திரையென நின்றிருக்கும். ஒன்றுமே நிகழாததுபோல, பல்லாண்டுகளாக அந்தக் காட்சி அப்படியே நீடிப்பதுபோல உளமயக்கு உருவாக்கும். பாலை நிலத்தின் மாலைச்செம்மை அதைப் போன்ற மாளிகைமேல், முற்றத்தின்மேல் விழும்போது முற்றிலும் பிறிதொன்றாகத் தோன்றியது. அது கணந்தோறும் மாறிக்கொண்டிருந்தது. எவரோ நோக்கி நோக்கி ஒளியை உருமாற்றி அங்கே ஓர் ஓவியக் காட்சியை எழுப்புவதுபோல. நிழல்கள் உருமாறின. வண்ணம் இருண்டு வந்தது. எண்ணியிராக் கணம் ஒரு பரப்பு மேலும் ஒளிகொண்டு கண்களை நிறைத்தது.

மஞ்சள் ஒளியில் அனைத்து இடங்களுமே கனவுச்சாயல் கொள்கின்றன. அனைத்துப் பொருட்களும் ஊழ்கத்திலாழ்கின்றன. அந்தத் தருணத்தின் இனிமையில் அவர் உள்ளம் திளைத்துக்கொண்டிருந்தது. எதற்காகவும் இல்லாத இனிமை. அவர் எண்ணிவந்த அனைத்தையும் மறந்துவிட்டிருந்தார். அடுத்த கணத்தை அவர் எதிர்பார்க்கவுமில்லை. அக்கணத்திலேயே இருந்துகொண்டிருப்பதன் இனிமை அது. நீண்ட பயணங்களில் மட்டுமே அது அமைகிறது. ஒவ்வொன்றாக அகன்று அகன்று வெறுமைகொள்ள அந்தந்த தருணங்கள் மட்டுமே சூழ நின்றிருக்கையில் எழும் இனிமை.

அவர் பெருமூச்சுகளாக விட்டுக்கொண்டிருந்தார். மயங்கொளியில் உடை சுடர அரண்மனைக் காவலர்தலைவன் உள்ளிருந்து வெளியே நடந்து வந்து அவர்களை அணுகி

அவருடைய காவலர்தலைவனிடம் பேசினான். அவர்கள் இருவரும் அவரை அணுகி ஏதோ சொன்னார்கள். அவர் சற்றுநேரம் கழித்தே அவர்கள் சொல்வதென்ன என்று புரிந்துகொண்டார். அவர் சத்யபாமையை இரண்டு நாழிகைக்குப் பின் சந்திக்கலாம் என்றும் அதுவரை நீராடி ஓய்வெடுக்க அரண்மனையின் அறை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் காவலர்தலைவன் சொன்னான். அவர் அக்கணம்தான் நெடும்பயணத்தின் களைப்பை உணர்ந்து உடல் தளர்ந்தார்.

சாரிகருக்கு அளிக்கப்பட்ட அறை பீதர்நாட்டு முறைமைப்படி கடினமான மரத்தால் கட்டப்பட்டது. கல்லென்றே தோன்றும் தூண்களும் சுவர்களும் அவரை ஆழ்ந்த அமைதி கொள்ளச்செய்தன. அவருக்கு நீராடுவதற்கு ஒருக்கங்கள் செய்திருந்தார்கள். நீராட்டறை மிகச் சிறிதாக இருந்தது. செந்நிறமான மரத்தாலானது. குனிந்து, ஏறத்தாழ அமர்வதுபோல் உடல் வளைத்தே உள்ளே செல்ல வேண்டியிருந்தது. சுவர்களில் மரப்பலகையின் வெவ்வேறு அலைகள். மரத்தில் குடையப்பட்ட படகு போன்ற சிறிய குளியல்தொட்டியில் வெந்நீர் நிரப்பப்பட்டிருந்தது. மரவுரிகளுடன் நீராட்டறை ஏவலன் நின்றிருந்தான்.

அவர் அவந்தியை விட்டுக் கிளம்பியபின் முதல்முறையாக நீராடினார். நீர் நுரைக்குமிழிகளுடன் கொப்பளித்துக்கொண்டிருந்தது. நீர்த்தொட்டிக்குள் இறங்கி அமர்ந்தபோது உடலெங்கும் பல்லாயிரம் நுண்ணிய வெடிப்புகளும் புண்களும் தீப்பட்டவைபோல் எரியத் தொடங்கின. இளவெம்மைகொண்ட நீரில் புற்தைலம் கலந்திருந்தார்கள். நீர் அவரை மென்மையான தசைக்கதுப்பு

என அணைத்துக்கொண்டது. சற்று நேரத்திலேயே அவர் உடற்தசைகள் தளர்ந்தன. கருக்குழவிபோல் அவர் நீருக்குள்ளேயே உடல்சுருட்டி துயிலத் தொடங்கினார்.

அவர் விழித்துக்கொண்டு எழுந்து உடலைத் தேய்க்க மரவுரியை எடுக்க கைநீட்டினார். நீராட்டுஏவலன் தடுத்து “பாலைப் பயணத்திற்குப் பின் மூன்றாம்நாள் மட்டுமே உடலை தேய்த்துக்கொள்ளவேண்டும். இப்போது கைபட்டால்கூட தோல் கழன்றுவிடும்” என்றான். புன்னகையுடன் “பிறந்த குழந்தையின் உடல்போலிருக்கும் தோல் என்பார்கள்” என்று சொல்லி நீரில் மேலும் ஒரு தைலத்தை ஊற்றினான். பின்னர் ஓர் எண்ணைப்புட்டியை எடுத்து அதை நீரில் கலந்தான். எண்ணை இளவெம்மையில் கலந்து அவர் தோல்மேல் படிந்தது. அவர் உடலுடன் உரசிய கைகளும் தொடைகளும் வழுக்கின.

அவர் நீரில் ஊறிய தன் விரல்கள் தளிர்களின் விளிம்புகள்போல சுருங்கி நெளிந்திருப்பதை கண்டார். “உங்கள் உடலில் அழுக்கு ஏதும் இருக்காது. குழலிலும் விரலிடுக்குகளிலும் செவிகளிலும் எஞ்சியிருக்கும் மென்பூழியை நீரை விசையுடன் வீசி அகற்றிவிடமுடியும். பாலைநிலம் மிகமிகத் தூய்மையானது. அங்குள்ள மணலே நீர்போல அழுக்கு அகற்றும் தன்மைகொண்டதுதான்” என்றான் நீராட்டுஏவலன். அவர் தன் உடல்மேல் எண்ணை ஒரு மெல்லிய தோல்போல படிந்துவிட்டதாக உணர்ந்தார். ”எழுக!” என்றான் ஏவலன்.

அவர் எழுந்து நின்றபோது ஏவலன் ஒரு துருத்தியால் அவர் மேல் நீரை விசையுடன் அறைந்தான். நீரின் அறைகள் அவரை அதிரச்செய்தன. அதன்பின் “துடைக்கலாகாது. நீர் வழிந்து உலரட்டும். அவ்வண்ணமே நிலைகொள்க!” என்றான். அவர்

கண்களை மூடி நின்றார். அவர் உடலில் இருந்து நீர் வழிந்திறங்கியது. காற்றில் உடல் உலர்ந்தது. குளிர் பரவி உடல் உலுக்கிக்கொண்டது. தலைமயிரிலிருந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது. அதுவும் உலரத்தொடங்கியதும் ஏவலன் ஆடைகளை எடுத்து அளித்தான். “அணிந்துகொள்ளுங்கள்” என்றான். அவர் ஆடைகளை அணிந்துகொண்டு நீராட்டறையைவிட்டு வெளியே வந்தார்.

குனிந்து அறையைவிட்டு வெளியே வந்தபோது தலைகீழாக விழுவதுபோல் உணர்ந்தார். தலையை உதறி குழல்கற்றைகளை பின்னால் சரித்துக்கொண்டார். நீள்மூச்செறிந்து சுற்றும் நோக்கியபோது கண்கள் மிகத் தெளிந்து தன் நோக்கு பலமடங்கு கூர்கொண்டிருப்பதை, உடல் புதியதென எழுந்திருப்பதை உணர்ந்தார். காலெடுத்து வைத்தபோது பாகுஜன் என்னும் சொல் அவர் உள்ளத்தில் எழுந்தது. பாகுஜன் என தன் நா சொல்லிக்கொண்டிருப்பதை உணர்ந்து அவர் நின்றார். பாகுஜன் என்றால் என்ன? பாகுஜன். எவருடைய பெயர் அது? எங்கே கேட்ட பெயர்?

அவரால் நினைவுகூர இயலவில்லை. தன் அறைக்குச் சென்று மஞ்சத்தில் அமர்ந்தார். அருகே பீடத்தின் மேல் ஓலைப்பெட்டி இருந்தது. மேலே எழுத்தாணி. அவர் அதைத் திறந்து ஓர் ஓலை நறுக்கை எடுத்தார். பாகுஜன் என்று எழுதுவதுபோல எழுத்தாணியை ஓலையைத் தொடாமல் சுழற்றினார். பின் அதில் பாகுஜன் என்று எழுதினார். பாகுஜன், எவருடைய பெயர்? என் பெயர். ஆம், என் பெயர். அவர் பெரும் உள்ளக் கிளர்ச்சியுடன் அப்பெயரை எழுதிக்கொண்டே இருந்தார்.

ஏவலன் வாயிலில் வந்து நின்று வணங்கினான். அவர் நிமிர்ந்து நோக்க “அரசியை நீங்கள் சந்திக்கும் பொழுது” என்று அவன்

சொன்னான். “முறைப்படி தங்கள் ஓலையை முன்னரே அரசியிடம் அளிக்கவேண்டும்.” அவர் அவனை நிலைத்த நோக்குடன் சில கணங்கள் பார்த்தார். பின்னர் ஓலையில் “வியாசமரபினனும் கவிஞனுமான பாகுஜன். முன்வாழ்வில் அஸ்தினபுரியின் சிற்றமைச்சனாகிய சாரிகன். இத்தருணத்தில் அரசியின் சொல்கேட்க வந்தவன். வணங்குகிறேன்” என்று செய்யுளில் எழுதினார். தனக்கு அஸ்தினபுரியில் அளிக்கப்பட்ட அறிமுக ஓலையுடன் அந்த ஓலையையும் சேர்த்து குழாயிலிட்டு மூடி அவனிடம் அளித்தார். தன் சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு எழுந்தார்.

# களிற்றியானை நிரை - 25

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 8**

சத்யபாமையின் அறைவாயிலில் நின்றிருக்கையில்தான் சாரிகர் அவர் அங்கே எதற்காக வந்தார் என்பதை நினைவுகூர்ந்தார். அரசியிடம் பேசவேண்டியதென்ன என்பதை தன்னுள் உருவாக்கிக்கொள்ள முயன்றார். அதற்குள் கதவு திறந்து அவரை ஏவற்பெண்டு உள்ளே அழைத்தாள். அவர் உள்ளே நுழைந்து அந்தச் சிற்றறைக்குள் அமர்ந்திருந்த சத்யபாமையை வணங்கினார்.

அவர் அவளைப் பற்றிய பாடல்களையே கேட்டிருந்தார். அவருடைய எண்ணங்களுக்கு மாறாக அவள் முதுமையடைந்து களைத்திருந்தாள். கண்களுக்குக் கீழே தசைவளையங்கள் தெரிந்தன. முகவாய்க்கோடுகள் அழுத்தமான கீறல்கள் போலிருந்தன. உதடுகள் சுருங்கி

உள்ளே மடிந்திருந்தன. அவரை அமரும்படி கைகாட்டினாள். அவர் அமர்ந்ததும் எந்த முகமனும் இல்லாமல் “தங்கள் தூது எதன்பொருட்டு என்று நான் அறியலாமா?” என்றாள்.

சாரிகர் ஒரு கணம் திகைத்து பின் “நான் விராட இளவரசியின் நலம் குறித்து அறிவதற்காக வந்தேன்” என்றார். “அச்செய்திகள் வாரம் ஒருமுறை என பறவைத்தூதாக அஸ்தினபுரிக்கு அனுப்பப்படுகின்றன” என்று சத்யபாமை சொன்னாள். “ஆம், ஆனால் அது அரசருக்கு போதவில்லை. நேரில் பார்த்து செய்தியனுப்பும்படி சொன்னார். ஒருவேளை நேரில் பார்க்க ஒருவராவது வரவேண்டும் என விழைந்திருக்கலாம். அந்தணன் வந்து பார்ப்பது ஓர் அரசமுறை என்றும் சொல்லப்படுவதுண்டு” என்றார். “நீங்கள் அவளை நேரில் பார்க்கவேண்டும் அல்லவா?” என்று அவள் கேட்டாள். “ஆம், நேரில் பார்க்கவே வந்தேன்” என்றார்.

“பெண்கள் கருவுற்றிருக்கையில் அயலார் பார்க்கலாகாதென்பது நெறி” என்றாள் சத்யபாமை. “விழிகளில் உள்ளவற்றை மகவு தாளமுடியாது என்பார்கள்.” சாரிகர் “ஆம், ஆனால் அனைத்திலிருந்தும் அந்தணர்களுக்கு விலக்கு உண்டு” என்றார். சத்யபாமை “அந்த நெறி துவாரகையில் இல்லை. யாதவர் அந்தணர்கள் இல்லாமலேயே தங்கள் ஊர்களில் வாழ்பவர்கள்” என்றாள். “ஆம், ஆனால் வேதம் இன்றி நாடுகளில்லை. அந்தணர் வேதத்தின் மக்கள்” என்று அவர் சொன்னார். அவள் அவரை புரிந்துகொள்ள முயல்பவள்போல கூர்ந்து நோக்கினாள். பின்னர் எழுந்துகொண்டு “நீங்கள் அவளை பார்க்கலாம், வருக!” என்றாள்.

“எனக்கு விரைவில்லை. நான் தாங்கள் வகுத்த முறைமைப்படி பார்க்கிறேன்” என்று அவர் சொல்ல “இங்கே அவ்வண்ணம்

முறைமை என ஏதுமில்லை. எப்போது வேண்டுமென்றாலும் நீங்கள் அவளை பார்க்கலாம்” என்றாள். “வருக!” என அவள் நடக்க அவர் பின்னால் சென்றபடி “அரசியே வரவேண்டும் என்பதில்லை. நான் தனியாகவே…” என்றார். “இங்கே நான் அவளை பார்க்கத்தான் தங்கியிருக்கிறேன்” என்று அவள் சொன்னாள். “அவள் கணவனின் அன்னை இங்கிருக்கிறாள். அவளும் நோயுற்றிருக்கிறாள்.”

சாரிகர் “இளவரசி நோயுற்றிருக்கிறாரா?” என்றார். “ஆம், கருவுறுதலே ஒரு நோய்தான். கணவனை இழத்தல் இன்னொரு நோய். இரு நோய்களும் ஒன்றையொன்று பெருக்குபவை” என்றாள். அவளுடன் நடந்தபடி அவர் அவளிடமிருக்கும் அந்தக் கசப்பைப் பற்றி எண்ணிக்கொண்டார். அது உத்தரை மீதான கசப்பு அல்ல என்றும் தோன்றியது. அவள் சலிப்புடன் பெருமூச்சுவிட்டு “இவ்வறைதான்…” என்றாள். அவளை அணுகிய ஏவற்பெண்டிடம் “இளவரசியைக் காண அஸ்தினபுரியிலிருந்து வந்திருக்கிறார்” என்றாள். அவள் உள்ளே சென்று மீண்டு தலைவணங்க “நீங்கள் உள்ளே செல்லலாம்” என்றாள்.

அவர் அவளும் வருவதற்காக காத்து நின்றார். அவள் “நீங்கள் சென்று அவளை பார்க்கலாம். சற்று பொறுத்து நான் வருகிறேன். அவள் உங்களிடம் தனியாக ஏதேனும் சொல்வதற்குக்கூட விழையலாம்” என்றாள். அவள் விலகிச்செல்ல அவளை நோக்கியபடி சாரிகர் நின்றார். ஏவற்பெண்டு மெல்லிய ஒலியெழுப்ப அவர் விழிப்புகொண்டு அறைக்குள் சென்றார்.

அந்த அறையும் மிகச் சிறியது. அதன் ஓரத்தில் ஒரு நெய்யகல்கொத்து தளர்வான சுடர்களுடன் எரிந்தது. அந்த

ஒளியில் செந்நிறமாக அந்த அறைச்சுவர்கள் அலைகொண்டன. சாளரத்தோரம் அமைந்த மஞ்சத்தில் உத்தரை படுத்திருந்தாள். அவர் சில கணங்கள் வாயிலருகே நின்றார். பின்னர் அருகணைந்து தலைவணங்கினார். அவள் அவரை நோக்கியபடி அசையாத விழிகளுடன் கிடந்தாள். அவள் ஐந்தாறு அகவை மட்டுமேயான சிறுமி போலிருந்தாள். உடல் மிக மெலிந்து குறுகியிருந்தது. நீள்முகம் கன்னங்கள் ஒடுங்கி, உதடுகள் இறுகி கூர்கொண்டிருந்தது. மெழுகுபோன்று வெளிறிய தோல் மேல் விளக்கொளி எண்ணைப்பூச்சென மின்னியது. அவளுடைய மூக்கு எலும்புப்புடைப்பென எழுந்திருந்தது.

அவள் விழிகளிலிருந்த வெறிப்பு அவரை நிலைகுலையச் செய்தது. பித்தர்களிடம், பெருநோயாளிகளிடம் தெரியும் நிலைவிழி அது. அது ஒருகணம் இளிவரல் என, மறுகணம் அச்சம் என மயக்கூட்டியது. அவர் “விராடநாட்டு இளவரசிக்கு வணக்கம். நான் அஸ்தினபுரியிலிருந்து அரசர் யுதிஷ்டிரனின் செய்தியுடன் வந்திருக்கிறேன். அந்தணனாகிய சாரிகன். தங்களை சந்திக்கும் பேறு எனக்கு வாய்த்தமைக்கு தெய்வங்களை வணங்குகிறேன்” என்றார். உத்தரை அவரை அவ்வண்ணமே நோக்கிக்கொண்டிருந்தாள்.

அவர் அதன் பின்னரே அவள் வயிற்றைப்பற்றி உணர்ந்தார். மெய்யாகவே அவள் கருவுற்றிருக்கிறாளா? அவள் வயிறு பெருத்திருக்கவில்லை. அவர் அவள் கையை பார்த்தார். வெண்ணிறமாக ஒரு பொதிபோல அது அவள் விலாவருகே கிடந்தது. புறங்கை வீங்கி உப்பியிருந்தது. விரல்கள் எல்லாமே வீங்கி உருண்டு விடைத்து நின்றன. விரல்களை மடிக்கவே அவளால் இயலாது என்று தெரிந்தது. அவர் அவளிடம் என்ன

பேசுவதென்று தெரியாமல் திரும்பி வாயிலை பார்த்தார். எவரோ தனக்கு உதவிக்கு வருவார்கள் என்பதுபோல.

அவள் கருவிழிகள் அசைவில்லாதிருந்தன. அவள் உயிரிழந்திருக்கக் கூடும் என்னும் எண்ணம் அவருக்கு வந்தது. அக்கணமே அச்சம் எழுந்து உடலை மெய்ப்புகொள்ளச் செய்தது. அவளை தொட்டுப் பார்க்கலாமா? எவரையாவது அழைக்கலாமா? ஆனால் அவள் கழுத்தில் மெல்லிய மூச்சசைவும் துடிப்பும் இருந்தது. அவள் இமைகள் ஒருமுறை துடித்து அமைந்தன. அவர் “இளவரசி, தங்களுக்கு இங்கே ஏதேனும் தேவை என்றால் என்னிடம் சொல்லலாம்” என்றார்.

அவள் அச்சொற்களை கேட்டதுபோல தெரியவில்லை. “அல்லது அஸ்தினபுரிக்கு ஏதேனும் செய்தி அளிக்கவேண்டும் என்றாலும் ஆகலாம்” என்றார். அவளை கூர்ந்து நோக்கிக்கொண்டு “அல்லது எவரிடம் எச்செய்தியை கொண்டுசெல்ல வேண்டுமென்றாலும் நீங்கள் என்னிடம் அளிக்கலாம். இளைய பாண்டவர்களிடம், இளைய யாதவரிடம். அல்லது விராடநாட்டில் எவரிடமேனும்” என்றார். அவள் அவரிடம் ஏதோ சொல்லவிழைவதுபோல உதடுகளை அசைத்தாள். அவர் குனிந்து அவள் உதடுகள் அருகே செவிகளை கொண்டுசென்றார். அவள் மிக மெல்ல ஏதோ முனகினாள். அது சொல்லாகத் திரளவில்லை.

அவர் கொப்பளிப்பு போன்ற ஓர் ஓசையை கேட்டார். கூரிய ஒரு கெடுமணம். குருதிமணமா அது? அன்றி சீழ்வாடையா? அவள் மீண்டும் உதடுகளை அசைத்தாள். அவள் உடலே மெல்ல துடித்தது. அவளைப் போர்த்தியிருந்த மெல்லிய போர்வை விலக அவளுடைய வலக்கால் தெரிந்தது. அது செந்நிறமாக பெரிய கிழங்குபோல வீங்கியிருந்தது. விரல்கள்

முளைக்குருத்துகள்போல் புடைத்து நின்றன. அவர் பெருமூச்சுடன் திரும்பியபோது அவள் மெல்ல “வில்” என்றாள். அவர் திரும்பினார். அவள் “வில்...” என்று மீண்டும் சொன்னாள்.

“ஆம்” என்று அவர் சொன்னார். “காண்டீபம்” என்றாள். அவர் ஏனென்றறியாமல் மெய்ப்புகொண்டார். “சொல்லுங்கள்” என்றார். அவள் ஒருமுறை நீள்மூச்செறிந்தாள். உடல் உலைந்து அமைந்தது. ஆழ்ந்த முனகலோசை எழுந்தது. விழிகள் மூடிக்கொண்டன. அவர் திரும்புவதற்குள் அறைக்குள் இரு மருத்துவச்சிகள் வந்தனர். அவரை நோக்கி செல்லும்படி கைகாட்டினர். அவர் தன் கால்கள் நடுங்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தார். மெல்ல நடந்து வெளியே வந்தார்.

வெளியே சத்யபாமை நின்றிருந்தாள். அவரிடம் “அவள் எவரிடமும் ஏதும் பேசுவதில்லை. இங்கு வந்தபின் ஒரு சொல்கூட உரைக்கவில்லை. உங்களிடம் பேசுவாள் என்று எண்ணினேன்” என்றாள். அவர் “அவர் பேசினார்” என்றார். “சொல்க!” என்றாள் சத்யபாமை. “காண்டீபம் என்றார்.” அவள் “ஆம், அச்சொல்லை அடிக்கடி துயிலிலும் சொல்லிக்கொண்டிருக்கிறாள்” என்றாள். அவர் “அந்த ஒற்றைச் சொல்லுக்கு அப்பால் ஏதும் கூறவில்லை” என்றார்.

அவள் வருக என்று கைகாட்டியபடி நடந்தாள். அவர் உடன் சென்றார். அவள் நடந்தபடி “இங்கே ஏன் இவளை கொண்டுவரும்படி அரசர் கூறினார் என்று எனக்குத் தெரியவில்லை. இங்கே இவள் வந்ததே கடுமையான பயணம். இத்தனை தொலைவுக்கு வந்தால் இவள் உள்ளம் நிலைமாறக்கூடும் என எண்ணியிருக்கலாம். ஆனால் இவள் இயல்பு அது அல்ல” என்றாள். இடைநாழியில் அவளுடைய காலடியோசை உரக்க ஒலித்தது. அழுத்தமாக காலெடுத்து

வைத்து நடப்பவர்கள் உள்ளாழம் கொண்டவர்கள் என அவர் எண்ணிக்கொண்டார்.

“இங்கே நிலைமைகள் ஒவ்வொருநாளும் மாறிக்கொண்டிருக்கின்றன. துவாரகை இப்போது சாம்பனின் ஆட்சியில் இருக்கிறது. நான் நகரிலிருந்து முற்றாக அகன்றுவிட்டேன். மெய்யுரைப்பதென்றால் நான் அகற்றப்பட்டிருக்கிறேன். ருக்மிணி அங்கே இருக்கிறாள். ஆனால் அவளுக்கும் அங்கே சொல் இல்லை. சாம்பனின் துணைவி கிருஷ்ணையால் ஆளப்படுகிறது அரண்மனை. அஸ்தினபுரியின் இளவரசியாக இங்கே அவள் வந்தபோது திருமகள் என எண்ணினேன்.”

அவள் பெருமூச்சுவிட்டு “அவள் உள்ளம் இப்படி மாறும் என எவர் அறிவார்? அவள் தெய்வமென துவாரகையின் அரசரை வழிபட்டவள். இங்கே வந்த பின்னர் மெல்ல மாறத்தொடங்கினாள். கணவனின் உணர்வுகளையும் எண்ணங்களையும் மனைவியர் அடைவதிலிருக்கும் விந்தையை எவராலும் புரிந்துகொள்ள முடியாது. அவ்வுடலுக்குள் அவர்கள் முற்றாக மாறி பிறிதொருவராக ஆகிவிடுகிறார்கள். அவனிடமிருந்து பெற்றவற்றை பன்மடங்கு பெருக்கி அவனுக்கே திருப்பி அளிக்கிறார்கள். பெண்ணின் வஞ்சமும் காழ்ப்பும் பொறாமையும் ஆணைவிட பலமடங்கு ஆற்றல் கொண்டது” என்றாள்.

“இன்று அவள் துவாரகையின் அரசரை வெறுக்கிறாள். தன் தந்தையையும் சிறிய தந்தையரையும் உடன்பிறந்தார் ஆயிரத்தவரையும் கொன்றழித்தவர் அவர் என எண்ணுகிறாள். அவ்வெறுப்பை ஒவ்வொருநாளுமென நொதிக்கவிட்டு மிகைப்படுத்திக்கொள்கிறாள். இனி துவாரகைக்குள் அரசரை

நுழையவிடலாகாது என்று அவள் தன் கணவனுக்கு சொல்லிச்சொல்லி உருவேற்றியிருக்கிறாள்” என்றாள் சத்யபாமை.

சாரிகர் “ஒருவேளை அரசர் இங்கே மீண்டு வரக்கூடும்” என்றார். “இல்லை. அவர் இனி இங்கே வரமாட்டார்” என்று சத்யபாமை சொன்னாள். “தன் மைந்தருடன் போரிட அவர் விழையமாட்டார். தன் குடிகள் தன்னை வெறுத்துவிட்டதை அவர் நன்கறிவார். யாதவக்குடியினரின் அழிவுக்கும் அவரே வழியமைத்தார் என அவர்கள் நினைக்கிறார்கள். அஸ்தினபுரியின் மேல் இங்குள்ள யாதவர்கள் கொண்டிருக்கும் வெறுப்புக்கு அளவேயில்லை. இந்நிலையில் அஸ்தினபுரியின் எஞ்சும் ஒரே கருக்குழவி இங்கே ஏன் வளரவேண்டும் என எண்ணினார்? எண்ணுந்தோறும் குழப்பமே மிகுகிறது. ஆனால் இதுவரை அவர் செய்த எதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.”

“அரசியின் வயிற்றுக் குழவி எந்நிலையில் உள்ளது?” என்று சாரிகர் கேட்டார். “மருத்துவச்சியர் மாறிமாறி கூறுகிறார்கள். கரு உயிருடன் உள்ளது என்கிறார்கள். அதன் நெஞ்சத்துடிப்பை அறியமுடிகிறது. ஆனால் அசைவிழந்திருக்கிறது. போதிய வளர்ச்சியும் அதற்கில்லை. அவள் வயிறேகூட ஒரு குழவி வாழும் அறைபோல் இல்லை. அவள் உடல் நாளும் நைந்துகொண்டிருக்கிறது. இக்கருவை வளர்த்து உலகுக்கு அளிக்கும் ஆற்றல் அதற்கு உண்டா என்றே தெரியவில்லை. அக்கரு அவளை பிளந்து கொன்று வெளிவரக்கூடும் என்று தோன்றுகிறது… மருத்துவச்சியர் சென்ற வாரம் வரைகூட சற்றே நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இப்போது அவர்களும் ஊக்கமூட்டும்படி பேசவில்லை.”

அவர்கள் மீண்டும் சத்யபாமையின் அறையை சென்றடைந்தார்கள். “நான் செய்யக்கூடுவதென்ன என்றே எனக்கு தெரியவில்லை. இக்குழவி பிறந்த பின் நான் என்ன செய்யவேண்டும்? மீண்டும் துவாரகைக்கு செல்லவேண்டுமா? அன்றி இங்கேயே இருக்கவேண்டுமா? இக்குழவி எத்தனை நாள் துவாரகையில் வளரவேண்டும்? கிருஷ்ணையின் வெறுப்பின் முன் இக்குழவியை வளர்க்க முடியுமா என்ன?” சத்யபாமையின் முகம் சற்று கோணலாகியது. அது அவளை அழகில்லாதவள் எனக் காட்டியது.

“அவள் இக்குழவியை கொல்லக்கூட வாய்ப்புள்ளது. அவள் குலத்தை துளியிலாது அழித்தவர்களின் இறுதிக் குருதித்துளி அவள் கையெட்டும் தொலைவில் இருக்கையில் அவள் எப்படி தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்?” அவ்வெண்ணத்தால் அவள் நிலையழிந்து எழுந்தாள். “மெய்யாகவே ஒன்றும் புரியவில்லை. எதற்காக இந்த ஆடலை ஆடுகிறார் அரசர்?” என்றாள். “அவர் தங்கை இங்கே இருக்கிறாள். அவள் தன் மருமகளை வெறுக்கிறாள். அவள் கைகளாலேயே இளவரசி கொல்லப்படக்கூடும் என்றுகூட அஞ்சுகிறேன்.”

சாரிகர் “அவருடைய ஆடலை என்னாலும் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் அதை தொகுத்துக்கொள்ள முடியும் என எண்ணுகிறேன்” என்றார். “எவ்வண்ணம்?” என்று சத்யபாமை கேட்டாள். “உங்கள் ஒவ்வொருவர் முன்னாலும் ஒரு வினா என அக்குழவி பிறந்து வரவேண்டும் என எண்ணுகிறார் போலும்.” சத்யபாமை தலையை இல்லை என்பதுபோல் அசைத்தாள். பெருமூச்சுடன் மீண்டும் அமர்ந்துகொண்டாள். “நன்று. இங்கிருங்கள். மைந்தன் பிறக்கக்கூடும் என்பது நிமித்திகர் கூற்று. அரசனாவான் என்று

கணிக்கிறார்கள். அவன் மண்நிகழ்வது வரை அனைத்தையும் அஸ்தினபுரிக்கு தெரிவித்துக்கொண்டிருங்கள். உங்கள் சொற்கள் வழியாகத் தெரிந்துகொள்வதை அஸ்தினபுரி விழைகிறது எனத் தெரிகிறது” என்றாள்.

சாரிகர் தலைவணங்கி எழுந்துகொண்டார். அவர் விடைமுகமன் உரைத்தபோது அவள் அதை கேட்டதாகத் தெரியவில்லை. மீண்டும் தன் எண்ணங்களுக்குள் ஆழ்ந்துவிட்டிருந்தாள்.



சாரிகர் விழித்துக்கொண்டபோது எங்கிருக்கிறோம் என்று அறியவில்லை. மண்ணுக்குள் ஆழப் புதைந்திருக்கிறோம் என்னும் முதல் உணர்வு ஏற்பட திடுக்கிட்டு எழுந்துகொண்டார். அதன் பின்னரே அறைக்குள் மஞ்சத்தில் இருப்பதை உணர்ந்தார். எழுந்து நின்று கைகளை விரித்தார். அறை அவரை மூச்சுத்திணறச் செய்தது. கதவைத் திறந்து இடைநாழியினூடாகச் சென்று படிகளில் இறங்கி முற்றத்திற்குச் சென்று நின்றார். விண்ணில் ஒளியெழுந்துவிட்டிருந்தது. சுவர்கள் திகழத்தொடங்கின. முற்றப்பரப்பின்மேல் இரவெல்லாம் பொழிந்த பூழி காற்றில் மெல்ல அலைபாய்ந்து சுழித்துக்கொண்டிருந்தது. அவர் அதை நோக்கியபடி நின்றார். அந்த முற்றம் வெம்மைகொண்டு நீராவி எழுவதுபோலத் தோன்றியது.

ஒளி விரிந்து முற்றம் கண்கூசும்படி சுடரத்தொடங்குவது வரை அங்கேயே நின்றிருந்தார். விழிகளுக்கு அத்தனை ஒளி வேண்டியிருந்தது. உடலுக்கு எட்டுபுறமும் தொடுவான் தேவைப்பட்டது. ஏவலன் வந்து பணிந்து நிற்பதைக் கண்ட பின்னரே மீண்டு திரும்பி நோக்கினார். “இளைய அரசி

தங்களை பார்க்க விழைகிறார்” என்றான். “எப்போது பொழுது குறிக்கப்பட்டுள்ளது?” என்றார். “இரு நாழிகைக்குப் பின்” என்றான் ஏவலன். “ஆகுக!” என்ற பின் அவர் திரும்பி அரண்மனைக்குள் சென்றார். உள்ளே நுழைந்தபோது சுவர்கள் அணுகிவந்து கவ்விக்கொண்டன. விழிகளுக்குள் இருள் பெய்து நிறைந்தது.

அவர் நீராடி உணவுண்டு காத்திருந்தபோது அரசியின் அழைப்பு வந்தது. அவர் இடைநாழிகளினூடாக சென்றுகொண்டிருந்தபோது என்ன பேசுவது என மீண்டும் தொகுத்துக்கொள்ள முயன்றார். ஒரு சொல்லும் எழவில்லை. அவர் உள்ளம் ஓய்ந்து கிடந்தது. இனி எப்போதும் என்னால் அறைகளுக்குள் வாழமுடியாது. இனி சுவர் நடுவே எனக்கு சித்தமே தோன்றாது. அவர் தன் காலடியோசையை கேட்டுக்கொண்டிருந்தார். அவர் உள்ளம் பதைப்பு கொண்டது. என்னைத் தொடர்வது எவர்? என் காலடியோசையாக என் பின் ஒலிப்பது எவர்?

அவர் வருகை அறிவிக்கப்பட்டு உள்ளே செல்லும்படி பணிக்கப்பட்டார். உள்ளே சென்றதும் அறைக்குள் அமர்ந்திருந்த சுபத்ரை எழுந்து அவரை நோக்கி வந்து அவர் வணங்கி முகமன் உரைப்பதற்குள்ளாகவே “உம்மை அனுப்பியது யார்?” என்றாள். அவள் திரண்ட தோள்களும் உயரமான நிமிர்ந்த உடலுமாக பலராமரின் பெண் உருவமென்று தோன்றினாள். அவள் குரலும் அழுத்தமான கார்வை கொண்டிருந்தது. அவர் அவளுடைய உருவாலும் குரலாலும் சொல்திகைத்து நின்றார். “சொல்க, எவரால் அனுப்பப்பட்டவர் நீர்?” என்று அவள் கைசுட்டிக் கேட்டாள்.

“அஸ்தினபுரியின் அரசர் யுதிஷ்டிரனின் தூதன் நான்” என்று அவர் சொன்னார். “அதை நானும் அறிவேன்” என்று அவள் சொன்னாள். “நீர் அரசத்தூதர் என்று அறிந்தே உம்மை சந்திக்கிறேன். இங்கே உம்மை அனுப்பியது யார்? மெய்யாகவே எவருடைய தூதர் நீர்?” அவர் “அரசி, எவருடைய தூதன் என்று அறிவிக்கப் பணிக்கப்பட்டேனோ அதையே என் நா உரைக்கும். எவரும் அந்தணனுக்கு ஆணையிடும் இடத்தில் இல்லை” என்றார். அவள் முகம் சீற்றத்தில் சிவந்தது. “நீர் அந்தணர் அல்ல. நீர் பாங்கர். பெண்தூது செல்லும் சூதர்!” என்று அவள் கூவினாள். மூச்சிரைக்க கண்களில் நீர் பொடிய “நீர் எவருடைய தூதுடன் வந்தீர் என எனக்குத் தெரியும். எவருக்குச் செய்தி அனுப்புகிறீர் என்றும் அறிவேன்” என்றாள்.

“நன்று, நிறையவே அறிந்திருக்கிறீர்கள்” என்று சாரிகர் சொன்னார். “நான் வேறேதும் பேசவேண்டுமா? அன்றி உங்களுக்கு என்னென்ன தெரியும் என்று தெரிந்துகொண்டால் போதுமா?” அவள் மெல்ல அடங்கி திரும்பிச்சென்று தன் பீடத்தில் அமர்ந்தாள். அவள் தன் கைகளைக் கோத்து விரல்களை நெரித்துக்கொண்டிருப்பதை, உதடுகளை இறுக்கி பல்லைக் கடிக்கையில் அவள் கழுத்தின் தசைகள் இறுகி நெளிவதை அவர் நோக்கிக்கொண்டிருந்தார். அவள் மூச்செறிந்து மீண்டு “அவளிடம் என்ன பேசினீர்?” என்றாள்.

“நான் பேசவில்லை. என் பேச்சைக் கேட்கும் நிலையில் அவர் இல்லை” என்று அவர் சொன்னார். “அவள் என்ன பேசினாள்?” என்று சுபத்திரை மீண்டும் கேட்டாள். அவர் “ஒரு சொல்” என்றார். “காண்டீபம், அவ்வளவுதானே?” அவர் ஆம் என தலையசைத்தார். “அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறாள். அதை மட்டுமே சொல்வாள். அதை சொல்லிக்கொண்டே

உயிர்விடுவாள்” என்றாள் சுபத்திரை. “கீழ்மகள்… கீழ்மகள்” என்று தன் தொடையில் கையால் அறைந்தாள். அவர் அவளை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். “இதை அஸ்தினபுரிக்கு சொல்லப்போகிறீர் அல்லவா? இவ்வண்ணம் என அவருக்கு செய்தியனுப்பவிருக்கிறீர், அவ்வளவுதானே?”

சாரிகர் ஒன்றும் சொல்லவில்லை. “நீர் எதற்காக இங்கே வந்தீர் என எனக்கு மெய்யாகவே புரியவில்லை. இவள் இங்கே இவ்வண்ணம் இருப்பது அங்கே அனைவருக்கும் தெரியும். இது ஏன் உங்கள் நினைவில் பதியவேண்டும் என எதிர்பார்க்கிறார்?” அவள் தலையை அசைத்து “இவளை இத்தனை தொலைவுக்கு அனுப்பியது என் மூத்தவரின் திட்டம். அவரிடமிருந்து முடிந்தவரை அப்பால். அவர் நினைத்தாலும் எளிதில் வந்து சந்திக்கமுடியாதபடி அப்பால்…” என்றாள். “அவளைப் பற்றிய செய்திகளை அனுப்பும்போது நானும் அதை கருத்தில் கொண்டேன். மிக சுருக்கமான வழக்கமான சொற்களையே அனுப்பும்படி சொன்னேன். அச்செய்திகள் அவருக்கும் சென்றுசேரும் என நான் அறிவேன்.”

அவர் அவளுடைய கொந்தளிப்பை நோக்கிக்கொண்டிருந்தார். “அவள் இங்கே வெறுக்கப்படுகிறாள். அனைவராலும். ஆம், என்னாலும்தான். அத்தனை பேரின் வெறுப்பும் சேர்ந்து அவளை நோயுறச் செய்திருக்கிறது. அவள் செத்துக்கொண்டிருக்கிறாள். அதை அவளைப் பார்க்கும்போதெல்லாம் தெளிவாக உணர்கிறேன். ஆனால் அவளைப்போல இன்று எனக்கு ஒவ்வாமையை அளிக்கும் பிறிதொன்று இல்லை. அவளை எண்ணும்போதே என் உடல் உலுக்கிக்கொள்கிறது. அவள் கொண்டுள்ள இந்தக் கரு… இதுதான் அஸ்தினபுரியின் அரசனாக அமரப்போகிறது என்றால்… அதுவும் என் மைந்தனின்

பெயரால்.” அவள் எழுந்துகொண்டு “இங்கே நிகழ்வன எவற்றையும் நீர் அவருக்கு எழுதவேண்டியதில்லை” என்றாள்.

அவர் பேசாமல் நின்றார். அவள் உரக்க “அவர் இச்செய்திக்காகவே காத்திருப்பார். இவள் காண்டீபம் என்று சொல்லிக்கொண்டே நைந்து உயிர்விடுவதை எதிர்பார்த்திருப்பார். அவரை எனக்குத் தெரியும். அவருள் புளித்து நஞ்சாகி கெடுநாற்றமெடுக்கும் அந்த ஆணவம் நிறைவடையும். அந்த ஆணவத்தை கழிவிரக்கமாக, கண்ணீராக வெளிப்படுத்துவார். அதை அவ்வண்ணம் கொண்டாடுவார். அதற்கு வாய்ப்பே அளிக்கக்கூடாது. இது என் ஆணை! இவளைப் பற்றி நாங்கள் அனுப்பும் சொல்லன்றி எதுவும் அங்கே செல்லவேண்டியதில்லை” என்றாள். எழுந்து நின்று கைநீட்டி “இது என் ஆணை!” என்றாள்.

சாரிகர் “அரசி, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நான் அந்தணன். எனக்கு வேதமன்றி எதுவும் தலைக்குமேல் இல்லை. அந்தணனாகிய அமைச்சனிடம் அவனுடைய அரசர்கூட வேண்டுகோளை மட்டுமே முன்வைக்க முடியும், ஆணையிட முடியாது” என்றார். அவள் சிவந்த கண்களால் அவரை இமைக்காமல் பார்த்தாள். “அக்குழவி இங்கே பிறக்குமென்றால் அது கொல்லப்படும். அதை வாழவிடமாட்டாள் துரியோதனனின் மகள். அதை அவள் தன் வஞ்சத்திற்கு இரையாக்குவாள். அதை சொல்லுங்கள் உங்கள் அரசரிடமும் தம்பியரிடமும்” என்றாள். “இதுவும் ஆணையே” என்றார் சாரிகர்.

அவள் பெருமூச்சுடன் மீண்டும் பீடத்தில் அமர்ந்தாள். ஒரு கணத்தில் அனைத்து நிமிர்வும் அகல உடைந்து விம்மலோசையுடன் அழுதபடி கைகளில்

முகம்பதித்துக்கொண்டாள். “தெய்வங்களே! தெய்வங்களே!” என்று கூவினாள். அவர் அவளுடைய அழுகையை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தார். அவள் மெல்ல தேறி மேலாடையால் முகத்தை அழுந்தத் துடைத்தாள். “என் மைந்தன், அவனைப்பற்றி மட்டுமே நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். அவனுக்கு இப்புவியில் எவருமில்லை. நான்கூட இல்லை. அவனை விடுவிக்க என்னால் இயலவில்லை. அவனுடைய ஊழ் அவனை கவ்விக்கொண்டது.”

“என்ன எண்ணுகிறான் என் மைந்தன்? எங்கிருக்கிறான்? இங்கே நிகழ்வனவற்றை அவன் அறிவானா? அவனால் ஏற்கமுடிகிறதா? அவனை எண்ணுக! உங்களிடம் நான் ஆணையிடவில்லை, வேண்டுகிறேன். மன்றாடுகிறேன். கைநீட்டி இரக்கிறேன் என்றே கொள்க! அவனுக்காக இரங்குக! அந்தணரே, அறத்தில் நின்றிருப்பவர் நீங்கள். இத்தருணத்தில் அமைச்சர் செய்யவேண்டியதை செய்யற்க! அந்தணராக நிலைகொள்க! என் மைந்தன் இதை ஏற்பானா? அவனுக்காக உளம்கூருங்கள். இது அவன் பேரில் நிகழலாகாது. அவனுக்குமேல் இச்சுமை ஏற்றப்படலாகாது.”

“உங்கள் சொல்லுக்காகவே நீங்கள் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. நீங்கள் சொல்லுங்கள், அந்தக் குழவி…” அவள் உரக்க கைநீட்டி “அறம் என ஒன்று உள்ளது. மானுடருடன் நாம் கொண்டுள்ள உறவு அது. நீத்தாருக்கு நாம் அளிக்கும் கடன் அது” என்றாள். அவர் “ஆம்” என்றார். “அவள் யார் என்றே எனக்குத் தெரியாது. அவள் உள்ளத்தை நான் அறிந்ததே இல்லை. என் முன் நைந்துகிடக்கும் உடல் மட்டும்தான் அவள். எனக்கு அவள் ஒரு

பொருட்டே அல்ல. நான் எண்ணிக்கொண்டிருப்பது என் மைந்தனைப் பற்றி மட்டுமே. அவன் இங்கே எஞ்சாமல் சென்றான்… அவன் பெயர் இங்கே திகழவேண்டும். வீரனாக மட்டும். அவன் இங்கே எஞ்சவிட்டுச் சென்றது கசப்பையும் வஞ்சத்தையும் என்றால் அது களையப்படவேண்டும்.”

சாரிகர் “என்னால் எதையும் எண்ண முடியவில்லை, அரசி” என்றார். “ஆனால் என் ஆழத்திலிருந்து ஆணை எழும் என எண்ணுகிறேன். அதன்படியே நடப்பேன். ஒருபோதும் என்னுள் திகழும் வேதத்தின் ஆணைக்கு முரணாக எதையும் செய்யமாட்டேன். அதை மட்டும் உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன்.” எழுந்து தலைவணங்கி பின்னடைந்து அவர் அறையைவிட்டு வெளியே சென்றார்.

# களிற்றியானை நிரை - 26

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 9**

சாரிகர் தன் அறைக்குள் சிறிதுநேரம்தான் ஓய்வெடுத்தார். சுவர்களுக்குள் இருக்க அவரால் முடியவில்லை. வெளியே வந்து புரவி ஒன்றை பெற்றுக்கொண்டு ஊருக்குள் புகுந்து தெருக்களினூடாக சுற்றிவந்தார். அது ஊர் போலவே தெரியவில்லை. ஓர் ஓய்விடத்தின் உளநிலையே அங்கிருந்தது. எங்கும் எத்தொழிலும் கண்ணுக்குப்படவில்லை. எவரும் எங்கும் செல்லவோ வரவோ இல்லை. தெருக்களில் மக்கள் அமைதியாக அமர்ந்து தளர்வான குரலில் பேசிக்கொண்டிருந்தனர். நடந்தவர்கள் மிகமெல்ல

காலடிவைத்து, அவ்வப்போது நின்று எதிரே வருபவரிடம் பேசியபடி சென்றனர். பகலில் வெயில் எழுந்துவிட்டிருந்தபோதும்கூட ஊர் அரைத்துயிலிலேயே இருந்தது.

அவர் ஊரின் கணிகையரை நோக்கிக்கொண்டு சென்றார்7. அவர்கள் அனைவருமே நல்லாடை அணிந்து, சிரித்துப்பேசிக்கொண்டு சாலைகளில் சென்றபோதிலும்கூட சோர்வுற்றிருந்ததை கண்டார். அங்கே ஒவ்வொன்றும் மாறிக்கொண்டிருக்கிறது, அந்த மாற்றத்தை அவர்கள் உணர்ந்துவிட்டிருக்கின்றனர், அது விழிக்கு தெரியவில்லை. விரைவிலேயே கோட்டை விளிம்புவரை சென்றுவிட்டார். அதையொட்டியே சுற்றி முகப்பு வரை வந்தார். அக்கோட்டை மேற்கே திரும்பித் திறந்திருக்கும் ஒற்றை வாயில் மட்டுமே கொண்டது. காவல் இருந்தவர்கள் அவருக்கு வணக்கம் கூறினர்.

அவர் கோட்டையினூடாக வெளியே சென்றார். இருபுறமும் புல்வெளி விரிந்து கிடந்தது. செழித்த பசும்புல்வெளி அல்ல. பூசணம் பரவியதுபோல வெண்ணிற நிலப்பரப்பில் புல்பரவியிருந்தது. காலையில் அங்கே அவிழ்த்துவிடப்பட்ட பசுக்களும் கன்றுகளும் அவற்றை அடித்தாடையால் கரம்பி தின்றுகொண்டிருந்தன. சற்று அப்பால் ஒரு சுனை இருக்கக்கூடும். அங்கே பசுக்கள் கூட்டமாக கூடி நின்றிருந்தன. முள்மரங்களுக்குக் கீழே சில பசுக்கள் படுத்திருந்தன. அவர் புல்வெளியின் எல்லை வரை சென்றார். அதற்கப்பால் வெண்மணல் விரிந்த பாலைநடுவே பாதை ஒரு வடுவென நீண்டு தொடுவான் நோக்கி சென்றது.

அவர் திரும்ப எண்ணியம்போது தொலைவில் ஒரு சிறு குழு வருவதை பார்த்தார். அவர்கள் எவர் என்று நோக்கி நின்றார். அவர்களின் கொடி குருதிச்செம்மையுடன் இருந்தது. அவர்களில் எண்மர் புரவிகளில் முன்னால் வந்தனர். தொடர்ந்து புரவி இழுத்த சிறிய கூண்டுவண்டி வந்தது. அந்த வண்டி ஒரு பீதர்நாட்டுப்பேழை போலிருந்தது. மென்மரப்பட்டையால் அமைக்கப்பட்டு மேலே செந்நிறமும் நீலநிறமும் கலந்த பட்டு ஒட்டி அணிசெய்யப்பட்டது. அந்த வண்டி அணுகி வந்தபோது அது பீதர்குடி வணிகனுக்குரியது எனத் தெரிந்தது. துவாரகையின் காவலர் அதை காத்துவந்தனர்.

அவரை அணுகிய முதன்மைக்காவலன் “நாங்கள் அஸ்வபதம் நோக்கி செல்கிறோம். தாங்கள் அங்கே இருப்பவரா?” என்றான். “ஆம்” என்ற சாரிகர் “வருக!” என அழைத்துக்கொண்டு திரும்பினாஎ. “இவர் பீதர்நாட்டு மருத்துவர். பீதர்நாட்டிலிருந்து இப்போதெல்லாம் கப்பல்கள் துவாரகைக்கு வருவதில்லை. நேற்று மாலை ஒரு சிறிய கப்பல் வந்தது. அதில் பொருட்களென ஏதுமிருக்கவில்லை. அக்கப்பல் மாளவத்தின் துறைக்கு சென்றுகொண்டிருந்தது. அதில் ஏதோ பழுது என கரையணைந்தது. அதில் இருந்தவர் இந்த மருத்துவர்” என்றான் வீரன்.

“மிக முதியவர். தன் இரு மாணவர்களுடன் துவாரகைக்குள் வந்தார். இளவரசர் சாம்பரை சந்திக்க அழைத்துச்சென்றோம். ஆனால் அவர் உடனே அஸ்வபதத்திற்கு செல்லவேண்டும் என்றார். எதன்பொருட்டு என அவருக்கே தெரியவில்லை. அவருக்கு ஆணைவந்தது என்றார். என்ன ஆணை என்றால் அங்கு செல்க என்றுமட்டுமே ஆணை என்றார். இளவரசர்

சாம்பரின் அவையில் இவர் அதை சொன்னபோது அவர் எரிச்சல்கொண்டார். கொண்டுசெல்க என ஆணையிட்டார்.”

“அவரும் இரு மாணவர்களும் வண்டிக்குள் இருக்கிறார்கள். விந்தையான உடை அணிந்தவர்கள். அந்த ஆடை குருதிச்செம்மை வண்ணத்தில் அமைந்தது. கைகளை விரித்தால் சிறகுவிரிக்கும் பட்டாம்பூச்சியென ஆவது” என்று இன்னொரு காவலன் சொன்னான். “இங்கே ஏன் அவர் வருகிறார் என்பதை வழியெங்கும் நாங்கள் பேசிக்கொண்டோம். இது வேட்டைக்கான ஊர். இப்போது வேட்டை நிகழ்வதில்லை. சாம்பர் சற்று உடல்நலம் குன்றியிருக்கிறார். தாங்கள் யார்?” சாரிகர் “நான் அஸ்தினபுரியின் தூதன். இங்கே தங்கியிருக்கிறேன், அரசியின் விருந்தினன்” என்றார். “அஸ்தினபுரியிலிருந்து இங்கே வருகிறார்களா என்ன? விந்தைதான்!” என்றான் ஒரு காவலன்.

அவ்வீரர்கள் நாவின் மேல் எந்த ஆணையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பேசிக்கொண்டே செல்ல விழைந்தனர். துவாரகை அதன் படையொழுங்கை முற்றாக இழந்துவிட்டது என்றும், மொத்த நகருமே எந்த அலுவலுமின்றி சழக்குபேசி பொழுதுநீக்கிக்கொண்டிருக்கிறது என்றும் சாரிகர் எண்ணிக்கொண்டார். “அஸ்தினபுரியிலிருந்து நீங்கள் இங்கே வந்தது எதற்காக? அங்கே மக்கள் பெருந்திரளாக கூடிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டோமே” என்று ஒருவன் சொன்னான்.

சாரிகர் மறுமொழி சொல்லவில்லை. அவருடைய உளவிலக்கை உணராமல் இன்னொருவன் “யுதிஷ்டிரன் ராஜசூயம் நிகழ்த்தவிருப்பதாக சொன்னார்கள்” என்றான். “அங்கே இளைய யாதவரின் இடம் என்ன? அவர் மாமன்னர்

யுதிஷ்டிரனின் அரசவையில் அமர்ந்திருக்கும் அறிஞர் மட்டுமே என்றார்கள். அரசரை புகழ்ந்து பாடி பரிசில் பெறுகிறாரா என்ன?" அவர்கள் நகைத்தனர். "அவர் குழலூதி பரிசில் பெறுவார்" என்றான் ஒருவன். மீண்டும் நகைப்பொலி.

"நீங்கள் விருஷ்ணிகளா?" என்று சாரிகர் கேட்டார். "ஆம், நாங்கள் தொல்குலத்தார். மதுரையில் வாழ்ந்தவர்கள்" என்றான் ஒருவன். "கம்சரின் வழித்தோன்றல்களா?" என்று சாரிகர் கேட்டார். "ஆம், அதனாலென்ன? யாதவகுடியின் மாமன்னர் அவர். அவர் காலத்தில் மகததமே யாதவர்களுக்கு துணைநின்றது. பாரதவர்ஷமே யாதவர்களை அஞ்சியது…" என்று ஒருவன் சொன்னான். "அவருடைய வீழ்ச்சிக்குப் பின்னர்தான் எங்கள் சீரழிவு தொடங்கியது. அவர் மாவீரர், வஞ்சத்தால் வீழ்த்தப்பட்டார்" என்றான் இன்னொருவன். சாரிகர் புன்னகைத்துக்கொண்டார்.

"புன்னகைக்கிறீர் அந்தணரே. அறிக, கார்த்தவீரியனுக்குப்பின் எங்கள் குடியில் பிறந்த பெருந்தலைவர் கம்சரே! அவரை நாங்கள் அஞ்சினோம். ஆகவே வெறுத்தோம். ஆனால் குடிகளில் அச்சத்தை உருவாக்குபவரே சிறந்த அரசர் என இப்போது உணர்கிறோம்" என்று முதல்காவலன் சொன்னான். "இங்கே தாசிகளுடன் ஆடிக்கொண்டிருப்பவர்களால் எவரையும் காக்கமுடியாது. அதை உணர எங்களுக்கு ஒரு தலைமுறைக்காலம் ஆகிவிட்டது" என்று காவலர்தலைவன் சொன்னான்.

அவர்கள் கோட்டைவாயிலை அடைந்தனர். அவர்களை ஒருவினாவும் இன்றி உள்ளே அனுப்பினார்கள். சாலைகளில் அவர்கள் சென்றபோது முதல்முறையாக ஊரில் ஓர் ஆர்வம் எழுந்தது. முதியவர்கள் கைகளை கண்மேல் வைத்து

நோக்கினர். கணிகையர் சாளரங்களில் குவிந்தனர். ஒருவர் அருகே வந்து சாரிகரிடம் “பீதர்களா? அரசவிருந்தினராக வேட்டைக்கு வந்திருக்கிறார்களா?” என்றார். சாரிகர் “ஆம்” என்றார். “நன்று, மீண்டும் கப்பல்கள் வரத்தொடங்கிவிட்டிருக்கின்றன போலும்” என்று முதியவர் அப்பால் நின்று சொன்னார்.

அவர்கள் அரண்மனையை அடைந்தனர். வண்டிகள் நின்றன. உள்ளிருந்து முதிய பீதர் ஒருவர் வெளியே இறங்கினார். அவருடைய தலைமயிர் மென்மையாக நீண்டு இறகுகள்போல தோளில் கிடந்தது. மீசையும் தாடியும் மெல்லிய வெண்பட்டு நூல்கள் போல தொங்கின. உடல் நன்றாக கூன்விழுந்து குறுகியிருந்தது. அவரைத் தொடர்ந்து இரு இளம்பீதர்கள் இறங்கினர். அவர்கள் ஆண்களா பெண்களா என்றே அவரால் அடையாளம் காணமுடியவில்லை. வெள்ளிநூலால் அணிப்பின்னல் செய்யப்பட்ட குருதிச்செந்நிறப் பட்டாடையை அணிந்து நீலநிறக் கச்சை கட்டியிருந்தனர். இளையோர் கைகளில் ஆமையோட்டு மூடியிடப்பட்ட பேழைகள் இருந்தன.

முதியவர் சாரிகரிடம் “அந்தணரே, இந்த ஊரின் பெயர் அஸ்வபதமா?” என்றார். “ஆம்” என்று அவர் சொன்னார். “என் பெயர் அஸ்வன். உங்களூருக்கான பெயர் இது. முன்பு இளைய யாதவர் துவாரகையை ஆட்சி செய்தபோது பலமுறை அந்நகருக்கு வந்திருக்கிறேன்” என்றார். “நான் ஒரு மருத்துவன். மருத்துவம் குறித்து இளைய யாதவரிடம் நிறைய பேசியிருக்கிறேன். அவர் என் தோழர். என்னுடன் பீதர்நாட்டுக்கு வரும் எண்ணம்கூட அவருக்கு இருந்தது.” சாரிகர் “ஆம், அவர் அறியாதவை குறைவு” என்றார். “அவர் இங்கில்லை என

அறிந்தேன். நான் அவருடைய ஆணைப்படி இங்கே வந்தேன்” என்றார் அஸ்வன்.

“அவர் எவ்வண்ணம் அந்த ஆணையை அளித்தார்?” என்று சாரிகர் கேட்டார். “அவர் ஆணையை அளித்தது இப்போதல்ல, பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு” என்றார் அஸ்வன் .“அன்று ஒருமுறை நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவர் ஒருநாள் என் உதவி அவருக்கு தேவைப்படும் என்றார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவருடைய தூதர்கள் தாம்ரலிப்திக்கும் தேவபாலபுரத்திற்கும் வந்து என்னை தேடியிருக்கிறார்கள். எங்கள் கலக்காரர்கள் வழியாக அச்செய்தியை நான் அறிந்துகொண்டேன். ஆகவே கிளம்பி துவாரகைக்கு வந்தேன்.” சாரிகர். “பதினெட்டாண்டுகளுக்கு முன்பா?” என்றார். “ஆம், அப்போது அவருடன் சாந்தீபனி குருநிலையின் முதிய அந்தணர் ஒருவரும் ஏழு நிமித்திகர்களும் இருந்தனர்.”

“நான் அரசியிடம் ஒப்புதல் பெற்று வருகிறேன்” என்று சொல்லி சாரிகர் முன்னால் சென்றார். ஏவலனிடம் செய்தியைச் சொல்லி சத்யபாமையிடம் அனுப்பிவிட்டு திரும்பி வந்தார். “நீங்கள் எதன்பொருட்டு இங்கே வந்தீர்கள் என அறியலாமா?” என்றார் சாரிகர். “மெய்யாகவே அது எனக்குத்தெரியாது. இங்கே நான் இருக்கவேண்டும் என்பது மட்டுமே ஆணை” என்றார் அஸ்வன். “நீங்கள் செய்யும் மருத்துவம் என்ன?” என்று சாரிகர் கேட்டார். “அனைத்து மருத்துவங்களும்... நான் பெரும்பாலும் மரக்கலங்களில் இருப்பவன். ஆகவே உயிர்தக்கவைக்கும் மருத்துவமே என் ஆய்வில் முதன்மையானது. கரை அணுகும்வரை நோயில் இருப்பவர்களை உயிர்நீட்டி கொண்டுசெல்வேன்.”

அவர் மீண்டும் வியந்து சொல்லற்று நின்றார். ஏவலன் வந்து அரசியின் ஆணையை அறிவித்தான். சாரிகர் “வருக, நானே நீங்கள் தங்குவதற்கான இடத்தை ஒருக்குகிறேன்! ஓய்வெடுங்கள்” என்றார். அஸ்வன் “ஓய்வெடுக்க முடியுமா என்று தெரியவில்லை. இந்த இடம், இங்கே நாங்கள் வந்த நோக்கம் எல்லாமே புரியாத கனவு எனத் தோன்றுகிறது” என்றார்.

அஸ்வனையும் மாணவர்களையும் அரண்மனையை ஒட்டிய அறைகளில் தங்கவைத்துவிட்டு சாரிகர் தன் அறைக்கு வந்தார். சிறிதுநேரம் மஞ்சத்தில் படுத்து கூரையின் பலகைப்பரப்பை நோக்கிக்கொண்டிருந்தார். மெல்ல சிறுதுயில் ஒன்றுக்குள் சென்றார். குருதிமணம் எழுந்தது. அதை உணர்ந்ததும் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார். உடல் நடுங்கிக்கொண்டிருக்க மஞ்சத்திலேயே அமர்ந்திருந்தார். உச்சிப்பொழுதுக்கான உணவு அருந்தும்பொருட்டு ஏவலன் வந்து அழைத்தபோதுதான் எழுந்தார்.

உணவு பரிமாறப்பட்ட சிறுமேடை முன் அமர்ந்து அவர் அன்னத்தை கையில் எடுத்ததும் மீண்டும் குருதிமணம் எழுந்தது. உடல்குமட்டி அதிர அன்னத்தை அப்படியே வைத்துவிட்டு எழுந்துகொண்டார். கைகழுவிக்கொண்டு தன் அறைநோக்கி செல்கையில் அரண்மனை பரபரப்படைந்துவிட்டிருப்பதை உணர்ந்தார். சேடியிடம் “என்ன? என்ன நிகழ்கிறது?” என்றார். “இளவரசி குருதிபெருக்கிக்கொண்டிருக்கிறார்” என்று அவள் சொன்னாள். அவளைத் தொடர்ந்து வந்த இன்னொரு சேடி

“மருத்துவச்சிகளை அழைக்கச் செல்லுங்கள்… இங்கிருப்பவர்கள் தாதிகள்… முதுமகளை கேட்கிறார்கள்” என்றாள்.

அவர் அவள் பின்னால் சென்றார். உத்தரையின் சிற்றறைக்கு முன் சத்யபாமை நின்றிருந்தாள். அவரைப் பார்த்ததும் ஓடிவந்து “இங்கே இருக்கும் மருத்துவச்சிகள் திகைத்திருக்கிறார்கள். குருதி கட்டின்றி பெருகிக்கொண்டிருக்கிறது. முதுமகள் ஒருத்தி இருக்கிறாள் என்கிறார்கள். அவளை அழைக்கச் சென்றிருக்கிறார்கள் சேடியர். எனக்கு நம்பிக்கை இல்லை. முதுமகள்மேல் பழியைப்போடவே அவ்வண்ணம் சொல்கிறார்கள் எனத் தோன்றுகிறது” என்றாள். சாரிகர் “அரசி, இங்கே திறன்மிக்க பீதர்நாட்டு மருத்துவர்குழு ஒன்று இன்று வந்துள்ளது” என்றார். அவள் திகைத்து வாய்திறந்து நின்றாள். பின்னர் “இதற்காகத்தானா?” என்றாள். “ஆம்” என்று அவர் சொன்னார். “அவர்களை அழைத்துவருகிறேன்” என்றபின் மறுமொழிக்குக் காத்திராமல் திரும்பி ஓடினார்.

அவர் சென்றடைவதற்கு முன்னரே அஸ்வரும் மாணவர்களும் கிளம்பிவிட்டிருந்தார்கள். அவனைக் கண்டதும் “என்ன நடக்கிறது என்று கேட்டேன். அனைத்தையும் புரிந்துகொண்டேன்…” என்று அவர் சொன்னார். நடுங்கும் உடலும் சிற்றடிகளுமாக நடந்தாலும் மெல்லிய இறகுபோல பாறிப்பாறி அவர் விரைவாக முன்னால் சென்றார். அவருடைய மாணவர்கள் அவருடன் விரைந்தபடி அவருடைய சொற்களை கேட்டனர். அவர் அவர்களின் மொழியில் பேசிக்கொண்டே சென்றார். உத்தரையின் அறைமுகப்பில் சுபத்ரையும் சத்யபாமையும் நின்றிருந்தனர். சத்யபாமை “இவரா? முதியவராகத் தெரிகிறார்” என்றாள்.

அஸ்வன் முறைப்படி வணக்கம் சொல்லிவிட்டு தன் மாணவர்களுடன் உள்ளே செல்ல முற்பட சுபத்ரை “இங்கே ஆண்கள் உள்ளே செல்ல ஒப்புதல் இல்லை” என்றாள். சத்யபாமை “மருத்துவர்களுக்கு ஒப்புதல் உண்டு. செல்க!” என்றாள். அவர்கள் உள்ளே சென்றார்கள். உள்ளே இருந்த சேடியரும் மருத்துவச்சிகளும் வெளியே வந்தார்கள். மருத்துவச்சி “குருதிப்பெருக்கு.... அந்தச் சிற்றுடலுக்குள் இத்தனை குருதியா என்றே வியப்பெழுந்தது” என்றாள். இன்னொருத்தி “பிரம்மன் வந்தாலொழிய எதையும் செய்ய இயலாது. அஸ்வினிதேவர்களும் கையொழிவார்கள்” என்றாள்.

சாரிகர் பதற்றத்துடன் கால் மாற்றி நின்றார். அங்கே நின்றிருந்த பெண்கள் அனைவருமே போதிய பதற்றம் இன்றி இயல்பாக இருப்பதுபோலத் தோன்றியது. அவர்கள் மெல்லிய குரலில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். சுபத்ரை கைகளை மார்பில் கட்டியபடி அங்குமிங்கும் நடந்தாள். பின்னர் “என்ன நிகழ்கிறது என்று எவரேனும் சென்று நோக்கி வருக!” என்றாள். சத்யபாமை “அவர்கள் அழைக்கட்டும்...” என்றாள். சுபத்ரை சினத்துடன் அவளை நோக்கிவிட்டு அகன்று சென்று அங்கிருந்த சிறிய பீடத்தில் அமர்ந்தாள்.

சாரிகர் அங்கிருந்து கிளம்பி மீண்டும் திறந்த புல்வெளிக்குச் சென்று நிற்க விழைந்தார். அங்கிருந்து செல்ல என்ன வழி என எண்ணினார். ஏதேனும் ஆணை கிடைத்தால் செல்லலாம். அல்லது எதையாவது நினைவுகூரவேண்டும். அல்லது எவராவது அழைக்கவேண்டும். அவர் நிலையிழந்து கைகளை உரசிக்கொண்டார். விரல்களின் நுனிகள் உயிரிழந்தவைபோலிருந்தன. விடாய் கொண்டிருப்பதுபோல தொண்டை பதைத்துக்கொண்டிருந்தது. அவர் எங்காவது அமர

விழைந்தார். ஆனால் அரசி நின்றிருக்கையில் அமர்வது மீறல் என்றும் அறிந்திருந்தார்.

கதவு மிகமெல்லிய ஓசையுடன் திறந்தது. பீதர் இளைஞன் வெளியே எட்டிப்பார்த்து “மைந்தன் பிறந்திருக்கிறான்” என்றான். சத்யபாமை “மைந்தனா? இன்னும் மாதம் நிறையவில்லை. குறைபிறப்பா?” என்றாள். “ஆம், மிகச்சிறிய குழவி” என்றான். “உயிர் இருக்கிறதா?” என்று அவள் கேட்டாள். “உயிர் இருக்கிறது, ஆனால் அசைவேதும் இல்லை. மூச்சு மெல்ல ஓடுகிறது. இதயம் அதிர்கிறது” என்றான். சாரிகரிடம் “எங்கள் அறையில் பெரிய பேழை ஒன்று உள்ளது. அதை உடனே கொண்டு வருக... அதை நால்வர் சேர்ந்தே தூக்கமுடியும்” என்றான்.

சாரிகர் இடைநாழிகளினூடாக ஓடி வெளியே சென்று ஏவலரை கைநீட்டி அழைத்தபடி விரைந்தார். பீதர்களின் அறையிலிருந்த காவலனிடம் “அவர்கள் கொண்டுவந்த பேழைகளில் பெரியது எது?” என்று கூவினார். “ஆம், பெரிய பேழை அது. அவர்கள் அதை வண்டியிலிருந்து இறக்கி கொண்டுசென்று அங்கே வைத்தனர். அது மிகுந்த எடைகொண்டது” என்று அவன் சொன்னான். அவன் சுட்டிக்காட்டிய பேழை முழங்கால் அளவு உயரமிருந்தது. வெண்கலத்தால் ஆனது. அதன் மூடியில் நுண்ணிய சிறு துளைகள் இருந்தன. “அவர்கள் அதைத் திறந்து உள்ளே உப்புநீரை ஊற்றினார்கள்” என்றான் காவலன். “அதை தூக்குங்கள்... அதனுள் நீர் இருக்குமென்றால் சிந்தக்கூடாது” என்று சாரிகர் சொன்னார்.

பேழையுடன் மீண்டும் அவர் உத்தரையின் அறைவாயிலை அடைந்தபோது இரு பீதர்கள் அவருக்காகக் காத்து நின்றிருந்தனர். அவர்கள் “விரைந்து...”என்றனர். “உள்ளே

கொண்டு செல்க!” என்றான் ஒருவன். சுபத்திரை “என்ன இது? ஈற்றறைக்குள் ஏவலரா?” என்று சீறியபடி எழுந்தாள். சாரிகர் “நான் கொண்டுசெல்கிறேன்...” என்று சொல்லி ஏவலரை விலக்கினார். பீதர்களிடம் “பிடியுங்கள்” என்றார். மூவரும் அதை இழுக்க அதன் எடையால் அது தள்ளாடியது. சுபத்ரை வந்து “விலகுக!” என்றுகூறி அதை தான் மட்டுமே தூக்கி கதவை காலால் உதைத்துத் திறந்து உள்ளே கொண்டுசென்றாள்.

உள்ளே அஸ்வன் நின்றிருந்தார். அவர் திரும்பி நோக்கி “அங்கே வையுங்கள்” என்று ஆணையிட்டார். அவள் அதை கீழே வைத்ததும் பீதர்கள் அதை திறந்தனர். உள்ளே இருந்தபொருள் என்ன என்று அவருக்கு தெரியவில்லை. ஒருமுழத்திற்கும் சற்று குறைவான நீளமும் பாதியளவு அகலமும் கொண்ட மண்ணாலான சிற்பம்போல் இருந்தது. அல்லது பழுப்புநிறமான பாறையா? பேழைக்குள் மணலும் நீரும் பாதியளவு இருக்க அதில் பாதி மூழ்கியபடி அது மணல்மேல் வைக்கப்பட்டிருந்தது.

அவர் மேலும் குனிந்து அதை பார்த்தார். சுபத்ரை “அது என்ன? முத்துச்சிப்பியா?” என்றாள். “அதைக் கொண்டு என்ன செய்யவிருக்கிறீர்கள்? எங்கே அந்தக்குழந்தை?” அஸ்வன் அவளிடம் ஆழ்ந்த மென்குரலில் “நீங்கள் வெளியே செல்லுங்கள்” என்றார். “நான்...” என்று அவள் சொல்லத்தொடங்க அவர் கைசுட்டி “வெளியே...” என்றார். அவள் திகைத்து பின் உறுமியபடி வெளியே செல்ல கதவு அறைபடும் ஓசையுடன் மூடிக்கொண்டது. அஸ்வனும் இரு மாணவர்களும் சேர்ந்து அந்த முத்துச்சிப்பியை மெல்ல தூக்கினர். அத்தனை பெரிய சிப்பியா? அது சிப்பியின் வடிவில் இல்லை. அவர்கள் அதை அருகிருந்த மேடையின்மேல் வைத்தனர்.

சாரிகர் அப்போதுதான் குழந்தையை பார்த்தார். முதலில் அது என்னவென்றே அவருக்கு தெரியவில்லை. உத்தரையின் உடல்மேல் போர்த்தப்பட்டிருந்த மெல்லிய போர்வை இடைக்குக்கீழே குருதியில் ஊறி நிணச்சவ்வுபோல மாறிவிட்டிருந்தது. அவளுடைய விரிந்த தொடைகளுக்கு நடுவே தேங்கிய செங்குழம்பின்மேல் அக்குழவி வைக்கப்பட்டிருந்தது. அது குருதியில் ஊறி தொப்புள்கொடிச்சுருள்களுடன் குவியலெனக் கிடந்தது. குடல்தொகை பிதுங்கி வெளியே வந்துவிட்டதுபோல என்று அவருக்கு தோன்றியது. அவள் உடலில் இருந்து அப்போதும் குருதி சிறு குமிழிகளாக வெடித்து வெளிவந்துகொண்டிருந்தது.

அஸ்வன் தன் கையிலிருந்த கழுகின் உகிர் அளவுக்கே இருந்த சிறிய கூரிய கத்தியால் சிப்பியின் பொருத்தை நெம்பி மெல்ல திறந்தார். அதை கைகளால் அவர் விரித்தபோது முதலை வாய்திறந்ததுபோல உள்ளே செஞ்சதைக் கதுப்பு மெல்லிய அதிர்வுடன், குமிழியிடுவதுபோன்ற அசைவுடன் தெரிந்தது. அவர் திரும்பி குழந்தையை நோக்கினார். தன் கைகளை அருகிலிருந்த குடுவையில் கலக்கப்பட்டிருந்த இளநீலமான நீரில் கழுவிவிட்டு அந்தத் தொப்புள் கொடியை முதலில் நீளமாக வெட்டி அதைக்கொண்டே குழந்தையை மெல்ல தூக்கினார்.

குழவி அவர் கையளவுக்கே இருந்தது. அதன் தலை அவ்வுடம்பில் பாதியளவுக்கு ஒருபெரிய குருதிக்குமிழிபோல தெரிந்தது. இன்னொரு குமிழியென வயிறு. கைகளும் கால்களும் அவருடைய விரலளவுக்கே இருந்தன. செந்நிறமான புழுக்களைப்போல. மிகமிகச் சிறிய விரல்கள். அதன் தொண்டை அதிர்ந்துகொண்டிருந்தது. உடல் அசைவிழந்து

அவர் கைகளில் இருந்த தொப்புள்கொடியின் வழவழப்பில் குழைந்தது. அவர் அந்த ஊன்சரட்டைச் சுழற்றி அதன் இரு கால்களிலும் சுற்றி தலைகீழாக ஆக்கி இருமுறை உலுக்கினார். அதன் மூக்கிலிருந்து குருதிநீர் வெளிவந்தது. அதை அப்படியே மெல்ல தூக்கி கொண்டுசென்று அந்தச் சிப்பியின் தசைக்கதுப்பில் வைத்தார்.

அவர் கைநீட்ட இளம்பீதன் குதிரைவால் முடியை அளித்தான். தொப்புள்கொடியை விரற்கடை விட்டு வெட்டி முனையை மடித்து குதிரைவால்முடியால் கட்டினார். அந்தச் சிப்பியை மெல்ல மூடினார். அதை பீதர்கள் இருவர் மெல்ல தூக்கிக்கொண்டுசென்று அப்பால் வைத்தனர். அஸ்வன் திரும்பி உத்தரையை பார்த்தார். அவள் உதடுகள் மெல்ல அசைந்தன. அவர் திரும்பி பீதர்களிடம் கைநீட்ட அவர்கள் சிறு சிமிழில் இன்நீரை அளித்தனர். அவர் அதை அவளுக்கு ஊட்டினார். அவள் உதடுகள் விடாயுடன் அசைந்து அதை வாங்கின. தொண்டை நீரை உறிஞ்சி உண்ணும் அசைவு தெரிந்தது.

“ஆண்மகவு” என்று குனிந்து அவள் காதில் அஸ்வன் சொன்னார். “ஆண்மகவு, பார்க்கிறீர்களா இளவரசி?” அவள் வேண்டாம் என்று தலையை ஆட்டினாள். “உங்கள் மைந்தன்” என்று சாரிகர் சொன்னார். அவள் மீண்டும் மறுப்பாக தலையசைத்தாள். அஸ்வன் “அது உறுதியான முடிவு” என்றார். சாரிகர் பெருமூச்சுவிட்டார். “நீங்கள் வெளியே செல்லலாம் அந்தணரே. நாங்கள் இளவரசியை தூய்மைசெய்யப்போகிறோம்” என்றார் அஸ்வன். சாரிகர் தயங்கி உத்தரையை பார்த்தார். அவர் உள்ளம் மலைப்படைந்திருந்தது. கண்வழியாகப் புகுந்த காட்சிகள் உடலை நிறைத்து பலமடங்கு எடைகொண்டதாக ஆக்கிவிட்டிருந்தன.

“இளவரசி பிழைத்துக்கொள்வார்களா?” என்று கேட்டார். “அவர்கள் விழையவேண்டும்” என்றார் அஸ்வன். அவர் திரும்பி குழவி இருந்த சிப்பியை பார்த்தார். “மைந்தன் உயிர்வாழ்வானா?” என்றான். “அவர் விழையவேண்டும்” என்றார் அஸ்வன். “ஆனால் பிறக்கும் உயிர்கள் அனைத்தும் வாழும் விழைவை கொண்டிருக்கின்றன. அவை அதன்பொருட்டு அனைத்து தெய்வங்களையும் உடனழைத்துக்கொள்கின்றன.” அவர் அச்சிப்பியையே பார்த்துக்கொண்டு நின்றார். அதற்குள் ஒரு குழவி இருக்கிறது என்று எண்ணமுடியவில்லை. தன் விழிகளை கொட்டிக்கொட்டி அந்தக் காட்சிகளை உதிர்த்துவிட முயன்றார்.

கதவைத்திறந்து வெளியே சென்றபோது சத்யபாமை எழுந்து அருகே ஓடிவந்து “என்ன ஆயிற்று?” என்றாள். “இருவருமே இப்போது உயிருடன் இருக்கிறார்கள்” என்று அவர் சொன்னார். ஓர் அனல் அலை என விடாய் வந்து அவரை தாக்கியது. எங்காவது அமரவேண்டும், உடல்குளிர இன்நீர் அருந்தவேண்டும் என்று தோன்றியது. கண்களில் இருந்து அதுவரை கண்ட அத்தனை காட்சிகளும் மறைய நோக்கு வெளிறி அலைகொண்டது. ஏதோ சொல்ல அவர் நாவெடுத்தார். அதற்குள் பிடித்து தள்ளப்பட்டதுபோல் வலப்பக்கமாக சரிந்து விழுந்தார்.

# களிற்றியானை நிரை - 27

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 10**

சாரிகர் தன் அறையின் மஞ்சத்தில் நினைவு மீண்டார். அவரருகே ஏவலன் நின்றிருந்தான். “துயில்கொள்க… பீதர்நாட்டு ஓய்வுமருந்து தரப்பட்டிருக்கிறது” என்றான். அவர் உள்ளத்தில் எந்நினைவும் இருக்கவில்லை. அவர் வெறுமனே ஏவலனை நோக்கிக்கொண்டிருந்தார். கையூன்றி எழமுயன்றபோது ஓர் உலுக்கலாக அனைத்தும் விழிகளுக்குள் தோன்ற விக்கலோசையுடன் மஞ்சத்தில் விழுந்தார். ஏவலன் நீர்க்குவளையை எடுத்து நீட்ட அதை வாங்கி உடல்முழுக்க சிந்தும்படி அருந்தினார். நீர் உள்ளே சென்று வெம்மையை அணைத்தது. கண்களை மூடி குருதித்தெறிப்புகள் சுழல்வதை பார்த்துக்கொண்டிருந்தார்.

மீண்டும் எழுந்தபோது உடல் ஒருமை கொண்டிருந்தது. “நீங்கள் சற்று ஓய்வெடுக்கலாம், அமைச்சரே” என்று ஏவலன் மீண்டும் சொன்னான். “இல்லை” என்று அவர் எழுந்து பீடத்தருகே சென்றார். அதிலமர்ந்துகொண்டு “நெடும்பொழுதாகிவிட்டதா?” என்றார். “ஆறு நாழிகைப் பொழுது” என்றான். “என்ன ஆயிற்று? இளவரசியும் மைந்தனும் எவ்வண்ணம் இருக்கிறார்கள்?” என்றார். “இதுவரை அவர்கள் நலமே” என்றான் ஏவலன். அவர் தன் தலையை கைகளில் தாங்கிக்கொண்டு அமர்ந்தார். மூச்சிளைப்புடன் உடலை குறுக்கிக்கொண்டார்.

கைசுட்டி “ஏடு…” என்றார். ஏவலன் பேழையிலிருந்து ஏடும் எழுத்தாணியும் எடுத்து அளித்தான். நிகழ்வனவற்றை உடனே எழுதிவிடவேண்டும் என அவர் முன்னரே முடிவெடுத்திருந்தார். தொடங்கவேண்டிய வரியைக்கூட நெஞ்சுக்குள் யாத்திருந்தார். ஆனால் அந்த வரிகூட நினைவிலெழவில்லை. எழுத்தாணி ஓலையில்

சுழித்துக்கொண்டே இருந்தது. ஒரு சொல் கூட இல்லாமல் உள்ளம் அவ்வாறு ஒழிந்துகிடந்ததே இல்லை. எப்போதெல்லாம் ஓலையும் எழுத்தாணியும் கிடைக்கின்றனவோ அப்போதெல்லாம் எழுதிக் குவித்தவர் அவர். அந்த முதற்சொல் என்ன? அது எவ்வெழுத்தில் தொடங்குவது? அவர் முட்டுந்தோறும் உள்ளம் மேலும் ஒழிந்தது.

எழுத்தாணியை ஓலை மேலேயே வைத்துவிட்டு அவர் எழுந்துகொண்டார். “என் சால்வை” என்றார். ஏவலன் சால்வையை எடுத்து அளிக்க அதை போர்த்திக்கொண்டு நடந்தார். அவருடைய அறையில் இருந்து இடைநாழிகள் வழியாக மைய அரண்மனைக்குள் செல்ல வழி இருந்தது. அதன் இணைப்பாக உத்தரையின் அறை அமைந்திருந்தது. நடக்க நடக்க நெடுந்தொலைவு என்று தோன்றியது. உடல் ஓய்ந்து கால்கள் நீரில் துழாவுவனபோல அசைந்தன. உள்ளம் சலிப்புற்று நோக்கும் காட்சிகளெல்லாம் அழகையும் பொருளையும் இழந்தன. உதடுகள் உலர்ந்திருக்க தொண்டை நீர் நீர் என தவித்தது.

இடைநாழியிலேயே அவர் பீதர்நாட்டு இளைஞனை கண்டார். அவன் புன்னகைத்து உடல் வளைத்து வணங்கினான். “குழவி எப்படி இருக்கிறது?”என்று அவர் கேட்டார். அவனுக்கு சொல் புரியவில்லை. மீண்டும் கேட்டதும் அவன் புன்னகைத்து தலைவணங்கி “உயிருடன்” என்று சொன்னான். அவனால் மொழி கடந்து பேசமுடியவில்லை என்று உணர்ந்து சாரிகர் “நான் அறைக்குள் செல்லலாமா?” என்றார். அவன் “ஆம்” என்றான்.

உத்தரையின் அறையின் வாயிலில் ஏவற்பெண்டு மட்டும் இருந்தாள். “என்ன ஆயிற்று? அரசியர் எங்கே?” என்றார். “இங்குதான் இருந்தார்கள். சற்றுமுன்னர்தான் இருவரும் தங்கள் அறைக்குச் சென்றார்கள்” என்றாள் ஏவற்பெண்டு. “நான் உள்ளே செல்லலாமா? சென்று நோக்கிவந்து சொல்” என்றார். அவள் உள்ளே சென்றுவந்து செல்லலாம் என்று தலைவணங்கினாள். சாரிகர் தயங்கி பின்னர் கதவை அசைத்து ஒலியெழுப்பினார். “வருக!” என்று அஸ்வனின் குரல் கேட்டது. அவர் உள்ளே சென்றார். அவர் மேலும் தயங்கியபடி நின்று பின் உளம்திரட்டி உள்ளே சென்றார்.

அவர் முதலில் பார்த்தது அந்த சிப்பிப் பேழையைத்தான். அது அங்குதான் இருந்தது. அதன்பின் மஞ்சத்தில் உத்தரையை பார்த்தார். அவள் வெண்ணிறமான போர்வை போர்த்தப்பட்டு மஞ்சத்தில் கண்மூடிக் கிடந்தாள். முகம் உயிரில்லாத பொருள்போல தெரிந்தது. இமைகள் வீங்கி இரு சிப்பிகள்போல மூடியிருந்தன. இமைமயிர்கள் முழுக்க உதிர்ந்துவிட்டவை போலிருந்தன. உதடு இறுகி ஒரு சிவந்த சுருக்குமுடிச்சுபோல தெரிந்தது. உடல் முற்றாகவே போர்வையால் மூடப்பட்டிருந்தது. அவளுடைய மஞ்சத்திற்கு அடியில் நெருப்போடு வைக்கப்பட்டிருந்தது. அதில் கரியிலெழுந்த அனல் சீறிக்கொண்டிருந்தது.

அவர் அஸ்வனை வணங்கினார். அவர் கண்களைச் சுருக்கிப் புன்னகைத்து “அவர்களுக்கு வெம்மை தேவையாகிறது” என்றார். “உடலில் இருந்து குருதி வெளியேறிவிட்டது. குருதிதான் உடலுக்கு வெம்மையை அளிக்கிறது.” அவர் பீடத்தில் அமர்ந்து “வாழ்வார்களா?” என்றார். “வெம்மையை உடல் ஏற்றுக்கொண்டால் வாழ்வார்கள்” என்றார் அஸ்வன்.

அவர் பெருமூச்சுவிட்டு திரும்பி சிப்பியை பார்த்தார். “இது முத்துச்சிப்பியா? இத்தனை பெரிதாக உள்ளது?” என்றார்.

“இது முத்துச்சிப்பி அல்ல. இது பீதர்நாட்டில் உள்ள ஒருவகை கடற்சிப்பி. முத்துச்சிப்பியின் வகைப்பட்டதே. ஆனால் இயற்கையானது அல்ல. நெடுநாட்களுக்கு முன் எங்கள் நாட்டு மருத்துவர்களால் கடல்நீரிலிருந்து கொண்டுவரப்பட்டு உப்புகலந்த ஆற்றுநீரில் வளர்க்கப்பட்டது. கடலில் இது சற்று குளிர்நீரில் வாழ்வது. ஆற்றில் வெயில்படியும் வெய்யநீரில் வாழும்படி தன்னை மாற்றிக்கொண்டுவிட்டது. சிப்பியின் அகத்தசை குளிர்ந்தது. இதன் அகத்தசை மானுட உடலளவுக்கே வெம்மையானது. பலநூறு தலைமுறைகள் தவமென முயன்று இதன் உயிரியல்பை மாற்றியமைத்து இவ்வாறு உருவாக்கியிருக்கிறார்கள்.”

“மிகப் பெரியது” என்றார் சாரிகர். “ஆம், இதன் முதல்வடிவுடன் ஒப்பிட மும்மடங்கு பெரியது” என்று அஸ்வன் சொன்னார். அவர் அதை நோக்கிக்கொண்டு “ஒரு கருவறைபோல” என்றார். “ஆம், கருவறையேதான். அக்குழவியின் உடலில் தோல் உருவாகியிருக்கவில்லை. அதை கையால் தொட்டாலே தசை வழன்று வந்துவிடும். தோல் வளர இன்னும் மூன்று வாரமேனும் ஆகும். அதுவரை அது இக்கருவறைக்குள் வாழ்ந்தாகவேண்டும்.” அவர் அந்தச் சிப்பியை பார்த்தார். “அது தன்னுள் வந்திருக்கும் உயிரை அறியும். மென்தசைகளால் சூழ்ந்துகொண்டு உயிர்வெம்மையை அளிக்கும். உணவை நாம் அளிக்கவேண்டும். மைந்தன் வெளிவந்து வாழவேண்டுமென்றால் ஆறு வாரமேனும் ஆகும்.”

“இச்சிப்பி அதுவரை உயிர்வாழுமா?” என்று அவர் கேட்டார். “சிப்பி நீரிலுள்ள மாசுக்களை உண்பது. ஆகவே அது

உணவுண்ணுமென்றால் குழவியின் உடலை மாசுக்கள் தொடும். ஆகவே அதற்கு ஆறு வாரமும் உணவு அளிக்கப்படாது” என்று அஸ்வன் சொன்னார். “உணவின்றி அத்தனை நாள் அது உயிர்வாழும். பொதுவாகவே சிப்பிகள் ஒருமாதம் வரை உணவின்றி நீரின்றி வாழ்வன. இது மேலும் திறன்கொண்டது.” அவர் அதை மீண்டும் நோக்கி “கைகளும் கால்களும் தலையும் நெஞ்சும் இல்லாத அன்னை. கருவறை மட்டுமேயானவள்” என்றார். “ஆம், ஆனால் அன்னை. அக்கனிவு அதற்குள் எங்கோ தெய்வ ஆணையென அமைந்துள்ளது” என்றார் சாரிகர்.

சாரிகர் அதை நோக்கியபடி அமர்ந்திருந்தார். உள்ளம் அதுவரை இருந்த எல்லா சோர்வையும் இழந்து ஊக்கம் கொண்டது. ஆனால் அது எழுச்சியாக அமையாது பரவிப் பரவி அமைதியாக மாறியது. ஊழ்கம் கூடுவதுபோல. அச்சிப்பிக்குள் சென்று தானும் ஒடுங்கிவிடவேண்டும் என்பதுபோல. அவ்வறையே ஒரு பெருஞ்சிப்பியாக மாறி தன் கதுப்பால் அவரை மென்மையாக மூடிக்கொண்டதுபோல. குருதிமணம், குருதி வெம்மை, குருதியின் மென்மை. குருதி அவரிடம் கூறியது, அமைக, அமைக, அமைக! அவர் விழிகள் சொக்கிச் சரிந்தன.

தன் தலை அசைய உடல் ஒருபக்கம் தள்ளப்பட்டபோது அவர் விழித்துக்கொண்டார். வாயிலிருந்து நீர் சொட்டியிருந்தது. அதை துடைத்தபடி அஸ்வனை பார்த்தார். சுருங்கிய விழிகள் நடுவே வெண்ணிற மணி அமைந்த இரு நூல் முடிச்சுகள்போல தெரிய அவர் முகம் தளர அசைவில்லாது அமர்ந்திருந்தார். துயிலாமல் அவ்வண்ணம் அமைய பீதர்களால் மட்டுமே இயலும் என அவர் எண்ணிக்கொண்டார்.

பெருமூச்சுடன் அசைந்தமர்ந்து அந்தச் சிப்பியை நோக்கினார். அக்கருக்குழவி அதற்குள் மீண்டும் தன் ஆழ்துயிலுக்குச் சென்றுவிட்டிருக்கும். நடுவே வந்து உலகைக் கண்டு மீண்டதையே அறியாமல் ஆகிவிட்டிருக்கும். அன்னையின் கருவில் இருக்கையில் அது கண்ட கனவுகள் என்ன? இப்போது அது ஆழியின் அலைகளை, அடித்தளத்து இருளின் செறிவை, நீரெடையின் அழுத்தத்தை, உயிர்ப்பெருக்கை, ஒளிக்கலங்கலை கனவு காண்கிறதா?

அவ்வாறு ஒன்று நிகழக்கூடும் என்பதையே அவரால் நம்ப இயலவில்லை. மெய்யாகவே நிகழ்கிறது, கண்ணெதிரே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. “இது எவராலும் நம்ப முடியாதது” என்றார். அஸ்வன் புன்னகைத்தார். “தேவர்களை, கந்தர்வர்களை நம்பலாம். இதை நம்ப முடியவில்லை” என்றார் சாரிகர். அஸ்வன் பற்கள் தெரிய சிரித்தார். “அக்குழவி எப்படி மூச்சுவிடுகிறது?” என்றார். “குழவியின் உடல் கருவறைக்குள் இருக்கையில் மூச்சுவிடுவதும் உண்பதும் இல்லை. வெளியே வந்ததும்தான் அவை தொடங்குகின்றன. இச்சிப்பித்தசைக்குள் இருக்கையில் உடல் தன்னை கருவறைக்குள் இருப்பதாகவே எண்ணிக்கொள்ளும். குறைவான மூச்சு அதற்கு போதும். சிப்பிக்குள் அதற்கான காற்றோட்டம் உண்டு. சிப்பியின் சவ்வுகளால் வடிகட்டப்பட்ட தூய காற்று” என்றார் அஸ்வன்.

“உணவை மட்டும் துளித்துளியாக அளித்தபடியே இருக்கவேண்டும். தூய முலைப்பால். அதுவன்றி எதையும் அவ்வுடல் ஏற்காது. அதை சிப்பியின் சிறு திறப்பினூடாக அமைந்த திரியின் வழியாக அளித்துக்கொண்டிருக்கிறோம்” என அவர் சுட்டிக்காட்டினார். சிப்பிப்பொருத்தினூடாக உள்ளே சென்ற சிறுகுழாய் ஒன்றை அவர் கூர்ந்து பார்த்தார். “இது

பீதர்நாட்டு கொடி. பஞ்சுத்திரிபோல பாலை உள்ளே கொண்டுசெல்லும். அதன் மறுமுனை மைந்தனின் வாயில் உள்ளது. வெளியே இந்தச் சிறு சிமிழில் முலைப்பாலை கறந்து ஊற்றிக்கொண்டே இருக்கவேண்டும்.” அவர் “அருந்துகிறானா?” என்றார். “ஆம், உள்ளே செல்கிறது. அதுவே நம்பிக்கையூட்டுகிறது” என்றார் அஸ்வன்.

“இத்தகைய மருத்துவமுறையை கேள்விப்பட்டதே இல்லை” என்று அவர் சொன்னார். அவர் “உங்கள் நாட்டு மருந்துமுறை முழுக்கமுழுக்க தாவரங்களைச் சார்ந்தது. எங்கள் மருத்துவமுறை விலங்குகளைச் சார்ந்தது. ஊனும் குருதியும் கொம்பும் குளம்பும் என அனைத்தும் எங்கள் மருந்துகளே” என்றார். “இங்கே இன்று மட்டுமே குழவியை வைத்திருக்க இயலும். துவாரகைக்குக் கொண்டுசெல்வதே உகந்தது என்று தோன்றுகிறது. குழவி வளரத் தொடங்கினால் மேலும் மேலும் முலைப்பால் தேவைப்படும். அதற்குரிய பெண்டிர் அங்குதான் இருப்பார்கள். அத்துடன் இச்சிப்பி உப்புநீராவி கொண்ட காற்றிலேயே நீடுவாழும். இங்கே காற்று வறண்டிருக்கிறது.”

“ஆனால் மைந்தனின் அன்னை இங்குதான் இருக்கிறார்” என்று சாரிகர் சொன்னார். “ஆம், மைந்தனை அன்னையிடமிருந்து பிரித்தேயாகவேண்டும். அன்னையின் முலையில் ஒரு துளி அமுதுகூட இல்லை. அவர் மைந்தனைப் பெற்றதை அவர் உள்ளம் அறியவில்லை, ஆகவே உடலும் உணரவில்லை” என்றார் அஸ்வன். “இச்சிப்பிக்குள் இருந்து மைந்தன் வெளியே வரும்போது தொடர்ந்து முலைப்பால் அளிக்கப்படவேண்டும். முலைப்பாலில் நீராட்டியே ஒருமாத காலம் வைத்திருக்கவேண்டும். பெருநகர் ஒன்றில்தான் அதற்கான வாய்ப்புள்ளது.”

சாரிகர் “உங்களால் இயன்றதை செய்யுங்கள்” என்றார். “அரசியின் ஆணை அனைத்திற்கும் இருக்கும் என்று எண்ணுகிறேன்.” அஸ்வன் “இருப்பினும் முறையான ஆணை தேவை. நீங்கள் அரசியரிடம் பேசி அவ்வொப்புதலை வாங்கி அளிக்க முடிந்தால் நன்று” என்றார். “ஆம், அது என் கடமை” என்று சாரிகர் சொன்னார். எழுந்துகொண்டு உத்தரையை பார்த்தார். “இங்கே இளவரசரை வைத்திருப்பதும் நன்றல்லதான். இங்கே சாவு நிறைந்திருக்கிறது” என்றார். அஸ்வன் நிமிர்ந்து அவரை நோக்கினார். “இளவரசி வாழமாட்டார். ஐயமே வேண்டியதில்லை, அவர் முடிவெடுத்துவிட்டார்” என்றார் சாரிகர்.

சாரிகர் வெளியே வந்தபோது அங்கே சுபத்திரை அவரைக் காத்து நின்றிருந்தாள். அவரை நோக்கி ஓடிவந்து “என்ன சொல்கிறார்? இளவரசி எப்படி இருக்கிறாள்?” என்றாள். “இப்போது நலமாகவே இருக்கிறார்கள் இருவருமே” என்று அவர் சொன்னார். அவள் விழிகள் அசைவிழந்து அவரை நோக்கின. “மைந்தர் உயிரூறிக்கொண்டிருக்கிறார். தாய் உயிர்வற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் இருவரும் உயிருடன் இருக்கிறார்கள்” என்று அவர் சொன்னார். அவள் அவரை நோக்கி மேலும் அணுகி “மைந்தன் உயிருடன் வேண்டும். அதைவிட அவள் உயிருடன் எழவேண்டும்” என்றாள்.

அவள் விழிகள் சிவந்திருந்தன. “அவள் குடியில் மறுமணம் ஏற்கப்பட்டதுதான். புகழ்பெற்ற பேரரசி தமயந்தி அவள் குடியில் பிறந்தவள், அறிந்திருப்பீர். அவள் இதிலிருந்து எழுந்தால் விராடநாட்டுக்கு செல்லமுடியும். அங்கே இன்னொருவரை மணந்து அரசு அமர முடியும். விராடரின் குடியில்

எஞ்சியிருப்பவள் அவளே" என்று மூச்சொலியுடன் சொன்னாள். "அவள் இங்கே கவர்ந்துவரப்பட்டவள். நம் குடியால் ஏமாற்றப்பட்டவள். இங்கே அவள் அடைந்தது ஒன்றுமில்லை. அவள் நொந்து ஒரு சொல் உரைத்தால் அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் மட்டுமல்ல துவாரகையும் எரியும்."

சாரிகர் அவள் உணர்வுகளை வியப்புடன் பார்த்தார். என்ன சொல்வதென்று அறியாமல் பொதுவாக "அவர் மீள்வது அவரின் எண்ணத்திலேயே" என்றார். "என்னை உள்ளே அனுப்பச்சொல்லுங்கள். நான் அவளிடம் பேசுகிறேன். அவள் இன்னமும் இளையவள். அவளுக்குச் சொல்லப்பட்டவை அனைத்தும் ஆண்கள் பேதையரை ஏமாற்றும்பொருட்டு உரைக்கும் பொய்கள். அவள் அவற்றை நம்பியிருக்கிறாள் என்றால் பேதையென்றே பொருள். பெண்கள் ஆண்களின் முடியுரிமைக்கு குருதிபெற்று முளைக்கச்செய்யும் நிலங்கள் மட்டுமல்ல. அவர்களே முடிசூடி அமர்ந்து நாடாள முடியும். உளம்விழைந்த வாழ்க்கையை அவர்கள் கொள்ளமுடியும்..."

அவர் அவளை வெறுமனே நோக்கிக்கொண்டு நின்றார். அவள் உடலில் இருந்து அனலெழுவதுபோல் இருந்தது. "அவள் தமயந்தியை எண்ணட்டும். அவளுடைய மூதன்னை அவளே. எந்த ஆணையும் எண்ணவேண்டியதில்லை. ஆணை எண்ணும் பெண் சிறுமையையும் துயரையும் அன்றி எதையும் பெறப்போவதில்லை. அது காதலாயினும் கணவனாயினும் மைந்தனாயினும் தமையனாயினும் தந்தையாயினும் வேறுபாடில்லை. அவளிடம் நான் சொல்கிறேன், அவள் எழுந்தாகவேண்டும் என்று சொல்கிறேன்."

"அவரிடம் இப்போது எவரும் பேசமுடியாது, அரசி" என்று சாரிகர் சொன்னார். "அதை நீங்கள் பேச வாய்ப்பிருக்கையில்

பேசியிருக்கவேண்டும். இப்போது இச்சொற்களை உரைப்பதனால் என்ன பயன்? அவர்களை இவ்வரண்மனையின் பெண்கள் அனைவரும் வெறுக்கிறீர்கள் என்றீர்கள். இந்தக் குலமே வெறுக்கிறது என்றீர்கள்.” அவள் “இல்லை என அவளுக்கும் தெரியும்... நாங்கள் ஒருவரை ஒருவர் கசந்தது ஏன் என்று இருவருக்குமே நன்கு தெரியும்... இக்கீழ்மையில் இனியும் நெளிவதில் பொருளில்லை என்று தோன்றிவிட்டது. அதை அவளும் எங்கோ உணர்ந்திருப்பாள். அவளிடம் சொன்னால் புரியும்... அவள் செவிகள் திறந்தேதான் இருக்கும். செவிவாயிலில் ஆத்மா வந்து நின்றிருக்கும். என்னை உள்ளே விடும்படி சென்று சொல்லுங்கள். நான் அவளிடம் பேசவேண்டும்” என்றாள்.

“நீங்களே அதை கோரலாம்” என்று சாரிகர் சொன்னார். “நான் வேறொரு பணியின்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளேன். மைந்தனை உடனே துவாரகைக்கு கொண்டுசெல்லவேண்டும் என்கிறார்கள். அதற்கு அரசியின் ஒப்புதல் வேண்டும்.” அவள் உரக்க “இங்கிருந்து கொண்டுசெல்வதா? நான் ஒப்ப மாட்டேன். இங்கிருந்து மைந்தனை கொண்டுசெல்லக்கூடாது” என்றாள். “அதை அவர்களே முடிவுசெய்யவேண்டும்” என்றார் சாரிகர். “அவள் இங்கே நோயுற்றிருக்கிறாள். அன்னையிடமிருந்து மைந்தனைப் பிரிப்பது பெரும்பழி. அவள் நினைவு மீண்டு மைந்தனைக் கேட்டால் யார் என்ன சொல்லமுடியும்?”

அவர் தலைவணங்கி அவளிடமிருந்து விலகி நடந்தார். அவள் அவர் பின்னால் வந்தபடி “நில்லுங்கள், என் ஆணை இது! நில்லுங்கள்! அவளை விட்டு மைந்தனை கொண்டுசெல்ல முடியாது. அதற்கு எவ்வகையிலும் நான் ஒப்ப முடியாது” என்றாள். அவர் நின்று “அரசி, உங்கள் சொற்கள் ஒரு

நிலையில் இல்லை. உங்கள் உள்ளமும் நிலையழிந்திருக்கிறது” என்றார். அவள் தளர்ந்து “ஆம், எதையும் சொன்ன பின்னரே நான் உணர்கிறேன். நான் என் நிலையில் இல்லை. அஸ்தினபுரியில் மைந்தனுக்கு நீர்க்கடன் கழித்து மீண்டபோதே நான் பிச்சியாகிவிட்டேன்” என்றாள்.

அவர் உளமிரங்கினார். “அரசி, உங்கள் அறைக்குச் சென்று ஓய்வெடுங்கள். இன்றைய நிலையை கையாளும் ஆற்றல் உங்கள் உள்ளத்திற்கு இல்லை. செல்க!” என்றார். அவள் “இல்லை, என்னால் எங்கும் நிலைக்க முடியவில்லை. இச்சிறுமி இங்கே இவ்வண்ணம் கிடக்கையில் என்னால் அமைய முடியாது…” என்றாள். “நான் சொல்வதை கேளுங்கள். அவளிடமிருந்து மைந்தனைப் பிரிப்பது அவளை கொன்றுவிடும்.” சாரிகர் “அவர் மைந்தன் பிறந்ததையே உணரவில்லை என்று அஸ்வன் சொல்கிறார்” என்றார். “அவர்கள் அதை அறியமாட்டார்கள். அவள் உடலோ உள்ளமோ அறிந்திருக்காது. அவள் ஆத்மா அறியும்…”

சாரிகர் “நீங்களும் உடன் வருக! நான் அரசியிடம் நிகழ்வனவற்றை சொல்கிறேன். அவர் முடிவெடுக்கட்டும். உங்கள் எண்ணங்களையும் அரசியிடம் நீங்கள் சொல்லலாம்” என்றார். அவள் “நான் சொல்கிறேன். அவளால் உணரமுடியும். அக்குழவி அவள் மைந்தன். அவள் அதை பிரியமாட்டாள். அவளை கொல்வதுதான் அது” என்றபடி அவருடன் வந்தாள். அவர் தலைகுனிந்து நடந்தார். அவள் நின்று “நான் திரும்பி அங்கே செல்கிறேன். அவளருகே நான் இருக்கவேண்டும். அவள் அப்படி தனிமையில் கிடக்கலாகாது” என்றாள். சாரிகர் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தார். அவள் “இல்லை, நான் அரசியை சந்திக்கவேண்டும்” என்றபடி உடன் வந்தாள். பின்னர்

மீண்டும் நின்று “என் சொற்களை அவள் செவிகொள்ள மாட்டாள். நான் வருவதில் பொருளில்லை” என்றாள்.

சாரிகர் சத்யபாமையின் அறைவாயிலை அடைந்து தன் வருகையை அறிவிக்கும்படி கோரினார். சேடி சென்று மீண்டு உள்ளே செல்லும்படி தலைவணங்கினாள். அவர் உள்ளே சென்று அங்கே தரையில் எழுத்துப்பீடத்தின் மேல் அமர்ந்திருந்த சத்யபாமையை வணங்கி முகமனுரைத்து அஸ்வனின் கோரிக்கையை சொன்னார். “அஸ்வனின் கோரிக்கை இது. அவர் சொல்வது முறை என எனக்குப் படுகிறது. அங்கேதான் மைந்தனை உயிருடன் வைத்திருக்க முடியும். அந்தச் சிப்பி இங்கே உயிர்வாழாது…” என்றார். கையிலிருந்த எழுத்தாணியால் பீடத்தை நெருடியபடி “ஆம், ஆனால் உத்தரை…” என்றாள் சத்யபாமை.

“அதை நாம் முடிவெடுக்கவேண்டும். அவர் உயிர்வாழ்வதற்கான வாய்ப்பு மிகமிகக் குறைவு. இருவரில் ஒருவரை தக்கவைத்துக் கொள்வதுதான் செய்யக்கூடுவது” என்று சாரிகர் சொன்னார். ”அந்த முடிவை அரசி என நீங்கள்தான் எடுக்கவேண்டும். வேறு எவரும் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. மேலும் உங்கள் சொல்லே துவாரகையை கட்டுப்படுத்தும்.” சத்யபாமை “நான் துவாரகையின் அரசி. இவள் அஸ்தினபுரியின் இளவரசி. என் முடிவால் அரசியல் சிக்கல்கள் எழக்கூடும்” என்றாள். “மேலும் அரசி என இப்போது நான் முடிவெடுக்கலாம். ஆனால் பெண் என என் உள்ளம் அதை ஏற்கவேண்டும்” என்றாள்.

“எனில் இளவரசி உயிர்துறக்கும்வரை இங்கே காத்திருக்கவேண்டும்” என்றார் சாரிகர். “அதன் விளைவாக மைந்தன் உயிர்துறப்பான் என்றால் அப்பொறுப்பையும் நீங்கள்

எடுத்தாகவேண்டும்.” சத்யபாமை அவரை நோக்கிக்கொண்டு அசையாமல் அமர்ந்திருந்தாள். அவள் விரல்கள் எழுத்தாணியை சுழற்றிக்கொண்டிருந்தன. “மைந்தன் பிழைக்க வாய்ப்புண்டு என்பதே இப்போதுவரை பீதர்மருத்துவர் சொல்வது. அவன் அஸ்தினபுரியின் இறுதித்துளிக் குருதி.”

சத்யபாமை “இப்போது ஒன்று புரிகிறது, அரசர் ஏன் இம்மகவு இங்கு பிறக்கவேண்டும் என முடிவெடுத்தார் என” என்றாள். “அஸ்தினபுரியிலோ இந்திரப்பிரஸ்தத்திலோ எனில் எவரும் இத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். என்ன நிகழ்ந்தாலும் அதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாக பழி எழும். அவ்வச்சத்தாலேயே ஒவ்வொருவரும் தங்களை காத்துக்கொள்ள முயல்வார்கள். முடிவெடுக்க மாட்டார்கள்.” சாரிகர் “உங்கள் முடிவெடுக்கும் திறனை நம்பியிருக்கிறார் இளைய யாதவர்” என்றார்.

கதவு வெடித்துத் திறந்து சுபத்திரை உள்ளே வந்தாள். “அது அவள் குழவி. அவளே அறுதிச்சொல் கூறவேண்டியவள். எந்த முடிவென்றாலும் அவள் ஒப்புக்கொண்டாகவேண்டும்” என்றாள். “அவளிடம் கேளுங்கள். அவள் தன் மகவை பிரிய ஒப்புகிறாளா என்று கேளுங்கள். அவள் ஒப்பமாட்டாள். ஒருபோதும் தன் மைந்தனிடமிருந்து அகலமாட்டாள்.” சத்யபாமை “நீங்கள் உங்கள் அறைக்கு மீளுங்கள்… நீங்கள் தெளிவான உள்ளத்துடன் இல்லை” என்றாள். “விண்புகுந்த என் மைந்தனின் குரலை நான் கேட்கிறேன். அவன் கூறுவதையே நான் சொல்கிறேன். அவன் நீங்கள் செய்யவிருப்பதை ஒப்பவில்லை” என்று சுபத்திரை சொன்னாள்.

சேடி பின்னால் வந்து நின்றாள். சத்யபாமை அவளிடம் “அரசியை அவர் அறைக்கு கொண்டுசெல்க! அவர்

ஓய்வெடுக்கட்டும்” என்றாள். “உங்கள் முடிவைக் கூறுக... அதை அறியாமல் நான் எங்கும் செல்லப்போவதில்லை” என்று சுபத்திரை சொன்னாள். “நீங்கள் கூறியபடியே செய்கிறேன். அவளிடம் கேட்கிறேன். அவள் சொல்வதையே செய்கிறேன்” என்றாள் சத்யபாமை. “சென்று ஓய்வெடுங்கள்... பல நாட்களாக துயில்நீத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் உள்ளம் குலைந்துவிட்டிருக்கிறது. சற்றேனும் துயின்றால் மீண்டுவிடுவீர்கள்.” சுபத்திரை பொருளில்லாமல் உறும “வருக!” என்று சேடி அவள் தோளை தொட்டாள். அவள் அவ்வழைப்புக்கு இணங்கி திரும்பிச் சென்றாள்.

சாரிகர் “எங்கிருக்கிறேன், என்ன நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்றே புரியவில்லை” என்றார். “வருக, சுபத்திரை சொன்னது உண்மை! அங்கு சென்று அவளிடம் ஒரு சொல் கேட்கும் பொறுப்பு எனக்கு உண்டு. அவளிடம் கேட்போம்” என்றாள் சத்யபாமை. சாரிகர் “ஆனால் அவர் எதையும் உணரும் நிலையில் இல்லை” என்றார். சத்யபாமை “ஆமாம், ஆனால் என்னால் அவளுக்கு உணர்த்திவிட முடியும் என்று படுகிறது” என்றாள். “வருக!” என்றபடி எழுந்துகொண்டாள்.

# களிற்றியானை நிரை - 28

**பகுதி மூன்று : கண்ணிநுண்சிறுதாம்பு – 11**

இடைநாழியினூடாக சாரிகர் சத்யபாமையின் பின்னால் நடந்தார். அந்த நாளின் அத்தனை நிகழ்வுகளும் உடனடியாக முடிவுக்கு வந்துவிட்டால் போதும் என்னும் எண்ணம் அவருள் நிறைந்திருந்தது. மானுட உள்ளம் எப்போதுமே பரபரப்புக்காக

ஏங்கிக்கொண்டிருக்கிறது. அன்றாடத்தின் மாற்றமின்மையையும் சலிப்பையும் போக்கும் எதுவும் உவகையையே அளிக்கிறது. அது தீங்கானதாக இருப்பினும், கொடியதாயினும். ஆனால் உள்ளத்திற்கு ஒரு கொள்ளளவு உள்ளது. அது நிறைந்ததும் பரபரப்பே சலிப்பூட்டுகிறது. பின்வாங்கி செயலின்மையில் சுருண்டுகொள்ள விழைகிறது அகம்.

தன் உள்ளம் அனைத்து புதுச் செய்திகளையும் அகற்றுவதை அவர் உணர்ந்தார். ஒவ்வொரு சிறிய தகவலையும் தொட்டுத்தொட்டு பேராவலுடன் சேர்த்துக்கொண்டிருந்தது அது. இப்போது மிகக் கொடியது ஒன்று நிகழ்ந்தால், மிக மிக அரியதென ஒன்று நிகழ்ந்தால்கூட உள்ளம் அதை பொருட்படுத்தாது. அதை எளிதில் கடந்துசென்றுவிடவே விழையும். மானுட உள்ளத்தின் இயல்புநிலை என்பது ஓய்வும் செயலின்மையும்தான். பெரும்பாலான விலங்குகள் பசியோ அச்சமோ இல்லாதபோது அமைதியாக செயலற்று அமைந்திருக்கின்றன. வேட்டையில் தப்புதலில் இருக்கும் இன்பம் என்பது சற்றுநேரத்திற்கு மட்டுமே. உடலின் எல்லை மிகக் குறுகியது. அதைவிட குறுகியது உள்ளத்தின் எல்லை.

உத்தரையின் அறைவாயிலில் நின்ற சேடி சத்யபாமையைக் கண்டதும் தலைவணங்கினாள். அவளிடம் சத்யபாமை தன் வருகையை அறிவிக்கும்படி கோரினாள். அவள் சென்றுவந்து தலைவணங்கி கதவைத் திறக்க அவள் உள்ளே சென்றாள். சாரிகர் அவளைத் தொடர்ந்து செல்லும்போது அவளுடைய நிமிர்ந்த தலையைப் பற்றிதான் எண்ணிக்கொண்டார். அவள் பல நாட்களாக இந்த உச்சநிலையிலேயே இருந்துகொண்டிருக்கிறாள். உண்மையில் அது தொடங்கி நெடுநாட்களாகியிருக்கும். இளைய யாதவர் துவாரகை விட்டு

நீங்கியதுமே தொடங்கியதாக இருக்கும். அல்லது தன் வாழ்நாள் முழுக்கவே அவள் இப்படி உச்சங்களிலிருந்து உச்சங்களை நோக்கித்தான் தாவிக்கொண்டிருக்கிறாள். அவளுக்கு சலிப்பதில்லையா? களைத்து எதையும் அறியாமல் ஆகிவிடுவதில்லையா அவள் உள்ளம்? அச்சலிப்பின்மைதான் அரசுசூழ்பவர்களுக்குரிய முதன்மைத் தகுதியா?

பெருவணிகர்கள், படைத்தலைவர்கள் என உலகியலை ஆளும் ஒருவர் அடையவேண்டிய தகுதியே உலகியலின் உச்சநிலைகளில் சலிக்காமல் இருந்துகொண்டிருப்பதுதானா? ஒருகணமேனும் ஓய்வை விழைபவர், விலக எண்ணுபவர் தன்னை ஒப்படைத்துவிட்டவர். சோர்வும் சலிப்பும் வந்து அவரை எக்கணமும் சூழ்ந்துகொள்ளும். அவர் சொற்களில், முகத்தில் அது வெளிப்படும். அவர்கள் வெல்லப்படுவார்கள், விலக்கப்படுவார்கள். அவள் இன்னமும் அரசி, ஒவ்வொரு துளியிலும் அரசி. அரசியெனப் பிறந்தவர்கள் என தேவயானியை, சத்யவதியை, தமயந்தியை, திரௌபதியை சொல்வார்கள். இவளையும் சொல்லியாகவேண்டும். இவளை நம்ப முடியும். இவள்மேல் அனைத்தையும் சுமத்திவிட்டு இளைப்பாற முடியும். அரசன் தன் குடிகளுக்கு அளிக்கவேண்டியது அந்நம்பிக்கையை மட்டும்தான்.

சத்யபாமையைக் கண்டதும் அஸ்வன் எழுந்து தலைவணங்கினார். சத்யபாமை “அமைச்சர் உங்கள் கோரிக்கை என்ன என்று சொன்னார். மைந்தனின் நிலையையும் இளவரசியின் நிலையையும் அறிவேன். அவர்கள் எந்நிலையில் இருக்கிறார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை நோக்கிவிட்டு முடிவெடுக்கலாமென்று எண்ணினேன்” என்றாள். அஸ்வன் “அரசி, இளமைந்தர் உயிர்வளர்கிறார். அவர் உண்ணும் பாலின்

அளவு மிகுந்துகொண்டே இருக்கிறது. இளவரசியின் உடலில் அனல் அடங்கிக்கொண்டே இருக்கிறது. அது எத்தனை பொழுது நீடிக்கும் என்று சொல்ல முடியாது” என்றார். ”மைந்தனை நான் பார்க்கமுடியுமா?” என்று சத்யபாமை கேட்டாள். “மூன்று வாரம் வரை அவர் உள்ளிருந்து வெளிவர முடியாது” என்றார் அஸ்வன்.

அவள் உத்தரையின் அருகே சென்றாள். உத்தரை அவர் முதலில் கண்ட அதே நிலையில் படுத்திருந்தாள். அவளருகே குனிந்து அமர்ந்து “உத்தரை! உத்தரை!” என்று மெல்லிய குரலில் அழைத்தாள். உத்தரை உடலில் எந்த அசைவும் தென்படவில்லை. மீண்டும் மீண்டும் சத்யபாமை “உத்தரை! உத்தரை!” என்று அழைத்துக்கொண்டிருந்தாள். பின்னர் “உன் மைந்தன் உயிருடன் இருக்கிறான். அவன் அஸ்தினபுரியை ஆள்வான் என்கிறார்கள் நிமித்திகர். அவன் உயிருடன் வளரவேண்டுமென்றால் இப்போது உன்னைவிட்டு நீங்கியாகவேண்டும்” என்றாள்.

உத்தரையின் முகத்தையே சாரிகர் நோக்கிக்கொண்டு நின்றார். அதில் எந்த மாற்றமும் தென்படவில்லை. “நோக்குக, உனக்கு வேறுவழியில்லை! உன் உடல் தேறினால் நீயும் மைந்தன் அருகே செல்லலாம்” என்றாள் சத்யபாமை. “உன் ஒப்புதலுடன் மைந்தனை துவாரகைக்கு அனுப்புகிறேன். நீ ஒப்புதல் அளிக்கவேண்டும்.” அவள் மெல்ல முனகினாள். “என்ன சொல்கிறாய்?” என்றாள் சத்யபாமை. உத்தரை மேலும் முனகினாள். “என்ன சொல்கிறாய்?” என்று சத்யபாமை மீண்டும் கேட்டாள். அவளுடைய முனகல் சொல் போலவே ஒலித்தது. சத்யபாமை சாரிகரிடம் “கேட்டுச்சொல்க!” என்றாள். சாரிகர் அருகே மண்டியிட்டு அவள் உதடுகளின் அருகே செவியை

வைத்தார். முனகலோசை மீண்டுமொருமுறை எழுந்தது. வெறும் ஒலியாக கேட்டது அது. மீண்டுமொருமுறை கேட்டதும் அவர் மெய்ப்புகொண்டார். அதன் பின்னரே அச்சொல் என்ன என்று சித்தம் உணர்ந்தது.

அவர் எழுந்து “காண்டீபம்” என்று சொன்னார். “என்ன?” என்றாள். “காண்டீபம் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்” என்றார் சாரிகர். “ஆம், அதைத்தான் சொல்லிக்கொண்டே இருக்கிறாள்” என்று சத்யபாமை சொன்னாள். “மாயையிலிருந்து எவரும் விடுபடுவதில்லை” என்றபின் திரும்பி அஸ்வனிடம் “பீதரே, நீங்கள் மைந்தனை துவாரகைக்கு கொண்டுசெல்லலாம், என் ஒப்புதல் உண்டு. உரிய ஆணையை சற்றுநேரத்தில் பிறப்பிக்கிறேன்” என்றாள். அஸ்வன் தலைவணங்கினார். “இன்று இப்போதே கிளம்புவது நன்று என்பது என் எண்ணம். கடற்கரைக் காற்று என்றால் இச்சிப்பி மேலும் சிலநாள் வாழும்.”

சத்யபாமை “இன்று மாலையாகிவிட்டது” என்றாள். “இப்போதே கிளம்பினால் இரவுக்குள் சென்றுவிடுவோம். பொழுது கடத்துவது நன்றல்ல. மேலும் இந்தச் சிப்பியுடன் பாலையின் எரியும் வெயிலில் செல்வதும் உகந்தது அல்ல” என்றார் அஸ்வன். “எனில் மேலும் இருபது காவலரை படைக்கலங்களுடன் உடன்வரச் சொல்கிறேன்” என்று சத்யபாமை சொன்னாள். அஸ்வன் “இப்பேழையின் அருகே அமர்ந்திருக்கையில் இதற்குள் என் உள்ளத்தின் ஒரு பகுதி வாழ்கிறது. அதனூடாக நான் அறிவதே என்னை நடத்துகிறது. மைந்தர் வளர்துயிலில் இருக்கிறார்” என்றார். சத்யபாமை உத்தரையை நோக்கினாள். “அவருடைய குருதிப்பெருக்கு

நின்றுவிட்டது. உரிய மருந்துகளுடன் என் மாணவர்களில் ஒருவர் இங்கே இருப்பார்” என்று அஸ்வன் சொன்னார்.

சத்யபாமை வெளியே கிளம்பும்போது சாரிகரிடம் “வருக!” என அழைத்தாள். அவர் அவளுடன் வெளியே சென்றார். “நீங்களும் உடன் செல்லுங்கள்” என்று சத்யபாமை சொன்னாள். “நான்…” என அவர் தயங்கினார். “என்னை இளவரசியின்பொருட்டே அனுப்பியிருக்கிறார்கள்” என்றார். “இங்கே நான் இருக்கிறேன். நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் அவர்களுடன் செல்வதே நல்லது. மைந்தனின் பொருட்டே அஸ்தினபுரி கவலை கொள்ளும்” என்றாள் சத்யபாமை. “மேலும் துவாரகையில் இப்பீதர்களுக்கு அணுக்கமானவர்கள் எவருமில்லை. அவர்கள் கோருவன அங்கே செய்யப்படவேண்டும். நீங்கள் அங்கே ஆணையிடும் நிலையில் இல்லை என்றாலும் அந்தணராக உங்கள் சொல் எங்கும் மீறப்படாது.”

சாரிகர் “அரசி…” என்று தயங்கியபடி அழைத்தார். “அங்கே மறைந்த பேரரசர் துரியோதனனின் மகள் லக்ஷ்மணை ஆட்சி செய்கிறார் என்றீர்கள். அவர் தன் தந்தையரைக் கொன்று அஸ்தினபுரியை வென்று ஆளும் யுதிஷ்டிரன் மீதும் இளைய யாதவர் மீதும் கடுஞ்சினம் கொண்டிருப்பதாகவும் சொன்னீர்கள்” என்றார். “இக்குழவி பாண்டவர்களின் எஞ்சும் துளி. இது அழிந்தால் பாண்டவர்களின் கொடிவழி அறுந்து போய்விடும்.” சத்யபாமை “நீர் எண்ணுவதென்ன என்று தெரிகிறது. இக்குழவிக்கு கிருஷ்ணையால் தீங்குவரக்கூடும் என்றா?” என்றாள். “அவர் நேரடியாக தீங்கிழைக்க வேண்டியதில்லை. இப்போது உரியவை அனைத்தையும் செய்யாமலிருந்தால், செய்வனவற்றை சற்றே பிந்தினால்,

நேரடியாக ஈடுபடாமல் தவிர்த்துவிட்டால்கூட இம்மைந்தன் வாழமாட்டான்” என்றார் சாரிகர்.

பெருமூச்சுடன் “உங்கள் ஐயமும் அச்சமும் புரிந்துகொள்ளற்குரியதே” என்று சத்யபாமை சொன்னாள். “அவளுடைய வஞ்சம் இயல்பானது, ஏனென்றால் அவள் துரியோதனனின் மகள்.” அவள் முகம் ஒளிகொண்டது. புன்னகை இன்றி ஒரு முகத்தில் ஒளியெழுவதை அப்போதுதான் சாரிகர் கண்டார். “ஆனால் இப்புவியில் எந்தக் குழந்தையையும் ஈன்ற அன்னையிடம் என நம்பி ஒப்படைப்பதென்றால் அது கிருஷ்ணையிடமே. முற்றெதிரியின் குழந்தையே ஆயினும். ஏனென்றால் அவள் துரியோதனனின் மகள்” என்றாள் சத்யபாமை. அவர் மெய்ப்புகொண்டு அறியாமல் கைகூப்பினார். புன்னகையுடன் “செல்க, நன்றே நிகழும்!” என்றாள் சத்யபாமை. சாரிகர் தலைவணங்கினார்.

சாரிகர் தன் அறைக்குச் சென்று மஞ்சத்தில் அமர்ந்து கைகளைக் கோத்து தலைகுனிந்து எச்சொற்களும் திரளாத உளப்பெருக்கில் ஆழ்ந்திருந்தார். உடல் எடைகொண்டபடியே வந்தது. ஏவலனிடம் கதவை மூடும்படி சொன்னார். வெளிக்காற்று சாளரம் வழியாக உள்ளே சுழித்தது. சாளரக் கதவுகளையும் மூடும்படி அவர் சொன்னார். அவன் அனைத்துக் கதவுகளையும் மூடியபோது அறைக்குள் இருட்டு நிறைந்தது. அவர் மஞ்சத்தில் உடலை நன்கு சுருட்டிக்கொண்டு படுத்தார். கருக்குழவிபோல. அவர் கண்களுக்குள் இருள் நிறைந்தது. உடலுக்குள் பரவி அனைத்தையும் மூடியது. இருள் குளிர்ந்திருந்தது. நனைந்த மரவுரிமெத்தைபோல அனைத்தையும் அழுத்தி மூடியது.

அவர் விழித்துக்கொண்டபோது உள்ளம் சற்றே தெளிந்திருந்தது. எழுந்து அமர்ந்தார். தான் கண்ட கனவை எண்ணிக்கொண்டார். விழிப்பதற்கு முன்னர்தான் அக்கனவை கண்டிருந்தார். ஆனால் அது மிகத் தொலைவில் இருந்தது. அவர் ஒரு படகில் சென்றுகொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் ஒரு பெருநகர் இருந்தது. முகில்களால் ஆனது. வெண்முகில்களே சுவர்களும் கூரைகளும் குவடுகளுமாக அமைந்தது. அதன்மேல் கருடக்கொடி பறந்துகொண்டிருந்தது. அவர் அருகே அமர்ந்திருந்த கரிய முகமும் வெண்பற்களும் கொண்ட மாலுமி “அது கடந்துசெல்கிறது” என்றான்.

அவர் திரும்பி நோக்கியபோது அந்த முகில்நகரம் கரைந்து வானில் மறைந்துகொண்டிருப்பதை கண்டார். பிசிறுகளாக, புகையாக, வான்கீற்றாக மாறி அது முழுமையாக வடிவிழந்தது. அவர் பெருமூச்சுடன் திரும்பி மாலுமியிடம் “அது மீண்டும் பிறந்தெழுமா?” என்றார். “ஆம், ஆனால் எப்போது என்று சொல்லமுடியாது” என்றான். தன் கையில் ஒரு முத்துச்சிப்பி இருப்பதை அவர் கண்டார். அது ஒரு வெற்றிலைப் பேழை. அவர் அதை திறந்தபோது உள்ளே பச்சைநிறத் தளிர்வெற்றிலைகளின் அடுக்கும் பொன்னிறப் பாக்கும் சுண்ணச் சிப்பியும் இருந்தன. அவர் ஒரு வெற்றிலையை எடுத்து நீவினார். அதில் சுட்டுவிரலால் எழுதினார். ஒரு சொல்லை.

அச்சொல் என்ன? அவர் ஒருமுறை தன் அகம் நோக்கி வினவிவிட்டு பெருமூச்சுடன் எழுந்தார். ஏவலனிடம் “நான் உடனே கிளம்பவேண்டும்” என்றார். பரபரப்பாக தன் பொருட்களை எடுத்துக்கொண்டார். ஏவலன் அவர் பொதிகளை சேர்த்தமைக்க உதவினான். தன் பொருட்கள் என அங்கே

கொண்டு வந்தவை மிகக் குறைவே என உணர்ந்தார். அவர் அங்கே வந்து இரு இரவுகளே கடந்துள்ளன என்பதை அதற்குப் பின்னரே தெளிந்தார். இரு இரவுகளில் நெடுந்தொலைவு வந்துவிட்டிருந்தார். அதற்குப் பின்னால் பெரும்பாலை. அதற்குப் பின் ஒரு நீள்பாதை. அதற்கும் அப்பால் இருந்தது அஸ்தினபுரி. அவரால் அதை நினைவுகூரக்கூட முடியவில்லை.

அவர் வெளியே வந்தபோது பீதர்கள் ஒருங்கிவிட்டிருந்தார்கள். அவர்களின் தேரில் அந்தப் பெரிய பேழை கொண்டுவந்து ஏற்றப்படுவதை அவர் நோக்கிநின்றார். பீதர்நாட்டு இளைஞர்களில் ஒருவன் அருகே நின்று அப்பேழை உறுதியாக தேரின் தட்டின் நடுவே அமைவதை நோக்கி உறுதிப்படுத்தினான். அரண்மனையின் அறைக்குள் இருந்து அவர்களின் பொருட்களைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருந்தனர். அவர்களுடன் வந்த காவலர்கள் தங்கள் புரவிகளை சேணம் அமைத்து சித்தப்படுத்திக்கொண்டிருந்தனர். அவை கிளம்பும் செய்தியை அறிந்து ஊக்கம் அடைந்து தசைகள் விதிர்க்க எடைமிக்க குளம்புகளை எடுத்துவைத்து நிலையழிந்து சுற்றிவந்தன.

சாரிகர் அரண்மனை ஏவலனிடம் “அரசியின் ஓலை ஒருக்கமாகியிருக்கிறதா என்று நோக்கி வா” என கூறி அனுப்பினார். அவர் உள்ளம் ஓய்ந்து கிடந்தது. உள்ளம் அத்தனை களைப்புறுமா என அவரே வியந்துகொண்டார். மாலை அணுகிக்கொண்டிருந்தது. முற்றத்தில் வெயில் சரிந்து விழுந்திருந்தது. அவர் வெளிச்சத்தை நோக்க முடியாமல் திரும்பிக்கொண்டார். கண்கள் கூசி நீர் வழிந்தது. கிளம்புவது

வரை உள்ளே சென்று அரண்மனை அறைக்குள் அமர்ந்திருந்தாலென்ன என்று எண்ணினார்.

ஆனால் அதற்குள் அவருக்கான ஆணையோலையுடன் ஏவலன் திரும்பி வந்தான். அவர் அதை பிரித்து ஒருமுறை சொல்லோட்டி நோக்கிய பின் மீண்டும் குழலில் இட்டார். “நம் வீரர்களும் கிளம்பியாகவேண்டும். அரண்மனையிலிருந்து காவலர் குழு ஒன்று வருவதாகச் சொல்லியிருக்கிறது” என்றார். ஏவலன் “அவர்கள் கோட்டைவாயிலில் அணிவகுத்திருக்கிறார்கள்” என்றான். உள்ளிருந்து தன் மாணவனின் தோளில் கைவைத்தபடி மருந்துப்பேழையுடன் அஸ்வன் வந்தார். சிற்றடி எடுத்துவைத்து அணுகி அவரை நோக்கி புன்னகைத்தபின் தேரிலேறிக்கொண்டார்.

சாரிகர் முன்னால் சென்று “கிளம்புவோம்” என்று கைதூக்கிக் காட்டினார். வீரர்கள் அணிவகுத்தனர். கொடிவீரன் முன்னால் செல்ல அதைத் தொடர்ந்து வீரர்களின் நிரை சென்றது. தேர் அதற்குப் பின்னால் செல்ல சாரிகர் அதற்குப் பின்னால் நின்ற தன் தேரில் ஏறிக்கொண்டார். அந்த நிரை மெல்ல சாலையில் ஏறி சீரான இடைவெளிகளுடன் செல்லத்தொடங்கியது. ஊர் முழுக்க மஞ்சள் வெயில் பரவியிருந்தது. வழியருகுகளில் நின்றிருந்தவர்கள் அவர்களை உற்று நோக்கினர். சிலர் கைசுட்டி ஓரிரு சொற்களில் பேசிக்கொண்டார்கள். அவர் அவர்களின் உதடுகளையே கூர்ந்து நோக்கினார். அவர்கள் பேசுவதென்ன என்பதை உய்த்துணர முயன்றார். கோட்டைவாயிலை அடைவதற்குள் அவரால் அவர்களின் சொற்களை உணரமுடிந்தது. அவர்கள் எவருக்கும் அதில் அஸ்தினபுரியின் இளவரசன் செல்வது தெரியவில்லை என்று புரிந்தது.

கோட்டையின் உள்வாயிலில் இருபது பேர் கொண்ட படை காத்துநின்றது. அவர்கள் சாரிகரைக் கண்டதும் வாள் தாழ்த்தி வணங்கினர். நிரையின் முகப்பில் செல்லும்படி சாரிகர் ஆணையிட்டார். அவர்கள் நிரைவகுத்து கொடியுடன் முன்னால் சென்றனர். அவர்கள் கோட்டையைவிட்டு வெளியேறியபோது சாரிகர் திரும்பிப்பார்த்தார். கோட்டைவாயில் பொன் என சுடர்விட்டுக்கொண்டிருந்தது. அதன் முகப்பு முற்றத்தின் மென்மணல் மேல் மஞ்சள் ஒளி பரவிக்கிடந்தது. அவர் அதை நோக்கியபடி விழிகளை வெறித்து அமர்ந்திருந்தார். கோட்டை மிதந்து அலைபாய்ந்து அகன்று சென்றது.

சாரிகர் புல்வெளி அலையலையாக பின்னகர்ந்து செல்வதை கண்டார். பசுக்கள் கூட்டங்களாகத் திரண்டு மணியோசையுடன் நிரைகொண்டு கோட்டை நோக்கி செல்லத்தொடங்கின. அவை உள்ளே நுழைவதற்கு ஒரு சிறுவாயில் இருப்பதை அவர் கண்டார். அவை அங்கே கூடித்தேங்கி ஒன்றன்பின் ஒன்றாக உள்ளே சென்றன. அங்கே நின்றிருந்த ஆயர்கள் அவற்றைத் தட்டி உள்ளே அனுப்பினர். வெண்ணிறப் பசுக்கள் மஞ்சள் மினுப்பு கொண்டிருந்தன. மாந்தளிர்நிறப் பசுக்கள் அனலென்றே சுடர்ந்தன. கரிய பசுக்களின் வளைவுகளில் மரவுரிச்செம்மை தெரிந்தது.

மென்மணல் அலைகளால் ஆன பாலை வரத்தொடங்கியது. அவர் தொலைவான்கோட்டின் மேல் கதிர்வட்டம் நின்றிருப்பதை கண்டார். அதை அனற்சுழல் ஒன்று சுற்றியிருந்தது. அது மெல்ல சுழன்று கொண்டிருப்பதாகத் தோன்றியது. களைத்த பறவைகள் ஒளியைத் துழாவியபடி ஊடாக கடந்து சென்றன. மணற்கதுப்புகளில் காலடிகள் பதிந்திருந்தன. அவற்றின்மேல் காற்று மென்மணலை

அள்ளிப்பொழிந்தது. மணல்வளைவுகளின் விளிம்புகளில் அனல்பொறிகள் என சுடரும் மணல் அலையெழுந்தது. காற்றில் மண்வெந்த மணம். எங்கிருந்தோ ஓர் ஓநாயின் மெல்லிய ஊளை கேட்டது. வண்டிகளின் சகடங்களும் புரவிக்குளம்புகளும் மண்ணில் பதிந்துசெல்லும் ஓசை அறியா மொழியாலான ஓர் உரையாடல்போல் ஒலித்தது.

அந்தி இருண்டது. செம்மை விரைவாகவே அகன்று தொடுவான்கோட்டின் வாள்முனைக் கூரொளி மட்டுமே எஞ்சியது. மணல் அலைவளைவுகள் மிளிர்ந்து கிடந்தன. வானத்தில் விண்மீன்கள் பிதுங்கி எழத்தொடங்கின. மெல்லிய சிறகடிப்போசையுடன் புறா ஒன்று வானில் மிதந்து இறங்கி முன்னால் சென்ற துவாரகையின் காவலனை அணுகியது. அவன் அதைப் பிடித்து அதன் காலில் இருந்த ஓலையை எடுத்துப் படித்துவிட்டு புரவியைத் திருப்பி அவரை நோக்கி வந்தான். அருகணைந்து சொல் இன்றி அதை அவரிடம் தந்தான்.

அவர் அதற்குள் அதன் செய்தியை உய்த்தறிந்துவிட்டிருந்தார். அதை சற்று தூக்கி காற்றிலிருந்த கசிவொளியில் படித்தார். சுருக்கமான ஒற்றை வரி அஸ்தினபுரியின் இளவரசி உத்தரையின் சாவை அறிவித்தது. அவர் அதை நெடுநேரம் வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். அவர் தேர் சென்றுகொண்டே இருந்தது. தேருடன் வந்துகொண்டிருந்த வீரன் “ஆணையில் ஏதேனும் மாறுதல் உண்டா?” என்றான். “இல்லை, செல்க!” என்றபின் “பீதர்களின் வண்டிக்குச் சென்று முதிய பீதரிடம் இச்செய்தியைக் கூறுக!” என்றார். அவன் தலைவணங்கி “ஆணை” என்றபின் புரவியைச் செலுத்தி முன்னால் சென்றான்.

அவன் பீதர்களின் தேரை அணுகி அஸ்வனிடம் செய்தியை அறிவிப்பதை சாரிகர் பார்த்தார். அவர் தலையை வெளியே நீட்டி அச்செய்தியை வெறுமனே கேட்டுக்கொண்டார். பின்னர் ஒரு சொல் உரைத்து தலையை பின்னிழுத்து திரைச்சீலையை மூடிக்கொண்டார். தேர்களின் விரைவு சற்றும் குறையவில்லை. சாரிகர் நெஞ்சுக்குள் ஒரு விம்மலை உணர்ந்தார். மூச்சு திரண்டு சிக்கிக்கொண்டதுபோல. அதை வெளிவிட விழைபவர்போல மூச்சை இழுத்து இழுத்து விட்டார். ஆனால் அது அவ்வண்ணமே இருந்தது. அவர் செருமிக்கொண்டும் முனகிக்கொண்டும் தேர்ப்பீடத்தில் அசைந்து அமர்ந்தார்.

இருள் மெல்ல சூழ்ந்துகொண்டது. வானில் விண்மீன்கள் பிதுங்கி எழுவதுபோலத் தோன்றின. அவர் அவற்றை அண்ணாந்து நோக்கியபடியே சென்றார். எத்தனை கோடி! வானமென்பதே விண்மீன்களை செறிவாக அடுக்கி உருவாக்கப்பட்ட ஒரு வளைகூரைதான் போலும். விண்மீன்களின் ஒளி பெருகிக்கொண்டே வந்தது. நீல வெளிச்சம் பெற்று மணற்குவைகள் தன்னொளி கொண்டன. ஓநாய் ஒன்றின் ஓசை அகலே கேட்டு அடங்கியது.

அவர் எண்ணங்களில் ஆழ்ந்து விழிநோக்கு சித்தத்தை அடையாமலாகி மீண்டும் வானை நோக்கியபோது திடுக்கிட்டார். வானில் ஒரு கோட்டுருவக் கரடி தெரிந்தது. நோக்கை விலக்கி மீண்டும் பார்த்த போதும் அவ்வண்ணமே தெரிந்தது. கரடியா? யவனர் வானில் ஒரு விண்மீன்கூட்டங்களை கரடி என்பார்கள் என கேட்டிருந்தார். அதை பலமுறை முயன்றும் பார்க்கமுடியவில்லை. அவர் நோக்கிக்கொண்டே இருக்க அது சிதைந்து உருவழிந்தது. அது எழுபடிவர் விண்மீன்தொகை என்பார்கள். அவர் விழிகளால்

தொட்டுத்தொட்டு ஏழு படிவர்களையும் அடையாளம் கண்டார். கிரதுவும், புலஹரும், புலஸ்தியரும், அத்ரியும், அங்கிரஸும், வசிட்டரும், மரீசியும் ஒருவரை ஒருவர் நோக்கி ஊழ்கத்திலென அமர்ந்திருந்தனர். ஊழ்கம் அவர்களை மேலும் மேலும் சுடர்கொள்ளச் செய்தது.

அதில் வசிட்டரை கூர்ந்து நோக்கினார். எழுபடிவரில் அவரை அடையாளம் கண்டுகொண்டால் அருகே அருந்ததியை காணமுடியும். நாணும் குலமகள். வசிட்டரின் அருகே வானில் பாதி புதைந்திருப்பாள். எனினும் தன் ஒளியால் தன்னை வெளிக்காட்டிக்கொண்டும் இருப்பாள். வசிட்டரின் ஒளி பெருகிச் சொட்டிய துளி என. அவர் அருந்ததியை பார்த்தார். விழியிமைத்தாலும் அது மறைந்துவிடும் என எண்ணியதுபோல் நோக்கிக்கொண்டே இருந்தார்.

விழிமயக்கா எனத் தெரியவில்லை. அவர் அருந்ததியின் அருகே அருந்ததியில் பாதி மறைந்ததுபோல் பிறிதொரு மீனை கண்டார். அருந்ததியின் ஒளிநிழல். விழி திருப்பியபோது அவர் வசிட்டர் அருகிலும் இன்னொரு ஒளிநிழலை கண்டார். இணைபிரியாதவர்கள், ஒருவரை ஒருவர் தவம்செய்பவர்கள். ஆனால் அது மெய்யல்ல. அவர்கள் இருவரும் தங்கள் ஒளிர்நிழலையே தவம் செய்கிறார்கள். தாங்களே தங்களுக்கு துணையெனக் கொண்டு வானில் இருக்கிறார்கள்.

ஆனால் அது விழிமாயம் என உடனே தெரிந்தது. ஓர் இமைப்பில் அந்த இரட்டைத்தன்மை அகன்றுவிட்டது. அவர் தளர்ந்து தேர்த்தட்டில் கால்நீட்டிச் சாய்ந்து அமர்ந்துகொண்டார். மீண்டும் விண்மீன்களை ஒற்றைப் பெரும் பரப்பாக பார்க்கலானார். விண்மீன்கள் பின்னோக்கி ஒழுக நாவாய் என அவர் தேர் முன்னால் சென்றது. அருகே அமர்ந்திருந்த அந்தக்

கரிய மாலுமி ஏதோ சொன்னான். அவர் அவனுக்கு மறுமொழி உரைத்தார். ஒரு சொல். அச்சொல்லுடன் விழித்துக்கொண்டார். அச்சொல் என்ன? அவர் விண்மீன்களில் அதை தேடுவதுபோல் அமர்ந்திருந்தார்.

தேர் ஒரு கல் மேல் ஏறி அமைந்து உலுக்கிக்கொண்டது. அவர் உடல் அதிர்ந்தமைந்தபோது அவருள் அச்சொல் இருந்தது. அது எப்போதுமே அங்கேதான் இருப்பதுபோல. "தோன்றா விண்மீன்." ஆனால் அது நான் இப்போது பார்த்தது. இல்லை, அதை முன்னரே எழுதிவிட்டேன். "தோன்றா விண்மீன்களால் ஆனது வானம்." அது நான் என் காவியத்தின் முதல் வரியாக எண்ணிக்கொண்டது. நூறுமுறை சொல்லிக்கொண்டது. பாலைநிலத்தில் விண்மீன் நோக்கி படுத்திருக்கையில் அதைத்தான் சொல்லிக்கொண்டே இருந்தேன். கண்ணிநுண்தாம்பினால் வானில் பிணைக்கப்பட்ட ஒரு சிறு விண்மீன். அது தோன்றவே இல்லை.

அவர் தன் கையை தேருக்குள் துழாவி ஏட்டுப்பெட்டியை எடுத்தார். திறந்து ஓலையை எடுத்து அதன் மேலேயே வைத்து எழுத்தாணியால் எழுதத் தொடங்கினார். விழிநோக்கு மறைந்த இருளில் கை எழுதிக்கொண்டே சென்றது.

# களிற்றியானை நிரை - 29

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 1

யுயுத்ஸு அரண்மனையின் உப்பரிகைகள் வழியாக சுரேசரின் அறை நோக்கி சென்றான். செல்லும் வழியில்

அவ்வப்போது நின்று கீழே பெருகி அலைகொண்டிருந்த திரளை நோக்கினான். இரவும் பகலுமென அவர்கள் முழங்கிக்கொண்டிருந்தார்கள். அஸ்தினபுரி ஆட்சிசெய்ய முடியாத பெருந்திரளாக மாறிவிட்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அதன்மேல் பெருமுரசுகள் ஆணைகளை முழங்கியபடியே இருந்தன. அது எந்த ஆணையையும் செவிகொள்ளவில்லை.

"காட்டுயானைக்கு ஆணையிடுவதுபோல் உணர்கிறேன்" என்று சுரேசர் ஒரு மாதம் முன்பு அதை நோக்கி நின்றிருக்கையில் சொன்னார். "அதன் செவியாட்டலும் தலைகுலுக்கலும் அடிவைப்பதும் நம் ஆணையின்படியே என எண்ணிக்கொள்ள வேண்டியதுதான். மெய்யாகவே அந்த உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று தெரிவதில்லை. அது நம்மை கொல்லாத வரை நமக்குப் பணிந்திருக்கிறது என்று நம்புவதைத் தவிர வேறுவழியில்லை." யுயுத்ஸு "தண்டிக்கப்படாதவரை ஆட்சி நடைபெறவில்லை என்றே பொருள். இந்நகரில் நாம் எவரையும் தண்டிக்க முடியவில்லை. இந்நகரில் நம் ஆணையைச் செயலாக்க எவருமில்லை" என்றான்.

சுரேசர் "அதைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறேன். இந்தப் பெருந்திரளிலிருந்து ஒரு சிறுதிரளை… அதை உருவாக்க சிறந்த வழி அதற்குள் இன்னொரு சிறுதிரளை உருவாக்கிக் கொள்வதே" என்றார். "அடையாளங்களே திரளை உருவாக்குகின்றன. தனித்த அடையாளம் கொண்ட ஒரு சிறுதிரள் நமக்குத் தேவை. அதை நாம் அவர்களுக்கு உருவாக்கி அளிக்கவேண்டும். அது அவர்களுக்குள் வளரவேண்டும். அந்த தனித்த அடையாளத்தை அவர்கள்

விரும்பிச் சூடிக்கொள்ளவேண்டும் என்றால் அவர்களுக்கு கோன்மை அளிக்கப்படவேண்டும்.”

“கோன்மை என்பது பிறரிடமிருந்து வேறுபடுதலால் அறியப்படுகிறது. எந்த நெறிகள் பிறரை ஆள்கின்றனவோ அவற்றைக் கடந்துசெல்லும் உரிமைகொண்ட சிலரை உருவாக்கவேண்டும். அவர்கள் நம் பொருட்டு இத்திரளை ஆட்சிசெய்வார்கள்.” சுரேசரின் நூலறிவல்ல அது என அவனுக்குத் தோன்றியது. ஆட்சிநூல்களின் சொற்கள் அவற்றை கற்பவர்களுக்குரியவை அல்ல, அவற்றை வைத்து விளையாடுபவர்களுக்குரியவை. சுரேசர் அந்த நெருக்கடிகளில் மேலும் மகிழ்ச்சிகொண்டவராக மேலும் மேலும் ஆற்றல்பெருகுபவராகத் தோற்றமளித்தார். “எந்த நாட்டிலும் பொதுமக்களிடமிருந்து மேலெழுந்து நின்றிருக்கும் தனிக் குழு ஒன்றால் மட்டுமே ஆட்சி நடத்த முடியும்” என்று சுரேசர் சொன்னார்.

“நேற்று வரை அது இந்நகர்களில் பிறப்பால் முடிவுசெய்யப்பட்டது. அதை குலமென்றும் குடியென்றும் கூறினோம். தொன்மையால் அவர்கள் சிறப்புகொண்டனர். நூல்களால் நிலைநிறுத்தப்பட்டனர். முறைமைகளாலும் மரபுகளாலும் ஒவ்வொருநாளும் அவ்வாறு வெளிக்காட்டப்பட்டனர். இன்று அவையனைத்தும் அழிந்துவிட்டிருக்கின்றன. இங்கே தொல்குடி என ஏதும் இல்லை. அனைவருமே வந்தவர்கள். அவர்கள் தங்கள் ஊரில் எவர் என நாம் அறியோம். அவர்களின் தகுதி மட்டுமே இங்கே அடையாளம் காணப்படுகிறது. புதிய வேதம் இயல்பாலும் செயலாலும் மட்டுமே பிரிவினை செய்யப்படவேண்டும் என்கிறது.”

“ஆனால் தகுதி என்பதைக்கொண்டு நிலையான அரசுகளை அமைப்பது எளிதல்ல. ஏனென்றால் தகுதி ஒவ்வொருநாளும் மாறிக்கொண்டே இருப்பது. ஒவ்வொருவரும் தகுதி நோக்கி எழமுடியும். அனைத்துக்கும் அப்பால் தான் தகுதியற்றவன் என எவரும் ஆழத்தில் நம்புவதில்லை. ஆகவே தகுதியுடையோரை அவர்கள் ஏற்கமாட்டார்கள். தன் தகுதியால் மேலெழுந்தவர்கள் மீது மட்டுமே பொறாமைகள் உருவாகின்றன என்பதை நோக்குக! குலத்தால் குடியால் மேலே நிறுவப்பட்டவர்களை இயல்பாக முழுதேற்பவர்கள் தங்களில் ஒருவரை தலைவர் என, மேல் என கொள்ள முடிவதில்லை.”

“அஸ்தினபுரி இன்று காணும் பெரும் அறைகூவலே இதுதான். நாம் இங்கே திறனாளர்களைக்கொண்டு ஒரு குழுவை அமைக்க வேண்டியிருக்கிறது. அது தகுதியாலானது என அஸ்தினபுரியின் பெருந்திரளை நம்பவைக்க வேண்டியிருக்கிறது. இங்கு ஒவ்வொருவரும் தங்கள் தகுதியால் மேலெழமுடியும் என நம்பவேண்டும். ஆனால் மேலெழுந்தவர்கள் தங்களைவிட உண்மையிலேயே மேலானவர்கள் என்று நம்பி தலைக்கொள்ளவும் வேண்டும். அதற்குத் தேவையானது தகுதியை முடிவெடுக்கும் வெளிப்படையான அமைப்பு. அதில் ஒவ்வொருநாளும் தகுதிநோக்கு நடந்துகொண்டே இருக்கவேண்டும். அது ஓயாது இயங்கும் ஒரு கைவிடுபொறி என நிகழ்ந்துகொண்டிருக்கவேண்டும். அதற்குரிய களங்களை உருவாக்குவதே இன்று நாம் செய்யவேண்டியது.”

“படைக்கலப்பயிற்சிக்குரிய போட்டிக் களங்களை உருவாக்குவது எளிது. அதைவிடக் கடினமானது சொல்திறனுக்குரிய களங்களை உருவாக்குவது.

ஆட்சித்திறனுக்குரிய களங்களை உருவாக்குதல் அரிதினும் அரிது. ஆட்சித்திறன் என்பது தருணங்கள் அமைகையில் மட்டுமே வெளிப்படுவது. அது அறிவுத்திறன் அல்ல, சொற்திறனோ ஆளுமைப்பண்போ கூட அல்ல. அது ஆழத்திலிருந்து எழும் ஒரு தனித்தன்மை. கலங்களுக்கேற்ப உருமாறவும் எவ்வுருவிலும் இயல்புமாறாமலிருக்கவுமான திறன் அது. திறன்மிகுந்து ஆணவத்தை சேர்த்துக்கொண்டு எழுகையிலும் முற்றாக அடிபணிதலையும் கொள்ளவேண்டிய முரண்செயல். அதை வாய்ப்புகளினூடாகவே கண்டடைய முடியும். அதற்கான தெரிவுக்களம் இந்நகரமேதான். இங்கே ஒவ்வொரு களத்திலும் அது நிகழ்ந்துகொண்டிருக்கவேண்டும்.”

அவன் ஒவ்வொருநாளும் திரளில் இருந்து படைப்பயிற்சி கொண்டவர்களும் மொழியறிந்தவர்களுமான வீரர்களை தெரிவுசெய்தான். சொல்தேர்ந்த அந்தணர்களை சுரேசர் தேர்வுசெய்தார். “அந்தணர்களை தெரிவுசெய்வது எளிது. அந்தண்மை என்பது பாரதவர்ஷம் முழுக்க ஒன்றே. அந்தண்மை என்பது நங்கூரம். இப்படகின் பாய் என கணந்தோறும் நிகழவேண்டியவர்கள். ஆகவே மறம் என்பது இடத்துக்கு இடம் மாறுபடுவது. மறத்தோர் மண்ணுடன் கட்டுப்பட்டவர்கள். குலநெறிகளை தலைக்கொள்பவர்கள். தங்கள் நிலத்தையும் குலத்தையும் நம் பொருட்டு கடக்கக்கூடியவர்களே நாம் தேடுபவர்கள்” என்றார் சுரேசர். “படைவீரர்களும் ஆட்சியாளர்களுமே.”

“ஆனால் நிலத்தையும் குலத்தையும் கடப்பவர்கள் நெறிகளையும் கடந்தவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் குற்றம்செய்பவர்கள், மீறுபவர்கள். அவர்களைக் கொண்டு அரசை அமைக்க முடியாது. நிலப்பற்றையும் குலப்பிடிப்பையும்

கடப்பவர் அதைவிட மேலான ஒன்றைத் தேடி இங்கு வந்தவராக இருக்கவேண்டும். இளைய யாதவரை எண்ணி, அப்புதிய வேதத்தை நம்பி வந்த வீரர்களை மட்டுமே தெரிவுசெய்க!” என்றார் சுரேசர். “ஆம், அவ்வண்ணமே தெரிவுசெய்கிறேன். ஆனால் அந்தணர் அவ்வேதத்தை ஏற்றுக்கொண்டவர்களா என்ன?” என்று அவன் கேட்டான். “அவர்களுக்கு அவர்களின் வேதத்தின் கூர்முனையே புதிய வேதம் என்ற நம்பிக்கை இருந்தால் போதும்” என்று சுரேசர் சொன்னார்.

அவர்கள் அப்பணியை தொடங்கியபோது அவன் ஆழ்ந்த நம்பிக்கை எதையும் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருநாளும் புலரிமுதல் பின்னிரவு வரை பணி இருந்துகொண்டிருந்தது. அவர்கள் எண்ணியதைவிட எளிதாக இருந்தது அப்பணி. முதலில் ஓர் அணியை உருவாக்குவதே கடினமாக இருந்தது. பின்னர் அந்த அணி அடுத்த அணிகளை உருவாக்கியது. நகர் தன்னைத்தானே கட்டி எழுப்பிக்கொண்டது. அதற்குரிய நெறிகளை முதலில் சுரேசர் வகுத்தார். ஆனால் அந்நெறிகளை அந்நகரின் இயக்கம் கடந்துசென்றது. தனது நெறிகளை தானே வகுத்துக்கொண்டது.

நகரமெங்கும் பலநூறு இடங்களில் படைக்கலப்பயிற்சிகள் நிகழ்ந்தன. ஒவ்வொருநாளும் காலைமுதல் இரவுவரை அங்கே அறைகூவலுடன் வீரர்கள் நின்றனர். அவர்களை வெல்பவர்கள் அப்படைக்களத்தில் சேர்க்கப்பட்டனர். அவ்வாறு சேர்ந்தவர்கள் மறுநாள் அறைகூவலுடன் நின்றனர். ஆகவே ஒவ்வொருநாளும் அறைகூவல் வலுத்தபடியே சென்றது. உள்ளே நுழைந்தவர்கள் தங்கள் தனித்தன்மையை காத்துக்கொள்ள புதிதாக உள்நுழைபவர்களை விலக்க முற்பட

அதுவே அக்களத்தின் இயக்கநெறியாக மாறியது. மிகச் சில நாட்களிலேயே முற்றிலும் தகுதிகொண்ட படைவீரர்களின் அணி ஒன்று அஸ்தினபுரியில் உருவானது.

அது முன்பு அந்நகரில் இருந்த படைத்திரளைவிட பலமடங்கு ஆற்றல்கொண்டது என்று யுயுத்ஸு எண்ணினான். “இன்று பாரதவர்ஷத்தில் எங்கும் இத்தகைய படைத்திரள் ஒன்று இல்லை. இது பாரதவர்ஷத்தின் படைவீரர்கள் தங்களைத் தாங்களே கூர்ப்படுத்திக்கொண்டு உருவான முனை” என்றான். “ஆம், அந்தப் பெயர் உருவாகும்தோறும் மேலும் திறன்கொண்டோர் இங்கு வருவார்கள். இதுவே பாரதவர்ஷத்தின் முதன்மையான படை என்பதை நிறுவவேண்டிய பொறுப்பு பாரதவர்ஷத்திற்குரியதாக ஆகிவிடும்” என்று சுரேசர் நகைத்தார்.

கோட்டைக்காவலுக்கும் அரண்மனைக்காவலுக்கும் நகர்க்காவலுக்கும் நகர்ப்புறக்காவலுக்கும் ஆலயக்காவலுக்கும் அங்காடிக்காவலுக்கும் சாலைக்காவலுக்கும் இடருதவிக்கும் எல்லைக்காவலுக்கும் என்று ஒன்பது படைகள் அமைந்தன. ஒவ்வொன்றுக்கும் உரிய நெறிகளும் மேலிருந்து கீழ்நோக்கி பரவும் கோன்மையடுக்கும் உருவாகி வந்தது. அந்நெறிகளை வகுக்கையில் ஒவ்வொருவரும் ஒரு புதிய வழியை சுட்டிக்காட்டினார்கள். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் சிறந்த நெறிகள் வந்தமைந்தன.

ஒரு மாதத்திற்குள் அஸ்தினபுரி அனைத்து நிலைகளிலும் காவலும் ஏவலும் நிறைந்த நாடென்று ஆகியது. காவல்மாடங்கள் புதுப்பிக்கப்பட்டன. மேலும் ஆயிரத்தெட்டு காவல்மாடங்கள் உருவாகி வந்தன. அவற்றை ஒட்டி காவலர்களுக்கான குடியிருப்புகள் அமைந்தன.

அஸ்தினபுரியின் ஆயிரக்கணக்கான பட்டுக்கொடிகள் நாடெங்கும் பறக்கலாயின. கொடிகளை தைத்து அனுப்புவதற்கென்றே கைவினைமகளிருக்கான கொட்டகைகளை அமைக்க வேண்டியிருந்தது. "தொன்மை பெருமிதமளிப்பது என்று கண்டிருக்கிறேன். புதுமை ஊக்கமளிப்பது என்று இன்று அறிகிறேன். உருவாகி வரும் புதிய அமைப்பொன்றில் சேர்ந்திருக்கிறோம் என்னும் தன்னுணர்வால் இவர்கள் இயக்கப்படுகிறார்கள். இதைப்போல தற்செருக்கும் பொறுப்புணர்வும் அளிப்பது பிறிதொன்றில்லை."

கோட்டைமேல் நின்று கீழே அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்த அஸ்தினபுரியின் படை ஒன்றை நோக்கிக்கொண்டிருக்கையில் அவன் சம்வகையிடம் சொன்னான் "இந்நிமிர்வை நான் முன்னரும் கண்டிருக்கிறேன். அது ஓர் படைக்கலநிலையாக பயிலப்பட்டது. ஓர் அணிகலன் என சூடப்பட்டது. ஓர் உடல்மொழி மட்டுமே. இது நடிப்பல்ல. இதை இவர்கள் இக்கணம் இயல்பாக இயற்றுகிறார்கள்." சம்வகை நகைத்து "ஆம், ஒவ்வொருவரும் தங்கள் படைக்கலத்தை பற்றியிருப்பதில் இருக்கும் இயல்பான நிலையே அதற்குச் சான்று" என்றாள்.

"ஒருவகையில் குருக்ஷேத்ரப் பெரும்போர் நன்று என உணரத் தொடங்கிவிட்டேன். இந்த புத்தம்புதிய பேரமைப்பு அத்தனை அழிவு இல்லையேல் எழுந்திருக்காது. இதை உருவாக்கும் பொருட்டே அது நிகழ்ந்தது என்றுகூட எண்ணிக்கொள்கிறேன்" என்று அவன் உள்ளக்கிளர்ச்சியுடன் சொல்ல சம்வகை மெல்ல அசைந்தாள். அவள் அப்பேச்சை விரும்பவில்லை. "இதை அவர் பார்க்கவேண்டும். அவர் சொல்லவேண்டும், அவர் விழைந்தது இதைத்தானா என்று. இது ஒரு தொடக்கம். இங்கே இது

நின்றுவிடாது. ஆரியவர்த்தமெங்கும் பரவும். பாரதவர்ஷமெங்கும் நிலைகொள்ளும். புதிய வேதம் புதிய மக்களையும் நிலத்தையும் உருவாக்கும். அதை இங்கிருந்தால் காணமுடிகிறது” என்று யுயுத்ஸு சொன்னான். அவள் அதற்கும் மறுமொழி சொல்லவில்லை.

சுரேசரின் அறையை அவன் அடைந்தபோது அவர் அங்கே இல்லை. அவருடைய உதவியாளனாகிய கலிங்கநாட்டு அந்தணர் காமிகன் அங்கே இருந்தார். அவர் சுரேசரைப் போலவே கைகளும் கண்களும் பெருகி பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் என எழுந்துகொண்டே இருக்கிறார்கள் என அவன் எண்ணிக்கொண்டான். காமிகன் ஓலைகளை தனித்தனியாக குழலில் இட்டு மெழுகு முத்திரை இட்டு வெவ்வேறு தூதர்களிடம் கொடுத்து அனுப்பினார். ஓர் ஓலையில் இருந்த செய்திகளை தனித்தனியாக பல ஓலைகளில் ஆணைகளாக மாற்றினார். பல ஓலைகளில் இருந்த செய்திகளை ஒற்றைச்செய்தியாக ஒரே ஓலையில் பொறித்து சுரேசரின் பார்வைக்காக வைத்தார்.

அந்த அறையில் அவரைத் தவிர சுரேசரின் எட்டு உதவியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். சுரதனையும் கஜனையும் சம்விரதனையும் சுனயனையும் சுனீதனையும் வேணிகனையும் ரத்னகனையும் ரஜதனையும் அவன் காணத்தொடங்கி மூன்று வாரங்களே ஆகியிருந்தன. ஆனால் அவர்களை நெடுங்காலம் அறிந்திருப்பதுபோல தோன்றியது. அவர்கள் மெழுகு உருகி செல்லுமிடத்தில் படிந்து அவ்வுரு அடைவதுபோல அஸ்தினபுரியில் அமைந்துவிட்டிருந்தனர்.

அவ்வரண்மனையில் அந்த அறையில் அவர்கள் நெடுங்காலம் வாழ்ந்தவர்களாகத் தோன்றினர். அங்கேயே பிறந்து அவ்வறையை நிறைத்து உருவாகி வந்தவர்கள்போல. அதை எண்ணி அவன் எப்போதுமே வியப்பதுண்டு. நத்தையின் கூட்டுவடிவுக்கேற்ப அதன் தசை உருவாகியிருப்பதைப்போல அந்தணர்கள் அவர்கள் பணியாற்றும் இடத்தின் வடிவிலேயே தாங்களும் உருவமைந்து கொள்கிறார்கள்.

ஏவலரிடம் ஆணைகளை இட்டபடியே சுரேசர் அறைக்குள் வந்தார். அவனுடைய வணக்கங்களை ஏற்றபடி பீடத்தில் அமர்ந்து ஓலைகளை எடுத்து விரைந்து படித்து அப்பால் தள்ளிவைத்துவிட்டு "உங்களைச் சந்திக்க அரசர் விழைந்தார். அவருடைய ஆணை பலமுறை வந்தது. வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தீர்கள். அவை முடியட்டும் என நான் ஒத்திப்போட்டேன்" என்றார். யுயுத்ஸு "எதன்பொருட்டாக இருக்கும்?" என்றான். "பெரும்பாலும் ஏதாவது பயணம்" என்றார் சுரேசர்.

"அவர் என்னிடம் இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்லவேண்டும் என்று சொன்னார்" என்று யுயுத்ஸு சொன்னான். "நானும் அதையே எண்ணினேன். ஆனால் நீங்கள் இங்கே முடிக்கவேண்டிய பணிகள் பல உள்ளன. உடனே கிளம்பமுடியுமா என்று தெரியவில்லை. ஆனால் இன்னமும் பிந்தமுடியாது என இன்று தோன்றியது. ஆகவேதான் உங்களை அழைத்துவரச் சொன்னேன். அவரை சந்தித்துவிடுங்கள். ஆணைகளைப் பெற்ற பின் என்ன செய்வது என்று கருதுவோம்" என்றார் சுரேசர். யுயுத்ஸு "அவரிடமிருந்து ஆணைபெற்ற பின் அதை மீறமுடியாது" என்றான்.

“மீறவேண்டாம், ஒத்திப்போடுவோம். அவர் மீண்டும் கேட்கப்போவதில்லை” என்றார் சுரேசர்.

“அரசரை நான் சந்தித்து நெடுநாட்களாகின்றது. எவ்வண்ணம் இருக்கிறார்?” என்றான் யுயுத்ஸு. “நெடுநாட்களாகவில்லை, மூன்று நாட்களுக்கு முன் நாம் சந்தித்தோம்” என்றார் சுரேசர். “இங்கே ஒருநாளில் வாழ்க்கை மிகமிக முன்னகர்ந்துவிடுகிறது. இந்நகரம் பறந்துகொண்டிருக்கிறது” என்றான் யுயுத்ஸு. சுரேசர் “ஆம்” என்றார். “நான் அன்றாடம் அரசரை சந்திக்கிறேன். நாளில் மும்முறைகூட. ஆனால் அவரை சந்திப்பதே இல்லை என உணர்கிறேன்.” யுயுத்ஸு புன்னகைத்தான். சுரேசர் “இங்கே உண்மையில் ஓய்வாக இருப்பவர் அவர் மட்டுமே. முழுமையான தனிமையில். முற்றிலும் அகன்று. அவரிடம் செல்லும்போது கருவறை இருளுக்குள் அமர்ந்திருக்கும் சிலையை பார்ப்பதுபோல் இருக்கிறது. வெளியே திருவிழா கொந்தளிக்கிறது. தெய்வம் அதை அறியாது. அது வாழும் காலம் முற்றிலும் வேறொன்று” என்றார்.

அவனும் அதை உணர்ந்திருந்தான். அவன் நகரைப்பற்றி யுதிஷ்டிரனிடம் பேச விழைந்தான். அவ்வப்போது அதைப்பற்றி அவரிடம் எடுத்துரைத்தான். ஆனால் யுதிஷ்டிரன் அப்பால் இருந்தார். நகரம் எப்போதும்போல தன் ஆட்சியிலேயே இருக்கிறது என்று நம்பிக்கொண்டிருந்தார். அந்த நம்பிக்கையையே சுரேசர் அவரிடம் உருவாக்கினார். அவரிடம் ஆணைகளை பெற்றுக்கொண்டார், அவ்வாணைகளின் நிறைவேற்றத்தை அறிவித்தார்.

ஒவ்வொருநாளும் உரிய ஆணைகளை இட்டுவிட்டு யுதிஷ்டிரன் தன் நாற்களத்தில் அமர்ந்தார். அவருடன் நாற்களமாட திறன்கொண்டவர்கள் வந்திருந்தார்கள்.

நாற்களமாடலின் புதிய நெறிகளை அவர்கள் கொண்டுவந்து சேர்த்திருந்தனர். எப்போதேனும் அவர் அரசியலில் ஏதேனும் ஒரு சிக்கலை சந்திக்கையில் முற்றாக நிலையழிந்தார். அப்போது உடனே யுயுத்ஸுவை கூப்பிட்டனுப்பினார். ஆனால் அவற்றை எப்படி கையாள்வதென்று அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. தன் நூலறிவனைத்தையும் இழந்தவர் போலிருந்தார்.

“அவரிடம் நான் கண்ட நூலறிவும் நுண்புலமும் இல்லாமலாகிவிட்டதுபோல் உணர்கிறேன்” என்று யுயுத்ஸு சொன்னான். “அவர் சலிப்பூட்டுகிறார். என் அறிதல்களை எப்போதும் அவரிடம் பேசியே கூர்தீட்டிக்கொண்டிருக்கிறேன். அவருடைய உள்ளம் இன்று என் சொற்களில் படிவதில்லை. நான் சொல்வன அவர் செவிகளுக்குள் புகுவதேயில்லை என்று படுகிறது.” சுரேசர் “அவர் குருக்ஷேத்ரத்தை நேரில் கண்டுவிட்டார். எழுதப்பட்ட சொற்களின் எல்லையை அவருடைய அகம் இன்று நன்கு அறிந்திருக்கும். அவரால் முன்புபோல நம்பி இனி அச்சொற்களுக்குள் புக முடியாது. அவர் நூல்களை இன்று நாற்களம் போலவே அணுகிக்கொண்டிருக்கிறார்” என்றார்.

“இனி அவரால் முன்புபோல சலிக்காமல் அரசியலாட முடியாது. சிறிய களமாடல்களை செய்வார், ஆனால் அதன் வெற்றியில் மகிழ முடியாது. அவர் அரியணையில் அமர்ந்த கணமே அதன்மேல் ஆர்வமிழப்பார். இனி அவருக்கு மணிமுடியைச் சூடித்தருக்க முடியாது. அதைச் சென்றடையாமல் அவருடைய பயணம் முடியாது, சென்றடைந்த பின் அவர் மெய்யாகவே விழைவதென்ன என்று

கண்டுகொள்வார்” என்று சுரேசர் சொன்னார். யுயுத்ஸு அச்சொற்களை முழுதுற உணராமல் தலையசைத்தான்.

சுரேசர் “நீங்கள் அவரிடம் சென்று ஆணைகளை பெற்றுக்கொள்ளலாம். அவர் பெரிதாக எதையும் செவிகொள்ளப்போவதில்லை என்பதனால் நீங்கள் பேசவேண்டிய தேவையிருக்காது” என்றார். யுயுத்ஸு “ஆம், அவருக்கு செவிகளே இல்லை என்று ஆகிவிட்டிருக்கிறது” என்றான். “அது ஒருவகையில் நன்று. அவர் பேசாமலும் ஆகிவிட்டாரென்றால் இவ்வரசை நாம் திறம்பட நடத்த முடியும். கருவறைத்தெய்வங்கள் கற்சிலைகளாகவே இருக்கவேண்டும்” என்றார்.

யுயுத்ஸு அப்பேச்சை விலக்க விழைந்தான். “அஸ்வமேதப் புரவிகள் திரும்புகின்றன என அறிந்தேன்” என்றான். “ஆம், முதலில் சகதேவனின் படைகள் திரும்பிவரக்கூடும். மிஞ்சிப்போனால் இன்னமும் ஏழு நாட்களில். அதற்குள் இங்கே அனைத்தும் முடிவுறவேண்டும். நினைத்ததைவிட விரைவாக அனைத்தும் ஒருங்கமைகின்றன. அது நிறைவளிக்கிறது. ஆனால் ஆற்றவேண்டியவை குவிந்து கிடக்கின்றன. எண்ணினால் உள்ளம் மலைக்கிறது” என்றார். “ஆகவேதான் நீங்கள் இந்திரப்பிரஸ்தம் செல்வதாக இருந்தால் கூடுமானவரை இச்சில நாட்களிலேயே அது நிகழட்டும் என எண்ணினேன்.”

யுயுத்ஸு பெருமூச்சுவிட்டான். “துவாரகையிலிருந்தும் நற்செய்தியே வந்துள்ளது. மைந்தன் வளர்ந்துகொண்டிருக்கிறான். ஆய்வுமுறைப்படி உருவானவன் என்பதனால் பீதர்கள் அவனை பரீக்ஷித் என்கிறார்கள். அப்பெயரையே அனைவரும்

சொல்லத்தொடங்கியிருக்கிறார்கள். நன்று. அவ்வாறு ஒரு விந்தைப் பெயர் நம் அரசருக்கு அமையுமென்றால் அதுவும் சிறப்பே. ஒருவகையில் அவர் ஆட்சிசெய்யவிருக்கும் நகருக்கும் அப்பெயர் பொருந்துவதே” என்றார். “ஏன்?” என்று யுயுத்ஸு எண்ணம் ஒன்றாமல் கேட்டான். “இந்நகரும் இங்குள்ள குடிமையமைப்பும் நெறிகளும் முழுக்கவே ஆய்வுமுறைப்படி அமைவன தானே?” என்று சுரேசர் சிரித்தார்.

ஏவலன் வந்து அரசர் ஒருங்கியிருப்பதை அறிவித்தான். யுயுத்ஸு எழுந்துகொண்டான். சுரேசர் உடன் எழுந்துகொண்டு அவனுடன் வந்தபடி “சம்வகையை கோட்டைக்காவலில் இருந்து மேலெடுத்தாக வேண்டும்” என்றார். “அவள் உள்ளம் அதைவிடப் பெரிதாகிவிட்டது. இனி அப்பொறுப்பிலிருந்தால் அவள் உளத்திறனில் ஒரு பகுதியால் அதை செய்துமுடிப்பாள். மெல்ல சலிப்படைவாள். அப்பொறுப்பை ஆழ்ந்து இயற்ற இயலாதவளாவாள்” என்றார். யுயுத்ஸு “ஆம்” என்றான். அதை ஏன் அப்போது சொல்கிறார் என அவனுக்குப் புரியவில்லை.

“ஆனால் அவளை இதற்கு மேலே எப்பொறுப்புக்கு கொண்டுசெல்வது?” என்று யுயுத்ஸு கேட்டான். சுரேசர் “ஒன்பதுவகைப் படைகளுக்கும் நடுவே ஒருங்கிணைப்பு தேவை. நமக்கு முன்பிருந்தவர்கள் நால்வகைப் படைகளுக்கும் தலைவர்கள். ஒன்பது படைகளுக்கும் தலைமை என ஒரு நிலையை உருவாக்குவோம். அரசர் அவளை அதில் அமர்த்தட்டும்” என்றார். யுயுத்ஸு திகைத்தவன்போல நின்றான். “ஏன்?” என்றார் சுரேசர். “பெண்ணா?” என்று யுயுத்ஸு கேட்டான். “பெண் கோட்டைத்தலைவர் ஆகக்கூடும் என்றால் ஏன் படைத்தலைமை கொள்ளக்கூடாது?” என்று சுரேசர் கேட்டார்.

யுயுத்ஸு “ஆம், இங்கே அவளை அவ்வண்ணம் நிலைநிறுத்தினால் தடைசொல்ல எவருமில்லை…” என்றான்.

“அரசர் இதே திகைப்பை அடையக்கூடும். உங்கள் உணர்வுகளின் நீட்சியையே அவர் அடைகிறார்” என்று சுரேசர் சொன்னார். “ஆகவேதான் முதலில் உங்களிடம் சொல்லிப்பார்த்தேன்” என்று புன்னகைத்து “உரிய முறையில் அரசரிடம் இதை முன்வைத்து ஒப்புதல் பெற்றாகவேண்டும். அதை நான் செய்கிறேன்” என்றார். யுயுத்ஸு “அவரால் அதை செய்ய முடியாது. அவருள் இருக்கும் முன்னோர் அதை செறுப்பார்கள்” என்றான். சுரேசர் “அவர் புதிய வேதம் விளையும் நிலத்தின் அரசர். அதை அவருக்கு நினைவுறுத்துவோம்” என்றார்.

யுயுத்ஸு நடக்க சுரேசர் உடன் வந்தார். ஏவலன் அவர்களை அழைத்துச்சென்றான். அவன் சலிப்புற்றிருந்தான். அரண்மனையின் எல்லாச் சாளரங்கள் வழியாகவும் பெருந்திரளே தெரிந்தது. காலையில் எழுந்து நோக்கும்போது அத்திரள் நெறியிலாக் கொப்பளிப்பு என்று தோன்றியது. சுரேசரிடம் பேசிவிட்டுச் செல்கையில் அது முழுக்க கட்டுப்படுத்தப்பட்ட பேரசைவே என்று தோன்றியது. சுரேசர் அதை அவ்வப்போது நோக்கி தலையசைத்தார். தனக்குள் ஓரிரு சொற்களை முனகிக்கொண்டார்.

அவன் நின்று நின்று அத்திரளைப் பார்த்தபடி சென்றான். யானைகளும் புரவிகளும் அத்திரிகளும் மாடுகளும்கூட அக்களிவெறியில் கலந்துவிட்டிருந்தன. வண்டிகளும் தேர்களும் கூட. உயிரற்றவை என்றாலும் வண்டிகளின் அசைவுகளில் மானுட உள்ளம் வெளிப்படுகிறது. அவை தயங்குகின்றன, வழிதேடுகின்றன, அலைக்கழிகின்றன, துணிகின்றன,

மீறுகின்றன, தருக்குகின்றன, களியாடுகின்றன. சுரேசர் “நகரம் இத்திரளின் களியாட்டை தானும் பெற்றுக்கொண்டிருக்கிறது. அத்தனை கட்டடங்களுக்கும் அது தெரியுமெனத் தோன்றுகிறது” என்றார்.

நீண்ட சவுக்கு ஒன்று சுழன்றமைவதுபோல அஸ்தினபுரியின் காவல்படை அந்தத் திரள் நடுவே நெளிந்து ஊடுருவியது. யுயுத்ஸு அதைப் பார்த்தபடி நின்றான். அந்தத் திரள் இரண்டாக பிளக்கப்பட்டது. பிளந்த ஒரு பகுதி வலப்பக்கமாக செலுத்தப்பட்டது. ஒரு நீண்ட பாதை உருவாக அதன் வழியாக பிறிதொரு படை ஊடுருவி அப்பால் சென்றது. “பாற்கலத்தில் வெண்ணை திரள்கிறது. நன்று” என்று சுரேசர் சொன்னார். “யானை தன்னை எங்கே பிடித்து ஏறவேண்டும் என்று சொல்கிறது… இன்னும் ஓரிரு மாதங்கள். இந்நகர் நாம் சொல்வதை செவிகொள்ளும்…”

# களிற்றியானை நிரை - 30

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 2

யுதிஷ்டிரன் களைத்திருந்தார். யுயுத்ஸு அவர் முன் அமர்ந்தபோது அவர் அவனிடம் ஏதோ சொல்ல நாவெடுத்தார். திரைச்சீலை நெளிய அதை நோக்கி பார்வையைத் திருப்பி அவ்வண்ணமே நினைவுகளில் ஆழ்ந்து எங்கோ சென்று அலைந்து நெடும்பொழுது கழித்தே மீண்டார். அவனிடம் “நான் உன்னை வரச்சொன்னது இந்திரப்பிரஸ்தத்திற்கு நீ செல்லவேண்டும் என்பதற்காகவே” என்றார். அதை அவனிடம் அவர் முன்னரே சொல்லியிருந்தார். மேலும் அவர்

பேசுவதற்காக அவன் காத்திருந்தான். ஆனால் அவர் மீண்டும் தன் எண்ணங்களில் ஆழ்ந்தார்.

மீண்டும் தன்னிலை உணர்ந்தபோது அவனை எவர் என்பதுபோல பார்த்தார். அவன் "இந்திரப்பிரஸ்தத்திற்கு உடனடியாகக் கிளம்புகிறேன், மூத்தவரே" என்றான். "ஆம், நீ உடனடியாகக் கிளம்பியாகவேண்டும்" என்று அவர் சொன்னார். "வேள்விப்பரிகள் மீண்டு வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை வரவேற்க அரசனும் அரசியும் கோட்டைவாயிலுக்குச் செல்லவேண்டும். வேள்வியில் அவர்கள் அமரவேண்டும். அதன்பின் ராஜசூயத்தில் அவள் அமர்ந்தாகவேண்டும்" என்றார். யுயுத்ஸு "ஆம்" என்றான்.

"ஆனால் அவள் வராமல் போகலாம்... அவள் வரும் உளநிலையில் இல்லை. அதை நான் நன்கறிவேன்" என்று அவர் சொன்னார். அவன் ஒன்றும் சொல்லவில்லை. "ஆகவேதான் உன்னிடம் இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்லும்படி சொன்னேன்." அவன் அவர் அதை இருமுறை முன்னரே ஆணையிட்டுவிட்டார் என்பதை சொல்ல விழைந்தான். ஆனால் அவர் கேட்கும் நிலையில் இல்லை. அவரிடம் ஓர் ஆழ்ந்த தத்தளிப்பு இருந்தது. அவன் உள்ளூர வியந்துகொண்டான். பாரதவர்ஷம் கண்ட மாபெரும் போரில் வென்றவர். அஸ்வமேதம் நிறைவுசெய்யவிருப்பவர், ராஜசூயம் இயற்றவிருப்பவர், மும்முடி சூடி அமரப்போகிறவர். ஆனால் அவர் எதையோ இழந்தவர் போலிருந்தார். கெடுதல் ஒன்றை எதிர்பார்ப்பவர் போலிருந்தார்.

யுதிஷ்டிரன் அவனிடம் "துவாரகையிலிருந்து செய்தி வந்துள்ளது" என்றார். அவன் அவர் எண்ணியிராமல் அப்பேச்சை எடுத்தமையால் திகைத்தான். அவர் "சாரிகர் அங்கிருக்கிறார்.

அவர் செய்தி எதையும் அனுப்பவில்லை. அங்கே உடன்சென்ற வீரர்களில் நால்வர் நம் ஒற்றர்கள். அவர்கள் அனுப்பும் செய்திகள் நமக்கு உகந்தவையாகவே உள்ளன. மைந்தன் தேறிக்கொண்டிருக்கிறான். இன்னும் சில நாட்களில் அவன் அந்தச் சிப்பியிலிருந்து வெளிவருவான். துரியோதனனின் மகள் அவனுக்கு அன்னையென கனிந்து சூழ்ந்திருக்கிறாள்” என்றார்.

“அவள் இயல்பு அது” என்று யுயுத்ஸு முகம் மலர்ந்து சொன்னான். “ஆம், அவளிடம் நான் பிறிதொன்று எண்ணவே இல்லை. இங்கிருந்து கான்வாழ்வுக்குச் சென்றபோதுகூட என் மைந்தரை நம்பி விட்டுச்செல்ல துரியோதனன் அன்றி பிறர் உண்டு என்னும் எண்ணமே என்னிடம் எழவில்லை. அவனால் வளர்க்கப்பட்ட என் மைந்தரைப்பற்றி நான் எப்போதும் கவலைகொண்டதில்லை” என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு அப்பேச்சை விரும்பவில்லை. துரியோதனனின் பெயர் அவன் அகத்தில் ஓர் அறை போலவே எப்போதும் விழுந்தது. அவன் உடலில் மெய்ப்பு எழுந்தது. கைவிரல்கள் நடுங்கத் தொடங்கின. அவன் உள்ளத்தின் சொற்களெல்லாம் அடுக்கு குலைந்து சிதறிப்பரவி அதிர்ந்தன.

யுதிஷ்டிரனும் அப்பேச்சை நீட்டிக்க விழையவில்லை. அவரும் துரியோதனன் பெயரைச் சொல்வதை தவிர்க்க முனைகிறார் என அவன் கண்டிருந்தான். ஆனால் ஒருநாளில் ஓரிருமுறை அவர் துரியோதனன் பெயரை சொன்னார். இயல்பாக அப்பெயர் நாவிலெழுந்ததும் அவர் தன்னை உந்திக்கொண்டு விலகினார். ஆனால் அப்பெயரைச் சொல்லும்போது அவர் எப்போதுமே உளம்குழைந்தார். விரும்பிய பெயர்களை எப்போதுமே மனிதர்கள் தங்களுக்குரிய முறையில் அழுத்தம் அளித்தே சொல்கிறார்கள். துரியோதனன் என்ற பெயரைச் சொல்கையில்

யுதிஷ்டிரன் த என்னும் ஒலியை மிக அழுத்தினார். அது நாவில் நின்று எழும்படி சொன்னார்.

யுதிஷ்டிரன் அந்தத் தருணத்தை முடித்துக்கொள்ள விழைந்தார். ஆகவே அவர் உடலில் எழுவது போன்ற அசைவுகள் உருவாயின. “சாரிகர் நாம் எண்ணுவது போன்றவர் அல்ல. அன்று அவர் இங்கிருந்து சென்றபோதே அதை உணர்ந்தேன். அவர் வேறேதோ செய்யக்கூடும் என எண்ணினேன். ஆனால் அவர் நம் எண்ணத்தையே செய்கிறார். அவருடைய அக்காவியத்தின் செய்யுட்களை நம் ஒற்றன் படித்திருக்கிறான். அவை நாம் விழைவனவற்றையே சொல்கின்றன” என்று யுதிஷ்டிரன் சொன்னார். அப்பேச்சையும் அவர் விரும்பவில்லை என்று அவருடைய தயக்கம் காட்டியது.

யுயுத்ஸு “அவர் தன் போக்கு கொண்டவர்” என்றான். அச்சொற்களுக்கு எப்பொருளும் இல்லை என சொன்ன பின்னரே உணர்ந்தான். யுதிஷ்டிரன் “ஆம், அவர் அதை உத்தரைக்காகவே எழுதுகிறார். அவளை அருந்ததி என ஒப்புமை செய்கிறார். தனித்தூய்மை கொண்டவள் என்கிறார். அவளை வரலாற்றில் அவ்வண்ணமே நிலைநிறுத்தவேண்டும் என்று கருதுகிறார். அது நன்று, நம் கொடிவழிகளுக்குத் தேவை அந்தக் கதையே. வரலாறென்பது அவ்வண்ணம் அழுத்தமான காவியச்சொற்களில் அமைந்தால் அதை மாற்றியமைக்க எவராலும் இயலாது” என்றார்.

“இந்தச் சிறு சிக்கலும் தீர்க்கப்பட்டால் நான் நிறைவடைவேன்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “இங்கே திரௌபதி வந்தாகவேண்டும். அவள் உள்ளம் இந்நகரை வெறுக்கிறது. இந்நகரில் அவள் எண்ண விழையாத ஒன்று நிகழ்ந்தது. அவ்வஞ்சத்தை அவள் இன்று கடந்துவிட்டாள். ஆனால்

அவ்வெண்ணம் அவளை துன்புறுத்துகிறது.” யுயுத்ஸு “அது இயல்பே” என்றான். “அவள் விரும்பிக் கட்டிய நகரம் இந்திரப்பிரஸ்தம். அங்கும் அவள் விழையாதது ஒன்று நிகழ்ந்தது. அதுவே இப்போரை கொண்டுவந்தது. அங்கும் அவள் நிறைவடைந்து அமைய முடியாது” என்றார் யுதிஷ்டிரன். “அதை அவள் அங்கே கிளம்பிச் செல்லும்போதே சொன்னேன். அவள் என் சொற்களை செவிகொள்ளவில்லை.”

யுயுத்ஸு “அவரிடம் இன்னமும்கூட அதைப் பற்றி சொல்லலாம். அப்போதிருந்த உளநிலையில் அவர் அம்முடிவை எடுத்திருக்கலாம்” என்றான். “ஆம், அன்று அரசியர் அனைவருமே விந்தையான உளக்கொந்தளிப்புடன் இருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் அவரவர் கணவர்களே முதன்மை எதிரிகளெனத் தெரிந்தனர். சுபத்திரை துவாரகைக்குச் சென்றதே தொடக்கம். அன்னை விதுரருடன் சென்றது மேலும் ஒரு உந்துதல். அரசியர் அனைவருமே தங்கள் பிறந்த நாடுகளுக்குச் செல்ல முடிவெடுத்தனர். அவர்களை தடுக்க முடியவில்லை.”

அவள் இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்ல முடிவெடுத்ததை நான் அங்கிருந்து கிளம்பிய பின்னரே அறிந்தேன். உண்மையில் என் படகில் நான் ஏறி அமர்வதுவரை அவளும் உடன்வருகிறாள் என்றே எண்ணினேன். ஏற்பாடுகள் செய்யும்பொருட்டு நீ அஸ்தினபுரிக்கு வந்திருந்தாய். படகு கிளம்பும்போதுதான் திரௌபதியின் படகு யமுனை வழியாக இந்திரப்பிரஸ்தத்திற்குச் செல்லவிருக்கிறது என்று அறிந்தேன். அதை எவ்வண்ணமோ நான் உணர்ந்திருந்தேன் என்பதனால் என் உள்ளம் அதிரவில்லை. ஆனால் ஏமாற்றமும் கசப்பும் ஏற்பட்டது.

அங்கிருந்து கிளம்பும்போது நானிருந்த உணர்வை என்னாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. மைந்தர்களுக்கு நீர்க்கடன் கழித்ததும் அனைத்து வலிகளிலிருந்தும் மீண்டு ஒரு நிறைவை அடைந்தேன். அது ஒரு சிறு விடுதலை, மெல்லிய களிப்பு. அது அன்னையும் பேரன்னையும் கிளம்பிச்சென்ற செய்தியால் அழிந்தது. மறுநாள் புலரிவரை அதன் எரிச்சலும் தவிப்பும். அகிபீனா உண்டு மிகப் பிந்தியே துயின்றேன். ஆனால் புலரியில் விழிப்பு வந்தபோது முதலில் வந்த எண்ணம் அங்கிருந்து கிளம்பவிருக்கிறேன் என்பது. மீண்டும் அந்த விடுதலையுணர்வும் உவகையும் ஏற்பட்டது. இருளிலேயே எழுந்து வந்து சாரல்மழையில் நனைந்தபடி நின்றேன்.

முக்தவனத்தில் ஒருநாளும் நான் ஆழ்ந்து துயின்றதில்லை. என்னைச் சூழ்ந்து என் மைந்தரின் நுண்ணுருவங்கள் நின்றிருப்பதையே எப்போதும் உணர்ந்துகொண்டிருந்தேன். சில தருணங்களில் கௌரவரை. ஓரிருமுறை கர்ணனை. ஒருமுறை துரோணரைக்கூட அருகே அறிந்தேன். அது கனவல்ல, உளமயக்கல்ல. உள்ளம் அறியும் ஓர் அருகமைவுணர்வு அது. இதோ உன்னை என் உடலும் அறிந்துகொண்டிருக்கிறது, நான் விழிமூடினால் உன் இருப்பை உடலே காட்டும், அதைப்போல. நாகத்தை உணர்ந்த புரவி மெய்ப்புகொண்டு செவி புடைப்பதுபோல எந்நேரமும் நான் இருந்தேன். ஒருகணம்கூட அவ்வுணர்வு அகன்றதில்லை.

ஆனால் அன்று காலை உணர்ந்தேன், நான் ஆழ்ந்துறங்கிவிட்டிருந்ததை. என் உடலும் உள்ளமும் கழுவப்பட்டவைபோல தெளிந்திருந்தன. வெள்ளி முளைத்ததுமே கிளம்பிவிட்டோம். காலை முழுக்க என்

முகத்தில் புன்னகை இருந்துகொண்டே இருந்தது. அவள் விலகிச்செல்கிறாள் என்று தெரிந்ததும்தான் அவளை துரத்திச்செல்லும்படி ஆணையிட்டேன். முழுப் பாயை விரித்து அவளை துரத்திச் சென்றேன். அவள் படகை மறித்து அதில் ஏறிச்சென்றேன். அது அனைவர் நோக்கிலும் விழும் என்றும், என் மாண்புக்கு இழுக்கு என்றும் அறிந்திருந்தேன். அதை அப்போது எண்ணவில்லை.

அவள் நான் அப்படகில் ஏறியதை அறிந்தும் வெளியே வரவில்லை. அவள் சேடிப்பெண்ணை விலக்கிவிட்டு சினத்துடன் அவள் அறைக்குள் நுழைந்தேன். என்னைக் கண்டும் அவள் எழவில்லை. நான் மேலும் மேலும் சீற்றம் கொண்டிருந்தேன். சீற்றம் கொள்கையில் அக்காட்சியை நாம் முன்னரே நமக்குள் நடித்துக்கொள்கிறோம். நடிக்க நடிக்க விசையேற்றுகிறோம். சீற்றத்துடன் நாம் செல்லும் விரைவு சீற்றத்தை விசைமிகச் செய்கிறது. அன்று நடந்துசென்றிருந்தால் அத்தனை சினமெழுந்திருக்காது.

அவள் முன் சென்று நின்று அவள் முகம் நோக்கி கைநீட்டி “என்ன நினைக்கிறாய்? என்னை இழிவுசெய்ய திட்டமிட்டிருக்கிறாயா? என் குடிகள் முன் என்னை இழிவுபடுத்துவதா உன் எண்ணம்?” என்று கூவினேன். “அரசி என உன்னை எண்ணினேன். அடுமனைப்பெண்டிரைவிட கீழ்மகள்போல் நடந்துகொள்கிறாய். உன்னை நீயே இழிவுசெய்துகொள்கிறாய். இழிவுசெய்துகொள், அது உன் விருப்பம். நீ இழிந்தால் செல்லும் ஆழம் அடியில்லாதது. என்னையும் என் குடியையும் உன் கீழ்மை வந்து தொட நான் ஒப்பமாட்டேன்” என்று கூச்சலிட்டேன்.

அவள் இமைகொட்டாமல் நோக்கியபடி அசையாமல் அமர்ந்திருந்தாள். “உனக்கென்ன உள்ளம் கலங்கிவிட்டதா? சொல், எனில் உன்னை இருட்டறையில் அடைத்துவிட்டு முடிசூடுகிறேன்” என்றேன். “எனக்கு நீ ஒரு பொருட்டல்ல. இப்புவியில் எவரும் ஒரு பொருட்டல்ல. நான் வரலாற்றில் எவ்வண்ணம் வாழ்கிறேன் என்பதன்றி எதுவும் என் எண்ணத்தில் இல்லை. நான் என் புகழ்மிக்க முன்னோருடன் வைக்கப்படுவதைத் தவிர எதையும் கருத்தில் கொள்ளப்போவதில்லை.” அவள் எவ்வண்ணமும் அச்சொற்களால் சீண்டப்படவில்லை என்று கண்டேன். மேலும் விசைகொண்ட சொற்களுக்காக என் அகம் தேடியது. அக்கணமே கண்டுகொண்டது.

“உன் மைந்தர்களுக்காக நீ துயர்காக்கிறாயா? நீ இவ்வண்ணம் ஒழிந்து சென்றால் உன் மைந்தரை கொன்றவள் நீ என்னும் பழியிலிருந்து உன்னால் ஒழிய முடியுமா என்ன?” அவளை மேலும் புண்படுத்த விழைந்தேன். மேலும் கீழிறங்க, மேலும் சிறுமைகொள்ள அதன் வழியாக அவளை ஊடுருவ முயன்றேன். இளையோனே, பெண்ணுடன் உறவுகொண்ட எந்த ஆண்மகனும் அறிந்திருப்பதுதான் இது. அவளை எங்கோ ஓரிடத்தில் தன்னால் வெல்லமுடியாதென்று அவன் அறிகிறான். தன் ஆழத்தில் அவள் இறுக்கிக்கொண்டிருக்கும் ஒரு இடத்தை கண்டடைந்தபின் அவனுக்கு ஒருகணமும் அமைதியில்லை. அதை தாக்கி உடைக்க அவன் எந்த எல்லைக்கும் செல்வான். தன் மனைவிமுன் கீழ்மகனாகத் தெரியாத ஆண் எவருமில்லை.

அவள் முகம் நோக்கி குனிந்து கூவினேன். “நீ அடைந்த இழிவனைத்தும் நீயே ஈட்டிக்கொண்டவை. அஸ்தினபுரியின்

அவையில் நீ ஏன் சிறுமைகொண்டாய்? நீ கர்ணன்மேல் கொண்ட கரவுக்காமத்தால். நீ அறிந்திருந்தாய் அவர் என் தமையன் என்று. அவரையும் வென்றெடுக்க முயன்றாய். அவரை வென்றால் அஸ்தினபுரியும் இந்திரப்பிரஸ்தமும் உன்னுடையதே என்று திட்டமிட்டாய். அந்தத் திட்டத்தை அறிந்து உன்னை அதிலிருந்து தடுக்கும்பொருட்டே சுயோதனன் உன்னை அவைச்சிறுமை செய்தான். உன்மேல் அவன் கொண்ட வெற்றி அது.”

அவள் கல்லென மாறிவிட்டவள் போலிருந்தாள். நான் அழுகையும் கொந்தளிப்புமாக கூவினேன். ”ஆனால் உன் கீழ்மையின் எல்லை என்ன என்று கர்ணன் அறிந்திருந்தார். ஆகவேதான் நீ அவைச்சிறுமை செய்யப்படுகையில் வாளாவிருந்தார். உன் எல்லையென்ன என்று அறிந்தவன் நான் மட்டுமே. ஆம், நான் மட்டுமே. நீ அடைந்த சிறுமையை கண்டு சினம்கொண்டு நான் போருக்கெழவில்லை. எங்கள் குடிக்கு சிறுமை வந்துவிடலாகாதே என்றுதான் களம்கண்டோம். நாங்கள் சொல்லில் நிமிர்ந்து நிலைகொள்ளவேண்டும் என்பதற்காக.”

அதற்குப் பின் என்னால் பேச இயலவில்லை. என் குரல் உடைந்து உடல் தளர்ந்தது. நான் அருகிருந்த பீடத்தில் அமர்ந்துகொண்டேன். அவள் என்னை நோக்கி “நான் அங்கே வரப்போவதில்லை” என்று தணிந்த குரலில் சொன்னாள். நான் சொன்னவற்றை அவள் செவிகொண்டாளா என்றே ஐயமாக இருந்தது. என்னை நானே அருவருத்தேன். நம் உடலுக்குள் இருந்து வெளிவந்து கிடக்கும் மலத்தைக் கண்டு நாமே குமட்டல் கொள்ளும் ஒரு தருணம் உண்டல்லவா? அந்தக் கீழ்மை என்னுடையது அல்ல. அந்தச் சொற்களில் எழுந்த எந்த

எண்ணத்தையும் அதற்கு முன் நான் கொண்டிருக்கவில்லை. அந்தத் தருணம் என் நாவில் அவற்றை எழுப்பியது. அச்சொற்கள் வெறும் நச்சு அம்புகள். ஆனால் அவற்றை நான் சொல்லிவிட்டேன்.

அவள் "என்னால் அந்நகருக்குள் நுழைய இயலாது" என்றாள். "அந்நகரில் நான் நுழைந்தால் அதன் பொருட்டே என நானே ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும். என்னால் அதை எண்ணிநோக்கவே இயலவில்லை. இன்று காலை நான் கிளம்புவது வரைக்கும்கூட அறுதி முடிவு எடுக்கவில்லை. படகில் ஏறி அமர்ந்த பின்னரே என்னால் அங்கே வரமுடியாதென்று உணர்ந்தேன்." ஒரு கணத்தில் என் சரடுகள் எல்லாம் அறுந்தன. நான் என்னால் முழுமையாக கைவிடப்பட்டேன். கீழே அமர்ந்து அவள் கால்களை பற்றிக்கொண்டேன்.

"என் மேல் இரக்கம் காட்டு. நான் சொன்னவை எல்லாம் வெறும் நஞ்சு என நீயே அறிவாய். அவை என் இயலாமையின் வெளிப்பாடுகள். என்னை கைவிட்டுவிடாதே. என்றும் உன்னை என் அன்னையென எண்ணிக்கொள்பவன் நான். உன்னை அடைக்கலம் அடைந்தவன்" என்றபோது நான் விழிநீர் பெருக்கத் தொடங்கிவிட்டிருந்தேன். "என்னை என் அன்னை உதறிவிட்டார். என் இளையோர் கைவிட்டுவிட்டனர். நீ அனைத்தையும் அறிவாய். அவர்கள் என்னுடன் இருப்பார்கள். ஆனால் நான் சென்று தொடமுடியாத நெடுந்தொலைவில். என்னுடன் எவருமில்லை. நீ என்னை முனிந்தபோதுகூட என்னிடமிருந்து அகலவில்லை என்றே எண்ணியிருந்தேன். நீ என்னை விட்டுச்செல்கிறாய் என்று தோன்றியது இப்போதுதான்" என்றேன்.

அவளைப் பிடித்து உலுக்கியபடி “நீ இந்திரப்பிரஸ்தத்திற்கு செல்லக்கூடாது. நீ நகர்நுழைவை தவிர்த்தால் நீ என்னை கைவிட்டுவிட்டாய் என்று மட்டுமே பொருள். வேறேதும் பொருள் இல்லை. நீ அந்நகருக்குச் சென்றால் மீள மாட்டாய்…” என்றேன். அவள் என் தலைமேல் கைவைத்து கனிந்த குரலில் “நான் சொல்வதை புரிந்துகொள்க, நான் அந்நகரில் மட்டுமே இருக்கமுடியும்” என்றாள். “நீ என்னை கைவிடுகிறாய்… என்னை வெறுக்கிறாய்” என்றேன். ”உங்களை நான் இறுதிவரை கைவிடமாட்டேன் என நீங்கள் அறிவீர்கள். நான் அங்கே வரமுடியாது, அவ்வளவுதான்” என்றாள்.

நான் சீற்றம் கொண்டேன். “எனில் என்ன செய்யவேண்டும் என்கிறாய்? நகர்நுழைவை இந்திரப்பிரஸ்தத்தில் நிகழ்த்துவதா? அஸ்தினபுரி என் மூதாதையரின் நகரம். அதுவே என் குடிக்குரியது. அங்கே முடிசூட்டிக்கொண்டால்தான் நான் என் தந்தையரின் குருதிக்குரியவனாகிறேன்…” என்று கூவினேன். “நான் சூட்டிக்கொள்ள விழைவது குருவின், ஹஸ்தியின், பிரதீபரின் மணிமுடியை… அதற்காகத்தான் உயிர்வாழ்கிறேன். நீ வந்தாகவேண்டும். நீ என் மனைவி என்றால் என் சொல்லுக்குக் கட்டுப்பட்டாகவேண்டும்.”

“எனில் மனைவி என்பதை துறப்பதைத் தவிர நான் செய்யக்கூடுவது வேறில்லை” என்று அவள் அழுத்தமான குரலில் சொன்னாள். நான் திகைத்தேன். அவள் முகம் அதே இறுக்கத்துடன், ஆனால் கனிந்த விழிகளுடன் இருந்தது. கைகூப்பி உடல் தழைத்து “என்னை பொறுத்தருள். என் சொற்களை மறந்துவிடு. அவை கீழ்மகனாக நடித்து நான் சொன்னவை. என் மேல் சினம்கொள்ளாதே… உன்னுடன் நகர்நுழைவதை நான் நூறாயிரம் முறை நடித்துவிட்டேன்.

கான்வாழ்வில் ஒவ்வொருநாளும் நான் கனவுகண்டது இது. தன்னந்தனியாக நான் நகர்நுழைந்தால் அது என் சாவுக்கு நிகர். என் வாழ்க்கையின் எல்லா செயல்களுமே பொருளிழந்துவிட்டன என்று பொருள். அன்னையும் நீயும் இல்லையென்றால் நான் நகர்நுழைவது எவருக்காக? நான் அடைந்ததுதான் என்ன?” என்றேன்.

அவள் “நான் உங்கள்மேல் சினம் கொள்ளவில்லை. உங்கள் கீழ்மைச்சொற்கள் நீங்கள் என் முன் வீழ்ந்துவிட்டதையே காட்டின. உங்கள் உள்ளத் துயரை எண்ணி நான் வருந்தவே செய்தேன். ஆனால் அந்நகர் என்னுடையதல்ல. அங்கே நான் வாழமுடியாது. நான் செல்லவேண்டிய இடம் என்ன என்று எனக்கு உறுதியில்லை. ஆனால் இந்திரப்பிரஸ்தம் நான் அமைத்தது. ஆகவே வேறுவழியே இல்லை” என்றாள். என் முகம் நோக்கி மெல்ல புன்னகைத்து “செல்க, என்னால் இயலாது அது!” என்றாள். அக்கனிவை நான் நன்கறிவேன். அனைத்து மானுடரையும் குழவி என எண்ணும் அன்னையின் விழிகளின், இதழ்களின் குழைவு அது.

என்னால் மேலும் பேசமுடியவில்லை. அவள் உள்ளத்தை நான் நன்கறிவேன். அது எங்கே கனியும் எங்கே உறுதிகொள்ளும் என்று எனக்கு ஐயமே இருந்ததில்லை. “நீ என் நெஞ்சில் வாளை பாய்ச்சிவிட்டாய். எனக்கு இழைக்கப்பட்ட பெரும் தீங்கு அன்னை இழைத்தது. இது அதைவிடக் கொடிது. நான் முற்றிலும் தனியனாக, முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டவனாக அந்நகர்முன் சென்று நின்றிருக்கப்போகிறேன். அதுவே நீ விழைவதென்றால் அவ்வண்ணமே ஆகுக!” என்று திரும்பிவிட்டேன்.

“ஆனால் அஸ்தினபுரியை அணுகும்போது என் எண்ணம் வேறாக இருந்தது” என்றார் யுதிஷ்டிரன். “நான் வரும் காலமும் வழியும் மிகமிக நீண்டது. இங்கே நகர் எனக்காக ஒருங்கவில்லை. பல ஊர்களில் தங்கி காத்திருந்து பொறுமையிழந்து சீற்றம்கொண்டு துயரடைந்து சலித்து நகர்நுழைவுக்காக வந்தபோது அவள் இந்திரப்பிரஸ்தத்திற்குச் சென்றதே நன்று என்னும் எண்ணத்தையே அடைந்தேன். நகர்நுழைவு முடிந்து என் அறைக்குச் சென்றபோது உளமுருகி அழுதேன். தனிமையில் அமர்ந்து இரவெல்லாம் இருளை நோக்கிக்கொண்டிருந்தேன். அவள் வராமலானதே நன்று. இச்சிறுமைக்கு நான் தகுந்தவன், அதை அவள் அடையவேண்டியதில்லை என எனக்கே சொல்லிக்கொண்டேன்.”

“அன்று இந்நகர் என்னை சிறுமை செய்தது. நான் கொலைத்தெய்வத்தின் வாள்முன் நிற்பதுபோல இதன் இரக்கத்திற்காக காத்திருந்தேன். இதை அணுகிக்கொண்டிருந்தபோது கைகூப்பி இதனிடம் மன்றாடிக்கொண்டிருந்தேன். இந்தக் கோட்டைவாயிலுக்குள் நுழைந்தவன் ஓர் இரவலன். தன்னை புழுவினும் கீழ் என எண்ணிக்கொண்ட ஒரு சிறுமகன்” என்று அவர் தொடர்ந்தார். “ஆனால் பின்னர் எண்ணினேன். இங்கே திரௌபதியின் ஒரு துளி எஞ்சியிருக்கிறது. அன்னைவடிவென என்னைக் காப்பவள் எனக்கென தன் ஒரு பகுதியை இங்கே விட்டுச்சென்றிருந்தாள். அந்தப் பெண், கோட்டைக்காவல் பெண், அவள் எனக்காகச் செய்தவை திரௌபதியால் இயற்றப்பட்டவை போல. என்னை அவள் தன் சிறகுகளால் காத்தாள். என்னை அவள் மென்மையாக சூழ்ந்துகொண்டாள். நான் நல்லூழ் கொண்டவன். என்றும் பெண்டிரால் கனிவுடன் பேணப்படுபவன்.”

அவர் குரல் இடறியது. தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு மேலும் தொடர்ந்தார் "இந்நகரின் அத்தனை மாளிகைகளும் நான் நன்கறிந்தவை. அவை என்னை நோக்கி புன்னகைத்து முகமன் உரைப்பவை, உரையாடுபவை. தெருக்களில் செல்லும்போது மாளிகைகளுடன் பேசியபடியே செல்வது என் வழக்கம். ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு கணம் வாழ்ந்து வாழ்ந்து மீள்வேன். இந்நகரை ஒழிந்து இந்திரப்பிரஸ்தத்தில் வாழ்ந்த போதும் சரி, கானகத்தில் அலைந்த போதும் சரி, இந்நகரிலேயே நான் உளம்வாழ்ந்தேன். இம்மாளிகைகளை அகத்தே பார்த்துக்கொண்டிருந்தேன். அவை என் கனவிலெழுந்து கண்டு நீணாளாயிற்றே என்றன. என்று மீள்வாய் என்றன. என் முன்னோர்களின் கைபட்டு எழுந்தவை. அவர்கள் வாழ்ந்த தடம் பதிந்தவை."

"அவை அன்று நான் நகர்நுழைந்தபோது கண்களை இறுக மூடிக்கொண்டிருந்தன. அவை ஊமைகளாகிவிட்டிருந்தன. அன்றிரவு நான் இந்த அரண்மனை முகப்பில் நின்று அவற்றை நோக்கிக்கொண்டிருந்தேன். அவற்றில் எவருமில்லை. அவை வெறும்கூடுகள். நான் அன்று புலரியில் எவருமறியாது வெளியே சென்றேன். கரும்போர்வையை போர்த்திக்கொண்டு நகரினூடாக அலைந்தேன். அத்தனை மாளிகைகளும் குருடாகிவிட்டிருப்பதைக் கண்டேன். ஒவ்வொன்றின் முன்னாலும் நின்று ஏங்கி நெஞ்சுருகி மீண்டேன்."

"இந்நகரின் கரிய கோட்டைக்குள் நான் என்றுமே பாதுகாப்பாக உணர்ந்திருக்கிறேன். கடுங்குளிரில் கரும்போர்வையை போர்த்திக்கொண்டது போலிருக்கும். களிற்றுநிரைகளால் காவல்காக்கப்படுவது போலிருக்கும். ஆனால் அன்று இந்தக் கோட்டைச்சுவர்களை அஞ்சினேன். அவை உருகிச்சூழ்ந்த

இருள் எனத் தோன்றின. இந்நகரை மாபெரும் நாகம் என அவை சுற்றி இறுக்கிக்கொண்டிருப்பதாக எண்ணினேன். கோட்டையை என்னால் கண் எடுத்து நோக்கமுடியவில்லை. இரவில் நகரில் செல்கையில் அக்கோட்டை செறிந்தெழுந்து மடிந்த காரிருள் வெளி என்று பட்டது. அதற்குள் இருந்து வெளியே தப்பியோடிவிடவேண்டும் என்று விழைந்தேன்.”

யுதிஷ்டிரன் மெல்ல தன்னிலை அடைந்தார். நீள்மூச்சுகளினூடாக இயல்படைந்தார். “இதோ அவளை எண்ணிக்கொண்டே இங்கே அமர்ந்திருக்கிறேன். நான் எவர் இருந்தாலும் அவள் உடனில்லையேல் முழுத் தனியன் என அறிகிறேன். அவள் முன் நான் நூலாய்ந்தவன் அல்ல. அறத்தான் அல்ல. அரசகுடியினன் கூட அல்ல. பேதைச்சிறுமைந்தன் மட்டுமே. அவள் முன் எப்போதும் அனைத்துக் கீழ்மைகளுடனும் அச்சங்களுடனும் மட்டுமே நின்றிருக்கிறேன். அவளும் என்னை மைந்தன் என்று அன்றி நடத்தியதில்லை.”

புன்னகைத்தபோது அவர் முகம் மேலும் துயர்கொண்டதாக ஆகியது. “மனைவியென அன்னையை அடைந்தவன் தெய்வங்களுக்கு இனியவன். அன்னையைவிட ஒரு படி மேலானவள் அத்தகைய மனைவி. அனைத்துக்கும் அப்பால் அவளிடம் சென்று நின்றிருக்க முடியும். அன்னை அருவருக்கும் செயலுக்குப் பின்னரும்கூட அவள் கைவிடமாட்டாள் என நம்ப முடியும்.” அவர் சிரித்து “தனிமை என எண்ணியதுமே நான் இந்திரப்பிரஸ்தத்திற்கே சென்றுவிடுகிறேன். அன்னையே அன்னையே என இங்கிருந்து ஏங்கி குரல்கொடுத்துக்கொண்டிருக்கிறேன். அவளுக்கு என் குரல் கேட்கும். அவளால் அங்கே என்னைத் தவிர்த்து அமைய

முடியாது" என்றார். அவர் முகம் மாறியது. "ஆனால் அவ்வண்ணமும் சொல்ல முடியாது. அவள் முற்றிலும் நிறைந்தவள். அவளுக்கு எவரும் தேவையில்லை. நான் மட்டுமல்ல, மானுடர் எவரும் அவளுக்கு ஒரு பொருட்டல்ல..."

"இன்று வெல்லத் தொடங்கியிருக்கிறேன். இந்நகர் எழும் என்னும் நம்பிக்கையை அடைந்திருக்கிறேன். இன்று மீண்டும் என் கனவுகள் எழுந்துவிட்டிருக்கின்றன. இந்நகரில் நான் முடிசூடுகையில் அவள் உடனிருக்கவேண்டும். அவள் அருகிருக்க மும்முடிசூடி இந்த அரியணையில் அமரமுடிந்தால் இவ்வுலகில் நான் வென்றெடுக்க ஏதும் எஞ்சியிருக்காது" என்றார் யுதிஷ்டிரன். "ஆனால் அவளுடன் எனக்கு எத்தொடர்பும் இல்லை. எந்த ஓலைக்கும் அவளிடமிருந்து மறுமொழி இல்லை. அங்கே அவள் தன் தனிமையின் இருளுக்குள் சென்றுவிட்டிருக்கிறாள். அவளை அதிலிருந்து மீட்க இன்னொருவரால் இயலாது. அவளே அவ்வாயிலைத் திறந்து வெளிவந்தாகவேண்டும்."

"ஆகவேதான் உன்னை அனுப்புகிறேன். நானே செல்லவேண்டும். சென்று அவள் காலடியில் என் தலையை வைக்கவேண்டும். அன்னையென்று ஆகி எனக்கு அருள்க என்று மன்றாடவேண்டும். அவள் எனக்களிக்கும் இறுதிக் கொடை இது என்று சொல்லவேண்டும். என்னையும் என் மூதாதையரையும் வாழ்த்துக, என் கொடிவழிகள் நிறைவுகொள்ளச் செய்க என்று இரக்கவேண்டும். என் பொருட்டு நீ செல்க! வேறொன்றும் நான் சொல்வதற்கில்லை" என்றார் யுதிஷ்டிரன்.

யுயுத்ஸு அவரை நோக்கியபடி அமர்ந்திருந்தான். அவர் சொற்கொந்தளிப்புக்குப் பிந்தைய வெறுமையை

சென்றடைந்துவிட்டிருந்தார். அவன் எழுந்து தலைவணங்கினான். அவன் வெளியேறப்போகும்போது ஏவலன் உள்ளே வந்து சுரேசர் உள்ளே வர விழைவதை அறிவித்தான். யுதிஷ்டிரன் கைகாட்டினார். சுரேசர் உள்ளே வந்தார். தலைவணங்கி "ஆணைகளை எதிர்பார்க்கிறேன்" என்றார். "யுயுத்ஸு இந்திரப்பிரஸ்தம் செல்லவேண்டும். அவனிடம் திரௌபதியை அழைத்துவரும்படி ஆணையிட்டிருக்கிறேன். ஆவன செய்க!" என்றார். சுரேசர் "ஆணை" என்றார்.

யுதிஷ்டிரன் பெருமூச்சுடன் எழுந்துகொண்டதும் சுரேசர் "அஸ்தினபுரியின் படை ஒன்பது அங்கமாக பிரிந்து வளர்ந்துள்ளது. ஒன்பதற்கும் இணைந்து ஒற்றைத்தலைமை இருப்பின் ஆட்சி சிறக்கும்" என்றார். "ஆம்" என்றார் யுதிஷ்டிரன். "அதற்குத் தகுதியானவர்கள் தேவை. நம் படைகளை நன்கறிந்தவர்கள். சொல்லப்போனால் இப்படைப்பெருக்கின் உருவாக்கத்தில் பங்குள்ளவர்கள். அத்துடன் இத்தொல்நகரின் தொல்குடிகளை சேர்ந்தவர்கள்." யுதிஷ்டிரன் அவர் சொல்வதென்ன என்று கூர்ந்து நோக்க "கோட்டைக்காவல்தலைவி சம்வகையை தலைமைப் படைப்பொறுப்புக்கு அமர்த்தலாம் என்பது என் துணிபு" என்றார்.

யுதிஷ்டிரன் சற்றே சீற்றத்துடன் ஏதோ சொல்ல முயல சுரேசர் ஊடே புகுந்து "அஸ்தினபுரியின் தலைமைப்படைப்பொறுப்பில் ஒரு பெண் இருப்பது பேரரசி திரௌபதிக்கு உவப்பானது. அவர்கள் நகர்நுழைகையில் படைமுகப்பில் நின்று வாள்தாழ்த்தி வணங்குபவள் சம்வகை என்றால் அதைவிட பெரிய வரவேற்பு பிறிதில்லை" என்றார். யுதிஷ்டிரன் ஒருகணம் தத்தளித்து "ஆகுக!" என்றார். சுரேசர் "ஆணை" என்றபின்

யுயுத்ஸுவை நோக்கி புன்னகைத்து வருக என உதடசைவால் கூறி திரும்பினார். யுயுத்ஸுவும் உடன் சென்றான்.

# களிற்றியானை நிரை - 31

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 3

யுயுத்ஸு அஸ்தினபுரியிலிருந்து முற்புலரியிலேயே கிளம்பினான். கருக்கிருள் இருக்கும்போதே அவன் பயணத்திற்கான ஆடைகளை அணிந்து அரசமுற்றத்தில் நின்றிருந்த தேரை நோக்கி வந்தான். அவ்வேளையில் அங்கு அவனுடன் பயணம் செய்யும் சிறிய காவலர்படையும், கொடியேந்தியும், கொம்பூதியும் மட்டுமே இருப்பார்கள் என்று அவன் எண்ணினான். அவர்கள் முன்னரே ஒருங்கி நின்றிருந்தனர். காவலர்தலைவன் வாள்தாழ்த்தி தலைவணங்கினான். படிகளில் இறங்கி தெற்கிலிருந்து வீசிக்கொண்டிருந்த குளிர்க்காற்றில் ஆடை பறக்க நின்று தலை நிமிர்ந்து இருண்ட வானில் தொங்கியவைபோல் நின்று மின்னிக்கொண்டிருந்த விண்மீன்களை பார்த்தான். தேரை கிளப்பலாம் என்று பாகனுக்கு கையசைத்துவிட்டு அவன் அதில் ஏறச் செல்லும்போது உள்ளிருந்து சுரேசர் சால்வையை அள்ளிச் சுற்றியபடி விரைந்த சிற்றடிகளுடன் வந்து படிகளில் இறங்குவதை கண்டான். நின்று அவர் அணுகுவதற்காகக் காத்து தலைவணங்கினான்.

சுரேசர் “தாங்கள் இப்பொழுதில் கிளம்புவீர்கள் என்பது சற்று முன்னர்தான் நினைவுக்கு வந்தது. இப்பொழுதெல்லாம் நான் துயில்வதற்கு நெடும்பொழுதாகிறது. ஆகவே புலரிக் கடன்கள்

சற்று பிந்துகின்றன” என்றார். அவருடைய கண்கள் துயில் விழித்தமையின் வீக்கத்துடன் இருந்தன. “ஆம், இன்று நகரம் எட்டுத் திசைகளிலும் கிழிந்து பறப்பதுபோல் தோன்றுகிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “அது நன்று. இது சில நாட்கள் உயிரற்றுக் கிடந்தது. இப்போது உயிர் பொங்கி நுரைத்து வெளியே கவிகிறது” என்றார் சுரேசர். “தாங்கள் செல்வதற்கு முன் ஒருமுறை பார்க்க வேண்டும் என்று எண்ணினேன். தனியாக ஒன்றும் சொல்வதற்கில்லை. வெறுமனே பார்க்கவேண்டும் என்று…”

யுயுத்ஸு திரும்பிப் பார்க்க அவனருகே நின்ற கொம்பூதி அப்பால் விலகினான். சுரேசர் “தாங்கள் அரசியை பார்க்கச் செல்வது அவரை இங்கு அழைத்து வரும்பொருட்டே” என்றார். “ஆம்” என்று அவன் சொன்னான். சுரேசர் “அது தாங்கள் அரசரிடம் பேசியதுபோல அத்தனை எளிய செயல் அல்ல. ஒருவேளை அரசி மறுக்கக்கூடும்” என்றார். யுயுத்ஸு “அவர் துயரிலிருப்பார் என்று அறிவேன்” என்றான். “துயரல்ல, இத்தனை நாட்களில் துயர் சற்று மட்டுப்பட்டிருக்கும். உண்மையில் இழப்பின் துயர் சிறிதுதான். அதை தொடர்ந்து உருவாகும் உளவெறுமையே மிகக் கொடிது. பொருளின்மையென அது வாழ்க்கையை மாற்றிவிடுகிறது” என்றார் சுரேசர்.

“இங்கு வரக்கூடாதென்று அவர் முடிவு செய்திருந்தார் என்றால் உங்கள் பணி எளிது என்பேன். வரக்கூடாதென்பதற்கு அவர் சொல்லும் எல்லா சொற்களையும் உங்களால் மறுத்துவிடமுடியும். அதன் பின் அவர் ஏன் வரவேண்டும் என்பதற்கான சொற்கூட்டுக்களை உரைத்தாலே போதும், வென்றுவிடலாம். வருவதும் வராமலிருப்பதும் நிகரே என்று

எண்ணுவார் என்றால் செய்வதற்கு ஒன்றுமில்லை” என்றார் சுரேசர். “அவர் முடிவுகளை உறுதியாக எடுப்பவர். ஆனால் அவை அரசமுடிவுகள். இவை அப்படி அல்ல. ஆகவே நமக்கு வாய்ப்புள்ளது. அவர் வந்தாகவேண்டும். இல்லையேல் குருக்ஷேத்ரத்தின் போர்வெற்றிகூட பயனற்றதாகிவிடும்.”

யுயுத்ஸு “அவர் வருவார் எண்றுதான் தோன்றுகிறது” என்றான். சுரேசர் “அவர் வருவது அவருக்கே சற்று மிகையானது என்று தோன்றலாம். மைந்தரை இழந்த பின் மாமங்கலையாக இங்கு அரசு வீற்றிருப்பது உகந்ததல்ல என்று அவர் எண்ணலாம். அல்லது அவர் பழிச்சொற்களுக்கு அஞ்சலாம். நாப்பழிக்கு அஞ்சாதோர்கூட நூல்பழிக்கு அஞ்சுவர்” என்றார். “இங்கு மும்முடிசூடி அவர் அமர்ந்தார் எனில் நஞ்சுகொண்ட நாவுகள் வம்பில் திளைக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. சூதர் இளிவரல் உரைப்பார்கள். சூதர் சொற்கள் புல்விதைகளென பெருகுபவை. எவராலும் கட்டுப்படுத்த இயலாதவை. சூத நாவிலெழுவன ஒருநாள் எழுத்தாணியிலும் கூர்கொள்ளும்.”

“அவர் அதை எல்லாம் பொருட்படுத்துவார் என்று எனக்குத் தோன்றவில்லை” என்றான் யுயுத்ஸு. “ஒவ்வொருவரும் தாங்கள் சூடிய அடையாளங்கள் அனைத்தையும் இழந்து வெறும் மனிதர்களாக நிற்கும் தருணங்கள் உண்டு” என்று சுரேசர் சொன்னார். “நான் என்ன சொல்லவேண்டும்?” என்று யுயுத்ஸு கேட்டான். “அத்தருணத்தில் அவரின் இயல்பு நோக்கி சொல்லவேண்டியதை நீங்களே முடிவு செய்யலாம். ஆனால் தவறாமல் சொல்லப்பட வேண்டிய ஒன்று உண்டு. இங்கு அவர் மணிமுடி சூடுவதென்பது அவர் இந்த அவையில் இழிவு செய்யப்பட்டதற்கு மறுநிகர் செய்வது. அங்கு தொடங்கிய கதை

இங்கு அவர் மும்முடி சூடி அமரும்போது மட்டும்தான் முடிவடைகிறது” என்றார் சுரேசர்.

யுயுத்ஸு “அதை நினைவுபடுத்த வேண்டாம் என்று பார்த்தேன்” என்றான். சுரேசர் “அதை அவர் மறந்திருக்கவே முடியாது. எந்தப் பெண்ணும் மறக்கமாட்டாள். அவரிடம் கூறுக, ஒருகணம் ஒருமுறை அஸ்தினபுரியின் அரியணையில் அவர் மணிமுடி சூடி அமர்ந்துவிட்டால் அக்கணமே அந்த துயர்மிக்கப் பெருங்கதை முடிவுறுகிறது. அதன் பொருட்டு களத்தில் உயிர்விட்டவர்கள், கணவனையும் மைந்தரையும் இழந்த பெண்கள், பாரதவர்ஷம் முழுக்க நிறைந்திருக்கும் பெருந்துயர் அனைத்தும் ஒரு வட்டம் என முழுமை பெறுகின்றன. அவர் இங்கு மணிமுடி சூடவில்லை எனில் அக்கதை இன்னும் தொடரும். இன்னமும் அழிவுகள் எழும். தலைமுறைகள் குருதி சிந்தும். அந்நீள்கதையை இவ்வண்ணம் முடித்து வைப்பது அவரின் கையில்தான் உள்ளது. அதை கூறுக!” என்றார்.

யுயுத்ஸு “அதை எவ்வண்ணம் நான் அவரிடம் கூற இயலும்? எனது தூதை உரைக்கவே நான் செல்கிறேன்” என்றான். “எவ்வண்ணமாயினும் அஸ்தினபுரியின் இழப்புகளை எண்ணிக்கொள்க! இயல்பாகவே அவற்றைப் பற்றி ஒரு சொல் உங்கள் நாவில் எழும். அதை அவர் உணர்கையில் பேச்சு அவ்வண்ணமாக திரும்பும். அவ்வழியே சென்று இச்சொற்களை அவரிடம் கூறுக!” என்றார் சுரேசர். யுயுத்ஸு “ஆம்” என்று கூறி தலைவணங்கினான். பின்னர் “இதில் என்னை உறுத்திக்கொண்டிருப்பது ஒன்றே” என்று சொல்லி விழிகளை விலக்கிக்கொண்டான்.

சுரேசர் காத்திருந்தார். “இது அரசகுடியினரின் குடும்பத்திற்குள் நிகழும் உணர்வாடல். நான் அரசகுடியினன் அல்ல. பாண்டவ குடும்பத்தில் ஒருவனும் அல்ல” என்றான். சுரேசர் புன்னகையுடன் “நீங்கள் அவ்வுணர்வை அடைவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அது அரசியின் முன் செல்லும்போது மறையும். அவர் முன் ஒவ்வொருவரும் அடையும் உணர்வு ஒன்றே, பேராற்றல் கொண்ட அன்னை ஒருத்தியின் முன் நிற்பதுபோல பணிவும் முழுதளிப்பும். அன்னை உங்களை நன்கறிவாள். உங்கள் மேல் பேரன்பு கொண்டவள் என்பதையும் உணர்வீர்கள். அவளுக்கு எவரும் அயலவர் அல்ல என்றும் தெளிவீர்கள். உங்கள் உள்ளத்தில் என்றுமென வீற்றிருக்கப்போகும் தெய்வம் ஒன்றை அணுக்கத்தில் பார்க்கப்போகிறீர்கள் என்றே இத்தருணத்தில் நான் உணர்கிறேன்” என்றார்.

யுயுத்ஸு உளம் நெகிழ்ந்துவிட்டான். அதை அவரிடம் காட்டாமலிருக்கும் பொருட்டு தன் சால்வையை மீண்டும் ஒருமுறை இழுத்துவிட்டு சொல்லின்றி தலைவணங்கி தேரிலேறிக்கொண்டான்.

யுயுத்ஸு தன் எண்ணங்களில் தானே உழன்றபடி கைவிரல்களைக் கோத்து நெரித்துக்கொண்டிருந்தான். அஸ்தினபுரியின் தெருக்களில் அரசத் தேர்கள் செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த பலகைப்பாதையின் மீது தேர் சகடஓசையுடன் சென்றது. அந்த முற்புலரியிலும் சாலையின் இருபுறமும் மக்கள் குழுமி தோள்முட்டி உலைந்து தலைதலையென அசைந்துகொண்டிருந்தனர். அயல் வணிகர்களும் சூதர்களும் ஆங்காங்கே கூட்டங்களை

கூட்டியிருந்தனர். தெருவிலிருந்து எழுந்த ஓசை சுவர்களில் பட்டு மீண்டும் தெரு மீது எதிரொலியாக பொழிந்தது. அஸ்தினபுரியின் அனைத்து மாளிகைகளும் புதுப்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. இரவுப் பணியாளர்கள் நெய்விளக்குகளை மூங்கில்களில் கட்டி தொங்கவிட்டபடி அவ்வெளிச்சத்தில் கூரைகளிலும் சுவர்களிலும் தொற்றி பணியாற்றிக்கொண்டிருந்தனர். நகர் மாடங்கள் அனைத்திலும் மின்மினிகள் செறிந்திருப்பதுபோல் தோன்றியது. நெய்விளக்கின் செவ்வொளி வட்டத்திற்குள் தெரிந்த பணியாட்கள் விண்ணில் மிதக்கும் கந்தர்வர்கள்போல் தோன்றினார்கள். பெரிய செந்நிறக் கொடியொன்று பறக்க அதில் பதிந்த முத்திரைகள்போல் மறுகணம் உளமயக்களித்தனர்.

மாடங்களின் மீது பூசப்பட்டுக்கொண்டிருந்த உருக்கிய அரக்கும் சுண்ணமும் கலந்த கலவையின் இன்மணம் காற்றில் எழுந்தது. அரக்கு சொட்டுமிடங்களில் எவரும் வந்துவிடாதபடி இருக்க கீழே வேலுடன் காவலில் நின்றனர் வீரர். நெரிசலில் உந்தப்பட்டு அங்கே வந்தவர்களை நோக்கி அவர்கள் “விலகுக! விலகுக!” என்று கூவினார்கள். பித்தளைக் குமிழ்களை செய்பவர்கள் சிறிய சாலைச் சந்துகளுக்குள் வெறும் தரையிலேயே தங்கள் மூசைகளை அமைத்திருந்தனர். அங்கே அனல் உலைத்துருத்தியால் ஊதப்பட்டு நாகம்போல் சீறிக்கொண்டிருந்தது. உருகிய பித்தளை அனற்குழம்பென கிடுக்கியால் எடுக்கப்பட்ட மண்குவளைகளிலிருந்து அச்சுகளுக்கும் குழாய்களுக்கும் ஊற்றப்பட்டது. குளிரவைத்து எடுக்கப்பட்ட பித்தளைக்குமிழ்களை இளைய சிற்பிகள் நிரையாக அமர்ந்து மணற்பை இட்ட பட்டுத்துணிகளால் உரசி மெருகேற்றிக்கொண்டிருந்தனர்.

வெண்கலத் தாழ்களையும் பொருத்துகளையும் தட்டிகொண்டிருந்தனர். தச்சர்களின் கொட்டுவடிகளும் உளிகளும் ஓசையிட்டுக்கொண்டிருந்தன. அவர்கள் பணியாற்றுகையில் உளம் கூர் கொள்ளும்பொருட்டு சூதன் ஒருவன் அருகே ஒற்றைக்கம்பி யாழுடன் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தான். குருக்ஷேத்ரப் போர்தான். ஜயத்ரதனின் தலை விண்ணில் நின்றுகொண்டிருந்தது. மரச்சட்டங்களை நெடுக்காகச் சுமந்தபடி அத்திரிகள் வந்தன. அத்திரிகளை ஓட்டியவர்கள் ஒருவரை ஒருவர் கூவியழைத்துக்கொண்ட சொற்கள் தெருவில் நிறைந்திருந்தன. ஓடுகளையும் தரைப்பலகைகளையும் சிறிய சகடம் கொண்ட தாழ்வான மஞ்சச்சகடங்களில் ஏற்றி காளைகள் இழுத்துக்கொண்டு வந்தன. அவற்றின் லாடங்கள் மரத்தரையில் உரசி ஒலியெழுப்பின.

பீதர்நாட்டு வெண்ணிறக் களிமண் ஓடுகள் மாளிகைகளின் முகமுற்றங்களில் குவிக்கப்பட்டிருந்தன. மாளிகையின் மேல் அமர்ந்திருந்த பணியாட்கள் கீழிருந்து வீசப்பட்ட ஓடுகளைப் பற்றி தங்களுக்கு மேலே நின்றவர்களை நோக்கி வீசினர். தவளைபோல் எழுந்து எழுந்து குதித்து மேலே சென்றுகொண்டிருந்தன ஓடுகள். கயிறுகளில் இழுக்கப்பட்ட உத்தரங்கள் நாகங்கள்போல கட்டடங்களில் ஊர்ந்து ஏறின. கீழே சகடங்களில் இணைக்கப்பட்டு தூக்கப்பட்ட சிறு தூக்கிகளினூடாக சுண்ணக்குழம்பும் வெண்களிமண்ணும் மேலே சென்றன. வெண்களிமண்ணுடன் சுண்ணம் இடித்துச்சேர்க்கப்பட்டு அதில் கரும்புக்குழம்பு குழைக்கப்பட்டிருந்தது. சுண்ணமும் இனிப்பும் கலந்த மணம் நாவூறச் செய்தது.

பீதர்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பளிங்குப் பாளங்கள் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பளிங்குப் பாளத்திற்கு மேலும் கீழும் மரவுரி மெத்தைகள் வைக்கப்பட்டிருந்தன. வண்ணமூட்டப்பட்ட அப்பளிங்குப் பாளங்கள் சாளரங்களில் பொருத்தப்படுகையில் வெளியிலிருந்து வரும் ஒளியை வண்ணச்சிதறல்களாக ஆக்கின. சிலவற்றில் வாய்திறந்து அனல் உமிழ, நாபறக்க, வால் வளைந்து சுருண்டெழுந்த சிம்ம நாகம் துறுவிழிகளுடன் உடல்நெளித்து செறிந்து நிறைந்திருந்தது. பீதர்நாட்டு தெய்வங்கள் உடலெங்கும் சுருண்டு நிறைந்த பட்டாடைகளுடனும், உருவிய வாட்களுடனும், விழித்த கண்களுடனும், திறந்த வாயில் கோரைப்பற்களுடனும் பதிக்கப்பட்டிருந்தன.

அந்தப் பளிங்குப் பாளங்கள் அஸ்தினபுரியில் பேரார்வத்தை உருவாக்கின. அவற்றை அதற்குமுன் எவரும் பார்த்திருக்கவில்லை. அவை தடிமனானவை, கல்லென எடை கொண்டவை. அவற்றை மரவுரி மெத்தைகளில் ஒன்றுக்கு மேலாக ஒன்றை அடுக்கி இறுக்கிக்கட்டி கப்பல்களில் கொண்டு வந்தனர். கங்கை முகப்பிலிருந்து அதிர்வுதாங்கும் அடிவில் வைத்த வண்டிகளில் அவற்றை ஏற்றி மிக மெல்ல நீரில் படகென கொண்டுவர வேண்டியிருந்தது. அரண்மனைச் சாளரங்கள் அனைத்திலும் அந்தப் பளிங்குப் பாளங்களை பொருத்த வேண்டும் என்று யுதிஷ்டிரன் ஆணையிட்டார். ஆகவே அரண்மனையைச் சூழ்ந்து அவை இறக்கப்பட்டன. அவற்றை நோக்கி நோக்கி அவர் மேலும் பித்தானார். நகரின் மைய மாளிகைகள் அனைத்திலும் பளிங்குச் சாளரம் அமையட்டும் என்றார்.

அவருடைய அவையில் முதலில் அப்பளிங்குப் பாளத்தின் துண்டு காட்டப்பட்ட போது “என்ன அது பளிங்கா?” என்றபடி எழுந்து வந்து தொட்டுப் பார்த்து “பளிங்கு மேலும் இறுகி கல்லாகிவிட்டிருக்கிறது. ஆனால் முற்றிலும் ஒளி ஊடுருவுகிறது. இல்லையென்றே ஆகிவிடுகிறது... முற்றிலும் தெளிந்த கல்... இதை என்ன சொல்கிறார்கள்?” என்றார். பீதர்நாட்டு வணிகன் “நாங்கள் இதை கல்விழி என்கிறோம். கல்லின் விழி” என்றான். அவர் “நீரை கல்லாக்கியிருக்கிறார்களா? முன்பு இமையமலையில் நீர் உறைந்த பனிக்கட்டியில் இதைப்போல கண்டேன்” என்றார்.

“இது ஒருவகை ஆடி. இதன் ஒருபுறத்தில் வெள்ளி பூசுகிறார்கள். மறுபுறம் தெளிவான பாவை எழுகிறது. இதில் செய்யப்பட்ட ஆடிகள் சுவரில் பதிக்கப்பட்டால் அங்கு ஆடி இருப்பதையே நம்மால் அறிய முடியாது. அதை ஒரு வாயில் என்றே எண்ணுவோம். அதில் நாம் நம் தோற்றத்துடன் முழுமையாக எழும்போது நம் உடல் இரண்டெனப் பிளந்துவிட்டதுபோல் துணுக்குறுவோம். நீர்ப்பரப்பென்றும் வான்கீற்றென்றும் விழி மாயம் காட்டும் இது” என்று பீதன் சொன்னான்.

“எதைக் கொண்டு இதை செய்கிறார்கள்?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “இதன் செய்முறையை செய்பவர்கள் வெளிப்படுத்துவதில்லை. உள்நாடுகளில் செய்யப்பட்டு கப்பல் நகரங்களுக்கு வருகின்றன இவை. அங்கே கப்பல்களில் ஏற்றப்படுகின்றன. இது எவ்வாறு செய்யப்படுகிறது என்பது மாலுமிகளுக்கே தெரிவதில்லை. அவர்கள்கூட உள்நிலங்களில் இந்தப் பாறை வெட்டி எடுக்கப்படுகிறதென்றே சொல்கிறார்கள்” என்றான் பீதர்நாட்டு வணிகன். “இதன் செய்முறை என்ன

என்பதை பித்தெழுந்துவிட்டிருந்த ஒரு கைவினைஞன் சொல்லி நான் கேள்விப்பட்டேன். அது மெய்யா என்று என்னால் சொல்ல இயலாது. இதை அவர்கள் மிகு வெப்பத்தில் மணலை உருக்கி, அதை ஒளிரும் பாகென ஆக்கி, ஊற்றி உருவாக்குகிறார்கள்.”

யுதிஷ்டிரன் திடுக்கிட்டு ஒருகணம் அவனைப் பார்த்த பின் “அது மெய்யாகத்தான் இருக்கவேண்டும். அது இயல்வதுதான்” என்றார். “என் கையில் சில தருணங்களில் மணற்பருக்களை எடுத்துப் பார்க்கும்போது அவை நீர்த்துளிகள்போல் இருப்பதை கண்டிருக்கிறேன். உருவற்ற வெண்படிகங்கள். அவற்றை உருக்க முடியுமெனில் இந்த நீராடிகளை செய்துவிடமுடியும்” என்றார். அவர் மீண்டும் அதை பார்த்து “கல்தான். ஐயமே இல்லை கல்லை உருக்கியிருக்கிறார்கள்” என்றார். பின் புன்னகைத்து “எதையும் உருக்க முடியும் என்பது எங்கள் நூல்களிலும் உள்ளது. எதுவும் உருகுவதற்கு ஒரு வெப்பநிலை உள்ளது. அதை எவ்வண்ணமோ அடைந்திருக்கிறார்கள்” என்றார்.

“அங்கே மண்ணுக்கு அடியில் மிகு வெப்பம் கொண்ட உறையடுப்புகளை அமைப்பதில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அவற்றை அமைக்கும் தனிக் குலங்களே அங்குள்ளன” என்று வணிகன் சொன்னான். “அவ்வுலைகளில் எரிப்பதற்கு கல்லாலான கரிகளை கண்டடைந்திருக்கிறார்கள். அவையும் மண்ணிலிருந்தே தோண்டி எடுக்கப்படுகின்றன. கைக்கும் கண்ணுக்கும் அவை கல் என்றே தோன்றும், ஆனால் அவை நின்று கனன்று எரியும். ஒன்றை எரித்தால் போதும், பிற அனைத்தையும் அதுவே எரிக்கும். மரக்கரியை விட பத்து மடங்கு வெப்பத்தை எழுப்பும் என்கிறார்கள். அவற்றைக்

கொண்டு மணலை உருக்கி இந்த ஆடிகள் உருவாக்கப்படுகின்றன.”

யுதிஷ்டிரன் “நீர்ப்பளிங்கு…” என்று மீண்டும் அதை பார்த்தார். “இவை உருகும்போது பொன் என வழியும் என்கிறார்கள்” என்றான் வணிகன். “பொன்னாலான விழி… காஞ்சனாக்ஷம்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “இவை வரட்டும், இந்நகர் முழுக்க அனைத்துச் சாளரங்களிலும் இவை பதிக்கப்படட்டும்” என்றார். “இங்கு பெரும்பாலான இல்லங்களில் சாளரங்கள் சிறியவை. முற்காலங்களில் சாளரங்களை பெரியதாக அமைக்கும் வழக்கம் இல்லை. குறைவான ஒளியையே நமது முன்னோர் அறைகளுக்குள் விழைந்திருக்கிறார்கள். அவர்கள் நெடுங்காலத்திற்கு முன் எப்போதோ சிறு குடில்களிலும் அதற்கு முன் குகைகளிலும் வாழ்ந்த நினைவு கொண்டிருந்திருக்கிறார்கள். குறைந்த ஒளி தண்மையை அளிக்கிறது என்று அவர்களுக்கு தோன்றியிருக்கிறது.”

“சாளரங்களை விரியத் திறந்தால் உள்ளே காற்று பீறிட்டு அனைத்தையும் நிலைகுலையச்செய்வதும் அவர்களுக்கு இடராக இருந்திருக்கிறது. சுடர் எரியவேண்டுமென்றால் கதவுகள் மூடப்பட்டிருக்கவேண்டும். இந்த அரண்மனையிலேயே சாளரங்கள் எத்தனை சிறியவை என்று அவ்வப்போது நான் எண்ணிக்கொள்வதுண்டு. அனைத்துச் சாளரங்களும் இந்த நீராடியால் கதவிடப்படட்டும். அஸ்தினபுரியின் அனைத்து இல்லங்களுக்குள்ளும் கதிரொளி நிறையட்டும்” என்றார். “இது மிகவும் செலவேறிய பொருள். அரண்மனைக்கு மட்டும் எனில் நன்று” என்று வணிகன் சொன்னான்.

யுதிஷ்டிரன் நகைத்து “அஸ்தினபுரி இப்போது செலவைப்பற்றி எண்ணவேண்டியதில்லை. பாரதவர்ஷத்திலிருந்து நான்கு நதிகள்போல அஸ்தினபுரிக்குள் பொன் வந்து பெய்து நிறைந்துகொண்டிருக்கிறது. நீங்கள் அஞ்சவேண்டியதில்லை, கோருவதைப் பெறுவீர்” என்றார். பீதர்நாட்டு வணிகன் தலைவணங்கி “அவ்வண்ணமே” என்றான். “இவற்றை காஞ்சனாக்ஷம் என்றே அழைக்கிறேன். என் நகர் விழிகள் பெறுக” என்றார். அவையில் இருந்தவர்கள் அச்சொல்லை நாவுக்குள் கூறிக்கொள்ளத் தொடங்கினர். அது அப்போதே உருமாறத் தொடங்கியது. காசகம், காஞ்சம், கானாசம் என்று அன்று மாலைக்குள் அஸ்தினபுரி பேசத் தொடங்கியது.

ஆடிகள் நகருக்குள் வந்து அடுக்கப்பட்டபோது அவற்றைப் பார்ப்பதற்காகவே பெருங்கூட்டம் கூடியது. முற்றிலும் ஒளி ஊடுருவும் பெரிய பளிங்குப் பலகையை நால்வர் சேர்ந்து தூக்கியபோது தொலைவில் நின்றவர்கள் அவர்கள் எதை தூக்குகிறார்கள் என்பது தெரியாமல் “என்ன நடிக்கிறார்கள்?” என்று திகைத்தார்கள். “அந்தப் பலகையை மானுடர் விழிகளால் பார்க்க இயலாது. காற்றும் தீயும் மட்டுமே அதை அறியும்” என்றார்கள். “அவர்கள் அதை மெய்யாகவே பிடித்திருக்கிறார்களா, அல்லது நம் விழிகளுக்காக அதை நடிக்கிறார்களா?” என்றார் ஒருவர். “நடிக்கிறார்கள் என்றால் அவர்கள் பெருங்கூத்தர்கள்” என்றார் ஒரு முதியவர். “அது எடைமிக்கது. அவர்களின் தோள்தசைகளை நோக்குக!” என்று இன்னொருவர் கூறினார்.

அவர்கள் அதை சற்றே சரித்து வைத்த போது அதில் வானம் தோன்றி மறைந்தது. மீண்டுமொரு அசைவில் அருகிருந்த மாளிகை நெளிந்தமைந்தது. “நீர்க்குமிழியின் மென்பரப்புபோல”

என்று ஒருவன் கூறினான். “அதில் நான் வானத்தை கண்டேன்! மாளிகை ஒன்று உருகி வளைந்து ஆடி மறைந்தது” என்று இன்னொருவன் கூவினான். அவை அஸ்தினபுரியின் மாளிகைகளின் சாளரக்கதவுகளில் பொருத்தப்பட்டபோது சேடியரும் ஏவலரும் அப்பால் நின்று உளக்கிளர்ச்சியுடன் வேடிக்கை பார்த்தனர். எவரும் அருகில் இல்லை என்ற எண்ணம் வந்த பின்னர் மெல்ல அணுகி தொட்டுப் பார்த்தார்கள். அவர்களின் கையே அதனுள் இருந்து உருவாகி வந்து அவர்களின் கையை தொட்டு நோக்கியதைக் கண்டு அஞ்சி கூச்சலிட்டு விலகினார்கள்.

பகலில் இல்லையென்று தன்னைக் காட்டுவது இரவில் வெளியே இருள் சூழும்போது ஆடியென்று மாறி உருக்காட்டுவதை அவர்கள் கண்டனர். கைவிளக்குடன் வந்த சேடியர் அதில் தங்கள் உருவங்களை நோக்கி நோக்கி மகிழ்ந்தனர். “நன்று. இவ்வுலகில் நம்மை இவ்வண்ணம் பெருக்கிக்கொள்ள முடியும் என்பதே இனிது” என்று ஒரு சேடி சொன்னாள். “இங்கு இருக்கும் அத்தனை சாளர ஆடிகளிலும் நான் என்னை பார்த்துவிட்டேன்” என்று இன்னொருத்தி சொன்னாள். “நீ விலகியதும் அவை உன்னை உமிழ்ந்துவிடுகின்றன. நீ எதிலும் இல்லை” என்று முதிய சேடி சொன்னாள். “யார் சொன்னது? நீ துயின்ற பிறகு இவ்வாடிகளிலிருந்து உன் உரு எழுந்து கைவிளக்குடன் அரண்மனை தெருக்களில் உலாவுகிறது” என்றாள் இன்னொருத்தி. இளஞ்சேடி அஞ்சி “மெய்யாகவா?” என்றாள். அவர்கள் உரக்க நகைத்தனர்.

இன்னொரு முதிய சேடி “இச்சாளரங்கள் அனைத்தும் கண்கள். காஞ்சனன் என்னும் அரக்கனின் விழிகள் இவை” என்றாள்.

அவர்கள் அச்சொல்லால் திடுக்கிட்டு அவளை திரும்பிப் பார்த்தனர். “இவை நம்மை நோக்கிக்கொண்டிருக்கின்றன. எங்கோ எவருக்காகவோ இவை நம்மை வேவு பார்க்கின்றன” என்றாள். ஒருத்தி ஊக்கம் கொண்டு “ஆம், இங்கிருந்து இவை நம்மை பீதர்களுக்கு காட்டுகின்றன. தங்கள் கண்களை பெரிதாக்கி இப்பொருளாக்கி அவர்கள் இங்கு அனுப்பியிருக்கிறார்கள்” என்றாள். அவர்கள் ஆடிகளை அச்சத்துடன் நோக்கினர். அவை அவர்களை உற்றுநோக்கி அமர்ந்திருந்தன.

அதன் பின் அந்த சாளர ஆடிகளிடமிருந்து அவர்கள் அனைவரும் மறைந்துகொள்ள முயன்றனர். அதை கடந்து செல்லும்போது ஓரக்கண்ணால் பார்த்தபடி பதுங்கி பாய்ந்தனர். ஆனால் இளைய சேடியர் சிலர் எவரும் அறியாதபோது அதன் முன் நின்று ஆடை திருத்திக்கொண்டனர். கூந்தலை பின்னி முடைந்து மேலாடையை வெவ்வேறு விதமாக அணிந்தும் மகிழ்ந்தனர். “அவன் பெயர் காஞ்சனன்” என்றாள் ஒருத்தி. “அவன் என்னை பார்க்கிறான்” என்று புன்னகைத்தாள். “இல்லை, உன்னை பார்ப்பவர்கள் பீதர்கள்” என்று இன்னொரு சேடி சொல்ல இளம்சேடி நகைத்து “எங்கேனும் எவரேனும் நம்மை பார்ப்பது நன்று. இவ்வண்ணமேனும் நம்மை பார்க்கும் பெரிய விழிகள் இங்கு அமைந்தது ஒரு கொடையென்றே தோன்றுகிறது” என்றாள்.

நகரின் பல மாளிகைகளில் சாளர ஆடிகள் இருளில் நீர்ப்பரப்பென மின்னிக்கொண்டிருந்தன. அவற்றில் சாலையில் ஒழுகிய அசைவுகள் நெளிந்துகொண்டிருந்தன. யுயுத்ஸு அவற்றை திரும்பி நோக்கிக்கொண்டே சென்றான். அவன் முகம் அவற்றில் தோன்றித் தோன்றி மறைந்தது. அஸ்தினபுரி

விழிபெருகி அமைந்திருந்தது. பலவகையான விழிகள். நாகங்கள்போல, குழிமுயல்கள்போல, வண்டுகள்போல, ஈக்கள்போல, புழுக்கள்போல. உருண்டவை, ஒளிர்பவை, கூர்பவை, அறிபவை. அவ்விழிகளுக்கு நடுவே அவன் நகரினூடாகச் சென்றான். ஒவ்வொன்றும் அவனிடம் பேசிக்கொண்டிருந்தன. அவன் அச்சொற்களை கேட்டுக்கொண்டே சென்றான். நன்கறிந்த சொற்கள். அவன் உள்ளம் விழைந்த சொற்கள். என்றும் அங்கு திகழும் சொற்கள். ஆனால் அவை மூதாதையரின் சொற்களாக ஒலிக்கவில்லை. எழவிருக்கும் மைந்தர்களின் சொற்களாகக் கேட்டன.

# களிற்றியானை நிரை - 32

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 4



யுயுத்ஸு காட்டினூடாக கங்கை நோக்கி செல்லும்போது எதிரே வந்துகொண்டிருந்த அயல்நிலத்து மாந்தரை கூர்ந்து நோக்கிக்கொண்டே சென்றான். அவர்கள் அனைவரிடமும் முதன்மையான வேறுபாடு ஒன்று இருந்தது. அவன் நகரில் சந்தித்த மானுடரிலிருந்து அவர்கள் உடலசைவால் வேறுபட்டார்கள். அது என்ன என்ன என்று நோக்கி நோக்கி அவன் கண்டடைந்தான். அஸ்தினபுரியின் அசைவுகள் எல்லாமே ஒன்றுடன் ஒன்று கோக்கப்பட்டவையாக, ஒற்றைத் திரளின் அலைவுகளாக அமைந்திருந்தன. ஒவ்வொருவரின் நிகழசைவும் முந்தைய அசைவுகள் அனைத்துக்கும் தொடர்ச்சியாக இருந்தது. ஒவ்வொரு அசைவுக்குப் பின்னாலும்

அவர்களின் தன்னுணர்வு இருந்தது. அத்தன்னுணர்வு அவற்றுக்கு பொருள் அளித்தது.

அஸ்தினபுரியில் மக்களின் தன்னுணர்வை அந்தப் பீதர்நாட்டு ஆடிவிழிகள் கட்டமைத்தன. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களைப்பற்றி தாங்கள் கொண்டிருந்த அகவுணர்வை அவை மாற்றி அமைத்தன. மிக விரைவிலேயே ஒவ்வொருவரும் தங்களை நாளில் ஒருமுறையேனும் அந்த ஆடிகளில் பார்க்கத் தொடங்கினர். சாளரங்களின் கண்ணாடிகளுக்கு முன்னால் அவ்வண்ணம் மக்கள் தங்களை பார்த்துக்கொள்வதை யுயுத்ஸு நகருலா செல்லும்போதெல்லாம் கண்டான். அதை அவன் யுதிஷ்டிரனிடம் சொன்னான். “மக்கள் ஆடிகளின் முன் நின்று பொழுதுபோக்குகிறார்கள். ஆடிநோக்கி மெய்மறந்து உணவுநீத்து உயிர்விடும் சிறுகுருவிகளைப்போல் ஆகிவிட்டிருக்கிறார்கள்.”

“அது நன்று” என்று யுதிஷ்டிரன் நகைத்தார். “அவர்கள் உயிர்விடமாட்டார்கள். ஆடிகள் தங்கள் மாற்றுரு மட்டுமே என அறியும் தன்னுணர்வு அவர்களுக்கு உண்டு. அவர்கள் இனி துணையில்லாதவர்கள் அல்ல. அவர்கள் தங்களைத் தாங்கள் அறியாதவர்களும் அல்ல. அஸ்தினபுரியினர் அனைவருமே ஆடிகளை நோக்கட்டும்.” வெள்ளி பூசப்பட்ட பெரிய ஆடிகளை நகரின் ஆலயங்களின் சுற்றுவட்டங்களிலும் அங்காடிகளின் அருகிலும் தெருச்சந்திப்புகளிலும் நிறுவும்படி அவர் ஆணையிட்டார். அவற்றின் முன் மக்கள் கூடி தங்களை பார்த்துக்கொண்டனர். அதன்முன் பார்ப்பதற்கென்றே நல்லாடை அணிந்து அணிபூண்டு கிளம்பி வந்தனர். பின்னர் அவ்வழி செல்லும்போதெல்லாம் இயல்பாகப் பார்த்தனர். பின்னர் பார்ப்பதறியாமலேயே பார்க்கலாயினர்.

ஆண்கள் ஒவ்வொரு முறையும் அதை அணுகுகையில் தங்களைப் பார்த்து மீசையை முறுக்கி தலைப்பாகையை சரி செய்துகொண்டனர். எவரேனும் பார்க்கிறார்களா என்று சூழ நோக்கியபின் மீண்டும் நோக்கி பிரியாவிடை என அதை விட்டு அகன்றனர். பெண்டிர் பிறிதொரு பெண் வந்து அவளை உந்தி அகற்றுவது வரை ஆடி முன் கட்டுண்டிருந்தனர். தங்களைத் தாங்கள் முழுக்கவே பார்க்கவில்லை என்றே அவர்கள் அனைவரும் ஒவ்வொரு முறையும் உணர்ந்தனர். எவரும் இலாது சற்று பொழுது அவ்வாடிகள் ஓய்ந்திருக்குமெனில் புறாக்களும் காகங்களும் வந்து தங்களை பார்த்தன. எதிரியென எண்ணி பறந்து பறந்து கொத்தின. காதல் இணையென எண்ணி கொஞ்சி மொழிபேசி கொக்குரசிக்கொண்டன. புரவிகள் அவற்றில் தங்களைப் பார்த்து கனைத்து பிடரி சிலிர்த்தன. ஒருமுறை அரசநாகம் ஒன்று அதன்முன் படமெழுந்து நின்றாடுவதை அவன் கண்டான்.

அஸ்தினபுரியின் அனைத்து உடலசைவுகளையும் ஆடிகள் மாற்றிவிட்டதை யுயுத்ஸு கண்டான். தங்கள் நடை குறித்தும், உடை குறித்தும், உடல் அசைவுகள் குறித்தும் ஒவ்வொருவரும் தன்னுணர்வு கொண்டனர். உள்ளத்தில் அமைந்த பேராடி ஒன்றில் தங்களை ஒவ்வொரு கணமும் பார்த்தபடி புழங்கினர். தன்னிடம் பேசிய ஏவலரின் அசைவுகளில் அதை அவனே கண்டான். எப்போதும் அவர்கள் தங்களுள் தாங்களே உணர்ந்திருக்கும் ஒரு கட்டுப்பாடு உருவாவதை உணர்ந்தான். நாள்பட அது சற்று நடிப்பென ஆகிவிட்டதை அறிந்தான். தேர்ந்த உடலசைவுகள் இனியவை என முதலில் தோன்றின. ஒன்றோடொன்று இசைபவை என்று பின்னர் மாறின. மெல்ல அவை நோக்கிலிருந்தே மறைந்தன. அவ்வசைவொழுக்கின் பிழைகளும் பிசிறுகளும் மட்டுமே கண்ணுக்குப் பட்டன.

அனைத்து அசைவுகளும் மாபெரும் கூட்டு நடிப்பென்றாகி ஒரு திறந்த கூத்து மேடையென நகரம் மாறிவிட்டது என்று அவனுக்குத் தோன்றியது. மீறி எழும் அசைவுகள் இல்லை என்றாகியது. கட்டற்ற துள்ளல்கள் இல்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே தங்களை நடித்துக் காட்டிக்கொண்டார்கள். இளஞ்சிறார்கள் ஆடிகளிலிருந்து அனைத்தையும் கற்றுக்கொண்டார்கள். யுதிஷ்டிரன் நகைத்து "ஆடிகளென முன்பு அமைந்தவை சூதர்பாடல்கள். இனி சொல் இல்லை, காட்சிகள் மட்டுமே" என்றார். "ஆடிகளுக்குள் புகுந்து மீள்பவை அழிவதில்லை. அவை நோக்குபவரை உள்ளே உறிஞ்சி தாங்கள் வெளிவந்து இங்கே தங்களை நிறுவிக்கொள்கின்றன."

அவன் அகம் திடுக்கிட்டது. அந்த விந்தையான சொல்லாட்சி ஒரு கனவல்ல என அவனே நேரில் கண்டான். ஒருமுறை ஆடி ஒன்றின் வழியாக செல்லும்போது மக்கள் அனைவரும் அவ்வாடிகளினூடாக நுழைந்து மறுபக்கம் சென்று அங்கே அமர்ந்து வெளியே புழங்கும் தங்கள் பாவைகளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தோன்றியது. அவன் கைகள் பதறத்தொடங்கின. ஆடி ஆழம் மிக்கது, அகலும்தோறும் சிறிதாக்கி ஒவ்வொருவரையும் இழுத்துப் புதைத்துக்கொள்வது. இந்நகரிலிருந்து ஒவ்வொருவரும் அகன்று அகன்று ஆடிக்குள் புதைந்து மிகத் தொலைவிலெங்கோ நுண்துளிகளாக ஆகிவிட்டிருக்கிறார்கள். ஆடிக்குள் வானம் அமைந்திருக்கிறது. அது ஓர் அடியிலா துளை, முடிவிலா பாதை. அவன் ஆடியை நோக்குந்தோறும் அச்சம் கொண்டான். ஆடிகளை ஒழிந்தே நடந்தான். ஆனால் அவனை பல்லாயிரம் ஆடிகள் சூழ்ந்து நோக்கிக்கொண்டிருந்தன.

அஸ்தினபுரியின் தெருக்களில் ஆடிப்பாவைகள் கொப்பளித்துக்கொண்டிருந்தன. ஆடியில் பாவை விழும்போது இருக்கும் ஓசையின்மை ஒரு துணுக்குறலை ஒவ்வொருமுறையும் உருவாக்குகிறது. ஆடிப்பாவையின் அமைதி ஆடி போலவே குளிர்ந்து உறைந்தது. ஆகவே ஆடிநோக்குகையில் அப்பாவையை நோக்கி கூச்சலிடுவதை ஒவ்வொருவரும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அது அவர்கள் செய்வது அனைத்தையும் திருப்பிச் செய்தது. அவர்களின் ஓசைகளை மட்டும் தான் வாங்கி எங்கோ வைத்துக்கொண்டது.

“ஆடிப்பாவை நாகம்போல் அத்தனை அமைதியானது, அத்தனை சொல்லற்றது” என்று சூதன் ஒருவன் சொன்னான். “ஆடிப்பாவைகளை இங்கிருந்து பீதர்கள் கொண்டு செல்கிறார்கள். அங்கு இவ்வாறு உலகெங்கிலுமிருந்து கொண்டுவரப்பட்ட ஆடிப்பாவைகளை அவர்கள் தங்களுக்கு அடிமைகளாக்கி வைத்திருக்கிறார்கள். அவை அவர்களுக்கு பேய்களென பூதங்களென பணிவிடை செய்கின்றன. அவை ஆற்றும் செயலுக்கு நம் உள்ளத்தையும் உடல்விசைகளையும் எடுத்துக்கொள்கின்றன. ஆகவேதான் நாம் கனவில் களைப்படைகிறோம். எப்போதும் செயலாற்றுபவர்களாக நம்மை உணர்கிறோம்.”

“அந்த ஆடிப்பூதங்கள் பறக்கவும் நெளியவும் உருமாறவும் அறிந்தவை. மானுடருக்கு நிகரானவை, எனில் மானுடரை விட ஆற்றல் கொண்டவை” என்றான் சூதன். “பீதர்நாட்டில் இவ்வாறு உலகம் எங்கணுமிருந்து கொண்டுசென்று சேர்க்கப்பட்ட ஆடிப்பாவைகளினாலான ஒரு பெருநகரம் இருப்பதை ஒரு பீதன் சொன்னான். நீரலைகள்போல் ஒளி நெளியும் நகர் அது.

அங்கு ஒரு நெல் மணி கீழே விழுந்தால் ஓசை கேட்கும் பேரமைதி நிறைந்திருக்கும். இரவுகளில் அந்நகரம் முற்றாகவே கரைந்து இல்லாமலாகும். அங்கு இரவில் செல்பவர்கள் வெற்றிடம் ஒன்றை உணர்கிறார்கள். காற்று சுழன்றமையும் வெளி. காலையில் ஒளி எழுகையில் அங்கே பெருமாளிகைகள் உருவாகி வரும். உலகெங்கிலும் பல்வேறு நகரங்களிலிருந்து பாவைகளாக பீதர்கள் கொண்டுவந்தவை அவை.”

“அவற்றில் இருந்து மானுடர் வெளிவருவார்கள். அனைத்து இனங்களையும் சேர்ந்தவர்கள். கரியவர்கள், மஞ்சள் இனத்தவர்கள், வெண்ணிறத்தோர். அவர்கள் அங்கு ஓசையின்றி புழங்குவார்கள். ஒருவரை ஒருவர் இயல்பாக ஊடுருவுவார்கள். அவர்களின் விழிகள் வெறித்து நோக்கிக்கொண்டிருக்கும். அவர்கள் வேறெங்கோ ஏதோ ஆடியை நோக்கிக்கொள்வது போலிருக்கும். அங்கே எடை இல்லை. ஆகவே யானையை குழந்தை தூக்கிவிட முடியும். கீழிருந்து மிதந்தெழுந்து மாடங்கள்மேல் உலவ முடியும். அங்கு மட்டுமே விரும்பியவர்களுடன் நாம் முழுதாக கரைந்து மறைய முடியும்.”

அஸ்தினபுரி ஒவ்வொரு நாளும் விந்தைகளை கண்டுகொண்டிருந்தது. விந்தைகளை சிறிதாக்கி விந்தைகள் பெருகிக்கொண்டிருந்தன. பீதர்நாட்டிலிருந்து பளிங்குக் குமிழிகளுடன் ஒருவன் வந்தான். ஆடி சமைக்க உருக்கி பலகையாக்கிய அதே மணற்பொருளை துளியென சொட்ட வைத்து உருவாக்கப்பட்டது அது. கை நிறைக்கும் பெரிய நீர்த்துளி போலிருந்தது. கல்லென எடைகொண்டிருந்தது. முதலில் பார்த்தபோது அங்கே நீர் இருப்பதாகவே தோன்றியது. பின்னர் அதில் சாளரங்கள் வளைந்து தெரிவதை கண்டான்.

யுதிஷ்டிரன் அதைப் பார்த்த பின் கையில் வாங்கி “வைரமா?” என்றார்.

“இது துளியாடி” என்று பீதர்நாட்டு வணிகன் சொன்னான். “இவற்றை வெவ்வேறு வகையாக வார்க்கிறார்கள். காட்சிகளை சுருக்கி அருகணையச் செய்யும் ஆற்றல் கொண்டவை இவை. விண்மீன்களை தொடும்தொலைவுக்கு கொண்டுவர முடியும். தொடுவானத்தை வளைத்து சூழவைக்க முடியும். அவ்வாறு ஓர் ஆடிக்கோவையை இங்கே முன்பிருந்த அரசருக்கு நான் விற்றேன். அதை இயக்க ஓர் உதவியாளனையும் நானே அளித்தேன்.” யுதிஷ்டிரன் “ஆம், அவ்வாறு ஒரு தொலைநோக்கியைப் பற்றி சொன்னார்கள். அது சூதர்சொல்லின் மாயம் என்றே எண்ணினேன்” என்றார். “அது மாயம்தான்” என்றான் வணிகன்.

யுதிஷ்டிரன் அதை தன் கையில் வைத்து “ஒரு மாபெரும் விழிமணி” என்றார். “மாபெரும் மீன் ஒன்றின் கண்” என்று மீண்டும் சொன்னார். “பிறகு இந்த அவைக்கூடமும் சாளரங்களும் கூரையும் தூண்களும் இதில் சுருண்டு சுழிக்கிறது” என்றார். “ஆம், அரசே. சூழ்ந்திருக்கும் அனைத்துக் காட்சிகளையும் அள்ளி தன்னுள் சுழித்து துளியென்றாக்கும் வல்லமை இதற்குண்டு” என்றான் வணிகன். யுதிஷ்டிரன் அவன் கொண்டுவந்த எட்டு ஆடிகளையும் வாங்கினார். அஸ்தினபுரியின் ஏழு கொற்றவை ஆலயங்களிலும் இறையுருவின் முன் அதை அமைக்கும்படி சொன்னார்.

“அன்னையின் காலடியில் இந்த விழி அமையட்டும். சூழ்ந்திருக்கும் அனைத்தும் அவள் முன் படைக்கப்படட்டும்” என்றார். ஒன்றை அவர் தனக்கென வைத்துக்கொண்டார். தன் அறையில் சிற்றவையில் தன் முன் சிறு பீடத்தில் அதை

வைத்தார். மாயத்தால் கட்டுண்டவர் என அதை நோக்கிக்கொண்டே இருந்தார். “இத்தனை எளிதாக இவ்வுலகை சுருக்கி துளியாக்க முடியும் என்று எண்ணியதே இல்லை” என்றார். “நோக்க நோக்க பெருகுகிறது. பிறிதொன்றில் உள்ளம் செல்லாதாக்குகிறது” என்று சொல்லிக்கொண்டார். “இது ஒரு கனவு. கனவு இவ்வண்ணம் காட்சிகளைச் சுழற்றி தன்னகத்தே கொண்ட துளி…” என்றார். சொல்லிச் சொல்லி தீராமல் “தெய்வத்தின் ஓர் எண்ணத்துளி” என்றார்.

தன் அறையில் பெரும்பாலான பொழுதுகளில் அதை பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தார். “இது என்னை விந்தையான கனவுகளுக்குள் தள்ளுகிறது. இங்கு பறந்து பறந்து என்னை திகைக்க வைக்கும் அனைத்தையும் சுழற்றி கையிலெடுத்துக்கொள்கிறேன். காலத்தையும் வெளியையும்கூட பட்டுநூலை சிறு கழியிலென சுருட்டிக்கொள்ள முடியுமெனத் தோன்றுகிறது” என்றார். “இது ஊழ்கத்தில் அமைந்திருக்கிறது. விந்தைதான், ஒரு பருப்பொருள் ஊழ்கத்தில் அமையக்கூடும் என்பதை நான் உணர்ந்திருக்கவே இல்லை.” அவர் எழுந்து சாளரம் வழியாக நோக்கினார். அவர் கண்களில் பித்து எழுந்துவிட்டிருந்தது.

“அங்கே எங்காவது ஒரு மலையுச்சியில் இதைக் கொண்டு பொருத்திவிடவேண்டும். அப்படியே அகன்றுவிடவேண்டும். இது மட்டும் அங்கே இருக்கவேண்டும். எவரும் அறியாமல். எவரும் எப்போதும் கண்டடையாமல். இது வானையும் மண்ணையும் தன்னுள் உருக்கி துளியாக்கிக்கொண்டே இருக்கவேண்டும். எவரும் அறியவேண்டியதில்லை. அவ்வண்ணம் ஒன்று அங்கிருந்தால் போதும். இவ்வுலகம் அதை மையம் கொண்டுவிடும். இவ்வுலகின் சிக்கலே இதன்

நிகழ்வுகளுக்கென ஒரு மையம் இல்லை என்பதுதான். ஒரு மையம் அமைந்தால் இது இப்போதுபோல வடிவமில்லா சிதறல்களாக இருக்காது. இது ஒருங்கிணைவு கொள்ளும். நிறைவுற்ற வட்டமென்றாகும். வட்டமே முழுமையுள்ள ஒரே வடிவம். ஏனென்றால் மாறாத மையம் கொண்டது அது மட்டுமே.”

யுயுத்ஸூ கங்கையில் படகிலேறிக்கொண்டு அறைக்குள் சென்று கண்களை மூடிக்கொண்டான். படகு சென்றுகொண்டிருக்கையில் அவன் எண்ணங்கள் மீண்டும் ஒழுகிச்செல்லத் தொடங்கின. அவன் திரௌபதியைப் பற்றி எண்ணிக்கொண்டான். அவளை அவன் முதல்முறையாகக் கண்டது காம்பில்யத்தில் நிகழ்ந்த மணத்தன்னேற்பு நிகழ்வில். துரியோதனனும் கர்ணனும் முதலில் கிளம்பிச் சென்றுவிட்டிருந்தார்கள். அஸ்தினபுரியிலிருந்து கௌரவ இளவரசர்கள் நூற்றுவரும் செல்வதாக அதன் பின்னரே முடிவெடுக்கப்பட்டது. அவனை உடன் வரும்படி துச்சாதனன் ஆணையிட்டான். அவர்களுடன் அவனும் கிளம்பினான்.

செல்லும் வழியெங்கும் அவர்கள் திரௌபதி பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சூதன் ஒருவன் திரௌபதியின் எழிலையும் நிமிர்வையும் கல்வியையும் ஆட்சித்திறனையும் புகழ்ந்து பாடினான். சூதர்கள் இளவரசியரைப் புகழ்ந்து பாடி அலைவதை அவன் கேட்டிருந்தான். ஆனால் அப்பாடல்களில் இருக்கும் வழக்கமான வரிகளேதும் அப்பாடலில் இல்லை. “இரவின் நிறம்கொண்டவளே, உன்னில் மின்னும் முடிவிலாக்கோடி விண்மீன்களெல்லாம் கதிரவன்கள் அல்லவா? நீ அவற்றைச் சூடிய முடிவிலியா என்ன?

அன்னையே, நீ கரந்துள்ள மெய்மைகள் என்ன?” அந்த வரிகள் ஒரு மானுடப் பெண்ணைப் பற்றியவை என்று அவனால் எண்ண முடியவில்லை.

கௌரவர் திரௌபதியை கர்ணன் வென்று கொண்டுவருவார் என நம்பினர். அதன் வழியாக அஸ்தினபுரிக்கும் பாஞ்சாலத்திற்குமான அழியா முடிச்சு உருவாகும் என்றனர். “பிறிதொருவர் அவளை அணுகவே முடியாது. ஐயம் வேண்டியதில்லை. அவள் அங்கருக்கு உரியவள். அங்கே எதிர் எழுவதற்கு எவர்? மகதனா? சைந்தவனா? அவர் அவையிலெழுந்தால் அவர்கள் ஒளியிழந்து அகல்வார்கள். அவர்கள் வில்லெடுத்து அவர் முன் நின்றிருக்காது ஒழிந்தால்கூட வியப்பதற்கில்லை.”

அவன் அதை ஏனோ உள்ளூர ஏற்கவில்லை. எங்கோ அர்ஜுனன் உயிருடன் இருக்கிறான் என அவன் நம்பினான். அதற்கான எந்தச் சான்றும் அவனிடமிருக்கவில்லை. அவனை அவ்வாறு எண்ணச்செய்தது விதுரரின் விழிகள். பாண்டவர்கள் வாரணவதத்தில் எரிந்தழிந்திருந்தால் அவ்விழிகள் அவ்வாறு இருக்காது. அர்ஜுனன் உயிருடன் இருக்கிறான் என்றால் அவனே திரௌபதியை மணப்பான் என்று அவனுக்குத் தோன்றியது. அதற்கும் எந்தச் சான்றும் அவனிடமிருக்கவில்லை. பின்னர் உணர்ந்து அதை கொள்கையென சொல்படுத்திக்கொண்டான். கர்ணனிடம் அனைத்துச் சிறப்புகளுடன் இணைந்து தோல்வி நோக்கிச் செல்லும் சரிவொன்று இருந்தது. அர்ஜுனனிடம் எப்போதுமே வெற்றி நோக்கிய எழுகை இருந்தது.

“ஊழை நேரில் கண்டவனின் விழிகள் பதைப்பு கொண்டுவிடுகின்றன. அதன்பின் அவன் எப்போதுமே

தன்னைப்பற்றிய முழு நம்பிக்கையை அடைவதில்லை. அறியாமையே ஆயினும் ஊழை உணராதவன் தன்னம்பிக்கை கொண்டிருக்கிறான். ஆகவே வெற்றி நோக்கி செல்கிறான்" என்று அவன் ஒருமுறை சொன்னான். விகர்ணன் அதைக் கேட்டு "ஆம், நான் அவ்வாறு எண்ணியதில்லை. ஆனால் உன் சொற்களைக் கேட்கையில் அது அவ்வண்ணமே என்று எண்ணத்தோன்றுகிறது" என்றான்.

காம்பில்யத்தில் திரௌபதி மணத்தன்னேற்பு மண்டபத்திற்குள் நுழைந்தபோது அவன் பதற்றம் கொண்டிருந்தான். அவன் அதற்கு முன்னரே அர்ஜுனனை கண்டுவிட்டிருந்தான். அவனுடைய நம்பிக்கையும் விழைவுமே அந்தத் திரளில் அவனை அடையாளம் காட்டியது. ஆனால் தன் நோக்கு மெய்யா என்று அவன் குழம்பினான். அதை கௌரவர்களிடம் சொல்லலாகுமா என்று தயங்கினான். அப்போது எழுந்த வாழ்த்தொலி வெடிப்பைக் கேட்டுத் திரும்பி அங்குமிங்கும் நோக்கி திகைத்த விழி மேடையேறி நின்ற திரௌபதியை கண்டுகொண்டது. அவன் அறியாமல் கைகூப்பிவிட்டான்.

அதன்பின் ஆலயம் அமர்ந்த தேவி என்றே அவன் அவளை எப்போதும் உணர்ந்தான். தனியாக அவளிடம் அவன் பேச வாய்க்கவில்லை. கௌரவர் திரளுடன் நின்றிருக்கையில் அவளைக் கண்டதுமே அவன் கைகள் நெஞ்சோடு சேர்ந்தன. அவன் அவள் அடிகளை மட்டும் நோக்கி அகம்பணிந்து நின்றிருந்தான். அவள் அவைச்சிறுமை செய்யப்பட்டபோது அவன் அவையின் மூலையில் சுஜாதனின் அருகே தூணுக்குப் பின்னால் பாதி உடல் மறைத்து நின்றிருந்தான். துச்சாதனனால் அவள் இழுத்துவரப்பட்டபோது எழுந்த அவையோசையை மட்டுமே கேட்டான். விழிகளை மூடிக்கொண்டு அன்னையே

அன்னையே என்று சொல்லிக்கொண்டிருந்தான். அவை முடிவுவரை அவன் அவ்வாறு அகத்தே அரற்றிக்கொண்டு நின்றான்.

அன்று பின்னிரவில்தான் அவன் தன் மாளிகைக்குத் திரும்பினான். அவன் அன்னை அவைக்கு வந்திருக்கவில்லை. அந்த அவையில் அரசகுடிப்பெண்டிருக்கு மட்டுமே இடம். ஆனால் அன்னை அனைத்தையும் அறிந்துவிட்டிருந்தாள். அவன் உள்ளே நுழைந்ததும் அவள் சீற்றத்துடன் எழுந்து வந்து "நிகழ்ந்தது என்ன? அவையில் என்ன நிகழ்ந்தது?" என்று கூவினாள். அவன் அவள் சீற்றத்திலிருந்தே அன்னைக்கு எல்லாம் தெரியும் என்று உணர்ந்து ஒன்றும் சொல்லாமல் நின்றான். "நீயும் பழிகாரனே. அந்த அவையில் நின்ற ஆண்கள் அனைவரும் பழிகொண்டவர்களே. ஒவ்வொருவரும் அதன்பொருட்டு குருதி சிந்துவார்கள். குலம் அழிவார்கள்... இதை தெய்வங்கள் பொறுக்கப்போவதில்லை. விண்ணெரி விழுந்து இந்நகர் அழியும். அதன்பொருட்டே இவ்வண்ணம் இயற்றின தெய்வங்கள்!" என்றாள்.

"நான் விழிதூக்கவில்லை. தெய்வங்களை இறைஞ்சும் சொல்லன்றி ஒன்றும் எண்ணவில்லை" என்று அவன் சொன்னான். "நீ நூல்கற்றவன் அல்லவா? அவையெழுந்து ஒரு சொல் உரைக்க உன்னால் இயலவில்லை என்றால் நீ கற்ற சொற்களுக்கு என்ன பொருள்?" என்று அன்னை கேட்டாள். "குலமூத்தாரும் நூல்தெளிந்தவரும் அங்கிருந்தனர்" என்று அவன் சொன்னான். "அவர்கள் தங்கள் சொற்களால் தங்களை கட்டிக்கொண்டவர்கள். நீ யார்? குலமிலி. குடியிலி. நீ எதை அஞ்சவேண்டும்? உயிருக்காகவா? அதை இழந்தால்தான் என்ன?" என்று அன்னை கேட்டாள்.

யுயுத்ஸு “நான் அறியேன். என்னால் விழிநீர் சிந்துவதன்றி ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் நான் கோழை. கோழையின் அறிவும் நல்லியல்பும் பொருளற்றவை என்கின்றன நூல்கள்” என்றான். கால்தளர்ந்து சென்று அமர்ந்தான். அன்னை அவனருகே வந்து நின்று “சொல், நீ ஏன் சொல்லெடுக்கவில்லை? சொல், ஏன் அந்த அவையில் சங்கறுத்துச் செத்துவிழவில்லை?” என்றாள். “அறியேன், அவை முடிந்தபின் நீங்கள் சொன்ன அனைத்தையும் ஆயிரம் முறை உள்ளத்துள் இயற்றினேன். அந்த அவையில் செத்த உடலென நின்றுகொண்டிருந்தேன். ஏன் என்று அறியேன்” என்றான்.

“நீ விழைவு கொண்டவன். இந்த நூற்றுவரை ஒட்டிப்பிழைக்கும் நசைகொண்டவன்” என்று அன்னை கூவினாள். அவன் சீற்றத்துடன் நிமிர்ந்து “இல்லை, நான் கோழை. ஏன் கோழை என்றால் நான் குலமில்லாதவன் என்பதனால். அந்த அவையில் சூதனுக்குரிய ஆடையணிந்து இசைக்கலத்துடன் நின்றிருந்தேன் என்றால்கூட துணிந்திருப்பேன். இதோ இந்தப் பொய்யாடை அணிந்திருந்தேன். பொருந்தாத் தோற்றம் கொண்டவன் அவைபுக நாணுவான். அதனால்தான் தயங்கினேன்” என்றான். அன்னை நீர் நிறைந்த விழிகளால் அவனை நோக்கிக்கொண்டு நின்றாள்.

அவன் விசும்பியபடி தன் முகத்தை கைகளால் மூடிக்கொண்டான். “இதன் பொருட்டு நான் பழிகொள்கிறேன். கீழ்மைகொள்கிறேன். என்னால் மூத்தவரை விட்டு அகல முடியாது. அவருடைய கைகளின் வெம்மையில் வளர்ந்தவன் நான்” என்றான். அன்னை அவனையே நோக்கிக்கொண்டு நின்றாள். பின்னர் மெல்லிய காலடிகளுடன் அகன்று சென்றாள். அவன் அங்கேயே சுருண்டு படுத்துக்கொண்டான்.

இரண்டு நாட்கள் அந்த மஞ்சத்திலேயே கிடந்தான். நீர் மட்டும் அருந்தியபடி எண்ணங்கள் மயங்கி மயங்கி ஓட. விழிநீர் வழிந்து உலர்ந்து மீண்டும் முகம் நனைய. துரியோதனனுடைய அழைப்புடன் அரண்மனையிலிருந்து சுஜாதன் வந்தபோதுதான் அவன் மீண்டு அரண்மனைக்கு கிளம்பினான்.

அவன் திரௌபதியை அணுக்கமாக சந்தித்தது போர்ச்செய்திகளை சொல்லும்பொருட்டு செல்லும்போது மட்டும்தான். அவன் சென்று கூடத்தில் காத்திருக்கையில் குந்தி முதலில் வருவாள். ஓசையில்லாத நிழலசைவுபோல. சிற்றடிகள் வைத்து வந்து அமர்ந்துகொள்வாள். அவன் எழுந்து கைகூப்பி நிற்பான். சற்றுநேரத்தில் திரௌபதி கூடத்திற்குள் வருவாள். அவ்வறைக்குள் வேறொன்று குடியேறிவிடும். முற்றிலும் புரிந்துகொள்ள முடியாத ஒன்று. ஆற்றல் மிக்கது. மானுடரை மீறியது. அவன் அவள் உருவை நிமிர்ந்து நோக்குவதே இல்லை. அவள் கால்களையே நோக்குவான். நிழலாகவே அவள் அசைவுகளை உணர்வான். அவள் கைகாட்டியதும் அமர்ந்து நிகழ்வுகளை சொல்வான். விடைபெறும்போது மட்டும் எழுந்து அவளை நோக்கி வணங்கி மீள்வான். குந்தி உணர்வுகளால் நடுங்கிக்கொண்டிருப்பாள். திரௌபதியின் விழிகளில் அவன் அதுவரை சொன்னவற்றின் எந்த உணர்ச்சிகளும் இருக்காது. அனைத்துக்கும் அப்பால் என அவள் அமர்ந்திருப்பாள்.

மைந்தரை இழந்தபின் அவளை முக்தவனத்தில் அவன் ஓரிருமுறை அகலே நின்று நோக்கினான். அவள் சித்தமழிந்துவிட்டவள் போலிருந்தாள். மரங்களிடமும் செடிகளுடனும் ஏதோ உரையாடிக்கொள்பவள்போல. அகலே

நின்று நோக்கியபோது அந்தப் பச்சையொளியில் அவள் துயரற்றவள் என்றே தோன்றினாள். இப்புவியிலுள்ள எதுவும் சென்று தொட முடியாதவள்போல. அவன் அவள் அடிகளை அருகிலென பார்த்துக்கொண்டிருந்தான். படகின் ஊசலாட்டத்தில் சித்தம் மயங்கி இருப்புக்கும் இன்மைக்கும் நடுவே எங்கோ அலைபாய்ந்துகொண்டிருந்தது. அவள் அவன் அருகே அங்கே இருப்பதாக உணர்ந்தான்.

# களிற்றியானை நிரை - 33

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 5



இந்திரப்பிரஸ்தத்தின் பெரும்படித்துறையில் நீர் தெரியாமல் படகுகள் செறிந்து நின்றிருப்பதை தொலைவிலேயே யுயுத்ஸு கண்டான். காற்றில் பறந்த மேலாடையை உடலில் சுற்றிக்கொண்டு படகின் வடத்தைப் பிடித்து சற்றே குனிந்து கூர்ந்து நோக்கினான். அவை வணிகப்படகுகள் போலவும் தோன்றவில்லை. சிறிய பயணப்படகுகள், ஓரிரு பாய்கள் மட்டுமே கொண்டவை. அவற்றில் பொருட்களும் பெரிதாக இருக்கவில்லை. படகுத்துறையை நோக்கி சென்றுகொண்டிருந்த படகுகளில் மக்கள் அள்ளித் திணித்ததுபோல் செறிந்திருந்தார்கள். பலர் தலைப்பாகைகளையும் மேலாடைகளையும் சுழற்றி காற்றில் வீசி பிற படகுகளில் இருந்தவர்களை நோக்கி கூச்சலிட்டார்கள். அவர்களின் எடையால் படகுகள் அலைகளில் என ததும்பின.

மேலும் அணுகியபோது பல படகுகளில் வீட்டுப் பொருட்களும் வளர்ப்பு விலங்குகளும் இருப்பதை அவன் கண்டான். அவன்

அருகே வந்த குகன் “இன்னும் ஒரு நாழிகையில் நாம் கரையணைய முடியும். சற்று பொறுத்திருக்கத்தான் வேண்டும்” என்றான். யுயுத்ஸு “வந்திருப்பது அரசப்படகு என்று செய்தி அனுப்பினீரா?” என்றான். குகன் “ஆம், அச்செய்தியை பல முறை அனுப்பிவிட்டேன். அங்கு இருக்கும் துறைத்தலைவரால் எதுவும் செய்ய முடியவில்லை என்று தோன்றுகிறது. இவர்கள் இந்திரப்பிரஸ்தத்திற்கு புதிதாக வருபவர்கள். இங்குள்ள செய்தி முறைகளையும் ஒழுங்குகளையும் பற்றி எந்த அறிதலும் இல்லாதவர்கள். முற்றிலும் புதிய கூட்டத்தினருக்கு ஆணைகளை பிறப்பிக்க இயலாது. வன்முறையை கையிலெடுக்கும் ஆற்றலும் இப்போது படகுத்துறை தலைவரிடம் இருக்காது” என்றான்.

“அணைவது அஸ்தினபுரியின் அரசப்படகு என்ற செய்தியை மீண்டும் மீண்டும் அறிவித்துக்கொண்டே இருங்கள்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆணை” என்று தலைவணங்கி குகன் திரும்பிச் சென்றான். யுயுத்ஸு அத்தனை மக்கள்பெருக்கு இந்திரப்பிரஸ்தத்துக்குள் எப்படி வருகிறது என்று எண்ணியபடி நின்றான். அஸ்தினபுரிக்குள் வந்துசேர்பவர்கள் அளவுக்கு இல்லை என்றாலும் அந்நகருக்கு அத்திரள் விந்தையானதுதான். காவலன் அருகணைந்தபோது “இவர்கள் எப்போதிலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள்?” என்றான். “இளவரசே, போர் முடிந்து அரசி இங்கு வந்த செய்தி பரவத் தொடங்கியது முதல் இவ்வாறு பெருகி வந்து கொண்டிருக்கிறார்கள்” என்றான். “இனிமேல் அரசி இங்கே தனிமுடி சூடி அமரவிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.”

யுயுத்ஸு வெறுமனே தலையசைத்தான். காவலன் “பாரதவர்ஷத்தின் பெரும்பாலான நகரங்களுக்கு இதுபோல

வெளியிலிருந்து மக்கள் உள்ளே வருகிறார்கள். உள்ளிருப்பவர்கள் பெரும்பாலானவர்கள் உயிரிழந்துவிட எஞ்சிய பெண்களும் முதியவர்களும் நகர்நீங்கி உருவான இடத்தை அவர்கள் நிரப்புகிறார்கள். ஆனால் அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் மட்டுமே இத்தனை பெரிய நெரிசல் இருக்கிறது. ஏனெனில் இவ்விரு நகரங்களும் பேருருவம் கொண்டெழவுள்ளன என்று சூதர்கள் பாடுகிறார்கள். இங்கே வளமும் வெற்றியும் திகழும் என்று இவர்கள் எண்ணுகிறார்கள்” என்றான். யுயுத்ஸு மீண்டும் வெறுமனே தலையசைத்தான்.

அங்கிருந்த மக்களை பார்க்கையில் அவர்களில் பெரும்பாலானவர்கள் கலிங்கத்திலிருந்தும் வங்கத்திலிருந்தும் பிரக்ஜ்யோதிஷத்திலிருந்தும் கங்கையினூடாக படகுகளில் வந்து யமுனைக்குள் புகுந்து இந்திரப்பிரஸ்தத்தை அணுகுபவர்கள் என்று தெரிந்தது. அவர்கள் படகுகளுக்கு பழகியவர்கள் அல்ல என்பதும், அந்தப் பயணத்தின் பொருட்டே படகுகளில் ஏறியிருக்கிறார்கள் என்பதும், அவர்கள் படகுகளின் ஆட்டத்தில் நிலைகுலைந்து கயிறுகளை பற்றிக்கொண்டு விழப்போவதை பார்த்தபோது தெரிந்தது. “அவர்கள் கீழைநிலத்தவரா?” என்று அவன் கேட்டான். “ஆம், கீழைநிலம் அன்னையரை முதன்மையாக வழிபடுபவது. அவர்கள் இந்திரப்பிரஸ்தத்தை நாடுவது இங்கே பெண்ணரசு எழவிருக்கிறது என்று எண்ணியே.”

அவன் சென்றபின் யுயுத்ஸு அங்கே நின்று நோக்கிக்கொண்டிருந்தான். கூட்டம் மேலெழுவதுபோலத் தெரியவில்லை. ஆனால் படகுகள் வந்தபடியே இருந்தன. அவை எந்த ஒழுங்கையும் கடைப்பிடிக்கவுமில்லை. அவன்

சென்று அறைக்குள் சற்று நேரம் அமர்ந்தான். பின்னர் எழுந்து வந்து நோக்கினான். எந்த மாறுதலும் தென்படவில்லை. அவன் பொறுமை இழந்து “என்ன நடக்கிறது?” என்றான். “அங்கிருந்து பொறுத்திருக்கும்படி செய்தி அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள்” என்று காவலன் சொன்னான். யுயுத்ஸு படகின் விளிம்பிற்கு நடந்தான். எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் கூட்டம் கூட்டமாக நூற்றுக்கு மேற்பட்ட சிறிய படகுகள் அவனுடைய படகை கடந்து சென்று இந்திரப்பிரஸ்தத்தின் துறையை மொய்த்தன. அவற்றிலிருந்தவர்கள் உளம்கிளர்ந்து கூச்சலிட்டுக்கொண்டே இருந்தனர்.

படகுகளை மீன் கூட்டங்கள் என்றெண்ணி அவன் பழகியிருந்தான். அவை ஈக்கள்போல என்று அப்போது தோன்றியது. பெரும்பாலானவை மீன்பிடிப் படகுகள். அவற்றுக்கு முறையான பாய்மரம் இருக்கவில்லை. மூங்கில்கள் நடப்பட்டிருந்தன. கையால் முடையப்பட்ட மரவுரிப்பாய்கள் காற்றின் திசையில் பல இடங்களில் கிழிந்து துளை விழுந்து சீறி அதிர்ந்துகொண்டிருந்தன. பாய்மரங்கள் வில் என வளைந்து காற்று நின்றதும் விம்மி நிமிர்ந்தன. துளை விழுந்த பாய்களின் துடிப்பால் அப்படகுகளும் அடங்கா புரவிகளென துள்ளித் திமிறின. அதிலிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு உலைந்தாடி கூச்சலிட்டனர்.

படகுகளில் பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் முதியவர்களும் நிறைந்திருப்பதை அவன் கண்டான். மிக எளிய வீட்டுப்பொருட்கள். மண்பாண்டங்கள், மரப்பெட்டிகள், தோல் குடுவைகள், வெவ்வேறு வடிவிலான மரக்குடுக்கைகள். அவர்கள் தங்கள் இறுதி உடைமைகளை எடுத்துக்கொண்டு வந்திருப்பது தெரிந்தது. அவன் படகுக்காவலனை அழைத்து

“நாம் கரையிறங்க இயலுமா இயலாதா?” என்றான். “இந்தத் துறையில் கரை இறங்குவதற்கு ஏதேனும் படை உதவி தேவைப்படும். படகில் எவரேனும் வந்து இந்தப் படகுப் பெருக்கை பிளந்து வழி அமைத்தாலன்றி நமது படகு கரையணைவது இயலாதென்றே தோன்றுகிறது” என்றான் காவலன்.

யுயுத்ஸு “எனில் ஒரு சிறு படகை ஒருக்குக! அதிலேறி யமுனையின் கரைகளில் எங்காவது நான் ஒதுங்கி அங்கிருந்து புரவியில் நகரை அடைகிறேன்” என்றான். “ஆனால் தாங்கள்…” என்று அவன் தயங்க “படகிலிருந்து பொருட்களை சிறிது சிறிதாக அவ்வண்ணமே கரை சேருங்கள். படகு இங்கேயே நிற்கட்டும்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆணை” என்று தலைவணங்கி காவலன் சென்றான். படகிலிருந்து மென்மரத்தில் குடையப்பட்ட சிறு படகை நீரில் கயிற்றினூடாக இறக்கினார்கள். அது படகின் விலாவில் அறைந்து துள்ளிய அலைகளின் மேல் நெற்று என எகிறி அலைபாய்ந்து நின்றது. யுயுத்ஸு அரக்கு பூசப்பட்ட வடத்தைப் பற்றிச் சறுக்கி கீழிறங்கி அப்படகில் அமர்ந்தான். குகனும் இறங்கி அமரத்தில் அமர்ந்தான்.

யுயுத்ஸு பக்கவாட்டுக் கயிற்றை தன் கால் மேல் இழுத்துக் கட்டி உடலைக் குறுக்கி அமர்ந்துகொண்டான். படகோட்டி துடுப்பை இரு கொக்கிகளிலும் செலுத்தி தோல்சுற்றப்பட்ட பிடிக்கொடுவைப் பற்றி நிலைகொண்டபின் கயிற்று முடிச்சுகளை அவிழ்த்து காலால் உந்தி படகை பெரும்படகிலிருந்து விலக்கினான். இருமுறை துடுப்புகள் சுழன்றமைந்தபோது துள்ளும் மீன்போல மென்மரப் படகு எழுந்து அலைகளில் தாவி அப்பால் சென்றது. அவன்

கைகளின் சுழற்சியில் துடுப்புகள் இருபெரும் சகடங்கள்போல வட்டமிட படகு அலைகளில் ஏறி இறங்கி கரை நோக்கி சென்றது.

யமுனையின் கரைகளிலிருந்த குறுங்காடுகளிலும் நூற்றுக்கணக்கான சிறு படகுகள் அணைந்திருப்பதை அவன் கண்டான். பரிசல்களும் ஏராளமாகத் தெரிந்தன. “இப்பரிசல்கள் எங்கிருந்து வருகின்றன?” என்று அவன் கேட்டான். “இவையும் நெடுந்தொலைவிலிருந்து வருகின்றன என தோன்றுகிறது. அவர்கள் பேசும் மொழி வங்கக்கரைகளில் எழுந்தது” என்றான் குகன். “பரிசல்களில் அத்தனை தொலைவிலிருந்து வருகிறார்களா?” என்றான் யுயுத்ஸு. “ஆம் இளவரசே, இவர்கள் கிளம்பிய இடத்திலிருந்து வழிதோறும் தங்கி வந்துகொண்டே இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கொற்றவையை வழிபடுகிறார்கள். சிலர் நாக அன்னையரை வழிபடுகிறார்கள். இங்கு இனி அரசியின் ஆட்சி என்று அவர்களிடம் சொல்லப்பட்டிருக்கிறது. அன்னை எழுந்துவிட்டாள் என்ற செய்தி குலப்பாடகர்களினூடாகவும் சூதர்களினூடாகவும் இவர்களின் சிற்றூர்களில் பரவிக்கொண்டிருக்கிறது என்கிறார்கள்” என்று படகோட்டி சொன்னான்.

யுயுத்ஸு “இங்கிருந்து ஏதேனும் அறிவிப்பு எழுந்ததா? அல்லது குறிப்புணர்த்தப்பட்டதா?” என்றான். “இல்லை, இந்திரப்பிரஸ்தம் கல்போல் ஓசையற்றிருக்கிறது. ஆனால் அரசி இங்கு முடிசூடப்போகிறார் என்று அவர்கள் அனைவருமே உறுதிபடக் கூறுகிறார்கள்” என்றான். யுயுத்ஸு “குருநாட்டின் தலைநகரம் அஸ்தினபுரி. அரசி அங்குதான் மும்முடி சூடி அமரவிருக்கிறார், பாரதவர்ஷத்தை அங்கிருந்து முழுதாளவிருக்கிறார்” என்றான். “ஆம், அதை நான் அறிவேன். ஆனால் இவர்கள் ஒன்றை நம்பி

இத்தனை தொலைவு வந்துவிட்டார்கள். இனி இவர்களிடம் அந்நம்பிக்கையை மாற்றும்படி எவராலும் சொல்ல இயலாது” என்று படகோட்டி சொன்னான்.

படகு மரங்கள் சரிந்து நீரில் படிந்து இலைகளை அலசிக்கொண்டிருந்த கரையை அணைந்தது. அங்கும் ஒன்றுடன் ஒன்று முட்டி பல அடுக்குகளாக கரையை நிறைத்திருந்த சிறு படகுகளுக்கு நடுவே சென்று தயங்கியது. படகோட்டி தன் காலாலும் துடுப்பாலும் பிற படகுகளைத் தள்ளி இடைவெளியை உருவாக்கி அதனூடாக யுயுத்ஸுவின் படகை கரையணையச் செய்தான். கரையிலிருந்த மரக்கூட்டங்களுக்கு நடுவே நூற்றுக்கணக்கான சிறு குடும்பங்கள் அமர்ந்து சமைத்துக்கொண்டும், உணவுண்டபடியும், ஓய்வெடுத்தபடியும், தாயமும் நாற்களமும் ஆடிக்கொண்டும், கூவிப் பேசி நகைத்தபடியும் நிறைந்திருந்தன.

அவர்கள் எவரும் யுயுத்ஸுவையோ அஸ்தினபுரியின் அடையாளங்களையோகூட அறிந்திருக்கவில்லை. படகோட்டி கரையிலிறங்கி “வழி விடுங்கள்! இளவரசருக்கு வழி விடுங்கள்!” என்று கூவியபோதுகூட எவரும் பொருட்படுத்தி திரும்பிப் பார்க்கவில்லை. யுயுத்ஸு அணிந்திருந்த மணிமாலைகளை பெண்கள் வியப்புடன் பார்த்தனர். ஒரு பெண் கைசுட்டி ஏதோ சொல்ல பிற பெண்கள் வாய் பொத்தி உரக்க நகைத்தனர். யுயுத்ஸு அவர்களை விழிசுழற்றி நோக்கியபடி சென்றான். அவர்கள் அங்கேயே செடிகளென முளைத்தெழுந்து வண்ணங்களெனப் பூத்தவர்கள்போலத் தோன்றினர்.

பெரும்பாலானவர்கள் கரிய நிறமும், மின்னும் வெண்விழிகளும் கொண்ட உயரம் குறைவான மக்கள். அவர்கள் செந்நிற விதைகளாலும், தேய்த்துருட்டிய

வெண்ணிறக் கற்களாலுமான மாலைகளையும் இரும்பாலான வளையல்களையும் அணிந்திருந்தனர். செந்நிறமும் நீல நிறமும் கொண்ட தடித்த பின்னலாடைகள். அவற்றில் கற்களை வைத்து அணி செய்திருந்தார்கள். தலையில் உருட்டிய வண்ணக் கற்களைக் கோத்து செய்யப்பட்ட சரங்களைச் சூடியிருந்த பெண்கள் தொன்மையான ஓவியங்களிலிருந்து எழுந்து வந்தவர்கள்போல் தோன்றினார்கள். கைகளில் சங்கு போழ்ந்த வெண்வளையல்கள். சந்தன மரத்தில் செதுக்கப்பட்ட காப்புகள். கால்களில் வெண்கலச் சிலம்புகள்.

யுயுத்ஸு "இந்திரப்பிரஸ்தம் முற்றிலும் புதிய குடிகளை பெறப்போகிறது. இனி அந்நகரின் நெறிகளையும் ஒழுங்குகளையும் இவர்கள் முடிவெடுப்பார்கள். அரசர் இவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டும்" என்றான். "நம்பிக்கையுடன் வந்திருக்கிறார்கள். கடுமையாக உழைக்கவும் ஒருக்கமாக இருக்கிறார்கள். அதுவே நன்று" என்று படகோட்டி சொன்னான். கைகளை விரித்து "வழி விடுங்கள்! வழி விடுங்கள்!" என்று கூவி பாதையெங்கும் செறிந்து நின்றிருந்தவர்களை உந்தி விலக்கி யுயுத்ஸுவை யமுனையின் ஓரமாக அமைந்த சாலையை நோக்கி கொண்டுசென்றான்.

அஸ்தினபுரியை நெருங்கும் மையச்சாலை அளவுக்கே அங்கும் மக்கள் பெருக்கு இருந்தது. ஆனால் அஸ்தினபுரியில் காவல்மேடைகளில் வீரர்கள் இருந்தனர். சாலையில் எப்படியாயினும் ஒரு புரவிவீரன் வேலுடன் தென்பட்டுக்கொண்டிருந்தான். இந்திரப்பிரஸ்தத்தில் விழி தொடும் தொலைவு வரை எங்கும் காவலர்களோ

இந்திரப்பிரஸ்தத்தின் கொடி அடையாளங்களோ தென்படவில்லை. “இந்நகரம் இன்று வெறும் மக்கள் திரளாக மாறிவிட்டிருக்கிறது. இங்கே எவ்வகையிலேனும் அரசாள்கை ஒன்று நிகழ்கிறதா என்று ஐயமாக இருக்கிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “மெய்யாகவே அரசாளுகை ஏதுமில்லை. இங்கிருந்த எஞ்சிய காவலர்களையும் அஸ்தினபுரிக்கு அழைத்துக்கொண்டுவிட்டார்கள். இந்நகர் முழுக்க நூறு காவலர்கூட இல்லை. அரண்மனையைக் காக்கவே இருபது பேர் மட்டுமே இருக்கிறார்கள். நம்மால் அறிய முடியாத இறையாணை ஒன்றால் அனைத்தும் எவ்வகையிலோ செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன” என்று படகோட்டி சொன்னான்.

“பெருந்திரளுக்கு அவர்கள் அனைவரும் சேர்ந்து உருவாக்கும் சித்தம் உள்ளது என்பார்கள். ஒவ்வொருவரும் தங்களை அறியாமலேயே அதன் ஆணைகளுக்கு கீழ்ப்படிவார்கள். துளித் துளியாக நோக்குகையில் எவ்வொழுங்கும் இன்றி அலைமோதிக்கொண்டிருக்கும் திரள் என்றுதான் அவர்கள் தோன்றுவார்கள். ஆனால் ஒரு குன்றின் மேலிருந்து பார்த்தால் நதி தன் பாதையையும் ஒழுங்குகளையும் வகுத்துக்கொள்வதுபோல இத்திரள் செயல்படுவதை காணமுடியும்” என்று யுயுத்ஸு சொன்னான். ஆனால் அது ஒரு உளமயக்குதானா என்று அவனுக்குத் தோன்றியது. எந்தப் பெருக்கிலும் சிதறலிலும் வடிவங்களைக் காண உள்ளம் முயல்கிறது. வடிவின்மையை மானுட உள்ளத்தால் நினைவில் நிறுத்திக்கொள்ள முடியாது.

தொலைவில் ஒரு புரவி செல்வதை படகோட்டி பார்த்தான். “புரவி!” என்று அவன் சுட்டினான். “அப்புரவியை கேட்டுப் பார்”

என்று யுயுத்ஸு சொன்னான். "அது மகதத்திலிருந்து வருகிறது என்று தோன்றுகிறது. அதற்கும் இந்திரப்பிரஸ்தத்திற்கும் தொடர்பில்லை" என்றான் படகோட்டி. "ஆம்" என்றபின் யுயுத்ஸு "அதை விலைக்கு கேட்டுப் பார்" என்றான். படகோட்டி பலரை உந்தி வழியேற்படுத்தி அப்புரவியை அணுகினான். அதை விலைபேசி முடித்து வாங்கி கடிவாளத்தை பற்றிக்கொண்டு அருகே வந்தான். "ஏறிக்கொள்ளுங்கள், இளவரசே" என்றான். யுயுத்ஸு அதன் மேல் ஏறி அமர்ந்து கடிவாளத்தைப் பிடித்து "நான் செல்கிறேன். நீ மீண்டும் படகிற்குச் சென்று அங்குள்ள பொருட்களை எவ்வண்ணமேனும் இந்திரப்பிரஸ்தத்துக்குள் அனுப்பி வை" என்று ஆணையிட்டபின் கூட்டத்தை ஊடுருவி முன்னால் சென்றான்.

இந்திரப்பிரஸ்தத்தை விரைந்து அணுக முடியாதென்று செல்லுந்தோறும் யுயுத்ஸுவுக்கு தெரிந்தது. சாலை நிறைத்து ஒழுகிக்கொண்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நடந்துதான் சென்றார்கள். அவர்களும் இடையிலும் தோளிலும் மூட்டைகளையும் குழந்தைகளையும் வைத்திருந்தார்கள். மனிதர்கள் கையால் இழுக்கும் சிறு சகடங்களில் இல்லப் பயன்பாட்டுப் பொருட்களும், குழவியரும், முதியவர்களும் இருந்தனர். அத்திரிகளும் காளைகளும் கழுதைகளும் உடலெங்கும் பொதிகளையும் பொருள் மூட்டைகளையும் சுமந்தபடி ஒன்றுடன் ஒன்று முட்டி வழி விடும்படி ஓசையிட்டு, ஒன்றையொன்று முகர்ந்து தும்மலோசை எழுப்பி, செவி மடித்து அடித்து, வால் சுழற்றித் தயங்கி, கிடைத்த வழிகளூடாக புகுந்து சென்றன.

புரவிகள் மிகக் குறைவாகவே இருந்தன. பெரிய வண்டிகளும் அரிதாகவே தென்பட்டன. தேர்கள் அங்கு செல்லவே இயலாதென்று தோன்றியது. அவனுடைய புரவி மிக விரைவிலேயே அத்திரளுக்குள் செல்வதற்கான வழியை கண்டுகொண்டது. பிற உயிரினங்களைவிட புரவிகள் மிக எளிதாக திரளை புரிந்துகொள்கின்றன. காட்டில் அவை ஒட்டிப் பெருகிய ஒற்றைத் திரளென்றே இருக்கும் போலும். அவனுடைய புரவி சிறு இடைவெளிகளில் புகுந்து, கழுத்தை உலைத்து வழியுருவாக்கி ஊடுருவி முன் சென்றது. மரவுரிக்குள் நுழைந்து செல்லும் ஊசிபோல அது ஊடுருவுவதாக அவன் எண்ணினான்.

அவ்வப்போது முழுக் கூட்டமுமே முட்டித் தேங்கி நின்றது. சில தருணங்களில் சுழித்து எதிர் திசைக்கு திரும்பியது. சாலையில் யமுனையின் விளிம்புகளிலிருந்து மேலும் மேலும் மக்கள் எழுந்து வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள். அவன் ஒவ்வொரு முகமாக பார்த்துக்கொண்டிருந்தான். உரக்க நகைத்துக்கொண்டும் கூவிப் பேசிக்கொண்டும் கைகளைத் தட்டி பாடிக்கொண்டும் அவர்கள் சென்றனர். அவர்களில் எவரேனும் ஒருவருக்கு ஒரு நம்பிக்கை வந்திருக்கலாம். ஒரு சிலருக்கு உவகை எழுந்திருக்கலாம். அதன் ஆற்றல் அவர்கள் அனைவரையும் தொற்றிக்கொண்டிருக்கிறது. அத்தனை பெருங்கூட்டம் ஒற்றை உணர்வையே கொண்டிருக்க இயலும். அப்போது அவர்களில் மிஞ்சிப்போனால் நூறு சொற்களுக்குள் மட்டுமே உளம் திகழ முடியும்.

அவனுக்கு அப்போது தன்னால் ஒரு காலகட்டத்தையே விழிகளால் பார்க்க முடியும் என்று தோன்றியது. இந்தப் பெருந்திரள் ஓரிரு மாதங்களுக்கு முன் இங்கு நிகழ்ந்த பெரும்

போரைப்பற்றி அறிந்திருக்கும். அப்போது இவர்களில் பலர் பதைப்பு கொண்டிருக்கக் கூடும். பலர் நேரடி இழப்புகளையும் அடைந்திருக்கலாம். அப்போர் குறித்த எப்புரிதலும் இல்லாதவர்களும் இங்கிருக்கலாம். ஆனால் இன்று அதுவே ஒரு களியாட்டாக மாறியிருக்கிறது. அவன் அவர்கள் பாடிச்சென்ற சொற்களை செவிகொண்டான். பெரும்பாலானவற்றில் குருக்ஷேத்ரப் போரே குறிப்பிடப்பட்டது. ஒன்று களத்தில் அபிமன்யு பிருஹத்பலனை சந்தித்ததைப் பற்றிய பாடல் என்று புரிந்துகொண்டான். பிறிதொன்றில் அர்ஜுனனுக்கும் கர்ணனுக்குமான போர். கதிரவன் மகனும் இடிமின்னலின் மைந்தனும் விண்ணில் சந்தித்துக்கொள்கிறார்கள். மண்ணில் மழையும் வெயிலும் மாறி மாறி பொழிகிறது.

ஒரு போர் அதன் அனைத்துத் துயரங்களுடனும், அழிவுகளுடனும் இனிய நினைவாக, களியாட்டாக மாறிவிட்டிருக்கிறது. அப்போர் இங்கு நிறைந்திருந்த பெருமரங்கள் அனைத்தையும் வீழ்த்தி இப்புது முளைகள் எழுவதற்கு வழி வகுக்கிறது. படைசூழ்கை குறித்து எழுதப்படும் அனைத்து நூல்களிலும் போரில்லாத நாடுகள் விரைவிலேயே ஆற்றல் இழந்து அழியும் என்று கூறப்பட்டுள்ளது என அவன் படித்திருந்தான். அவனுக்கு அந்நூலை கற்பித்த கிருபர் “போரில்லாத நாடுகளில் படைவீரர்கள் களம் காணாது முதிர்வடைவார்கள். அவர்களின் படைக்கலப் பயிற்சி நேரடியாக களத்தில் பயன்படாதபோது மெல்ல மெல்ல வெறும் சொற்களாக மாறும். அச்சொற்களே மேலும் சொற்களை பெருக்கும். அடுத்த தலைமுறையினரை படைக்கலங்களுக்கு மாறாக அச்சொற்களே சென்று அடையும்” என்றார்.

“சொற்களைக் கொண்டு எவரும் போரிட இயலாது” என்றார் கிருபர். “அவை பயனற்றவை. இலையுதிர்கால சருகுக்குவை போன்றவை.” அவன் “அவர்கள் தொடர்ந்து களரிகளில் பயின்றுகொண்டுதானே இருக்கிறார்கள்?” என்றான். “களரிகளில் பயில்வது போரல்ல. போருக்குரிய மெய்யான உளநிலைகள் களரியில் இல்லை. அங்கு எவரும் கைபிழைத்தால் இறப்பதில்லை. கொல்லும் வெறிகொண்டிருப்பதும் இல்லை. அது ஒரு நடிப்பு. நடிப்பென அனைவருக்கும் தெரியும்.” புன்னகைத்து கிருபர் சொன்னார் “எண்ணுக, இங்கே காமமே நிகழவில்லை, காதல் நாடகங்களும் நடனங்களும் மட்டுமே நிகழ்கின்றன எனில் அடுத்த தலைமுறை எவ்வாறு உருவாகும்?”

மாணவர்களிடமிருந்து சிரிப்பொலி எழுந்தது. “களரியில் நிகழும் போர் மெய்யான போரை கண்டு நடிக்கப்படுவது. மிஞ்சிப்போனால் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையேனும் மெய்யான போர் நிகழவேண்டும். அப்போது மட்டுமே அக்கற்பனை உண்மைக்கு அணுக்கமானதாக இருக்கும். பயனுள்ளதாக இருக்கும். இல்லையேல் அக்கற்பனை பெருகி உண்மைகளை தாண்டிச் செல்லும். அதன் பிறகு அப்பயிற்சியே கற்பனையை பெருக்கும். களம் நின்று போரிடுவதற்கு முதல் எதிரி வெற்றுக்கற்பனைதான். வாளேந்துபவனின் முதற்பெரும் அறைகூவல் என்பது வாள் குறித்து அவன் உள்ளம் கொண்டிருக்கும் பாவனைகளை அகற்றிக்கொள்வதே.”

“எந்தப் பெருவீரனையும் எக்கணத்திலும் ஓர் வாள் வெட்டக்கூடும், ஓர் அம்பு வீழ்த்தக்கூடும். அது வேறுபாடு அறியாது. அதிலுறையும் தெய்வங்களுக்கு தங்களுக்கான தனி வழிகள் உள்ளன. களத்தில் எந்த முறைமையும் இன்றி

முதுகில் படைக்கலம் பாய்ந்து உயிர்விட்ட மாவீரர்கள் உண்டென்பதை ஒருமுறையேனும் போருக்குச் சென்றவரால் மட்டுமே உய்த்துணர இயலும்” என்றார் கிருபர். “மெய்யான போர் மெய்யான அறைகூவலை மெய்யான வீரத்தை நிலைநிறுத்திக்கொண்டே இருக்கிறது. போர் என்பது ஆண்டுக்கொருமுறை வயலை உழுவதுபோல. உழப்படாத நிலம் களைகளுக்குரியது.”

அவன் அக்கூட்டத்தை பார்த்தான். அவர்கள் அனைவருமே சிறிதும் பெரிதுமான போர்களை பார்த்தவர்களாகவே இருப்பார்கள். போரென்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள். அன்று கிருபர் சொன்னார் “நகரில் மூத்த படைவீரர்கள் போரில் கொல்லப்பட வேண்டும். ஒரு படையின் பொதுவான வாழ்நாள் நாற்பது அகவைக்கு மேல் செல்லக்கூடாது. படையிலிருக்கும் இளம்வீரர்கள் போரின்றியே முதுமை கொண்டு ஓய்ந்து அமர்ந்திருக்கும் முதியவர்களை அடிக்கடி காண வாய்க்கலாகாது. அவர்களுடன் சொல்லாடுவதற்கான தருணங்கள் அமையவே கூடாது. போரிலாது மூத்த முதியவர்கள் தாங்கள் அவ்வண்ணம் போரிலாது அகவை முதிர்ந்ததையே தங்கள் வாழ்நாள் வெற்றியாக சொல்வார்கள். அந்த இலக்கை இளையோரும் கொண்டால் அது படையல்ல, களிமகன்களின் திரள்.”

“போருக்குச் செல்லாதவர்களே போரை மிகைப்படுத்திக்கொண்டிருப்பார்கள். அவர்கள் போரை மிகைப்படுத்திக் கூறுகையிலேயே போரிலாது கடந்து வருவதே சிறந்தது என்ற செய்தியையும் இளைஞர்களிடம் கூறிவிடுவார்கள். அவ்வீரர்கள் போருக்குச் சென்றாலும் அவர்களிடம் மெய்யான போர் பற்றிய அறிதலின்மையால்

ஏமாற்றத்தையும் அச்சத்தையுமே அடைவார்கள். பெரும்போர் ஒன்றில் உயிர்கொடுக்க வேண்டும் என்ற கனவுடன் இருக்கும் படைவீரர்களாலான படை களத்தில் முதற்கணத்திலேயே சோர்வடைகிறது. ஏனென்றால் போர் என்பது கனவு அல்ல, வாள்முனைபோன்ற மெய்மை அது.”

“போருக்காக வீரன் ஒருங்கிக்கொண்டே இருக்கவேண்டும். அவனறியாமல் உடல்வளர்வதுபோல உள்ளம் அவ்வாறு உருவாகவேண்டும். போருக்கெழுகையில் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே எவ்வீரனுக்கும் இருக்கலாகாது. போரென்பது ஆண்டுதோறும் கோடையில் எழும் காட்டெரி போன்றது. முதுபெரும் மரங்கள் அதை கடந்து செல்லும். உயிரற்ற பழைய மரங்கள் எரிந்தழியும். பயனற்ற புதர்கள் சாம்பலாகி எருவாகி முளைக்கும் விதைகளுக்கு உணவாகும்” என்றார் கிருபர். பின்னர் அச்சொற்களை வெவ்வேறு குரல்களில் வெவ்வேறு தருணங்களில் அவன் கேட்க நேர்ந்தது.

அவன் அந்தத் திரளை நோக்கி எண்ணிக்கொண்டான். இவர்கள்தான் முளைக்கும் விதைகள் எனில் இதைப்போல பொருளற்ற விந்தை பிறிதில்லை. நெறி நின்றவர்கள், குடிப்பெருமை கொண்டவர்கள், பெருவீரர்கள் மண்மறைந்து ஏதுமறியா கட்டற்ற பெருந்திரள் அவ்விடத்தை நிரப்புகிறது. இத்திரள் மாண்புகள் ஏதும் அற்றது. நெறிகளை கொண்டிராதது. கட்டற்றது. அழகற்றது. பெருமிதமும் தன்னுணர்வும் இல்லாதது. இது ஒரு பண்படாத காட்டுவிலங்கு. இவர்களுக்காகவே அந்தத் திறனோரை, துணிந்தோரை காலம் அழித்திருக்கிறதென்றால் அது மானுடருடன் ஒரு இளிவரல் கூத்தையே நிகழ்த்த எண்ணியிருக்கிறது.

ஒருவேளை அது இதை எண்ணியிருக்க வாய்ப்பில்லை. அந்த முன்னோடிகளின் திரள் மூத்துவிட்டது. தன் நெறியில், தன் அழகில் அது முழுமை அடைந்துவிட்டது. அது மேலும் வளர்வதற்கு எல்லையில்லை. வளர்வதற்கு இடமில்லாதவை அழிய வேண்டுமென்பது இயற்கையின் நெறி. ஆகவே அவை அழிக்கப்படுகின்றன. நன்மையே ஆயினும் அழகே ஆயினும் மாண்பே ஆயினும் முழுமை அடைந்துவிட்டால் அழிந்தாகவேண்டும். சிறுமையே ஆயினும் தீமையேயாயினும் வளர்வதற்கு இடமிருக்கும்போது தன் வழியை அது கண்டுகொள்கிறது.

சென்ற காலங்களில் சிறப்பு மிக்க அனைத்தும் குருக்ஷேத்ரத்தில் அழிந்தன. நெடுங்காலமாக நெறிகளை பேணியவர்கள், தங்கள் அறங்களை சொல்லிச் சொல்லி நிலை நிறுத்தியவர்கள், அந்நெறிகளுக்கும் அறங்களுக்கும் அறுதி எல்லை என்ன என்பதை கண்டறிந்து திகைத்து களத்தில் உயிர்விட்டார்கள். வென்றவர்களும் தோற்றவர்களும் எழும் இப்புத்துலகிலிருந்து முற்றிலும் அயலாகிவிட்டார்கள். இப்புத்துலகு முற்றிலும் பிறிதொன்று. அறியா விசைகளால் இயக்கப்படுவது.

இது புது வெள்ளம். சருகும் சேறும் அடித்துச் சுருட்டி வந்து எல்லைகளை மீறி வயல்களுக்குள்ளும் ஊர்களுக்குள்ளும் புகுந்து அனைத்தையும் நிரப்பி கொப்பளிக்கும் செம்பெருக்கு. நைந்தவற்றை வீழ்த்துகிறது. புது வழிகளை கண்டடைகிறது. மிகப் பெருவெள்ளம் வந்தபின் கங்கையே முற்றிலும் புது வழி தேர்கிறதென்பார்கள். யுயுத்ஸு திகைத்த விழிகளுடன் அப்பெரும்பெருக்கை நோக்கியபடி சென்றுகொண்டிருந்தான்.

# களிற்றியானை நிரை - 34

## பகுதி நான்கு : அன்னையெழுகை – 6

இந்திரப்பிரஸ்தத்தின் தெற்குக் கோட்டைவாயிலை தொலைவிலேயே யுயுத்ஸு பார்த்தான். அஸ்தினபுரியின் கோட்டைவாயிலைவிட பலமடங்கு பெரியது. மாபெரும் கற்களை வெட்டி ஒன்றன்மேல் ஒன்றென அடுக்கி எழுப்பப்பட்ட அடித்தளக் கோட்டைக்கு மேல் செங்கற்களாலான பிறிதொரு கோட்டை எழுந்து அதற்குமேல் மாபெரும் மரக்கலங்கள்போல மரத்தாலான காவல்மாடங்களை ஏந்தியிருந்தது. அவற்றை மரக்கலங்கள் என்று எண்ணும் கணம் கற்சுவர் அலைகொள்வதுபோல் உளமயக்கு உருவாகும்.

அக்காவல்மாடங்களும் ஏழு அடுக்குகள் கொண்டவை. மூன்று கீழடுக்குகளில் கீழ்நோக்கி சரிந்து திறக்கும் சாளரங்களில் வில்லேந்திய வீரர்கள் அமர்வதற்கான சிற்றறைகள். உள்ளிருந்து நோக்கினால் அவை தேனீக்கூடுபோல செறிந்திருந்தன. வெளியே நின்று நோக்குகையில் அவை பகலில் மாபெரும் சல்லடை எனத் தோன்றின. இரவில் உள்ளே விளக்குகள் சுடர்விடத் தொடங்குகையில் உடலெங்கும் விழிகள் எழுந்த இந்திரன்போல் மாறின. அவற்றுக்கு உள்ளே இருப்பவர்களை வெளியே நின்று நோக்க முடியாது. அச்சாளரங்களுக்கு அப்பால் படைவீரர்களின் தங்குமிடங்களும் படைக்கல அறைகளும் இருந்தன.

நான்காம் அடுக்கில் இருபுறமும் திறக்கும் அகன்ற சாளரங்களுக்குள் முரசுக்காரர்களும் கொம்பூதிகளும்

அமர்வதற்கான மேடைகள். அவர்களிடமிருந்து எழுந்து ஆறாவது அடுக்கில் வாய் திறந்தன மாபெரும் கொம்புகள். இந்திரப்பிரஸ்தத்தின் காவல்மாடங்களின் மாபெரும் கொம்புகள் பாடல் பெற்றவை. கலிங்கச் சிற்பிகள் சமைத்த அக்கொம்புகள் ஒவ்வொன்றும் உள்ளே வீரர்கள் இறங்கிச் சென்று தூய்மை படுத்தும் அளவுக்கு பெரியவை. அவற்றின் முகப்புகள் மாபெரும் மலர்கள்போல் வெளியே திறந்திருந்தன. செம்பாலும் வெண்கலத்தாலுமான அவை செந்நிற மஞ்சள் நிற இதழ்கள் விரித்து அக்கோபுரம் சூடிய காதுமலர்கள் எனத் தெரிந்தன.

யுயுத்ஸு சென்று அவற்றை நோக்கியிருக்கிறான். சுருண்டு குவிந்து சென்ற அவற்றின் முனையில் தோலாலான பெருந்துருத்திகள் பொருத்தப்பட்டு கீழிருக்கும் அறைகளில் அவற்றை இயக்கும் நெம்புகோல்கள் இணைக்கப்பட்டிருந்தன. அவற்றை நான்கு வீரர்கள் ஏறி நின்று மிதித்து இயக்க அக்கொம்புகள் நெடுந்தொலைவு கேட்கும்படி பிளிறின. நூறு யானைகளின் பிளிறலுக்கு நிகரான ஓசை கொண்டது அது என்றனர் சூதர். இந்திரப்பிரஸ்தத்தில் யுதிஷ்டிரனின் ராஜசூய வேள்வி நிகழ்ந்தபோது அந்தக் கொம்புகள் எழுப்பிய பேரொலி தெற்குவாயிலுக்கு வெளியே பல காதங்களுக்கு அப்பால் சிற்றூர்களிலெல்லாம் முழக்கமிட்டது. திசையானைகளின் துதிக்கைகள் அவை என்று சூதர்கள் பாடினார்கள்.

ஏழாவது அடுக்கில் பன்னிரு பெருமுரசுகள் அமைந்திருந்தன. அவை வெவ்வேறு திசைகளை நோக்கி சரிக்கப்பட்டவை. ஒவ்வொன்றின் வாயும் செந்நிற நீர் நிறைந்த சிறுகுளம்போல தோல்பரப்பால் மூடப்பட்டிருந்தது. கீழே நின்று நோக்குகையில் வானிலெழுந்த நிலவுத்தொகைகள். ஒவ்வொன்றும் பன்னிரு யானைகளின் தோல்களை உரித்து சேர்த்துத் தைத்து

உருவாக்கப்பட்டது. அவற்றில் விழும் முழைக்கழிகள் கைவிடுபடைகளைப்போல் வில்லுடன் இணைக்கப்பட்டவை. அவற்றை இயக்கும் நெம்புகோல்கள் ஐந்தாம் அடுக்கில் இருந்தன. அவற்றை பயின்று தேர்ந்த ஏவலர்கள் வெவ்வேறு வகையில் இழுத்து முழங்க வைத்தனர். அவை விண்ணில் இடி முழங்குவது போலவே ஒலித்தன. அவை முழங்கி அமைந்த பின்னர் எழும் கார்வை நெடுநேரம் வயிற்றில் தங்கியிருந்தது.

காவல்மாடக் கோபுரத்திற்கு மேல் நடுவில் இந்திரப்பிரஸ்தத்தின் இறைவனாகிய இந்திரனின் சிலை நின்றது. தெற்குக்கு உரிய எமன் ஒருபுறமும் யமி மறுபுறமும் நோக்கி நிற்க நடுவே தலைசொடுக்கி நிமிர்ந்து விழியுருள பல்காட்டிக் கனைக்கும் உச்சைசிரவஸின் மேல் இந்திரன் அமர்ந்திருந்தான். ஒருகால் புரவியின் மேல் மடித்து வைத்து மறுகால் சேணவளையத்தில் ஊன்றி ஒரு கையில் மின்படையும் மறுகையில் தாமரையுமாக, மூன்றடுக்கு ஒளிமுடி சூடி புன்னகையுடன் கீழ் நோக்கி அருள்புரிந்தான். இந்திரனின் சிலைக்குக் கீழே முனிவர்கள் தவத்தில் ஆழ்ந்திருந்தனர். தேவர்களும் கந்தர்வர்களும் யக்ஷர்களும் கின்னரர்களும் களியாடினர்.

கிழக்குக் கோட்டைமுகப்பில் வெண்களிற்றின்மீது அமர்ந்த தோற்றம். இந்திராணியும் ஜயந்தனும் இருபுறங்களிலும் நின்றனர். மேற்கே வருணனும் வாருணியும் இருபக்கமும் நிற்க வியோமயானத்தின் மேல் அமர்ந்த இந்திரன். வடக்கே குபேரனும் பத்ரையும் இருபுறத்திலும் அமர்ந்திருக்க வெண்களிற்றின்மேல் இந்திரன் அமர்ந்திருந்தான். அருகே காமதேனு நின்றிருந்தது. இந்திரனின் பேராலயம் நகரின்

நடுவே குன்றின் மகுடமென அமைந்திருந்தது. கோட்டையின் நான்கு வாயில்களில் இருந்தும் மைய ஆலயத்திற்குச் செல்லும் புரிவழிச் சாலைகள் அமைந்திருந்தன.

இந்திரனின் சிலைகள் மிகப் பெரியவை. கீழிருந்து பார்க்கும்போது வானிலிருந்து குனிந்து கீழே நோக்கும் வடிவில் இருந்தன அவை. மேலே சென்று பார்க்கையில் அவை முற்றிலும் விந்தையான வடிவம் கொண்டிருந்தன. காலைவிட தலை இருமடங்கு பெரியது. முதலில் பார்த்தபோது அவன் அந்த ஒருமையின்மையை நோக்கி வியந்தான். அவனுடன் வந்த காவலன் “கீழிருந்து நோக்கும் கண்ணுக்குப் பொருந்தும்படி இவ்வுடல் அமைக்கப்பட்டுள்ளது, இளவரசே” என்றான். “எனில் நாம் கீழிருந்து நோக்கும் தெய்வங்கள் நாமறியும் வடிவில் இல்லையா?” என்று அவன் கேட்க காவலன் சிரித்தான். “கீழிருக்கையில் அறியும் ஒருமைகள் மேலெழுகையில் மறைகின்றன. தெய்வங்கள் அறியும் நாம் ஒருமையழிந்தவர்களா? அன்றி நாம் காணும் ஒருமையின்மைகள் அவர்கள் காணும் ஒருமையின் மரூஉவா?” என்று அவன் சொல்ல காவலன் புன்னகைத்தான்.

கலிங்கச் சிற்பிகளால் செதுக்கப்பட்ட அந்த மரச்சிற்பங்கள் நூற்றெட்டுத் துண்டுகளாக மேலே கொண்டுவரப்பட்டு செம்புக்கம்பிகளால் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டன. இந்திரனின் முகத்திலும் தோள்களிலும் நெஞ்சிலும் பொற்தகடுகளால் கவசங்கள் அமைக்கப்பட்டன. தங்கத்தை தட்டித்தட்டிப் பட்டுதுணியென, நீர்ப்படலம் என மென்மையாக்கி, உருகு நிலையிலேயே விசையுடன் காற்றால் ஊதி மரத்தின் மேல் படியவைத்து உருவாக்கப்பட்டது அப்பொற்பூச்சு. இந்திரனின் விழிகளென பீதர் நாட்டுப் பளிங்குக் குமிழிகள்

அமைந்திருந்தன. இந்திரனின் நெஞ்சு வழியாக தலைக்குள் செல்வதற்கு வழியிருந்தது. குறுகலான இரும்புப்படிகளில் இருளில் ஏறிச்செல்கையில் அது சிலையல்ல மரத்தாலான ஒரு சிறிய இல்லம் என்று அவனுக்குத் தோன்றியது. அங்கே வெளிக்காற்று சீறிச் சுழன்றுகொண்டிருந்தது.

சிலையின் உள்ளே அந்தியில் பன்னிரு இடங்களில் நெய்விளக்குகள் ஏற்றப்பட்டன. அவ்விளக்குகளுக்குப் பின்னால் அமைந்த குழியாடிகளினூடாக ஒளி பெருக்கப்பட்டு வெளியே விசிறி வீசப்பட்டது. கீழிருந்து நோக்குகையில் இந்திரனின் உடலில் அமைந்த சிறு துளைகளினூடாக ஒளி வெளிவந்து அவன் கண்கள் சுடர்ந்தன. முகம் செவ்வொளி கொண்டது. உடலெங்கும் பலநூறு அருமணிகள் மின்னின. அவை இரவிலெழும் அருமணிகள். பகலில் அவை விண்ணொளியில் மறைந்துவிடுகின்றன என்றனர் குடிகள். அவ்வப்போது வீசும் காற்றில் உள்ளே சுடர்கள் அசைகையில் விண்மீன் நலுங்குவதுபோல இந்திரனின் விழிகளும் அணிகளும் மின்னி அணைந்தன.

யுயுத்ஸு அந்தக் கோபுரத்தை நோக்கியபடி அணுவணுவாக முன்னேறிச் சென்றான். கோபுரம் கண்ணுக்குப் பட்டதும் அதை நோக்கி சென்றுகொண்டிருந்த திரள் மெல்ல மெல்ல அமைதியாகியது. அனைவரும் அண்ணாந்து நோக்கியபடி பின்னிருந்து வந்தவர்களின் உந்தலால் விசைகொண்டு அதன் வாயில் நோக்கி செலுத்தப்பட்டனர். யுயுத்ஸு கோபுரத்தின் மரச்சிற்பங்கள் விண்ணில் படைக்கலங்களைத் தூக்கி, உறைந்த விழிகளும் திறந்த வாய்களுமாக சொல்லற்று நின்றிருப்பதை கண்டான். அதன் வாயிற்கதவுகள் முழுமையாகத் திறந்து சுவருடன் ஒட்டியிருந்தன. கதவைத் திறந்துமூடும் பொறிகள்

கைவிடப்பட்டு துருவேறிக் கிடந்தன. அவற்றை இயக்கும் வடங்களும் சங்கிலிகளும் மண்ணில் புதைந்திருந்தன.

கோட்டைக்குள் நுழைந்து அப்பால் சென்றதையே அவன் அறியவில்லை. வாயில் அத்தனை பெரிதாக, அணுகுகையில் இல்லையென அகன்று செல்வதாக இருந்தது. கோட்டைக்குப் பின்னால் இருந்த முற்றமும் மக்களால் நிறைந்து நான்கு பக்கமும் முட்டிக்கொண்டிருந்தது. கோட்டைக்குப் பின்னால் இருந்த மூன்றடுக்குக் கல்மேடைகளில் நிறுவப்பட்டிருந்த கைவிடுபடைகள் அனைத்தும் முறுக்கப்பட்ட விற்களிலும், சகடங்களிலும் அம்புகள் தெறித்து நின்றிருக்க இக்கணம் இதோ என வான் நோக்கி கூர்கொண்டு நின்றிருந்தன. அவன் புரவியை அவற்றை நோக்கி செலுத்தி அவற்றின் இடைவெளியினூடாகச் சென்று அப்பால் நின்றான். அது திரளின் அலையில் இருந்து அவனைக் காத்தது.

மதகினூடாக ஏரி நீர் வெளியேறுவதுபோல் எத்தடையும் இன்றி மக்கள் உள்ளே புகுந்தனர். உள்ளே வந்து எம்முடிவையும் அவர்கள் எடுக்க இயலவில்லை. அனைத்துத் தெருக்களிலும் நிறைந்திருந்த மக்கள் திசையின்மையை உணரச்செய்தனர். வந்துகொண்டிருந்த திரளால் அவர்கள் உந்தப்பட்டு தாங்கள் எண்ணியிராத இடங்களை நோக்கி கொண்டுசெல்லப்பட்டனர். வெவ்வேறு சாலைகளினூடாக பிதுங்கிச் சென்றனர். கூச்சல்களும் ஓலங்களும் எழுந்தன. எங்கும் வீரர்கள் என எவரும் கண்ணுக்குப்படவில்லை. மேலே முரசுத்தோல்மேல் புறாக்கள் வந்தமராதபடி கட்டப்பட்டிருந்த மெல்லிய வலை காற்றில் அலைபாய்ந்துகொண்டிருந்தது.

யுயுத்ஸூ அந்நகரை நன்கு அறிந்திருந்தமையால் எட்டாவது கைவிடுபடை மேடையின் அருகே சென்று அதன் ஓரமாக

திரும்பி அப்பால் செல்லும் சிறிய படிக்கட்டை அடைந்தான். அப்படிக்கட்டினூடாக புரவியைச் செலுத்தி மேலேறிச் சென்றான். அது அங்கிருப்பதை பெரும்பாலானவர்கள் அறிந்திருக்கவில்லை என்று தெரிந்தது. சருகுகள் உதிர்ந்து மழைநீரில் கருமைகொண்ட படிகள் தூசுபடிந்து கிடந்தன. படிகளில் புரவி இயல்பாக ஏறிச்சென்றது. குன்றின்மேல் வளைவாக ஏறிச்சென்ற படிகளில் செல்லச் செல்ல நகர் கீழிறங்கியது. கைவிடுபடைகள் எத்தனை பெரியவை என்பதை அப்படிகளில் ஏறிய பிறகுதான் காண முடிந்தது. மூன்றடுக்கு மேடையே எட்டு ஆள் உயரமிருந்தது. அதன் மேல் அமைந்திருந்த பதினெட்டு பெருவிற்கள் ஒவ்வொன்றும் பத்து ஆள் உயரமானவை. ஒவ்வொன்றிலும் நூறு நீளம்புகள் இறுக்கிப் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றை முறுக்கும் ஆழிகள் பின்னணியில் அமைய அவற்றைச் சுழற்றும் யானைகள் நடப்பதற்கான வட்ட வடிவப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. அவை அனைத்தின் மேலும் நெடுங்காலமாக பெய்த சருகுகளும் புழுதியும் படிந்திருந்தன.

அவன் அஸ்தினபுரியின் கைவிடுபடைகளை எண்ணிக்கொண்டான். நகரைச் சீரமைக்கையில் அவற்றை என்ன செய்யலாம் என்ற எண்ணம் வந்தது. மீண்டும் கைவிடுபடைகளை அமைக்கலாமா என்று அவன் கேட்டான். “வேண்டியதில்லை, அவை இனி இந்நகரத்தின் அடையாளங்கள் அல்ல” என்று சுரேசர் சொன்னார். எனில் அந்தப் பீடங்களை இடித்துவிடலாம் என்று யுயுத்ஸு சொன்னபோது “அந்த வெற்றிடம் அக்கைவிடுபடைகளை நினைவில் நிறுத்தும். இருப்புக்கு நிகரே இன்மையும். இன்மை வளர்வதும்கூட” என்றார் சுரேசர். “அங்கே ஆலயங்களை அமைக்கலாம். நூற்றெட்டு கைவிடுபடைமேடைகள் உள்ளன. ஒவ்வொன்றும்

ஒரு சிற்றாலயமாகட்டும். நகரில் நுழைபவர்கள் அவற்றை முதலில் காணட்டும். இந்நகரின் முகஅடையாளங்களும் அவையே.”

அங்கே நகரின் காவல்தெய்வங்கள் அமைக்கப்படலாம் என்றார் சுரேசர். “அங்கே படைக்கலங்கள் இருந்தன. அவை நம்மை காப்பவை என்னும் நம்பிக்கையை அளித்தன. அந்நம்பிக்கையை நாம் கைவிடமுடியாது. அங்கே அமையும் தெய்வங்கள் அந்நம்பிக்கையை அளிக்கும். தேவியின் நூற்றெட்டு உருவத்தோற்றங்கள் அங்கே தெய்வமென அமையட்டும்.” ஆனால் யுதிஷ்டிரன் அதை மறுத்துவிட்டார். “இனி இந்நகரில் அறிவே காவல்தெய்வமென அமையட்டும். புதிய வேதம் எழுந்த நிலத்தில் சொல்தெய்வங்களே நிறுவப்படட்டும்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “நகரில் நுழைபவர்கள் இந்நகர் தங்களைக் காக்குமென இனி உணரவேண்டியதில்லை. இந்நகரை தாங்கள் காக்கவேண்டும் என உணரட்டும். ஒரு படைக்கலநிலைக்குள் நுழைவதாக அவர்கள் உணரலாகாது, ஒரு கல்விநிலைக்குள் நுழையும் உளநிறைவை அவர்கள் அடையவேண்டும்.”

அங்கே அமையவேண்டிய தேவதைகள் என்ன என்று யுதிஷ்டிரன் அந்தணரிடம் கேட்டார். வேதச்சொல்லின் காவலர்களான நூற்றெட்டு அன்னையரை அவர்கள் வகுத்தளித்தனர். அச்செய்திகளை கலிங்கச் சிற்பியருக்கு அளித்து கருங்கல்லில் சிலைவடிக்க யுதிஷ்டிரன் ஆணையிட்டார். நகரின் கிழக்குவாயிலின் நேர்முன்னால் அதிதி. வலப்பக்கம் திதி, இடப்பக்கம் தனு, உஷை, பிருத்வி, வாக்தேவி, ஜ்வாலை, சுவாகை, சாயை என அன்னையர் நிரை நகரின் கோட்டையை ஒட்டிய முற்றத்தை நோக்கி திறந்த

வாயில்களுடன் அமைந்த சிறு ஆலயங்களில் கோயில்கொள்ளவிருந்தது. அவன் கிளம்பி வருகையில் அவ்வாலயங்களின் பணிகள் நடந்துகொண்டிருந்தன.

யுயுத்ஸு மேலேறிச்செல்லுந்தோறும் அந்நகரின் அடுக்குகள் ஒவ்வொன்றாக விண்ணிலிருந்து கழன்று உதிர்வதுபோல கீழே சென்றன. அவனுடைய புரவி படிகளின் ஒழுங்கை தன் கால்களால் புரிந்துகொண்ட பிறகு இயல்பாக சிறு தாவல்களாக மேலே சென்றது. இந்திரப்பிரஸ்தத்தின் பெரும்பாலான வெண்குவைமாடங்கள் குடியிருப்போர் எவருமின்றி கைவிடப்பட்டிருந்தன. அங்கு வாழ்ந்த படைத்தலைவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் குடிகள் நிலம்பெயர்ந்தன. பெரும்பாலான கட்டடங்களைச் சுற்றி சருகுகளும் புழுதியும் குவிந்திருந்தன. கிழிந்த கொடிகள் காற்றில் பறந்து துடித்தன. அந்நகர் புத்தம் புதிதாக எழுந்து மெருகழியாமலேயே கைவிடப்பட்டிருந்தது.

அவன் புழுதியை பார்த்தபடியே சென்றான். புழுதி மண்ணின் மெல்லிய கை. கொடியின் தளிர்ச்சுருள்போல. இளங்குழவியின் விரல்நுனிபோல. வந்து தொடும். தழுவும். இழுத்து மண்ணுக்குள் செலுத்தும். விழுங்கிப் புதைத்து மேலே எழும். பின்னர் வேர்கள் மட்டுமே அறிந்த மந்தணம் என புதைவன உள்ளே உறைந்திருக்கும். ஒரு வலுவான புயல்காற்று சுழன்றடித்தால் தன் தூசுச்சருகுப்படலத்தை அவை இழுத்து அகற்றி முகிலிலிருந்து நிலவென பிறந்தெழுந்துவிடுமெனத் தோன்றியது.

அவன் வணிகர்களின் துணைநகரையும் படைத்தலைவரின் உள்நகரையும் கடந்து அரசகுடியினருக்குரிய மையநகரை சென்றடைந்தான். அங்குள்ள உள்கோட்டையும்

முழுமையாகவே திறந்து கிடந்தது. அதன் காவல்மேடையில் மட்டும் ஓரிரு காவலர்கள் இருப்பதை காண முடிந்தது. அவன் புரவி அணுகுவதை அவர்கள் எவரும் பார்க்கவில்லை. கோட்டையின் பெருவாயிலை நோக்கி வந்த பாதையில் பெரிய தடிகளை குறுக்காக அடுக்கி வேலி அமைத்திருந்தார்கள். அந்த வேலி வரைக்கும் பெருகி வந்து முட்டிச் சுழித்து வளைந்து அப்பால் சென்று சிறு பாதைகளினூடாக ஒழுகி மறைந்துகொண்டிருந்த மக்கள் திரள் நோக்கியே அவர்களின் பார்வை இருந்தது.

உள்கோட்டைச் சுவர் அஸ்தினபுரியின் வெளிக்கோட்டை அளவுக்கே பெரியது. வெட்டி அடுக்கப்பட்ட மரக்கற்களுக்கு மேல் மூன்றடுக்கு மரக்கோட்டை மிதந்தது. அதன்மேல் முரசுகளும் கொம்புகளும் அமைந்திருந்தன. இந்திரப்பிரஸ்தத்தின் மின்படைக்கலம் பொறிக்கப்பட்ட அதன் முகப்பில் நெடுங்காலத்துக்கு முன் சூட்டப்பட்ட மலர்மாலை நார்ச்சுருளாக தொங்கிக்கொண்டிருந்தது. கோட்டைமுகப்பிலிருந்து எழுந்து வானில் பறந்துகொண்டிருந்த மின்படைக் கொடி கிழிந்து அனற்கொழுந்துகளென துடித்துத் துடித்துப் பறந்தது. அப்பாலெழுந்த அரண்மனைகளின் வெண்ணிறக் குவைமாடங்கள் நடுவே அரசியின் பொன்னிறக் குவைமாடம் ஒரு செவிக்குழையணி என இளவெயிலில் மின்னியபடி தெரிந்தது.

யுயுத்ஸு தன் புரவியை கோட்டையின் முகப்பு நோக்கி செலுத்தினான். அவன் மிக அருகணைந்த பின்னரே மேலிருந்து அவனை பார்த்தார்கள். அவன் படிகளினூடாக சென்று மரத்தடுப்புக்கு அப்பாலிருந்த முற்றத்தை அடைந்தான். கோட்டைக்குள்ளிருந்து ஒரு படைவீரன் கவசங்களுடன்

இறங்கி வருவதை அவன் கண்டான். சற்று கழித்தே நடையிலிருந்து அது பெண்ணென்று உணர்ந்தான். புரவியை சீரான நடையில் செலுத்தி அவளை நோக்கி சென்றான். அவள் அங்கிருந்தே அவனை அடையாளம் கண்டு கையிலிருந்த வேலைத் தாழ்த்தி "இளவரசருக்கு நல்வரவு" என்றாள். "நான் உள்கோட்டைக் காவலர்தலைவி."

யுயுத்ஸு "நான் அரசியை பார்க்கும்பொருட்டு வந்தேன்" என்றான். "அஸ்தினபுரியிலிருந்து அரசிக்கு அரசச்செய்தி கொண்டுவந்திருக்கிறேன்." அவள் தலைவணங்கி "அரசிக்கு செய்தி அனுப்புகிறேன். முதலில் தங்களுக்கு தங்கும் ஒருக்கங்களை செய்கிறேன். வருக!" என்று அவன் குதிரையைப் பற்றி அழைத்துச் சென்றாள். அவன் புரவியிலிருந்து இறங்கி நடந்தபடி "இங்கு ஆட்சியென எதுவும் நடக்கிறதா?" என்று கேட்டான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய ஒவ்வாமையை உணர்ந்து பேச்சை மாற்றும்படி "அரசி எவ்வண்ணம் இருக்கிறார்?" என்று அவன் கேட்டான். அதுவும் ஒவ்வா வினா என உடனே உணர்ந்தான்.

ஆணின் கவச உடையுடன் ஒரு பெண்ணை பார்ப்பதனால் தன் உள்ளம் அவளை அணுகமுடியாமலாகிறதா? அல்லது இவளை சம்வகையிடம் இணைத்துக்கொள்கிறேனா? ஆனால் அவள் அந்தத் தருணத்தின் ஒவ்வாமையை கடக்கும்பொருட்டு பேசினாள். "அவர் பெரும்பாலும் தன் அறையைவிட்டு வெளிவருவதில்லை. ஒவ்வொரு நாளும் இங்கு நிகழ்வனவற்றை சுருக்கமாக சென்று சொல்கிறோம். அவற்றை செவி கொள்வதும் இல்லை." அவன் அவள் பேசியதை எதிர்பார்க்கவில்லை. "அவர் துயரில் இருக்கிறார்" என்று பொதுவாகச் சொன்னான். "ஆம்" என்று அவள் சொன்னாள்.

“அரசி எவருடன் ஒவ்வொரு நாளும் சொல்லாடுகிறார்?” என்றான். “அவ்வண்ணம் எவரும் இங்கில்லை. அரசியின் அணுக்கர்கள் என்று இப்போது இங்கு எவரும் இல்லை. அரசியின் குரலை எவரேனும் கேட்டே நெடுநாட்களாகிறது” என்று அவள் சொன்னாள். அவன் திரௌபதியை அப்போதுகூட அவ்வண்ணம் எண்ணிக்கொள்ளவில்லை. அவன் விழிகளுக்குள் போர்ச்செய்திகளைக் கேட்டபடி அமர்ந்திருந்த கரிய தெய்வச்சிலையே நின்றிருந்தது. “அஸ்தினபுரியின் செய்திகளை அரசி விரும்புவார் என்று சொல்லமுடியாது. நான் நீங்கள் வந்துள்ள செய்தியை அவருக்கு அறிவிக்கிறேன். அவர் முடிவெடுக்கட்டும்” என்றாள்.

கோட்டைக்கு உள்ளே இரு பிரிவு விரிந்த அரண்மனைகளின் முகப்புகள் அனைத்தும் பராமரிப்பின்றி கிடந்தன. “இங்கு எவருமே இல்லையா?” என்று அவன் கேட்டான். “இங்கு அரசியர் இருந்தபோது ஓரளவுக்கு பராமரிப்பிருந்தது. பின்னர் அவர்களும் இங்கிருந்து கிளம்பிச்சென்றார்கள். படைகளும் இங்கிருந்து தொடர்ந்து வெளியே சென்றுகொண்டிருந்தன. இப்பெருநகரை புரக்க இங்கு எவரும் இல்லை” என்றாள். “இங்கு வந்து குழுமுபவர்கள் காட்டில் குடியமைப்பவர்களைப்போல தாங்களே இடங்கண்டு கொள்கிறார்கள். அவர்களுக்கு பெரிய மாளிகைகள் அச்சமூட்டுகின்றன. அங்கு அதன் முற்றத்திலேயே சிறு குடில் அமைத்துக்கொள்கிறார்கள்.”

“இங்கு வரும் திரளைக்கொண்டே இந்நகரை சீரமைத்துவிடமுடியும்” என்று அவன் சொன்னான். “அஸ்தினபுரியில் அதைத்தான் செய்கிறோம். அந்நகர் புதிதெனப் பிறந்து எழுந்துவிட்டது.” அவள் “ஆம், ஆனால் அதற்கு அஸ்தினபுரியிலிருந்து அமைச்சர்களும் பிறரும் இங்கு

வரவேண்டும். இங்கொரு ஆட்சி முறைமை மீண்டும் உருவாகவேண்டும்” என்றாள். அவன் “உன் பெயர் என்ன?” என்றான். “பிரக்யை” என்றாள். “உன் குடி?” என்றான். “நான்காம் குடி. எந்தை குதிரைக்கொட்டிலில் இருந்தார்.” அவள் உரைத்தாள் “நான் இந்நகரில் பிறந்து வளர்ந்தவள். நகரம் ஆண்கள் ஒழிந்து எங்கள் கைகளுக்கு வந்தது. இங்கிருப்பவர்களைக்கொண்டு ஒரு காவல் அமைப்பை உருவாக்கி நிலை நிறுத்தினோம்.”

அவன் “நீ அஸ்தினபுரியின் காவலர்தலைவியைப் பற்றி கேள்விப்பட்டாயா?” என்றான். அவள் முகம் மலர்ந்து “சம்வகை தேவியைப் பற்றி அல்லவா? இங்கே அவரைப் பற்றி நாங்கள் பெண்டிர் பேசிக்கொள்ளாத நாளே இல்லை” என்றாள். “அவர் அங்கே அனைத்துப் படைகளையும் தலைக்கொள்ளக்கூடும். படைநடத்தி நாடுகளை வெல்லக்கூடும். இங்கே அவரை முன்பு பேரரசி திரௌபதியை எண்ணிக்கொண்டதுபோல எண்ணிக்கொள்கிறார்கள். அவர் பேரரசி சத்யவதியின் குருதி என்றுகூட சொல்லப்படுகிறது.”

அவனுக்கு அவளுடைய பேச்சு உவகையை அளித்தது. அதை மறைக்க முகத்தை இறுக்கிக்கொண்டான். “அவரை நீங்கள் அறிவீர்களா?” என்றாள் பிரக்யை. “அறிவேன்” என்று அவன் சொன்னான். “அவருக்கு நீங்கள் அணுக்கம் என்று தோன்றியது” என்றாள். “ஏன்?” என்று அவன் சீற்றத்துடன் கேட்டான். “ஒன்றுமில்லை” என்றாள். “சொல்” என அவன் உரக்க கேட்டான். “இல்லை, உங்கள் விழிகளில் அப்படி தெரிந்தது” என்றாள். “எப்படி?” என்று அவன் கடுமையாகக் கேட்டான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் தன் உள்ளம் இனிமைகொள்வதை உணர்ந்தான். குறடுகள் ஒலிக்க நடந்தான்.

“இங்கே உட்கோட்டையை மட்டுமே முறைப்படி காக்கிறோம். அரண்மைக்காவலுக்கு காவலர் உள்ளனர். அவர்களும் பெரும்பாலும் ஏவலர்” என்று அவள் சொன்னாள். அவன் “நீயே உருவாக்கிய படையா?” என்றான். அவள் “அப்படி சொல்லமாட்டேன், ஆனால் ஏறத்தாழ அவ்வாறே” என்றாள். அவன் “மிகப் பெரிய நகர். மிகக் கூரிய ஆணையால் மட்டுமே இதை ஆள முடியும்” என்றான். அவள் புன்னகைத்தாள். “அந்தக் கோட்டை மேலிருக்கும் கொம்புகள்போல” என்று யுயுத்ஸு சொன்னான். “அவ்வாறு இந்நகரைச் சூழ்ந்து உன் குரல் எழுக!”

# களிற்றியானை நிரை - 35

**பகுதி நான்கு : அன்னையெழுகை – 7**

இந்திரப்பிரஸ்தத்தில் தன் அரண்மனை அறையில் யுயுத்ஸு ஆடியின் முன் நின்று ஆடைகளை சீர்படுத்திக்கொண்டான். அவனே தன் ஆடைகளை அணிந்திருந்தான். பிறர் உதவியின்றி அணியாடைகளை அணிவது அவனுக்கு பழகியிருக்கவில்லை. அஸ்தினபுரியில் அதற்கென்றே அணிஏவலர்கள் குடிமரபாக பயின்றுவந்திருந்தார்கள். அவர்களின் கலை நூலாக யாக்கப்பட்டு மரபாக கற்கப்பட்டது. ஒவ்வொன்றுக்கும் அதற்கான நெறிகள் இருந்தன. நாகபட கணையாழியை நீள்விரலில் அணிவித்தமைக்காகவே ஓர் அணியேவலர் சிறைப்படுத்தப்பட்டார் என்னும் செய்தியை அவன் இளமையில் கேட்டிருந்தான்.

குடித்தலைவர்களுக்கும் வணிகர்களுக்கும் அணியேவலர் இருந்தனர். அரசகுடியினருக்கு அணியேவல் செய்வது அவற்றில் முதிர்நிலை. அணியேவலர்களிலேயே ஐந்து பிரிவினர் இருந்தனர். ஆடைகளையும் அணிகளையும் தேர்ந்து அணிவிப்பவர்கள் அவர்களில் கடைநிலையினர். நீராட்டறை அணியேவலர் மேலும் உயர்ந்தவர்கள். ஒப்பனையாளர்கள் மேலும் தேர்ச்சி தேவையானவர்கள். அவைக்கும் விழவுகளுக்கும் நகர்வலத்திற்கும் உரிய அணிகளை அணிவிப்பவர்கள் பன்னிரு ஆண்டுகள் பயின்று பன்னிரு ஆண்டுகள் பணியாற்றி தேர்ச்சி பெற்றவர்கள். அருமணிகள் தேர்பவர்களே அவர்களின் முதன்மையானவர்கள். ஆடை தைப்பவர்கள், பொற்கொல்லர்கள், நறுஞ்சுண்ணமும் சந்தனமும் இடிப்பவர்கள், தூபக்காவலர்கள் முற்றிலும் வேறு வகுப்பினர். அவர்களை அணியேவலர் தங்களவர் என்பதில்லை. அணிமருத்துவம் செய்பவர்கள் மருத்துவர்களில் ஒரு துணைப்பிரிவினர்.

அவர்களுக்கிடையேயான உறவு சிக்கலானது. எப்போதும் இணைந்தே பணியாற்றவேண்டியவர்கள் எப்போதும் போட்டியிலேயே இருப்பார்கள். அந்தப் போட்டியே அவர்களின் திறனையும் தனித்தன்மையையும் நிலைநிறுத்தி தொடர்ந்து மேம்படுத்துகிறது என்று அவனுக்கு சொல்லப்பட்டதுண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களை வேறுபடுத்திக்காட்ட அடையாளங்களை அணிந்திருந்தனர். ஒட்டுமொத்தமாக அவர்கள் அனைவரும் ஒன்றே என்று காட்டும் அடையாளங்களை கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரிலுமே சற்று பெண்மையின் சாயல் இருந்தது.

அவன் அப்பெண்மையின் சாயல் எங்கிருந்து வருவது என்று எண்ணிக்கொண்டான். அணிகளே பெண்மை கொண்டவை போலும். நெளிபவை, குழைபவை, சிரிப்பவை, ஒளிர்பவை. எல்லா நகையிலும் சற்றே நாணம் கலந்திருக்கிறது. எல்லா ஆடைகளிலும் சற்றே சஞ்சலம் அமைந்திருக்கிறது. அணிகொள்கையில் ஆண்கள் தங்கள் கடுமையை, திமிர்ப்பை, மிதப்பை இழந்து மென்மைகொள்கிறார்கள். அணிகொண்ட யானை ஓர் அருநகை என ஆகிவிடுகிறது. அணிகொண்டு அரியணை அமரும் அரசன் மேலும் அணுக்கமானவனாக, கனிந்தவனாக தோன்றுகிறான். அணிநிறைந்த பெண் அன்னையென்றே தோன்றுகிறாள். முழுதணிக்கோலத்தில் எவரும் கூச்சலிடுவதில்லை. அப்போது எழும் ஆணைகள்கூட முழங்குவதில்லை.

ஆடி முன் அமர்ந்து அவன் தன்னை நோக்கிக்கொண்டிருந்தான். ஒவ்வொன்றும் முறையாக அமைந்திருக்கிறதா என்பதை திரும்பத் திரும்ப பார்த்தான். கணையாழிகள் இடம் மாறி இருக்கின்றனவா? ஆரங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றென அமைந்துள்ளனவா? காதில் ஒரு குழை சற்று பெரிதாக இருக்கிறதா? இடம் மாறிவிட்டால் கணையாழிகள் கழன்றுவரும். விரல்கள் ஒன்றோடொன்று முட்டிக்கொள்ளும். அடுக்கமையா ஆரங்கள் பின்னிக்கொண்டு உடலை உறுத்தும். ஒருமுறை புரண்டுவிட்டால் அவை புரண்டபடியே இருக்கும். அடுக்கு குலைந்த ஆரங்கள் அழகை இழந்துவிடுகின்றன. வெறும் மஞ்சள் கொத்தென மணித்தொகையென ஆகிவிடுகின்றன. அவற்றில் ஒவ்வொன்றிலும் இருக்கும் செதுக்கும் நுணுக்கமும் பொருளிழந்து ஒத்திசையாத குவியல்களாக தோன்றுகின்றன.

அவனுக்காக அறைவாயிலில் ஏவற்பெண்டு காத்து நின்றிருந்தாள். அவள் எளிய சேடியாக இருந்து காவலுக்கு வந்தவள். கண்முன் அவ்வண்ணம் வந்து காத்திருக்கக்கூடாது என அறியாதவள். அவன் ஆடியிலே அவள் நிற்பதை பார்த்தபின் எழுந்துகொண்டு “செல்வோம்” என்றான். தலைவணங்கி அவள் திரும்பிய பின்னர் மீண்டும் ஆடியைப் பார்த்து மேலாடையின் மடிப்புகளை சீரமைத்தான். அவள் மீண்டும் நின்று திரும்பிப்பார்க்க “செல்க!” என்று கையசைத்தபின் குறடுகள் ஒலிக்க அவளுக்குப் பின்னால் நடந்தான். அவனுடைய உருவம் இடைநாழியிலிருந்த மென்பரப்புகளில் தோன்றி மறைந்தது. கிடையான எல்லா பரப்புகளிலும் அவன் தூசுப்படலத்தை பார்த்தான். சில திரைச்சீலைகள் கதவில் சிக்கி படபடத்தன. சில கிழிந்திருந்தன.

அஸ்தினபுரியின் அரண்மனையைவிட பலமடங்கு அகன்றும் உயரமாகவும் இருந்த இந்திரப்பிரஸ்தத்தின் அரண்மனை வெட்டவெளியில் நிற்கும் உணர்வை அளித்தபடியே இருந்தது. அதன் சுவர்களும் தூண்களும் அவற்றின் பேரளவினாலேயே அங்கிலாதவைபோல் விழிகளிலிருந்து அகன்றுவிட்டிருந்தன. வந்தது முதல் அத்தனை பெரிய அரண்மனையின் அறைகளில் தடுமாறி சுவர்களிலும் தூண்களிலும் அவன் முட்டிக்கொண்டிருந்தான். சாளரக்கதவுகளை இழுத்து மூடும்பொருட்டு அமைக்கப்பட்ட பித்தளை கைப்பிடிகளை அவனால் சுழற்ற முடியவில்லை. அவை நெடுங்காலமாக இறுகியிருந்தன. ஆகவே அறைக்குள் யமுனையிலிருந்து வந்த காற்று பொங்கிப் பெருகி சுழன்று அனைத்து திரைச்சீலைகளையும் அலைகொள்ள வைத்தது. அவன்

அரைத்துயிலில் பாய்கள் புடைத்து விம்மும் படகொன்றில் படுத்திருப்பதாக உணர்ந்தான்.

அவனுடைய அறை அவன் வந்து தங்கும் பொருட்டு விரைவாக தூய்மை செய்யப்பட்டிருந்தது. ஆயினும் அதன் சுவர் மடிப்புகளிலும் பொருட்களுக்கு அடியிலும் புழுதிப் படிவுகள் இருந்தன. அதை தூய்மை செய்தவர்கள் முதியவர்களாக இருக்கலாம். முதியவர்கள் எங்கும் முட்டிக்கொள்ளாமலிருக்க எப்போதும் நடுவிலேயே நடமாடுகிறார்கள். மெல்லமெல்ல மூலைகள் அவர்களின் நோக்கிலிருந்தே மறைந்துவிடுகின்றன. அவன் அறையின் ஒரு மூலையில் அவ்வறையை தூய்மை செய்ய பயன்படுத்தப்பட்ட துணிச்சுருள் கிடந்தது. அவன் அறையிலிருந்த பெரிய ஆடி துடைக்கப்பட்டிருந்தாலும் அதன் மேல் பகுதியில் புழுதி ஈரத்துடன் அலையாக படிந்திருந்தது. மஞ்சத்தில் விரிக்கப்பட்டிருந்த மரவுரிகளும் போர்வைகளும் தலையணைகள் அனைத்துமே புதியவை. ஆனால் அனைத்திலும் புழுதி மணம் இருந்தது. முதியவர்களின் கைகளில் நடுக்கை அத்தனை பணிகளின் பதிவுகளிலும் காணமுடிந்தது.

முந்தைய நாள் இரவு அங்கு வந்து சேர்ந்தபோது அந்த அரண்மனையின் அகன்ற தோற்றம் அச்சத்தைதான் அளித்தது. மீண்டும் அவன் கதைகளில் படித்திருந்த அசுரப்பெரு நகரங்கள் நினைவில் எழுந்தன. அச்சமே கோட்டைகளாகின்றன, ஆணவமே அரண்மனைகள். அசுரர்கள் தங்கள் கோட்டைகளையும் அரண்மனைகளையும் மேலும் மேலுமென எழுப்புபவர்கள். மலைகளைப்போல, முகில் நகரங்களைப்போல. முந்தையோர் அவ்வண்ணம் பேருருவங்களை எழுப்பவில்லை.

மனிதர்கள் வாழ்வதற்கு உரிய அளவில்தான் கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்று அவர்கள் நம்பினர். ஆமைக்கு ஓடென அமைக கோட்டைகள். நத்தைக்கு கூடென அமைக இல்லங்கள் என்பது பாரத்வாஜ நீதி. அஸ்தினபுரி அவ்வுணர்வால் கட்டப்பட்டது. அதைவிட தொல்நகரங்கள் அதைவிடவும் சிறியவை.

அச்சமோ ஆணவமோ மிகையாகி அதன் பொருட்டு கட்டப்பட்ட எந்த மாளிகையையும் தெய்வங்கள் வாழ விடுவதில்லை என்று அவன் கேட்டிருந்தான். தேவையான அளவிற்கு மேல் கட்டப்படுமென்றால் தங்களுக்குரியவை அவை என தெய்வங்கள் எண்ணும். அவை அங்கே குடியேறத் தொடங்கும். ஒவ்வொரு வண்ணத்திற்கும் உரியவை, ஒவ்வொரு வடிவத்திற்கும் உரியவை. தெய்வங்கள் வாழுமிடத்தில் மானுடர் இயல்பாக வாழமுடியாது. ஒளிரும் நீர்ப்பரப்புகளில், மலர்சூழ் காடுகளில், மலையுச்சிகளில், விளைநிலங்களில் தெய்வங்கள் உறைகின்றன. குடிமானுடர் அங்கே சென்று மீளலாம். அங்கே குடியிருக்க முடியாது. அங்கே தெய்வங்களுக்குரிய உணர்வுகளே எழமுடியும். விழைவுசினம்பகை என உள்ளம் பெருக முடியாது. அவ்வுணர்வுகள் இல்லாமல் உலகியலில் அமைய முடியாது. அவை தெய்வங்களுக்குரிய இடங்கள். காமமும், சினமும், பகையும் நுரைக்கும் இல்லங்களே மானுடர்க்குரியவை.

ஆகவே மானுடர் வாழுமிடத்தில் இயல்பாக உறைபவை இருள்தெய்வங்களே. மூத்தவளே மானுடருக்கு உறுத்தாத தோழி. இல்லம் எத்தனை தூய்மைப்படுத்தப்பட்டாலும் எத்தனை மங்கலம் கொண்டாலும் துளியாகவேனும் அவள் இருப்பாள். மானுடரின் உடலில் நகமாக, முடியாக, எச்சிலாக

திகழ்பவள். வசைச்சொல்லாக துயரமுனகலாக வெளிப்படுபவள். பகலில் நிழலாக, இரவில் இருளாக நிறைபவள். காற்றில் தூசியாக எழுந்து பரவிக்கொண்டே இருப்பவள். இல்லங்களில் மூத்தவள் சற்றேனும் இருப்பதே நன்று. மூத்தவள் இருக்கும் இடத்தில் இளையவளும் குடிகொள்வாள். அவர்கள் ஒருவரை ஒருவர் நிறைப்பவர்கள். மூத்தவள் சற்றுமில்லாத இடத்தில் இளையவள் நீங்குவாள். அங்கே தெய்வங்கள் குடியேறிவிடுகின்றன. தெய்வங்கள் நிறைவடிவுகள். நாழிக்குள் நாழி நுழைவதில்லை, முழுமை முழுமையை உட்கொள்வதில்லை. எனவே அவர்களுக்கிடையே பூசல் உருவாகத் தொடங்கும். அதன் பின் அங்கு மனிதர்கள் வாழ இயலாது.

இந்திரப்பிரஸ்தம் அதன் முழுமைத்தருணத்தில் இருளற்றதாக இருந்திருக்கும் என அவன் எண்ணிக்கொண்டான். ஒரு சிறு கலைக்குறைபாடுகூட இல்லாதது. ஒரு மூலையில்கூட இருள்தெய்வங்கள் குடிகொள்ளாதது. ஆகவே தன் முழுமையை அடைந்த கணம் முதல் அது மெல்ல சரியத்தொடங்கியது. பேருருவங்கள் சரிவதை நாம் அறியமுடியாது, அவை நம் கண்களுக்கு அப்பாற்பட்டவை. உருள்பொட்டல் நிகழ்வது வரை மலை நிலையாக இருக்கிறதென்றே நம்புவோம். இந்நகரம் இதில் வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் அயன்மையையே அளித்திருக்கும். இதற்குள் அவர்கள் தங்கள் சிறுவளைகளை உருவாக்கிக்கொண்டு வாழ்ந்திருப்பார்கள். இதை எவரும் தங்களுடையதென எண்ணவில்லை. ஒவ்வொருவரும் இதிலிருந்து தப்பியோடவே எண்ணினார்கள்.

ஒருபோதும் இந்த அரண்மனை இந்தப் புதைவிலிருந்து மீளப்போவதில்லை என்று அவனுக்குத் தோன்றியது. இது ஒரு

மாய நகரம். விந்தையான ஆற்றல் ஒன்றை பெற்ற ஒருவர் தன் கனவிலிருக்கும் ஒன்றை நனவாக மாற்றிக்கொண்டது. ஆகவே குறுகிய காலம் மட்டுமே இப்புவியில் இது இருக்கும். இச்சுவர்கள் ஒளிப்படலமென மறையும். இத்தூண்கள் நோக்கியிருக்கவே இல்லாமலாகும். இந்நகரம் நுரைக்குமிழிகள் வெடித்து மறைவதுபோல் விழியிலிருந்து அகலும். இங்கு எஞ்சியிருக்கப்போவது இந்நகரின் உச்சியிலிருக்கும் இந்திரனின் ஆலயம் மட்டுமே. ஏனெனில் ஆலயத்தை தெய்வங்கள் கைவிடுவதில்லை.

அந்நகரை எழுப்புவதற்கான பெரும் உழைப்பை, அதை அமைத்த சிற்பிகளின் தவத்தை அவன் எண்ணிக்கொண்டான். அது ஒரு பெரும்பழியின் கல்வடிவத் தோற்றமா என்ன? அவள் கனவில் முதிரா இளமையில் அது முளைத்தது. இளையோர் கனவில்தான் அத்தகைய பேருருக்கள் எழுகின்றன. மதலைகள் தெய்வங்கள், சிறுவர்களாகும்போது அவர்கள் அசுரர்கள் என்பது தொல்லுரை. இந்திரப்பிரஸ்தம் எழுப்பப்பட்டிருக்கவில்லையெனில் ஒருவேளை குருக்ஷேத்ரப் போர் நிகழாமலிருந்திருக்கக்கூடும். அந்நகரம் ஒவ்வொருவர் நோக்கையும் கவர்ந்தது. அமைதியிழக்கச் செய்தது. அறைகூவும்பொருட்டு சுருட்டித் தூக்கப்பட்ட கைச்சுருள் என அது பாரதவர்ஷத்தில் எழுந்தது. ஒவ்வொரு அரசரும் அதை தங்களுக்கு எதிரான போர்விளி என எடுத்துக்கொண்டனர்.

இந்திரப்பிரஸ்தமே அத்தனை ஷத்ரியர்களும் துரியோதனனைச் சென்றுசேரச் செய்தது. அவர்கள் சூழ்ந்தமையால் அவன் ஆணவமும் நம்பிக்கையும் கொண்டான். தெய்வமென எழுந்துவந்த இளைய யாதவரின் பேருருவைக் காணும் கண்ணில்லாதவனானான். இந்நகரை உருவாக்கும் எண்ணம்

எப்போது அவளில் எழுந்ததோ அப்போதே தெய்வங்கள் முடிவெடுத்துவிட்டன இம்மண்ணில் ஒரு மாபெரும் போர் நிகழவேண்டும் என்று. அவளோ இந்நகரை தன் கருவறை வாழ்விலேயே கனவுகண்டுவிட்டாள். அதன்பொருட்டே அவள் மண்ணில் பிறந்தாள். அவன் எந்தத் தொடர்பும் இல்லாமல் துவாரகையை எண்ணிக்கொண்டான். அந்நகர் பற்றி வரும் செய்திகளும் உகந்தவை அல்ல. அங்கும் பெருமாளிகைகள் ஒவ்வொன்றாக கைவிடப்படுகின்றன. மலையுச்சிகளில் அசுரர்கள் முன்பு குடியிருந்து கைவிட்டுச்சென்ற குகைகள்போல இருண்டு கிடக்கின்றன அவை என்றது ஓர் ஒற்றுச்செய்தி.

இடைநாழியினூடாக நடக்கையில் பெருந்தூண்கள் ஒவ்வொன்றாகத் தோன்றி மத்தகம் எழுந்து செவிவீசி அணுகி வந்து அவனை கடந்து சென்றன. அவன் குறடுகளின் ஒலி ஒழிந்த இடைநாழியின் மடிப்புகளில் விம்மல்கள்போல எதிரொலித்தது. ஒவ்வொரு தூணுக்கு இடையிலும் புழுதி சேர்ந்திருந்தது. உச்சி வளைவுகளில் ஒட்டடைகள் தோரணம்போல் படிந்திருந்தன. நுரையென சுவர் மடிப்புகளில் செறிந்திருந்தன. சில இடங்களில் தூண்களுக்கு மேல் தாமரை மலர்வுகளில் புறாக்கள் அமர்ந்திருந்தன. அவற்றின் குறுகலோசை அத்தூண்களின் விந்தையான உறுமல்போல் ஒலித்தது. அம்மாளிகை மூங்கில்களாலும் மரத்தாலும் கட்டப்பட்டு உரசல் ஓசை எழுப்புவதுபோல ஒருகணம் உளம் மயங்கச் செய்தது. அல்லது கற்பாளை விரிசலிட்டுப் பிளக்கிறது. அவன் உடல் எச்சரிக்கையுணர்வு கொண்டு சிலிர்த்தது.

இல்லை, இந்நகர் அல்ல. இதுவல்ல அந்த முதல் குருதிப்புண். இதற்கு முன்னரே எழுந்துவிட்டது துவாரகை. அங்கிருந்து தொடங்குகிறது போர். அந்நகரின் அறைகூவலே இந்நகரை உருவாக்கியது. இது அதன் பேருருவப் போலி. அந்நகரை உருவாக்கியவன் உண்மையிலேயே பாரதவர்ஷத்தின் மேல் ஓர் அறைகூவலை விடுத்தான். மாகேந்திர மாயக்காரனைப்போல தன் இரு கைகளையும் விரித்து வெட்டவெளியில் ஒரு மாயப் பெருநகரை உருவாக்கிக்காட்டினான். எதன் பொருட்டெல்லாம் ஷத்ரியர் இங்கு பெருமை கொள்கிறார்களோ அவையனைத்தும் வெறும் கண்மாயங்களே என்பதை நிறுவியவன் அவன். அவன் தங்கள் அடித்தளங்களை நுரையென ஆக்குவதை அவர்கள் கண்டனர். மேலே மண் அகற்றப்படும்போது வளைகளுக்குள் பாம்புகள் அடையும் திகைப்பை அடைந்தனர். நீரூற்றப்பட்ட சிதல்புற்று எனப் பதறின அவர்களின் நகரங்கள். அவனிடமிருந்து தொடங்குகிறது இந்நகரும்.

அவன் இடைநாழிகளினூடாக திரும்பித் திரும்பி நடந்து மகளிர்க்கோட்டத்தை அடைந்தான். பிற அரண்மனைகளில் மகளிர்க்கோட்டங்கள் மைய அரண்மனையிலிருந்து தனியாகப் பிரிந்து அகன்று அமைந்திருக்கும். அங்கே செல்லும் நீண்ட இடைநாழியால் இணைக்கப்பட்டிருக்கும். பறக்கும் மாளிகை ஒன்றுக்கு படிக்கட்டில் செல்வது போலிருக்கும். அல்லது புதைந்த சிறைக்கு இறங்கி நுழைவதுபோல. எப்போதுமே அவை மைய அரண்மனையைவிட சற்று சிறிதாக, சிற்பங்களும் அணிகளும் குறைவானதாகவே இருக்கும். அஸ்தினபுரியின் மகளிர்க்கோட்டங்கள் அரண்மனையால் தூக்கி தோளில் சுமக்கப்படும் பேழைகள்போல் தோன்றுபவை. ஆனால் இந்திரப்பிரஸ்தத்தின் மகளிர்க்கோட்டம் அரண்மனைக்கு மேல்

சூட்டப்பட்ட மகுடம்போல் இருந்தது. அதை நோக்கிச் செல்லும் பாதை பளிங்குப்படிகளாலான அரசப்பெருவீதி போலிருந்தது.

இருபுறமும் அணிவகுத்த வெண்பளிங்குத் தூண்களுக்கு மேல் பித்தளையாலான கவசமிடப்பட்ட தாமரைகள் கூரையை தாங்கியிருந்தன. சுதைச்சுவர் பரப்புகளில் மாபெரும் ஓவியங்கள் அந்தி வண்ணப் பெருக்கென, மலர்க்காடென பரவியிருந்தன. அவை அனைத்துமே போர்க்களக் காட்சிகள் என்பதை அவன் கண்டான். விருத்திரனை வெல்லும் இந்திரன் வெண்யானை மேல் தோன்றி கீழே சிதல்புற்றென எழுந்த நகர் மீது தன் வெள்ளிமின் படைக்கலத்தை வீசினான். முகில்கள் சுருள் சுருளென எழுந்து செறிந்த வானம் எங்கும் பல நூறு மின்னல்கள் வெடித்து துடித்துக்கொண்டிருந்தன. சிதல்புற்றுகளுக்கு மேல் ஒளிரும் வாள்களென மின்னல்கள் வளைந்து விழுந்தன. மழை அறைந்து சிதல்மாளிகைகள் சிதல்கோபுரங்கள் சிதல்கோட்டைகள் கரைந்துகொண்டிருக்க அலைபோல் பெருகும் கைகளுடன் அனைத்திலும் பல்வேறு படைக்கலங்களுடன் அறைகூவும் விழிகளும் நகைக்கும் வாயுமாக விருத்திரன் அண்ணாந்திருந்தான்.

பிறிதொன்றில் இந்திரனுக்கும் வருணனுக்குமான போர். கடல் அலைகள் கொந்தளித்தெழ அவற்றுக்கு மேல் இந்திரன் முகில் ஊர்திகளில் தன் படைகள் செறிந்திருக்க மின்னல்கள் வெட்டி அதிர்ந்து சூழ நின்றிருந்தான். வருணனின் கையில் அலைநுரையே வாள் என அமைந்திருந்தது. அவனுக்குப் பின் வெண்ணிறப் பிடரி மயிர்க் கற்றைகள் பறக்கும் நீலப் புரவிகளின் நிரை அலையலையென எழுந்து சுவரை நிறைத்திருந்தது. வருணனின் கையில் இருந்த வெண்சங்கும் இந்திரனின் கையில் இருந்த படையாழியும் மங்கியும்

மங்காமலும் இருவருக்கு நடுவே எழுந்த பிறிதொருவனின் இரு கைகளிலும் படைக்கலங்களாக அமைந்திருப்பதுபோல் தெரிந்தன.

திரௌபதியின் அறைமுன் சென்றதும் அவன் கனவிலிருந்து உலுக்கப்பட்டவன்போல் விழித்தெழுந்தான். அவன் விழிகளுக்குள் அவ்வண்ணப்பெருக்கு நிறைந்திருப்பதாகத் தோன்ற விழிகளை கொட்டி தலையை உலுக்கிக்கொண்டான். அவனை அழைத்துச்சென்ற சேடி அவன் வருகையை அங்கிருந்த முதிய சேடியிடம் சொல்ல அவள் தலைவணங்கி உள்ளே சென்றாள். அவன் மீண்டும் தன்னை தொகுத்துக்கொள்ள முயன்றான். ஆனால் சொற்கள் எவையும் நினைவிலெழவில்லை. எதன் பொருட்டு இந்திரப்பிரஸ்தத்திற்கு வந்தோம் என்பதையே அவன் உள்ளம் மறந்துவிட்டிருந்தது. அறைக்கதவு திறந்து அவன் உள்ளே செல்ல ஒப்புதல் அளிக்கப்பட்டதும் அவன் அறுந்து விழுவதுபோல காலடி வைத்து முன்னால் சென்றான்.

திரௌபதியின் அறை விரிந்தகன்று ஓர் அவைக்கூடம் அளவுக்கு பெரிதாக இருந்தது. அவன் முதலில் அதையும் ஒழிந்த அறை என்றே எண்ணினான். அதனுள்ளும் காற்று சுழன்றுகொண்டிருந்தது. அதன் பின்னரே அவள் அங்கிருப்பதை கண்டான். முதலில் அங்கில்லை என எப்படி தன் புலன் உணர்ந்தது என வியந்தான். அவள் தன் மணிமுடியுடன் அங்கிருந்த நாட்களில் அவ்வறையை அவள் நிறைத்திருப்பாள். கதவை சற்று திறந்ததுமே அவள் இருப்பு வெளியே கசிந்திருக்கும். இந்த மாபெரும் சுவர்களில் அது முட்டி மீளலை கொண்டிருக்கும். முழக்கமிட்டு வானை நிறைத்திருக்கும். அவ்வறையின் மறு எல்லையில் விரிந்த

சாளரத்தினருகே அவள் அரியணை போன்ற பெரிய பீடத்தில் மார்பில் கைகளை கட்டிக்கொண்டு அசைவில்லாமல் அமர்ந்திருந்தாள். அவனை அவள் நோக்கவே இல்லை. ஆகவே அவன் உடலும் அவளை உணரவில்லை.

அறைச்சுவரில் நிறைந்திருந்த மாபெரும் ஓவியங்களில் கந்தர்வர்களும் கின்னரர்களும் யட்சர்களும் களியாட்டமிட்டுக் கொண்டிருந்தனர். பூக்களும் தளிர்களும் நிறைந்த காடுகளும் நீர் ஒளிரும் சுனைகளும் கதிர் பரவிய முகில்நிரைகளும் என அவ்வோவியங்கள் வண்ணச் சுடர் கொண்டிருந்தன. ஓவியத்திற்குள் இருந்து எப்படி ஒளி எழுந்து கண்கூசவைக்க முடியும் என அவன் வியந்தான். ஓவியங்கள் அவனை அள்ளி உள்ளே இழுத்தன. அவை உருவாக்கிய பிறிதொரு உலகில் வாழச்செய்தன. பெருவிழவின்போது ஏற்படும் கள்மயக்குபோல, நெடும்பொழுது இசை கேட்ட பின் எழும் சொல்லின்மைபோல, அவன் உள்ளம் வெறுமையும் ததும்பலுமாக இருந்தது. அவ்வறையின் ஓவிய மலர்வெளியில் அவன் சிறகு முளைத்த சிறுவண்டென பறந்தலைந்தான். மலர்கள் இதழ்கள் விரித்து பூம்பொடி நிறைத்து காத்திருந்தன. அவற்றில் சிறகு முளைத்த கந்தர்வர்கள் தேன்தேர் தும்பிகள் என பறந்தலைந்தனர். அவர்களின் விழிகளில் இருந்தது அந்தக் கள்மயக்கம்.

வாடாத, இதழ்குவியாத, ஒளி மறையாத மலர்கள். மலர்வு நிலை மாறாதமைந்தவை. காலத்தில் நிலைகொண்டவை. ஓவிய மலர்களே தெய்வங்களுக்குரியவை. அவை மலர்களின் அக்கணத் தன்மையை கடந்துவிட்டவை. மலர்களில் அவை தெய்வங்கள். அவற்றிலேயே கந்தர்வர்கள் எழக்கூடும். ஆனால் நிலையிலா மலர்கள் மானுடரின் காலத்தில் அவ்வண்ணம் தங்களை காட்டுகின்றன. தேவர்களின் காலத்தில் அவை

நிலையானவை. அங்கே கணமும் யுகமும் ஒன்றே. மலர்களை மானுடர் வரைந்துகொண்டே இருக்கிறார்கள். அவை மறைந்துவிடும் என அஞ்சியவர்களாக. அவர்கள் வரைய எண்ணுவது மலர்களில் தேவர்கள் காணும் காலத்தை. அவர்கள் தேவர்களின் கண்பெற்று வரைகிறார்கள். தேவர்களின் விழிகளை அம்மலர்கள் நோக்குபவர்களுக்கு அளிக்கின்றன.

அவன் நெடுநேரம் கழித்தே திரௌபதியை கண்டான். முதற்கணம் திடுக்கிட்டு பின்னடைந்தான். அங்கு அவள் ஒரு தொன்மையான தெய்வச்சிலையென அமைந்திருந்தாள். கைவிடப்பட்ட காட்டு ஆலயத்திற்குள் கண்கள் மின்ன அமர்ந்திருக்கும் கொற்றவை சிலை. அவள் அத்தனை முதுமை அடைந்துவிட்டிருப்பதை அவன் அப்போதுதான் பார்த்தான். ஒருபோதும் அவள் உருவம் தன் உள்ளத்தில் முதியவளாக எழுந்ததில்லை என்று தோன்றியது. அவள் உடல் மிக மெலிந்திருந்தது. ஆகவே மேலும் உயரமானவளாகவும் உறுதியான எலும்புகளால் ஆன விரிந்த தோள்கள் கொண்டவளாகவும் தோன்றினாள். முகம் கன்னங்கள் ஒட்டி, கண்கள் குழிந்து, வாயைச் சுற்றி சுருக்கங்களுடன் உதடுகள் அழுந்த மூடியிருக்க அவ்வுலகு கடந்து அமைந்ததுபோல் தோன்றியது.

முதுமை கொண்ட கொற்றவை. அல்லது சாமுண்டி. ஆம், சாமுண்டி. மண்டை ஓடுகளை மாலையாக அணிந்திருக்கிறாளா? வெட்டப்பட்ட தலைகளை குண்டலமாக அணிந்துள்ளாளா? கால் கழலில் அனல் சுழல்கிறதா? நாகங்கள் அணிகளென உடலெங்கும் வளைந்துள்ளனவா? குழலென எழுந்து பரந்து நின்றிருப்பது அழலா? அவ்வழலில் எரிந்துருகி வழிந்தகன்ற தசைக்கு அடியிலிருந்து புடைத்தெழுந்த மண்டை

முகமா? எலும்புருக்கொண்ட உடலா? இங்கே புதுக்கள் வெறியுடன் பிணக்கூத்திடும் பேய்கள் நிறைந்துள்ளனவா? அணிகொண்ட சாமுண்டி. எழுந்தெரியும் அழலுடுத்த அன்னை.

அவள் அணிகளேதும் அணிந்திருக்கவில்லை. காலில் சிலம்போ தலையில் சுடுமலரோ இல்லை. ஆரங்கள் குண்டலங்கள் ஏதுமில்லை. அணியே இல்லாத உடலே அவளை தெய்வமாக்கியது என எண்ணிக்கொண்டான். அவள் விழிகளை அணியெனச் சூடியிருந்தாள். அவை நோக்கிழந்தவைபோல், இரு கரிய வைரங்கள் என மின்னிக்கொண்டிருந்தன. என்றும் அவளில் ஆண் என ஒரு நிமிர்வு உண்டு. பெண் என ஒரு கனிவும் உடனமைந்ததுண்டு. அன்று ஆணென்றும் பெண்ணென்றும் இன்றி கடந்து வெறும் தெய்வமென்று அமர்ந்திருந்தாள். அவள் தன்னை நோக்குகிறாளா என அவன் வியந்தான். அவளை நோக்கியபடி திகைத்து நின்றான். பின்னர் தன்னுணர்வடைந்து அருகணைந்து கைகூப்பினான்.

# களிற்றியானை நிரை - 36

### பகுதி நான்கு : அன்னையெழுகை – 8

யுயுத்ஸு திரௌபதியின் விழிகளை பார்த்துக்கொண்டிருந்தான். தான் பேசும் சொற்கள் அவளை சென்றடைகின்றனவா என்று ஐயுற்றான். திரௌபதி பிறர் பேசும்போது எப்பொழுதும் சற்றே விழிகளை சரித்து வேறெங்கோ நோக்கி வேறெதிலோ உளம் செலுத்தி அமர்ந்திருப்பவள் போலிருப்பாள். அது

பேசிக்கொண்டிருப்பவரை ஏமாற்றும் ஒரு பாவனை என அவன் அறிந்திருந்தான். அவள் நன்கு உளம் ஊன்றவில்லை என்றும், சொற்களை சரியாக அவள் பொருள் கொள்ளவில்லை என்றும் எதிரில் இருப்பவர்கள் எண்ணுவார்கள்.

அவர்கள் அவள் உளம் கொள்ளவேண்டுமென்று எண்ணும் வார்த்தைகளை பிறிதொரு முறை சொல்வார்கள். நாத்தவறி வந்துவிட்ட ஒரு வார்த்தையை மறைக்கும்பொருட்டு அதைச் சுற்றி பொருளற்ற சொற்களால் ஒரு வளையம் அமைப்பார்கள். அவர்கள் கூற விழைவதென்ன மறைக்க விரும்புவதென்ன என்பதை அவள் எளிதில் உணர்ந்துகொள்வாள். பின்னர் அவள் பேசத்தொடங்குகையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்த அனைத்துக்கும் அப்பால் சென்று அவர்களை அவள் பார்த்துவிட்டாள் என்பதை உணர முடியும்.

ஓரிரு முறை அதை தான் அறிந்த பின்னர் யுயுத்ஸு அவளிடம் பேசும்போது தானும் விழிகளை தழைத்து நிலம் நோக்கியபடி சொற்களை கோக்கலானான். அவள் உடலில் சற்று அசைவு எழுகையில், மூச்சொலி மாறுபடுகையில் விழிதூக்கி அவளை பார்ப்பான். அவளை நேருக்கு நேர் பார்த்து பேசுவது கடினமென்று அதன் பின்னரே அவன் கண்டுகொண்டான். அவளுடைய தோற்றம் பேசுபவரில் ஆழ்ந்த அழுத்தத்தை அளித்தது. அவள் ஒரு பெண்ணல்ல, கருவறை வீற்றிருக்கும் தெய்வம் என்பதுபோல. அவளை மானுடர் எவரும் அணுக இயலாதென்பதுபோல. முப்பொழுதையும் எட்டு திசையையும் ஏழு அகநிலைகளையும் நன்கு அறிந்தவள் என்பதுபோல.

அவள் அதற்குரிய பாவனைகளை இயல்பாகவே அடைந்திருந்தாள். எப்பொழுதும் மிகக் குறைவாகவே

பேசினாள். மிகத் தாழ்ந்த குரலில் தான் எண்ணுவனவற்றை உரைத்தாள். ஒவ்வொரு சொல்லுக்கும் நடுவே ஆழ்ந்த இடைவெளிவிட்டாள். அப்போது சொற்கள் ஊழ்கநுண்சொற்கள்போல ஒலிதோறும் அழுத்தம் கொள்கின்றன. ஒலியே உணர்த்துவதாகிறது. அவள் பேசும்போது அவள் குரலைக் கேட்கும்பொருட்டு எவராயினும் சற்றே முன்னகர வேண்டியிருக்கும். அது அவள்முன் கேட்பவர் பணிவது போன்ற ஓர் அசைவை உருவாக்கும். உடலில் ஓர் அசைவெழுந்தால் அவ்வசைவிற்குரிய பொருளை உள்ளம் இயல்பாகவே அடைகிறது. தருக்கி நிமிரும் பாவனையை தோள்களில் கொண்டுவந்தால் எதையும் பொருட்டின்றி எண்ணும் உளநிலை அமைகிறது, தோள்கள் குறுகி தலை சற்று தாழ்கையில் உள்ளம் பணிவு கொள்கிறது என்பதை அவன் அறிந்திருந்தான். அவள் தன் முன் பணியாது பேசும் எவரையேனும் கண்டிருப்பாளா என வியந்தான்.

அவள் எப்பொழுதும் வினாக்களை முழுமைப்படுத்துவதில்லை. அவ்வினா என்ன என்பதை கேட்பவர் புரிந்துகொண்டு தொகுத்துக்கொள்வதற்காக அடையும் பதற்றமே அவ்வினாவிற்கு அவர் அளிக்கக்கூடிய தடைகளை இல்லாமலாக்கிவிடும். பெரும்பாலானவர்கள் அவற்றைக் கேட்டவுடனே “அரசி?” என்று பணிவுடன் மீண்டும் கேட்பார்கள். அவள் விழி நிமிர்ந்து அவர்களை கூர்ந்து பார்த்து முன்பு சொன்ன வினாவின் ஓரிரு சொற்களை சற்றே மாற்றி மறுபடியும் கேட்பாள். அப்பதற்றத்தில் பெரும்பாலானவர்கள் தங்கள் மறுமொழியை உளம்நழுவி சொல்லிவிடுவார்கள். உடனே பதறி அக்கூற்றிலிருக்கும் பிழைகளையோ விரும்பாமெய்களையோ மறைக்கும்பொருட்டு

சொல்பெருக்குவார்கள். அவ்வாறு தங்களை முழுமையாகவே அவள் முன் படைப்பார்கள்.

பிறர் பேசும்போது சில இடங்களில் அவள் காற்று தொட்ட திரை ஓவியம்போல மெல்ல கலைந்து ஓர் அசைவொலி எழுப்புவாள். ஒரு மூச்சொலி எழும். மிக அரிதாக விழிதூக்கி புன்னகைப்பாள். அவ்வெதிர்வினைகள் அனைத்துமே பேசும் சொற்களுடன் நேரடியான பொருத்தமில்லாமல் சற்றே இடம் மாறி விழுவதை யுயுத்ஸு கண்டிருந்தான். அது பேசிக்கொண்டிருப்பவரை உடனடியாக பதறச்செய்யும். தான் பேசிக்கொண்டிருக்கும் சொற்களைப் பற்றிய அலசல் ஒன்றை தனக்குள் நிகழ்த்திக்கொள்ளச் செய்யும். பிழை இழைத்துவிட்டோமா, பொருத்தமற கூறிவிட்டோமா, எண்ணாப் பிறிதொன்று கடந்து வந்துவிட்டதா என நெஞ்சு துழாவிக்கொண்டிருக்கையில் அவர்களின் சொற்கள் தடுமாறத் தொடங்கும்.

தெளிவுறக் கோத்து பிறர் கூறும் சொற்களில் பொய்யே மிகுதி என அவன் கண்டிருந்தான். அது பொய்யல்ல, மானுடர் எவ்வண்ணம் தங்களை காட்டிக்கொள்ள விரும்புகிறார்களோ அது. எவ்வண்ணம் தங்களை தாங்களே சமைத்துக்கொண்டிருக்கிறார்களோ அது. பெரும்பாலும் அது அவர்களால் வாழ்நாள் முழுக்க பயிலப்பட்டதாக இருக்கும். ஆகவே அதற்குரிய சொற்கள், உளநிலைகள், உடலசைவுகள், முகநடிப்புகள் அனைத்தையும் பழகியிருப்பார்கள். மிகத் தேர்ந்த சொல்சூழ்வோர் மட்டுமே அவர்களின் அந்த பாவனையைக் கடந்து ஊடுருவிச்சென்று அவர்களின் மெய்மையை அடையமுடியும். எஞ்சியோர் பெரும்பாலானவர்கள் அந்தத் திரையையே அவர்களென எண்ணுவார்கள். சற்றே

திறன்கொண்டோர் அதை தங்கள் கற்பனையால் கடந்து அக்கற்பனையே அவர்கள் எனக் கொள்வார்கள்.

யுயுத்ஸு அவர்களின் அந்தத் தற்கோப்பைக் குலைத்து உள்ளே செல்ல பல வழிகளை தானே கண்டடைந்திருந்தான். அவர்கள் உருவாக்கும் அச்சித்திரத்தின் ஒருமைக்குள் ஒரு இடைவெளியைக் கண்டடைந்து அதில் விசையுடன் தன்னை செலுத்திக்கொண்டு அவர்களை நிலைகுலைய வைப்பதே அவனுடைய வழக்கம். அவன் சூதன் என்றும் அரசுசூழ்தல் முறையாகக் கற்காதவன் என்றும் அவர்கள் எண்ணியிருப்பதனால் பாம்பு படமெடுப்பதுபோல அவன் எழும்போது அவர்கள் அகம்பதறி நிலைஅழிந்து சொல் சிதறவிடுவார்கள். சில தருணங்களில் கூரிய வினாக்களினூடாக அவர்கள் தங்களை தொகுத்து வைத்திருக்கும் திசையை பிறிதொன்றாக திருப்பிவிடுவான்.

மிக அரிதாக பெரும்பணிவு ஒன்றை நடித்து அவனுக்கு ஒன்றும் தெரியாதென்று அவர்களை நம்பவைத்து மிகுந்த தன்னம்பிக்கையுடன் அவர்களை தங்களைப் பற்றி பேசவிட்டு அவர்கள் தேவைக்கு மேல் சொல் பெருக்கி தங்களை காட்டிக்கொள்ளவிடுவான். எத்தனை பயின்ற தன்நடிப்பாயினும் அதை ஒருவர் மிதமிஞ்சிச் செய்வாரெனில் அது பொய்யாக ஆகிவிடுகிறது. அது பொய்யென்று அவரே உணர்ந்து மீண்டும் தன் எல்லைக்குள் திரும்பும் பொருட்டு அதுவரை சொன்னவற்றை நகையாட்டாக மாற்றி அல்லது பிறிதொரு கோணத்தை அளித்து சற்றே மறுத்து சொல்லெடுப்பார்கள். அத்திரும்பலினூடாக அவர்களை அவன் அடையாளம் காண்பான்.

ஆனால் திரௌபதி அவ்வண்ணம் தன்னிடம் பேசவருபவர்களைக் கடந்து உள்ளே செல்வதை அவர்களே அறிந்திருப்பதில்லை. அவளிடம் பேசிவிட்டு எழுந்து செல்லும்போதுகூட மெய்யாகவே தங்கள் காப்புகளை அவள் கரைத்துவிட்டதை, கடந்து சென்று தங்களை துளியென்றாக்கி அவள் புரிந்துகொண்டதை அவர்கள் உணர்ந்திருக்கமாட்டார்கள். கூர்மிக்கவர்கள்கூட தங்களை அவள் உணர்ந்துகொண்டிருக்கக் கூடுமோ என்று ஐயுற்று அப்படி இருக்காதென்று ஆறுதல் கொண்டு ஊசலாடிக்கொண்டிருப்பார்கள். அவளுடைய தெய்வத்தன்மையே அவ்விலக்கத்தை அளித்தது. தெய்வம் மானுடர்களுடன் அவ்வாறு விளையாடுமா என்ன என்று எண்ணவைத்தது.

அவனுடன் சொல்லாடுபவர்கள் மிக விரைவிலேயே அவன் கடந்து உள்ளே நுழைந்துவிட்டதை அறிவார்கள். அதனால் எச்சரிக்கையும் எரிச்சலும் கொள்வார்கள். அவனை அப்பேச்சின் இறுதிக்குள் எவ்வகையிலாவது புண்படுத்த முயல்வார்கள். அவன் வெறும் ஒரு சூதன்தான் என்பதை அவனிடம் எவ்வண்ணமோ சொல்வார்கள். அவன் சிறுமையோ சீற்றமோ கொள்ளும் ஒன்று அவர்கள் பேச்சில் இயல்பாக எழுந்து வரும். பெரும்பாலும் அது அவனது அன்னையின் காந்தாரநாட்டுப் பிறப்பு குறித்ததாக இருக்கும். அவனுடைய குலத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று அவர்களில் எழும். அது எப்போதும் ஒரு வகை பாராட்டாகவே சொல்லுரு பூண்டிருக்கும்.

அதன் மெய்ப்பொருள் என்ன என்று அவன் அறிவான். “தாங்கள் சூதர்களுக்குரிய நுண்ணுணர்வுடன் இருக்கிறீர்கள், அரசுசூழ்தலில் அது மிகப் பெரிய படைக்கலம்” என்று ஒருவர் சொன்னால் அவன் இளமையில் கடும் சீற்றம் கொண்டு,

விரல்கள் நடுங்க, முகம் சிவந்து கொந்தளித்து, பின்னர் தன்னை அடக்கிக்கொள்வான். பின்னர் அந்தப் படைக்கலம் அவனுக்கு பழகியது. அதை அவர்கள் எடுக்கும் தருணத்திற்காக காத்திருப்பான். அவர்கள் எடுத்த உடனே மேலும் பணிவுடன் அப்படைக்கலத்திலிருந்து ஒழிவான். மேலும் சிறிதாகிவிடுவான். உடல் குறுக்கி அவர்கள் முன் அமர்ந்திருப்பான். “வாள்வீச்சுகளிலிருந்து பூச்சிகள் எளிதாக தப்பிவிடுகின்றன” என்று ஒரு சூதர் சொன்னது அதற்குரியதாக அவனுக்கு எப்போதும் தோன்றியிருந்தது.

ஆனால் அவர்கள் எழுந்து செல்வதற்குள் அவர்கள் கரந்து வைத்திருக்கும் ஓர் இடத்தை மெல்ல தொட்டு அனுப்புவான். அத்தொடுகை அவர்களை திடுக்கிடச் செய்யும். பிறர் எவரும் அறியாத ஓரிடத்தில் அவன் எப்படி வந்தான் என்று திகைப்பார்கள். அது தற்செயலாக இருக்குமோ என்று குழம்புவார்கள். விடைபெற்றுச் செல்கையில் நிலையழிந்திருப்பார்கள். செல்லச் செல்ல அவன் எண்ணிச் சூழ்ந்து அங்கு வந்தடைந்தான் என்பதை புரிந்துகொள்வார்கள். அதை அவன் சொன்னதனால் அல்ல, சொல்லும் நிலையிலிருக்கிறான் என்பதனால் மேலும் சீற்றம் கொள்வார்கள். எவ்வகையிலும் அச்சீற்றத்தை அவனிடம் காட்ட முடியாதென்பதனால் சினம் பெருகி உடல் பதற நின்றுவிடுவார்கள். நாட்கணக்கில் அவ்வலியில் துடிப்பார்கள். பின்னர் அவனை பார்க்கையில் அவர்களிடம் இயல்பாக ஒரு அச்சம் திகழும்.

ஈயல்ல குளவி என்று தன்னை அறிவுறுத்துவதே அவனுடைய சொல்சூழ்தலின் மைய இலக்காக இருந்தது. பிற அனைவரிடமும் அவன் தன் கொடுக்குகளில் ஒன்றை

வெளியே எடுப்பதுண்டு. யுதிஷ்டிரனிடம் அவர் கற்ற நூல்களில் ஒரு போதும் அவர் காணாத ஒன்றை அவன் கூறுவான். அவர் அனைத்து நூல்களையும் மேலிருந்து அணுகுபவர் என்று அவன் புரிந்துகொண்டிருந்தான். அனைத்து நூல்களையும் அடியிலிருந்து அணுகி புதிய ஒரு நோக்கை அவன் அளிப்பான். ஆகவே யுதிஷ்டிரன் அவனிடம் பேசும்பொழுது எப்பொழுதும் அவர் கற்ற நூல்களில் ஒன்றைச் சொல்லி உடனே அதில் ஐயம் கொண்டு அவன் என்ன சொல்கிறான் என்று கேட்பார். அதனூடாக அவனுக்கான இடத்தை அவரே உருவாக்கி அளிப்பார். அவன் அதனூடாக அவரைக் கடந்து சற்றே அப்பால் சென்று நின்று மேலும் பணிவை நடிப்பான்.

நகுலனிடமும் சகதேவனிடமும் அவன் யுதிஷ்டிரனின் அதே பாவனையை தானும் கைக்கொண்டான். யுதிஷ்டிரனின் உடலுடன் அவனுக்கிருந்த ஒற்றுமையும் பேச்சிலும் நோக்கிலும் இருந்த சாயலும் அவர்களை அறியாமல் விழிபதறச் செய்தன. அவன் இளையோன் எனினும் அவர்கள் அறியாமல் மூத்தோனுக்குரிய சொற்களையும் உடல்மொழியையும் அவனுக்கு அளித்தனர். அம்முரண்பாடால் எப்போதும் அவனிடம் நிலைகுலைந்து இருந்தனர். அர்ஜுனனுடன் அவனுக்கு சொல்லாடலே நிகழ்வதில்லை.

பீமன் அவனை எப்போதும் வெற்று உடலாகவே நடத்தினான். பீமனின் பெரிய கைகள் தன்னை சூழ்ந்துகொள்கையில் அவன் ஆடைகளை களைந்துவிட்டு வெற்றுடலுடன் நிற்கும் சிறுகுழவியென உணர்ந்தான். அத்தருணத்தின் உவகை உடனே திகட்டி தவிப்பென்றாகியது. அவன் அணைப்பில் அவன் நிற்கையில் உளமுருகி உடனே தன்னை உணர்ந்து இயல்பாக விலகி அப்பால் சென்றான். ஆனால் எப்போதும் ஓரவிழியால்

அவனை பார்த்துக்கொண்டே இருந்தான். எவ்வகையிலேனும் தனியென, சிறியவன் என, அயலான் என உணர்கையில் பீமனின் வலிய கைகளின் தொடுகையை நாடினான்.

இளைய யாதவரிடமும் திரௌபதியிடமும் மட்டுமே அவன் கொண்ட படைக்கலங்கள் அனைத்தும் பயனிழந்தன. எவ்வகையிலும் கணிக்க முடியாதவர்களாக இருந்தார்கள் அவர்கள். அரிதென நுண்ணென சிடுக்கெனத் தோன்றிய அனைத்தையும் எந்த முயற்சியும் இல்லாமல் இயற்றினார்கள். இயற்றியதறியாமல் அகன்று நின்றனர். தன் முன் இருப்பவர்களை மிகச் சிறியவர்களாக மாற்றி மலையென ஓங்கினர். தேவையான இடங்களில் கூழாங்கல்லென மாறி தங்களை விளையாடக் கொடுத்தனர்.

பின்னர் அவன் அறிந்துகொண்டான், அவர்கள் இருவரிடம் மட்டும் அனைத்துப் படைக்கலங்களையும் கீழே வைத்து எந்தக் காப்புமின்றி நிற்பதே உகந்ததென்று. தன் ஐயங்களை, குழப்பங்களை, நோக்கங்களை அவன் எடுத்த எடுப்பிலேயே அவர்கள் முன் திறந்து வைத்தான். தனக்கு, தன் தரப்புக்கு எது நன்றோ அதை அவர்களே உவந்து செய்யவேண்டும் எனும் கோரிக்கையை அவர்கள் முன் வைத்தான். அதற்கான சொற்களை மட்டுமே சூழ்ந்தான். அவர்கள் நலம் சூழ்வதன்றி பிறிதொன்று கருதமாட்டார்கள் என்று அவன் ஆழம் உறுதியாக நம்பியது. ஆகவே அவர்கள் முன் அவ்வாறு சென்று முழுக்க திறந்துகொள்வது ஒரு விடுதலை என்று தோன்றியது. அவர்கள் முன்னிருந்து எழுகையில் நெடுநேரம் அருவியில் குளித்து மீண்டதுபோல் நிறைவும் ஓய்வும் தோன்றியது.

யுயுத்ஸு தன் தூதை முறையான சொற்களில் முதலில் சொன்னான். அதன்பின் யுதிஷ்டிரன் தன்னிடம் சொன்னவற்றை எல்லாம் ஒரு சொல் எஞ்சாமல் உரைத்தான். சுரேசரின் ஆணையையும் கூறி முடித்தான். திரௌபதி அவன் சொற்களைக் கேட்டபடி விழிதாழ்த்தி அமர்ந்திருக்க அவன் அவள் மேலும் எதிர்பார்ப்பதென்ன என்று எண்ணிக்கொண்டு அவள் கால்களை நோக்கி இருந்தான். அவள் மெல்ல அசைந்தமர்ந்தாள். “நான் இங்கே தங்கியிருப்பதாக முடிவேதும் எடுத்து இங்கே வரவில்லை” என்று திரௌபதி மெல்லிய குரலில் சொன்னாள். “ஆனால் இங்கு வந்தபின் இங்கே அமைந்துவிட்டேன். எதன்பொருட்டும் இங்கிருந்து கிளம்பவேண்டும் என்று தோன்றவில்லை” என்றாள்.

“அரசி, தாங்கள் இந்திரப்பிரஸ்தத்தை விட்டு கிளம்ப மறுப்பீர்கள் என்று அரசர் ஐயம் கொண்டிருக்கிறார். அவர் அஸ்தினபுரியின் அரசரென மணிமுடி சூடிக்கொள்ளவே விழைகிறார். இந்திரப்பிரஸ்தத்தில் அவருக்கு சிறு ஒவ்வாமை உள்ளது. அது தன் நகர் அல்ல என்று எண்ணுகிறார். தாங்கள் அஸ்தினபுரிக்கு வந்து அவருடன் அமர்ந்து மணிமுடி சூடிக்கொள்ள வேண்டும் என அவர் விழைவது அதனால்தான். இந்திரப்பிரஸ்தத்தில் அச்சடங்கு நிகழுமெனில் அது தாங்கள் முடிசூடியது போலாகும். இது தங்கள் நகர், இங்கு முன்பு நடந்த ராஜசூயத்திலும் மும்முடி சூடியவர் நீங்கள். அஸ்தினபுரி குருகுலத்திற்கு உரியது. யுதிஷ்டிரனின் முன்னோர்களின் மணிமுடி அங்குள்ளது. அவர் சூடிக்கொள்ள விரும்புவது அதைத்தான்.”

“உண்மையைச் சொல்வதென்றால் நெடுநாட்களாக அவர் தன்னுள் கொண்டிருக்கும் கனவு அது. அக்கனவு தன்னுள்ளிருப்பதை அவர் அறிந்திருந்தார். அவ்வாறல்ல என்று பிறரை நம்பவைக்க முயன்றுகொண்டிருந்தார். தன்னை நோக்கி அவ்வாறல்ல என்று பலமுறை கூறினார். இப்புவியில் அவர் முதன்மையெனக் கருதுவது அதுதான். தெய்வங்களைவிட, அறத்தைவிட, உடன்பிறந்தாரைவிட, தங்களைவிட அவருக்கு அம்மணிமுடியே முதன்மை பொருட்டு. அதை அவர் சூடுகையில் நீங்கள் அங்கு இருக்க வேண்டுமென்று அவர் விழைகிறார். அதுவே அவருடைய முழு வெற்றி. அவருடைய பிறவி நிறைவுறுகை” என்றான் யுயுத்ஸு.

“அதற்குப் பின்னால் அரசியல் கணிப்புகள் பல உண்டு என்பதை தாங்கள் அறிவீர்கள். தாங்கள் வந்து அவருடன் அமர்ந்து மணிமுடி சூடவில்லையெனில் அவரது குலம் ஒருபடி குறைவானது என்பதனால் இன்னும்கூட ஷத்ரியர்களின் முழுதேற்பை அவருடைய அரசுநிலை பெறாமல் போகலாம். அவர் போர்வெற்றியினால் மட்டுமே ஷத்ரியர்களின் முழுதேற்பை அடைய முடியாதென்பதை இதற்குள் புரிந்துகொண்டிருக்கிறார். தோற்ற பின்னரே ஷத்ரியர்களின் குலத்தன்னுணர்வு சீண்டப்பட்டுள்ளது என்பது இயல்பானது. யாதவக்குருதி கொண்டோரால் தாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்பதை அவர்கள் சொல்லிக்கொள்ள விழையமாட்டார்கள். ஆகவே அதை மறுப்பார்கள். நூல்களில் மழுப்புவார்கள். களத்தில் வென்று நிகர்செய்யும் கனவை வளர்த்துக்கொள்வார்கள். ஆகவே ஒருபோதும் பகை அணையாது.”

“மணிமுடி சூடுகையில் தாங்கள் அருகிருந்தால் ஷத்ரியகுலத்துப் பேரரசியால் தோற்கடிக்கப்பட்டோம் என்று அவர்கள் எண்ணிக்கொள்ள முடியும். அவர்கள் விழைவது அத்தகைய ஓர் அடையாளத்தை மட்டும்தான். அதன்பின் அவர்கள் பகைமறக்கக்கூடும். சிதைந்த நாடுகளை மீட்டுக் கட்டியெழுப்ப முடியும். அரசி, தாங்கள் முடிசூடி அதை பாரதவர்ஷத்து அரசர்கள் முழுதேற்பார்கள் என்றால் ஒரு தலைமுறைக் காலத்திற்கேனும் பாரதவர்ஷத்தில் போர் இல்லாமலாகும். குடிகள் செழிப்பார்கள். நகர்கள் மீண்டெழும். வேள்வியும் அறமும் மெய்மையும் நிலைகொள்ளும். தாங்கள் உளம்கனியக் காத்து நின்றிருக்கின்றன கோடி உயிர்கள்.”

“அதன் பொருட்டே தங்களை அழைக்கிறார் யுதிஷ்டிரன்” என்று யுயுத்ஸு தொடர்ந்தான். “ஆகவேதான் என்னை இங்கு அனுப்பியிருக்கிறார் இங்கு அமைச்சரை அனுப்பியிருக்கலாம். தங்கள் முன் மேலும் சிறப்பாக அவர் சொற்களை அவர்களால் முன்வைக்க முடிந்திருக்கும். ஆனால் தங்கள் முன் அரசுசூழும் ஆற்றல் கொண்டவர்கள் எவரும் இல்லை. ஆனால் நான் அவருடைய உடலுருவுடன் அணுக்கம் கொண்டவன். என்மேல் நீங்கள் மைந்தன் எனக் கொண்டுள்ள கனிவை அவர் அறிவார். ஆகவே என்னை அனுப்பியிருக்கிறார். என் சொல் ஆணையென எழாது, அடிபணிந்த மன்றாட்டென்றே ஒலிக்கும் என அவர் அறிந்திருக்கிறார்.”

“ஆகவே இந்தச் சொற்களுக்கு உங்கள் உளமிரங்கவேண்டும். அஸ்தினபுரியின் அரசரும் என் தமையனுமாகிய யுதிஷ்டிரன் தாங்கள் இந்திரப்பிரஸ்தத்தைவிட்டு அஸ்தினபுரிக்கு வந்து அவர் ராஜசூயத்தில் அமர்ந்து மும்முடி சூட்டிக்கொள்ளுகையில் அருகிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதை ஏற்றருள்க!”

என்றான் யுயுத்ஸு. திரௌபதி தலையசைத்தாள். அதன் பொருள் அவனுக்கு புரியவில்லை. அவன் மேலும் தழைந்து “தாங்கள் எண்ணுவதென்ன என்பதை நான் நன்கு அறிவேன். ஏனென்றால் அன்னையை மகவென உங்களை அறிந்துகொண்டிருப்பவன் நான். மிகைச்சொல் என்றால் பொறுத்தருள வேண்டும்” என்றான். அவள் விழிதூக்கி நோக்கினாள்.

“அஸ்தினபுரியின் ஆட்சியில் இந்திரப்பிரஸ்தம் கைவிடப்படும் என்று உணர்ந்திருக்கிறீர்கள். அது மெய். ஒருபோதும் இந்திரப்பிரஸ்தம் தழைத்தோங்க யுதிஷ்டிரன் விரும்பமாட்டார். இந்திரப்பிரஸ்தம் என்னும் சொல்லே பாரதவர்ஷத்தின் நாவிலிருந்து அகலுமெனில் அவர் நிறைவடையவும் கூடும். முன்பு அங்கு முடிசூடிக்கொண்ட போதே அவரிடம் அந்த ஒவ்வாமை இருந்ததை நான் இப்போது நினைவுகூர்கிறேன். இப்போது சூதர்கள் பாடும் எப்பாடலிலும் அஸ்தினபுரியின் அரசன் என்ற சொல்லையே அவர் விரும்புகிறார். ஒன்றை வெறுப்பவர்கள் அதை விலகுவார்கள். ஒன்றிலிருந்து ஒவ்வாமை கொண்டவர்கள் அதை பலமடங்கு விலக்குவார்கள். ஒன்றை அஞ்சுபவர்கள் அதை பற்பல மடங்கு விலக்குவார்கள்.”

“மூத்தவர் யுதிஷ்டிரன் இந்திரப்பிரஸ்தத்தை அவர் கைவிடுவதைப்பற்றிக்கூட ஒரு பேச்சு எழுவதை விரும்பமாட்டார். ஆனால் அதை அவர் உளம்கொள்ளவும் மாட்டார். இந்நகரம் இப்பொழுதே புழங்குவாரற்ற பெருவெளியாக உள்ளது. இங்கே ஒரு துணை தலைநகர் அமையும். அவ்வப்போது அவர் இங்கு வந்து தங்கவும் கூடும். ஒருவேளை முடிசூட்டிக்கொண்டபின் தாங்கள் இங்கு வந்து தனித்து தங்கலாம். தங்களின் அவை இங்கு கூடவும் கூடும்.

ஆனால் அஸ்தினபுரியில் அவர் மணிமுடி சூட்டிக்கொண்டால், உடன் நீங்கள் அங்கே அமர்ந்தால் இந்திரப்பிரஸ்தம் கைவிடப்படும், மறக்கப்படும். அதை எவருமே மாற்றமுடியாது. அதுவே ஊழின் வழி” என்றான் யுயுத்ஸு.

“ஏனெனில் குருக்ஷேத்ரப் பெரும்போர் அஸ்தினபுரிக்காகவே நிகழ்ந்ததென்பதை சூதர்கள் பாடிப் பாடி நிறுவிவிட்டார்கள். பாரதவர்ஷம் எங்கும் இன்று திகழும் பெயர் அஸ்தினபுரியே. இங்குள்ள கோட்டைகளையும் பெருமாடங்களையும்விட, செல்வக்குவைகளைவிட மதிப்பு மிக்கது அஸ்தினபுரிக்கு இருக்கும் தொன்மை. அச்சொல் எழுப்பும் கனவு. ஆகவே இந்நகர் குறித்த தங்கள் ஐயங்களும் அச்சங்களும் முற்றிலும் உண்மை. அதன் பொருட்டு நீங்கள் தயங்குவது சரியானது.”

திரௌபதி அவனை நோக்கிக்கொண்டு அமர்ந்திருந்தாள். யுயுத்ஸு தொடர்ந்தான். “தாங்கள் பாரதவர்ஷத்திலுள்ள பல்லாயிரம் கோடி மக்களின் கனவுகளுக்கு கடன்பட்டவர். குருக்ஷேத்ரத்தில் உங்கள் பொருட்டு உயிர்துறந்த படைவீரர்களின் குருதிக்குக் கடன்பட்டவர் என்று அரசர் தங்களிடம் கூறும்படி என்னிடம் சொன்னார். தாங்கள் அஸ்தினபுரியில் மணிமுடி சூடி அமரவேண்டும் என்பதன் பொருட்டே மக்கள் உயிர்துறந்தார்கள் என்றார். நீங்கள் மக்களின் கனவுகளால் சூழப்பட்டிருக்கிறீர்கள் என்றே நானும் எண்ணுகிறேன். அரசகுடியினர் அக்கனவுகளை தவிர்க்கவே முடியாது.”

“ஆனால் இச்சொற்கள் தங்களை இழுத்து வருவன என்று அரசருக்கே நம்பிக்கை இல்லை. ஏனெனில் எதனுடனும் எந்நிலையிலும் கட்டுப்பட்டவராக தாங்கள் தங்களை உணர்வதில்லை. ஆகவே பிறிதொன்று சொன்னார்.

அஸ்தினபுரியின் அவையில்தான் தாங்கள் சிறுமை செய்யப்பட்டீர்கள். அங்குதான் உங்கள் வஞ்சினம் உரைக்கப்பட்டது. ஆகவே அங்கு ராஜசூயம் நிகழ்ந்து அதே அவையில் நீங்கள் முடிசூடி அமர்கையிலேயே அவ்வஞ்சம் முழுமை பெறுகிறது. அவ்வஞ்சம் உங்களுக்குள் இன்று இல்லாமல் இருக்கலாம். ஆனால் பாரதவர்ஷத்தின் பலகோடிப் பெண்டிர் அதை தங்கள் வஞ்சம் என ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வழிவழியாக பிறந்து எழும் பெண்கள் அதையே முழுச் சீற்றதுடன் வந்தடைவார்கள். அவர்கள் அனைவருக்குமான மறுமொழியாக தாங்கள் அங்கு அமரவேண்டும். அக்கதை அவ்வண்ணமே நிறைவடையவேண்டும்."

"அதை என்னிடம் சொல்லும்போது அதுவும் தங்களை அங்கு அழைத்து வராமல் போய்விடுமோ என்ற அரசர் அஞ்சினார் போலும். ஆகவே அறுதியாக ஒரு கணவராக, தங்களுக்காக இதுகாறும் வாழ்ந்தவராக நின்று எளிய மன்றாட்டாகவும் இதை முன் வைத்தார். இறுதியாக தாங்கள் முடிவெடுக்கலாம்" என்றான் யுயுத்ஸு. "இவை அனைத்துமே மெய்யானவை என்றே நான் உணர்கிறேன். தாங்கள் வந்தாகவேண்டும் என நானும் என் ஆழத்தில் உணர்வதனாலேயே இங்கே வந்தேன். இது என் தனிப்பட்ட மன்றாட்டும் கூட."

அவள் கலைந்து மூச்செறிந்து "இந்நகரை பார்த்தாய் அல்லவா?" என்றாள். "ஆம்" என்றான் யுயுத்ஸு. "இந்நகரிலும் மக்கள் வந்து குழுமிக்கொண்டிருக்கிறார்கள். இந்நகரில் அவர்கள் நிலைபெறுவார்கள். இந்நகர் இவர்களால் நெடுங்காலம் வாழும்" என்றாள். "ஆனால் இன்று இதற்கு இருக்கும் முழுமையும் முதன்மையும் நீடிக்காது" என்றான் யுயுத்ஸு. "அதை நானும்

அறிவேன். நான் இங்கிருந்து அதை சிறப்புறச் செய்ய முடியும். இங்கு வரும் குடிகள் எனக்கு போதும். இவர்களே என்னை நம்பி இங்கே வந்தவர்கள். என் கடன் முதன்மையாக இவர்களிடமே. இங்கு நான் முடிசூடி அமர்ந்தால் அனைத்துக்கும் நிறைவென ஆகும். பாரதவர்ஷத்தின் தலைநகராக இந்நகரை நிலைநிறுத்துவது எனக்கு மிக எளிதே.”

“ஆம், தங்களால் இயலும்” என்று யுயுத்ஸு சொன்னான். “எனில் சொல், எதன் பொருட்டு நான் அஸ்தினபுரிக்கு வந்து அவருடன் அமர்ந்திருக்க வேண்டும்? இந்நகரை அழிய விடுவதற்கான முடிவை நான் ஏன் எடுக்க வேண்டும்? என்னை நிறைவுறச் செய்யும் ஒன்றை நீ சொல்வாயெனில் நான் உடன்படுகிறேன்” என்றாள். யுயுத்ஸு அவளை நேர்விழி கொண்டு பார்த்து “பேரரசி, தாங்கள் இந்நகரை அஸ்தினபுரிக்கு மேல் பாரதவர்ஷத்தின் தலைநகர்களுக்கு நிகராக நிலைநிறுத்த முடியும். ஆனால் அதை தாங்கள் செய்யமாட்டீர்கள்” என்றான். அவள் விழித்து நோக்கி அமர்ந்திருந்தாள்.

“இந்நகரைக் கட்டி எழுப்புகையில் மாகிஷ்மதியையும் மகேந்திரபுரியையும் உருவாக்கிய அசுரப்பேரரசர்களின் உளநிலையில் இருந்தீர்கள். இங்கு ஒவ்வொன்றும் பேருருக்கொண்டது தங்கள் ஆணவத்தால். அந்த ஆணவம் இன்று உங்களிடம் இல்லை. ஆகவே இதை உங்களால் நிலைநிறுத்த முடியாது. இடையாடையைக் கழற்றி வீசி நீரில் பாயும் உளநிலையுடன் இந்நகரை நீங்கள் அகற்றி விலகிச்செல்லக்கூடும். இந்நகர் மேல் மெய்யாகவே உங்களுக்கு பற்றில்லை. ஏனெனில் இவ்வுலகில் எதன் மீதும் இன்று உங்களுக்கு பற்றில்லை. பற்றற்றவர்கள் பேரரசர்களாக முடியாது.”

திடுக்கிட்டவள்போல் அவள் அவனை நோக்கி அமர்ந்திருந்தாள். “நீங்கள் இன்னும் நெடுங்காலம் இங்கு திகழமுடியாது. கோல் கொண்டு எழுவது மட்டும் அல்ல, குடி கொண்டு வாழ்வதும்கூட தங்களால் இயலாது. கனி பழுத்த பின் மரத்தை அது கைவிடுகிறது. நீங்கள் உலகிலிருந்து அகன்றுவிட்டீர்கள். இக்குடிகளுக்கு, பாரதவர்ஷத்தின் மக்களுக்கு, மூதாதையருக்கு, பிறப்போருக்கு என எப்பொறுப்பையும் நீங்கள் இனி ஏற்க மாட்டீர்கள்” என்று யுயுத்ஸு சொன்னான்.

“ஆனால் இறுதியாக எஞ்சும் கைப்பொருளை கனிந்து எவருக்கேனும் அளிக்க முடியும். பெறும் தகுதி கொண்டவர்களில் முதல்வர் அங்கே துவாரகையில் பிறந்திருக்கும் இளவரசர். ஒரு பூனைக்குட்டியளவுக்கே இருக்கிறார். அவர் உயிர்கொண்டெழுவது பீதர்நாட்டு மருத்துவர்களிடம், ஊழிடம் உள்ளது. அவர் எழுந்து வரவேண்டுமென்றால் இங்கிருந்து பெரும் அறைகூவல் ஒன்று செல்லவேண்டும். அதைவிட பெருங்கொடை ஒன்று அளிக்கப்படவேண்டும். அதை அச்சிற்றுடலில் குடியேறியிருக்கும் ஆத்மன் அறியவேண்டும். நீங்கள் மும்முடிசூடி அஸ்தினபுரியில் அமர்ந்தால் அவர் ஷத்ரியர்களால் முழுதேற்கப்பட்ட பேரரசொன்றினை அடைவார். ஐயமின்றி ஷத்ரியர் என ஏற்கப்படுவார்” என்றான் யுயுத்ஸு. பின் கைகூப்பியபடி விழிதாழ்த்தி அமர்ந்திருந்தான்.

திரௌபதி பெருமூச்சுவிட்டாள். பின்னர் மெல்ல எழுந்து தன் மேலாடையை சீரமைத்தாள். தணிந்த குரலில் “சென்று சொல்க அரசரிடம்! நான் அஸ்தினபுரிக்கு வருகிறேன்” என்றாள்.

# களிற்றியானை நிரை - 37

## பகுதி ஐந்து : விரிசிறகு – 1

நகர்மேல் எழுந்துநின்ற கோட்டை மேலிருந்து சம்வகை சூழ நோக்கிக்கொண்டிருந்தாள். அஸ்தினபுரிக்குள் பாரதவர்ஷம் எங்கணுமிருந்து மக்கள்பெருக்கு வந்து நிறையத் தொடங்கி ஒரு மாதம் கடந்துவிட்டிருந்தது. ஒவ்வொரு நாளும் வருபவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருந்தது. அனைத்துத் தெருக்களிலும் தலைகள் செறிந்து திரளன்றி பிறிதொன்றும் விழிக்கு தெரியாமலானது. நகரம் ஒரு கொடியென நெளிவதாக, சுனையென அலைகொள்வதாக விழிமயக்கூட்டியது. ஒவ்வொருவரும் அந்நகரை நோக்குவதை விரும்பினர். எங்கேனும் உயர்ந்த இடத்தில் இருந்து அதை நோக்கியவர்கள் மெய்மறந்து விழிகளாகி நெடுநேரம் நின்றிருந்தனர்.

எறும்புக்கூட்டங்கள்போல மக்கள் ஒழுகிக்கொண்டிருந்தனர். ஆயினும் மேலும் மேலுமென உள்ளே வந்து செறிந்துகொண்டிருந்தனர். எவரையும் விலக்குவது இயலாதென்பதை அதற்குள் புரிந்துகொண்டிருந்தார்கள். பெரும்பாலானவர்கள் நெடுந்தொலைவிலிருந்து வந்தனர், அங்கு வருவதொன்றே வாழ்வின் நோக்கமெனக்கொண்டு ஊர்களிலிருந்து கிளம்பியிருந்தனர். அவர்களை எந்தத் தடையும், எந்த ஆணையும் அஸ்தினபுரியிலிருந்து விலக்க இயலாதென்பதை காவலர் அறிந்துவிட்டிருந்தனர். அந்த மக்களைச் சென்றடையும் ஆணைகள் ஏதும் காவலர்களிடமிருக்கவில்லை. சொற்கள், முழவொலிகள், கொம்பொலிகள். சவுக்கடிகள்கூட.

அவர்களின் உளநிலையில் அவை அனைத்துமே விளையாட்டாக மாறின. சவுக்கடி பட்ட பீதர்முகம் கொண்ட உழவன் ஏதோ சொல்ல அவனுடன் வந்தவர்கள் வெடித்துச் சிரித்தனர். “என்ன சொல்கிறான்?” என்று சவுக்கு வீசிய வீரன் கேட்டான். அவர்களுக்கு அந்தச் சொற்களும் புரியவில்லை. “என்ன சொல்கிறான்?” என்று அவர்கள் அதையே தங்கள் மூக்கடைத்த கிளிக்குரலில் திரும்பக்கூவினர். அதை மாறிமாறி பல ஒலிகளில் கூச்சலிட்டு நகைத்தபடி முன்னால் சென்றனர். அவன் அவர்களின் சிரிப்பை நோக்கியபடி நின்றான். செல்லும் ஒவ்வொருவரிடமும் “அவர்கள் சொல்வதென்ன? சொல், அவர்கள் சொல்வதென்ன?” என்று கேட்டான். அவர்கள் அனைவருமே சிரிக்கும் முகம் கொண்டிருந்தனர். சிரிப்பு ஓர் ஒளியோடை என அவன் முன் நெளிந்து சென்றது.

அவன் அச்சொற்களை திரும்பத்திரும்ப தன் நாவில் பதியவைத்துக்கொண்டான். பலரிடம் உசாவினான். இறுதியில் ஒருவன் சொன்னான் “நாக்கு என்கிறார்கள், வீரரே”. காவல்வீரன் திகைத்து “நாக்கு என்றா?” என்றான். “ஆம், சவுக்காலடிப்பதை நீங்கள் அவர்களை நக்குகிறீர்கள் என எடுத்துக்கொள்கிறார்கள்.” காவல்வீரன் சோர்ந்து “மெய்யாகவா?” என்றான். பின்னர் தன் காவல்தலைவனிடம் “இவர்களை சவுக்காலடிப்பதில் பயனில்லை. அம்புகளை எய்தால்கூட அதை கோழி கொத்துவது என்று சொல்லி சிரித்துக்கொண்டு உயிர்விடுவார்கள்” என்றான். காவல்தலைவன் அவனை நோக்கி விழிமலைத்திருந்தான். “ஆம், அவர்கள் பித்தர்கள் போலிருக்கிறார்கள்... அவர்களை நோக்கி நாம் எதையும் சொல்லமுடியாது” என்றான். காவல்வீரன் “குழந்தைகள்போல” என்றான். சம்வகை அவர்களின் பேச்சை கேட்டுக்கொண்டு அப்பால் நின்றிருந்தாள். ஒருகணம் விழிதூக்கியபோது

கடந்துசென்ற அத்தனைபேரும் சிரித்துக்கொண்டிருப்பதைக் கண்டு முதல்முறையாக துணுக்குற்றாள்.

அந்த மக்கள் பலவகையான முகங்கள் கொண்டிருந்தனர். உடலசைவுகளேகூட வேறுபட்டன. “மானுடர் ஒன்றே என்பது பொய்மொழி. விலங்கெல்லாம் ஒன்றே என்பதுபோல. புலியும் பூனையும் வேறுவேறே. நாயும் பூனையும் வேறு வேறு” என்று ஒரு காவல்வீரன் சொன்னான். “ஆனால் நாம் இவர்களை ஒன்றெனக் காண்கிறோம். ஒற்றைத்திரள் என ஆக்கிக்கொள்கிறோம். எத்தனை முகங்கள், எத்தனை விழிகள்!” அவர்கள் சொல்லிச் சொல்லிச் சலித்தும் சொல்லிக்கொண்டிருந்தனர். “முகம் என்னும் வடிவம் ஒன்றே பொது. அவை கலங்கள், ஊற்றிவைக்கப்பட்டவை வெவ்வேறு நீர்மைகள்” என்றான் ஒருவன்.

அவர்களிடம் கள்வாங்கி அருந்திவிட்டு மீசையை நீவித்துடைத்து பூச்சிகளை துப்பியபின் சூதன் ஒருவன் திரும்பி அத்திரளைப் பார்த்தான். “நீங்கள் இங்கே இருந்து கண்டது சிறு வட்டம் மட்டுமே. பாரதவர்ஷம் முகங்களின் பெரும்பரப்பு. விழிகளின் விண்மீன் வானம். இதோ இந்த நகரில் இப்போது பாரதவர்ஷம் ஒரு சிறுபுள்ளியில் குவிகிறது. வானம் பனித்துளியில் என.” அவன் கைசுட்டி முகங்களை காட்டினான். தனக்குத்தானே சிரித்தவனாக “விரித்துப் பரப்பியதை எல்லாம் அள்ளிச் சுருக்கிக்கொள்கிறது ஊழ். விதைநெல் சேர்க்கும் உழவனைப்போல” என்றான்.

ஆனால் மெல்லமெல்ல அத்திரள் ஒற்றை முகமெனத் தெரியலாயிற்று. ஒற்றை மொழிகொண்டு பேசலாயிற்று. காவல்மாடங்களின் மேல் நின்றிருக்கையில் அந்தத் திரளின் முகம் வானுருவமெனத் தெரிந்து உளம் திகைக்கச்செய்தது.

அதன் சொல் துயிலிலும் வந்து அழைத்தது. ஆணையென்றாகியது. அறைகூவலாக ஒலித்தது. அதை கேளாமல் வாழமுடியாதென்றாகியது. படைக்கலங்கள் அதன் முன் தணிந்தன. பூதமென எழுந்து நின்று அது அவர்களை மிகக் குனிந்து நோக்கியது. “செய்” என்றது. “பணி” என்றது. “தொழு” என்றது. “நானே” என்றது. “ஆம் ஆம் ஆம்” என்றனர் வீரர்கள்.

அஸ்தினபுரியின் அனைத்துப் பாதைகளும் மக்கள்பெருக்கு செறிந்து ஓடைகளென்றாயின. பாதைகள் மக்கள் வந்து வந்து அகன்று இருமடங்கு விரிவு கொண்டதாயின. பாதைகளின் இருபுறமும் இருந்த காடுகள் வெட்டி அழிக்கப்பட்டு அங்கே குடில்கள் உருவாயின. அக்குடில்கள் பெருகி மேலும் இருபக்கங்களிலாக அகன்று சிற்றூர்களாயின. “முந்திரிக்கொடியில் கனிக்கொத்துகள் செறிவதுபோல் ஒவ்வொரு பாதையிலும் சிற்றூர்கள் உருவாகியுள்ளன” என்று ஒற்றனாகிய சூதன் சொன்னான். “காட்டெரி பரவுவதுபோல் மானுடர் எரிந்து விரிகிறார்கள். உடல்கள் தழல். உண்டு தீராத பசிகொண்ட அலைவு” என்றான்.

அஸ்தினபுரியைச் சுற்றி நூற்றியெட்டு ஊர்கள் உருவாயின. ஒவ்வொன்றுக்கும் இயல்பாகவே பெயர்கள் அமைந்தன. அங்கு வந்து தங்கிய குடிகள் கொண்ட தனித்தன்மையை அவ்வழி கடந்து சென்ற பிறர் கண்டு சூட்டிய பெயர்களாக அவை அமைந்தன. பெரும்பாலும் விந்தைகளைக் கண்டுதான் அப்பெயர்கள் சூட்டப்பட்டன. அரிதாக அடையாளங்களின் வழியாக. எப்போதாவது எந்நோக்கமும் இன்றி. அப்பெயர்கள் எதிலும் அறிவு எதுவும் செயல்படவில்லை. அவை குழந்தை நோக்கில் இடப்பட்ட பெயர்களாகவே தெரிந்தன. சிரிப்புத்தலை

என ஓர் ஊருக்கு பெயர் இடப்பட்டிருப்பதைக் கேட்டு தாங்கள் நகைத்ததை பின்னர் அவர்கள் எண்ணிக்கொண்டனர். “கைப்புண்” என்றும் “பூனைக்காது” என்றும் ஊர்களுக்கு பெயர்களிடப்பட்டன. “நல்ல ஊற்று” என்றும் “உப்புக்கஞ்சி” என்றும் ஊர்களுக்கு பெயர்கள் அமைந்தன. ஒவ்வொரு புதுப் பெயரும் புன்னகைக்க வைத்தது. அப்பெயர்கள் நிலைகொண்டதே அப்புன்னகையால்தான் என்று தோன்றியது.

பல ஊர்களின் பெயர்கள் விந்தையான அயல்மொழியில் அமைந்திருந்தன. அவற்றை சூதர்களைக்கொண்டு மொழிபெயர்க்க வேண்டியிருந்தது. அதன் பின்னரும் அவை ஒலிகளாகவே அமைந்தன. அயல்மொழிச் சொற்களை வெற்றொலியெனக் கேட்ட செவிகள் அவற்றை ஏளனம் கலந்து சொல்லத்தொடங்கி புதிய பெயர்களை யாத்தன. ஊர்களைப் பதிவுசெய்ய ஒரு அமைச்சு அமைந்தது. அதில் நாளுமென பெயர்கள் வந்து தங்களை அடுக்கிக்கொண்டன. “இளமையில் ஒரு கதை கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு முறை சிறகை விரித்து அடுக்கும்போதும் தூவல்கள் பெருகும் ஒரு பறவையைப்பற்றி. அது ஆணவம் கொண்டு கடல்மேல் பறக்கலாயிற்று. சிறகுகள் பெருக முடியாமல் நீர்வெளியில் விழுந்து மறைந்தது” என்றார் சுதமன்.

அஸ்தினபுரியின் நான்கு பக்கமும் உருவாகி பெருகிய ஊர்ப்பெயர்களுடன் அத்திசையையும் இணைத்துக்கொள்ளச் சொன்னாள் சம்வகை. பெயரைக் கேட்டவுடன் அது எங்குள்ளது என்ற உளப்பதிவு உருவாக வேண்டியிருந்தது. தட்சிண மிருகபாதம், உத்தரமாகம் என்று பெயர்கள் அமைந்தன. அப்பெயர்கள் சூட்டிய ஊர்களைக்கொண்டு அஸ்தினபுரியின் நிலவரைபடம் ஒன்றை உருவாக்கும் பணியை சுதமன்

மேற்கொண்டார். கலிங்க நாட்டிலிருந்து வந்த சிற்பிகள் எழுவர் அமர்ந்து சேர்த்து தைத்து உருவாக்கப்பட்ட பெரிய தோல்திரையில் அடர்ந்த எண்ணை வண்ணங்களில் அஸ்தினபுரியின் கோட்டையையும் அதைச் சுற்றி அமைந்த ஊர்களின் பெயர்களையும் வடிவமைத்தனர்.

நிலம் வரையப்படுவதை சம்வகை ஒவ்வொரு நாளும் சென்று நோக்கிவந்தாள். நிலம் என அவள் உணர்ந்த ஒன்றுடன் அக்கோட்டுவிரிவை அவளால் இணைத்துக்கொள்ள இயலவில்லை. அது வேறு ஒரு நிலமாக, எங்கோ இருக்கும் ஒன்றாகத்தான் தோன்றியது. ஒவ்வொருநாளும் அதில் வரையப்பட்ட ஊர்களுக்கு அவள் புரவியில் சென்று மீண்டாள். மெல்ல மெல்ல அந்த கோட்டுரு நிலமென்று ஆகியது. பெரும்பாலான ஊர்கள் ஓடைகளால் இணைக்கப்பட்டிருந்தன என்பதை கோட்டுருவால்தான் அவள் அறிந்துகொண்டாள். அவை பின்னர் சாலைகளாலும் பாதைகளாலும் இணைக்கப்பட்டன. இருவகை நரம்புகளால் அவை ஒன்றெனப் பின்னப்பட்டன.

“இவ்வாறு நகரைச்சுற்றி ஊர்கள் அமைவது ஒருவகையில் நன்று. அஸ்தினபுரிக்குள் வருபவர்களை இந்த ஊர்க்ளே தாங்கிக்கொள்ளும்” என்று சுதமன் சொன்னார். “ஆயிரம் அணைகளைக் கடந்து இங்கே வரவிழைபவர்கள் மட்டும் வரட்டும்.” சுரேசர் வெளியிலிருந்து வருபவர்கள் அனைவரும் அச்சிற்றூர்களுக்குச் செல்லவேண்டும் என்று ஆணையிட்டார். ஆனால் அஸ்தினபுரிக்குள் வந்து அங்கு தங்கள் ஊழ் என்னவென்று அறிந்து அதன் பின்னர் வெளிச்சென்று மட்டுமே மக்களால் அச்சிற்றூர்களில் தங்க இயன்றது. அங்கு சென்ற

பின்னரும் அவற்றை அஸ்தினபுரியின் கைகளென கால்களென கற்பனை செய்துகொண்டார்கள்.

ஆனால் சிலர் தாங்கள் விட்டுவந்த ஊர்களை அங்கு திரும்ப உருவாக்கிக்கொண்டார்கள். அவ்வூர்களின் பெயர்களையே அங்கு அமைத்துக்கொண்டார்கள். "விட்டுவிட்டு வந்த ஊர்களை ஏன் மீள உருவாக்கிக்கொள்கிறார்கள்?" என்று சுதமன் கேட்டார். "அவர்கள் குழியானைகளைப்போல. எங்கு எடுத்துப் போட்டாலும் சுழன்று அவ்வட்டத்தையே அமைப்பார்கள்" என்று சீர்ஷன் சொன்னான். "எனில் ஏன் ஊரைவிட்டு கிளம்புகிறார்கள்?" என்று சுதமன் கேட்க சுரேசர் நகைத்து "தாங்கள் புதிய ஊரிலிருக்கிறோம் என்பதை தங்களுக்குத் தாங்களே நிறுவிக்கொள்வதற்காகத்தான். பழைய ஊர்களின் சிக்கல்களும் இடர்களும் இல்லாத புதிய ஊர் ஒன்றை அமைக்க முயல்கிறார்கள். ஆனால் அவர்களின் கற்பனையும் இயல்கையும் இணைந்து உருவாக்கும் ஊர்களையே அவர்கள் அமைக்க இயலும்" என்றார்.

"நாம் அவர்களுக்கு ஊர் உருவாக்கும் நெறிமுறைகளை வகுத்தளிப்போம்" என்று சம்வகை சொன்னபோது சுரேசர் நிமிர்ந்து நோக்கி "ஆம், அது நன்று. நான் அவ்வாறு எண்ணவில்லை" என்றார். "ஆனால் இயல்பாக ஊர்களை உருவாக விட்ட பின்னர் அவற்றை செம்மைப்படுத்துவது எளிதல்ல. அவற்றுக்கு ஒரு கட்டற்ற தன்மை வந்திருக்கும். அவை உருவாகும்போதே சில அடிப்படை இயல்புகளை வகுத்து அளிப்பது ஒருமையை உருவாக்கும். நூல்கள் அதைத்தான் சொல்கின்றன. ஊரை உருவாக்கும் முதல் தறியும் முதல் நூலும் அவ்வூரில் என்றும் இருக்கும்" என்றார்.

அரசவையில் சுரேசர் அதை முன்வைத்தார். “ஆம், அஸ்தினபுரியில் இன்று செல்வம் இருக்கிறது. காடுகளை அழித்து திட்டமிட்டு ஊர்களை அமைப்போம். நேரான தெருக்களும், ஒழுங்கமைந்த இல்லங்களும், கோட்டையும், புறங்காடும், இணைப்பு பாதைகளும் கொண்டவை” என்றார் யுதிஷ்டிரன். சுரேசர் “அவ்வாறு ஊரமைப்பு உருவாக்குவது ஒன்றும் பெரிய பணி அல்ல. ஆனால் அங்கு குடியேற்றங்களை உருவாக்குவது எளிதல்ல. அங்கு எவ்வகை குடிகள் சென்று வாழ்வார்கள்? எவ்விதமான குமுகங்களை அங்கு உருவாக்குவார்கள் என்பதை நாம் அங்கு வகுக்க இயலாது. நகரங்களை உருவாக்கலாம். ஆனால் இல்லங்களை அமைப்பதில் நம்மால் ஒரு கொள்கையை வகுக்கவோ அதை நிலைநிறுத்தவோ இயலாது. அவர்களே தங்கள் போக்கில் உருவாக்கிக்கொள்ளும் குமுகங்களுக்கு ஓரளவுக்கு நெறிப்படுத்தப்பட்ட ஊரமைப்பை வலியுறுத்துவதே நம்மால் செய்யக்கூடியது” என்றார்.

“புதிய நகர்கள் உருவாகட்டும். அங்கே என்ன நிகழ்கிறதோ அதை நாம் ஒழுங்கமைப்பு செய்வோம்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “நகர வடிவமைப்பாளர்களான நூறு கலிங்கச் சிற்பிகளை வரவழைப்போம். புதிய வடிவங்களில் நகர்கள் எழட்டும்.” சம்வகை வணங்கி மெல்ல கனைக்க யுதிஷ்டிரன் திரும்பி நோக்கினார். “அரசே, அஸ்தினபுரியின் இதே நகர அமைப்பையே பல்வேறு வகையில் உருமாற்றம் செய்து அவ்வூர்களுக்கான வரைவுகள் உருவாக்கப்படுவதே நன்று” என்றாள். “ஒரு நகரை ஆள்வது எளிதல்ல. நகரம் நம் கால்களில், செவிகளில், விழிகளில் உள்ளே சென்று உறையவேண்டும். அதற்கு ஆண்டுகள் பல ஆகும். நாம் அஸ்தினபுரியை ஆண்டு பழகியிருக்கிறோம். அஸ்தினபுரிகளை

ஆள்வது மிக எளிது.” யுதிஷ்டிரன் கூர்ந்து நோக்க சுரேசர் “ஆம், அன்னைப்பன்றி நூறு குட்டிகளை பெறட்டும். அனைத்தும் அன்னை வடிவிலேயே” என்றார். யுதிஷ்டிரன் வெடித்து நகைத்து “ஆம், ஆகுக!” என்றார்.

சுற்றியமைந்த கோட்டையும், நான்கு வாயில்களையும் ஒன்றுடன் ஒன்றிணைக்கும் மையச்சாலைகளும், நடுவே அரண்மனையும், அரண்மனையைச் சுற்றி சிறு கோட்டையும், ஒவ்வொரு சாலையிலிருந்து இன்னொரு சாலைக்குச் செல்லும் ஊடுபாதைகளும் என அவ்வூர்கள் அஸ்தினபுரியின் வடிவிலேயே அமைந்தன. புதிய ஊருக்குச் செல்பவர்கள்கூட வழிதவறாமல் தங்கள் இலக்குகளை அடைந்தனர். “இவ்வூர்களின் அமைப்பு என்பது ஒன்றே. இதை சக்ரவியூகம் என்கிறார்கள். இந்த நகர்வடிவம் சதுரமாக்கப்பட்ட வட்டம் போன்றது” என்று கலிங்கச் சிற்பி சந்திரர் சொன்னார். “ஊர்வடிவங்களில் இதுவே மிகச் சிறந்தது. பாரதவர்ஷத்தின் பெரும்பாலான நகரங்கள் இவ்வடிவிலேயே அமைந்துள்ளன.”

“ஏன்? வெவ்வேறு வகையான ஊர்களை உருவாக்கும்போது அல்லவா வெவ்வேறு வகையான இயல்கைகளுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது?” என்று சுதமன் கேட்டார். சந்திரர் “இவ்வாறு ஒரு நகர் வடிவம் உருவாகி வருவதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் வரலாறு தேவை. பல வடிவங்களில் நகர்கள் முயலப்பட்டிருக்கலாம். தொல்குடிகளின் ஊர்களை நான் சென்று பார்த்ததுண்டு. குகைத் தொகுதிகளான ஊர்கள், மரங்களுக்கு மேல் அமைந்த ஊர்கள், சுழி வடிவ ஊர்கள், பாலையில் அமைந்திருக்கும் பொந்துவடிவ ஊர்கள் என. அவற்றில் பிறை வடிவ ஊர்கள், அம்புமுனை வடிவ ஊர்களைக்கூட நான் பார்த்திருக்கிறேன். அந்தந்த நிலங்களுக்கு

ஏற்ப அந்தந்தக் குடிகளின் அமைப்புக்கேற்ப ஊர்கள் அமைகின்றன” என்றார்.

“ஆனால் சகடவடிவ ஊர்களே நெடுநாட்களாக நீடித்தன. அவை அவ்வாறு நீடித்தன எனில் அதற்கான பயன்பாடும் தேவையும் வலுவாக உள்ளதென்றே பொருள். சகடவடிவ ஊர்கள் பின்னர் சதுரவடிவிலாயின. அச்சு அவ்வாறே நீடித்தது” என்று சந்திரர் தொடர்ந்தார். “ஊரென்பது புறத்தே நின்று உருவாக்கப்படக்கூடியது அல்ல. அம்மக்களின் கோன்மையின் படிநிலையே ஊரென்றாகிறது. மன்னன் முதற்றே மலர்தலை உலகென்ற தொல்கூற்றின் வெளிப்பாடே இந்நகரங்கள். நாம் அமைக்கும் ஒவ்வொரு ஊரிலும் அதற்கு தலைவன் என்று ஒருவனை அமைக்கிறோம். அவன் ஆளுகைக்குள் அந்த ஊர் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். ஆகவேதான் இவை இவ்வடிவில் அமைகின்றன.”

“இந்நகர்களின் மையமாக ஊர்த்தலைவனின் மாளிகை அமைவது என்பது உடலில் தலை எழுவதுபோல. உண்மையில் அரசனின் மாளிகை ஊரின் மையத்தில் அமைவது அவ்வளவு உகந்தது அல்ல. அது அதன் நுழைவாயிலில் கிழக்குக் கோட்டையை ஒட்டி அமைவதே பல வகையிலும் புழக்கத்திற்கு எளிதாகிறது. எப்போதாவது போர் நடக்கையில் மட்டுமே அவன் மையத்தில் இருப்பது தேவையாகிறது. மற்றைய பொழுதுகளில் எளிதாக வெளியே செல்லவும் உள்ளே வரவும் உகந்த முதன்மை இடத்தில் அம்மாளிகைகள் அமைவதே நன்று. நகரங்கள் போரில் ஈடுபடுவது என்பது பல தலைமுறைகளுக்கு ஒருமுறையே நிகழ்கிறது. அதன்பொருட்டு ஒவ்வொரு நாளும் வருபவர்களும் செல்பவர்களும் கோட்டைமுகப்பிலிருந்து நகர் மையம் வரை சாலைகளில்

செல்ல வேண்டிய தேவை இல்லை. தேவைப்படுமெனில் நகர் மையத்தில் ஒரு மாளிகை அமைத்துக்கொள்வதும், போரெனில் அங்கு சென்று தங்குவதும் மிக எளிய செயல்.”

“ஆனால் நகரென்பது அக்குடிகளின் உள்ளத்தில் அமையும் ஓர் அடையாளமும்கூட. நகர் மையத்தில் அரண்மனை இருக்கையிலேயே தங்கள் வாழ்வின் மையத்தில் அது இருப்பதாக மக்கள் எண்ணுவார்கள். தங்களுக்குமேல் ஒரு கோபுர முகடென அரண்மனை இருப்பதாக அவர்கள் உள்ளம் சமைத்துக்கொள்கிறது. ஒவ்வொருவரிடமிருந்தும் அது கொண்டிருக்கும் தொலைவு அக்கோன்மையின் அளவுக்கு அடையாளம். நகர்முகப்பில் அரண்மனை இருக்குமெனில் அவ்வரண்மனைக்குப் பின்புறம் அவ்வரண்மனையால் அறியப்படாது தாங்கள் வாழ்ந்துகொண்டிருப்பதான உணர்வை குடிகள் அடையக்கூடும். அரசன் அங்கிருந்து தங்கள் அனைவரையும் பார்த்துக்கொண்டிருக்கிறான் எனும் கற்பனை குடிகளுக்குத் தேவை. அதுவே அரசெனும் அமைப்பை நிலைநிறுத்துவது” என்று சந்திரர் சொன்னார்.

நகர்களினூடாக சம்வகை ஓயாது புரவியில் சென்றுகொண்டிருந்தாள். சுதமன் அவளிடம் “நீங்கள் இன்று படைத்தலைவி. அரண்மனையில் இருந்தபடியே அனைத்தையும் புரிந்துகொள்ளவேண்டும். உங்கள் ஆணைக்கு இங்கே ஏவலரும் காவலரும் உள்ளனர்” என்றார். சுரேசர் “கால்களினூடாக மண்ணை அறிந்தவனே நல்ல அரசன் என்பார்கள். காவலரும் அவ்வாறே” என்றார். சம்வகை “நான் அறிந்துகொண்டிருப்பது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நாளுக்குநாள் இந்நகரத்தொகை என்னை அணுகிவருகிறது என்று மட்டும் தெரிகிறது” என்றாள்.

அவளை நகர்மக்கள் அடையாளம் காணவில்லை. ஒவ்வொரு ஊரிலும் புதியவர்களே நிறைந்திருந்தனர். அவர்களின் அந்த உவகை அவர்களுக்குமேல் ஓர் அரசு இன்னமும் உருவாகவில்லை என்பதனாலா என்று அவள் வியந்தாள். அரசு இல்லாமையால் அவர்களின் ஒழுங்கு குலையவில்லை. அவர்களின் அறமும் ஒழுக்கமும் எல்லை கடக்கவில்லை. அவர்களிடையே நிகழ்ந்த பூசல்கள்கூட மூத்தோரால் உடனே தீர்த்துவைக்கப்பட்டன. அப்படியென்றால் அரசு என்று ஒன்று எதற்காக? இப்போது ஓர் எதிரி இந்நாட்டை தாக்குவான் என்றால் அரசு தேவை. அதன் படைவல்லமை, அதன் அமைப்பு, அதை நடத்தும் அரசு தேவை. ஆனால் அரசன் என்று ஒருவன் இல்லை என்றால் இன்னொரு அரசன் படைகொண்டுவர வாய்ப்பில்லை. அரசனை தேன்கூடு என்கின்றன நூல்கள். அங்கிருந்தே தேன் கவரமுடியும். மலர்களில் நிறைந்திருக்கும் தேனை எவரும் கவரமுடியாது. மக்கள்திரள் மேல் எவர் படைகொண்டுவரக்கூடும்?

தன் எண்ணங்களை அவள் அளைந்துகொண்டே இருந்தாள். கோட்டைக்காவல்பெண்டாக அமைந்த நாள்முதலே அவள் உள்ளம் பெருகிக்கொண்டிருந்தது. சொற்களை அவளே அவ்வப்போது நின்று நோக்கி துணுக்குற்றாள். “இந்நகர்களை ஒரே ஆணையால் அஸ்தினபுரி தன்னை நோக்கி இழுத்து படையென திரட்டிக்கொள்ள முடியும்” என்று ஒரு காவலர்தலைவன் சொன்னபோது அவள் உள்ளம் “இவை ஒரே ஆணையால் அஸ்தினபுரியை நூறாகப் பிளந்துவிடவும்கூடும்” என்று எண்ணிக்கொண்டாள். பின்னர் ஏன் அவ்வாறு தோன்றியது என வியந்தாள். கோன்மையைக் கையாள்பவர்களுக்குள் கோன்மைக்கு எதிரான ஒருவன்

எழுந்து பேசிக்கொண்டிருப்பான் போலும். அவன் அக்கோன்மைக்கு ஒற்றனும்கூட.

அவள் புரவியில் அமர்ந்து அந்த துளிநகரங்களின் சாலைகளினூடாகச் சென்றுகொண்டிருந்தாள். அவை உருவாகி வந்த விரைவு அவளை ஒவ்வொரு முறை விழிதூக்கும்போதும் துணுக்குறச் செய்தது. பல நகரங்கள் பதினைந்து நாட்களுக்குள் எழுந்துவிட்டிருந்தன. அவை மரத்தாலானவை என்பதனாலா? அன்றி ஊரார் அனைவருமே அந்நகரை உருவாக்குவதில் முழுமையாக முனைந்தமையாலா? ஆனால் அவை கட்டிமுடிக்கப்படவுமில்லை. கட்டக்கட்ட அவை பெருகின, செய்யச் செய்ய பணி கோரின. அவை இன்னும் நூறாண்டுகளுக்கு கட்டி முடிக்கப்படாமலிருக்கக்கூடும்.

அவள் அந்நகர்களில் ஒவ்வொருவரும் சற்றே தடுமாறுவதை கண்டாள். அவை அவர்கள் அறிந்த ஊர்களல்ல. பெரும்பாலானவர்கள் சிற்றூர்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் அந்த நகர அமைப்பை உடலில் வாங்கிக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் உவகையில் திளைத்துக்கொண்டிருந்தனர். ஆகவே ஒவ்வொன்றையும் கொண்டாட்டமாக ஆக்கிக்கொண்டிருந்தனர். ஒற்றைத்திரள் என வந்த அம்மக்கள் மீண்டும் பல்லாயிரம் நகர்களாக குமுகங்களாக குலங்களாக குடிகளாக பிரிந்துவிட்டதை அவள் கண்டாள். அப்பேருருவை அஞ்சி அதை செய்தோமா? அந்தப் பெரும்பூதத்தை ஆளமுடியாது. அதற்கு எந்த ஆணையையும் இட முடியாது. அதை வெல்வதற்கு ஒரே வழி அதுவே தன்னை பலவாக உணரவைப்பது மட்டுமே.

அவள் ஜலநிபந்தம் என்னும் சிறிய நகர்சதுக்கம் ஒன்றினூடாகச் செல்கையில் சிறுமியர் விளையாடிக்கொண்டிருக்கும் சிரிப்பொலியை கேட்டாள். அவர்கள் செம்மண் நிலத்தில் அரங்கு வரைந்து வட்டாடிக்கொண்டிருந்தனர். கண்களை மூடி தலையை அண்ணாந்து நெற்றிமேல் வைத்த பனையோட்டு வட்டுடன் ஒரு பெண் தாவித்தாவிச் சென்றாள். அரங்கின் கோடுகளுக்கு மேல் அவள் கால்கள் படுகின்றனவா என பிற சிறுமியர் நோக்கி கூச்சலிட்டனர். அவள் தாவித்தாவிச் சென்று இறுதிக்கோட்டைக் கடந்து குதித்து வட்டை எடுத்த பின் “வென்றுவிட்டேன்! வென்றுவிட்டேன்!” என்று கூச்சலிட்டு குதித்தாள். அவளுடன் இணைந்த சிறுமியரும் கூச்சலிட்டனர். சிறுபறவைகளின் ஓசைபோல அச்சிரிப்புகளும் கூச்சல்களும் கேட்டன. சம்வகை மலர்ந்த முகத்துடன் நோக்கியபடி சென்றாள்.

# களிற்றியானை நிரை - 38

**பகுதி ஐந்து : விரிசிறகு – 2**



கொம்பொலி எழுந்ததும் சம்வகை தன் சிற்றறையிலிருந்து வெளியே வந்தாள். அவளைச் சுற்றி அமர்ந்து அவள் கூறிய ஆணைகளை ஏடுகளில் எழுதிக்கொண்டிருந்த கற்றுச்சொல்லிகள் எழுந்து நின்றனர். அவர்களிடம் “முறைப்படி அனைத்தையும் அனுப்பிவிடுங்கள்” என்று ஆணையை அளித்துவிட்டு அவள் கவசங்கள் உரசி ஒலிக்க, எடைமிக்க காலடிகள் மரத்தரையில் முழக்கமிட

படிகளில் இறங்கி வெளியே வந்தாள். அவளுடைய கவசமிட்ட உடலின் பெருநிழல் உடன் வந்தது, மெய்க்காவல் பூதம்போல.

அவளுக்காக புரவி காத்து நின்றிருந்தது. யவன நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அகன்ற முதுகும் பெரிய கால்களும் குறுகிய கழுத்தும் கொண்ட புரவி. அது எடை தாங்குவது, ஆனால் விரைவு கூடுவதில்லை. ஆகவே நெடும்பொழுது களைப்படையாது ஓட அதனால் முடியும். அவள் அருகணைவதை உணர்ந்து அது தன் சிறிய செவிகளை திருப்பி மூக்கை விரித்து செருக்கடித்தது. அவள் அருகே வந்து அதன் கழுத்தை தட்டிவிட்டு கால் சுழற்றி ஏறி அமர்ந்தாள்.

அந்த எடை மிக்க கவசத்துடன் அதன் மேல் அவளால் ஏற முடியும் என்று அவள் எண்ணியிருக்கவில்லை. முதல்நாள் முழுக்கவச உடையுடன் அந்தப் புரவியில் ஏறும்போது காலைச் சுழற்றி அப்பாலிடுவது எப்படி என்று தன்னுள் திட்டமிட்டபடியே சென்றாள். வளையத்தில் கால் நுழைத்து ஏறி அமர்ந்தபோது எதையும் எண்ணாமல் காலை தூக்கிச் சுழற்றி அமர்ந்த பின்னர்தான் இயல்பாக தன்னால் அமர இயன்றிருக்கிறது என்பதை உணர்ந்தாள். அப்பால் சூழ்ந்திருந்த வீரர்களின் விழிகளும் அவள் மேலேயே பதிந்திருந்தன. அவள் எப்படி அதில் ஏறி அமர்கிறாள் என்பதை அவர்கள் ஒருவருக்கொருவர் விழிகளால் கூறிக்கொண்டிருக்க வேண்டும். அனைவரும் விழி மலைத்திருப்பதை அவளால் நோக்காமலேயே உணர முடிந்தது.

அவள் ஏறி அமர்ந்த இயல்பிலேயே புரவி அவள் எடையை உணர்ந்துகொண்டிருந்தது. ஆகவே அது எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. ஒருகணம் முதுகை வளைத்து முன்னங்காலை தூக்கி வைத்து சற்றே ஊசலாடியது. அவள் குதிகாலால்

ஆணை அளித்ததும் பெருநடையில் விரைந்து செல்லத்தொடங்கியது. அந்த நாளில் இருந்து புரவிக்கும் அவளுக்குமான இணக்கம் கூடிக்கூடி வந்தது. அவள் பெரும்பாலான பொழுதுகளில் முழுக்கவச உடையிலேயே புரவியில் ஏறினாள். அக்கவச உடை பெருவிழவுகளுக்கு மட்டுமே உரியது. போரும் பெருவிழவுதான். பிற நாட்களில் அஸ்தினபுரியில் எவரும் கவசஉடை அணிவதில்லை. ஆகவே அவள் கவசஉடையணிந்திருப்பதை எவரும் விழிகளுக்கு பழக்க முடியவில்லை.

அக்கவச உடை அவளை ஒரு பேருருவாக்கியது. ஆற்றல் கொண்டவளாக மாற்றியது. இரும்பு வடிவில் பிறர் முன் தோன்றும் அவளை அவளே பார்த்துக்கொண்டிருந்தாள். அது பிறிதொருத்தி என்று முதலில் தோன்றியது. தன்னிலிருந்து சிலவற்றை பிரித்துப் பெருக்கி அப்பிறிதொருத்திக்கு அளித்து அவளை உருவாக்கிக் கொண்டிருக்கிறாள். என்னால் ஆட்டி வைக்கப்படும் பாவை, இதிலிருந்து நான் விலகிக்கொள்ள விரும்புகிறேன், வேறெங்கோ இயல்பான எளிய பெண்ணாக பதுங்கிக்கொள்ள என அவள் எண்ணிக்கொண்டாள். உடனே அவ்வியல்பான எளிய பெண்ணிலிருந்து முளைத்தெழுந்து இவ்வண்ணம் ஆவதற்குத்தானே எப்போதும் விழைந்துகொண்டிருந்தேன் என வியந்தாள். ஒவ்வொரு நாளும் என்னை கூர்தீட்டி இங்கு வந்தடைந்தேன். வந்தடைந்தபின் ஏன் திரும்பிச் செல்ல விழைகிறேன்? அந்த எளிய பெண்ணை முற்றுதறி இங்கு இவ்வண்ணம் நிமிர்ந்திருப்பதே நான் என்று ஆக ஏன் என்னால் இயலவில்லை?

அவள் அதை பல முறை தனக்குள் உசாவிக்கொண்டிருந்தாள். அதை எவரிடமேனும் பேச வேண்டும் என்று எண்ணினாள். ஒருவேளை சாரிகர் அங்கிருந்தால் அவள் அதை பேசியிருக்க கூடும். ஆனால் அவர் அந்நகரை உதறிச்சென்று முற்றிலும் பிறிதொருவராக துவாரகையில் இருந்தார். அவரைப் பற்றிய செய்திகள் அவள் அறியாத ஒருவரை காட்டின. அந்த பிறர் அறியா ஆழத்தை அவர் என்றும் பேணிக்கொண்டிருந்தார். காட்டிலிருக்கும் புதர்க்கூடுகள்போல. நாமறியாத பறவைகளின் முட்டைகளை அவை தங்களுக்குள் வெம்மை ஊட்டி வளர்க்கின்றன என்று சுரேசர் கூறுவதுண்டு. என்னுள் இருந்து விரிந்தெழுவது ஆற்றல் மிக்க கழுகு போலும் என்று எண்ணினாள்.

ஆனால் பிறிதொரு மென்வடிவை எதற்காக தனித்து எங்கோ சேர்க்க முயல்கிறேன்? பின்னர் ஒருநாள் அவள் உணர்ந்தாள். அவ்வண்ணம் ஒரு எளிய பெண்ணை எடுத்து எங்கோ பிறர் அறியாமல் சேர்த்து வைக்கவில்லையெனில் அவள் அவ்வடிவில் முற்றழிந்து போவாள். உருவாக்கப்படும் வடிவுகள் அனைத்தும் செயற்கையானவை. அவை வளர்வதில்லை. கைவிடுபடைகள்போல் ஆற்றல் மிக்கவை, நேர்த்தியானவை. ஆனால் தங்கள் முடிவை தாங்களே எடுக்கும் ஆற்றல் அற்றவை. அந்த எளிய பெண் தன்னுள் உயிருடன், உணர்வுடன் தனித்திருக்கையிலேயே தான் மானுட உயிராக அறிவும் நுண்மையும் கொண்டு திகழ முடியும். அதற்கு ஒரே வழி தன்னை இரண்டாக பகுத்துக்கொள்வது. இரண்டாக பகுத்துக்கொள்வதற்கான வழி என்பது இந்த இரும்பு உருவை இவ்வண்ணம் பெருக்கிக்கொள்வது.

இதை எந்த அளவு பெருக்கிக்கொள்கிறேனோ அந்த அளவு நான் இதிலிருந்து அகல்கிறேன். இது பேருருக் கொள்கிறது, நிகரற்ற ஆற்றல் கொள்கிறது, அச்சமும் திகைப்பும் உருவாக்குவதாக ஆகிறது. இதற்குள் மிக ஆழத்தில் மென்மையான சிறிய முயல்போல் செவி விடைத்து உடல் விதிர்த்தபடி நான் பதுங்கியிருக்கிறேன். இவ்வாற்றலும் அந்நுண்ணுணர்வும் கலந்ததே நான். அந்நுண்ணுணர்வு என்னுள் இருக்கையில், நான் எவர் என நானே அறிந்திருக்கையில் மேலும் ஆற்றல் கொண்டவளாகிறேன். என் முன் வந்து இவ்விரும்புப் பேருருவை பார்ப்பவர்கள் எண்ணுவதற்கு அப்பால் ஒரு நுண்மை, ஒரு கூர் படைக்கலம் என்னுள் இருக்கிறது என்னும் உணர்வே என்னை வெல்லற்கரியவளாக்குகிறது.

அதன் பிறகு அவளுக்கு அக்குழப்பம் வந்ததில்லை. அவள் தன்னை மேலும் மேலும் இரண்டென பகுத்துக்கொண்டாள். தன் தனியறையில் மட்டுமே இயல்பான ஆடைகளுடன் இருந்தாள். எளிய உடல்மொழியை அங்கு மட்டுமே பயின்றாள். அப்பொழுது அவள் குரலும் பிறிதொன்றாக இருந்தது. இற்செறிப்பில் வாழும் கன்னியொருத்தியின் மொழியின் நாணம் அவளில் கூடியது. அவளை அங்கு எவரும் பார்க்கவில்லை. அவள் அணுக்கச் சேடியர் மட்டுமே அறிந்திருந்தனர். ஆடியில் அங்கு தன்னை பார்க்கையில் அவள் மிக அணுக்கமான தோழியொருத்தியிடமென நாணி புன்னகைத்துக் கொண்டாள். கவசஉடை அணிந்து அவள் தன்னை ஆடியில் பார்த்துக்கொள்வதில்லை. அஸ்தினபுரியே ஒரு மாபெரும் ஆடியென அவளை காட்டியது.

அஸ்தினபுரியின் தெருக்களினூடாகச் செல்கையில் அப்பெருநகர் எத்தனை விரைவில் உருமாறிக்கொண்டிருக்கிறது என்பதை அவள் பார்த்தாள். பெரும்பாலான மாளிகைகள் ஆடிச்சாளரங்கள் கொண்டுவிட்டிருந்தன. முகடுகள் வெண்சுண்ணம் பூசப்பட்டு முகில்கள் ஒழுகிய ஒளி குவிந்து உருவானவைபோல் மெருகு கொண்டிருந்தன. சாலைகளின் ஓரங்கள் அனைத்தும் புதிய செந்நிற கற்பலகைகள் பதிக்கப்பட்டு அவற்றில் தூண்கள் நாட்டப்பட்டு அவை அனைத்திலும் உலோகப்பட்டைகள் பொறிக்கப்பட்டிருந்தன. மாளிகைகளின் சாளரவிளிம்புகளில் பித்தளைச் சட்டங்கள் அமைந்திருந்தன. பல்லாயிரம் பித்தளைக்குமிழ்கள் விழிமுனைகள்போல் தெருவைச் சுழற்றி அள்ளிக்கொண்டிருந்தன. அனைத்துக் காவல்மாடங்களும் மாந்தளிர் வண்ண அரக்கு பூசப்பட்டு புது மரத்தாலானவைபோல் மெருகு கொண்டிருந்தன.

அவள் அஸ்தினபுரியின் கோட்டையை மிகத் தொலைவிலேயே பார்த்தாள். அது புதிதாக வெண்சுண்ணம் பூசப்பட்டிருந்தது. அஸ்தினபுரியின் தொல்கோட்டை நேரடியாக கற்களை அடுக்கிக் கட்டப்பட்டது. முதல் அடுக்கின் மீது சுடுமண் கற்களால் ஆன இரண்டாம் அடுக்கு அமைந்திருந்தது. நெடுங்காலம் மழையும் வெயிலும் பட்டு செங்கற்கள் கருகி ஒன்றாகிவிட்டிருந்தன. இருள் செறிந்ததுபோல் தெரிந்தது அக்கோட்டை. அதை களிற்றுயானை நிரை என்று சூதர்கள் பாடுவதுண்டு. அதற்கு சுண்ணம் பூச முடியுமென்ற கற்பனை எவரிடமும் எழுந்ததில்ல. அதன் மேலிருக்கும் பாசிப் படர்வு சுண்ணத்தை ஏற்காது.

எப்போதோ ஓரிரு முறை சில பகுதிகளில் சுண்ணம் பூச முயன்றிருக்கிறார்கள். கோட்டை முகப்பில் சுண்ணம் பூசுவதற்கு ஒருமுறை முயன்றதாக அவள் தந்தை சொல்லியிருக்கிறார். மரம் பட்டை உதிர்ப்பதுபோல் சில நாட்களிலேயே சுண்ணம் பொருக்குகள் எழுந்து வளைந்து உதிரத் தொடங்கிவிடும். பின்னர் அவற்றை செதுக்கிச் செதுக்கி எடுக்க வேண்டியிருக்கும். சுண்ணம் பூசும் முயற்சி முற்றிலும் கைவிடப்பட்டதற்கு அஸ்தினபுரியின் கோட்டையின் நீண்ட அளவும் வழிவகுத்தது. அத்தனை பெரிய வடிவை சுரண்டி தூய்மைப்படுத்த பல்லாயிரம் பேர் பலமாத காலம் உழைக்க வேண்டியிருக்கும். ஆகவே அக்கருமை அதன் அழகென்று தங்கள் உள்ளத்தை ஒருக்கிக்கொண்டிருந்தார்கள். நூறுநூறாண்டுகளாக அது அவ்வாறே நீடித்தது. பாடல் பெற்றது. கனவில் ஊறி நிறைந்தது.

புதிதாக வந்த பீதர்நாட்டுச் சிற்பி அக்கோட்டைசுவரில் சுண்ணம் பூச முடியுமென கூறியபோது யுதிஷ்டிரனின் அவையிலேயே நகைப்பொலி எழுந்தது. கலிங்கச் சிற்பி சாரதர் “சுண்ணம் பூசலாம், அது ஈரம் காயும் வரை நன்றாக இருக்கும்” என்றார். யுதிஷ்டிரனே புன்னகைத்தார். பீதர்நாட்டுச் சிற்பி “சுண்ணம் பூசும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். உரிய பொன் மட்டும் ஒதுக்கினால் போதும். எனக்கான பணியாளர்களை நான் கொண்டு வருகிறேன்” என்றார்.

சுண்ணம் பூசப்பட்டபோது அது இளநீல நிறத்தில் இருந்தது. கரிய பரப்பின் மீது அந்த இளநீலப் படிவு ஊறி மறைந்து கற்சுவர் மேலும் கருமை கொள்வதுபோல் தோன்றியது. முழுக் கோட்டையும் அவ்விளநீலப் பூச்சு பெற்றபின் நான்கு நாட்களில் காய்ந்து சுவர் முற்றாக வண்ணம் மாறியது. அது செம்மண்

வண்ணத்தை அடைந்து பொருக்கோடியது. உலர்ந்த மரப்பட்டைகள் என அதன் மேற்பரப்பில் விரிசல்கள் பரவின. அதன் மேல் தேன்மெழுகும் அரக்கும் களிமண்ணுடன் கலந்த கலவையை பூசினார்கள். அக்கலவை உலர்ந்து தடித்த பொருக்குகளாக ஆகி ஏரிப்படுகை என ஒரு நோக்கில் தன்னை காட்டியது. நீண்ட செதுக்கிகளைக் கொண்டு மிக விரைவாக செதுக்கி அதை எடுத்தார்கள்.

முதலில் பூசப்பட்டது கடும் நஞ்சு என்று அதன் பின்னரே அனைவரும் உணர்ந்தனர். அக்கற்பரப்பின் மீதிருந்த பாசி உயிரிழந்து களிமண்ணில் பற்றிக்கொண்டு உதிர்ந்து விழுந்தபோது அன்று கட்டப்பட்டதுபோல் புதுக்கல் மினுக்குடன் கோட்டை எழுந்து வந்தது. செங்கல் கட்டமைப்பு சூளையிலிருந்து கொண்டு வந்ததுபோல் செவ்வண்ணம் பெற்றது. செதுக்கி எடுக்கப்பட்ட களிமண் பொருக்குகளைப் பெயர்த்து கொண்டு சென்று காட்டிற்குள் நான்கு ஆள் ஆழத்தில் எடுக்கப்பட்ட குழிகளில் இட்டு புதைத்தனர்.

அந்தச் செங்கல் பரப்பின் மீதும் கற்பரப்பின் மீதும் நீரூற்றிக் கழுவி அதன் பின்னர் சுண்ணம் பூசப்பட்டது. பாரதவர்ஷத்தின் வழக்கப்படி சுண்ணமும் அரக்கும் மெழுகும் கலந்த கலவை அல்ல அது. முற்றிலும் புதிய ஒரு கலவை. சுண்ணத்துடன் எண்ணை கலக்கப்பட்டதுபோல் தோன்றியது. சுண்ணம் பூசப்பட்டதும் உடனடியாக உலர்ந்து மூக்கை அரிக்கும் ஆவியை கிளப்பியது. பகலில் சுண்ணம் பூசப்படுவது முற்றிலும் தவிர்க்கப்பட்டது. இரவில் பூசப்பட்டு புலர்காலையில் நன்கு உலர்ந்து ஒளியெழுந்தபோது கண்நிறைத்து நிரம்பியிருந்தது அஸ்தினபுரியின் கோட்டை. மாபெரும் வெண்துணி தொங்கவிடப்பட்டதுபோல் அது

தோன்றியது. முன்பு அஸ்தினபுரியில் விழும் வெயிலொளியில் பாதியை கோட்டையே உறிஞ்சிக்கொண்டிருந்தது என்பதை அப்போதே உணர்ந்தனர்.

வெண்சுண்ணம் பூசப்பட்டபோது நகர் புத்தொளி கொண்டது. பல தெருக்களில் நிழல்கள் விழுவதே இல்லாமலாயிற்று என்று கூறினார்கள். முதல் கதிரிலேயே கோட்டை ஒளிகொள்ளத் தொடங்கியது. அந்தி இறங்குவது மிகப் பிந்தியது. இருண்ட பின்னரும் கோட்டை மிளிர்வுகொண்டிருந்தது. அங்கிருந்த பழைய கோட்டை நினைவிலும் சொல்லிலும் முற்றாக மறைந்து பிறிதொன்று அங்கே நிலைகொண்டது. சில நாட்களில் அது என்றும் அவ்வாறு இருந்தது என்று விழி உள்ளத்தை பழக்கியது.

அந்தச் சுண்ணப்பரப்பு உதிரக்கூடும் என்றும், வண்ணம் மாறக்கூடும் என்றும் சிலர் எதிர்பார்த்தார்கள். அஸ்தினபுரியின் குடிகள் ஒவ்வொரு நாளும் வந்து அக்கோட்டைப் பரப்பை பார்த்துச் சென்றார்கள். ஆனால் சில நாட்களில் அவர்கள் உணர்ந்துகொண்டார்கள், அது இன்னும் நெடுங்காலத்துக்கு அவ்வாறுதான் இருக்கும் என்று. எனினும் நகரில் எஞ்சிய முதியவர்களில் சிலர் அக்கரிய வண்ணமே அதன் இயல்பு என்று சொன்னார்கள். “இவ்வெண்மை நீடிக்காது. இது மெல்ல மெல்ல தன் இயல்பான கருமையை நோக்கி சென்றாகவேண்டும்... தெய்வங்களுக்குரியது வெண்மை. கருமையே மானுடர்களுக்குரியது.”

ஒவ்வொரு நாளும் யுதிஷ்டிரன் வந்து கோட்டையின் அருகிலூடாக புரவியில் சுற்றி நோக்கிவிட்டு திரும்பிச்சென்றார். “இக்கோட்டைபோல் வெண்ணிறமான பிறிதொன்று பாரதவர்ஷத்தில் இல்லை” என்று அவர் கூறினார்.

“வெண்மை அமைதியின் நிறம். அறத்தின் நிறம். ஊழ்கத்தின் வண்ணம் அது என்று முனிவர்கள் கூறுவார்கள். இனி இந்நகரின் வண்ணம் இதுவே ஆகுக! இது களிற்றுயானை நிரைதான், ஆனால் இந்திரனின் வெண்களிற்றுயானை நிரை” என்றார்.

சம்வகை கோட்டைவாயிலை அடைந்தபோது அனைத்து ஒருக்கங்களும் ஏற்கெனவே முடிந்திருந்தன. துணைப்படைத்தலைவியான உக்ரை தொலைவிலேயே அவளுடைய புரவி அணுகுவதைக் கண்டு படிகளில் இறங்கி வந்து அணிவகுத்து நின்ற படைகளின் முன்னால் நின்றாள். அவள் புரவியிலிருந்து இறங்கி அணுகியதும் உக்ரை தலை தாழ்த்தி வணங்கி மூன்று அடி வைத்து அருகணைந்து “ஒருக்கங்கள் முழுமை அடைந்துவிட்டன, தலைவி” என்றாள். சம்வகை விழிகளை ஒருமுறை சுழற்றி படைகளை நோக்கிவிட்டு “நன்று, பிழையற அமையட்டும்” என்றாள்.

இடைவிடாத ஆட்சிப்பணிகளால் அவள் முகத்தில் ஆர்வமின்மை ஒரு தசையமைப்பாகவே திரண்டுவிட்டிருந்தது. கண்களுக்குச் சுற்றும் சுருக்கங்கள் செறிந்திருந்தன. ஆனால் விழிகளின் அசைவில் அவளுடைய கூர்நோக்கு எப்போதும் வெளிப்பட்டது. உக்ரை “முரசுச்செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சிந்துநாட்டின் படைகள் தொலைவில் அணைகின்றன. இன்னும் சற்று நேரத்தில் அவை முதல் காவல்மாடத்தை வந்து சேரும்” என்றாள். சம்வகை தலையசைத்து “முறைமைகள் அனைத்தும் ஒருங்கிவிட்டன அல்லவா?” என்றபடி நடந்தாள். அது ஒரு வெறும்வினா என

உணர்ந்தும் உக்ரை அவளுக்குப் பின்னால் நடந்தபடி "சூதர்களும் அணிப்பெண்டிரும் வந்துவிட்டனர்" என்றாள்.

அந்த இடைவெளியை சம்வகை உணர்ந்து சற்றே நடை தளர உக்ரை "இங்கு முதிய சூதர் ஸ்ருதர் ஒரு சிறு ஐயத்தை எழுப்பினார்" என்றாள். சம்வகை கூறுக என்பதுபோல் முனகினாள். "வருபவர் கணவனை இழந்த கைம்பெண். அவருக்கு மங்கல வரவேற்பும் கொடி வாழ்த்தும் உரியதாகுமா என்றார். முன்பு இங்கே அவ்வழக்கம் இருக்கவில்லை என்றார். நான் அதை எண்ணியிருக்கவில்லை. சிந்துநாட்டின் வழக்கமென்ன என்று நமக்குத் தெரியாதே என்று சொன்னேன். அஸ்தினபுரியில் அஸ்தினபுரியின் வழக்கங்கள்தான் கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னார். அது சற்று குழப்பமாக உள்ளது" என்றாள்.

"இளவரசி துச்சளை அஸ்தினபுரியின் மகளாக அன்றி சிந்துநாட்டின் அரசியாகவா இங்கு வருகிறார்?" என்றாள் சம்வகை. தயக்கமில்லாமல் அவள் விழிகளை நோக்கி "இரண்டும்தான் அவர்கள் என்று அறிவேன். எனினும் இங்கு நாம் கொள்ளும் நிலைப்பாடென்ன என்பது இங்குள்ள பிற அனைத்தையும் வகுப்பதற்கு உதவும்" என்றாள் உக்ரை. சம்வகை திரும்பி புதியவள் என அவளை பார்த்தாள். அந்தக் கோணத்தில் அவள் அதுவரைக்கும் எண்ணியிருக்கவே இல்லை. ஒருகணம் உக்ரையின் முகத்தை பார்த்த பிறகு "உனக்கென்ன தோன்றுகிறது, கைம்பெண் ஒழுக்கம் இங்கே கடைக்கொள்ளப்பட வேண்டுமா?" என்றாள்.

"இது புதிய வேதம் எழுந்த நாடு. அவ்வேதத்தை உரைத்த ஆசிரியன் யாதவர். அவர்கள் குடியில் கைம்பெண் ஒழுக்கமும் உடன்கட்டை ஏறுதலும் இல்லை" என்றாள் உக்ரை. சம்வகை

நகைத்து “நன்று… நீ முன்னரே எண்ணியிருக்கிறாய் அனைத்தையும்” என்றாள். அவள் தோளில் கைவைத்து “நாம் முறைப்படி அரசியருக்குள்ள வரவேற்பையே அவருக்கு அளிப்போம். சிந்துநாடு இளவரசியை அகற்றியிருக்கலாம். இங்கு இப்போது அவருடைய நேர்க்குருதியினர் எவரும் இல்லாமலிருக்கலாம். ஆனால் இந்நகரம் அவருக்குரியது. இதில் அரசிக்குள்ள இடம் என்றும் அவருக்கு இருக்கும். அந்நிலையிலேயே அவர் இங்கு வருகிறார். இந்நகரம் மங்கல இசையும் மங்கலப் பொருட்களும் கொண்டு அவரை எதிர்கொள்ளட்டும்” என்றாள் சம்வகை.

உக்ரை “அம்முடிவை நாம் எடுக்கலாகுமா?” என்றாள். சம்வகை “இங்கு கோட்டையில் இப்போது முடிவை நானே எடுக்கிறேன். என் முடிவில் எனக்கு உறுதியிருக்கிறது. அதை அரசரிடமோ பிறரிடமோ என்னால் கூற இயலும்” என்றாள். உக்ரை புன்னகைத்தாள். காவல் அறைக்குள் சென்று அமர்ந்து தன் கால் குறடுகளைக் கழற்றி நெஞ்சக் கவசத்தையும் இயல்பாக்கிய பிறகு சம்வகை “நாளை முதல் அஸ்தினபுரியின் கோட்டைத்தலைவியாக நீயே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்” என்றாள். உக்ரை திகைத்து “தலைவி?” என்றாள். “ஆம், சற்று முன்னர் அரசர் என்னிடம் பேசினார். அஸ்தினபுரியின் உருவாகிவரும் படைகளுக்கான தலைமையை என்னை ஏற்கும்படி கூறினார்” என்றாள் சம்வகை. “படைத்தலைவியாகவா?” என்றாள் உக்ரை. “ஆம், நாற்படைக்கும் தலைவியாக” என்று சம்வகை புன்னகைத்தாள்.

உக்ரை “இன்றுவரை நான்காம் குலத்து உதித்த ஒருவர் அப்பதவியை ஏற்றதில்லை” என்றாள். “நான்காம் குலத்தவர் இங்கு அரசியாகவே முன்னர் அமர்ந்திருக்கிறார். என்

குலத்தவர்” என்று சம்வகை சொன்னாள். உக்ரை முகம் மலர்ந்து “நன்று, இதைப்போல் நிறைவளிக்கும் செய்தி பிறிதொன்றில்லை” என்றாள். சம்வகை “பெரும் பொறுப்பு இது. இன்று நம்மிடம் படையென ஒன்றில்லை” என்றாள். “நம் படை நாள்தோறும் என பெருகிக்கொண்டிருக்கிறது” என்றாள் உக்ரை. “ஆம், இன்று அஸ்தினபுரி வலுவான படையொன்றை உருவாக்கிகொண்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் பயிலாத படை. ஒவ்வொருவரும் பயின்றவர்கள், ஆனால் ஒரு படையென ஒத்திசைவதற்கு இன்னும் நெடுங்காலம் ஆகும்” என்றாள் சம்வகை.

“படையென ஒன்றுபடுவதிலுள்ள இடர் என்ன என்று இப்போதுதான் தெரிகிறது” என அவள் தொடர்ந்தாள். “தனியாணவம் இல்லாதவன் வீரன் அல்ல, தனியாணவத்தை அகற்றாமல் அவனால் படையின் ஒரு பகுதியாக செயல்படவும் இயலாது. பல தருணங்களில் பெருஞ்செயல்களை செய்பவர்கள் படையுடன் ஒன்றாகாமல் பிறழ்பவர்களாகவும், படைகளால் தொடர்ந்து தண்டிக்கப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள். இங்கு ஒவ்வொருவருக்கும் எங்கு அவர்களது தனி ஆணவம் தலைநிற்கவேண்டும் என்றும் எங்கு அது அகற்றப்பட்டு ஆணைக்கு அடிபணியவேண்டும் என்றும் கற்பிக்கப்படவேண்டும். அதன் பின்னரே இங்கே ஒரு படையென ஒன்று உருவாகும்.”

“ஆனால் அதை ஆணை மூலம் கற்பிக்கலாகாது. தொடர்ந்து படையென அவர்களை பழக்குவதினூடாகவே கற்பிக்க இயலும். ஒரு போர் நிகழ்ந்தால் இவையனைத்தும் இயல்பாக அவர்கள் அனைவருக்கும் தெரிந்துவிடும். போரைப்போல்

சிறந்த போர்ப்பயிற்சி வேறில்லை” என்றாள் சம்வகை. உக்ரை “போரெனில்…” என்றபின் நகைத்து “உடனே மீண்டும் ஒரு போரெனில் இங்கிருக்கும் அத்தனை குடிகளும் கிளம்பிச் சென்றுவிடுவார்கள்” என்றாள். சம்வகை “அவ்வாறு தோன்றும். ஆனால் அது உண்மையல்ல” என்றாள். “இங்கு வந்து சேர்ந்திருக்கும் ஒவ்வொருவரும் நம் படைகள் ஆற்றல் திரட்டிக்கொண்டு சென்று யவனத்தையோ பீதர்நாடுகளையோ வெல்ல வேண்டுமென்ற எண்ணத்தையே கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஓராண்டில் அஸ்தினபுரியிலிருந்து யுதிஷ்டிரன் பெரும்படையுடன் கிளம்பி உலகை வெல்ல முனைவார் என்றுதான் அவர்களிடையே பேச்சு உலவிக்கொண்டிருக்கிறது” என்றாள்.

உக்ரை “ஒருவேளை அது நிகழக்கூடும். அன்று படைமுகப்பில் தாங்கள் செல்லவும் கூடும்” என்றாள். சம்வகை கைகளை கட்டிக்கொண்டு பீடத்தில் சாய்ந்து “மெய்யாக நான் போரிட விரும்பவில்லை. போர் என்பது ஆற்றலை பயன்படுத்துவது அல்ல, சிதறடிப்பது. குவிக்கப்பட்ட ஆற்றல் ஒன்றை படைத்தாகவேண்டும். ஒரு பெரும்போரைவிட படைகளால் ஓர் ஏரி வெட்டப்படும் என்றால் அதுவே மெய்யான ஆற்றல்வெளிப்பாடு என்று தோன்றுகிறது” என்றாள். “வீசப்படும் வாளைவிட உறையிலிருக்கும் வாள் ஆற்றல் மிக்கது என பெண்களாகிய நாம் அறிவோம். அதுவே நமது வெற்றி.”

உக்ரை அவளுடைய சொற்களால் உளமெழுந்து விழிமின் கொண்டாள். “நிறைந்து நிலைகொண்ட ஆற்றல் நம்மை அனைவருக்கும் மேலென எழச் செய்கிறது. அனைத்திற்கும் அப்பால் நிற்கச் செய்கிறது. ஒவ்வொரு தருணத்திலும் அது வெற்றியை அளிக்கிறது. அஸ்தினபுரி பாரதவர்ஷத்தை எதிர்த்து

வெல்லும் நாடல்ல, பாரதவர்ஷத்தால் எதிர்க்கவும் எண்ணப்பட முடியாத நாடென்ற நிலையையே நான் விரும்புகிறேன்" என்றாள் சம்வகை. "அன்று அது இங்குள்ள அனைத்து சிறுகுலங்களையும் ஒன்றாக்க முடியும். சிந்துவையும் கங்கையையும் பிரம்மபுத்திராவையும் ஒன்றென இணைக்க முடியும். பாரதவர்ஷம் முழுக்க மெய்மையின் செய்தியை அனுப்ப முடியும்."

"எந்நகரில் கல்வி சிறக்கிறதோ அதுவே உண்மையில் வெல்லும் நகர். கல்வியினூடாகவே மெய்யான புகழ் நிலைநிறுத்தப்படுகிறது. ஒரு நகர் சுழன்றுகொண்டிருக்கும் மத்துபோல. இப்பாற்கடலில் அது எதை கடைந்தெடுக்கிறது என்பதே அதன் மதிப்பு. அஸ்தினபுரி சொல்லின் நகராக மாற வேண்டும். சொல் திகழவேண்டுமெனில் படைக்கலம் அதற்கு காவலாக இருக்க வேண்டும். அச்சொல் மெய்மையை சென்றடைய வேண்டும் என்றால் அதில் குருதி படிந்திருக்கலாகாது" என்றாள் சம்வகை. அவள் அச்சொற்களை முன்னரே பலமுறை சொல்லிக்கொண்டிருந்ததுபோல் உணர்ந்தாள். அதை அப்போது சொல்வதுகூட வேறெங்கோ எவரிடமோ சொல்வதுபோல் தோன்றியது. எவருடைய சொற்கள் அவை என அகம் திகைத்தது.

உக்ரை அவளை விழிமலர பார்த்துகொண்டிருந்தாள். பின்னர் "பேரரசியருக்குரிய சொற்கள், தலைவி. தாங்கள் பிறந்த எளிய குடியிலிருந்து இவ்வெண்ணங்களை எப்படி அடைந்தீர்கள்?" என்றாள். சம்வகை புன்னகையுடன் மீண்டு "அவ்வப்போது நானும் அதை எண்ணிக்கொள்வதுண்டு. நான் பிறந்த சூழலில் இருந்து இந்த எண்ணங்கள் எதுவும் எனக்கு வந்ததில்லை. ஆனால் ஒவ்வொன்றும் நிலைகுலைந்த ஒரு தருணத்தில்

இந்நகர்ப் பொறுப்புக்கு வந்தேன். ஒவ்வொரு நாளும் ஓர் ஆண்டுபோல் சென்றது. நான் இன்று அகத்தே முதுமையை அடைந்துவிட்டிருக்கிறேன்” என்றாள்.

சம்வகை தன் கவசங்களை எளிதாக்கி உடலை தளர்த்திக்கொண்டு நீள்மூச்சுவிட்டாள். “நெருக்கடிகளினூடாகவே நாம் நம்மை கண்டுகொள்கிறோம். நம்மை ஒவ்வொரு நாளும் கலைத்து மீண்டும் அடுக்கிக் கொள்கிறோம். ஒருவரின் அகமென்பது அவரே இயற்றிக்கொள்வதே. ஒருவர் சொல் சொல்லெனச் சேர்த்து தன் வாழ்க்கையை ஒரு நூலென யாத்துக்கொள்கிறார் எனத் தோன்றுகிறது. நான் என்னை அவ்வாறு உருவாக்கிக்கொண்டேன்” என்றாள்.

# களிற்றியானை நிரை - 39

### பகுதி ஐந்து : விரிசிறகு – 3

கொம்பொலி எழுந்ததும் சம்வகை வெளியே வந்தாள். அவளைக் கண்டதும் கோட்டை முற்றத்தில் அணிவகுத்திருந்தவர்கள் நடுவே ஓர் ஓசையில்லா அசைவு நிகழ்ந்தது. அவள் கைதூக்கியதும் படைவீரர்கள் ஓருடல் என அணிகொண்டு கோட்டை வெளிமுற்றத்தை நோக்கி செல்லத் தொடங்கினார்கள். சம்வகை படிகளினூடாக கீழிறங்கி வந்து பீடத்திலிருந்த தன் தலைக்கவசத்தை எடுத்து அணிந்துகொண்டு புரவியில் ஏறி பெருநடையில் படை அணிவகுப்பின் முகப்பில் சென்றாள். அவளுக்குப் பின்னால் சீரான குறடுகளின் ஒலி படையென்று ஆகியது. பின் அதில்

படைக்கலங்களின் கிலுக்கமும் கவசங்களின் உரசலோசையும் இணைந்து ஒழுகும் தாளமென்றாயின.

வெளிமுற்றத்தில் சாய்வெயிலில் அவர்கள் நிரைகொண்டனர். இசைச்சூதர்கள் இடப்புறமும் அணிச்சேடியர் வலப்புறமும் நிற்க நடுவே வேதியர் நின்றனர். அஸ்தினபுரியின் கொடியுடன் ஒரு வீரன் முகப்பில் நின்றான். காற்று கடந்து சென்றது. எல்லா சடங்குகளிலும் இறுதிக் கணம் அமைதியான காத்திருப்பு. அப்போது காற்று மெல்ல வீசுகிறது. சூழல் ஒலிகளென மாறி சுற்றி அமைகிறது. ஒவ்வொருவரும் தன்னந்தனியாக தங்களை உணர்கிறார்கள். எவரோ இரும, எவரோ அசைவொலி எழுப்ப, எவரோ கால்மாற்றிக்கொள்ள, கொடி ஒன்று நுடங்க அந்தக் கணம் நீண்டு நீண்டு செல்கிறது.

சிந்துநாட்டின் கொடிவீரனின் புரவியை நெடுந்தொலைவில் சம்வகை பார்த்தாள். அவர்கள் அருகே நின்றிருந்த கொம்பூதிகள் ஓசையெழுப்பினர். அஸ்தினபுரியின் கொடியுடன் முகப்பில் சென்ற கவசம் அணிந்த வீரன் எதிரில் வந்த சிந்துநாட்டின் கொடிவீரனை அணுகி கொடி தாழ்த்தி தலை வணங்கினான். இருவரும் ஒருவரை ஒருவர் ஒருமுறை சுற்றி வலம் இடமாக விலக, தொடர்ந்து வந்த சிந்து நாட்டின் காவல்படையினரை அஸ்தினபுரியின் படையினர் சந்தித்து வேல்களை தாழ்த்தி முறைமைசார்ந்த வரவேற்பளித்தனர். அவர்கள் இருபுறமும் விலக தன் வாளை உருவி தாழ்த்தியபடி சம்வகை முன் சென்று நின்றாள். அவளுக்குப் பின்னால் படையணி படைக்கலம் தாழ்த்தி நின்றது. அது தன் ஓசையின்மையால் இருப்புணர்த்தியது.

துச்சளையின் தேர் தயங்கி நிற்க அதை தொடர்ந்து வந்த புரவியிலிருந்த காவல்வீரன் தேரின் அருகே நெருங்கி

வரவேற்பு நிகழ்வதை அறிவித்தான். துச்சளை திரை விலக்கி தேரிலிருந்து இறங்கினாள். முரசுகளும் கொம்புகளும் ஓங்கி ஒலித்தன. அணிச்சேடியர் முன்சென்று மங்கலத் தாலங்களை அவளுக்கு காட்டினர். குரவையொலி எழுப்பி வரவேற்றனர். சூதர்கள் தங்கள் இசைக்கலங்களுடன் இடம் நோக்கி விலக அணிச்சேடியர் வலம் நோக்கி விலக அந்தணர் எழுவர் நிறைகுடங்களுடன் சென்று கங்கை நீர் தெளித்து வேதம் ஓதி அவளை வாழ்த்தினர். வரவேற்புகளைக் கண்டு துச்சளை சற்று திகைத்தவள் போலிருந்தாள். இயல்பான பழக்கத்தால் அவற்றை அவள் எதிர்கொண்டாள். ஆனால் அவள் நெஞ்சின் அதிர்வை முகம் காட்டியது.

சம்வகை அச்சடங்குகளை எங்கிருந்தோ என நோக்கிக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் அவ்வாறு பலவாக பிரிந்துவிடுவதை அவளால் தடுக்கமுடியவில்லை. போர்க்களத்தில் அவ்வாறு பலவாகப் பிரிந்து போரிடுவதையே எங்கிருந்தோ நோக்கிக்கொண்டிருப்பார்கள் என அவள் கேட்டிருந்தாள். அவள் விழிகளைத் தாழ்த்தி துச்சளையை நோக்கினாள். அவளுடைய பாதங்கள் அத்தனை சிறிதாக இருப்பதைத்தான் சம்வகை வியப்புடன் பார்த்தாள். ஒப்பிடுகையில் தனது பாதங்கள் அதைவிட மும்மடங்கு பெரியவை என்று தோன்றியது. இளமையிலேயே பெரிய கால்களைக் கொண்டவள் என்று அவளைப்பற்றி கூறுவார்கள். பெண்களுக்கு சிறிய கால் அழகென்று அவள் அன்னை கூறுவதுண்டு. பெரிய கால்கள் நடக்கையில் ஓசை எழுப்புவன. பெண்கள் ஓசையெழாது நடக்கவேண்டும். இல்லத்தில் ஓசையெழுப்பி நடப்பவள் அங்குள்ள ஆண்களுக்கும் மூதாதையருக்கும் அறைகூவல் விடுப்பவள்.

பெரிய கால்கள் கொண்டிருந்தமையால் இளமையில் அவளுக்கு கணையாழியோ சிலம்புகளோ அணிவிக்கப்பட்டதில்லை. பெரும்பாலான பொழுதுகளில் அவள் தன் ஆடையை பாதங்கள் முற்றும் மூடும்படி அணிந்திருந்தாள். காவல்பணிக்கு வந்த பிறகு பாதங்களின்மேல் எப்போதும் குறடுகளை அணிந்தாள். குறடுகளுடன் சேர்ந்து அவள் பாதங்கள் மேலும் பெரிதாயின. ஆனால் அவை பெரிய குறடுகள் என்றே தோன்றின. காவல் பணிக்கு வந்த பிறகு தன் பெரிய கால்களைப்பற்றி அவளுக்கு பெருமிதமே எழுந்தது. நடக்கையில் எழும் ஓசை அவளுக்கு பிடித்திருந்தது. மண்ணிலும் பலகையிலும் நடப்பதற்கு வாய்ப்பிருந்தால் ஓசையெழும் பொருட்டு அவள் பலகையிலேயே நடந்தாள்.

தன் கைகளும் பெரியவை என்று அவள் உணர்ந்திருந்தாள். விரல்கள் நீண்டிருப்பது பெண்டிருக்கு அழகு. ஆனால் அகக்கை அகலம் கொண்டிருக்கக் கூடாது என்று ஒருமுறை அவள் கை பார்த்து குறியுரைத்த விறலி கூறினாள். “உங்களுடைய இவ்விரல்களால் நீங்கள் யாழ் மீட்ட இயலாது. முரசு வேண்டுமானால் அறையலாம்” என்று சொல்ல கூடியிருந்த பெண்கள் வாய்பொத்தி நகைத்தனர். அவள் சீற்றமடைந்தாள். சுபத்திரையின் கைகளும் கால்களும் பெரியவை என்பதை அவள் முன்னர் கண்டிருந்தாள். சுபத்திரையின் தோள்களும் அவள் தோள்கள்போல பெரியவை.

“நான் யாதவ அரசியைப்போல” என்று அவள் சொல்ல “எனில் சென்று கதை பழகுங்கள்” என்று விறலி சொன்னாள். அவள் “ஆம், கதை பழகத்தான் போகிறேன் ஒருநாள்” என்றாள். “இந்நிலத்தில் நான்காம் குலத்தவர் படைக்கலம் பயிலும் ஒரு

காலம் வந்தால் உங்களுக்கு ஒரு கதை அளிக்கப்படும்” என்று விறலி சொன்னாள். “அவ்வண்ணம் ஒருகாலம் வருமா என்ன?” என்று ஒருத்தி கேட்க “அத்தகைய பொழுதொன்று எழுகிறதென்று எங்கள் குடிப்பூசகர்கள் இரண்டு தலைமுறையாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்” என்றாள் விறலி. “நான் கதை கைக்கொள்வேன்” என்றாள் சம்வகை.

துச்சளை அணுகிவர சம்வகை நான்கு அடி முன்னால் சென்று வாளை உருவி தலை தாழ்த்தி முழங்கால் வளைத்து வணங்கி வாழ்த்துரை கூவினாள். “சிந்துநாட்டின் அரசியை அஸ்தினபுரி வரவேற்கிறது. அமுதகலக் கொடி தழைந்து பணிகிறது. இத்தருணத்தை இந்நகரை அமைத்த தெய்வங்களும் மூதாதையரும் வாழ்த்துக! குடிகள் வணங்குக! இக்கணம் தெய்வங்களுக்குரியதாகுக!” துச்சளை முகம் மலர்ந்தாள். உடனே விழிகள் கசிய நோக்கு தழைத்து “நன்று! அனைவரையும் வணங்குகிறேன்” என்று தழைந்த குரலில் சொன்னாள். “தேரில் ஏறிக்கொள்ளுங்கள், அரசி” என்று சம்வகை கூறினாள்.

துச்சளை அவள் தோளில் கைவைத்து “நீ அருகே வரும் வரை உன்னை ஆணென்றே நினைத்தேன். உன் குரல் பெண்ணென்று காட்டியது” என்றாள். “காவலர்தலைவியாகிய என் பெயர் சம்வகை” என்றாள் சம்வகை. “ஆம், உன்னைப்பற்றி கேட்டிருக்கிறேன். இக்கோட்டையை நீதான் ஆள்கிறாய் என்றார்கள். நன்று, பெண்கோன்மை அஸ்தினபுரிக்கு வரும் என்று எண்ணியிருந்ததில்லை. வந்தது சிறப்பு” என்றாள் துச்சளை. சம்வகை தலைவணங்கினாள். துச்சளை தேரை திரும்பி நோக்கி “செல்வோம்” என்றாள். அவள் அந்தச் சிறு

பொழுதுக்குள்ளாகவே களைப்படைந்துவிட்டிருந்தாள். மேலுதட்டிலும் மூக்குநுனியிலும் வியர்வை பூத்திருந்தது.

சம்வகை அவளுடைய தோற்றத்தை ஓரக்கண்ணால் பார்த்துக்கொண்டே இருந்தாள். திரண்ட பெரும்தோள்களும், பருத்த உடலும், உருண்ட முகமும், சிறு உதடுகளும் கொண்டிருந்தாள். எவ்வகையிலும் அழகென்று கூற முடியாத தோற்றம். ஆனால் அவள் கண்களிலும் புன்னகையிலும் உளம் கவரும் கனிவொன்றிருந்தது. அது வட்ட முகங்களுக்கே உரியது என்று தோன்றியது. சிறிய உதடுகள், எப்போதும் சிரிப்பில் கூர்கொள்ளத்தக்க சிறிய விழிகள், சிறிய மூக்கு, சிறிய காதுமடல்கள், கொழுவிய கன்னங்கள், செறிந்த கழுத்து.

அவள் கைகளும் மிகச் சிறியவை என்று சம்வகை கண்டாள். அவை மெல்லிய ஈரத்துடன் இருந்தன. அவள் சம்வகையின் தோள் மேல் வைத்த கையை விலக்கவில்லை. தேரில் ஏறிக்கொண்டபோது அவள் உடல் மெல்ல நடுங்கிக்கொண்டிருப்பதை சம்வகை உணர்ந்தாள். அது உடலில் ஆற்றலில்லாமையின் நடுக்கம். அவள் முறையாக உணவுண்டு, துயின்று நெடுநாட்கள் ஆகியிருக்கலாம். அவள் கண்கள் தளர்ந்து இமைகள் தொய்ந்திருந்தன. கரிய உடலில்கூட வெளிறல் தெரிந்தது. தேரின் தூணை அவள் இடக்கையால் பற்றிக்கொண்டு நின்றாள். வெயில் அவள் முகத்தை சுருங்க வைத்தது.

அவளைப்போல் எவரையோ எங்கோ பார்த்திருக்கிறோம் என்னும் எண்ணம் ஏற்பட்டது. அவளிடமிருந்த சாயல் திருதராஷ்டிர மாமன்னருடையது என்பார்கள். அவள் துச்சளையை பலமுறை அவைகளில் பார்த்திருக்கிறாள். அப்போதும் அதுவே தோன்றியது. ஆனால் அப்போது

துச்சளையிடம் இருந்தது காந்தாரியின் சாயல் என்று தோன்றியது. அவளுருவில் அவர்கள் இருவரும் நகர்புகுந்துவிட்டனர் என்னும் எண்ணம் எழுந்தபோது சம்வகை மெய்ப்பு கொண்டாள். உடனே அவள் உருவம் என்ன என்றும் தோன்றியது. சாங்கியப் படையலின்போது வெல்லம் கலந்த அரிசி மாவில் முதலன்னை வடிவைச் செய்து படைப்பதுண்டு. அவ்வுரு அவளுடையது.

“என் மைந்தர் பின்னால் தேர்களில் வருகிறார்கள்” என்று துச்சளை சொன்னாள். “ஆம், அவர்களுக்கும் உரிய வரவேற்பு அளிக்கப்படும். அவர்கள் சிந்துநாட்டு இளவரசர்களாக கொள்ளப்படுவார்கள். கோட்டைக்காவலர்தலைவியால் எதிர்கொண்டு அழைக்கப்படுவார்கள்” என்றாள் சம்வகை. துச்சளை “இங்கே இவ்வகை வரவேற்பை நான் எதிர்பார்க்கவில்லை” என்றாள். “இது அரசியருக்குரிய முறைமை” என்றாள் சம்வகை. “நான் இப்போது சிந்துநாட்டு அரசியல்ல” என்றாள் துச்சளை. “அஸ்தினபுரி தங்களை அரசி என்றே ஏற்கிறது” என்றாள் சம்வகை.

மெல்லிய தவிப்புடன் “ஆனால் இந்நகரின் முறைமைகள்…” என துச்சளை தொடங்க சம்வகை மறித்து “புகுந்த வீட்டு உறவு ஊழின் தெரிவு. அது ஊழுக்கேற்ப மாறவும் கூடும். பிறந்த வீட்டில் பெண்ணின் இடம் பிறந்தமையாலேயே உருவாகிவிடுகிறது. அது தெய்வத் தெரிவு. அதை எவரும் மாற்றமுடியாது என்று கிருஹ்யகாரிகை சொல்கிறது, அரசி” என்றாள். துச்சளை மெல்லிய ஓசையெழச் சிரித்து “உனக்கு பேசத் தெரிந்திருக்கிறது, உன் அரசருக்குத் தேவை நூல்கோள் என அறிந்திருக்கிறாய்” என்றபின் தேரிலேறி பீடத்தில் அமர்ந்தாள்.

தேர் கோட்டைக்குள் நுழைந்தபோது இருபுறமும் கூடியிருந்த மக்கள் உரக்க வாழ்த்தொலி எழுப்பினர். அவர்கள் படைகளால் அனைத்து ஊர்களில் இருந்தும் திரட்டப்பட்டவர்கள். வாழ்த்தொலி எழுப்புவது எப்படி என்று அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் எவரும் அதற்கு முன் துச்சளையை பார்த்திருக்கவில்லை. உண்மையில் அவள் எவ்வகையில் ஒரு பொருட்டென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே ஒரு விளையாட்டுபோல வாழ்த்தொலிகளை கூவினார்கள். சிரித்தபடி தலைப்பாகைகளையும் மேலாடைகளையும் தூக்கி வீசி உரக்கக் கூவி கொப்பளித்தனர்.

வாழ்த்தொலிகளினூடாக சென்றுகொண்டிருந்தபோது துச்சளை உளம் வருந்தக்கூடுமோ என்று சம்வகை எண்ணினாள். கணவனை இழந்த பின் முதல் முறையாக தன் பிறந்தகத்துக்குள் நுழைகிறாள். அவள் உள்ளம் துயருற்றிருக்கும்போது வெளியே என்ன ஏது என்று அறியாது இத்திரள் இவ்வாறு கொந்தளித்துக்கொண்டிருப்பது அவளை ஏளனம் செய்வதுபோல் பொருள்படக்கூடுமோ? ஆனால் ஒருவகையில் அது ஆறுதலாகவும் இருக்கும் என்று தோன்றியது. அங்கிருந்து அவள் செல்கையில் விட்டுச்சென்ற அனைத்தும் அவ்வண்ணமே நீடிக்கின்றன என்பதுபோல. பின்னடி வைத்து இறந்தகாலத்திற்கு திரும்பிவிட முடியும் என்னும் நம்பிக்கையே பெண்களை பிறந்தவீடு நோக்கி வரவழைக்கிறது என்று அவள் அன்னை அடிக்கடி சொல்வதுண்டு. அவள் அஸ்தினபுரிக்குள் நுழைந்து ஒவ்வொரு அடிக்கும் தன் அகவையை இழந்துகொண்டே செல்வாள்.

அரண்மனையை அடைகையில் அங்கு சிறுமியாக மாறிவிட்டிருக்கக்கூடும்.

அஸ்தினபுரியில் அப்போது அரசியரென எவரும் இருக்கவில்லை. ஒவ்வொரு ஊரிலிருந்தும் அரசியரை அழைத்து வருவதற்காக அமைச்சர்கள் தூது சென்றிருந்தார்கள். சிபிநாட்டிலிருந்து தேவிகை கிளம்பிவிட்டதாக செய்தி வந்திருந்தது. மத்ரநாட்டிலிருந்து விஜயை அன்று காலை கிளம்புகிறாள். துவாரகையிலிருந்து சுபத்திரை வர மறுத்துவிட்டதாக கூறப்பட்டது. திரௌபதி வந்துகொண்டிருக்கிறாள், மறுநாள் காலை அஸ்தினபுரியை வந்தடைவாள் என்றார்கள். அவர்கள் வந்து சேரும்போது அவர்கள் விட்டுச்சென்ற நகர் அல்ல என்பதை காண்பார்கள். அப்புது நகர் அவர்களுக்கு திகைப்பளிக்கும். ஆனால் விந்தையானதொரு ஆறுதலையும் அளிக்கக்கூடும். அது அவர்களை பழைய நினைவுகளிலிருந்து காக்கும். ஊர் திரும்பும் ஆறுதலையும், பழைய நினைவுகளின் எடை இல்லாத விடுதலையையும் ஒருங்கே அடையமுடியும்.

அரண்மனையில் துச்சளையை வரவேற்க மங்கலச்சேடியரும் இசைச்சூதர்களும் நின்றனர். சுரேசர் முற்றத்து முகப்பில் தோளில் சுற்றப்பட்ட பட்டுச் சால்வையுடன் நின்றார். தேர் வந்து நின்றதும் இசைச்சூதர்கள் முழக்கமிட, மங்கலச்சேடியர் தாலங்களுடன் முன்னால் வந்து வரவேற்றனர். அவள் தேரிலிருந்து இறங்கியதும் சுரேசர் அணுகி வணங்கி நற்சொல்லுரைத்து வரவேற்றார். துச்சளையின் முகம் மலர்ந்திருப்பதை சம்வகை கண்டாள். ஆனால் களைப்பில் நிற்க முடியாமல் அவள் தேரின் தளத்தை சற்று பற்றிக்கொண்டாள். நெஞ்சு விம்ம அண்ணாந்து

அஸ்தினபுரியின் கோட்டையை பார்த்தாள். அவள் முகம் அழுகையில் உடைவதற்கு முந்தைய கணம் என, நீர்த்துளி காற்றில் உலைவது என, விம்மி நெளிவுகொண்டது.

அரண்மனையின் முகப்பு புதிய அரக்கும் மெழுகும் பூசப்பட்டு அன்று கட்டியதுபோல் மாறியிருந்தது. அனைத்துச் சாளரங்களிலும் பீதர்நாட்டு ஆடிகள் பதிக்கப்பட்டு பலநூறு நீர்ப்பரப்புகள் என வானையும் முற்றத்தையும் தெருக்களையும் நெளித்து அலையளித்துக் காட்டின. தூண்கள் வெண்சுண்ணப் பூச்சில் பளிங்கென நின்றன. துச்சளை “இவ்வரண்மனை நோக்கு கொண்டுவிட்டது” என்றாள். சுரேசர் “அரசரின் ஆணை” என்றார். “முன்பு இது விழியற்று இருந்தது என்பதை இப்போதுதான் உணர்கிறேன்” என்றபின் திரும்பி “எங்கே அந்தப் பெண்?” என்றாள்.

சம்வகை தலைக்கவசத்தை எடுத்து “இங்கிருக்கிறேன், அரசி” என்றாள். துச்சளை “இவளை நான் விரும்புகிறேன். இன்று காலை இவளை சந்திக்கும்வரை என் உள்ளம் துயரிலும் நம்பிக்கையின்மையிலும் மூழ்கியிருந்தது. இங்கு மீள்வது சரியா என்றே குழம்பிக்கொண்டிருந்தேன். திரும்பிவிடலாம் என்றுகூட எண்ணியிருந்தேன். இவள் நடந்து வந்து வாள்தாழ்த்தி என்னை வரவேற்றபோது ஒருகணம் என் மூத்தவரே வருவதுபோல் உணர்ந்தேன். இவளுக்கும் அவருக்கும் எந்த உடலொற்றுமையும் இல்லை. எவ்வண்ணம் மூத்தவரென்று நினைத்தேன் என்பதுகூட எனக்கு வியப்பாக உள்ளது” என்றாள்.

சுரேசர் புன்னகைத்து “அவள் அணிந்திருப்பது உங்கள் மூத்தவருக்கு உகந்த பெருங்கவசத்தை” என்றார். துச்சளை மூச்சொலி எழுப்பி “ஆம், மெய்!” என்றாள். “இது வஜ்ரதந்தரின்

கவசம். அவர் என் தமையனை தோற்றத்திலும் அசைவிலும் பின்பற்றுபவர். நான் கண்டது அவரை, அவராகி வந்த என் தமையனை” என்றாள். பற்கள் தெரிய சிரித்தபோது தான் கண்டவர்களிலேயே பேரழகியாக அவள் மாறுவதுபோல் துச்சளைக்குத் தோன்றியது. “என் மைந்தர்களை சிந்துநாட்டிலிருந்து கிளம்பிய பின் நான் பார்க்கவே இல்லை. அவர்கள் எவ்வண்ணம் உணர்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. பயணம் அவர்களை ஆறுதல்படுத்தும் என எண்ணினேன். என் துயர் அவர்களை அடையவேண்டாம் என்று எண்ணி அகன்றேன்” என்றாள். சுரேசர் “இது அவர்களின் நிலம்” என்று மட்டும் சொன்னார்.

மைந்தர்கள் வந்த தேர் அணுகியபோது இசைக்கலங்களும் வாழ்த்தொலிகளும் முழங்கின. தேரைத் திறந்து துச்சளையின் மைந்தர்கள் சுரதனும் சுகதனும் வெளிவந்தனர். அரச ஆடை அணிந்திருந்தாலும் நெடும்பயணத்தாலும் துயிலின்மையாலும் களைத்து அவர்கள் நிற்க தள்ளாடினார்கள். காலையொளியில் கண்கள் கூச கைகளால் மறைத்துக்கொண்டார்கள். சுகதன் தன் மூத்தவனைவிட உயரமானவன், ஆனால் அவன் உடலசைவு சிறுவர்களுக்குரியதாக இருந்தது. அவன் “இதுதான் அரண்மனையா?” என்றான்.

சம்வகை அவர்கள் இருவரையும் கூர்ந்து நோக்கினாள். இருவரும் இருவகை இயல்பினர் என்று தெரிந்தது. சுரதன் இறுக்கமானவனாக, அகத்தனிமை கொண்டவனாக தோன்றினான். அவன் ஜயத்ரதனின் சாயல்கொண்டவனாக இருக்கலாம். மெல்லிய நீண்ட உடல் கொண்டவன். யவனர்களுக்கு நிகரான வெண்ணிறம். நீள்முகம். சிவந்த செவிகள். சிவந்த வெட்டுப்புண் போன்ற உதடுகள். எச்சரிக்கை

கொண்ட விழிகள். இளையவனாகிய சுகதன் அன்னையைப் போலிருந்தான். கரியவன், பெரிய தோள்களும் பருத்த உடலும் கொண்டவன். அவன் மண்மறைந்த கௌரவ மைந்தர்களில் ஒருவன் எனத் தோன்றினான். சிரிக்கும் விழிகள் ஒவ்வொன்றையும் தொட்டுத்தொட்டு வியந்தன.

சுரேசர் சென்று அவர்களை தலைவணங்கி முகமன் உரைத்து வரவேற்றார். “சிந்துநாட்டு இளவரசர்களுக்கு அஸ்தினபுரியின் நல்வரவு. விஷ்ணு, பிரம்மன், புதன், புரூரவஸ், ஆயுஸ், நகுஷன், யயாதி, புரு, ஜனமேஜயன், பிராசீனவான், பிரவீரன், நமஸ்யு, வீதபயன், சுண்டு, பஹுவிதன், ஸம்யாதி, ரஹோவாதி, ரௌத்ராஸ்வன், மதிநாரன், சந்துரோதன், துஷ்யந்தன், பரதன், சுஹோத்ரன், சுஹோதா, கலன், கர்த்தன், சுகேது, பிருஹத்ஷத்ரன், ஹஸ்தி, அஜமீடன், பிரகதிஷு, பிரகத்ரதன், பிருஹத்காயன் எனத் தொடரும் கொடிவழி சிறப்புறுக! பிருகத்காயரின் மைந்தர் ஜயத்ரதன் விண் நிறைந்து வாழ்த்துக! ஜயத்ரதனின் மைந்தர்கள் சுரதனும் சுகதனும் பெரும்புகழ்கொண்டு நிலம்புரந்து கோல்பெருகி புகழ்நிறைக! ஆம், அவ்வாறே ஆகுக!”

அவர்களை அந்த வாழ்த்தொலி உணர்வுநிலை பிறழச் செய்தது. முகம் கலங்க, என்ன சொல்வதெனத் தெரியாமல் நின்றனர். சுகதன் அன்னையை நோக்க சுரதன் வெறுமனே தலைகுனிந்து நின்றான். அச்சூழலை கடக்கும்பொருட்டு மெல்லிய புன்னகையுடன் “அவர்கள் நினைவறிந்த பின்னர் இப்போதுதான் இங்கு வருகிறார்கள்” என்று துச்சளை சொன்னாள். “கதைகளினூடாக அவர்கள் பார்த்த அஸ்தினபுரி பிறிதொன்றாக இருக்கும். இந்நகரை அவர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை.” இளைய மைந்தன் சுகதன் அவள் அருகே வந்து “எத்தனை பெரிய அரண்மனை! மேலே

நீர்ச்சுனைகள்! நான் இதைத்தான் எண்ணினேன்! இப்படித்தான் இது இருக்கும் என்று எண்ணினேன்!” என்றான்.

“அவை நீர்ச்சுனைகள் அல்ல, இளவரசே. பீதர்நாட்டு ஆடிகள். மேலே சென்றால் அவற்றில் உங்கள் முகத்தை பார்க்கமுடியும்” என்றார் சுரேசர். “உங்கள் முழு உடலையே பார்க்க முடியும். நீர்ச்சுனைப்பாவைபோல.” சுகதன் “ஆடிகளா? அத்தனை பெரிய ஆடிகளா?” என்று வியப்புடன் சொன்னான். “நான் இப்போதே மேலே செல்லவேண்டும்…” என்றான். மூத்தவன் சுரதன் “வரும்வழிதோறும் பார்த்தேன், அனைத்து மாளிகைகளிலும் ஆடிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மாளிகைகள் தங்கள்மேல் சுனைகளைச் சூடியிருப்பதாகவே தோன்றியது” என்றான். “இதை நாம் அங்கு நம் நகரிலும் அமைக்கவேண்டும்” என்றான் சுகதன். சுரதனின் முகம் மாறியது. “ம்” என்று அவன் சொன்னான்.

“இளவரசர்கள் வருக!” என்று சுரேசர் அவர்களை அழைத்துச் சென்றார். “தங்கள் அறை அவ்வண்ணமே பேணப்படுகிறது, அரசி. மைந்தர்களுக்கு அருகிலேயே புஷ்பகோஷ்டத்தில் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று சற்று ஓய்வெடுங்கள். அரசர் தங்களை உச்சிப்பொழுதுக்கு மேல் தன் தனி அவையில் சந்திப்பார்” என்றார். துச்சளை “ஆம், நான் களைத்திருக்கிறேன். உள்ளத்தாலும்” என்றாள். புன்னகையுடன் சம்வகையை நோக்கி “இன்று நான் சற்று துயில்கொள்ளக்கூடும்” என்றாள்.

சுரேசர் “நாளை புலரியில் பேரரசி திரௌபதி நகர்நுழைகிறார். பிற அரசியர் ஓரிரு நாட்களில் இங்கு வருகிறார்கள். நாளை அந்தியில் இளவரசர் சகதேவன் தன் வேள்விப் பரியுடன் நகர் மீள்வார். ஐந்தாறு நாட்களுக்குள் பிற மூவரும் வந்துவிடுவார்கள். அவர்கள் வந்த பின்னர் முறைப்படி

ராஜசூயம் அறிவிக்கப்படும்” என்றார். “இந்நகர் இழந்த அனைத்தையும் பன்மடங்காக மீட்டுக்கொண்டிருக்கிறது, அரசி. இங்கு முன்பு உகக்காதவை பல நடந்தன. அவையனைத்தையும் மறந்து அகல்க! இது மீண்டெழுவதற்கான தருணம்.” துச்சளை “ஆம், அவ்வாறு எண்ணியே நானும் வந்தேன்” என்று சொன்னாள். சுரேசர் தலைவணங்கினார்.

ஏவலர்கள் துச்சளையை அழைத்துச் செல்ல அவள் ஓரிரு அடி வைத்தபின் நின்று சம்வகையிடம் “நீ என் அறைக்கு வந்து பார். உன்னிடம் பேசவேண்டும் போலிருக்கிறது” என்றாள். “ஆணை” என சம்வகை தலைவணங்கினாள்.

# களிற்றியானை நிரை - 40

### பகுதி ஐந்து : விரிசிறகு – 4



சுரேசர் பரபரப்பாக ஓலைகளை நோக்கினார். நீண்ட நாள் பட்டறிவால் ஓலையின் சொற்றொடர்களை ஒரே நோக்கில் படிக்க அவர் பயின்றிருந்தார். ஓலையின் செய்தியே ஒரு சொல் என ஆனதுபோல. படித்தபடியே ஆணைகளை கூறினார். அவரைச் சூழ்ந்திருந்த கற்றுச்சொல்லிகள் ஓலைகளில் ஆணைகளை பொறித்துக்கொண்டார்கள். ஓலைகளின் மையச் செய்திகளை மட்டுமே அவர்கள் எழுதினர். முகமன்கள் வாழ்த்துக்கள் முறைமைச்சொற்களுடன் அந்த ஓலைகள் முழுதுருக்கொள்ளும். அந்த அறை கைவிடுபொறியின் உட்புறம் என இயங்கிக்கொண்டிருந்தது.

சம்வகை சுரேசரை நோக்கியபடி அமர்ந்திருந்தாள். ஆணைகளை இட்டுவிட்டு இயல்படைந்த சுரேசர் நீள்மூச்சுடன் சாய்ந்து அமர்ந்தார். ஏவலன் இன்நீர் கொண்டுவந்து அவருக்கு அளித்தான். அதை அருந்தியபடி மெல்லிய வியர்வையுடன் “இந்தப் பணிகள் இல்லையேல் நான் என்ன ஆவேன் என்று எண்ணிக்கொண்டேன். ஒரு சொல் உண்டு. ஒவ்வொரு பொருளையும் வானம் எண்புறமும் அழுத்திக் கவ்வியிருப்பதனால்தான் அவை வடிவு கொண்டிருக்கின்றன என்று. நான் பணிகளால் வடிவம் கொண்டவன். இப்பணிகள் நின்றுவிட்டால் எண்புறமும் திறந்து உடைவேன்” என்றார். “நன்றல்லவா?” என்றாள் சம்வகை.

அவர் திகைப்புடன் அவளை நோக்கி உடனே நகைத்து “ஆம், மெய். அதுவே வீடுபேறு” என்றபின் “நீ பேசக் கற்றுக்கொண்ட விரைவுபோல் நான் வியப்பது பிறிதொன்றில்லை. உன் உடலுக்குள் இருந்து வாயில் திறந்து இன்னொருவர் எழுந்து வந்துகொண்டிருப்பதுபோல” என்றார். “என் மூதாதையர்” என்று அவள் சொன்னாள். “நீ தேடிப் பார். உன் குருதியில் எங்கோ அசுரர்குடி உண்டு” என்றார் சுரேசர். “அசுரர் சொல்வலர் என்று நூல்கள் சொல்கின்றன. செயலூக்கமே அசுர இயல்பு. அறச்சார்பைக் கடந்து செல்லும் அச்செயலூக்கமே அவர்களை அழிவை நோக்கி கொண்டுசெல்கிறது. பிரஹ்லாதசூத்ரத்தில் ஒரு சொல் உண்டு. அசுரர் என்போர் வேதமில்லா தேவர் என. எளிய சொல். ஆனால் ஆழ்பொருள் கொண்டது. அவர்கள் மானுடரைவிட மேலானவர்கள்.” சம்வகை புன்னகைத்தாள்.

சுரேசர் இயல்பாகவே உரையாடலை துச்சளை நோக்கி கொண்டுசென்றார். “சிந்துநாட்டு அரசி உன்னை எதன்பொருட்டு வரச்சொன்னார்கள் என்பது தெரியவில்லை. இந்நகரில் என்ன

நிகழ்கிறது என்பதை குருதிக்கும் குடிக்கும் அப்பால் உள்ள ஒருவரிடமிருந்து கேட்டு தெரிந்துகொள்ளும் விழைவிருக்கலாம். இங்கிருந்து அவர்களுக்கு ஒற்றுச்செய்திகள் சென்றுகொண்டுதான் இருந்திருக்கும். ஆனால் அவை எல்லாமே தெளிவற்ற செய்திகளாகவே இருந்திருக்கும். ஏனெனில் முன்பிருந்த விரிவான ஒற்றர் அமைப்பு இன்றில்லை. சிந்துநாட்டில் என்ன நடக்கிறது என்பதுகூட நமக்கு தெரியவில்லை. பிற அனைத்தையும் ஒருங்கிணைத்துவிட்டோம். ஆனால் ஒற்றர் அமைப்பை ஒருங்கிணைக்க இன்னும் நெடும்பொழுது ஆகும் என்று தோன்றுகிறது” என்றார்.

“நான் என்ன கூற வேண்டும்?” என்று சம்வகை கேட்டாள். “அவர்களிடம் எதையும் மறைக்கவேண்டியதில்லை. இது அவர்களின் அரசு. நம் ஐயங்கள், குழப்பங்கள், நிலையின்மைகள் என எல்லாவற்றையும் அவர்களிடம் சொல்லலாம். அவர்கள் கூறுவதென்ன என்பதை கேட்டுக்கொள்க!” என்று சுரேசர் சொன்னார். “ஆனால் அந்த முதல் மைந்தர் சற்றே சிக்கலானவர். அவருள் ஜயத்ரதன் வாழ்கிறார். அவருள் ஒருபோதும் அவ்வஞ்சம் அணைய வாய்ப்பில்லை. அது நமக்கு நலம் பயப்பதும் அல்ல.” சற்றே எண்ணி “ஆனால் அதையும் நாம் கருதவேண்டியதில்லை. அதை துச்சளையே அறிந்திருப்பார்” என்றார்.

சம்வகை “அவர்கள் நம்மை நம்பி வந்திருக்கிறார்கள்” என்றாள். “அதனாலென்ன? அது அரசவாழ்க்கையில் இயல்பானதே” என்றார் சுரேசர். “தந்தை மைந்தரில் வாழ்வது என்றுமுள்ளது. கொடிய தந்தை மைந்தரில் மேலும் பேருருக் கொள்கிறார். விசைகொண்ட வஞ்சங்களும் விழைவுகளும் அத்தனை

எளிதில் மண்நீங்குவதில்லை.” சம்வகை பெருமூச்சுவிட்டு “அரசி ஆழ்ந்த துயருற்றிருக்கிறார்” என்றாள். “இயல்புதானே? ஆனால் அத்துயர் அவர் கணவரின் பொருட்டு அல்ல. தன் தமையனின் பொருட்டுகூட அல்ல. அவர்கள் பொருட்டு துயருறுபவர் அல்ல சிந்துநாட்டு அரசி” என்றார் சுரேசர்.

“அவர் தன் தமையன் கொல்லப்பட்ட பின்னரும்கூட இவ்வண்ணம் இங்கு வந்தது நன்று. நம் அரசருக்கு அளிக்கப்பட்ட ஒரு நல்லேற்பு, ஒரு வாழ்த்து என்று இதை கருதலாம்” என்று சம்வகை சொன்னாள். சுரேசர் “ஆம், அவர்கள் இங்கு வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டதுமே நானும் அவ்வாறுதான் எண்ணினேன். அரசரும் முகம் மலர்ந்து நன்று, தெய்வங்கள் நம்மிடம் அளியுடன்தான் இருக்கிறார்கள் போலும் என்றார். இவ்வளவு கடந்த பின்னரும்கூட துரியோதனன் முறை மீறி கொல்லப்பட்டதாகவும் கௌரவர்கள் உடன்பிறந்தார் கையால் கொல்லப்பட்டது பிழையே என்றும் சூதர்கள் நாவில் சொல் திகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. இது அச்சொல்லில் இருந்து ஒரு சிறு காப்பு” என்றார்.

சம்வகை “ஆனால் இங்கு வந்திருக்கும் புதிய குடிகளுக்கு அவை ஒரு பொருட்டல்ல. அவர்கள் குருக்ஷேத்ரப் போரை தங்களுக்குரிய வகையில் மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பாடலைக் கேட்கையில் அங்கு நிகழ்ந்தது போரல்ல, ஒரு மாபெரும் விளையாட்டு என்னும் எண்ணம் எனக்கும் ஏற்படுகிறது” என்றாள். சுரேசர் “ஆம், ஆனால் எவ்வண்ணம் இருப்பினும் இந்த வசை அனைத்தும் இங்கு எவ்வண்ணமோ சொல்லில் திகழும். இந்த மக்கள் இந்நகருடனும் இதன் தொல்வரலாறுடனும் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட பின்னர் இங்குள்ள அறம், அறம்

மீறல் ஆகியவற்றைப்பற்றி எண்ணத்தொடங்குவார்கள். அப்போது மாமன்னர் துரியோதனன் மீண்டும் சொல்லில் உயிர்த்தெழுவார்" என்றார்.

"நாம் செய்வதற்கொன்றே உள்ளது" என்று சம்வகை சொன்னாள். "இதோ இங்கு அவர் தங்கை வந்து நம்முடன் இருக்கிறார். குருதியுறவு அகலவில்லை. மாமன்னர் துரியோதனனுக்கு உரிய முறையில் இங்கே நிறைவுபூசனைகள் செய்வோம். நடுகல் நாட்டுவோம். அதை சிந்துநாட்டரசி துச்சளை முன்னின்று செய்யட்டும். நம் அரசரும் தம்பியரும் நிகழ்த்தட்டும்." சுரேசர் முகம் மலர்ந்து "அரிய எண்ணம்... நான்கூட இவ்வண்ணம் எண்ணவில்லை. இதை செய்தாகவேண்டும். இதன்பொருட்டே சிந்துநாட்டு அரசி இங்கே வந்தார் போலும். நன்று!" என்றார். சம்வகை புன்னகைத்தாள். "நீ இந்நாட்டையே ஆளலாம்" என்றார் சுரேசர். சம்வகை சிரித்துக்கொண்டு எழுந்தாள். "அரசி ஓய்வெடுத்திருக்கக்கூடும்" என்றாள்.

சுரேசர் "நீ அவரிடம் சென்று பேசு. அரசி உளம்விரிந்தவர். மானுடர் அனைவரையும் ஒன்றெனப் பார்ப்பதும், ஒவ்வொருவரிலும் தனிஅன்பு செலுத்துவதும் அவருக்கு குல முறையாக கிடைத்த செல்வம். அவர் தமையர்கள் அவ்வண்ணம் இருந்தார்கள். தந்தை கிளையென கைவிரித்த ஆலமரமெனத் திகழ்ந்தவர். அரசி இங்கு வந்தது பேரரசர் திருதராஷ்டிரரே வந்ததுபோல" என்றார். சம்வகை அகத்தே மெல்லிய உணர்ச்சி அசைவுக்கு ஆளானாள். அதை மறைக்க தலையைத் திருப்பி சாளரத்தை நோக்கினாள். "நன்று, செல்க! செய்தியை எனக்குத் தெரிவி" என்று சுரேசர் சொன்னதும் தலைவணங்கினாள்.

சம்வகையை அழைத்துச் செல்ல துச்சளையின் ஏவலன் நின்றிருந்தான். செல்லலாம் என்று அவள் கைகாட்டியதும் அவன் அவளை அழைத்துச்சென்றான். அவள் தன் காலடிகள் ஓங்கி ஒலிக்க அரண்மனையின் இடைநாழியினூடாக நடந்தாள். மரப்பலகைத் தளத்தில் தேய்ந்தவையும் விரிசலிட்டவையுமான பலகைகள் அனைத்தும் அகற்றப்பட்டு புதிய பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன. புதிய பலகைகளும் பழைய பலகைகளும் ஒன்றெனத் தெரியும்படி அவற்றின் மேல் மரவுரி வண்ண அரக்கு பூசப்பட்டு மெருகூட்டப்பட்டிருந்தது. தேய்ந்த செவ்வண்ணப் புரவியின் முடிப்பரப்பு என அது மின்னிக்கொண்டிருந்தது. தூண்களின் வெண்கலப் பட்டைகளும் குமிழ்களும் புதிதாக மாற்றப்பட்டிருந்தன. அவை பொன்னெனச் சுடர்ந்தன. சுவரிலிருந்த அனைத்து ஓவியங்களும் மீண்டும் தீட்டப்பட்டிருந்தன, அனைத்துத் திரைச்சீலைகளும் புதிதாக மாற்றப்பட்டிருந்தன. ஓரிரு நாட்களுக்கு முன்பு அவள் உள்ளே நுழைந்திருந்தபோது இருந்த அரண்மனை திரை ஒன்று சுருட்டி அகற்றப்பட்டு பிறிதொன்று தோன்றியதுபோல அங்கே அமைந்திருந்தது.

அவள் அங்கு நிகழ்ந்திருந்த ஒவ்வொரு மாற்றத்தையாக பார்த்துக்கொண்டு சென்றாள். அவளுடைய காலடிகள் சீரான அழுத்தத்துடன் ஒலித்தது அவளுக்கு நிறைவளித்தது. அது அவளுக்கு மிடுக்கையும் தயக்கமின்மையையும் அளித்தது. அரண்மனையின் ஒவ்வொரு புதிய இடமும் மெல்ல எழுந்துவந்து அவளிடம் பணிந்து தன்னைக் காட்டி பின்சென்றது. முன்பு வெறும் மரப்பரப்பாக இருந்த சுவர்களின்மேல் சுண்ணமும் அரக்கும் பூசப்பட்டு புதிய

ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்களில் பல அப்போதும் வரைந்து முடிக்கப்பட்டிருக்கவில்லை. சில ஓவியங்களுக்கு அருகே மூங்கில் சட்டங்களின் மேல் அமர்ந்து ஓவியர்கள் அவற்றை வரைந்துகொண்டிருந்தனர்.

அர்ஜுனனின் திசைப்பயணங்கள். அவன் நாகருலகில் தலைகீழாக தொங்கிக்கிடந்தான். மூங்கில்கூட்டங்களின் மேல் பறந்தான். நீருள் அலையும் வேர்கள் நடுவே மீன்களுடன் நீந்தினான். இளமையழியாத பார்த்தன். நடனமிடும் பெண் உடல் கொண்டவன். நாகமென கைகள். யோகியரின் விழிகள். இரக்கமற்ற உறுதிகொண்ட உதடுகள். அர்ஜுனனை அவன் உச்சகணங்களில் மட்டுமே கண்ட ஒருவர் வரைந்த காட்சிகள் அவை. தூரிகைகளை வலக்கையில் ஏந்தி வண்ணக்கிண்ணங்களின் தொகையை வயிற்றில் கட்டிக்கொண்டபடி வரைந்தனர். வண்ணம் தொட்ட நாக்குகள் என தூரிகைத்தோகைகள் மெல்ல மெல்ல ஓவியப்பரப்பை நக்கி குழைந்து நெளிந்தன. அந்தத் தொடுகையின் மென்மை விழிகளால் உணர்கையிலேயே மெய்ப்பு கொள்ளச்செய்தது.

வண்ணம் அத்தூரிகையிலிருந்து வரவில்லை, காற்றிலிருந்து, இன்மையிலிருந்து எழுகிறது எனத் தோன்றியது. வண்ணங்கள் வடிவங்களாக ஆயின. புடைப்புகளும் விரிசல்களும் இணைவுகளும் கரவுகளும் குழைவுகளுமாயின. வண்ணங்களே ஒளியும் இருளும் ஆயின. வண்ணங்களில் இருந்து புல்வெளிகள், மரச்செறிவுகள் உருவாயின. அர்ஜுனனும் வண்ணங்களின் கலவையே. வண்ணங்களாக அனைத்தையும் கண் அள்ளிக்கொள்கிறது. வண்ணங்கள் என நினைவு சேமித்துக்கொள்கிறது. வண்ணங்களென வெளிப்படுகிறது. ஒன்றும் குறைவதில்லை. எனில் வெளியே விரிந்திருக்கும்

இவையனைத்தும் வண்ணங்கள் அன்றி வேறில்லை. வண்ணங்களே ஒளியென்றாகின்றன. ஒளியே வண்ணமென்றாகிறது. எனில் ஒவ்வொருநாளுமென கதிரவன் வரைந்தெடுக்கும் ஓவியம் இப்புவி. எந்நூலில் உள்ள வரி? அர்க்கபுராணம். அதிலா? ஆம், அதிலுள்ள வரிதான் இது.

துச்சளையின் அறைவாயிலில் அவள் நின்றாள். ஏவற்பெண்டு உள்ளே சென்று அவள் வரவை அறிவித்தாள். கதவிலிருந்த அனைத்து பித்தளைக் குமிழ்களிலும் பொன்னொளிச் சுழிகள். அவற்றில் அவளுடைய உருவம் கருத்துளியென சுருண்டு நெளிந்தது. அவள் தன் கவசமணிந்த உருவை அதில் பார்த்தாள். அது எப்போதும் அவளை வரையறுத்தது. ஆற்றவேண்டியதென்ன, உரைக்க வேண்டியதென்ன என்பதை அதுவே முடிவு செய்தது. அவள் பெருமூச்சுவிட்டாள். கவசங்களின் பளபளப்பில் அச்சூழல் வளைந்து நெளிந்து தெரிந்தது. அவள் அச்சூழலை தன்மேல் தொகுக்கிறாள். அந்த உலோகச் சுழி அவளை அச்சூழலுடன் மீண்டும் தொகுக்கிறது.

கதவைத் திறந்து ஏவற்பெண்டு தலைவணங்கி அவளை உள்ளே அனுப்பினாள். சம்வகை அறைக்குள் சென்று தலைவணங்கி முகமனுரைத்தாள். துச்சளை தன் பயண ஆடையை அகற்றி வெண்பட்டாடை அணிந்திருந்தாள். தாழ்வான மஞ்சத்தில் இரு உருளைத் தலையணைகளை அணை வைத்து கால் நீட்டி அமர்ந்திருந்தாள். அவளருகே இன்னொரு மஞ்சத்தில் சுகதன் அமர்ந்திருந்தான். சுரதன் அப்பால் சாளரத்தோரம் நின்றிருந்தான். அவளிடம் “முதலில் அந்தக் கவசங்களை கழற்று” என்றாள். சம்வகை சற்றே தயக்கத்துடன் “அரசி!” என்றாள். துச்சளை இனிய புன்னகையுடன் “இது அரசமுறை சந்திப்பு அல்ல. உன்னை

அக்கவசத்தில் பார்ப்பது எனக்கு பிடித்திருக்கிறது. ஆனால் இப்போது அதிலிருந்து உன்னை வெளியே கொண்டுவர விரும்புகிறேன்” என்றாள்.

“கவசங்களை இப்போது கழற்றுவதென்றால்…” என்று மீண்டும் சம்வகை தயங்க “கழற்றடி” என்று செல்லமாக உரத்த குரலில் துச்சளை சொன்னாள். சம்வகை தன் கால்கவசங்களை கழற்ற குனிய “கழற்றுங்களடி” என்று ஏவற்பெண்டுகளை நோக்கி துச்சளை சொன்னாள். இரு ஏவற்பெண்டுகள் வந்து அவளுடைய கவசங்களின் தோல்பட்டைகளை அவிழ்த்து அவற்றை எடுத்து அப்பால் வைத்தனர். மார்புக்கவசங்களையும் தோளிலைகளையும் எடுத்து அடுக்கி வைத்தனர். சுகதன் உரக்க நகைத்து “ஆமையின் ஓட்டை அகற்றுவதுபோல” என்றான். துச்சளை அவனைப் பார்த்தபின் சிரித்து “சிந்துநாட்டில் ஆமையும் சிப்பியும் முதன்மை உணவுகள் என்று அறிந்திருப்பாய்” என்றாள்.

சம்வகை புன்னகைத்து “ஆம்” என்று சொன்னாள். கவசங்கள் கழற்றப்பட்டதும் அவள் முகம் நாணம் கொண்டது. சுகதன் “ஓடு நீக்கப்பட்ட பிறகு ஆமை உள்ளே துடித்துக்கொண்டிருக்கும்” என்றான். “ஆமைக்கு வலி கிடையாதென்பார்கள்” என்று துச்சளை சொன்னாள். “ஆகவே அதை உயிருடனேயே ஓடு நீக்குவார்கள். உள்ளே அது பிறிதொரு உயிர்போல தசை அதிர்வுடன் இருக்கும்.” சம்வகை உதடுகளை அழுத்தியபடி நிலம் நோக்கிக்கொண்டு தன் கவசங்களை நீக்கினாள். தன் ஆடையை சீரமைத்துக்கொண்டாள். அவளுக்கு சற்று மூச்சுத் திணறியது. “உன் நாணம் அழகாக உள்ளது, பெண்ணாகிவிட்டாய்” என்றாள் துச்சளை. சம்வகை மீண்டும் தன் பெரிய கால்களை பார்த்தாள்.

“அமர்க!” என்று அருகிலிருந்த பீடத்தை துச்சளை காட்டினாள். “அரசி, நான் எக்குலம் எந்நிலை என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள்” என்றாள் சம்வகை. “அதை அறியவேண்டியது என் பொறுப்பு. என் ஆணை இது!” என்றாள் துச்சளை. சம்வகை அவள் அருகே அமர்ந்துகொண்டாள். “உன் தந்தையை நான் நினைவுகூர்கிறேன்” என்று துச்சளை சொன்னாள். “பல முறை யானைக்கொட்டிலுக்குச் சென்று அவருடம் விளையாடியிருக்கிறேன். என்னை யானைஏற்றம் பயிற்றுவித்தவர்களில் அவரும் ஒருவர். இனியவர். நீ அவர் மகள் என சற்றுமுன்னர்தான் அறிந்தேன். உன்னைக்கூட நான் கண்ட நினைவிருக்கிறது. உன் அன்னை கைக்குழவியாக உன்னை ஒருமுறை அங்கே கொண்டுவந்தாள்.” சம்வகை ஆடையை கால் நடுவே சேர்த்து அமைத்தாள்.

துச்சளை அவளுக்கு இன்நீர் கொண்டுவர ஆணையிட்டாள். அது ஓர் அரசமுறைமை என்றும் இணைக்குலங்களுக்கே அது அளிக்கப்படும் என்றும் சம்வகை அறிந்திருந்தாள். சேடியர் அயல்நாட்டவர் ஆகையால் அவர்களிடம் அது வியப்பெதையும் உருவாக்கவில்லை. இன்நீர் வந்தது. அதை துச்சளையே குடுவையில் ஊற்றி அளித்தாள். சம்வகை துச்சளையின் கைகளை பார்த்துக்கொண்டிருந்தாள். மணிக்கட்டும் விரல்தொகையும் மிகச் சிறியவை. குழவியருக்குரியவை. எப்போதும் மெல்லிய வியர்வை ஈரம் கொண்டவை.

துச்சளை “மெய்யாகவே இந்த அரண்மனையை அணுகுந்தோறும் நான் இளமைக்கு மீண்டுகொண்டிருந்தேன். இப்போது சிறுமியாகிவிட்டேன்” என்றாள். அவள் குரல் மிக இளமையானது என்று சம்வகை எண்ணினாள். தன் குரல் மயிலகவல்போல ஆழ்ந்து ஒலிப்பது. துச்சளையின் குரலை

மட்டுமே கேட்பவர்கள் அவளை சிறுமி என்றே எண்ணக்கூடும். “எப்போதும் அப்படித்தான். உள்ளே வந்து என் அன்னையை சந்திக்கும்போது இளம் பெண்ணாக இருப்பேன். அதன் பின் தந்தையைச் சென்று சந்திக்கும்போது மகவாகிவிடுவேன். அவருடைய கைகள் என் உடலைத் தொட்டு அலையத் தொடங்கும்போது கைக்குழந்தையாகி அவர் மடியில் கிடப்பேன்.”

அவள் குரல் குழைந்தது. “உண்மையில் கைகளால் முத்தமிடுவதென்பதை அவர் தொடும்போதுதான் உணர்வேன்” என்று சொன்னபோது அவள் ஒரு கணம் விம்மியதுபோல் தோன்றியது. உணர்வெழுச்சியுடன் முகம் சுருங்கி கண்கள் நீர் கோக்க “இவ்வரண்மனை அவர்களால் நிறைந்திருந்தது. எந்தையும் அன்னையும் மூத்தவர்களும் அவர்களின் மைந்தர்களும். இனி ஒருபோதும் அவர்களை பார்க்க இயலாது. வெவ்வேறு திசைகளில் அவர்கள் சென்று மறைந்துவிட்டிருக்கிறார்கள்” என்றாள்.

அவளால் உணர்வுகளை ஆள முடியவில்லை. உதடுகளைக் கடித்து மூச்சை இறுக்கிக்கொண்டாள். அதை மீறி மெல்லிய விம்மலோசை எழுந்தது. சாளரத்தருகே நின்ற சுரதன் ஒவ்வாமையுடன் சற்றே அசைந்தான். சுகதன் “அன்னை இங்குதான் அழுகிறார். சிந்துநாட்டில் கண்ணீர்விடவே இல்லை. தந்தை மறைந்த செய்தி வந்தபோதுகூட உறுதியுடனேயே இருந்தார்” என்றான். துச்சளையின் விழிகளிலிருந்து நீர் வழிந்தது. அவள் தன் சிறிய கைகளால் முகத்தை மூடிக்கொள்ள விரல்களை மீறி விழிநீர் கசிந்தது. ஆனால் மூச்சொலிகளுடன், விசும்பல்களுடன், செருமல்களுடன் அவள் தன்னை நிலைநிறுத்திக்கொண்டாள்.

சம்வகை அப்பேச்சை மாற்றும்பொருட்டு “இங்கு இழப்பில்லாதவர்கள் எவருமில்லை, அரசி” என்றாள். “ஆனால் இந்நகர் அனைத்திலுமிருந்து மீண்டிருக்கிறது. இதன் தெருக்களை பார்த்திருப்பீர்கள். இன்று புதிதென நிகழ்ந்துவிட்டிருக்கிறது.” துச்சளை “ஆம், இந்த வரவேற்பு என்னை முதலில் நிலைகுலைய வைத்தது. கைம்பெண்களுக்கு அரசமுறைமை சார்ந்த வரவேற்பு இல்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வரவேற்பொலி என்னை உளம் நிறையச் செய்தது. இது குடிகளின் வரவேற்பு அல்ல. இந்நகரே என்னை வரவேற்பதுபோலத் தோன்றியது. யானையை அணுகும்போது அது நம்மை அறிந்திருந்தால் எழுப்பும் ஒலி அது. யானை நம்மை அறிந்திருக்கிறது என்பது ஒரு வாழ்த்து” என்றாள்.

அந்த உரையாடல் எங்கோ சுற்றிக்கொண்டிருந்தது. அவள் சொல்ல வந்த எதையோ அணுகமுடியாமல் இருக்கிறாள். சம்வகை அது என்ன என்று எண்ணிப்பார்த்தாள். தன்னை ஒரு தூது என்றே துச்சளை அழைத்திருக்கக்கூடும் என அப்போது தெளிவுகொண்டாள். அது பெண்ணுக்குப் பெண் எனும் பேச்சு அல்ல. அரசமைந்தர் உடனிருப்பதனால் அது அரசப்பேச்சேதான். அதை ஏன் தன்னிடம் சொல்கிறார்? அதைச் சொல்லவேண்டியவர் சுரேசர். ஆனால் அவரிடம் அவருக்கு ஒரு தயக்கம் இருக்கலாம். அந்தணர்களே அரசமந்தணத்திற்கு உகந்தவர்கள். ஆனால் அவர்கள் தங்கள் நிலைபாட்டில் வாளென கூர்கொண்டவர்கள்.

என்னை எதன்பொருட்டு தெரிவுசெய்தார்? இது எனக்கு அளிக்கப்படும் பெருமதிப்பு என நான் எண்ணக்கூடும் என எதிர்பார்க்கிறார் போலும். இதன்பொருட்டு நான் மிகையுணர்ச்சி கொள்ளக்கூடும். இச்செயலை தலைசூடி செய்ய

முற்படக்கூடும். அந்த விசையில் என்னையறியாமலேயே இவர்களுக்கு உகந்த நிலை கொள்ளக்கூடும். ஆற்றலற்றவர்களே தங்கள் தரப்பை மிகையாக நம்பி அதை சார்ந்திருப்பார்கள். பெண்கள் வெற்றுறுதி கொள்வதன் உட்பொருள் அதுதான். அவள் தன்னுள் புன்னகைத்துக்கொண்டாள். அது முகத்தில் வெளிப்படாமல் அமர்ந்திருந்தாள்.

துச்சளை “இங்கே வந்தபின் நான் விடுதலை அடைந்தேன் என்பதை உணர்கிறேன். என் அறை இது. என் நீராட்டறை. என் ஆடைகள். முழுமையாகவே மீண்டுவிட்டேன். ஏதோ சில எஞ்சியிருக்கின்றன என்று உணர்கிறேன். அதன்பொருட்டு உன்னிடமும் அமைச்சர் சுரேசரிடமும் கடன்பட்டிருக்கிறேன்” என்றாள். “இது தங்கள் அரண்மனை, அரசி” என்றாள் சம்வகை. அதை பலமுறை சொல்லிவிட்டோம் என உணர்ந்தாள். சுரதன் பொறுமையிழந்து மெல்ல அசைந்தான். சுகதன் அவனை திரும்பி நோக்கினான். தன் உடல்மேலும் விழிமேலும் முழுக் கட்டுப்பாட்டுடன் அந்த மெல்லிய கலைவை நோக்காமல் அமர்ந்திருந்தாள் சம்வகை.

துச்சளை மைந்தனின் பொறுமையிழப்பால் சற்று எரிச்சல்கொண்டவளாகத் தோன்றினாள். “அங்கே இளைய பாண்டவரின் வெற்றிக்காட்சிகள் வரையப்பட்டுள்ளன. அவற்றில் போர்க்களக் காட்சிகள் வரையப்பட்டிருக்குமோ என நான் வரும்போது பதற்றம் கொண்டேன். நல்லவேளையாக இல்லை” என்றாள். “அரசரின் ஆணை அது. இவ்வரண்மனையிலோ நகரிலோ எங்கும் போர்க்களக் காட்சிகள் இருக்காது. போர் குறித்த எந்த அடையாளமும் எஞ்சாது. போர் குறித்த பரணிப்பாடல்களைக்கூட நகரில்

எவருமறியாமல் தனி அவைகளிலேயே பாடுகிறார்கள்” என்றாள். சுரதன் “ஆனால் பாரதவர்ஷம் முழுக்க அதையே பாடிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான். அவள் அவன் விழிகளை ஏறிட்டுப் பார்த்தாள். அதிலிருந்த காழ்ப்பு அவளை அச்சுறுத்த அவள் விழிதிருப்பிக்கொண்டாள். “ஆம், ஆனால் அஸ்தினபுரி அப்போரை மறந்துகொண்டிருக்கிறது” என்றாள். அவன் ஒன்றும் சொல்லவில்லை.

துச்சளை “அந்த ஓவியங்களெல்லாம் இந்த அரண்மனைமேல் போர்த்தப்பட்ட அணிச்சால்வைகள் என்று தோன்றியது” என்றாள். பின்னர் “ஆனால் அது நன்று. துயர்கொள்கையில் நாம் நல்லாடையும் அணிகளும் அணியவேண்டும் என அன்னை சொல்வதுண்டு. ஆடைகளும் அணிகளும் நம் உளநிலையை மாற்றிவிடுகின்றன என்பதை நானே கண்டிருக்கிறேன். அஸ்தினபுரி களைந்து வீசிவிட்டுச் செல்ல சுமைகள் ஏராளமாக உள்ளன” என்றாள். சுரதன் “ஆனால் அழிக்கப்பட்ட ஓவியங்கள் பிரதீபரும் சந்தனுவும் அடைந்த வெற்றிகளைப் பற்றியவை” என்றான்.

சம்வகை அவனை உறுதியான விழிகளுடன் ஏறிட்டு நோக்கி “ஆம், இனி இது பாண்டவர்களின் அரண்மனை” என்றாள். அவர்களின் விழிகள் சந்தித்தன. அவன் நோக்கை திருப்பிக்கொண்டான். தனக்குள் என “குருக்ஷேத்ரப் போரை தவிர்ப்பது அதில் கொல்லப்பட்டவர்களை தவிர்ப்பதற்கும் கூடத்தான் இல்லையா?” என்றான். சம்வகை “ஆம், அதுவும் உண்மையே” என்றாள். “ஆனால் வெற்றியை எவரும் உதறமுடியாது. வெற்றி என்ற ஒன்று இருக்கும்வரை வென்றவர்களுடன் வெல்லப்பட்டவர்களும் எஞ்சுவார்கள்” என்றான். சம்வகை “ஆம்” என்றாள்.

# களிற்றியானை நிரை - 41

## பகுதி ஐந்து : விரிசிறகு – 5

துச்சளை ஓரளவு இயல்பாக இருப்பதாகவே சம்வகைக்கு தோன்றியது. ஆனால் அவளுடைய உடலின் இயல்பு அது என்று பின்னர் புரிந்துகொண்டாள். பருத்த உடல் உள்ளவர்கள் இயல்பிலேயே எளிதாக, ஓய்வாக இருப்பது போன்ற ஒரு பாவனையை வந்தடைந்துவிடுகிறார்கள். கவலைகொண்டிருப்பதோ பதற்றமோ உடலில் வெளிப்படுவதில்லை. மெலிந்த உடல் கொண்டவர்கள் இயல்பாக இருக்கையில்கூட அவ்வுடலில் இருக்கும் அலைபாய்தலும் கன்னங்களின் ஒடுங்குதலும் இணைந்து அவர்கள் சோர்ந்தும் சலித்தும் இருப்பதான ஒரு பாவனையை அளித்துவிடுகின்றன.

துச்சளை நிலைகுலைந்திருக்கும்போது எப்படி இருப்பாள் என்பதை முன்பு உணர்ந்திருந்தாலன்றி அவளை புரிந்துகொள்ள முடியாதென்று தோன்றியது. நெடுந்தொலைவில் மக்கள்திரளுக்கு கைகூப்பியபடி நின்று அப்பால் தேரில் மக்களின் வாழ்த்துக்களை ஏற்றபடி செல்லும் துச்சளையையே அவள் பார்த்திருக்கிறாள். அத்தனை அருகே அஸ்தினபுரியின் இளவரசியை தன்னால் பார்க்க முடியுமென்றுகூட எண்ணியிருக்கவில்லை. அத்தருணத்தில் அவளுக்குள் எழுந்த உணர்வெழுச்சி எழுந்து நின்று தன் தலையை தானே வெட்டி அவள் காலடியில் வைக்கவேண்டும் என்பது போலிருந்தது. மறுபக்கம் அவளுக்குள் அனைத்தையும் கடந்த உறுதி ஒன்று

இருந்தது. அந்த இரும்புக் கவசம் தன் உடலுக்குள் எலும்புக்கூடு என ஆகிவிட்டதுபோல.

துச்சளையின் கால்கள் அசைந்துகொண்டிருந்தன. கட்டைவிரலால் நிலத்தில் நெருடிக்கொண்டிருந்தாள். வலது கையின் சுட்டுவிரல் அவள் அமர்ந்திருந்த மஞ்சத்தின் பட்டுவிரிப்பின்மீது மெல்ல சுழித்துக்கொண்டிருந்தது. அவளே பேசட்டும் என்று சம்வகை காத்திருந்தாள். துச்சளை தான் தொடங்குவதற்குரிய சொற்களுக்காக உளம் துழாவுகிறாள் என்று சம்வகை புரிந்துகொண்டாள். அவள் தன் இயல்பில் திறந்த உள்ளமும் நேர்ப்பேச்சும் கொண்டவளாக இருக்கலாம். அத்தகையோர் பெரும்பாலான தருணங்களில் தன்னியல்பாக சொல்லெடுத்து மேலே செல்வார்கள். அவர்கள் எண்ணாது உரைப்பதனாலேயே அச்சொற்கள் பொருத்தமென அமையவும்கூடும்.

ஆனால் உண்மையிலேயே அறத்துயர் அளிக்கும் தருணங்களை அவர்களால் சொற்கூட்ட முடிவதில்லை. சூழ்ச்சிகளில் எனில் ஒரு சொல்லும் எழுவதில்லை. ஒரு நேருக்குநேர் தருணம் விரிவடையுமெனில் திகைத்துவிடுகிறார்கள். அதற்குரிய உளச்சூழ்கைகளை, முகநடிப்புகளை அவர்கள் அறிந்திருப்பதில்லை. அத்தகைய தருணங்களில் முறைமைச்சொற்கள் பயனளிப்பதில்லை. முறைமைச்சொற்களினூடாக ஓர் உரையாடலை தொடங்கி, அப்போக்கில் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று, அதில் உருவாகும் ஒரு சொற்றொடர் வழியாகச் சென்று பேசவேண்டியதை அணுகலாம். பெரும்பாலும் யுதிஷ்டிரன் அவ்வாறே செய்தார். அத்தகைய முறைமைப்பேச்சுகளும் அவளுக்கு பழக்கமில்லை என்று சம்வகைக்கு தோன்றியது.

அத்தனை அவைகளிலும் சூழ்ச்சிகள் எவற்றையும் அறியாமல் திறந்த பேருள்ளத்துடன் இருந்தவள் போலும்.

துச்சளை பெருமூச்சுவிட்டு “எப்படி இதை உன்னிடம் சொல்வதென்று எனக்கு தெரியவில்லை” என்றாள். அது மிக தவறான தொடக்கச் சொற்றொடர் என்று உணர்ந்து உள்ளூர புன்னகைத்தும் முகத்தை அசைவின்றியும் வைத்துக்கொண்டாள் சம்வகை. “உன்னை என் இளையவள் என்று எண்ணுகிறேன்” என்று துச்சளை சொன்னாள். அதுவும் ஒரு பிழையான சொற்றொடர். ஏனெனில் அத்தகைய சொற்றொடர்கள் ஒருவரை கவரும் பொருட்டு, அவரை தன்வசம் இழுக்கும் பொருட்டு சொல்லப்படுபவை. அத்தகைய ஒரு சொற்றொடர் அரசுசூழ்தலில் எழுமெனில் அக்கணமே எதிரில் இருப்பவர் ஐயம்கொண்டவர் ஆகிவிடுகிறார். அகத்தே எச்சரிக்கை கொள்கிறார். ஆனால் உணர்வுநடிப்பால் அவர் அதை மறைத்துக்கொள்ளும் வாய்ப்பையும் அச்சொல் வழங்குகிறது.

ஆனால் துச்சளையின் விழிகள் சிறுகுழவியுடையதைப்போல் கள்ளமற்றிருந்தன. அவள் முகத்தில் தெரிந்த உணர்வு அச்சொற்களை முற்றிலும் தானும் வெளிப்படுத்தியதனால் அது சம்வகையின் உள்ளத்தை தொட்டது. “என் கடன் தங்களுக்கு அடிபணிந்திருப்பது, அரசி” என்று அவள் சொன்னாள். துச்சளையின் விழிகளில் துயர் எழுந்து வந்தது. “நான் அரசியல்ல, தேரிலிருந்திறங்கியதுமே அதை உணர்ந்தேன். அதை சொல்லக்கூடவில்லை. சிந்துநாட்டில் என்னை அரச பதவியிலிருந்து விலக்கிவிட்டார்கள். என் மைந்தர்களும் இன்று நாடற்றவர்களே” என்று அவள் சொன்னாள்.

சம்வகை அவள் தான் சொல்லவிருப்பதை தொடங்கிவிட்டாள் என்று புரிந்துகொண்டாள். எந்த நடிப்பும் இன்றி நேரடியாகச் சொன்னதுமே அவளுக்கு தயக்கங்கள் மறைந்தன. சொற்கள் ஆற்றல்கொண்டன. “நான் அடைக்கலம் தேடியே இங்கே வந்தேன்” என்றாள் துச்சளை. சம்வகை தலையசைத்தாள். “சிந்துநாட்டின் அரசியலை இங்கு எவருக்கும் சொல்லி புரியவைத்துவிட முடியாது. அது வளம் மிக்க நாடு. ஆனால் பாலைவனமும் கூட. சிந்து நதியின் நீரை பாலைவனத்தில் கிளை பிரித்து கொண்டுசென்று உருவாக்கப்பட்ட வயல்களால் ஆனது அந்நிலம். இப்பாசனமுறை அங்கு உருவாவதற்கு முன்பு அங்கு வாழ்ந்தவர்கள் தொல்வேடர் குடிகள். அவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது கூட அதே பாலைவனத் தொல்குடி வாழ்க்கையையே மேற்கொண்டிருக்கிறார்கள்.”

சிந்துவைத் தேக்கி, கால்வாய்களை உருவாக்கி, வயல்களை அமைத்துக்கொண்டவர்கள் வெவ்வேறு காலங்களில் அந்நிலம் நோக்கி வந்த புறநிலத்து மக்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அறிதல்களுடன் வந்தனர். சிந்துவின் பெருநீரை அணை கட்டி தேக்க முடியும் என்பதை இன்று எண்ணுவதேகூட திகைப்பூட்டுவது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதை எப்படி செய்தார்கள் என்பது தேவர்களின் பணியோ என்று ஐயுறத்தக்கது. ஆனால் அதை செய்திருக்கிறார்கள். ஆண்டில் ஒருபோதும் நீர் குறையாத அப்பெருநதிக்குள் மூழ்கியவைபோல் பல அணைக்கட்டுகள் உள்ளன. ஒன்றோடொன்று தொடுக்கும் கற்களை இறுக்கிப்பொருத்தி அவற்றை கட்டியிருக்கிறார்கள். அவை நீரின் விசையை குறைக்கின்றன. விசைகுறைந்த நதி மெல்ல

விரிந்து கரைகளை முட்டுகிறது. அங்கே கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

“நதியிலிருந்து மூன்று ஆள் உயரத்திலிருக்கிறது சிந்துநாட்டின் சராசரி நிலப்பகுதி. அந்த நிலங்களுக்கு நீரேற்றம் செய்யப்பட இயலும் என்பதும் பிறிதொரு விந்தையே. நீரை தேக்கி அத்தேக்கத்தினூடாகவே நீரை மேலேற்றும் ஒரு வழிமுறையை அங்கு உருவாக்கியிருக்கிறார்கள். சிந்துநாட்டை நரம்பு வலைப்பின்னலென நிறைத்திருக்கும் அக்கால்வாய்களில்தான் அதன் உயிர் உள்ளது. அந்நிலங்களும், கால்வாய்களின் மேல் ஆட்சியும் வந்து குடியேறிய மக்களிடம் உள்ளன” என்று துச்சளை சொன்னாள். அவள் அதை ஏன் அத்தனை விரிவாக தன்னிடம் சொல்கிறாள் என சம்வகை உள்ளூர வியப்புற்றாள். அவ்வியப்பு சுரதனுக்கும் இருப்பது அவன் உடல் நிலைகொள்ளாமல் அசைந்தமையில் தெரிந்தது.

இன்று சிந்துநாட்டை நான்கு குடிகளாக பிரிக்கலாம். இன்னமும் மலைப்பகுதிகளின் பாலைச்செறிவுகளில் வேட்டையாடி வாழும் தொல்குடியினர். விரிந்த வயல்களில் வேளாண்மை செய்யும் மருதநிலக்குடிகள். கால்வாய்களை தங்கள் ஆட்சியில் வைத்திருக்கும் போர்க்குடிகள். தொடர்ந்து இக்கால்வாய்களினூடாக சிந்துவிலிருந்து வந்து வணிகம் செய்து மீளும் வணிகக்குடிகள். அங்கு ஆயர்கள் இல்லை. நிலத்துடன் இணைந்து வாழும் தொழும்பர்களும் இல்லை. சிந்துநாட்டின் தொல்முறைமைப்படி அங்கு எல்லா அரசு அவைகளிலும் முதன்மை அமர்வு உரிமை கொண்டவர்கள் அந்த நிலத்தின் தொல்குடிகளாகிய வேட்டைக்குடி மக்கள்தான். அவர்கள் அந்நிலத்திற்கு முற்றுரிமை தாங்களே என்று எண்ணுகிறார்கள். அந்நிலத்திற்குரிய ஆலயங்களிலும்

முதன்மைப் பூசனை உரிமை கொண்டவர்கள் அவர்கள். நெடுங்காலம் அந்நிலத்தின் அரசகுடிகூட அவர்களிடமிருந்தே உருவாகியது. என் கொழுநரின் தொல்மூதாதை பிரகதிஷுவே முதலில் சிந்துநாட்டின் பட்டத்திற்கு வந்த ஷத்ரிய குடியினர்.

சிந்துநாட்டின் வேட்டைத் தொல்குடிகளைச் சேர்ந்த பழங்கால அரசர்கள் சிபிநாட்டினராலும் கூர்ஜரத்தாராலும் தோற்கடிக்கப்பட்டு சிறைபிடிக்கப்பட்டு முற்றழிந்தார்கள். சிந்துநாடு எட்டு தனி பகுதிகளாக பிரிக்கப்பட்டு கூர்ஜரத்திற்கும் சிபிநாட்டிற்கும் யவனப் படையெடுப்பாளர்களுக்கும் அடிபணிந்து கிடந்தது. அதன் ஒரு பகுதி பாஞ்சாலத்தாலும் இன்னொரு பகுதி அஸ்தினபுரியாலும் ஆளப்பட்டது. அப்பொழுதுதான் பிரகதிஷு தன் சிறுபடையுடன், நூறு குடியினர் தொடர அங்கே வந்தார். வெற்றுநிலத்தில் ஒரு சிற்றூரை உருவாக்கிக்கொண்டார். அங்கே ஒரு ஆற்றல் மிக்க வில்லவராகவும் மல்லராகவும் அறியப்பட்டார். சிலர் இயல்பிலேயே அரசர்கள். நிலம் காதல்மகள் என அவர்களை தேடிச்செல்கிறது என்பார்கள். அவர் அத்தகையவர்.

ஷத்ரியக் குடியினரை பிரகதிஷு ஒருங்கு திரட்டினார். நூறு மறக்குடியினரை அவர் வென்றும் பேசிக்கவர்ந்தும் தன்னுடன் சேர்த்துக்கொண்டார். அவர்கள் அப்போது சிந்து நதியின் பெருக்கையும் கிளை ஆறுகளையும் கால்வாய்களையும் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தனர். அங்கு செல்லும் படகுகளுக்கு காவலாக அமைந்து பொருளீட்டிக் கொண்டிருந்தனர். சிந்துவைக் கைப்பற்றிய நாடுகள் அந்நிலத்தைப் பேணுவதை மறந்து தங்களுக்குள் போரிடத் தொடங்கிவிட்டிருந்தன. அவை போரிட்டு ஆற்றல் இழந்திருந்த காலம் அது. பிரகதிஷு சிந்துவை சிபிநாட்டின் பிடியிலிருந்து

மீட்டார். அந்நிலப்பகுதியில் ஒரு சிறு அரசை தான் அமைத்தார். சிந்து நிலம் மீட்கப்பட்டபோது பிற பகுதிகளிலிருந்து அவர் குடியைச் சேர்ந்த மறவர்கள் அவரிடம் படைப் பணிக்கு வந்தனர். அவர் அதன்பின் சிந்துவின்மேல் சுங்கம் கொள்ளலானார். தொலைநிலங்களுக்குச் சென்று யவன வணிகர்களை கொள்ளையிட்டார். விரைவுப்படகுகளில் சென்று கடலிலும் கொள்ளையிட்டார்.

தன்னிடம் இருந்த செல்வத்தால் அவர் யவனர்களையும் சோனகர்களையும் தன் படைக்குள் சேர்த்துக்கொண்டார். சிந்து நிலத்தை ஆட்சி செய்தாலும் கூர்ஜரர்களோ பிறரோ அந்நிலத்தின் மீது கோன்மை கொள்ள இயலாது. அக்கால்வாய்களை எவர் ஆள்கிறார்களோ அவர்களே சிந்துவின் ஆட்சியாளர்கள். அக்கால்வாய்களில் செல்லும் விரைவுப்படகுகள், அவற்றின் சிக்கலான வலைப்பின்னல் ஆகியவற்றை அறிந்தவர்கள் அங்கேயே பிறந்தெழுந்த மறவக்குடியினரே. ஆகவே அவர்களிடமே அந்நிலத்தின் ஆட்சியை அளித்து அவர்களிடம் கப்பம் பெற்று மையத்தில் தன் ஆட்சியை நிறுவினார். மறவர்கள் ஒருங்கு திரண்டதும் கூர்ஜரம் செயலற்றது. மூன்று முறை கூர்ஜரப் படைகள் சிந்துநாட்டை கைப்பற்ற வந்தன. அவை களங்களில் முறியடிக்கப்பட்டன. தன் ஆட்சிக் காலத்திலேயே நாட்டை ஒருங்கிணைத்து தனிக்கோன்மை கொண்டதாக ஆக்கினார் பிரகதிஷு.

“அவர் மைந்தர் பிரகத்ரதர் மீண்டும் சிந்துவை முற்றாக ஒருங்கிணைத்து ஆற்றல்கொண்ட அரசாக்கினார். அவர் கொடிவழியினரான பிருஹத்காயர் தன் தமையனிடமிருந்து முடியை பெற்றுக்கொண்டு இரக்கமின்மையினூடாக,

கூர்மதியினூடாக, தருணங்களில் தன்னை மாற்றிக்கொள்ளும் துணிவினூடாக வெல்ல முடியாத அரசராக உயர்ந்தார். அவர் மைந்தராகிய என் கொழுநர் முடிசூடியபோது அனைவரும் அஞ்சும் ஒரு நாடாக சிந்து இருந்தது. அனைவரும் மதிக்கும் வில்லவராக அவர் திகழ்ந்தார்" என்று துச்சளை சொன்னாள். அவள் அதை பெருமிதத்துடன் சொல்லவில்லை என்பதை சம்வகை கண்டாள். ஆனால் சுரதன் மெல்லிய உறுமலோசை ஒன்றை எழுப்பினான்.

சிந்துவின் குடிகளுக்கு இழந்த பொற்காலத்தை மீட்டு அளித்தவர்கள் என் கொழுநரும் அவர் தந்தையும் மூதாதையரும்தான். அவ்வெண்ணம் அங்குள்ள மறவருக்கும் உழவருக்கும் இருந்தது. வணிகர்கள் அவர்களை கொண்டாடினார்கள். ஆனால் மலைப்பழங்குடிகள் எந்த அரசியல் சூழலையும் புரிந்துகொள்பவர்கள் அல்ல. அவர்களுக்கு சிந்துவின் மறக்குடியினரது ஆட்சியும் கூர்ஜரத்தின் ஆட்சியும் சிபிநாட்டின் ஆட்சியும் ஒன்றே. அவர்கள் தங்கள் உரிமைகளுக்காக மட்டுமே போராடினார்கள். பிருஹத்காயர் அவருடைய காலத்தில் தொல்குடியினரின் அவைமுதன்மையை பெருமளவு குறைத்தார். அவர்களுக்குரியது சடங்கு சார்ந்த இடம் மட்டுமே என வகுத்தார்.

அவர்கள் சிந்துநாட்டின் அவைகளில் குடிக்கோலேந்துவது, அறிவிப்புகளுக்கு முதலேற்பு கொடுப்பது, ஆலயங்களில் முதற்பூசனை செய்வது, விழவுகளில் கோலேந்தி முதலில் வருவது போன்றவற்றை மட்டுமே இயற்றலாம் என வகுக்கப்பட்டது. அவர்களுக்கு அரசு முடிவுகளில் எச்சொல்லுரிமையும் அளிக்கப்படவில்லை. அதைவிட அவர்கள்

பிற குடியினரை தாக்கினாலோ கொன்றாலோ முன்பு அவர்களின் குடித்தலைமையிடமே அரசர் முறையிடவேண்டும் என்றும், அவர்களை தண்டிக்கும் உரிமை அவர்களின் குடியவைக்கு மட்டுமே உண்டு என்றும் இருந்த நிலையை பிருஹத்காயர் அகற்றினார். அவர்களும் சிந்துநாட்டின் பிற குடியினரைப்போல தண்டிக்கப்பட்டனர்.

ஆயினும்கூட தாங்கள் தங்கள் கோன்மையை இழந்துவிட்டோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்களில் பஷ்டகக் குடியின் தலைவர்களில் ஒருவர் யவனநாட்டுக் கொள்ளையர்களுக்கு உதவி செய்து அவர்களிடமிருந்து பொருள் பெற்றுக்கொண்டார். யவனக் கொள்ளையர்களை ஒடுக்கிய பிருஹத்காயர் அவர்களுடன் இருந்த அத்தொல்குடித் தலைவரை சிறைபிடித்தார். மண்ணுக்கு வஞ்சம் இழைத்ததாக குற்றம்சாட்டி அவரை தலைவெட்டிக் கொல்ல ஆணையிட்டார். தொல்குடிகளின் களமுற்றத்திலேயே அது நிறைவேற்றப்பட்டது. அச்செயலினூடாக தொல்குடிகள் தங்கள் கோன்மை பறிக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார்கள்.

அதுவரை அவர்களின் குடியைச் சேர்ந்த எவருமே அவ்வாறு தண்டிக்கப்பட்டதில்லை. அவர்களின் குடியவை கூடி அளிக்கும் தண்டனை என்பது பெரும்பாலும் விலக்குவதும் அச்சுறுத்துவதும் மட்டுமே. தலைவெட்டிக் கொல்லப்படுவதென்பது அவர்களுக்கு மிகப் பெரிய தீங்கென, சிறுமையெனப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலை கொண்ட உடல் விண்ணுலகு செல்வதில்லை என்று அவர்கள் நம்பினார்கள். துண்டிக்கப்பட்ட அவ்வுறுப்புகளை ஒன்றாக இணைக்கும் பொருட்டு அவ்வுயிர் துடித்துக்கொண்டிருக்கிறது என்பது

அவர்களுடைய எண்ணம். உயிரின் ஒரு துண்டு தலையிலும் உடலிலும் இருந்து இரு முனைகளும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து முடிச்சிட்டுக்கொள்ளும் பொருட்டு நெளிந்துகொண்டிருப்பதாக அவர்களின் பாடல்கள் கூறின.

கொல்லப்பட்ட பஷ்டகர் குடித்தலைவர் பாலைநிலத்திலேயே எரித்து அழிக்கப்பட்டார். அவருடைய நுண்ணுயிர் அக்குடிகளின் பெரும்பாலான பூசனை நிகழ்வுகளில் கயிற்றுத் துண்டுகளின் நெளிவெனத் தோன்றியது. தன் இரு முனையையும் ஒன்றுடன் ஒன்று நெருங்க வைத்து முடிச்சிட்டுக் கொள்ளும் பொருட்டு அது நின்று துடித்தது. அதைக் கண்டு அக்குடிகள் அலறி அழுதனர். பெண்கள் மயங்கி விழுந்தனர். வீரர்கள் சீற்றம்கொண்டு தங்கள் கோல்களையும் வாள்களையும் வானுக்குத் தூக்கி வெறிக்கூச்சலிட்டனர். அவர்களின் சீற்றம் ஒவ்வொரு நாளுமென பெருகிக்கொண்டிருந்தது.

என் கொழுநர் ஆட்சிக்கு வந்த பின் அதை ஆறுதல்படுத்துவதற்கு அளிக்கப்பட்ட பரிசுகள் அவர்களால் ஏற்கப்படவில்லை. அப்பிழையை நிகர் செய்வதற்காக எடுக்கப்பட்ட பூசனைகள் அவர்களை நிறைவுறச் செய்யவில்லை. தங்கள் நிலத்திலிருந்து அயலவர் முற்றிலும் அகலவேண்டுமென்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்தது. அவர்களை அழிக்க முடியாது என்ற நிலையில் அவர்களின் தொல்நிலங்களிலிருந்து பிற நிலங்களுக்கு அவர்கள் வராதபடி படைகளை நிறுத்தி வைப்பது ஒன்றே அரசரால் செய்யக்கூடுவதாக இருந்தது.

அந்நிலையில்தான் குருக்ஷேத்ரப் போர் தொடங்கியது. அப்போரில் ஜயத்ரதன் வீழ்ந்தார். அவருடைய மைந்தர்களுடன் நான் சிந்துநாட்டில் இருந்தபோது அவருடைய வீழ்ச்சிச் செய்தி

எங்களை வந்தடைந்தது. போர் முடிந்து சிந்துவில் அரசருக்கான நீர்க்கடன்களை முடித்த பின்னர் என் முதல் மைந்தனை அரசனாக்கவேண்டும் என அமைச்சர் என்னிடம் சொன்னார். அதுவே ஆற்றவேண்டியது என்ற நிலைமை இருந்தமையால் அதற்கான ஆணைகளை பிறப்பித்தேன். ஆனால் முடிசூட்டுவிழா தொடங்குவதற்கு முன்னர் தொல்குடிகள் அவனை அரசனாக ஏற்க முடியாது என்ற செய்தியை அறிவித்தார்கள். சிந்துநாட்டில் எழும் அந்தச் சடங்குகளுக்கு அவர்கள் தங்கள் ஒப்புதலை அளிக்க முடியாதென்றர்கள்.

அவர்களின் ஆறு காற்றுத்தெய்வங்களின் ஆணையின்றி சிந்துநாட்டில் அதற்கு முன் அரசர்கள் முடிசூட்டிக்கொண்டதில்லை. அவர்களின் பூசகர்களின் ஒப்புதலின்றி நிகழும் முடிசூட்டுவிழா முழுமையானதல்ல என்று அமைச்சர்களும் நிமித்திகர்களும் கூறினார்கள். எவ்வண்ணம் அதை கையாள்வது என்று எனக்குத் தெரியவில்லை. என் அமைச்சர் சுஃபூதர் என்னிடம் முதலில் முறைப்படி அரசர் முடிசூட்டிக்கொள்ளட்டும், அதன் பிறகு எதிர்ப்புகளை பார்ப்போம் என்றார். ஆகவே சிறிய அளவில் முடிசூட்டுவிழாவிற்கான ஏற்பாடுகளை செய்தேன். வேறென்ன எதிர்ப்புகள் நாட்டில் திரண்டு வருகின்றன என உணரத் தவறிவிட்டேன். தொல்குடி ஆதரவை நாடி நின்றதே என்னை ஆற்றலற்றவள் என காட்டிவிட்டது என நான் பிந்தியே அறிந்தேன்.

முடிசூட்டுவிழா அணுகும் நாளில் எங்கள் நாட்டின் வடபகுதியில் ஒரு சிறுநிலத்தை தன்னாட்சி புரிந்துவந்த மறக்குலத்தவனாகிய வஜ்ரபாகு தன் படையுடன் கிளம்பி வந்து

நகருக்கு வெளியே தங்கினான். விருஷதர்புரம் அரைப்பாலை புல்வெளிகளால் சூழ்ந்த நகரம். அவன் அங்கே ஒரு இணைநகரம்போல படைகளை நிறுத்தி பாடிவீடுகளை அமைத்தான். சிந்துவின் கால்வாய்களை ஆளும் பன்னிரு மறக்குலத்தவர்களில் ஒருவனாகிய அவன் தானே அரசன் என்று அறிவித்தான். அவனுக்கு தொல்குடிப் பூசகர்களின் ஒப்புதல் இருந்தது. அதை அறிந்ததும் அனைத்து மறக்குடியினரும் அவனை அரசனாக ஏற்றுக்கொண்டனர். அவன் அச்செய்தியை சூதர்களினூடாக நகர் மக்களுக்கு தெரிவித்தான்.

நகர் மக்களிலேயே பலர் அதை திகைப்புடனும் ஏளனத்துடனும்தான் நோக்கினார்கள். ஆனால் நோக்கியிருக்கவே ஓரிரு நாட்களில் அவ்வெண்ணம் மறைந்தது. குடிகளில் பாதிப்பேர் அதுவும் சரியானதே என்று சொல்லத் தொடங்கினார்கள். அரசருக்குப் பணிந்திருந்த குடிகளின் உளமாற்றம் என்னை திகைப்படையச் செய்தது. என்ன இப்படி நிகழ்கிறது என்று அமைச்சரிடம் கேட்டேன். சுஃபூதர் எப்போதுமே ஒரு புதிய கருத்தின்மேல் மக்களுக்கு ஆர்வம் ஏற்படுகிறது அரசி என்றார். இளையோர் புதிய கருத்து என்பது எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வார்கள். அது மாற்றம் என்றும், மாற்றங்கள் அனைத்தும் நன்மையே என்றும் நினைப்பார்கள். முதியவர்கள் மாற்றமின்மையை, தொன்மையை ஆதரித்து நிற்பதனால் முதியவர்களுக்கு எதிராகவே புதுமையை நோக்கிச் செல்லும் இளையவர் உருவாகிறார்கள் என்றார்.

சிந்து இப்போது போரில் தோற்று உளம் சோர்ந்திருக்கிறது. அத்தோல்வியிலிருந்தும் சோர்விலிருந்தும் வெளிவருவதற்கு

ஒரே வழி முற்றிலும் புதிய ஒருவரை அரசராக்கி, அவர் மேல் நம்பிக்கை கொண்டு, புதிய ஒரு காலகட்டம் எழப்போகிறது என்பதை கனவு காண்பதே என்று அமைச்சர் சொன்னார். படை வல்லமையுடன் எழுந்து எதிர்ப்புகளை அழித்து நம் அரசர் தன் நாட்டை கைப்பற்றுவாரெனில் நன்று. குடிகள் அவரை ஏற்பார்கள். இல்லையெனில் வஜ்ரபாகுவுடன் ஒத்திசைந்து பேசி முடிவு செய்வதே ஒரே வழி என்றார். எனக்கு வேறு வழியில்லை. ஆகவே வஜ்ரபாகுவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். அவனிடம் சிந்துநாட்டின் அரசுரிமையை அளித்துவிடும்படியும் அதற்கு கைமாறாக படைத்தலைவர் பதவியை அவனுக்கு அளிப்பதாகவும் பேசினோம்.

அது நாங்கள் செய்த அடுத்த பெரும்பிழை. அது எங்களை மேலும் ஆற்றலற்றவர்களாக காட்டியது. அவனை நாங்கள் பேச்சுக்கு அழைத்ததுமே எங்கள் இயலாமையை புரிந்துகொண்ட வஜ்ரபாகு அதை ஊராருக்கு காட்ட விழைந்தான். பேச்சுக்கு வருவதையே ஒரு பெருநிகழ்வாக மாற்றினான். அது எத்தகைய அரசியல்சூழ்ச்சி என்பது அப்போது தெரியவில்லை. திறந்த பொற்தேரில் தானே உருவாக்கிக்கொண்ட மணிமுடியும் பொற்கவசங்களுமாக அவன் நகருக்குள் நுழைந்தான். அவனுடைய ஏவலரும் ஆதரவாளர்களும் வழி நெடுக நின்று வாழ்த்துரைத்தனர். வீரர்கள் அவன் முன்னும் பின்னும் படைக்கலமேந்தி வந்தனர். அது ஓர் அரசரின் நகர்நுழைவெனத் தோன்றியது. அணிகளும் முடியுமே அரசனை அரசன் எனக் காட்டுகின்றன. அவனைக் காணக் கூடிய மக்கள் அறியாது வாழ்த்துக்குரல் எழுப்பிவிட்டனர்.

விருஷதர்புரத்தில் இருந்து அவனுக்கு அரச முறைப்படி வரவேற்பளிக்கவேண்டும் என்று அவனுடைய அமைச்சராகிய ஸ்ரீமுகர் மீளமீளக் கூறியிருந்தமையால் அவ்வண்ணமே செய்தோம். அதுவும் பெரும்பிழையென்று பின்னரே உணர்ந்தோம். சூதர்களும் மங்கலச்சேடியரும் அவனை எதிர்கொண்டு அழைத்து வந்தனர். அச்செயலினூடாக அவன் தானும் நிகரான அரசனே என்பதை நகர்மக்களின் உள்ளத்தில் நிறுவிவிட்டான். அதுவரை அரசுரிமையை குடிமகன் எதிர்ப்பதா என்ற ஐயத்தால் தயங்கிக் கொண்டிருந்த பலர் அவனும் ஓர் அரசனே என்ற உளநிலையை அடைந்தனர். அவன் அந்தப் பேச்சை பல படிகளாக பல நாட்களுக்கு நீட்டினான். அதனூடாக மக்கள் மேலும் இரண்டாகப் பிரிந்தனர். ஒருபுறம் ஆற்றல்மிக்க புதிய அரசர். இன்னொரு பக்கம் பெண்துணையால் முடிசூடும் முதிரா இளைஞன். முன்பு ஜயத்ரதனின் மூதாதை பிரகதிஷு சிந்துநாட்டை உருவாக்க எழுந்து வந்ததுபோல பிறிதொருவர் தோன்றியிருக்கிறார் என்ற எண்ணத்தை விரைவாக வஜ்ரபாகு உருவாக்கினான். ஒரு கட்டத்தில் விருஷதர்புரத்தின் மக்களில் பெரும்பாலானோர் அவனுடைய ஆதரவாளர் ஆனார்கள்.

அவன் அறுதியாகக் கூறிய இருபுற ஏற்புநிலை என்பது அவன் சிந்துநாட்டின் படைத்தலைவர் பதவிக்கு மாறாக நிகர்அரசன் என்ற பதவியை மட்டுமே ஏற்றுக்கொள்வான் என்பது. அதாவது என் மைந்தன் சிந்துநாட்டின் மணிமுடியைச் சூடி அரியணையில் அமரலாகாது. அவனும் பிறிதொரு சிற்றரசனாக அமைந்து நகரை மட்டும் ஆளலாம். நகருக்கு வெளியிலிருக்கும் நிலம் முழுக்க வஜ்ரபாகுவின் கட்டுப்பாட்டில் இருக்கும். மணிமுடி சூடலாகாதென்பதே பிறிதொரு சூழ்ச்சி. அதையும் நன்குணராமல் ஏற்றுக்கொண்டோம். ஆனால் எங்களுக்கு வேறு வழி இல்லை.

அஸ்தினபுரியின் எதிரிகள் நாங்கள் என அங்கே நிறுவப்பட்டுவிட்டிருந்தது.

இரு அரசர்களும் பொறுப்பேற்றுக்கொண்டனர். நகருக்கு வெளியே உள்ள நிலங்களனைத்தும் தன் கட்டுப்பாட்டிற்குள் வந்ததும் எஞ்சிய சிந்துநாட்டுப் படைகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டினான் வஜ்ரபாகு. அதன்பின் மலைக்குடிகளுக்கு ஒரு தூதனுப்பினான். அவர்களின் குடித்தலைவரை கொன்றவர் என் கணவரின் தந்தை என்றும், அவர் கொல்லப்பட்டுவிட்டார் என்றும், அது மலைக்குடிகளின் தெய்வங்களால் நிகழ்ந்ததென்றும், தான் அதற்கு மறுநிகர் செய்வதாகவும் சொன்னான். சிந்துநாட்டின் மணிமுடியை தொல்குடிகளில் ஒன்றே ஏற்கவேண்டும் என்றும், அதன்பொருட்டே ஜயத்ரதனின் மைந்தரை தடுத்து வைத்திருப்பதாகவும் சொன்னான்.

“அவர்கள் அப்பசப்புப் பேச்சை நம்பி அவனுக்கு ஆதரவளித்தனர். அவர்களின் ஆதரவுடன் அவன் சிந்துநாட்டின் மீது படையெடுத்து வந்து தலைநகர் விருஷதர்புரத்தை சூழ்ந்துகொண்டான். என் ஏவலரன்றி எவரும் என்னிடம் எஞ்சியிருக்கவில்லை. நான் இயற்றுவதற்கு ஒன்றும் இல்லை. அங்கிருந்து மைந்தருடன் உடனடியாகக் கிளம்பி அகன்று செல்வதொன்றே எனக்கு அவன் அளித்த வாய்ப்பு. அதுவும் எனது அமைச்சர் சென்று மன்றாடி கேட்டுக்கொண்டதன் பொருட்டு” என்றாள் துச்சளை.

“எவ்வகையிலோ எனக்கோ மைந்தருக்கோ தீங்கிழைக்கப்பட்டால் அதை அஸ்தினபுரியின் அரசர் ஒருவேளை தனக்கிழைக்கப்பட்ட சிறுமையென கொள்ளக்கூடும், பிற அரசர்களின் பார்வைக்கு முன் தான் இகழ்ச்சி அடையக்கூடாதென்பதற்காகவேகூட சிந்துநாட்டின்

மீது அவர் படையெடுத்து வரக்கூடும் என்று சுஃபூதர் சொன்னபோது வஜ்ரபாகு சற்று அஞ்சினான். எங்களை அஸ்தினபுரிக்கு திருப்பி அனுப்பினால் அஸ்தினபுரியில் எங்களுக்கு எந்த அரசமுறைமையும் அளிக்கப்படாது என்றும் சிறுமை செய்யப்பட்டு ஒரு புறக்கணிக்கப்பட்ட இடத்தில் நானும் என் மைந்தரும் எஞ்சிய வாழ்நாளை கழிக்க நேரும் என்றும் சுஃபூதர் அவனிடம் கூறினார். எங்களை கொன்றால் ஒருவேளை மற்ற மறக்குடியினர் அதை ஏற்காமல் முரண்கொள்ளக்கூடும் என்ற ஐயமும் அவனிடமிருந்தது.”

“திரௌபதிக்கு ஒரு சேடிப்பெண்ணையும் பாண்டவர்களுக்கு இரு ஏவலர்களையும் அனுப்புவதில் உங்களுக்கு என்ன குறை, அது உங்களை பெருந்தன்மையானவராகவே சிந்துநாட்டின் குடிகளிடம் காட்டும் என்று அவர் சொன்னபோது அதை மிகச் சிறந்த அரசசூழ்ச்சியாக வஜ்ரபாகு எண்ணினான். ஆகவேதான் நாங்கள் நகரிலிருந்து கிளம்பிவருவதற்கு ஒப்புதல் அளித்தான். இங்கு இதோ வந்துசேர்ந்திருக்கிறோம். யுதிஷ்டிரனுக்கு கப்பமும் பரிசில்களுமாக இன்னும் இரு நாட்களில் வஜ்ரபாகுவின் அமைச்சர் சுஃபூதர் இங்கே வருவார்” என்று துச்சளை சொன்னாள்.

# களிற்றியானை நிரை - 42

### பகுதி ஐந்து : விரிசிறகு – 6

துச்சளை தன் இடர்நிலையை ஒருங்கிணைவுடன் சொல்லி முடித்தவுடனேயே அதைப்பற்றி அனைத்துத் தெளிவுகளையும் அடைந்துவிட்டதுபோல் சம்வகைக்கு

தோன்றியது. ஒன்றை தொகுத்துச் சொல்வதன் வழியாகவே அதை முழுமையாகவே நோக்கவும் புரிந்துகொள்ளவும் முயல்கிறது, சொன்னதுமே அதை கடக்கும் வழியை உள்ளம் அடைந்தும்விடுகிறது. துச்சளை அந்நிகழ்வுகளை அவ்வாறு எவரிடமும் தொகுத்துச் சொல்லியிருக்க வாய்ப்பில்லை. அந்நகருக்குள் அந்நிலத்திற்குள் நின்று அதை அவ்வாறு சொல்லவும் இயலாது. அங்கே அவள் அயலவள். அத்தனை தொலைவு விலகி வந்தவுடனேயே உள்ளமும் அகன்றுவிடுகிறது. உயரத்திலிருந்து குனிந்து பார்ப்பதுபோல் மொத்த வரலாற்றையும் மனிதர்களையும் நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்துப் பார்க்கமுடிகிறது.

பேசியபின் தெளிவு முகத்திலும் உடலிலும் எழ துச்சளை எழுந்து அமர்ந்து விரல்களைக் கோத்து மடியில் வைத்துக்கொண்டாள். தலையை சற்றே திருப்பி சுழற்றியபோது ஒருகணம் அவளில் எழுந்து மறைந்த திருதராஷ்டிரர் சம்வகையை அகம் திடுக்கிடச் செய்தார். அவள் விழியின்மைகொண்டு மீண்டதுபோல் தோன்ற அவள் நோக்கை விலக்கிக்கொண்டாள். “நான் இங்கு வருவதைப்பற்றி ஒருபோதும் எண்ணியவளல்ல. இது என் நகரல்ல என்றுதான் எண்ணியிருந்தேன். என் உடன்பிறந்தார் கொல்லப்பட்ட பின்னர் இந்நகருடன் எனக்கு தொடர்பு ஏதும் இருக்கலாகாதென்பதே முறை. ஆகவேதான் எந்தை இந்நகரை விட்டு அகன்றிருக்கிறார்.”

“அத்துடன் இங்கு வருவதென்பது என் கொழுநரை நானே சிறுமை செய்வதற்கு நிகர். என் மைந்தர்கள் எவ்வாறு உணர்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. இன்று அவர்கள் எதையும் உணரவில்லை எனினும் பின்னர் ஒரு நாள்

அவர்கள் இதன் பொருட்டு என்னை வெறுக்கக்கூடும். ஆகவே அங்கிருந்து இங்கு அனுப்பப்பட்டபோது அது ஒரு சாவென்றே எனக்கு தோன்றியது. அப்படியே வேறெங்கும் சென்றுவிடலாமா என்றுகூட எண்ணினேன்" என்று துச்சளை சொன்னாள். "எளிய பெண்ணாக எங்கோ அறியா நிலத்தில் வாழ்வதைப்பற்றி நான் கற்பனைசெய்துகொண்டேன்... ஆனால்..."

ஒருகணம் மூச்செடுப்பதுபோல் தயங்கி அவள் தொடர்ந்தாள். "ஆனால் நான் கிளம்ப எண்ணியபோது எனக்கு தூதுகள் வரத்தொடங்கின. வெவ்வேறு சிறு அரசர்கள் என்னை மீண்டும் மணந்துகொள்ள விரும்பினார்கள். ஒரு பேரரசின் முன்னாள் அரசியை மணந்து கொள்வதென்பது அவர்களுக்கு ஒருவகை குலத்தகுதியை உருவாக்குகிறது. மாளவத்தின் எல்லைப்பகுதியில் உபமாளவம் எனப்படும் ஜெயத்துங்கநாட்டை ஆளும் உக்ரசிம்மன், அவந்திக்கும் விதர்பத்துக்கும் நடுவே சார்த்தூலசிருங்கம் என்னும் நிலப்பகுதியின் அரசராகிய குமுதகன், சௌவீரத் தொல்குடி அரசுகளில் ஒன்றாகிய உத்தரகர்த்தத்தை ஆளும் ஜம்புநாதன் என ஒருநாளில் மூன்று அல்லது நான்கு பேர் அவர்கள் நாட்டுக்கு என்னை அழைத்து ஓலையும் பரிசுகளும் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஓலையை பெறும்போதும் ஒருகணம் நான் அவ்வாழ்க்கையை அறியாமலேயே வாழ்ந்துவிடுகிறேன். அந்த ஒவ்வொரு எண்ணமும் என்னை ஒரு வகையில் துகள்துகளாகச் செய்தது."

ஏன் என நானே என்னிடம் உசாவிக்கொண்டேன். உண்மையில் மறைந்த என் கணவரை நான் விரும்பியதில்லை என்றே எண்ணியிருந்தேன். அஸ்தினபுரியில் நடந்த ஆடைகவர்தலுக்கும் அதன் பிறகு நடந்த சிறுமைகளுக்கும்

எதிர்விளைவாக அவரை நான் ஆழ்ந்து வெறுத்தேன். விருஷதர்புரிக்கு மீண்ட அவரிடம் கடுஞ்சொற்களை உரைத்தேன். அவையிலேயே அவரை சிறுமைசெய்தேன். ஒருமுறைகூட என் அறைக்குள் அவரை விட்டதில்லை. சடங்குகளுக்கு மட்டுமே அவருடன் அவையில் இணையாக அமர்ந்தேன். நான் காட்டிய வெறுப்பினாலேயே அவர் மீண்டும் தீமையின் பக்கமாக தனனை செலுத்திக்கொண்டார். திரௌபதியை சிறைப்பிடிக்கும் பொருட்டு அவர் கானேகியதுகூட அதனால்தான்.

திரௌபதியை கைப்பற்றிக் கொண்டுவந்து சிந்துநாட்டின் அரசியாக்கிவிடலாம் என்று அவர் எண்ணினார். அதனூடாக பாண்டவர்களை முற்றாக தோற்கடிக்க முடியுமென்றும், அதற்கு என் தமையனின் ஒப்புதல் இருக்குமென்றும், அது என் மீதான அறுதி வெற்றியாக அமையுமென்றும் அவர் நினைத்தார். அவ்வாறு ஓர் எண்ணம் அவருக்குள் ஓடுவது எனக்கு தெரியாது. அவர் பீமசேனனால் சிறைபிடிக்கப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்டு அஸ்தினபுரியிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டார். திரும்பிவரத் தயங்கி இங்கேயே சில நாட்கள் இருந்தார். அவர் எண்ணிக் கூசியது என் முகம் நோக்கவே.

ஓராண்டுக்குப் பின்னரே மீண்டு வந்தார். அரண்மனையின் பின்பக்கம் வேட்டைமாளிகையிலேயே பலநாட்கள் தங்கியிருந்தார். அரசவைக்கு வரவே இல்லை. அவர் மீண்டுவந்து பல மாதங்களுக்குப் பின்னரே நான் அவரை நேரில் சந்தித்தேன். அவர் வேறுவழியில்லாமல் அவை கூட்டி ஆட்சிசெய்யத் தொடங்கினார். ஆனால் நாளின் பெரும்பகுதியை வேட்டையிலும் படைதிரட்டுவதிலும்

கழித்தார். அவ்வாண்டு கோடையில் தொன்மையான காற்றன்னைத் தெய்வங்களுக்கான பலிக்கொடை நிகழ்வில் அவருடன் நான் அரியணை அமர நேர்ந்தது.

பகல் முழுக்க அவ்வரியணையில் அமர்ந்திருந்தபோதும்கூட நான் அவரிடம் ஒரு சொல் பேசவில்லை. அந்தியில் மணிமுடிகளை அகற்றி அணியாடைகள் நீக்கி பாலைநிலத்தில் நிகழ்ந்த நிலவாடலுக்கு சென்றோம். அங்கு அருகருகே அமர்ந்திருந்தோம். அந்நாள் முழுக்க அவர் என்னை திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டிருந்தார். நான் ஏதேனும் அவரிடம் பேசுவேன் என்றோ, குறைந்தது விழிதொட்டுப் பார்ப்பேன் என்றோகூட எண்ணியிருக்கலாம். அவரை நான் ஒரு பொருட்டெனவே எண்ணவில்லை என்பதை உணர்ந்து சீற்றம் பெருகிக்கொண்டிருந்தார். நான் அவரை அன்று உண்மையாகவே வெறுத்தேன். அவருடைய உடலின் மெல்லிய வெம்மையே என்னை அருவருப்படையச் செய்தது.

நிலவில் தொலைவில் ஆடலும் பாடலும் நிகழ்ந்து கொண்டிருந்தபோது திரும்பி என்னிடம் “நான் நினைப்பது நடந்திருந்தால் இங்கே என்னருகில் இந்நேரம் அவள் இருந்திருப்பாள். மெய்யாகவே பேரரசி. அனலிடைப்பிறந்தவள். அவளின் ஒரு பார்வையிலேயே இவர்கள் அனைவரும் அவள் துர்க்கை என அடையாளம் கண்டு தலைவணங்கியிருப்பார்கள். உன்னை இவர்கள் அரசி என்று எண்ணவில்லை. ஒரு அன்னையென்று எண்ணுகிறார்கள்” என்றார். “நான் விரும்புவது அந்த நிலையைத்தான்” என்று நான் சொன்னேன். அவர் பற்களைக் கடித்தபடி “அது பெண்ணுக்குப் பெருமை அல்ல. எந்தப் பெண்ணும் அன்னையே. வேறொன்றும் அல்லாதவள் வெறும் அன்னை” என்றார்.

அவர் உள்ளத்தில் என்ன நிகழ்ந்தது என்று அப்போது எனக்குத் தெரிந்தது. திரௌபதியை கவரச்சென்றதே எனக்கு எதிரான ஒரு நிகழ்வு என. அது எனக்கு சீற்றத்தை அளிக்கவில்லை. மாறாக மெல்லிய உவகையைத்தான் அளித்தது. நான் அவரை பொருட்படுத்தவில்லை எனினும் அவர் என்னை பொருட்படுத்துகிறார் என்பதும், அரிய செயல்களை என் பொருட்டு அவர் செய்கிறார் என்பதும் அளித்த நிறைவு அது. அதை பெண்மையின் அறிவின்மை என்று வேண்டுமென்றால் கொள்க! அது கீழ்செயலாயினும் தன் பொருட்டு உயிர் கொடுக்கத் துணிந்து ஒருவன் எதைச் செய்தாலும் பெண்களுக்கு நிறைவளிக்கிறது.

ஆயினும் நான் அவரை பொருட்படுத்தவில்லை. திரௌபதியின் பொருட்டு மேலும் வஞ்சத்தை திரட்டிக்கொண்டேன். அவையில் ஒரு பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கீழ்மைக்கு ஒருபோதும் ஒப்புதல் அளிக்கக் கூடாதென்று எண்ணினேன். படை கிளம்பும்போது என்னிடம் விடைபெற்றுக்கொள்ள அவர் வரவில்லை. அவர் கிளம்பிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி எனக்கு வந்தது. என்னைத் தேடி வருகிறாரா என்று நான் எதிர்பார்த்தேன். படைகள் முற்றத்தில் ஒருங்கிக்கொண்டிருந்தபோதுதான் என்னிடம் விடைசொல்லாமலே அவர் கிளம்பிச்செல்கிறார் என்று உணர்ந்தேன். ஆகவே நானே கிளம்பிச்சென்று அவருடைய அறையில் அவரை பார்த்தேன்.

நான் செல்கையில் கவசங்கள் அணிந்து இறுதியாக மது அருந்திக்கொண்டிருந்தார். ஏவலனிடம் என் வருகையை அறிவித்தபோது அவன் திகைப்பினை கண்டேன். அவன் உள்ளே சென்று வந்து நான் உள்ளே செல்லலாம் என்பதை

வணங்கி அறிவித்தான். நான் உள்ளே சென்றபோது கையில் மதுக்கோப்பையுடன் உறுத்து விழித்தபடி அசையாது அமர்ந்திருந்தார். “போருக்குச் செல்கிறீர்கள் போலும்?” என்று கேட்டேன். அவர் மறுமொழி சொல்லவில்லை. “என் வாழ்த்தை சொல்வதற்காக வந்தேன்” என்றேன். அப்போதும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவருடன் இருந்த தளபதிகளும் அமைச்சர்களும் வெறித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தனர்.

அவர்கள் நோக்குகிறார்கள் என்பதனாலேயே நான் மேலும் சீற்றம்கொண்டேன். ஒரு வன்முறையை நிகழ்த்துவதற்கு முன் உள்ளம் அடையும் குவிதலை எண்ணுகையில் அச்சமே ஏற்படுகிறது. அவர் முன் கைநீட்டியபடி உரத்த பதறும் குரலில் “சிந்துநாட்டின் அரசி என்ற முறையில் செல்க வெற்றி கொள்க என்று வாழ்த்துகிறேன். ஆனால் அன்னையென்றும் பெண்ணென்றும் இப்போரில் அவள் வெல்ல வேண்டும் என்றே விரும்புகிறேன். அவளுக்கு இழைக்கப்பட்ட நெறியின்மை ஈடு செய்யப்படவேண்டும். அதன் பொருட்டு அக்களத்தில் நீங்கள் நெஞ்சு பிளந்து விழுந்தால் அதுவே தெய்வ ஆணை என்று கருதுவேன். அவ்வாறே ஆகுக!” என்றபின் திரும்பி வந்துவிட்டேன்.

உப்பரிகையில் ஏறும்போது நரம்புகள் தளர்ந்திருந்தேன். வஞ்சத்தின் பொருட்டு ஒன்றை செய்துவிட்டால் நம் உள்ளம் குற்ற உணர்வும் தன்னிரக்கமும் கொண்டு அலைபாய்கிறது. நம் மீதே நாம் சீற்றம் கொள்கிறோம். அச்சீற்றத்தை எவர் மீதேனும் காட்ட விரும்புகிறோம். நான் அகம் எரிந்துகொண்டிருந்தேன். சேடியரை, ஏவலரை வசைபாடினேன். உப்பரிகையிலிருந்து கீழே பாய்ந்துவிடவேண்டும் என்ற உள உந்துதலை முழு விசையாலும் தடுக்கவேண்டியிருந்தது. அவர்

உளம் உடைந்துவிட்டிருப்பார் என்று தெரிந்தது. அச்சொற்களை கூறியே ஆகவேண்டுமென்றால் தனிப்பட்ட முறையில் உரைத்திருக்கலாம். ஆனால் எவ்வாறு உரைத்திருந்தாலும் என்னுடைய அந்த எரிச்சலிலிருந்து என்னால் தப்ப முடியாது. கீழே கொம்பொலியும் முரசொலியும் கேட்டன. உப்பரிகை விளிம்பில் நின்று முற்றத்தில் இருந்து அவர்கள் போர்க்களத்துக்குக் கிளம்புவதை பார்த்தேன். என் நெஞ்சு படபடத்தது.

அவர் எந்நிலையில் இருப்பார்? அவர் உளம்கொதித்துக்கொண்டிருப்பார். அத்துடன் எவ்வண்ணமோ அறிந்திருப்பார், என்னுடையது திரௌபதிக்கான வஞ்சம் மட்டும் அல்ல. அது என் எரிச்சலும்கூட. ஏனென்றறியாத எரிச்சல் அது. அவரை மணந்த நாள் முதல் என்னுடன் இருப்பது. அது ஏன் என என் ஆழத்தில் நான் அறிவேன். ஒருபோதும் அதை நான் சொல்லிக்கொள்ள மாட்டேன். என் அகத்திலிருந்து அதை எடுக்கவே மாட்டேன். அங்கே நான் நின்றிருந்தபோது உள்ளங்கால் வியர்த்து வழுக்கி விழுவேன் எனத் தோன்றியது. கனவில் என நனவில் நின்றிருக்கும் சில தருணங்கள் உண்டு அல்லவா?

உள்ளிருந்து படைத்தலைவர்கள் சூழ அவர் இறங்கி வந்தார். தலைக்கவசத்தை கையில் வைத்திருந்தார். சிரித்துப் பேசி கூச்சலிட்டு கைவீசி வாழ்த்திய பின்னர் தேரில் ஏறிக்கொண்டார். அவரைச் சூழ்ந்து அவருடைய வீரர்கள் சென்றனர். வாழ்த்தொலி எழுப்பி கூச்சலிட்டபடி ஒவ்வொருவரும் களியுவகையில் நிலைமறந்திருந்தனர். போருக்குக் கிளம்புபவர்கள் பெரும் திருவிழாவொன்றுக்காக எழுபவர்கள்போல் தோன்றுகிறார்கள். அவர்கள் காத்திருந்த

கணம். புகழும் விண்ணுலகும் அணுகும் தருணம். மட்டுமல்ல, அவர்களின் ஆணவமும் மீறல்களும் தெய்வங்களால் பொறுத்தருளப்படும் பொழுது. ஆயினும் அவருடைய அந்த உவகைக் கொப்பளிப்பு விந்தையாக இருந்தது. அது ஒரு நடிப்பென்று எனக்கு தோன்றியது.

நான் வெறித்து நோக்கியபடி நின்றிருந்தேன். தேர் அகன்று படைகள் கண்ணிலிருந்து மறைந்த பின்னரும் கால் தளர்ந்து அமர்ந்து நெடுநேரம் அங்கு இருந்தேன். பின்னர் எழுந்து அறைக்குச் சென்றபோது என் உள்ளம் தவித்துக்கொண்டிருந்தது. ஒன்றை நான் அப்போது உணர்ந்தேன், அவர் நடிக்கவில்லை. மெய்யாகவே உவகையில் இருக்கிறார். தன்னை அழுத்திய ஒன்றிலிருந்து விடுபட்டவர்போல் இருக்கிறார். எனில் அவர் இதுவரை ஆழ்ந்த குற்றஉணர்ச்சி கொண்டிருந்தாரா? அனைத்துத் தீங்குகளையும் அக்குற்றஉணர்ச்சியிலிருந்தே செய்திருக்கிறார் போலும். தனக்கு தண்டனை வேண்டுமென்று அவரது அகம் தவித்துக்கொண்டிருக்கிறது. நான் பழிச்சொற்களை உரைத்ததும் தனக்குரிய தண்டனையை பெற்றுவிட்டதைப்போல, அதனூடாக அதுவரைக்கும் இருந்த அனைத்துக் குற்றவுணர்விலிருந்தும் விடுபட்டவர்போல் ஆகிவிட்டிருக்கிறார். அதையே அவர் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்.

என் உள்ளம் இரங்கிக்கொண்டே இருந்தது. அவர் உள்ளத்தில் அவ்வாறு ஒரு நல்லியல்பு குடிகொண்டிருந்ததை நான் உணர்ந்திருந்தேனா? அதை அடையாளம் கண்டு எவ்வகையிலேனும் அதை வளர்க்க முயன்றிருக்கிறேனா? என்னை வெல்வதற்கே அவர் எப்போதும் முயன்றிருக்கிறார். நான் அழகி அல்ல. ஆனால் பெருங்காதலனைப்போல

காலடியில் கிடந்திருக்கிறார். அவரை நான் ஒரு பொருட்டென எண்ணியதில்லை. என் உள்ளத்தில் நிலைகொண்டிருந்தவர் வேறு ஒருவர். இரு மைந்தரை பெற்றெடுக்கும் வரை கூட என் உள்ளத்தில் அவர் இருந்தார். காமத்திலாடும்போது ஒருகணமேனும் அவர் நினைவு வந்து செல்லாமல் இருந்ததில்லை. என் குழந்தைகளின் முகங்களை கூர்ந்து பார்க்கும்போதுகூட அவர் சாயல் வந்து போவதுபோல் தோன்றும்.

சம்வகை திடுக்கிட்டாள். சுரதனை நிமிர்ந்து பார்த்தாள். சுகதனின் விழிகளை நோக்கியபடி "அரசி" என்றாள். "ஆம், அவர்கள் அறியட்டும்… நான் அவர்களிடமே இப்போது பேசமுடியும். மண்நீத்தவரிடம் ஒரு சொல்லும் இனி உரைக்க முடியாது" என்று துச்சளை சொன்னாள். "என் உள்ளம் முழுக்க தான் இல்லையென்பதை என் கணவர் அறிந்திருந்தார். அது அவரை எங்கோ உறுத்திக்கொண்டிருந்தது. ஏமாற்றமும் சலிப்பும் அடையச்செய்திருக்கிறது. ஆண்மகன் அதை தெளிவாக உணர முடியும். தான் காதல்கொண்ட பெண்ணிடம் இன்னும் தெளிவாக உணர முடியும். அது ஒரு சாவு அவனுக்கு."

ஆனால் அதன் பொருட்டு அவர் என்னிடம் வஞ்சம் கொள்ளவில்லை. முற்றிலும் வெல்லவே முயன்றார். அவர் முயலும்தோறும் நான் அவரிடமிருந்து அகன்று அகன்று சென்றேன். அவரை வெறுப்பதற்கான ஏதுக்களை எங்கும் திரட்டிக்கொண்டேன். அவரை வெறுப்பதற்கு என்னை அஸ்தினபுரியின் இளவரசி என்னும் நிலையிலேயே நிறுத்திக்கொண்டேன். இன்று எண்ணுகையில் நான் திருதராஷ்டிரரின் மகளென்றும், துரியோதனனின்

தங்கையென்றும், நூற்றுவரின் உடன்பிறந்தாளென்றும் என்னை உணராத ஒருகணமும் இருக்கவில்லை என அறிகிறேன். நாடுகளுக்கும் குடிகளுக்கும் மேலெழுந்த பேரரசி என்றே என்னை கற்பனை செய்துகொண்டிருக்கிறேன்.

அன்னை என அரவணைப்பவள் என என்னைப்பற்றி சொல்கிறார்கள். அவ்விரிவு நான் கொண்ட நிமிர்விலிருந்து எழுந்தது. பேரன்னைகள் பேரளியிலிருந்து பிறக்கமுடியும். பேராணவத்திலிருந்தும் எழமுடியும். அவ்வாறு அன்றி எளிய பெண்ணாக இருந்திருந்தால் என் கணவரின் நல்லியல்பை புரிந்துகொண்டிருப்பேன். அவரை மேலும் அணுகியிருப்பேன். அவரை வென்று எனக்கு இனியவராக ஆக்கிக்கொண்டிருக்கவும் கூடும். என் ஆணவத்தால் அவரை விலக்கி, தீயவராக்கி, அதன்பொருட்டே அவரை வெறுத்து, இறுதியில் தீச்சொல்லிட்டு களத்திற்கு அனுப்பினேன். அதை எண்ணி எண்ணி நாளும் ஏங்கிக்கொண்டிருந்தேன்.

போர்க்களத்தில் அவர் கொல்லப்படுவாரென்பதில் எனக்கு எந்த ஐயமும் இருக்கவில்லை. ஏனெனில் அவர் எதிர்த்து போர்புரியச் செல்வது இளைய யாதவரை. மண்ணிலெழுந்த தெய்வம் அவர் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை. நெஞ்சு பிளந்து அவர் களத்தில் விழுவார். அச்செய்திக்காகவே ஒவ்வொரு நாளும் காத்திருந்தேன். அதை நூறு முறை உள்ளத்தில் நடித்துவிட்டிருந்தமையால் மெய்யாக அச்செய்தி வந்தபோது எனக்கு எந்த அதிர்ச்சியும் ஏற்படவில்லை. முதலில் ஏற்பட்டது ஒரு சொல்லின்மை. பாவைபோல் அமைச்சர்கள் கூறிய அனைத்தையும் செய்தேன். அனைத்துச் சடங்குகளும் முடிந்த பின்னர், இனி அவர் முற்றிலும் இல்லை என்றான போதுதான் நானும் எஞ்சா நிலையை உணர்ந்தேன்.

அவ்வெறுமையை துயரென்று எண்ணி என் அறைக்குள் அடைந்துகிடந்தேன். ஓரிரு நாட்களிலேயே முதுமை கொண்டேன். உயிர் வாழும் பொருட்டு என் மைந்தரை பற்றிக்கொண்டேன். போர் முடிந்த பிறகு உருவான அரசியல்சூழ்ச்சிகள் ஒருவகையில் நன்மை செய்தன. இப்புவியில் வாழ்வை பற்றிக்கொள்வதற்கான உளவிசைகளை அவை அளித்தன. என் மைந்தரின் பொருட்டு களமாடி, சொல்லாடி ஒவ்வொரு நாளும் சலித்து, வஞ்சம்கொண்டு, சொல் திரட்டியபடி துயிலச்சென்று, புதிய திட்டங்களுடன் கண் விழித்து, பகலென்றும் இரவென்றும் அதில் அளாவி, அவற்றினூடாக அவர் நினைவைக் கடந்து, நெடுந்தொலைவுக்கு வந்தேன். ஆனால் நகர்விட்டு நீங்குகையில், பிறர் என்னை மணம்கொள்ளக் கோருகையில்தான் ஒன்றை உணர்ந்தேன். நான் சிந்துநாட்டு ஜயத்ரதனின் துணைவி என்னும் பெருமிதத்தையும் கொண்டிருக்கிறேன். அவரை நான் உள்ளூர விரும்பியிருக்கிறேன். அவ்விடத்தில் பிறிதொருவரையும் வைக்கவே என்னால் இயலாது.

ஒருவன் என்னிடம் தன்னை மணங்கொள்ளும்படி கேட்கும்போதே அவன் எப்படி தன்னை ஜயத்ரதனுக்கு நிகராக வைக்கலாம் என்ற பெரும் சீற்றத்தை அடைகிறேன். அருவருப்பில் உடல் உலுக்கிக்கொள்ள அத்தூதை இகழ்ந்து ஒதுக்குகிறேன். அது உருவாக்கும் கசப்பு என்னிலிருந்து விலக நெடும்பொழுதாகிறது. என் பொருட்டு ஜயத்ரதனை தனக்கு இணையானவன் என்று ஒருவன் எண்ணுகிறான் என்பதையே என்னால் தாள இயலவில்லை. எனக்கு வேறு வழியில்லை. வேறெங்கும் என்னால் செல்ல இயலாது. நான் சிறைகொள்ளப்படலாம். எனக்கு இந்நகரே காப்பு. ஆகவேதான் அஸ்தினபுரிக்கு வந்தேன்.

இந்நகரை நெருங்குவது வரை ஒவ்வொரு முன்னடிக்கும் அரைப் பின்னடி வைத்துக்கொண்டிருந்தது என் உள்ளம். நீ எனக்களித்த அரசமுறையான வரவேற்புதான் என்னை முதல் முறையாக உளம் மலரச்செய்தது. என் நிலத்திற்கு வந்துவிட்டேன் எனும் உணர்வை அளித்தது. இந்நகர் முற்றிலும் மாறிவிட்டிருக்கிறது. இதன் சுவர்கள் கருமை அகன்று வெண்மை நிறம் கொண்டிருந்தது எனக்கு முதலில் திகைப்பை அளித்தது. பிறிதொரு நகரத்திற்கு வந்துவிட்டேனா என்று எண்ணினேன். இதன் மாளிகைகள் அனைத்தும் மாறிவிட்டிருந்தன. தெருக்களும் வண்ணங்களும் மாறிவிட்டிருந்தன. இந்த அரண்மனை முற்றிலும் புதிய ஒன்றுபோல் தோன்றியது.

“ஆனால் இம்மாற்றங்கள் எனக்கு உவகையையும் அளித்தன. அந்தப் பழைய நகருக்குள் நான் நுழைய விரும்பவில்லை. அந்நகரில் நிறைந்திருந்த பழைய நினைவுகள் என்னை இங்கு சூழாதென்று தோன்றுகிறது. இங்கென் தமையர்கள் இல்லை. தந்தையர் இல்லை. இது எனக்கென எவரோ கட்டியளித்த புது நகரம். பிறந்தவீட்டிற்குத் திரும்ப விரும்பும் எந்தப் பெண்ணும் இளமையின் நினைவுகளில் ஆட விரும்புவாள். இது நான் பிறந்து வளர்ந்த நகர் அல்ல. ஆனால் அதன் சாயல் கொண்டது. என்னிடம் எஞ்சும் நினைவுகளை கொண்டுவந்து இங்கே வைத்து நான் விளையாட முடியும். நான் இங்கு என் இளமையின் நினைவுகளில் ஒரு துளியுமில்லாமல் வாழ விரும்புகிறேன்.”

அவள் அனைத்தையும் சொல்லிவிட்டது போலிருந்தது. ஆனால் சொல்லவேண்டியவை அவை அல்ல என்பதும் தெரிந்தது. உணர்வுகளினூடாக அடித்துச்செல்லப்பட்டு

வந்தடைந்த இடம் அது. ஆனால் அவ்வகையில் உணர்வுகளினூடாகச் செல்வதில் பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஓர் உணர்வுநிலை, அது எதுவாக இருந்தாலும், ஒருவகை நடிப்பே. நடிப்பு எதுவானாலும் மிகையே. மிகை எதுவானாலும் கூர்கொண்டதே. உணர்வெழுச்சிகளை அடைபவர்கள் அவற்றை அடையும் தன்னை அவ்வுணர்ச்சிகளுக்கேற்ப புனைந்துகொள்கிறார்கள். அந்த ஆளுமை ஒத்திசைவுடன் திரண்டு நின்றிருக்கையில் அனைத்தையும் அதுவே பார்த்துக்கொள்ளும். அது முதற்சேடன் என பல்லாயிரம் நா கொண்டது.

தன் வாழ்வின் ஒரு முதன்மைத் தருணம் இது என சம்வகை எண்ணிக்கொண்டாள். சூழ்ச்சிக்காரர்களை, அரசநெறியாளர்களை எதிர்கொள்வதைப் போன்றது அல்ல இது. அவர்களின் அலைகளுக்கு அடியில் அசையாப் பாறை உள்ளது. அலை கடந்துசென்று அதைத் தொட்டால் போதும், அவர்களை மதிப்பிட்டுவிடலாம். இவள் கள்ளமற்றவள், ஆகவே அலைகளே ஆளுமையென்றானவள். கணந்தோறும் இயல்பாக நிகழ்பவள். இவளை மதிப்பிடவோ வகுக்கவோ இயலாது. அதற்கு பலநூறு களங்களில் இவளை வகுத்து ஒரு ஊடுபொதுவை கண்டடையவேண்டும். அல்லது இத்தருணத்தில் இவ்வண்ணம் இவளை அடையாளப்படுத்த வேண்டும். ஒற்றைக் கற்சிற்பத்தில் தெய்வத்தை நிலைகொள்ளச் செய்வதைப்போல.

தன்னை புனைந்துகொண்டுவிட்டிருக்கிறாள். முழுமையாக அதை நம்புகிறாள். இனி தன் இலக்கை சென்றடைவாள். அந்த உணர்வின் விசையாலேயே சொற்களை கண்டடைவாள். வழியை சமைப்பாள். அவள் சொல்லவில்லை அதை, அங்கே அத்தருணத்தில் எழுந்த உணர்வுருவான அவளின் பாவை

அதை சொல்லப்போகிறது. தன்னுள் இருந்து ஆழத்துளி ஒன்றை வெளியே எடுத்ததுகூட தன் திறந்த தன்மையை, தடையின்மையை தனக்குத்தானே சொல்லிக்கொள்ளத்தான். உள்ளத்தை கீறி வைக்கிறோம் என்னும் பாவனை. உள்ளத்தை கீறி வைக்கவுமில்லை. அந்தப் பெயரை அவள் சொல்லவுமில்லை. மைந்தர் முன் அவளால் அதை சொல்லவும் முடியாது. சம்வகை அகத்தே புன்னகைத்துக்கொண்டாள்.

# களிற்றியானை நிரை - 43

### பகுதி ஐந்து : விரிசிறகு – 7

சம்வகை துச்சளையை எவ்வுணர்ச்சியும் இல்லாத விழிகளுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் தெரிந்த உணர்வு துயரமா சலிப்பா இல்லை மெல்லிய ஆறுதலா என்று எண்ணிக்கொண்டாள். ஆனால் அவள் ஓய்வடைந்தவள் போலிருந்தாள். பொருட்டில்லாத ஒன்றை பேசவிருக்கும் முகம் கொண்டிருந்தாள். அது அரசியல்செய்திகளைப் பேச உகந்தது என சம்வகை உணர்ந்திருந்தாள். அவள் அச்சொற்களை நோக்கி செல்வதை எதிர்பார்த்தாள். துச்சளை மெல்ல அசைந்து அமர்ந்தபோது அவள் தொடங்கவிருக்கிறாள் என உணர்ந்தாள்.

துச்சளை "இந்நகரில் இன்று எனது இடமென்ன என்பது இன்னும் வகுக்கப்படவில்லை. சுரேசரும் நீயும் அளித்த வரவேற்பை பார்க்கிறேன். அது எனக்கு நம்பிக்கை அளிக்கிறது. சுரேசரை நான் நம்புகிறேன். பாரதவர்ஷத்தின் அரசுகளும்

குடிகளும் அந்தணரின் அறஉணர்வை நம்பியே இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவரை மீறி யுதிஷ்டிரன் ஒன்றை செய்யமாட்டார் என்று நான் எண்ணுகிறேன். இந்நகரில் நான் விரும்புவதென்ன என்று எனக்கு தெரியவில்லை. உன்னிடம் நான் பேச விழைந்தது அதைத்தான்” என்றாள். அவள் இயல்பான ஒழுக்குடன் பேசலானாள்.

இங்கு என் மைந்தர் புறக்குடியினர் என்று வாழ்வதை என்னால் ஏற்க இயலாது. திரௌபதி இங்கு வருகையில் அவளுக்கு ஏவற்பெண்டென அமைவதில் எனக்கு எந்தக் குறைவும் இல்லை. என்றும் அவளை என் அரசியாக எண்ணியிருக்கிறேன். அவளால் என் கொழுநர் கொல்லப்பட்டதில், குடி அழிந்ததில்கூட எனக்கு நிறைவே. பெண்ணென அவள் நிமிர்ந்து நிற்கவேண்டும். மும்முடி சூடி அஸ்தினபுரியின் அரியணையில் அமரவேண்டும். தேவயானியும் தபதியும் மூதன்னையர் வாழும் விண்ணிலிருந்து அவளை நோக்கி உளம் நிறையட்டும். ஆனால் என் மைந்தர் இங்கு குடியிலிகளாக இருக்கக்கூடாது. அஸ்தினபுரியின் படைவீரர்களில் சிலராக அவர்கள் ஆகக்கூடாது.

ஒரு துண்டு நிலமேனும் அவர்களுக்கு வேண்டும். அவர்கள் அரசுகொள்ளவேண்டும். அவர்கள் தங்கள் மைந்தர்களுக்கு குடியும் கோலும் விட்டுச்செல்லவேண்டும். ஜயத்ரதனின் பெயரை நிமித்திகன் ஒவ்வொருநாளும் அரசவையின் குலமுறை கிளத்தலில் கூவ வேண்டும். என் கொழுநரின் பொருட்டு நான் இயற்றவேண்டியது அது ஒன்றே. யுதிஷ்டிரனிடம் சுரேசர் இதை கூற வேண்டும். நானே இதை

நேரில் அவரிடம் கூறலாம்தான். ஆனால் அது இரந்து பெற்றதாக ஆகும். அதுவும் சிந்துநாட்டரசர் ஜயத்ரதனுக்கு இழிவளிப்பது. நான் சுரேசரிடம் கோருவதுகூட இரப்பதே. இதை உன்னிடம் சொல்லலாம். நீ அரசகுடியினள் அல்ல. அமைச்சரும் அல்ல.

சிந்துநாட்டின் ஒரு பகுதியையேனும் யுதிஷ்டிரன் மீட்டு எனக்கு அளிக்கவேண்டும். கையளவு நிலம் போதும். ஒரு கோட்டையும் சிறுபடையும் போதும். அங்கு என் மைந்தர்கள் முடிசூட்டிக்கொள்ள வேண்டும். தனி முடி அமைக்க வேண்டும். அவர்களை அஸ்தினபுரியின் படை பாதுகாக்கவேண்டும். அவர்கள் என்றேனும் தனியுரிமை அரசர்களாகக்கூடும் என்றும் அவர்களின் கொடிவழியினர் மீண்டும் பேரரசர்களாக ஆகக்கூடும் என்றும் நம்பிக்கையாவது எஞ்சவேண்டும். நான் என் கொழுநருக்குச் செய்யும் கைமாறு அது மட்டுமே.

“முடியில்லாத வெறும் குடிகளாக அவர்களை எஞ்சவிட்டுச் செல்வேனெனில் விண்ணில் அவர் முன் என்னால் நிற்க இயலாது. இதை நீ சுரேசரிடம் கோரவேண்டுமென்பதில்லை. அவரிடம் உரைக்கக்கூட வேண்டாம். ஆனால் நீ இவ்வெண்ணம் கொண்டிருந்தாலே போதும். இவ்வெண்ணம் உன் சொற்களில் எவ்வகையிலேனும் வெளிப்பட்டாலே போதும்.”

சம்வகை தொண்டையைக் கனைத்து “அரசி, நீங்கள் இவ்வண்ணம் கோருவதே அவருடைய அறவுணர்வை ஐயப்படுவதுபோல. உங்களுக்கு ஆற்றவேண்டிய கடமை என்ன என்பதை அவர் அறிவார். அவர் அளிப்பதற்கு நிகராக கோரக்கூட நம்மால் இயலாது” என்றாள். துச்சளை தத்தளிப்புடன் “ஆனால் நான் இங்கு ஓர் அமைதியான

வாழ்க்கையை விரும்பி வந்துள்ளேன் என்று அவர் எண்ணக்கூடும்” என்றாள். “நான் இங்குதான் வாழ விழைகிறேன். என் மைந்தருக்கு நகர் அமையும் என்றால்கூட நான் அங்கே செல்லமாட்டேன்... ஆனால்... தெரியவில்லை. இப்போதுபோல நான் எப்போதும் ஐயமும் குழப்பமும் கொண்டதில்லை.”

அவள் மேலும் தத்தளித்து பின் சொல் கண்டடைந்து “சம்வகை, உண்மையில் அரசுசூழ்தலின் நெறிகளை நான் ஐயப்படுகிறேன். ஏனென்றால் நான் அரசவையை அறிந்தவள். சிறுநிலமாயினும் தனக்கென்று ஓர் அரசைக் கொண்டிருக்கும் அரசன் எப்போது வேண்டுமானாலும் வளர்ந்து பரவக்கூடும். சருகு தேடும் அனல்துளிதான் அவன். பகைவர் அவனை சேர்த்துக்கொள்ளக் கூடும். அவன் இணையானவர்களுடன் கூட்டு வைக்கக்கூடும். அவன் குடியில் வெல்லற்கரிய மாவீரன் தோன்றலும் ஆகும். வரலாறு எப்படியும் திரும்பி வீசும். அரசுகள் எந்நிலையிலும் ஆற்றல் இழக்கக்கூடும். ஆகவே அரசியலறிந்தோர் எவருக்கும் முற்றுரிமையாக நிலம் அளிக்கமாட்டார்கள். அரசர்களை உருவாக்கமாட்டார்கள்” என்றாள்.

“யுதிஷ்டிரன் அவ்வாறு அஞ்சினால் நான் அதை பிழை என கருதமாட்டேன். அவ்வண்ணம் எண்ணம்சூழ்வது அரசருக்குரிய கடமைதான்” என துச்சளை தொடர்ந்தாள். “ஒரு துண்டு நிலம் என் மைந்தர்களுக்கு அளிக்கப்பட்டால் ஒருவேளை அவர்கள் கூர்ஜரத்துடன் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாம். ஏதேனும் ஒரு தருணத்தில் அவர்கள் சௌவீரர்களுடனோ யவனர்களுடனோ கூர்ஜரத்துடனோ அல்லது துவாரகையுடனோ ஒரு மணத்தொடர்பை உருவாக்கிக்கொள்ளக் கூடும். எண்ணியிராக் கணத்தில்

படையும் ஆற்றலும் பெற்று அஸ்தினபுரிக்கு எதிராக எழவும் கூடும். நம் கையே பாம்பென மாறி நம்மை கடிக்கக்கூடும் எனும் எண்ணம் அரசனுக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்று நெறி நூல்கள் கூறுகின்றன."

"ஆகவே சுரேசர் அமைச்சர் எனும் நிலையில் அதையே அரசருக்கு உரைக்கவேண்டும். அவர் என் மைந்தருக்கு நிலம் அளிக்கலாகாது என உரைப்பார் எனில் அது பிழையும் அல்ல. என் மைந்தர் ஷத்ரியக் குருதி ஓடும் உடல் கொண்டவர்கள். ஆகவே முடி விழைவும் மண் விழைவும் அவர்களிடம் எப்போதும் இருக்கும். தொல்குடி அரசர்கள் தாங்கள் என்னும் ஆணவத்தில் இருந்து அவர்கள் வெளிவரவும் இயலாது. அவர்கள் ஜயத்ரதனின் மைந்தர்கள் என்பதை மறக்கவேண்டியதில்லை. அவர்கள் மேல் எனக்கு ஆணையும் இல்லை. ஆயினும் என் மைந்தர் பொருட்டு இதை என்னால் கோராமலும் இருக்க இயலாது" என்றாள் துச்சளை.

சம்வகை தன் சொற்களை ஒரே வீச்சில் மீண்டும் ஒருமுறை அகத்தே வைத்து எண்ணிநோக்கிவிட்டு "மீண்டும் அதையே நான் கூறுகிறேன், அரசி. இதை நீங்கள் எவரிடமும் கோரவேண்டாம். சுரேசரிடமே முற்றாக இதை விட்டுவிடலாம். முடிவு நலமாக இருக்கும் என்றே நீங்கள் நம்பலாம்" என்றாள். பின்னர் புன்னகைத்து "அவர் முடிவெடுத்தால் அவரே பொறுப்பேற்றுக்கொண்டதும் ஆகும். நீங்கள் அஞ்சவும் வேண்டியதில்லை" என்றாள். துச்சளை அறியாமல் புன்னகைத்து "ஆம், அதுவும் மெய்யே" என்றாள். "அவரிடம் நான் எதையும் பேசவேண்டியதில்லை என நானும் அறிவேன். நான் உன்னை அழைத்துப் பேசினேன் என்பதே போதும், என்ன பேசினேன் என அவர் உய்த்துக்கொள்வார்."

சம்வகை மெல்லிய அக அதிர்வை உணர்ந்தாள். துச்சளை எண்ணியதுபோல அத்தனை எளியவளல்ல என்று தோன்றியது. அது பெண்டிரின் ஆற்றல், அவர்கள் எப்போதும் ஒரு துளியை கரந்திருக்கிறார்கள். நெடுங்காலம் கரந்துறைந்து வாழ்ந்தமையின் பேறு அது. அன்னையரோ மேலும் சில துளிகளை. அன்னையர் மைந்தரைப்பற்றியே எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எண்ணி எண்ணி விரித்து, விரிந்தனவற்றை துளியெனச் சுருக்கிக்கொள்கையில் அவை கூர்மை மிக்கவை ஆகின்றன.

அங்கே அமைதி உருவாகியது. கிளம்பவேண்டியதுதான் என சம்வகை எண்ணினாள். துச்சளை மெல்ல அசைந்து கலைந்து "இங்கு பேசப்படுவதை நீ உள்ளே நுழைவதற்கு முன் சேடிகளிடம் இருந்து அறிந்தேன். நீ யுயுத்ஸுவுக்கு துணைவியாகக்கூடும் என்றார்கள். யுயுத்ஸுவே இங்கு மெய்யாக கோல்கொண்டு அமரக்கூடும் என்று நிமித்திகர்கள் கூறியிருக்கிறார்கள். இதன் முதன்மைப் படைத்தளபதியாக இன்று உன்னை அமைத்திருக்கிறார்கள். நாளை நீ அரியணை அமர்ந்தாலும் வியப்பதற்கில்லை" என்றாள்.

"அரசி!" என்று மெல்லிய துயருடன் சம்வகை சொன்னாள். துச்சளை புன்னகைத்து "இது புதிய வேதம் எழுந்த நிலம். குடிகளைக் கட்டியிருந்த இரும்புத் தளைகள் அறுந்துவிட்டன. பிறப்பினால் அல்ல இயல்பினாலும் செயலினாலும் மானுடர் பெருமையுறும் காலம் என்று அப்புதிய வேதம் சொல்வதாகச் சொல்கிறார்கள். அதுவே நிகழவும் கூடும். நிகழுமெனில் என் மைந்தருக்கு என்றும் அன்னையாக அரணாக நிற்கவேண்டும் என்று மட்டுமே உன்னிடம் நான் கூறுவேன். இது உன் குடி என, மூத்தோள் என என் கோரிக்கை" என்றாள்.

உடலைக் குறுக்கி தலைகுனிந்து சம்வகை அமர்ந்திருந்தாள். துச்சளை கைநீட்டி அவள் தொடையை மெல்ல தட்டி “நன்று, இச்சொற்கள் இங்கேயே இருக்கட்டும்” என்றாள். சம்வகை ஏனென்றறியாது விழிநீர் உதிர்த்தாள். “என்ன இது? என்ன இது? நான் என்ன சொல்லிவிட்டேன்?” என்றாள் துச்சளை. “ஒன்றுமில்லை, அரசி” என்றாள் சம்வகை. “எழுந்து உன் கவசத்தைப் போடு, மீண்டுவிடுவாய்” என்றாள் துச்சளை. அவள் கண்களைத் துடைத்தபடி எழுந்து தன் கவசங்களை அணிந்துகொண்டாள். மெய்யாகவே அப்போது விடுதலையை உணர்ந்தாள். ஆற்றல்கொண்டவளாக, நிமிர்வு அடைந்தவளாக ஆனாள்.

சம்வகை வெளியே சென்றபோது சுரதனும் சுகதனும் உடன் வந்தனர். சுகதன் “அன்னை துயிலவிருக்கிறார்கள்... இனி அவர்களால் துயில்கொள்ள முடியும் என்று சொன்னார்கள்” என்றான். சம்வகை புன்னகைத்து “நன்றல்லவா?” என்றாள். “அன்னை சொன்னது மெய்யா? இனி நீங்கள் அஸ்தினபுரியின் அரசியென அமர்வீர்களா?” என்றான். “அது அரசியின் வாழ்த்து. அதற்குமேல் அதற்குப் பொருளேதுமில்லை” என்றாள். சுகதன் சிரித்து “ஆனால் அதை சொன்னபோது உங்கள் விழிகள் மின்னின” என்றான். அவள் புன்னகை மட்டும் புரிந்தாள்.

சுகதன் “அன்னை எங்களுக்கென நிலம் கோரினார். எனக்கு அதில் உடன்பாடேதுமில்லை. ஓர் அயல்நிலத்தில் என்னால் வாழமுடியுமெனத் தோன்றவில்லை. சிந்து இல்லாத நிலம் நிலமே அல்ல. உண்மையில் நான் சிந்துநாட்டுக்கே திரும்பிவிடலாமென்று எண்ணுகிறேன். அங்கே நாங்கள் வஜ்ரபாகுவின் கீழே படைப்பணியாற்றக்கூடும் என்றால்

எங்களுக்கு அங்கே இடமளிக்க அவர் சித்தமாவார் என்றே நினைக்கிறேன். அதைத்தான் சுரேசரிடம் சொல்ல விரும்புகிறேன். தகுந்த அந்தணரை அனுப்பி அதை வஜ்ரபாகுவிடம் பேசச் சொன்னாலே போதும்” என்றான்.

சுரதன் மெல்ல உறுமினான். அவனை நிமிர்ந்து நோக்கிய சம்வகை அவன் விழிகளைக் கண்டு திடுக்கிட்டாள். அவனை அந்த அறைக்குள் பலமுறை நேர்நோக்கியிருந்தபோதும் அந்த விழிகளை அவள் அவ்வண்ணம் கண்டிருக்கவில்லை. அவை பித்தெழுந்த அலைவுகொண்டிருந்தன. ஒருவனால் பித்தை மறைக்கமுடியுமா என்ன? சுரதன் “நான் அன்னை சொன்னதையே சொல்ல விழைகிறேன். எனக்கு ஒரு நிலம் வேண்டும். எனக்கென்று ஒரு நிலம். அங்கே நான் மட்டுமே இருக்கவேண்டும்…” என்றான். அவன் பித்து எழச் சிரித்து “இவன்கூட இருக்கவேண்டியதில்லை. அன்னை இருக்கவே கூடாது” என்றான்.

“அதை முடிவு செய்யும் இடத்தில் நான் இல்லை” என்று சம்வகை சொன்னாள். “நான் உங்களுக்கோ உங்கள் அன்னைக்கோ முறையான தூதாகவும் ஆக முடியாது. என் கடமை காவல் மட்டுமே. அமைச்சுப்பணிகளில் காவலரோ படைத்தலைவர்களோ ஈடுபடுவது எந்நிலத்திலும் ஏற்கப்படுவதில்லை.” அவன் புன்னகையிலிருந்த தீய தன்மை அவளை அகமுலையச் செய்தது. “ஆனால் நீங்கள் யுயுத்ஸுவுக்கு அணுக்கமானவர். அதை அன்னையிடம் சொன்னவனே நான்தான். நீங்கள் சொல்லவேண்டியதில்லை, எண்ணினாலே போதும்.” அவன் “நான் உங்களை தூதுபோகச் சொல்லவில்லை. எனக்கு நிலம் வேண்டுமென்று அன்னையைக் கொண்டே யுதிஷ்டிரனின் அவையில்

இரக்கச்செய்ய என்னால் முடியும். அன்னை என்னிடமிருந்து தப்ப முடியாது” என்றான்.

அவன் விழிகள் அலைபாய்ந்துகொண்டே இருந்தன. “அன்னை என்னை அஞ்சுகிறார். அன்னையர் மைந்தரை அஞ்சுவதேன் என உங்களுக்கே தெரியும். தந்தைக்கு பிழையிழைத்துவிட்டோம் என உணரும் அன்னையர் மைந்தரிடம் அடிபணிகிறார்கள். அன்னை என் அடிமை. அவரை நான் ஆட்டுவிக்கிறேன். அவர் இங்கே வந்தது எனக்காக. எனக்கு நிலம் தேவை. ஒரு கோட்டை. ஒரு குடிச்சூழல். ஒரு கொடி. எனக்காக அல்ல, என் தந்தைக்காக. அவர் என்னிடம் அதை கேட்டார். திரும்பத்திரும்ப கேட்டுக்கொண்டிருக்கிறார்.”

அவன் அவளருகே வந்து “நான் சிந்துநாட்டின் எல்லையை கடக்கும்போதுகூட அவர் என்னிடம் அதை கேட்டார். ஒலியால் அல்ல. விழிகளால். என் அரண்மனை அறைக்குள் அவர் வந்தார். அதை பிறர் பார்க்கமுடியாது. இவன் கூட பார்க்க முடியாது. நான் பார்த்தேன்” என்றான். சம்வகை “அவர் உங்களுடன் இருப்பது இயல்பே” என்றாள். “நாங்கள் அவருக்கு நீர்க்கடன் செய்தோம். நானும் இளையோனும். நீர்க்கடன் அவரை சென்றடையவில்லை. ஏனென்றால் அவர் இங்குதான் இருக்கிறார். தலைதுண்டிக்கப்பட்டவர்களுக்கு விண்ணுலகில்லை என்று எங்கள் தொல்குடியினர் எண்ணுகிறார்கள். அவருடைய தலை துண்டிக்கப்பட்டது. அதை மீண்டும் கண்டடையவே முடியவில்லை.”

“காட்டில் எங்கோ பிருஹத்காயரின் மடியில் விழுந்து அவரால் கீழே தள்ளிவிடப்பட்டது என்கிறார்கள். நெஞ்சுடைந்து அவர் உயிர்விட்டார் என்கிறார்கள். அவருடைய மாணவர்கள் அவரை கண்டடைந்து அவருடைய மைந்தனின் தலையுடன் சேர்த்து

அவரை எரியூட்டினர். நாங்கள் அவருக்கு நீர்க்கடன் அளித்தபோது சிந்து அமைதியாக இருந்தது. அலைகளே இல்லை. அதில் மீன்கள் துள்ளவில்லை. பலிச்சோற்றை உண்ண அவை எழவில்லை. உணவென எதை வீசினாலும் ஆயிரம் வாய் திறந்து கவ்விக்கொள்ளும் சிந்து பளிங்குவெளியென உறைந்திருந்தது. நான் நீர்க்கரையில் நின்று நதியை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தேன்.”

“அவருடைய பதினெட்டு மைந்தர்களும் நீர்ப்பலி இட்டனர். அவர்களில் ஒருவனாகிய சுகோத்ரன் தன் பலியை சிந்து வாங்கிக்கொண்டது என கூச்சலிட்டான். உடனிருந்தவர்கள் ஆம் ஆம் என்றனர். ஏனென்றால் அவர்கள் திரும்பிச்செல்ல விழைந்தனர். சிந்து பலியன்னம் கொள்ளாது அவர்கள் திரும்ப முடியாது. அவன் சொன்னது பொய் என நான் அறிந்திருந்தேன். ஆனால் நானும் பேசாமல் திரும்பி வந்தேன். அவன் அவள் மைந்தன். பொய்யை நன்கறிந்தவன். அவளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அன்னை அவள் பெயரை சொல்லவே விரும்புவதில்லை. அரசி காமிகை.” சம்வகை அவளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. “இல்லை, நான் கேள்விப்பட்டதில்லை” என்றாள்.

“மல்லநாட்டிலிருந்து எந்தை கவர்ந்துகொண்டுவந்த எட்டாவது அரசி. மல்லநாட்டரசனின் ஆறாவது அரசியின் பன்னிரு மகள்களில் இளையவள். எந்தையைவிட முப்பதாண்டுகள் குறைந்த அகவை கொண்டவள். அவளுக்கு அங்கே அரசிநிலையே இருக்கவில்லை. ஆனால் இங்கே அவள் போருக்கு முந்தைய புருஷமேத வேள்வியில் அரசியென எந்தைக்கு நிகராக அமர்ந்தாள். காசியப கிருசரின் நாவால் அரசி என அழைக்கப்பட்டமையால் அவள் அரசியென்றானாள்.

அவள் சிந்துநாட்டுக்குத் திரும்பியதும் தனக்கென கோலும் கொடியும் கொண்டாள். தனி அரண்மனையை உருவாக்கிக்கொண்டாள். அன்னைக்கு நிகராக அரசுவிழவுகளில் அவையமர்ந்தாள். அன்னைக்கு மாற்றாக எங்கும் தன்னை முன்வைத்துக்கொண்டாள். இன்று அவள் தன் மைந்தன் சுகோத்ரனை அரசனாக்க வேண்டும் என்று வஜ்ரபாகுவுடன் இணைந்துகொண்டிருக்கிறாள். அவளுக்கு அவருடன் காமஉறவு உள்ளது என்பதும் எவரும் அறியாதது அல்ல.”

சம்வகை பெருமூச்சுவிட்டாள். “அன்னையின் இன்றைய உணர்ச்சிகளெல்லாம் ஒரே ஒரு பொருள்கொண்டவை. அதாவது பெண்கவரும் நாட்டம் கொண்டவராகிய எந்தை இனி எந்தப் பெண்ணையும் கவரப்போவதில்லை என்பதனால் எழுந்தவை” என்று சொல்லி சுரதன் வெடித்து நகைத்தான். “அவர் கவர்ந்து வந்து அரசியராக்கியவர் எண்மர். கவர்ந்தவர்கள் நூற்றுக்கும் மேலானவர்கள். அன்னை அவரை வெறுத்தது அதனால்தான். ஆனால் இன்று அவருடைய சாவுக்குப் பின் அவரைப்பற்றிய இனிய வடிவொன்றை உருவாக்கிக்கொள்ள முயல்கிறார். அது நன்று. அவ்வாறு ஒன்று இல்லையேல் அவரால் வாழமுடியாது. இனி வாழும்காலமெல்லாம் அவர் ஜயத்ரதனின் கைம்பெண் அல்லவா? வாழும்காலத்தைய கணவரைவிட இறந்த கணவர்கள் பெண்களுக்கு மேலும் சுமையென்றாகிறார்கள். ஓயாது உடனிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்கள் எத்தனை கொடியவராயினும் கீழோராயினும் மறைந்த கணவர்களை தூய்மைப்படுத்தி உயர்த்திக்கொள்கிறார்கள்.”

சம்வகை சலிப்புற்றாள். பித்தெழுந்த உள்ளம் எங்கும் நிலைகொள்ளாதது. அதன் அலைவை பித்திலாத உள்ளத்தால்

பின்தொடர முடியாது. அனைத்தையும் சற்றேனும் ஒழுங்கமைத்துக்கொள்ளாமல் பித்திலா உள்ளங்கள் செயல்பட இயல்வதில்லை. எதையும் கேட்கலாகாது, கடந்துவிடவேண்டும் என எண்ணினாலும் அவள் கேட்டுவிட்டாள். "நீங்கள் உங்கள் தந்தையை தீயவர் என உணர்கிறீர்களா?" அவன் அதற்கும் நகைத்தான். "ஆம், ஐயமென்ன? அவர் தீயவர். தீமையே அவருடைய ஆற்றல். அதையே அவர் எனக்கு விட்டுச்சென்றிருக்கிறார். அவருக்கு அவர் தந்தை விட்டுச்சென்ற தீமை அது. ஒரு மாபெரும் படைக்கலம்."

"அறிந்திருப்பீர்கள், என் மூதாதை பிருஹத்காயர் தன் தமையனை கொன்றவர். தன் கையால். அந்தக் கையால் அவர் என் தந்தையை தொட்டதில்லை. முதல்முறையாக தொட்டார், அக்கணமே தலை சிதறி உயிர்விட்டார். தொட்டதை அவர் அறிந்தாரா என்றே ஐயம்தான்." அவன் அவளை மேலும் அணுகி அவள்மேல் விழிநாட்டி நின்று சொன்னான். "எந்தை என்னையும் தொட்டதே இல்லை. ஒருமுறைகூட. சடங்குகளின்போதுகூட. அவர் தன் தந்தையின் தொடுகையை அறியாதவர். ஆகவே என்னைத் தொட அவர் அஞ்சினார். அவரிடம் நிமித்திகர் சொல்லியிருந்தனர். அவருடைய தந்தை அவரை தொடாமையால் அவர் என்னையும் தொடலாகாது என்று. எனக்கு மைந்தர்கள் பிறந்தால் நானும் தொடமாட்டேன். தொடவேண்டுமென்ற விழைவை இதோ இப்படி இந்தக் கையில் தேக்கி வைத்திருப்பேன்."

அவன் தன் கையைத் தூக்கி காட்டினான். "எந்தையும் பேசும்போது இப்படி கையைத் தூக்கி காட்டுவதை நான் கண்டிருக்கிறேன். அவருடைய தந்தையும் அவ்வாறே செய்வார் என்று அறிந்திருக்கிறேன். இந்தக் கை எங்கள் குடியின்

படைக்கலம். எங்கள் நஞ்சனைத்தையும் இங்கே திரட்டி வைத்திருக்கிறோம். நாக நா என. தேளின் கொடுக்கு என. முதலை வால் என. கழுகின் அலகென.” அவள் மெல்ல தன்னை முழுமையாக பின்னிழுத்துக்கொண்டாள். அங்கிருந்து சென்றுவிடவேண்டும் என உளம்கூட்டினாள். அவன் மேலும் உரத்த குரலில் சொன்னான். “எந்தை இறப்பதற்கு முன் என் கனவில் வருவார். என்னை தொடாமல் அகன்று நின்று பேசிக்கொண்டிருப்பார். இறந்த பின் நேரில் வரலானார். இப்போதும் தொடுவதில்லை. நான் ஒரே ஒருமுறை அவரை தொட முயன்றேன். நீர்ப்பாவைபோல கலைந்து மறைந்தார்.”

“முன்பு அவர் என்னிடம் ஓரிரு சொற்கள் பேசியிருக்கிறார். இப்போது அவர் அதையும் பேசுவதில்லை. விழிச்சொற்கள் மட்டுமே. ஆனால் அவரை நான் நன்கறிவேன். மிகமிக அணுக்கமாக அறிவேன். அவரளவுக்கே அவரை அறிவேன். ஏனென்றால் அவரே நான். இல்லை, அவருடைய தந்தையும் நானே. அவர் பெண்கவர்ந்தார். வஞ்சங்கள் இழைத்தார். சிறுமைகளில் திளைத்தார். ஏனென்றால் அவர் அதிலேயே மெய்யான இன்பத்தை கண்டடைந்தார். தீமை நோக்கி செல்வதில் ஒரு பேரின்பம் உள்ளது. அது எல்லை மீறுதலின் இன்பம். நம் வாழ்க்கையின் எல்லா சலிப்புகளையும் போக்கிவிடுகிறது. ஒவ்வொரு கணத்தையும் புத்துணர்வுகொள்ளச் செய்கிறது.”

“தான் தீயவன் என பிறரால் கருதப்படவேண்டும் என்றும் தீயோர் விழைகிறார்கள். ஏனென்றால் அது ஆற்றலை அளிக்கிறது. நிமிர்வை உருவாக்குகிறது. எந்தை அதை விரும்பினார். தன் தந்தையிடம் அச்செய்திகள் சென்று சேர்ந்தபடியே இருக்கவேண்டும் என விரும்பினார்.

மூதாதையான பிருஹத்காயர் சிந்துவுக்கு அப்பால் சப்ததளம் என்னும் ஆற்றங்கரைக் காட்டில் தங்கி தவமியற்றினார். அங்கிருந்து ஒவ்வொன்றையும் அறிந்துகொண்டிருந்தார். பின்னர் அங்கிருந்து அவர் கடந்துசென்றார். எங்கிருக்கிறார் என எவரும் அறியவில்லை." அவன் பெருமூச்சுவிட்டான். "அமைச்சர் சுஃபூதர் என்னிடம் இருமுறை சொல்லியிருந்தார். அவர் எந்தையின் கனவுருவெனத் தோன்றுவதுண்டு என. அப்போது அவர் விழியற்றவராக இருப்பார் என."

சம்வகை "நான் வருகிறேன், எனக்கு பெரும்பணி எஞ்சியிருக்கிறது இன்று" என்றாள். "நில்" என அவன் அவள் தோளை பற்றினான். "நான் சொல்லவந்தது இதுவே. நான் நேற்று மாலை இந்த அரண்மனையின் இடைநாழியில் எந்தையை பார்த்தேன். இதோ இங்கே. நான் கடந்துசெல்கையில் நின்றுகொண்டிருந்தார்." சம்வகை நடுங்கும் குரலில் "யார்?" என்றாள். "என் தந்தை ஜயத்ரதன். மரவுரி அணிந்து கல்மாலையும் உருத்திரவிழிமணி குண்டலங்களும் சடைமுடிப்பரவலுமாக தூணருகே அவர் நின்றிருந்தார்." சம்வகை மூச்சொலித்தாள். "ஆனால் அவர் விழிகள் இரண்டும் தசை கொப்புளங்களாக இருந்தன" என்றான் சுரதன். சம்வகை சொல்லுறைந்த உதடுகளுடன் அவனை நோக்கினாள்.

"முதலில் அது உண்மையுரு என்று எண்ணி நான் அவரை நோக்கி ஓடப்போனேன். என்னுடன் வந்த பிற எவரும் அவரை காணவில்லை என்று அடுத்த கணமே உணர்ந்து விழிமயக்கென்று தெளிந்தேன். ஆனால் விழிமயக்கு என்று எண்ணும்போதும் அவ்விழிமயக்கு அப்படியே நீடிக்கும் விந்தையை என் உளம் தாங்கவில்லை. நான் அஞ்சி என் அறைக்குள் ஓடிவிட்டேன்" என்றான் சுரதன். அவன் கைகள்

அவள் தோளை உலுக்கின. “அவர் விழியற்றவராகிவிட்டாரா? ஏன்? என்னால் எண்ணக்கூடவில்லை. ஏன்?” அவன் விழிகள் சிவந்து அனல்கொண்டிருந்தன.

சம்வகை அவன் கையை மெல்ல விலக்கி “நான் விடைகொள்கிறேன், இளவரசே” என்று தலைவணங்கி நடந்தாள். “நில், நான் சொல்வதை முழுக்க கேள்” என்றான் சுரதன். “மூத்தவரே, நில்லுங்கள்” என அவனை சுகதன் பற்றிக்கொள்வதை அவள் தனக்குப் பின்னால் கேட்டாள்.

# களிற்றியானை நிரை - 44

### பகுதி ஐந்து : விரிசிறகு – 8

சம்வகை தன் மாளிகை நோக்கி செல்கையில் களைத்திருந்தாள். அவளுடைய நடையில் அது தெரியவில்லை. ஆனால் உள்ளத்தில் நிறைந்திருந்த சொற்கள் ஒவ்வொரு காலடியையும் அழுத்தம் கொள்ளச்செய்தன. அவள் அறைக்கு வெளியே ஒற்றர்கள் காத்து நின்றிருந்தனர். அவள் உள்ளே சென்று அமர்ந்து கவசங்களை கழற்றிக்கொண்டாள். முழுமையாக எல்லா கவசங்களையும் அவள் கழற்றுவதில்லை. இயல்பாக அமர்வதற்குரிய அளவிலேயே அவள் கவசங்களை கழற்றுவது வழக்கம். பீடத்தில் அமர்ந்து ஒவ்வொரு ஒற்றனையாக உள்ளே அழைத்தாள். அவர்கள் கூறுவனவற்றை அரைவிழி மூடி கேட்டுக்கொண்டிருந்தாள்.

திரௌபதியின் கலம் அணுகிக்கொண்டிருப்பதை ஒற்றன் சொன்னான். மாலையிலேயே அவள் கங்கைக்கரைக்கு

வந்துவிடுவாள். அங்கே ஓய்வெடுத்த பின் முற்புலரியில் கிளம்பி பொழுதெழுவதற்குள் அஸ்தினபுரிக்கு வருவாள். வரவேற்பு ஏற்பாடுகளைப் பற்றிய செய்திகள். காவல் ஏற்பாடுகளைப் பற்றிய செய்திகள். ஒரு செய்தி அவளுக்கு சற்றே நெருடல் ஏற்படுத்த விழிதிறந்து புருவம் சுளித்தாள். ஒற்றன் "ஆம் தலைவி, நேற்று மாலையே ஏழு சார்வாகர்கள் எல்லைக்குள் நுழைந்திருக்கிறார்கள்" என்றான். "நகரில் அவர்கள் நுழைவதற்கு ஒப்புதல் இல்லை. அவர்கள் விழவுக்காலங்களில் மட்டுமே நகர்புக முடியும்." அவள் சார்வாகர்களைப்பற்றி தனக்குத் தெரிந்த செய்திகளை நினைவிலிருந்து கோத்துக்கொள்ள முனைந்தாள்.

"அவர்கள் கடுநோன்பு கொண்டவர்கள். முழு விலக்க நெறி பேணுபவர்கள். பொதுவாக நகர்களுக்குள் நுழைவதில்லை" என்றான் ஒற்றன். "நாம் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும்? அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பதென்ன?" என்றாள் சம்வகை. "ஏதுமில்லை. அவர்கள் பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை. உணவைக்கூட இரப்பதில்லை. அவர்களுக்கு நாம் செய்யக்கூடுவன ஏதுமில்லை." அவள் சில கணங்கள் எண்ணம்சூழ்ந்துவிட்டு "அவர்கள் மாற்றுருக் கொண்ட ஒற்றர்களாக இருக்கக்கூடுமா?" என்றாள். "தலைவி அவர்களை நேரில் பார்த்திருக்கவில்லை என நினைக்கிறேன். பார்த்தவர்கள் அறிவார், அவர்களின் விழிகளை பிறர் நடிக்கவியலாது" என்றான் ஒற்றன்.

"அவர்களை நோக்கிலேயே வைத்திருங்கள். அவர்கள் இருக்குமிடம் எப்போதும் நமக்கு தெரிந்திருக்கவேண்டும். அரசி நகர்புகுவதற்கும் அவர்கள் வந்திருப்பதற்கும் ஏதோ உறவுள்ளது" என்றாள் சம்வகை. "ஆம், தலைவி. முன்னரும்

சிலமுறை அரசி நகர்புகும் தருணங்களில் அவர்களும் நகருக்குள் வந்திருக்கிறார்கள்” என்றான் ஒற்றன். “அவர்களை உள்ளே விடவேண்டியதில்லை” என்றாள். “அது நம்மால் இயலாது. நகருக்குள் அவர்களுக்குரிய கரவுப்பாதைகள் பலநூறு. நாகர்களுக்கும் அவர்களுக்குமான உறவே நாமறியாதது. அவர்கள் விரும்பிய இடத்தில் விரும்பும் வண்ணம் தோன்றுபவர்கள். இதோ இங்கே இக்கணம் நிலம்பிளந்து எழ விரும்பினால் அதையும் அவர்களால் இயற்றமுடியும்.” சம்வகை புன்னகைத்து “அதை எதிர்பார்ப்போம்” என்றபின் கைவீசி அவனை அனுப்பினாள்.

ஓலைகளாக வந்த ஒற்றர்களின் செய்திகளை அவள் படித்துகொண்டிருந்தபோது ஏவலன் வந்து தலைவணங்கி சுரேசர் அவளை பார்க்க வந்திருப்பதாக சொன்னான். பதறி எழுந்து “இங்கேயா?” என்றபடி சென்று கதவை திறந்தாள். சுரேசர் அவளை நோக்கி புன்னகைத்து “சில செய்திகள் சொல்ல வேண்டியுள்ளது” என்றார். சம்வகை “தாங்கள் ஆளனுப்பியிருக்கலாமே? நான் தங்களை வந்து சந்தித்திருக்க வேண்டும்... அதுவே முறை” என்றாள். சுரேசர் புன்னகைத்து “உள்ளே செல்வோம்” என்றார். “வருக!” என்று அவள் அவரை உள்ளே அழைத்துச் சென்றாள். “அமர்ந்தருள்க!” என்று அவள் சொல்ல சுரேசர் அமர்ந்தார்.

சம்வகை பதற்றத்துடன் “தாங்கள் இவ்வண்ணம் தேடி வருவது நிலைகுலைவை உருவாக்குகிறது. தங்களை வந்து சந்திக்க வேண்டியவள் நான்” என்றாள். “இல்லை. இப்போது நீங்கள் அஸ்தினபுரியின் தலைமைப் படைப்பொறுப்பில் இருக்கிறீர்கள். அரசருக்கு அடுத்த நிலை இங்கு அதுதான். முன்பு அரசக் குருதியுடையவர்கள் மட்டுமே அமைந்த இடம். அந்தணர்கள்

எந்நிலையிலும் படைத்தலைமைக்கு கட்டுப்பட்டவர்கள். நான் அரசருக்கு மதிப்பளிக்கவேண்டும். உங்களுக்கும் அந்த மதிப்பை அளித்தே ஆகவேண்டும்” என்றார்.

“இந்த இடம் தங்களால் அமைந்தது” என்று சம்வகை சொன்னாள். “அது அரசருக்கு நலம்பயப்பது. அவருக்கு எது உகந்ததோ அதை கூறுவது என் பொறுப்பு என்பதனால் அமைந்தது. அப்பொறுப்பை நான் ஏற்பேன், ஆனால் அதன் பொருட்டு தருக்க வேண்டியதில்லை என்றும் சொல்லிக்கொள்வேன்” என்று புன்னகைத்து “அமர்க, அந்தணர்கள் எப்பொழுதும் குமுகத்திலும் அரசிலும் அமைந்த இடங்களையும் நெறிகளையும் முற்றேற்பவர்கள். நாங்கள் இந்த அமைப்பை அமைத்துக் காப்பவரகள். இந்த அமைப்பின் ஒவ்வொன்றும் அதற்குரிய மதிப்புகளால், சடங்குகளால், நம்பிக்கைகளால் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தவர்கள். ஆகவே நாங்கள் அவற்றில் எந்த மாறுதலையும் உருவாக்குவதில்லை” என்றார்.

“அமைச்சனாகிய நான் அஸ்தினபுரியின் ஏழு முதன்மைக் குடிகளுக்கும் அமைச்சன் என்றே நின்றிருக்க வேண்டியவன். ஒருபோதும் அந்நிலையை கடப்பதில்லை. ஆனால் அந்தணன் என்ற நிலையில் வேதச்சொல் புரப்பவன் என்னும் பொறுப்பே என்னுடையது. அந்நிலையில் இங்கிருக்கும் பிற அனைவருக்கும் மேலான இடம் எனக்கு உண்டு. அந்த இடத்தை அஞ்சியோ தன்னலம் கருதியோ துறப்பதுமில்லை” என்றார் சுரேசர். சம்வகை “நான் இன்னும் இந்த நிலைக்குள் பொருந்தவில்லை, அமைச்சரே” என்றாள். சுரேசர் “அது மிக எளிது. பிறர் விழிகளில் இருந்து அது உங்களுக்கு வந்து

சேரும். பின்னர் உங்கள் உடல்மொழியிலிருந்து பிற விழிகளை சென்றடையும்” என்றார்.

“ஒவ்வொருவரும் தாங்கள் தலைக்கொள்ளும் பொறுப்புகளை அது அளிக்கும் இன்பத்தால் உணர்வதில்லை, துன்பத்தால்தான் உணர்கிறார்கள். இன்பத்தை துறக்கலாம், துன்பத்தை எவரும் துறக்க இயலாது. இன்பத்தைவிட பலமடங்கு கூரியது துன்பம். இன்பம் நம்மை மாற்றுவதைவிட துன்பம் மிக எளிதில் மாற்றிவிடுகிறது. இன்னும் ஓரிரு நாட்களிலேயே அஸ்தினபுரியின் காவலர்தலைவியாக நீங்கள் இருந்ததை மறந்துவிடுவீர்கள். காவலர்தலைவியானதும் இங்கே ஒரு காவலராகவும் அதற்கு முன் எளிய குடிப்பெண்ணாகவும் இருந்ததை முற்றாக மறந்துவிட்டதைப்போல” என்றார் சுரேசர்.

சம்வகை படபடப்பு நீங்காதவளாக புன்னகைத்தாள். சுரேசர் “இந்திரப்பிரஸ்தத்தின் அரசி நாளை புலரியில் நகர்புகவிருக்கிறார். இன்று இங்கு அரசகுடிப் பெண்மணி என்று இருப்பவர் துச்சளை மட்டுமே. துச்சளை குடியின் மகள் என பேரரசி திரௌபதியை அரண்மனைமுற்றத்தில் நின்று எதிரேற்க முடியுமா என்று அவரிடம் உசாவ வேண்டும். அதை நானே செய்வதே முறை. ஆனால் அவர்கள் உங்களுக்கு அணுக்கமானவர்கள் என்ற முறையிலும் பெண்ணுக்குப் பெண் என்ற முறையிலும் நீங்கள் அதை உசாவிச் சொன்னால் நன்றென்று தோன்றுகிறது” என்றார்.

சம்வகை “அதை நான் உசாவுகிறேன். ஆனால்...” என்றாள். சுரேசர் “கூறுக!” என்றார். “தன் உடன்பிறந்தாரின் குருதி சூடிய குழல் கண்டு சிந்துநாட்டு அரசி என்ன எண்ணுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை” என்று சம்வகை சொன்னாள். சுரேசர் “ஆனால் அவருக்கு ஒரு கோரிக்கை இருக்கிறதல்லவா?” என்று

கேட்டார். “ஆம்” என்றாள் சம்வகை. “அதை நான் உணர்ந்துவிட்டேன். ஆனால் இன்னமும் அரசரிடம் உரைக்கவில்லை. அதை உரைப்பதற்கான தருணம் வருமென்று எதிர்பார்த்திருக்கிறேன்.” சம்வகை “ஆனால், அதற்குமுன் நாம் எண்ணவேண்டிய சில உள்ளன” என்றாள்.

சற்றே விழிமாற சுரேசர் “அதை நாம் பேசுவோம். ஆனால் சிந்துநாட்டு அரசி அஸ்தினபுரியின் பேரரசியை அரண்மனை முற்றத்தில் எதிர்கொண்ட பிறகே அத்தருணம் வருமென்று எண்ணுகிறேன்” என்றார். அக்கூர்மை சம்வகையை அஞ்ச வைத்தது. “ஆம், அதையும் நான் உணர்த்திவிடுகிறேன்” என்று முனகினாள். “இன்று நகர் முற்றொருங்கிவிட்டது. கோட்டைமுகப்பின் நூற்றெட்டு அன்னையர் ஆலயங்களில் நேற்று மாலையே அனைத்துப் பணிகளும் முடிந்துவிட்டன. நாளை புலரிக்கு முன் அவை அனைத்திலும் முதன்மைப் பூசனை நடந்து தெய்வங்கள் விழியேற வேண்டும். பேரரசி திரௌபதி நகர்புகும்போது நூற்றெட்டு அன்னையரும் கூடி அவர்களை எதிரேற்க வேண்டும்” என்றார் சுரேசர்.

“நகர் முகப்பில் படைத்தலைவரான நீங்கள் சென்று அரசியை எதிர்கொள்ளலாம். அரண்மனைமுகப்பில் துச்சளையும் நானும் வரவேற்போம். அன்று முழுதும் அவையில் அரசி அமரவேண்டும். தேவயானியின் மணிமுடி இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து வருகிறது. அரசி அதை அணிந்து அரியணையமரவேண்டும். இங்கே அரசியின் கோல் நிலைகொள்ளவேண்டுமென்றால் அது இன்றியமையாதது” என்றார் சுரேசர். “அத்துடன் இங்கே குடியவை என ஒன்று மீண்டும் வகுக்கப்படவேண்டும்” என்று சுரேசர் தொடர்ந்தார்.

“உண்மையில் குடியவைக்கு முடியரசில் பெரிய இடமென ஏதும் இல்லை. அத்துடன் இக்குடிகள் தொல்வேர் கொண்டவர்கள் அல்ல என்பதனால் இவர்களால் ஆகக்கூடுவன ஏதுமில்லை. ஆனாலும் குடியவை தேவை. அரசு எடுக்கும் முடிவுகளை குடிகள் தாங்களே எடுத்துக்கொண்ட முடிவுகள் என எண்ணவேண்டும் என்றால் அவை குடியவை ஒப்புதலை பெற்றாகவேண்டும். குடிகளுக்கு எவ்வகையிலேனும் ஒவ்வாமை இருக்குமென்றால் குடியவைத் தலைவர்கள் அதை தங்கள் முடிவே என எண்ணி சொல்லிப் புரியவைப்பார்கள். அடக்கி ஏற்கவும் செய்வார்கள்.”

“குடியவைக்குரிய நெறிகளை சற்றுமுன்னர்தான் அறுதி செய்து எழுதி அரசருக்கு அறிவித்திருக்கிறேன். இன்றே ஆணையாகிவிடும்” என்று சுரேசர் சொன்னார். “இங்கு குடியேறிய குடிகளை அவர்களின் பொதுஇயல்புகளைக் கொண்டு பதினெட்டு குலங்களாக தொகுத்திருக்கிறோம். பூசகர், மறவர், வணிகர், கைவினைஞர், உழவர், காவலர், ஆயர், பாணர் என எட்டு பெரும் பிரிவுகள். அவர்களால் ஆனது எண்பேராயம். இங்கு குடியேறியிருக்கும் அசுரர்கள், அரக்கர்கள், நிஷாதர்கள், கிராதர்கள், தொழும்பர் ஆகியோரை ஐந்து தனி குடிகளாக ஆக்கியிருக்கிறோம். குகர்கள், மீனவர்கள், நாடோடிக்குடியினர், சுடலைகாப்போர், குறிசொல்லும் நாகர்கள் என புறம்பியக் குடியினர் ஐவர். இந்தப் பதினெண் குடிகளுக்கும் தலைமைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஒவ்வொருவருக்கும் அவர்கள் குடிகளுக்குரிய குடியடையாளங்களும் கோல்முத்திரைகளும் அளிக்கப்பட்டுவிட்டன.”

“அத்தனை விரைவாகவா?” என்று சம்வகை கேட்டாள். “அது மிக எளிது. ஏற்கெனவே அவர்கள் எவ்வண்ணம் தங்களை

பிரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து அதை ஏற்றுக்கொள்வதையே நாம் செய்யமுடியும். புதிய பிரிவினைகளை உருவாக்க முடியாது, அவை நிலைகொள்வதில்லை. ஆகவே எதையும் எண்ணி ஆராய்ந்து செய்யவேண்டியதில்லை” என்றார் சுரேசர். “அஸ்தினபுரியின் வடக்குக் கோட்டை மேல் ஏறி நின்று கீழுள்ள திரளை பார்த்தேன். இப்பார்வையுடன் நோக்கியபோது கண்ணுக்குத் தென்படும் மக்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக பிரிந்திருப்பதையே கண்டேன். தனிமானுடரில் உள்ளம் நேரடியாக வெளிப்படுவதில்லை. ஆனால் திரள் அப்படியே அதன் அகத்தின் விழிகாண் தோற்றம்.”

“அப்படி எத்தனை குழுக்கள் இருக்கின்றன என்று ஒற்றர்களிடம் எண்ணி எடுக்கச் சொன்னேன். நூற்றறுபத்தாறு குழுக்கள். அக்குழுக்களைத் தொகுத்து இப்பதினெண்குழுக்களை அமைத்தேன். ஏற்கெனவே அவர்களுக்கு கொடிக்குறிகளும் குடிமுத்திரைகளும் இருக்கின்றன. அவற்றையே அவர்களின் அரச அடையாளமாக கொண்டேன். ஒவ்வொரு குடியிலும் எவர் பொதுவாக சொல்நிலைகொள்ளும் முதியவராக இருக்கிறாரோ அவரையே குடித்தலைவராக அமைத்தேன்” என சுரேசர் புன்னகைத்தார். “சில குடிகளில் பெண்டிர் குடித்தலைவராக இருக்கக்கூடுமே?” என்று சம்வகை கேட்டாள். “இல்லை, இங்கு வந்தவர்கள் அனைவருமே தந்தை வழியினர். தாய்வழியினர் இந்திரப்பிரஸ்தத்திற்கே சென்றுள்ளனர்” என்றார் சுரேசர்.

“அதாவது பாரதவர்ஷத்தின் இந்தக் குல அடுக்குமுறைகளை அந்தணர்களாகிய நாங்களே உருவாக்கி நிலைநிறுத்துகிறோம். ஆனால் அவற்றை வெறுமையிலிருந்து உருவாக்குவதில்லை.

அவை ஏற்கெனவே உருவாகி கண்ணுக்குத் தெரியும்படி நிலைகொள்கின்றன. நாங்கள் செய்வது தொகுப்பதும் வகுப்பதும் பெயரிடுவதும்தான். எங்கள் பகுப்பு அவர்களுக்கு உகந்ததாக இருப்பதனால்தான் அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். மேல் கீழ் என அடுக்கு முறை உருவாகாமல் அரசு உருவாவதில்லை. அரசனின் கோல் செல்லுபடியாவதும் இல்லை” என்றார் சுரேசர். “ஓர் அடுக்கமைப்பை அக்குடிகளே ஏற்கவேண்டும். அது என்றுமுள்ளது என்று நம்பவேண்டும். அது மாறுமென்றால் அழிவு வரும் என கருதவேண்டும். அதுவே அரசுகளின் அடித்தளம்.”

“நாளை மாலை இங்கு குடியவை கூடி அதில் அரசியும் அரசரும் முடி சூடி அமர்ந்துவிட்டார்கள் எனில் இந்நகரில் அரசு ஒன்று உருவாகிவிட்டதை பார்க்கலாம். நாளைமறுநாள் வெறும் முரசொலியினூடாகவே இக்குடிகள் அனைவரையும் ஆளலாம். இவர்களை சதுரங்கக் காய்களென இங்கு அரண்மனையிலிருந்தே நகர்த்திவைத்து விளையாடலாம்” என்று சுரேசர் சொன்னார். “இவை இங்கே நிகழ்வதை நான் அறியவே இல்லை” என்று சம்வகை சொன்னாள். “இவை படைத்தலைமைக்கு தெரியவேண்டியவை அல்ல. அமைச்சு சார்ந்தவை. இம்முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் எக்குலம் எங்கு எவ்வண்ணம் இருக்கிறது என்ற செய்தியை மட்டும் படைத்தலைமை அறிந்தால் போதும்” என்று புன்னகைத்தபடி சுரேசர் எழுந்தார்.

விடைகொள்ளும் முகமாக சற்றே தலைதாழ்த்தியபின் “துச்சளையிடம் இன்றே இதைப்பற்றி பேசிவிடுங்கள்” என்றார். “ஆணை” என்றாள் சம்வகை. “ஆணை என அல்ல,

அவ்வண்ணமே என்று கூற வேண்டும். நீங்கள் இப்போது படைத்தலைவி” என்று சொல்லி புன்னகைத்து சுரேசர் வெளியே சென்றார். சம்வகை எழுந்து உடன் சென்றபடி “ஆனால் அம்மைந்தர்களைப்பற்றி நான் சில சொல்லவேண்டும்” என்றாள். “அதை சிந்துநாட்டு அரசி குடியின்மகள் என நின்று பேரரசியை வரவேற்றபின் நாம் பேசுவோம்” என்றபடி சுரேசர் நடந்தார்.

சுரேசர் சென்ற பின்னர் சம்வகை திரும்பிவந்து அமர்ந்து சற்றுநேரம் எண்ணம்சூழ்ந்தாள். ஒன்று தொட்டு ஒன்று என கருதிக்கருதிச் சென்று பின் முடிவெடுத்தாள். ஏவலரை அழைத்து அரண்மனை காவல் பொறுப்பிலிருந்த சுஷமை எனும் காவலர்தலைவியை வரச்சொன்னாள். அவள் வட்டமான கரிய முகமும் சிறிய உதடுகளும் மின்னும் சிறு விழிகளும் உருண்ட பேருடலும் கொண்ட இளம்பெண். காவலர்தலைவியாக அவளை பணிக்கு அமர்த்தியது சம்வகைதான்.

அஸ்தினபுரியின் அரண்மனை முதிய காவற்பெண்டான பிரத்யூஷையின் கையில் இருந்தது. அவள் அரண்மனையை ஆட்சி செய்யும்போதுகூட அது ஒரு மூத்த சேடிப்பெண்ணின் ஆட்சியாகவே இருந்தது. ஒவ்வொரு முறை அரண்மனைக்குள் வரும்போதும் அங்கு ஓர் ஒவ்வாமையை சம்வகை உணர்ந்தாள். அது ஏன் என்பது அவளுக்கு நெடுநேரம் கழித்தே புரிந்தது. பிரத்யூஷை ஒவ்வொரு கணமும் ஓயாது ஓசையிட்டுக்கொண்டிருந்தாள். ஆணைகளை பிறப்பித்துக்கொண்டும், அவ்வாணையை மீறுபவர்களை வசைபாடிக்கொண்டும், அவ்வாணையை கண்காணிக்கும்பொருட்டு பிறரை ஏவிக்கொண்டும் இருந்தாள்.

ஆனால் அரண்மனையின் ஒவ்வொரு இடத்திலும் எதுவோ ஒன்று பிழையாகவும் இருந்தது.

பின்னர் தன் காவல்மேடையில் மூத்த காவல்பெண்டான காளியிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவள் குதிரைக்கொட்டிலில் ஏவற்பெண்டாக பணியாற்றிய நாட்களைப் பற்றி சொன்னாள். எந்நேரமும் தலைமைக் காவல்பெண்டு தன்னை வசைபாடிக்கொண்டிருப்பாள் என்றும், அதை அவள் பொருட்படுத்தியதே இல்லை என்றும் கூறினாள். ஏன் என்று சம்வகை கேட்டாள். "ஏனெனில் அச்சொற்கள் காதில் விழுந்துகொண்டே இருந்தன. அது செவிக்குள் விழும் ஓசையென எளிதில் பழகிவிடுகிறது" என்று அவள் சொன்னாள். "வசைபாடுவதற்கு அப்பால் தலைமைக் காவற்பெண்டு உங்களை தண்டிப்பதில்லையா?" என்றாள் சம்வகை. "வசைபாடுபவர்கள் எவரையும் தண்டிக்க முடியாது. வசைபாடுவதை ஒரு தண்டனையாகவே அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள்" என்று காளி சொன்னாள்.

அக்கணம் சம்வகையின் உள்ளத்தில் ஒன்று மின்னியது. வசைபாடுபவர்கள் சிறு பிழைகளை விரும்புகிறார்கள். அப்பிழைகளை சுட்டிக்காட்டுவதனூடாக தன்னை மேலே நிறுத்திக்கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். அப்பிழைகளை சுட்டி கீழுள்ளோரை வசைபாடுவதனூடாக தன் கோன்மை நிலைநிறுத்தப்படுவதாக எண்ணுகிறார்கள். ஆகவே பிழைபட்ட ஒரு நிர்வாக அமைப்பையே அவர்களால் உருவாக்க முடியும். ஏனென்றால் அப்பிழைகளினூடாகவே அவர்கள் ஆதிக்கம் பெறுகிறார்கள். பிழைகள் பெருகுந்தோறும் மேலும் ஆற்றல் கொள்கிறார்கள்.

அதன்பின் அரண்மனைக்கு வந்தபோது அவள் அங்கு நிகழ்வனவற்றை ஒருகணத்தில் புரிந்துகொண்டாள். தலைமைப் பொறுப்பு வகிப்பவள் பிற அனைவருக்கும் மேலான ஆற்றல் கொண்டவளாக இருக்கவேண்டும். அல்லது அனைவரும் ஏற்கும் குலப்பெருமை கொண்டவளாக. குலப்பெருமையோ தனித்திறனோ இல்லாத ஒருத்தி அவள் முதியவள் என்பதனால் மட்டும் தலைமை தாங்குவாள் எனில் உருவாகும் இடர் அது. அவள் மேல் எவருக்கும் உண்மையான மதிப்போ அச்சமோ இல்லை. முதுமை என்பது ஒரு பொய்யான ஏற்பையே உருவாக்குகிறது. முதுமை தன்னை பிறர் கேலி செய்ய இடம் கொடுக்கிறது. ஏளனம் செய்யப்படும் ஒன்று மெய்யாக அஞ்சப்படுவதில்லை. மதிக்கப்படுவதுமில்லை. கொள்ளப்படும் அச்சமும் மதிப்புமே ஆதிக்கமாக ஆகின்றன.

ஒருநாள் இரவு சம்வகை அரண்மனைக்கு வரும்போது இரவு காவல் இருந்தவள் சுஷமை. அவளைச் சுற்றி அறுபது காவல் பெண்டுகள் இருந்தனர். சம்வகை தன் புரவியை முற்றத்தில் செலுத்தியபோது சாளரத்தில் தோன்றிய சுஷமை சுட்டுவிரலை மட்டும் காட்டி கீழே நின்றிருந்த காவற்பெண்டுக்கு ஆணையிட்டாள். அக்காவல்பெண்டு பாய்ந்து வந்து சம்வகையின் புரவிக் கடிவாளத்தை பற்றிக்கொண்டு “தாங்கள் முகக்கவசத்தை கழற்றவேண்டும், காவலர்தலைவி” என்றாள். “நான் காவலர்தலைவி என்று தெரிகிறதே, பிறகென்ன?” என்று சம்வகை கேட்டாள்.

“தொலைவில் தங்கள் புரவி வரும்போதே ஓசை அது யாரென்று காட்டிவிட்டது. தாங்கள் கவசஉடை அணிந்திருந்தாலும் உடலசைவுகளில் தாங்கள் இருக்கிறீர்கள். ஆயினும் இது இரவு. அரண்மனைக்குள் நுழையும் எவரும்

தங்கள் முகத்தை காட்டியே ஆகவேண்டும் என்பது எங்கள் தலைவியின் ஆணை” என்று காவற்பெண்டு சொன்னாள். “உங்கள் தலைவி யார்?” என்று அவள் கேட்டாள். “சற்று முன் மேலே நின்று கைகாட்டியவர். இரவுப்பொழுதில் அவரே அரண்மனைக் காவலுக்குப் பொறுப்பு” என்றாள் காவற்பெண்டு.

“இவ்வாணையை அவள் கைகாட்டாமல் நிறைவேற்றமாட்டாயா?” என்றாள். “கைகாட்டாமலும் இவ்வாறே இதை நிறைவேற்றுவோம். ஆனால் இப்போது தங்களை நிறுத்தி கவசத்தைக் கழற்றும்படி நான் ஆணையிடவேண்டும். நீங்கள் சினமுறலாம். ஆகவே அச்செயலின் பொறுப்பை ஏற்க நான் சற்று தயங்கக் கூடும். ஆகவே அப்பொறுப்பை தானே ஏற்பதாகவே நீங்கள் பார்க்கும்படி கையை அங்கிருந்து காட்டினார் காவலர்தலைவி. அதை நீங்களும் பார்த்துவிட்டீர்கள். ஆகவே நான் துணிந்து இதை செய்யலாம். நீங்கள் என் மேல் சினம் கொள்ளமாட்டீர்கள். அச்சினத்தை காவலர்தலைவி தன் மேல் வாங்கிக்கொள்கிறார்” என்றாள் காவற்பெண்டு.

சம்வகை புன்னகைத்து “அத்தலைவியின் பெயர் என்ன?” என்றாள். “அவர் இளம்பெண்தான். உண்மையில் என்னைவிட ஏழு அகவை குறைந்தவர். அவர் பெயர் சுஷமை” என்றாள். “நல்ல பெயர். காவலருக்குத் தேவையானது அந்தப் பொறுமை” என்று சொல்லி சம்வகை அரண்மனைக்குள் சென்றாள். அங்கு துச்சளை வருவதற்கு உரிய அறை நன்கு ஒருக்கப்பட்டுள்ளதா என்பதை தானே நேரில் பார்த்தாள். திரும்பி வருகையில் சுஷமை வந்து தலைவணங்கினாள். “நீங்கள்தானா இங்கே காவல்தலைவி?” என்று அவள் கேட்டாள். “ஆம், இரவில்

இவ்வரண்மனை என் பொறுப்பில் இருக்கிறது” என்று அவள் சொன்னாள்.

சம்வகை “எல்லா இரவுகளுமா?” என்றாள். “ஆம், தலைவி. எல்லா இரவுகளிலும்” என்றாள். “ஏன்?” என்று அவள் கேட்டாள். அவள் சற்று தயங்கி “பகலில் முதுதலைவி இங்கு இருப்பார். இரவுகளில் அவர் இங்கு இருக்கமாட்டார். ஓய்வெடுக்க விழைவார். இரவுகளில் இளையோர் காவல் காக்கலாம் என்று நான்தான் சொன்னேன். அவ்வண்ணமே என் பொறுப்பில் இதை ஒப்படைத்திருக்கிறார்” என்றாள். “விழிப்புடன் இருக்கிறீர்கள். நன்று” என்று சொல்லி அவள் விடைபெற்றாள்.

சம்வகை அஸ்தினபுரியின் ஒன்பது படைகளின் தலைவியாக அமர்த்தப்பட்டபோது முதல் ஆணையாக சுஷமையை அரண்மனைக் காவல் பொறுப்புக்கு கொண்டுவந்தாள். சுதமை கோட்டைக் காவல் பொறுப்புக்கு உயர்த்தப்பட்டாள். அவர்களைவிட முதியவர்கள் முன் அப்பதவியேற்பை அவளே நிறைவேற்றி வைத்தாள். அரண்மனையின் பழைய கோட்டைத்தலைவி உரிய மதிப்புடன் ஓய்வுச்செல்வம் அளிக்கப்பட்டு விலக்கப்பட்டாள். அந்த விலக்கல் மதிப்புடன் இருந்தபோதும் அதிலிருந்த கூர்மை அனைவரையும் சென்றடைந்தது.

மறுநாள் காலை அரண்மனைக்குச் செல்லும்போது ஒவ்வொன்றும் மாறியிருப்பதை சம்வகை கண்டாள். முன்பு என்னென்ன பிழைகள் இருந்தன என்று அந்த மாற்றம் வழியாகவே தெரிந்தது. அரண்மனை முகப்பில் நின்றவர்கள் அனைவருமே கையில் நீண்ட வேல்களை வைத்திருந்தார்கள். அரண்மனை முகப்பிலிருந்த சாளரங்கள் அனைத்திலும் வில்லேந்தியவர்கள் நின்றிருந்தார்கள். அரண்மனையிலிருந்து

வாயில்கள் வழியாக வெளிவரும் வழிகளை மறித்து முன்பு நிறுத்தப்பட்டிருந்த தேர்களும் பல்லக்குகளும் விலக்கப்பட்டு அனைத்து வாயில்களிலிருந்தும் படைவீரர்கள் மிக விரைவில் வெளிவரவும் நுழையவும் வழியமைக்கப்பட்டிருந்தது.

அப்போதுதான் அதற்கு முந்தைய நிலையில் அரண்மனையை ஐம்பது பேர் கொண்ட படை எளிதில் வந்து கைப்பற்றிவிட்டிருக்க முடியும் என்பது தெரிந்தது. எத்தனை நொய்மையான ஒரு அமைப்புடன் அதுவரைம் அஸ்தினபுரி இருந்திருக்கிறது என்பதை அவள் புரிந்துகொண்டாள். எவரென்று அறியாத பெருந்திரள் அஸ்தினபுரிக்குள் நுரைத்து ததும்பிக்கொண்டிருக்கிறது. எந்த நாட்டு ஒற்றர்களும் கரவுப்படையினரும் அதற்குள் வந்திருக்கக் கூடும். அவர்களில் நூறுபேர் படைக்கலங்களுடன் ஒருங்கிணைந்து வந்தால் யுதிஷ்டிரனின் அரண்மனையைக் கைப்பற்றி யுதிஷ்டிரனை சிறைகொண்டு அந்நகரை தங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்திருக்க முடியும்.

கோட்டைக் காவலைப்பற்றி எண்ணியபோது அரண்மனைக் காவலை பொருட்படுத்தாமலிருந்தது தன் பிழை என்று சம்வகை உணர்ந்தாள். ஒன்பது காவல்படைகளையும் தன் பொறுப்பிலேயே மீண்டும் ஒருங்கிணைக்கலானாள். ஒன்பதில் ஏழு காவல் பொறுப்புகளுக்கு அவள் பெண்களையே நிறுத்தினாள். இரு காவல் பொறுப்புகள் ஆண்களுக்கு வழங்கப்பட்டன. அவர்கள் தென்னகத்திலிருந்தோ கிழக்கிலிருந்தோ வந்தவர்களாக அமைந்தனர். ஆரியவர்த்தத்தின் மையநிலத்திலிருந்து வந்த எவருக்கும் படைத்தலைமை பொறுப்பு அளிக்கப்படலாகாது என்றும், ஆனால் அவ்வாறு அளிக்கப்படவில்லை என்பது

படைவீரருக்குத் தெரியாமல் இருக்கவேண்டும் என்றும் அவள் உளம் இருத்தினாள்.

சுஷமை வந்து நின்றபோது அவள் முடிவு செய்துவிட்டிருந்தாள். அவளை அமரும்படி சொல்லிவிட்டு மேலும் சற்றுநேரம் எண்ணத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தாள். விழிகளைத் தூக்கி சுருக்கமாக “சிந்துநாட்டு இளவரசர்களை நோக்கில் நிறுத்துக! அவர்கள் அரண்மனையைவிட்டு வெளியே செல்கையில் துணை இருக்கவேண்டும். எந்நிலையிலும் அவர்கள் அரசர் யுதிஷ்டிரனை அணுகக்கூடாது” என்றாள். சுஷமை எந்த வியப்பையும் வினாவையும் எழுப்பாமல் “ஆணை!” என்றாள்.

# களிற்றியானை நிரை - 45

### பகுதி ஐந்து : விரிசிறகு – 9



சம்வகை நகரைச் சூழ்ந்திருக்கும் சிறுநகர்களை ஆளும் தலைவர்களை நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த சிற்றவை ஒன்றில் கூட்டி அவர்களின் பணிப்பொறுப்புகளை மீண்டும் உணர்த்தி, பிழைகளைக் கண்டறிந்து கடிந்து அறிவுறுத்திவிட்டு அஸ்தினபுரிக்கு மீண்டாள். அஸ்தினபுரியில் உருவாகி வந்த கலவைமொழியில் அவ்வுரையாடலை நிகழ்த்தி முடிக்கையில் அவளுக்குள் சொற்கள் ஒழிந்த சலிப்பு நிறைந்தது.

குடித்தலைவர்களுக்கு தங்கள் இடமென்ன என்பதில் இடறல் இருந்தது. சிலர் தங்களுக்கான கோன்மையை அரசு தொடர்ந்து

உருவாக்கித் தரவேண்டுமென எதிர்பார்த்தார்கள். அவள் நேரடியாகச் சொல்லாமல் ஒன்றை சொன்னாள். அவர்களுக்கான கோன்மைக்கு அடிப்படை அஸ்தினபுரியின் ஆட்சியே. ஆனால் அஸ்தினபுரியின் படைவல்லமை அதை நேரடியாக வந்து நிலைநாட்டக்கூடாது. அது குடிகள்மேல் அரசின் கொடுங்கோன்மையாக ஆகிவிடும். அரசு குறித்த அச்சமே அரசைவிட பெருவல்லமை கொண்டது. அந்த அச்சத்தை உருவாக்கி அதைக்கொண்டு தன் கோன்மையை நிலைநிறுத்தும் தலைவர்களே அவளுக்குத் தேவை.

அதை சிலர் உடனே புரிந்துகொண்டனர். ஒரு மூத்த தலைவர் “தண்டனைகள் அரிதாக நிகழ்கையிலேயே அரசு ஆளப்படுகிறது” என்றார். அவரை நோக்கி சம்வகை புன்னகை செய்தாள். ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அவள் என்ன சொல்கிறாள் என்பதில் தொடர்ச்சியாக குழப்பம் இருந்தது. அவர்களின் கோன்மை தொன்மை கொண்டதல்ல, எனவே ஐயமற ஏற்கப்பட்டதும் அல்ல. ஆனால் எவர் மூத்த தலைவரின் சொற்களை கேட்கச் செவிகொள்கிறார்கள் என அவள் நோக்கினாள். அவர்களையும் நீட்டித்தாள். மேலும் மேலும் தன் குடிகள்மேல் உளக்குறை சொல்லி அவர்களை அரசு வந்து தண்டிக்கவேண்டும் என கோரிய சிலரை குறித்துக்கொண்டாள். கிளம்பும்போது ஒற்றை ஆணையில் அவர்களை நிலைநீக்கம் செய்து அடையாளம் கண்ட பிறரை அக்குடியின் கோலை கொள்ளச் செய்தாள். “அரசுக்கு ஐந்துவிரல்களால் அளித்து ஒற்றைவிரலால் பெற்றுக்கொள்பவரே சிறந்த குடித்தலைவர்” என்று அவள் சொன்னபோது சிலருடைய விழிகள் மின்னின. அவர்கள் புரிந்துகொண்டுவிட்டனர் என அவள் உணர்ந்தாள்.

முதல் குடித்தலைவர் ”இங்கே முன்பு ஆட்சிசெய்த பேரரசர் துரியோதனன் பெருங்குடிகளை தண்டித்ததே இல்லை என்கிறார்கள். அவர்முன் வழக்குகள் சென்றதே இல்லை என்றும் சென்றால் தந்தையென கைவிரித்து அணைத்தும் தாதன் என தலைதொட்டு வாழ்த்தியும் அனைவரையும் பொறுத்துக்கொண்டார் என்றும் சூதர்கள் பாடினர்” என்றார். அவர் அதை வாய்தவறி சொல்லிவிட்டார். அதை உணர்ந்து நாக்கை அழுத்தி அமைதியடைந்தார். குடித்தலைவர்களின் முகங்கள் அச்சத்தைக் காட்டின. சம்வகை “ஆம், அவர் மாமன்னர் குருவின் வழிவந்தவர். அஸ்தினபுரியின் அரசர்கள் அனைவருமே அவ்வண்ணம் கோல்கொண்டிருந்தனர். அவருடைய அந்தக் கனிந்த செங்கோல் இன்னும் இங்கே திகழும்” என்றாள். அவர்கள் முகம் மலர்ந்தனர்.

அஸ்தினபுரிக்கு மீண்டபோது அவள் மிகவும் களைத்திருந்தாள். அரண்மனைக்குள் தன் அறைக்குச் சென்றபோது அவளுக்காக ஏவலரும் ஒற்றர்களும் காத்திருந்தனர். செய்திச்சுருக்கங்களைக் கேட்டு ஆணைகளை இட்டபின் பீடத்தில் அமர்ந்துகொண்டாள். இயல்படையும்பொருட்டு கால்களை நீட்டி எதிர்ச்சுவரில் இருந்த சிறிய கறையை பார்க்கலானாள். ஆட்சிப்பணியில் மூழ்கியவர்கள் அனைவரும் அவ்வாறு தங்களை இயல்படையச் செய்யும் வழிமுறை ஒன்றை பயின்றிருக்கிறார்கள் என அவள் கண்டிருந்தாள். சுரேசர் ஏதேனும் ஓலையை எடுத்து விந்தையாக சுருட்டி மடித்து நீட்டிக்கொண்டு தலைகவிழ்ந்து அமர்ந்திருப்பார். அல்லது நன்றாக மல்லாந்து மேலே அடுக்கப்பட்டவைபோல் தெரியும் உத்தரங்களை பார்த்துக்கொண்டிருப்பார். அவள் கண்கள் நோக்கின் கூர்மையாலேயே மங்கலடைந்தன. உள்ளம் மெல்ல அமைதிகொண்டது.

அவள் விந்தையானதோர் தனிமையை உணர்ந்தாள். அதுவரை அவ்வாறொன்றை அவள் உணர்ந்ததே இல்லை. எப்போதும் தன்னை நோக்கும் விழிகள், தன் குரலுக்கு கூரும் செவிகள், தன் ஆணைக்குக் காத்திருக்கும் திரள் சூழ்ந்திருப்பதாகவே அவள் எண்ணியிருந்தாள். இல்லத்தில் இருக்கையில் எப்போதும் அன்னையும் தந்தையும் தோழியரும் உடனிருந்தனர். என்றும் அவள் தானென எண்ண நேர்ந்ததே இல்லை. படைத்தலைவியென ஆனபின் பணிகள் பலமடங்கு பெருகிவிட்டிருந்தன. தனிச் சிற்றறைக்குள் அவள் அமர்ந்திருக்கையில்கூட அவளுடைய ஒவ்வொரு சொல்லுக்காகவும் வெளியே பல்லாயிரம்பேர் காத்திருந்தனர். காலையில் துயிலெழுகையில் அவள் மஞ்சத்தறைக்கு வெளியே ஒற்றர்களும் ஏவலர்களும் சொல்காத்து நின்றனர். அவர்களின் சொல்லுக்காக நகரமே காத்திருந்தது. நாளெல்லாம் அவளுக்கு சற்று பின்னால் எந்நேரமும் அவள் ஆணைக்காக ஏவலரும் ஒற்றரும் படைத்தலைவரும் வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு பணியின் இடைவெளியிலும் அவர்களை நினைவுகூர்ந்து நிறுத்தி ஆணைகளை இட்டு செய்திகளை செவிகூர்ந்து மீண்டும் உளச்செயல்பாட்டை தொடங்கினாள். அவள் விழித்திருக்கும் கணமெல்லாம் பணியாற்றிக்கொண்டிருந்தாள்.

இரவில் துயில்வதற்கு முன்பு வரை இறுதி ஆணைகளையும் அளித்துவிட்டு, ஆடைகளைக் கழற்றி, மஞ்சத்தில் படுத்து விழிகளுக்குமேல் தடித்த மரவுரியை போட்டுக்கொண்டு துயில்கொண்டாள். ஒவ்வொரு நாளும் தன் உள்ளத்திலிருந்து ஒவ்வொரு நிகழ்வாக அகற்றி, ஒவ்வொரு சொல்லாகக் கரைத்து, மெல்லமெல்ல வெறுமை கொண்டு, உளமழிந்து கண்துயில்வதற்கு நெடும்பொழுதாகியது. கனவுகளுக்குள்

அவள் பகல் முழுக்க ஆற்றியவற்றையே வேறெங்கோ வேறெவரோ ஆக இருந்து ஆற்றினாள். விந்தையான எதிரிகளை கண்டாள். அசுரர்கள், தேவர்கள், மண்மறைந்தோர். ஏதேதோ களங்களில் வாளெடுத்து போரிட்டாள். புரவிகளில் எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தாள். துரத்தினாள், துரத்தப்பட்டாள். மலை உச்சிகளில் இருந்து தொற்றி அடியாழங்களுக்கு இறங்கினாள். தொற்றி விளிம்புகளில் கைபற்றி முடிவிலாது ஏறிச்சென்றுகொண்டே இருந்தாள். விழிப்புகொண்டு இருளை உணர்ந்து மூச்செறிந்து நீர் அருந்தி மீண்டும் படுத்துக்கொண்டாள். விடியவில்லை என ஓசைகளில் இருந்து உணர்கையில், துயிலுக்கு இன்னும் பொழுதிருக்கிறது என அறிகையில் உள்ளம் தித்தித்தது.

ஒவ்வொரு நாளும் விழித்தெழுகையில் எஞ்சும் துயில் எடைகொண்டு அவள் மேல் அழுந்தியது. கைகால்கள் இரும்பாலானவையென மஞ்சத்தோடு அழுந்திப் படுத்திருந்தன. உள்ளம் விழிப்பு கொண்டபின் சற்று கழித்தே உடல் விழிப்பை அடைந்தது. உள்ளத்தால் உடலை உந்தி எழுப்ப வேண்டியிருந்தது. எழுந்தமர்ந்து தன்னிரு கைகளையும் பார்த்தபடி அமர்ந்திருக்கையில் முந்தைய நாள் துயில்வதற்கு முன் இறுதியாக எஞ்சிய சொல் வளர்ப்பு நாய் என காத்து நிற்பதை அவள் கண்டாள். அதிலிருந்து தொடங்கி அன்று முழுக்க மீண்டும் சொற்களின் துரத்தல்கள். அவள் அப்பணியை சலிப்பில்லாமலேயே இயற்றினாள். ஏனென்றால் அப்பணியினூடாகவே அவள் நிகழ்ந்தாள். அவை இல்லையென்றால் அவளும் இல்லையென்று ஆகிவிடுவாள். அப்பணிகள் அகன்றபின் அவளிடம் எஞ்சும் வெறுமையை அவள் அறிந்திருந்தாள். பணியில்லாமல் ஆன கணமே அது

வந்து அமர்ந்துவிடுமென அஞ்சினாள். ஆகவே பணிகளே அவளெனத் திகழ்ந்தாள்.

ஒருகணமும் ஓயாத அந்தப் பணியின் அலைகளில் இருந்து இத்தகைய தனிமை எவ்வாறு திரண்டெழ முடியும் என்று அவள் அப்போது வியந்தாள். ஆனால் இது தனக்கு மட்டும் அல்ல என்றும் தோன்றியது. சுரேசரோ யுதிஷ்டிரனோ இத்தனிமையை அடையாமல் இருக்க இயலாது. கருவறையில் இருக்கும் தெய்வங்கள் முற்றாக தனிமையில் அமர்ந்திருக்கின்றன. அத்தனிமையை தன்னுள் எடைமிக்க இரும்பு உருளையென உணர்ந்தாள். அனைத்து அசைவுகளையும் அதை சுமந்துகொண்டு நிகழ்த்த வேண்டியிருந்தது. அது நிலம் படிய அழுந்த அந்தியில் துயில வேண்டியிருந்தது. ஒவ்வொரு சொல்லிலும் அதன் எடை ஏறி அமர்ந்தது. எடையைக் கையாள உகந்த வழி அதை வீசிவீசி கைமாற்றிக்கொண்டே இருப்பது. அதையே பணி என்று சொல்கிறேன் போலும்.

பொறுப்புகளுக்கேற்ப தன் மொழியும் உடல் அசைவுகளும் மாறிக்கொண்டிருந்ததை உணர்ந்தாள். ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி நிறுத்தி தாழ்ந்த குரலில் அவள் சொல்லலானாள். உடலசைவுகள் மேலும் மேலும் விசையழிந்தன. சொல்லுக்கு மிக முன்னால் சென்று சொல் வந்து அணைவதற்காக உள்ளம் காத்து நின்றது. சொல் திகழும் போது மிக மேலே நின்று அனைத்தையும் ஆழத்தில் நோக்கிக்கொண்டிருந்தது. அனைத்துக்கும் அப்பால் மாறாதிருந்த ஒரு சலிப்பு அத்தனிமையிலிருந்து எழுந்தது. செயல்களை ஆற்றும் போது ஒவ்வொரு செயலும் அளித்த உளமகிழ்வை முற்றாக இழந்துவிட்டிருந்தாள். சுட்டுவிரல்களை

அசைத்து பேரலைகளை எழுப்பும் இடத்தில் இருக்கையில் பேரலை என்று உணர்வதெல்லாம் இவ்வாழியின் சிறு குமிழிகளே என்று உணர்வது அது. நிகழ்வன அனைத்தும் நிகழாமைக்கு நிகர் என்று உணர்வது. இவை என்றும் இவ்வண்ணமே இருக்கும் என்றும், வந்து செல்பவர்களால் இவை எவ்வகையிலும் மாற்றப்படுவதில்லை என்றும் உணர்வது. இருத்தலும் இன்மையும் நிகரே என்று உணர்வது. அதை உணராது ஆட்சியாளர்கள் எவரும் இருக்க முடியுமா என்ன?

பிறகு ஏன் இதில் மகிழ்கிறார்கள்? இதை நோக்கி வரும்பொருட்டு ஏன் அனைத்தையும் இழக்கிறார்கள்? ஏன் இதில் அமர்ந்து தான் நான் என்று தருக்குகிறார்கள்? இன்னும் இன்னும் என்று ஏன் எழுகிறார்கள். இறைவடிவு நானே என்று எவ்வண்ணம் மயங்குகிறார்கள்? இச்சலிப்பிற்கும் தனிமைக்கும் அப்பால் பிறிதொன்று உள்ளது. இக்கணத்திலேனும் நானே தெய்வம் என்று நினைக்கும் அத்தருணம். ஒவ்வொரு மானுடரும் தாங்கள் தெய்வம் என்று ஆக விரும்புகிறார்கள். தெய்வமாகும் விழைவை உள்ளே பொறித்தே மானுடனைப் படைத்து மண்ணுக்கு அனுப்பியிருக்கின்றன விண்வல்லமைகள். இசைபாடும் சூதன், நடனமாடும் ஆட்டன், சொல்தேரும் கவிஞன், படை கொண்டெழும் வீரன், முடிசூடி அமரும் அரசன், வேதம் பயிலும் அந்தணன், தவம் செய்யும் முனிவன் என ஒவ்வொருவருக்கும் இங்கு தெய்வமாகும் விழைவுதான் உள்ளது.

ஏனென்றால் தெய்வம் என்பது ஆதலின் உச்சம். இருத்தலின் நிறைவு. இங்கு மானுடன் ஆற்றும் அத்தனை செயல்களும் கூர்ந்து குவிந்து சென்றடைவது தெய்வமென்னும்

நிலையையே. தவத்தினூடாக முனிவன் அடைவது, அபூர்வத்தினூடாக வேதியன் ஈட்டுவது, ஆற்றலினூடாக அரசன் எய்துவது, சொல்லினூடாக கவிஞன் பெறுவது, கலையினூடாக சூதன் உணர்வது அனைத்தும் அது ஒன்றே போலும். தெய்வநிலை. ஆனால் தெய்வங்கள் நிலைகொள்பவை அல்ல. அவை விண்ணில் அலையலையெனத் திகழ்பவை. முட்டி மோதிக்கொள்பவை. முயங்கிப் பிரிந்தாடுபவை. தெய்வங்கள் விண்ணில் இடியிடியென குமுறிக்கொண்டிருக்கின்றன. தொலைவுகளை மின்னி மின்னித் தொடுகின்றன. ஒளிர்ந்து அணைந்து எரிந்தெழுகின்றன. மின்னி மின்னி கடுவெளியின் இறுதிவரை பெருகியிருக்கின்றன. அவை இங்கே ஆலய இருளில் மட்டுமே கல்லில் நிலைகொள்கின்றன. பனித்துளியென அமைந்த முகில்கணம்போல.

அந்த எண்ணப்பெருக்கிலிருந்து மீண்டபோது அவ்வெண்ணங்கள் தனக்குள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று அவள் வியந்துகொண்டாள். முன்பு ஒருபோதும் இத்தகைய எண்ணங்கள் என்னுள் எழுந்ததில்லை. இவ்வாறு சொல்கூட்ட கற்றுக்கொண்டதும் இல்லை. அவள் எப்போதும் கூர்ந்து நோக்குவது சுரேசரின் சொற்களை. ஒரு நிகழ்விலிருந்து அவர் சொற்களினூடாகச் சென்றடையும் தொலைவை. அத்தொலைவினூடாக மீண்டும் தன் சொற்களை அவள் வந்தடைவாள். தன்னிடம் அவர் பேசிய ஒவ்வொரு சொல்லும் நினைவிலிருப்பதை அவள் பல தருணங்களில் உணர்ந்திருக்கிறாள். அவருடைய மாணவர்களிடமிருந்து மீண்டும் மீண்டும் அதை கேட்டுக்கொண்டிருந்தாள். இந்நகரை சுரேசர் தன் சொற்களினூடாக இணைத்துக்கொண்டிருக்கிறார். இங்கிருக்கும் பெருந்திரள் அனைத்தையும் தொட்டு

தனக்குத்தானே பின்னி ஒரு மாபெரும் வலையென இந்நகரத்தை மூடியிருக்கின்றன சுரேசரின் சொற்கள்.

இச்சிலந்தி தன் வலையில் தானே சிக்கிக்கொள்வதில்லை. என்றேனும் ஒருநாள் இதை இவ்வண்ணமே விட்டு விலகிச்செல்லவும் கூடும். அச்சொற்களை அள்ளிச் சுருக்கி ஒரு நெறிநூலென்றாக்கி இங்கு எஞ்சவிட்டுப் போகக்கூடும். எத்தனை நூல்கள்! அத்தனை பணிச்சுமைக்குள்ளும் அவள் நூல் பயின்றுகொண்டிருந்தாள். அரசுப்பணி நூல்கள், நெறிநூல்கள், அரிதாக அறநூல்கள். நூல் பயில்தல் அவளுக்கு ஒரு செவி நிகழ்வாக இருந்தது. புலரியில் எழுந்து நீராட்டறைக்குச்சென்று ஆடை அணிந்து வெளியேறுவது வரை புலவர் ஒருவர் அவள் அருகே நின்று அன்றைய நூலை அவளுக்கு படித்துக்காட்டுவார். பின்னர் நாள்முழுக்க அந்நூலின் சொற்கள் அவளுக்குள் ஓடிக்கொண்டிருக்கும். அன்று நாள் அமைகையில் அச்சொற்களினூடாக அவள் நெடுந்தொலைவு வந்து சேர்ந்திருப்பாள். மறுநாள் அந்நூலின் தொடர்ச்சியை அவர் உரைக்கையில் முற்றிலும் புதிய ஒன்றாக அதை கண்டடைவாள். அரிதாக அந்நூலாசிரியனைவிட நெடுந்தொலைவுக்கு அவள் சென்றுவிட்டிருப்பாள்.

இத்தனிமை ஒரு கூரிய படைக்கலம். இதுவே இவை அனைத்திலிருந்தும் என்னை விலக்குகிறது. விலக்கமே செயலாற்றுவதன் சிறந்த வழி. அகன்று நிற்கையிலேயே அனைத்தையும் பார்க்க இயல்கிறது. முழுமையாகப் பார்க்கையிலேயே மதிப்பிட இயல்கிறது. மதிப்பீடே செயலென்று மாறுகிறது. இவ்விலக்கம் என்னை துயரற்றதாக்கும். இச்சலிப்பு எதிர்ப்பார்ப்பும் ஏமாற்றமும் ஆணவமும் குற்றஉணர்வும் என அடைந்து கொண்டிருக்கும்

அலைக்கழிவுக்கு அப்பால் மாறா வடமீன் நோக்கென்று நின்றிருப்பது நன்று. அவள் பெருமூச்சுடன் விழித்துக்கொண்டாள். அப்போது உள்ளம் தெளிந்திருந்தது. அன்று நிகழ்ந்த அனைத்தையும் காலத்தில் நெடுந்தொலைவுக்குச் சென்று அங்கிருந்து நோக்கிவிட்டிருந்தாள். நிகழவிருப்பனவும்கூட அவளுக்கு நிகழ்ந்தனவாக ஆகிவிட்டிருந்தன.

சம்வகை ஏவலனிடம் அவள் சிந்துநாட்டு அரசியை சந்திக்க விழைவதாக சொல்லியனுப்பிவிட்டு ஓர் ஓலையை எடுத்து வெறுமனே எழுத்தாணியால் கீறிக்கொண்டிருந்தாள். அதில் ஒரு சிறு சுழிப்பை போட்டாள். அதை கோடு ஒன்றால் நீட்டிச்சென்று வளைத்து இன்னொரு சுழியை போட்டாள். மூன்றாவது சுழியை இணைத்தபின் அதையே நோக்கிக்கொண்டிருந்தாள். பின்னர் ஓலையைக் கிழித்து அப்பால் பெட்டிக்குள் போட்டுவிட்டு கைகளை கட்டிக்கொண்டாள்.

ஏவலன் வந்து வணங்கி சிந்துநாட்டு அரசி சந்திப்புக்கு ஒப்புக்கொண்டிருப்பதாக சொன்னான். "அவர் இன்று புலர்காலை கிளம்பி மேற்குக் காட்டுக்குச் சென்று அங்கிருக்கும் கலிதேவனின் ஆலயத்தில் பலியும் கொடையும் முடித்து திரும்பியிருக்கிறார்" என்று அவன் சொன்னான். "நிமித்திகர் சம்புகரின் கூற்று அது. இங்கே இன்னும்கூட மூத்த கௌரவர் துரியோதனனின் இருப்பு எஞ்சியிருக்கிறது என்றார். அவருக்கு அடங்கல்கொடை அளித்து நிறைவளிக்கவேண்டும். அவர் உறையுமிடம் அக்கலிதேவனின் ஆலயம், அங்கே ஒவ்வொருநாளும் விளக்கேற்றப்படவேண்டும் என்றார். முதல்

விளக்கை ஏற்றி வழிபடும்பொருட்டு அரசி சென்று மீண்டிருக்கிறார்.”

“உடன்சென்றவர் எவர்?” என்றாள் சம்வகை. “எவருமில்லை. புதிய சேடிகளுடன் சென்றிருக்கிறார்.” சம்வகை “மைந்தர்கள்?” என்றாள். “அவர்களுக்கு அவர் சென்ற செய்தியே தெரியாது. களரியில் படைக்கலம் ஆடிக்கொண்டிருந்தார்கள்.” அவள் தலையசைக்க “அங்கே நாள்தோறும் சென்று நெய்விளக்கேற்ற ஒருவரை அமர்த்தி அவருக்குரிய ஊதியத்தையும் சிந்துநாட்டு அரசி வகுத்திருக்கிறார். அவர் தென்னிலத்தைச் சேர்ந்தவர். ஆதன் என்று பெயர் சொன்னார்” என்றான். அவள் தலையசைத்து அவனை அனுப்பினாள்.

அவள் அரண்மனையினூடாக துச்சளையின் அறை நோக்கி செல்கையில் எதிரில் சுஷமையை கண்டாள். தலைவணங்கி அவள் அருகே நிற்க அவளை ஒருகணம் நோக்கி பார்வை விலக்கி, சலிப்புற்ற குரலில் “அரசி எவ்வண்ணம் இருக்கிறார்?” என்றாள் சம்வகை. “இயல்பாக இருக்கிறார் என்றே தோன்றுகிறது, தலைவி” என்றாள் சுஷமை. “இங்கு அவர் செய்துகொண்டிருக்கும் செயல்களை கூறுக!” என்றாள் சம்வகை. “அரசி துச்சளை புலரி முதல் அந்தி வரை அரண்மனையையே சார்ந்து இருக்கிறார். இங்கு அரசியென அவர்கள் வந்த பின்னரே இவ்வரண்மனையில் குறைவதென்ன என்று தெரிகிறது. இல்லாள் இல்லாதிருந்த இல்லம் போலிருந்தது இது. இங்கு எந்தெந்த அறைகள் தூய்மைப்படுத்தப்படாமல் விடுபட்டிருக்கின்றன என்று அவர்தான் சொன்னார். அரண்மனை வாழ்க்கையின் ஒழுங்குகளை மாற்றி அமைத்தார்.”

“உம்” என்றாள் சம்வகை. “அறைகளுக்கு உணவு கொண்டு போவதற்கு முதன்மை இடைநாழியை பயன்படுத்தலாகாது என்று அவர் வந்து சொல்லும் வரை நாங்கள் அறிந்திருக்கவில்லை. எவ்வண்ணம் உணவு கொண்டு சென்றாலும் சற்றேனும் உணவின் மணம் இடைநாழியில் எஞ்சாமல் இருப்பதில்லை. உணவின் மணம் பசியில்லாதபோது கெடுமணமே என அவர் சொல்கையிலேயே உணர்ந்தோம். இடைநாழிக்குள் நுழைவோர் வெறுக்கும் உணவின் மணம் வருவது உகந்ததல்ல என்றார். மேலும் ஏதேனும் எதிர்பாரா நிகழ்வில் இடைநாழியினூடாக எவரேனும் விரைந்து வந்தால் உணவு கொண்டு வருபவர்கள் அவர்களுக்கு மிகப் பெரிய தடையாக ஆகக்கூடும் என்றார். அதுவரை காவலர்தலைவியாக நான் அதை எண்ணிப்பார்க்கவே இல்லை. ஒன்றையொன்று தொட்டு திறந்திருக்கும் பக்கவாட்டு அறைகளினூடாகவே உணவு செல்ல வேண்டும் என்பது எங்களுக்கு தோன்றவே இல்லை.”

சம்வகை தலையசைத்தாள். “ஒவ்வொரு அறையிலிருந்தும் வெளித்தோட்டத்திற்கு திறக்கும் ஒரு கதவு இந்த அரண்மனையில் இருக்கிறது. அக்கதவைத் திறந்து ஒவ்வொரு நாளும் அப்பால் சருகும் தூசும் குவியாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசி ஆணையிட்டார்” என சுஷமை தொடர்ந்தாள். “மிக அரிதாகவே தோட்டத்திற்குத் திறக்கும் கதவுகளை இங்குள்ளவர்கள் திறக்கிறார்கள். ஆனால் எப்போதேனும் திறக்கும்போது அப்பால் சருகுகள் குவிந்திருக்கும் எனில் அக்காட்சியால் உளச்சோர்வு அடையக்கூடும். அச்சிறு தோட்டத்தின் பயனே இல்லாமல் ஆகிவிடக்கூடும். ஏனென்றால் அக்கதவை அவர்கள் அறையின் அடைவு அளிக்கும் திணறலை தவிர்க்கும்பொருட்டே

திறக்கிறார்கள். அவர் வந்த ஒருநாளைக்குள் இவ்வரண்மனை முற்றாக மாறிவிட்டிருக்கிறது.”

“நன்று” என்று சொல்லி சம்வகை மேலும் நோக்கி நின்றாள். தான் தொகுத்துச்சொல்லும்படி கோரப்படுவதை உணர்ந்த சுஷமை “அவர் இதை தன் அரண்மனை என்று நினைக்கிறார். இதன்மேல் தன் ஆட்சியை நிலைநாட்டிவிட்டார். எனவே இங்கு அவர் மகிழ்ந்திருக்கிறார் என்றே கொள்ளவேண்டும்” என்றாள். சம்வகை “அரசர் என்ன செய்கிறார்?” என்றாள். சுஷமை முகம் மலர்ந்து “பேரரசி நகரெழப்போவதை எண்ணி உவகையில் இருக்கிறார். அரசிக்கென ஒவ்வொரு ஒருக்கமும் அவர் பார்வையிலேயே நிகழவேண்டுமென எண்ணுகிறார். அதற்கான ஆணைகளை அவரே பிறப்பித்துக்கொண்டிருக்கிறார். இன்று மட்டும் எட்டு முறை சுரேசரை தன் அறைக்கு வரச்சொல்லி பேசியிருக்கிறார். பேரரசி நகர்நுழைகையில் ஒவ்வொரு முறைமையும் முழுதமையவேண்டும் என என்னிடமே பலமுறை சொல்லிவிட்டார்” என்றாள்.

யுதிஷ்டிரன் நிலைகொள்ளாமல் இருப்பதை சம்வகை முன்னரே அறிந்திருந்தாள். “அவர் சிந்துநாட்டு அரசியை இதுவரை சந்திக்கவில்லை. அதைப்பற்றி ஏதேனும் சொல்லப்பட்டதா?” என்றாள். “இருமுறை சந்திப்பதைப்பற்றி பேசப்பட்டது. ஆனால் அவ்வாறு சந்திப்பது முறையல்ல என்றனர் நிமித்திகர். அரசி கைம்மை நோன்பில் இருக்கிறார், எனவே ஓராண்டு பிற ஆடவரை சந்திக்க ஷத்ரிய நெறி ஒப்பாது என்றார்கள். அவர் அவையமரலாகாது, பெண்களுக்குரிய அரண்மனையின் முற்றத்தில் நின்று பேரரசியை எதிர்கொள்வதற்கு மட்டுமே நெறியொப்புதல் உள்ளது. அது சார்ந்த குழப்பம் நீடிக்கிறது. அறுதியாக எதையும் அமைச்சர் இன்னமும் சொல்லவில்லை”

என்று சுஷமை சொன்னாள். “இங்கே கைம்பெண்நெறி பேணப்படவில்லை என்றே தங்கள் சொல்லில் இருந்து நான் உணர்ந்தேன். அது அரசரிடம் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.” சம்வகை “அதை நானே சொல்கிறேன். இப்போதல்ல, பேரரசி வந்தபின்” என்றாள்.

“சிந்துநாட்டு இளவரசர்களை அரசர் சந்திக்க விழைந்தார். ஆனால் அரசமுறையாக அவையில் இரு மைந்தரும் வரவழைக்கப்பட்டு உரிய முறைமைகள் செய்யபட்டு சந்திப்பதே முறை என அவரிடம் சொன்னோம். பேரரசி வரும்போது குடியவை கூடும். அக்குடியவையில் இரு மைந்தரும் அவையில் அமர்ந்திருக்க வேண்டும் என்று அரசர் ஆணையிட்டிருக்கிறார்” என்றாள் சுஷமை. சம்வகை முதல்முறையாக அந்த நிலைகொள்ளாமையை உணர்ந்தாள். அது உடலில் எழாமலிருக்க உடலை இறுக்கியபடி நின்று “மைந்தர் எங்கே?” என்றாள். “அவர்கள் இதற்குள் இந்நகரில் இயல்பாகிவிட்டிருக்கிறார்கள். அரண்மனை எங்கும் சுற்றி நோக்கினர். ஆடுகளம் சென்று விளையாடினர். களரிக்குச் சென்று படைக்கலமாடினர். இங்கே அவர்கள் மகிழ்ச்சியாகவே இருக்கிறார்கள்.”

“அவர்கள் எங்கே?” என்று சம்வகை கேட்டாள். “சற்றுமுன் கீழே உள்விளையாட்டுக் கூடத்திற்கு சென்றார்கள். அதை திறந்தே நெடுநாட்களாகின்றன. அங்கு பழைய நாற்களத்தின் பலகைகளும் காய்களும் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அதிலொன்றை எடுத்து வைத்துக்கொண்டார்கள். நான் உடன் சென்றேன். என்னிடம் நாற்களம் ஆடத்தெரியுமா என்றார்கள். தெரியாது என்றேன். இங்கு நாற்களம் ஆடுவதற்கான ஒப்புதல் சூதர்களுக்கு இல்லை என்று தாங்கள் அறிந்திருப்பீர்கள்

என்றேன். மூத்தவர் சற்று எரிச்சலுடன் எங்களுக்கு நாற்களமாடலைக் கற்பிக்க ஒருவரை அனுப்புக என்றார்” என்றாள் சுஷமை. “நான் வெளியே சென்று ஷத்ரிய முதியவர்கள் எவரேனும் இங்கிருக்கிறார்களா என்று வினவினேன். கோட்டையின் தெற்கு வாயிலருகே இருந்த காவலர்தலைவனாகிய சிம்ஹபாகுவை வரவழைத்தேன். அவர் அவர்களுக்கு நாற்களமாட கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார்.”

சம்வகை “ஆகுக, நான் அரசரை பார்க்கிறேன்! அதன்பிறகு அரசியை பார்ப்பதே நன்று” என்றாள். “தாங்கள் வருகிறீர்கள் என்று அரசியிடம் அறிவித்துவிட்டேன்” என்றாள் சுஷமை. “அவரிடம் கூறுக, இடர் ஒன்று எதிர்பட்டதனால் அரசரை உடனடியாக சந்திக்கும்படியாக ஆகிவிட்டது!” என்று சொல்லி சம்வகை யுதிஷ்டிரனின் அறை நோக்கி சென்றாள்.

# களிற்றியானை நிரை - 46

**பகுதி ஐந்து : விரிசிறகு – 10**



சம்வகை யுதிஷ்டிரனின் அறைவாயிலை அடைந்து நின்றாள். ஏவலன் தலைவணங்கி அவள் வருகையை அறிவிக்க யுதிஷ்டிரனின் அறைக்குள் சென்று மீள்வதற்குள் அவள் அங்கே ஆற்ற வேண்டியதென்ன என்பதை முடிவு செய்துவிட்டிருந்தாள். யுதிஷ்டிரனின் அறைக்குள் சென்று தலைவணங்கும்போது அவள் சற்றே சலிப்புற்ற உடல்பாவனையை அடைந்திருந்தாள். நூல் நோக்கிக்கொண்டிருந்த யுதிஷ்டிரன் “கூறுக!” என்றார். அவருக்கு

தன்மேல் மெல்லிய ஆர்வமும் உள்ளார்ந்த விலக்கமும் உண்டு என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அல்லது அதற்கும் அடியில் ஓர் அணுக்கம் இருக்கலாம். அவ்வாறு ஆழத்தில் ஓர் அணுக்கம் இன்றி எவரிடமும் ஆர்வம் கொள்ள இயலாது.

"பேரரசி நகர்நுழைகிறார். அதற்கான அனைத்தும் இங்கு ஒருக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு சிறு எண்ணம் இன்று எழுந்தது" என்றாள். அவ்விரு சொற்றொடர்களிடையே இருந்த இடைவெளி அவரை விழிகூரச் செய்தது. "இந்திரப்பிரஸ்தத்தில் பேரரசியின் அணிகள் உள்ளனவா? அங்கு அணிகள் இருந்தாலும் அவற்றை அவர் அணிந்து இங்கு வருவாரா? ஒற்றர் செய்திகளின்படி அவர் அங்கு ஒரு அணியைக்கூட உடலில் அணியாமல்தான் அங்கிருக்கிறார். அவ்வண்ணமே இங்கு எழுந்தருளவே வாய்ப்பு மிகுதி." யுதிஷ்டிரனின் விழிகள் மாறின. "ஆம், என்னிடமும் அவ்வாறு சொல்லப்பட்டது" என்றார். "அவள் அணிகளேதுமின்றித்தான் வருகிறாள்."

"அணிகளேதுமின்றி அரசி நகர்புகுவார் என்றால் அது இங்குள்ளோருக்கு விந்தையாகத் தெரியலாம். இன்று இங்கிருக்கும் மக்களில் பெரும்பாலானவர்கள் முன்னரே அரசியை பார்த்திராதவர்கள். அவர்களுக்கு மும்முடி சூடி இந்திரப்பிரஸ்தத்தின் அரியணை அமர்ந்த பேரரசி திரௌபதியைத்தான் தெரியும். அவர்கள் அவரைத்தான் எதிர்பார்ப்பார்கள். பேரரசி இன்றிருக்கும் நிலையில் இவ்வண்ணம் தேரில் நகர்புகுவார் என்றால் அது பிறிதொன்றாக பொருள்கொள்ளப்படலாம்" என்றாள். யுதிஷ்டிரன் அவளை கூர்ந்து நோக்க "இன்று அரசியிடமிருந்தும் அரசரிடமிருந்தும் ஒவ்வாத ஒன்றை எதிர்பார்க்கிறார்கள்

சூதர்கள். அவர்களின் கதைகள் அதை அவ்வண்ணம் முடித்துவைக்க விழைகின்றன” என்றாள்.

“ஆம், அதை நான் எண்ணவில்லை” என்றார் யுதிஷ்டிரன். சம்வகை “ஒன்று இயற்றலாம், பேரரசிக்குரிய அணிகளெல்லாம் இங்கு அஸ்தினபுரியிலேயே உள்ளன. அவற்றை தெரிவுசெய்து நாம் அரசிக்கு அனுப்பலாம். இந்திரப்பிரஸ்தத்திலிருந்து அவர் கங்கைக்கரை மாளிகைக்கு வந்ததுமே அங்கு சென்று அந்நகைகளைக் கொடுத்து அணிந்து வரும்படி தங்கள் ஆணையை தெரிவிக்கலாம்” என்றாள். “ஆனால் அவள் அதை விரும்பவில்லை என்றால் என்னால் எதையும் சொல்ல முடியாது” என்றார் யுதிஷ்டிரன். “அதைத்தான் நான் தங்களிடம் தனியாக கூற வந்தேன். அணிகளை தெரிவுசெய்து அங்கே அனுப்புவதை நானே செய்ய முடியும். ஏன் அணிகளுடன் நகர்புகவேண்டுமென்பதை நானோ அமைச்சர் சுரேசரோ சென்று உரைக்கவும் கூடும். ஆனால் தாங்கள் கருவூலத்திலிருந்து தங்கள் கைகளால் அவ்வணிகளை தெரிவுசெய்து தங்கள் அன்பின் பொருட்டு அனுப்பினால் அதை அவரால் தவிர்க்க இயலாது” என்றாள் சம்வகை.

“மேலும் அது ஒரு அழகிய தருணமாகவும் ஆகும். அரசர் தன் கையாலேயே தெரிவுசெய்த அணிகளை அரசிக்கு கொண்டுசெல்வதையே ஒரு சிறுநிகழ்வென ஆக்கலாம். பசித்த ஓநாய் போன்றது சூதரின் நாக்கு. அவற்றுக்கு இனிய தேனை அளித்தால் ஊன்வெறியை தணிக்கமுடியும்.” யுதிஷ்டிரன் புன்னகைத்தார். “நன்று, அதை செய்க!” என்றார். “ஆனால் நம் கருவூலத்தில் பேரரசி திரௌபதியின் நகைகள் தனியாக வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று எனக்குத் தெரியவில்லை. இன்று கருவூலத்தை அறிந்தவர்களும் இல்லை. தாங்கள்

வந்தால் அவற்றை எளிதில் தொட்டு எடுத்துவிட முடியும்” என்றாள் சம்வகை.

“இப்போதே வருகிறேன்... உடனே” என்றபடி யுதிஷ்டிரன் தன் மேலாடையை எடுத்து தோளில் இட்டார். “இந்நாளின் இனிய பணி அதுவென்றே ஆகுக!” சம்வகை “தங்கள் அலுவல்கள் சற்று முடிந்து... ” என இழுக்க “இல்லையில்லை. அலுவல்கள் அனைத்தையும் திரும்ப வந்து செய்யக்கூடும். இதை முதலில் முடிக்கலாம்” என்றபடி யுதிஷ்டிரன் நடந்தார். விரைந்த காலடிகளுடன் இடைநாழியில் சென்றபடி “இது மிக முதன்மையான செயல். ஆனால் எனக்கு தோன்றவில்லை. எண்ணி எண்ணி ஒவ்வொன்றையும் இங்கு சீரமைத்துக்கொண்டிருந்தேன். எப்படி இதை நோக்க மறந்தேன்?” என்றார். சம்வகை “இது பெண்களுக்குத் தோன்றுவது” என்றாள். “மெய் மெய், இது பெண்களுக்கு மட்டுமே தோன்றுவது” என்றபின் “நாளை பேரரசி நகர்புகுகையில் சிந்துநாட்டரசி இங்கு இல்லமகள் என்று முற்றத்திற்குச் சென்று நின்று அணிமங்கலம் காட்டி வரவேற்பதற்கு வாய்ப்பிருக்கிறதா?” என்றார்.

“அது அவரிடம் கூறப்பட்டுவிட்டது” என்றாள் சம்வகை. யுதிஷ்டிரன் “நீ நேரில் கூறினாயா?” என்றார். “நேரில் ஒருமுறை உரைக்கவேண்டியுள்ளது. ஆனால் ஏற்கெனவே இவ்வரண்மனையின் பொறுப்பை இல்லமகளென சிந்துநாட்டரசி ஏற்றுக்கொண்டிருப்பதனால் இதை மறுக்க வாய்ப்பில்லை” என்றாள். “என் ஆணையெனச் சொன்னால் அவள் மறுக்கப்போவதில்லை. ஆனால் ஆணையென உரைப்பதில் எனக்கு தயக்கம் இருக்கிறது” என்று யுதிஷ்டிரன் கூறினார். “தங்கள் தங்கை அவர்” என்றாள் சம்வகை. “ஆம்,

ஆனால் இது அவள் தந்தை வாழ்ந்த அரண்மனை. அவள் தமையன் கோலூன்றி அமர்ந்திருந்த அரியணை. நான் அவளுக்கு மூத்தோன் எனினும் அந்நிலையில்தான் அவள் உள்ளத்தில் இருக்கிறேனா என எனக்குத் தெரியவில்லை.”

குரல் மாறுபட “ஒருமுறை என்னை நேரில் கண்டால், என் விழிகளை அவள் நேருக்கு நேர் உணர்ந்தால் என் நெஞ்சில் அவள் பொருட்டு எழும் அன்பை அவளால் புரிந்துகொள்ள முடியும். ஆனால்...” என்றபின் கைவீசி “அதைப் பேசி பயனில்லை. ஒவ்வொன்றும் விந்தையாக குலைந்து சிக்கலாகிக் கிடக்கிறது இன்று” என்று யுதிஷ்டிரன் கூறினார். சம்வகை அவரை இடைநாழியிலிருந்து படிகளினூடாக அழைத்துச் சென்றாள். கீழ்த்தளத்தின் இடைநாழிகளினூடாக நடந்து சிறுகூடத்திற்குள் நுழையும்போது “கருவூலத்திற்கு இவ்வழியாக ஏன் செல்கிறோம்?” என்று அவர் கேட்டார். “மைய அறையினூடாகச் செல்கையில் தாங்கள் அங்கு செல்வது காவலருக்கு தெரியவரக் கூடும். இவ்வேளையில் தாங்கள் கருவூலத்திற்குச் செல்வது அனைவரும் அறிந்ததாக ஆகவேண்டியதில்லை. அரண்மனையின் காவலர்களைக் குறித்தே நமக்கு முழு அறிதல் இன்றில்லை. பெரும்பாலானவர்கள் சென்ற ஒருமாத காலத்திற்குள் இந்த நகருக்குள் புகுந்தவர்கள்” என்று சம்வகை சொன்னாள்.

யுதிஷ்டிரன் களியறைக்கு முன் நின்று “அவ்வறைக்குள் யார்?” என்றார். “சிந்துநாட்டின் இளவரசர்கள் உள்ளே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்” என்றாள் சம்வகை. “விளையாடும் பொழுதா இது? இங்கென்ன விளையாட்டு விளையாடுகிறார்கள்?” என்றார் யுதிஷ்டிரன். “அரசர்களுக்குரிய விளையாட்டு படைக்கலக் களத்தில் அல்லவா?” என்றபடி

யுதிஷ்டிரன் அவ்வறை நோக்கி சென்றார். “அவர்கள் அங்கு நாற்களமாடி பயில்கிறார்கள்” என்றபடி சம்வகை பின்னால் சென்றாள். “நாற்களமா? இந்த அகவையிலா?” என்றபடி கதவை உந்தி உள்ளே சென்ற யுதிஷ்டிரன் “என்ன செய்கிறீர்கள் இங்கு?” என்று உரக்க கூவினார். “என்ன செய்கிறாய்? யார் நீ?”

சுரதனும் சுகதனும் திகைத்து எழுந்து நிற்க அவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த வஜ்ரன் எழுந்து கைகூப்பி “நான் நூற்றுவர்தலைவன் வஜ்ரன். நாற்களம் பயிற்றுவிக்கும்படி ஆணை” என்றான். “யாருடைய ஆணை? யாருடைய ஆணை?” என்று கூவினார் யுதிஷ்டிரன். “என்ன செய்கிறீர்கள்? அறிவிலிகளே, என்ன செய்கிறீர்கள் இங்கே?” சுகதன் “இங்கு நாற்களமாடுதல்...” என்று சொல்ல சினத்துடன் திரும்பி சுரதனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார் யுதிஷ்டிரன். “அறிவிலி! உன் இளையோனையும் இதற்கா இழுத்து வந்தாய்?” அடிவாங்கிய கன்னத்தைப் பொத்தியபடி அவன் தலைகுனிந்து நின்றான். “இது என் ஆணை! இனி ஒருபோதும் உன் கைகள் இந்த நாற்களக் கருக்களை தொடக்கூடாது. இனி ஒருமுறை நீ இவ்வறைக்குள் வந்தால், இனி எங்கேனும் நீ நாற்களத்தை தொட்டாய் என்று அறிந்தால்....” என அவர் நடுங்கினார்.

பின்னர் மெல்ல தளர்ந்து, தாழ்ந்த குரலில் “நான் இதை தொட்டேன். இதிலாடினேன். இது எனக்களித்ததென்ன என்று உனக்குத் தெரியாது. இன்று இங்கு இதோ நின்றிருக்கிறேன். எங்கோ எவ்வண்ணமோ சென்று அடையவேண்டிய இடம் அனைத்தையும் இழந்து வந்து நின்றிருக்கிறேன். இனி என் குடியில் எந்த மைந்தனும் இதை தொடமாட்டான். இனி என் நகரில் எவரும் இந்த நாற்களத்தை தொடப்போவதில்லை” என்றார். மைந்தர்கள் கண்ணீருடன் தலைகுனிந்து நிற்க

சம்வகை மெல்ல பின்னால் வந்து “மிக இளையோர். நாம் சுரேசரிடம் உரிய முறையில் இவர்களிடம் பேசச் சொல்லலாம்” என்றாள். “பேசச் சொல்… அவரிடம் இனி ஒருமுறை இதை பொறுக்கமாட்டேன் என்று சொல். குருவின் குலத்தில் இனி எந்த அரசனும் நாற்களத்தை தொடமாட்டான்” என்றபின் யுதிஷ்டிரன் வெளியே சென்றார்.

செல்லும் வழியெல்லாம் யுதிஷ்டிரன் புலம்பிக்கொண்டே இருந்தார். ஒரே நாளில் அவர் மீண்டும் முதுமையடைந்துவிட்டதுபோல் தோன்றியது. அஸ்தினபுரி மீண்டெழுந்தோறும் அவரில் தோன்றிய உயிர்த்துடிப்பு அடங்கிவிட்டிருந்தது. முதியவர்களுக்கே உரிய பிறர் கேட்கிறார்களா என்று நோக்காத தற்பேச்சு சிந்திக்கொண்டே சென்றது. “இது ஒரு தீய தெய்வம். இதில் நம் ஆற்றலை வெளிப்படுத்துகிறோம் என்று எண்ணிக்கொள்கிறோம். ஆம், நம் ஆற்றலை வெளிப்படுத்துகிறோம் என்பது உண்மைதான். ஆனால் அது எதிரிலிருக்கும் இன்னொரு மனிதரிடம் வெளிப்படுத்தப்படுவதல்ல. ஊழென்று மாற்றுருவம் கொண்டு எதிர் நின்றிருக்கும் தீயதெய்வம் ஒன்றிடம் வெளிப்படுத்துவது. சூதின் தெய்வம்…”

“சூதின் தெய்வம் கலி என்கிறார்கள். அல்ல, கலி சூது உருவாக்கும் விளைவுகளின் மேல் ஆட்சிகொண்டவர் மட்டுமே. கலியின் தேவியாகிய தியூதையே சூதின் தெய்வம். அவளை நான் கண்டுள்ளேன். வேசரநாட்டில் ஒரு சிறுகுகையில். அங்கே அவள் மழுங்கலான கற்செதுக்கு வடிவில் எழுந்திருந்தாள். கல்லாலான திரையிட்டு மூடிய உருவென. தொன்மையான சிலை. நான்கு கைகளில் கீழ்வலக்கையில் பகடை.

கீழ்இடக்கை ஆட வரும்படி அழைக்கும் சுட்டு. அச்சுட்டுவிரலில் சுற்றிய நாகம். மேல்வலக்கையில் அமுதகலம். மேல் இடக்கையில் பாசம். அகலே நின்று நோக்கினால் அவள் விழிகளில் காமமெழுந்த அழைப்பு. அருகணைந்தால் வஞ்சவெறிப்பு. அவளுக்கு பின்புறமும் முகம் உண்டு என்கின்றன நூல்கள். முன்முகம் சிரிக்கையில் பின்முகம் சீறும். முன்முகம் சீற பின்முகம் நகைக்கும். அவள் கைகளின் நிழல்களும் கைகளே. எண்ண எண்ண கைபெருகுபவள். அறியாக் கைகளாலும் ஆடுபவள்.”

“அவளை நோக்கி அங்கே நான் நின்றிருந்தேன். அச்சமூட்டும் இடம் அது. என் உடன்பிறந்தார் அகன்றனர். அவர்கள் அவளுடைய வஞ்சச் சிரிப்பைக் கண்டு நடுக்கு கொண்டனர். நான் அவளை நோக்கியபோது அவள் கனிந்த அன்னையென்றே தெரிந்தாள். அந்தக் குகை காபாலிகர்களுக்குரியது. அவர்கள் தங்களுக்குள் சூதாடுவதுண்டு. தோற்றவன் அக்கணமே எழுந்து தன் கழுத்தை தானே வெட்டிக்கொள்ளவேண்டும். அவ்வண்ணம் பலநூறுபேர் விழுந்த குகை. அவர்களின் மண்டையோடுகள் பதிக்கப்பட்ட சுவராலானது. ஆனால் அங்கு நின்று நான் மெய்ப்பு கொண்டேன். அத்தலைகளுக்குமேல் நின்றிருப்பதாக எண்ணினேன். சுவரிலிருந்து என்னை நோக்கி நகைகொண்டிருந்தாள் அன்னை.”

“எவராலும் வெல்லப்படாத தெய்வம் அது. பிற தெய்வங்களே கண்டு அஞ்சும் தெய்வம் அது. அது தன்னுடன் ஆட வரும்படி ஒவ்வொருவரையும் அழைக்கிறது. இளிப்புடன் அங்கே அமர்ந்திருக்கிறது. சிறு வெற்றிகளை அளிக்கிறது. நீ வல்லவன் அல்லவா, நீ பல்லாயிரத்தில் ஒருவன் அல்லவா என கொஞ்சுகிறது. நம் ஆணவமே அதன் படைக்கலன். கொடிய

ஆடல். போரைவிடக் கொடிது. பழிகள் அனைத்தையும்விட இழிந்தது. ஆனால் இந்த ஆடல் ஒருபோதும் எவரையும் வெளியே விடுவதில்லை. எத்தனை இழப்பிற்குப் பிறகும் மனிதர்கள் இதில் கிடக்கிறார்கள். இத்தனைக்குப் பிறகும் நானும் இதை விட்டு விலகுவேன் என்று சொல்ல முடியவில்லை. ஆம், நேற்றுகூட நான் விளையாடினேன். இன்றும் விளையாடுவேன். என்னால் இதிலிருந்து மீளவே முடியாது.”

“இதை ஒருபோதும் தொடலாகாது என்று எனக்கு நானே ஆயிரம் முறை ஆணையிட்டுக்கொண்டேன். என்னால் இயல்வதில்லை. இதில் அமர்கையில் இவ்வுலகை ஆள்பவனாக, ஊழுடன் நிகர்நின்று போராடுபவனாக நான் உணர்கிறேன். அந்த தெய்வத்தைப்போல என் ஆழத்தை அறிந்தது பிறிதொன்றில்லை. அது என் ஆணவத்தை சீண்டுவதற்காக தோற்றுக்கொடுக்கிறது. நான் அகலும்போது அள்ளிக்கொடுத்து மீண்டும் உள்ளே இழுக்கிறது. அனைத்தையும் அள்ளிச்சுருட்டி எடுத்துக்கொண்டு நம்மை வெறுமையில் தள்ளுகிறது. உடைந்து அமர்கையில் தோள்தொட்டு மேலும் ஒரு சிறுவாய்ப்பு உள்ளது என்கிறது. இத்தனை தோல்வியும் அறுதி வெற்றிக்கே என்கிறது. அது மானுடரை சிறுமைசெய்து மகிழும் தெய்வம். மண்ணோடு மண்ணாக மானுடரை மிதித்துத் தேய்த்து புழுவென்று அருவருத்து காறி உமிழ்ந்த பின் கடந்துசெல்வது. அதைப்போல மானுடரை வெறுக்கும் பிறிதொன்று இல்லை.”

“இருந்தும் ஏன் அதை தழுவிக்கொண்டிருக்கிறேன்? ஏனென்றால் அது இல்லாத வெற்றிடம் வேறெதைக் கொண்டும் நிறைக்கக்கூடியதல்ல. கானகங்களில் பயணம்

செய்திருக்கிறேன். ஏதும் எஞ்சாப் பெரும்போரையும் கண்டாயிற்று. வெற்றியையும் தோல்வியையும் பேருருவில் அறிந்தாயிற்று. அதற்கப்பாலும் என் அகம் அதைக்கொண்டே நிறைக்கக் கூடியதாக இருக்கிறது. சூதாடியைப்போல் சூதாடப்படுபவன் வேறில்லை. இப்புவியில் சூதாடியைப்போல் தீச்சொல் பெற்றவனும் வேறில்லை" என்றார் யுதிஷ்டிரன். சலிப்புடன் தலையாட்டியபடி நின்று அவளை திரும்பி நோக்கினார். "எப்படி இவ்விளையோருக்கு இதில் ஆர்வம் வந்தது?" என்றார்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. "நான் அறிவேன், கதைகளாக சொல்லிச் சென்று அடையவைத்திருக்கிறார்கள் வீணர்களாகிய சூதர்கள். அக்கதைகளில் எல்லாமே சூதின் சூழ்ச்சியும் சூதாடியின் சரிவும்தான் உள்ளது. ஆனால் கேட்பவர்களுக்கு அது ஈர்ப்பை அளிக்கிறது. கூரிய வாளும் தீயும் நாகமும் அளிக்கும் கவர்ச்சி. பாம்பு படமெடுத்தாடுகையில் உள்ளத்தாலெனினும் அதன் முன் கைநீட்டிப் பார்க்காத எவருமுண்டா? தீயைத் தொட்டு விளையாடாத குழந்தை உண்டா? சூது விளையாடத் தொடங்கிய எவரும் அதிலிருந்து விலக இயலாது" என்றார் யுதிஷ்டிரன்.

"அனைத்தையும் மறக்கவேண்டுமென எண்ணினேன். இந்தப் போர்வெற்றிக்குப் பிறகு, இங்கே மும்முடி சூடி அமர்ந்த பிறகு, பேரறத்தான் என்று பேர் வாங்கி இங்கிருந்து விண் புகுந்த பிறகும் கூட குலமகளை வைத்தாடிய கீழ்மகனென்ற பழி என்னிலிருந்து போகாது. இப்புவியில் நான் இனி அதன் பொருட்டே எண்ணப்படுவேன். இப்புவியில் நாற்களம் குறித்த எப்பேச்சிலும் என் கீழ்மை ஒரு சொல்லென என் நினைவில் கடந்து வரும்." யுதிஷ்டிரன் நின்று சீற்றத்துடன் "என் அறைக்கு

திரும்புகிறேன். என்னால் இன்று இவ்வணிகளை தெரிவுசெய்ய இயலாது. என் உள்ளம் கலங்கியிருக்கிறது” என்றார்.

சம்வகை “தாங்கள் இவ்வுணர்விலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி இந்நகைகளை பார்ப்பதுதான்” என்றாள். “என் நினைவுகள் கொந்தளித்தெழுகின்றன. குலமகளை அவை முன் நிறுத்திய கீழ்மகன் நான். அவளுக்காக அணி தேர்வதிலிருக்கும் சிறுமை என்னை கூச வைக்கிறது” என்றார். “அணிகள் தங்களை உளம் மாறச் செய்யும்” என்று அவள் மீண்டும் சொன்னாள். “இல்லை, என்னால் இயலாது. நீயே தெரிவுசெய்” என்றார் யுதிஷ்டிரன். அவள் “அணிகளை அவ்வாறு தெரிவுசெய்ய இயலாது என்பதனால்தான் தங்களிடம் கூறினேன்” என்றாள். “ஏனென்றால் அதில் ஒரு அணி வேறெவருடையதாக இருந்தால்கூட அது மங்கலக் குறை. அரசியின் விழிகளில் அதுதான் முதலில் படும். தாங்களே தெரிவுசெய்யாத ஓர் அணியை தாங்கள் தெரிவுசெய்தது என்று சொல்லி அவர்களிடம் அளிக்கவே இயலாது. ஒவ்வொரு அணியுடனும் நினைவுகள் கலந்திருக்கின்றன” என்றாள். அவளை சற்றுநேரம் நோக்கி நின்றபின் “ஆம், மெய்தான்” என்றபின் பெருமூச்சுடன் யுதிஷ்டிரன் நடந்தார்.

அவர்களின் காலடிகள் பலகைப்பரப்பில் ஓசையிட்டன. யானை விலாவெனப் பருத்து வளைந்த பெருஞ்சுவர்கள் அவற்றை எதிரொலித்தன. மேலும் மேலுமென அவர்கள் இறங்கிச் சென்றனர். அஸ்தினபுரியின் ஆழம் என அவள் எண்ணிக்கொண்டாள். அங்கே செல்கையில் யுதிஷ்டிரன் தன் மூதாதையரை எண்ணி துயர்கொள்வது இயல்பென்றே தோன்றியது. அங்கே அவர்களின் மூச்சு எஞ்சியிருக்கும். வென்று வென்று அவர்கள் அடைந்தவை அங்கே

எஞ்சியிருக்கின்றன. விண்புகுந்தாலும் அவர்களின் ஒரு சிறு துளி அங்கே இல்லாமல் இருக்காது. அங்கே யயாதியை பார்க்கமுடியும். குருவை, ஹஸ்தியை, பிரதீபரை பார்க்கமுடியும். அவர்களின் பெருவிழைவுகளே நாகங்கள் என்றாகி அங்கே புதையல் காக்கின்றன என அவள் இளமையில் கதைகேட்டிருந்தாள்.

அவர்கள் கருவூலத்தை அடைந்தபோது சுந்தரர் எழுந்து வணங்கி நின்றார். "அரசியின் அணிகளை அரசர் பார்க்க விரும்புகிறார்" என்று சம்வகை சொன்னாள். சுந்தரர் அதை முன்னரே அறிந்திருந்தார். "ஆணை" என்றபின் ஏவலனை அழைத்து கருவூலக் கதவை திறந்தார். அவனும் தாழ்க்கோல்களுடன் ஒருங்கி நின்றிருந்தான். சுந்தரர் அரசரை அவ்வாறு அருகிருந்து நோக்கியவரல்ல என்பதனால் படபடப்புடன் இருந்தார். கையளவுத் தடிப்பு கொண்ட மூன்று இரும்புக் கதவுகளுக்கு அப்பால் அணிகளின் கருவூலம் இருந்தது. ஒவ்வொரு கதவும் ஓலமிட்டபடி திறந்தது. உள்ளிருந்து சிறைப்பட்ட காற்று அவிந்த வாடையுடன் வெளியேறியது. அவர்கள் பேசிய ஒற்றைச் சொற்களை உள்ளே எவரோ முணுமுணுத்தனர்.

யுதிஷ்டிரன் உள்ளே சென்று பெருமூச்சுவிட்டார். "இங்கு வெளிக்காற்று வருவதே இல்லையா?" என்றார். அது மறுமொழிக்கான சொல் அல்ல என அவர்கள் அறிந்திருந்தனர். "புழுதியின் மணம். செல்வம் குவியுமிடத்தில் எல்லாம் இவை வந்துவிடுகின்றன. மூத்தவளின் மணம்... இருட்டு, புழுதி, பூசணம், சிற்றுயிர்கள்" என்றார். சம்வகை அவருடைய உள்ளம் நிகழ்வதை நோக்கிக்கொண்டிருந்தாள். "மூத்தவள் இல்லாத

இல்லம் இல்லை என்று இதனால்தான் சொல்கிறார்கள் போலும். களஞ்சியத்திலும் கருவூலத்திலும் காவலென மூத்தாளே அமையமுடியும். ஒட்டடை, சிலந்திகள், பல்லிகள்... இருள் வடிவ தெய்வங்கள் அவை. திருமகளுக்குக் காவலென சூழ அமர்ந்திருக்கும் பூதகணங்கள் இவை. உலகியலோர் செல்வத்தை விழைகிறார்கள். அதன்பொருட்டு மூத்தவளை வரவேற்று குடியமர்த்துகிறார்கள்.”

அந்த மறுப்பினூடாக அவர் அதை அகத்தே மெல்லமெல்ல ஏற்றுக்கொள்கிறார் என அவள் உணர்ந்தாள். “செல்வத்துடன் ஒரு கெடுமணம் அமையுமென்றால் அது செல்வத்தின் மணமென்றே ஆகிவிடுகிறது” என்றார். சூழ நோக்கியபின் அவளை நோக்கி புன்னகைத்து “மானுடனுக்கு இனியவை அனைத்தும் ஏதேனுமொரு கெடுமணம் கொண்டவை என்கின்றது காமநூல்” என்றார். சுந்தரர் வந்து நிற்க அவர் பேழைகளைத் திறந்து காட்டும்படி கையசைத்தார். ஏவலர் ஒவ்வொரு பெட்டியாக திறந்து காட்டினார்கள். பேழைகள் பூதங்கள் என வாய்திறந்தன. அவற்றுக்குள் இருந்த சிறிய அறைகளுக்குள் நாகங்கள் சுருண்டு வளைந்து செறிந்திருப்பவைபோல் அணிகள் அமைந்திருந்தன. அவை இருளில் ஆழ்துயிலில் அமைந்திருந்தன. ஒளிகொண்டு விழிகூசி நெளிந்தன. சீறி தலைதூக்கின. அவள் விழிகளை விலக்கிக்கொண்டாள்.

யுதிஷ்டிரன் ஒரு பேழையிலிருந்து ஒரு நகையை எடுத்தபின் திரும்ப வைத்தார். “நெடுநாட்களுக்குப் பின் இதை பார்க்கிறேன். இங்கு நாங்கள் இருந்தபோது ஒரு கொற்றவை விழவின்போது அவள் அணிந்தது அது. அன்று சுடரெனப் பற்றி தழலாடி எழுந்துவிடுவாளென எனக்குத் தோன்றியது” என்றார்.

பிறிதொரு பெட்டியைத் திறந்து நோக்கி “முற்றிலும் வெண்ணிற அருமணிகள் இவை. பாண்டியநாட்டு வெண்முத்துக்கள். இவற்றை பகலில் அணிந்தால் நீர் விழுந்த சுனைபோல் தோன்றும் அவள் உடல்” என்றார். அவர் முகம் மாறத் தொடங்கியிருப்பதை அவள் கண்டாள். இறுகியிருந்த முகத்தசைகள் நெகிழ்ந்தன. உடலிலிருந்த மெல்லிய நடுக்கு ஓயத்தொடங்கியது. ஒவ்வொரு அருமணியாக எடுத்து நோக்கி தனக்குள் ஆழ்ந்து தனக்குள் முணுமுணுத்து மீள வைத்து மீண்டும் ஒன்றைத் திறந்து அவர் சென்று கொண்டே இருந்தார்.

உடன் செல்லலாகாது என்பதுபோல் சம்வகை தயங்கி நின்றாள். ஒவ்வொரு நகையிலும் ஒருபொழுது நின்று பின் சென்றார். ஒவ்வொரு பொருளிலும் ஒரு நினைவு. வாழ்வின் விரைவென்பது தன்னை இவ்வண்ணம் ஆங்காங்கே உதிர்த்து முன்னெழல். மீளச் சென்று மீண்டும் ஒருகணம் கற்பனையில் வாழ்தல் ஒன்றே முதுமையில் எஞ்சியிருக்கும் இன்பம் போலும். அவள் அவரையே நோக்கிக்கொண்டிருந்தாள். யுதிஷ்டிரன் இளமை கொண்டபடியே செல்வது போலிருந்தது. அவர் உடலில் அசைவுகளில் விசை எழுந்தது. சிறு துள்ளலே கூட நிகழ்ந்தது. திரும்பி அவளைப் பார்த்து புன்னகைத்தபோது இளைஞன் போலிருந்தார். “இவை மொத்தமாக ஒன்றே. இந்நகைத் தொகுதியை அனற்குவை என்பார்கள். இவை அவளுக்கு தந்தையால் அளிக்கப்பட்டவை. பொருளெண்ணிச் சொல்லமுடியா மதிப்புகொண்டவை.”

“நீ அறிந்திருப்பாய், அவளை அனல் மகள் என்பார்கள். கன்னியென்றே அனலில் எழுந்தவள் அவள் என்று சூதர் கதைகள் சொல்கின்றன. இவையனைத்துமே செந்நிற வைரங்கள், செம்பவளங்கள். இச்செம்மணிகள் பதிந்திருக்கும்

பொன் ஆடகம். செம்பு கலந்து அனலுக்கு அணுக்கமென வண்ணம் கொள்ளச்செய்யப்பட்ட பொன். செம்பட்டாடையும் செம்மலர்களும் அணிந்து அவள் இவற்றை உடலெங்கும் அணிந்து வருகையில் தழலே எழுந்து அணுகுவது போலிருப்பாள்.” அவர் விழிகளில் பித்து எழுந்தது. “தழல் என்று அவள் இந்நகருக்குள் நுழையட்டும். தழலென்றுதான் அவளை இந்நகர் மக்கள் அறிந்திருப்பார்கள். அவ்வண்ணமே காணட்டும்” என்றார். அவள் “ஆணை” என்றாள்.

# களிற்றியானை நிரை - 47

### பகுதி ஐந்து : விரிசிறகு – 11

சம்வகை இடைநாழியினூடாகச் செல்கையில் எதிரே சுஷமை வந்தாள். அவள் அவளைக் காத்து நின்றிருந்தாள் என்பது தெரிந்தது. விசைகொண்ட காலடிகளுடன் அவள் அருகணைந்தாள். அக்காலடி ஓசை கேட்டு சம்வகை ஒருகணம் குனிந்து அவள் கால்களை பார்த்தாள். அவள் எண்ணியது போலவே அவள் கால்களும் பெரிதாக இருந்தன. இரு குறடுகளும் சிறு பன்றிக்குட்டிகள் என தாவி வந்தன. அருகணைந்து தலைவணங்கி “தாங்கள் சென்று மீள்வதற்குள் இங்கு பிறிதொன்று நிகழ்ந்துவிட்டது. தாங்கள் உடனிருந்தீர்கள் என்று அறிவேன். ஆகவே தாங்கள் அனைத்தையும் அறிந்திருப்பீர்கள் எனினும்…” என்றாள். “கூறுக!” என்று சம்வகை சொன்னாள்.

“இளவரசர்களை அரசர் அடித்துவிட்டார் என்றார்கள். நான் சூதர் பாடல்களிலோ அன்றி செவிவழிச் செய்திகளிலோ அவர்

அவ்வண்ணம் செய்ததாக அறிந்ததே இல்லை. ஆகவே அதை நம்ப என்னால் முடியவில்லை. ஆனால் அது நிகழ்ந்தது என உறுதி செய்துகொண்டேன். இரு இளவரசர்களும் முகம் சிவக்க வந்து தங்கள் அன்னையின் அறைக்குள் நுழைந்தனர். அவர்கள் சீற்றத்துடன் உரக்கப் பேசியதை கேட்டேன். அனைவரையும் வெளியே அனுப்பிய பின் அரசி அவர்களிடம் மேலும் பேசிக்கொண்டிருந்தார். பின்னர் அவர்கள் மஞ்சத்தறைக்குச் சென்று தாழிட்டுக்கொண்டனர். பிறகு எவரும் அவர்களை இதுவரை பார்க்கவில்லை. அங்கு என்ன நிகழ்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால்…”

சம்வகை தலையசைத்தாள். “தந்தையின் இடத்தில் மூத்தார் என இருந்து மாதுலர் தண்டிப்பதென்பது குடியில் வழக்கம்தான். ஆனால் அரசர் அவ்வாறு இயற்றலாகுமா என்று எனக்குத் தெரியவில்லை. அவரது தந்தையை அகற்றி தமையனின் முடியை கைப்பற்றி அரியணையில் அமர்ந்திருப்பவர் அரசர். அவரோ கைம்பெண்ணென இங்கு வந்திருக்கிறார். தந்தையை இழந்த மைந்தரென தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அவர்களின் உளநிலையை என்னால் புரிந்துகொள்ள இயல்கிறது” என்றாள் சுஷமை. “எவ்வண்ணம் இருக்கிறார் அரசி என்று தெரியவில்லை. நான் சென்று பார்க்கிறேன்” என்று சம்வகை சொன்னாள்.

அவள் நடக்க உடன் வந்தபடி “அவரிடம் என்ன பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே நான் சென்று கதவைத் தட்டி ஏதேனும் தேவையா என்று கேட்கவில்லை. எக்கணமும் அவர் கதவைத் திறந்து வெளிவந்து தேரைப் பூட்டுக, நாங்கள் கிளம்புகிறோம் என்று கூறக்கூடும் என்று உணர்ந்தேன்” என்றாள். “அவர்கள் உள்ளே பேசிக்கொண்டிருந்த குரலோசை

அப்படிப்பட்டது. அதிலிருந்த சீற்றம் அச்சுற வைப்பது.” அவளை நோக்காமல் நடந்தபடி “அவ்வண்ணம் நிகழாது” என்று சம்வகை சொன்னாள். “என்ன நிகழும் என்று பார்ப்போம்” என்றபின் செல்க என்று கைகாட்டி முன்னால் சென்றாள்.

சம்வகை துச்சளையின் அறைவாயிலில் தன் வரவை அறிவிக்கும்பொருட்டு ஏவல்பெண்டிடம் சொன்னாள். ஏவற்பெண்டு கதவை பலமுறை தட்டி அதன் பின்னரே உள்ளிருந்து தாழ் திறக்கப்பட்டது. ஏவற்பெண்டு உள்ளே சென்று மீண்டு வந்தபோது முகத்தில் எதுவும் தெரியவில்லை. “உள்ளே செல்க, தலைவி!” என்று அவள் சொன்னபோது சம்வகை உள்ளே சென்றாள். உள்ளே மஞ்சத்தில் சுகதன் துயின்றுகொண்டிருந்தான். அவனுடைய பருத்த உடலும் குழைந்த தோள்களும் அப்போது குழந்தையுடையவைபோல் தோன்றின. வெயில்படாது குகைக்குள் எழுந்த மரம்போல. துச்சளை எழுந்து அவளை நோக்கி வந்து “வருக!” என்றாள். அவள் கன்னத்தில் விழிநீர் உலர்ந்திருந்தது. அதை இரு கைகளால் துடைத்த பின் “கூறுக!” என்றாள்.

“அரசி, என்ன நிகழ்ந்தது என்று தாங்கள் அறிந்திருப்பீர்கள்” என்று சம்வகை தொடங்க துச்சளை “ஆம், மைந்தர் சொன்னார்கள்” என்றாள். “நானும் உடனிருந்தேன். அத்தருணத்தில்…” என்று சம்வமை தயங்க துச்சளை உரக்க “நீ எதையும் கூற வேண்டியதில்லை. அச்செய்தியை அறிந்த கணமே என் உள்ளம் நிறைவுற்றுவிட்டது. இங்கு நான் வந்தது செல்வத்தின் பொருட்டோ, அரசுகோரும் பொருட்டோ அல்ல. அதற்கப்பால் என் குடியின் முதன்மையென நின்றிருக்கும் ஆண்தகை ஒருவருக்காக. இன்று என் மைந்தருக்குத் தந்தையென்றும் மூதாதை என்றும் எவரும் இல்லை. அங்கு

நிலைகொண்டு இவர்களுக்கு ஆணையிடும் குரல் ஒன்றுக்காகத்தான் நான் வந்தேன். இன்று அக்காட்சியை அகத்தில் கண்டபோது மெய்ப்படைந்தேன். தன் மைந்தர் பிழை கண்டு பொங்கி எழும்போதே ஆண்தகை தந்தையாகிறார். இன்று அவர்களின் குடிமூதாதையர் அனைவரும் திரண்டு எழுந்துவந்து தலைதொட்டு வாழ்த்தியதாகவே உணர்கிறேன்” என்றாள்.

அச்சொற்களை அவள் முன்னரே முழுமையாக தன்னுள் கேட்டுவிட்டிருந்தாள் எனினும் சம்வகை மெய்ப்புகொண்டாள். “இன்று அவர்களுக்கு விழுந்த இந்த அடி என்றும் அவர்களின் நினைவில் நிற்கவேண்டும். தாங்கள் யாருமற்றவர்களல்ல, விண்ணிலும் மண்ணிலும் மூதாதையர் சூழ வாழ்கிறோம் என்று அவர்கள் உணரவேண்டும். இதற்கப்பால் நான் இனி இங்கு விழைவதும் மகிழ்வதும் பிறிதொன்றுமில்லை” என்றாள் துச்சளை. அவள் விழிகள் நிறைந்து வழியத்தொடங்கின. “ஆம், அரசி அதையே நானும் உணர்ந்தேன்” என்றாள் சம்வகை. “தந்தையின் இடத்தில் தாய்மாமன் இருப்பார். அவர்கள் அதை உணர்ந்தாகவேண்டும்.” துச்சளை விழிதுடைத்து சிறிய வெண்பற்கள் தெரிய புன்னகைத்து “அதைத்தான் நானும் அவர்களிடம் கூறினேன். அவர்கள் அதை உணரும் நிலையில் இன்றில்லை. அவர்கள் அதிர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை உணர்வார்கள். ஏனெனில் மெய்யான உணர்வு அவர்களை எப்படியும் சென்றடையும்” என்றாள்.

சம்வகை “அரசி, நான் பிறிதொன்று உரைப்பதற்காக தங்களைத் தேடி வந்தேன்” என்றாள். “கூறுக!” என்றாள் துச்சளை. “இன்று இவ்வரண்மனையின் இல்லமகளென்று தாங்களே இருக்கிறீர்கள். நாளை புலரியில் இந்திரப்பிரஸ்தத்திலிருந்து

அரசி திரௌபதி நகர்நுழைகிறார். தாங்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்று அரியணை அமர்த்தவேண்டிய பொறுப்பில் இருக்கிறீர்கள். அதற்கான முறைமைச்சடங்கு என்ன என்று தங்களுக்குத் தெரியும்” என்றாள். “ஆம், அது நான் செய்ய வேண்டியதுதான். என் பொறுப்பு அது” என்றாள் துச்சளை. “தாங்கள் உளம் சுணங்கக்கூடும் என்று சுரேசர் கூறினார்” என்றாள் சம்வகை.

“ஆம், ஒருவேளை உளம் சுணங்கியிருக்கக் கூடும்” என்று துச்சளை கூறினாள். “பேரரசியாக அவள் வருகிறாள் என்று எனக்குச் சொல்லப்பட்டதுமே என் உள்ளத்தில் சிறு முள் எழுந்தது என்பதை நான் மறைக்கவில்லை. என் தமையனின் தெய்வத்தின் முன் விளக்கேற்றியபோது அது வஞ்சமென வளர்ந்தது. அவள் நிமித்தமே என் தமையன் உயிர்துறந்தான் என்பதை நான் ஒருபோதும் மறக்க இயலாது. இவ்வவையில் அவள் சிறுமைப்படுத்தப்பட்டாள், அதன் பொருட்டு என் கொழுநனையோ என் மூதாதையரையோ நான் பொறுத்துக்கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ இல்லை. ஆனால் அவள் கொண்ட வஞ்சம் என் குடியை முற்றழித்தது. எந்தை கைவிடப்பட்ட தெய்வமென காட்டில் அலைகிறார். எண்ண எண்ண என் குருதி துடிக்கத்தான் செய்கிறது. ஆனால் இன்று என் தந்தையென்றும் மூதாதையென்றும் இருப்பவர் மூத்தவராகிய யுதிஷ்டிரன். இத்தருணத்திற்குப் பின் பிறிதொன்று எண்ணுவதற்கோ மாற்று கருதுவதற்கோ எனக்கு உரிமையில்லை” என்று துச்சளை சொன்னாள்.

“ஆம் அரசி, முற்றளிப்பதே அன்னையர் செய்ய வேண்டியது. ஆராய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லை” என்றாள் சம்வகை. துச்சளை மீண்டும் விழிநீரை துடைத்து புன்னகைத்து

“அதைத்தான் எண்ணிக்கொண்டிருந்தேன். அன்னையர் விரும்புவது மைந்தர் வளராத குழந்தைகளாக தன் கையில் இருக்கவேண்டும் என்றுதான். வளர்ந்த பின் அவர்கள் ஆற்றும் செயல்கள், கொள்ளும் பொறுப்புகள் அனைத்திற்கும் தந்தையர் பொறுப்பேற்க வேண்டும். அதை ஏதேனும் ஆணிடம் அளித்துவிட்டு முற்றிலும் விடுதலை பெறுகையிலேயே அன்னை தன் அன்பை முழுதளிக்க முடியும்” என்றாள். “இன்று அதன் நிறைவை நான் அடைந்தேன். எவ்வளவு தவித்துக்கொண்டிருந்தேன்! எத்தனை பெரிய விடுதலை... அவர்களின் தந்தை இறந்ததிலிருந்து இதுநாள் வரை என் உள்ளத்தை அழுத்திய எடை இதுதான். இனி கவலையில்லை.”

துச்சளை மேலும் சிரித்து “இன்னும் சில நாட்களில் அவர்கள் பொருட்டு மூத்தவரின் மேல் சினம்கொள்ளவும், மூத்தவரை எதிர்த்துப் பேசவும், அவர்கள் பொருட்டு மூத்தவரிடம் சொல்லாடவும் கூடியவளாக நான் மாறிவிடுவேன்” என்றாள். துச்சளையின் புன்னகை என்றுமிருந்ததைவிட அழகாக இருக்கிறது என சம்வகை எண்ணிக்கொண்டாள். “மூதன்னையாக ஆகும்போது மைந்தரை மைந்தரின் தரப்பில் மட்டுமே நின்று பார்ப்பவர்களாக மாறிவிடுகிறார்கள் பெண்கள் என்று நூல்கள் சொல்கின்றன” என்றாள் சம்வகை. துச்சளை “இன்று நான் துயில்வேன். நாளை எழுகையில் இந்த மாளிகையில் அன்னை இருந்த நிலைக்கு நான் வந்துவிடுவேன். என் மாளிகைக்கு அரசியை வரவேற்கும் உணர்வை அடைந்துவிடுவேன்” என்றாள். சம்வகை “நன்று அரசி, அவ்வாறே ஆகுக!” என்று வெளியே சென்றாள்.

தன் அறைக்குள் அவள் அமர்ந்ததுமே அங்கே சுரதனை எதிர்பார்க்கலானாள். நேரம் செல்லச்செல்ல அந்த எதிர்பார்ப்பு மிகையானதோ என்னும் ஐயமெழுந்தது. அவன் வந்தாகவேண்டும். அவனுக்கென ஒரு நாடகம் இருக்கிறது, அதை ஆடியாக வேண்டும். வாழ்க்கையின் தருணங்களில் தங்களுக்குரிய நாடகத்தை ஆடாமல் அகல்பவர்கள் சிலரே. அதை தானுணர்ந்து தடுத்துக்கொள்ளும் நுண்ணறிவுள்ளவர்கள் யோகியரேதான். அவள் புன்னகைத்தாள். அரசுசூழ்தலும் ஓர் யோகம். நாடகத்தை ஆடாமல் பிறரை நடத்தவிட்டு நோக்கியிருத்தலே அதன் வழிமுறை. அவள் புன்னகைப்பதைக் கண்டு காவலர்தலைவனான காளியன் ஐயத்துடன் திரும்பி நோக்கினான்.

வெளியே காலடியோசை கேட்டதும் அவள் புரிந்துகொண்டாள். ஏவலன் வந்து அறிவித்ததும் முகத்தை செறிவாக்கிக்கொண்டு அவனை அகத்தே வரச்சொன்னாள். அவன் வந்ததும் அமரச்சொல்லி கைகாட்டினாள். அவன் உரத்த குரலில் “நான் அரசகுடியினன். அரசனின் மைந்தன். சிந்துநிலம் இன்னும் என் கையைவிட்டுச் செல்லவில்லை” என்று கூவினான். “அரசகுடியினர் வருகையில் நாலாம்குலத்தோர் அமர்ந்திருந்து வரவேற்பதா அஸ்தினபுரியின் நெறி?” சம்வகை “ஆம்” என்றாள். அந்த ஒற்றைச் சொல்லை புரிந்துகொள்ளாமல் அவன் திகைத்தான். ஒருகணம் கழித்து “என்ன சொல்கிறாய்? எவரிடம் பேசுகிறாய் என்று தெரிகிறதா?” என்று உடைந்த குரலில் கூவியபடி அருகே வந்தான்.

“இது படைத்தலைவியின் அறை. இனி ஒரு மிகைச்சொல் எழுப்புவீர்கள் என்றால் இக்கணமே தலைவெட்டி வீழ்த்த

ஆணையிடுவேன்” என்று அவள் அவன் விழிகளை நோக்கி சொன்னாள். அவன் அடிபட்டதுபோல உடல் விதிர்க்க கால் தளர்ந்தான். கைகள் நடுங்க அவற்றை கோத்துக்கொண்டான். “அமர்க!” என்று அவள் சொன்னாள். அவன் அமர்ந்துகொண்டான். “என்ன சொல்ல வந்திருக்கிறீர்கள் என்பதை சொல்க! இது சிந்துநாடு அல்ல, புதிய வேதம் எழுந்த அஸ்தினபுரி” என்றாள். அவன் கைகளை நெஞ்சோடு சேர்த்து கட்டிக்கொண்டான். “இங்குள்ள நெறிகளை புரிந்துகொள்க! அரசுடன் பணிகொள்பவர்கள் யானையுடன் உறவாடுபவர்கள்போல என்று அஜிதநீதி சொல்கிறது. எக்கணமும் எவரையும் கொல்லக்கூடுமென்ற வாய்ப்பை எப்போதும் யானை தன் உடலில் கொண்டிருக்கிறது என்று உணர்க!”

அவன் பெருமூச்சுவிட்டான். கண்கள் கலங்கியிருந்தன. முகம் சிவந்து நீல நரம்புகள் துடித்துக்கொண்டிருந்தன. மூச்சு அப்போதும் சீரடையவில்லை. “கூறவந்தவற்றை கூறுக!” என்றாள். “நான் பேரரசி திரௌபதியை வரவேற்க களமுற்றத்திற்கு வரப்போவதில்லை. என் அன்னை வரலாம், அதை என்னால் விலக்க முடியாது. நான் வரமாட்டேன். எனக்கு ஆணையிட எவரையும் ஒப்பப்போவதில்லை” என்று சுரதன் சொன்னான். “ஆணையிட்டால் எவரும் ஒப்பியே ஆகவேண்டும். அன்றி கழுவிலேறவேண்டும்” என்று அவள் அவன் விழிகளை நோக்கி சொன்னாள். அவன் விழிகள் தழைந்தன. “ஆனால் ஆணையிடப் போவதில்லை. பேரரசிக்கு உளம்நிறைந்த வாழ்த்தே அமையவேண்டும் என விழைகிறோம்.”

“அவர் என் தந்தையை கொன்றவர்...” என்று அவன் சொன்னான். “எந்தை தலையறுந்து களம்பட அவரே வழியமைத்தார். நான் அவரை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.” அவன் குரல் விந்தையாக உடைந்து சிறுவனுடையதுபோல் ஆகியது. விழிகள் பித்துகொண்டு உருளத்தொடங்கின. “அவர்மேல் நான் போரிலிருக்கிறேன். இந்த அஸ்தினபுரி நகர்மேல் போரிலிருக்கிறேன். என்னை இன்று உங்கள் அரசர் அடித்தார். அக்கணமே நான் வாளை உருவியிருக்கவேண்டும். காத்திருக்கிறேன். ஆம், நான் காத்துக்கொண்டிருக்கிறேன். இங்குள்ள எவர் நெஞ்சிலும் என் வாள் பாயலாம். உங்கள் அரசர், அவர் இளையோர், அரசியர். எவராயினும் என் எதிரிகளே. அதை அவர்களும் அறியட்டும். அதை சொல்லவே வந்தேன். நான் வாயில்நின்று உங்கள் அரசியை வரவேற்றால் எந்தை என்மேல் சினம்கொள்வார். என் மூதாதையரின் தீச்சொல் என்மேல் எழும்...”

அவன் உடனே எழுந்துவிட்டான். “அவ்வளவுதானா?” என்று அவள் கேட்டாள். “அவ்வளவுதான், இனி நான் சொல்லவேண்டியதொன்றுமில்லை. நான் செய்துகாட்டவே எஞ்சியிருக்கிறது. அதை நீங்கள் காண்பீர்கள்” என்றபின் அவன் வெளியே சென்றான். அறைவாயிலில் நின்று திரும்பி நோக்கி “ஆனால் ஒன்று உணர்க! அதையும் சொல்லியாகவேண்டும். உன்னை நான் இன்று இவ்வண்ணம் விட்டுச்செல்வது அஞ்சி அல்ல. தயங்கியும் அல்ல. நீ சூதர்குலத்தவள். உன் குருதியால் என் வாள் நனையலாகாது. என்றேனும் என் தலையில் முடி அமையுமென்றால் அன்று உன் தலைகொய்ய என் படைவீரர்களில் இழிந்தோனை அனுப்புவேன்” என்றான். சம்வகை புன்னகைத்தாள். அவன் சிவந்த பித்துக்கண்களால் அவளை நோக்கிவிட்டு வெளியேறினான்.

அவள் எழுந்து தன் கவசங்களை அணியும்பொருட்டு செல்லத் தொடங்கியபோது விசைகொண்ட காலடிகளுடன் சுரேசர் அவள் அறைவாயிலில் வந்து நின்றார். ஏவலன் அவளிடம் செய்தி சொல்ல உள்ளே வருவதற்குள் அவள் வெளியே சென்று அவரை எதிரேற்றாள். வணங்கி "வருக, உத்தமரே!" என்றாள். "அவர் செல்வதை பார்த்தேன், என்ன சொல்கிறார்? அவரால் பேரரசியை எதிர்கொண்டு வரவேற்க முடியாது என்கிறாரா?" என்றபடி அமர்ந்தார். "ஆம், அதை எதிர்பார்த்திருந்தேன்" என்று அவள் சொன்னாள். "அவர் ஏன் அப்படி தன்னை காட்டுகிறார் என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன்." சுரேசர் சிரித்தபடி "அவர் தன்னை நிறுவிக்கொள்கிறார். நம் முன் அல்ல, தன் முன். தன் இளையோன் முன், அன்னையின் முன்" என்றார்.

"அவரைப்பற்றி அரசரிடம் விரிவாக சொல்லியாகவேண்டும்" என்று சம்வகை சொன்னாள். "அவர் என்ன நினைத்திருக்கிறார் என்று தெரியவில்லை." சுரேசர் "சிந்துவின் இளவரசர்கள் தன் மைந்தர்களைப்போல என்று அவர் என்னிடம் சற்றுமுன் சொன்னார்" என்றார். "அவ்வாறே அவரால் எண்ண முடியும். இவ்விரு இளவரசர்களும் இங்கே இருப்பார்கள் என்றால் ஆறே மாதங்களில் அவர் இவர்களை இங்கே அரசர்களென மணிமுடி சூட்டி அமரவைக்கவும்கூடும். அவர் உள்ளம் குற்றவுணர்வால் நெகிழ்ந்திருக்கிறது. சொல்லச் சொல்ல விழிநீர் பெருகுகிறது. அவர் களம்பட்ட அத்தனை இளவரசர்களுக்காகவும் இவர்களிடம் நிகர்செய்ய எண்ணுகிறார். இந்த அரண்மனையில் இளையோர் குரல் ஒலித்து எத்தனை காலமாகிறது அமைச்சரே என்றபோது குரல் இடற தலைகுனிந்தார்..."

சம்வகை சுரேசர் எண்ணுவதென்ன என்று நோக்கிக்கொண்டிருந்தாள். "அவர் இவர்களுக்கு ஏதேனும்

ஈடுசெய்யவேண்டும். அதை இந்நகரமும் எதிர்பார்க்கும்” என்றார். சம்வகை “ஆனால் இவர்கள் ஜயத்ரதனின் மைந்தர். அதை எந்நிலையிலும் மறக்கலாகாது” என்றாள். “அவர்களை நாம் இப்போது மதிப்பிட வேண்டியதில்லை” என்று மட்டும் சுரேசர் சொன்னார். அவள் அவருள் ஓடுவனவற்றை புரிந்துகொள்ளாமல் குழம்பினாள். “அவர்கள் இருவரும் இங்கே தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். எவ்வகையிலேனும் அவர்கள் தங்களை வகுத்துக்கொள்ள இவ்வாழ்க்கை அவர்களுக்கு உதவட்டும்” என்று சுரேசர் சொன்னார். “ஆனால்…” என அவள் தொடங்க இடைமறித்து “சில தருணங்களில் இவ்வாறுதான். நாம் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டே ஆகவேண்டுமென்ற நிலை உருவாகிறது. அதை அளிமடம் என்கின்றன நூல்கள்” என்றார் சுரேசர்.

ஏவலன் உள்ளே வந்து வணங்கி “சிந்துநாட்டு இளவரசர் சுரதன்” என்றான். சுரேசர் புன்னகைக்க அதன் பொருள் என்ன என வியந்தபடி “அனுப்புக!” என்று சம்வகை சொன்னாள். அவன் சென்றபின் “மீண்டும் வருகிறார். சில சொற்கள் எஞ்சியிருக்கின்றன போலும்” என்றாள். சுரேசர் அதற்கும் புன்னகைத்தார். உள்ளே வந்த சுரதன் சுரேசரை நோக்கி ஒரு கணம் திகைத்தான். பின்னர் தன்னை திரட்டிக்கொண்டு “நான் பேரரசியை வரவேற்க வருகிறேன். என்ன செய்யவேண்டும்? அன்னையுடன் அரண்மனைமுகப்பில் நிலைகொள்ளவேண்டுமா? அல்லது கோட்டைமுகப்புக்கே செல்லவேண்டுமா?” என்றான். சம்வகை “நீங்கள் இளவரசர். இந்த அரண்மனையில் இன்று அரசகுடி என எஞ்சுபவர்கள் நீங்கள் இருவருமே. கோட்டைவாயிலுக்குச் சென்று வரவேற்பதே முறை” என்றாள். “ஆம், அதை செய்கிறேன்” என்றான் சுரதன்.

அவள் மேலும் சொல்லாமல் அவனை நோக்கினாள். “நான் என் வஞ்சத்தை மறக்கவில்லை. ஆனால் இது என் தந்தையின் ஆணை” என்று அவன் சொன்னான். “தந்தை உங்களிடம் சொன்னாரா?” என்று சம்வகை கேட்டாள். “ஆம், நான் என் அறைநோக்கி சென்றேன். ஓர் எண்ணம் எழுந்தது. மீண்டும் சென்று சூதாடுவதல்லவா என் எதிர்ப்பை வலுவாக நிலைநாட்டும் வழிமுறை என்று. ஆகவே நேராக சூதாட்ட அறைநோக்கி சென்றேன். அது பூட்டப்பட்டிருந்தது. வாயிலில் எந்தை நின்றிருந்தார். விழியில்லாத தோற்றம். என்னை உணர்ந்ததும் கைநீட்டி உரத்த குரலில் ஆணைகளை இட்டார். சூதாடாதே, திரும்பிச் செல் என்றார். எந்தையே நான் என்ன செய்யவேண்டும் என்றேன். இப்போது இங்கிருக்கும் எல்லா நெறிகளுக்கும் கட்டுப்படு. யுதிஷ்டிரனுக்கு அணுக்கமானவனாக, அனைவருக்கும் வேண்டியவனாக திகழ்க என்று எந்தை சொன்னார். ஆணை என தலைவணங்கினேன். நேராக இங்கே வந்தேன்.”

“நன்று, இனி சிக்கலேதும் இல்லை” என்று சம்வகை சொன்னாள். “நான் இன்னமும் அதே வஞ்சத்துடன்தான் இருக்கிறேன். என் உள்ளம் எரிந்துகொண்டிருக்கிறது. அதை எவரும் மறக்கவேண்டியதில்லை” என்று சுரதன் சொன்னான். “நான் என் சொற்களில் ஒன்றையேனும் திரும்ப எடுத்துக்கொள்ளவில்லை. அதைக் குறித்த ஐயமே தேவையில்லை.” அவன் சுரேசரை நோக்கிவிட்டு “ஒருபோதும் நான் அந்தணரின் சூழ்ச்சிகளுக்கு ஆட்படப்போவதில்லை. என் அறத்தை என் வாளே முடிவுசெய்யும்” என்றபின் வெளியே சென்றான். சுரேசர் அவன் செல்வதை நோக்கியபின் திரும்பி சம்வகையிடம் “ஒவ்வொருவரும் தங்கள் இடங்களை

நடிக்கும்பொருட்டு உரிய உரு கொண்டு, உரிய சொற்கள் கொண்டு அரங்குக்கு வருகிறார்கள்” என்றார்.

சம்வகை அவரை கூர்ந்து நோக்கி “இவர் நடிக்கப்போகும் இடம் என்ன?” என்றாள். “அதை எவரும் இப்போது சொல்லமுடியாது. உண்மையில் அவர் இனிமேல்தான் அதை நமக்கு காட்டவேண்டும். அவரை ஆட்டுவிக்கும் தெய்வங்கள் மட்டுமே அதை இன்று அறியும்” என்றபடி சுரேசர் எழுந்துகொண்டார். “பேரரசி வந்துகொண்டிருக்கிறார். அரசரின் அணிகள் சென்று சேர்ந்துவிட்டன. அணிகளை பார்த்தேன். நன்று. அவ்வெண்ணம் எல்லா வகையிலும் நன்று. பெண்களுக்கு மட்டுமே அவ்வாறு தோன்றும். அரசுசூழ்தலில் எப்போதும் பெண்ணின் இடம் என ஒன்று இருக்கவேண்டும். அதை உணர்ந்ததும் உங்களிடம் சொல்லவேண்டும் என தோன்றியது. ஆகவேதான் வந்தேன்” என்றார். அவள் புன்னகையுடன் “என் நல்லூழ்” என்றாள். அவர் வாழ்த்திவிட்டு கிளம்பினார்.

# களிற்றியானை நிரை - 48

### பகுதி ஐந்து : விரிசிறகு – 12

சம்வகை நெடுந்தொலைவில் முதல் கொம்பொலியை மிக மெல்லிய செவித்தீற்றலென கேட்டாள். அது வானில் ஒரு பறவை புகைத்தீற்றலென, ஒளிச்சுழல்கை என வளைந்து செல்லும் அசைவுபோல் அவளுக்குத் தோன்றியது. அவளைத் தவிர அங்கு காவல்மாடத்தில் நின்றிருந்த எவரும் அதை கேட்கவில்லை. அவள் மீண்டுமொரு கொம்பொலி எழுவதற்காக விழியும் செவியும் கூர்ந்தாள். அவ்வொலியை

தன் விழிகளால் பார்த்ததாக அவளுக்குத் தோன்றியது. அவள் படிகளில் இறங்கி கீழே வர சுதமை அவளை நோக்கி ஓடி வந்தாள். “கொம்பொலியை நான் கேட்டேன். அணுகிக்கொண்டிருக்கிறார்” என்றாள். “ஆம், அணிவகுப்பை பிறிதொரு முறை சீர்நோக்குக! அது பிழையற்றிருக்க வேண்டும்” என்று அவள் சொன்னாள். “ஆணை தலைவி, அதைத்தான் செய்யவிருக்கிறேன்” என்று சுதமை சொன்னாள்.

முழுக் கவசஉடையில் நின்றிருந்த சம்வகை உள்கோட்டை முற்றத்தில் நான்கு நிரைகளாக அணிவகுத்து நின்றிருந்த கவசப் படைவீரர்களையும், அவர்கள் அருகே வலப்பக்கம் நீள்நிரையென நின்ற அணிச்சேடியரையும் இடப்பக்கம் நின்றிருந்த இசைச்சூதர்களையும் பார்த்தாள். அவர்கள் அனைவருமே அஸ்தினபுரிக்கு புதியவர்கள். அங்கு முன்பு நிகழ்ந்த எந்த அரச வரவேற்பு நிகழ்ச்சியையும் பார்க்காதவர்கள். அவர்களுக்கு இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஒவ்வொரு முறையும் பயிற்சியில் ஏதேனும் ஒன்றை பிழையாகவே செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் என்ன நிகழவேண்டும் என்பது புரிந்திருந்தது. ஆனால் எப்போதும் சடங்குகளை உடல்கள் கற்று மறந்து சலித்து பின் தன்னியல்பாக இயற்றுகையிலேயே ஒழுங்காக அமைந்தன.

பிழையின்றி ஒன்று இருக்காது என்று அவள் அறிந்திருந்தாள். அது அவர்கள் மட்டுமே அறிந்ததாக, நிகழ்கையில் அரசி அறியாது கடந்து செல்வதாக அமையும் என்றால் அது வெற்றி. ஆனால் எப்பிழை நிகழும் என்று அங்கே நின்று மீளமீள நோக்கியபோது கண்டுபிடிக்க முடியவில்லை. கைவிடுபடைகளும் படைத்திரளும் எந்நிலையிலும்

நிகழவிருக்கும் பிழையொன்றை தன்னுள் முன்னரே கொண்டிருக்கின்றன என்றன அரசநெறிநூல்கள். அது மிகத் திறமையாக மறைந்திருக்கிறது. அவ்வாய்ப்பு ஏன் விழிகளுக்குப் படுவதில்லை? நிகழும் வரை அது எங்கிருக்கிறது? அது எவருடைய உள்ளத்தில் முளைத்துக்கொண்டிருக்கிறது? பொருளில் அது வெளிப்படுவதில்லை. பொருளில் வெளிப்படுகையில் மட்டுமே உள்ளத்தில் அது நிகழ்ந்திருப்பது தெரிகிறது.

அனைத்து வீரர்களும் உள்ளம் கிளர்ந்திருந்தனர். அவர்கள் தங்கள் வாழ்வின் முதன்மையான தருணம் ஒன்றை இயற்றவிருப்பதாக எண்ணினர். ஆனால் மீளமீள அளிக்கப்பட்ட பயிற்சிகளால் சலிப்பும் அடைந்திருந்தனர். ஆகவே இருநிலை கொண்டிருந்தனர். அந்த அலைவால் அவர்களால் அந்தத் தருணத்தை முழுமையாக நிறைக்க முடியவில்லை. பயின்று பழகிய முந்தைய வீரர்கள் அத்தருணத்தில் முற்றிலும் ஆர்வம் இழந்தவர்கள்போல, முழுமையாக வேறெங்கோ உளம்சென்றுவிட்டவர்கள்போல இருப்பார்கள் என சுரேசர் சொல்வதுண்டு. அவர்களிடம் தெரியும் அந்த ஆர்வமின்மை சடங்கு தொடங்குவதற்கு முன்புவரை பதற்றம் அளிப்பது.

இளமையில் சுரேசர் ஒவ்வொரு முறையும் அந்தப் பதற்றத்தை அடைவதுண்டு என்றார். ஒருமுறை அவருடைய நிலைகொள்ளாமையைக் கண்ட அமைச்சர் கனகர் “அமர்ந்திருக்கும் பறவையைக் கண்டால் அது பறக்குமென எவராலும் எண்ண இயலாது. சிறகு விரிக்கையில் பறவை பிறிதொன்று என ஆகிறது” என்றார். அன்றைய சடங்கில் அர்ஜுனன் நகர்நுழைந்தபோது அத்திரள் வாழ்த்தொலி கூவியது. என்றும் அங்கே அவ்வண்ணம் வாழ்த்தொலி

எழுப்பிக்கொண்டிருப்பதுபோல. பிறிதொன்றை அறியாததுபோல. அவ்வாழ்த்தொலியின் உணர்வுகளால் அள்ளிக் கொண்டுசெல்லப்பட்டது. அக்கணம் புதிதென நிகழ்ந்ததுபோல அங்கே நிறைந்து அலைகொண்டது.

அதை பின்னர் எண்ணிக்கொண்டபோது சுரேசர் ஒரு அறியாத் தெய்வம் வந்திறங்கி ஆடி பின்னடைந்ததாகவே கருதினார். “ஆம், அது அனைவரின் கனவுக்குள்ளும் கருவடிவில் உறங்குகிறது. அங்கிருந்து வந்தால் மட்டுமே அது இயல்பாக நிகழும், இல்லையேல் அது வெறும் நடிப்பு” என்றார் கனகர். “அந்த தெய்வம் இங்குள்ள அனைவரையும் வாழ்த்துகிறது. ஒருவரை வாழ்த்தும்போதும் வணங்கும்போதும் மட்டும் மானுடரில் வந்திறங்கும் ஒன்று உண்டு. மானுடரை மானுடர் வாழ்த்துவதில்லை என்று உணர்க! மானுடரில் எழுந்த பிறிதொன்றையே அவர்கள் வாழ்த்துகிறார்கள். வீரத்தை, தன்னளிப்பை, அழகை, மாண்பை, மூப்பை, இளமையை.”

“எந்த வாழ்த்தும் மெய்யாக எழுகையில் தான் எழும் நெஞ்சை கிளரச் செய்கிறது. வாழ்த்தப்படுவது அதிலும் வந்தமைகிறது. அவ்வுள்ளம் விரிவுகொள்கிறது. அதன் ஆழங்கள் வரை ஒளி நிறைகிறது. ஆகவேதான் நூல்கள் வாழ்த்துக என்கின்றன. மூத்தவரை, பெரியவரை, கடந்தவரை வணங்கி வாழ்த்துக! இளையவரை, எழுபவரை, சிறியோரை கனிந்து வாழ்த்துக! வாழ்த்து சொல்லில் எழும் ஒளி. வாழ்த்து நிறைந்திருக்கும் இடங்களில் இருள் திகழ்வதில்லை. வாழ்த்தொலிபோல் மங்கலம் பிறிதொன்றில்லை. இனிய இல்லத்தில் வாழ்த்தொலி ஒழியாதமைய வேண்டும். வெற்றிச்சிறப்புகொள் நகரில் வாழ்த்தொலி என்றும் நிறைந்திருக்க வேண்டும். வாழ்த்தச் சித்தமான மானுடர் தெய்வங்களால் வாழ்த்தப்படுகிறார்கள்.”

சம்வகை அதை முன்னரே கண்டிருந்தாள். வாழ்த்துகூவும் பொருட்டு சாலையோரங்களில் கூடியிருப்பவர்களை. அவர்கள் அரசப்படையினரால் திரட்டப்பட்டோர் என அவளுக்குத் தோன்றும். அமைப்போர் பதறி அலைவார்கள். எண்ணி எண்ணி ஒவ்வொன்றையும் ஆராய்வார்கள். வாழ்த்தொலிப்போர் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. சில தருணங்களில் அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருப்பார்கள். விரல்களாலோ படைக்கலங்களாலோ ஒருவரை ஒருவர் தொட்டு செய்திகளை சொல்லிக்கொள்வார்கள். விழிகள் ஒன்றையொன்று நோக்கி உரையாடிக்கொண்டிருக்கும். அத்திரளை நோக்காமல் செவி மட்டும் கூர்ந்தால் மெல்லிய காற்று உலாவும் புதர்போல் ஓசை எழுவதை கேட்க முடியும். அறியாத ஒருவர் அத்திரளைப் பார்த்தால் அது முற்றிலும் ஒழுங்கற்றது என்று தோன்றும்.

ஆனால் உரிய தருணம் எழுந்ததும் அது மிக இயல்பாக செயல்களை செய்யத்தொடங்கும். அவர்களின் குரல்கள் வெடித்தெழும். களிகொண்டு கூச்சலிடுவார்கள். கூத்தாடுவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் அதற்கென்றே வடிவமைக்கப்பட்டவர்கள்போலத் தோன்றுவார்கள். சம்வகை தன் தந்தையுடன் பலமுறை அணிவகுப்புகளை காண வந்திருக்கிறாள். மக்கள்திரளில் இருந்து பார்க்கையில் அங்கே ஒற்றை உயிர் ஒன்று முட்களுடனும் பீலிகளுடனும் செயல்பட்டுக்கொண்டிருப்பதாகவே தோன்றும். அவளுடைய இளம்விழிகளுக்கு அது ஒரு விந்தைப் பெருவிலங்கென மாயம் காட்டும்.

சம்வகை மீண்டும் மீண்டும் கொம்புகள் எழுவதை கண்டாள். சுதமையிடம் கைகாட்டிவிட்டு அவள் தன் புரவியிலேறி

கோட்டைக்கு வெளியே சென்றாள். வெளி முற்றத்தின் விரிந்த பிறைவடிவப் பரப்பில் முந்தையநாளே அங்கிருந்த அயலாரையும் வணிகர்களையும் விலக்கி மையவெளி ஒழித்து இடப்பட்டிருந்தது. அங்கு தங்கியிருந்தவர்கள் இருபுறமும் பிளந்து விலகி காடுகளை ஒட்டி திரண்டிருந்தார்கள். கங்கையிலிருந்து அஸ்தினபுரி வரைக்குமான நெடும்பாதை முழுக்க நிலம்நிறைத்து வந்துகொண்டிருந்த மக்கள்திரளுக்கு நடுவே ஒரு பலகைப்பாதை உருவாக்கப்பட்டிருந்தது.

ஒரே இரவில் அதை தென்னகத்து தச்சர்கள் அமைத்தனர். பலகைகளை நீள்வாட்டில் அமைப்பதே அஸ்தினபுரியில் வழக்கம். சிந்துகங்கை நிலம் முழுக்கவே அவ்வண்ணம்தான். தென்னகத்தார் அதை குறுக்காக அடுக்கினர். அது விந்தையெனத் தோன்றியது. ஆனால் அதை விரைவாகச் செய்ய முடிந்தது. எல்லா வகையான பலகைகளையும் அடுக்க முடிந்தது. பலகையின் ஒருமுனையில் தேர் ஏறும்போது மறுமுனை மேலெழுவதனால்தான் பலகைப்பாதை உடைந்து உருமாறுகிறது எனப் புரிந்தது. “தென்னகத் தச்சர்கள் திறன்கொண்டவர்கள்” என்றார் சுரேசர். “இச்சிறு உண்மை இங்குள்ள தச்சர்களுக்கு ஏன் தோன்றவில்லை?” என்று சம்வகை கேட்டாள். “இங்கே குடிகள் வேரூன்றிவிட்டிருந்தன. புதியவர்கள் எவரும் சேரமுடியாமல் குடிவாயில்கள் மூடப்பட்டிருந்தன. தென்னகம் வளரும் குழவி என ஒவ்வொருநாளும் மாறிக்கொண்டிருக்கும் நிலம்” என்றார் சுரேசர்.

சம்வகையும் காவல்படையும் கோட்டைமுகப்பில் வந்து நின்றதும் இரு மருங்கிலும் செறிந்துநின்று நோக்கிக்கொண்டிருந்த மக்கள் உரத்த குரலில் ஓசையிட்டனர்.

பலர் அவர்களை நோக்கி கைநீட்டி எதையோ கூறினர். பலர் நகைத்துக்கொண்டிருப்பதை அவள் கண்டாள். மீள மீளக் காண்பது அந்த நகைப்பு. தொடக்கத்தில் அவர்களுக்கு ஒரு பெண் அத்தகைய பொறுப்பிலிருப்பது உடன்பாடாக இல்லையோ என்று தோன்றியது. ஆனால் நகைப்பவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்பதை கண்ட பின்னர்தான் அது உவகை வெளிப்பாடுதான் என்றும், அவ்வாறு மட்டுமே அவர்களால் அதை வெளிப்படுத்த இயல்கிறது என்றும் தெரிந்தது. தன்னியல்பாக எழும் சிரிப்பு அது. அவர்களை அவள் பொருட்படுத்துவதில்லை எனினும் அவர்களின் நோக்குகளுக்கு முன்பாக வந்தவுடன் அவள் உடல்மொழி மாறத் தொடங்கியிருக்கும். ஒருபோதும் கடுமையான ஆணைகளை அவர்களை நோக்கி செலுத்த அவளால் இயலாது.

ஆனால் அந்தத் தருணத்தில் அவர்களின் சிரிப்பு சிறு ஒவ்வாமையை உருவாக்கியது. அவர்கள் கட்டுப்பாட்டை இழந்துவிடக்கூடும் என்று அவள் அஞ்சினாள். பொதுமக்களுக்கும் முற்றத்தின் திறந்த வெளிக்கும் நடுவே படைவீரர்கள் தங்கள் வேல்களாலும் ஈட்டிகளாலும் ஒரு வேலியை உருவாக்கியிருந்தனர். ஆகவே அவர்கள் முற்றம் நோக்கி பிதுங்கி வருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஆனால் அவ்வீரர்கள் அனைவருமே புதியவர்கள். அவர்களுக்கு படைக்கலப் பயிற்சி இருந்தது, படைப்பயிற்சியும் இருந்தது, ஆனால் அவை பிறிதொரு நிலத்தில் பிறிதொரு படையில் இணைவதற்கான பயிற்சி இல்லை. அஸ்தினபுரியின் நிலத்தில் அமைந்த அந்தப் புதிய படையில் அவர்கள் இன்னும் தங்களை முழுமையாக பொருத்திக்கொள்ளவில்லை.

சம்வகை காத்து நின்றாள். அத்தகைய தருணங்களில் காலம் துளித்துத் துளித்து சொட்டத் தொடங்கிவிடுகிறது. உள்ளம் பதறிப்பதறி சூழப் பறந்து பின் சலித்து அமர்கிறது. மிகத் தொலைவில் ஒரு முரசொலி. நீரில் ஒரு கொப்புளம்போல தோன்றிய கணமே மறைந்தது. ஒரு கொம்பொலி. ஓர் அலையெனத் தோன்றி மறைந்தது. அவள் நெஞ்சு படபடத்தது. எத்தனை பெரிய தருணம்! பேரரசி நகர்புகுகிறாள். பாரதவர்ஷத்தின் மும்முடியை சூடவிருப்பவள். அழியாச் சொற்களில் இங்கே வாழவிருப்பவள். ஆனால் அவளன்றி எவரும் அதை அப்போது உணர்ந்ததாகத் தெரியவில்லை. அதை உணரும் தனிமை அவளுக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் மீண்டும் முரசுகளும் கொம்புகளும் ஒலித்தன. அதை அத்திரள் கேட்டுவிட்டிருந்தது. அவர்கள் அமைதியடைந்தனர். கோட்டை மேலிருந்த பெருமுரசு முழங்க கொம்புகள் தொடுத்துக்கொண்டு நீளொலியாகி எழுந்து சுழன்றன. கோட்டை பிளிறி நெளிவதாகத் தோன்றியது. அவள் திரும்பி நோக்கினாள். நீர்ப்பரப்பென ஒளியலைகள் பரவிய வெண்ணிறக் கோட்டை. அதற்கு முகில்கோட்டை என்று பெயர் வந்துவிட்டிருந்தது. அதற்கு ஐராவதீகம் என சூதர்கள் பெயரிட்டிருந்தனர். வெண்களிற்றுயானைநிரை. “முகில்களே யானைகளென்று எழுந்த கோட்டை. தேவர்கள் வந்திறங்குவது அந்த வெண்மதில்களுக்குமேல் என உணர்க!”

கோட்டைக்கு வெண்மை பூசப்பட்டபின் ஒவ்வொரு நாளும் பலநூறு பறவைகள் வந்து அதில் முட்டிமுட்டி இறகொடிந்து விழுந்துகொண்டிருந்தன. அவற்றின் உடல்கள் சருகுகள் என கோட்டைக்குக் கீழே கிடந்தன. யானைகள் கோட்டையைக்

கண்டதுமே பிளிறியபடி உடல்குறுக்கி நின்றன. துதி நீட்டி துழாவி உடல் அதிர்ந்தன. காளைகளும் அத்திரிகளும் விழிசுருக்கி நின்று மெய்ப்புகொண்டன. நகரில் நிறைந்திருந்த ஒளி அனைத்து நிழல்களையும் அழித்திருந்தமையால் மக்கள் கோட்டையருகே வருவதை தவிர்த்தனர். பெருஞ்சாலைகள் மேலும் பெரிதாகத் தெரிந்தன. அங்கிருந்த கூழாங்கற்கள்கூட ஒளிகொண்டன. ஆனால் சில நாட்கள்தான். விரைவிலேயே அது விழிகளுக்குப் பழகியது. என்றும் அவ்வண்ணமே இருந்தது எனத் தோன்றியது.

அவள் கோட்டையின் ஓசையை கேட்டுக்கொண்டிருந்தாள். அது வீசிய ஒளியில் அவள் நிழல் காலடியில் விழுந்து மண்ணில் கரைந்ததுபோல் தெரிந்தது. அந்நிழல் முரசொலியில் அதிர்ந்தது. இக்கணத்தில் என் அகம் இத்தனை எண்ணங்களாகப் பிரிவது ஏன்? இதன் கூர்மையை ஏன் இப்படி தவிர்க்கிறேன்? இக்கோட்டையின் கற்கள் என, இந்த அறியா மக்கள் என, இவ்விலங்குகள் என ஏன் இத்தருணத்தில் மிதந்து நிற்க என்னால் இயலவில்லை? அறிந்தோர் அறிவின் சுமை பொறுத்தாக வேண்டிய பொறுப்பை கொள்கிறார்கள். அறிந்தோர். அறிந்தோர். அறிந்தோர். அது முரசொலியின் தாளம். அறிந்தோர் அறிந்தோர் அறிந்தோர் என ஓசையிடுகின்றன தொலைவில் முரசுகள்.

உடைவாளின் பிடியில் கைவைத்தபடி நிமிர்ந்து நின்றாள். அவளுடைய அசைவே ஆணையென்றாக அவளுக்குப் பின்னால் அணிப்படையினர் வெள்ளி மின்னும் கவசங்களுடன் நான்கு நிரைகளாக சீர் நடையிட்டு வந்தனர். தனக்குப் பின்னால் அவர்களின் ஓசைகள் திரள்வதை அவள் கேட்டாள். அவ்வோசையிலிருந்தே அவர்களின் அணிநிரையை உணர

முடிந்தது. இசைச்சூதர்கள் இடப்புறமும் மங்கலச்சேடியர் வலப்புறமுமாக திரண்டனர். உள்ளிருந்து நூற்றெட்டு அந்தணர்கள் நிறைகுடங்களுடன் வந்து முகப்பில் மூன்று நிரைகளாக அணிவகுத்தனர். அவள் தலையைத் திருப்பி அவர்களை பார்க்கவில்லை. ஆனால் அந்த அணிவகுப்பு முற்றிலும் சீராக அமைந்திருப்பதை ஓசைகளிலிருந்து உணர்ந்தாள்.

முழுமை, பிழையின்மை, முழுமை. பிழையெழுவது அம்முழுமையின்மேல்தான். பெருமரத்தில் நாய்க்குடை என அது முளைக்கிறது. அவள் கவலை பெருகி வந்தது. அவள் பெருமூச்சுடன் தன்னை எளிதாக்கிக்கொண்டாள். தொலைவிலிருந்து முரசொலியும் கொம்பொலிகளும் பெருகி எழுந்து வந்தன. கோட்டைச்சுவரில் அறைந்து திரும்ப அதே விசையுடன் எழுந்தன. கோட்டையை அவள் ஒருகணம் திரௌபதியின் பார்வையில் பார்த்தாள். அங்கு அவள் எதிர்பார்க்கக்கூடியது கரிய இருட்திரை என்று எழுந்து நின்ற தொன்மையான கோட்டையை. மகாமரியாதம் என்று அது சூதர்களால் அழைக்கப்பட்டது. கருங்களிற்றுயானைநிரை. அதன் மீதமைந்த மரத்தாலான காவல்மாடங்களை. இரும்புக் கீல்களும் உருளைகளும் கொண்டு கல்லென்றே மாறிவிட்டிருந்த கதவுகளை.

இதோ வெண்ணிற ஒளியுடன் புதிய கோட்டை நின்றிருக்கிறது. "பாற்கடலின் அலையொன்று எழுந்து நின்றதுபோல!" என்று அதை ஓர் அயல்நிலத்துச் சூதன் பாடினான். "ஒரு மாபெரும் புன்னகை. ஒளிரும் பல்நிரை" என்றான் அவன் தோழன். "மண்மகள் அணிந்த வெண்பட்டு மேலாடை" என்றான் இன்னொருவன். அதன் காவல்மாடங்கள் அரக்கு மின்னும்

மரத்தாலானவை. அனைத்துக் கீல்களும் குமிழ்களும் பொன்னென மின்னின. உள்ளே நகரத்தெருக்களின் இருமருங்கும் அன்று கட்டப்பட்டவை போன்ற கட்டடங்கள். அவை பீதர்நாட்டு ஆடிகளால் விழிகள் கொண்டன. அஸ்தினபுரி சற்று முன்னர் கருவூலத்திலிருந்து எடுத்து வெண்பட்டுத் துணியால் துடைத்து பீடத்தின்மேல் வைக்கப்பட்ட அருநகை போலிருந்தது.

நகர் மாறிவிட்டிருப்பதை பேரரசி அறிந்திருப்பாள். ஆனால் அவள் விழிகள் இயல்பாக பழைய நகரையே தேடும். புதிய நகர் அவளை துணுக்குறச் செய்யும். அவள் எதை காண்பாள், எவ்வண்ணம் உணர்வாள்? ஒருகணம் அவள் விழி விரிவதை தான் காணவேண்டும் என்று சம்வகை எண்ணினாள். அத்தனை நாட்கள் அங்கு பணியாற்றியதன் உளநிறைவை அப்போது அவள் அடையக்கூடும். இந்திரப்பிரஸ்தத்தை எழுப்பிய அரசியின் முன் இந்நகரின் புதுமை ஒன்றும் பெரிதல்ல எனினும்கூட அந்த ஒருகண விழியசைவே போதுமானது.

அத்தனை விரைவாக அந்நகர் மீண்டெழுமென்று அப்பணிகளைத் தொடங்கியபோது அவள் எண்ணவே இல்லை. யுதிஷ்டிரன் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் சினம் கொண்டு விசையூட்டிக்கொண்டே இருந்தார். “அவர் என்ன எதிர்பார்க்கிறார்? ஒரு முழு நகரையும் ஏழெட்டு நாட்களில் திருப்பிக்கட்டுவதா?” என்று அவள் சொன்னாள். “இயலும், மீண்டெழுபவை மிகமிக விரைவாகவே எழுந்திருக்கின்றன” என்று சுரேசர் சொன்னார். “நம்மிடம் செல்வம் உள்ளது. கைகள் உள்ளன. காலம் ஒரு பொருட்டா என்ன?” அவள் எண்ணியதைவிட பலமடங்கு விசையுடன் அப்பணி நடந்தது. ஒவ்வொரு பணிக்கும் பத்துபேர் செய்யவேண்டிய இடத்தில்

நூறுபேர் வந்தமர்ந்தனர். நூறு பேரும் திறன் மிக்கவர்களாக, அத்துறையில் தேர்ச்சிமுதன்மை கொண்டவர்களாக இருந்தனர். அஸ்தினபுரி தன்னை தானே பழைய அஸ்தினபுரியிலிருந்து கீறி வெளியே எடுத்துக்கொண்டது.

சம்வகை திரௌபதி அங்கு வந்து அவ்வரவேற்பை ஏற்று கடந்துபோவதை உள்ளத்திற்குள் ஒருமுறை நடித்துவிட்டாள். பின்னர் ஒருகணம் திகைப்பெழுந்து அதை திரும்பப் பார்த்தபோது அரசி அணிகளேதுமின்றி இருப்பதை தான் கண்டதைப்போல் உணர்ந்தாள். நெடிய மெல்லுடல் கொண்ட கரிய அன்னைவடிவம். நிமிர்ந்த தலை சற்றே சரிய, பெரிய குழல்சுருள்கள் தழைய, கடுமையும் கனிவுமென விரிந்த தெய்வ விழிகள் கொண்டு நோக்குபவள். உடலில் பொன்னென்றும் அணியென்றும் ஒரு துளி மின்கூட இல்லை. கருவறையில் முதற்புலரியில் அணியிலி கோலத்தில் நின்றிருக்கும் கற்சிலை.

அவள் படபடப்படைந்தாள். முந்தைய நாளே அனைத்து அணிகளையும் கங்கைக்கரைக்கு அனுப்பியிருந்தார்கள். துணையமைச்சர் சுதமன் அவ்வணிகளுடன் உடன் சென்றார். அவர் அங்கே தங்கி, அரசி வந்திறங்கியதும் நேரில் கண்டு, அனைத்து அணிகளையும் கொடுத்து அவை பேரன்புடன் யுதிஷ்டிரனால் அவளுக்காக தேர்ந்தெடுத்து அளிக்கப்பட்டவை என்று கூறவேண்டும் என பணிக்கப்பட்டிருந்தார். அவற்றை அணிந்தே அரசி நகர்புக வேண்டுமென்று அரசர் கனிந்து கோருகிறார் என்று கூற ஆணையிடப்பட்டிருந்தது. அவர் அங்கு சென்று காத்திருந்தார். முந்தைய நாள் அந்தியிலேயே அங்கு திரௌபதி வந்திருந்தாள். அவளிடம் அணிகளை அளித்த செய்தியும் வந்துவிட்டிருந்தது.

அரசி இரவு துயின்று புலரியில் எழுந்து கிளம்பியிருந்தாள். அவள் அணிநகை அணிந்திருக்கிறாளா என்பதை சுதமன் செய்தியென அனுப்பியிருக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது. அதை சுதமன் செய்ய இயலாது. அரசி தன் தனியறையில் அந்நகைகளை அணிந்திருக்கலாம். மூடுதேரில் அவளை நோக்க அவரால் இயலாமலிருக்கலாம். அந்நகைகளை அணிவிக்கும் பொருட்டு ஏழு அணிச்சேடியர் சுதமனுடன் அங்கு அனுப்பப்பட்டனர். அவர்களிடம் உசாவி அச்செய்தியை சுதமன் அஸ்தினபுரிக்கு அனுப்பியிருக்கலாம். ஒருவேளை அச்செய்தி சுரேசரை வந்தடைந்திருக்கலாம்.

அவள் காலையிலிருந்து சுரேசரை பார்க்கவில்லை. கோட்டையையும் அரண்மனையையும் முழுமையாக சுற்றி அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தானே சீர்நோக்கிவிட்டு அவள் கிழக்குமுகப்பிற்கு வருவதற்குள் இளவெயில் வாளொளி கொண்டிருந்தது. அஸ்தினபுரிக்குள் பேரரசி அணியேதும் இல்லாமல் நுழைவதைப் பற்றி அவளால் எண்ணிப்பார்க்க இயலவில்லை. அது அங்கு திரளென கூடியிருக்கும் அனைத்து விழிகளையும் ஏமாற்றம் அடையச்செய்யும். எளிய குடியினர் மானுடரை அரசரென்று பார்ப்பது அணிகளினூடாகவே. முடிசூடுகையிலேயே அரசர்கள் தெய்வச் சாயல் கொள்கிறார்கள். ‘அகல் விளக்குக்கு சுடர் என அரசருக்கு மணிமுடி’ என்று சூதர் பாடல் உண்டு. சுடரிலா விளக்கு ஒரு வெற்றுச் சிமிழ் மட்டுமே.

அணிகள் இன்றி ஓர் அரசி மணிமுடிசூடி அமர்ந்தது முன்பெப்போதேனும் நிகழ்ந்திருக்கிறதா என்று அவள் எண்ணிப்பார்த்தாள். அரசநூல்கள் எவையும் அவ்வண்ணம் சொன்னதாக அவள் நினைவுக்குப் படவில்லை. முன்பு

தேவயானியும் தபதியும் தமயந்தியும் சத்யவதியும் அவையமர்ந்தபோது சூடிய அணிநகைகளின் நீண்ட அட்டவணையையே நூல்கள் கூறின. அவர்கள் மண்ணில் உள்ள அனைத்து அழகுகளையும் நகைகளாக்கி தங்கள்மேல் அணிந்திருந்தனர். தளிர்களை, மலர்களை, கற்களை, நீரை, நெருப்பை, முகிலை. 'நிலம் அனைத்து அழகுகளையும் சூடுவதுபோல பெண்டிர் நகைகொள்கிறார்கள்' என்று அதை அரசநூல் கூறியது.

அவள் இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்ற எண்ணத்தை அடைந்தாள். இந்திரப்பிரஸ்தத்தின் மின்படைக்கலக் கொடியுடன் தொலைவில் முதல் வீரன் வருவதை பார்த்தாள். அக்கொடி மட்டும் ஒரு பொன்னிறப் பறவை என வருவதாகத் தோன்றியது. தொடர்ந்து கவசஉடை அணிந்த புரவிவீரர்கள் அணிவகுத்து அணைந்தனர். அஸ்தினபுரியின் அமுதகலக் கொடியும் பாஞ்சாலத்தின் விற்கொடியும் நெருங்கி வந்தன. வாழ்த்தொலி எழுப்பியபடி சூதர்கள் நிறைந்திருக்க தட்டுத்தேர் முதலில் வந்தது. இசைச்சூதருடன் இன்னொரு தேர். அவை வளைந்து இருபுறமும் விலக நடுவே புரவிவீரர்களால் காக்கப்பட்ட திரௌபதியின் தேர் தொலைவில் அணுகி வந்தது.

இந்திரப்பிரஸ்தத்தின் மின்கொடியுடனும், அஸ்தினபுரியின் அமுதகலக் கொடியுடனும், பாஞ்சாலத்தின் விற்கொடியுடனும் வந்த மூன்று கவசவீரர்கள் ஒளிரும் வெள்ளிக் கவசமணிந்த புரவிகளில் மூன்று அம்புகள் பாய்ந்துவருவதுபோல் சுடர் கொண்டு அணுகினர். விரைவழிந்து புரவிகள் நிரைகொள்ள அவர்கள் கொடியை ஊன்றி உரக்க வாழ்த்தொலி எழுப்பினர். "பாஞ்சாலத்தின் அனல்மகள், இந்திரப்பிரஸ்தத்தின் தலைவி,

அஸ்தினபுரியின் அரசி, குருகுலத்தின் அன்னை, குடிகளின் தெய்வம், பேரரசி திரௌபதி அணுகுகிறார்!” என்று கூவினர்.

அங்கு கூடிநின்ற படைவீரர்கள் அனைவரும் தங்கள் படைக்கலங்களைத் தூக்கி “பேரரசி வாழ்க! பேரரசி வாழ்க! வெல்க பாஞ்சாலப் பேரரசி! வெல்க கொற்றவை! வெல்க திருமகள்! வெல்க கலைமகள்!” என்று கூவினர். கொடிவீரர்கள் இருபுறமும் விலகி அகல திரௌபதியின் தேர் அணுகி புரவிகள் குளம்புகள் மாற்றி மிதித்து நிலைகொள்ள விசையழிந்து கரையணுகும் படகென அசைந்தாடி நின்றது. வேதியர் பொற்குடங்களில் கங்கை நீருடன் வேதம் ஓதியபடி மூன்று நிரைகளாக தேரை அணுகினர்.

திரௌபதி திரைவிலக்கி தேரின் படிகளில் இறங்கி மண்ணில் கால் வைத்தாள். வேதியர் வேத முழக்கத்துடன் அவள் மேல் கங்கை நீர் தெளித்தனர். மஞ்சள் அரிசியும் மலர்களுமிட்டு அவளை வாழ்த்தினர். கைகூப்பி குனிந்து அவள் அந்த வாழ்த்துக்களை ஏற்றுக்கொண்டாள். வேதியர் வாழ்த்தியபடி பிரிந்து அப்பால் விலக அணிச்சேடியர் மங்கலத்தாலங்களுடன் அவளை அணுகி வாழ்த்துரைத்தனர். “மங்கலச்செல்வி, பெருவளத்தாட்டி, விளைபெருகும் பெருநிலமென்றானவள், குடிகாக்கும் அன்னை, அஸ்தினபுரியின் பேரரசி திரௌபதிக்கு நல்வரவு” என்று மூத்த சேடி கூறினாள். அவள் மேல் மஞ்சள் நீர் மலருடன் தெளித்து வாழ்த்தி அவர்கள் இடப்பக்கமாக விலக இசைச்சூதர் இருபிரிவினராக பிரிந்து வழிவிட்டு நின்று மங்கல இசைமுழக்கினார்கள்.

சம்வகை சீர்நடையிட்டு முன்னால் செல்ல அவளுக்குப் பின்னால் கவசஉடை அணிந்த வீரர்கள் சீரான நடையோசையுடன் வந்தனர். அவள் அருகணைந்து தன்

உடைவாளை உருவி நிலம் நோக்கி தாழ்த்தி தலைவணங்கினாள். திரௌபதி புன்னகைப்பதை அவள் நோக்காமலேயே உணர்ந்தாள். நிமிர்ந்தபோது அப்புன்னகையைக் கண்டு தானும் புன்னகைத்தாள். “உன் பெயர் சம்வகை அல்லவா?” என்று அவள் கேட்டாள். “ஆம், அரசி” என்றபோது சம்வகை மெய்ப்பு கொண்டாள். “உன்னைப்பற்றி யுயுத்ஸுவிடம் கேட்டறிந்தேன். அவன் விழிகளில் ஒரு சிறு மின்னலைக் கண்டேன்” என்றாள். சம்வகை நெஞ்சு படபடக்க நின்றாள்.

“நன்று” என்றபடி பேரரசி திரும்பும்போதுதான் அவள் அணி நகைகள் எதுவுமே அணிந்திருக்கவில்லை என்பதை சம்வகை கண்டாள். தேரிலிருந்து இறங்கி வரவேற்புகளையும் வாழ்த்துகளையும் ஏற்றுக்கொள்ளும் போதெல்லாம் அது தெரியவும் இல்லை. அவள் முழுதணிக்கோலத்தில் இருப்பவள் போலத்தான் தோன்றினாள். எண்ணியிராக் கணத்தில் பின்னால் அணிவகுத்து நின்ற படைவீரர்களில் ஒருவன் நிரைமுறித்து முன்னால் பாய்ந்து தனது ஈட்டியை வான் நோக்கி வீசி “பேரரசி திரௌபதி வெல்க! பாரதவர்ஷத்தின் பேரரசி வெல்க! எரியெழுந்த மங்கை வெல்க!” என்று கூவினான். அணிவகுத்து நின்றிருந்த அனைத்து வீரர்களும் கலைந்து அவனை திரும்பிப்பார்த்தனர். சம்வகை திகைத்து உடல் செயலிழந்து நின்றாள்.

ஆனால் அதற்குள் இருபுறங்களிலும் கூடி நின்ற பொதுமக்கள் பெரும் வாழ்த்துக் கூச்சலுடன் தங்களைக் காத்து நின்றிருந்த படைவேலியை உடைத்தபடி முற்றத்தை நிறைத்து அவர்களை நோக்கி வந்தனர். கைகளை வீசி, துள்ளிக்குதித்து, வெறிகொண்டு வாழ்த்தொலி எழுப்பினர். கையிலிருந்த ஆடைகளை வான்

நோக்கி வீசிப்பிடித்தனர். கண்ணீரும் சிரிப்பும் அழுகைகளுமாக முகங்கள் வெறித்து மிதந்து அலைந்து கொந்தளித்தன. ஒரு கணத்தில் அஸ்தினபுரி அதன் முந்தைய யுகத்தை சென்றடைந்தது. முதல் முறையாக அதில் குடிகள் உருவாகி வந்துவிட்டிருப்பதை சம்வகை கண்டாள். முதலில் எழுந்த பதற்றமும் திகைப்பும் அகல உளம் நிறைந்து விழிநீர் மல்கி அவள் புன்னகைத்தாள்.

# களிற்றியானை நிரை - 49

### பகுதி ஐந்து : விரிசிறகு – 13

பேரரசி திரௌபதியின் தேர் அஸ்தினபுரிக்குள் நுழைந்தபோது அவளுக்கு அருகே புரவியிலமர்ந்து சம்வகை சென்றாள். பேரரசி தன் மூடுதேரில் இருந்து இறங்கி திறந்த தேரில் ஏறிக்கொண்டாள். அவளை நோக்கும்பொருட்டு இருபுறமும் நின்றிருந்த மக்கள் முண்டியடித்தனர். அத்தனை கட்டுப்பாடுகளும் அழிய சாலை மழைவிழும் ஓடைநீர் என கொந்தளித்தது. அதன் நடுவே அவளுடைய தேர் சுழன்றும் அமைந்தும் சென்றது. வாழ்த்தொலிகளின் அதிர்வு தன் பற்களை கூசவைப்பதுபோல் உணர்ந்து சம்வகை வாயை இறுக்கிக்கொண்டாள். அவள் விழிகள் கூசி நிறைந்து நீர்வழிந்து உலர்ந்து மீண்டும் கலங்கின.

பேரரசியின் விழிகளை நோக்கிக்கொண்டிருந்தாள். கோட்டையை முதலில் நோக்கியபோது அவள் விழிகளில் எந்த மாறுதலும் தென்படவில்லை. தேர் மாற்றிக்கொண்டபோது, கோட்டைவாயிலுக்குள் நுழைந்தபோது, கோட்டைக்குள் கிழக்கு

உள்முற்றத்தில் பெருகிநிறைந்திருந்த மக்கள்திரளை நோக்கியபோது அவள் முகம் உறைந்ததுபோல் இருந்தது. உவகையென்றோ நெகிழ்வென்றோ கசப்பென்றோ ஏதுமில்லை. எதையும் நினைவுகூர்பவளாகவோ எதிர்பார்ப்பவளாகவோ தோன்றவில்லை. கற்சிலை முகம். தெய்வங்களுக்குரியது கல்முகமே.

சம்வகை விழிகளால் துழாவிக்கொண்டிருந்தாள். அவளுக்கு ஒற்றர்கள் சார்வாகர்களின் ஒரு குழு நகருக்குள் நுழைந்துவிட்டிருக்கும் செய்தியை அளித்திருந்தனர். அவர்கள் நகருக்கு வெளியே இடுகாட்டில் தங்கியிருந்தனர். முதலில் அவர்களில் ஒருவரே தோன்றினார். மேலும் எழுவர் பின்னர் வந்தனர். சுடுகாட்டின் பெருச்சாளிகளையே அவர்கள் உணவாக்கினர். பெருச்சாளித்தோலையே ஆடையென அணிந்தனர். கையிலேந்திய ஞானக்கோல் அன்றி துணையின்றி இருந்தனர். இரவும் பகலும் இன்றி சிவமூலிகையின் புகையில் மெய்மறந்து அகமழிந்து விழிசிவந்து அமர்ந்திருந்தனர்.

அவர்கள் நகர்நுழைய ஒப்புதல் இல்லை. ராஜசூயம் போன்ற பெருவேள்விகளின்போது மட்டுமே ஞானத்தின் தரப்பினரும் உள்ளே வர அழைக்கப்படுவார்கள். ஆனால் அவர்களை எவரும் தடுக்கவும் முடியாது. மக்கள் அவர்களை அஞ்சினர் என்பதொன்றே அவர்களை தடுத்தது. அவர்களைக் கண்டதும் அனைவரும் விலகி வழிவிட்டனர். எந்தப் பெருந்திரளிலும் அவர்கள் தன்னந்தனியர்களாகவே நடந்தனர். அவள் அவர்களில் எவரேனும் விழிக்கு தென்படுகிறார்களா என்று நோக்கிக்கொண்டிருந்தாள். அவர்களில் ஒருவர் எக்கணமும் அங்கே தோன்றக்கூடும். ஏதேனும் ஒன்றை சொல்லக்கூடும்.

அந்த நாளின் மங்கலங்களை அழிக்கும் ஒரு சொல்லை. அவர்களின் தோற்றமே மங்கலங்களை சிதைப்பது. அவர்கள் வாழ்வது அதற்காகவே.

“மங்கலங்களுக்கு எதிர்நிற்பதே அவர்களின் செயல்பாடு. அதன்பொருட்டே தங்களை அவ்வண்ணம் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமங்கலர் என்றே அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்” என்றார் சுரேசர். “அதுவே அவர்களின் பணி. அவர்களின் கொள்கை. ஏனென்றால் எந்த மங்கலமும் நிலைபேறின் விளைவு, எந்த நிலைபேறும் அடித்தளத்தில் குருதி கொண்டது என அவர்களின் நூல்கள் சொல்கின்றன.” அவள் அதை தன்னுள் சொல்லிக்கொண்டே இருந்தாள். பின்னர் சுரேசரிடம் “அது மெய் என்று என் அகம் சொல்கிறது” என்றாள்.

“நன்று” என்று அவர் வெடித்து நகைத்தார். “இன்றுவரை பாரதவர்ஷத்தில் மாறாத ஒரு வரலாறு உள்ளது. இளமையில் எளியோருக்கு இரங்கி அரசை வெறுத்தவர்களே பின்னாளில் அரசின்பொருட்டு ஏழைகளை வெறுப்பவர்களாக ஆனார்கள். அரசாண்ட கொடுங்கோலர்களோ முடிதுறந்து கானேகிக் கனிந்தனர்.” அவள் சுரேசரிடம் வெறுத்தது அதைத்தான். அவரிடம் இரக்கமற்ற ஓர் இளிவரல் இருந்தது. கூரியது, துணித்துக் கடந்துசெல்கையிலும் குருதிபடியாத ஒளிகொண்டது.

உள்கோட்டை முற்றத்தில் சுரதன் தன் இளையோன் சுகதனுடன் அரசஉடை அணிந்து நின்றிருந்தான். அவனைச் சூழ்ந்து அணியுடையுடன் வீரர்கள் நின்றனர். அவர்கள் இருவரும் மலர்ந்த முகங்களுடன் இருப்பதை சம்வகை கண்டாள். பேரரசி சற்றே திரும்ப அவள் உதடசைவாக

“சிந்துநாட்டு அரசர் ஜயத்ரதனின் மைந்தர்கள் சுரதனும் சுகதனும்” என்றாள். பேரரசி அச்சொற்களை புரிந்துகொண்டு விழிமலர மைந்தர்களை நோக்கினாள். முதல்முறையாக அவள் முகத்தில் புன்னகை எழுந்தது. அது கனிந்து மானுடத்தன்மை கொண்டது. அவள் உதடுகளில் ஒரு சொல் எழுந்து அமைந்தது. “மைந்தர்கள்” என்று அவள் சொன்னாள். மேலும் கனிந்து “இனியவர்கள்” என்றாள்.

பெருந்திரளிலும் பேரோசையிலும் உதட்டுமொழியே உதவுவது என்று அவளிடம் சுரேசர் பலமுறை சொல்லியிருந்தார். நெடுநாள் அவளால் அதை கற்க இயலவில்லை. ஓசையெழாதபோது அச்சொல் நாவை விட்டு வெளியே கிளம்பவில்லை என்று எப்போதுமே தோன்றியது. ஆனால் பின்னர் அதை கற்றேயாகவேண்டுமென்ற நிலை எழுந்தது. முயன்றபோது ஒரே நாளில் அதை உள்வாங்க முடிந்தது. அதன்பின் ஒன்றை அவள் உணர்ந்தாள், ஒலியிலாச் சொல் முற்றிலும் பிறிதொன்று. அது செய்திகளை மட்டுமே சொல்லமுடியும், உணர்வுகளை அல்ல. ஆகவே அதில் கரவுகளும் மடிப்புகளும் இல்லை. அது இலக்கு நோக்கிச் செல்லும் அம்பு, அதனால் வளைய இயலாது. அதன் சொற்கள் அனைத்துமே முனைமழுங்காமல், தேய்வுகொள்ளாமல் அன்று செய்தவை போலிருந்தன.

அதை கற்றுக்கொண்ட நாள் முதல் அவளைச் சூழ்ந்திருந்த உலகம் முற்றாக மாறியது. நெடுந்தொலைவில் சேடிப்பெண் பேசுவதை அவளால் அறியமுடிந்தது. காவல்மாடத்திலிருக்கும் படைவீரர்கள் சொல்லும் இழிசொற்கள் குருதித்தசைத் துண்டுகள் என வந்து முன்னால் விழுந்தன. அகன்று கூடி நின்றிருக்கும் மக்கள்திரளின் பேச்சொலி ஒற்றை

முழக்கமாகவே எப்போதுமிருந்தது. அது தனித்தனியான பல்லாயிரம் உரையாடல்களாக உடைந்து பெருகி விரிந்தது. விழிகளால் சாலையில் செல்லும் தெய்வவடிவை நோக்கிக்கொண்டிருக்கும் அன்னை தன் இடைக்குழவியிடம் இன்சொல்தான் உரைக்கிறாள். இளம்பெண் எங்கோ நின்று நோக்கும் காதலனிடம் பேசிக்கொண்டிருக்கிறாள். வசைச்சொற்கள், பழிச்சொற்கள், இளிவரல்கள்.

மானுடர் தனித்துச் சொல்லும் சொற்களை அவள் கேட்கலானாள். அவர்கள் துயருற்றிருக்கையிலும் இன்புற்றிருக்கையிலும் அரற்றினார்கள். நினைவுகளின் பெருக்கு சொற்களென உதடுகளில் கசிந்தது. காதலின் போதையில் பிதற்றினார்கள். அவர்களின் உள்ளத்திலிருந்து உதடுகளுக்கு அவர்களே அறியாத பாதை ஒன்றிருந்தது. அதை உணர்ந்தபின் அவள் மானுடரை விரும்பலானாள். “இன்னும் செல்லும் தொலைவு உண்டு. பட்டாம்பூச்சிச் சிறகடிப்பில், விலங்குகள் அசைபோடுவதில் எல்லாம் சொல்லெழத் தொடங்கும். நாய்வாலும் மான்செவியும் உன்னிடம் பேசத்தொடங்கும்” என்றார் சுரேசர்.

திரௌபதி மைந்தரின் பெயர்களை சொல்லிக்கொண்டிருப்பதை அருகே சென்றபடி அவள் பார்த்தாள். அஸ்தினபுரியின் மீட்டுக் கட்டிய சாலையினூடாகச் செல்கையில் பேரரசி புது விழிகள் கொண்டு நின்ற மாளிகைகளை பார்க்கிறாளா என்று சம்வகை நோக்கினாள். அவள் எதையுமே நோக்கவில்லை என்று தோன்றியது. மெய்யாகவே எவையும் அவள் கண்ணுக்குப் படவில்லையா என்ன? அவள் தன்னுள் மட்டுமே நோக்குபவளாக ஆகிவிட்டிருக்கிறாளா என்ன? மைந்தர்துயர் அவளை அவ்வண்ணம் ஆக்கிவிட்டிருக்கிறதா? அஸ்தினபுரியை

அவள் வென்றெடுத்திருக்கிறாள். வஞ்சநிறைவு செய்து நகர்புகுந்திருக்கிறாள். இத்தருணம் காவியங்களால் பாடப்படவிருப்பது. முடிவற்று மீள நிகழ்த்தப்படவிருப்பது. இன்று அவள் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் காலம் பல்லாயிரம் கைகள் நீட்டி பெற்றுக்கொள்ளவிருக்கிறது.

"அரசருக்குரிய இயல்பென்ன என்று கேட்கப்பட்டபோது முதுமன்னர் யயாதி சொன்ன சொல் ஒன்று உண்டு, யானைமேல் இயல்பாக இருத்தல்" என்று சுரேசர் ஒருமுறை சொன்னார். "அது எவருக்கும் இயல்வதல்ல என்றே நான் உணர்கிறேன். யானையின் மேலிருக்கையில் யானை என தன்னை ஆக்கிக்கொள்ளா மானுடர் அரிது. யானையை தானாக்கிக்கொள்வதை நோக்கி செல்லாதவருமில்லை. யானையென எளிய மானுடத்திரள் நடுவே செல்கையில் நிலத்தில் காலூன்றி எளியோன் என உணர்வதென்பது யோகியர் மட்டுமே அடையும் பெருநிலை. பிரம்மவடிவென்றும் ஊனுடலென்றும் ஒரே தருணத்தில் தன்னை உணர்தலுக்கு நிகரானது அது."

சுரதனும் சுகதனும் மெய்யான உவகையுடன் இருப்பதாகவே அவளுக்குப் பட்டது. அவர்கள் பேசிக்கொள்வதை அவள் கேட்டாள். அவர்கள் இன்சொற்களையே சொன்னார்கள். சுரதன் அகஎழுச்சியுடன் "பேரரசி என்னை அறிந்திருக்கிறார். என் பெயர் அவருக்கு முன்னரே தெரிந்திருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டிருந்தான். சுகதன் "நான் அவர் தேரிறங்கியதுமே சென்று பேசுவேன்" என்றான். சுரதன் "அவ்வாறு செல்ல முறைமை இல்லை…" என்றான். "நான் அவர் மைந்தன்… எனக்கு எந்த முறைமையும் தேவையில்லை" என்றான் சுகதன். "எனில் நீ முன்னால் செல்… நான் உன்னைப்

பிடிக்க வருபவன்போல தொடர்ந்து அவர் அருகே வந்துவிடுகிறேன்” என்றான் சுரதன்.

அவள் அவன் விழிகளை நோக்க விழைந்தாள். மேலும் அருகே சென்று, மேலும் ஆழமாக. அங்கே அந்தப் பித்து எஞ்சியிருக்கிறதா என்று. அது பேரரசியைக் கண்டதும் கரைந்தழிந்துவிட்டிருக்கக் கூடும். அவனுடைய உள்ளம் ஒரு சிறு நுரைக்குமிழி. அது அத்தனை பெரிய விசையை தாளாது. அவன் விழைந்ததே பேரரசியின் விழிகளுக்கு முன் திகழவேண்டும் என்பதாக இருக்கலாம். எளியோனாக ஆகிவிடக்கூடாதென்பதே அவனை அவ்வண்ணம் ஆக்கியிருக்கலாம். ஆனால் அவன் காணும் தந்தையுருவென்பது ஒரு மெய்மை. விழியற்ற தந்தையால் ஆட்டுவிக்கப்படுபவன் அவன் என்பது உண்மை. ஆனால் அவன் பித்தன். பித்து தன்னை மறைக்கவும் கற்றிருக்கக் கூடும்.

அஸ்தினபுரியின் காவல்கோட்டங்களில் முரசு முழங்கிக்கொண்டிருந்தது. ஆனால் பெருமுரசுகளின் இடியோசை நகரில் நிறைந்திருந்த பேரோசையில் குமிழிகளென உடைந்தழிந்தது. தலைக்குமேல் எழுந்த காவல்மாடத்தில் முரசுத்தோல்மேல் முழைக்கழிகள் ஓசையில்லாமல் துள்ளி நடமிடுவதை அவள் கண்டாள். அவற்றின் தோலதிர்வை மட்டுமே உணரமுடிந்தது. அரண்மனைக் கோட்டைக்குமேலிருந்து கொம்புகள் ஒலித்தன. குருவிகளின் அகவலோசை என. பாஞ்சாலத்து அரசியின் விற்கொடி எழுந்து பறக்கத் தொடங்கியது. தேர் உள்கோட்டையைக் கடந்து அரண்மனை முகப்பை அடைந்தது.

சம்வகை விழிகளைச் செலுத்தி சிந்துநாட்டு அரசி அங்கே நின்றிருப்பதை கண்டாள். சிந்துநாட்டு அரசி முதலில் தன் மைந்தர்களையே நோக்கினாள். அவர்கள் மெய்யான மகிழ்வுடன் வருவதைக் கண்டதும் அவள் கொண்ட உளக்குழப்பம் அழிய புன்னகை புரிந்தாள். அவர்கள் அருகணைந்ததும் சிந்துநாட்டு அரசியின் அணிச்சேடிகள் முன்னால் வந்து அவளை வாழ்த்தி மங்கலத்தாலம் காட்டி வரவேற்றனர். இசைச்சூதர் முழங்க சேடியர் வாழ்த்துரை எழுப்பினர். சிந்துநாட்டு அரசி சுடரேற்றிய பொன்னகல் விளக்குடன் முன்னால் வந்து புன்னகையுடன் அவளை வரவேற்றாள். "அஸ்தினபுரிக்கு பாரதவர்ஷத்தின் பேரரசியை வரவேற்கிறேன்" என்றாள். "இந்நாள் இனிவருவோர் சித்தத்தில் இனிதென என்றும் திகழ்க! தங்கள் வருகையால் திருவும் சொல்லும் பெருகி இந்நகர் பொலிவுறுக! அன்னை கொற்றவை என இங்கே அமைக! இங்குள்ளோர் தேவர்களென மகிழ்க!"

பேரரசி அச்சொற்களால் உளம்நெகிழ்வதை சம்வகை கண்டாள். அது அவளுக்கு உடனே உருவாக்கியது ஒரு சிறு ஏமாற்றத்தைத்தான். பேரரசி மெல்லுணர்வுகளுக்கு அப்பாற்பட்டவளாக இருக்கையில் ஒரு மெல்லிய எரிச்சலை உருவாக்கினாள். ஆனால் அவள் அவ்வண்ணம் இருப்பது நிறைவையும் அளித்தது. அவள் எண்ணிய வடிவம் அது. நெகிழும் கொற்றவையை கோயிலில் அமைக்க முடியாது. அவள் விழிநீர்விடுவதைக் கண்டால் தன் உள்ளம் கசந்துவிடும் என்று தோன்றியது. அவ்வாறு நிகழலாகாது என அவள் வேண்டிக்கொண்டாள். ஆனால் அஞ்சுவதெல்லாம் நிகழும் என்று எங்கோ எவரோ சொன்னது நினைவுக்கு வந்தது. அஞ்சுவன எல்லாம் அகத்தே வாழ்வன, அவை அச்சமென எழுந்து தங்களை காட்டுகின்றன.

பேரரசியை சிந்துநாட்டு அரசி உள்ளே அழைத்துச் சென்றாள். ஒரு கையில் நிறைநீர் பொற்குடமும் மறுகையில் ஏற்றிய பொன்னகலுமாக பேரரசி அஸ்தினபுரியின் அரண்மனைக்குள் நுழைவதை சம்வகை நோக்கி நின்றாள். மெல்ல அவள் உள்ளம் சலித்து தளர்ந்து மண்ணுடன் படிந்தது. எங்கேனும் படுத்து துயிலவேண்டும் என்று தோன்றியது.

சம்வகை விழித்துக்கொண்டபோது சுரேசரின் ஏவலன் அவளுக்காக காத்திருந்தான். அவள் ஆடைமாற்றி வந்ததும் வணங்கி “அமைச்சர் காணவிழைகிறார்” என்று அவன் சொன்னான். அவள் தன் கவசங்களை அணிந்துகொண்டு அரண்மனைக்குச் சென்றாள். அஸ்தினபுரியின் அரண்மனை மையக்கோட்டத்திற்கு வெளியே முந்தைய படைத்தலைவரின் மாளிகையை அவளுக்கு அளித்திருந்தார்கள். அங்கே ஏவலரும் பணிப்பெண்களுமாக அவள் தனித்து தங்கியிருந்தாள். பின்னிரவில் மட்டுமே அவள் அங்கே வந்தாள். புலரிக்கு முன்னரே கிளம்பிச் சென்றாள். அந்த மாளிகை அவள் உள்ளத்தில் எவ்வகையிலும் பதியவில்லை. ஆனால் அவள் கால்கள் அதை அறிந்திருந்தன. அவை அவ்விடத்தை பல பிறவிகளாக அறிந்திருக்கின்றன என அவள் எண்ணியதுண்டு.

சுரேசர் தன் அறையில் இருந்தார். காலடியோசை கேட்டு திரும்பி நோக்கி புன்னகைத்து “வருக!” என்றார். அவள் வணங்கி முகமன் உரைத்து தலைக்கவசத்தை மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்தாள். சுரேசர் புன்னகையுடன் “ஒரு பெரும்பணியை முடித்துவிட்டீர்கள்” என்றார். “நான் எனக்கான ஆணைகளை நிறைவேற்றினேன்” என்று அவள் சொன்னாள். “நீங்கள் ஓய்வெடுக்கச் சென்றிருப்பீர்கள் என எண்ணினேன்”

என்றார் சுரேசர். "ஆம், அரண்மனைக்குள் செல்லலாகாது என முடிவெடுத்திருந்தேன். அப்பொறுப்பை சிந்துநாட்டு அரசியிடம் அளிப்பதே முறை எனத் தோன்றியது" என்றாள். "துணைக்கு சுஷமையும் இருக்கையில் நான் செய்வதொன்றுமில்லை."

"ஆம், அனைத்தும் முறைப்படி முடிந்தன" என்று சுரேசர் சொன்னார். "பேரரசி அரண்மனையில் தன் பழைய அறையையே விரும்பினார். அதை நான் உணர்ந்திருந்தேன். அது ஒருக்கப்பட்டிருந்தது, என்றாலும் வேறு அறைகளையும் ஒருக்க ஆணையிட்டிருந்தேன். ஆனால் நானும் எதையும் சிந்துநாட்டு அரசியின் தெரிவை மீறி செய்ய முனையவில்லை. பேரரசி தன் அறைக்குள் சற்று முன்னர்தான் சென்றார். இப்போது அங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்" என்றார் சுரேசர். "அவரது தனிப்பணிக்குரிய ஏவற்பெண்டுகள் உடன் வந்திருக்கிறார்கள். ஆகவே நாம் பெரிதாக இனி ஏதும் செய்வதற்கில்லை. நகரம் அவர்களை எவ்வண்ணம் எதிர்கொள்ளும் என்ற சிறு ஐயம் எனக்கிருந்தது. பொருந்தாத ஒன்றை நான் எதிர்பார்த்தேன். உங்கள் ஆட்சியே நகர்நுழைவை மங்கலம்மிக்கதாக நிகழ்த்தி முடித்தது."

"என் கடமை" என்றாள் சம்வகை. "பேரரசியிடம் நான் ஓரிரு சொற்களே பேசினேன். அவர் களைத்திருந்தார்." சுரேசர் "ஆம், அது பயணக்களைப்பு. இந்த இடத்திற்கு அவர் இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து கிளம்பி வரவில்லை, பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து, பாஞ்சாலத்தில் இருந்து கிளம்பி வந்திருக்கிறார்" என்றார். சம்வகை பெருமூச்சுவிட்டாள். "அந்தியில் அரசவை கூடவிருக்கிறது. அதில் பேரரசியை அரசர் முறைப்படி சந்திக்கிறார். நெடுநாளாகிறது அவர்கள் சந்தித்துக்கொண்டு" என்று சுரேசர் சொன்னார். "அதில்

சிந்துநாட்டு இளவரசர்களை அரசர் சந்திக்கிறாரா?” என்று சம்வகை கேட்டாள். ”ஆம், அதை தவிர்க்கமுடியாது” என்றார் சுரேசர். “அவர்கள் சந்திப்பதே முறை.”

“சிந்துநாட்டரசியின் கோரிக்கையை இன்னமும் முறைப்படி நாம் அரசர்முன் வைக்கவில்லை” என்றாள் சம்வகை. “ஒருவேளை துணிந்து சிந்துநாட்டரசியோ அல்லது அந்த இளவரசர்களோ அதைப்பற்றி அவையில் பேசுவார்களென்றால்…” சுரேசர் இடைமறித்து “அதைப்பற்றிப் பேசத்தான் நான் உங்களை அழைத்தேன்” என்றார். “சிந்துநாட்டரசிக்கு பேரரசி சொல்லளித்துவிட்டார்.” சம்வகை திகைப்புடன் “எதைப்பற்றி?” என்றாள். “சிந்துநாட்டை அஸ்தினபுரியின் படைகள் கைப்பற்றி ஜயத்ரதனின் முடியை சுரதனுக்கு அளிப்பார்கள்” என்றார் சுரேசர். சம்வகை சொல்லவிந்துவிட்டாள். “எப்போது?” என முனகலாகக் கேட்டாள்.

“பேரரசி அரண்மனைக்குள் புகுந்து அகத்தளத்திற்குச் சென்றபோதே அச்சொல் பெறப்பட்டுவிட்டது” என்று சுரேசர் சொன்னார். “மூதரசி காந்தாரியின் அகத்தளத்தை அப்படியே பேணவேண்டுமென ஆணையிட்டிருந்தேன். அரசியின் இருப்பென அங்கே ஓர் அகல் எப்போதும் எரிந்துகொண்டிருக்கட்டும் என்று நிமித்திகர் சிந்துநாட்டு அரசியிடம் சொன்னார்கள். அரசி அவ்வண்ணம் அங்கே ஒரு நெய்விளக்கை ஏற்றினார். பின்னர் அவர் தன் கனவில் அது ஒரு நீலப் பட்டால் மூடப்பட்டிருப்பதாகக் கண்டார். ஆகவே அந்த அகல்சுடர் நீலப் பட்டால் சுற்றப்பட்டுள்ளது. அங்கே நின்றிருக்கையில் அச்சொல் அளிக்கப்பட்டது.”

சம்வகை பேசாமல் நோக்கி அமர்ந்திருந்தாள். “சிந்துநாட்டரசி பேரரசி திரௌபதியை அங்கே அழைத்துச்சென்றார். அச்சுடருக்கு மலரிட்டு வணங்கிவிட்டு அரண்மனைக்குள் குடியேறுவதே முறை என்று அவர் சொன்னார். பாஞ்சாலத்துப் பேரரசி அங்கே நுழைந்தபோது உணர்வுருகிய நிலையில் இருந்தார். அவரால் காலெடுத்து வைத்து உள்ளே நுழைய முடியவில்லை. மலரிட்டு வணங்கியபோது அவர் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. நான் சிந்துநாட்டு இளவரசர்களுடன் வெளியே நின்றிருந்தேன். அறையிலிருந்து வெளியே வந்தபோது பேரரசியின் முகம் அனல்கொண்டதுபோலிருந்தது.”

“எதிர்பாராத தருணத்தில் சிந்துநாட்டு இளையோன் அந்த இடத்தின் உணர்வுநிலையை பொருட்படுத்தாமல் பாஞ்சாலத்துப் பேரரசியின் அருகே சென்று அவரது ஆடைமுனையை பற்றிக்கொண்டு அன்னையே நான் சிந்துநாட்டு இளவரசனாகிய சுகதன் என்றார். பேரரசி முகம் மலர்ந்து அவரை இழுத்து தன் உடலுடன் சேர்த்து அணைத்துக்கொண்டார். அவர் விழிகளில் நீர்த்துளிகளைக் கண்டேன். உதடுகள் விம்முவதுபோல குவிவதைக் கண்டேன். அவர் தோளையும் கைகளையும் வருடியபடி நான் உன்னை இளமைந்தனாகக் கண்டதுண்டு என்றார். ஆம், நானும் உங்களை இளமைந்தனாகக் கண்டேன் என்று அவர் சொன்னார். பேரரசி நகைத்துவிட்டார். எப்படி என்றார். நீங்கள் என்னை கண்டால் நானும் கண்டிருப்பேன் அல்லவா என்றார். நானே புன்னகைத்துவிட்டேன்.”

“அத்தருணத்தில் மூத்த இளவரசராகிய சுரதன் முன்னகர்ந்து அன்னையே, எங்கள் நிலத்தை எதிரிகள் கைப்பற்றிக்கொண்டுவிட்டார்கள். எங்கள் தந்தைக்குக் கீழே

கோல்கொண்டிருந்த சிற்றரசர் வஜ்ரபாகுவால் நாங்கள் நிலம்விட்டு துரத்தப்பட்டோம்… நாடிலியாக உங்களை நம்பி வந்தோம்” என்றார். பேரரசியின் விழிகள் ஒருகணம் சற்றே மாறின. “அவனைக் கொன்று சிந்துநாட்டு முழு நிலமும் உனக்கு அளிக்கப்படும். உன் கோலுக்கு எதிராக எவரும் ஒரு சொல்லும் உரைக்கமாட்டார்கள்” என்றார். பதைப்புடன் மைந்தனை பேசாமல் தடுக்கமுயன்ற சிந்துநாட்டரசி அச்சொற்களைக் கேட்டு திகைத்து நெஞ்சை பற்றிக்கொண்டார்.”

“பேரரசியின் கால்களைத் தொட்டு சுரதன் வாழ்த்து பெற்றார். அவர் தலைதொட்டு வாழ்த்தியபின் தோளைப் பற்றிக்கொண்டு இன்மொழி சொன்னார். இளையவரைத் தழுவி தன் அறைக்கு அழைத்துச்சென்றார். சிந்துநாட்டரசி விழிநீர் பொழிய அமர்ந்துவிட்டார். சுரதன் என்னை நோக்கி பிறிதொரு ஆணை தேவையா என்றார். இல்லை, அனைத்தும் முடிவுசெய்யப்பட்டுவிட்டன என்றேன். சுரதன் புன்னகையுடன் அறைநீங்கினார். நான் இங்கே வந்தேன். உங்களை அழைத்துவர ஏவலனை அனுப்பினேன்.”

சம்வகை பெருமூச்சுவிட்டாள். “பாரதவர்ஷத்தில் இனி என்றும் மறுசொல் என ஒன்று திகழப்போவதில்லை” என்றார் சுரேசர். “உண்மையில் வஜ்ரபாகுவின் அமைச்சர் இங்கே நேற்றே வந்து தங்கியிருக்கிறார். அந்தணர், அனைத்தும் அறிந்தவர். நான் இங்கே வருவதற்கு முன் அவர் இங்கே வந்துவிட்டார். என்னிடம் வஜ்ரபாகுவின் உயிரை மட்டும் விட்டுவிடமுடியுமா என்றார். முடியாது, அவர் அடிபணிந்தாலும் தலைதுணிக்கப்படும். இங்கே அரசியின் சொல் வேறு தெய்வ ஆணை வேறு இல்லை என்றேன். நான் என்ன செய்வது என்றார். வஜ்ரபாகு அங்கிருந்து தப்பி ஓடட்டும்.

எவ்வண்ணமேனும் இங்கே நகர்புகுந்து அரசியின் கால்களில் விழுந்து அளி இரக்கட்டும். அரசி சொல்மாற்றுவார் என்றால் அவர் உயிர்நிலைக்கும். அன்றி பாரதவர்ஷத்திலோ வெளியிலோ எங்கும் அவர் வாழமுடியாது என்றேன். ஆவன செய்கிறேன் என சற்றுமுன் கிளம்பிச்சென்றார்."

சம்வகை ஒன்றும் சொல்லாமலிருந்தாள். "சொல்க!" என்றார் சுரேசர். "சுரதன் நிலையுள்ளம் கொண்டவர் அல்ல" என்று சம்வகை சொன்னாள். "ஆம், ஆனால் நச்சுவண்டுகளால் யானைக்கு தீங்கில்லை" என்று சொல்லி சுரேசர் சிரித்தார்.

# களிற்றியானை நிரை - 50

**பகுதி ஐந்து : விரிசிறகு – 14**



யுதிஷ்டிரன் களைப்புடன் இருந்தார். சுரேசரை வரவேற்கக்கூட அவருடைய குரல் எழவில்லை. சுரேசர் அமர்ந்ததும் அவர் சம்வகையிடம் அமரச்சொல்லும்பொருட்டு திரும்பினார். இயல்பாகவே அவர் விழிகள் விலகிக்கொண்டன, அவர் அமரும்படி சொல்லவில்லை. சம்வகை சுவர் அருகே நின்றாள். சுரேசர் அவளை திரும்பி நோக்கிவிட்டு யுதிஷ்டிரனிடம் "பேரரசி விடுத்த ஆணை குறித்து செய்தி அனுப்பியிருந்தேன்" என்றார். "ஆம், அது அரசியின் ஆணை. நம் அனைவரையும் ஆள்வது அவள் சொல்" என்றார் யுதிஷ்டிரன். சுரேசர் "அதை சிந்துநாட்டுக்கு முறைப்படி தெரிவித்துவிட்டேன்" என்று சொன்னார்.

யுதிஷ்டிரன் “இதில் இனி நாம் செய்வதற்கு என்ன? நம் படைகளை அனுப்பவேண்டுமா?” என்று கேட்டார். “அரசே, நமது நான்கு படைகள் பாரதவர்ஷத்தை ஊடுருவியிருக்கின்றன. இதுவரை நூற்றிப்பதினேழு நாடுகளை அவை கடந்துள்ளன. ஓர் இடத்தில்கூட போர் என ஏதும் நிகழவில்லை” என்று சுரேசர் சொன்னார். “நம் நகரின் பெயரே ஒரு பெரும் படைக்கலம். நம்மை அஞ்சாதவர்கள் எவரும் இங்கில்லை. இனி நெடுங்காலம் அது அவ்வண்ணமே இருக்கும்.”

யுதிஷ்டிரன் புன்னகைத்தார். அவருடைய சோர்வு அகன்றதை சம்வகை கண்டாள். அவர் “ஆம், அதைத்தான் நான் விந்தையென எண்ணிக்கொண்டிருந்தேன். இளையோர் வென்றவை தொலைநாடுகள். சகதேவன் தெற்கே மலைகளையும் நதிகளையும் காடுகளையும் கடந்து சென்றிருக்கிறான். அங்கெல்லாம்கூட நம் மீதான அச்சம் சென்றடைந்திருக்கிறது” என்றார். “நாம் குருக்ஷேத்ரத்தில் வென்றது பாரதவர்ஷத்தைத்தான்” என்று சுரேசர் சொன்னார். “மெய், அதை இங்கிருக்கையில் ஒவ்வொரு செய்தியிலும் உணர்கிறேன்” என்று யுதிஷ்டிரன் சொன்னார்.

சம்வகை சலிப்புடன் அவரை பார்த்துக்கொண்டிருந்தாள். அவருடைய சோர்வு எதனால் என அவளுக்கு அப்போது சற்றே புரிந்தது. அதை அவள் உணர்ந்ததை புரிந்துகொண்டவர்போல அவர் திரும்பி அவளிடம் “இன்று பேரரசிக்கு இந்நகர் பெரும் வரவேற்பை அளித்தது என்று அறிந்தேன்” என்றார். “ஆம் அரசே, மக்கள் கொந்தளித்தனர்” என்று அவள் சொன்னாள். “நன்று, எனக்கு வரவேற்பளித்ததுபோல நீ கடுஞ்செயல் எதையும் செய்ய நேரவில்லை” என்றார் யுதிஷ்டிரன். உடனே

வாய்விட்டு சிரித்தபடி “அல்லது இதுவும் உன் கடுஞ்செயலேதானா?” என்றார்.

அவர் வாய்விட்டு நகைக்கும்போதும் விழிகள் நகைப்பில்லாமல் இருப்பதைக் கண்டு சம்வகை விழிவிலக்கிக்கொண்டாள். அவருடைய விழிகள் ஒருபோதும் நகைப்பதில்லை என்று அவள் அப்போது புரிந்துகொண்டாள். சுரேசர் “இது மக்கள் திரண்டு எழுந்து அளித்த வரவேற்பு. நகரே மக்களால் நிறைந்துள்ளது. அவர்கள் எதையேனும் கொண்டாட விழைகிறார்கள்” என்றார். “ஆம், அவர்களுக்கு கொண்டாடுவதற்கு தெய்வங்கள் தேவை” என்றார் யுதிஷ்டிரன். “பேரரசி ஒருங்கிக்கொண்டிருக்கிறார், அவர் அவையமையும் பொழுது எழுகிறது” என்று சுரேசர் சொன்னார்.

“இது குடியவையா என்ன?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “இல்லை அரசே, இது அரசவை மட்டுமே. எண்பேராயமும் ஐம்பெருங்குழுவும் மட்டுமே இடம்பெறுகின்றன. பேரரசிக்கு அவைவணக்கம் செலுத்தும்பொருட்டு” என்றார் சுரேசர். “அவள் வென்று நகர்புகும் தருணம் இது. நன்று” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “இத்தருணத்தைப் பாட நமக்கு கவிஞர்கள் தேவை. அரசி பழிமுடித்து கூந்தல்முடிந்து அவைபுகுந்ததை அவர்கள் பாடட்டும். அவள் அஸ்தினபுரியின் அரியணையில் அமர்ந்த தருணம் சொல்லில் நிலைகொள்ளட்டும்.”

சுரேசர் “ஆம், இது காவியத் தருணமே. ஆனால் நம்மிடம் உரிய முறையில் சொல்லெடுக்கக் கற்ற பாவலர் இன்றில்லை. நம் மொழி இங்கே மாறிக்கொண்டிருக்கிறது. சூதர்கள்கூட அயல்நிலத்தவர்” என்றார். “கேகயத்திற்கும் கோசலத்திற்கும் ஏவலரை அனுப்பியிருக்கலாமே?” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அதற்குப் பொழுதில்லை. ஆனால் இங்கே

உருவாகி வந்துள்ள புதிய மொழியிலேயே பாட்டிசைக்கும் பாவலர்கள் சிலரை வரச்சொல்லியிருக்கிறேன். அவர்கள் பாடட்டும்” என்று சுரேசர் சொன்னார்.

“முச்சந்திப் பாடகர்களா?” என்று யுதிஷ்டிரன் முகம் சுளித்தார். “அமைச்சரே, இது பெருங்காவியங்களுக்குரிய தருணம். சொல்லிலக்கணமும் பொருளிலக்கணமும் அணியிலக்கணமும் அறிந்த நாவலர் பாடவேண்டிய பொருள் இது.” சுரேசர் “ஆம், ஆனால் இந்த வெற்றி வெறுமொரு போர்வெற்றி அல்ல. இது புதிய வேதம் எழுந்த வெற்றியும்கூட. புதியவை புதிய மொழியிலேயே பாடப்பட முடியும். அரசே, நீங்கள் கூறும் அந்தப் பழைய மொழி இலக்கணத்திற்கு பழகிவிட்டிருக்கிறது. இலக்கணம் மொழியின்மேல் யானையின் சங்கிலிபோல கிடக்கவேண்டும் என்கின்றது தொன்மையான அணிநூலான குசுமாலங்காரம். யானையை அது ஆளவேண்டும், ஆனால் அதை யானை ஆழத்தில் உணர்ந்திருக்கவும்கூடாது. அகத்தே சங்கிலியை உணர்ந்துவிட்ட யானை வெறும் ஓர் ஊர்தி மட்டுமே” என்றார்.

யுதிஷ்டிரன் “ஆனால் இந்த மொழி… இதை அங்காடிமொழி என்கின்றனர்” என்றார். “முன்பும் இச்சொல் எழுந்ததுண்டு. வேதங்களை ஆராய்ந்த முனிவர்களின் மொழியை கான்மொழி என்றனர் வைதிகர். ஆரண்யகங்கள் என அவற்றை விலக்கினர். ஆனால் ஆரண்யகங்களினூடாகவே வேதம் மலர்சூடி ஒளிகொண்டது என்பது வரலாறு. ஏற்கெனவே எழுதப்பட்ட மொழியில் பெருங்காவியங்கள் எழுவதில்லை. அவை புதுக்கருக்கு அழியாத மொழியிலேயே நிகழ முடியும். எங்கே கான்மொழியை நகர்மொழி அறிகிறதோ அங்கே. எந்த

மொழியில் சேறும் பொன்னும் ஒன்றே என ஆகிறதோ அதிலேயே காவியம் பிறக்கும்” என்று சுரேசர் சொன்னார்.

“புது மொழியில் இந்நிகழ்வு பாடப்படட்டும். கட்டில்லாததாக, இலக்கணமற்றதாக அப்பாடல்கள் திகழட்டும். அவற்றை ஆளும் சொல்லுடன் பெருங்காவிய ஆசிரியன் ஒருவன் எழுவான். அவன் நாவில் இருந்து அழிவிலா நூல் பிறந்தெழும்.” யுதிஷ்டிரன் அவருடைய சொற்களை மறுக்க முடியாதவராக ஆனால் ஒப்புதலும் அற்றவராக திரும்பிக்கொண்டார். அவரிடம் அந்த ஒவ்வாமை மீண்டும் எழுந்தது. “நம் இளையோர் வந்துகொண்டிருக்கிறார்கள் அல்லவா?” என்றார். அவர் அப்பேச்சை மாற்ற முயல்கிறார் என்று உணர்ந்து சுரேசர் “ஆம் அரசே, நாளை மறுநாள் நகுலன் நகர்புகுவார்” என்றார்.

“நாளை நாளை என்கிறீர்கள். அவன் அணுகுவது பிந்திக்கொண்டே இருக்கிறது” என்று யுதிஷ்டிரன் சலிப்புடன் சொன்னார். “சகதேவனும் வந்துகொண்டிருக்கிறான் என்றீர்கள்.” சுரேசர் “அதற்கு அடுத்த நாள் அவர் வந்தணைவார். மேலும் இரு நாட்களில் பீமசேனனும் பார்த்தனும் நகர்புகுவார்கள். அவர்கள் வந்தமைந்ததும் நாம் ராஜசூயம் பற்றிய அறிவிப்பை வெளியிடலாம்” என்றார். யுதிஷ்டிரன் “ஏன் அதை இப்போதே அறிவித்தாலென்ன?” என்றார். “அஸ்வமேத நிறைவுக்குப் பின் அதை அறிவிப்பதே மரபு” என்றார் சுரேசர். யுதிஷ்டிரன் “மரபுகளை அவ்வப்போது தொட்டுக்கொள்கிறோம். நன்று” என்றார்.

ஏவலன் வந்து வணங்கினான். “நாம் அவைக்கு கிளம்பவேண்டிய பொழுது” என்றார் சுரேசர். “ஆம், ஆனால் அவைகள் எனக்கு சலிப்பூட்டுகின்றன” என்று சொன்னபடி

யுதிஷ்டிரன் எழுந்தார். ஏவலர்கள் அருகணைந்து அவருடைய ஆடைகளை சீரமைத்து அணிகளையும் ஒத்திசைவாக்கினர். “அவை என நான் எண்ணுவது சான்றோர் அமைந்தது. புலவரும் கலைஞரும் செறிந்தது. இந்த அவை ஒரு அங்காடிபோல் இருக்கிறது.” கசப்புடன் சிரித்து “அங்காடிமொழியில் காவியம் எழவும் வழியமைத்துவிட்டீர்கள். நன்று” என்றார். சுரேசர் “அங்காடியில் திருமகள் வாழ்கிறாள் என்பது மரபு. அரசவை, கருவூலம், அடுமனை, ஈற்றறை, அங்காடி, வயல், ஆநிலை, நீர்நிலை என்னும் எட்டு இடங்களில் திருமகள் நிலைகொள்கிறாள்” என்றார். “நான் பேச விழையவில்லை” என்றார் யுதிஷ்டிரன்.

இடைநாழி வழியாக நடக்கையில் “நகுலன் நகர்புகும்போது மேலும் திரள் இருக்கவேண்டும்” என்றார். “அதை நிகழ்த்துவதற்கு உரியவற்றை செய்க! இம்மக்கள் பொன்னை விழைகிறார்கள் என்றால் அதை அளிக்கவும் தயங்க வேண்டியதில்லை.” சுரேசர் ஒன்றும் சொல்லவில்லை. “அர்ஜுனன் நகர்நுழைகையில் அதுவரை காணாத கொண்டாட்டம் இங்கே நிகழவேண்டும்.” சுரேசர் “நாம் மக்களை ஆளலாம், அவர்களை நடத்தமுடியாது” என்றார். “மக்கள் என இங்கே திரண்டிருப்போர் யார்? எவருக்காக நாம் போரிட்டு வென்றோம்? எவர் பொருட்டு எல்லாவற்றையும் செய்தோமோ எவரும் இங்கில்லை. இருப்பவர்கள் எளிய மக்கள். விழைவுகொண்டு வந்தமைந்தோர்” என்றார் யுதிஷ்டிரன்.

“அரசே, அவர்கள் நம்மை முழுதேற்று வந்தவர்கள். புத்துலகொன்றை சமைப்பவர்கள்” என்று சுரேசர் சொன்னார். “மெய்யாகவே என்னால் ஏற்க முடியவில்லை. இந்த நகரைப்போல் எனக்கு அயலான பிறிதொன்று இல்லை.

இதற்கும் எனக்கும் எந்த உறவுமில்லை. இதன் எந்த உணர்வும் எனக்கு புரியவில்லை. முற்றிலும் அயலான ஒரு நிலத்திற்கு வந்துவிட்டவன்போல் உணர்கிறேன்.” அவர் முதுமைகொண்டு புலம்புபவர் போலிருந்தார். சம்வகை அவருடன் நடந்தபடி அவருடைய மெலிந்த தோள்களையும் தள்ளாடும் சிற்றடிகள் கொண்ட நடையையும் நோக்கிக்கொண்டிருந்தாள்.

அவர் “இந்நகரில் இனி என்ன நிகழ்ந்தால் எனக்கென்ன? இந்நகரில் இனி என் ஆணையும் செல்லாதென்று நினைக்கிறேன். அவள் தனக்குரிய நகரில் தனியரசு காண்பாள் என்றார்கள். இன்று இதோ இந்நகரமும் அவளுக்கென பொங்கி எழுகிறது. அங்கே இந்திரப்பிரஸ்தம் அவளையே அன்னையென எண்ணுகிறது என்றார்கள். என்ன நிகழ்கிறதென்றே தெரியவில்லை. நான் கிளம்பி துறவுபூணவேண்டும் என்று நினைக்கிறேன். என் இளையோர் வரட்டும். அவர்களில் ஒருவர் அரசனாகட்டும். எனக்கு இந்த அரியணை ஒரு பொருட்டே அல்ல. நான் விழைவது விடுதலை… உண்மையில் எப்போதும் அதை மட்டுமே நான் விழைந்து வந்திருக்கிறேன். பிற அனைத்துமே எனக்கு பொருளில்லாமல்தான் தோன்றியிருக்கிறது” என்றார்.

அவைக்கு அருகிலிருந்த சிறு கூடத்திற்குள் அவர்கள் நுழைந்தார்கள். அங்கே அவர் அமர்வதற்கான பீடம் வெண்ணிறப் பட்டு விரிக்கப்பட்டு ஒருக்கப்பட்டிருந்தது. அவர் அமர்ந்துகொண்டு ஏவலனை நோக்கி “இன்நீர்… சற்று சூடாக” என்றார். அவன் கொண்டுவந்த இன்நீரை அருந்தியபடி பெருமூச்சுவிட்டார். சுரேசர் “அங்கநாட்டிலிருந்து இளவரசர் வந்துகொண்டிருக்கிறார். இங்கே ஒரு சொல்

உலவிக்கொண்டிருக்கிறது, ஒருவேளை அவரை நாம் அரியணைக்குரியவராக தெரிவுசெய்யலாம் என்று” என்றார். யுதிஷ்டிரன் “அதெப்படி? அவர்கள் அங்கநாட்டுக்கு அல்லவா இளவரசர்கள்?” என்றார்.

“ஆம், ஆனால் இங்கே மூத்தவரின் மைந்தர் அவர்” என்றார் சுரேசர். “அவ்வண்ணம் சொல்லலாம். ஆனால் அவன் ஷத்ரியன் அல்ல. அவன் அன்னை சூதப்பெண். அந்த அடையாளத்தை நம்மால் மாற்றமுடியாது” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “புதிய வேதத்தின் பிறப்பு என்றெல்லாம் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் மெய்யாக ஒன்றுண்டு, அது ஷத்ரியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது. ஷத்ரியர்கள்கூட இன்று ஏற்றுக்கொள்வார்கள், அசுரரும் அரக்கரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சூதமைந்தனை அஸ்தினபுரியின் அரியணைக்குரியவனாக ஆக்கினால் இப்பேரரசு அவன் கண்ணெதிரே சிதறும். இதை ஈட்டியது அவ்வண்ணம் அழிப்பதற்காகவா என்ன?”

“நான் ஒன்றும் சொல்வதற்கில்லை” என்று மட்டும் சொன்னார் சுரேசர். “நாம் முன்னரே முடிவுசெய்துவிட்டோம், அஸ்தினபுரியின் முடிக்குரியவன் பரீக்ஷித். அவன் துவாரகையில் வளர்கிறான். அவன் உடல் தேறிவருகிறது என செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அவன் ஆற்றல்மிக்கவனாக வந்து இந்நகரில் கோலேந்தி அமர்வான்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அவன் நிஷாதகுடியின் அன்னைக்கு ஷத்ரிய குடியில் பிறந்தவன். யாதவ குடியின் அன்னையின் பெயர்மைந்தன். ஆகவே அத்தனை குடிகளாலும் ஏற்கப்பட்டவன். ஆகவே அவனே இந்தப் பெருநகரை ஆளமுடியும். வேறு எண்ணமே தேவையில்லை.”

“பேரரசி திரௌபதி வருகை” என ஏவலன் உள்ளே வந்து வணங்கி அறிவித்தான். யுதிஷ்டிரன் “வருக!” என்றபின் மேலாடையை சீரமைத்தார். சம்வகை வெளியே கிளம்ப “நிற்கலாம். இங்கே அரசமுறைச் சந்திப்புக்கு அப்பால் யாதொன்றுமில்லை” என்றார் யுதிஷ்டிரன். அவள் சுவர் சாய்ந்து நின்றாள். யுதிஷ்டிரன் திரும்பி சுரேசரிடம் “அவள் எந்த அணிகளையும் கொள்ளவில்லை என்றார்கள். இன்று அவையமர்கையிலும் அவ்வண்ணம்தான் அமரவிருக்கிறாளா?” என்றார். “அவர் என்ன செய்கிறார் என அறியேன். அங்கே ஒற்றரை வைப்பது உகந்தது அல்ல என்று எனக்குத் தோன்றியது” என்றார் சுரேசர்.

திரௌபதியின் முதன்மைச் சேடி உள்ளே நுழைந்து “அஸ்தினபுரியின் அரசி!” என கட்டியம் சொன்னாள். அவள் தன் கையில் இருந்த மங்கலத்தாலத்துடன் முன்னால் வந்து அதை பீடத்தில் வைத்தாள். தொடர்ந்து திரௌபதி உள்ளே வந்தாள். சுரேசரும் சம்வகையும் தலைவணங்கினர். திரௌபதி எந்த அணியாடையும் நகைகளும் அணிந்திருக்கவில்லை. சிறிய செந்நிற மலர்களால் ஆன கரை கொண்ட வெண்ணிற ஆடையை மட்டும் அணிந்திருந்தாள். அதன் நுனியை தலைமேல் வளைத்து கொண்டையை மூடியிருந்தாள். கைகளும் தோள்களும் செவிகளுமெல்லாம் ஒழிந்திருந்தன.

யுதிஷ்டிரன் “வருக, அரசி!” என முறைமைச்சொல் கூறினார். “அமர்க... இது தங்களின் நகரம், தங்களின் அவை. தாங்கள் வஞ்சினநிறைவு கொண்டு அரியணை அமரவிருக்கும் நாள் இது.” அந்த வேளையில் அந்த முறைமைச்சொல் அவப்பேச்சு என சம்வகைக்கு கேட்டது. திரௌபதி பீடத்தில் அமர்ந்து மேலாடையை மடிமேல் இழுத்து வைத்துக்கொண்டாள்.

மறுமொழியாக அவள் ஏதும் சொல்லவில்லை. யுதிஷ்டிரன் அதை எதிர்பார்த்து சற்று இடைவெளிவிட்டார். அறியாமல் விழிதூக்கி சம்வகையைப் பார்த்துவிட்டு “நீண்ட பயணம்… இன்றே அவைச்சந்திப்பை வைத்துக்கொள்ளவேண்டாம் என்று எண்ணினேன். ஆனால் நாளை ஒருவேளை நகுலன் நகர்புகக்கூடும். அது மிகப் பெரிய நிகழ்வு. அதில் இந்த அவைநிகழ்வு மறைந்துவிடக்கூடாது…” என்றார்.

திரௌபதி புன்னகைத்தாள். “இந்நகரையும் அரண்மனையையும் பழைய காலத்திலிருந்து மீட்டு எடுத்தேன். அரண்மனையிலுள்ள ஓவியங்களை அரசி பார்த்திருக்கலாம். அனைத்தும் புதியவை. தொல்கதைகளைக் கூட புதியவை என வரைந்திருக்கிறோம்” என்றார். “நகரமே விழிகொண்டுவிட்டிருக்கிறது… நான் நகரில் நுழைகையில் ஒவ்வொரு மாளிகையும் என்னை நோக்கி புன்னகை செய்தது.” அவர் அப்பேச்சினூடாக அதுவரை இருந்த இறுக்கத்தை இழந்து இயல்படைந்தார். அவரில் ஒரு சிறுவன் தோன்றினான்.

“உண்மையில் நான் பழைய நகரை மறக்க விழைந்தேன். அங்கே எனக்கு கசப்பான நினைவுகளே இருந்தன என்று எண்ணிக்கொண்டேன். ஆனால் இன்று இதை மாற்றியமைத்த பின் உணர்கிறேன், நான் அந்தப் பழைய நகரை முற்றாக இழந்துவிட்டேன். இனி அதை திரும்ப கொண்டுவர முடியாது. இவையனைத்தையும் அகற்றினாலும்கூட காலத்தில் முன்னால் நகரவே முடியும். இன்று திரும்பி நோக்கும்போது என் நினைவுகள் இனிக்கின்றன. இங்கே இளமைந்தனாக உலவியிருக்கிறேன். இளைஞனாக வாழ்ந்திருக்கிறேன். இளமைக்காலம் இனியது, அதில் நிகழ்ந்த துயர்களில்கூட இனிமை கலந்திருக்கிறது…”

“அன்னை நகர்நுழையக்கூடுமா?” என்று திரௌபதி கேட்டாள். அதை யுதிஷ்டிரன் எதிர்பார்க்கவில்லை. “அன்னையா?” என்றார். “ஆம், அன்னை” என தனக்குத்தானே சொல்லிக்கொண்டார். “இல்லை, அன்னை நாங்கள் அனுப்பிய எந்தச் சொல்லுக்கும் மறுமொழி அளிக்கவில்லை. அவர் விதுரரின் குடிலில் அவருக்குப் பணிவிடைகள் செய்தபடி தங்கியிருக்கிறார். அவர் சொல்லடங்கும் தவத்திலிருக்கிறார்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “இன்று அவர்களின் உலகில் நாங்கள் இல்லை. அன்னை இனி இந்நகரில் நுழைய வாய்ப்பே இல்லை.”

அவரே பெருமூச்சுடன் தொடர்ந்தார். “மூதரசி காந்தாரியும் நகரை மறந்துவிட்டிருக்கிறார். அவர்கள் இருவரும் காட்டில் தங்கள் நினைவுகளுடன் தனித்திருக்கிறார்கள். அவர்களுடன் ஓர் இரும்புச்சிலை உள்ளது. முன்பு துரியோதனன் செய்த பாவை அது. அதை அவர்கள் கொண்டுசென்றிருக்கிறார்கள். அவர் காட்டில் நடக்கையில் அதுவும் உடன் செல்கிறது என்று ஒற்றர்கள் சொன்னார்கள். அவர் அதனுடன் பேசிக்கொண்டே காட்டில் உலவுகிறார். அவர்களுக்குக் காவலாகவும் அவர்களால் பேணப்படும் மைந்தனாகவும் அது உடனிருக்கிறது. அவர்கள் அதை தங்கள் இருவருக்கும் நடுவே படுக்கவைத்துக்கொள்கிறார்கள். அதை அருகிருத்தி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.”

திரௌபதி “அவர்களுக்கு விடுதலை இல்லை” என்றாள். யுதிஷ்டிரன் உரக்க “எவருக்கும் விடுதலை இல்லை” என்றார். “இந்த நற்பொழுதில் ஏன் இதை நான் நினைவுகூர்கிறேன்? ஏன் துயரடைகிறேன்? எனக்கு இதிலிருந்து விடுதலையே இல்லை. அந்தப் பாவையை எண்ணிய மறுகணமே என் மைந்தர் நினைவிலெழுந்தனர். அவர்களையும் அவ்வண்ணம்

பாவையெனச் செய்திருக்கலாம் என்று எண்ணிக்கொண்டேன். இனி அவர்களை அவ்வாறு செய்யமுடியாது. அவர்கள் மறைந்துவிட்டனர். இத்தனை விரைவில் அவர்கள் நம் கண்ணில் இருந்தும் கைகளிலிருந்தும் கரைந்தழிவார்கள் என எண்ணியிருக்கவே இல்லை. ஆனால் சாவென்பது அதுதான். எச்சமிலாதாகுதல். எச்சமென எஞ்சுவதெல்லாம் எச்சமல்ல, அவை வெறும் நடிப்புகள். வெறும் ஏமாற்றுக்கள்…”

அவர் சினம்கொண்டு எழுந்தார். “ஏன் இப்போது அதை கேட்டாய்? சொல், ஏன் அந்தப் பேச்சை எடுத்தாய்?” அவர் குரல் உடைந்தது. “நீ அறிவாய், என் நெஞ்சு எவ்வண்ணம் என நீ அறிந்ததுபோல் அறிந்தோர் எவருமில்லை. என் நெஞ்சை தொட்டு உலுக்க உனக்கு ஒரு விழியசைவே போதும். நீ அன்னையைப் பற்றிக் கேட்டது அதனால்தான். அங்கே தொடங்குமென நீ அறிவாய். இத்தருணத்தில் நான் கொண்ட இந்த மகிழ்ச்சியை அழித்தாகவேண்டுமென முடிவெடுத்தே அதை கேட்டாய்.”

அவர் விம்மலோசையுடன் மீண்டும் அமர்ந்தார். தலையை தன் கைகளால் பற்றிக்கொண்டார். “நான் இங்கே இதை நடித்துக்கொண்டிருக்கிறேன். மகிழ்ச்சியை, வெற்றியை, நிறைவை நடித்து நடித்து எனக்குள் அதை செலுத்திக்கொண்டிருக்கிறேன். நீ ஒரு கணத்தில் அதை அழித்தாய். பெண்களில் உன்னைப்போல் இரக்கமற்றவளை இப்புவி இதற்கு முன் கண்டிருக்காது” என்றார். திரௌபதி ஒரு சொல்லும் கூறாமல் அவரை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தாள். அவர் மெல்ல மூச்சடங்கி உடலை ஒடுக்கி தலைகுனிந்து அமர்ந்திருந்தார்.

திரௌபதி திரும்பி சம்வகையிடம் மெல்லிய குரலில் “அவை கூடிவிட்டதா?” என்றாள். “ஆம் அரசி, அவைநிறைவை அறிவிக்கும் கொம்பொலி எழுந்தது” என்று சம்வகை சொன்னாள். “நாம் கிளம்பவேண்டியதுதான்” என்றாள் திரௌபதி. யுதிஷ்டிரன் சீற்றத்துடன் “இல்லை, நான் அவைக்கு வரப்போவதில்லை. அங்கே சென்று அமர்ந்து நடிக்க என்னால் இயலாது. நீயே முடிசூடுக! இது உன் வஞ்சம், உன் குருதிப்பசியின் நிறைவு. நீயே கொண்டாடுக!” என்றார். “ஆம், எல்லாக் குருதியும் எனக்காகவே” என்றபடி திரௌபதி எழுந்தாள். அவள் முகத்திலிருந்த கனிவு சம்வகையை குழப்பியது. அது கனிவா என்ன? எனில் அதன் பொருள் என்ன?

முதுசேடி உள்ளே வந்து தாலத்தை எடுத்துக்கொண்டாள். சுரேசர் “அரசே, எழுக!” என்றார். “இதற்கெல்லாம் என்னதான் பொருள், சுரேசரே?” என்று யுதிஷ்டிரன் சிலம்பும் குரலில் கேட்டார். “எவரால் அதற்கு மறுமொழி சொல்லமுடியும்?” என்றார் சுரேசர். திரௌபதி “பீஷ்ம பிதாமகர் எவ்வண்ணம் இருக்கிறார்?” என்று சுரேசரிடம் கேட்டாள். “அவரை கங்கர்குடி பிணிநோக்கி சூழ்ந்திருக்கிறது, அரசி. அவர் உடலில் நோய் முதிரவுமில்லை, தளரவுமில்லை” என்று சுரேசர் சொன்னார். “அவர் பேசுகிறாரா?” என்று திரௌபதி கேட்டாள். “ஆம், சிலமுறை விழிப்பு வந்துள்ளது. ஐவரில் பீமசேனனை மட்டும் உசாவுகிறர்” என்று சுரேசர் சொன்னார்.

யுதிஷ்டிரன் எதனாலோ சீற்றம்கொண்டவர்போல எழுந்துகொண்டு “கிளம்புவோம்... அவை கூடிவிட்டதென்றால் ஏன் இங்கே நின்றிருக்கிறோம்?” என்றார். திரௌபதி “ஆம், கிளம்பவேண்டியதுதான்” என்றாள். யுதிஷ்டிரன் அவளை நோக்காமல் சம்வகையிடம் “ஆணையிடுக... அனைத்தும்

ஒருங்கட்டும்!” என்றார். அரசியும் அரசரும் இணையாக நடந்து அவைநோக்கி சென்றனர். சம்வகை வெளியே ஓடி கைகாட்ட காத்து நின்றிருந்த அவைக்காவலர் சங்கும் முழவும் மணியும் கொம்பும் சேங்கிலையும் என ஐந்திசை முழக்கத்தை எழுப்பினர். அவர்கள் இருவரும் மெல்ல அரசமென்நடையில் அவை நோக்கி சென்றனர்.

சம்வகை அவர்களுக்குப் பின்னால் சென்றாள். மங்கல இசையுடன் சூதர்கள் அவைநுழைந்தனர். தொடர்ந்து அணிச்சேடியர் சென்றனர். நிறைந்த அவையின் ஓசை முழக்கமென எழுந்து அவளைச் சூழ்ந்தது. அரசரும் அரசியும் அவை நுழைவதை அவள் ஓசையிலிருந்தே அறிந்தாள். “பேரரசி வாழ்க! அனல்மகள் வாழ்க! வெல்க கொற்றவை! வெல்க பாஞ்சாலக்குலமகள்!” என அவை முழக்கமிட்டது. அலையலையென வாழ்த்தொலி எழுந்தபடியே இருந்தது. அனைத்து இடைவெளிகளினூடாகவும் ஒலி பீறிட்டு காற்றில் அதிர்ந்தது. அவள் வாயிலில் நின்று அவைக்குள் நோக்கினாள். குடித்தலைவர்கள் அனைவருமே களிவெறிகொண்டு கூவிக்கொண்டிருந்தனர். அரிமலர்மழையால் அவை நிறைந்திருந்தது.

அந்த அவையிலிருந்த எவருமே அவளை அறிந்தவர்கள் அல்ல. அவர்கள் அஸ்தினபுரிக்கே புதியவர்கள். அந்நகரை கதைகளினூடாக வந்தடைந்தவர்கள். அவளையும் அவ்வண்ணமே அறிந்தவர்கள். ஆனால் அவர்கள் அனைவரும் வஞ்சநிறைவின் பெருங்களிப்பை கொண்டிருந்தனர். கதைகளினூடாகவே அவர்கள் அடைந்த வஞ்சம். அவர்கள் ஒவ்வொருவரையாக அவள் பார்த்தாள். பீதர்முகங்கள் கண்கள் இடுங்க மரப்பாவைகள் என தெரிந்தன. கரிய தென்னிலத்து

முகங்களில் வெண்விழிகள் துறித்திருந்தன. மேற்குநிலத்து யவனர் முகங்கள் குருதியெனச் சிவந்திருந்தன.

அந்தணர் வேதமோதி கங்கைநீர் தூவி அரியணையை வாழ்த்தினர். முதிய அந்தணர் வந்து அழைக்க திரௌபதி கைகூப்பியபடி சென்று அரியணையில் அமர்ந்தாள். அவள் அருகே யுதிஷ்டிரன் அமர்ந்தார். அந்தணர் அவர்களை நீரிட்டு வாழ்த்தினர். முதிய குடிகள் எழுவர் அஸ்தினபுரியின் தொன்மையான மணிமுடியை பொற்தாலத்தில் அரசமேடைக்கு கொண்டுசென்றனர். அதுதான் தேவயானியின் மணிமுடிபோலும் என சம்வகை எண்ணிக்கொண்டாள். குடித்தலைவர் அதை எடுத்து அவள் தலையில் சூட்டினர். அவள் முகம் எந்த உணர்ச்சியும் இல்லாமல் சிலையெனத் தெரிந்தது. அவையினர் எழுப்பிய வாழ்த்தொலியும் இசைமுழக்கமும் அவளை தொடவில்லை. வேறெங்கோ என அவள் குளிர்ந்து அமைந்திருந்தாள்.

அருகே அமர்ந்த யுதிஷ்டிரன் அவளை ஓரக்கண்ணால் நோக்கிக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் வியந்ததுபோல, அஞ்சுவதுபோல, ஒவ்வாமைகொண்டதுபோல உணர்வுகள் மாறிக்கொண்டிருந்தன. குடித்தலைவர்கள் கொண்டுவந்த ஹஸ்தியின் மணிமுடியை சூட்டினர். அவையின் வாழ்த்தொலிகளும் இசைமுழக்கங்களும் சூழ அவர்கள் அளித்த செங்கோலைப் பெற்று அவர் அரியணையில் நிமிர்ந்து அமர்ந்தார். அவையை நோக்கியபோது அவர் முகம் மலர்ந்தது. தோள்கள் விரிந்து நெஞ்சு நிமிர்ந்தது. செங்கோலை நாட்டிப்பற்றியபடி அவர் கனவு விரிந்த விழிகளுடன் அமர்ந்திருந்தார். அவர் உடல் மெல்ல நடுங்கிக்கொண்டிருப்பதை சம்வகை கண்டாள்.

அவையினரின் வாழ்த்தொலிகளுக்கு நடுவே வெள்ளிக்கோலுடன் நிமித்திகன் மேடைக்கு வந்தான். அவன் கோலை மும்முறை சுழற்றியபோது அவை அமைதியடைந்தது. “வெற்றி சிறக்கட்டும்! வெற்றியே நிகழட்டும்! வெற்றியே என்றென்றும் தொடரட்டும்!” என்று அவன் உரத்த குரலில் கூவினான். “இந்நாளில் மகிழ்க தேவர்கள்! நிறைவடைக அஸ்தினபுரியின் மூதாதையர்! கொண்டாடுக குடிகள்! நினைத்து நினைத்து நெஞ்சுநிறைக நம் கொடிவழிகள்! இதோ கொற்றவை என நம் அரசி எழுந்தார். அவையில் உரைத்த வஞ்சம் முடித்து கொழுங்குகுருதி கொண்டு பழி துடைத்து நகர்நுழைந்தார். வெற்றிச்சிறப்புடன் அரியணை அமர்ந்தார்!”

“பாடுக பாவலர், புகழ் பாடுக சூதர்! இது தெய்வங்களின் தருணம். பொலிக அஸ்தினபுரியின் அரியணை! தேவயானியும் தபதியும் சத்யவதியும் அமர்ந்த பீடம் நிறைவுறுக! அன்னை அமர்ந்த இந்த மேடை என்றென்றும் ஆலயத்தூய்மை கொள்க! சொல்பெற்று அழிவின்மை சூடுக! ஆம், அவ்வாறே ஆகுக!” அவை வெறிகொண்டு ஆர்ப்பரித்தது. குடித்தலைவர்கள் எழுந்து கைகளை வீசி தொண்டைநரம்புகள் புடைக்க கூச்சலிட்டனர். கொம்புகளும் முரசுகளும் முழக்கமிட வெளியே முற்றத்தில் நின்றிருந்த இசைக்குழு அதை ஏற்று முழக்கமிட்டது. அதிலிருந்து பற்றிக்கொண்டு நகரமெங்கும் இருந்த காவல்கோட்டங்களில் முரசுகளும் கொம்புகளும் முழங்கின. நகரமே ஒரு இசைக்கலமென்றாகியது.

அதன் நடுவே திரௌபதி அயலவள் என அமர்ந்திருந்தாள். அவள் முகமும் விழிகளும் முற்றிலும் பொருளில்லாதவையாக இருந்தன. அந்நிகழ்வுகளின்

மையமெனத் திரண்ட பொருளின்மை அது என சம்வகை எண்ணிக்கொண்டாள்.

# களிற்றியானை நிரை - 51

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 1

அஸ்தினபுரியின் கிழக்குக் கோட்டைவாயிலுக்கு உள்ளே பெருமுற்றத்தின் விளிம்பென அமைந்திருந்த நூற்றெட்டு அன்னையர் ஆலயங்களில் முதலாவதாக ஓரத்தில் இருந்த புலரியன்னையின் ஆலயத்தின் முகப்பில் எழுபத்திரண்டு சூதர்கள் பன்னிரு குழுக்களாக தங்கள் இசைக்கலங்களுடன் அமர்ந்திருந்தனர். அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த யாழையும் முழவையும் கிணையையும் சல்லரியையும் மெல்லிய பதற்றத்துடன் உடலோடு அணைத்திருந்தனர். அந்நிகழ்ச்சிக்கு அவர்கள் புதியவர்கள் என விழிகளும் அடக்கப்பட்ட மூச்சுகளும் காட்டின.

அன்னையர் ஆலயங்கள் அனைத்தும் வாயில் திறந்து அகல்சுடர் ஒளியில் தெய்வத்திருவுருக்கள் அலைகொண்டமைய விழிதொடும் தொலைவுவரை வளைந்து தெரிந்தன. அவற்றின் சிறு குவைமாடத்தின் உச்சியில் அவ்வன்னையரின் அடையாளங்கள் கொண்ட கொடிகள் காற்றில் துடிதுடித்தன. பீதர்நாட்டு நெய்விளக்குகள் அமைந்த கல்தூண்கள் ஒற்றை மலர்சூடிய மரங்கள் என நிரைவகுத்திருந்தன. அப்பால் கிழக்குக் காவல்மாடத்தின் முரசுக்கொட்டில் வானில் மிதந்ததுபோல் செவ்வொளியுடன் தெரிந்தது.

சூதர்களில் மூத்தவரான போத்யர் கூன்விழுந்த உடலை நிமிர்த்து இடையில் கைவைத்து நின்று கிழக்குச் சரிவை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தார். வானில் விண்மீன்கள் செறிந்திருந்தன. அவற்றின் அதிர்வு சொல் சொல் என உதிர்ந்துகொண்டிருந்தது. அப்பால் மேற்குக்கோட்டையை ஒட்டி அமைந்த ஏரியின் மேலிருந்து பாசிமணம் கொண்ட காற்று வீசியது. அது கோட்டைச்சுவரின் வளைவில் முட்டி அகன்று மீண்டும் சுழன்று வந்தபோது புராணகங்கையின் சதுப்புக்காட்டிலிருந்து பச்சிலைவாடை வந்தது. நரிகளின் ஊளை மிகமிக அப்பால் எழுந்தமைந்தது.

முற்காலையின் இருளில் கோட்டையின் வெண்பரப்பு பட்டுத் திரைச்சீலையென மெல்ல நெளிவதாக விழிமயக்கு அளித்தது. கோட்டைக்குமேல் காவல்மாடங்களில் இளஞ்சிவப்பு வட்டங்களென முரசுத்தோலின் பரப்புகள் தெரிந்தன. அங்கிருந்த காவலர்களின் இரும்புக் குறடோசையும், அவர்களின் ஆழ்ந்தகுரல் பேச்சொலியும் எழுந்தன. கவசங்களின் நீர்ப்பளபளப்பும் படைக்கலக்கூர்களின் விழிமின்களும் தெரிந்தமைந்தன. கோட்டை ஒரு கணத்திற்கு முன்னர்தான் ஒரு சொல்லில் இருந்து எழுந்து விரிந்து விரிந்து தன்னை அங்கு நிறுவிக்கொண்டதுபோல் தோன்றியது. எல்லா நோக்குகளும் அதில் சென்று முட்டி மீண்டன. எல்லா எண்ணங்களும் அதைத் தொட்டு வளைந்தன. அதை சேர்க்காமல் அங்கிருக்கும் எவரும் சித்தம் கொள்ளமுடியவில்லை.

கோட்டைக்கு உள்ளிருந்து அஸ்தினபுரியின் அணிப்படை ஓசையில்லாத நீர்ப்பெருக்கென கவசங்கள் அலைகொண்டு பளபளக்க வழிந்து சென்று வெளிமுற்றத்தில் தேங்கி

அணிகளாகப் பிரிந்து உறைந்து அமைந்துகொண்டிருந்தது. புரவிகள் அவ்விருளில் நீந்துவனபோல் கால்களை துழாவியபடி ஒழுகின. மையப்பெருஞ்சாலையில் வந்த படையின் இறுதிப் பகுதி வளைந்து கோட்டைக்கு வெளியே சென்று மறைந்தது. முற்றத்தின் செம்மண் பரப்பில் பாதச்சுவடுகள்மேல் பந்தங்களின் செவ்வொளி பரவிக்கிடந்தது. ஒளிகொண்ட கொடிகள் துடித்தன. அத்தனை ஒலிகளையும் மூடியபடி அங்கு ஓர் ஒலியின்மை நிறைந்திருந்தது. எவ்வொலி எழுந்தாலும் அதை தன்னுள் இழுத்துக்கொள்ளும் அழுத்தம் கொண்டிருந்தது அது.

கவசம் அணிந்த பெரிய புரவியில் வந்து இறங்கிய சுதமை கைகளை நீட்டி முற்றத்தையும் கோட்டைச் சுவர்களையும் சுட்டி ஆணைகளை இட்டாள். அவள் சொற்களும் அப்பால் எழுந்த நூற்றுவர்தலைவனின் ஆணைக்குரலும் அந்த அமைதிக்குள் நிகழ்ந்தன. புரவியொன்று கனைத்தது. சகடங்கள் ஒலிக்க கடந்து சென்ற வண்டியொன்றின் ஓசை. கீழே விழுந்த கேடயம் ஒன்றின் உலோகக் கூரொலியும் அந்த அமைதியின்மைக்குள் விழுந்து அதன் அடியில் மறைந்தது. போத்யர் கிழக்குச் சரிவை விழிகளால் துழாவிக்கொண்டிருந்தார். “இன்றென்னவோ விண் முழுக்க மீன்கள்!” என்று அமர்ந்திருந்த தென்னிலத்துச் சூதன் சொன்னான். போத்யர் அவனைத்திரும்பிப்பார்த்துவிட்டு மீண்டும் கீழ்ச்சரிவை நோக்கிக்கொண்டிருந்தார்.

ஆனால் தென்னகத்துச் சூதன் பேச விழைந்தான். “விடிவெள்ளி என்பது கதிரவனின் ஒரு துளி. ஓர் ஒற்றன்” என்றான். அவன் அருகே அமர்ந்திருந்தவன் முனகிக்கொண்டான். போத்யர் மீண்டும் திரும்பி உறுத்து நோக்கி “பேசவேண்டாம்” என முகம்

காட்டினார். அவர்கள் அனைவருமே பொறுமையிழந்திருந்தார்கள். தங்கள் முழவுகளையும் யாழ்களையும் தேவையின்றி தொட்டு முறுக்கினார்கள். ஆணிகளை திருகியும் தோல்பரப்பையும் நரம்பு அடுக்கையும் விரல்களால் வருடியும் அந்த கணங்களை ஒவ்வொன்றாகக் கடந்தனர். சிலர் தேவையில்லாமல் இருமிக்கொண்டனர்.

தென்னகச் சூதன் திரும்பி மகாமரியாதம் பந்த ஒளியில் ஆங்காங்கே சிவந்து இருப்பதை நோக்கி “சில தருணங்களில் பந்த ஒளியில் இது காட்டெரி எழுந்துவிட்டதோ என்ற விழிமயக்கை ஏற்படுத்துகிறது” என்றான். அவன் அருகே அமர்ந்திருந்தவன் மட்டுமே அதை தெளிவுறக் கேட்டான். பிறர் அதை மெல்லிய முணுமுணுப்பென உணர்ந்தனர். முரசுத்தோல்பரப்பில் காற்று படும்போது வரும் ஒலிபோல எழுந்த அவ்வோசை போத்யர் காதில் விழுந்தது. “ம்” என்று அவர் உறுமினார். அவர்கள் சலிப்புடன் அசைந்தார்கள்.

போத்யர் அவர்கள் ஒவ்வொருவரையும் மாறி மாறி பார்த்தார். அவர்கள் வெவ்வேறு நிலங்களையும் குலங்களையும் சார்ந்தவர்கள். வெண்ணிறம் கொண்ட வடமேற்கு நிலத்தவர், பீதர்களைப்போன்ற காமரூபத்தினர், கன்னங்கரிய தென்னிலத்தவர், கூரிய முகமும் செம்மண் நிறமும் கொண்ட வேசர நாட்டவர். கடந்த மூன்று நாட்களுக்கு மேலாக அவர்கள் அஸ்தினபுரியின் தெற்குக் கோட்டைவாயிலருகே அமைந்த சூதர் தெருவில் புதிதாகக் கட்டப்பட்ட பெரிய இசை மண்டபத்தில் அமர்ந்து அந்நாளுக்கான புகழ்ப்பாடலை ஒத்திகை பார்த்திருந்தனர். இரவும் பகலுமென அந்த ஒத்திகை நிகழ்ந்தது.

“பிறழும் ஒரு மாத்திரைகூட தவறு என்றே கருதப்படும். பிழையுள்ள பாடல் மங்கலத்தை அழிக்கும். இசையென்பது இசைமை என்று உணர்க!” என்று அவர் மீள மீள கூறியிருந்தார். அவர்கள் விழிகளால் ஏற்றுக்கொண்டனர். ஆனால் முதல் நாளில் அவர்களிடமிருந்த பணிவு மூன்றாம் நாள் இருக்கவில்லை. முதல் நாள் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆகவே உறுதியுடன் அதை ஏற்றனர். மூன்றாம் நாள் அந்த ஒத்திகைகள் வழியாகவே அவர்கள் நம்பிக்கை இழந்தனர். ஆகவே அதை இளிவரலாக ஆக்கிக்கொண்டனர்.

போத்யர் பெருமூச்சுவிட்டு ஐயத்துடனும் நம்பிக்கையின்மையுடனும் சூதர்களை மீண்டும் பார்த்தார். கோட்டைக்கு மேல் பந்தங்கள் ஒன்றிலிருந்து ஒன்றென தங்களை தொடுத்துக்கொண்டு செந்நிறச் சரடென்றாகி, ஒழுக்கென நீண்டு விரியத்தொடங்கின. அனல்முடி சூடிய கோட்டைக்கு மேலிருந்து ஒரு கொம்பொலி அறைகூவ கோட்டையின் நான்கு நுழைவாயில் முகடுகளில் இருந்தும் மூன்று எதிரொலிகள் அதற்கு மறுமொழியளித்தன. “கோட்டை ஒருங்கிக்கொண்டிருக்கிறது” என்று ஒரு சூதன் சொன்னான். போத்யர் “பேசவேண்டியதில்லை” என்றார். “சரி, பேசவில்லை” என்றான் அவன். அனைவரும் மெல்ல சிரித்தனர்.

போத்யர் அவர்களில் இளையவனாகிய சூதனை நோக்கி சற்று கவலையுடன் “உன் முழவை இன்னும் இறுக்குக!” என்றார். அவன் அதை தொட்டு நோக்கி “பதமாகவே உள்ளது, ஆசிரியரே” என்றான். விரல்களால் சுண்டி அதன் ஓசையைக் காட்டி “போதுமல்லவா?” என்றான். பற்களைக் கடித்து ”ஆம்” என்று உரைத்த போத்யர் விழிதிருப்பிக்கொண்டார். அவ்விளையோன்

கரிய முகமும், பெரிய பற்களும், சிப்பி போன்ற வெண்பரப்பு கொண்ட கண்களும் கொண்டிருந்தான். தென்னிலத்தவன். அவனிடம் ஓர் அடங்காமை இருந்தது. ஆனால் அவனால்தான் எளிதில் கற்றுக்கொள்ள முடிந்தது.

அவனை அந்தச் சூதர் குழுவுக்குள் சேர்ப்பதற்கு முதலிலேயே அவருக்கு தயக்கமிருந்தது. ஏற்கெனவே அவன் பல அவைகளிலிருந்து விலக்கப்பட்டிருந்தான். ஆனால் சுரேசர் அவன் அந்தக் குழுவில் இருக்கட்டும் என முடிவுசெய்திருந்தார். அவர் அவனை வெறுப்புடன் பார்த்தார். அவனுடைய குரல் இளமையின் விசையும் தாளமும் கொண்டிருந்தது. அவர் “ஓலமிடுவதற்கு இங்கே கொம்புகள் உள்ளன” என்று முணுமுணுத்தார். சுரேசர் நகைத்து “நீங்கள் இளமையில் இதே குரல் கொண்டிருந்தீர், சூதரே” என்றார். திடுக்கிட்டு இளையோனை நோக்கியபின் போத்யர் “ஆம்” என முனகிக்கொண்டார்.

அஸ்தினபுரியின் அரண்மனையில் இருந்து துச்சளையின் அழைப்பு அவருக்கு வந்தபோது அவர் தன் இல்லத்திலிருந்து கிளம்புவதற்கே இயலா நிலையில் இருந்தார். அவருடைய மைந்தரும் குடிகளும் அவரை விட்டு சென்றுவிட்டிருந்தனர். அவருடைய குடிவழி இளையோன் அருகே குடியிருந்தமையால் மட்டும்தான் அஸ்தினபுரிக்குள் அவரால் உயிர்வாழ முடிந்தது. போர் முடிந்த செய்தி வந்ததுமே அவருடைய மைந்தன் “இனி இந்நகர் சொல் திகழும் தகுதி கொண்டதல்ல. நம் முன்னோர் வாழ்த்திய அனைத்தும் இங்கிருந்து மறைந்துவிட்டன” என்றான். அவர் நகரிலிருந்து மக்கள் ஒழிந்து செல்வதை பல நாட்களாக

கேட்டுக்கொண்டிருந்தார். அவருடைய குடியினரிலேயே பெரும்பாலானவர்கள் சென்றுவிட்டிருந்தனர்.

“இனி இங்கு ஒருபோதும் நெய்மணக்கும் ஊன்சோறு பெருகப்போவதில்லை. கருவூலப்பொன் பெருகப்போவதுமில்லை. அத்தனை பேரும் கிளம்பிக்கொண்டிருக்கிறார்கள். நானும் கிளம்புகிறேன்” என்றான் மைந்தன். அப்போது அவர் தன் இல்லத்திண்ணையில் இளவெயிலை உடலில் ஏற்று அமர்ந்திருந்தார். நெடுநாட்கள் அங்கு திகழ்ந்த உணவின்மையால் அவர் உடல் மெலிந்து, எலும்புகளின் மேல் தோல் படிந்து, அதன் மேல் பூசணம் எழுந்து ஈரமண்ணில் மட்கிக்கிடக்கும் பழைய மரம் போலிருந்தார். அவர் பற்கள் உதிர்ந்துவிட்டிருந்தன. தலை நடுங்கிக்கொண்டிருந்தது. குளிரிலென துள்ளி அதிர்ந்துகொண்டிருந்த கைகளை இரு தொடைகளுக்கும் அடியில் வைத்து அழுத்தி பிடித்துக்கொண்டார். இரு முழங்கைகளும் நடுங்கின.

மைந்தன் “இந்நிலையில் தாங்கள் எங்களுடன் நெடுந்தொலைவு வருவது கடினம். ஆயினும் தாங்கள் வருவதே நல்லது. எவ்வகையிலேனும் தங்களை இங்கிருந்து கொண்டு செல்கிறேன். ஒரு சிறு சகடம் ஒன்றை ஒருக்கியிருக்கிறேன். சற்றே பொறுத்துக்கொண்டீர்கள் என்றால் போதும்” என்றான். “அறுநீர் பறவையென எழுவதற்கு எனக்கு ஒப்புதல் இல்லை” என்று அவர் சொன்னார். “சூதர்களுக்கு நிலமில்லை, நீருமில்லை. வானமே நம்முடையது. நாம் நிறைகதிர் கண்ட இடங்களில் சென்று இறங்குவோம், வானுக்கே மீள்வோம்” என்று மைந்தன் சொன்னான்.

“இச்சொற்களை சொல்ல வேண்டியவர்கள் உழவர்கள், ஆயர்கள். வணிகர்களும் சூதர்களும் அல்ல.”

“நீ எனக்கு நூல் கற்பிக்க வேண்டியதில்லை” என்று அவர் சலிப்புடன் கூறினார். அவன் சீற்றத்துடன் அவர் முன்னால் வந்து நின்று “அதை விடுங்கள். நான் நேரடியாகவே சொல்கிறேன், நாம் பேசும் மொழியையும் நாம் சொல்லும் கதையையும் புரிந்துகொள்ளக்கூடியவர்கள் அனைவரும் இங்கிருந்து கிளம்புகிறார்கள். பெருவணிகர்கள், ஆயர்குடிகள், வேளாண்குடிகள். எஞ்சுவது யார்? களத்தில் மாண்ட மறவர்களின் ஆவிகள். இந்நகரை கைப்பற்றவிருக்கும் இழிசினர். இருளுலக தெய்வங்கள். இவர்களிடம் சொல்பெருக்கி உயிர்வளர்க்கலாகும் என்று எண்ணுகிறீர்களா?” என்றான்.

அவர் அவனுடைய சீற்றத்தை நோக்கிக்கொண்டிருந்தார். “சேர்த்துவைக்கும் கலை நாமறியாதது. இங்கே நாம் கைவிடப்பட்டோம். உணவில்லாது துயருற்றோம். இங்கிருந்தோர் வீசிய சிற்றுணவால் உயிர்பேணிக்கொண்டோம். இதோ அவர்கள் அனைவரும் கிளம்பிச் செல்கிறார்கள். அவர்களே நம்மை புரந்தவர்கள். அவர்களுடன் செல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம்” என்றான். “ஊன் பொதியைத் தொடரும் காகங்கள்போல, அல்லவா?” என்று அவர் கேட்டார். அவன் பற்களைக் கடித்து கைகளை இறுக்கி சீற்றத்தை அடக்கி “நான் தங்களை எவ்வகையிலும் அறிவுறுத்தவில்லை. நான் கிளம்புவதில் எந்த மாற்றமும் இல்லை. நீங்கள் வரவில்லை என்றால் இதுவரை இங்கே எவ்வண்ணம் இருந்தீர்களோ அதை இழக்கப்போகிறீர்கள். இரவலனாக தெருவில் அமர்ந்து பிடி உணவு பெற்று வாழப்போகிறீர்கள். வேண்டாம், அப்பழியை என்மேல் சுமத்தாதீர்கள். கிளம்புக!” என்றான்.

“இந்நகர் விட்டு எங்கும் நான் செல்வதாக இல்லை. எனது பொழுது ஓடிவிட்டது. என் உடலில் ஒவ்வொரு நாளும் குளிர் மிகுந்து வருகிறது. எலும்புகள் ஆற்றடிக் கற்கள் என விறைத்திருக்கின்றன. இனி நெடுநாள் இங்கு வாழப்போவதில்லை. இங்கிருந்து கிளம்பி புது நிலங்களைக் கண்டு வாழும் ஆற்றல் இவ்வுடலில் இனி இல்லை” என்றார் போத்யர். மைந்தன் குரல் தணிந்தான். “நான் என்ன செய்வது? என் மைந்தருடன் நான் என்ன செய்து வாழ்வது?” என்று மீண்டும் கேட்டான். “கிளம்பிச்செல்க, புது நிலம் நாடுக! இங்கே உன்னைப் புரந்த குடிகள் உன்னையும் உன் குடியையும் இன்னமும் வாழச்செய்க! எனக்கு இச்சிறு இல்லம் போதும். இங்கு இயன்றவரை உணவு எஞ்சவிட்டுச் செல்க! நன்று நிகழும்” என்றார் போத்யர்.

அவன் சினம் ஏற அவரை கூர்ந்து நோக்கிவிட்டு இன்னொரு எண்ணம் எழ உடல் தளர்ந்து, குரல் உடைய, விழிகள் நனைய “தங்கள் சொற்களை என்னால் உளம்கொள்ள இயலவில்லை, தந்தையே. நான் இருமுனையில் இருக்கிறேன்” என்றான். “சென்று முல்கலனிடம் கூறுக! அவன் என்னை புரப்பான். கைப்பிடி உணவு ஒருநாளுக்கு, அது போதும் எனக்கு” என்றார் போத்யர். மைந்தன் விழிகளில் எழுந்த திகைப்பைக் கண்டு புன்னகைத்து “என்றேனும் இந்நகர் மீளுமென்றால் நீ திரும்பி வருக! அன்று நானோ என் சொல்லோ உன்னைக் காத்திருப்போம்” என்று மென்மையாக சொன்னார்.

திரும்பி வருதல் எனும் சொல் அவனை மீட்டது. அவன் விழிகள் தெளிந்தன. “ஆம், இப்புலம்பெயர்தல் எப்போதைக்குமென அல்ல. இம்மக்கள் அஸ்தினபுரிக்கு மீண்டு வருவார்கள். இங்கு அறம் நிலைகொள்ளும் கோல்

எழுமெனில், மூதாதையர் சொல் திகழுமெனில் அவர்கள் இங்கு தங்கள் தொல்வாழ்வை மீண்டும் தொடங்குவார்கள். அவர்களுடன் நானும் வருவேன். யார் அறிவார், மிகச் சில நாட்களுக்கே நீளும் ஒரு செலவாக இருக்கலாம் இது” என்றான். “ஆம், மிகச் சில நாட்கள்தான்” என்று அவர் சொன்னார். புன்னகைத்து “செல்க, உளம்செழித்த வாழ்த்துகள் என்னிடம் இருந்து உனக்கும் உன் மைந்தருக்கும் வந்தமைக! நீ செல்லும் இடமெல்லாம் என் பெயரும் என் குடிப்பெயரும் உனக்கு துணையும் கோலும் ஆகுக!” என்று வாழ்த்தினார்.

அவர் மைந்தன் முல்கலரிடம் சென்று தந்தையை அவரிடம் ஒப்படைப்பதாகச் சொன்னபோது அவர் நகைத்து “அவ்வண்ணம் அவர் கூறினாரா?” என்றார். “ஆம்” என்று அவன் கூறினான். “அவரே தன் வாயால் அதை உரைத்தாரா?” என்று முல்கலர் மீண்டும் கேட்டார். “மெய்யாகவே அவரே உரைத்ததுதான் இது” என்று அவன் சொன்னான். அவர் உரக்க நகைத்து “நன்று, இவ்வண்ணம் ஒரு காலம் அமைந்தது. இதை நான் எண்ணியிருக்கவில்லை. ஆனால் இவ்வண்ணமே இது நிகழ்ந்தாகவேண்டும் என இப்போது உணர்கிறேன்” என்றார்.

மைந்தன் தலைகுனிந்தான். ஊசல்பீடத்தில் மெல்ல காலால் உந்தி அதை ஆட்டியபடி அமர்ந்திருந்த முல்கலர் தளிர்வெற்றிலை எடுத்து நீறு தேய்த்து சுருட்டியபடி அவனை சிரிக்கும் விழிகளால் நோக்கி “நீ அறிவாய், நான் களிச்சூதன். சூதுக்களங்களில் என் சொல்லை வைத்து ஆடுபவன். சூதர்கள் இழிந்து சென்றடையும் அடித்தட்டில் அமைந்திருப்பவன். ஆகவே உன் தந்தை முதல்கொண்ட ஏழு பெருங்குலங்களால் கீழ்மகன் என்றே எண்ணப்பட்டவன்” என்றார். அவர் உரக்க நகைத்து “இந்த நாற்பதாண்டுகளில் ஒருமுறைகூட நான்

சூதர்மன்றுகளில் அமரச்செய்யப்பட்டதில்லை. ஒருமுறைகூட குடித்தெய்வ ஆலயங்களில் பூசனைசெய்ய எனக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதில்லை. சாவு, பிறப்பு, மணம் என எதற்கும் எனக்கு அழைப்பில்லை. என் கைதொட்ட அன்னமும் நீரும் சூதர்களுக்கு விலக்கு என ஆணையிட்டவர் உன் தந்தை” என்றார்.

மைந்தன் தலையசைத்தான். “நன்று, இவ்வண்ணமும் அமைந்தது” என்றார் முல்கலர். “உன் தந்தையும் நானும் இரு எல்லைகள். என் தந்தையின் மூத்தவரின் மைந்தர் அவர். நாங்கள் இருவரும் ஒரு குருதியின் இரு தரப்புகள்” என்றார். அவர் மிகுதியாகப் பேசுபவர் அல்ல என்று மைந்தன் அறிந்திருந்தான். அன்று அவரிடம் பேச்சு ஊறி ஊறி பெருகியது. “உன் தந்தை என்னிடம் சொன்னவை நினைவிலெழுகின்றன. முல்கலா, சூதர்களின் நெறி ஒன்றுண்டு. சொல் என்பது நிலைபேறு கொண்டிருக்கவேண்டும். அதன் பொருள் மட்டுமே பெருக வெண்டும். நிலைபெறாத சொல் பொருளை இருட்தெய்வங்களின் ஆடலுக்கு அளிக்கிறது. நீ சூதுக்களத்தில் வைத்து ஆடும் சொல் உன் மூதாதையரின் குருதி என்று உணர்க என்றார். அவருடைய விழிகளை நான் நேர்நோக்கவில்லை அன்று. ஆகவே சொல்லிலேயே அவருடைய நோக்கு படிந்திருக்கிறது.”

“தன் சொல்லுக்கு அடிமையாகியிருக்கும் சூதன் தெய்வங்களுக்குரியவன். தன் சொல்லை அவைநிறுத்தி வாழ்பவன் மூதாதையரால் வாழ்த்தப்பட்டவன். சொல்லை முச்சந்திகளில் ஒலிக்கவிடுபவன் தன் மைந்தரால் வணங்கப்படுவான். சொல்லை வைத்து களமாடும் சூதன் ஏழு பிறவியிலும் இகழப்படுவான். இதுவும் உன் தந்தை சொன்னது”

என்றார் முல்கலர். மைந்தன் “ஆம்” என்று தலையசைத்தான். “நாற்பதாண்டுகள் இரு எதிரெதிர் இல்லங்களில் வாழ்கிறோம். ஒருமுறையேனும் உன் தந்தை எனக்கு வாழ்த்துரைத்ததில்லை. என் விழி நோக்கி புன்னகைத்ததில்லை. உன் இல்லத்தில் நிகழும் நன்று தீதுகள் எதிலும் கலந்துகொள்ள நான் அழைக்கப்பட்டதில்லை” என்றபோது அவர் முகம் இறுகியது. விழிகள் வஞ்சம்கொண்டன.

“என் குருதியினர் அவர் என்று எங்கள் முகங்களே காட்டுவதனால் இந்நகரில் ஒவ்வொருமுறை அவரை காணுகையிலும் ஒவ்வொருவரும் என்னை நினைவுகூர்கிறார்கள்.” அவர் வஞ்சத்துடன் புன்னகைத்தார். “ஆனால் அது மட்டுமல்ல. பெரிதென்றும் மெய்யென்றும் மானுடர் உணரும் ஒவ்வொன்றுடனும் ஒரு கீழ்மையையும் பொய்மையையும் இணைத்துக்கொள்ள அவர்களின் ஆழத்திலிருந்து ஒரு தெய்வம் ஆணையிடுகிறது. உயர்ந்தவை வீழுமென்றும் நன்றென்பவை அனைத்தும் மறுபக்கம் கொண்டவை என்றும் அவர்களுக்கு அது உரைக்கின்றது. மானுடர் ஆடும் முடிவிலாக் களங்கள் அமையும் நெறி இது.”

“உன் தந்தையைப் பார்க்கும் ஒவ்வொரு வணிகனும் என்னை நினைவுகூர்வதுண்டு. என்னைப்பற்றி ஒரு சொல்லும் கூறாமல் இருக்கமாட்டான். ஒவ்வொரு நாளும் அவர் என்னை எண்ணி வெதும்பியபடியேதான் இல்லம் மீண்டிருக்கிறார். இந்நகரில் பழுதுறாச் சொல் கொண்டவர் என்று புகழ்பெற்ற பெருஞ்சூதர் அவர். இவ்வரண்மனையின் தொல்கதைகள் அனைத்தையும் முற்றறிந்தவர். ஆகவே அரசர்களும் எழுந்து நின்று வரவேற்கும் தகைமை கொண்டவர். அஸ்தினபுரியின் பேரரசர்

திருதராஷ்டிரர் பிறந்த நாளில் அங்கு அரண்மனை அவையில் அமர்ந்து அவர் பிறப்பை பாடியவர்களில் ஒருவர். நன்று, இத்தருணம் இவ்வண்ணம் வாய்க்கும் என்று தெய்வங்கள் எண்ணியிருக்கின்றன போலும்" என்றார்.

"தந்தையே, தாங்கள் அவரை பார்த்துக்கொள்ள முடியாதா?" என்று மைந்தன் கேட்டான். அவர் வெடிப்புறச் சிரித்து "நான் ஒழியும் தருணமா இது? இதுகாறும் நான் வாழ்ந்த வாழ்க்கை இங்கல்லவா நிறைவடைகிறது? இனி இங்கு உன் தந்தை நான் அளிக்கும் சிற்றுணவில் வாழப்போகிறார். அறத்தை மறம் அன்னம் ஊட்டவிருக்கிறது. சூதுக்களத்தில் எஞ்சிய சோற்றில் இறுதி நாட்களைக் கழிக்கவேண்டும் என்பது அவரது ஊழெனில் அதை நிறைவேற்றுவதல்லவா என் பொறுப்பு?" என்றார்.

அவன் சீற்றத்துடன் "அதில் மகிழ்கிறீர்களா?" என்றான். "ஆம், மகிழ்கிறேன். அது என் வெற்றி என்று ஒருபுறம் உளம் தருக்குகிறது. அது என் ஈடேற்றம் என்று மறுபுறம் உளம் அமைகிறது" என்றார். அவன் பற்களைக் கடித்து "எனில் வருக! வந்து என் தந்தையிடம் கூறுக, தாங்கள் அவர் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக! அவரது இறுதிநாள் வரை சிற்றுணவை அளிப்பதாக எனில் மட்டுமே நான் இங்கிருந்து கிளம்ப இயலும்" என்றான். அவன் குரல் உடைந்தது. "தந்தையே, என் குழந்தைகளும் பசியில் மெலிந்து உயிர் துறந்துகொண்டிருக்கின்றன. இங்கிருந்து கிளம்புவதைக் குறித்து நான் எண்ணவே இல்லை. என் இளைய குழந்தை பூழி மண் அள்ளித்தின்பதை இன்று நான் கண்டேன். இனி இங்கு இருக்கலாகாதென்று உறுதி கொண்டேன். என்னை வாழ்த்துக!"

அவர் புன்னகைத்து அவன் தோளில் கைவைத்து சொன்னார் “நன்று, நானே வந்து உன் தந்தையிடம் கூறுகிறேன். இத்தருணமும் ஊழால் முன்பே வடிக்கப்பட்டதென்றும் அதை மீள நடிப்பதொன்றே நான் இயற்றுவதென்றும் இப்போது உணர்கிறேன்.” அவன் கண்ணீருடன் தலைவணங்கினான். அவர் மேலாடையை எடுத்துக்கொண்டு கிளம்பினார். அவர் மனைவி வந்து அவருக்குப் பின்னால் நின்றுகொண்டு “வேண்டியதில்லை. எண்ணிச் செய்யவேண்டும். அவர் வரவழைத்து தீச்சொல்லிடக்கூடும்” என்றாள். “ஆம், அதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால் என்ன நிகழ்கிறதென்று அறியவேண்டாமா? இப்புதிருடன் என்னால் வாழமுடியுமா என்ன?” என நடந்தார்.

முல்கலர் தன் முன் வந்து நின்று வணங்கியபோது போத்யர் வெறுமனே விழி தூக்கி நரைத்த விழிகளால் அவரை பார்த்துக்கொண்டிருந்தார். “மூத்தவரே, தங்களை என்னிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்கிறார் தங்கள் மைந்தர். இதுகாறும் இங்கு நாமிருவரும் ஒன்றின் இரு பக்கங்களென இருந்தோம் என்றும் ஒருவரை ஒருவர் புரந்துகொண்டிருந்தோம் என்றும் இப்போது உணர்கிறேன். அதை மீண்டும் நிகழ்த்தவே இங்கு ஊழ் அமைந்துள்ளது. இதனூடாக நான் நிரப்பும் மறுபுறம் உள்ளதுபோல் உங்கள் வாழ்வால் நீங்கள் நிரப்பும் பக்கமும் ஒன்று உள்ளது என்றும் தோன்றுகிறது. என்னை வாழ்த்துக!” என்றார் முல்கலர்.

“ஆம், இதில் எனக்கு நிறைவே” என்று அவர் கைதூக்கி அவர் தலையில் வைத்து “அவ்வண்ணமே ஆகுக!” என்றார். தன் மைந்தனை நோக்கி திரும்பி “நன்று மைந்தா, இனி நீ கிளம்பலாம்” என்றார். அத்தருணம் அத்தனை எளிதாக

முறுக்கவிழ்ந்து நிகழ்ந்து முடியும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் உடல் தளர்ந்து உள்ளம் நிலை கொண்டபோதுகூட எதையோ இழந்த சலிப்பை அடைந்தான். அதை தன் மீதான சினமாக மாற்றிக்கொண்டான். கையறு நிலையில் அது கண்ணீராக மாறியது. “நான் பெரும்பிழை எதையோ ஆற்றுகிறேன் என்று உணர்கிறேன், தந்தையே. ஆனால் மைந்தர் பொருட்டு எதையும் செய்ய தந்தையருக்கு உரிமையுண்டு என்று கற்றறிந்திருக்கிறேன். என் மூதாதையர் என்மேல் கனிவு கொள்க! இது பிழையெனில் இதற்கான தண்டம் முற்றிலும் எனக்கென அமைக! எந்தை சொல் அனல் ஆகுமெனில் அது என்னை மட்டும் எரிக்கட்டும். என் மைந்தர் அன்னம் கொண்டு வாழட்டும். சொல் பெருகி வளரட்டும். குலம் நிலைகொள்ள அவர்கள் மண்ணில் திகழட்டும்” என்றான்.

அவன் குனிந்து தந்தையின் கால்களை தொட்டபோது அவர் அவன் தலையில் கைவைத்து வாழ்த்தினார். அவன் விழிநீரை துடைத்தபடி மைந்தருடனும் மனையாட்டியுடனும் இல்லம் ஒழிந்து கிளம்பிச் சென்றான். திரும்பித் திரும்பி நோக்கியும் அவ்வப்போது நின்று விழிநீர் துடைத்தும் அவன் செல்வதை அவர் பார்த்துக்கொண்டிருந்தார்.

# களிற்றியானை நிரை - 52

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 2

மைந்தன் சென்றபின் போத்யர் தன் இல்லத்தின் சிறிய திண்ணையிலேயே நாளின் பெரும்பகுதியை கழித்தார். ஒவ்வொரு நாளும் அவர் இளையோன் இல்லத்திலிருந்து

எவரேனும் அவருக்கு இரு வேளை அன்னம் கொண்டுவந்து படைத்தனர். முதலில் அவர் தயக்கமும் அச்சமும் கொண்டிருந்தார். முதல் நாள் அவரிடம் வந்து “மூத்தவரே, தாங்கள் விழைந்தால் நான் சமைக்காத அரிசியை கொண்டுவந்து படைக்கிறேன். அதில் தீட்டு இல்லை. தாங்கள் வேண்டுமெனில் தங்கள் அன்னக்கலத்தை திண்ணையில் வைக்கலாம். எவரென்றே அறியாமல் அதில் நான் பிச்சையிட்டுச் செல்கிறேன். சூதர் பிச்சை பெறலாம் என்று நெறியுள்ளது. அப்பிச்சை அன்னமென்றால் அதை எவரளித்தார் என்பது பொருட்டல்ல என்பதும் அதன் பொருட்டு அவருக்கு பழி சேராது என்பதும் நமது நூல் கூற்று” என்றார்.

போத்யர் அவரை நேர்நோக்கி “சமைத்த அன்னமே கொண்டுவருக! உன் இல்லத்தில் இல்லாள் உலையில் அரிசி இடுகையில் முதல் கைப்பிடியை வழக்கம்போல நீத்தோர் வடிவிலெழும் காகங்களுக்கு என இடுக! இரண்டாம் கைப்பிடியை எனக்கென எண்ணி இடுக!” என்று கூறினார். முல்கலர் விழிகளில் தத்தளிப்பு தெரிந்தது. “மூத்தவரே, நான் இன்றும்கூட சூதுக்களத்தில் பாடியே பொருளீட்டுகிறேன்” என்றார். “ஆகுக!” என்றார் போத்யர். “பழி சேர்த்த அன்னம் அது. தாங்கள் இதுகாறும் வாழ்ந்து ஈட்டிய அனைத்தையும் அதனூடாக இழக்கிறீர்கள் என உணர்க!” என்று அவர் சொன்னார்.

“ஈட்டிய அனைத்தையும் இழந்தாகவேண்டும் நான்” என்று போத்யர் சொன்னார். “நான் எந்நெறியையும் பேணுவதில்லை. குலநெறியை, குடிநெறியை. மானுடநெறியையும்கூட” என்று முல்கலர் சொன்னார். “ஆகுக!” என்று மீண்டும் போத்யர் சொன்னார் “தங்கள் குடிமூத்தார் ஈட்டியவையும் இவ்வண்ணம்

பழி கொள்கின்றன” என்று அவர் மீண்டும் சொல்ல “ஆகுக!” என்று அவர் மூன்றாம் முறையும் மறுமொழி சொன்னார். முல்கலர் அவரை நோக்கி நின்றார். அவரால் மூத்தவரின் உள்ளத்தில் ஓடுவதென்ன என்று உணர முடியவில்லை. அந்தத் தெளிவின்மை அச்சத்தை அளித்தது. அவர் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன.

முல்கலரின் இல்லத்திலிருந்து அவர் இல்லாள் சமைத்த அன்னம் அவருக்கு வந்தது. அவர் அதை அத்திண்ணையில் வைத்து உண்டார். ஒவ்வொரு முறையும் அன்னத்தை மூன்றாகப் பகுத்து ஒரு பகுதியை மூத்தோருக்கென காகங்களுக்கும், ஒரு பகுதியை இரவலருக்கும் வைத்துவிட்டு, ஒரு பகுதியை தான் உண்பது அவர் வழக்கம். அவ்வன்னத்தையும் அவ்வாறே பகிர்ந்தார், அவ்வன்னத்தை உண்ண காகங்கள் வந்தன. ஒவ்வொரு நாளும் அவர் இடும் அன்னத்தை எதிர்நோக்கி இரவலன் ஒருவன் திண்ணையருகே காத்து நின்றிருந்தான். காகத்திற்கு உணவளிக்கையில் அவர் விழிகள் வெறிப்புகொண்டிருந்தன. இரவலருக்கு அளிக்கையில் அவர் விழிகள் கனிந்திருந்தன. உண்டு முடித்து கைகளையும் வாயையும் கலத்தையும் கழுவி அமர்ந்து வெயில் விரித்த சாலையை பொருளின்றி வெறித்துக்கொண்டிருந்தார்.

அவர் விழிகளின் முன்பாக நகரம் உருமாறிக்கொண்டிருந்தது. போர் நிலைத்தபின் நகர் முற்றொழிந்தது. ஓசையவிந்து இடுகாடென்றாகியது. காற்று வெறுமையில் துழாவி அலைந்தது. பின்னர் புது மக்கள் நகருக்குள் குடிவரத் தொடங்கியதும் மீண்டும் அங்கே பொருள் செறியலாயிற்று. சந்தைகள் முளைத்தெழுந்தன. அங்கு மானுடரின் குரல் எழுந்தது. நுரை நுரையென ஓசைகள் எழுந்து நகர் நிறைந்தது.

முல்கலர் முதலில் தயங்கிக்கொண்டிருந்தார். “மூத்தவருக்கு உணவளிக்கிறோம். நாம் இன்றேனும் இதை ஒழியலாம்” என்று அவர் சொன்னார். அவர் மனையாட்டி “வேறென்ன செய்வதாக எண்ணம்? நம் களஞ்சியம் ஊற்று அல்ல” என்றாள். அவர் அவளை சில கணங்கள் நோக்கியபின் பெருமூச்சுவிட்டார். “ஆம், நான் வேறெங்கும் செல்ல இயலாது” என்றார்.

கேளிக்கைநிலைகள் கொந்தளித்துக்கொண்டிருந்தன. நின்றிருக்க இடமில்லாமல் செறிந்து அவை பக்கவாட்டில் பெருத்தன. முல்கலர் பொருள் மிகுந்தவர் ஆனார். பட்டு அணிந்து, அணிகள் சூடி, பல்லக்கில் ஏறி அவர் நகரத்திற்குள் சென்றார். ஒவ்வொரு நாளும் மது அருந்தி நிலையழிந்து மடி நிறைய பொன்னுடன் பல்லக்கில் படுத்து திரும்பி வந்தார். முதல் சில நாட்களில் அவரிடமிருந்த பணிவு மெல்ல மெல்ல அகன்றது. அவருக்கு அன்னமிடுபவர் தானே என்ற எண்ணம் முதலில் ஓர் கூடாக் கருத்தென எழப்பெற்று நடுங்கி திகைத்து அதை ஒதுக்கினார். பின்னர் தன் ஆழத்திலிருந்து அச்சமும் பதற்றமுமாக அதை எடுத்து எடுத்து நோக்கினார். பின்னர் அதை உடன் வைத்துக்கொண்டார் அதை ஒரு மந்தணப் படைக்கலமெனப் பயின்றார். அது தனக்கு காவலும் துணையுமாவதை பின் உணர்ந்தார். அதில் மகிழலானார்.

பின்பு தன் இல்லாளிடம் அதை சொல்லத் தொடங்கினார். தன் மைந்தரிடம் சொன்னார். ஒவ்வொரு முறையும் அவருக்கு உணவு அனுப்பும்போது அதை கூறினார். பின்னர் ஒருநாள் மெல்லிய மதுக்களியில் அவர் முன் வந்துநின்று அதை உரைத்தார். “அன்னம் வந்துகொண்டிருக்கிறது அல்லவா? அன்னம் நிறைவு அளிக்கிறதா? உண்க, உண்க... அது நான் ஈட்டிய அன்னம்” என்றார். “ஆனால் தங்களுக்கு

அன்னமிடுவதென்பது எவ்வகையிலும் என் கடமை அல்ல. ஏனெனில் நெடுநாட்களுக்கு முன்னரே நான் குலமொழிவு செய்யப்பட்டவன். எனக்கு குலமில்லை. மூதாதையரின் வாழ்த்துகள் எனக்கில்லை என்று அறிவேன். எனில் மூதாதையர் எனக்கு அளித்த எக்கடமையையும் நான் செய்யவேண்டியதில்லை. எனக்கு மானுட அறம்கூட பொறுப்பென இல்லை.”

“எனினும் இவ்வன்னம் ஏன் இங்கு வருகிறதென்றால் அது எனது பெருந்தன்மையால். அல்லது நான் ஊழுடன் கொண்ட ஆடலால். அல்லது என் ஆணவத்தால். தங்கள் மேல் கொண்ட அளியால் அல்ல. உடன்குருதியினர் பசித்திருக்க உண்ணமுடியாத எனது நேர்மையாலும் அல்ல. இதை உண்கையில் என்னை பழித்தபடி என் வாழ்வை இகழ்ந்தபடி உண்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் பழி சேர்வது எனக்கல்ல, உங்களுக்குத்தான்” என்றார். போத்யர் புன்னகையுடன் அவரை நோக்கியிருந்தார். “புன்னகையுடன் இதை நீங்கள் கடக்க முடியாது. ஏனென்றால் இது குருதிச்சோறு. நிணச்சோறு. சீழ்ச்சோறு. பழிசேர்ந்த கீழ்ச்சோறு. அன்றாடம் நான் உண்பதன் மிச்சில்” என்றார்.

அன்று தன் அறைக்குத் திரும்புகையில் அவர் உடல் பலமடங்கு வீங்கிவிட்டிருப்பதைப்போல் உணர்ந்தார். நிலைகொள்ளாமல் பல இடங்களில் முட்டிக்கொண்டார். மனைவியிடம் “நான் இன்று தெய்வங்களுக்கு மறுமொழி சொன்னேன். என்னைப் பழித்த அத்தனை தெய்வங்களும் தலைகுனிந்து நிற்கக் கண்டேன்” என்று நகைத்தார். “இனி நான் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. எந்தத் தெய்வமும் என் முன் வந்து நின்றிருக்க அஞ்சும்” என்றார். ஆனால் அன்று

இரவு களிமயக்கு உடல்நீங்கியதும் விழிப்புகொண்டு திகைப்புடன் இருளை நோக்கிக்கொண்டிருந்தார். உளமுருகி இருளுக்குள் தனிமையில் அழுதார். “தந்தையே, தந்தையே” என்று விசும்பினார். அவர் மனைவி அவ்வழுகையை முன்பும் கண்டவள். அவள் அதை பொருட்படுத்தவில்லை. நெடும்பொழுதுக்குப் பின் அவர் தன் அன்னையை நினைவுகூர்ந்தார். பின் அமைந்து துயில்கொண்டார்.

ஆனால் இரு நாட்களுக்குப் பின்னர் மீண்டும் அவரிடம் வந்து “இன்று நான் உணவு உண்ணும்போது உணர்ந்தேன் என் உணவு இத்தனை சுவையாக இருப்பது ஏன் என்று” என்றார். எக்களிப்பும் விக்கலுமாக “அது வெற்றியின் சுவை! ஆம் வெற்றி!” என்று கூவினார். நடுத்தெருவில் நின்று “கேளுங்கள் சூதர்களே, இழிமக்களே, கேளுங்கள். இதோ நான் வென்றிருக்கிறேன். இதோ, நீங்கள் துறந்துசென்ற இத்தெருவில் அரசன் என நின்றிருக்கிறேன். இந்தத் தெருவையே விலைக்கு வாங்கும் பொருள்கொண்டவன் நான். என்னை அடிபணிந்தவர் அனைவருக்கும் அன்னமிடும் ஆற்றல் கொண்டவன்” என்று கூவினார்.

தன் வீட்டுக்குள் புகுந்து கை நிறைய வெள்ளி நாணயங்களை அள்ளிக்கொண்டு வந்தார். அவர் மனைவி பின்னால் ஓடிவந்தாள். “என்ன செய்கிறீர்கள்? நில்லுங்கள்... என்ன செய்கிறீர்கள்?” என்று கூச்சலிட்டாள். அவர் நாணயங்களை தெருவில் அள்ளி வீசினார். “பொறுக்கிக்கொள்ளுங்கள்... நாய்களே, வந்து பொறுக்கிக் கொள்ளுங்கள்” என்று கூவினார். நான்கு பக்கமிருந்தும் வறிய சூதர்கள் பஞ்சை உடல்களுடன் பாய்ந்து வந்து புழுதியில் விழுந்து புரண்டு ஒருவரோடொருவர் போரிட்டு அவற்றை பொறுக்கினர். ஒருவரை ஒருவர் கடித்துக்

கீறி கூச்சலிட்டனர். அவர் அவர்களை நோக்கி நின்றார். ஒரு விழியிலிருந்து நீர் வழிந்தது.

அவர் திரும்பி நோக்கியபோது போத்யர் அவ்வண்ணமே அமர்ந்திருப்பதை கண்டார். அவர் எதையுமே பார்க்கவில்லை என்று தோன்றியது. முல்கலர் சென்று தன் இல்லத்திண்ணையில் அமர்ந்தார். அங்கிருந்து போத்யரை பார்த்துக்கொண்டிருந்தார். அங்கேயே சுருண்டு படுத்துக்கொண்டார். அவர் மனைவி திகைத்து சொல்லற்று நோக்கி நின்றாள். பின்னர் வீட்டுக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள். அவர் மேலும் நாணயங்களை வீசக்கூடும் என இரவலர் காத்து நின்றனர். பின்னர் மெல்ல மெல்ல அகன்றனர்.

முல்கலர் விழித்துக்கொண்டபோது இருள் பரவியிருந்தது. தெரு வானொளியில் மின்னியது. எதிர்த்திண்ணையில் போத்யரின் விழிகளை அவர் கண்டார். நெடுநேரம் அவற்றை நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் எழுந்து அவர் அருகே சென்று அமர்ந்தார். “மூத்தவரே, என்னைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்றார். போத்யர் மறுமொழி சொல்லவில்லை. “கூறுக, என்னைப் பற்றி நீங்கள் எண்ணுவதென்ன?” என்றார் முல்கலர். போத்யர் மறுமொழி சொல்லமாட்டார் என உணர்ந்ததும் சிலம்பிய குரலில் “ஆம், நான் இழிமகன்தான். கீழோன்தான். என்றுமே அதை மறுக்கமாட்டேன்” என்றார்.

“ஆனால் நான் என்ன செய்யக்கூடும்? சொல்க, எனக்கு என்ன வழி இருந்தது?” அச்சொற்களுடன் அவர் உள்ளம்

திறந்துகொண்டது. பலநூறுமுறை அவ்வாறு அவ்வண்ணம் அவரிடம் அவற்றை சொல்லிக்கொண்டிருந்ததுபோல் உணர்ந்தார். “நான் எவரிடமும் சொல்லவேண்டியதில்லை. எவரிடமும் எனக்கு கணக்குகள் இல்லை. உங்களிடம் சொல்கிறேன். ஏன் சொல்கிறேன் என தெரியவில்லை. மூத்தவரே, இளமையில் நான் மன்றுபாடல் பயிலும்பொருட்டு சூதர்களத்திற்குச் செல்லும்போதெல்லாம் என்னை ஒரு பெரும் தோல்வியென்றே எண்ணினேன். என்னால் பாடல் கூற முடியவில்லை. குலமுறைகளை பிழையின்றி சொல்ல இயலவில்லை. என் குரல் பிறழ்ந்து இசையொழிந்தது. அனைத்து அவைகளிலும் தோற்கடிக்கப்பட்டேன். உடன் வந்த சூதர்களால் இளிவரல் செய்யப்பட்டேன். வாழும் பொருட்டு அவர்களின் இழிந்த சொற்களை ஏற்றுக்கொண்டேன்” என்றார்.

மூத்தவரே, சிறுமைகொண்டு வாழ்வதென்றால் என்ன என்று தெரியுமா?. அச்சிறுமையை ஒவ்வொருநாளும் அன்னமென உண்டு மூச்சென உயிர்த்து வாழ்வதன் துயரை உங்களால் உணரமுடியுமா? உடலே ஒரு விழுப்புப்பொதியாக ஆகிவிடுகிறது. நாறும் கூண்டு. விடுதலைக்காக உள்ளிருந்து ஏங்குகிறது ஆத்மா. உடலை ஒழிக்கவேண்டும். உடைத்து திறக்கவேண்டும். எத்தனை நாள் கோட்டைமேலிருந்து குதிப்பதைப் பற்றிய கனவுடன் மேலேறிச் சென்றிருக்கிறேன் என அறிவீர்களா? ஒருநாள் துணிந்து மதுக்கடைக்கு சென்றேன். கோட்டையிலிருந்து இறங்கி நேராக அங்கே சென்றேன். மது என்ன செய்யும் என அறிவேன். ஆனால் மதுக்கடையில் குடிப்பதன் பொருளென்ன என்று தெரிந்திருக்கவில்லை.

அது ஒரு குப்பைமேடு போலிருந்தது. மானுடக் குப்பைமேடு. எச்சில்கள், உமட்டல்கள், ஏப்பங்கள், உடல்நாற்றங்கள். சொற்கள்

சிதைந்து நாறின. சிரிப்பு அதைவிட உடைந்து கிடந்தது. அங்கு ஓரமாக அமர்ந்துகொண்டிருந்தபோது ஒருவன் என்னைக் கண்டு நீ சூதனா என்றான். ஆம் என்றேன். நீ அரசச்சூதன் அல்லவா என்றான். அக்கணம் என் உள்ளம் பெருமிதம் கொண்ட விந்தைதான் என்ன! நான் ஆம் என்றேன். ஆ, இங்கே ஒரு அரசச்சூதன் வந்துள்ளான். அரசர்களே, நம்மை அவன் பாட விழைகிறான். பாடுக, சூதா. பொன் கொள்க என்று அவன் கூவினான். களிமகன்கள் கூச்சலிட்டனர். ஆயிரம் அரசர்கள் இங்கே என்று கூவினர்.

அங்கே பாடுவதா என்று என் உள்ளம் திகைத்தது. ஆனால் பாடாமலிருக்க என்னால் இயலாது என்று அப்போது அறிந்தேன். ஏனெனில் எனக்கு மீண்டும் மது தேவையாக இருந்தது. என்னிடம் ஒரு செம்புநாணயம்கூட எஞ்சியிருக்கவில்லை. ஆகவே நான் அறிந்தவற்றிலேயே கீழ்மை மிகுந்த காம கேலிப்பாடல் ஒன்றை பாடினேன். அங்கிருந்தோர் கைதட்டி என்னை ஊக்கினர். களிவெறியில் சிரித்து கூச்சலிட்டனர். என்னை இருவர் தூக்கி வைத்து நடனமாடினர். என்னை மாறி மாறி முத்தமிட்டனர். வாழ்வில் முதல் முறையாக பாராட்டை அடைந்தேன். கொண்டாடப்பட்டேன். அன்று திரும்புகையில் பை நிறைய வெள்ளிக்காசும் இருந்தது.

மறுநாள் விழித்தெழுந்து என் அறையில் அமர்ந்து வெதும்பி அழுதேன். வீழ்ந்தேன் என்று, இழிவடைந்தேன் என்று, எஞ்சாதொழிந்தேன் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். இங்கிருந்து கிளம்பிச்சென்றபோது இருந்தவனல்ல திரும்பிவந்தவன் என்று, என் உடல் மாசடைந்துவிட்டது என்று, இனி மூதாதையர் குடிகொள்ளும்

எந்த இடத்திற்கும் என்னால் சென்று நின்றிருக்க இயலாதென்று சொல்லிக்கொண்டேன். இனி இல்லை இனி இல்லை என்று எனக்கு நானே வஞ்சம் கூறிக்கொண்டேன். அன்றே இறுதி என்று உறுதி பூண்டேன்.

ஆனால் இரு நாட்களுக்குக் கூட அவ்வுறுதி நீடிக்கவில்லை. அவ்வெள்ளி நாணயங்கள் என்னை ஈர்த்தன. அவற்றை கையிலிட்டு திருப்பித் திருப்பிப் பார்த்தபோது அவற்றின் மென்மையும் தண்மையும் என்னை மெய்ப்பு கொள்ளச் செய்தன. நானே ஈட்டிய வெள்ளி. ஆணென நிமிர்ந்து நின்ற களம். அதை ஒழிய என்னால் இயலாது. மீண்டும் அங்கே சென்றேன். மதுக்களத்தில் பலர் ஓடி வந்து என்னை எதிர்கொண்டனர். அள்ளித் தூக்கி உள்ளே கொண்டுசென்றனர். சூதுக்களத்தில் அமர்ந்து அன்று பாடினேன். அன்று தயக்கங்களை களைந்துவிட்டிருந்தேன். வஞ்சத்துடன் எவருக்கோ விடுத்த அறைகூவலென அன்று பாடினேன்.

“இதோ என்னை கீழிறக்கிக்கொள்கிறேன். இன்னும் கீழிறங்குவேன் பார் என்று எவருக்கோ அறைகூவிக்கொண்டேன்” என்றார் முல்கலர். கள்மயக்கில் உதடுகள் கோண நகைத்துக்கொண்டு “சூதுக்களத்தில் பாடுவதன் கலைகளை நான் முனைந்து கற்றுக்கொண்டேன். அது அத்தனை எளிதல்ல. நீங்கள் அரச அவைகளில் அரச உள்ளங்களை அக்கணம் கணித்து கணித்து பாடுவதற்கு ஒரு படி மேல் என்பேன். சூதில் வென்றவனை பாடவேண்டும், தோற்றவனை மேலும் வீறுகொண்டு எழச் செய்யவேண்டும். சூதுக்களத்தில் வென்று கொக்கரிப்பது ஆணவம். தோற்றுச் சீறுவதும் ஆணவம்” என்றார்.

சூதுக்களத்தில் நின்றிருக்கின்றன தெய்வங்கள். அடுத்த கணத்தை முடிவு எடுக்கும் ஆற்றல் கொண்டவை. முந்தைய கணத்தை திரட்டி ஒவ்வொருவருக்கும் ஊழ்ப்பயனென அளிப்பவை. மனிதனின் பெருவிழைவை, ஆணவத்தை ஆள்பவை. அனைத்துக் கீழ்மைகளுக்கும் மேல் தங்கள் சொல்லாற்றல் கொண்டவை. அத்தெய்வங்கள் அனைத்தையும் சொற்கள் அங்கு எழுப்பி நிறுத்தும். என் சொற்களுக்காக அவை ஆடும். என் சொற்கள் அவற்றுக்கு ஆணையிடும். நான் அத்தெய்வங்களின் பூசகன்.

என் சொற்கள் திகழும் சூதுக்களம் புகழ்பெறலாயிற்று. பெருவணிகர் அங்கு தேடிவந்தனர். என் புகழ் சூதுக்களங்கள் அனைத்திலும் பரவியிருந்தது. மேலும் மேலும் பொருள் கொடுத்து என்னை சூதுக்களங்களுக்கு அழைத்தனர். என் சொற்களால் சூதுக்களத்தை ஆளும் தெய்வங்களை ஆட்டுவிக்க முடியுமென்றும், வெறும் சொல்லால் பகடைகளை பன்னிரண்டாக்க இயலுமென்றும் புகழ் பரவியது. அப்புகழில் நான் திளைத்தேன். என் மடி பொன்னொழிந்ததே இல்லை. என் இல்லத்தில் களஞ்சியம் ஒருபோதும் வறண்டதில்லை. என் மைந்தர் பட்டன்றி உடுத்ததில்லை, பல்லக்கிலன்றி பயணம் செய்ததில்லை.

என் மனையாட்டி முதலில் என்னை இகழ்ந்ததுண்டு, இத்தொழில் வேண்டாமென்று. அவளை குலத்தார் பழித்தனர். பிறந்தகமே எதிரியாயிற்று. பிறிதொன்று தேரும்படியும் விழிநீருடன் மன்றாடியதுண்டு. இந்நகர்விட்டுச் செல்வோம் என்றும் பலமுறை அழைத்ததுண்டு. எனக்கு வேறுவழியில்லை என்பேன். பொன் எவரையும் மாற்றும். பசியின்மைக்குப் பழகிய பின்னர் பசி மீதான அச்சம் பெருகுகிறது. வேறுவழியின்றி

அமைந்த இடத்தை மானுடர் மெல்ல மெல்ல சொல்லி நிலைநிறுத்திக்கொள்கிறார்கள். அவ்வண்ணம் நான் இதில் அமைந்தேன். என்னைவிட உறுதியாக என் மனையாட்டி அமைந்தாள். இன்று அவள் அதன்மேல் அரியணையிலென அமர்ந்திருக்கிறாள். அறத்தின் மேலும் ஒழுக்கத்தின் மேலும் பெண்டிருக்கும் பற்று உறுதி மிக்கது. ஆகவே அறத்தையும் ஒழுக்கத்தையும் துறந்தபின் அவர்கள் அடையும் விடுதலையும் பெரியது.

இழந்ததொன்றுமில்லை என்று நானே எண்ணிக்கொண்டேன். அல்ல என்று என் இல்லத்திற்கு முன் அமைந்த உங்கள் சிறுகுடில் ஒவ்வொருநாளும் எனக்குக் காட்டியது. மூன்றடுக்கு மரவீட்டை கட்டிக்கொண்டபோது எவ்வண்ணமேனும் உங்களை என் முன்னிருந்து அகற்றவேண்டும் என்று பலமுறை முயன்றேன். உங்கள் மைந்தன் ஒப்புக்கொள்ளவில்லை. பொன் கொடுத்து நோக்கினேன். அச்சுறுத்தியும் பார்த்தேன். உங்கள் மூதாதையர் வாழ்ந்த வீட்டிலேயே நீங்கள் வாழ்ந்து இறக்கப்போவதாக கூறினார்கள். நான் இடம்பெயரலாமென்று எண்ணினேன். ஆனால் சூதர்தெருவை விட்டு நீங்கினால் நான் இழிசினர் தெருவுக்கே செல்லவேண்டியிருக்கும். இங்கே இவ்வண்ணம் அரண்மனை என இல்லம் எழுப்பி நான் தங்கியிருப்பது ஓர் அறைகூவல். ஒரு பழிவாங்கல்.

அத்துடன் என்றேனும் நான் மறைந்து பழியும் மறக்கப்பட்ட பின் என் மைந்தர் மீண்டும் குடியில் இணையவும் இந்த இல்லமே வழிவகுக்கும். ஆகவே வேறுவழியில்லை. ஒவ்வொரு நாளும் உங்களைப் பார்த்த பின்னரே என் இல்லம் விட்டு வெளியே வரவேண்டும் என்று எனக்குத் தெரிந்தது. மூத்தவரே, உங்கள் விழி ஒவ்வொரு நாளும் என்னை சுட்டியது,

உங்கள் கண்ணுக்குப் படாமல் இல்லம் விட்டு வெளியேறவேண்டும் என்று எண்ணுவேன். உங்களை எண்ணாமல் ஒரு நாளை கடந்து செல்ல வேண்டும் என்று திட்டமிடுவேன். ஒருநாளும் இயன்றதில்லை.

என்னைக் காண்பவர் அனைவரும் உங்களைப் பற்றி எண்ணினார்கள். வஞ்சச் சூது ஆடும் இழிசினர் கூட. பிறிதொருவரை நினைவுறுத்துகிறீர்கள் சூதரே, நீங்கள் யார் அரண்மனை முதன்மைச் சூதரின் மைந்தரா இளையவரா என்றார்கள். நான் அச்சொற்களை கேட்காததாக நடிப்பதுண்டு. வேறெவராவது அச்சொற்களை ஏற்று "ஆம், இவர் அவருடைய இளையவரேதான்" என்பார்கள். உயர்ந்தோன் ஒருவன் இழிந்து இங்கு வந்தது அத்தனை உவகையை அவர்களுக்கு அளிக்கிறதா என்று எண்ணிக்கொள்வேன். அவர்கள் இழிந்து வந்த பாதையைவிட மேலும் இழிந்த ஒரு பாதையைக் காண்பது அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறதா?

ஆம், அதுவே உண்மை. அதை நான் கண்டிருக்கிறேன். பெருவணிகர் ஒருவர் வந்தால் அவர்கள் மகிழ்ந்து கொண்டாடுகிறார்கள். அவன் பொருள் இழந்து வறியவனாகி இரந்து பிழைக்கும் தெருவாழ்பவனாகி அங்கு வந்து நின்றால் அதைவிட கூச்சலிட்டு நகைக்கிறார்கள். அவன் மீண்டும் மீண்டும் அங்கு வரும்பொருட்டு அவனுக்கு சிறு செம்பு நாணயங்களை வீசுகிறார்கள். அன்னமளிக்கிறார்கள். அவன் வேண்டும் அளவுக்கு மது அளிக்கிறார்கள். அவன் களிகொண்டு கீழ்மையில் திளைக்கும்போது கொண்டாடுகிறார்கள். அவர்களால் கொண்டாடப்படும் பொருட்டு அவன் தன்னை மேலும் கீழ்மை நோக்கி செலுத்திக்கொள்கிறான். அவனை இளிவரல் உயிரெனப் பேணுகிறார்கள்.

மூத்தவரே, என் வாழ்நாள் முழுக்க ஒவ்வொரு கணமும் உணர்ந்து வந்த வலி நீங்கள். என் வெற்றி வெற்றி அல்ல என்று உள்ளிருந்து முணுமுணுக்கும் ஒரு குரல். இதோ முழு வெற்றி அடைந்துவிட்டிருக்கிறேன். இனி இப்புவியில் நான் அடைவதற்கொன்றுமில்லை. அவ்வெற்றியை தங்கள் தோல்வியினூடாகத்தான் ஈட்ட முடியும் என்பதனால்தான் இந்தச் சிறு அமைதியின்மை. இந்த வெற்றி எனக்கு பிடித்திருந்தது, ஆனால் உங்கள் குருதி மேல் அது நிகழ்வதை நான் விரும்பவில்லை என்று உணர்கிறேன். ஆயினும் அதுவே ஊழின் வழி என இன்று அறிகிறேன்.

நீங்கள் அறியாதது உலகியல் மெய்மை. நூல்களால் அவை சொல்லும் பொய்யறங்களால் மறைக்கப்பட்டது அது. அறிக, இப்புடவி அமைந்துள்ளது பொருட்களால். பொருட்களை இணைக்கும் பொருண்மை நெறிகளால். ஒவ்வொரு பொருளுக்கும் இன்னொன்றுடன் ஒப்பிட மதிப்பு உருவாகிறது. அனைத்துப் பொருளையும் ஒப்பிடும் ஒரு பொருள் பொன்னே. பொன்னில் அளவிடப்படுகின்றன அனைத்துப் பொருள்மதிப்புகளும். பொன்னென்பது இப்புவியே. இப்புவியிலுள்ள அனைத்தும் ஆகும் ஆற்றல் கொண்ட பொருள் அது. எனவே பொன்னன்றி இப்புவியில் வேறு விழுப்பொருள் இல்லை.

பொன்னுக்கு அப்பால் பிறிதொன்றை வைத்த பிழையே நீங்கள் செய்தது. தன்னை மதிக்காது பிறிதொன்றைச் சூடிய ஒவ்வொருவரையும் பொன் தண்டிக்கும். வஞ்சம் கொண்டு பின்னால் வரும். விழிநீர் சிந்தி தன் முன்னால் பணிய வைக்கும். அவர்கள் தலைமேல் கால் வைத்து அழுத்தி மண்ணோடு மண்ணாக்கும். பொன் தன்னை வழிபடுபவரை

வாழ்த்துவது. அறியாதோரை விழைவு காட்டி இழுப்பது. அறிந்து புறக்கணிப்போரை அழித்து மகிழ்வது. இவ்வெற்றி என்னுடையதல்ல, பொன்னின் வெற்றி. நான் பொன்னின் எளிய பூசகன். அடிபணிந்து வாழும் அடியோன்.

பொன்னே திருமகள். அவளை கனகை என்கின்றனர் கவிஞர். புவியளந்து, விண்ணளந்து, திசை விரிந்து படுத்திருப்போனின் நெஞ்சில் நிறைந்திருக்கும் ஒளி. மங்கலங்களில் முதன்மையானது. அழகுகளில் தலையாயது. திருமகள் பொன்வடிவிலேயே உறைகிறாள். என் இல்லத்தில் திகழ்கிறாள். என் நாவில் சொல்லெனவும் என் மைந்தர் விழிகளில் ஒளியெனவும் அவள் வாழ்கிறாள். என் குடி இங்கு பெருக வழிவகுப்பாள். இங்கு அமர்ந்து இன்று எண்ணம்கூர்க! எங்கு பிழைசெய்தோம் என்று உணர்க! அன்னம் அன்னம் என இரந்து அமர்ந்திருக்கையில் ஒருகணத்திலேனும் உங்கள் ஆணவத்தை அழித்து பொன்னுக்கு உங்களை அளியுங்கள். கனகை முன் பணியுங்கள். அவளிடம் உங்களை பொறுத்தருளும்படி கோருங்கள்.

அவர் போத்யரை கூர்ந்து நோக்கிக்கொண்டு நின்றார். பின்னர் புன்னகைத்து “பொன்மகளுக்குத் தடையாக இருப்பவள் சொல்மகள் என்பார்கள். சொல்மகளே பொன்மகளை பெற்றுதான் வாழ்கிறாள் என்று உணருங்கள். ஒருமுறையேனும் உங்கள் சொல்லுடன் எங்காவது அமர்ந்து நீங்கள் பொன் பெறாது எழுந்துவந்தது உண்டா? உங்கள் சொல்லுக்கு பொன் மதிப்பே இல்லையென்றால் அதை எவரேனும் மதிப்பார்களா? சொல்மகள் பொருள்மகளின் கொழுநனின் உந்திச்சுழியில் உதித்தவனின் மனைவி. எங்கு

இருக்கவேண்டுமோ அங்குதான் அவள் இருக்கவேண்டும்” என்றார்.

போத்யரின் பழுத்த விழிகள் அவரை நோக்கிக்கொண்டிருந்தன. அவர் உரக்க நகைத்து “சொல் நன்று. பொன் எழுத்தாணியால் பொறிக்கப்படுமெனில் மேலும் நன்று” என்றபின் திரும்பிச்சென்றார்.

# களிற்றியானை நிரை - 53

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 3



நகரம் மீண்டெழுந்ததை, முற்றிலும் புதிதென அமைந்ததை போத்யர் உணரவேயில்லை. அவர் நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்தார். அகத்தே செல்பவர்கள் முடிவிலியையே காண்கிறார்கள். அகத்தே செல்ல பெருந்தடை புறவுலகம். ஆகவே அவர்கள் புறவுலகை மெல்லமெல்ல அகற்றிக்கொள்கிறார்கள். அகற்றும்தோறும் புறவுலகம் மெய்யிழக்கிறது. ஏனென்றால் புறவுலகின் உண்மை என்பது அதை உணர்பவர் உள்ளிருந்து அளிப்பது. பொருளிழந்த புறவுலகை அகற்றுவது மேலும் எளிதாகிறது. அகல அகல அகலும் விசை மிகும் அந்தப் பயணத்தில் மிக அப்பால், என்றோ மறைந்த கனவாய் புறம் நின்றிருக்கிறது. அகமோ பெருகிச்சூழ்ந்து அனைத்துமென்றாகிவிட்டிருக்கிறது. போத்யர் உணவையும் உயிர்ப்பையும் மட்டுமே புறவுலகிலிருந்து அடைந்தார்.

போத்யர் அரிதாக ஓர் உலுக்கலுடன் நிகழுலகுக்கு வந்தார். அப்போதெல்லாம் தன் முன் எழுந்த புதிய உலகை நடுநடுங்கியபடி நோக்கிக்கொண்டிருந்தார். முகங்கள் மாறிவிட்டிருந்தன. மொழி மாறிவிட்டிருந்தது. அவர் அறிந்த அனைத்து இடங்களும் மாறிவிட்டிருந்தன. தெருவில் இறங்கினால் அந்த விசைகொண்ட நதி தன்னை தூக்கிக்கொண்டு சென்று அறியா இடமொன்றுக்குள் சேர்த்துவிடும் என்று அவர் அஞ்சினார். ஆகவே திண்ணையை ஒரு கையால் பற்றியபடி அமர்ந்திருந்தார். எப்பொழுதேனும் தெருவுக்கு இறங்க நேர்ந்தால் கால் நடுங்கி கைகள் பதைக்க சுற்றும் பார்த்து கூச்சலிட்டார். எவரேனும் அவர் கையைப்பற்றி மீண்டும் திண்ணைக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

திண்ணையில் அமர்ந்து மங்கிய கண்களுடன் தெருவை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். வெறித்துப் பார்க்கப்படும் ஒன்று மேலும் மங்கலடைவதை அவர் கண்டார். தெரு ஒன்றோடொன்று கலந்து என்னவென்றறியாத பாவைகளாக மாறியது. வண்ணக் கரைசலாக ஆனது. ஒற்றை ஒழுக்கென்று ஆகியது. அவர் அதன் அலைகளை நோக்கிக்கொண்டிருக்கையில் தன் பழைய எண்ணங்களை நோக்கி சென்றார். நினைவுகள் ஒவ்வொன்றாக உள்ளிருந்து எழுந்து வந்தன. அஸ்தினபுரியின் பழைய நாட்கள். அவர் வாழ்ந்த நாட்கள். அவை மறைந்தன என்பது பொய். அவை வேறொரு வெளியில் நிகழ்கின்றன. அலைப்பரப்பு ஆற்றின் ஒருபக்கம் எனில் அடித்தளம் பிறிதொன்று.

இளையவனாகிய அர்ஜுனன் வில் பயிலும் களத்தில் அவர் நின்றிருந்தார். அவனுடைய கைகள் யாழ்நரம்பின் மேல் பாணனின் தொடுகையென வில்நாணை மீட்டுவதை

பார்த்துக்கொண்டிருந்தார். நாணொலியே இசையென்று ஆகமுடியும் என அறிந்தார். பிறிதொருநாள் கர்ணன் படைப்பயிற்சிக்களத்தில் நாணொலி மீட்டியபடி எழுந்து வந்தான். முத்தொளிர் கருமை கொண்ட மேனியன். அக்கணமே திரும்பி அவர் அரசகுடியினரின் மேடையில் அமர்ந்திருந்த குந்தியின் கண்களை பார்த்தார். அவற்றிலிருந்த வெறிப்பு அவரை மெய்ப்புகொள்ளச் செய்தது. அது வெறியாட்டில் குருதிபலி கொள்ளும்பொருட்டு பிடாரி எழுந்த பூசகனின் விழி. குருதிவிடாய் எழுந்த வெறிப்பு.

கொற்றவை பூசனைக்குச் செல்லும் அம்பிகையையும் அம்பாலிகையையும் சிறுகுழவியாக அன்னையின் இடையில் அமர்ந்து கண்டார். அம்பிகையும் அம்பாலிகையும் கைகளைக் கூப்பியபடி திறந்த தேரில் நின்று ஊர்ந்தனர். இருபுறமும் கூடி நின்ற பெண்கள் அவர்களைப் பார்த்து கைகூப்பி குலவையிட்டு வாழ்த்துரைத்தனர். அவர்கள் வேறெங்கோ என திகழ்ந்தனர். அவர்கள் மானுடரல்ல, தெய்வங்களென. "அவர்களின் அக்கை இக்குலமழிக்க சூளுரைத்தாள். இருவர் எனப் பிரிந்து இவர்களின் உடலில் வாழ்கிறாள். இவர்களின் கருக்களில் அவளுடைய வஞ்சம் எழும்" என்றாள் மூதன்னை ஒருத்தி.

காலத்தில் முன்பின் இன்றி, இடநிகழ்வு இசைவின்றி அவர் மிதந்தலைந்தார். விழிகள் நிலையிலாது அலைந்து நீர் உதிர்க்க, கைகளைக் கூப்பியபடி, மெல்லிய நடுக்கு கொண்ட உடலுடன், உதடுகள் ஒலியின்றி சொல்லை அசைவெனக் காட்ட அமர்ந்திருந்தார். அவர் இருக்கும் நிலையை காலைதோறும் நின்று நோக்கிச்சென்ற முல்கலர் மெல்ல அவரை பொருட்படுத்தாமலானார். ஒவ்வொரு நாளுமெனத் திரண்டு வந்த தன் வெற்றியில் திளைப்பதில் அவரை மறந்தார்.

முல்கலரின் இல்லத்திலிருந்து போத்யருக்கு உணவு மட்டும் வந்துகொண்டிருந்தது. அதை அவர் எப்போதேனும் நினைத்துக்கொண்டு எடுத்து உண்டார். பல நாட்கள் உணவு அங்கேயே இருந்து புளித்து நாற்றமெடுத்தது. நள்ளிரவில் மதுமயக்கில் வருகையில் முல்கலர் அவரை நோக்கி “தவம் செய்து எழுப்பிய தெய்வம் எங்கே? அப்புளித்த அன்னத்தை அத்தெய்வத்திற்கு படைக்கவிருக்கிறீர்களா?” என்றார். அந்நகையாட்டுக்கு அவரே சிரித்து உடல் திளைத்தார். “இப்போது முற்றிலும் நீத்தார் என ஆகிவிட்டீர்கள். புளித்த அன்னத்தை காகம் பகிர உண்ணுகிறீர்கள்... நன்று நன்று.”

மூத்தவருக்கு உணவளிக்கத் தொடங்கியதும் அவர் தன்னைக் கட்டியிருந்த காணாச் சரடுகளில் இருந்து விடுபட்டார். அந்த விடுதலையில் நாளும் திளைத்தார். மாறிவரும் சூழலை அவர் புரிந்துகொண்டு தன்னை மாற்றிக்கொண்டே இருந்தார். “என்னால் மாறமுடியும். அதுவே என் ஆற்றல். நான் நீர், காற்று. பாறை அல்ல” என்று அவர் சொன்னார். “மாறாதவர்கள் அழிந்தனர். மாறுபவர்கள் மறுபிறப்பு கொண்டனர்.” அவருடைய தோழரான சூதர் சவிதர் அருகே அமர்ந்து மதுவருந்திக்கொண்டிருந்தார். “மாறாதனவும் மாறுவனவும்” என்றபின் சுட்டுவிரலைத் தூக்கி புன்னகையுடன் சில கணங்கள் அமர்ந்திருந்து அதை மறந்து “நான் என்ன சொன்னேன்?” என்றார்.

முல்கலர் அவரை பொருட்படுத்தவில்லை. அவரே நினைவுகூர்ந்து “ஆ, சூதர்பாடல். என்றும் மாறாதவர்கள் வருங்காலத்தை இழக்கிறார்கள். எப்போதும் மாறுபவர்கள் தன்னை இழக்கிறார்கள்” என்றார். ஓங்கி துப்பிவிட்டு அவர் எழுந்துகொண்டார். “போகாதே, பணம் கொடுத்துவிட்டுப் போ”

என்றார் சவிதர். அவர் ஏப்பம் விட்டபடி நடக்க “நீ இழப்பது என்ன? அவர் இழக்க மறுப்பது என்ன? இரண்டு ஒன்றா?” என்றார். “அல்லது இருவரும் சேர்ந்து இழக்கிறீர்களா?” அவருடைய உடைந்த குரலையும் மயங்கும் நகைப்பையும் கேட்டுக்கொண்டு முல்கலர் நடந்து தன் மஞ்சலில் ஏறிக்கொண்டார்.

முல்கலர் கற்றுப் பழகிய பழைய மொழியில் அமைந்த பாடல்கள் சூதுநிலையில் புதிதாக வந்துகொண்டே இருந்த எவருக்கும் புரியாமலாகிவிட்டிருந்தன. ஆகவே ஒவ்வொரு நாளும் அவர் தன் பாடலின் உட்குறிப்புகளை குறைத்துக்கொண்டே வந்தார். பாடலின் உட்பொருள் என்பது அம்மொழியின் இறந்தகாலத்தால் ஆனது என்பதை அதனை எண்ணும்போதுதான் உணர்ந்தார். இறந்தகாலம் இல்லாத மொழியால் ஒன்றையே சுட்டமுடியும், ஒன்றை மட்டுமே சொல்ல இயலும். ஒன்றை மட்டுமே சொல்கையில் மொழி தன் சிறகுகள் உதிர பிறிதொன்றாகி மண்ணில் தவழ்கிறது. அது எண்ணாத எதையும் உணர்த்துவதில்லை. ஆகவே அதில் நுட்பம் இல்லை. நுட்பம் இல்லாத அழகென்பதில்லை. அழகில்லாதது மகிழ்விப்பதில்லை. அதன் சொல்லைப் பெறுபவர்கள் புரிந்த மறுகணமே அதை கீழே போட்டுவிடுகிறார்கள்.

ஆகவே அவர் அந்நகரின் அப்போது உருவாகி வந்த நிகழ்காலத்திலிருந்து சொற்களுக்கு பொருளேற்றம் செய்ய முயன்றார். கொஞ்சம் கொஞ்சமாக புதிய மொழியை பழைய மொழியுடன் கலந்தார். புதிய மொழியால் பழைய மொழிக்கு கூடுதல் பொருளடைவு அளித்தார். பழைய மொழியால் புதிய மொழிக்கு அடுக்குகளை உருவாக்கினார். விளைவாக

ஒவ்வொரு நாளும் என புதிய மொழி அவர் பாடலில் கூடிக்கூடி வந்தது. ஒரு நிலையில் முற்றிலும் புதிய மொழியிலேயே பாடிக்கொண்டிருந்தார். அதை ஒருநாள் அவரே உணர்ந்தபோது திடுக்கிட்டார். பின்னர் அதையே தன் வெற்றி என எடுத்துக்கொண்டார். அருகமர்ந்து பாடிக்கொண்டிருந்த சவிதர் அந்த மொழியை தொடர முடியாமல் குரல்திகைத்து நிற்கக் கண்டு திரும்பி நோக்கி புன்னகைத்தார்.

ஆனால் அந்த மொழி சென்றகாலம் என ஒன்று இல்லாதது. ஆகவே அதன் புதிய உட்குறிப்புகளை புரிந்துகொள்ளும் பாதைகள் கேட்பவரிடம் இருக்கவில்லை. அவர்கள் தங்கள் தனி வழிகளில் தங்கள் அச்சங்களையும் ஐயங்களையும் சென்றடைந்தனர். அந்த மொழி அவர்களை அலைக்கழித்தது. "ஊதினால் பறக்கும் தூசிபோல் உள்ளது இந்தப் புதிய மொழி" என்று அவர் தன் மனைவியிடம் சலித்துக்கொண்டார். "இந்த மொழிபோல் இன்று என்னை எரிச்சலடையச் செய்யும் பிறிதொன்றுமில்லை" என்றார். "இது ஆழமில்லாமல் ஆழம் காட்டும் சுனை. ஒவ்வொரு முறையும் நம்பிக் குதித்து இதன் அடிப்பாறையில் அறைபட்டுக்கொள்கிறேன்."

அவர் மனைவி "ஆனால் இந்த மொழிபோல் இன்று பயனுள்ளது எதுவும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது" என்றாள். "முன்பெல்லாம் என் ஏவலரிடம் ஒன்று சொன்னால் அதை மும்முறை நான்குமுறை விளக்க வேண்டியிருக்கும். அவர்கள் கொள்ளும் பொருள் வேறுபாடோ முடிவில்லாதது. மீளமீள விளக்கிக்கொண்டே சென்று முடிவின்மையை நானும் அடையவேண்டியிருக்கும். இன்று இந்த மொழியில் ஒவ்வொரு சொல்லும் ஒருபொருள் மட்டுமே கொண்டது. எனவே சொல்லும் ஒவ்வொன்றும் அக்கணமே முடிவுற்று தொடரும்

செயலை மட்டுமே நிகழ்த்துகின்றன. ஏவுவதற்கும் தலைக்கொள்வதற்கும் விற்பதற்கும் பெறுவதற்கும் இம்மொழிபோல் நன்று வேறில்லை. சொற்பொருளை இவ்வண்ணம் மாறாது சுட்டும் மொழி திகழும் ஒரு காலம் எழும் என்று நான் எண்ணியதே இல்லை."

அன்று அவர் அவளை வெறித்தபடி நோக்கி அமர்ந்திருந்தார். அவ்வண்ணம் ஒரு வேறுபாடு உண்டென்று அவருக்கு அப்போதுதான் தெரிந்தது. அதையே எண்ணிக்கொண்டிருந்தார். அத்தனை நாள் அவர் எதை வைத்து ஆடினார் என அப்போது புரிந்தது, தன்னை பாமரர்களில் ஒருவராகவும் அவர்களுடன் ஆடுபவராகவும் அவர் எண்ணிக்கொண்டிருந்தார். புலவர் எழுதி எழுதியும் பாணர் பாடிப்பாடியும் உருவாக்கிய மொழியின் அடுக்குகளைக் கொண்டே தன்னால் இளிவரலையும் அங்கதத்தையும் உருவாக்க முடிகிறது எனக் கண்டார். அவர்கள் சேர்த்துவைத்த செல்வம் கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் சூதர்களுக்கும் மட்டும் உரியது அல்ல, அவர் அள்ளிவீசி ஆடியதும் அதையே. அச்செல்வத்தை அளித்தவர்களை நகையாடியபடியே அதைச் செய்தார் என்பதே வேறுபாடு.

சூது நிகழும் அவைகளில் பிறரை மகிழ்விக்கும் பொருட்டு அவர் சொற்களுடன் தன் உடல் கலந்துகொண்டார். நாமொழியிலிருந்து உடல்மொழி நோக்கி சென்றார். உடலசைவுகளில் இரு வகையில் கேளிக்கை எழ முடியும் என்று கண்டுகொண்டார். மானுடரைப்போன்ற விலங்குகளின் அசைவுகளை உடலுக்கு அளிக்கலாம். காமத்தின் அசைவுகளை கலந்துகொள்ளலாம். இரண்டுமே உடலை மொழியிலிருந்து விடுவித்து வெறும் உடலென்றாக்குதல். உடலை ஒவ்வொரு

கணுவிலும் மொழிதான் பொருள்கொள்ளச் செய்கிறது. மொழியிலாத உடல் காற்று வெளியில் துருத்தி நின்றிருக்கிறது. அதை பிற விலங்குகளின் உடல்களின் பெரும் பரப்பில் மட்டுமே பிசிறின்றி பொருத்த முடியும். மொழி தன் இறந்தகாலத்தை உணர முடியும். உடலில் அது அதன் வடிவென, அசைவென, இயல்பெனத் திகழ்கிறது.

மொழிக்கு உடலால் மேலும் மேலுமென பொருள் அளிக்க இயலும் என்று அவர் அறிந்தார். உடலுக்கு தான் அளித்த பொருளனைத்தையும் எடுத்துக்கொண்டு மொழி விலகிச்சென்ற பின்னர் நின்று திகைத்து உடல் பின்வாங்கி வெறும் விலங்கென தன்னை கண்டுகொண்டு அவ்விறந்தகாலத்திலிருந்து அள்ளி எடுத்துக்கொண்டு வந்த அனைத்துப் பொருட்களையும் அந்தப் புதுமொழி மேல் அவர் சூட்டினார். அது புது மொழியை புதிய அர்த்தங்கள் கொள்ளச் செய்தது. ஆனால் அதை விலங்கு மொழியென்றாக்கியது. “மானுட உடலில் உறைகின்றன அனைத்து விலங்குகளும்…” என்று அவர் சவிதரிடம் சொன்னார். “மானுட உடலே விலங்குடல்களின் விராடவடிவம்!”

நகரம் பொலிவுகொண்டபடியே சென்றது. அவருடைய கருவூலமும் நிறைவடைந்தது. “கரவறை நிறைகையில் குடம்நிறைவதுபோல் ஓசையின்மை எழவேண்டும் என்கின்றனர் வணிகர்” என்று அவர் தன் மனைவியிடம் சொன்னார். “சொல் குறைத்து விழிகளை அணையச் செய்துகொள். நம் உடலில் மகிழ்ச்சி நம்மையறியாமலேயே வெளிப்படும். ஆகவே முகத்தை துயர் நிறைந்ததாக வைத்துக்கொள். சொற்களில் நிறைவின்மை மட்டுமே எழவேண்டும். கனிமரம் முள்கொள்வதைப்போல் அமைக

என்று வணிகர் சொல்வதுண்டு. எவரும் நம்மை அணுகலாகாது.”

அவள் “நம் உற்றார் என எவரும் இங்கில்லை” என்றாள். “நம் வெற்றியை காட்டக்கூட விழிமுன் எவருமில்லை. பட்டும் நகையும் அறைகளுக்குள் இருக்கின்றன. அணிய ஒரு நிகழ்வில்லை. அணிந்தால் அதை நோக்கி என்னை அறிய அறிந்தோர் எவருமில்லை.” அவர் அவள் தலையைத் தட்டி “அறிவிலி என பேசாதே. தேன்தேரும் கரடி போன்றது அரசு. அது முகர்ந்தும் நோக்கியும் சுற்றிவருகிறது. நம்மை ஒருநாள் தேடிவருவார்கள். வரியும் வாரமும் சுமத்துவார்கள். அளித்தேயாக வேண்டும். பணிந்திருந்தால், மறைந்திருந்தால் அதை குறைத்துக்கொள்ளலாம். தருக்கினால், மீறினால் இழந்து மீண்டும் தெருவில் நிற்கவேண்டியிருக்கும்” என்றார். அவள் “அரண்மனையில் இல்லாத செல்வமா?” என்றாள். “அது கொள்ளைச் செல்வம், அதை அளிப்பவர் நம்மைப் போன்றோர்” என்றார் முல்கலர்.

அவள் அஞ்சிவிட்டாள். மறுநாள் அவள் விழிகள் முற்றிலும் அணைந்துவிட்டிருந்தன. உலகையே எதிரிகளென நோக்கலானாள். மைந்தர்களிடமே வஞ்சமும் சினமும் வெளிப்பட்டது. அவ்வப்போது எண்ணி எண்ணி பெருமூச்சுவிட்டாள். “நன்று” என அவர் சொல்லிக்கொண்டார். “ஆண்களுக்கு செல்வம் என்பது அவைநிலை. அதன்பின் நுகர்வு. பெண்களுக்கு அது வெறும் தருக்கு மட்டுமே.”

அவளை மேலும் அச்சுறுத்தி தன் அறைகளுக்குள் இருக்கும் செல்வத்தின் காவல்பூதமென்று ஆக்கினார். ஒவ்வொரு நாளும் அவள் சென்று அறைப்பூட்டை தொட்டுவிட்டு வருவதைக் கண்டு ஆறுதல் கொண்டார். “நான் இல்லையென்றானாலும்

இவள் இச்செல்வத்தை வீணடிக்க மாட்டாள். இதில் ஒரு காசையேனும் எடுக்க இவள் கைகள் துணியாது. குன்றாது கரையாது இச்செல்வம் என் மைந்தருக்குச் சென்றுசேரும்." செல்வம் அச்சத்தை விளைவிக்கிறது. அச்சங்களில் முதன்மையான உயிரச்சமாகத் திரள்கிறது. செல்வம் பெருகும்தோறும் தன் இறுதி அணுகிவருவதை அவர் உள்ளுணர்ந்தார். கனவுகளில் மீளமீள இறந்தார்.

ஆகவே ஒருநாள் காலையில் அவர் இல்லக்கதவை அரசஏவலர்க் குழு ஒன்று தட்டியபோது அவர் அஞ்சிநடுங்கி மூலையில் பதுங்கிக்கொண்டார். அவர் மனைவி அவரை எழுப்ப அவர் விழிநீர் வடித்து மேலும் உடல்குறுக்கிக்கொண்டார். "நானே கேட்கிறேன்..." என்று அவள் முன்னால் சென்றாள். "எனக்கு உடல்நலமில்லை என்று சொல்... நான் நலிந்துள்ளேன் என்று சொல்" என அவர் பின்னால் கூவினார். அவள் தன் பூட்டிய நிலவறைக் கதவை நோக்கினாள். அதை கொள்ளையிட வந்தவர்கள்மேல் கடும்சினம் கொண்டாள். அச்சினத்துடன் கதவை திறந்தாள்.

"என்ன வேண்டும்? எவர் நீங்கள்? ஏழைகளை இங்கே வாழவிடமாட்டீர்களா?" என அவள் சினந்தபோது அவர்கள் திகைத்தனர். அவர்கள் ஐவருமே காமரூபத்திலிருந்து வந்த இளைஞர்கள். அவர்களின் தலைவன் "நாங்கள் பெருஞ்சூதரான போத்யரை அழைத்துச்செல்ல வந்துள்ளோம். அரசி துச்சளையின் ஆணை" என்றான். அவள் "அவர் உடல்நலிந்திருக்கிறார். படுத்துக்கொண்டிருக்கிறார். அவரால் எதையுமே பேசமுடியாது" என்றாள். "அவரை நாங்கள் பார்க்கவேண்டும்" என்றான் காவலர்தலைவன் லுசன். "அவரால் எழவே இயலாது" என்று அவள் சொன்னாள்.

கதவை மூடப்போனவளை உள்ளிருந்து ஓடிவந்த முல்கலர் தடுத்தார். “எவர்? எவரை பார்க்கவேண்டும் நீங்கள்?” என்றார். “முதுசூதர் போத்யரை… அரசி துச்சளையின் ஆணை” என்றான் லுசன். “என் மூத்தவர்தான்… இந்நிலத்திலேயே பெருங்கல்விகொண்டவர். எங்கள் குடியின் மூத்தவர். எங்கள் சொல்லுக்கெல்லாம் தலைவர். அதோ எதிர்த்திண்ணையில் இருக்கிறார். நான் அவரை பேணுபவன். அவருடைய இளையோன்” என்றபின் மனைவியிடம் “செவி துலங்கா விலங்கு… போ, உள்ளே போ!” என்று சீறிவிட்டு “வருக… வருக!” என அவர்களை அழைத்துச்சென்றார்.

போத்யர் எங்கோ என இருந்தார். “மூத்தவரே, மூத்தவரே, நற்செய்தி. அரசி துச்சளை தங்களை அரண்மனைக்கு அழைத்திருக்கிறார்” என்று முல்கலர் கூவினார். “மூத்தவரே, நம் குடிக்கு வந்த அழைப்பு இது… எழுக!” அச்செய்தியை போத்யரால் நிகழ்காலத்தில் வைத்து புரிந்துகொள்ள இயலவில்லை. குரல்கள் ஊடுருவி வந்து ஆழத்தை தொட்டு உலுக்க அவர் அந்தச் சிறு திண்ணையில் திடுக்கிட்டு அறுந்து வந்து விழுந்தார். தன் முன் திகழ்ந்த நிகழ்காலத்தை பதறித் தவித்தபடி நோக்கினார். அவர் முன் நின்றிருந்தவர்கள் நிழலென வண்ணக் கரைவு என அவருக்குத் தெரிந்தனர். அவருடைய தந்தையின் குரல் ஒலித்தது. “மூத்தவரே, எழுக! அரசாணை வந்துள்ளது, செவிகொள்க!”

முல்கலர் உள எழுச்சியில் நடுங்கிக்கொண்டிருந்தார். கூடவே ஓர் அச்சமும் அவரை அலைக்கழித்தது. போத்யர் புதைகுழியிலிருந்து அவ்வண்ணம் மீண்டெழக்கூடும் என அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் தான் செய்த சிறுமதிப்புகளை நினைவுகூரக்கூடுமா? மூதாதையரின் வடிவென அங்கிருந்தது

நலிந்து பூசணம் பூத்த முதிய உடல். அதற்குள் வந்தமையக்கூடும் தொல்தந்தையரின் சினம். நெடுங்காலமாக தன் மேல் கனன்று கூடிய அனல். அவருடைய ஒரு சொல் தன்னை எளிதில் அழித்துவிடக்கூடும் என எண்ணினார். ஆகவே மிகையான உவகையை காட்டினார். ஏவலன் முன் அவர் காலடியைத் தொட்டு சென்னி சூடி சொல்பெருக்கினார்.

“மூத்தவரே, நம் குடிக்கு நற்சூழல் வந்துள்ளது. அரண்மனையிலிருந்து உங்களுக்கு அழைப்பு. அரசி துச்சளையே அழைத்துவரச் சொல்லியிருக்கிறார்” என்றார். “அவரை நானே அழைத்து வருகிறேன்…” என்று ஏவலனிடம் சொன்னார். “அவர் இங்கே பிறிதொன்றிலாத குரல். அவர் அறிந்தவை வேறெவரும் அறியாதவை. நான் அவருடைய இளையோன். அவருடைய சொல்லுக்குத் தொடர்ச்சியென இங்கே அமைபவன்” என்றார். “அவருடைய மைந்தர்கள் அவரை உதறிவிட்டுச் சென்றனர். நானும் வறுமையடைந்தேன். ஆனால் என்னால் அவரை விட்டுவிட்டுச் செல்ல இயலவில்லை. அவர்பொருட்டே நானும் இங்கே தங்கிவிட்டேன். பல சிறுமைகளை இயற்றி இங்கே வாழ்ந்தேன். அவருக்கு உணவளித்துப் பேணுவதொன்றே நோக்கம். அவருடன் இன்று இங்கே இருக்கிறேன் எனில் அது என் குடியின் தொல்மொழி நிலைகொள்ளவேண்டும் என்பதற்காகவே” என்றார்.

ஏவலன் அவரைப்பற்றி அதற்குள் உணர்ந்துகொண்டுவிட்டிருந்தான். அவர் “அரசி துச்சளையிடம் நானும் ஓரிரு சொல் உரைக்க விழைகிறேன். அன்றி அவர்களை நேரில் நோக்கும் ஒரு வாய்ப்பு அமையுமென்றாலும் நன்றே” என்றபோது “நன்று, அவரை அழைத்துவர அரண்மனையிலிருந்து தேரும் ஏவலரும்

வருவார்கள். எவர் அரசியை சந்திக்கவேண்டும் என்பதை அரசியே முடிவெடுப்பார்” என்றான். முல்கலர் தலைவணங்கினார். போத்யரின் உள்ளத்தில் தன்னைப்பற்றிய கசப்பு சேர்ந்திருக்குமா என அவர் அகம் தவித்தது. ஏவலனை வழியனுப்பிவிட்டு மூத்தவரை நோக்கி நின்றபோது அந்த நரைத்த விழிகளுக்கு அப்பால் என்ன இருக்கிறது என அவரால் உய்த்தறிய இயலவில்லை.

அவர்கள் சென்ற பின்னர் முல்கலர் மூத்தவரிடம் “மூத்தவரே, இது நல்லூழ். நமக்கு மீண்டும் அரண்மனை உறவு அமைகிறது. அரண்மனைச்சூதரை வரிகொள்ள வரும் ஏவலர் அணுகப்போவதில்லை. நாம் காக்கப்படுவோம்” என்றார். “என்னிடம் பொன் உள்ளது. அது உங்களுக்கும் உரியது. உங்கள் மைந்தர் என இனி இப்புவியில் வாழவிருப்பவர்கள் என் மைந்தர்கள். நம் குடியின் குருதியெச்சம் அவர்களே. என்னிடம் உள்ளவை எல்லாம் அவர்களுக்குரியவை. அவர்களை காக்கும் பொறுப்பு கொண்டவர் நீங்கள்… அரண்மனையில் நம் குடியை ஒருநிலையிலும் எவரும் குறைத்து எண்ணிவிடலாகாது” என்றார்.

ஆனால் அவர் ஒரு சொல்லையும் உளம் வாங்கியதுபோல் தெரியவில்லை. முல்கலர் அவருடைய முகத்தை நெடுநேரம் நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் பெருமூச்சுடன் எழுந்து தன் இல்லத்திற்கு சென்றார். “என்ன நிகழுமெனத் தெரியவில்லை. வந்த காவலர் புதியவர்களாயினும் நுண்ணறிவுகொண்டோர். மூத்தவர் இருந்த நிலையை அவர்கள் அரசியிடம் தெரிவிப்பார்கள். நாளை அவருக்கு பல்லக்கு வரும்போது எனக்கு கைவிலங்குகள் வரலாம்… எதுவாயினும் நீ துணிந்து நில். நாம் ஈட்டிய செல்வமே நமக்கு துணையாகவேண்டும்.”

அவள் “நான் அதில் ஒரு பொன்னையேனும் விடமாட்டேன். என்னை மீறி எவரேனும் அதைத் தொட்டால் பிடாரி என அவர்களின் குருதி குடிப்பேன்” என்றாள்.

அவர் பெருமூச்சுகளுடன் அமர்ந்திருந்தார். வழக்கமாக பகலில் துயில்பவர் விழித்தே இருந்தார். அந்தி எழுந்ததும் பல்லக்கிலேறி சூதுமனைக்குச் சென்றார். அங்கே ஒவ்வொன்றும் அன்று முற்றிலும் புதிதாக இருந்தன. அறியமுடியாதவையாக, ஆழங்கள் கொண்டவையாக. இவற்றை இதற்குமுன் நான் பார்த்ததில்லையா என எண்ணிக்கொண்டார். இனியொருமுறை இவற்றை நான் பார்க்கப்போவதில்லை என்ற எண்ணம் வந்ததும் அவரே திடுக்கிட்டார். புறநாட்டுப் படைவீரர்கள் அனைவரும் அங்கே நில்லாது ஆடி, ஒழியாது குடித்து, வெறிகொண்டபடி, வசை உதிர்த்தபடி, மீளவிழைந்து துடித்து மீளாது மீண்டு வந்து விழுந்து, ஊழின் பகடைகள் என சூதாடிக்கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவனை கண்டதும் அவர் முதலில் திடுக்கிட்டார். அவனை அவர் முன்னரே எங்கோ பார்த்திருந்தார். எங்கே எங்கே என அவருடைய உள்ளம் அலைகொண்டது. அவன் விழிகள் அவரை ஆர்வமில்லாமல் வந்து தொட்டுச் சென்றன. ஒருமுறை அவன் அவர் இருக்கும் திசைநோக்கி துப்பினான். மதுமயக்கில் அவன் முகம் கலங்கியிருந்தது. ஒரு கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. இவன் இதற்கு முன் இங்கே வந்ததில்லை. இவனை நான் சாலைகளில், அங்காடியில் பார்த்திருக்கலாம். ஆனால் இங்கே வரும் முகங்களில்கூட பல முகங்கள் நினைவில் பதிவதே இல்லை.

அவன் தோற்றுக்கொண்டே இருந்தான். “எழுக! எழுந்து விலகுக!” என்று அவனுடன் ஆடியவர்கள் சொன்னார்கள். அவன் தன் கச்சையை, வாளை வைத்து ஆடினான். “எழுக... இனி உன்னிடம் எஞ்சுவதொன்றும் இல்லை!” என்று அவர்கள் சொன்னார்கள். “என் உயிரை வைக்கிறேன்! என் உயிரை!” என்று அவன் கூவ “அந்த உயிருக்கு என்ன மதிப்பு?” என்று அவர்கள் நகையாடினர்.

முல்கலர் மறுபக்கம் இன்னொரு பீடத்தைச் சூழ்ந்து அமர்ந்து ஆடிக்கொண்டிருந்த ஒரு பெருவணிகனின் தோல்வியை இளிவரல் செய்து பாடிக்கொண்டிருந்தார். ஆனால் படைவீரன் அதை தன்மேலான இளிவரல் என பொருள்கொண்டான். வாலின் அசைவொன்றை தன் கையில் உருவாக்கினார். நாவில் அவர் உரைத்த சொல் இன்னும் எஞ்சுவது அது என்பது. அவன் எடுத்த பொருள் இரந்து உண்க என்பது. அவன் எழுந்து வாளை உருவியதை ஓரவிழியால் அவர் கண்டார். உரசும் ஒலி ஒரு சொல். வளைந்த ஒளிமின் அதன் பொருள். அவன் வாள் தன் தலையை துணித்த கணத்தில்கூட என்ன நிகழ்கிறது என்று அவர் அறியவில்லை.

அவர் தலை ஓசையுடன் நிலத்தில் விழுந்து திகைத்து நோக்கி உருண்டது. உடல் தரையில் கிடந்து துடித்து பதைப்புடன் மண்ணை பற்றிக்கொள்ள முயன்றது. வெட்டுண்ட உடல் சந்தி பிரிக்கப்பட்ட ஒரு சொல்போல என்று அப்பால் அமர்ந்திருந்த தென்னிலத்துப் பாணன் சொன்னான். அவன் மூக்குவரை வந்த மதுவை எதுக்களித்து உமிழ்ந்து “மேலும்” என கோப்பையை நீட்டியபடி “நோக்குக, அது பொருளிழப்பதில்லை! முற்றிலும் மாறான ஒரு பொருளை தரத்தொடங்குகிறது” என்றான். அருகிலிருந்த அனைவரும் வெடித்து நகைத்தனர்.

அவர்கள் அனைவருமே உச்சநிலை கள்மயக்கிலிருந்தனர். “ஒரு தெய்வம் எழுந்து இத்தலையை எடுத்து இவன் உடலில் பின்னோக்கிப் பொருத்தி வைத்தால் என்ன ஆகும்? இவன் விலகிச்செல்லும் இடங்களுக்கே சென்று சேர்வான். நோக்க விரும்பாதவற்றை நோக்குவான். எப்போதும் கடந்துசெல்ல வேண்டிய உலகில் வாழ்வான்” என்று அவன் கூற சிரிப்பொலி அந்தப் புகைசூழ்ந்த வெம்மையான அறையை நிறைத்தது.

# களிற்றியானை நிரை - 54

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 4

நள்ளிரவிலேயே முல்கலரின் உடல் அவர் இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர் மைந்தரும் மனைவியும் கதறி அழுதுகொண்டிருக்க அந்த ஓசையை என்னவென்று புரியாமல் போத்யர் நோக்கிக்கொண்டிருந்தார். தெருக்களில் புதிதாகக் குடியேறியிருந்த அயல்நிலத்துச் சூதர்கள் வந்து கூடினர். எப்படி அஸ்தினபுரியின் சூதர் முறைப்படி உடலை எரியேற்றுவது என அவர்களுக்கு தெரியவில்லை. அதை உசாவியறிய உதவும் எவரும் இருக்கவில்லை. அவர்களில் ஒருவர் போத்யரை அடையாளம் கண்டார். “இவர் மூத்தவர், முறைமை அறிந்தவர். அவரிடம் சொல்வோம்” என்று அருகே வந்தார்.

“மூத்தவரே, உங்கள் இளையோர் மண்நீத்தார்” என்று அவர் போத்யரிடம் சொன்னார். “என்ன?” என்று அவர் கேட்டார். “உங்கள் இளையவர்... முல்கலர் கொல்லப்பட்டார்.” போத்யர் நரைவிழிகள் அசைவிலாது நிற்க “என்ன? என்ன?” என்றார். “அவர் இன்றில்லை... உங்கள் இளையவர். முல்கலர்

மறைந்தார்.” போத்யர் “என்ன?” என்றார். “உளம் கலங்கியவர்” என்றார் ஒரு சூதர். “முதுமை... உள்ளம் செத்துக்கொண்டிருக்கிறது” என்றார் இன்னொருவர். அவர்கள் கூடி அமர்ந்து எண்ணம்கூட்டினர். செய்வதற்கொன்றுமில்லை. முடிந்தவரை எல்லா சடங்குகளையும் செய்து சிதையேற்றலாம் என்று முடிவு செய்தனர்.

அச்சடங்குகள் ஒன்றுடன் ஒன்று கூடிக்குழம்பி நிகழ்ந்தன. ஒவ்வொருவரும் இன்னொருவரை நோக்கி கூவினர். ஒன்று பிழை என இன்னொருவர் சொன்னார். அவர் செய்வது பிழை என்றார் பிறிதொருவர். குழப்பங்களை வெறித்த விழிகளுடன் நோக்கியபடி முல்கலரின் துணைவி அமர்ந்திருந்தாள். வந்தவர்கள் தன் இல்லத்துக் கரவறையைச் சூறையாட எண்ணுகிறார்கள் என்னும் எண்ணமே அவளிடம் இருந்தது. முன்னரே சூதுமனையில் முல்கலரின் உடலில் இருந்த நகைகளை எல்லாம் எவரோ கழற்றிவிட்டிருந்தனர். செவிகளை அறுத்து காதணிகளைக்கூட திருடிக்கொண்டிருந்தனர். அவர் அணிந்திருந்த பட்டாடையையும் உருவிக்கொண்டு மரவுரி போர்த்தி உடலை கொண்டுவந்திருந்தனர்.

கூடத்தில் கிடத்தப்பட்டிருந்தது முல்கலரின் உடல். அவருடைய தலையை உடலுடன் பொருத்தியிருந்தனர். “பொன்னும் மணியுமென வாழ்ந்தவர். உடலில் பொன் இன்றி விண்புகுவது முறையல்ல. ஏதேனும் பொன்நகை அணிவிக்கவேண்டும். ஒரு கணையாழியாவது.” முல்கலரின் மனைவி தன் நகைகளையும் மைந்தரின் நகைகளையும் முன்னரே கழற்றி மறைத்துவிட்டிருந்தாள். “குன்றிமணிகூட இங்கில்லை... பணம் இல்லாமல்தான் சூதுமனைக்கு பாடச்சென்றார்” என்று அவள் சொன்னாள். “ஆடையென ஒரு

பட்டு போர்த்தப்படவேண்டும்... பட்டு இன்றி அவரை நாங்கள் கண்டதே இல்லை” என்றார் ஒருவர். “அவரிடம் இருந்தது அந்தப் பட்டு ஒன்று மட்டுமே” என்றாள் அவள். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டனர்.

சடங்குகளின்போது மைந்தரை மட்டுமே முல்கலரின் மனைவி அனுப்பினாள். தான் எழுந்து கூடத்திற்குச் சென்றால் பிறர் உள்ளே நுழையக்கூடும் என்பதனால் உள்ளறை வாயிலிலேயே அமர்ந்திருந்தாள். “வாய்க்கரிசிக்கு அரிசி தேவை... எங்குள்ளது களஞ்சியம்?” என்று அவர்களில் ஒருவர் கேட்க “அரிசி இல்லை...” என்று அவள் சொன்னாள். ஒருகணம் அவளை வெறித்து நோக்கிவிட்டு “அரிசி கொண்டுவாருங்கள்... இரந்து உண்டு இடுகாடு செல்லவேண்டுமென்பது இவர் ஊழென்றால் அவ்வண்ணமே” என்றார் சூதர். இரு மனைகளிலிருந்து அரிசி வந்தது. அதை வாயிலிட்டு சடங்கு முடித்து இடுகாட்டுக்கு கொண்டுசென்றனர்.

“அனைவரும் ஊர்நீங்கினர். செல்லாதொழிந்த ஒரே தொழிலர் இடுகாடு காப்போர் மட்டுமே” என்று சூதர்கள் சொன்னார்கள். “இந்நகரில் சாவு ஒழிவதே இல்லை” என்றார் இன்னொருவர். “செல்லுமிடங்களில் அவர்கள் செய்ய தொழில் என ஒன்றிருக்காது போலும்” என்று இன்னொரு சூதர் சொன்னார். “அந்த முதுசூதர் இவரைவிட நாற்பதாண்டுகள் மூத்தவர்...” என்று ஒருவர் சொன்னார். முல்கலரின் முதல் மைந்தன் எரிசட்டி ஏந்தி நடந்தான். அவன் தந்தையின் உடலில் தலை மட்டும் தனியாக அசைவதை நோக்கி நடந்தான். முல்கலர் எதையோ மறுத்துக்கொண்டே செல்வதுபோலிருந்தது.

மறுநாள் புலரியில் போத்யரை அழைக்க வந்த லுசன் அங்கே இல்லம் ஒழிந்து கிடக்கக்கண்டு நிகழ்ந்தது என்ன என்று

உசாவி அறிந்தான். எதிர்த்திண்ணையில் போத்யர் தனியாக அமர்ந்திருந்தார். அவன் அவர் அருகே சென்று “வணங்குகிறேன், சூதரே” என்றான். அவர் அவனை வெறித்துப் பார்க்கக் கண்டு அருகணைந்து “தங்களை தேரில் அரசமுறைமைப்படி அழைத்து வரும்படி ஆணை” என்றான். “என்னையா?” என்று அவர் கேட்டார். “தங்களைத்தான். தங்கள் பெயர் போத்யர் அல்லவா?” என்று அவன் கேட்டான். “ஆம், ஆனால் என் பெயர் எங்கேனும் எவர் நினைவிலேனும் எஞ்சியிருக்கும் என்று எண்ணவில்லை. நீங்கள் தேடுவது பிறிதொருவராக இருக்கலாம்” என்று போத்யர் சொன்னார்.

“அரசி துச்சளை தங்களை நினைவுகூர்கிறார். இளமையில் தங்கள் பாடலை அவர் கேட்டிருக்கிறார்” என்றான் லுசன். “துச்சளையா? அவர் இன்னமும் இறக்கவில்லையா?” என்று அவர் கேட்டார். அழைக்க வந்த ஏவலர்குழுவே திடுக்கிட்டது. இந்த முதியவர் அரண்மனையிலும் இதையே சொல்வாரெனில் அதைவிட பெரிய மங்கலமின்மை நிகழப்போவதில்லை என்று லுசன் எண்ணிக்கொண்டான். “நான் என் இளையோனுடன் இணைந்தே வரமுடியும்” என்று அவர் சொன்னார். லுசனின் பின்னால் நின்றவன் அவன் முழங்கையை தொட்டான். மெல்லிய குரலில் “இளையோனின் சாவு அவர் வரை சென்றடையவில்லை போலும்” என்றான். லுசன் “அவரும் நம்முடன் வருவார்… வருக!” என்றான்.

போத்யர் “ஆம், அவனும் வரவேண்டும். அவனுடைய துணையில்லாமல் என் சொல் எழாது. நான் இங்கில்லை, என் சொற்களெல்லாம் கரைந்தழியும் நெடுந்தொலைவுக்கு சென்றுவிட்டேன். இங்கே முற்றிலும் இருப்பவன் அவன் மட்டுமே” என்றார். “என் இளையோன், அவன் பெயர் முல்கலன்.

சிறந்தவன், வளைந்தோடும் ஆறுபோல் ஆற்றல் கொண்டவன்.” லுசன் ஏதோ சொல்ல நாவெடுக்க உடன் வந்த ஏவலன் அவனை மீண்டும் தொட்டு பேசாமல் செல்லும்படி அறிவுறுத்தினான். “என் இளையோன் உடன்வருகிறான் அல்லவா?” என்று போத்யர் மீண்டும் கேட்டார். “ஆம் முதுசூதரே, வருகிறார்” என்றான் லுசன்.

அவன் கைபற்றி துணி மஞ்சலில் ஏறி போத்யர் அரண்மனைக்கு சென்றார். மஞ்சலில் ஏறும்போது “அவன் உடனிருக்கிறானா?” என்றார். “ஆம், அவர் தனியாக வந்துகொண்டிருக்கிறார்” என்று லுசன் சொன்னான். “அவன் எங்கே?” என்று அவர் மீண்டும் கேட்டார். “உடன் வருகிறார், சூதரே” என்று அவன் சொன்னான். அவர் விழிமூடியபோது அவனுடைய அருகமைவை உணர்ந்தார். “அவன் வேண்டும் என் அருகே… என் மொழி வைகரியை உதறி பரையை அடைந்து பஸ்யந்தியில் கரைய நின்றுள்ளது.” லுசன் “அவர் உடனிருக்கிறார்” என்றான். “அவன் வைகரியில் நின்றிருப்பவன்… மொழிக்கு மறுகரையில்…” என அவர் முனகினார். கண்களை மூடி கைகளை மடியில் கோத்தபடி “ஆம், அதுவும் நல்ல இடமே. இனியது…” என்றார்.

புஷ்பகோஷ்டத்தில் பெண்களுக்குரிய அகத்தளத்தின் முகப்பில் அவரை எதிர்கொண்ட துச்சளையின் முதன்மைச் சேடி பர்வதை அவரை உள்ளே அழைத்துச்சென்று சிறு கூடத்தில் அமரவைத்தாள். "அவன் எங்கே?" என்று அவர் கேட்டார். “உடனிருக்கிறார்… மறு அறையில்” என்றான் லுசன். அவனுக்கு சலிப்பாக இருந்தது. “ஆம், அவனை உணர்கிறேன்” என்று அவர் சொன்னார். எடைமிக்க காலடிகளுடன் அந்த

அறைக்குள் வந்த சுஷமை அவர் எழுந்து நின்று வணங்கியதும் “நலம் சூழ்க!” என்று வாழ்த்திய பின் “இன்னொருவரும் வந்துள்ளாரா?” என்று லுசனிடம் கேட்டாள். லுசன் மிக மெல்ல “இல்லை” என்றான். “இன்னொருவரும் உடனிருப்பதுபோல இவரைப் பார்த்ததும் உணர்ந்தேன்” என்றாள். லுசன் வியப்புடன் பிறரை பார்த்தான்.

“சூதரே, தாங்கள் அழைக்கப்பட்டிருப்பது நாளை புலரியில் இங்கு அஸ்தினபுரியின் இளவரசர் நகுலன் நகர்நுழைகையில் நாவேறு பாடும்பொருட்டு என அறிக! குருகுலத்தின் கொடிவழியையும் அவர்களின் போர்ச்சிறப்புகளையும் வெற்றிமாண்புகளையும் எடுத்துரைக்க வேண்டும்… அதை இயற்றத்தக்கவர் என இங்கு பிறிதொருவருமில்லை. முதிய சூதரென இங்கு எஞ்சுபவர் தாங்களே. ஆகவேதான் தாங்கள் அழைக்கப்பட்டீர்கள்” என்றாள். “ஆம், நான் ஒருவனே எஞ்சுகிறேன்” என்று அவர் சொன்னார். “என் இளையோன் உடனிருந்தால் என்னால் ஏற்றுப்பாட முடியும்.”

அவள் அவரை கூர்ந்து நோக்கி “இளையோரா? எங்கே அவர்?” என்றாள். “இங்குதான், அருகே இருக்கிறான். நோக்கில் அவனை கல்லாக் களிமகன் என்றும் விடம்பன் என்றும் எண்ணக்கூடும். ஆனால் அவனே என் மறுபாதி” என்றார். சுஷமை திகைப்புடன் லுசனை பார்க்க அவன் தலையை அசைத்தான். அவன் உணர்த்துவது என்ன என அவளுக்கு புரியவில்லை. அவள் அந்தக் குழப்பத்தை உதறிவிட்டு “தங்கள் உள்ளத்தில் இக்கொடிவழியின் மாண்புகள் எஞ்சுகின்றனவா?” என்று கேட்டாள்.

“இல்லை… ஆனால் அவ்வாறு சொல்லவும் முடியாது. அவை என் அகத்தே விதைவடிவில், கருவடிவில் எஞ்சியிருக்கும்.

முளைத்தெழுந்து வரவேண்டும்” என்றார். “தங்களால் பாடமுடியுமா?” என்று சுஷமை கேட்டாள். “நான் என் குரலை இழந்து நெடுநாட்களாகிறது. ஒரு சொல்லேனும் இசையுடன் இணைந்து என் உதடுகளில் இருந்து எழக் கேட்டதை நான் மறந்துவிட்டிருக்கிறேன். தெய்வங்கள் ஆணையிட்டால் என் நாவில் குருகுலத்து புகழ்மொழி எழலாம்” என்று அவர் சொன்னார். “ஆனால் அச்சொற்கள் மேல் எனக்கு எந்த ஆணையும் இல்லை. நான் என்னை முற்றாக இழந்துவிட்டிருக்கிறேன். என்னை நடத்தவே என் இளையோனை நாடுகிறேன்.”

சுஷமை தவிப்புடன் “இத்தருணத்தில் பிறிதொருவரை தேடிப்பிடிப்பதும் இயலாது. நகரெங்கிலும் இருந்து இசைச்சூதர்கள் எழுபத்திரண்டு பேரை சேர்த்திருக்கிறோம். தலைநின்று சொல்லெடுக்க ஒருவர் தேவை என்பதனால் உங்களை அழைத்தோம்” என்றாள். போத்யர் “உங்கள் தேவை புரிகிறது. நான் பலநூறு சூதர்குழுக்களில் தலைநின்றவன். ஆனால்...” என்றபின் “இசைக்கருவிகள் நாங்கள். எங்களை மீட்டுவது பிறிதொன்று” என்றார். சுஷமை லுசனிடம் “என்ன செய்ய?” என உதட்டசைவால் கேட்டாள். “பொறுப்போம்” என்று லுசன் சொன்னான்.

பர்வதை வந்து துச்சளை அவையெழவிருப்பதை அறிவித்தாள். சுஷமை தலைவணங்கி விலகி நிற்க கூப்பிய கைகளுடன் சிற்றடி எடுத்து வைத்து துச்சளை அறைக்குள் வந்தாள். அவர் எழுந்து வணங்கி நின்றார். அவள் பீடத்தில் அமர்ந்தபின் அவரை அமரச்சொன்னாள். சில கணங்கள் அவரை நோக்கிய பின் “தங்களால் அஸ்தினபுரியின் குடிச்சிறப்பை பாட இயலுமா?” என்றாள். “ஆம், நான் அறிவேன்” என்று அவர்

சொன்னார். சுஷமை “அவர் குரல் பாடுவதற்குரியதாக இல்லை. பாடி நெடுநாளாகிறது என்கிறார்” என்றாள்.

போத்யர் “என் உடலிலிருந்து தாளம் அகன்றுவிட்டிருக்கிறது. நடுங்கும் உடலில் தாளம் நிற்பதில்லை. உடலில் தாளமில்லையேல் குரலில் இசையெழுவதுமில்லை” என்றார். “உங்கள் மூச்சும் ஆற்றலற்றிருக்கிறது” என்றாள் துச்சளை. “ஆம் அரசி, என்னால் பாட இயலுமென்று எனக்கு தோன்றவில்லை” என்றார் போத்யர். துச்சளை சில கணங்கள் அவரை பார்த்துவிட்டு “ஏதேனும் நான்கு வரியை தாங்கள் பாடலாமா?” என்றாள். “எங்கு?” என்றார். “இங்கு, இப்போது” என்று அவள் சொன்னாள். “இக்களத்தில் பாடுவதற்குரிய புகழ்மொழி எதுவென்று எனக்கு தெரியவில்லை” என்றார். “நாவில் எழுவதை பாடுக, அதுவே தெய்வங்களின் ஆணை!” என்றாள்.

அவர் மூச்சை இழுத்துவிட்டபோது உடல் மேலும் நடுக்கு கொண்டது. இரு கைகளையும் கோத்து மடியில் வைத்தபோது கைகளும் முழங்கால்களும் துள்ளி ஆடின. பலமுறை கனைத்து நெஞ்சு திரட்டியபின் அவர் பிரதீபரின் சௌவீரநாட்டு போர்வெற்றிகளைப் பற்றி பாடினார். “காற்றில் கலைந்த மலரின் இதழடுக்குகளுக்குள் கருவண்டு செல்வதுபோல பிரதீபர் சௌவீரர்களின் மலையடுக்குகளுக்குள் நுழைந்தார். தேனுண்டு மீளும் வண்டு என அவர்களிடம் திறைகொண்டு மீண்டார். அவர்கள் அவரை வாழ்த்தினர். மலைகளிலிருந்து நறுமணம் எழுந்தது. அந்த மலர் அவர் புகழை கருக்கொண்டது. அது வாழ்க!”

ஆனால் அவ்வரிகள் இசையுடன் இயைபு கொள்ளவில்லை. அவர் மன்றாடுவதுபோல, எவரிடமோ இரப்பதுபோல் அது ஒலித்தது. சுஷமை நிறைவின்மையுடன் மெல்ல அசைந்தாள்.

துச்சளை மோவாயை வருடியபடி சில கணம் தலைகுனிந்து அமர்ந்தபின் "சேந்தன் என்று பெயருள்ள ஓர் இளஞ்சூதன் நாம் திரட்டிய எழுபத்திரண்டு பேரில் உள்ளான். மிக இளையோன், கரியன். அவனை வரச்சொல்க!" என்றாள். "அவன் தென்னிலத்தவன். அஸ்தினபுரியின் சிறப்பை அவனுக்கு எவ்வகையிலும் ஒருநாளில் உணர்த்திவிட இயலாது" என்று சுஷமை சொன்னாள். துச்சளை புன்னகைத்து "ஆம், ஆனால் அவன் குரல் நன்று. அதைவிட அவன் கொண்டுள்ள இளமை நன்று. அவன் கற்றுக்கொண்டு எழும் விசை கொண்டிருக்கிறான்" என்றாள்.

"எந்நிலையிலும் முதிய அறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் மிக இளைய மாணவர்களே முற்றுகந்தவர்கள். நிறைந்தவர்கள் ஒருபக்கம், நிறையத் துடிக்கும் முற்றொழிந்தவர்கள் மறுபக்கம் என்று அமைகையிலேயே இறையாணை நிகழ்கிறது. ஒன்று பிறிதுடன் முற்றிலும் கோத்துக்கொள்கிறது" என்றாள் துச்சளை. அவள் என்ன சொல்கிறாள் என்பதை ஒரு கணம் எண்ணி அதை புரிந்துகொள்ளாமலே தலைவணங்கி சுஷமை வெளியே சென்றாள். லுசன் அவளுடன் சென்றபடி தாழ்ந்த குரலில் "அரசி சொல்வதே உகந்தது. அவருக்குத் தேவை ஓர் இளங்குரல் மட்டுமே" என்றான்.

"சூதரே, அவ்விளையவனை சேர்த்துக்கொள்க! அவனிடம் உங்களிடம் எஞ்சிய அனைத்தையும் பொழிக! உங்களில் திரண்டிருக்கும் சொல் அவனூடாக இங்கு நிலைகொள்க! அவன் குடிகளினூடாக இங்கு பெருகிச்செல்க! நிலம் புகுந்த பேராறு மறுமுனையில் புதிதெனப் பிறந்தெழுவதுபோல நீங்கள் அவனில் பிறந்தெழ வேண்டும். உங்களின் பொருட்டு நீர்க்கடன்

இயற்றவேண்டியதும் அவனே. அவனை மைந்தன் என்றும் மாணவன் என்றும் கொள்க!” என்றாள்.

“யாரவன்? எங்கு?” என்று புரிந்துகொள்ளாமல் அவர் கைவிரித்தார். சுஷமையுடன் உள்ளே வந்த இளையோன் தெளிந்த படிகக்கண்களும் வெண்பற்களும் கொண்டிருந்தான். அவர் அவனை நோக்கி “மிகக் கரியவன்” என்று சொன்னார். “ஆம், என்றும் தென்குமரியுடன் இணைவது வடமலையே. இப்பெருநிலம் ஒரு மாபெரும் வளையம். சிலம்பு முனையென கடலும் மலையும் தொட்டுக்கொண்டிருக்கின்றன என்பார்கள். தென்குமரிக் கடலில் நிறைந்திருக்கும் மீன்கள் சிப்பிகளென எலும்புருக்களென இமையத்திலும் திகழ்கின்றன என்று அறிஞர்கள் சொல்வதுண்டு” என்று துச்சளை சொன்னாள். “ஆம், அது எங்கள் பாடல்” என்று போத்யர் சொன்னார்.

சேந்தன் உள்ளே வந்து தலைவணங்கி நிற்க “இளையோனே, உன் ஆசிரியரை, உன் தந்தையை, உன் மூதாதை நிரையை பணிக! அவரிடம் இருந்து இறுதிச்சொல்வரை கறந்துகொள்க! அவை உன் நெஞ்சில் திகழ்க! நாளென வளர்க! உன்னிலிருந்து சென்று நிலைகொள்க!” என்று துச்சளை சொன்னாள். அவன் அருகணைந்து எட்டுஉடலுறுப்பும் நிலம்படிய விழுந்து அவரை வணங்க அவர் இரு நடுங்கும் கைகளை அவன் தலைமேல் வைத்தார். “அருகமர்க!” என்று துச்சளை சொல்ல அவன் போத்யரின் காலடியில் அமர்ந்தான்.

“இப்போது பாடுக, சூதரே!” என்று துச்சளை ஆணையிட்டாள். “எதை?” என்று அவர் மீண்டும் கேட்டார். “இக்கணத்தில் தோன்றுவதை” என்று அவள் சொன்னாள். அவர் தடுமாறி உடல் நடுங்கி கைகள் பதறி காற்றில் அலைய சற்று நேரம் தவித்தபின் “எதை?” என்று மீண்டும் கேட்டார். உடனே அவர்

நாவில் சொல் எழுந்தது. துரோணரிடம் வில் பயிலச் சென்ற அர்ஜுனனைப்பற்றி பாடலானார்.

“பறந்து பறந்து அன்னை ஆணையிட்டது. பறந்து காட்டி துணிச்சலூட்டியது. கூண்டின் விளிம்பில் நின்றிருந்த பறவைக்குஞ்சுகள் அஞ்சின. கூவி தத்தளித்தன. எழுந்து ஒவ்வொன்றாக காற்றில் விழுந்தன. காற்றில் இருந்தது அவற்றின் பறக்கும் நுட்பம். காற்று அதை சிறகுகளுக்கு சொல்லிக்கொடுத்தது. சிறகுகள் காற்றை கண்டுகொண்டன. அவை காற்றில் திளைத்தன. சுழன்று சுழன்று களித்தன. ஒரு சிறுபறவை, அது வானை நோக்கியது. அதன் சிறகுகள் ஒளியிலிருந்து பறத்தலை கற்க விழைந்தன. அன்னை அழைத்தபோது அது கூண்டின் விளிம்பில் வந்து நின்றது. அதன் சிறகுகள் விரியவில்லை. ஒளியின் சரடில் தொற்றி அது ஏறியது. வெண்திரையை அனல்துளி என விண்ணைட் துளைத்து மேலே சென்றது.”

அவர் பன்னிரு அடிகளை பாடி நிறுத்திய அக்கணமே தன் கையிலிருந்த முழவை இரு விரல்களால் மீட்டி எழுநடைத் தாளத்தில் அப்பன்னிரு வரிகளையும் சொல் மாறாமல் திகழிசையுடன் சேந்தன் பாடினான். திகைத்தவர்போல அவர் பார்த்து அமர்ந்திருந்தார். பின்னர் “என் குரல்!” என்றார். துச்சளை புன்னகைத்தாள். “அரசி, இது என் குரல். இளமையில் நான் கொண்டிருந்த குரல். நன்கு நினைவுறுகிறேன், இதே குரலில்தான் இதே அவையில் பேரரசி அம்பிகையின் முன் நான் பாடியிருக்கிறேன்.”

புன்னகைத்து “நன்று” என்று துச்சளை சொன்னாள். “இன்று மீண்டும் பாடுகிறீர்கள். பாடுக!” அவர் பாட அச்சொல் அவ்வண்ணமே இசைகொண்டு, உயிர்கொண்டு சிறகடித்து

அவனிடமிருந்து வெளிவந்தது. பாடப்பாட அவன் அவருடன் இணைந்து உடல் உருகி கலந்ததுபோல் ஓருருக்கொண்டான். “இவன் என் இளையோன். என் இளையோன். என்னுடன் வந்தவன்” என்று போத்யர் சொன்னார். “என் இளையோனேதான் இவன்…” காவலர்தலைவன் வந்து மெல்ல முனக துச்சளை “சூதரே, உங்கள் இளையோன் நேற்றிரவு சூதுமனையில் கொல்லப்பட்டார்” என்றாள். “ஆம், அறிவேன். நினைவுறுகிறேன். என்னிடம் சொன்னார்கள்!” என்று அவர் கூவினார். “ஆனால் அவன் இவனேதான்… இவனாக எழுந்துள்ளான்!”

“பாடுக!” என்று சொன்னாள். போத்யரின் நாவிலிருந்து தொல்கதைகள் அன்று நிகழ்ந்தன என்று எழுந்து வந்தன. ஆற்றங்கரையில் மாணவர்களுடன் நடந்தவராக துரோணர் சொன்னார் “உயிர்க்குலங்களுக்குள் உள்ளூறைந்திருக்கும் பிரம்மத்தின் ஆணைகளை அறிந்து மானுடவாழ்க்கையை ஆளும் நெறிகளை வகுத்தளித்தனர் ஸ்மிருதிகளை இயற்றிய முன்னோர். பறவைகளிலிருந்தும் பூச்சிகளில் இருந்தும் மிருகங்களிலிருந்தும் புழுக்களிலிருந்தும் நெறிகள் கண்டடையப்படுகின்றன. ஒவ்வொரு காலத்திலும் ஸ்மிருதிகள் மாறிக்கொண்டிருப்பது அதனால்தான். முன்பு கிருதயுகத்தில் மானுடருக்கு அளிக்கப்பட்டவை பறவைகளின் ஸ்மிருதிகள். அவர்கள் உணவுண்ணவும் கூடுகட்டவும் இரவணையவும் மட்டுமே மண்ணுக்கு வந்தனர். அவர்கள் வாழ்ந்த வானம் இடங்களென்றும் திசைகளென்றும் பிரிக்கப்படாததாக இருந்தது. மானுடர் அவர்களின் சிறகுகளினாலேயே அளவிடப்பட்டனர். அவர்கள் விண்ணிலெழும் உயரத்தினாலேயே மதிக்கப்பட்டனர்.”

துச்சளை விழிகள் மலைத்திருக்க அவரை பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரு சிறு துளையினூடாக காலமென்னும் பெருமதில்சுவருக்கு அப்பாலிருந்து நிகழ்ந்தன அனைத்தும் பீறிட்டுப் பெருகி வந்துகொண்டிருந்தன. இச்சூதர் ஒரு விரிசல். ஓர் ஊற்று. “திரேதாயுகத்தில் பூச்சிகளிலிருந்து நெறிகள் எடுக்கப்பட்டன. சிறகுகள் குறுகினாலும் அவர்களும் வானில்தான் இருந்தனர். இசையே அவர்களின் மொழியாக இருந்தது. சேற்றிலும் அழுகலிலும் பிறந்து புழுக்களாக நெளிந்தாலும் தவம் செய்து அவர்கள் ஒளிரும் சிறகுகளை பெற்றனர். ஆயிரம் கண்களுடன் விண்ணிலெழுந்து முடிவிலியில் திளைத்தனர். உறவின் பெருவல்லமை அவர்களை காத்தது. அன்று மானுடர் ஒற்றைப்பெரும் பிரக்ஞையாக இப்பூமியை மும்முறை சூழ்ந்து நிறைந்திருந்தனர்” என்றார் போத்யர். அவர் குரலா சேந்தனின் குரலா அது என அவளால் சொல்லமுடியவில்லை.



போத்யர் தொலைவில் எழுந்த விண்மீன்களை பார்த்துக்கொண்டிருந்தார். ஒருமுறை விழியோட்டி மீண்டும் விழிகளால் வானை வருடியதும் விடிவெள்ளியை கண்டார். உரத்த குரலில் யயாதியின் புகழை பாடத்தொடங்கினார். அவர் குரல் அவன் வாயிலிருந்து மீண்டும் எழுந்தது. அதை ஏற்ற எழுபத்திரண்டு இசைச்சூதர்களும் பாட ஒற்றை இசையென மாறி ஓங்கி ஒலித்தது. தனிக்குரல்கள் மானுடருக்குரியவையாகத் தோன்ற ஒன்றெனத் திரண்ட திரள்குரல்கள் தெய்வத்தன்மை கொள்வதை அனைவரும் நோக்கினர். அக்கோட்டையே நாகொண்டு புகழ்பாடுவதுபோல தோன்றியது. நூற்றெட்டு அன்னையர் ஆலயங்களும்

சுடர்கொண்டு அசைவற்று நிற்க அவர்கள் விழித்த கண்களுடன் அந்தப் பாடலை கேட்டு நின்றனர்.

# களிற்றியானை நிரை - 55

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 5

தொலைவில் பீதர்நாட்டு எரிமருந்து நிறைக்கப்பட்ட பூத்திரிகள் சீறி எழுந்து வானில் வெடித்து மலர்களென விரிந்து அணைந்தன. அவற்றின் ஓசை சற்று நேரத்திற்குப் பின் வந்து மலர்மொக்கு உடைவதுபோல செவிகளில் விழுந்தது. கோட்டை மேலிருந்த காவல்வீரர்கள் தங்கள் படைக்கலங்களை தூக்கி வீசி ஆர்ப்பரித்தனர். பெருமுழவுகள் உறுமத்தொடங்கின. ஒன்று தொட்டு ஒன்றென நகரெங்கும் முரசுகள் ஓசையிட, தெருக்களில் நிறைந்திருந்த மக்கள் உடன் இணைந்து ஒலியெழுப்பினர்.

மிக விரைவிலேயே அவர்கள் அனைவரும் அஸ்தினபுரியின் வெற்றியை தங்கள் வெற்றியாக கருதத் தொடங்கியிருப்பதை யுயுத்ஸு கோட்டை மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். எளிய மக்கள், தங்கள் வாழ்வில் வெற்றி என ஒன்றை உணராதவர்கள். வெற்றியின் பொருட்டே அவர்கள் வெல்பவர்களை வழிபடுகிறார்கள், அவ்வெற்றி தங்கள் வெற்றியென கொண்டாடுகையில் வாழ்வை பொருட்செறிவு கொண்டதாக ஆக்கிக்கொள்கிறார்கள். அதன் பொருட்டு அத்தலைவர்களின் கொடுமைகளைக்கூட பொறுத்துக்கொள்கிறார்கள். தங்கள் தலைவர்களின் தோல்வியில் உளம் சோர்கிறார்கள். ஆனால் மிக

விரைவிலேயே தோற்றவர்களை விட்டு விலகிவிடுகிறார்கள். அவர்களை தங்களிலிருந்து இயல்பாக அகற்றிக்கொள்கிறார்கள். எச்சமின்றி மறக்கவும் அவர்களால் முடியும்.

அவன் நகரெங்கும் அலையடித்த உடற்பெருக்கை விழிமலைத்து நோக்கிக்கொண்டு இடையில் கைவைத்து நின்றான். அவன் ஆடை எழுந்து பறந்தது. அன்று புலரியில்தான் அவன் கங்கைக்கரையில் இருந்து நகருக்குள் நுழைந்திருந்தான். திரௌபதி நகர்நுழைந்த பின்னர் கங்கைக்கரையில் அவன் மேலும் தங்கி, அங்கு வந்தடைந்த இந்திரப்பிரஸ்தத்தின் படகுகளிலிருந்த பொருட்கள் அனைத்தையும் முறையாக ஏற்றி அஸ்தினபுரிக்கு அனுப்பினான். அனைத்து ஒருக்கங்களையும் முடித்துவிட்டுத்தான் அவன் கிளம்ப முடிந்தது. ஒவ்வொரு பணியாக வந்துகொண்டிருந்தது. வந்தடைந்த பொருட்களின் பட்டியலும் ஏற்றியனுப்பப்பட்ட பொருட்களின் பட்டியலும் இசைவுகொள்ளவில்லை. அங்கும் இங்கும் வெவ்வேறு உளைநிலைகளைக் கொண்டவர்கள் இருந்தனர். இந்திரப்பிரஸ்தத்தில் இருந்தவர்கள் சிறியனவற்றையும் கணக்கு வைத்தனர். அஸ்தினபுரியில் இருந்தவர்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை. “இந்திரப்பிரஸ்தம் அன்னை, அஸ்தினபுரி தந்தை. அவர்களிடையே ஊடலும் ஆடலும் ஒரு போதும் முடிவடையாதவை” என்று முதிய குகன் சொன்னான்.

முந்தைய நாளிரவு அஸ்தினபுரிக்கு கிளம்பும்போது அவன் உடல் சோர்ந்து சலித்திருந்தது. அதையும் மீறி அஸ்தினபுரியை வந்தடைந்துவிடலாம் என்று எண்ணி அமர்ந்தவன் முற்றிலும் மயங்கி துயின்றுவிட்டிருந்தான். அஸ்தினபுரியை வந்தடைந்தபோது விடிவதற்கு ஒருநாழிகையே

எஞ்சியிருக்கிறது என்றார்கள். துயிலவேண்டும் என எண்ணியிருந்தான். ஆனால் தேரில் துயின்றதே போதுமென்று தோன்றியது. அஸ்தினபுரிக்குள் நுழையும் நகுலனை வரவேற்க அரசகுடியினர் என்று துச்சளையின் மைந்தர்கள் செல்வதாக சொன்னார்கள். நன்றல்லாதது ஏதோ நடக்கக்கூடும் என அவனுடைய அகம் சொன்னது. ஆகவே நேராக சென்று நீராடி ஆடை மாற்றி அணிந்து கோட்டைமுகப்பிற்கே வந்துவிட்டிருந்தான்.

கீழே சூதர்கள் அஸ்தினபுரியின் மாமன்னர்களின் வெற்றியை பாடுவதை மேலிருந்து அவன் கேட்டுக்கொண்டிருந்தான். வீரர்கள் ஒவ்வொருவரின் சொற்புகழும், களவெற்றியும், மைந்தர் சிறப்பும் பாடலென எழுந்து அருகே நின்றிருந்தன. இவ்விருளில், விண்மீன்கள் சூழ்ந்த இத்தனிமையில், அருகே பிறிதொரு ஒழுக்கு என அந்த அழியா வாழ்வு நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்று அவனுக்குத் தோன்றியது. படைவீரர்கள் அனைவரும் அசைவிலாது காவல்மாடங்களிலும், கோட்டை விளிம்புகளிலும், படிகளிலும் நின்று அதை கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்களில் பலர் அந்தக் கதைகளை முதல்முறையாக கேட்பவர்கள். கோட்டையை ஒட்டி கைவிடுபடைகளை நீக்கிவிட்டு அமைக்கப்பட்டிருந்த நூற்றெட்டு அன்னையர் ஆலயங்களுக்கு முன்னால் அமர்ந்து ஏவலரும் அணிச்சேடியரும் அதை செவிமடுத்தனர்.

அங்கிருந்து நோக்கியபோது அவர்கள் அனைவருமே நிழல்களென மாறிவிட்டிருப்பதுபோல் தோன்றியது. நீர்த்துளிகள்போல் அவர்கள் கண்கள் மின்னுவதை காண முடிந்தது. அவர்களின் உளஎழுச்சி இருளை அதிரச் செய்வதுபோல. யுயுத்ஸு ஒருகணத்தில் ஒரு சிறு

நிறைவின்மையை உணர்ந்தான். அது அவன் உடலில் ஓர் அசைவென வெளிப்பட்டது. இருவர் திரும்பி நோக்கிய பின்னர்தான் அவ்வண்ணம் தன் உடலில் ஒன்று எழுந்ததை உணர்ந்தான். அதை அடக்கிக்கொண்டு தன் மேலாடையை சீர் செய்து முகத்தை கைகளில் தாங்கிக்கொண்டு அமர்ந்தான். அவனுள் எழுந்த அந்த ஒவ்வாமை அவன் அதை திரும்பிப் பார்த்ததுமே வளர்ந்து பெருகலாயிற்று. பெருவீரர்கள் பெருவீரர்கள் என்று அவன் உள்ளம் சொல்லிக்கொண்டிருந்தது. யயாதி, நகுஷன், ஆயுஷ், குரு, ஹஸ்தி, பிரதீபன்...

அவன் தலையை உலுக்கி இருள்நோக்கி முகம் திருப்பிக்கொண்டான். இந்த ஒவ்வாமை எங்கிருந்து எழுகிறது? இது என்னை அச்சுறுத்துகிறது. எனில் இது எழுவது நன்றல்ல. என்னிலிருந்து நான் விரும்பாத பிறிதொரு தெய்வம் எழுந்து முன் நிற்கிறது. இந்த வீரர்கள் அனைவரும் அஸ்தினபுரியின் அரண்மனையில் பழைய சுவரோவியங்களாக வரையப்பட்டிருந்தனர். அவர்களின் மேல் காலம் படிந்து மறைத்து மங்கலான வண்ணத் தீற்றல்களாக ஆக்கியிருந்தது. அவற்றை எவரும் நோக்குவதில்லை. எப்போதாவது எங்கேனும் அமர்ந்து இயல்பாக சுவரை வெறித்துக்கொண்டிருந்தால் அவர்களின் விழிகள் துலங்கி நோக்கு வந்து தொடும். திடுக்கிட்டு விழிவிலக்கிக்கொண்டு அவன் எழுந்துகொள்வான். அவர்களில் சிலருடைய அணிகள், சிலருடைய படைக்கல ஒளிகள், சிலருடைய சிரிப்புகள் அவ்வாறு நீரடியிலிருந்து வெள்ளி மீன் எழுவதுபோல தோன்றி மறைவதுண்டு. முழுத் தோற்றமாக அவர்கள் துலங்கியதே இல்லை.

அப்போது யுதிஷ்டிரன் அவர்களை பெரிய ஓவியங்களாக அரண்மனைச் சுவர்களெங்கும் வரையச் சொல்லியிருந்தார். அவர்கள் மழையில் முளைத்தெழுந்தவர்கள்போல பேருருவம் கொண்டனர். அரண்மனைக்குள் அவர்களின் நோக்கு நிறைந்திருந்தது. ஆணையிடும் நோக்கு. எச்சரிக்கும் நோக்கு. ஐயமும் சினமும் கொண்டது. பிரதீபனின் நோக்கிலிருந்தது அதற்கப்பால் பிறிதொன்று. துயரோ கசப்போ திகைப்போ அன்றி பிறிதோ. எவ்வண்ணமோ அவர் தன் குலத்தின் அழிவை முன்கண்டிருக்கக் கூடும். நிகழப்போவதை மூன்று தலைமுறைக்கு முன்னாலேயே நிமித்திகர் கூற முடியும் என்பார்கள். பாரதவர்ஷத்தின் தலைசிறந்த நிமித்திகர்கள் நிறைந்த அவையில் அது எழாமல் இருந்திருக்காது. சந்துனுவின் மைந்தர்களின் ஊழையேனும் அவர் அறிந்திருக்கக்கூடும்.

அவ்வரண்மனையில் உலவும் பெண்டிர் எவ்வாறு உணர்கிறார்கள் என்று எண்ணிக்கொண்டான். அவர்கள் சுனந்தையை தபதியை அம்பாலிகையை அம்பிகையை அறிந்திருக்கிறார்களா? அவ்வோவியங்களின் ஊடாக நடக்கும்போது சுவர்களை முற்றிலும் தவிர்த்து தன் கால்களை நோக்கி நடப்பது அவன் வழக்கமாயிற்று. சுவர்களிலிருந்து நோக்குபவர்களிடமிருந்து ஒலிக்கும் அகச்சொற்கள் அவன் பிடரியைத் தொட்டு மெய்ப்பு கொள்ளச் செய்தன. சம்வகையிடம் “அவர்கள் இறந்தபின் மேலும் ஆற்றல் கொள்கிறார்கள். இந்த அரண்மனைக்குள் அவர்களிடமிருந்த சிலவற்றைப் பெற்று நட்டு பயிரிட்டு வளர்த்திருக்கிறார்கள். என்றேனும் இது தீப்பிடித்து எரிந்தழியுமெனில் மட்டுமே இவர்கள் முற்றழிவார்கள்” என்று யுயுத்ஸு சொன்னான். பின்னர் கசப்புடன் “அவ்வாறும் கூற முடியாது. அவர்கள்

இங்கிருந்து நுண்வடிவில் எழுந்து காற்றை நிறைக்கலாம். அனல் சென்று பற்றிக்கொள்ளும் அனைத்து இடங்களுக்கும் தாங்களும் சென்று குடியேறலாம்” என்றான்.

“இது என்ன பேச்சு?” என்று அவள் மெல்லிய குரலில் கூறினாள். “மங்கலம் நிறைந்திருக்கும் இந்த அரண்மனை…” என்று அவள் மேலும் சொல்ல யுயுத்ஸு சீற்றத்துடன் “வீரம் என்பது மங்கலமல்ல, அது கொலைக்குருதி” என்றான். “செல்வம் என்பது மங்கலம், வீரமின்றி செல்வமில்லை” என்று அவள் சொன்னாள். அவன் அவளை ஒருகணம் திரும்பி நோக்கிவிட்டு “இவர்கள் ஒன்றோடொன்று தொடுக்கப்பட்ட இரும்புக்கண்ணிகள். பெரும் சங்கிலிபோல் இந்நகரை ஆயிரம் ஆண்டுகளாக பிணைத்திருப்பவர்கள்” என்றான். அவளது துணுக்குற்ற விழிகள் அவனை நோக்கிக்கொண்டிருந்தன. “இந்த யானை இன்னமும் காட்டை நினைவில் வைத்திருப்பது. சங்கிலிகள் யானையை ஒருபோதும் முழுக்கத் தளைப்பதில்லை என்பது மதங்கநூலின் மெய்மை” என்றான் யுயுத்ஸு. அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் அவள் பேசுவதை எதிர்பார்ப்பதுமில்லை.

“ஒரு ஷத்ரிய அரசமைந்தனுக்கு இப்பெயர்களை சொல்லிச் சொல்லி தனக்கு ஆற்றல் ஏற்றிக்கொள்ளவேண்டிய தேவை இருக்கலாம். பிறருக்கு அவை அச்சத்தை மட்டுமே ஊட்டுகின்றன. ஷத்ரியர்களின் ஆற்றல் என்பது என்ன? அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குலப்பெருமையால் பீடம் பெற்றவர்கள். அக்குலப்பெருமை அவர்கள் சமைத்துக்கொள்ளும் தொல்வரலாற்றால் ஆனது” என்று அவன் மீண்டும் சொன்னான். “ஆகவே வரலாற்றை அழிக்காமல் ஷத்ரியர்களை வெல்ல முடியாது. வரலாறே மண்ணுள்

இருக்கும் வேர்த்தொகை. அதிலிருந்து முடிவிலாமல் முளைத்தெழுவார்கள். ஆகவேதான் மூத்தவர் அழிந்த வரலாற்றை மீண்டும் ஒளியுடன் வரைந்து எழுப்புகிறார்.” சம்வகை ஒன்றும் சொல்லாமல் நோக்கிக்கொண்டிருந்தாள். “அச்சத்தால் உருவாகும் கோன்மை… ஒருவேளை கோன்மை என்பதே அச்சத்தின் ஒரு வடிவம்தான் போலும்.”

அவன் அருகிலிருந்த நகுஷனின் ஓவியத்தை சுட்டிக்காட்டினான். “இங்கு இன்றுள்ள மக்கள் இவ்வீரர்களை வெறும் சொற்களாகவே அறிந்திருக்கிறார்கள். இதோ இப்போது திசைவென்று செல்வத்துடன் நுழையும் நகுலனைக்கூட அவர்கள் பார்த்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் அவர் கதைகளைக் கலந்து அவரை வரைந்துகொண்டிருக்கிறர்கள். அவர்களின் கற்பனையில் அவர் நான்கு கைகளும் கோரைப்பறகளும் கொண்டவராக இருக்கலாம். மின்படையும் விற்படையும் ஏந்தி முகில்களில் ஊர்பவராக இருக்கலாம்” என்றான். சொல்லச்சொல்ல அவனுடைய கசப்பு மிகுந்து வந்தது. “மக்கள் தேடுவது யாரை? தங்கள் பொறுப்பை தாங்கள் சுமக்க இயலாதென்பதையே ஒவ்வொரு எளிய குடியும் நம்மிடம் அறிவித்துக்கொண்டிருக்கிறது. பிற அனைவருடைய அச்சங்களையும் ஐயங்களையும் தனிமைகளையும் போக்கும் ஒருவன் மானுடரில் எழவேண்டும் என அவர்கள் விழைகிறார்கள். எல்லா சுமைகளையும் தான் ஏற்றிக்கொள்பவன். தெய்வமாக மாறி பேருருக்கொண்டு அவர்களை காப்பவன், காக்கும் பொருட்டு அவர்களை அவன் அழிக்கவும் செய்யலாம்.”

யுயுத்ஸு முதல் எரியம்பின் ஒலியைக் கேட்டபோது தன்னுள் கசப்பு ஊறி நிறைந்திருப்பதை உணர்ந்தான். மேலும் மேலும்

பூத்திரிகள் வெடிக்க இருண்ட வானில் தொட்டாற்சிணுங்கி மலர்களென, மந்தார மலர்களென, அடுக்ககடுக்கான தாமரைகளென செந்நிறமும் பொன்னிறமும் கொண்ட அனல் மலர்கள் இதழ் விரித்து சுடர்கொண்டு இருண்டு அமைய முதிய சூதர் தன் பாடலை நிறுத்தினார். முதலில் அவர் உதடுகள் பாடிக்கொண்டிருந்தன. பின்னர் அவர் உதடுகள் மட்டுமே அசைவதாகவும் அதைக் கொண்டே அருகிருந்த இளைய சூதன் பாட்டெடுப்பதாகவும் அவனுக்குத் தோன்றியது. பின்னர் அவர் பாடவே இல்லை, அவர் உள்ளிலிருந்து இளையோன் பாடலை எடுத்துக்கொண்டான். அவன் தன் அகத்தையே சொல்லாக்கிப் பாடுவதை வியப்புடன் பேருவகையுடன் அவர் விழிகளால் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பாடலினூடாக தான் சென்று கொண்டிருந்தார்.

முரசு முழங்கத்தொடங்கியதும் முதிய சூதர் இளையவரின் தோள் பற்றி எழுந்து முதற்கோயிலில் அமர்ந்த சொல்லன்னையை வணங்கினார். இளையோன் அவரை பற்றிக்கொண்டு வந்து சூத நிரையின் முகப்பில் நிறுத்தினான். யுயுத்ஸு படிகளினூடாக கீழிறங்கி வந்து அவர்களை அணுக இளையோன் தலைவணங்கி நின்றான். யுயுத்ஸு திரும்பிப்பார்க்க சுதமை அருகே பெரிய தாலத்தில் பரிசில்களுடன் வந்து நின்றாள். பட்டில் முடிந்த பொற்காசுகளை எடுத்து இளைய சூதனுக்கு அவன் வழங்கினான். மேலும் பெரிய கிழியை எடுத்தபடி திரும்பிய போது முதியவரின் விழிகள் தன் மேல் நிலைகொண்டிருப்பதை அவன் கண்டான். அதிலிருந்த கசப்பைக் கண்டு திகைத்து அவன் கை ஒருகணம் தாழ்ந்தது. பின்னர் புன்னகைத்தபடி “பெறுக, சூதரே! பெருவீரமும்

குடிமாண்பும் அழிவதில்லை என்று இங்கு சொல்லால் நிலைநாட்டினீர்கள்” என்றான்.

ஆனால் முதியவர் இரு கைகளையும் நீட்டவில்லை. அவர் விழிகள் வஞ்சம் கொண்டு சினந்து அவனை நோக்கின. அவன் மீண்டும் கிழியை நீட்ட இளையவன் அவற்றை பெற்றுக்கொண்டு “களைத்திருக்கிறார். அவர் உள்ளம் இங்கில்லை” என்றான். “ஆம், அவர் விழிகள் அதையே காட்டுகின்றன” என்றபின் பிற சூதர்களுக்கும் பரிசில் கிழிகளை வழங்கினான். அவன் மேல் அவருடைய நோக்கு நிலைத்திருந்தது. அவர் வேறெங்கோ இருந்து அவனை நோக்கிக்கொண்டிருந்தார். அவன் அவர் நோக்கை விலக்கி திரும்பிக்கொண்டு சுதமையிடம் “அனைத்தும் ஒருங்கிவிட்டன அல்லவா?” என்றான். “ஆம்” என்று அவள் சொன்னாள்.

அணிப்படைகள் ஏழு நிரைகளாக கோட்டையின் முகப்பு நோக்கி செல்லத்தொடங்கின. அவற்றை வழி நடத்திச் சென்ற சம்வகையின் கவசமணிந்த உருவம் புலரியின் இருளில் பந்தங்களின் வெளிச்சத்தில் உருகும் உலோகத்துளி என தெரிந்தது. அவன் தன் மேலாடையை சீரமைத்துவிட்டு கோட்டைமுகப்பு நோக்கி நடந்தான். மங்கலச்சேடியர் வெளிமுற்றத்தில் அணிவகுத்தனர். வேதியர் தங்கள் பொற்குட நீருடன் நின்றனர். இசைச்சூதர்கள் இசைக்கலங்களுடன் தங்கள் இடங்களில் அமைந்தனர். அவன் முன்பு சௌவீரநாட்டுப் படையெடுப்புக்குப் பின் பாண்டவர்கள் அவ்வண்ணம் வந்ததை நினைவுகூர்ந்தான். அந்தக் கிழக்கு வாயிலினூடாக மீளமீள அவர்கள் வெற்றிக்கொடியுடன் நுழைந்துகொண்டே இருக்கிறார்கள்.

முற்றத்தை நோக்கி நடந்தபோது ஒருகணத் திரும்பலில் தெரிந்தது, அவன் அவர் விழிகளில் கண்டது அந்தக் குலமூதாதையரின் நோக்கைத்தான் என. ஓவியங்கள் அனைத்திலும் அவர்கள் அதை வரைந்து நிலைநிறுத்தியிருந்தார்கள். வரைந்தவர்கள் கலிங்கத்து ஓவியர்கள். பழைய ஓவியங்களிலிருந்து அதை பகர்ப்பு எடுத்து வரைந்திருக்கிறார்கள். ஓவியங்களிலிருந்து ஓவியங்களுக்கு அந்நோக்கு சென்றுகொண்டிருக்கிறது. ஓவியங்களே அழிந்தாலும் காவியச் சொற்களில் அவை இருக்கும். காவியங்கள் அழிந்தாலும் நினைவில் இருக்கும். நினைவுகள் அழிந்தாலும் கொடிவழிகளின் விழிகளில் எவ்வகையிலோ குடிகொண்டிருக்கும். அவன் மூச்சடைப்பதாக உணர்ந்தான். உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. தொண்டையில் ஒரு துவர்ப்பை உணர்ந்தான். காய்ச்சல் வரவிருக்கிறதா? அன்றி வெறும் துயில் கலக்கம்தானா? காற்றில் பறக்கும் மேலாடையை இழுத்துச் செருகி கைகளை மார்பில் கட்டியபடி அவன் நோக்கி நின்றிருந்தான்.

தொலைவில் பூத்திரிகள் எழுந்தெழுந்து வெடித்தன. முரசொலிகளும் கொம்பொலிகளும் வலுத்துக் கேட்டன. மக்கள் ஆர்ப்பரிக்கும் ஓசை. காடுகளிலிருந்து பறவைகள் கலைந்தெழுந்து வானில் சுழன்று பறந்து கூக்குரலிடலாயின. விண்மீன்கள் குளிர்ந்து நீர்த்துளிகள்போல வானெங்கும் ததும்பி, சிறு உலுக்கலில் பொழிய காத்து நின்றிருந்தன. குளிர்காற்று அனைத்துத் துணிகளையும் கொடிகளையும் மணிகளையும் அசைத்தபடி கடந்து சென்றது. மிக அருகே ஒரு பூத்திரி வெடித்தது. அவ்வெளிச்சத்தில் அவன் காடு சுடர்ந்தணைவதை கண்டான். காட்டுக்குள் இருந்து கீரிகள் சில பதறி ஓடி முற்றத்திற்கு வர சிலர் கூச்சலிட்டு அவற்றை துரத்தினர்.

பலநூறு படைக்கலங்களின் முனைகளில் செந்துளிகள் எழுந்து எழுந்து அணைந்தன.

அணுகிக்கொண்டிருக்கும் நகுலனின் படைகளைக் கண்டு முற்றத்தில் நின்றிருந்த படைகள் உளஎழுச்சி கொண்டன. அணிவகுத்து நின்றிருந்தபோதும் கூட அவர்கள் உடலில் அவ்வெழுச்சியை வெளிக்காட்டாமலிருக்க முயலவில்லை. அப்படைநிரையே யாழ்நரம்புகள் என அதிர்ந்துகொண்டிருந்தது. சற்றே தொட்டால் சீறும் நாகமென உடல் சுருட்டி பத்தி எழுப்பிவிடும் என்று தோன்றியது. படைகளை கிளர்ந்தெழச் செய்வது வெற்றி. வெற்றியைவிட செல்வம். செல்வத்தைவிட சூறையாடல். அவர்கள் இவ்வுலகை வெல்ல விழைகிறார்கள். உலகை வெல்ல, ஆட்கொள்ள, சூறையாட ஒவ்வொரு ஆணுக்குள்ளும் எழுந்த விழைவை தனித்துப் பிரித்து திரட்டி உருவாக்கியதே படை என்பது. வஞ்சத்தையும் சினத்தையும் பிரித்து தனித்துத் திரட்டி உலோகத்தில் வார்த்தவையே படைக்கலங்கள்.

யுயுத்ஸு அந்தப் படைக்கலங்களையே பார்த்துக்கொண்டிருந்தான். உடைவாட்கள் உறைகளுக்குள் பொறுமையிழந்து அதிர்ந்தன. வேல்முனைகள் பசித்த நாவுகளென நெளிய முற்பட்டன. கூர்கள் ஒவ்வொன்றும் குருதி குருதி என்றன. இறுக்கங்கள் ஒவ்வொன்றும் எழுக எழுக என்றன. இந்த நகரம் படைக்கலமின்றி அமையாது என்று அவன் சொல்லிக்கொண்டான். இது பாரதவர்ஷத்தின் கோபுர உச்சிக்குடம். படைக்கலங்களால் உருவானவை நகர்கள். நகர்களின் உச்சமென எழுந்த இது படைக்கலங்களால் சமைக்கப்பட்டது. படைக்கலங்களால் இவை நிறுத்தப்படும். இங்கு இனி குருதி விழலாகாதென்று யுதிஷ்டிரன் கூறினார்.

இனி இங்கு போரில்லை என்றார். இனி நெடுங்காலம் இது போரை பார்க்காமலிருக்கலாம். ஆனால் அது அமைதி அல்ல, நிகழ்ந்த போரில் ஈட்டியவற்றைக் கொண்டு வாழும் ஒரு சோம்பல் வாழ்வு. ஒரு தலைமுறை, அன்றி இன்னொரு தலைமுறை, மூன்றாம் தலைமுறையிலேனும் மீண்டும் இது குருதி சிந்தியாகவேண்டும். இத்தெருக்கள், இக்கோட்டை, இவ்வரண்மனை முகடுகள் குருதியின்றி அமையா. தன் குருதி, பிறர் குருதி…

அங்கிருந்து கிளம்பி ஓடிவிடவேண்டுமென்று அவன் விரும்பினான். தனக்குரியது காடுதான். காடல்ல, எளியோர் நிறைந்த மன்று. உணவும் துயிலும் உரையாடலுமன்றி பிற மகிழ்வேதும் பொருள்படாத சிற்றூர் மன்று. இந்நகரில் இக்கணம் நானன்றி எவரேனும் இவ்வண்ணம் உள்ளம் அகன்றிருக்கிறார்களா என்ன? அவன் ஒவ்வொரு முகத்தையாக நோக்கினான். அத்தனை முகங்களும் ததும்பிக்கொண்டிருந்தன. அவன் நோக்கு சம்வகையை சென்றடைந்தது. கவச உடைக்குள் இருந்த அவளை அவன் மிக அணுக்கமெனக் கண்டான். அவள் நிறைந்திருந்தாள். அப்போது அவன் விழைந்ததெல்லாம் அவளை அருகணைந்து அணைத்துக்கொள்ளவேண்டும் என்றுதான். அவளுடன் இருக்கவேண்டும், அவளிடமிருந்து ஆற்றலை பெற்றுக்கொள்ளவேண்டும். அவள் கொண்டுள்ள நம்பிக்கையின் ஒரு துளியையேனும்.

யுயுத்ஸு நகுலனின் கொடி தொலைவில் அணுகி வருவதை கண்டான். கவசமணிந்த வீரன் புரவியில் மிகப் பெரிய கொடி ஒன்றை ஏந்தியபடி முன்னால் வந்தான்.

அத்தனை பெரிய கொடி எவ்வாறு அவனால் அவ்வண்ணம் விண்ணில் தாங்கப்படுகிறதென்று அவன் திகைத்தான். பின்னர்தான் அந்தக் கொடி பறந்த பெருமூங்கிலில் இருந்து நான்கு பட்டுச் சரடுகளை அப்படை வீரனை சூழ்ந்துவந்த நான்கு புரவிவீரர்கள் இழுத்துப் பிடித்திருப்பதை அவன் கண்டான். ஏழு ஆள் உயரத்தில் எழுந்து நின்றிருந்த மூங்கிலிலிருந்து இரண்டு வாரை அகலமும் ஏழு வாரை நீளமும் கொண்ட பட்டுக்கொடி நெளிந்து பளபளத்தது. முகில் கீற்றொன்று அணுகி வருவதுபோல. கோட்டையிலிருந்து எழுந்த செவ்வொளி அதில் பட அது மேலும் மேலுமெனத் துலங்கி அணுகியது. வாழ்த்தொலிகளும் கொம்பொலிகளும் இணைந்து அளித்த பெருமுழக்கத்துக்குள் கொடி விழிநிறைய அருகே வந்தது. சம்வகையின் முன்னணிப் படைவீரர்கள் இரு பிரிவாகப் பிரிந்து உடைவாளை உருவித் தாழ்த்தி அதை வணங்கினர். கொடி அவர்களைக் கடந்து சென்று கோட்டைக்குள் நுழைந்து நகருக்குள் சென்றதும் அங்கிருந்து வாழ்த்தொலிகள் எழத்தொடங்கின.

அதைத் தொடர்ந்து வேள்விக்குதிரை தனியாக மென்னடையில் வந்தது. அதன் உடலில் அணிகளோ கடிவாளமோ சேணமோ இருக்கவில்லை. அதன் கன்னங்கரிய மென்மயிர் அலைகளின் மேல் பந்தங்களின் ஒளி வழிந்தது. அது தன் வெற்றியை உணர்ந்துவிட்டிருந்தது என்று தோன்றியது. நிமிர்ந்த தலையும் விரிந்த மூக்குத்துளைகளும் உருண்டு நோக்கும் விழிகளும் முன்கோட்டிய செவிகளுமாக அப்படையையே நடத்திவருவதுபோல் தோன்றியது. அதைத் தொடர்ந்து முரசுகளும் கொம்புகளும் முழக்கியபடி சூதர்கள் நிறைந்திருந்த ஏழு தேர்கள். தொடர்ந்து கவசம் அணிந்த புரவிவீரர்களின் படை மின்னும் ஈட்டிகளுடன் ஐந்து நிரைகளாக அணிவகுத்து

வந்தது. அவர்களுக்குப் பின்னால் திறந்த தேரில் வில்லை தன் அருகே தோழனென ஊன்றி கைகளால் பற்றியபடி நகுலன் நின்றிருந்தான். அவன் மேல் பந்தத்தின் ஒளி படும் பொருட்டு இருபுறமும் புரவிகளில் வந்தவர்கள் பெரிய உலோகக் கேடயங்களை பிடித்திருந்தனர். அவ்வொளி சரிந்து அவன் மேல் விழுந்து அசைவுகளில் அலைபாய கவசங்கள் அணிந்து நின்றிருந்த நகுலன் பற்றி எரியும் தழல் போலிருந்தான்.

வேள்விப்புரவி முற்றத்தை அடைந்ததும் கொம்புகள் ஒலித்து ஆணையிட அது இடக்காலை முன்வைத்து தலைநிமிர்ந்து நின்றது. வேதியர் அதன்மேல் கங்கைநீர் தெளித்து அரிமலரிட்டு வாழ்த்தினர். நீர் அதன் உடலில் பட அதன் மென்மயிர் அலைகள் சிலிர்த்து அசைந்தன. நாக்கைச் சுழற்றி மூக்குவளையங்களை துழாவியபடி கழுத்தைக் குலுக்கி செருக்கடித்தது. அணிச்சேடியர் அதற்கு மங்கலத்தாலங்கள் காட்டினர். கால்களால் தரையைத் தட்டியபடி அது பொறுமையில்லாமல் அவர்களை பார்த்தது. மலராலான ஒரு கோடு தரையில் வரையப்பட்டது. அதற்கு அப்பால் வேதியரும் சூதரும் நின்றனர். முதுசூதர் போத்யரின் தலைமையில் வந்த இசைச்சூதர்கள் அங்கே நின்று அதை வரவேற்று நாவேறு பாடினர். “அஸ்தினபுரியின் மகளே, உன் இல்லத்திற்குள் நுழைக! திருமகளே, உன் காலடி பட்ட இடம் செழிக்கட்டும். உன் விழி தொட்டவை எல்லாம் ஒளிகொள்ளட்டும். உன் குரல் தொட்டு கல் கனியட்டும். ஆம், அவ்வாறே ஆகுக!”

புரவி இடக்கால் எடுத்துவைத்து அந்த மலர்வரியை கடந்தது. குரவைகள் ஒலித்தன. மங்கல இசை முழக்கமிட்டது. புரவியை அஸ்தினபுரியின் ஏழு சூதர்கள் வந்து பற்றிக்கொண்டனர். மாமன்னர் யுதிஷ்டிரன் தொட்டு அளித்த பட்டுக் கயிற்றால்

அதை கட்டினர். அதற்கு பொன் மின்னும் கடிவாளமும் சேணமும் பூட்டப்பட்டது. பட்டும் பொன்னும் கொண்டு பின்னிய அணியாடையை அதன் முதுகில் அணிவித்தனர். அருமணிகள் பதித்த நெற்றிச்சுட்டியும் கழுத்தாரமும் சூட்டப்பட்டன. அதை ஐம்மங்கல இசைக்கலன்கள் முழங்க, குரவையொலி தொடர கோட்டைக்குள் கொண்டுசென்றனர். கோட்டைக்குள் புரவியை எதிரேற்க வந்த கூட்டம் எழுப்பிய வாழ்த்தொலிகள் பொங்கி இருளில் அதிர்ந்தன. வடக்கே புராணகங்கையின் விளிம்பில் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த வேள்விச்சாலை நோக்கி அப்புரவி கொண்டுசெல்லப்பட்டது.

நகுலன் தேரிலிருந்து இறங்கி நிற்க வேதியர் கங்கைநீர் தெளித்து வேதம் ஓதி அவனை வாழ்த்தினர். அணிச்சேடியரும் மங்கலச் சூதரும் அவனை வாழ்த்தி விலக வில்லுடன் மீண்டும் தேரில் ஏறிக்கொண்ட அவன் நகர்புகுந்தான். வாழ்த்தொலிகளின் நடுவிலூடாக அவன் நகர்த்தெருக்களில் சென்றான். யுயுத்ஸு தன்னை மெல்ல இழுத்துக்கொண்டு அங்கு நின்றிருந்த பெருந்திரளில் மறைந்தான். திரள் ஓர் இருள்போல அவனை சூழ்ந்துகொண்டது. நகுலன் ததும்பிக்கொண்டிருப்பதை அவனால் பார்க்க முடிந்தது. இத்தருணத்தில் அவனுள் அவன் இழந்த மைந்தர்கள் இருப்பார்களா? அவன் கொன்றொழித்த மைந்தர்கள் நினைவாகவேனும் எஞ்சியிருப்பார்களா? அவன் அடைந்த தனிமை எவ்வண்ணம் மறைந்திருக்கும்? கணங்களில் புதிதென எழும் ஆற்றலை மானுடருக்களித்து அனுப்பியிருப்பதனால்தான் தெய்வங்கள் அத்தனை பெரிய துயர்களையும் தயங்காது அவர்களுக்கு அளிக்கின்றன போலும்.

உலகை வென்று அதன்மேல் கால் வைத்து விண்ணில் தலையெழுந்தவன் போலிருந்தான் நகுலன். தெய்வங்களுக்கு அறைகூவல் விடும் செருக்கு கொண்டிருந்தான். ஆமென்கின்றன தெய்வங்கள். வருக என்கின்றன. இனி நீயே என்கின்றன. இத்தனை இழந்து அடைந்தது இத்தருணம். இத்தனை தொலைவு வந்து அடைந்தது இந்த இடம். இங்கும் அவனுக்கு தனிமையன்றி பிறிதொன்றில்லை. பேருவகையும் பெருந்தனிமையும் பெருவெற்றியும் தன்னந்தனிமையிலேயே அடையக்கூடுவன. யுயுத்ஸு உளம் சோர்ந்து உடல்குறுகினான். பொருளிலாத அழுகையொன்று எழுந்தது. எங்கேனும் இருளில் தூண் மடிப்பில் பற்களைக் கடித்து இரு கைகளையும் முறுக்கி உரக்க வீறிட்டலற வேண்டும் போலிருந்தது. தலையை ஓங்கி ஓங்கி முட்டிக்கொண்டு அழவேண்டும் போலிருந்தது. எது வேண்டுமானாலும் செய்யலாம். இங்கு எவரும் எவரையும் நோக்குவதில்லை. மானுடரே மானுடருக்கு அரணாக, இருளாக, திரையாக மாறிவிட்டிருந்தனர்.

கோட்டைக்குள் சென்றுகொண்டிருந்த கவசப்படைகளை தொடர்ந்து அத்திரிகளும் காளைகளும் புரவிகளும் இழுக்கும் வண்டிகள் நிரைநிரையாக வரத்தொடங்கின. அவற்றில் திறைச்செல்வம் நிறைந்திருக்கின்றது என்பதை நகரத்தோர் உணரும்பொருட்டு அவ்வண்டிகள் அனைத்திற்கும் மேல் பொன் வண்ணம் பூசப்பட்ட பாய்கள் வளைக்கப்பட்டிருந்தன. உள்ளிருக்கும் பொருளென்ன என்று காட்டுவது போல் அவற்றின்மேல் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. பொன்னிறத் தாமரைகள், பொன் வண்ண ஆமைகள், பொன் மின்னும் மீன்கள், பொன் சுடரும் அன்னங்கள்... பொன்... பொன் மட்டுமே. பிறிதொன்றில்லை. உருகி பெருக்கென்றாகி நகருக்குள் நுழைந்துகொண்டிருந்தது பொன்னாலான நதி. அஸ்தினபுரியின்

கருவூலம் ஓர் அடியிலாப் பிலமென வாங்கி அதை உள்ளே வைத்துக்கொள்ளவிருக்கிறது. பசி தீராத இருண்ட பெரிய வாய் அது.

# களிற்றியானை நிரை - 56

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 6

அறைக்குள் இருந்த நகுலன் முற்றிலும் பிறிதொருவனாகத் தெரிந்தான். களைத்து உரு மாறி முதுமை கொண்டவன்போல. இரு கைகளையும் மடிமீது கோத்து தாழ்வான பீடத்தில் கால்களை நீட்டி அமர்ந்திருந்தான். யுயுத்ஸு அறைக்குள் நுழைந்து தலைவணங்கியதும் ஒருகணம் அவனை எவரென்று அறியாதவன்போல் பார்த்தான். பின்னர் அமரும்படி கைகாட்டினான். யுயுத்ஸு அமர்ந்ததும் எழுந்து முன் சரிந்து முகம் சுளித்து “உனக்கு உடல்நலமில்லையா?” என்றான். யுயுத்ஸு “ஆம். துயிலின்மை, உடற் களைப்பு. இன்று அது சற்று எல்லைமீறிவிட்டது” என்றான்.

“நீ என்றுமே வெறிகொண்டு செயலாற்றுபவன்” என்றான் நகுலன். யுயுத்ஸு “ஆம், ஆனால் இன்று பெருந்திரளின் ஓசையும் வெப்பமும் கடுமணங்களும் சேர்ந்து தலைசுழலச் செய்துவிட்டன. தாங்கள் நகர்நுழைந்துகொண்டிருக்கும்போது நான் கூட்டத்தின் நடுவே மயங்கி விழுந்துவிட்டேன். உடல் கிழியும்படி உமட்டல் எடுத்தது. என்னை ஏவலர் தூக்கிக்கொண்டு வந்தனர். மருத்துவர் அளித்த மண்ணுப்பு நீரை அருந்தி சற்று ஓய்வெடுத்துவிட்டு வருகிறேன்” என்றான்.

நகுலன் "மூத்தவருக்கும் உடல்நலமில்லை, ஓய்வெடுக்கிறார் என்று கேள்விப்பட்டேன்" என்றான். "இங்கு அனைவருமே கொந்தளிப்பில்தான் இருக்கிறார்கள். இந்நகரே வெறிபிடித்ததுபோல் தன்னைத் தானே கட்டிக்கொண்டிருக்கிறது. சிலந்தி வலைபோல ஒவ்வொரு நாளும் இது புதிதென பெருகிவிட்டிருக்கிறது. ஒவ்வொருமுறை வெளியே இருந்து நகரத்திற்குள் நுழையும்போதும் முற்றிலும் புதிய ஒரு நகரத்தை பார்க்கும் திகைப்பை அடைகிறேன். உண்மையில் இன்று நகரினூடாகச் செல்கையில் இந்நகரில் நான் கால் வைத்ததே இல்லை என்ற உளமயக்கு எனக்கு ஏற்பட்டது" என்று யுயுத்ஸு சொன்னான்.

நகுலன் "ஆம், நான் அறிந்த நகரே இல்லை இது. இங்கு எனக்கு தெரிந்த ஒரு முகம்கூட தென்படவில்லை என்று எண்ணிக்கொண்டேன். அரண்மனைகூட முற்றிலும் அயலாகத் தெரிந்தது. இங்கே இருக்கவே முடியவில்லை. ஆகவேதான் உன்னை வரச்சொன்னேன்" என்றான். யுயுத்ஸு "நான் இதற்குள் நிலைகொள்ளாமல் அலைகிறேன்" என்றான். நகுலன் "மூத்தவர் என்ன செய்கிறார்?" என்றான். "அவரை தாங்கள் இன்று உச்சிப்பொழுதுக்குமேல் தனியறையில் சந்திக்கலாம்" என்று யுயுத்ஸு சொன்னான். "அவர் அதற்குள் சற்றே தேறிவிடுவார் என நினைக்கிறேன். நீங்கள் வந்த நிகழ்வே அவரை தேற்றக்கூடும்."

நகுலன் அவன் மேலே சொல்லும்படி கூர்ந்து நோக்கி அமர்ந்திருந்தான். யுயுத்ஸு "நேற்றுமுன்தினம் பேரரசி நகர்புகுந்தார். அந்தியில் அரியணையில் முடிசூடி அமரும் நிகழ்வு. அரசரும் அரியணை அமர்ந்தார். அவை முழுக்க விழிகள். அவற்றில் பெரும்பாலானவை முன்னர் ஒரு

பேரரசரை காணாதவை. கண்ணேறு பட்டிருக்கக் கூடும்” என்றான். நகுலன் மெல்ல முனகினான். “அவையிலிருந்து எழுந்து வெளியே செல்கையில் அரசரின் உடல் நடுங்கிக் கொண்டிருந்திருக்கிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “இருமுறை தள்ளாடியிருக்கிறார். அவரை பற்றிக்கொண்டிருந்த ஏவலன் உடல் வெம்மை கொண்டிருப்பதைக் கண்டு அவரை அறையில் படுக்கவைத்துவிட்டு மருத்துவரை அழைத்துச் சென்றிருக்கிறான். மருத்துவர் அளித்த பொடிமருந்தால் அக்கணமே துயின்று நேற்று விழித்துக்கொண்டிருக்கிறார்.”

“அதிலிருந்து உடலும் உள்ளமும் சோர்ந்தவராக இருக்கிறார். எதையும் கோவையாக எண்ணவோ பேசவோ அவரால் இயலவில்லை. காய்ச்சல் இறங்கிவிட்டது. ஆனால் அவர் மிக உளம் சோர்ந்தவராக, துயரம் கொண்டவராக, பல துண்டுகளாக உடைந்தவர் போலிருக்கிறார்” என்று யுயுத்ஸு சொன்னான். “நான் வந்தபோது அவரைச் சென்று பார்த்தேன். உண்மையில் அவரால் என்னை அடையாளம் காணவே இயலவில்லை. சிவந்த கலங்கிய விழிகள் என்னை நோக்கி அலைபாய்ந்தன. மூத்தவரே நான் யுயுத்ஸு இந்திரப்பிரஸ்தத்திலிருந்து அனைத்தும் நகருக்குள் வந்துவிட்டன என்றேன். ஆம் நான் கிளம்ப வேண்டியதுதான் என்றார்.”

நகுலன் மீண்டும் முனகினான். யுயுத்ஸு “இங்கிருந்து கிளம்ப வேண்டியதுதான் என்றார். அதையே சொல்லிக்கொண்டிருந்தார்” என்று தொடர்ந்தான். “கந்தமாதன மலைமேல். கந்தமாதன மலை என்பது ஒரு பெண். அனல் வடிவானவள். நான் அவளை பார்த்தேன். மெய்யாக அவளை பார்த்தேன். பெரும்பிலம்போல் திறந்த அவள் வாய். அனல் நிறைந்த பெரும்பிலம். அனலே இருளான வாய்.

உதிரிச்சொற்களில் இவையே எழுந்துகொண்டிருந்தன. மருத்துவர் நான் கிளம்பலாம் என்று கைகாட்ட தலைவணங்கி ஓசையின்றி பின் வாங்கினேன்” என்றான். நகுலன் “நான் அவரை பார்த்தாக வேண்டும்” என்றான். யுயுத்ஸு “நான் சுரேசரிடம் கேட்கிறேன். அவர் எண்ணுவதென்ன என்பதை உசாவி தங்களிடம் வந்து சொல்கிறேன்” என்றான்.

நகுலன் தன்னுள் ஆழ்ந்து மெல்ல சாய்ந்துகொண்டான். “இங்கு திரும்பி வரும் வரை நான் அடைந்த வெற்றிகளையே கணித்துக்கொண்டிருந்தேன். எண்ண எண்ண இவை நான் அடைந்த பெருவெற்றிகள் என்று தோன்றலாயின. உண்மையில் இங்கிருந்து கிளம்புகையில் உளக்கசப்பும் தனிமையும் கொண்டிருந்தேன். முதல் சில ஊர்களில் அரசர்கள் என்னை வந்து பணிந்து கொடையளித்து மீண்டபோது அதை பொருளற்ற ஒரு சடங்கு என்று எண்ணினேன். எங்கும் எதிர்ப்பு இல்லை என்பதே என்னை ஆர்வமிழக்கச் செய்தது. எப்போது திரும்புவோம் என்னும் ஏக்கமே ஆட்கொண்டிருந்தது. ஆனால் என்றோ ஏதோ ஒரு புள்ளியில் நான் மகிழத் தொடங்கினேன். என்னை மகிழ வைத்தவை நான் வென்றவர்களின் விழிகள். அதிலிருந்த நிகரற்ற பணிவு. அப்பணிவை மேலும் அடையும்பொருட்டு அவர்களை சிறுமைசெய்தேன். அவர்களை அச்சப்படுத்தி அவ்விழிகளைக் கண்டு உளம்பொங்கினேன்” என்றான்.

“ஷத்ரியர்களுக்கு இவ்வாணவத்திலிருந்து விடுப்பில்லை. நான் அடைந்த பொருள் என் கருவூலத்தை நிறைக்க நிறைக்க உள்ளம் இறுகி உடல் நிமிர்ந்தது. விழிகளில் கூர்மையும் குரலில் அழுத்தமும் ஏற்பட்டது. நான் பேரரசனென மாறிவிட்டேன் என அமைச்சர்கள் சொன்னார்கள்” என்று அவன்

தொடர்ந்தான். “மேற்கே யவனர்களின் பட்டுப்பாதையின் எல்லை வரை சென்று பொன்னும் பொருளும் கொண்டு மீண்டு வந்தேன். செல்லும் வழி எங்கும் பெற்ற பொருட்களை ஆங்காங்கே உரிய இடங்களில் கருவூலம் அமைத்து சிறு படையொன்றை காவலுக்கு நிறுத்திவிட்டுச் சென்றேன். எவர் வேண்டுமென்றாலும் அக்கருவூலத்தை கொள்ளையடித்து பொருட்களை எடுத்துச் சென்றிருக்க முடியும். ஆனால் ஒரு கணத்தில் தோன்றியது அவ்வாறு எவருக்கேனும் கொள்ளையடித்துச் செல்லவேண்டும் என்று தோன்றுகிறதா என்று பார்க்கவேண்டும் என்று. ஆகவே எப்பொருளையும் நான் முறையாக பாதுகாத்து வைக்கவில்லை.”

“அஸ்தினபுரியின் அமுதகலக் கொடியே என்னை பேரச்சத்தை அளிக்கும் தெய்வம் என மாற்றிவிட்டது என்று உணர்ந்தேன். ஒரு களத்தில்கூட எதிரிகளை நான் காணவில்லை. ஒரு படைக்கலம்கூட எனக்கெதிராக எழவில்லை. மீண்டு வரும்போது நான் ஈட்டிய பெருஞ்செல்வத்தையே எண்ணிக்கொண்டிருந்தேன். இந்நகரில் நுழையும்போது மூத்தவரிடம் கொண்டுசென்று காட்டுவதற்கு பேரரசொன்றின் கருவூலத்தைவிட பெருந்திரு என்னிடம் இருக்கிறதென்று தருக்கினேன். ஆனால் நகருள் நுழைந்து குடிகளின் வாழ்த்தைப் பெற்று வந்துகொண்டிருந்தபோது ஒரு சார்வாகரை கண்டேன்.”

யுயுத்ஸு “சார்வாகரா? இந்நகருக்குள்ளா?” என்றான். “ஆம்” என்றான் நகுலன். “நகரின் மையத்தில், மக்கள்திரளின் நடுவே.” யுயுத்ஸு பெருமூச்சுடன் “மெய்தான், அவர்கள் எங்கும் தென்படுகிறார்கள். அவர்களை கட்டுப்படுத்தும் தளைகளோ தடுக்கும் வேலிகளோ எங்குமில்லை” என்றான். “ஏனென்றால் உலகியலாளர் அவர்களை தவிர்க்க இயலாது. உலகியல்

கடந்தோர் அவர்களை உள்ளூர விரும்புகிறார்கள்.” நகுலன் “அவர் மதுக்கடை வாயிலில் சிறுகூட்டத்தில் ஒருவராக நின்றுகொண்டிருந்தார். ஒரு கணம் அவர் விழிகளை நான் பார்த்தேன். அவர் என்னிடம் ஏதோ சொல்லவருவதுபோல் தோன்றியது. விழியில் ஒரு மெல்லசைவு. வாயில் இரு சிறு சொல்நிகழ்வு” என்றான்.

“அவர் என்ன சொன்னார் என்று நான் உணர்வதற்குள் தேர் கடந்து சென்றது. உடல்களின் கொப்பளிப்புகள். குரல்களின் பேரலைகள். புழுதி, மலர்ப்பொடி, மஞ்சள்பொற்பொடி. மீண்டும் நெடும்பொழுது கழிந்தே அவர் சொன்ன சொல்லை நான் உணர்ந்தேன். அவர் நஞ்சு என்றார்” என்றான் நகுலன். “நஞ்சு என்றா?” என்று யுயுத்ஸு கேட்டான். “ஆம், நான் திகைத்து திரும்ப கேட்டேன். ஆம் ஆம் ஆம் என்றது என் உளம். நஞ்சேதான். நஞ்சென்றே அவர் சொன்னார். நஞ்சு நஞ்சு என்று. எதை சொன்னார் என என் உள்ளம் துழாவிக்கொண்டே இருந்தது. அதுவரை நடித்ததை தொடர்ந்து நடித்து இங்கே அரண்மனைக்குள் வந்தேன்.”

“வரவேற்புகள் முடிந்து இங்கே அமர்ந்திருக்கும்போது சற்று முன்னர்தான் அவர் சொன்னது எது என்று எனக்குத் தெரிந்தது. அது நான் படைகொண்டு சென்ற வடமேற்குப் புலத்தில் என்னிடம் இருந்து தப்பிச்சென்ற வடமேற்குச் செம்புலத்தின் குடித்தலைவர்களில் ஒருவரை படைகள் அழைத்து வருகையில் அவர் என்னிடம் கூறியது. எதற்காக தப்பியோடினீர் என்று நான் கேட்டேன். நச்சுக்கலம் பொறிக்கப்பட்ட கொடியுடன் தென்னகத்திலிருந்து கொடிய படையொன்று வருகிறது என்றார்கள், அந்த நச்சு எங்கள் நிலத்தையும் ஊற்றுகளையும் நஞ்சாக மாற்றிவிடும்

என்றார்கள், ஆகவே விலகி ஓடினேன் என்றார். அதை அவைப்பழிப்பென்று எண்ணி அக்கணமே கைகாட்டி அவர் தலைகொய்ய ஆணையிட்டேன்.”

“திகைப்புடன் முகம் உறைந்திருந்த அவர் தலை துண்டுபட்டு தரையில் விழுந்து கிடந்தது. திறந்த அவ்விழிகளைப் பார்த்தபோது ஒரு மெல்லிய திடுக்கிடலுடன் உணர்ந்தேன், மெய்யாகவே அது நஞ்சுதானா? அல்ல என்றிருக்கலாம். எனினும் இனி அவர் அதை பிறிதொன்றென உணரப்போவதில்லை. ஆகவே அவர் வரைக்கும் அது நஞ்சேதான்” என்றான் நகுலன். “அவ்வுணர்வு என்னை உலுக்கியது. என் உடல் நடுங்கத் தொடங்கியது. இருமுறை உடலுமட்டி வாயுமிழ்ந்தேன். மருத்துவரை வரச்சொல்லி நானும் ஒரு பொதி மருந்துப்பொடி அருந்தினேன். துயிலில் ஆழ்ந்து விழித்து மீண்டும் அப்பொடியை உண்டேன். துயின்று துயின்று காலத்தைக் கடந்து அதிலிருந்து மீண்டேன். எத்துயர் எக்கசப்பு எவ்விழப்பு ஆயினும் எவ்வகையிலேனும் காலத்தைக் கடத்திவிட்டால் மீண்டுவிடலாம் என அறிவேன்.”

யுயுத்ஸு “அந்த மருந்துப்பொடி கசந்ததா?” என்றான். “ஆம், இங்கும் அப்பொடியையே உண்டேன். சற்றுமுன்னர் என்னிடம் மருத்துவர் அப்பொடியில் ஒரு சொட்டு சுட்டுவிரலால் தொட்டு நாவில் வைத்து எச்சுவை என்றார். கசப்பு என்றேன். கூறுக என்று மீண்டும் கேட்டார். ஊறிப்பெருகும் கடுங்கசப்பு என்றேன். அரசே தங்கள் வாயில் நான் வைத்தது தேன் கலந்த பொடி என்றார். நான் அவரை வெறித்துப் பார்த்தேன். தேன் கசக்கிறது எனில் உங்கள் வாயில் கசப்பு நிறைந்திருக்கிறது என்றே பொருள். கசப்பு எழுவது உங்கள் நாவிலிருந்து. நாவுக்கப்பால் இருக்கும் இரைப்பையிலிருந்து. இரைப்பையை தாங்கி

இருக்கும் குடல்களிலிருந்து. குடல்கள் சென்று முடியும் மூலாதாரத்திலிருந்து. இத்தருணத்தில் நீங்கள் செய்யக்கூடுவது ஒன்றே. பெண்ணிடம் காமம் கொள்ளாதொழிக! தங்கள் உடலிலிருந்து நஞ்சை அவளுக்கு அளித்துவிடுவீர்கள் என்றார்."

யுயுத்ஸு பெருமூச்சுவிட்டான். "இந்த மருந்து உங்கள் உடலுக்குள் மெல்லிய இனிமையொன்றை செலுத்துகிறது. நாங்கள் செய்வது ஒன்றே. இவ்வினிமையை துளித் துளியென உங்கள் உடலுக்கு அளித்துக்கொண்டிருக்கிறோம். உடல் அதை முதலில் செறுக்கும். முழுமையாக மறுக்கும். ஆனால் அதற்கு வாழவேண்டும் என்று விருப்பிருந்தால் ஏதோ ஒரு புள்ளியில் அதை ஏற்றுக்கொள்ளும். அதனூடாக மீண்டெழும். அரசருக்கும் அதையே அளித்தேன் என்றார்." "எனக்கும்" என்று யுயுத்ஸு சொன்னான்.

நகுலன் "அரசரை பார்த்து வருக! நான் எப்போது அவரை சந்திக்கலாம் என்று கூறுக!" என்றான். "சுரேசர் தங்களை பார்க்க வருவார். அவர் முடிவெடுக்கட்டும்" என்று யுயுத்ஸு சொன்னான்.

சுரேசர் அறைக்கு வெளியே வந்து நின்றிருப்பதை ஏவலன் அறிவித்தான். யுயுத்ஸு எழுந்து கைகூப்பியபடி வணங்கி நின்றான். சுரேசர் அறைக்குள் வந்து நகுலனுக்கு தலைவணங்க அவன் அமர்ந்திருந்தபடியே அவர் வாழ்த்துகளை பெற்றுக்கொண்டான். சுரேசர் அமர்ந்துகொண்டு "தங்கள் வருகையை அவருக்கு அறிவித்திருக்கிறோம். தங்களைச் சந்திக்க விருப்புடன் இருக்கிறார். எப்போது வருகிறான் என்று பலமுறை கேட்டுவிட்டார்" என்றார். "அவருடைய தன்னினைவு

கூர்கொண்டிருக்கிறதா?” என்று நகுலன் கேட்டான். சுரேசர் “ஆம், ஓரளவு நலம் பெற்றிருக்கிறார் என்றார்கள். ஆனால் உடல் இன்னும் நைந்த நிலையிலேயே இருக்கிறது” என்றார். நகுலன் “அவர் நா இனிப்பை அறிகிறதா?” என்றான். சுரேசர் புன்னகைத்து “தனக்கு அளிக்கப்படுவது இனிப்பு என்று தெரிந்திருக்கிறது” என்றார். “ஐயம் வேண்டாம், அவர் மீண்டுவிடுவார். அவர் உள்ளிருந்து இனிப்பை நோக்கி தாவும் ஒரு நாக்கு உள்ளது. அது ஒருபோதும் அவரை கைவிடுவதில்லை.”

நகுலன் கைகளைக் கட்டி மீண்டும் சாய்ந்துகொண்டு “என்ன நிகழ்கிறதென்று தெரியவில்லை. இந்நகரம் ஏதோ அயலவரின் ஊர்போல ஆகிவிட்டிருக்கிறது. அறியா முகங்கள், அறியமுடியாத இடங்கள். இங்குள்ள ஒவ்வொரு பரு மணலும் மாறிவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்நகரில் நான் வாழமுடியும் என்றே எனக்குத் தோன்றவில்லை” என்றான். “இங்கு இச்சடங்குகள் அனைத்தும் முடிந்ததும் பிறிதொரு பயணத்துக்கு கிளம்ப வேண்டுமென்று தோன்றுகிறது. வேறெங்கோ ஓரிடத்தில் நான் அகன்று வந்த அனைத்தும் இருக்கின்றன என்று தோன்றுகையில் மட்டுமே என்னால் சற்றேனும் அமைதிகொள்ள முடிகிறது” என்றான்.

சுரேசர் “அரசே, தாங்கள் தங்கள் திசைவெற்றிப் பயணத்தில் வென்று கண்டு அடைந்ததென்ன?” என்று கேட்டார். “பொருள், பெரும்பாலும் பொன். உடன் அருமணிகள். அரிய தெய்வச்சிலைகள், விந்தையான படைக்கலங்கள்.” அவன் புன்னகைத்து “அழகிய பணிப்பெண்களும் உண்டு” என்றான். சுரேசர் “அவை எதிர்ப்பார்க்கக் கூடியவைதான்” என்றார். “பேரரசர் யுதிஷ்டிரனுக்கு தாங்கள் அளிக்கும் தனிப்

பரிசென்ன?” நகுலன் திகைப்புடன் நோக்க “அவர் உள்ளத்தில் விழைவை எழுப்புவது. நாவில் மீண்டும் தித்திப்பை நிகழ்த்துவது. அவ்வண்ணம் எதையேனும் தாங்கள் கொண்டு வந்தீர்களா?” என்றார்.

நகுலன் “அவருக்குள் திகழ்வது விழைவதென்ன என்று எனக்குத் தெரியவில்லை” என்றான். “தாங்கள் அங்கு பெற்றவற்றிலோ கைப்பற்றியவற்றிலோ எப்பொருளை முதலில் கண்டதுமே அவரை நினைவுகூர்ந்தீர்கள்? இது அவருக்கு உகந்தது என்று எடுத்து வைத்தீர்கள்?” என்று சுரேசர் கேட்டார். நகுலன் “ஆம், அவ்வாறொன்று உள்ளது” என்றபடி எழுந்தான். “அது ஒரு தொல்நூல். மெல்லிய பொற்தகடுகளில் பொறிக்கப்பட்டது. ஆக அறுபத்தெட்டு தகடுகள் உள்ளன. எழுபத்திரண்டு இருந்திருக்கவேண்டும். நான்கு அழிந்துவிட்டன” என்றான். “ஆம், எப்போதும் அது அவ்வாறுதான். நெறிநூல்கள் முழுமையாக எஞ்சுவதே இல்லை. அது மானுட ஆழம் அவற்றின்மேல் கொண்ட வஞ்சமாக இருக்கலாம்” என்றார் சுரேசர்.

“அதை நான் நோக்கினேன். அவ்வெழுத்துகள் மிகத் தொன்மையானவை. வடக்கே இரு பெருநதிகளுக்கு நடுவே இருக்கும் மிகத் தொன்மையான நிலம் ஒன்று உள்ளது. சமாரிய நிலம் என அதை சொல்கிறார்கள். அதை ஆண்ட தொல்மன்னர் ஒருவரின் ஆணைகள் அவை. பாலை நிலத்தின் தொன்மையான இயற்கைக் குகை ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டவை. அவ்வரசர் தெய்வ ஆணையை விண்ணிலிருந்து பெற்று தன் மக்களுக்கு நெறிநூல்களை வகுத்தளித்தவர் என்கிறார்கள். மிகத் தொன்மையான நூல்.

அது ஒரு வெள்ளிப் பேழைக்குள் வைக்கப்பட்டு அங்கே கல்லில் வெட்டப்பட்ட பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.”

“அதை என் வீரர்கள் கொண்டுவந்து காட்டியபோதே மூத்தவர் விரும்புவார் என்று நினைத்தேன். அவர் அதை தொட்டுத் தடவி நெஞ்சோடணைத்திருப்பதை பலமுறை உள்ளத்தில் கண்டுவிட்டேன்” என்றான் நகுலன். சுரேசர் “ஒருவேளை அவர் அதைக் கண்டு மீளக்கூடும்” என்றார். யுயுத்ஸு “ஆம், அவருக்கு உகந்த பரிசு அது” என்றான். “இந்நூல் மேற்கு நிலத்தில் உருவான நெறிநூல்களில் தொன்மையானது என்கிறார்கள்” என்று நகுலன் சொன்னான். “அங்கிருந்து இன்று நாம் புழங்கும் நெறிவரை மாறாச் சரடொன்று வருகிறது என்கிறார்கள். அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அங்குள்ளோர் அனைவருக்கும் ஏற்கெனவே நினைவில் இருக்கும், அதை அவர்களின் செவி கேட்கையில் உள்ளம் அதன் பொருளை எடுத்து முன்வைக்கும்.”

“அதை கொண்டுவரச் சொல்க! அரசருக்கு அதை பரிசளிப்போம்” என்று சுரேசர் சொன்னார். நகுலன் எழுந்துகொண்டு கைதட்ட ஏவலன் உள்ளே வந்து தலைவணங்கினான். “அரசருக்குரிய அப்பொன்நூலை எடுத்துகொண்டு வருக!” என்று அவன் ஆணையிட்டான். பின்னர் திரும்பி “அதை மட்டும் இங்கு கொண்டுவந்து என் அறையிலேயே வைத்திருக்கிறேன். என் அருகிலிருந்து அதை அகற்றியதே இல்லை” என்றான். “நெறிநூல் என்பதனால் போலும், அது ஒரு காவல்தெய்வம் என எனக்குத் தோன்றியது. அந்தப் பேழையை நான் திறப்பதே இல்லை. அப்பேழையே எனக்கு அந்நூல் என ஆகிவிட்டது.” சுரேசர் “உடலை நாம் ஆத்மா என நினைப்பதுபோல” என்றார். நகுலன் புன்னகைத்தான்.

ஏவலன் கொண்டுவந்த பேழை வெள்ளியால் பெரிய மீன்போல அமைக்கப்பட்டிருந்தது. அதன் விழிகள் நீல வைரங்கள். செதில்களில் இளஞ்செந்நிற வைரப்பொடிகள் பதிக்கப்பட்டிருந்தன. வால் வளைந்து நின்றது. அது உயிர்த் துடிப்புள்ள மீனாகவும், அருமணி நகையாகவும் ஒரே கணம் தோற்றமளித்தது. "விண்ணிலெங்கோ இருக்கும் தேவ நதியொன்றில் நீந்தும் மீன் என்கிறார்கள்" என்றான் நகுலன். அவன் அதை மூன்று இடங்களில் அழுத்தி மெல்லிய சொடுக்கொலியுடன் திறந்தான். உள்ளே செம்பட்டில் பொதியப்பட்டு அச்சுவடிக்கட்டு இருந்தது. பொன்னாலான தகடுகள் இளந்தாழை மலரிதழ்கள் போலிருந்தன. அறையொளி பட்டதும் உருகத்தொடங்குவதுபோல் ஒளிகொண்டன.

நகுலன் அதை எடுத்து மெல்ல பிரித்து அவர்களுக்கு காட்டினான். அத்தகடுகள் மிக ஆழ்ந்த சொற்களால் எதையோ சொல்வனபோல ஓசையிட்டன. மென்மையான பொற்தகடுகள் பட்டுச் சரடால் கோத்து கட்டப்பட்டிருந்தன. பொற்செதுக்கு வேலைகள் என்று தோன்றுமளவுக்கு மிக நுணுக்கமான அழகிய எழுத்துகளால் அதன் பரப்பு நிறைக்கப்பட்டிருந்தது. "இதை விழி கொண்டு படிப்பது வழக்கமில்லை. விரல் தொட்டு படிப்பது எளிது" என்றான் நகுலன். "இந்த மொழி அறிந்த அறிஞர்கள் எழுவரை என்னுடன் அழைத்து வந்திருக்கிறேன். அவர்கள் இதை அரசருக்கு விளக்கக்கூடும்."

யுயுத்ஸு அதை நோக்கி எழுந்து வந்தான். அவன் முகம் மலர்ந்தது. "பொன்னெழுத்துகளில் பொறிக்கப்படவேண்டிய சொற்கள் என எவருக்கோ தோன்றியிருக்கிறது. இயல்பாக அவ்வாறு தோன்றுவதில்லை. அச்சொற்களே அவ்வாணையை அவர்களுக்கு பிறப்பித்திருக்கவேண்டும்" என்றான். அதை

தொடும்பொருட்டு அருகே வந்து கைநீட்டி பின் கையை திருப்பி எடுத்துக்கொண்டான். “நோக்குக!” என்று நகுலன் அதை நீட்ட “வேண்டாம். என் கைகளால் இன்று அதை தொட நான் விழையவில்லை” என்றான் யுயுத்ஸு.

“ஏன்?” என்று நகுலன் கேட்டான். “பிறிதொரு தருணம், பிறிதொரு தருணம் வரட்டும்” என்றான் யுயுத்ஸு. “முழுத் தகுதியுடன் இந்நூலை என் கைகளில் எடுக்கிறேன். அருள்க தெய்வங்கள்!” நகுலன் “உனக்கில்லாத தகுதி எது? கொள்க!” என்றான். “இப்போது வேண்டாம், மூத்தவரே” என்று யுயுத்ஸு பின்னடைந்தான். நகுலன் சுரேசரை நோக்க அவர் புன்னகையுடன் “அந்நூல் எனக்குரியதல்ல. எனது நூல்கள் எவை என்பதை என் ஆசிரியர்கள் முன்னரே முடிவு செய்துவிட்டிருக்கிறார்கள். குடிவழியாக நான் அதை அடைந்திருக்கிறேன். இந்நூல் எனக்கொரு அரிய அணி மட்டுமே” என்றார்.

“அறிவிற்கு அவ்வண்ணம் எல்லைகள் உண்டா? என்றான் நகுலன். “அறிவிற்கு எல்லைகள் இல்லை. அறிதலின் திசைகள் என சில உண்டு. திசையிலா அறிதல் எல்லையிலா அறிதலை அளிப்பதில்லை” என்று சுரேசர் கூறினார். நகுலன் அதை மூடி மீண்டும் தன்னருகே வைத்துக்கொண்டு ஓர் எண்ணம் எழ உரக்க நகைத்தான். “நூலில் மயங்குபவர் நீங்கள் இருவரும். ஆகவே இரு நோக்கில் இதை அஞ்சுகிறீர்கள். நானோ புரவியொன்றின் வாய் திறந்து பல் பிடித்துப் பார்ப்பதுபோல் இதை கையாளுகிறேன்” என்றான். சுரேசர் உடன் நகைத்து “கள்ளமற்றவர்களை, அறியாதோரை எல்லா தெய்வங்களும் பொறுத்துக்கொள்கின்றன” என்றார்.

“நாம் கிளம்புவோம்” என்றான் யுயுத்ஸு. நகுலன் அதை கையிலெடுத்துக்கொண்டான். யுயுத்ஸு தன் ஆடையை சீர் செய்து அவர்களுக்குப் பின்னால் நடந்தான். இடைநாழியில் நடக்கையில் சுரேசர் “அரசர் எந்நிலையில் இருக்கிறார் என்று தெரியவில்லை. எந்நிலையில் ஆயினும் வெற்றி எனும் சொல்லையே வெவ்வேறு முறையில் அவரிடம் சொல்லுங்கள். இன்று அவர் விழைவது நற்சொற்களை மட்டுமே. ஊக்கமூட்டும் சொற்களே அவரை எழுப்ப முடியும். அனலணைந்த வேள்விக்குண்டம் அவர் என்று மருத்துவர் கூறினார்கள்” என்றார்.

நகுலன் குறடுகள் ஒலிக்க நடந்தபடி “பேரரசி எங்ஙனம் இருக்கிறாள்?” என்றான். “முடிசூட்டுவிழாவுக்குப் பின் அவையமர்ந்து குடிகளின் சொற்களை அவர் கேட்டார். அரசர் நோயுற்று அறைமீண்ட பின்னரும் பின்னிரவு வரை அவை நீண்டது. குடிகள் அளித்த பரிசுகளை பெற்றுக்கொண்டார். அவர்களின் குறைகளை கேட்டார்” என்று சுரேசர் சொன்னார். “சிறந்த அவைக்கூடல் தொடக்கத்தில் மாறா நெறிகளுடனும் முறைமைகளுடனும் இருக்கும். மெல்ல மெல்ல அது கலைந்து அன்னையும் மைந்தரும் கூடி குலவுவது போலாகும். இறுதியில் அங்கிருப்பது பொருளேற்றம் அனைத்தையும் இழந்த வெறும் சொற்களின் கொப்பளிப்பு மட்டுமே.”

“அன்று அவையிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கையில் மைந்தருடன் விளையாடும் அன்னை புலியொன்றை கண்டதுபோல் தோன்றியதாம்” என்றான் யுயுத்ஸு. சுரேசர் “அறைமீண்ட பின் சற்றே ஓய்வெடுத்துவிட்டு புரவியிலேறி சூழ்ந்திருக்கும் நகரங்களுக்கு சென்றார். அனைத்து ஊர்களிலும் மக்கள் திரண்டு வந்து அன்னையே என்று அழைத்து வணங்கி

அவரை வரவேற்றார்கள். இன்னமும் அவர் ஊர் திரும்பவில்லை. இன்றிரவு நகருக்குள் நுழையக்கூடும் என்று செய்தி” என்றார். நகுலன் “அவளுக்கு துயில்நீப்புநோய் இருக்கிறது” என்றான். “முன்னரே அவள் துயில்வது அரிது. போருக்குப் பின் முற்றிலும் துயிலின்மையை அடைந்திருக்கக்கூடும்.” சுரேசர் ஒன்றும் சொல்லவில்லை.

யுதிஷ்டிரனின் அறைமுகப்பில் நின்ற காவலன் தலைவணங்கினான். சுரேசர் அவனிடம் “பேரரசர் எவ்வாறு இருக்கிறார்?” என்றார். “நலம்பெற்று வருகிறார் என்றனர் மருத்துவர்” என்று அவன் சொன்னான். “அவர் நா சுவையுணர்கிறதா?” என்று சுரேசர் கேட்டார். “நலம்பெறக்கூடும் என்று மருத்துவர் சொன்னார்” என்றான் காவலன். “சென்று எங்கள் வருகையை அறிவி” என்று சுரேசர் கைகாட்டினார். அவன் உள்ளே சென்றதும் “நா சுவையறியவில்லை எனில் மொழியை உள்ளமும் அறிய வாய்ப்பில்லை” என்றார்.

# களிற்றியானை நிரை - 57

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 7

யுதிஷ்டிரன் அவருடைய சிற்றறையில் தாழ்வான மஞ்சத்தில் இடைவரைக்கும் மரவுரிப் போர்வையை இழுத்துப் போர்த்தியபடி படுத்திருந்தார். ஏவலன் வரவு அறிவித்தபோது சற்றே புரண்டு தலையணையை உயரமாக வைத்துக்கொண்டு வெறுமனே விழிகளைத் திறந்து நோக்கிக்கொண்டிருந்தார். நகுலன் உள்ளே நுழைந்து முகமன் உரைத்து தலைவணங்கினான். சுரேசரும் யுயுத்ஸுவும் அவனைத்

தொடர்ந்து வந்து அறைக்குள் நின்றனர். சுரேசர் மட்டும் யுதிஷ்டிரனின் தலையருகே சிறுபீடத்தில் அமர்ந்தார். யுதிஷ்டிரன் ஒரு சொல்லும் உரைக்கவில்லை.

நகுலன் "மூத்தவரே, தங்கள் ஆணைப்படி படைகொண்டு சென்று யவனநாட்டு எல்லைவரை வென்று திறைகொண்டு திரும்பியிருக்கிறோம். வெற்றி மேல் வெற்றி பெற்றிருக்கிறோம். நம் வெற்றியை பாரதவர்ஷமே இன்று கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்த வெற்றி அனைத்துக்கும் உரியவர் வெற்றிக்கெனவே பிறந்த குருகுலத்துப் பேரரசர் யுதிஷ்டிரன் என பாவலர் நவில்கிறார்கள். வெற்றிகள் இன்னும் நம்மை காத்திருக்கின்றன. இந்நகர் இனி வெற்றித்திருநகர் என்றே அழைக்கப்படும்" என்றான்.

யுதிஷ்டிரன் விழிகளில் எந்த மாறுபாடும் தெரியவில்லை அவருக்கு அகிபீனா கொடுக்கப்பட்டிருக்கிறதோ என்ற எண்ணத்தை யுயுத்ஸு அடைந்தான். நகுலன் "வெற்றி என்பது செல்வம். வெற்றி என்பது எளியோர்க்கு அளிகொள்ளும் ஆற்றல். இன்று இவ்வெற்றியால் தங்கள் அருள் பாரதவர்ஷமெங்கும் பரவுகிறது. தென்னிலத்திலும் வடநிலத்திலும் கிழக்கிலும் மேற்கிலும் தங்கள் சொல்லே இறையாணை என திகழவிருக்கிறது. வெற்றிகொண்டு நிலைபேறடைந்த குருகுலத்தின் மாண்பும் யயாதியின் கொடிவழியினரின் சிறப்பும் இனி என்றென்றும் பாரதவர்ஷத்தின் வெற்றிக்கதையாகவே நிலைகொள்ளும்" என்றான்.

யுதிஷ்டிரன் மெல்ல முனகி உடலை அசைத்து மல்லாந்து படுத்தார். அவர் விழிகளிலிருந்து நீர் பெருகி கண்களின் இருபுறங்களிலும் வழிந்தது. நகுலன் "தாங்கள் உடல்நலம்

இன்றி இருக்கிறீர்கள் என்றார்கள். இன்று என் பொருட்டு அவையில் அமர்வதும் இயலாதென்று அறிந்தேன். ஒருவேளை இன்று மாலையே இளையோன் தன் படைகளுடன் நகர்புகக் கூடும் என்று கூறினர். அவனுடைய வெற்றியையும் அறிந்தேன். இன்னும் சில நாட்களில் மூத்தவர் இருவரும் வெற்றியுடன் நகர்நுழைவார்கள். நான்கு படைகளும் நகர்நுழைந்த பின்னர் அவை கூடி முறைமை அறிவிப்புகளை வெளியிடுவதே உகந்ததென்று தோன்றுகிறது. வெற்றியை பிந்தி அறிவிப்பதும் பீடுதான். தாங்கள் அதற்குள் உடல்நலிவு நீங்கி எழவும் கூடும்" என்றான்.

யுதிஷ்டிரன் முனகியபடி தலையை அசைத்தார். "அரசே, அஸ்தினபுரியின் கருவூலம் நிறையும் அளவிற்கு பரிசுகளும் கொண்டு வந்திருக்கிறோம். வெற்றியின் அளவை சுட்டுபவை அச்செல்வக்குவைகள். அவை மேலும் நமக்கு வெற்றியை அளிப்பவை. வெற்றித்திரு வீரத்திருவை தொடர்கிறாள்" என்றான். யுதிஷ்டிரன் "இக்குடிகள் உன்னை நகர்முகத்தில் வந்து எதிர்கொண்டார்களா?" என்றார். நகுலன் அவ்வெதிர்பாரா வினாவால் சற்று திகைத்து சுரேசரைப் பார்த்துவிட்டு "ஆம், பெருந்திரளென வந்திருந்தார்கள்" என்றான். யுதிஷ்டிரன் சுரேசரைப் பார்த்துவிட்டு "திரண்டு வந்திருப்பார்கள் என்று நான் அறிவேன். இதுவரை எவருக்கும் வராத திரளா அது? முன்னொருபோதும் எழாத வாழ்த்துப் பெருக்கா?" என்றார்.

சுரேசர் கைகளை மார்பில் கட்டியபடி பேசாமல் அம்ர்ந்திருக்க நகுலன் அவர்கள் இருவரையும் மாறி மாறி பார்த்தபடி "அறியேன். ஆனால் நான் நகர்நுழையும்போது முன்னர் இதுபோல் பெரும் வரவேற்பு எழுந்ததில்லை" என்றான். "நான் சுரேசரிடம் கேட்டேன்" என்றார் யுதிஷ்டிரன். சுரேசர் "இல்லை.

பேரரசி நகர்புகுந்தபோது எழுந்த வரவேற்புக்கு சற்றே குறைவுதான். அவ்வாறே அதை எதிர்பார்க்கவும் இயலும்” என்றார். “ஏன்? ஏன்?” என்றபடி யுதிஷ்டிரன் எழுந்து அமர்ந்தார். அவர் உடல் நடுங்கியது. சுரேசர் “அவர் பேரரசி என்பதனால்” என்றார். யுதிஷ்டிரன் மஞ்சத்தில் ஊன்றிய இரு கைகளும் நடுங்க உதடுகள் துடிக்க கலங்கிய கண்களுடன் சுரேசரை பார்த்துக்கொண்டிருந்தார். பின்னர் பெருமூச்சுடன் தளர்ந்து மீண்டும் மஞ்சத்தில் படுத்து “ஆம், அதுதான் மெய்” என்றார்.

நகுலன் “இங்கு இந்நகரின் மையமென அமைந்திருப்பவர் பேரரசி திரௌபதி. அவரை மண்திகழ் தெய்வமென மானுடர் வழிபடுவதில் பிழையொன்றும் இல்லை” என்றான். “இங்கு மட்டும் அல்ல சென்ற திசையெங்கும் எங்கள் படையை அரசியின் ஒரு சொல் ஆணையென எழுந்து பருவடிவு கொண்டு பெருகி வந்ததாகவே குடிகள் கருதினார்கள். அதை மன்னர்கள் அஞ்சினார்கள்.” சுரேசர் நகுலனை நோக்கி விழிகளால் தடுத்தாலும் அவனால் நிறுத்த முடியவில்லை. “அரசர்கள் எங்குமுள்ளனர். அரசி முடிகொண்டிருப்பது இங்குதான். பலநூறு நிஷாதத் தொல்குடிகள், அசுரர்கள், அரக்கர்கள் எங்களை முகம் மலர்ந்து ஏற்றுக்கொண்டது அரசியின்பொருட்டே. அன்னை அன்னை என்று அவர்கள் கூவினார்கள்” என்றான்.

யுதிஷ்டிரன் முனகினார். சுரேசர் திரும்பி யுயுத்ஸுவை நோக்கி கைகாட்ட அவன் மெல்ல பின்னடைந்து மூடியிருந்த கதவை சுட்டு விரலால் சற்று தட்டினான். கதவு திறந்து ஏவலன் அந்த மீன்வடிவப் பேழையை உள்ளே கொண்டுவந்தான். அந்தக் காலடிகளைக் கேட்டும் யுதிஷ்டிரன் தலை திருப்பிப் பார்க்கவில்லை. நகுலன் திரும்பிப் பார்த்துவிட்டு

புன்னகையுடன் “மூத்தவரே, நான் வடபுலத்திற்குச் செல்கையில் அங்கு யவனர்களின் நாட்டிலிருந்து வந்த பெருவணிகன் ஒருவனை கண்டேன். அவனிடம் அரியதொரு பொருள் இருப்பதாகவும் அதை எனக்கு பரிசளிக்க விழைவதாகவும் சொன்னான். அதற்குக் கைமாறாக அஸ்தினபுரியின் கணையாழியை அவனுக்கு அளிக்க வேண்டும் என்றும், நூறாண்டுகள் அவனுடைய வணிகக் குலம் பட்டுப்பாதையினூடாக செல்லும்போது அந்தக் கணையாழியின் ஆணையே காவலாக அமையுமென்றும் கூறினான்” என்றான்.

“அப்பொருளின் சிறப்பென்ன என்று நான் கேட்டேன். அது இப்புவியில் முதன்முதலில் எழுந்த அரசரின் ஆணை என்று அவன் சொன்னான். அதை பொன்னெழுத்துகளில் பொறித்து வைத்திருக்கிறார்கள். முன்பு நெடுந்தொலைவுக்கு அப்பால் இரு நதிகள் ஓடும் சமாரிய நிலத்தை ஆண்ட ஓர் அரசன் இட்ட ஆணை அது. யயாதிக்கு நிகரான சிறப்பு கொண்டவன் அவன். அவ்வாணைகள் அடங்கிய நெறி நூல் இது. புவியில் இதுவே முதல் நெறி நூல் என்று அவர்கள் கூறுகிறார்கள்” என்றான் நகுலன்.

யுதிஷ்டிரன் கண்களை மூடிக்கொண்டு “அதற்கும் தொன்மையான நெறிநூல்கள் இருக்கும். பாறைகளில் பொறிக்கப்பட்டிருக்கும். குகைகளில் வரையப்பட்டிருக்கும். மானுடன் உருவான பின்னரே நெறி உருவானது என்பது பிழை. நெறி உருவான பின்னரே மானுடன் உருவானான்” என்றார். ஏவலன் அந்தப் பேழையை கொண்டுவந்து அவரிடம் நீட்டினான். அவர் எழுந்து அமர்ந்து அந்த மீன்வடிவப் பேழையை பார்த்தார். கைநீட்டி அதை வாங்கவில்லை. நகுலன் அதை வாங்கித் திறந்து “இச்சுவடிதான்” என்றான்.

அவர் அதை எடுத்து விரல்களால் புரட்டிப் பார்த்தார். பொற்தகடு அதிர்ந்தெழுந்த ஓசை சிறு குருவியின் சிலைப்பொலிபோல் கேட்டது. “இது எந்த மொழி?” என்று அவர் கேட்டார். “பாலை மக்களின் தொல்மொழி” என்று நகுலன் கூறினான். “காப்பிரிகளின் மொழிபோல் உள்ளது” என்று யுயுத்ஸு கூறினான். “இதை படித்து பொருள்கொள்ளும் அறிஞர்கள் உள்ளனரா?” என்றார் யுதிஷ்டிரன். “ஏழு அறிஞர்களை இச்சுவடியுடன் அவ்வணிகனே எனக்கு அளித்தான். உரிய முறைமையுடன் அவர்களை அழைத்து வந்துள்ளேன். இங்கு நம் மாளிகையில் அவர்கள் தங்கியுள்ளார்கள். தாங்கள் உகக்கையில் அவர்களுடன் இச்சுவடியை சொல்ஆயலாம்” என்று நகுலன் கூறினான்.

யுதிஷ்டிரன் சுவடியை அடுக்கி, மீண்டும் பேழையை மூடி, ஏவலனை நோக்கி அதை எடுத்துவைக்கும்படி கைகாட்டினார். “நன்று” என்றார். அவர் முகத்தில் நிறைவோ மகிழ்ச்சியோ எழவில்லை என்பதை யுயுத்ஸு கண்டான். ஆனால் அதை அவர் எத்தயக்கமும் இன்றி தொடுவதை எண்ணிக்கொண்டான். அதை அவ்வாறு தயக்கமின்றி எவருமே தொடவில்லை என்று தோன்றியது. ஒருவேளை அச்சுவடியின் காவலர்களாகிய அறிஞர்கள்கூட கை துவள மட்டுமே தொட்டிருக்கக் கூடும். யுதிஷ்டிரன் அவ்வாறு தொடுவார் என்று தெரிந்திருந்தாலும்கூட அது அவனுக்கு சற்று ஏமாற்றத்தை அளித்தது.

யுதிஷ்டிரன் “நான் களைத்திருக்கிறேன், ஓய்வெடுக்க விழைகிறேன்” என்றார். “ஓய்வெடுங்கள், மூத்தவரே” என்றபடி நகுலன் எழுந்துகொண்டான். சுரேசர் “மருத்துவரிடம் ஆணையிட்டிருக்கிறேன் அரசே, நலம் பேணுக!” என்றபடி

எழுந்து “செல்வோம்” என்று அவர்களிடம் கைகாட்டினார். அவர்களின் ஆடைகளும் அணிகளும் ஒலிக்க ஒவ்வொருவராக அறைவிட்டு வெளிவந்தனர். அவர்களுக்குப் பின்னால் கதவு மூடிக்கொண்டது. அவர்களை அந்த ஓசை சற்று திடுக்கிடச் செய்தது. அறைக்குள் அந்தச் சுவடிப்பேழையுடன் அரசர் தனித்திருக்கிறார் என யுயுத்ஸு நினைத்துக்கொண்டான். அவர் அதை புரட்டிப் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்.

யுயுத்ஸு “எவ்வகையிலும் அவர் மகிழவில்லை” என்றான். நகுலன் திரும்பிப் பார்த்தபின் “ஆம், அவ்வாறே எனக்கும் தோன்றியது” என்றான். சுரேசர் “மகிழ்ந்தார். சுவடியைக் கண்டு அவரால் மகிழாமல் இருக்க இயலாது” என்றார். “ஆனால் அவர் உளம்சோர்ந்ததுபோல் இருந்தது. அது ஏன்?” என்று நகுலன் கேட்டான். “ஒவ்வொரு பரிசும் ஒருவர் தன்னுள் கொண்ட வினாவுக்கான விடை. என்னை பிறர் மதிக்கிறார்களா, பிறர் என்னை தலைசூடுகிறார்களா என்ற வினாவே பெரும்பாலும் பரிசுகளை விடையாகப் பெறுகிறது. என் சொல் நிலமெங்கும் திகழ்கிறதா, நெடுந்தொலைவு என்னை அறிந்திருக்கிறார்களா, நான் அரிதினும் அரிதானவனா, அனைவருக்கும் முதன்மையானவனா என வினாக்களே அரசர்களை ஆட்கொள்கின்றன. அரிய பரிசுகள் அதற்கான விடைகள்” என்றார் சுரேசர்.

“இது பேரரசர்களுக்குரிய பரிசு என்பதில் ஐயமில்லை” என்றான் நகுலன். “ஆம், ஆனால் யுதிஷ்டிரன் இங்கு தன்னுள் கொண்ட வினாவுக்கு இப்பரிசு மறுமொழி அல்ல. இது அவருடைய பிறிதொரு இடத்தில் சென்று அமைகிறது. அவ்வினா அங்கேயே உள்ளது” என்றார் சுரேசர். நகுலன் “அதை எப்படி அறிவது? அதற்கு நாம் என்ன செய்வது?” என்றான்.

“நோக்குவோம். இன்று மாலை சகதேவன் நகர்புகுகிறார். அவரிடம் இருக்கும் பரிசென்ன என்று பார்ப்போம்” என்றார் சுரேசர்.

யுயுத்ஸு “அவர் நெறிநூல்களில் நம்பிக்கையிழந்திருக்கிறார்” என்றான். நகுலன் “மூத்தவரா?” என்றான். “ஆம், போருக்குப் பின் அவர் வெறிகொண்டு நெறிநூல்களை நோக்கினார். தன் செயல்களை நிறுவும்பொருட்டு அவற்றுடன் சொல்லாடினார். பின்னர் தன்மேல் நம்பிக்கை கொண்டு எழுந்தார். அதன்பின் நெறிநூல்களை தொடவில்லை. மெய்மைநூல்களையே ஆராய்ந்தார். இந்நகர் மீண்டு எழத்தொடங்கியதும் நெறிநூல்களையே மறந்துவிட்டார். சிற்பநூல்களில் ஆழ்ந்திருந்தார். காவியங்களைக்கூட பயின்றார். இனி அவருக்கு நெறிநூல்கள் தேவைப்படாது.” சுரேசர் “இந்நூல் தேவைப்படும் என நினைக்கிறேன்” என்றார்.

யுயுத்ஸு தன்னருகே நின்றிருந்த நகுலனை திரும்பிப்பார்த்தான். கைகளை கட்டிக்கொண்டு காடுகள் மேல் காலையொளி படுவதை விழிசுருக்கி நோக்கிக்கொண்டிருந்த நகுலன் முற்றிலும் அயலவனாகத் தெரிந்தான். அவன் ஆடைகள் காற்றில் நெளிந்துகொண்டிருந்தன. அவன் விழிகளைச் சுற்றி வெந்ததுபோல் தோல் செதில்கொண்டிருந்தது. எக்கணமும் சீற்றம்கொள்ளப்போகிறவன்போல, அழுதுவிடுபவன்போல இருந்தது அவன் முகம். “மூத்தவரே” என்று அவன் அழைத்தான். நகுலன் திரும்பிப்பார்த்தான். “மூத்தவரே, இந்த நெடும்பயணத்தில் தாங்கள் எவ்வண்ணம் மாறினீர்கள்?” என்று அவன் கேட்டான்.

“இது பயணமே அல்ல. முறைமைச்சடங்குகளின் தொகுப்பு. எந்த ஊரிலும் நாங்கள் தங்கவில்லை. இரவுகளில் துயின்று பகல் முழுக்க சென்றுகொண்டே இருந்தோம். பெரும்பாலும் குறுக்கு வழிகளினூடாக. குறுகிய நாட்களில் கூடுதல் ஊர்களுக்கு செல்வதொன்றே எங்கள் இலக்காக இருந்தது. எனவே எதையும் வளர்த்தவில்லை. அரசர்கள் வந்து அடிபணிந்து திறை அளிக்கும் சடங்குகள்கூட இரு நாழிகைக்குள் முடிந்துவிடும். பெரும்பாலும் ஒரு நாட்டின் எல்லைக்குள் நாங்கள் நுழையும்போது அங்கிருந்த அரசரும் திரளும் திறைப்பொருட்களுடன், முறைமைச் சீர்களுடன் எங்களுக்காகக் காத்திருந்தார்கள். பறவைகள் வலசை செல்வதுபோல கடந்துசென்று மீண்டோம்.”

“பாரதவர்ஷமே உள்ளங்கை எனச் சிறுத்து பொருளிழந்தது. இந்த அரண்மனைக்குள்ளேயே ஒரு மாதம் சுற்றிவந்ததுபோல் உணர்கிறேன்” என்றான் நகுலன். “ஆணவத்தால் தலையெழுந்துவிட்டால் மண் குறுகிவிடுகிறது. எதனால் பண்டு அசுரர்குலத்துப் பேரரசர்கள் விண்ணை வெல்ல விழைந்தனர் என்று இப்போது தெரிகிறது.” அவன் சிரிப்பில்கூட மாறாத கசப்பு ஒன்று கலந்திருந்தது. “ஆனால் உங்களிடம் ஏதோ ஒன்று மாறியிருக்கிறது” என்று யுயுத்ஸு சொன்னான். “மெய்யாகவா?” என்று கேட்டபடி நகுலன் திரும்பிப்பார்த்தான். “ஆம், மாறியிருக்கிறேன். ஒன்றை இழந்திருக்கிறேன்.”

யுயுத்ஸு அவன் என்ன சொல்வான் என்பதற்காக காத்திருந்தான். “இத்தனை துயருக்கும் இழப்புகளுக்கும் அலைச்சல்களுக்கும் பிறகும் என்னுள் அரசன் என்று அமர்ந்திருப்பதன் மீதான விழைவு இருந்திருக்கிறது. என் ஆணவம் அதற்காக தவித்திருக்கிறது. முதல் நாள் இங்கிருந்து

கிளம்பி மச்சநாட்டுக்குச் சென்று அவ்வரசனின் மணிமுடி என் புரவியின் காலடியில் வைக்கப்பட்டபோது அதை முற்றிலும் உணர்ந்தேன். அன்று என்னை மறந்து உளம்கரைந்து மெய்ப்பு கொண்டேன். எவரிடமோ நான் நான் என்று சொல்லிக்கொண்டேன். அன்று முழுக்க நிலைகொள்ளாமல் உடல் விம்மிக்கொண்டிருந்தேன். என் சொற்கள் அனைத்தும் பெருமுரசொலிபோல ஒலிப்பதாக எனக்குத் தோன்றியது. ஆணைகளை இட்டேன். அருள் புரிந்தேன்.”

“அங்கிருந்து கிளம்புகையில் மேலும் மேலும் வெற்றியென்று என் உடல் தவித்துக்கொண்டிருந்தது. ஆனால் மீள மீள ஒன்றே நிகழ்ந்தது. இறுதியில் மேற்கிலிருந்து திரும்புகையில் எவ்வண்ணமேனும் அஸ்தினபுரியை வந்தடைந்துவிட வேண்டுமென்றே தோன்றியது. நான் சலித்துவிட்டேன். அரசப் பொறுப்பு என்பதுபோல் சலிப்பூட்டக்கூடிய பொருளற்ற செயல் வேறில்லை. அகத்தே ஆணவம் கரையாது கல்லுருளை மட்டுமே இருப்பவர்கள் மட்டுமே அரசர்கள் என்று அமர முடியும். அவ்வாணவம் சற்றே கரையத்தொடங்கிவிட்டாலும் அரியணையில் அமர இயலாது.”

“ஏனென்றால் அரசன் அறியும் எவருடைய வணக்கமும் வணக்கமல்ல. எவருடைய அன்பும் அன்பல்ல. எவருடைய சொல்லும் மெய்ப்பொருள் கொண்டதல்ல. பொய்யை பொன்னென்றாக்கிக் குவித்து அதன் மேல் அமர்ந்து, பொய்யை செங்கோல் என்று ஏந்தி, பொய்யே உரைத்து, பொய் பற்றி, பொய்யில் மகிழ்ந்து, பொய்யில் நிறைவுறுவது அது” என்றான் நகுலன். அவன் குரல் வேறெவருடையதோ என ஒலித்தது. யுயுத்ஸு அவனையே நோக்கிக்கொண்டிருந்தான். அந்த வினாவை ஏன் கேட்டோம் என அவன் அகம் வியந்தது. அவன்

கேட்டது தன்னைக் குலைக்கும் ஒரு மறுமொழியை அவன் சொல்லவேண்டும் என்பதற்காக. தானே தெளிவாக உணராத ஒரு வினாவுக்கான விடைக்காக.

“எங்கோ என்னுள் ஒரு கனவு இருந்தது. என் இளமையில் வந்த கனவு. நான் இளையோன். ஆகவே இங்கு எனக்கு மணிமுடி இல்லை. மூத்தவரிடம் இருந்து ஒப்புதல் பெற்று இங்கிருந்து கிளம்பிச்சென்று எங்கோ ஒரு புது நிலத்தை வென்று அங்கு முடிசூடிக்கொள்ளவேண்டும் என்று நான் இலக்கு கொண்டிருந்தேன். எனக்கென்று குடிகளும் கோலும் கொடியும் குலமுறையும் அமையவேண்டுமென்று எண்ணியிருந்தேன். உண்மையில் குருக்ஷேத்ரத்தின் போர் முடிந்து பெருந்துயர் என்மேல் படர்ந்தபோது என்னுள்ளில் இருந்து எடுத்த அந்தச் சிறு கனவால் மட்டும்தான் நான் மீண்டெழுந்தேன். கடுங்குளிரில் கை அகல்விளக்கின் வெம்மை பெரிதாகத் தெரிவதுபோல் அதைக் கொண்டு சூழ இருக்கும் அனைத்தையும் கொளுத்தி நெருப்பாக்கி குளிர்காய்வதுபோல. இன்று அதை இழந்துவிட்டிருக்கிறேன்.”

“இன்று மெய்யாகவே எவ்வகையிலும் நான் அதில் ஆர்வம் கொள்ளவில்லை. நான் மேற்கே படைகொண்டு செல்கையில் குடிமன்னர் கோல் நிலைகொள்ளாத புது நிலங்கள் பல அங்கு விரிந்திருக்கின்றன என்ற பயணியரின் சொல்லையே நினைவு கொண்டிருந்தேன். என் முடி சென்று நிலைக்கும் நிலமொன்றை கண்டடைய வேண்டும் என்று எண்ணியிருந்தேன். அவ்வண்ணம் நூறு நிலங்களை பார்த்தேன். அங்கிருந்த குடிகள் தங்களுக்கு ஒரு அரசன் வேண்டுமென்று விழைவு கொண்டிருப்பதையும் கண்டேன். அவர்கள் அறத்தின் வாளுடன் வந்த மன்னன் என்று எண்ணி பெருகி வந்து

என்னை அடிபணிந்தனர். அந்நிலங்கள் மழைவளம் கொண்டவை அல்ல எனினும் வணிக வளத்தில் செழிக்க முடியும். அங்கு உறுதியான காவலனின் கோல் நிலைகொள்ளுமெனில் ஒரு தலைமுறைக்குள் பெரும் செல்வம் கொண்ட பேரரசுகள் உருவாகும். நான் விழைந்த அனைத்தையும் அங்கு கண்டேன். விழைந்தவாறே வெல்லும் வாய்ப்பும் எனக்கு வந்தது.”

“ஆம், இன்று தாங்கள் ஒரு சொல் கூறியிருந்தால் தாங்கள் சென்ற நிலமனைத்தும் தங்களுக்கே அளிக்கப்பட்டிருக்கும்” என்றான் யுயுத்ஸு. “ஆனால் எனக்கு அது பொருட்டெனத் தெரியவில்லை” என்று நகுலன் சொன்னான். “எப்போது இவ்விழைவு என்னிலிருந்து அகன்றது என்று எனக்குத் தெரியவில்லை. மீள மீள நடந்த சடங்குகளாலா? ஆம். ஆனால் அதை நான் தெளிவாக முடிவுற உணர்ந்தது அங்கு பாலைநிலத்தில் ஒருநாள் நான் காட்டுப் புரவி ஒன்றை கண்டபோது.” அவன் முகத்தில் எழுந்த கடுந்துயரை யுயுத்ஸு வியப்புடன் நோக்கிக்கொண்டு நின்றான்.

“பாலையில் புரவிகளில் சென்றுகொண்டிருந்தேன். உடன் என் வீரர்கள் இருந்தனர். காட்டுக்குள் குதிரைக்குட்டி ஒன்றின் கதறலை கேட்டேன். அருகே சென்று பார்த்தபோது நோயுற்று மடிந்துகொண்டிருக்கும் அன்னைப்புரவி ஒன்றின் அருகே அதன் குட்டி நின்று கூவிக்கொண்டிருந்தது. அதை சுற்றிவந்து முட்டியது. எம்பிக்குதித்து கால்களால் மண்ணை அறைந்தது. முகத்தால் அன்னையை உந்தி எழுப்பிவிட முயன்றது. நான் என் குதிரையிலிருந்து இறங்கி அதை நோக்கி ஓடினேன். அதை என் கைகளால் அள்ளி எடுத்துக்கொள்ள, அதன் அன்னைக்கு

தன் குழவியை பேணுபவன் வந்துள்ளான் என்னும் நம்பிக்கையை அளிக்க எண்ணினேன்.”

“ஆனால் அன்னை முனகலாக ஒரு சொல் கூறியது. குட்டி என்னை திடுக்கிட்டு திரும்பி நோக்கியது. அதன் மயிர்ப்பரப்பு சிலிர்த்து எழுவதைக் கண்டேன். செவிகள் முன் வளைய மூக்கைத் தூக்கி மோப்பம் பிடித்தபின் அது அலறியபடி விலகி ஓடியது. அறியாமல் அதைப் பிடிக்க சற்றே ஓடிய பின்னர்தான் அன்னை என்ன சொல்லியிருக்கக் கூடும் என்னும் எண்ணத்தை அடைந்தேன். திகைத்து நின்றுவிட்டேன். திரும்பி நோக்கியபோது அன்னைப்புரவியின் பெரிய இமைகள் மெல்ல சரிவதைக் கண்டேன். அது தன் குட்டி விலகி ஓடிவிட்டது என உணர்ந்து நிறைவுகொண்டபடி உயிர்விட்டது.”

“நான் அக்குதிரைக்குட்டியை பிடிக்கவில்லை. அது எவ்வகையிலேனும் காட்டில் வாழும் என எண்ணிக்கொண்டேன். அங்கிருந்து நேராக என் பாடிவீட்டுக்குத் திரும்பினேன். சோர்ந்து தனிமைகொண்டு இறந்ததற்கு நிகராக ஆகிவிட்டிருந்தேன். மெய்யாகவே அன்று இறந்தேன். நான் அகத்தே அறிந்ததுதான். ஆனால் அக்கணம் அது என் முகத்தில் பாறையென வந்தறைந்தது. நான் இனி புரவிகளால் ஏற்கப்படப் போவதில்லை. இனி அவற்றின் உலகில் எனக்கு இடமில்லை” என்றான் நகுலன்.

“அந்தச் சுவடி என் கையில் கிடைத்தபோது முதலில் எனக்குத் தோன்றியது அப்பெரும் பரிசை அரசருக்கு அளித்து என் கோரிக்கையை உடன் வைக்க வேண்டும் என்று. அவ்வண்ணம் தோன்றியதுமே பொருளற்ற ஒன்று கையில் கிடைத்ததுபோல், ஒவ்வாத ஒன்றை விழுங்கிவிட்டதுபோல் உளமறுப்பு எழுந்தது. அதை எண்ணிப்பார்க்கவே இயலவில்லை. எதை இழந்து எதை

பெறுகிறேன்? எதையேனும் பெற்றால் நான் இழந்தவற்றுக்கு அவற்றை நிகர்வைக்கிறேன் என்றல்லவா பொருள்! என் இறுதிக் கணத்தில் புரவிமுகத்துடன் வந்து என்னை அழைக்கும் தெய்வத்தை சிறுமை செய்வது அல்லவா அது?”

“உண்மையில் அப்பரிசை அரசரிடம் நான் கொடுக்கையில் அதை என்னிடம் இருந்து கையொழிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. தீது விளைக்கும் அரும்பொருளை ஆலயத்திற்குக் கொண்டுசென்று தெய்வம் முன் வைத்து திரும்பாது மீள்வதுபோல” என்றான் நகுலன். யுயுத்ஸு புன்னகைத்தான். அதைக் கண்டு “கூறுக!” என்று நகுலன் சொன்னான். “ஒன்றுமில்லை” என்று யுயுத்ஸு சொன்னான். “கூறுக!” என்று உரக்க நகுலன் கேட்டான். “உங்கள் விழைவு எஞ்சியிருந்தால், உங்கள் கோரிக்கையுடன் அப்பரிசை அரசர் முன் நீங்கள் வைத்திருந்தால் அவர் மகிழ்ந்திருக்கக் கூடும்” என்று யுயுத்ஸு சொன்னான்.

நகுலன் திரும்பிப்பார்த்து “ஏன்?” என்றான். “அதை விளக்கத் தெரியவில்லை. ஆனால் அவ்வாறு தோன்றுகிறது” என்று யுயுத்ஸு சொன்னான். நகுலன் சில கணங்கள் அவனை கூர்ந்து நோக்கிவிட்டு “ஆம், மெய்தான்” என்றான்.

# களிற்றியானை நிரை - 58

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 8

யுயுத்ஸு யுதிஷ்டிரனின் அறையை அடைந்து “என்னை அழைத்திருக்கிறார்” என்றான். ஏவலன் அவன் வருகையை

அறிவித்து உள்ளே அனுப்பினான். யுயுத்ஸு உள்ளே சென்று சொல்லின்றி யுதிஷ்டிரனை வணங்கினான். யுதிஷ்டிரன் மஞ்சத்தில் கால்களை நீட்டி தலையணைகளில் சாய்ந்து அமர்ந்திருந்தார். முகம் சற்று தெளிவுகொள்வது போலிருந்தது. மூச்சு மட்டும் எழுந்து எழுந்து அமைய நெஞ்சு அசைந்துகொண்டிருந்தது. அமரும்படி கைகாட்டினார். அவன் அமர்ந்ததும் “உன்னை அழைத்தது ஒரு சந்திப்புக்காக. என் உளநிலையுடன் ஒத்துச்செல்பவன் நீ மட்டுமே” என்றார். “சகதேவன் இருந்தால் அவனை அழைத்திருக்கலாம்” என முனகிக்கொண்டார்.

யுயுத்ஸு புரிந்துகொண்டான். “அந்த மேற்குநிலத்து அறிஞர்களை நான் சந்திக்கவேண்டும் என்று விரும்பினேன். அவர்களை அழைத்துவரச் சொல்லி ஆணையிட்டிருக்கிறேன். அப்போது நீயும் உடனிருக்கலாம் என்று தோன்றியது” என்றார் யுதிஷ்டிரன். யுயுத்ஸு தலைவணங்கினான். “அவர்களின் மெய்மை என்ன என்று அறிவதில் எனக்கு ஆர்வமில்லை. நான் உண்மையில் நெறிநூல்களைப் பற்றிய ஆர்வத்தை முற்றாகவே இழந்துவிட்டிருக்கிறேன். நெறிநூல்கள் என்பவை மக்களை வழிநடத்துபவை என எண்ணியிருந்தேன். அவ்வாறல்ல, நெறிகளை மக்கள்தான் உருவாக்கிக்கொள்கிறார்கள். உருவாக்கிக்கொண்ட நெறிகளை எழுதிவைக்கிறார்கள். ஆனால் அவற்றை நடைமுறையில் தொடர்ந்து மாற்றிக்கொண்டும் இருக்கிறார்கள்.”

“எனில் ஏன் எழுதி வைக்கிறார்கள்? அவற்றை நிலையாக ஆக்கும்பொருட்டா?” என யுதிஷ்டிரன் தொடர்ந்தார். “அல்ல, நிலையாக ஆக்கமுடியாதென அனைவருமே அறிந்திருக்கிறார்கள். அவற்றை பதிவு செய்வது அவை

குடிகளின் கண்ணுக்குப் படவேண்டும் என்பதற்காக மட்டுமே. எழுதப்பட்ட நெறி என்பது ஒரு பொருள். மக்களால் நுண்ணுருவான எதையும் நம்ப முடியாது. தெய்வத்தை சிலையாக்குவதுபோல நெறிகளை சொல்லாக்குகிறார்கள். சிலையை தெய்வமாக்கிக்கொள்வதுபோல சொற்களை நெறிகளாக விரித்துக்கொள்கிறார்கள். தெய்வம் அந்தந்தத் தருணங்களுக்கேற்ப அந்தந்த உள்ளங்களுக்கு இயைய உருக்கொள்வதுபோல நெறிகளும் தோற்றம் கொள்கின்றன.”

“ஆனால் இந்த நூலின் வடிவம் எனக்கு ஆர்வமூட்டியது. இது பொன்னாலானது. இதை பொன்னில் பொறிக்க வேண்டும் என எவருக்குத் தோன்றியது? இச்சொற்கள் தெய்வநெறிகளைச் சொல்பவை என்றால் பொன் இவற்றுக்கு எதை மேலும் கூட்டி அளிக்கப்போகிறது? முன்பு அதை எண்ணியிருக்கிறேன். காலம்கடந்தவை என்று நாம் நம்புகிறோம் என்றால் அச்சொற்களை ஏன் கல்லில் பொறிக்கிறோம்? அச்சொல்லைவிட காலம்கடந்தது கல் என்று நம்புகிறோம் என்றல்லவா அதன் பொருள்?” என்றார் யுதிஷ்டிரன். “ஆகவே இந்நூலை படித்தறியவேண்டும் என்னும் ஆர்வம் ஏற்பட்டது. இதில் புதியதென ஏதும் இருக்கப்போவதில்லை என்பதில் ஐயமில்லை. ஆனால் எதை அவர்கள் பொன்னால் அரணிட்டு நிறுத்த விழைந்தனர் என அறிய விழைகிறேன்.”

யுயுத்ஸு புன்னகைத்தான். “ஏழு அறிஞர்கள் என்பது மேலும் ஆர்வமூட்டுகிறது” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அவ்வாறென்றால் அவர்கள் இந்நூலை பல தலைமுறைகளாக பயின்று கொண்டிருக்கிறார்கள் என்றுதான் பொருள். பல காலமாகப் பயிலப்படும் ஒன்று தெய்வமென ஆகிவிட்டிருக்கும். தெய்வம் உருமாற்றத்தினூடாக மட்டுமே செயல்பட முடியும்.”

அவர் முதல்முறையாக சிரித்தார். அவருடைய பற்கள் வெளித்தெரிய கண்களில் மெல்லிய ஒளி வந்தமைந்தது. அவர் சிரிப்பது மிக அரிது என யுயுத்ஸு எண்ணிக்கொண்டான். நூல்தேரும்போது மட்டுமே அச்சிரிப்பு எழுகிறது. அது நூலில் அங்கதத்தைக் கண்டடைந்தால் மட்டும். நூலாய்வதையே வாழ்வெனக் கொண்டவர்கள் அறுதியில் நூலில் அங்கதம் அன்றி எதையுமே பொருட்டெனக் கருதுவதில்லை போலும்.

ஏவலன் வந்து வணங்கி அறிஞர்கள் வந்திருப்பதை அறிவித்தான். அவர்கள் ஒவ்வொருவராக உள்ளே வந்தனர். அனைவருமே யவனர்கள். ஆனால் ஒருவர் மட்டுமே செந்நிறத் தலைமயிர் கொண்டிருந்தார். அவர் விழிகளும் பழுப்புநிறத்தில் இருந்தன. ஒருவர் ஓங்கிய பேருடலும் அடர்த்தியான கருநிறப் புருவங்களும் கொண்டிருந்தார். இருவரிடம் நோக்கியபின் சற்று பீதர்குருதியின் கலப்பை கண்டடைய முடிந்தது. அவர்கள் அறைக்குள் வந்ததும் யுதிஷ்டிரன் யவனமொழியில் முகமன் உரைத்து வரவேற்றார். அமரும்படி அவர்களிடம் கோரினார். “நான் உடல்நலமின்றி இருக்கிறேன். ஆகவே என்னால் எழுந்து அமர்ந்து நூலாட இயலாது. பொறுத்தருள்க!” என்றார்.

அவர்களில் முதியவர் உரத்த குரலில், சற்றே குழறல் கலந்து ஒலித்த செம்மொழிச் சொற்களில் “என் பெயர் தாட்டியஸ். நான் இரட்டைநதியோடும் தொல்நிலமாகிய கீழ்யவனத்தை சேர்ந்தவன். நெறியுசாவும் கல்விபெற்றவன். நூல்நவிலும் உரிமைகொண்ட குலத்தில் பிறந்தவன்” என்றார். “இவர்களும் எங்கள் நிலத்தவரே. இவர் இசாயர், அவர் சபூரர், உயரமானவர் சார்பெல். நாங்கள் நால்வரும் ஒற்றை கல்விமுறையைச் சேர்ந்தவர்கள்” என்றார். மெலிந்த உடலும் கூர்முகமும் சற்றே உந்திய மூக்கும் கொண்டிருந்தவர் “நான் இரட்டைநதிக்கு

அப்பாலிருக்கும் பாலையவனத்தைச் சேர்ந்தவன். என் பெயர் அடாமி. அவர்கள் இருவரும் இரட்டையர், அவர்களுக்கு எப்போதும் தோமர் என்னும் பெயரை இடுவது எங்கள் வழக்கம்” என்றார்.

“நாங்கள் எழுவருமே செம்மொழி கற்றவர்கள். அரசர் விரும்பும்படி நூல்களை பொருள்கொண்டு விளக்க கடமைப்பட்டுள்ளோம்” என்று முதல் தோமர் சொன்னார். “நெறியுரைப்பது எங்கள் தொழில், அத்துடன் உலகமெங்கும் நெறிகளைக் கொண்டுசெல்ல வேண்டியது எங்கள் குலக்கடமையும்கூட.” யுதிஷ்டிரன் கைகாட்ட ஏவலன் அந்த மீன்பேழையை எடுத்துவந்தான். “இந்த நூல் எது? இதன் ஊற்றுமுகம் என்ன? இது உரைப்பது எதை?” என்று யுதிஷ்டிரன் கேட்டார்.

தோமர் “இது ஒரு தொல்கதையிலிருந்து சொல்லப்பட வேண்டியது” என்று தொடங்கினார். “இது தெய்வங்கள் மட்டுமே மண்ணில் திகழ்ந்திருந்தபோது நிகழ்ந்தது. அன்று இங்கு பல்லாயிரம்கோடி தெய்வங்கள் இருந்தன. முள்ளின் முனையில் மூன்றுகோடி தெய்வங்கள் நின்றிருக்க இடமுண்டு என்பது எங்கள் மொழியின் சொல். அத்தெய்வங்கள் அனைத்துக்கும் தெய்வம் என்று அமைந்தது அனு என்னும் முதல் தெய்வம். அது ஆணும் பெண்ணுமாகியிருந்தது. வானும் மண்ணும் ஆகியிருந்தது. இருளும் ஒளியும், நீரும் நெருப்பும் அதுவே. இருத்தலும் இன்மையும் அதுவே. அறியப்படுவன அனைத்தும் அது, அறியப்படாமையும் அதுவன்றி வேறில்லை.”

இங்கிருந்த அனைத்து தெய்வங்களும் அது, ஆனால் இத்தெய்வங்கள் அனைத்தும் இணைந்தாலும் அது அல்ல. இவ்வண்ணம் நூறுநூறு சொற்களில் மட்டுமே நம்மால் அதைப்

பற்றி சொல்லமுடியும். அனு எங்குள்ளது என்றாலும் அதன் ஒற்றைவிழி மட்டும் வடக்கே துருவமுனையில் வடமீன் என நின்றுள்ளது. விண்ணில் ஒவ்வொன்றும் மாறுகையில் மாறாதுள்ளது அது ஒன்றே. தான் இருப்பதற்கு மானுடருக்கும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மீன்களுக்கும் முதற்தெய்வமான அனு அளிக்கும் சான்று அது” என்றார் தோமர். “அனுவின் ஒவ்வொரு எண்ணமும் ஒரு தெய்வமென்றாகிறது. முடிவில்லாத தெய்வங்களால் ஆன தெய்வம் அது எனக் கொள்க!

அனுவின் ஓர் எண்ணம் என்லில் என்னும் தெய்வமாகியது. அது மண்மேல் சுழன்றடித்த பெரும்புயல்காற்று. பாறைகளாலும் மரங்களாலும் பிளவுபடுத்தப்பட்டு அது பல்லாயிரம் காற்றுகளாகியது. சுழற்காற்றும் சுழிக்காற்றும் மழைக்காற்றும் என வடிவுகொண்டது. விசையின், ஆற்றலின் தெய்வமான எனிலின் இளையோன் என என்கி என்னும் தெய்வம் பிறந்தது. அவன் பெருங்கடல்கள் என ஆகி இப்புவியை மூடினான். உடன்பிறந்தார் இருவரும் ஒருவருக்கொருவர் பூசலிட்டமையால் கடல்கள் கொந்தளித்தன. அலைகள் எழுந்து சென்று விண்ணை அறைந்து அதிரச்செய்தன. ஆகவே முதல் தெய்வமான அனுவின் ஓர் எண்ணம் நின்மை என்னும் அன்னைத் தெய்வமாகியது.

மலைகளுக்கும் மண்ணுக்கும் உரியவள் நின்மை. நிலமகளை எனிலும் என்கியும் மணந்தனர். அவர்களின் கூட்டில் உருவாயினர் மானுடர். தன் மைந்தர்கள் வாழும்பொருட்டு என்கி தன் அலைகளால் நீரை வானில் செலுத்தினான். என்லில் அவற்றைச் சுமந்துவந்து பொழியச் செய்தான். பெருநீர்

இரு நதிகளாகியது. இரு நதிகளின் நடுவே எழுந்த அந்நிலம் நடுநீர்நிலம் என்று அழைக்கப்பட்டது. அங்கே குலங்கள் உருவாயின. அரசுகள் எழுந்தன. மொழிகள் செழித்தன. செல்வம் பெருகியது. செல்வம் அவர்களை விழைவுமிக்கவர்களாக்கியது. விழைவு பழிச்செயல்களை நோக்கி செலுத்தியது.

அவர்களின் பழிகளுக்கெல்லாம் இரு தந்தையரும் சினந்தனர். அவர்களை ஒவ்வொரு முறையும் அன்னை அடக்கி அமைதிப்படுத்தினாள். ஆனால் ஓர் எல்லையை அவர்கள் கடந்தபோது அன்னை முனிந்தாள். முழுக் கடலும் காற்றில் ஏறி வானாகச் சூழ்ந்து பொழிந்தது. மண்ணை நீர் மூடியது. ஒருவர் எச்சமின்றி அனைவரும் மடிந்தனர். அவர்கள் புதைந்த சேற்றுப் பரப்பில் இருந்து ஒரு கைப்பிடி அள்ளி அன்னை மீண்டும் மானுடரை உருவாக்கினாள். அவ்வாறு ஆறு முறை அவள் தன் மைந்தரை முற்றழித்தாள். ஏழாவது முறை மானுடரை முற்றழிக்க அவள் எண்ணியிருந்தாள். அவளுடைய சினம் நிலத்தில் அதிர்வுகளாக நீரில் அலைகளாக காற்றில் விம்மலோசைகளாக எழுந்துகொண்டிருந்தது.

அந்நாளில் சியுஸ்த்ரர் என்னும் மன்னரால் இரு நதிகளின் நாடு ஆளப்பட்டது. அவர் ஒருநாள் அந்தியில் பறவை ஒன்று சிறகைக் குவித்து வீசி பின்னால் நகர்வதை பார்த்தார். அது ஏன் என்று அவர் எண்ணி தன் நிமித்திகர்களிடம் கேட்டார். அவர்களுக்கு அவ்வண்ணம் ஒரு குறி தெரிந்திருக்கவில்லை. அது அவருடைய உளக்குழப்பம் என எண்ணினார். பிறிதொரு நாள் மரத்தின் உச்சியில் கூடுகட்டி வாழும் எலி ஒன்றை தன் மாளிகை மேலிருந்து கண்டார். பிறிதொரு நாள் நாகப்பாம்புகள் சிறகு கொண்டு காற்றில் மிதப்பதை கண்டார். ஒவ்வொன்றும்

தங்கள் இயல்பழிந்து உருமாறுவதை உணர்ந்து அதன் பொருளென்ன என்று பதைத்தார்.

அவர் ஆற்றின்மேல் படகில் சென்றுகொண்டிருக்கையில் பெரிய மீன் ஒன்று வாயால் சிறிய மீன்களை உள்ளே இழுத்து விழுங்குவதை கண்டார். அக்கணமே தன் மேலாடையை வீசி அந்த மீனை பிடித்தார். அதை கொல்ல அவர் தன் குறுவாளை எடுக்கையில் அந்த மீன் “நில், கொல்லாதே என்னை” என்றது. சியுஸ்த்ரர் திகைத்து அதை நோக்கினார். பின் “நீ பலநூறு சிறுமீன்களை உன் பசிக்காக கொலைசெய்கிறாய், அரசனாகிய நான் என் நதியிலும் நெறிபேணக் கடமைப்பட்டவன்” என்றார். அந்த மீன் “நான் அவற்றை உண்ணவில்லை, என் வாய்க்குள் நோக்கு, அந்த மீன்கள் அனைத்தும் உயிருடன் உள்ளன. அவை அங்கே ஆழ்துயிலில் இருக்கும். அவை என் குழந்தைகள், நான் அவற்றை ஈன்றவள்” என்றது.

“உன் குழவிகளை நீ ஏன் விழுங்கிச் சேர்த்துக்கொள்கிறாய்?” என்று சியுஸ்த்ரர் கேட்டார். “அறிக, இங்கே பேரழிவு நிகழவிருக்கிறது! அன்னை நின்மை உயிர்க்குலங்கள் அனைத்தையும் அழிக்கவிருக்கிறாள். ஒவ்வொரு உயிர்வகையிலும் ஒன்றை மட்டும் அவள் எஞ்சவிடுகிறாள். இங்கு திகழும் பழிச்செயல்களில் பங்கில்லாதவர்கள் அவர்கள். எனக்கு அவள் அளித்த ஆணை என் உயிரை பேணிக்கொள்வதென்பது. என் குழந்தைகள் இன்றி என் உயிருக்குப் பொருளில்லை. ஆகவே அவர்களை என் உடலாக ஆக்கிக்கொள்கிறேன். என் ஊனை உண்டு அவர்கள் என்னுள் வாழ்வார்கள். அப்பேரழிவுக்குப் பின் புதிய உலகில் அவர்கள் என்னைப் பிளந்து வெளிவருவார்கள்” என்றது மீன்.

அந்த மீனை நீரிலேயே விட்டுவிட்டு சியுஸ்த்ரர் தன் அரண்மனைக்கு மீண்டார். தன்னையும் தன் குடியையும் காக்கும் தெய்வச்சொல்லுக்காக விழிநீருடன் வேண்டிக்கொண்டார். அவருடைய குடியால் வணங்கப்பட்ட அன்னை நின்மை அவரை ஏற்கவில்லை. அவருடைய நகர்கள்தோறும் ஆற்றல்வடிவெனக் குடிகொண்டிருந்த என்லில் அவரிடம் சொல்லாடவே இல்லை. அவர் ஏழு நாட்கள் நோன்பிருந்தார். பின் உயிரை மாய்ப்பதே உகந்தது என கடலுக்குச் சென்று பாறைமுனையிலிருந்து அலைகள்மேல் பாயமுற்பட்டார். அலைகளில் வெண்ணுரையாக கடலரசனாகிய என்கி எழுந்தான். நில் என்று கைகாட்டினான். “உன்னை காப்பேன்” என்றான்.

என்கி நிலத்தை அழிக்கும்பொருட்டு எழுந்த தன் பெருஞ்சினம் பற்றி சொன்னான். ஒவ்வாதன செய்து உவகையிலாடிய உயிர்க்குடியினரை அழித்து மற்றொன்றை அமைப்பதே தெய்வங்களின் இலக்கு என்றான். தன்னையும் தன் குடியினரையும் காக்கவேண்டும் என்று சியுஸ்த்ரர் மன்றாடினார். “எனில் அறிக, வரவிருப்பது பெருமழை! அது புவியை வெள்ளத்தால் மூடும். ஆகவே வாகைநெற்று வடிவில் மேலும் கீழும் வளைந்து முற்றிலும் மூடப்பட்ட படகொன்றை செய்க! அதில் நெறியமைந்தோர் என நீ எண்ணும் உன் குடியினர் நூற்றெண்மரை மட்டும் ஏற்றிக்கொள்க! நீர்மேல் நீங்கள் மிதந்துகிடப்பீர்கள். புயல்மழை ஓய்ந்தபின், பெருவெள்ளம் வடிந்தபின் உருவாகும் வண்டல்நிலத்தில் சென்றமைவீர்கள். அங்கே வேர்கொள்க!”

“நீங்கள் பேணும்பொருட்டு இந்த மீனை அளிக்கிறேன். இது என் ஆணை என்றே கொள்க! ஒன்றன்மேல் ஒன்று என மூன்று

விண்விற்கள் தோன்றும் நாள் வரை இது உங்களுடன் இருக்கும். அன்று விதைமுதிர்ந்த கனியென்றாகி இது என்னை நோக்கிவரும். அதுவரை இதை எந்நிலையிலும் பேணுக!” என்று என்கி கைவிரித்தான். அதில் ஒரு சின்னஞ்சிறு வெள்ளி மீன் இருந்தது. அந்த மீனை உள்ளங்கையில் ஏந்தி சியுஸ்த்ரர் தன் அரண்மனைக்கு மீண்டார். என்கிதேவனின் ஆணைப்படி அவர் படகொன்றை செய்தார். அவருடைய ஆட்சியின் கீழ் இருந்த நூற்றெட்டு சிற்பிகள் ஒரு வாகை நெற்றை கண்முன் வைத்து அதை நோக்கி நோக்கி அந்தப் படகை செய்தனர்.

அப்படகில் எறுவோரைத் தேர்வுசெய்ய அவர் ஒரு வழிமுறையை கண்டடைந்தார். “இந்நிலம் பழிசூழ்ந்தது ஆகிவிட்டது. என்கி என்னும் தெய்வம் புதுநிலம் ஒன்றை நமக்கு சொல்லளிக்கிறது. அங்கே சென்று குடியேற விழைபவர் மட்டும் இப்படகில் ஏறிக்கொள்க!” என்றார். “அங்கே நிலம் மட்டுமே நமக்கு அளிக்கப்படும். அன்னம் நம்மால் விளைவிக்கப்படவேண்டும். அங்கே பொன் இருக்காது. பொன்னில்லாத உலகத்தை விழைவோர் மட்டும் வருக!” பொன்னில்லாத உலகமா என்றனர் சிலர். பொன்னில்லை என்றால் விழைவை எப்படி அளப்பது என்றனர். விழைவு அளக்க அளக்கப்பெருகுவது, அளக்கப்படாத விழைவு சுருங்கிச் சுருங்கி மறையும் என்றனர். விழைவில்லாத உலகில் வெற்றிகள் இல்லை. வெற்றிகளில்லையேல் விளைவன பயனற்றவை. மண் வெறுமையானது. உறவுகள் உணர்வெழுச்சிகள் அற்றவை என்றனர்.

இறுதியில் நூற்றெட்டுபேர் மட்டுமே முன்வந்தனர். அவர்களில் எழுபதுபேர் பெண்கள். இருநதிநிலத்தில் வாழ்ந்த பல்லாயிரவர் அந்த அறிவிப்பை எள்ளி நகையாடினர். அப்படகில்

ஏறிக்கொண்டவர்களை நோக்கி கூச்சலிட்டனர். அவர்கள் மேல் மண்ணை அள்ளி வீசி இழிசொல் கூவினர். அவர்கள் படகில் ஏறி அமர்ந்துகொண்டு கண்களை மூடியபடி என்கியை வேண்டினர். நூற்றெட்டாவது மனிதர் ஏறிக்கொண்டதும் வானம் பிளந்து மின்னலெழுந்தது. இடியெழுந்து நகரின் அனைத்துக் கோட்டைகளையும் கூரைகளையும் விரிசலிடச் செய்தது. கடல் கவிழ்ந்ததுபோல் மழை பெய்யலாயிற்று. வெள்ளம் மாபெரும் நாகம்போல் பத்தி விரித்து எட்டு திசைகளிலிருந்தும் அணுகியது.

அவ்வெள்ளத்தில் சியுஸ்த்ரர் தன் குடியினருடன் ஊர்ந்த படகு மிதந்து சென்றது. படகின்மேல் மழை பொழிந்துகொண்டிருந்தது. எந்நாள் அது முடியுமென எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் முதலில் அஞ்சினர். பின்னர் பசியும் களைப்பும் கொண்டனர். கையிலிருந்த உணவை உண்டு முடித்தனர். அதன்பின் அவர்களிடம் உண்பதற்கு ஏதுமிருக்கவில்லை. சூழ்ந்திருந்த வெள்ளம் பாலைநிலம்போல் வெறுமைகொண்டிருந்தது. சியுஸ்த்ரரின் கையிலிருந்த சிறு தொட்டியின் நீரில் அந்த வெள்ளி மீன் இருந்தது. அது ஒவ்வொருநாளும் என வளர்ந்தது. ஒரு முழம் அளவுக்கு நீண்ட வெள்ளி உடல்கொண்டிருந்தது.

படகில் இருந்தவர்கள் பசித்து உயிர்தவித்தனர். அவர்கள் அதை நோக்கி ஏங்கினர். அந்த மீனை உண்ணலாம் என அவர்களில் ஒருவர் சொன்னார். “அது தூயமீன், தெய்வத்தால் அருளப்பட்டது, எத்துயரிலும் பேணப்பட வேண்டியது” என்றார் சியுஸ்த்ரர். “மறுகணமே உயிர்பிரியும் என்றால் அதைப் பேணி என்ன பயன்?” என்று அவர்களில் சிலர் கேட்டனர். “எந்நிலையிலும் பேணிக்கொள்ள வேண்டியவை என

சிலவாயினும் எஞ்சியிருப்பவர்களே பண்பட்டவர்கள் எனப்படுகின்றனர். தெய்வங்கள் அவர்களுக்கே கனிகின்றன. அவர்கள் பேணும் அந்த அரியவற்றின் வடிவிலேயே தெய்வங்கள் அவர்கள்முன் தோன்றுகின்றன" என்றார் சியுஸ்த்ரர்.

அவர்கள் ஒவ்வொருவராக பசியால் இறக்கத் தலைப்பட்டனர். சியுஸ்த்ரர் அந்த மீனை தன் வாளால் காத்து நின்றார். குழந்தைகள் இறக்கமுற்றபோது அன்னையர் வெறிகொண்டு அந்த மீனைக் கொன்று உணவாக்க எழுந்தனர். உற்றார், அணுக்கர் என ஒவ்வொருவராக இறக்க அதைக் காத்து நின்றவர்களின் உறுதி அகன்றது. சியுஸ்த்ரர் மாறா உறுதியுடன் அதைக் காத்து நின்றார். இறுதியில் அவரும் பதினாறு அகவைகொண்ட ஒரு பெண்ணும் மட்டுமே அந்தப் படகில் உயிருடன் எஞ்சினார்கள். அவள் பெயர் ஆன்னி. அவள் வாய்பேசவோ செவிகேட்கவோ திறனற்றவள். மொழியென எதையும் அறிந்திராதவள். ஆகவே அவள் பழியென்பதையும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் மட்டிலுமே அந்த மீனை உண்ண விழைவுகொள்ளாதவர்கள்.

மழையின் ஓசை நிலைத்துவிட்டதைக் கேட்டு சியுஸ்த்ரர் சாளரப்பாயை திறந்து நோக்கினார். வெளியே இளவெயில் எழுந்திருந்தது. வானம் முகில் விலகி ஒளிர்ந்தது. சியுஸ்த்ரர் சென்ற படகு ஒரு சேற்றுத்தீவின்மேல் சென்று முட்டி நின்றது. அவரும் ஆன்னியும் அங்கே இறங்கினார்கள். அந்நிலத்தில் அமர்ந்து அவர்கள் என்கியை வணங்கி நன்றிகூறினார்கள். அங்கே அவர்கள் காத்திருந்தபோது ஏழு நாட்களில் மண்பிளந்து செடிகள் மேலெழுந்தன. அவர்கள் தளிர்களை உண்டனர். பின்னர் இலைகளை உண்டனர். பின்னர் பிஞ்சுகளையும்

காய்களையும் கனிகளையும் உண்டனர். அவர்களின் உயிர் பெருகலாயிற்று.

ஏழாம் நாள் மூன்று அடுக்குகொண்ட மாபெரும் வானவில் ஒன்று நீர்வெளியின்மேல் வளைந்து நின்றது. அந்த மீன் அவர்களின் தொட்டியிலிருந்து வெளியேறி நீரை நோக்கி சென்றது. நீரை அது அடையும்வரை சியுஸ்த்ரர் அதற்கு வாளுடன் காவல் சென்றார். அது நீரில் இறங்குவதற்கு முன் திரும்பி தன் வாயில் இருந்து ஒரு பொன்னிறமான சுருளை உமிழ்ந்தது. அந்த மீனுக்குள் கருக்கொண்டு விளைந்த விதை அதுதான். அச்சுருளை அவர் எடுத்துக்கொண்டார். அதில் பதினெட்டு ஆணைகள் இருந்தன. அவை அவரிலிருந்து எழும் குடியை ஆளும் நெறிகள் என அவர் புரிந்துகொண்டார். அங்கே அவருடைய குடி பெருகியது. மீண்டும் குலங்களும் நகர்களும் அரசுகளும் உருவாகி வந்தன. பின்னால் பறந்த பறவைகள் தேன்சிட்டுகளாயின. சிறகு முளைத்த எலிகள் வெளவால்களாக ஆயின. பறக்கும் நாகங்கள் நீள்கழுத்துள்ள வாத்துகளாயின.

மீன்வாய்ப்பொன் என அழைக்கப்பட்ட அந்த ஆணை அக்குடிகளை ஆட்சி செய்தது. குடி பெருகப்பெருக அந்த ஆணைகளுக்கு துணையாணைகள் உருவாயின. அவை பொன்னேடுகளில் பொறிக்கப்பட்டு மீன்வடிவப்பேழைகளிலேயே எப்போதும் வைக்கப்பட்டன. அவற்றின் மாற்றுவடிவங்கள் புல்ஓலைகளிலும் களிமண் பலகைகளிலும் எழுதப்பட்டு படிக்கப்பட்டன. என்கியின் ஆலயங்களில் தேவனின் சிலையின் காலடியில் வெள்ளிமீன் பேழை பேணப்பட்டது. ஏதேனும் ஐயமெழுகையில் ஆலயப்பூசகர் முன்னிலையில் அந்தப் பேழை திறக்கப்பட்டு படிக்கப்பட்டது.

“காலம் செல்லச்செல்ல அந்தப் பேழையை படிக்கையில் சிக்கல்கள் எழுந்தன. அனைத்து வினாக்களுக்கும் அதில் விடைகள் இல்லை. ஆகவே அதிலுள்ள சொற்களை விதைகளெனக் கொண்டு பொருளை வளர்த்தெடுத்து முழுமைப்படுத்தும் அறிஞர்கள் தேவையாயினர். அவ்வாறுதான் எங்கள் குடிகள் உருவாயின. நாங்கள் இந்தப் பேழை திறக்கப்படும்போது ஒற்றை எண்ணிக்கையில் அந்த அவையிலமர்வோம். எங்களில் பெரும்பான்மையினர் சொல்வதே இந்நூலின் மெய்யென்று ஏற்கப்படும்” என்றார் தாட்டியஸ்.

யுதிஷ்டிரன் அந்த மீன்பேழையை கூர்ந்து நோக்கினார். அதன்மேல் இருந்த வெள்ளிச்செதில்கள் ஒளிகொண்டிருந்தன. அதன் வைர விழி கூர்ந்து நோக்கியதுபோல் சுடர்ந்தது. “அதைத் திறந்து எடுத்து படியுங்கள்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அதை முழுமையாகப் படிக்க எவராலும் இயலாது. ஏனென்றால் அதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் பிற அனைத்து எழுத்துக்களுடனும் தனித்தனியாகவும் ஒன்றாகவும் இணையும் தன்மை கொண்டது. அவ்வாறு அத்தனை எழுத்துக்களையும் கூட்டி அத்தனை சொற்களையும் படிக்கவேண்டும் என்றால் அது கடல் அலைகளை எண்ணுவதுபோல. அதற்கு முடிவில்லாத காலம் தேவைப்படும்” என்றார் தாட்டியஸ். “அதனிடம் நாம் ஒரு வினாவை கேட்கலாம். அதற்குரிய விடையை அச்சொற்களில் இருந்து கண்டடைவதற்கான வழிகள் உள்ளன. சுழற்சகடம் போன்றும் சுழி போன்றும் நாற்சதுரம் போன்றும் இணைமுக்கோணம் போன்றும் வெவ்வேறு வகையில் அமைந்த வடிவங்களுக்குள் அச்சொற்களை அமைத்து நாங்கள் அவ்விடையை கண்டடைவோம்.”

யுதிஷ்டிரன் அவர்களை நோக்கி தன் தாடியை உழிந்துகொண்டிருந்தார். பின்னர் “அறிஞர்களே, உங்கள் வருணனிடம் கேட்டுச் சொல்லுங்கள். எதன்பொருட்டு ஒருவன் தன் தந்தையையும் உடன்பிறந்தாரையும் கொல்லலாம்?” என்றார். யுயுத்ஸு திகைத்தான். யுதிஷ்டிரனின் முகத்தை நோக்கினான். அதில் உணர்ச்சியென ஏதும் வெளிப்படவில்லை. ஆனால் அவருடைய விரல்கள் மஞ்சத்தின் மரவுரியின் நூல்களை கையால் நெருடிக்கொண்டிருந்தன.

அவர்கள் வியப்பெதையும் காட்டவில்லை. தாட்டியஸ் மீன்பேழையை எடுத்து தன் மடியில் வைத்து மேற்குநோக்கி அமர்ந்தார். அதைத் திறந்து அதற்குள் இருந்து பொற்சுவடிகளை வெளியே எடுத்தார். வலக்கையால் தன் ஆடையிலிருந்து சுண்ணக்கட்டி ஒன்றை எடுத்து தரையில் சுழல்வட்டம் ஒன்றை வரைந்தார். அதை குறுக்கும் நெடுக்குமாக கோடுகளால் வெட்டி நூற்றெட்டு களங்களை உருவாக்கினார். இடக்கையால் அந்தச் சுவடியின் எழுத்துக்களை வருடி வருடிப் படித்தார். அவ்வெழுத்துக்களை அக்களத்தில் எழுதினார். பின்னர் சுவடியை அடுக்கி பேழைக்குள் வைத்து மூடி அப்பால் வைத்தார். அவ்வெழுத்துக்களை உற்று நோக்கி அவற்றை சிறுகோடுகளால் ஒன்றுடன் ஒன்று இணைக்கத் தொடங்கினார்.

முதல் தோமர் மேற்குநோக்கி அமர்ந்து பேழையை எடுத்து அவ்வண்ணமே தன் மடியில் வைத்து திறந்து சுவடிகளைப் பிரித்து இடக்கையால் வருடி வலக்கையால் வரைந்த சகடவடிவக் களத்தில் கட்டங்களுக்குள் எழுத்துக்களை எழுதினார். இளைய தோமர் அதே சகடவடிவக் களத்தை எதிர்திசையில் வரைந்தார். இசாயர் இணைமுக்கோணக் களம் வரைந்தார். சபூரர் சதுரக்களம். சார்பெல் அறுகோணம். அடாமி

எண்கோணம். அவர்களின் உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. விரல்கள் எழுத்துக்களை சுட்டிச் சுட்டிச் சென்றன. இணைத்தன, பிரித்தன. சொற்கள் தங்கள் வழியில் இணைவுகொண்டன. பிரிந்து மாற்றுருக்கொண்டன. அப்பால் அந்த மீன்பேழை நீரிலிருந்து சற்றுமுன் கரையேறியதென திகைத்த கண்களுடன் நோக்கி அமைந்திருந்தது.

தாட்டியஸ் பெருமூச்சுவிட்டார். “முடிந்தது, அரசே” என்றார். பிறரும் “ஆம், முடிந்தது” என்றனர். யுதிஷ்டிரன் “அறிஞர்களே, நீங்கள் உங்கள் முடிவுகளை ஓலைகளில் எழுதுங்கள்” என்றார். யுயுத்ஸு ஓலைகளையும் எழுத்தாணிகளையும் அளிக்க அவர்கள் வாங்கிக்கொண்டார்கள். அவர்கள் அதில் எழுதும் ஓசை அந்த அமைதியில் உடலில் ஊர்வதுபோலக் கேட்டது. “ஓலைகளை இளையோன் கையில் அளியுங்கள்” என்றார் யுதிஷ்டிரன். அவர்கள் அளித்த ஓலைகளை யுயுத்ஸு பெற்றுக்கொண்டான்.

“இளையோனே, அவற்றைப் படி” என்றார் யுதிஷ்டிரன். அவன் அனைத்தையும் படித்தான். “சொல், அவற்றின் முடிவுகள் அனைத்தும் ஒன்றென்றே உள்ளனவா?” என்று யுதிஷ்டிரன் கேட்டார். “இல்லை, மூத்தவரே” என்றான் யுயுத்ஸு. “எனில் அந்த ஓலைகளை எரித்துவிடு” என்றார் யுதிஷ்டிரன். கைகூப்பி வணங்கி “அறிஞர்களே, இந்நிலத்திற்கு இன்று மேலும் நெறிகள் தேவையில்லை” என்றார். அவர்கள் திகைப்புடன் எழுந்துகொண்டனர். யுதிஷ்டிரன் எழுந்து நின்று வணங்க அவர்கள் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். யுதிஷ்டிரன் களைப்புடன் மீண்டும் மஞ்சத்தில் படுத்துக்கொண்டு “அந்த ஓலைகளை கொண்டுசென்று தீயிலிடு”என்றார்.

# களிற்றியானை நிரை - 59

## பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 9

சகதேவனின் படைகள் நகரை அணுகிவிட்டதை அறிவிக்கும் முரசொலிகள் எழுந்ததும் கோட்டைமுகப்பின் சிற்றறைக்குள் அமர்ந்திருந்த நகுலன் எழுந்து தன் உடைவாளை எடுத்து இடையில் பொருத்திக்கொண்டு "செல்வோம்" என்று யுயுத்ஸுவிடம் சொன்னான். யுயுத்ஸு அருகே சுவர் சாய்ந்து நின்றிருந்தான். தலைவணங்கி சொல்லின்றி அவனுடன் நடந்தான். அவர்கள் தெற்குக் கோட்டைமுகப்பை சென்றடைந்தனர். அணிப்படையினரும், மங்கலச் சேடியரும், இசைச்சூதரும், வேதியரும் முகப்பில் நிரைகொண்டு சகதேவனை எதிர்நோக்கி நின்றிருந்தனர். அவர்களுக்கு முன்னால் நகுலன் சென்று நின்றான். வலக்கை அருகே யுயுத்ஸு நின்றான்.

நகுலன் "தென்னகத்தில் இருந்து அவன் கொண்டு வருவனவற்றில் மிக மதிப்பு வாய்ந்தது உடன் திரட்டி வரும் படையே. சிறு படையுடன் சென்றவன் பதினெட்டு மடங்கு பெரிய படையுடன் வருகிறான்" என்றான். "ஆம், செல்லுமிடமெங்கும் அஸ்தினபுரியின் படையில் இணைவதற்கு மறவர் திரண்டு வந்தனர் என்று அறிந்தேன்" என்றான் யுயுத்ஸு. "அவர்கள் வெற்றியை விரும்புபவர்கள்" என்று நகுலன் சொன்னான். "அதைவிட ஒரு செய்தி நிலமெங்கும் சென்று சேர்ந்திருக்கிறது. இங்கு புது வேதமொன்று எழுந்துள்ளது, அது குடிப்பிறப்பை ஒழித்து இயல்பையும்

செயல்திறனையும் மட்டுமே கருத்தில் கொள்கிறது என்று. இளைய யாதவரின் சொல் என 'நான்கு வர்ணங்களும் எனது இயற்றல், செயலும் இயல்பும் சார்ந்து' எனும் இரண்டு வரியை இன்று பாரதவர்ஷத்தில் அறியாதவரே இல்லை என்று சொன்னார்கள்" என்றான் யுயுத்ஸு.

நகுலன் "ஆம், அவர்கள் அனைவரும் கனவு கண்டிருந்த புத்துலகம். பல பல தலைமுறைகளுக்கு முன்னரே அவர்களின் மூதாதையரால் காணப்பட்டது. விழிநீருடன், கனவின் தவிப்புடன், துயருடன் மீள மீள சொல்லப்பட்ட நுண்சொல் அது. எங்கோ அது காலத்தில் இழைக்கப்பட்டது, இதோ பேருருவன் ஒருவனின் சொல்லில் எழுந்து வந்துள்ளது" என்றான். பெருமூச்சுவிட்டு "நாம் நம் கண்முன் இதைக் காணும் பேறுபெற்றோம். யுகமாறுதலை காணாதவர்களுக்கு பதிந்த வாழ்க்கையின் அமைதி கிடைக்கிறது, காண்பவர்கள் பொருளுடைய வாழ்க்கையை அழுதும் சிரித்தும் கண்டடைகிறார்கள்" என்றான். யுயுத்ஸு மெய்ப்பு கொண்டான். பின்னர் அகத்தே ஒரு வெற்றுச் சிரிப்பை அடைந்தான். இத்தகைய சொற்களை சொல்லிச் சொல்லி கடக்கவேண்டியவைதான் எவ்வளவு!

பேச்சை மாற்றும் பொருட்டு யுயுத்ஸு "இப்போது படையென வருபவர்கள் பயின்ற போர்வீரர்கள்தானா?" என்று கேட்டான். "போர்வீரனுக்குரிய முதன்மைப் பயிற்சி என்பது தன் தனித்தன்மையை இழந்து படைத்திரளின் பகுதியென்றாவதே. அது அவர்களிடம் இருக்கிறது. அவர்கள் அனைவரையும் இணைக்கும் ஒற்றைக்கனவு. அதுவே அவர்களுக்கு போதுமானது. அது இன்னும் பல தலைமுறைகளுக்கு இங்கே மாண்பையும் வெற்றியையும் அளிக்கும்" என்று நகுலன்

சொன்னான். “என் படைகளில் சேர்பவர்களை நான் கூர்ந்து பார்ப்பதுண்டு. ஐயமின்றி அளிக்க, எச்சமின்றி கலக்க அவர்களால் இயல்கிறது.” யுயுத்ஸு அதைத் தொடர்ந்த சொற்களில் “தயக்கமின்றி உயிர்விடவும்” என்றான். தன் சொல் எழுந்துவிட்டதோ என அஞ்சினான். என்றோ ஒருநாள் உள்ளம் சொல்லென எழவிருக்கிறது. அன்று அனைத்தையும் இழக்கவிருக்கிறோம்.

கோட்டையிலிருந்து முரசுகள் பேரொலி எழுப்பத் தொடங்கின. மங்கல வாத்தியங்களை இசைத்தபடி இசைச்சூதர் சீரடி வைத்து முன் சென்றனர். அவர்களுக்கு முன்னால் அணிச்சேடியர். அவர்களுக்கு முன்னால் வேதியர். அவர்களுக்கு எதிரே கவச உடையணிந்த சகதேவனின் கொடிமுதல்வன் அஸ்தினபுரியின் அமுதகலக் கொடியுடன் முதலில் வந்தான். சகதேவனின் அன்னப்பறவைக் கொடியுடன் அடுத்த வீரன் அவனைத் தொடர்ந்து வந்தான். தொடர்ந்து இசைச்சூதர்கள் ஏறிய திறந்த தட்டுள்ள தேர் மங்கல இசைமுழக்கமிட்டபடி வந்தது. முரசுகளின் முழக்கமும் படைவீரர்களின் ஆர்ப்பொலியும் அணுக கோட்டையிலிருந்து முரசுகளும் கொம்புகளும் இணைந்துகொண்டன. இரு யானைகள் சந்தித்துக்கொண்டதுபோல என யுயுத்ஸு எண்ணிக்கொண்டான்.

சகதேவனின் தேரைக் கண்டதும் நகுலன் அறியாது யுயுத்ஸுவின் கையைப்பற்றி “அவனைப் பார்த்து நெடுநாளாகிறது. அவனைப் பார்க்காத தவிப்பு என்னுள் எவ்வளவு இருந்ததென்று இப்போது உணர்கிறேன்” என்றான். அவன் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தன. யுயுத்ஸு அதுவரை தன்னுள் இருந்த ஆர்வம் அனைத்தும் வடிந்து பொருளற்ற

சோர்வொன்று திரள்வது போலுணர்ந்தான். அந்தக் கையை நகுலன் தன் உடலில் இருந்து எடுத்துவிட வேண்டுமென்று விரும்பினான். நகுலன் அவன் கையை உலுக்கியபடி "இனியவன். அவன் எப்போதும் நோக்குக்கு அழகியவன். உடனிருக்கையில் உளம் நிறையச்செய்பவன். இப்புவியில் எனக்கு முதன்மையானது பிறிதொன்றில்லை" என்றான்.

"அவர் தங்கள் மறுபாதி" என்று யுயுத்ஸு சொன்னான். "ஆம், மெய்யாகவே உணர்வும் உடலும் அவனிலேயே பாதி இருக்கின்றன. அவனில்லாதபோது நான் உணரும் தனிமையை எவரும் உணர்ந்துவிட இயலாது" என்று நகுலன் சொன்னான். பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தபோது அவன் முகத்தில் தெரிந்த உணர்வுகள் என்ன என்பதை யுயுத்ஸுவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது துயர் போலவும், தவிப்பு போலவும், அவ்வப்போது எழுந்து அணையும் சீற்றம் போலவும் இருந்தது. யுயுத்ஸு "அவரும் அவ்வாறே உணர்வார்" என்றான். அது பொருளில்லா வெற்று முகமகிழ்ச் சொல். ஆனால் நகுலன் மேலும் உளமெழுந்தான். யுயுத்ஸுவின் கையை வலுவாக உலுக்கியபடி "ஆம், அவனும் ஒவ்வொருநாளும் என்னையே எண்ணிக்கொண்டிருப்பான். பிறிதொன்றை எண்ணியிருக்க மாட்டான்... மெய்யாகவே அவன் என்னுடன் மட்டுமே நிறைவுடனிருப்பான்" என்றான்.

நகுலனின் தொடுகை யுயுத்ஸுவை மேலும் ஒவ்வாமை கொள்ளச்செய்தது. அவன் தன் உடலை எவரும் தொடுவதை விரும்பியதில்லை. சிற்றகவையிலிருந்தே அவனுள் அமைந்த ஒவ்வாமை அது. அவனை திருதராஷ்டிரர் அரிதாகவே தொட்டார். குழவியாக அவனை பலரும் தொடுவதுண்டு. அதை அன்று அவன் விரும்பியிருந்தான். பின்னர் உணர்ந்தான்,

அரசமைந்தரை அவ்வாறு எவரும் தொட்டுக் கொஞ்சுவதில்லை என்று. தன்னை மட்டும் ஏன் கொஞ்சுகிறார்கள் என அவன் நோக்கலானான். அவர்கள் தன்னை வளர்ப்பு விலங்கை வருடிவிளையாடும் உளநிலையுடன் தொடுகிறார்கள் என உணர்ந்தான். அவன் தலையில் அவர்கள் கைவைத்தனர். தோளையும் முதுகையும் தட்டினர். அதன்பின் அவன் அவர்களின் தொடுகையை தவிர்க்கும்பொருட்டு அகன்று நின்றான். கைதொடு தொலைவை முன்னரே கணித்துவிடுவான்.

ஆனால் துரியோதனன் எப்போதுமே அவனை கையைப் பிடித்து இழுத்து அணைத்துக்கொள்வான். மதுமயக்கில் இருந்தால் தோள்மேல் தூக்கிச் சுழற்றுவான். வீசி எறிந்து பிடிப்பான். அவன் வளர்ந்து இளைஞனாகிய பின்னரும்கூட அவனை முத்தமிடுவான். மறுஎண்ணமின்றி அவன் தன் உடலை துரியோதனனிடம் அளித்தான். அவனுடைய தொடுகைக்காக ஏங்கினான். கனவுகளில் அவனுடைய எடைமிக்க கைகள் வந்து சூழ்வதை கண்டான். அவனுடைய அணைப்புக்காகவே அவர்களின் கள்விளையாட்டுகளின்போது சென்று அமர்ந்துகொண்டான். துரியோதனனின் முகம் நினைவில் எழ அவன் மெய்ப்பு கொண்டான். இயல்பாக என கையால் நகுலனின் கையை விலக்கிவிட்டு ஒரு படைவீரனுக்கு ஆணையிடுவதுபோல சற்று விலகிநின்றான்.

சகதேவனின் வெள்ளிப்பட்டைத் தேர் அணுகி வந்து விரைவழிந்து நிற்க வேதியர் பொற்கலங்களில் கங்கைநீருடன் காத்து நின்றனர். தேரின் கதவு திறந்து சகதேவன் கூப்பிய கைகளுடன் வெளியே வந்து தன் கால்களை மண்மீது வைத்தான். வேதியர் கங்கைநீர் தெளித்து, அரிமலர் தூவி,

வேதம் ஓதி அவனை வாழ்த்தினர். வணங்கிய கைகளுடன் அவர்களின் வாழ்த்தை ஏற்று முன்னால் வந்தபோது அணிச்சேடியர் தாலமுழிந்தனர். மங்கலஇசை முழங்கியது. நகுலன் இரு கைகளையும் விரித்தபடி விரைந்து சென்று சகதேவனை அள்ளி நெஞ்சோடு அணைத்துக்கொண்டான். இருவரும் இறுகத்தழுவி அச்சூழலிலேயே தங்களை முற்றிலும் மறந்து ஓருருவாகி நின்றனர். சற்றே விலக ஒருவர் முற்பட இன்னொருவர் மீண்டும் இறுகத்தழுவிக் கொண்டனர்.

யுயுத்ஸு அருகே சென்று நகுலனின் தோளைத் தட்டி "செல்வோம். அணிநிரை ஒருங்கியிருக்கிறது" என்றான். "ஆம்" என்றபடி நகுலன் விலகிக்கொண்டான். பின்னர் "தோள் பெருத்துள்ளாய்" என்று சகதேவனிடம் சிரித்தபடி சொன்னான். உரக்க நகைத்தபடி மீண்டும் அள்ளி தன் நெஞ்சோடு இறுக்கிக்கொண்டான். அவர்கள் கண்ணீர் கசிய நகைத்தனர். யுயுத்ஸு அவர்கள் இருவரும் பிரிவதற்காக பொறுமையிழந்து காத்திருந்தான். அவர்கள் பிரியக் காணாதபோது மீண்டும் சகதேவனின் தோளில் தட்டி "கிளம்புவோம், அரசே" என்றான். "ஆம்" என்றபடி சகதேவன் தன் தேரில் ஏறிக்கொண்டான். நகுலனும் அதே தேரில் ஏறிக்கொண்டான். "தங்களுக்கு வேறு தேர்..." என்று யுயுத்ஸு சொல்ல "இதே தேரில்தான் நான் வரப்போகிறேன். என்னால் அவனை இனி பிரிந்திருக்க இயலாது" என்று நகுலன் சொன்னான். "எங்களை இருவராகக் காணவே எவரும் விழைவார்கள்" என்றான் சகதேவன். இருவரும் தேரில் ஏறிக்கொள்ள அணித்தேர் முன்னால் சென்றது. யுயுத்ஸு "நானும் இத்தேரிலேயே ஏறிக்கொள்கிறேன்" என்றபடி பின்னால் சென்று ஏவலர் அமரும் சிறு பீடத்தில் தொற்றிக்கொண்டு அமர்ந்தான்.

நகுலனும் சகதேவனும் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு தோள்களை ஒட்டி அமர்ந்து சாலையின் இருபுறத்தையும் பார்த்து தலைவணங்கி அங்கிருந்து எழுந்த பெருங்கூச்சலையும் மலர்ப்பொழிவையும் ஏற்றுக்கொண்டு அஸ்தினபுரியின் தெருக்களினூடாகச் சென்றார்கள். யுயுத்ஸு இருபுறமும் எழுந்து எழுந்து அமைந்த மக்கள்திரளை பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள் அந்நாட்களைக் கொண்டாடும் மனநிலைக்கு வந்துவிட்டார்கள். இனி அங்கு எவர் வந்தாலும் அந்தக் கொந்தளிப்பு பெருகியே செல்லும். மேலும் மேலும் எனக் கேட்கும். எங்கோ ஒரு புள்ளியில் போதுமென்றாகும். ஒரு துளிகூட தேவையில்லை என்றாகும். அமுது நஞ்சாகும். அனைத்து விழவுகளும் கொண்டாட்டங்களும் அவ்வாறுதான்.

அது எந்தப் புள்ளி? ஒருவேளை அர்ஜுனன் நகர்புகுவதற்குள்ளாகவே அவ்வாறு நிகழ்ந்ததென்றால் என்ன செய்ய இயலும்? அவ்வாறு நிகழாது. அதற்குப் பின்னர்தான் ராஜசூய அறிவிப்பு வரும். யுதிஷ்டிரன் தன் கருவூலம் அனைத்தையும் அள்ளி வழங்கி கையொழிவார். இவ்வளவு கொந்தளிப்பும் அதன் பொருட்டே. இங்கு நிரை நிரையென வந்து நிறையும் வண்டிகளில் இருக்கும் பொருட்குவை அனைத்தும் ராஜசூயத்தின்போது கொடையென தங்களுக்கு அளிக்கப்படும் என்று அறிந்தமையே இவர்களை இவ்வாறு உவகைவெறி கொள்ளச் செய்கிறது.

அவன் அந்த முகங்களை பார்த்துக்கொண்டே சென்றான். பொருள் அளிக்கப்படவில்லை எனில் இவர்கள் இந்த உவகையை அடையக்கூடுமா? வேறு எதன்பொருட்டேனும்? ஒரு மெய்யறிதலின் பொருட்டு? முழு விடுதலையின் பொருட்டு?

தெய்வமே பொருள் வடிவென இங்கு தோன்றவேண்டியிருக்கிறது. கேட்டதை அளிக்கும் கைகளுடன், அளித்தவற்றைக் காக்கும் படைக்கலத்துடன். அவ்வாறன்றி எதையேனும் எப்போதேனும் அரிதென, பெரிதென இவர்கள் உணரக்கூடுமா? பொருள் என இவர்கள் எண்ணுவது இவ்வுலகு. இவ்வுலகிலுள்ளவை அனைத்தும் கொண்டிருக்கும் பயன்மதிப்பே பொன்னென்று, மணியென்று மாறி கருவூலங்களில் குவிகிறது. இப்பொன் ஒருவருக்கு களியாட்டு, வேறொருவருக்கு குலமேன்மை, பிறிதொருவருக்கு மைந்தர்சிறப்பு, களிமகன்களுக்கு இன்று, குடித்தலைவர்களுக்கு நாளை. ஒவ்வொருவருக்கும் ஒன்று. அதுவன்றி பிறிதேதும் எவருக்கும் தேவையில்லை.

ஆனால் எத்தனை நடிப்புகள்! மெய்மையென்றும் விடுதலை என்றும் எத்தனை தன்னேய்ப்புகள்! அத்தனை நடிப்புகளினூடாக மறைத்துக்கொண்டால் ஒழிய பொருள் அளிக்கும் உவகையில் நாணமின்றி மானுடரால் திளைக்க முடியாது போலும். நான் மட்டும் ஏன் இவ்வளவு கசந்திருக்கிறேன்? என்னுள் ஓடும் இக்கசப்பு என் முகத்தில் தெரிகிறதா என்ன? தன் முகம் தெரியலாகாது என அவன் தலைகுனிந்து அமர்ந்திருந்தான்.

தேர் அரண்மனைமுகப்பை சென்றடைந்தது. அங்கு சுரேசர் துணையமைச்சர்களுடன் காத்திருந்தார். அவர்கள் இருவரும் தேரிலிருந்து இறங்கியதும் சுரேசர் நகைத்தபடி அருகே வந்து “இதைத்தான் நான் எதிர்பார்த்தேன், இருவரும் ஒரே தேரில் வரவேண்டும் என்று கூறலாம் என எண்ணினேன். இயல்பாக அது நிகழட்டும் என்று தோன்றியது” என்றார். நகுலன் “இனி எப்போதும் அவ்வாறே எங்களை காண்பீர்கள்,

அமைச்சரே” என்றான். சகதேவனை முறைமைச்சொல் கூறி அவர் வரவேற்றார். “தங்களைக் காண அரசர் விழைவுகொண்டிருக்கிறார். வெற்றி என்னும் சொல்லின் விழிவடிவாக எழுந்தருளியிருக்கிறீர்கள்.”

முறைமைகள் முடிந்து சுரேசர் அவர்களை கூடத்திற்கு அழைத்துச் சென்றார். நகுலன் அரண்மனையை சுட்டிக்காட்டி “நீ என்ன உணர்கிறாய்?” என்று கேட்டான். சகதேவன் சுற்றி நோக்கிய பின் “எதையுமே உணரவில்லையே!” என்றான். மீண்டும் நோக்கியபின் “மீண்டு வந்ததன் நிறைவும் ஓய்வுணர்வும் அன்றி ஒன்றுமில்லை” என்றான். நகுலன் “மாறுதல் எதையும் நீ நோக்கவில்லையா?” என்றான். சகதேவன் மீண்டும் அரண்மனையையும் சுவர்களையும் படிகளையும் பார்த்துவிட்டு “இல்லையே” என்றான். “நமது கோட்டையைப் பார்த்தபோது என்ன வேறுபாட்டை நீ உணர்ந்தாய்?” என்றான் நகுலன். சகதேவன் “கோட்டை வழக்கம் போலவே இருந்தது. அதே கோட்டைச்சுவர், காவல் மாடங்கள், அதே போன்ற காவலர்நிரை” என்றான்.

“செல்லும்போது இருந்ததைவிட எந்த மாறுதலையும் நீ காணவில்லையா?” என்றான் நகுலன். “இல்லை. என்ன மாறுதல் செய்யப்பட்டுள்ளது?” என்றான் சகதேவன். “நன்று. மாறுதல்களை நீ பார்க்கவில்லை எனில் அதை தெரிவிக்க வேண்டியதில்லை” என்றான் நகுலன். ஐயத்துடன் திரும்பி யுயுத்ஸுவைப் பார்த்தபின் சகதேவன் சுரேசரிடம் “என்ன மாறுதல்கள்?” என்றான். சுரேசர் புன்னகைத்தார். அவன் மீண்டும் திரும்பி சுவரோவியங்களைப் பார்த்ததும் “ஆம், சுவரோவியங்கள் மாறியிருக்கின்றன” என்றான். மீண்டும்

மறுபக்கச் சுவரோவியத்தை பார்த்து “அனைத்துச் சுவரோவியங்களையும் மாற்றிவிட்டீர்களா என்ன?” என்றான்.

“ஆம்” என்று சுரேசர் சொன்னார். “அரண்மனை பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. சற்று புதியது போலிருக்கிறது” என்று சகதேவன் சொன்னான். நகுலன் “கோட்டை வண்ணம் மாறியிருக்கிறது…” என்றான். “ஆம், கோட்டை வெண்ணிறமாக மாறியிருக்கிறது” என்றான் சகதேவன். “கோட்டை முன் இருக்கும் ஆலயங்களைப் பார்த்தாய் அல்லவா?” என்று நகுலன் கேட்டதும் சகதேவன் “ஆம், அவை கைவிடுபடைகளின் மேடைகள் அல்லவா?” என்றான். ஆனால் அவனில் வியப்பென ஏதும் வெளிப்படவில்லை “இந்நகரில் ஆலயங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. செடிகள் முளைப்பதுபோல” என்றான். “நான் பொதுவாக ஆலயங்களை நோக்குவதே இல்லை.”

“இங்கே அனைத்து மாளிகைகளும் மாற்றப்பட்டுள்ளன. இந்நகரே மீண்டும் கட்டப்பட்டதுபோல் பொலிவு கொண்டிருக்கிறது. நீ அவற்றை காணவில்லை என்பது விந்தைதான்” என்றான் நகுலன். சகதேவன் “நான் எனக்குத் தெரிந்தவற்றை மட்டுமே தொட்டுத் தொட்டு பார்த்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொன்றும் இங்குள்ளது இங்குள்ளது என்று என் உள்ளம் மகிழ்ந்துகொண்டிருந்தது” என்றான். நகுலன் “நான் வந்தபோது ஒவ்வொன்றும் மாறியிருப்பதையே கண்டேன். இங்கில்லை இங்கில்லை என்று உளச்சோர்வு கொண்டேன்” என்றான். சுரேசர் சிரித்தபடி “நன்று, இருவரும் இணைந்தால் வட்டம் முழுமையாகிறது” என்றார்.

யுயுத்ஸு “அரசே, மூத்தவருக்கு அளிப்பதற்கென்று தாங்கள் தங்கள் தனிக்கொடையாக கொண்டுவந்தது என்ன?” என்றான்.

சகதேவன் திரும்பிப்பார்த்து “ஏன்?” என்றான். சுரேசர் அவ்வினாவின் நோக்கத்தை உணர்ந்து “தங்கள் மூத்தவர் உடல்நலமின்றி இருக்கிறார். நேற்று சற்றே உடல்நிலை மேம்பட்டது. இன்று மீண்டும் சோர்ந்துவிட்டார்” என்றார். “என்ன ஆயிற்று?” என்றான் சகதேவன். “அவர் உடலுக்கு பெரிதாக ஒன்றுமில்லை. உள்ளம் சோர்ந்திருக்கிறது என்று மருத்துவர்கள் கூறினார்கள். அது உள்ளிருந்து எழும் விடாய் போன்ற ஒன்று. அதை புறத்திருந்து நிகர்க்கும் ஒன்றே தணிக்க முடியும். ஆகவே புறம்நோக்கி அவர் உள்ளம் அலைந்துகொண்டிருக்கிறது” என்றார் சுரேசர்.

சகதேவன் குழம்பியவனாக நகுலனை நோக்கினான். நகுலன் “அவர் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறார்” என்றான். சுரேசர் “இந்நாட்களில் அவர் தன் முழு உயிராலும் உடன்பிறந்தார் திரும்பிவரும்போது நிகழ்வனவற்றை எண்ணி அகம் விரிந்துகொண்டிருந்தார். இப்போது அதிலிருக்கும் விடாய் அதனுடன் இணைந்ததே என்று தோன்றியது. இளையோர் கொண்டுவரும் பரிசில்களால் அவர் உளம் நிறையக்கூடுமென்று எண்ணினோம்” என்றார். சகதேவன் “அவருக்கு அரிய பரிசொன்றை நான் கொண்டுவந்தேன்” என்றான். எழுந்துகொண்டு “நான் தென்னிலத்தில் படைகொண்டு செல்கையில் அரியன என்று உணரக்கூடிய அனைத்தையும் கொண்டுவருக என்று ஆணையிட்டிருந்தேன். பல பொருட்கள் வந்தன. அவற்றில் வெண்ணிறப் புலிக்குருளையும் வெண்ணிற யானைக்கன்றும்கூட உண்டு. விந்தையான பட்டுகள், முத்துச்சரம், சந்தனச் செதுக்கு சிலைகள். அவற்றில் ஒன்று இது” என்றபடி சென்றான்.

தன்னுடன் கொண்டுவந்திருந்த மரப்பேழை ஒன்றை திறந்தபடி "இதை தென்னிலத்தில் ஓர் எளிய மூதன்னை எனக்கு அளித்தார். நான் படைகொண்டு சென்றுகொண்டிருக்கையில் அவர் என்னைக் காண விழைவதாக கூறக் கேட்டு இரு படைவீரர்கள் அழைத்து வந்தார்கள். முதுமகள், முலைகள் தொங்கி வயிறு தொட்டன. என்னை வணங்கி நான் தொல்முனிவர் அகத்தியரின் மாணவ மரபில் வந்த பேறறிஞர் பூராடனாரின் மைந்தர் சீராளரின் துணைவி. அவர் உயிர்நீத்து நெடுநாளாகிறது. என் கடன் ஒன்றை ஆற்றும்பொருட்டு உயிர்வாழ்கிறேன். அதன் பொருட்டே உங்களை பார்க்கவந்தேன் என்றார். கூறுக அன்னையே என்றேன். என் கொழுநர் மண்மறைகையில் என்னிடம் ஒரு பொருளைக் கொடுத்து அதை அவருடைய தந்தை அளித்ததாகச் சொன்னார். அது அவருக்கு அவருடைய தந்தை அளித்தது என்றார். அதை கொண்டுவந்தேன் என்றார்."

"பேரறிஞனும் அறத்தில் நிலைகொள்பவனுமாகிய ஒருவனிடம் இதை அளிக்கவேண்டும் என்று என் கணவர் சொன்னார். உகந்தவர்களைத் தேடி இதுநாள்வரை வாழ்ந்தேன். என்னிடம் யுதிஷ்டிரனைப் பற்றி கூறினார்கள். அவரே தகுதியுடையவர் என்னும் கணியர்களின் வழிகாட்டலால் இங்கு வந்தேன் என்று அம்முதுமகள் சொன்னார்" என்றான் சகதேவன். "என்ன அது?" என்று சுரேசர் கேட்டார். "இது விந்தையானதோர் உயிர்... பல நூறாண்டுகள் உயிர் வாழ்வது" என்று சொல்லி உள்ளிருந்து பிறிதொரு வெண்கலப் பேழையை சகதேவன் எடுத்தான். யுயுத்ஸு அருகே சென்று நோக்கினான்.

சகதேவன் அதை மெல்ல திறந்தபோது உள்ளே கையளவேயான ஒரு சிப்பி இருந்ததை அவர்கள் கண்டனர்.

“முத்துச்சிப்பி” என்றபடி நகுலன் அருகணைந்து குனிந்து பார்த்தான். “ஆம், இது தொன்மையான முத்துச்சிப்பி. நன்னீரில் வாழ்கிறது. ஈரமண்ணிலும் வாழும். இது அரிதினும் அரிது என்கிறார்கள்” என்றான் சகதேவன். “இது பேரறத்தான் ஒருவனின் கை தொடுகையில், அவனுடைய ஒரு சொல்லை வாய்திறந்து பெற்றுக்கொண்டு கருக்கொள்ளும். முத்து விளைந்ததும் தானாகவே திறந்து அதை வெளிவிடும். அந்த முத்து அவனுக்கு மெய்மையை உணர்த்தும். அப்போது அவனுக்காக விண்ணிலிருந்து தேவர்கள் மணித்தேருடன் இறங்கி வருவார்கள்” என்று சகதேவன் சொன்னான். “ஆம், அரிய பரிசுதான்” என்று சொன்ன சுரேசர் சகதேவனை நோக்கி “ஒருவேளை யுதிஷ்டிரன் இதனூடாக மீள முடியும்” என்றார்.

நகுலன் ஐயத்துடன் அதை பார்த்து “அறத்தான் என எவ்வண்ணம் ஒருவரை இது தெரிவுசெய்கிறது?” என்றான். “அதை நானும் அம்மூதாட்டியிடம் கேட்டேன். இதை தொடுபவர் பழிகொண்டவர் எனில், அவருக்கு இப்பிறவியில் மீட்பில்லையெனில் அவர் தொடுகையில் கைகளில் நீலக்கறை படியும் என்றார். நான் தொட்டேன் என் கையில் அந்த நீலக்கறை இப்போதும் உள்ளது” என்று விரலை காட்டினான். நகுலன் “இது எவரோ நம்முடன் ஆடும் ஒரு விளையாட்டாக இருக்கலாம்” என்றபடி கைநீட்டி அதன் ஓட்டுப்பரப்பை தொட்டான். கையை எடுத்துப் பார்த்தான். அவன் கையில் நீலக்கறை படிந்திருந்தது. அதை தன் மேலாடையில் உரசினான். பின் பீடத்தின் பரப்பில் தேய்த்தான். அது எங்கும் படியவில்லை. அவன் கையிலேயே தங்கிவிட்டிருந்தது.

“அது நாளடைவில் மறைகிறது, மற்றபடி எந்த உப்பாலும் காரத்தாலும் அதை கழுவ இயலவில்லை” என்று சகதேவன்

சொன்னான். நகுலன் சுரேசரிடம் சிரித்தபடி “தொட்டுப் பாருங்கள், அமைச்சரே” என்றான். சுரேசர் மேலும் நகைத்து “அதை தொட்டுப் பார்க்கலாகாது என்று அறியும் அளவிற்கு மெய்யறிதல் எனக்கு என் தந்தையால் அளிக்கப்பட்டிருக்கிறது” என்றார். பின்னர் “இதை அரசருக்கு அளிப்போம். இதை அவர் தொடும்போது அவர் மகிழ்வார்” என்றார். யுயுத்ஸு “ஒருவேளை அவர் கைகளிலும் இந்தக் கறை படியுமென்றால் எஞ்சியிருக்கும் தன்னம்பிக்கையையும் இழந்து அவர் மேலும் பெரும் சோர்வில் விழுந்துவிடக்கூடும்” என்றான். நகுலன் “ஆம், நானும் அவ்வாறே எண்ணுகிறேன். அதுவே நிகழக்கூடும்” என்றான். “இது ஒருவேளை அதன் பொருட்டே எவராலோ அளிக்கப்பட்டதாக இருக்கலாம். இதை தொடுபவர் ஒவ்வொருவரும் தங்களை பழிசேர்ந்தவர்களாகவும் மீட்பில்லாதவர்களாகவும் உணரும்பொருட்டே இதை வடிவமைத்திருக்கலாம்” என்றான்.

“இது மெய்யாகவே உயிருள்ள முத்துச்சிப்பிதானா, அன்றி விந்தையான பொறியா என்று எனக்குத் தெரியவில்லை” என்றான் யுயுத்ஸு. “ நஞ்சில்லை என்பதற்கு நானே சான்று. இதை நான் தொட்டு பதினேழு நாட்கள் ஆகின்றன” என்று சகதேவன் சொன்னான். “என் படைவீரர் நூற்றைம்பது பேரை தொடச்சொன்னேன். எவரும் நலமிழக்கவில்லை.” சுரேசர் “நஞ்சல்ல. நஞ்செனில் அது உடலினூடாக வரும் நஞ்சல்ல” என்றார். “இதை நாம் அரசருக்கு அளிக்கத்தான் வேண்டுமா? நாம் எண்ணுவதற்கு மாறாக ஏதேனும் நிகழ்ந்தால் என்ன செய்வோம்?” என்று யுயுத்ஸு மீண்டும் கேட்டான்.

நகுலன் “வேண்டியதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது” என்றான். சற்று சலிப்பு கலந்த குரலில் “இத்தருணத்தில் எதை

நம்பி நாம் இதை அளிப்போம்? போர்க்களத்தில் அவர் கொள்ளாத பழி என ஒன்றில்லை. அவரை அறத்தோன் என்றும், மெய்மையைச் சென்றடையும் வாய்ப்புள்ளவர் என்றும் எவர் சொன்னாலும் அதை முதலில் மறுக்கப்போவது அவர்தான். பாரதவர்ஷத்தில் ஆமென்று கூற ஒரு நாவு எழாது” என்றான். சுரேசர் சில கணங்களுக்குப் பின் “ஆனால் நம்மால் இதை அவரிடம் அளிக்காமலிருக்க இயலாது” என்றார். “ஏன்?” என்று யுயுத்ஸு கேட்டான். “நாம் அறிய விரும்புகிறோம், அவர் இதை தொட்டால் என்ன ஆகுமென்று” என்றார் சுரேசர்.

“அவர் கையிலும் கறையே எஞ்சும் என்று உறுதியாக சொல்லும்போதுகூட அவ்வாறு அன்றியும் இருக்கலாம் என்ற ஐயமும் நம் ஆழத்தில் உள்ளது. ஒரு வேளை இது அவரை அறத்தான் என்று கூறிவிடுமெனில் நாமும் நாம் இயற்றிய போர்ப்பழிகள் அனைத்திலிருந்தும் விடுபடுவோம். அவ்வாறு ஒரு வாய்ப்பிருக்கையில் இச்சிப்பியை நம்மால் வெறுமனே வைத்திருக்க இயலாது. பல நூறு முறை உள்ளத்தால் அவர் இதைத் தொடும் காட்சியை நடித்துக்கொள்வோம். ஒன்று நம்பிக்கையையும் பிறிதொன்று நம்பிக்கையிழப்பையும் உருவாக்க மீளா அலைக்கழிப்பில் இருப்போம். ஆகவே இதை அவரைக்கொண்டு தொடவைப்பதே மேல்” என்றார் சுரேசர்.

“ஒருவேளை நீலமெனக் காட்டிவிட்டால் அவர் உயிர்துறக்கவும் கூடும்” என்று சீற்றத்துடன் நகுலன் சொன்னான். யுயுத்ஸு “ஆம், நானும் அவ்வாறே எண்ணுகிறேன். இது இடரைவிட துயரை அளிப்பதற்கான வாய்ப்பு மிகுதி” என்றான். சகதேவனும் “நானும் அவ்வாறுதான் இப்போது எண்ணுகிறேன். இங்கு வரும் வரை அவ்வாறு தோன்றவில்லை. அறத்தான் என்ற சொல்லுக்கு நிகராக மூத்தவரே என் உள்ளத்தில்

எழுந்தமையால் பிறிதொன்று எண்ணக்கூடவில்லை…” என்றபடி அந்தப் பேழையை எடுத்து “இதை வீசிவிடலாம்… அனலில் போடச் சொல்கிறேன்” என்றபடி ஏவலனை அழைத்தான். ஏவலன் உள்ளே வந்ததும் அப்பேழையை நீட்டி “இதை அடுமனையின் அனலில் போடுக!” என்றான்.

அவன் தலைவணங்கி அதை பெற்றுக்கொண்டான். நகுலன் கை நீட்டித் தடுத்து “பொறு” என்றபடி அதை திரும்பப் பெற்றுக்கொண்டான். “நாம் இதை மூத்தவரிடம் அளிப்போம்” என்றான். “என்ன சொல்கிறாய்?” என்று சகதேவன் கேட்டான். “சுரேசர் கூறியதுதான். நம்மால் இந்த வினாவை இவ்வண்ணமே வைத்திருக்க இயலாது. வினா எழுந்துவிட்டால் விடையின்றி உளம் அமையாது” என்றான் நகுலன். “ஆனால் மூத்தவர்…” என்று சகதேவன் சொல்ல “உண்மையென்ன என்று அவர் அறியட்டுமே. அவருடைய தவிப்பும் ஒருவேளை மறையக்கூடும். அவர் பழிகொண்டவர் என்று அறிந்தாலும் சரி பழியற்றவர் என்று தெளிந்தாலும் சரி அவர் நிலைபேறு கொள்வார், நிறைவடைவார். இன்று அவரை நோயுறச் செய்யும் ஊசலாட்டம் நிலைக்கும்” என்றான் நகுலன்.

# களிற்றியானை நிரை - 60

**பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 10**

இடைநாழியினூடாக நடக்கையில் நகுலன் சகதேவனின் தோளைத் தட்டி “இப்பரிசை அரசருக்கு அளிக்கையில் இது எவ்வண்ணம் பொருள்படும் என்று நம்மால் கணிக்க இயலாது. அதைப்பற்றி அமைச்சரே அறிவிக்கட்டும். உரிய தருணம்

உருவானால் அன்றி அரசரிடம் இதை முன்வைக்க இயலாது" என்றான். சகதேவன் "எப்படியும் நான் கூறியதையேதான் அவர் கூறப்போகிறார்" என்றான். "அவர் கூற வேண்டிய முறையில் அதை கூறுவார். இது அறத்தோனா அன்றா என்ற தீர்ப்பை அளிக்கும் ஒரு மாயப்பொருள் என்று நீ அவர் முன் வைத்தாய் எனில் அதன் விளைவுகள் பிறிதொன்றாக இருக்கும். மூத்தவர் இன்று உரிய உளநிலையில் இல்லை. இன்று அவரை மெய்யாகவே ஆட்டிவைப்பது தன்னைப் பற்றிய ஐயங்கள்தான்" என்றான்.

நகுலனின் புன்னகைத்த முகத்தைக் கண்டு சகதேவன் குழம்பி சுரேசரை ஒருமுறை பார்த்துவிட்டு "எந்த வகையான ஐயங்கள்?" என்றான். "பல நிலைகளில்... பல விசைகளில்" என்றான் நகுலன். "அஸ்தினபுரிக்குள் அவர் இன்று எவ்வாறு கருதப்படுகிறார் என்ற ஐயம். தன் வாழ்நாளெல்லாம் அறத்தோன் என்று அறியப்படவேண்டும் என்பதற்காகவே அவர் நிலைகொண்டிருக்கிறார். அதன் பொருட்டே கடுந்துயர்களை அடைந்திருக்கிறார். இன்று இங்கு வந்து பெருகியிருக்கும் திரள் இறந்தகாலம் அற்றது. அதன் நினைவுகள் அனைத்தும் நிகழ்காலத்திலிருந்து பின்னகர்ந்து கதைகளை நோக்கி படர்கின்றன. அக்கதைகளில் சூதர்கள் அவரைப்பற்றி என்ன சொல்லவிருக்கிறார்கள் என்பதை இப்போது உணர முடியாது. இன்று எல்லாவற்றையும் சொல்கிறார்கள். இவற்றில் எது நிலைகொள்ளும் என காலத்தை ஆளும் தெய்வங்களே முடிவு செய்யமுடியும்."

"முன்பு அவரை ஐயமின்றி அறத்தோன் என நம்பிய ஒரு பெருந்திரள் இங்கிருந்தது. அவர்களின் அந்நம்பிக்கை என்பது குலமுறையானது. அவர் உருவில் அவர்கள் யயாதியையும்

குருவையுமே கண்டனர். அவர்களின் இல்லங்களில் ஒவ்வொரு நாளும் வாழ்த்திச் சொல்லப்படும் குலவரிசையின் நீட்சி அவர். மதிப்பை அவர் ஈட்டவில்லை, பெருமதிப்பை பெற்ற பின்னர்தான் மண்ணிற்கு வந்தார். இன்று இங்கு பெருகியிருக்கும் திரள் அவரை மதிப்பிட்டு நிறுத்தும் இடத்தில் இருக்கிறது. அவர் அதை அஞ்சுகிறார். ஆகவே நிலையழிந்திருக்கிறார்" என்றான் நகுலன். சகதேவன் "அவர்களின் மதிப்பைப் பெறுவது மிக மிக எளிது என்பார்கள்" என்றான். "கொடையால் புகழை அடையலாம் என்று நமக்கு எப்போதுமே சொல்லப்படுகிறது."

நகுலன் "இல்லை. அவர்கள் இன்று எந்த கட்டுக்குள்ளும் அடங்காத யானையைப் போன்றவர்கள். இங்கு முன்பிருந்தது பழகிய பட்டத்துயானை. இது காட்டுயானை. இந்த யானை எதை ஏற்கிறது எதை மறுக்கிறது என்று எவரும் இப்போது கூறிவிட இயலாது" என்றான். சகதேவன் பெருமூச்சுவிட்டு "பொய்யாகவேனும் ஓர் ஏற்பை உருவாக்க முடியுமென்றால் நன்று" என்றான். "அதை பொய்யான ஏற்பு என்று உடனே கண்டுகொள்வதே அரசரின் நோய்" என்று நகுலன் சொன்னான். சகதேவன் நீள்மூச்செறிந்தான். "நெடுங்காலம் நாம் குடிகளின் இப்பெருந்திரளை எந்த அடிப்படையும் அற்ற அலைவு என்று எண்ணியிருக்கிறோம். இதை ஆள்வது எளிது என்று கணித்திருக்கிறோம். அல்ல என்று அது எழுந்து நிற்கையில் திகைப்பே எஞ்சுகிறது" என்றான் நகுலன்.

யுதிஷ்டிரனின் அறைவாயிலில் நின்றிருந்த காவலனிடம் சுரேசர் "அரசர் எவ்வண்ணம் இருக்கிறார்?" என்று கேட்டார். "சற்று முன்னர்தான் மருத்துவர் வந்து நோக்கிச் சென்றார். மெல்லிய காய்ச்சலும் நடுக்கமும் இருக்கிறது. உணவு

ஒழிந்திருக்கிறார்” என்று அவன் சொன்னான். “துயில்கிறாரா?” என்று சுரேசர் கேட்டார். ”முழுத் துயில் அமைவதே இல்லை அவருக்கு. ஆனால் எப்போதும் துயிலிலேயே இருக்கிறார். அவ்வப்போது விழித்துக்கொண்டு எவரையேனும் அழைத்துவரச் சொல்லி கூவுகிறார். அவர் மீண்டும் ஒருமுறை நினைத்துக்கொண்டு உசாவினால் அன்றி எவரையும் அழைத்துவர வேண்டாம் என்பது மருத்துவரின் ஆணை என்பதனால் நான் அதை இயற்றுவதில்லை” என்றான் காவலன். “நன்று, எங்கள் வரவை அறிவி” என்று சுரேசர் சொன்னார்.

ஏவலன் உள்ளே சென்று அறிவித்துவிட்டு மீண்டு வந்து “அவர் தங்களை அறியவில்லை என்று விழிகள் காட்டுகின்றன. பலமுறை யார் யார் என்று கேட்டார்” என்றான். “அகிபீனா மயக்கில் இருக்கிறாரா?” என்று சுரேசர் கேட்டார். “இல்லை அமைச்சரே, மதுவோ மயக்கோ அளிக்கப்படவில்லை, காய்ச்சல் மட்டுமே நீடிக்கிறது” என்றான். “வருக!” என்று நகுலனிடமும் சகதேவனிடமும் விழிகாட்டிவிட்டு சுரேசர் அறைக்குள் நுழைந்தார். யுயுத்ஸு சகதேவன் ஒருகணம் தயங்குவதை கண்டான். நகுலன் அவனை ஆறுதல்படுத்துவதுபோல தோளில் தொட்டான். அவர்கள் உள்ளே நுழைந்தபின் யுயுத்ஸுவும் தொடர்ந்து சென்றான்.

அவர்களைக் கண்டதுமே படுக்கையில் இருந்து எழுந்த யுதிஷ்டிரன் “சுரேசரே, நான் சற்று முன் தங்களிடம் கூறியது நினைவில் உள்ளதா?” என்றார். சுரேசர் “ஆம். நினைவில் உள்ளது, அரசே” என்றார். “அந்த ஆணைகள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும்” என்று யுதிஷ்டிரன் கூறினார். ”ஆம். அனைத்து ஆணைகளும் முறைப்படி பிறப்பிக்கப்பட்டுவிட்டன.

தங்கள் சொல் இங்கு இறை ஆணை என திகழும்” என்றார் சுரேசர். யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டு மஞ்சத்தில் அமர்ந்து பின்னர் திரும்பி நகுலனையும் சகதேவனையும் பார்த்து “இவர்களிடம் தனியாக வேறு ஆணைகளை நான் இடவேண்டும்” என்றார். “ஆம், ஆணைகளை பெற்றுக்கொள்ளவே வந்தோம்” என்று சுரேசர் கூறினார். யுதிஷ்டிரனின் விழிகள் பதறிக்கொண்டிருந்தன. யுயுத்ஸுவை எவர் என அறியாதவர்போல பார்த்தார்.

நகுலனும் சகதேவனும் பீடங்களில் அமர்ந்தனர். யுதிஷ்டிரன் அதன் பின்னரே சகதேவனை உணர்ந்து “இவன் எப்போது வந்தான்? நீ தெற்கே படைகொண்டு சென்றவன் அல்லவா?” என்றார். “ஆம், மூத்தவரே. படைவென்று திரும்பியிருக்கிறேன்” என்றான். “எங்கும் உன் படைகள் எதிரிகளால் தடுத்து நிறுத்தப்படவில்லை என்று அறிந்தேன்” என்றபின் யுதிஷ்டிரன் உரக்க நகைத்தார். “முகிலை வாள் வெட்டுவதுபோல் யுதிஷ்டிரனின் படைகள் பாரதவர்ஷத்தை பிளந்து சென்றன என்று சூதன் நேற்று பாடினான். நேற்றல்ல அதற்கு முன்பு. உண்மை! இன்று இப்புவியில் எனக்கு தடைகளே இல்லை. பாரதவர்ஷத்தில் அஸ்தினபுரி எனும் சொல்லே அச்சுறுத்தும் பெரும்படைக்கலமாக மாறியிருக்கிறது. இனி எவரும் எதிர்நிற்கப் போவதில்லை. சிந்துவின் ஜயத்ரதனோ பிரக்ஜ்யோதிஷத்தின் பகதத்தனோ அல்லது குருகுலத்தின் துரியோதனனோ விண்ணிலிருந்து கீழ்நோக்கி திகைக்க வேண்டும்.”

கைகளை விரித்து “அவர்கள் திகைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நான் கண்டேன்” என்று அவர் சொன்னார். ஆனால் அவர் முகத்தில் எழுந்த அந்தப் பித்தின் களிப்பு உடனே மறைந்தது.

குரல் தாழ்த்தி “செல்லுமிடமெங்கும் பறப்பது அஸ்தினபுரியின் அமுதகலக் கொடி அல்லவா?” என்றார். “ஆம் அரசே, நமது கொடிதான்” என்றார் சுரேசர். “நமது கொடி, குருகுலத்தின் கொடி, ஹஸ்தியின் பிரதீபரின் சந்துனுவின் விசித்திரவீரியனின் பாண்டுவின் கொடி” என்றார் யுதிஷ்டிரன். அதன் பிறகு எழுந்து “நமது இலச்சினையை மாற்ற வேண்டும். அதில் பாண்டுவின் பெயர் இருக்கவேண்டும். அனைத்துக் கொடிகளிலும் பாண்டுவின் பெயர் எழுதப்பட்டிருக்கவேண்டும்” என்றார். “அவ்வாறு வழக்கமில்லை” என்று சுரேசர் கூரிய குரலில் சொன்னார். யுதிஷ்டிரன் திடுக்கிட்டு நோக்கி “ஏன்? ஏன்? ஏன் வழக்கமில்லை? என் தந்தையின் பெயர் கொடியில் இருப்பதில் என்ன தவறு?” என்றார்.

“கொடிகளில் அவ்வாறு பெயர் எழுதும் வழக்கமில்லை. பெயர் எழுதினாலும் அதை எவரும் படிக்க இயலாது. கொடிகள் முத்திரைகளை மட்டுமே கொண்டவை. ஏனெனில் அவை மொழியறியாதவரும் படிக்கத்தக்கவை. தொலைவில் இருந்தே அறியத்தக்கவை” என்றார் சுரேசர். “ஆம், அவ்வாறென்றால் பாண்டுவிற்கு தனி இலச்சினை இருக்குமா என்று பார்க்கவேண்டும். அதை இங்கே அனைத்து மாளிகைகளிலும் பொறிக்க வேண்டும். பாண்டுவுக்கு மட்டுமான தனி முத்திரை…” என்று யுதிஷ்டிரன் சொன்னார். ”அவ்வண்ணம் ஒன்று இங்கில்லை, அரசே” என்றார் சுரேசர். “இல்லையென்றால் உருவாக்குவோம்” என்று யுதிஷ்டிரன் கூறினார். “உருவாக்கி என்ன பயன்? அதை பாண்டுவின் முத்திரை என்று தெரிவிக்கவே நாம் நெடும் உழைப்பை செலுத்தவேண்டியிருக்கும்” என்றார் சுரேசர்.

யுதிஷ்டிரன் சலிப்புடன் கையை வீசி “நான் என்ன சொன்னாலும் இங்கு உடனே மறுப்பு எழுந்துவிடுகிறது. என் சொற்கள் பொய்யான மதிப்பையே பெறுகின்றன. மெய்யென அவை கொள்ளப்படுவதில்லை” என்றார். சுரேசர் சகதேவனை நோக்கி “தாங்கள் கொண்டு வந்த பரிசை அரசரிடம் அளிக்கலாம்” என்றார். “பரிசா?” என்றபின் யுதிஷ்டிரன் சலிப்புடன் கையை மீண்டும் வீசி “செல்க! எனக்கு இப்போது எந்தப் பொருளிலும் ஆர்வமில்லை. பரிசென எந்தப் பொருளையும் கொள்ளும் நிலையில் நான் இல்லை” என்றார். “இது எளிய பரிசல்ல. இது முனிவர் ஒருவரால் தங்களுக்கென அருளப்பட்டது” என்றார். “நான் முனிவர்களின் வாழ்த்துக்களை நிறையவே பெற்றிருக்கிறேன்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “செல்லுமிடங்களிலெல்லாம் முனிவர்களைக் கண்டு வணங்கி சொல் பெற்றிருக்கிறேன். எச்சொல்லும் எனக்கு துணை வரவில்லை. எச்சொல்லுடனும் இணைத்து நான் பேசப்படவில்லை.”

அவர் முகம் கசப்புகொண்டது. “என் பொருட்டு களத்தில் பிறர் இயற்றிய பிழைகளால் மட்டுமே நான் காலத்தில் நினைவுகூரப்படுவேன் போலும். எனது சிறுமைகளால் மட்டுமே அடையாளப்படுத்தப்படுவேன். ஆம், அவ்வாறுதான் நிகழும். அதை நான் அறிவேன். அது உலக இயல்பு. மானுடர் பிறரை அவர்களின் சரிவுகள், சிறுமைகள் வழியாகவே எண்ணிக்கொள்கிறார்கள். மானுடர் பிறரை எண்ணுவதே தங்கள் சிறுமையையும் வீழ்ச்சியையும் அவர்களுடன் ஒப்பிட்டு நிறைவடைவதற்காக மட்டுமே. இனி என்றும் பாரதவர்ஷத்தில் பேரறத்தான் எனப்பட்ட யுதிஷ்டிரனேகூட பெரும் பிழைகள் செய்தான், நமக்கென்ன என்ற சொல்லே என்னைப்பற்றி உலவும், முனிவர்கள் அதை மாற்ற முடியாது” என்றார்.

“இந்த முனிவர் தங்களை வாழ்த்தி பரிசனுப்பவில்லை” என்று சுரேசர் கூறினார். யுதிஷ்டிரனின் விழிகள் மாறின. சகதேவனிடம் ”யார்?” என்றார். சகதேவன் “எவரென்று அறியாத ஒரு முனிவர். அவர் குடமுனிவரான அகத்தியரின் மாணவர்நிரையில் வந்தவர் என்கிறார்கள். இப்பொருளை தங்களிடம் ஒப்படைக்கக் கொண்டு வந்தவர் முதிய பெண்மணி ஒருவர். அதை எங்களிடம் அளிக்கையில் கூறியவற்றை மட்டுமே நான் கூற முடியும்” என்றான். யுதிஷ்டிரன் மெல்ல நடுங்கத்தொடங்கினார். கைகளைக் கோத்துப் பற்றிய பின் நகுலனையும் சகதேவனையும் அலையும் விழிகளால் மாறி மாறி பார்த்தார். சகதேவன் ”ஆம் மூத்தவரே, இது தென்னிலத்தைச் சேர்ந்த ஒரு முதுமகளால் எனக்கு அளிக்கப்பட்டது. தங்களுக்குப் பரிசென இதை கொண்டுவந்தேன்” என்றான்.

அவன் நீட்டிய பேழையை யுதிஷ்டிரன் ஐயத்துடன் கைநீட்டி பெற்றுக்கொண்டார். அதை கையில் வைத்து திருப்பித்திருப்பி நோக்கினார். “உள்ளே என்ன?” என்றார். அவன் “திறந்து நோக்குக, மூத்தவரே!” என்றான். அவர் திறந்து நோக்கி “முத்துச்சிப்பி…” என்றார். “நன்னீர் முத்து… மிகமிக அரிதானது என்பார்கள். ஆனால் இங்கே அரண்மனையில் முன்னரும் இவ்வகை முத்து கொண்டுவரப்பட்டுள்ளது” என்றார். சகதேவன் “இது கோதாவரி கடலில் கலக்கும் இடத்தில் ஒரு ஓடையில் இருந்து எடுக்கப்பட்டது. பல நூறு ஆண்டுகள் வாழ்வு கொண்டது” என்றான். “இது அரிய ஆற்றல்கள் கொண்டது என்றார்கள்.” யுதிஷ்டிரன் நிமிர்ந்து “இது என்ன என்று சொல்லப்பட்டது?” என்றார். சகதேவன் அழுத்தமாக “மூத்தவரே, பேரறத்தான் என்று மண்ணில் நிலைகொள்ளும் ஒருவர் இதை தொட்டால் மட்டுமே இது அவரை ஏற்கும். பிற எவர்

தொட்டாலும் அவர்களை தான் ஏற்கவில்லை என்று காட்ட அவர்களின் கைகளில் நீலநிறக் கறையை படியச்செய்யும்" என்றான்.

யுதிஷ்டிரன் முகம் சுளித்தார். சலிப்புடன் "என் கையில் கறை படியும். என் உடலெங்கும் கறை படியும். ஐயமேதும் தேவையில்லை" என்றார். சுரேசர் "அவ்வாறு நாங்கள் எண்ணவில்லை என்பதனால்தான் இதை உங்களிடம் கொண்டுவந்தோம். இதை தாங்கள் மட்டுமே தொட்டு உயிர்ப்பிக்கக்கூடும்" என்றார். சகதேவன் "இதற்குள் இன்னும் முத்து உருவாகவில்லை. பேரறத்தான் ஒருவனால் தொடப்பட்டால் அவனை வாழ்த்தும் பொருட்டு வாய் திறக்கும். அப்போது காற்றில் ஒரு துளியை விழுங்கி முத்தென கருக்கொள்ளும். அவன் வீடுபேறு அடையும்போது இது தானாக வாய் திறந்து அந்த முத்தை உமிழும். அதை அவன் தன் நுதல் விழியெனச் சூடி விண்ணேகலாம்" என்றான். யுதிஷ்டிரன் அதை பார்த்துக்கொண்டிருந்தார். அவர் உடலின் நடுக்கை நோக்கியபின் சுரேசர் தாழ்ந்த குரலில் "தாங்கள் இதை தொடலாம்" என்றார்.

"இல்லை, நான் தொடப்போவதில்லை" என்று யுதிஷ்டிரன் கூறினார். கைகளை முதுகுக்குப் பின் வைத்துக்கொண்டார். "இதைத் தொடும் துணிவு எனக்கு வராது" என்றார். "தொடாமல் இருக்க தங்களால் இயலாது" என்று சுரேசர் சொன்னார். "தாங்கள் தங்களை அறிந்தாகவேண்டும். அதுவே தங்கள் ஊழ்." யுதிஷ்டிரன் "அதைவிட நீங்கள் என்னை அறிந்தாகவேண்டும் என்று விழைகிறீர்கள்" என்று உரக்க கூவினார். "என்னை நீங்கள் அளவிட முயல்கிறீர்கள். அதன் பொருட்டே இதை கொண்டுவந்திருக்கிறீர்கள். என்னை அளவிடுவதற்கு

எவருக்கும் தகுதியில்லை. களத்தில் என் கையால் நான் பிழைகள் இயற்றவில்லை. பிறர் பிழைகளுக்கு ஒத்து அங்கிருந்தேன், அவ்வளவே என் பிழை. என் உள்ளத்தில் இருந்து எப்பிழையையும் நான் எடுக்கவில்லை. எந்த தெய்வத்தின் முன் நின்றும் அதை நான் சொல்ல முடியும்.”

“அல்ல, உங்கள் மீதான ஐயமில்லா நம்பிக்கையே இதை கொண்டுவரச் செய்தது” என்றான் சகதேவன். “ஆம் மூத்தவரே, இதை தொடுவதற்கு பிறர் இல்லை இப்புவியில் என்னும் நம்பிக்கை கொண்டவர்கள் நாங்கள்” என்றான் நகுலன். யுதிஷ்டிரன் அவர்களின் முகங்களை மாறி மாறி பார்த்தபின் “அல்லது நான் உளம்தளர்ந்து இருக்கிறேன் என்று கணித்து என்னை மீட்க எண்ணி இச்சூழ்ச்சியை இயற்றுகிறீர்களா? இத்தனை எளிய ஒரு செயலினூடாக என்னை மீட்டுவிடலாம் என்று எண்ணுகிறீர்களா? எனக்கு வேண்டியது இதோ இந்த எளிய சிப்பியின் வாழ்த்து அல்ல. இதை கொண்டுவந்த சிற்றுள்ளங்களின் ஏற்பும் அல்ல. எனக்கு தெய்வங்களின் ஏற்பு வேண்டும். மூதாதையரின் ஏற்பு வேண்டும். காலத்தின் ஏற்பு வேண்டும்” என்றார்.

“அவை உண்டா என்று அறிவதற்கான வழி இது. இதை நாங்கள் எதன் பொருட்டு கொண்டுவந்திருந்தாலும் இன்று அவ்வாறு அறிவதற்கான ஒரே வழி. காலமும் மூதாதையரும் தெய்வங்களும் கண்ணகலே உள்ளன. இது கையெட்டும் அண்மையில் உள்ளது” என்றார் சுரேசர். யுதிஷ்டிரன் உரக்க “எடுத்துக்கொண்டு செல்லுங்கள் இதை. தேவையில்லை எனக்கு. ஒருபோதும் இதை நான் தொடப்போவதில்லை” என்றார். “நன்று. இதை தங்களுக்கெனவே கொண்டுவந்தோம். தங்களுக்குப் பரிசென இதை அளிக்க விரும்பினர் தங்கள்

இளையோர். அதை அளித்தவர் முனிவர். அதை இங்கு கொண்டுவந்ததற்காக வருந்துகிறேன்” என்று சொல்லி அதை மூடும்படி விழிகாட்டினார் சுரேசர். சகதேவன் அதை மூடினான்.

“ஓய்வெடுங்கள், அரசே. மருத்துவர்களை அனுப்புகிறேன். தங்களுக்குரிய மருந்துகளை அவர்கள் அளிப்பார்கள். தங்களை துயிலில் எழுப்பியதற்கும் உணர்வுகளை அலைக்கழிய வைத்ததற்கும் பொறுத்தருளக் கோருகிறேன்” என்றபடி சுரேசர் எழுந்தார். நகுலனும் சகதேவனும் எழுந்து தலைவணங்கினர். அவர்கள் திரும்பியதும் யுதிஷ்டிரன் “பொறுங்கள். அது இங்கிருக்கட்டும்” என்றார். ”அதை தாங்கள் இங்கே வைத்திருப்பது…” என்று சுரேசர் சொல்ல “அதை தொட்டுப் பார்ப்பதற்காக அல்ல. என்னை நான் எவருக்கும் காட்டவேண்டியதில்லை. அது இங்கிருக்கட்டும். அதை நான் இந்த அறையிலேயே வைத்திருக்கிறேன். அது இங்கிருந்து சென்றால் நீங்கள் மாறி மாறி அதை தொடுவீர்கள். உங்களில் எவர் பழிசேர்ந்தவர், எவர் பழிகுறைவானவர் என்பதை நோக்குவீர்கள். பின்னர் அரண்மனை எங்கும் இது ஒரு விளையாட்டாகும். என் பெயர் சொல்லி அப்படி ஓர் இழிந்த விளையாடல் இந்த அரண்மனையில் நிகழ நான் விரும்பவில்லை” என்றார். “தங்கள் எண்ணப்படியே” என்ற சுரேசர் அந்தச் சிப்பியை அருகே வைத்துவிட்டு தலைவணங்கி வெளியே சென்றார்.

அவர்கள் வெளியே வந்ததும் நகுலன் ”அவர் மிகக் குழம்பியிருக்கிறார்” என்றான். சுரேசர் “இன்று இரவுக்குள் அவர் அதில் கையை வைப்பார். அவரால் அதை தவிர்க்கவே இயலாது” என்று சொன்னார். “அவர் கையில் கறைபடியுமெனில்?” என்று சகதேவன் கேட்டான்.

“கறைபடியுமென எண்ணுகிறீர்களா?” என்று சுரேசர் கேட்டார். சகதேவன் “ஐயமின்றி” என்றான். “மண்ணில் முடிசூடி கோல்கொண்டு நாடாளும் எந்த அரசனும் கையில் கறைபடியாமல் இதை தொட இயலாதென்றே நான் எண்ணுகிறேன்.” நகுலன் “அதிலும் குறிப்பாக இவர்” என்றான். “நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?” என்று யுயுத்ஸுவை நோக்கி சுரேசர் கேட்டார். “கறைபடியாதென்றே எண்ணுகிறேன்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஏன்?” என்று சுரேசர் கேட்டார். “அவருடைய செயல்களை நீங்கள் அறிவீர்களல்லவா? அவருடைய உள்ள விழைவுகளையும் அதன் பொருட்டு அவர் செய்துகொண்ட சரிவுகளையும் ஒத்திசைவுகளையும் நீங்கள் முழுதறிவீர்கள்.”

“ஆம், அறிவேன்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆனால் தன் ஆற்றலின்மைகளுடனும் அச்சங்களுடனும் ஆடையின்றி தன் முன் வந்து நின்றிருக்கும் மானுடனை தெய்வங்கள் விரும்பும் என்றே எண்ணுகின்றேன். அவனுடைய துயரங்களை அவை புரிந்துகொள்ளும். தன்னை ஒவ்வொரு கணமும் சிறிதென உணரத் தயங்காதவனை தெய்வங்கள் தோள்வளைத்து தலைதொட்டு வாழ்த்தும். இப்புவியில் மூத்தவர் அளவுக்கு உள்ளத்தால் எளிய மானுடர் எவருமில்லை. அவர் இன்று கொண்டிருக்கும் துயரம்கூட செறுத்துத் தருக்கும் ஆணவம் அவருக்கில்லை என்பதையே காட்டுகிறது. தன் செயலில் அவர் கொள்ளும் அலைவுகூட ஆணவம் இன்மையின் விளைவே. நிலையில்லாத மானுடரை நிலைகொண்ட தெய்வங்கள் அன்றி எவரால் அறிந்துகொள்ளமுடியும்?”

ஒருகணம் அவனை நோக்கியபின் சுரேசர் “நன்று. அவ்வாறும் கொள்ளலாம்” என்றபின் நகுலனின் தோளைத் தொட்டு

“செல்வோம்” என்றார். அவர்கள் படியிறங்கப் போகும்போது அறைக்கதவு திறந்தது. உள்ளிருந்து யுதிஷ்டிரன் கையைத் தூக்கியபடி ஓடிவந்தார். “வருக! வருக! வந்தணைக! இதோ என் கைகள்! நான் அதை தொட்டேன்! என் கைகளால் அதை தொட்டேன்! எனக்கு அது கைகளில் கறையபடிய வைக்கவில்லை. என்னை அது மீட்டிருக்கிறது. என்னை அது அறத்தோன் என ஏற்றிருக்கிறது! தெய்வங்களே! மூதாதையரே! என்னை ஏற்றுக்கொண்டீர்கள்! என்னை வாழ்த்தினீர்கள்!” என்று கூவினார். அவர் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. விழுந்துவிடப்போகிறவர்போல தள்ளாடி சுவரை பற்றிக்கொண்டார். நகுலனும் சகதேவனும் அருகணைந்து அவர் தோள்களை பிடித்தனர்.

“சுரேசரே, நோக்குக என் கையை! தூய்மையான கை! ஆம், நான் பிழைகளை இயற்றியிருக்கிறேன்! கீழ்மைகள் அடைந்திருக்கிறேன். ஆனால் அவ்வொவ்வொன்றின் பொருட்டும் உளம்வருந்தியிருக்கிறேன். ஒரு பிழைக்கு ஓராயிரம் முறை தெய்வங்களிடமும் மூதாதையரிடமும் பொறுத்தருளும்படி கோரியிருக்கிறேன். தெய்வங்கள் அதை அறியும். மூதாதையர் அதை நன்கறிவர். இது போதும். இதுவே எனக்கு நிறைவு. இதுவன்றி எனக்கு இப்புவியில் எஞ்ச எதுவுமில்லை” என்று யுதிஷ்டிரன் கூறினார். அவர் குரல் உடைந்தது. சுரேசர் “ஆம் அரசே, அதை அறிந்தே இங்கு கொண்டுவந்தோம். சற்று முன் தங்கள் இளையவர் அதையே கூறினார். இவ்வண்ணமோ அவ்வண்ணமோ ஒரு தீர்வு அமையுமெனில் தங்கள் துயர் தீருமென்று எண்ணியே அதை கொண்டு வந்தேன்” என்றார்.

நகுலன் யுதிஷ்டிரனின் கைகளை பார்த்தான். யுதிஷ்டிரன் அவன் பார்வையுடன் விழிதொட்டு உடனே தன் கைகளை பார்த்தபோது தன் வலக்கையில் செந்நிறமான கறை இருப்பதை பார்த்தார். “செந்நிறக்கறை! உன் உடலில் எங்கேனும் குருதியிருக்கிறதா?” என்றார். மீண்டும் நோக்கி “உன் ஆடைகளிலிருந்து அந்த வண்ணம் வந்துவிட்டதா?” என்றார். உடனே சிலம்பிய குரலில் வீறிட்டார். “அது என்னை பழிகொண்டவன் என்கிறது!” என்ற பின் தளர்ந்து விழப்போனார். நகுலன் அவரை பிடித்தான். அவர்கள் அவரைத் தூக்கி கொண்டுசென்றனர். அறைக்குள் படுக்க வைத்தனர்.

யுதிஷ்டிரன் உரத்த குரலில் “என்னையும் அது பழிகொண்டவன் என்கிறது! எனக்கும் கறையை அளித்துவிட்டிருக்கிறது! தெய்வங்களே! மூதாதையரே! என்னையும் ஒதுக்கிவிட்டீர்கள். நான் இயற்றிய அனைத்திற்கும் தண்டனை அளித்துவிட்டீர்கள். என்னை கீழ்மகன் என்று நிறுத்திவிட்டீர்கள்” என்றார். வெறிகொண்டவர்போல் தன் நெஞ்சில் ஓங்கி கைகளால் அறைந்தபடி விலங்குபோல் ஊளையிட்டார். அவர் கழுத்துத் தசைகள் புடைத்திருந்தன. நெற்றியிலும் தோளிலும் நரம்புகள் எழுந்திருந்தன. இரு கால்களும் வலிப்பு கொண்டதுபோல் துடிக்க அலறியபடி எழுந்து வெளியே ஓட முயன்றார். நகுலனும் சகதேவனும் அவரை அழுத்தி மஞ்சத்தோடு படுக்க வைத்தனர். அவர் தலையை உருட்டியபடி “இனி நான் உயிர்வாழ விரும்பவில்லை. எவ்வகையிலும் இனி வாழவேண்டிய தேவை இல்லை. என் வாழ்வு பொருளற்றுவிட்டது. நான் இயற்றிய அனைத்தும் பயனற்றுவிட்டன” என்று கூவினார்.

யுயுத்ஸு “மூத்தவரே, ஒருகணம் பொறுங்கள்” என்றான். “வெளியே செல்! வெளியே செல்!” என்று யுதிஷ்டிரன் கூவினார். யுயுத்ஸு “ஒருகணம் பொறுங்கள். மூத்தவரே, ஒரு சொல் கேளுங்கள்” என்று உரக்கக் கூறி அவர் கையைப்பற்றித் திருப்பி அவர் முன் காட்டி “நோக்குக, செந்நிறக்கறை!” என்றபின் திரும்பி நகுலனிடம் “உங்கள் கையை காட்டுங்கள்” என்றான். நகுலனும் சகதேவனும் தங்கள் கையை காட்டினார்கள். “நோக்குக, அவர்களின் கறை நீலவண்ணம்! உங்கள் கறை சிவப்பு. என்ன பொருள் அதற்கு? கூறுக, என்ன பொருள் அதற்கு?” என்றான்.

யுதிஷ்டிரன் திகைத்து வாய் திறந்திருக்க, உதடுகளின் நடுக்கத்தால் தாடி அசைய யுயுத்ஸுவை பார்த்தார். “நீலம் என்பது எதிர்நிலை இயல்பு. அது அசுரர்களின் வண்ணம். இருளின் வண்ணம். தங்கள் கை செந்நிறமாக உள்ளது. தங்களை ஷத்ரியர் என்று அது சொல்கிறது. மூத்தவரே, இது மெல்ல மஞ்சளாக மாறும். மேலும் கரைந்து வெண்மையாகவும் ஆகும். தங்களுக்கான வாயில் மூடப்படவில்லை. மிகச் சரியாக அளந்து திறக்கப்பட்டுள்ளது. தங்கள் மீட்பு சொல்லளிக்கப்பட்டுள்ளது. இதைவிடப் பெரிய வாழ்த்தை மூதாதையரோ தெய்வங்களோ ஓர் அரசனுக்கு அளித்துவிட முடியுமா என்ன?” என்றான் யுயுத்ஸு.

யுதிஷ்டிரன் பெருமூச்சுவிட்டு “ஆம்” என்றார். மெல்ல தளர்ந்து “இது மெய்யாக இருக்கவேண்டும்” என்றார். சுரேசர் “ஐயமில்லை. யுயுத்ஸு சொல்வதே மெய். எந்த அரசருக்கும் நீ அரசரில் நல்லோன் என்றுதான் தெய்வங்கள் சொல்ல முடியும். நீங்கள் இன்று மீட்கப்பட்டுவிட்டீர்கள் என்று இந்தச் சிப்பி சொல்லவில்லை, இனி மீட்கப்படுவீர்கள் என்று சொல்கிறது.

இதில் உங்களுக்கான முத்து விளையும், ஐயமே தேவையில்லை” என்றார். “அவ்வாறு நிகழ்க! தெய்வங்களே! அவ்வாறு நிகழ்க!” என்றபடி இரு கைகளையும் நெஞ்சில் வைத்து அழுத்தி யுதிஷ்டிரன் கண்மூடி விழிநீர் உகுத்தார். அவர் தாடியின் மயிர்களில் கண்ணீர்த் துளிகள் திரண்டு சொட்டுவதைப் பார்த்தபடி அவர்கள் நின்றனர்.

“இது உங்களுடன் இருக்கட்டும். உங்கள் அருள் இதில் வளரட்டும். உங்கள் மீட்பு இதற்குள் ஒளிகொள்கிறது” என்றபின் சுரேசர் எழுந்து தலைவணங்கினார். நகுலனும் சகதேவனும் எழுந்துகொண்டனர். அவர்கள் ஓசையின்றி அறையிலிருந்து வெளியே சென்றனர்.

# களிற்றியானை நிரை - 61

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 11



கோட்டைவாயிலில் காத்து நின்றுகொண்டிருந்தபோது யுயுத்ஸு முதன்முறையாக தன் உள்ளம் ஊக்கம் கொண்டு எழுந்திருப்பதை உணர்ந்தான். மீள மீள அக்கோட்டைவாயிலில் எவரெவரோ உள்ளே நுழைவதற்காக அவன் காத்திருந்த நினைவுகள் எழுந்தன. இளமைப்பருவத்தில் எல்லாக் காத்திருப்புகளும் உள்ளத்தை பொங்கி எழச் செய்வதாக இருந்தன. ஒவ்வொன்றும் நகருக்குள் எதையோ புதிதாக கொண்டுவந்தன. அக்கோட்டைவாயில் சிப்பியின் சிறு திறப்பு, உள்ளே வருபவை அங்கே முத்தென உருமாறுகின்றன என்று அரண்மனையில் சொல்லப்படுவதுண்டு. தீய செய்திகள்கூட கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. வெறுமை நிறைந்த

ஒருநாளில் வரவிருப்பது தீய செய்தி என்றால்கூட வரட்டும் என்றே சொல்லத்தோன்றும்.

கோட்டைவாயிலுக்கு மேலிருக்கும் அறிவிப்பு முரசு உரைப்பதென்ன என்பதை நகரமே எப்போதும் செவிகூர்ந்திருந்தது. அதன் முதல் தாளச்சொல்லையே நகர்மாந்தரில் பெரும்பாலானவர்கள் செவிகொண்டுவிடுவார்கள். அந்த முரசுக்கு வாயில்நாய் என்று பெயரிருந்தது. அதன் ஒலியும் ஒரு குரைப்பொலி எனவே செவிகளுக்கு கேட்டது. ஒவ்வொரு நாளும் அது உள்ளே வருபவர்களை கூவி அறிவித்தது. அயலவர்கள் நாளுமென வந்துகொண்டே இருந்தனர். வெளியே சென்றவர்கள் பெரும்பாலும் திரும்பி வரும்போது பிறிதொருவராக வந்தனர். ஒவ்வொரு முறை பீஷ்மர் நகருள் நுழையும்போதும் முற்றிலும் புதியவராக, விழிகளும் முகமும் தோற்றமும் மாறிவிட்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் புதிய பொருட்களுடன் பெருவணிகரும், புதிய அலர்களுடன் பிறநாட்டு அரசத்தூதர்களும் வந்தனர். அனைத்துமே அஸ்தினபுரியில் செய்தியாயின. அரசமுறையினர் கோட்டையில் இருந்து அரண்மனைக்குச் சென்று சேர்வதற்குள் அவர்கள் ஏன் வந்தார்கள் என்றும், அதன் விளைவுகள் என்ன என்றும் பேசிக்கொள்ளத் தொடங்கியது நகர். அவர்கள் பேசிப் பேசி தங்கள் உலகை உருவாக்கிக்கொண்டனர். அக்கோட்டையிலிருந்துகொண்டு ஒளிக்கீற்றுகளை வீசி சூழ்ந்திருக்கும் வெளியை நோக்கி, மேலும் மேலும் கற்பனை செய்துகொண்டு தங்கள் நிலத்தை அவர்கள் படைத்துக்கொள்வதாக அவனுக்குத் தோன்றியது. அவர்கள் வாழ்ந்தது அந்நிலத்தில்தான்.

அஸ்தினபுரியின் தொல்குடிகளில் இடம் பெயர்ந்து வெளிச்செல்பவர்கள் மிகக் குறைவு. அங்கிருக்கும் வேளாண்குடியினருக்கு விளைநிலங்கள் அஸ்தினபுரியின் ஆட்சிக்கு உட்பட்ட தொலைநிலத்து ஊர்களில் இருந்தன. அங்கிருந்து அவர்களுக்கு குத்தகைச்செல்வம் வந்துகொண்டிருந்தது. ஆயர்கள் அதற்கும் அப்பால் காட்டு எல்லைவரை பரவியிருந்த மேய்ச்சல் நிலங்களில் பெருமந்தைகளை வைத்திருந்தார்கள். அவர்களுக்கு ஏழு நாட்களுக்கு ஒருமுறை நெய்ப்பணம் வந்தது. கைவினைஞர் குடிகள் ஒவ்வொன்றும் அவர்களின் குடியினரால் திறைப்பணம் அளிக்கப்பட்டன. அந்தணர்களுக்கும் ஷத்ரியர்களுக்கும் அவர்களுக்குரிய இறையிலி நிலங்கள் இருந்தன. ஒவ்வொருநாளும் வண்டிகளில் அவர்களுக்குரிய பங்கு நகரை வந்தடைந்தது.

அஸ்தினபுரி மாபெரும் வேள்விக்குளம் என்றனர் ஊர்க்குடிகள். அங்கே தழலென எரிபவர்கள் குடித்தலைவர்கள். தீராப் பசியே தழல். உண்ட அனைத்தையும் ஒளியென்று ஆக்குவது. உண்ண உண்ண பெருகிப் பெருகி மேலும் கோருவது. அவர்கள் தங்கள் அடையாளங்களால் மட்டுமே குடித்தொழிலுடன் தொடர்புகொண்டிருந்தனர். அத்தொழிலை அவர்கள் தங்கள் உள்ளத்தால் இயற்றினர். ஆகவே அது ஒருவகை ஆடலாக ஆகியது. அனைத்தும் அந்த ஆடற்களத்தில் அடையாளங்களாக, கருக்களாக ஆயின. ஆகவே அவை மேலும் விசைகொண்டிருந்தன. மேலும் உணர்வுச்செறிவை அடைந்தன. ஒரு கணுவும் விட்டுத்தரமுடியாத போட்டிகளாக நிகழந்தன.

குலத்தலைமை கொண்ட குடியினர் அங்கே வாழ்க்கையின் இன்பங்களை மட்டுமே அறிந்து வாழ்ந்தனர். துன்பங்கள்

அவ்வின்பங்களை நிகர்படுத்தும் பொருட்டு அவர்களால் ஆடற்களங்களில் சமைக்கப்பட்டுக்கொண்டன. அஸ்தினபுரியின் அனைத்துக் குடிகளும் திண்ணை விளையாட்டுகளிலேயே பெரும்பொழுதை கழித்தனர். சூதாடல், நாற்களமாடல், தாயமாடல், பகடையாடல், பலநூறு வகையான பந்தயங்கள். நெடுங்காலமாக ஆடி ஆடி அவர்களின் சொற்கள் எண்ணங்கள் கனவுகள் அனைத்தையும் அவையே உருவாக்கின. துயர்களும் இன்பங்களும் அக்களங்களிலேயே சமைக்கப்பட்டு கூர்கொண்டன. ஆகவே அவை பேருருக்கொண்டு எழுந்து விழுங்க வந்தன. விழிகளை சற்று விலக்கிக்கொண்டால் பொருளிழந்து அகன்றன.

அவர்களின் குடியினர் அவர்கள் அனைத்துச் சிக்கல்களையும் பேருருக்கொள்ளச் செய்து மிகையுணர்வுடன் அணுகுவதை வியப்புடன் கண்டனர். உச்சத்தில் அவற்றை அவர்கள் கைவிட்டுவிட்டு மறுகணமே மறந்து மேலே செல்வதையும் கண்டனர். “அவர்கள் தேவர்கள். தேவர்களுக்கு மானுட வாழ்க்கை என்பது நாற்களச்சூது மட்டுமே” என்றனர் தொலைநிலத்து மூத்தோர். “அவர்கள் வைத்தாடுவார்கள். போராடுவார்கள். கனவு கலைந்து பிறிதொரு கணமென நாம் வாழும் காலத்தைத் துறந்து தங்கள் மெய்யுலகுக்குச் செல்லவும் செய்வார்கள்.” இளையோர் “எனில் நாம் ஏன் அவர்களை பேணவேண்டும்?” என்றால் நகைப்புடன் “தேவர்களில் நன்றும் தீதும் அளிப்பவர்கள் உண்டு. இருவருக்கும் நாம் அவியிட்டு ஓம்புகிறோம்” என்றனர் முதியோர்.

அவர்கள் தங்கள் குடியின் தலைமையை அங்கிருந்து நடத்தினர். ஒவ்வொரு குடிக்கும் தலைமை அஸ்தினபுரியில்

இருந்தாகவேண்டுமென்ற நெறி இருந்தது. அங்குதான் உறவுகளும் மோதல்களும் உருவாகி நிறைவு கொண்டன. அவையில் அமரும் தகுதிகொண்டவர்கள் நகரத்தில் இருந்து அரசின் ஆணைகளைப் பெற்று தூதர்களினூடாக தங்கள் குடிகளுக்கு அனுப்பவேண்டும். அங்கிருந்து வரும் செய்திகளை முறைப்படுத்தி அரசவைக்கு தெரிவிக்க வேண்டும். அரசச்சடங்குகள், முறைமைகள் அனைத்திலும் பங்குகொள்ள வேண்டும். அரசு கோரும்போதெல்லாம் வரி அளிக்க வேண்டும். வரி அளிக்க முடியாதபோது அதை மன்றாட்டென முன்வைக்க வேண்டும்.

அஸ்தினபுரியில் ஐவகை நிலங்களும் சொல் வடிவிலேயே திகழ்கின்றன என்று சூதர்சொல் உண்டு. அவை முன்பு கருவடிவில் சொல்லென இருந்து பருவடிவென வளர்ந்தவை. அங்கே அவை மீண்டும் சொல்லென மீண்டுள்ளன. ஒவ்வொரு நிலத்தையும் அதன் தலைவர்கள் தங்கள் குடிவழி வந்த கதைகளினூடாகவே கற்றிருந்தார்கள். மிகச் சிலரே நேரில் சென்று தங்கள் விளைநிலங்களையோ மேய்ச்சல் நிலங்களையோ கண்டிருந்தார்கள். அவர்கள் அதை அவ்வண்ணம் சுருக்கிக் கொண்டதனால்தான் எளிதாக அவற்றை கையண்டார்கள் என்று யுயுத்ஸு நினைப்பதுண்டு. ஆயர்குடியின் தலைவர்கள் தன் கொட்டிலில் வாழும் சிறு கன்றுகள் அன்றி எதையும் கண்ணால் பார்த்திராதவர். ஆகவே பல லட்சம் பசுக்கள் மேயும் பெரிய வெளிகளை அவர்கள் மிக எளிய நூல்கூற்றுகளாக சுருக்கிக்கொண்டார்கள். நம்பிக்கையுடன் தயக்கமின்றி அவற்றை அரசவையில் சொல்லென வைத்தார்கள்.

அவர்களின் குடியினரில் மேய்ச்சல் நிலத்தில் வாழ்க்கையை சந்திப்பவர்கள் பலநூறு வகையான இடர்களை கண்டனர் என்றாலும் அவர்கள் மேலிருந்து அவர்களுக்கு சொல்லப்பட்ட, எண்ணிஅடுக்கப்பட்ட சொற்களின் வடிவில் அவற்றை சுருக்கிக்கொண்டார்கள். கடலை சிமிழில் அள்ளிக்கொண்டு வருவதுபோல செய்திகளை அவர்கள் கொண்டுவந்தார்கள். ஆனால் கடலை அவ்வண்ணமன்றி வேறெவ்வகையிலும் கொண்டுவர இயலாது. குறைவாக அறிந்திருந்தமையாலேயே அங்கிருந்தவர்கள் தன்னம்பிக்கை கொண்டிருந்தனர். அத்தன்னம்பிக்கையாலேயே மெய்யை களம் நின்று அறிந்தவர்கள் மேல் சொற்கோன்மை அடைந்தனர். குடிபெருகி அங்கு வாழ்ந்தனர்.

அங்கிருந்து கிளம்பி அவர்கள் செல்வதை காணும்போது யுயுத்ஸு திகைப்புடன் எண்ணிக்கொண்டதுண்டு, அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்று. அவர்கள் மீண்டும் தங்கள் மெய்நிலங்களுக்கு செல்கிறார்கள். ஏட்டிலிருந்து நிலங்களும் கன்றுகளும் மெய்யுரு கொண்டெழுந்து வளர்ந்து பெருகிச் சூழப்போகின்றன. அவர்கள் ஒருபோதும் அறியாதவை அவை. எவ்வண்ணம் அவற்றை அவர்கள் எதிர்கொள்ள முடியும்? எவ்வண்ணம் கையாள முடியும்? ஆனால் எவ்வகையிலோ அந்தச் சொற்தொகை அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஒன்றைப்பற்றி சற்றே அறிந்திருப்பது, அது தவறாக இருப்பினும் கூட, உதவியானதே. அது அறிதலை தொடங்கி வைக்கிறது. முற்றிலும் அறியாத ஒன்று அளிக்கும் திகைப்பைவிட அது மேல்.

குலம் என்பது என்றுமே தன் வரிசையை, தொன்மையை, தொடர்ச்சியை கைவிடுவதில்லை. கன்றென எதையும்

கண்ணால் பார்த்திராத ஆயர்குடித் தலைவர்கூட கன்று பெருகிச்சூழ்ந்த தன் பெருங்குடிக்கு நடுவே தலைவர் என்றே கொள்ளப்படுவார். அவருள் இருக்கும் சொல் தன்னை சற்றே திருத்திக்கொண்டு ஆவென, கன்றென, ஊர் என, புல்வெளி என ஆகக்கூடும். அதை அவன் முன்பும் கண்டிருந்தான். அந்நகரில் புதிதாக வந்துசேரும் குடித்தலைவர்கள் மிகச் சில மாதங்களிலேயே அனைத்தையும் சொல்லென ஆக்கிக்கொள்வார்கள். சொல் என ஆகும் தன்மை இங்குள்ள ஒவ்வொன்றிலும் உள்ளது. மொழியென்பது பொருளின் பிறிதொரு வடிவம். பொருள் என்பது மொழிக்குள் உறைவது.

யுயுத்ஸு கண்முன் விரிந்த அஸ்தினபுரிக்காட்டின் மீது உள்ளம் பரவ, கண்களைச் சுருக்கி நோக்கியபடி, இடையில் கைவைத்து நின்றிருந்தான். அவன் அருகே நின்றிருந்த சகதேவன் அதற்கப்பால் நின்றிருந்த நகுலனிடம் “மூத்தவரின் வருகையைப்போல் உளம் நிறையச்செய்வது பிறிதொன்றில்லை. உண்மையில் சென்ற பல நாட்களாகவே நான் ஏங்கிக்கொண்டிருந்தது மூத்தவரின் கைத்தொடுகையை என்று இன்று காலைதான் உணர்ந்தேன். முதல் விழிப்பிலேயே இன்று மூத்தவர் நகர்புகுவார், தன் பெருங்கைகளால் என் தோள்தொட்டு அணைத்துக்கொள்வார் என்ற எண்ணம் எழுந்து உள்ளம் விம்மிதம் கொண்டது. நான் என் மூத்தவரைப்போல் இன்று இப்புவியில் அணுக்கம் கொள்வது பிறிதெவரிடமும் அல்ல” என்றான்.

நகுலன் “ஆம், நானும் அதை எண்ணிக்கொண்டிருந்தேன். அவருடைய தோள்கள்போல நாம் தேடுவது பிறிதொன்றில்லை. ஒருவேளை இந்நகர் மக்கள் அனைவரும் அவரைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் போலும்.

நேற்று பின்னிரவிலேயே நகரம் ஒலிகொள்ளத் தொடங்கியது. இன்று காலை மூத்தவர் நகர்புகுகிறார் என்பது உச்சநிலைக் கிளர்ச்சியை உருவாக்கியது என்று நான் உணர்ந்தேன். சாளரங்களின் சிறு திறப்பினூடாகவே நகரின் பேரோசை வந்து என் அறையை அதிரவைத்துக்கொண்டிருந்தது. அவர்கள் எவரும் மூத்தவரை நேரில் பார்த்தவர்களல்ல. அவர்களுக்கு அவர் கதைகளிலிருந்து எழுந்து வரும் தொல்தெய்வம்போல" என்றான்.

"ஆனால் ஆழத்தில் அவரை அறியாதவர் எவரும் இந்நகரில் இல்லை" என்று சகதேவன் சொன்னான். நகுலன் "உண்மை" என்றான். அவர்கள் சொற்களால் தங்கள் அகக்கொப்பளிப்பை பரிமாறிக்கொண்டனர். சொல்லிச்சொல்லி பெருக்கிக்கொண்டனர். ஒருகணத்தில் தான் கொண்ட உணர்ச்சிகள் அனைத்தும் அணைந்து சலிப்பு மேலெழுவதை யுயுத்ஸு உணர்ந்தான். "ஆம், அவை குலாந்தகனின் கைகள்" என்று அவன் சொன்னான். அச்சொற்களை அவன் நா அறியவில்லை. ஆனால் அவற்றை நகுலனிடமும் சகதேவனிடமும் சொல்லிவிட்டது போலவே உள்ளம் திடுக்கிட்டது.

"தன் உடன்பிறந்தார் அனைவரையும், அவர் மைந்தரையும் கொன்று குவித்த குருதி படிந்தவை அக்கைகள். அதன் பொருட்டு ஒருநாளேனும் துயில் நீக்காதவை. ஒரு சொல்லேனும் வருந்தி உரைக்காதவை." அச்சொற்கள் ஒலிக்கின்றன என்றே அவன் அகம் படபடத்தது. ஒருவேளை துயிலற்றிருக்கலாம், வருந்தியிருக்கலாம். அவற்றை நாம் அறியாமலிருக்கலாம். இல்லை, அவ்வண்ணமல்ல. ஒரு அணுவளவேனும் துயரோ குற்றஉணர்வோ கொண்டார் எனில்

விழிகளில் அது தெரியும். அவை விலங்குகளின் விழிகள். முதுகுரங்கின் விழிகள். அவை அறிந்தது காட்டை மட்டுமே. அவன் மூச்சுத்திணறினான். உடலை எடையென உணர்ந்தான், கால்மாற்றி நின்றான்.

அங்கு நின்றிருக்கக் கூடாதென்றும், எதையேனும் ஒன்றைச் சொல்லி அங்கிருந்து கிளம்பிவிட வேண்டுமென்றும் அவன் விழைந்தான். என்னால் ஒருபோதும் அவரை எதிர்கொள்ள முடியாது. நான் துரியோதனனின் இளையோன். நான் துரியோதனனை அன்றி எவரையும் என் உடலிலும் உள்ளத்திலும் ஏற்றுக்கொள்ள இயலாதவன். நெறி என்றும் அறம் என்றும் எண்ணி இப்பக்கம் வந்தேன். இங்கு திகழ்வதும் அதுவே என்று உணர்ந்தேன். அச்சொற்கள் எவ்வகையிலும் பொருளற்றவை என்று கண்டு தெளிந்தேன். இங்கு நின்றிருக்கும் நான் முற்றிலும் சொற்களால் தோற்கடிக்கப்பட்டவன்.

அங்கிருந்து எதை சொல்லி கிளம்பிச்செல்வது என்று யுயுத்ஸு எண்ணினான். முறைப்படி அவன் அங்கு நின்றிருக்க வேண்டியதில்லை. அரசகுடியினரென நகுலனும் சகதேவனும் வந்து கோட்டைமுகப்பில் நின்றிருப்பதே போதுமானது. அவன் கோட்டைக்குள் சென்று ஆட்சிப் பணிகளை நிகழ்த்தலாம், நகரெங்கும் இரு மருங்கிலும் நெருங்கி தெருவை குறுக்கிவிட்டிருக்கும் பெருந்திரளை ஒழுங்கு செய்யலாம், அரண்மனையில் அனைத்தும் முறையாக நிகழ்கின்றனவா என்று பார்க்கலாம். அவன் மெல்ல அடியெடுத்து பின்னால் வைத்தான். சகதேவன் திரும்பிப்பார்த்தபோது அவன் உடல் அசைவிழந்தது.

அக்கணம் தொலைவில் கொம்போசை எழுந்தது. முழவுகள் பெருகி ஒலித்தன. அதை கேட்டதுமே அவர்களுக்குப் பின்னால் அஸ்தினபுரியின் கோட்டைமுகப்பில் அறிவிப்பு முரசு முழங்கியது. அதை ஏற்று அனைத்துக் காவல்மாடங்களிலும் முரசுகள் ஒலி எழுப்பத் தொடங்கின. கொம்புகள் உடன் எழ பல்லாயிரக்கணக்கான குரல்கள் இணைந்த பெருமுழக்கம் ஓங்கி வானை அறைந்தது. திரும்பி நோக்கியபோது இழுத்துக்கட்டிய வெண்திரைபோல அக்கோட்டையே ஓசையால் அலைபாய்ந்துகொண்டிருப்பதை அவன் பார்த்தான். அவன் உடல் முழுக்க அவ்வோசையின் துடிப்பு நிறைந்தது. விரல்நுனிகள் இசைக்கலன்களில் கம்பிகள்போல அதிர்வு கொண்டன. அவன் அவ்வோசையால் தள்ளி முன் செலுத்தப்படுவதுபோல் உணர்ந்தான். கண்களை மூடியபோது நீரின் நுண்ணலைகள் என காற்றின் அலைகளை கண்களுக்குள் பார்க்க முடிந்தது.

மீண்டும் மீண்டும் அறிவிப்பு முரசு முழங்கியது. "குருகுலத்துத் தோன்றல்! ஹஸ்தியின் கொடிவழியன்! பாண்டவ இளையோன்! பெருங்காற்றின் மைந்தன்! வெற்றிகொள் வீரன்! பெருந்தோள் மாமல்லன்! வடபுலம் வென்று திரும்பும் பீமசேனன் நகரணைகிறார்! வெற்றி! வெற்றி! வெற்றி!" அவன் குமட்டலுடன் வாயில் எழுந்த வறுஞ்சுவை எச்சிலை சற்று நேரம் வைத்திருந்து உமிழ முடியாமல் விழுங்கினான். நஞ்சை விழுங்குவதுபோல் உடல் உலுக்கிக்கொண்டது. வெற்றி என்னும் சொல்லை எவ்வண்ணம் இவர்களால் சொல்ல இயல்கிறது? அதற்கு ஏதேனும் பொருள் உள்ளதென்று எண்ணுகிறார்களா? வெற்றி! எதன் மீதான வெற்றி? எதை அடைந்ததனால் அடையும் வெற்றி? ஆயிரம் மடங்கு அளித்து

சிறு அணுவொன்றை பெறுவதனால் இத்தனை தருக்க முடியுமா என்ன?

இவர்களின் வெற்றி இருப்பது சொல்லில் மட்டுமே. வெறும் சொல்லில். எனில் இன்பமும் அவ்வாறே. அறமும் அவ்வாறே. அவ்வாறெனில் இழப்பும் துயரும் வெறுமையும்கூட வெறும் சொற்களென்றே ஆகலாம். சொற்களால் துரத்தித் துரத்தி குளவிக்கூட்டம்போல் கொட்டப்படும் சிற்றுயிர் நான். திரும்பிநோக்கி அச்சொற்களை துரத்த என்னால் இயலவில்லை. இவர்கள் அனைத்தையும் சொல்லாக்கி, ஆடற்களத்தில் கருக்களாக்கிவிட்டிருக்கிறார்கள். நான் நிலத்தில் நின்றிருக்கிறேன். பெருங்காற்றுகளால் அலைக்கழிக்கப்படுகிறேன். வான்வெம்மையால் எரிகிறேன்.

அவன் பெருமூச்சுடன் சால்வையைச் சீரமைத்து கைகூப்பி காத்து நின்றிருந்தான். பீமனின் தேர் அணுகி வருவது தெரிந்தது. அஸ்தினபுரியின் அமுதகலக் கொடி முகப்பில் வந்தது. அதை கோட்டையின் கொடிவீரன் சென்று எதிர்கொண்டு முறைமை செலுத்தினான். வைதிகர் வேதம் ஓதி வரவேற்றனர். இசைச்சூதரும் மங்கலச்சேடியரும் பீமனை எதிர்கொண்டு வணங்கினர். ஒவ்வொரு முறைமைச் சடங்கும் அதற்குரிய முறையில் நிகழ்ந்தது. நகரம் முறைமைகளுக்கு முற்றாக பழகிவிட்டிருந்தது. முன்பு நிகழ்ந்தபோதிருந்த சிறு தடுமாற்றங்களும் குழப்பங்களும் இன்றி காற்றில் இலைகள் அசைவதுபோல இயல்பாக, என்றும் அவ்வண்ணமே நிகழ்வதுபோல, ஒவ்வொன்றும் நிகழ்ந்தன.

மங்கல இசைகள், மங்கலச் சடங்குகள், மங்கலப் பொருட்கள். மங்கலம் மங்கலம் என எவரிடம் வேண்டுகிறார்கள்? எதை அகற்றிக்கொள்கிறார்கள்? குருதியைப்போல் ஒரு மங்கலம்

இல்லை என்பார்கள் தொல்குடியினர். அவன் பீமன் உடலை தொலைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். அதில் அந்த விசையற்ற மெல்லசைவு நிகழ்ந்துகொண்டிருந்தது. அவன் கண்ட மானுடரிலேயே ஆற்றல் மிக்கவன். அதில்தான் விசையின்மை ஒவ்வொரு அசைவிலும் வெளிப்பட்டது. தசைகள் மிக மெல்ல நெளிந்து அமைந்தன. பெருங்கைகள் பொருளற்றவையென தோளில் தொங்கிக்கிடந்தன. யானையின் அசைவு. துதிக்கையின் மெல்லிய நெளிவு.

மங்கலச்சேடியர் நெற்றியில் செங்குறியிட்டு விலக நகுலனும் சகதேவனும் அருகே சென்றனர். பீமன் அவர்கள் இருவரையும் மாறி மாறி நெஞ்சோடு தழுவி கைகளால் முதுகை அறைந்தான். சகதேவன் குனிந்து விழிநீர் சிந்தினான். நகுலன் வேறுபக்கம் திரும்பிக்கொண்டான். நகுலன் அழுவதை பீமன் பார்த்தான். அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி சிரித்தபடி “என்ன?” என்றான். “இல்லை” என்று நகுலன் தலையசைக்க “வா” என சொல்லி மீண்டும் அள்ளி தன் நெஞ்சோடு அணைத்து இறுக்கிக்கொண்டான். சகதேவன் பீமனின் தோள்களில் தலைவைத்து கண்ணீர் சிந்தினான். பீமன் தன் பெரிய கைகளால் அவன் கன்னத்தை தட்டி விழிநீரைத் துடைத்து ஆறுதல்படுத்தினான். “வருக!” என்றபடி அவன் இருவரையும் இரு கைகளால் அணைத்துக்கொண்டு முன்னால் வந்தான்.

அவன் தன்னை பார்க்கக்கூடாதென்றே யுயுத்ஸு விரும்பினான். யுயுத்ஸு பின்காலடி வைத்து நெடுந்தொலைவு சென்றுவிட்டிருந்தான். ஆனால் அது அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது. உடல் அங்குதான் இருந்தது. அங்கு கொந்தளித்த பெருந்திரள் வாழ்த்தொலிகள் பீமன் தன்னை காணாமல் மறைத்துவிடக்கூடும் என்று யுயுத்ஸு நினைத்தான். அத்தனை

பெரிய வாழ்த்துக்கூச்சல் அவனை கதைகளினூடாக அறிந்தவர்களிடமிருந்தே எழ முடியும். அங்கு முன்பிருந்த குடிகள் ஒருபோதும் அத்தகைய முற்றுவகையை, முழுதுள்ளத்து வாழ்த்தை அவனுக்கு அளிக்க இயலாது. அவர்களிடம் கசப்புகள் எஞ்சியிருக்கும். துயர்கள் அறியாமல் எழுந்து வரும். அங்கிருந்த குடிகள் தசையுடலிலிருந்து எழுந்த தெய்வத்தை என அவனை பார்த்தனர்.

அவர்களின் கண்கள் பீமனை தொட்டுத்தொட்டு உழிந்தன. ஒருகணம் கன்றை நக்கும் பசுவின் நாக்கு. மறுகணம் புது மண்ணை முகர்ந்து முகர்ந்து வெறிகொள்ளும் ஓநாய். மறுகணம் மலர்களை முத்தமிட்டு முத்தமிட்டு திளைக்கும் வண்டு. பெருந்திரளிடம் எழும் உணர்வுகள் கூடிக்கூடி பேருருக்கொள்கின்றன. அத்தனை விழிகளும் இணைந்து மாபெரும் விழி என ஆகி அவனை நோக்கி மலைத்தன. அவனை காதலுடன் தழுவித்தழுவி கொண்டாடின. அவ்விழிகள் அவனை தெய்வமாக்கின. அத்தகைய பல்லாயிரம் நோக்குகளுக்கு முன் எந்த மானுடனும் தெய்வமென்றே தன்னை உணர முடியும். தெய்வங்கள் நோக்குகையில் மானுடருக்கும் புழுக்களுக்கும் பூச்சிகளுக்கும் இடையே வேறுபாடு தெரிவதில்லை. தங்கள் நிமிர்வால், கடத்தலால், ஓங்குதலால் அந்நோக்குகளை அதன்பின் தெய்வங்களே உருவாக்குகின்றன. கல்லில் சிலையை தெய்வங்கள் எழுப்புகின்றன. விலங்குகளிலும் மானுடரிலும்கூட அவை தெய்வங்களை நிகழ்த்துகின்றன. தெய்வங்கள் மானுடரை ஆளும் ஆணையை மானுடரிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றன.

அவன் பீமனின் விழிகளை பார்த்தான். அங்கு எழுந்த வாழ்த்துகள் எதையும் அவன் அறியாதவன் போலிருந்தான்.

ஒருகணத்தில் அவன் யுயுத்ஸுவை பார்த்தான். இரண்டு எட்டு எடுத்து முன்னால் வந்து யுயுத்ஸுவின் தோள்களை வளைத்து தன் உடல் நோக்கி சேர்த்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டான். "நன்று, இளையோனே நன்று" என்றான். யுயுத்ஸுவின் உடல் உலுக்கிக்கொண்டது. "நன்று! நன்று!" என்று அவன் செவிக்குள் பீமன் குரல் ஒலித்தது. அவன் மெய்ப்புகொண்டான். தொண்டை கரகரப்பு அடைந்தது. மூச்சை அடக்க முயன்றபோது விம்மலோசையுடன் அதுவே வெடித்தது. அவன் பீமனின் நெஞ்சில் தோள் வைத்து அழத்தொடங்கினான். பீமன் அவன் கன்னத்தைத் தட்டி தோளை உலுக்கி "நன்று! நன்று!" என்றான். அவனை உலுக்கி "வருக!" என்று கொண்டு சென்றான்.

யுயுத்ஸு "என்னால் மறக்க முடியவில்லை, மூத்தவரே. மறக்கவே முடியவில்லை. நான் கௌரவர்களின் இளையோன். நான் துரியோதனனின் சிறுவன்… அவ்வுணர்வுகளை என்னால் கடக்க இயலவில்லை" என்றான். பீமன் அவனை சற்றே விலக்கி அவன் கண்களை நோக்கி "ஆம், நானும் கௌரவரில் ஒருவனே. நான் முதற்கௌரவனின் மறுபாதி" என்றான். திடுக்கிட்டு அவ்விழிகளைப் பார்த்து யுயுத்ஸு உடல் தளர்ந்தான். "நன்று. இவ்வண்ணமே நிகழும் எனில் எவர் என்ன செய்யக்கூடும்?" என்றபின் மீண்டும் யுயுத்ஸுவை அணைத்துக்கொண்டு "நன்று இளையோனே, வருக!" என்றான்.

கால்கள் தளர பீமனின் பெரிய கைகளால் கிட்டத்தட்ட தூக்கப்பட்டவன்போல அவனுடன் யுயுத்ஸு சென்றான். உடல் குலுங்க விழிநீர் உதிர அவன் விசும்பி அழுதுகொண்டிருந்தான். "நன்று" எனும் சொல்லே அவனுக்குள் ஒலித்தது. அது பீமன் அவனுக்கு சொன்னதல்ல. தனக்குத்தானே சொன்னது.

அச்சொற்களை ஊழ்கநுண்சொல் என சொல்லிச் சொல்லி அதனூடாக அவன் மீண்டுகொண்டிருந்தான் போலும். அச்சொல் அவனை இருண்ட ஆழத்திலிருந்து தூக்கி கொண்டுவந்துகொண்டே இருக்கிறது போலும். “நன்று! நன்று!” எதை நன்றென்று கூறமுடியும்? எத்தனை பொருளில்லாச் சொல்! சொற்கள் பொருளிழக்கையில்தான் ஊழ்கநிலை கொள்கின்றன. பேராற்றலைப் பெறுகின்றன.

இவையனைத்தையும், இவ்வாறு நிகழ்வன அனைத்தையும், துயரென்றும் வெறுமையென்றும் களிப்பென்றும் வெற்றியென்றும் நிகழ்வன அனைத்தையும், விழிகளைச் சூழ்ந்திருக்கும் இப்பெருங்குரலை, அலைக்கும் இப்பெருந்திரளை, அதிரும் இக்காற்றை, காலையின் நல்லொளியை, இதோ இன்று புதிதாய் பிறந்து எழுந்து நிற்கும் இந்நகரை இச்சொல்லினூடாக கடந்துசெல்ல வேண்டும். “நன்று!” இந்நகரை ஒரு சொல்லென ஆக்கிக்கொள்ள வேண்டும். “நன்று.” சொல்லென ஆக்கிக்கொள்வது ஒன்றே வழி. “நன்று.” ஒற்றைச்சொல்போல் தெய்வம் என்று ஆவது வேறில்லை. “நன்று! நன்று!” இனிய சொல். அருமணியும் படைக்கலமும். அமுதும் நஞ்சும். என் ஆடற்களத்தின் கரு. என் ஆலயத்தெய்வம். “நன்று! நன்று!”

நகரின் வாழ்த்துக் கொந்தளிப்புகளினூடாக மஞ்சளரிசி, மலர்கள், பொற்பொடிப் புழுதியினூடாக முகில்களில் மிதப்பதுபோல் அரண்மனை நோக்கி சென்றுகொண்டிருக்கையில் பெருவிடாயுடன் அந்த ஒரு சொல்லை யுயுத்ஸு பற்றிக்கொண்டான். “நன்று! நன்று! நன்று!” என்று அவன் காலம் திகழ்ந்துகொண்டிருந்தது.

# களிற்றியானை நிரை - 62

## பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 12

பேச்சு இயல்பான அமைதியை சென்றடைந்தது. பீமனை மாறிமாறித் தழுவி பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் உடல்களை உணர்ந்து தனித்தனர். தாங்களென்றான பின்னர் மொழியை சென்றடைந்தனர். மொழியில் தங்களை அளந்து அளந்து ஊற்றி முன்வைத்தனர். மொழி காட்டெருமைகள் கொம்புமுட்டிக்கொள்வதுபோல உரசி வருடி விலகி மீண்டும் தொட்டு விளையாடியது. பேராற்றலின் விளையாட்டுக்கருவி. கொலைக்கருவிகளால்தான் மிகச் சிறந்த விளையாட்டை நடத்த முடிகிறது. யுயுத்ஸு அவர்கள் ஒவ்வொருவரும் அகத்தே சலிப்பதை, அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டிருப்பதை உணர்ந்தான். ஆனால் அத்தனை விரைவாக விலக முடியாது. மேலும் சில பொழுதுகள் தேவைப்பட்டன.

அன்பு என்பதும் பற்று என்பதும் அவ்வளவுதான். மூன்றுநாழிகை, அல்லது நான்கு. அதற்குமேல் அவை நீடிப்பதில்லை. அவை ஒருபக்கம் மட்டும் எழும் ஊசல்கள், அவற்றுக்கு ஓர் எல்லை உள்ளது. இன்னொன்று எழ வேண்டும். ஒரு பழைய கசப்பு, ஓர் உளக்குறை, ஒரு குற்றச்சாட்டு. அது நேருக்குநேர் என நிகழமுடியாது, அத்தருணம் அத்தகையது. ஆகவே பிறிதொருவர் மேல் அது எழும். அவரை சற்றே வெறுத்து, சற்றே வசைபாடி, சற்றே குறைசொல்லி, சற்றே வம்புரைத்து அதனூடாக மீளமுடியும். கொஞ்சம் கசப்பும் துவர்ப்பும் காந்தலும் வந்துவிட்டதென்றால் மீண்டும் விடாய்கொண்டு நா தவிக்க அன்பின் இனிமை நோக்கி செல்லமுடியும்.

நகுலன் பீமனிடம் “மூத்தவரே, தாங்கள் அரசருக்கென கொண்டுவந்திருக்கும் சிறப்புப் பரிசு என்ன?” என்றான். அவ்வினாவே அனைத்து உள்ளத்திலும் வெவ்வேறு சொற்களுடன் திகழ்ந்து கொண்டிருந்தமையால் திடுக்கிட்டவர்கள்போல் அவனை திரும்பிப் பார்த்தனர். யுயுத்ஸூ அத்தருணத்தில் பிறிதொரு சொல்லாடல் எழுவதைவிட அது உகந்ததே என உணர்ந்தான். பீமன் பீடத்தில் கால்களை நீட்டி அமர்ந்து, கைகள் கைப்பிடி மேல் தளர்ந்து எடைகொண்டு பதிய, கண்களை மூடி அமர்ந்திருந்தான். அறைக்குள் சாளரத்தினூடாக மென்காற்று சுழன்று வந்தது. நகுலனின் வினாவை அவன் கேட்டதாகத் தெரியவில்லை.

சுரேசர் “அவ்வண்ணம் ஒரு பரிசு இருந்தாகவேண்டும் என்பதில்லை” என்றார். ஆனால் நகுலன் அதை விடாமல் “மூத்தவர் நோயுற்றிருக்கிறார் என்பதனால் சொன்னேன். அவர் பரிசுகளை விரும்புவார்…” என்றான். சகதேவன் “ஆம், மேலும் நாங்களிருவருமே தனிப்பரிசுகளை கொண்டுவந்திருப்பதனால் நீங்களும் பரிசு கொண்டுவந்தாகவேண்டும் என்னும் நிலை உருவாகிவிட்டது” என்றான். பீமன் சிறிய விழிகளைத் திறந்து நகுலனை நோக்கினான். சுரேசர் “நான் சொல்கிறேன்” என்றார். “அரசர் நோயுற்றிருக்கிறார். அவருக்கு வெற்றிச் செய்திகளும் பரிசுகளும் மருந்தாகக்கூடும். ஏனென்றால் இது உளத்தளர்வால் உருவான நோய்” என்றார்.

யுதிஷ்டிரனின் நோய் எதன் பொருட்டென்று சுரேசர் விளக்கினார். பீமன் விழிகள் மங்கலடைந்திருக்க துயில்பவன்போல் அமர்ந்து அதை கேட்டான். “நம்மால் இப்போது சொல்லமுடியாது, இது அறியாப் பூட்டுக்கு அறிந்த

தாழ்க்கோல்கள் அனைத்தையும் போட்டுப் பார்ப்பது போலத்தான். ஒருவேளை தாங்கள் கொண்டு வந்துள்ள பரிசால் அவர் நோய் நீங்கக்கூடும்" என்றார் சுரேசர். "இனி வரவிருப்பவர் இளையவர் பார்த்தன். அவர் அவ்வாறு ஒரு பரிசு கொண்டுவராமல் இருக்கவே வாய்ப்பு மிகுதி…" குரலைத் தாழ்த்தி "அவ்வண்ணம் ஒரு பரிசை நீங்கள் கொண்டுவரவில்லை என்றாலும்கூட நீங்கள் கொண்டுவந்துள்ளனவற்றில் அரியதோ, அழகியதோ ஆன ஒன்றை அவருக்கு பரிசளிக்கலாம். அது உங்களால் கொடுக்கப்படும்போது மேலும் அரியதாகலாம். பரிசுகள் அத்தருணங்களால் அம்மானுடரால் மதிப்பேற்றம் செய்யப்படுவன" என்றார்.

பீமன் கண் திறந்து நகுலனை ஒருமுறை பார்த்துவிட்டு "அவருக்கென தனியான பரிசு எதையும் கொண்டுவரவில்லை. ஆனால் இப்போது அவருடைய நலமின்மை குறித்து நீங்கள் சொல்லக் கேட்கையில் ஒரு பரிசு அவருக்குரியது என்ற எண்ணம் ஏற்படுகிறது" என்றான். "உண்மையில் நான் அதை மறந்துவிட்டிருந்தேன். நான் கொண்டுவந்த செல்வத்துடன் அது எங்கோ கிடக்கும். ஆனால் அது என் கனவில் பலமுறை வந்துவிட்டது என்னும்போது அதை நான் கடந்துசெல்லவில்லை என்று தோன்றுகிறது. நீங்கள் சொன்னதுமே அதை நினைவுகூர்ந்தேன் என்பதனாலேயே அது மூத்தவருக்குரியது என்றும் படுகிறது." அவன் புன்னகைத்து "அல்லது ஒருவேளை இதை மூத்தவருக்கு அளிப்பதனூடாக இதில் இருந்து நான் விடுபட முடியும்… என்னால் கடந்துசென்றுவிடவும் முடியும்" என்றான்.

சுரேசர் “எதுவாயினும் இவ்வளவு சொற்களை அதைப்பற்றி சொல்வதற்கிருப்பதே நல்லது, அது அவருக்குரியதுதான். சொற்களே அவருக்கு பரிசாக முடியும். அச்சொற்களை உருவாக்கும் பொருளே நமக்குத் தேவை” என்றார். பீமன் “விந்தையானது, ஒருவேளை என் கனவாகவேகூட இருக்கலாம். மலையிறங்கும்தோறும் அதை கனவு என்றே உணர்கிறேன். இந்த வாழ்க்கையில் நான் அறிந்த இனியவை அனைத்தும் கனவுகளே, துயரங்கள் அனைத்தும் மெய்யென” என்றான். அவன் முகம் விரிந்தது. “அது ஏன் என்னை விடாமல் தொடர்கிறது என இப்போது அறிகிறேன். அது ஓர் அழகிய குழந்தைக்கதை போன்றது. ஆனால் ஒரு தொன்மையான பாடல்போல் விரித்து விரித்தெடுக்கும் ஆழ்பொருள் கொண்டது…” என்றபின் கைகளை தட்டினான்.

ஏவலன் வந்து வணங்க “என் துணைப்படைத்தலைவன் ஊர்வரனிடம் சென்று வடபுலத்தில் கின்னரநாட்டில் நாம் கண்ட போதநாட்டு முதிய துறவி அளித்த அந்த விழிக்கல்லை எடுத்துவரச் சொல்” என்றான். அவன் தலைவணங்கி வெளியே சென்றான். பீமன் “அது விந்தையான கல். அதை அவர்கள் நாகம் சீறுவதுபோன்ற ஒலியில் ட்ஸி என்கிறார்கள். எனக்கு அதை அளித்தவர் அதற்கு நாகாக்ஷம் என்று பெயர் சொன்னார். பல கைகள் மாறி, மாறுந்தோறும் கதைகள் பெருகி அவரை வந்தடைந்தது அது. சிறியது, மலையில் கிடைக்கும் ஏதோ கல்லில் இருந்து செதுக்கி உருவாக்கப்பட்டது. அதில் இருபக்கமும் சிறிய கண்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அது நம்மை வெறித்து நோக்கிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும்” என்றான்.

“அது மலைகளின் கண் என்கிறார்கள். முதலில் அதை பார்த்ததும் எனக்குத் தோன்றியது மாமலைகளை அத்தனை சிறிய பொருளாக ஆக்கிக்கொள்வதில் இருக்கும் மானுடக் கனவுதான். அந்த மலையே அவ்வாறு ஆணையிடாமல் மானுட உள்ளத்தில் அது தோன்றியிருக்காது. அதை கழுத்தில் அருமணியாக அணிகிறார்கள். உடலிலேயே வைத்திருக்கிறார்கள்.” பீமன் நகைத்து “எங்கு சென்றாலும் மலையை உடன்கொண்டு செல்கிறார்கள்” என்றான். சுரேசர் “நாம் இங்கே கைலை மலையை சிவக்குறி என சூடிக்கொள்வதுபோல” என்றார். பீமன் “ஆம், அதை நான் எண்ணவில்லை. மலைகளின் விழைவுபோலும் அது” என்றான். சகதேவன் “மலைகள் அசைவும் பெயர்வும் அற்றவை. அசையவும் அலையவும் அவைகொண்டுள்ள விழைவே அவ்வாணையாக மானுடருக்கு வந்தது போலும்” என்றான்.

பீமன் “போதநிலம் குறித்து நான் முன்பு அறிந்திருக்கவில்லை. வடக்கே கின்னரநாடுதான் உள்ளது, அதற்கப்பால் வெண்பனி மூடிய இமையமலையடுக்குகள் மட்டுமே என்றே நினைத்திருந்தேன். மலைகளுக்கு அப்பால் பீதர்நிலம் உள்ளது என்றும் தெரியும். மலைகளின் உச்சியில் வானில் என நின்றிருப்பது போதநிலம். அம்மக்கள் அதை போ என்றும் போத் என்றும் அழைக்கிறார்கள். அவர்களுக்கு கீழிருக்கும் நிலங்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களின் குருதி குளிர்ந்திருப்பது என்றும் அவர்களின் விழிகளும் பற்களும் பனிக்கட்டியால் ஆனவை என்றும் அவர்களால் மலைகளில் இருந்து மலைகளுக்கு பறக்கமுடியும் என்றும் கின்னரநாட்டில் கதைகள் உள்ளன. அந்நிலத்தை கின்னரநாட்டில் மின்னல்களின் நிலம் என்றும் சொல்கிறார்கள். அங்கே தலைக்குமேல் எப்போதுமே மின்னல்கள் துடித்துக்கொண்டிருக்குமாம்.

மின்னல்களால் ஆன ஒரு சிலந்திவலை அவர்களின் வானம் என்றனர். அப்படி ஏராளமான கதைகள். ஆனால் அங்கேகூட போதநாட்டிற்குச் சென்று மீண்ட எவரையும் நான் பார்க்கவில்லை.”

“போதநாட்டைப் பற்றி கேள்விப்படுந்தோறும் அங்கு மெய்யாகவே சென்று மீண்ட எவரேனும் இருந்தால் அழைத்துவரும்படி சொல்லியிருந்தேன். ஒவ்வொரு நாளும் புதிய கதைகளே வந்துகொண்டிருந்தன. உண்மையில் போதநிலத்தைப் பற்றிய கதைகளைக் கொண்டே அங்குள்ள இறைவழிபாட்டுமுறைகளை உருவாக்கியிருந்தனர். மேலே இருந்து பனி உருகி ஓடைகளாகி வருவதுபோல அக்கதைகளும் இடிமின்னல்களின் நாட்டிலிருந்து வருகின்றன என்றனர். ஒருநாள் அந்த முதுதுறவியைப் பற்றி என் வீரர்கள் அறிந்தனர். அவர் கின்னகைலை மலையின் அடிவாரத்தில் ஒரு சிறு குன்றின்மேல் குகை ஒன்றில் தங்கியிருந்தார். அவர் போதநிலத்தில் இருந்து வந்தவர் என்று அவ்வூர் மக்களால் வழிபடப்பட்டார். அவரைப் பற்றிய செய்திகளை கேட்டறிந்தேன். அவர் அவர்களால் தெய்வநிலை கொண்டவர் என கருதப்பட்டார். மலைக்குமேல் உள்ள மக்களின் மெய்ஞான வழி போதம் என்று அழைக்கப்பட்டது. அதை அவர்கள் போ என்றும் போன் என்றும் சொன்னார்கள். அந்த வழியின் தொலைநிழலே கின்னரநாட்டினரின் வழிபாடு.

என் வீரர்கள் அவரைப் பற்றி என்னிடம் வந்து சொன்னார்கள். அவரை என்னிடம் அழைத்துவரும்படி சொன்னேன். அவர் எங்கும் செல்வதில்லை என்றார்கள். நான் அப்போது எனக்கே புரியாத ஏதோ எரிச்சலில் இருந்தேன். ‘எனில் அவரை தூக்கிவருக!’ என்று ஆணையிட்டேன். என் வீரர்கள் நூறுபேர்

அவரை கொண்டுவரும்பொருட்டு சென்றனர். அவர் வாழ்ந்த குகைக்குள் சென்று அவரிடம் உடன் வரும்படி அழைத்தனர். அவர் எப்போதும் ஊழ்கத்தில் ஆழ்ந்திருப்பவர். அவர்களின் சொற்களை செவிகொள்ளவே இல்லை. அவர்கள் அவரை தூக்க முற்பட்டனர். அவர் எடைமிகுந்தவராக இருந்தார். கல்போல, இரும்புபோல. மண்ணில் உள்ள எப்பொருளையும்விட பலமடங்கு எடைகொண்டவராக. அவர்களால் அவரை அசைக்கக்கூட முடியவில்லை. பன்னிருபேர் சேர்ந்து அவரை பற்றி இழுத்தபோதுகூட அவரிடம் சிறு அசைவுகூட உருவாகவில்லை. அவர் மலையில் பொருந்தியிருக்கும் பாறை எனத் தோன்றினார். ஆனால் சற்றுபொழுது கழிந்து ஊழ்கநிறைவு அடைந்து எழுந்து எளிதாக நடந்து சென்றார்.

அவர்கள் அஞ்சி திரும்பி ஓடி என்னிடம் வந்து நிகழ்ந்தனவற்றை சொன்னார்கள். நான் சீற்றம் கொண்டேன். “அது ஏதோ இந்திரமாயம். உளம்நிலைத்தவனை அந்த மாயம் ஏதும் செய்யாது. நான் செல்கிறேன்” என்றேன். நானே கிளம்பி அவரைப் பார்க்க அந்த குகைக்கு சென்றேன். கீழிருந்து அந்த மலையின் படிகளில் ஏறும்போது அங்கிருந்த மலைப்பாறை ஒன்றை தூக்கிக்கொண்டேன். அதை தோளில் ஏற்றியபடி படியேறி மேலே சென்றேன். ஆனால் படிகளில் ஏற ஏற அந்தப் பெரும்பாறை எடையில்லாமல் ஆகிக்கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் இறகென, பஞ்சென ஆகியது. அது அங்கில்லை என்றும் என் கைகள் வெறுமனே எடைசுமப்பதாக நடிக்கின்றன என்றும் தோன்றியது. அதை கீழே வீசிவிட எண்ணினேன். ஆனால் இன்மையை எப்படி கீழே வீச முடியும்?

அக்குகையின் வாயிலை அடைந்தேன். உள்ளே அவர் கவரிமான் தோலில் அமர்ந்து ஊழ்கம் புரிந்துகொண்டிருந்தார். அவருடைய தோற்றம் என்னை துணுக்குறச் செய்வதாக இருந்தது. நீண்ட தலைமயிர் வளர்ந்து தரை தொடும்படி நீண்டிருந்தது. அதை ஏழு பின்னல்களாக ஆக்கியிருந்தார். அவருடைய புருவங்கள் வளர்ந்து கன்னத்தைத் தொட்டு தொங்கின. மீசையும் தாடியும்கூட செறிந்து வளர்ந்து மடியை தொட்டன. பீதர்களுக்கு அத்தனை செறிவான நீண்ட தாடியையும் மீசையையும் நான் கண்டதே இல்லை. நகங்கள் வளர்ந்து ஐந்து பறவையலகுகள் போலிருந்தன. அவர் விழிகளும் விந்தையானவை. பீதர்களின் விழிகளைப் போலன்றி அவை உருண்டு துறித்து நோக்குகொண்டிருந்தன. பின்னர் நான் கண்டறிந்தேன் போ மெய்வழியின் தெய்வங்கள் அனைத்துமே அத்தகைய நோக்கு கொண்டவை என.

நான் அந்தப் பாறையை கீழே போட்டேன். எடையோசையுடன் அது விழுந்தது. நிலம் அதிர்ந்தது, விழுந்த இடத்திலிருந்த பாறைகள் பொடியாயின. நான் விழிநீர் பெருக கைகூப்பி நின்றேன். அவர் என்னை அறியவே இல்லை. அருகணைந்து அவர் காலடியில் என் தலையை வைத்தேன். என் அகமும் எடையிழந்தது. நான் அழுதுகொண்டிருந்தேன். கடோத்கஜனையும் சுதசோமனையும் சர்வதனையும் நினைத்துக்கொண்டேன். என் எல்லா எல்லைகளும் சிதறின. என் தலையை அவர் காலடியில் அறைந்து அறைந்து கதறி அழுதேன். என் குரல் குகையிருளுக்குள் எதிரொலித்தது.

பின்னர் மெல்ல ஓய்ந்து உடலை சுருட்டிக்கொண்டு கருக்குழவிபோல அவர் காலடியில் கிடந்தேன். அப்படியே துயின்றுவிட்டேன். நான் கண்டது பிறிதொரு உலகம்.

ஒளியாலான உடல்கொண்ட மானுடர் மிதந்து அலையும் ஒரு நகரம். ஆடி என மின்னி நெளியும் ஒரு கோட்டை, குவிந்தும் செறிந்தும் உருவெடுத்த ஒளியாலான மாளிகைகள். எல்லா ஓசைகளும் இசையே என்றான சூழல். என் உள்ளம் தித்திக்க விழித்துக்கொண்டேன். கண்களைத் திறந்தபோது காட்சிகள் துலக்கம் பெற்றிருந்தன. செவிகள் பலமடங்கு கூர்கொண்டிருந்தன. என் உடலே இனிமையில் திளைத்துக்கொண்டிருந்தது. ஒரு சொல் இன்றி அவர் காலடிகளைப் பணிந்து விடைபெற்றேன். ஒரு சொல் எஞ்சாத உள்ளம் கொண்டிருந்தேன். இன்பத்தின் அழகு என்னவென்று மெய்யாகவே உணர்ந்துவிட்டிருந்தேன்.

மறுநாள் மீண்டும் அவரைச் சந்திக்க அங்கே சென்றேன். தொடர்ந்து சென்றுகொண்டிருந்தேன். அவர் அருகே அமர்ந்து மீள்வதொன்றே நான் செய்வது. ஒருநாள் மேலே செல்வதற்கு முன் கீழே கிடந்த பாறை ஒன்றை தூக்க முயன்றேன். அது எடையே இல்லாமல் இருந்தது. யானையளவு பெரிய பாறைகளை என் சுட்டுவிரலால் தொட்டு தூக்கினேன். வீசி எறிந்து பிடித்தேன். முகில்கீற்றை அளைவதுபோல அவற்றை வைத்து விளையாடினேன். அன்று மேலே செல்லும்போது சிரித்துக்கொண்டிருந்தேன். அவர் அருகே சென்றமர்ந்தபோது எனக்கு இப்புவியில் அணுக்கமான பிறிதொருவர் இல்லை என்றே உணர்ந்தேன். ஆகவே சிரித்துக்கொண்டே அவரிடம் சொன்னேன். “நான் கண்ட அந்த இடம் எது? அங்கன்றி எங்கும் நான் செல்லவிழையவில்லை.”

அவர் எந்தச் சொல்லும் உரைக்கவில்லை. நான் மீண்டும் மீண்டும் அதையே கேட்டேன். சீற்றம் எழ மீளமீள அதையே கேட்கத் தொடங்கினேன். வெறிகொண்டு நூறுமுறை அதை

கேட்டேன். பின்னர் எழுந்து திரும்பி நடந்தேன். படியிறங்கி வந்தபோது நான் தூக்கி விளையாடிய பாறைகள் அங்கே கிடந்தன. சீற்றத்துடன் அவற்றில் ஒன்றை மிதித்தேன். என் கால் உடைவதுபோல வலிக்க அலறியபடி அமர்ந்துவிட்டேன். அந்தப் பாறை மீண்டும் எடைகொண்டுவிட்டிருந்தது. நான் மீண்டும் படியேறி ஓடி அவரை அடைந்தேன். நொண்டியபடி அருகணைந்து நெஞ்சில் அறைந்து கூவினேன். “கூறுக, ஆசிரியரே! அது எந்த இடம்? அதை சொல்லாவிட்டால் இப்போதே இங்கே உயிர்துறப்பேன்.”

அவர் புன்னகைத்து “அதன் பெயர் ஷம்பாலா. அதை மெய்ஞானத்தின் நிலம் என்கின்றன நூல்கள். அங்கே மலைகளுக்கு மேல் மெய்யறிவின் மண்ணான போதநிலத்தில் எங்கோ உள்ளது அது. மண்ணில் ஊழ்கம் நிறைந்தவர்களே போதநிலத்தை சென்றடைய முடியும். அங்கே சென்று கனிந்தவர்களே மேலும் எழுந்து ஷம்பாலாவுக்கு செல்லமுடியும்” என்றார். “ஆனால் விழைபவர் அனைவருமே அதை கனவென ஒருமுறையேனும் கண்டுவிடுவார்கள். அது ஓர் அழைப்பு. அவ்வழைப்பைப் பெற்றவர்கள் அமைதியின்மை அடைகிறார்கள். மண்ணில் அடையும் பிற இன்பங்களெல்லாமே பொருளற்றவை என உணர்கிறார்கள். அதன்பின் அவர்கள் அக்கனவிலிருந்து வெளிவரவே இயல்வதில்லை.”

நான் அவர் கால்களை பற்றிக்கொண்டேன். “நான் அங்கே செல்வேன். அங்கே செல்ல எதையும் கடப்பேன். எனக்கு வழிகாட்டுங்கள்” என்றேன். அவர் புன்னகைத்து “திரும்பிச் சென்று உன் மூத்தவருடன், உடன்பிறந்தாருடன் உள்ள உறவனைத்தையும் அறுத்துவிட்டு வா. உன் பொருட்கள்

அனைத்தையும் எரித்துவிடு…” என்றார். “தன் இல்லத்தை எரிக்காதவன் பயணத்தை தொடங்குவதேயில்லை என்று எங்கள் நூல்கள் சொல்கின்றன.” நான் தளர்ந்தேன். என்னால் அது இயலாது என்று உணர்ந்தேன். அவர் காலடியில் அமர்ந்துவிட்டேன். “நீ விழைவது இப்பிறவியில் நிகழாது. உன்னுடையது பிறவிமுடிச்சு” என்று அவர் சொன்னார். “ஆனால் இப்பிறவியில் நீ விழைந்தாய் என்பதனாலேயே மறுபிறவிகளில் இது தொடரும். சென்றபிறவியின் நீட்சியாகவே இங்கு வந்து இதை அறிந்தாய். நீ பாதையை கண்டுவிட்டாய். சென்றடைவாய்” என்றார். நான் பெருமூச்சுவிட்டேன். பின்னர் ஆறுதல்கொண்டு அங்கிருந்து கிளம்பினேன்.

நான் கின்னரநாட்டிலிருந்து திரும்பி வர முற்படுகையில் போதநிலத்து ஞானி அளித்ததாக அவரை வழிபடுவோன் ஒருவன் எனக்கு ஒரு பரிசை கொண்டுவந்து தந்தான். அவரிடம் விடைபெறச் சென்றிருந்தபோது அவர் எந்த உணர்வையும் காட்டவில்லை. நான் வணங்கி அறிவித்து திரும்பியபோது அவர் முகம் மாறவே இல்லை. அந்த அசைவின்மை என்னை துயருறச் செய்தது என்றாலும் அவ்வண்ணமே அது நிகழுமென்றும் அறிந்திருந்தேன். ஆகவே மறுநாள் காலை என் படைகள் கிளம்பிக்கொண்டிருந்தபோது என் மாளிகை முகப்பில் வந்து நின்ற பீதர்முகம் கொண்ட மலைமகன் எனக்கு வியப்பையே அளித்தான். அவன் “இதை போதர் உங்களுக்கு அளித்தார். அவர் ஆணைப்படி கொண்டுவந்தேன்” என அளித்தபோது திகைப்படைந்தேன். அது ஒரு சூதாக இருக்குமோ என்றுகூட ஐயம் கொண்டேன்.

அது வெண்பளிங்கால் ஆன ஒரு சிறிய பேழை. அதை திறந்து உள்ளே பார்த்தேன். உள்ளே இருந்தது ஒரு சிறிய கல்மணி. விழிகள் செதுக்கப்பட்டது. ஒருபக்க விழி நீலம், இன்னொருபக்கம் சிவப்பு. அரிசிமணியின் வடிவம், ஆனால் அரிசிமணியைவிட பத்து மடங்கு பெரியது. “இது என்ன?” என்று அவனிடம் கேட்டேன். “இது போதநிலத்து கல்மணி. இதை அவர்கள் ட்ஸி என்கிறார்கள். அங்கே கிடைக்கும் ஒரு வகையான அரிய பாறையில் செதுக்கப்படுகிறது. இதை மெய்மையின் துளி என்கிறார்கள். மெய்மை இந்த மலையடுக்குகளைப்போல ஒன்றைச் சிறிதாக்கி பிறிதொன்று என முடிவிலாது எழுவது. இது நம் கைவிரல்களுக்குள் அடங்கும் மெய்மை. மலையின் விதை என்று இதை சொல்வதுண்டு” என்றான்.

“அந்த அருமணி எனக்கு ஓர் ஒவ்வாமையையே அளித்தது” என்று பீமன் சொன்னான். “ஏனென்றால் அது அத்தனை அரியது அல்ல, அந்த மலைமகனே அதைப்பற்றி அறிந்திருக்கிறான். மலைமக்களின் தலைவர்கள் சிலரிடம் அதைப்போன்ற சிலவற்றை நான் கண்டதையும் நினைவுகூர்ந்தேன். அத்துடன் நான் விழைந்தது பொருட்களை அல்ல. பொருள்வடிவாகச் சுருங்கும் ஒன்றையும் அல்ல. எனினும் அந்தப் பரிசை பெற்றுக்கொண்டேன். அதை நான் பெற்றுக்கொண்ட செய்தியை போதரிடம் சொல்லும்படி சொல்லியனுப்பினேன். அப்பேழையை என்னுடன் வைத்துக்கொண்டேன்.” சுரேசர் “அங்கே அது எவ்வாறு பொருள்படுகிறது என்பதல்ல, இங்கே அது அரியதா என்பதே வினா” என்றார்.

ஏவலன் உள்ளே வந்து தலைவணங்கினான். பீமனின் முன் பீடத்தில் சிறிய மரப்பேழை ஒன்றை வைத்தான். பீமன் அதை

திறந்து அதற்குள் இருந்து மேலும் சிறிய ஒரு பளிங்குப்பேழையை எடுத்தான் அவன் கைக்குள் அது ஒரு சிறு சிமிழ் போலிருந்தது. தூய வெண்ணிறம். அதை அவன் திறந்தபோது அனைவரும் எழுந்து அதை நோக்கினர். அந்தக் கல்மணி மிக எளிதான ஒன்றாகவே முதலில் தோன்றியது. அதன்பின் அதன் விழிகள் தெரிந்தன. பீமன் அந்தப் பேழையை சற்றே உருட்டி அக்கல்லை அசையவைத்துக் காட்டியபோது இரண்டு விழிகளும் தெரிந்தன. அவ்வசைவில், அந்நோக்கில் அது உயிருள்ளதுபோல உளமயக்கு கூட்டியது.

“இந்த மணியைப் பற்றிய கதைகளை பின்னர் உசாவி அறிந்தேன். மலையின்மேல் சில பாறைகளில் விண்ணில் இருந்து மின்னல்கள் பாய்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் அவ்வாறு மின்னல்கள் பாயும்போது அது வானின் ஆற்றல்கொண்டு ஒளிபெறுகிறது. அது நீலமும் செம்மையும் கலந்து மின்னுகிறது. அதை டோர்ஜே என்கிறார்கள். டோர்ஜே என்றால் வைரம். அதில் ஒரு பகுதியை வெட்டி எடுத்து மென்மையான கல்லில் உருட்டி உருட்டி இதை உருவாக்குகிறார்கள். பின்னர் ஊசியால் இதில் விழிகளை செதுக்குகிறார்கள். நீலவிழி சாவையும் செந்நிறவிழி வாழ்வையும் குறிக்கிறது. அல்லது இரவையும் பகலையும். அல்லது இன்மையையும் இருப்பையும்” என்றான் பீமன்.

அவர்கள் ஒவ்வொருவராக அதை கூர்ந்து நோக்கினர். ஆனால் எவரும் அதை தொட முனையவில்லை. “மலைக்குமேல் போ மெய்வழியின் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு அவர்கள் ஊழ்கம் செய்யவேண்டிய நுண்சொல்லை இப்படி ஒரு ட்ஸி மணியாக ஆக்கி அளிக்கிறார்கள். இதை அளிப்பதற்கு உரிய நாட்களும் சடங்குகளும் உள்ளன. விண்கோளும் மின்நிலையும்

தெரிந்து நாள் குறிக்கிறார்கள். ஏற்கெனவே சொல்பெற்ற மாணவர்கள் சூழ அமர்ந்து ஆசிரியர் இதை புதிய மாணவனுக்கு அளிக்கிறார். இதைப் பெற்றவர் தன் உடலிலேயே எப்போதும் இதை வைத்திருக்கவேண்டும். இது அவரை ஷம்பாலா நோக்கி அழைத்துச் செல்லும். என்றேனும், எப்பிறவியிலேனும் அவர் அங்கே சென்று சேர்வார்.”

சுரேசர் “ஆனால் அது உங்களுக்கு போதரால் அளிக்கப்படவில்லை” என்றார். “ஆம், என் உளச்சோர்வு அதனாலேயே. நான் என்னிடம் அதை கொண்டுவந்து அளித்தவரிடம் அதை அவருக்கு போதரோ பிறரோ அளித்திருக்கிறார்களா என்று கேட்டேன். அவர் அந்த அருமணியை ஓரிருமுறை சில குடித்தலைவர்களின் உடலில் பார்த்திருக்கிறார். சிலர் அதை தெய்வமென நிறுத்தி வழிபடுவதையும் கண்டிருக்கிறார். அதைக் குறித்த கதைகளை கேட்டிருக்கிறார். அவ்வளவுதான்” என்றான் பீமன். யுயுத்ஸு “நம்மை வந்தடையும் ஒவ்வொன்றும் தனக்குரிய நோக்கம் கொண்டுள்ளது” என்றான். நகுலனும் சகதேவனும் அவனை திரும்பி நோக்கினார்கள். பீமன் சிறிய விழிகளைத் தழைத்து நிலம் நோக்கி அமர்ந்தபடி “ஆம், நானும் அவ்வாறே எண்ணுகிறேன்” என்றான்.

# களிற்றியானை நிரை - 63

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 13

பீமன் அந்தப் பேழையை மீண்டும் பீடத்தின்மேல் வைத்தான். அவர்கள் அனைவரையும் ஒரே தருணத்தில்

நோக்கியபடி அது அங்கிருந்தது. சற்றுநேரம் சொல்லின்மை நிலவியது. பீமன் "இதைப்பற்றி சொல்லும்படி நான் கின்னரநாட்டு பாணர்களிடம் உசாவினேன். புதுப்புது பாணர்களை அழைத்துவரச் சொன்னேன். ஒவ்வொருவரும் ஒரு கதை சொன்னார்கள். ஒன்றுடன் ஒன்று பிணைந்து தனிவழி தேரும் கதைகள் அவை. ஒரு கட்டத்தில் அக்கதைகளை அந்தியின் கேளிக்கைகளில் ஒன்றாகவே கொண்டேன்" என்றான்.

"உண்மையில் நான் இந்த விழிமணியை என் அகம் பொருட்படுத்தவில்லை என்றும் ஆகவே அக்கதைகளினூடாக செறிவுபடுத்திக் கொள்வதாகவும் நினைத்துக்கொண்டேன். இப்போது தெரிகிறது, இந்த விழிமணியை என் அகம் பெருஞ்சுமையாகவே எடுத்துக்கொண்டுவிட்டிருந்தது என்று. ஆகவே கதைகள் வழியாக அதை கரைத்தழிக்க, நான் அறிந்த பல்லாயிரம் கதைகளில் ஒன்றாக மாற்றிவிட முயன்றேன் என்று. ஆனால் கதைகள் இதைச் சூழ்ந்து பறந்தன. கதைகளுக்கு அப்பால் இது அவ்வண்ணமே இருந்துகொண்டிருந்தது" என்று பீமன் தொடர்ந்தான். "இதைப்பற்றிய கதைகள் அனைத்துமே ஷம்பாலா என்னும் மறைநகரை சுட்டுபவைதான்."

ஷம்பாலா மெய்யறிதலின் நகர். இப்புவியில் மானுட உள்ளத்தில் பாலில் நெய் என மெய்மை திகழ்கிறது. சற்றேனும் மெய்மை இல்லாத மானுடகுலமே உலகில் இல்லை. அவை அவர்களின் அச்சங்களால், விழைவுகளால், ஐயங்களால் மறைக்கப்பட்டிருக்கின்றன. மெய்மைகள் மெய்மையுடன் போரிடுகின்றன. ஒரு மெய்மை இன்னொன்றை திரிபடையச் செய்கிறது. ஒரு மெய்மை இன்னொன்றை பொய்

எனக் காட்டுகிறது. இரு மெய்மைகள் ஒன்றையொன்று நிரப்பி இரண்டுமே பொருளற்றவை என்று ஆகிவிடுகின்றன. மெய்நாடுபவன் நிலைபேறடைய நூறுமடங்கு மெய்யல்லாதவற்றை களையவேண்டியிருக்கிறது. மெய்நாட்டம் என்பது எப்போதும் பொய்யை, திரிபை களைந்து களைந்து 'ஈதில்லை ஈதில்லை' என முன் செல்வது மட்டுமே என்றாகியிருக்கிறது.

ஆகவே காலமெல்லாம் மக்கள்திரளால் மெய்மை கடையப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அலைகொள்கிறது, கொந்தளிக்கிறது. அரிதாக சில நிலங்களில், சில மக்கள்திரள்களில், ஒரு வரலாற்றுத் தருணத்தில் திரண்டு எழுகிறது. சற்றே நிலைகொள்கிறது, பிறிதொன்று வந்து அறைய சிதைவுறுகிறது. கரைந்து கலந்து திரிந்து உருமாறி அமைகிறது. அவ்வண்ணம் திரண்ட மெய்மைகள் முற்றாக மறைவதில்லை. மறந்தவை கனவில் திரண்டிருப்பதுபோல அவை எங்கோ ஓர் ஆழத்தில் ஒன்றென ஆகி நிலைகொள்கின்றன. அந்த இடமே ஷம்பாலா. அது மெய்மைகள் மட்டுமே செறிந்து உருவான பெருநகர். மெய்யில் திகழ்வோர் மட்டுமே வாழ்வது. மெய்யே ஒலிப்பது. மெய்யன்றி பிறிதில்லாதது.

ஆகவே அங்கே ஒளி மட்டுமே உள்ளது, இருளோ நிழலோ இல்லை. இன்பம் மட்டுமே உள்ளது, துன்பம் இல்லை. இனிமையும் இசையும் அழகும் மட்டுமே உள்ளன. அதை ஒருதட்டுத் துலா என்கின்றனர் பாணர். அவ்வண்ணம் ஒரு நிலத்தில் காலம் திகழமுடியாது. ஏனென்றால் சென்றும் வந்தும் ஆடுவதனூடாகவே தன்னை நிகழ்த்துவது காலம். அங்கே வாழ்வு நிகழமுடியாது, காலத்தின் ஒரு தோற்றமே

வாழ்வு. எனவே அது காலமின்மையில் கனவென உறைவது. நிலைகொண்டது. சென்றடைவோர் மீள முடியாத ஆழத்தில் அமைந்தது. பன்னிரு தூவெண் பனிமலைகளால் மண்ணுக்கு மேல் விண்ணுக்குக் கீழே வெறும்வெளியில் அந்நகர் நிலைநிறுத்தப்படுகிறது.

ஷம்பாலா கனவினூடாக மானுட உள்ளங்களுடன் தொடர்புகொண்டுள்ளது. மானுடரில் ஒருகணமேனும் அதை உணராத எவருமில்லை. அது அகர்த்தம் என்னும் பாதாளப்பாதைகளினூடாக உலகிலுள்ள அனைத்து நகர்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது. அகர்த்தத்தின் வாயில்கள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளன. அதை அறிவது ஊழ்கத்தாலேயே இயலும். அகர்த்தம் முடிவில்லாத படிகளால் ஆன சுரங்கப்பாதை. விசைகொண்ட ஆறுகள் பெருகியோடும் இருண்ட குகை. அவை பின்னிச் சுழன்று சென்றடைவது ஷம்பாலாவையே. ஷம்பாலாவிலிருந்து இனிய குளிர்காற்று அந்த குகைவழிகள் வழியாக வந்து நகர்களில் நிறைவதுண்டு. அந்நகரில் இனிய நிகழ்வொன்று நிறைவுகொள்கையில், அந்நகரில் அனைவருமே கனவிலென மெய்மையின் துளிக்கீற்றொன்றை உணர்கையில். நறுமணம் கொண்ட காற்று அது. அறிந்த எந்த மணமும் அல்ல, எனில் அறிந்த எந்த மணமாகவும் தன்னை காட்டிக்கொள்வது.

“கின்னரநாட்டு முதுபாணன் சுரூபன் சொன்ன கதை இது” என்று பீமன் தொடர்ந்தான். “நான் கின்னரநாட்டிலிருந்து கிளம்பும்போதுதான் அவன் வந்தான். ஒவ்வொருநாளும் அந்தியில் மலைமடக்குகள் சூழ்ந்த குளிர்ந்த வெளியில் கூடாரம் அமைத்து தங்கும்போது, கூட்டெரி எழுப்பப்பட்டு அனைவரும் அதைச் சூழ்ந்து அமர்ந்தபின் அவன் பாடுவான்.

அவர்கள் கிணை, முழவு போன்ற தோற்கருவிகளை தாளத்திற்கு பயன்படுத்துவதில்லை. வெவ்வேறு அளவிலான விளிம்புமடிப்பில்லாத பித்தளைக் கிண்ணங்களை நிரத்திவைத்து அவற்றில் கழியால் மெல்ல தட்டுகிறார்கள். அவை அவர்களின் குரல்களுடன் இணைந்து பாடத்தொடங்குகின்றன. அவை தாளமாகவும் உடன்சுதியாகவும் பின்னிசையாகவும் மாறுகின்றன. இரவின் குளிர் கம்பளிக்குள் ஊறி நிறைந்து தசைகளை தளரச்செய்வது வரை பாடுவார்கள். அவ்வாறு பாடப்பட்ட கதைகளில் சுரூபன் இந்தக் கல்மணி பற்றி சொன்னான்.”

இதை நாகவிழி என அழைக்கிறார்கள். அசைவற்றது, வெறித்து நோக்கி நிற்பது. பண்டு போதநிலத்தின் மலையுச்சிகளில் வாழ்ந்திருந்த வஜ்ரநாகம் எனும் ஒருவகை நாகத்தின் விழி அது. அவை மின்னல்களில் இருந்து உருவானவை. மின்னல் சிவந்து நெளிந்து துடிக்கையில் கூடவே கடுங்குளிரும் இருக்குமென்றால் அது குளிர்ந்து நாகமென்றாகிவிடுகிறது. மலையிடுக்குகளில் வெள்ளியருவிபோல தொலைவில் நின்று நோக்குபவர்களுக்குத் தெரிபவை அவையே. வழிதவறி மலைகளின் நடுவே அலைபவர்களுக்கு மலைப்பாதையோ என்று விழிமயக்கூட்டுவன. மண்ணில் அவை ஊடுருவிச்செல்ல பல்லாயிரம் சுரங்கப்பாதைகள் இருந்தன. விரும்பினால் விண்ணில் நெளிந்தெழுந்து சாட்டையெனச் சொடுக்கிப் பறக்கவும் அவற்றால் இயலும். அவை காற்றையும் இளவெயிலையும் உண்டு உயிர்வாழ்பவை. ஒளியாலானவை, எனவே நிழல்கள் அற்றவை.

அந்நாகங்கள் அனைத்துமே மலைகள் அனைத்துக்கும் மலையென்று அமைந்த போதமலைமேல் ஏறமுயலும்.

போதமலைகள் பன்னிரண்டு. அவற்றின் உச்சியில் அமைந்தது மகாபோத மலை. அதன்மேல் உள்ளது மெய்யறிவின் நகரமான ஷம்பாலா. ஒவ்வொரு நாளும் சுருளவிழ்ந்து சுற்றிப்படர்ந்து மலைமேறும் பல்லாயிரம் நாகங்களில் ஒன்று மட்டும் போதமலையின் முகடை சென்றடையும். அங்கு சென்றதுமே அது அழிவின்மையை அடைகிறது. போதமலையின் மீது எப்பொழுதும் மென்மையான மேகக்குவை ஒன்று நின்றிருக்கிறது. அது விண்ணொளியைக் கடைந்து எடுக்கப்பட்ட வெண்ணெய் என்று சொல்கிறார்கள். அது அமுது. விண்ணில் நிறைந்திருக்கும் முடிவின்மையே அதில் அழிவின்மை என்றாகி திரண்டுள்ளது.

கீழிருந்து செல்லும் நாகம் அந்த உச்சிமலையில் நின்றால் நாநீட்டி அம்முகிலை தொடமுடியும். தொட்டதுமே உடலெங்கும் பரவும் தாளமுடியாத இனிமை ஒன்றை உணர்ந்து மெய்யழிந்து விழுந்துவிடும். பல நாட்கள் அங்கு அது தன்னிலை இன்றி திகழும். உணவும் நீருமாக அவ்வமுது மாறிவிடும். எண்ணங்கள் அனைத்தும் இனிக்கும். அதன்பின் அது துயர் என்னவென்பதை அறிவதில்லை. நினைவுகளே துயர் என்பதனால் கடந்தவை எண்ணத்திலிருந்தும் நினைவிலிருந்தும் கனவிலிருந்தும் ஒழிந்துவிடுகின்றன. அழிவிலியாக மாறி அவை அங்கே திகழும். அவற்றின் கண்கள் கீழே உதிர்ந்து கிடக்கும். அவை மென்பனியில் உருகிவரும் நீரில் கீழிறங்கிக் கிடக்கும். அவையே இந்தக் கற்கள்.

அங்கு செல்லும் மானுடர் உண்டா என்று பிறிதொரு பாணனிடம் கேட்டேன். விண்ணில் ஏறிச்செல்லும் விழைவென்பது அனைத்து உயிர்களுக்கும் உரியது. போதமலை முடிமேல் ஏறிச் செல்வதென்பது அரிதினும்

அரிதானது. செல்லும் வழியில் உயிர்நீத்தவர்களே மிகுதி. ஒவ்வொரு அடிக்கும் இறந்தவர்களின் எலும்புகள், ஓடுகள் மீது மிதித்து மேலேற வேண்டும். மேலே செல்லுந்தோறும் இறந்தவர்களின் விழிகள் அருமணிகளென விழுந்து கிடக்கும். அவை மெய்மையை கண்டுவிட்டவர்களின் விழிகள். அவர்களை அவ்விழிகள் நோக்கி புன்னகைக்கும். அருகணைந்து உற்று நோக்கினால் நோக்கை விடாது கவ்விக்கொள்ளும். அவ்விழிகளிலேயே சிக்கிக்கொண்டு அங்கேயே உயிர்விடுவார்கள் சிலர். ஆகவே மேலே செல்லும்போது ஒருபோதும் அவ்விழிகளை நோக்கலாகாதென்பார்கள்.

மேலே போதநகரியான ஷம்பாலாவைச் சென்றடைந்தோர் மெய்யறிந்து அங்கே அமைவார்கள். அதற்கு ஒரு படி முன்னரே நின்றுவிடுபவர்களே திரும்பி வருகிறார்கள். அவர்களின் இமைப்பு மறைந்த விழிகள் தேவர்களுக்குரியவையாக மாறிவிடும். விழிமணிகள் நீல வைரங்களென சுடர்விடும். அவர்களால் காலத்தின் மும்மடிப்பை பார்க்க முடியும். துயருற்ற எவரையும் அவர்கள் தங்கள் விழிகளால் பார்த்தால் அக்கணமே அவர்கள் துயரிலிருந்து விலகுவார்கள். அவர்களின் அருட்சொல் ஊழுக்கும் தெய்வங்களுக்கும் ஆணை எனத் திகழ்வது. அவர்கள் நன்று தீதென்றோ, தேவை அல்ல என்றோ, தனது பிறிது என்றோ அறியாதவர்கள். ஆகவே அருள் புரிவதில் மேலோர் கடையர் என்று உணர்வதுமில்லை. எப்பழி செய்தவராயினும் எந்நிலை கொண்டவராயினும் அத்தகைய ஒருவரை நேரில் காணும் ஒருவன் அவர்களின் விழிமுன் நின்றாலே மெய்ப்படைவான். துயரழிந்து தானும் பெருநிலை கொள்வான்.

“அவ்விழிகளில் ஒன்று இக்கல்மணி” என்றான் பாணன். “நோக்கு மின்னி மறைவது. விரைவால் காலத்தைக் கடந்தது. அதை கல்லில் நிலைகொள்ளச் செய்கிறார்கள். நின்று காலத்தை கடக்கச் செய்கிறார்கள். நோக்குக இந்தக் கல்லை, இது உங்களை நோக்கும் ஷம்பாலாவின் விழி என்று உணர்க!” என்றான். “ஒவ்வொரு கணமும் அன்றாடத்தில் உழல்கிறோம். இன்றென்று நிகழ்வன நாளையென எழுவன நேற்றென எஞ்சுவன. கணமொழியாது அவற்றை அளைந்துகொண்டிருக்கையில் ஆழத்தில் ஒரு துளி அசைவிலாதிருக்கவேண்டும். முடிவிலியின் அழிவிலியின் நோக்கு நம் மேல் என்றுமிருக்கவேண்டும். அது தந்தையின் கைவிரலை பற்றிக்கொண்டு பெருவிழவுக்கூட்டத்திற்குச் செல்லும் சிறுவன் என நம்மை பாதுகாப்பாக அமையச்செய்யும். இக்கல்மணி தெய்வம் என உடனிருக்கட்டும்” என்றான் பாணன்.

“ஆனால் பிறிதொரு பாணன் இதை நஞ்சு என்றான்” என்று பீமன் சொன்னான். “மலையிறங்கி நிகர்நிலத்துக்கு வந்துவிட்டிருந்தோம் அப்போது. அவன் மலையிலிருந்து வரும் செய்திகளை அறிந்துகொள்ளும் கலையறிந்த பாணன் என்றார்கள். கங்கையில் ஒழுகிவரும் கற்களை எடுத்து அவற்றில் எழுதியிருப்பனவற்றைப் படித்து மலையின் எண்ணமென்ன என்று அறியும் கலை ஒன்று அம்மக்களிடையே உண்டு. அவ்வாண்டு பனி எவ்வளவு, பெருவெள்ளம் உண்டா, மழை எத்திசையில் என நூறுநூறு செய்திகளை அக்கற்களில் இருந்து அவர்கள் படித்தறிகிறார்கள். அவ்வாண்டுக்கான வேளாண்மையை, மேய்ச்சல்பெயர்வுகளை, இல்லங்களை அமைக்கும் கோணங்களை அதைக்கொண்டு முடிவுசெய்கிறார்கள். சில தருணங்களில் ஊர்கள் அனைத்துமே

ஒழிந்து முற்றாக இடம்பெயரும்படிகூட ஆணைகள் வந்துள்ளன என்று அறிந்தேன்.

சைரன் என்னும் அப்பாணன் அவ்வாறு மலைகளுடன் உரையாடும் சடங்கை நிகழ்த்திக்காட்டினான். என் ஆணைப்படி ஊரிலிருந்து அவனை அழைத்து வந்திருந்தனர். பேச்சு ஒழிந்து உள்முகம்நோக்கிய முதியவன். வலுவான வளைந்த உடலும் கூழாங்கற்கள்போல் ஒளியணைந்த விழிகளும் கொண்டவன். பீதர்நாட்டான்போல முகம் முழுக்க சுருக்கங்கள் செறிந்தவன். எங்கள் படைவளையத்திற்கு நடுவே கங்கைக்கரை மணலில் கல்லடுக்கி எரிமூட்டி அவன் அமர்ந்தான். அவன் முன் அவனுடைய ஏழு மாணவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் தங்கள் கைகளில் முழவுகளையும் பெரிய பித்தளைச் சேங்கிலைகளையும் வைத்திருந்தனர். பதினெட்டு கூடைகளில் கோழிமுட்டை போலவும் புறாமுட்டை போலவும் வெவ்வேறு வடிவம்கொண்ட கற்கள் இருந்தன. அவை கங்கையிலிருந்து பொறுக்கி கொண்டுவரப்பட்டவை.

அவற்றை எடுப்பதற்கும் நெறிகளும் முறைமைகளும் உண்டு. நீரில் மலர்களைப் போட்டு அதன் ஒழுக்கில் அமைப்புகளை முதலில் வரையறை செய்கிறார்கள். மலர்கள் குவிந்து இழுபட்டும், நீண்டு நெளிந்தும், வளைந்து ஒசிந்தும் செல்லும் போக்குகளைக் குறிக்க நூற்றுக்கணக்கான சொற்கள் அவர்களிடம் உள்ளன. அவற்றில் சில மலர்கள் கரையோரமாக வந்து படிகின்றன. அங்கே இருந்து கூழாங்கற்களை பொறுக்கி எடுக்கிறார்கள். அக்கற்களை ஒன்று எடுத்து வீசிவிட்டு எட்டு வைத்து ஆழம் சென்று ஒன்று விட்டு ஒன்று தெரிவுசெய்யும் கணக்குகளும் மிகமிக நுட்பமானவை. ஆற்றின் திசை அங்கே எவ்வண்ணம் இருக்கிறதோ அதற்கேற்ப திரும்பி நிற்பதற்கும்

வழமைகள் உண்டு. அவ்வாறு எடுத்த கற்களை வகைபிரிக்கிறார்கள். கற்களின் அடிப்பக்கத்தில் மண் படிந்திருக்கும் முறை, அவற்றின்மேல் பூசணமும் பாசியும் இருக்கும் வகை என அதற்கும் பலநூறு குறிப்புகள்.

அவ்வாறு கொண்டுவந்த கற்களை தன் முன் பரப்பியபின் அனல் வளர்த்து, அதற்கு அவியிட்டு, மூதாதையரையும் குடித்தெய்வங்களையும் பாடி வணங்கியபின் மலைகளைப் போற்றி பாடலானான். மலைகளை தன்னுடன் பேசும்படி அழைத்தான். மன்றாட்டு என்றும் ஆணை என்றும் மாறிமாறி ஒலித்தது அப்பாடல். ஒரு தருணத்தில் வெறியாட்டு எழுந்து அவன் முன்னும் பின்னும் அசைந்தாடினான். அவன் உடலெங்கும் தசைகள் நெளிந்தன. கைகள் அலைபாய்ந்தன. அவன் மாணவர்கள் அந்தக் கற்களை எடுத்து அவனிடம் அளித்தனர். அவற்றை வருடியும் முகர்ந்தும் அவற்றில் சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் என வண்ணவரிகளாக பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களை படித்தும் அவன் பேசலானான். அவனுடைய சொற்களை இசைக்கலங்களின் ஓசை உடன் இணைய முழக்கமிட்டு மீண்டும் கூவினர் அவன் மாணவர்கள். வான் என எழுந்த பெருமலை அடுக்கங்கள் அவ்வண்ணம் பேசக்கேட்டு நான் மெய்ப்பு கொண்டேன்.

அவனிடம் அன்று தனியாக பேசினேன். அவன் மாணவர்கள் உறங்கச் சென்றுவிட்டிருந்தனர். என் ஏவலர் இருவரும் படைத்தலைவனும் மட்டும் உடனிருந்தனர். அவன் நாங்கள் அளித்த மதுவால் மகிழ்ந்துவிட்டிருந்தான். “பாணரே, நீங்கள் மலையின் சொற்களை படிக்கக் கற்றவர். என்னிடம் இமையமலையடுக்குகளின் துளி ஒன்று உண்டு. சொல்க, இந்தக் கல்மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் செய்தி என்ன?”

என்று அந்தக் கல்மணியை காட்டினேன். அவன் அதை வாங்கி விழிகூர்ந்து நோக்கினான். அதை அவன் அதற்கு முன் பார்த்ததில்லை. “இது எந்த நீரொழுக்கில் கிடைத்தது?” என்று அவன் கேட்டான். “இது எனக்கு மலைமுதியவர் ஒருவரால் அளிக்கப்பட்டது” என்று நான் சொன்னேன்.

அவன் மேலும் கூர்ந்து நோக்கியபின் “இது செதுக்கப்பட்டது... கைகளால் உருட்டி மென்மையாக்கப்பட்டது” என்றான். “இதில் பொறிக்கப்பட்டிருப்பவை மானுடர் பொறித்தவை. மலைகளின் சொல் அல்ல.” நான் ஏமாற்றம் அடைந்தேன். “நான் மானுடரின் சொற்களை செவிகொள்வதில்லை. அவை சீவிடுகளின் ரீங்காரம்போல ஒற்றைச் சொல் மட்டுமே கொண்டவை. பொருளற்றவை. நான் கேட்பது மாமலைகளின் சொற்களை மட்டுமே. அவை அழிவற்றவை, என்றும் நிலைகொள்பவை” என்றான். “அவ்வாறே ஆகுக!” என்றேன்.

அவன் தனக்குத்தானே முனகியபடி மேலும் மது கோரி குவளையை நீட்டினான். மதுவை ஊற்றியதும் முகம்சுளித்தபடி தொண்டையோசைகளுடன் அருந்தினான். இறுதியாக எஞ்சியதை நாவில் விட்டுவிட்டு அக்குவளையை தீயில் காட்டி நீலச்சுடர் எழுப்பினான். என்னிடம் கறைபடிந்த பற்களைக் காட்டி நகைத்து “மதுக்குவளையை தீயில் கழுவவேண்டும். இல்லையேல் மதுநாடி மலைத்தெய்வங்கள் வந்துவிடும். ஓநாய்களின் வடிவு கொண்டவை, விழிகளில் அனலெரிபவை” என்றான். அங்கேயே கால்களை நீட்டி படுத்தான்.

“உள்ளே சென்று படுங்கள்” என்றேன். “நான் குளிர்காலத்திலேயே மலைகளின் நோக்குக்கு கீழேதான் படுப்பேன்” என்றான். “மலைகளின் மூச்சுக்காற்றில் துயில்வேன். மலைகளின் இடிமுழக்கம் ஒலிக்கும் மழைக்காலத்தில்கூட

என் தோல்போர்வையை போர்த்திக்கொண்டு அமர்ந்திருப்பேன்.” அவனுடைய தோல்போர்வை எடைமிக்கது. உள்ளே மென்மயிர் கொண்டது. அது ஒரு கூடாரம்போல. அதை தன்னைச்சுற்றி அமைத்துக்கொண்டு ஒரு பெரிய குவை என ஆனான். சற்றுநேரத்திலேயே அவனுடைய ஆழ்ந்த குறட்டையோசை கேட்கலாயிற்று.

நான் தொலைவில் முகில்கள் என வானில் தெரிந்த வெண்ணிற மலைமுடிகளை நோக்கியபடி அமர்ந்திருந்தேன். அந்த மலைமுடிகளில் சில நாட்களுக்கு முன் இருந்திருக்கிறேன் என்று எண்ணவே விந்தையாக இருந்தது. அங்கே மானுடர் வாழ்கிறார்கள். விண்வாழும் தேவர்களுக்கு மிகமிக அணுக்கமானவர்கள். போதநிலம். போ என்னும் மெய்வழி. நான் அறிந்தவை எல்லாமே வெறும் கனவுகள்தானா என தோன்றியது. என் முன் சிமிழில் இந்தக் கல்மணி அமைந்திருந்தது. அதன் விழி என்னை நோக்கிக்கொண்டிருந்தது. அதன் ஒரு விழி நம்மை நோக்கும்போது பிறிதொன்று மறைந்திருக்கிறது. செந்நிற விழியை நாம் சந்திக்கும்போது நீலநிற விழி நம்மை கூர்ந்தபடி கரந்துள்ளது.

மலைகள் என்னை அறியாமல் எங்கோ என நின்றன. அவை கீழே விரிந்திருக்கும் இந்நிலப்பெருக்கை இங்கே செறிந்துள்ள மானுடரை அறிவதே இல்லை. அவை வானை நோக்கியே தவம் செய்கின்றன. ஆனால் இந்தக் கல்மணி என்னை நோக்கிக்கொண்டிருக்கிறது. கல்மணியில் எழுந்த பெருமலையின் நோக்கு. நான் அதனிடம் கேட்க விழைந்தேன். அது என்னிடம் சொல்வது என்ன என்று. எதன்பொருட்டு அது என்னுடன் வந்துகொண்டிருக்கிறது என்று. “இது மெய்யாகவே

என்ன என்று தோன்றுகிறது?” என்று நான் படைத்தலைவனிடம் கேட்டேன். அவன் வெறுமனே விழித்து நோக்கினான். “இது என்ன?” என்றேன். குனிந்து அதை நோக்கி “விழியே உன் பொருள் என்ன?” என்றேன். அப்போது “நஞ்சு” என்ற சொல் ஒலித்தது.

நான் மெய்ப்பு கொண்டேன். “யார்?” என்றேன். படைத்தலைவன் “அவர்…” என பாணனை சுட்டிக்காட்டினான். “அவர் சொன்னார்” என்றான். நான் அவனை பார்த்தேன். ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருந்தான். குறட்டை ஒலி கேட்டது. “அவர்தான் சொன்னார்… துயிலில்” என்றான் படைத்தலைவன். “என்ன சொன்னார்?” என்றேன். “நஞ்சு என்றார்” என்றான். “நஞ்சு என்றா?” என்றேன். “இதையா?” என்று கேட்டேன். “அவர் கனவில் பேசியிருக்கலாம்” என்றான். “இல்லை, அவர் குரலில் பேசுவது மாமலையேதான்” என்றேன்.

அவனை கூர்ந்து நோக்கிக்கொண்டு காத்திருந்தேன். குறட்டை ஒலி மட்டுமே. பின்னர் அந்தக் கல்மணியை நோக்கி “சொல்க, நீ யார்? உன் பொருள் என்ன?” என்றேன். மறுமொழி இல்லை. மேலும் உரக்க “சொல்க, உன் பொருள் என்ன? உன்னில் திகழ்வது என்ன?” என்றேன். “காலம்” என்று அவன் சொன்னான். நான் அவன் முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தேன். அவனுடைய சொல்தான். ஆனால் ஆழ்ந்த துயிலிலும் இருந்தான். “நீ நஞ்சா?” என்றேன். அவன் “ஆம்” என்றான். “அன்றி அமுதா?” என்றேன். “ஆம், அமுது” என்றான். “காலமென வந்துளாயா? காலமின்மையென்றா?”

அவன் மறுமொழி சொல்லவில்லை. நான் அவனை நோக்கிக்கொண்டிருந்தேன். அவனுடைய சீரான மூச்சு ஒலித்துக்கொண்டிருந்தது. படைத்தலைவன்

திகைத்துப்போயிருந்தான். நெடுநேரம் காத்திருந்தோம். மறுமொழி எழவில்லை. பின்னர் நான் பெருமூச்சுடன் அசைந்தமர்ந்து அந்தப் பேழையை மூடப்போனேன். அப்போது அவன் குரல் ஒலித்தது. “அசைவின்மையாக சென்றுகொண்டிருக்கிறேன்.” அதற்கப்பால் ஒன்றுமில்லை. நெடுநேரம் காத்திருந்தேன். ஒரே சொல் மட்டும்தான். நான் அச்சொல்லை நாவுக்குள் சொல்லிக்கொண்டிருந்தேன். அசலகமன. ஒற்றைச் சொல்தான். அதை ஏந்தியபடி விடியும்வரை அங்கேயே அமர்ந்திருந்தேன். அருகே அச்சொல் என கங்கை ஒழுகிக்கொண்டிருந்தது. இருளுக்குள் ஒளிரும் இருளின் அலைகள் என.

இரவில் பனிமலைமுகடுகள் மேலும் மேலும் துலங்கின. உதிர்வனபோல விண்மீன்கள் முழுத்து வந்தன. நான் மதுவை அனலில் காட்டி இளவெம்மையுடன் அருந்திக்கொண்டே இருந்தேன். அசலகமன. அசலகமன. அச்சொல்லைத்தான் அவன் சொன்னானா, அன்றி நானே அதை உருவாக்கிக்கொண்டேனா? அச்சொல்லே அன்றைய இரவு. மெல்ல விடிந்தது. வெண்முகடுகள் வெளிறின. பின் குருதி பூசிய ஈட்டிமுனைபோல் ஒளிகொண்டன. ஒவ்வொரு மலைமுகடாக எரியத் தொடங்கியது. ஒன்றிலிருந்து ஒன்றென பற்றிக்கொண்டு எரிந்தெழுந்து அனல்வெளியென்றாகிச் சூழ்ந்தன. அவற்றின் மடிப்புகளில் மேகப்பிசிறுகள் விழுந்து கிடந்தன. மிக மென்மையானவை. வெண்பறவையின் ஈரம் காயா குஞ்சுகள் போன்றவை. வானம் ஒளிகொண்டது. ஒரு சொல்கூட இல்லாமல் மலைப்பெருக்கு தன்னை எனக்கு காட்டிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு திரையாக விலக்கி. மேலும் மேலும் மேலும் என. பின்னர் இசையமைந்தது. ஓசையின்மை நிறைந்தது. அது வானின் அமைதி என்றாயிற்று.

நான் அதை நோக்கியபடி கைகளைக் கூப்பி அழுதுகொண்டிருந்தேன்.

# களிற்றியானை நிரை - 64

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 14

அறைக்குள் காற்று சுழன்று வீசிக்கொண்டிருந்தது. கதைகள் சொல்லப்படும் இடங்களில் காற்று மேலும் பொருள்கொண்டுவிடுவதாக யுயுத்ஸு எண்ணிக்கொண்டான். அது அங்கே சிறுகுழந்தைபோல சூழ விளையாடிக்கொண்டிருக்கிறது. திரைச்சீலைகளை அசைக்கிறது. சாளரக்கதவுகளில் தொற்றி விளையாடுகிறது. கூச்சலிடுகிறது. மேலாடைகளை பற்றி இழுத்து தன்னை பார்க்கும்படி அழைக்கிறது. ஆனால் அது அத்தனை கதைகளையும் கேட்டு அறிந்துகொண்டிருக்கிறது. அவை அக்காற்றில் என்றுமிருக்கும். வேதங்கள் உறையும் காற்று. தொல்கவிஞர்களின் சொற்கள் ஒன்றொழியாமல் சேர்ந்திருக்கும் காற்று.

பீமன் "இது நஞ்சு என மறுநாள் தெளிந்தேன்" என்று தொடர்ந்தான். மறுநாள் காலையில் துயிலெழுந்த பாணன் என்னிடம் "நான் நேற்று உங்களிடம் என்ன சொன்னேன்?" என்றான். "எதைப் பற்றி?" என்று நான் கேட்டேன். "நாகாக்ஷத்தைப் பற்றி" என்றான். "அதைப்பற்றி ஒன்றும் தெரியாது, அது மானுட உருவாக்கம் என்றீர்கள்" என்றேன். "இல்லை. அதைப்பற்றி பிறகு சொன்னேன். அதன் பொருள் என்ன என்று என்னிடம் நீங்கள் உசாவியபோது. அருகே அந்த

மலைமுனிவர் நின்றிருந்தார். தரைவரை நீளும் தாடியும் கன்னங்களில் தொங்கும் புருவங்களும் கொண்டவர்” என்றான்.

அவன் கனவு கண்டான் என புரிந்துகொண்டேன். “அமர்க, பாணரே” என்றேன். முந்தையநாள் அவன் பேசியனவற்றை சொன்னேன். அவன் திகைத்து நோக்கிக்கொண்டிருந்தான். “நான் கண்டவை கனவா?” என்றான். நான் “ஆம், கனவிலேயே நீங்கள் பேசினீர்கள்” என்றேன். “ஆம், கனவாகத்தான் இருக்கவேண்டும், ஆனால் மிகமிகத் தெளிவானது. நான் பேசிய எல்லா சொற்களுமே நன்கு நினைவில் இருக்கின்றன” என்றான். “நீங்கள் அந்தக் கல்மணி நஞ்சு என்றீர்கள்” என்றேன். “சொல்லுங்கள், இது எவ்வாறு நஞ்சாகிறது?” அவன் என்னை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தான். கனவை மீட்டுக்கொள்கிறான் என புரிந்துகொண்டேன். பின்னர் “அது நஞ்சும் அமுதுமானது” என்றான்.

“நீலம் நஞ்சையும் செம்மை அமுதையும் குறிக்கிறதா?” என்றேன். “இல்லை, நீலம் நஞ்சென்றால் செம்மை அமுது. செம்மை நஞ்சு என்றால் நீலம் அமுது” என்றான். அவன் சொன்னது எனக்கு புரியவில்லை. “அவை ஒன்றை ஒன்று நஞ்சாக்குகின்றன. ஒன்றை ஒன்று அமுதாக்குகின்றன. ஒன்றை ஒன்று நிரப்புகின்றன. ஒன்றில்லாது ஒன்று இல்லையென இணைந்திருக்கின்றன. இப்புவியை தங்கள் ஆடல் வழியாக நிகழ்த்துகின்றன” என்றான். அவன் பேச்சை வெறுமனே கேட்டுக்கொண்டிருந்தேன். “நஞ்செனில் அது அமுதென்று நடிக்கவும் தெரிந்ததாக இருக்கும். தன்னை அமுதென்று உருக்காட்டி கவர்ந்திழுக்கத் தெரியாத நஞ்சினால் இடரென்று எதுவுமில்லை. இதுவும் அவ்வாறே” என்றான் பாணன்.

“முதல்முறையாக அப்போதுதான் நான் ஓர் அச்சத்தை உணர்ந்தேன். இந்தக் கல்மணிமேல் இப்போதும் என்னுள் திரண்டிருப்பது முதன்மையாக அச்சம்தான். இதை எவ்வகையிலும் தவிர்க்கவே நான் விழைகிறேன்” என்று பீமன் சொன்னான். “இதன் பயன் என்ன என்று நீங்கள் அவனிடம் கேட்டிருக்கவேண்டும்” என்றான் நகுலன். “அல்லது, இது மெய்யறிதலின் துளி என்றால் இதனுடன் நாம் உசாவ வேண்டிய வினா என்ன என்று கேட்டிருக்கலாம்” என்று சகதேவன் சொன்னான். “நான் அதை அவனிடம் கேட்டேன். இது எனக்கு எதை கற்பிக்கும் என்றேன். நீங்கள் இருமை என உணரும் எதையும் இதனிடம் கோரலாம். அன்பும் வெறுப்பும், மகிழ்வும் துயரும், இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், இருளும் ஒளியும், இருத்தலும் இன்மையும் என எதையாயினும் என்று அவன் சொன்னான்” என்று பீமன் சொன்னான்.

“நீங்கள் கேட்டது என்ன, மூத்தவரே?” என்று நகுலன் கேட்டான். பீமன் “நான் கேட்க விழைந்தது விழைவு துறவு என்னும் இருமையைப் பற்றி. ஆனால் என் நாவிலெழுந்தது வாழ்வும் சாவும் என்னும் இருமையைப் பற்றிய சொற்கள்” என்றான். பின்னர் இரு கைகளாலும் இருக்கையின் பிடியை தட்டி உரக்க நகைத்து “உண்மையில் நான் கேட்க விழைந்தது அதுதான் என்று கேட்டதும் உணந்தேன்” என்றான். “அவன் என்ன சொன்னான்?” என்று நகுலன் கேட்டான். “அதனிடமே உசாவுக என்றான். கண்களை மூடி ஊழ்கத்தில் சற்றுநேரம் அமர்ந்திருந்த பின் வீரரே அந்தக் கல்மணியை கொண்டுவருக என்றான். அதை கொண்டுவர ஆணையிட்டேன். அதை கையில் எடுத்து கூர்ந்து படித்தபின் அவன் இதன் மேல் கையை வைத்தபடி உங்கள் வினாவை எழுப்புக என்றான்.”

நான் அதன்மேல் கையை வைத்து என் வினாவை மும்முறை கேட்டேன். சாவும் வாழ்வும் கொள்ளும் பொருள் என்ன? சாவென்றும் வாழ்வென்றும் நிகழும் ஆடலுக்கு என்ன பொருள்? சாவிலிருந்து வாழ்வுக்கா வாழ்விலிருந்து சாவுக்கா சென்றுகொண்டிருக்கிறது மானுட வாழ்க்கை? மூன்று வினாக்கள். மூன்றும் ஒன்றே. கேட்டு முடித்த பின் அவன் அதை கையில் எடுத்தான். அதன் வரிகளை கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தான். பின்னர் என்னை நோக்கி விந்தை என்னவென்றால் நேற்று என் கனவிலேயே இவ்வினாவை நீங்கள் கேட்டீர்கள், நேற்றிரவே நான் மறுமொழியும் சொல்லிவிட்டேன் என்றான். இதை தொட்டுக்கொண்டு உங்கள் வினாவை தனியாகக் கேளுங்கள். இது உயிர்கொள்ளும். உங்களுக்கான விடையை அளிக்கும் என்றான்.

“என்ன விடை?” என்று நகுலன் கேட்டான். பீமன் புன்னகைத்து “அவன் என்னிடம் சொன்னதை மட்டும் சொல்கிறேன். இந்த நாகவிழியின் மேல் கைவைத்து நாம் சொல்கூட்டும்போது நம் கையை அது கடிப்பதுபோல் உணர்வோம். நுட்பமான ஒரு கீறல் விழுந்து தன் நஞ்சை அது நம்மில் செலுத்துகிறது என்று தோன்றும். ஒரு நாழிகைக்குள் நம் உடல் நாம் விழைந்ததுபோல் இளமை கொள்ளும். நம் உள்ளமோ பலமடங்கு காலத்தில் பின்னகரும். இளையோர் என உவகையும் நம்பிக்கையும் அடைவோம். குரலில் முழக்கமும் கண்களில் ஒளியும் தோன்றும். இளமைக்குரியன அனைத்தும் வந்து சேரும். வெற்றிக்கான விழைவு, நான் அரியன் எனும் ஆணவம், காலம் முடிவற்றது என்னும் மாயை, காதலின் வேட்கை, இவ்வுலகே நமக்கென வேண்டுமென்னும் துடிப்பு, அனைத்தும்” என்றான்.

“ஆனால் வெறும் பதினெட்டு நாழிகைப் பொழுது மட்டுமே அவ்விளமை நீடிக்கும். அதன்பின் நாம் சூடிய ஒவ்வொரு உடலாக நம்மிடமிருந்து அகன்று செல்ல நாம் மனோமய கோசமாக மட்டும் எஞ்சுவோம். அங்கு இருத்தல் என்பது அதன் தூய வடிவில் திகழும். மீண்டு வருகையில் நம் அகவை முதிர்ந்திருக்கும். எத்தனை தொலைவு முன் வந்தோமோ அதற்கு மூன்று மடங்கு பின்சென்றிருப்போம். முதுமை நோக்கி, சாவு நோக்கி மேலும் விரைவு கொண்டிருப்போம். பத்து முறை இந்த விழிமணியைத் தொட்டு இளமையை மீட்டவர் நூறாண்டுகள் முதுமை எய்தியவர் என்று பாணன் சொன்னான்” என்றான் பீமன். “வாழ்வையும் சாவையும் ஒன்றென அடைதல், வாழ்வே சாவென்றும் சாவே வாழ்வென்றும் அறிதல்” என்று நகைத்தான்.

சுரேசர் “சாவை நோக்கி செல்வதற்கு இனிதான ஒரு வழி” என்றார். நகுலன் சிரித்து “ஆம், அதைத்தான் நானும் எண்ணினேன். என்னிடம் அந்த அருமணி இருக்குமெனில் தொடர்ந்து பத்துமுறை அதை தொட்டு நூற்றியெண்பது நாழிகை இளமையில் திளைத்து அக்கணமே முதிர்ந்து இறப்பேன். இருந்து இருந்து முதிர்ந்து இறப்பதுபோல் துயரொன்றில்லை. பறந்து சென்று அங்கு விழ முடிந்தால் அது ஒரு நற்பேறு” என்றான். சகதேவன் “அது எவ்வகையிலும் உகந்தது அல்ல என்று எனக்குப் படுகிறது. ஈட்டப்படாத பொருள் வெறும் மாயை” என்றான். “நாம் ஈட்டுவது அது, சாவை விலைகொடுத்து” என்றான் நகுலன். “வாழ்க்கையை சாவைக் கொடுத்தே ஈட்டிக்கொள்கிறோம். ஆனால் இதன் ஒவ்வொரு துளியும் நமக்கு பத்து மடங்கு பெறுமதிகொண்டது.”

பீமன் "இதைத் தொட்டு நாம் இளமையை அறியும்போது எழும் உணர்வுகள் என்ன என்று பாணன் பாடிச்சொன்னான். நம் வாழ்க்கையை மிகக் குறுகிய காலத்தில் மிகச் செறிவாக முழு உளவிழிப்புடன் உணர்வதுதான் அது. நம் இளமை என்பது கணம்கணமென கழிந்துகொண்டிருப்பது என உணர்ந்துகொண்டே இருப்போம். ஒவ்வொரு கணத்தினூடாகவும் சாவை அணுகும் உணர்வு இருந்துகொண்டிருக்கும். அந்த ஒருமையுணர்வினூடாகவே வாழ்வையும் சாவையும் நாம் அறிவோம். சாவின் மறுபக்க எடையால் நாம் அடைந்த அவ்வாழ்வு சுவை கொண்டதாக ஆகிவிட்டிருக்கும். வாழ்வால் சாவுக்கு பொருள் அளித்தபடியே இருப்போம். வாழ்வென சாவை கொண்டாடுவோம். சாவென வாழ்வை அஞ்சுவோம். இருமை ஒன்றென ஆகி முழுப் பொருளை உணர்த்தும்" என்றான்.

"நீங்கள் இதை தொட்டீர்களா, மூத்தவரே?" என்றான் நகுலன். பீமன் "இல்லை" என்றான். "நூறுமுறை, ஆயிரம்முறை தொட முனைந்தேன். உளம்கூடவில்லை. என்னை அஞ்சியே இதை அகற்றி கருவூலத்திற்கு அனுப்பினேன்." நகுலன் "ஏன்?" என்றான். பீமன் "நான் அஞ்சினேன். வாழ்வின் மேலான விழைவா சாவின் மீதான அச்சமா எது மேல் என என்னால் சொல்லமுடியவில்லை. அதைவிட அறிவின் மீதான அச்சம் என இப்போது படுகிறது. நான் அறியக்கூடாத ஒன்றை அறிய நேரிட்டதென்றால், அறியாமை அளிக்கும் அனைத்து மெய்மைகளையும் இன்பங்களையும் இழந்துவிட்டேன் என்றால், அறிதலுக்குப் பின் வெறுமையே எஞ்சுமென்றால் என்ன செய்யமுடியும்? என்னால் முடிவெடுக்க முடியவில்லை" என்றான்.

“இது மெய்யாகவே அவ்வாறு இளமை அளிக்கும் ஆற்றல் கொண்டதா என்று அறியேன். இது நம் உளமயக்குகளுடன் விளையாடுகிறதா? இத்தகைய கருவிகளின் வழியாக நாம் நம்முடன் விளையாடிக்கொள்கிறோம்” என்று சுரேசர் சொன்னார். “ஆனால் விலைமதிப்பற்ற அருமணி இது. அதில் எந்த ஐயமும் இல்லை. ஏனென்றால் இதில் இத்தனை முடிவிலாத பொருட்செறிவு ஏற்றப்பட்டுள்ளது. அருமணிகள் அவற்றிற்கு நாம் ஏற்றிய பொருட்செறிவால்தான் மதிப்பு மிக்கவையாகின்றன.” நகுலன் “ஆம், மூத்தவருக்கு இத்தகைய விந்தைகள் உவப்பானவை என்று எண்ணுகிறேன். அவருக்கு அளிக்கத்தக்கதே இது” என்றான். “அவர் எப்போதும் தன்னை அளவிட்டபடியே இருப்பவர். தன்னுடன் விளையாடுபவர். அந்த விழைவே அவரை சூதில் மூழ்கச் செய்தது.”

பீமன் “அவருடைய துயரென்பது ஒவ்வொரு நாளும் முதுமை நோக்கி சென்று கொண்டிருக்கிறார் என்பதில் இருந்து எழுந்தது என்றே படுகிறது. விழைந்த அனைத்தையும் அடையும்போது மேலும் விரைவில் முதுமை வந்தணைவது மானுடரில் பெரும்பாலானவருக்கு தெய்வங்கள் அளித்த விந்தையான தீச்சொல். அதை அவரும் அடைந்திருக்கிறார்” என்றான். சுரேசர் நகைத்து “விரும்பிய அனைத்தையுமே இளமையிலேயே அளிப்பது அதைவிட விந்தையான தீச்சொல். பெறுபவர்கள் தாங்கள் பெற்றிருப்பது என்ன என்று முற்றாக இழப்பதுவரை உணர்வதில்லை. துளியிலாது வீணடித்தபின் உணர்கிறார்கள். எஞ்சிய வாழ்நாள் முழுக்க ஏங்கி அழிகிறார்கள்” என்றார். பீமன் மேலும் நகைத்து “தெய்வங்களின் நகையாடலுக்கு அளவே இல்லை” என்றான்.

அவர்கள் அச்சிரிப்பினூடாக அதுவரை இருந்த உளநிலையை கடந்து வந்தனர். “இதை அவருக்கு அளிப்போம். அவர் இதை தொடக்கூடும், தன் இளமையை மீட்டுக்கொண்டால் இன்றிருக்கும் நோயிலிருந்து மீளவும்கூடும்” என்று நகுலன் சொன்னான். “இத்தகைய சில விளையாட்டுகளினூடாக அவர் தன் உளச்சோர்விலிருந்து மீண்டெழுவார் எனில் அது நன்றே.” பீமன் எழுந்துகொள்ள சகதேவன் “மெய்யாகவே அவர் மீண்டெழ விரும்புகிறாரா என்று எனக்கு ஐயமாக இருக்கிறது” என்றான். சுரேசர் அவனை திரும்பிப்பார்க்க “அவருடைய உள்ளம் அவரை மீறி நடிக்கிறது” என்று சகதேவன் சொன்னான். “அந்த நடிப்புகள் வழியாக நாங்களும் கடந்துவந்திருப்பதனால் அதை உணர்வதும் கடினமானது அல்ல.”

“இத்தருணத்தில் அவர் உளம் மகிழ வேண்டும். நான் நான் என்று கைவிரித்து அவர் கூத்தாட வேண்டும். இது அவர் பாரதவர்ஷத்தின் உச்சியில் நின்றிருக்கும் தருணம். அஸ்தினபுரியின் அரியணையில் மும்முடி சூடி அமரவிருக்கிறார். கடல் சூழ்ந்த பாரதவர்ஷமே அவர் காலடியை பணியவிருக்கிறது. இங்கே இருந்தவர்களிலும் இருப்பவர்களிலும் இதை விழையாத அரசர்கள் எவர்? ஒவ்வொரு வீரனுக்கும் ஆழத்தில் இருக்கும் பகற்கனவல்லவா அது? கார்த்தவீரியரும் ஹஸ்தியும் பிரதீபரும் விழைந்தது. ஜராசந்தனும் பகதத்தனும் முயன்றது. அவர் அடைந்துவிட்டிருக்கிறார். அதை பிற எவரைவிடவும் அவர் நன்கு அறிவார். ஏனென்றால் பிறந்த நாள் முதல் அவரை ஆட்கொண்டிருக்கும் கனவு அது.”

“ஆனால் இங்கு இவ்வாறு வந்து நிற்கும் பொருட்டு அவர் தன் மைந்தர்களை இழந்திருக்கிறார். தன் உடன்பிறந்தாரை

வென்றிருக்கிறார். தன் குடியை தானே முற்றழித்திருக்கிறார். அக்குற்ற உணர்வுடன் இங்கு நின்று இதில் திளைக்க அவரால் இயலவில்லை. ஆகவே துயர்கொள்ள விழைகிறார். துயர் அதை விழைபவர்களை மட்டுமே நாடிவருகிறது என்று சொல்வார்கள்” என்றான் சகதேவன். நகுலன் “அதை இப்போது ஆய்வு செய்வதில் எப்பயனும் இல்லை. உள்ளத்தின் ஆடல்கள் முடிவற்றவை. ஒவ்வொரு கணத்திலும் தன்னை ஒவ்வொன்றாக உருமாற்றிக்கொண்டுதான் அது கடந்துசெல்கிறது. நம் உள்ளத்திடம் கோருவது ஆட்கொள்க, கொண்டு செல்க என்று மட்டுமே” என்றான்.

“ஆம், அவர் இத்தருணத்தில் எவ்வண்ணம் இருப்பாரோ அதை மட்டும் பார்ப்போம். ஒருவேளை தன் துயரிலிருந்து வெளிவர மெய்யாகவே அவர் விழையலாம். அதற்கு ஓர் உகந்த தருணத்தை காத்திருக்கலாம். அவரது அகம் அது இதுவென்று உணரலாம். எல்லாமே தற்செயலென மாயம்காட்டி நிகழ்வன அல்லவா? அவர் இந்த அருமணியைத் தொட்டு தன் இளமையை மீட்டுக்கொண்டார் எனில் அவர் இத்தருணத்திற்குரிய உவகையில், நிமிர்வில், களியாட்டில் ஆழ்ந்துவிடலாம். அதற்குரிய பழி முழுக்க இந்த அருமணியை ஆளும் தெய்வங்களுக்கு அளிக்கப்பட்டுவிடுகிறது. அதன்பிறகு அவர் குற்ற உணர்வு கொள்ள வேண்டியதில்லை. இப்போது அவர் கொள்ளும் இந்தக் களியாட்டின் அனைத்து விலையையும் முதுமையென அவர் அளிக்கவும் போகிறார், ஆகவே அவ்வகையிலும் அவர் தன் குற்றவுணர்ச்சியை நிகர் செய்யலாம். ஆகவே எவ்வகையிலும் இது நன்றுதான்” என்று சுரேசர் சொன்னார்.

சகதேவன் “அது உண்மை. அவர் விழையும் ஒரு உளநடிப்பு இதில் ஒருவேளை இருக்கலாம். சூதுக்களத்தினூடாக வெவ்வேறாக உருமாறி நடித்துப் பழகியவர் அவர். அவருக்கு இதை அளிப்பதே நன்று” என்றான். பீமன் “இதை அளிக்க முடிவெடுத்துவிட்ட பிறகு குழம்பிக்கொண்டிருப்பதில் பொருளில்லை” என்றான். சகதேவன் அப்போதுதான் அருகே யுயுத்ஸு ஒருசொல்லும் இன்றி நின்றிருப்பதை உணர்ந்தான். “இளையோனே நீ சொல், இது நன்றா?” என்றான். “நன்று, இத்தருணத்தை நாம் கடக்கவேண்டும்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆனால் நானறிந்தவரை வாழ்வோ சாவோ இயற்கையோ தெய்வங்களோ நம்மை கடந்தவற்றைப்பற்றி நாம் அடையும் அறிதல்கள் எவையும் மகிழ்ச்சியை கொண்டுவருவதில்லை.”

பீமன் நின்றுவிட்டான். “அறிதல்கள் அனைத்தையும் துறக்கும்படி சொல்கிறாயா என்ன?” என்று நகுலன் கேட்டான். “அறிதல்கள் அனைத்தும் பிளவுண்டவை, தனித்தனியானவை. ஆகவே முழுப் பொருளை மறைப்பவை. முழுதறிவு என ஒன்று இருக்கும். அது அறிதலும் ஆதலும் ஒன்றேயானது. அதை அறிந்தவர் அறிந்தபின் அதிலிருந்து தன்னை பிரித்தறிவதில்லை. அறிந்தபின் பிரிந்து நின்றிருக்கும் நிலையில் அறிவனைத்தும் ஆணவமென்றே திரிகிறது. ஆணவம் துயரத்தை அன்றி எதையும் அளிக்கப்போவதில்லை.”

பீமன் சுரேசரை திகைப்புடன் நோக்கினான். சுரேசர் “நீங்கள் சொல்லும் துயரம் இவ்வுலகில் நாம் அடையும் அனைத்துக்கும் பொருந்தும் அல்லவா?” என்றான். “ஆம்” என்று யுயுத்ஸு சொன்னான். “அரசர் இன்றும் அரசரே. அவர் உலகியலில் எதையும் இன்னும் துறக்கவில்லை. ஆகவே செல்வத்தையோ

வெற்றியையோ அறிவையோ அவர் மறுக்கவேண்டியதில்லை. அவை அளிப்பது எவையாயினும் அவர் அடைந்தே ஆகவேண்டும்” என்று சுரேசர் சொன்னார். “அவர் அடைவன அனைத்தும் அவரை அறுதியாக வீடுபேற்றை நோக்கியே கொண்டுசெல்கின்றன. துன்பம் எனினும் இன்பம் எனினும். அவர் அரசரென இங்கு வந்து இவ்வண்ணம் திகழ்வதும் அதனாலேயே.” யுயுத்ஸு “ஆம், அவ்வண்ணமும் சொல்லலாம்” என்றான். “எனில் அதை அரசரிடம் அளிக்கலாம். எதையும் பிழையென உணரவேண்டியதில்லை, வருக!” என்றார் சுரேசர்.

அவர்கள் இடைநாழியினூடாக நடக்கையில் சுரேசர் பீமனிடம் “அவரை சந்திக்கையில் உங்கள் கைகளால் அவரை தொடுங்கள், இளையவரே” என்றார். பீமன் திரும்பிப் பார்த்து புருவம் சுருக்கி “ஏன்?” என்றான். “அவர் உடல் தன் உயிராற்றலை இழந்துவிட்டிருக்கிறது. அதை அவரை நேரில் கண்டால் உணர்வீர்கள். அவர் முகம் வெளிறி உதடுகள் நடுங்கிக்கொண்டிருக்கின்றன. விழிகள் நீர்ச்சாயை கொண்டிருக்கின்றன. அவர் உங்களைத் தொட்டு எத்தனை காலமாகிறது?” என்றார் சுரேசர். பீமன் எண்ணிநோக்கி “போருக்குப் பின் ஒருமுறைகூட நான் அவரை தொட்டதில்லை” என்றான்.

“இல்லை, நீர்க்கடனின்போது ஒருமுறை கட்டிக்கொண்டீர்கள்” என்றார் சுரேசர். “ஆம், நினைவுறுகிறேன். அப்போது அவரது கை துடித்துக்கொண்டிருந்தது” என்றான் பீமன். “தேர் ஏறிய நாகம் நெளிவதுபோல என்று எண்ணிக்கொண்டேன். அவர் குளிரில் நடுங்குவதாகவே தோன்றியது. ஆனால் என் உடலில் நான் அவர் உடலில் இருந்து எழுந்த வெம்மையை உணர்ந்துகொண்டிருந்தேன்.” சுரேசர் “உங்கள் முகத்தில்

ஒவ்வாமை இருந்தது. அருவருக்கத்தக்க ஒன்றை பற்றிக்கொண்டதுபோல. நீரில் மூழ்கி எழுந்ததுமே நீங்கள் கையை விட்டுவிட்டீர்கள். அவர் மேலும் நடுங்கத்தொடங்கினார். அது குளிரென்று எண்ணி அவரை அழைத்துச்சென்று கங்கு நிறைந்த சட்டி முன் அமரவைத்தோம்” என்று சுரேசர் சொன்னார்.

“ஆம்” என்றான் பீமன். “அவர் உங்களிடமிருந்தே தன் உயிராற்றலை பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்று அவருடைய மைந்தர்கள் எவரும் இல்லை.” பீமன் அமைதியாக நடந்தான். அவர்களின் குறடுகளின் ஓசை ஒலித்துக்கொண்டிருந்தது. “மைந்தரின் தோள்களை முதுதந்தையர் அடிக்கடி பற்றிக்கொள்வதை கண்டிருப்பீர்கள். அவர்கள் அதனூடாகப் பெறுவது மைந்தரில் நுரைக்கும் உயிரின் விசையையே. உங்கள் மூத்தவர் அதை நாடுகிறார். உங்களிடம் இருந்து அன்றி அவர் அதை எவரிடமிருந்தும் பெற முடியாது” என்று சுரேசர் சொன்னார்.

“அறைக்குள் சென்றதும் அவரது கால்களை தொடுங்கள். அவரிடம் பேசும்பொழுது முழுக்க அவரை தொட்டுக்கொண்டிருங்கள். இந்த அருமணியை அளித்து அவரிடம் இதை அவர் நோக்கலாம் என்று கூறுகையில் உங்கள் விழிகளால் அவர் விழிகளை நோக்குங்கள். அவர் உங்களிடமிருந்து உறுதியை பெற்றுக்கொள்ளட்டும். இளையவரே, நீங்கள் எழுந்து வருகையில் ஒருமுறையேனும் உங்கள் கைகளால் அவரை நெஞ்சோடு தழுவிக்கொள்ளுங்கள்” என்று சுரேசர் சொன்னார். யுயுத்ஸு “ஆம், அதையே நானும் உணர்கிறேன்” என்றான். “நான் உங்களை தொட்ட பின்னரே என்னுள் அனல் மீளப்பெற்றேன்.”

நகுலன் அவனை திரும்பிப்பார்த்தான். யுயுத்ஸு “தாங்கள் ஒருமுறை அவரை தழுவிக்கொண்டால் போதும்... தாங்கள் தொட்டாலே அவர் விம்மி அழத்தொடங்குவார். உங்கள் தோளில் முகம் சாய்த்து நெடுநேரம் விழிநீர் விடுவார். சற்று முன் நான் அழுததுபோல. அதனூடாக அவர் மீண்டு வருவார். மூத்தவரே, உங்களிடம் இருந்து அவர் பெறும் ஆற்றல் இந்த அருமணியிலிருந்து பெறும் நஞ்சு நிறைந்த அமுதைவிட தூயது, உயர்ந்தது. அது அவரை மீட்கும்” என்றான். பீமன் அவர்களை மாறி மாறி பார்த்த பின் தலைகுனிந்து பேசாமல் நடந்தான். அவன் எடைமிக்க காலடிகள் மரத்தரை மீது விழும் ஓசைகள் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தன.

அவர்கள் யுதிஷ்டிரனின் அறைவாயிலை அடைந்தனர். சுரேசர் ஏவலனிடம் “எவ்வண்ணம் இருக்கிறார்?” என்றார். “சற்றுமுன் அவருக்கு உடல் நடுக்கு கொண்டது. மருத்துவர் வந்து நோக்கிச் சென்றிருக்கிறார். மருந்து அளிக்கப்பட்டுள்ளது” என்று அவன் சொன்னான். “இளையவர் வந்திருக்கும் செய்தி அவர் நெஞ்சில் பதிந்துள்ளதா?” என்றார் சுரேசர். “ஆம், அவரே இருமுறை உசாவினார்” என்று ஏவலன் சொன்னான். “நாங்கள் வந்திருப்பதை அவரிடம் சென்று சொல்க!” என்று சுரேசர் சொன்னார். ஏவலன் திரும்புவதற்குள் பீமன் “அவரை அரசி திரௌபதி வந்து பார்த்தாளா?” என்றான். அவன் “இல்லை, இளைய அரசே. அவர் வரவில்லை” என்றான். பீமன் தலையசைக்க அவன் உள்ளே சென்றான்.

“அவளுக்கு தெரியுமல்லவா?” என்று பீமன் சுரேசரிடம் கேட்டான். “ஆம், முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளது” என்று சுரேசர் சொன்னார். “ஆனால் அரசி வந்தாகவேண்டும் என்பதில்லை என நான் அவரிடம் சொன்னேன். அவரும்

நோயுற்றவர்போலத்தான் இருக்கிறார். முதுமை வந்து மூடிவிட்டவர்போல. அவர் அரசருக்கு அளிப்பது ஏதுமில்லை. அரசர் அவரை பார்ப்பதனால் நலம் என ஏதும் விளையப்போவதுமில்லை.” பீமன் மெல்ல முனகினான். அவன் எண்ணுவதென்ன என உணரக்கூடவில்லை.

யுதிஷ்டிரனின் அறைக்கதவு திறப்பதற்கு முந்தைய கணத்தின் மெல்லிய பொருத்தில் நின்றிருந்தது. சகதேவன் நின்று “மூத்தவரே, நீங்கள் இப்போது கொண்டுவந்திருப்பது உங்களின் இன்னொரு வடிவைத்தான் அல்லவா?” என்றான். பீமன் திகைத்து நின்றான். “நாம் ஒவ்வொருவரும் கொண்டுவந்தது நம்மையேதான்” என்றான். நகுலன் “ஆம், நஞ்சென்றும் அமுதென்றும் மூத்தவருடன் இருந்தவர் தாங்களே அல்லவா?” என்றான். பீமன் சீற்றம்கொள்வதுபோல யுயுத்ஸுவுக்கு தோன்றியது. ஒருகணத்தில் அவன் திரும்பிச் செல்ல முற்படுவதுபோல் ஓர் அசைவு எழ அவன் பீமனின் கையை பற்றினான். “வருக மூத்தவரே, இதுவரை வந்துவிட்டோம்… இத்தருணத்தை அமைத்த தெய்வங்களுக்கு நிகழ்வனவற்றுக்கான பொறுப்பு அளிக்கப்படட்டும்” என்றான்.

பீமன் “ஆம்” என்றான். ஏவலன் வெளியே வந்து தலைவணங்கி அவர்கள் உள்ளே செல்லலாம் என அறிவித்தான். பீமன் தன் கையிலிருந்த பேழையை மீண்டும் ஒருமுறை நோக்கிவிட்டு உள்ளே சென்றான். பிறர் தொடர்ந்தார்கள்.

# களிற்றியானை நிரை - 65

**பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 15**

யுதிஷ்டிரனின் அறைக்குள் மருத்துவர் இருந்தார். முதியவர், அவர்களைக் கண்டதும் எழுந்து நின்றார். சுரேசர் வணங்கி “அரசருடன் உரையாடலாமா?” என்றார். அவர் “உரையாடுவது அவருக்கு நன்று” என்றார். சுரேசர் “அரசே, வெற்றிவீரராக தங்கள் இளையவர் வடபுலத்திலிருந்து மீண்டு வந்திருக்கிறார். இப்போது பன்மலையடுக்கத்துப் பனிநிலமும் உங்கள் கோலுக்குரியதாகியிருக்கிறது. பனிநிலவு சடை சூடிய அனல்வண்ணத்து அண்ணலுக்கும் உரியவராக நீங்கள் ஆகியிருக்கிறீர்கள். பனிமலைகளை பண்டு ஹஸ்தி வென்றார் என்று நூல்கள் சொல்கின்றன. அதன்பின் அங்குவரை சென்றடைந்த படைகள் தங்களுடையவை மட்டுமே. இனி நெடுங்காலம் அது அவ்வண்ணமே நீடிக்கும். விண்முகில்களின் உலகிலிருந்து உங்கள் மூதாதையரும் குடித்தெய்வங்களும் உங்களை வாழ்த்தும் தருணம் இது” என்றார்.

அந்த முறைமைச்சொற்கள் யுயுத்ஸுவை சலிப்புறச் செய்தன. யுதிஷ்டிரன் ஏதாவது எரிச்சலுடன் சொல்வார் என அவன் எதிர்பார்த்தான். ஆனால் வியப்புறும்படியாக யுதிஷ்டிரனிடம் சற்றே மலர்வு தோன்றியது. அவர் மஞ்சத்தில் கையூன்றி எழுந்து அமர்ந்து “ஆம், நம் குடியில் இதுவரை எவரும் பனிமலைகளை வென்றதில்லை. மாமன்னர் ஹஸ்தியின் புகழ்பொறிப்புகளில் அவ்வண்ணம் உள்ளது என்பது மெய். ஆனால் அது அன்று ஒரு தொல்பாணர் சொல்மரபு மட்டுமே. வடபனிக்கோடும் தென்கடல்முனையும் வெல்லப்பட்டது என்று சொல்வார்கள். ஆனால் அவற்றை படைகொண்டுசென்று வென்றிருக்க மாட்டார்கள். வடபுலத்திலிருந்து ஒரு பனிக்கட்டியை எடுத்துவரச் செய்வார்கள். தென்கடல் நீரை ஒரு

கமண்டலத்தில் கொண்டுவருவார்கள். அவற்றை மூதாதையருக்குப் படைத்து வேள்வியில் அவியாக்குவார்கள்” என்றார்.

“அன்று அஸ்வமேதம் என்றால் உண்மையில் குதிரைகளை பாரதவர்ஷமெங்கும் அனுப்புவதல்ல” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “அன்று ஆரியவர்த்தம் மட்டுமே பாரதவர்ஷம் என்று கருதப்பட்டது. இன்று சைந்தவம் காங்கேயம் என்று சொல்லப்படும் நிலங்கள், காமரூபமும் யவனமும் கணக்கில் இல்லை. வடபுலமும் தெற்கே தண்டகாரண்யமும் அதற்குள் வருவதில்லை. சொல்லப்போனால் சர்மாவதியின் கரையிலமைந்த நிஷாதர் நாடுகளும் பாஞ்சாலத்திற்கு அப்பாலிருந்த கிராதர் நாடுகளும் அதில் சேர்க்கப்படுவதில்லை. மிகக் குறுகிய நிலப்பகுதியே அன்று கருத்தில் கொள்ளப்பட்டது” என்றார். அவர் அவ்வளவு பேசுவது அவர்கள் அனைவருக்குமே சற்று துணுக்குறலை அளித்தது. அவர் பீமனை கருத்தில் கொண்டதுபோலவும் தெரியவில்லை.

“அன்றைய கணக்கு வேறு. எங்கு வேதம் திகழ்கிறதோ அந்த மண்ணை முழுதும் வென்றவன் ராஜசூயம் நடத்தலாம். வேள்விப்பரி செல்லவேண்டியவை அந்நிலங்களே. வேதத்தால் ஈரமான நிலம் மட்டுமே பாரதவர்ஷம், எனவே அவ்வாறு வேள்விநடத்தியவன் பாரதவர்ஷத்தை வென்றவன் ஆவான். அரக்கர், அசுரர், நிஷாதர், கிராதர்களை வென்று பரிவேள்வி நிகழ்த்தவேண்டியதில்லை. ஏனென்றால் அவர்கள் ஆளும் நிலத்தை அவ்வரசன் அதற்குப் பின்னரும் ஆளமுடியாது, அங்கே வேதம் திகழச்செய்ய இயலாது. அத்தகைய நிலம் அவனுக்கு பழியே சேர்க்கும். அசுரர் அரக்கர் முதலான அயலார் வேதவேள்விகளுக்கு தீங்கிழைக்காமல் அவர்களை

வென்று அகற்றுவது மட்டுமே அரசர்களின் கடன். வணிகப்பாதைகளையும் அந்தணர் நிலைகளையும் முனிவர்களின் தவச்சாலைகளையும் அவன் காக்கவேண்டும், அவ்வளவுதான்.”

“இதோ இன்று அனைத்துமே மாறிவிட்டிருக்கிறது. இன்று தொலைநிலங்களில் எல்லாம் நாடுகள் உருவாகி எழுந்துள்ளன. அவையெல்லாமே அஸ்தினபுரிக்கும் மகதத்திற்கும் நிகரான செல்வமும் படைவல்லமையும் கொண்டிருக்கின்றன. அவற்றை வெல்லாமல் நாம் பாரதவர்ஷத்தை ஆள்கிறோம் என்று சொல்லிக்கொள்வதில் பொருளே இல்லை. அவையெல்லாமே வேதவேள்வி நிகழும் நிலங்கள். அவர்களும் அஸ்வமேதம் செய்ய விழைபவர்கள். ஆரியர் என்று சொல்லிக்கொள்பவர்கள்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். அவருக்கு சற்று மூச்சுத் திணறியது. “அது பரசுராமரால் நிகழ்ந்தது. அவர் அத்தனை தொல்குடிகளையும் அரசர்களாக்கினார். அனல்குலத்து ஷத்ரியர் நாடெங்கும் பெருகி வேதத்தகுதி பெற்றனர். ஆகவே இன்று இங்கே மும்முடி சூடி அமரவிழைபவன் அவர்கள் அனைவரையும் வென்றாக வேண்டியிருக்கிறது. மாபெரும் அறைகூவல் ஒன்றை விடுத்திருக்கிறார் அவர்.”

“ஆகவேதான் இங்கே சென்ற இருநூறாண்டுகளில் எவரும் ராஜசூயம் செய்ததில்லை. மெய்யாகவே செய்ததில்லை என்று சொல்கிறேன். ராஜசூயம் போன்ற ஒன்றைச் செய்து பாணரை பாடவிடுவது வேறு. வேதம் நனைந்த நிலமனைத்தையும் வென்று அதை செய்ததில்லை. அத்தனை பெரிய படைவெற்றி எவருக்கும் அமைந்ததே இல்லை. அதன் பேரழிவு ஒருபக்கம். மறுபக்கம் அதற்குரிய பெருந்திறல். அத்தனை பெரிய படை

திரட்டப்பட்டதே இல்லை…” அவர் பெருமூச்சுடன் அமைந்தார். “அது நம்மால் இயன்றிருக்கிறது. நாம் குருக்ஷேத்ரத்தில் வென்றது இப்பாரதவர்ஷத்தையேதான். இனி நெடுங்காலம் இவ்வண்ணம் ஒன்று நிகழப்போவதில்லை.” அவர் கைகளை விரித்தார். “இன்று மெய்யாகவே பனிபடு வடமலையும் நீரெழு தென்முனையும் வெல்லப்பட்டுவிட்டன. ஒரு கோலால் ஆளப்படுகின்றன.”

“ஆம் அரசே, வேள்விப்பரிகள் நான்கு எல்லைகளையும் சென்றடைந்துவிட்டன” என்று சுரேசர் ஊடே புகுந்தார். “உங்கள் இளையோன் இதோ வென்று மீண்டு வந்திருக்கிறார். உங்களை வணங்குகிறார்.” அவர் கண்காட்ட பீமன் முன்னால் சென்று யுதிஷ்டிரனின் கால்களை தொட்டு வணங்கினான். “வாழ்த்துக மூத்தவரே, நான் உங்கள் சொல்லுடன் வடபுலத்தை வென்று மீண்டிருக்கிறேன்!” யுதிஷ்டிரன் “மேலும் மேலும் வெற்றிகள் சூழ்க!” என்று வாழ்த்திய பின் மீண்டும் சுரேசரை நோக்கி “இவ்வண்ணம் அனைத்து நாடுகளையும் ஏன் வெல்லவேண்டும்? அதைத்தான் நான் நேற்றிரவெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாடும் தன் வழியில் வாழ்ந்தால் என்ன? ஒரு நாடு வளர்ந்து பிறவற்றை வென்றே ஆகவேண்டுமா என்ன? இது வெறும் ஆணவமா? என் தன்முனைப்பின் நிறைவுக்காகத்தான் இதை செய்கிறேனா? நான் மும்முடி சூடி அமர்வதனால் எனக்கன்றி பிறருக்கு எந்தப் பயனும் இல்லையா?” என்றார்.

சுரேசர் “அவ்வாறல்ல, அது இறையாணை” என்றார். “ஆம், அதேதான். இவ்வாறு ஒரு நாடு பிறவற்றை வெல்லும் முனைப்பு கொள்வதே இறையாணையால்தான். இரு போக்குகள் இங்கே நிலவுகின்றன. ஒன்று உடைந்து உடைந்து

பரவும் போக்கு. நாடுகளும் குலங்களும் உடைகின்றன. பிரிந்து அகன்று புதியனவாக வளர்கின்றன. அதற்கு நேர் எதிரானது ஒன்று மேலும் வளர்ந்து அவையனைத்தையும் ஒன்றெனத் தொகுக்கும் போக்கு. ஒரு யுகத்தில் ஒன்று மேலோங்கும், அடுத்த யுகத்தில் பிறிதொன்று. இந்த நெசவினூடாகவே மானுடம் முன்செல்கிறது. இது தொகையுகம். அதையே கலியுகம் என்றனர் போலும்" என்று யுதிஷ்டிரன் சொன்னார். சுரேசர் "ஆம், யாதவரின் மெய்நூல் கலியுகத்தில் ஒருங்கிணைதலே ஆற்றல் என்கிறது" என்றார். அச்சொற்களை இமைக்கா விழிகளுடன் கேட்ட பின் யுதிஷ்டிரன் புன்னகைத்து "மெய்" என்றார்.

மேலும் சொற்கள் அவரிடமிருந்து எழுந்தன. "உண்மையில் நான் பாரதவர்ஷத்தை தொகுக்கிறேன். பாரதவர்ஷம் முழுக்க வணிகம் ஒருங்கிணைய, நெறிகள் முறைமைப்பட, நூல்கள் தொகுக்கப்பட வழிவகுக்கிறேன். பாரதவர்ஷம் விராடவடிவமென எழுந்து நிற்பது என் கோல் வழியாகவே. இது என் கோல் மட்டுமல்ல, இளைய யாதவரின் சொல்லும் கூட. அவருடைய சொல் கூட அல்ல, அவருடைய குருமரபின் சொல். அந்த குருமரபோ காடுகளை கொந்தளிக்கச் செய்த வேதமுடிபுக் கொள்கைகளின் விளைகனி. என் வழியாக வேதமுடிபுக்கொள்கையே இந்நிலத்தை வென்று ஆட்கொள்கிறது. வேதம் ஆண்ட நிலத்தை இனி வேதமுடிபே ஆளும்." அவர் நிறைவுடன் புன்னகை செய்து "அந்தத் தெளிவை நான் அடைந்தேன். அதன் பின்னரே நேற்று துயில்கொண்டேன்" என்றார்.

சுரேசர் "ஆம் அரசே, உங்கள் இளையோனின் படைகள் வழியாக வடமலைகள் வரை சென்றடைந்தது வேதமுடிபின்

அழியாச் சொற்களே” என்றார். “உங்கள் இளையோன் உங்களை வணங்கி நற்சொல் பெற்றுச்செல்ல வந்துள்ளார்.” யுதிஷ்டிரன் பீமனை மீண்டும் நோக்கிவிட்டு “ஆம், நான் அவனை வாழ்த்திவிட்டேனே” என்றார். பீமன் “மூத்தவரே, நான் உங்களுக்கு ஒரு பரிசை கொண்டுவந்திருக்கிறேன். அரிய பொருள் ஒன்று” என்றான். நிறைவுடன் புன்னகைத்து யுதிஷ்டிரன் சொன்னார் “ஆம், அரிய பொருட்கள் அனைத்தும் இனி இந்த அரண்மனைக்குத்தான் வந்தாகவேண்டும். ஏனென்றால் பாரதவர்ஷமே இனி என் உடைமை.” பீமன் ஒருகணம் சுரேசரை நோக்கிவிட்டு “இதை உங்களுக்கென கொண்டுவந்தேன்” என்று அப்பேழையை அவர்முன் பீடத்தில் வைத்தான்.

யுதிஷ்டிரன் அதை குனிந்து நோக்கினார். ஆனால் தொடவில்லை. “இது என்ன?” என்றார். பீமன் அதை திறந்து உள்ளிருந்த கல்மணியை காட்டினான். “வடக்கே மலைகளுக்கு மேல், கின்னரநாட்டுக்கும் அப்பால் போதநிலம் என்னும் நாடு இருப்பதை அறிந்திருப்பீர்கள்” என்றான். “ஆம், ஆனால் அது சொற்களில் மட்டுமே உள்ளது என்று கேட்டிருந்தேன். மெய்யாகவே அவ்வண்ணம் ஒரு நிலம் உண்டா என்ன?” என்றார் யுதிஷ்டிரன். “மெய்யாகவே உள்ளது. போத் என்றும் போ என்றும் அந்நிலம் கின்னரநாட்டினரால் அழைக்கப்படுகிறது. அங்கு திகழும் மெய்வழி போன் எனப்படுகிறது. அங்குள்ள தெய்வங்கள் அங்கு சென்று மீளும் சிலர் வழியாக கின்னரநாட்டுக்கு வருகின்றன. கின்னரர்கள் வழிபடுவது அத்தெய்வங்களையே” என்று பீமன் சொன்னான்.

யுதிஷ்டிரன் மெல்ல ஆர்வம் கொண்டார். “அங்கு சென்று மீண்ட எவரையேனும் நீ பார்த்தாயா?” என்றார். “ஆம்

மூத்தவரே, நானே கண்டேன். அவர் காலடியில் அமர்ந்தேன். அவரிடம் சொல் பெற்றேன். அவரால் இது எனக்கு அளிக்கப்பட்டது” என்று பீமன் சொன்னான். “போதநாட்டுக்கும் அப்பால் மலைமுடிகளுக்குமேல் மண்ணிலிருந்து விலகிப்பிரிந்து வானில் மிதப்பதுபோல் ஒரு நகரம் உள்ளது. அதை ஷம்பாலா என்கிறார்கள்.” யுதிஷ்டிரன் எழுந்துவிட்டார். “ஆம், அறிவேன். அங்கு செல்வதற்கான குகைப்பாதைகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்” என்றார். “அந்நிலத்தில் இருந்து எடுக்கப்பட்டது இந்தக் கல்மணி. இரு விழிகள் செதுக்கப்பட்டது இது. இதை அவர்கள் ட்ஸி என்கிறார்கள். ஷம்பாலாவின் காவலர்களான நாகங்களின் விழிமணிகள் இவை எனப்படுகிறது.”

யுதிஷ்டிரன் அதை குனிந்து நோக்கினார். “மூத்தவரே, அமுதும் நஞ்சுமான ஒன்று இது. ஒன்று பிறிதாகும் ஒருமை நிலையை நமக்கு உணர்த்துவது. வாழ்வும் சாவும், உண்மையும் பொய்யும் என இரு நிலைகளை உணரவேண்டுமென்றால் இதைத் தொட்டு உசாவலாம்” என்றான். யுதிஷ்டிரன் “ஆம், இவ்வாறு ஒன்றைப்பற்றி அறிவேன்” என்றார். அதை மேலும் குனிந்து நோக்கி “இது நமக்கு ஒன்றை அளிக்கும் விலையென பிறிதை கோரும் இல்லையா? உண்மையை நமக்கு உரைக்கும் அதற்கு நிகராக பத்து பொய்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்றார். பீமன் “ஆம், மூத்தவரே. இளமையை நமக்களிக்கும், பத்துமடங்கு விசையுடன் முதுமைகொண்டு சாவை அணுகச் சித்தமென்றால்” என்றான்.

யுதிஷ்டிரன் நிமிர்ந்து அவனை நோக்கினார். “நீ இதனிடம் இளமையை உசாவினாயா?” என்றார். “இல்லை, மூத்தவரே” என்றான் பீமன். “நீங்கள் இருவரும்?” என்று நகுலனையும்

சகதேவனையும் நோக்கி யுதிஷ்டிரன் கேட்டார். அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கிய பின் “இல்லை, அந்த அருமணியை சற்றுமுன்னர்தான் நோக்கினோம்” என்றார்கள். “ஆகவே இதை முதன்முதலாக எனக்கு கொண்டுவந்திருக்கிறீர்கள் அல்லவா?” என்றார் யுதிஷ்டிரன். “ஆம்” என்றான் பீமன். “ஏனென்றால் நான் அரசன் என்று சொல்லப்போகிறாய்... நன்று” என்று யுதிஷ்டிரன் சொன்னார். “சரி, நான் ஒன்று உசாவுகிறேன். இதை எனக்களிக்கையில் நீ எண்ணிக்கொடுப்பது என்ன? சாவா, வாழ்வா?” பீமன் “மூத்தவரே...” என்றான். “சொல், நீ எனக்கு அளிப்பது என்ன? நஞ்சா, அமுதா?”

சுரேசர் “இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதன என்று காட்டும் மணி இது, அரசே” என்றார். “அதை நான் அறிவேன். ஆனால் நான் அறிய விழைவது இதை அளிக்கையில் அவன் எண்ணியது என்ன என்று” என்றார். பீமன் திணறலுடன் “நான்...” என்றபின் “என்னால் சொல்லமுடியவில்லை, மூத்தவரே” என்றான். “நான் ஏன் வினவுகிறேன் என்றால் நீ என்றுமே இவ்விரண்டையும் எனக்கு அளித்தவன்” என்று யுதிஷ்டிரன் சொன்னார். பீமனை நோக்கி விழிகூர்ந்து “என் உள்ளத்தில் உறையும் வஞ்சச்சொற்கள் வசைச்சொற்கள் எல்லாமே நீ உரைத்தவை. நான் அடைந்த அனைத்து நலங்களும் நீ அளித்தவையே” என்றார். “இது எவ்வண்ணம் உன்னிடமிருந்து கிளம்பியது என்று மட்டுமே அறிய விழைகிறேன்... நீ உன்னையே உசாவிச்சொல்.”

பீமன் அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். அவனுள் ஏதோ திரள்வதை யுயுத்ஸு கண்டான். நாகம் நஞ்சைத்திரட்டி படமெடுப்பதுபோல. ஒரு கூர்பழிச்சொல் எழவிருக்கிறதா என்ன? பீமன் “நான் நஞ்சு கொண்டவன், முத்தவரே. உடன்

அமுதும் ஏந்தியவன். அந்நஞ்சு என்னில் ஊறிய கானகக்குரங்கின் பால் எனக்கு அளித்தது. நான் கொண்டுள்ள அமுது அன்னை குந்தி ஊட்டிய அன்னம். இரண்டும் நானே, ஆகவே என்றும் அவ்வாறேதான் இருப்பேன்" என்றான். அவன் அந்த அருமணியைச் சுட்டி "இது அவ்விரண்டும் இணைந்தது. உங்கள் வாழ்வும் சாவும் இதிலுள்ளது. நீங்கள் இரண்டையும் ஒன்றெனத்தான் தெரிவுசெய்யவேண்டும்" என்றான்.

யுதிஷ்டிரன் மீண்டும் குனிந்து அந்த அருமணியை நோக்கினார். அவர் முகத்தில் ஒரு புன்னகை எழுந்தது. "நன்று, இது எனக்கு இளமையை மீட்டளிக்கும் இல்லையா?" என்றார். "நான் கொண்டுள்ள நோயை கடந்துசெல்ல இது உதவக்கூடும் என நினைக்கிறீர்களா?" சுரேசர் "ஆம் அரசே, உங்களை இன்றைய சோர்விலிருந்து இது மீட்கும், ஐயமே இல்லை" என்றார். யுதிஷ்டிரன் "ஆம், அதையே நானும் உணர்கிறேன். ஆனால் நான் இளைமையை நோக்கி சென்றால் அடைந்த அறிவை இழந்துவிடுவேன் அல்லவா? துயரங்களினூடாக நான் அடைந்தது அது. துயரங்களை எனக்கு அளிப்பதும் அறிவே. ஆனால் அறிவை இழந்து எதையும் நான் சென்றடைய விழையவில்லை" என்றார்.

யுதிஷ்டிரன் பீமனிடம் "இதை சொல்லும்போது என்னால் ஐயமில்லாது உரைக்க முடிகிறது. இதில் எப்போதுமே தடுமாற்றம் வரப்போவதில்லை. இது எனக்கு தேவையில்லை, இதை எந்நிலையிலும் நான் தொடப்போவதில்லை. இது நீ எனக்கு அளித்த நற்பரிசு, இளையோனே. ஆனால் இப்பொருள் அல்ல, இதன் முன் இவ்வண்ணம் ஐயமின்றி என்னால் சொல்லமுடியும் என்னும் அறிதலை நான் அடைந்த கணமே எனக்கான பரிசு" என்றார். பீமன் தலைவணங்கினான். "நலம்

சூழ்க!” என்று யுதிஷ்டிரன் வாழ்த்தினார். பீமன் தலைவணங்கி பின்னால் நகர்ந்தபோது யுதிஷ்டிரன் எழுந்து இரு கைகளையும் விரித்து “வருக, இளையோனே!” என்றார்.

ஒரு கணம் பீமன் தயங்கினான். “வருக என நான் அழைப்பது காட்டின் மைந்தனை. நான் உண்ட நஞ்சினால்தான் என் மெய்யறிதல்கள் அனைத்தையும் அடைந்தேன். என் வாழ்நாள் முழுக்க கான்வல்லமைகளால் காக்கப்பட்டேன். என் எல்லைகள் நீ, என் எல்லைகளுக்கு காவலும் நீ” என்றார் யுதிஷ்டிரன். பீமன் கைகளை விரித்தபடி முன்னால் சென்றான். அவர்கள் தழுவிக்கொண்டார்கள். யுதிஷ்டிரன் விழிநீர் சிந்தி விம்மினார். பீமனின் தோள்களில் தலைவைத்து அவன் முதுகை வருடிக்கொண்டே இருந்தார். பெருமூச்சுடன் பிரிந்து முகம்நோக்கி சிரித்து மீண்டும் தழுவிக்கொண்டார். மூன்றுமுறை அவர்கள் தழுவிக்கொண்டதும் சுரேசர் சிரித்தபடி “போதும் அரசே, ஒன்று கடந்தால் மூன்று என்பது முறை” என்றார். யுதிஷ்டிரன் சிரித்துக்கொண்டு “ஆம், செல்க!” என்றார்.

அவர்கள் தலைவணங்கி திரும்பியபோது யுதிஷ்டிரன் “இளையோனே, இதை எடுத்துச்செல்” என்றார். பீமன் அந்தச் சிமிழை எடுத்துக்கொண்டான். யுதிஷ்டிரன் “இதை நீ திரௌபதிக்கு அளிக்கலாம்” என்றார். பீமன் அவரை நோக்கி நிற்க அவர் விழிகளை திருப்பிக்கொண்டு “அவள் விழைவாளா என அறியேன், ஆனால் அவளுக்கு இது தேவைப்படும்” என்றார். பீமன் “அவ்வண்ணமே” என தலைவணங்கினான்.

அவர்கள் வெளியே வந்ததும் பீமன் “மூத்தவரின் ஆணைப்படி இதை திரௌபதியிடம் அளித்துவிடலாம்”

என்றான். “அதை நீங்கள் கொண்டுசென்று கொடுப்பதே முறை” என்றார் சுரேசர். “இல்லை, அதற்கான உளநிலை எனக்கில்லை” என்று பீமன் சொன்னான். “என்பொருட்டு இளையோன் யுயுத்ஸு செல்லட்டும்…” என்று திரும்பி யுயுத்ஸுவை நோக்கி “செல்க, இளையோனே! இதை நான் என் பரிசாக வெண்மலைகளில் இருந்து அரசிக்கு கொண்டுவந்தேன் என்று சொல்லி அவளிடம் அளித்துவருக!” என்றான். யுயுத்ஸு தலைவணங்கினான். பீமன் “அவளிடம் நான் சொன்னதாகச் சொல்க! இது இளமையின் பாதை, ஆனால் அவள் இதில் தனித்தே செல்லமுடியும் என” என்றான்.

யுயுத்ஸு தலைவணங்கி அந்தச் சிமிழை பெற்றுக்கொண்டான். அவர்கள் விலகிச்செல்வதை நோக்கியபடி சற்றுநேரம் நின்றான். பின்னர் திரும்பி நடந்தான். இடைநாழியின் சுவர்கள் தோறும் விரிந்திருந்த மாபெரும் ஓவியங்களிலிருந்து யயாதியும் புருவும் குருவும் ஹஸ்தியும் பிரதீபனும் அவனை நோக்கிக்கொண்டிருந்தனர். அவன் அவர்களை நோக்காமல் தலைகுனிந்து நடந்தான். அவர்களின் நோக்கு எடைமிக்கதாக இருந்தது. அவனை தொடர்ந்து துரத்தி வந்தது. அரசியர் மாளிகைக்கு அவன் வந்தபோது களைத்து மூச்சிளைத்துக் கொண்டிருந்தான். திரௌபதியின் அறைக்கு முன் நின்றிருந்த ஏவற்பெண்டிடம் அரசியைப் பார்க்க விழைவதாகச் சொன்னான். உடனே அவன் உள்ளே செல்லலாம் என ஒப்புதல் வந்தது.

திரௌபதி உள்ளே பீடத்தில் அமர்ந்திருந்தாள். அவள் முன் சுவடிகள் விரிந்திருந்தன. அவளுடைய கூந்தலை இரு அணிப்பெண்டிர் எண்ணையிட்டு சீவிக்கொண்டிருந்தனர். கரிய பட்டுச்சால்வை என ஒளியுடன் அது அவர்களின் கைகளில் வழிந்திருந்தது. தாழம்பூவும் கைதோன்றியும் கலந்த எண்ணை

மணம் அறையில் நிறைந்திருந்தது. திரௌபதி படித்துக்கொண்டிருந்த நூல் காவியம் என அதன் வண்ணப்பூச்சிலிருந்து யுயுத்ஸு உய்த்தறிந்தான். அப்போது அவள் ஓர் அரசியல்நூலை படித்துக்கொண்டிருந்தால்தான் ஏமாற்றம் அடைவோம் என எண்ணிக்கொண்டான். அவன் வணங்கியதும் அமரும்படி திரௌபதி கைகாட்டினாள். அவன் அமர்ந்தான். அப்பேழையை அவள் பார்த்துவிட்டாள் என உணர்ந்தான்.

திரௌபதி இயல்பாக "அரசியர் கிளம்பிவிட்டனர். அனைவருமே இன்றும் நாளையுமாக நகர்புகுந்துவிடுவார்கள்" என்றாள். "தேவிகை இன்று உச்சிப்பொழுதிலேயே வந்துவிட வாய்ப்புண்டு... அவளை எதிர்கொள்ள துச்சளை சென்றிருக்கிறாள்." யுயுத்ஸு "ஆம், அறிந்தேன்" என்றான். "அவர்களின் உளநிலைகள் எவ்வண்ணம் என்று தெரியவில்லை. இந்நகரின் பொலிவும் கொண்டாட்டங்களும் அவர்களை மகிழ்விக்குமா அன்றி சோர்வுறச் செய்யுமா என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன்." யுயுத்ஸு "அதை நாம் சொல்லமுடியாது. அவர்களே அத்தருணத்தில் தங்களை காணும்வரை சொல்லிவிட முடியாது" என்றான். திரௌபதி "மெய்தான்" என்றாள்.

அவளுடைய கருங்குழலில் ஒரு நரைகூட இல்லை என்பதை அவன் கண்டான். உடனே நோக்கை விலக்கிக்கொண்டு "நான் மூத்தவர் பீமசேனரின் ஆணைப்படி இங்கே வந்தேன்" என்றான். "ஆம், அவர் நகர்புகுந்ததை அறிவேன்" என்று திரௌபதி சொன்னாள். "நான் அவையிலன்றி எவரையும் சந்திக்கும் உளநிலையில் இல்லை." அவன் அந்தச் சுவடியை நோக்க "இது காவியம். முதற்கவி வான்மீகி இயற்றியது. நான் சீதையின்

கான்வாழ்வைப் பற்றிய பாடல்களை படித்துக்கொண்டிருந்தேன்” என்று திரௌபதி சொன்னாள். “கானகத்தில் அவள் உவகையிலாடுவதை வான்மீகி சொல்கிறார். அவள் நிலமங்கை. நிலம் பொலிவுகொள்வது காட்டிலேயே” என்றாள்.

யுயுத்ஸு “மெய், நானும் அவ்வண்ணம் எண்ணியதுண்டு” என்றான். “சிறைவைக்கப்படுகையில் நிலம் சிறப்பிழக்கிறது. கைப்பற்றப்பட்டாலும் மீட்கப்பட்டாலும் நிலமங்கை துயரையே அடைகிறாள்” என்றாள் திரௌபதி. அவள் சொன்னதற்கு என்ன பொருள் என்று யுயுத்ஸு எண்ணிக்கொண்டான். அப்பேச்சை கடக்கும் பொருட்டு “நான் பீமசேனர் தங்களுக்கு பரிசாக அளித்த ஒரு பொருளுடன் வந்துள்ளேன், அரசி” என்றான். அப்பேழையை பீடத்தில் வைத்து “இதை தங்களுக்கு அளிக்கும்படி மூத்தவர் சொன்னார். வெண்பனி மலைகளில் இருந்து இதை அவர் கொண்டுவந்தார். இது அருமணி அல்ல, எளிய கல்தான். ஆனால் ஒரு பெருநூலின் மையச் சொல் என பொருள் செறிந்தது” என்றான்.

அவன் அதைப்பற்றி சொல்லி முடித்தான். திரௌபதி விழிகளில் அசைவே இல்லாமல் அதை கேட்டுக்கொண்டிருந்தாள். அவன் பீமன் அவளிடம் சொல்லச்சொன்னதையும் சொல்லிவிட்டு “இதனிடம் எதை உசாவுவது என்பதை நீங்கள் முடிவுசெய்யலாம், அரசி” என்றான். அவள் கைநீட்டி அந்தப் பேழையை கேட்டாள். அவன் பீடத்தில் இருந்து எடுத்து அதை அவளிடம் கொடுத்தான். அவள் அதைத் திறந்து நோக்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய பெரிய இமைகள் சரிந்திருந்தன. விழிவெண்மை கீற்றெனத் தெரிந்தது. அவள் அதை நோக்கி ஊழ்கத்தில் ஆழ்ந்துவிட்டதுபோலத் தோன்றியது. யுயுத்ஸு “இது தங்களுக்கு உகந்தது என்று

தோன்றியது எனக்கு” என்றான். அவள் விழிதூக்கி சொல்க என முகம் காட்டினாள்.

“நீங்கள் உளம்விலகிவிட்டிருக்கிறீர்கள். அணிகளை பூணுவதற்குக் கூட உங்கள் அகம்கூடவில்லை. எக்கணமும் துறந்து உதிர்ந்துவிடுபவர் போலிருக்கிறீர்கள்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆனால் இத்தருணம் கோருவது ஒரு பேரரசியை. மண்விழைவும் கோன்மைச்செருக்கும் கொண்டவளை. திருமகளும் கொற்றவையும் என ஆனவளை. அரியணையை ஒளிபெறச் செய்யும் சுடரை. அரசி, சில ஆண்டுகளுக்கு முன்னர்கூட நீங்கள் அவ்வண்ணம் இருந்தீர்கள். அதை நீங்கள் மிக எளிதாக இந்த அருமணியினூடாக அடையமுடியும். இத்தருணத்தை பொலிவுறச் செய்ய முடியும்.” அவள் முகத்தில் எழுந்த மெல்லிய புன்னகையை கண்டபடி அவன் தொடர்ந்தான். “ஆம், இறப்பு மேலும் அணுகும். ஆனால் துறப்பவர் முதலில் களையவேண்டியது சாவின் மீதான அச்சத்தை அல்லவா?”

திரௌபதி அவனை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தாள். அவள் உள்ளம் எண்ணுவதென்ன என்று அவனுக்குத் தெரியவில்லை. அவள் விழிகளையோ முகத்தையோ கொண்டு அவளை புரிந்துகொள்ளவே முடிவதில்லை. அவள் விழிகளை அரிதாகவே நேர்கொண்டு நோக்கவும் முடிகிறது. அவள் அதை மீண்டும் பீடத்தில் வைத்தாள். அது தனக்குத் தேவையில்லை என்று சொல்லப்போகிறாள் என்று அவன் எண்ணினான். எழுந்து தலைவணங்கி “நான் விடைகொள்கிறேன், அரசி” என்றான். ஆனால் அவள் புன்னகையுடன் “அது இங்கிருக்கட்டும்” என்றாள். அவன் தலைவணங்கி “அவ்வாறே” என்றான்.

வெளியே வந்தபோது யுயுத்ஸு புன்னகைத்துக் கொண்டிருந்தான். அவன் நடையில் இயல்புநிலை கூடியது. அவன் சுவர்களில் தெரிந்த அரசர்களின் விழிகளை நோக்கியபடியே சென்றான். யயாதியின் அருகே வந்ததும் நின்றான். யயாதி இளமையை புருவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் காட்சி வரையப்பட்டிருந்தது. புருவின் முதுமை. அப்போதுதான் அவன் அந்த ஓவியங்களின் விந்தையை உணர்ந்தான். யயாதியும் புருவும் ஒன்றுபோலவே முகம் கொண்டிருந்தனர். முதுமைகொண்ட புரு யயாதியாகவும் இளமை அடைந்த யயாதி புருவாகவும் தோன்றினார்கள். எதுவுமே மாறவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது.

யுயுத்ஸு நடந்தபடி அந்த ஓவியங்களை மீண்டும் பார்த்தான். புருவிடம் மீண்டும் இளமையை கொடுக்க வந்து நின்றிருந்த யயாதி களைத்திருந்தார். புரு ஊக்கம் கொண்டு புன்னகைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் அருகருகே நின்றிருக்கும் ஓவியத்தில் இருவரும் ஆடிப்பாவைகள்போலத் தோன்றினர். அவனால் அந்த ஓவியங்களின் பொருளென்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் ஓவியங்களை கூர்ந்து நோக்கியதே இல்லை. எந்தக் கலைக்கும் அவன் உளம்கொடுத்ததில்லை. கலையின் பொருள்மயக்கம் அவனுக்கு எரிச்சலை ஊட்டியது. அது நுட்பமான ஒரு சூதாட்டம் அன்றி வேறில்லை என்றுதான் எப்போதுமே தோன்றியிருந்தது. இப்போதுகூட அந்த ஓவியன் ஏதோ ஒரு பகடையை உருட்டியிருக்கிறான். அதை அவன் திரும்ப உருட்டவேண்டுமென எதிர்பார்க்கிறான். ஆனால் இந்த ஆட்டத்தின் களம் அவன் அமைத்தது. நெறிகள் அவனுடையவை. ஆகவே அவனை எவருமே வெல்லப்போவதில்லை.

அவன் மீண்டும் முதலில் இருந்தே அரசர்களின் ஓவியங்களை பார்த்துக்கொண்டு நடந்து யயாதியை வந்தடைந்தான். உள்ளம் வண்ணங்களால் மயக்கடைந்திருந்தது. இசையைப் போலவே வண்ணங்களும் பொருளில்லாத உணர்வலைகளை உருவாக்குவன, சித்தப்பெருக்கை ஒடுக்கி ஆழ்நிலை ஒன்றை உருவாக்குவன என அவன் அப்போதுதான் உணர்ந்தான். படிகளினூடாக இறங்கும்போது ஓர் எண்ணம் வந்தது. அவன் கண்ட அனைத்து அரசர்களின் விழிகளிலும் யயாதியின் நோக்கே இருந்தது. யயாதியிடமிருந்த ஏக்கமும் தவிப்பும் தனிமையும். அவன் கீழ்ப்படியில் புன்னகையுடன் நின்றுவிட்டான். பின்னர் மேலாடையை சீர்செய்தபடி நடந்தான்.

# களிற்றியானை நிரை - 66

## பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 16

சுரேசரின் அறைக்குள் நுழைந்து யுயுத்ஸு தலைவணங்கினான். அவர் சற்று பதற்றத்தில் இருந்தார். எழுந்து அவனை வரவேற்று அமரும்படி சொல்லிவிட்டு உள்ளே சென்று அங்கிருந்த ஒற்றர்களிடம் ஓரிரு சொற்கள் பேசிவிட்டு திரும்பிவந்து அவனிடம் “இளையவர் பார்த்தனின் படைகள் அணுகிவிட்டிருக்கின்றன. அவர் நம் எல்லைக்குள் புகுந்துவிட்டார்” என்றார். யுயுத்ஸு “ஆம்” என்றான். “நகர் ஒருங்கியிருக்கிறது. இம்முறை நாம் எதையுமே செய்யவில்லை. நகரம் தானாகவே எழுந்துவிட்டது. பிரிந்த காதலன் அணுகும்போது அணிகொள்ளும் காதலியைப்போல என்று சூதர்கள் பாடுகிறார்கள்” என்றார் சுரேசர்.

யுயுத்ஸு புன்னகைத்தான். அவன் நாள்முழுக்க அரசிகள் நகர்புகுவதை திட்டமிட்டு நடத்துவதில் மூழ்கியிருந்தான். விஜயையும் தேவிகையும் தனித்தனியாக நகர்புகுந்தனர். அவர்களின் அரண்மனைச் சந்திப்புகள் முறைமைப்படி நிகழ்ந்து முடிந்தன என்று அறிந்த பின்னரே அவன் நிறைவுகொண்டு தன் அறைக்குச் சென்று சற்றே ஓய்வெடுத்தான். அர்ஜுனன் அன்று நகர்புகவிருப்பதை அறிந்திருந்தான். அதை சுரேசரே பொறுப்பேற்றுக்கொண்டிருந்தார். நகுலனும் சகதேவனும் அர்ஜுனனை கோட்டைமுகப்பில் எதிர்கொள்வது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பீமன் புராணகங்கைக்குள் முந்தையநாள் இரவே சென்றுவிட்டிருந்தான்.

அர்ஜுனன் நகர்புகுந்துவிட்டிருப்பான் என்று யுயுத்ஸு எண்ணினான். சுரேசர் கொண்டிருந்த பதற்றம் அதில் ஏதோ சிக்கல் என்பதை காட்டியது. யுயுத்ஸு அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். அவர் பதற்றங்களை மறைப்பவர், ஆனால் அன்று சற்று எல்லைகளை கடந்திருந்தார். மீண்டும் பீடத்தில் அமர்ந்து “இளையவர் பார்த்தன் இன்று நகர்புகப் போவதில்லை” என்றார். யுயுத்ஸு அவர் மேலே சொல்வதற்காக காத்திருந்தான். “அவருடைய படைகள் வந்தணைந்துவிட்டன. அவை அஸ்தினபுரியை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன” என்றார் சுரேசர். “ஆனால் அவர் நேராக கங்கைக்கரையில் துரோணரின் பழைய குருநிலைக்கு சென்றுவிட்டார். நீங்கள் அறிந்திருப்பீர்கள், இளைய யாதவர் அங்குதான் இருக்கிறார்.”

யுயுத்ஸு தலையசைத்தான். “அவர் நேராக அங்கே செல்வதே இயல்பு. நான் அதை முன்னரே எண்ணியிருக்கவேண்டும். ஆனால் இம்மூன்றுபேரும் அணியூர்வலமாக நகர்புகுந்ததை

என்னில் நிகழ்த்தி நிகழ்த்தி நோக்கி அவ்வாறே பார்த்தனும் நகர்புகுவார் என எண்ணிவிட்டேன்” என்ற சுரேசர் புன்னகைத்து “நாம் நிகழ்ச்சிகளை கற்பனையில் காட்சியாக ஆக்கிக்கொள்கையில் அவை நிகழ்ந்துவிட்டன என்றே எண்ணிக்கொள்ளத் தொடங்கிவிடுகிறோம்” என்றார். “ஆம்” என்றான் யுயுத்ஸு. “அவ்வாறன்றி வேறெவ்வகையிலும் அவை நிகழமுடியாதென்றே தோன்றிவிடுகிறது.” “அதுதான் நான் செய்த பிழை… கொண்டாட்டத்தில் நானும் ஈடுபட்டுவிட்டேன்” என்றார் சுரேசர். யுயுத்ஸு “நாம் கொண்டாட ஏதுமில்லை” என்றான்.

சுரேசர் அதை செவிகொள்ளாமல் “இனி என்ன செய்வதென்று தெரியவில்லை. நகரம் முழுக்க மக்கள் திரண்டு ஆர்ப்பரித்து கொந்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கதைகள் வழியாக பலநூறு அர்ஜுனன்களை பார்த்துவிட்டவர்கள். அவர்களின் வாழ்க்கையில் இது ஒரு முதன்மைத் தருணம்… அவர் நகர்புகவில்லை என்றால் இந்த உள எழுச்சி ஒரு பெரிய சோர்வாக மாறிவிடும். அது நீடித்தால் நாம் அறிவிக்கவிருக்கும் வேள்வியும் கொண்டாட்டமும் எல்லாமே உணர்வடங்கியே நிகழும். ஒருமுறை கொண்டாட்டம் குளிர்ந்து நைந்துவிட்டால் பின்னர் அதை எழுப்புவது கடினம்” என்றார்.

“ஏனென்றால் கொண்டாட்டங்களில் ஒரு பொய் உள்ளது. அதை மானுட உள்ளம் அறிந்துகொண்டேதான் இருக்கும். அதை எங்கோ கரந்துவைத்துத்தான் அவர்கள் கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அது மீறி எழுந்துவிட்டதென்றால் ஐயமும் நம்பிக்கையிழப்பும் உருவாகும். அது ஏளனமாக பகடியாக மாறும். அதன்பின்

எதையும் நாம் ஈடுவைக்க முடியாது” என சுரேசர் தொடர்ந்து சொன்னார். யுயுத்ஸு “மெய், எங்கே கொண்டாட்டம் கேலிக்கூத்தாகிறது என எவராலும் வகுக்க முடியாது” என்றான். சுரேசர் “என்ன செய்வதென்று புரியவில்லை… நான் இந்த அளவுக்கு செயலற்றுப் போனதில்லை. என்னால் இளைய பாண்டவரின் உள்ளத்தை மாற்றமுடியாது. நீங்கள் சென்று அவரை எவ்வண்ணமேனும் அழைத்துவரக்கூடுமா? அரசி திரௌபதியை அழைத்துவந்ததைப்போல?” என்றார்.

யுயுத்ஸு “இளைய யாதவருடன் அவர் நகர்புகலாமே?” என்றான். சுரேசர் “இல்லை, இளைய யாதவர் நம் வேள்வியில் பங்குகொள்ள மாட்டார். இந்தக் கொண்டாட்டத்திலும் அவர் கலந்துகொள்ளப்போவதில்லை” என்றார். “ஏன்?” என்றான் யுயுத்ஸு. “அவருடைய முடிவை அவர் முன்னரே தெரிவித்துவிட்டார். அதை நானும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இதை முழுக்க முழுக்க நமது வெற்றியாகவே நிகழ்த்த அவர் விழைகிறார். இன்று அவர் முடிகொண்ட அரசர் அல்ல. அவர் ஓர் ஆசிரியராகவே வேள்வியில் கலந்துகொள்ள முடியும். அதையும் அவர் இன்று விரும்பவில்லை. அவர் வேறொரு பயணத்தில் இருக்கிறார். அதை நாம் இன்று அறியமுடியாது” என்றார் சுரேசர்.

யுயுத்ஸு அதை புரிந்துகொண்டு தலையசைத்தான். “உடன் இளைய பாண்டவரும் அங்கேயே தங்கிவிட்டார் என்றால் அதைவிடச் சோர்வூட்டுவது வேறில்லை. அவர் இவ்விழாவை புறக்கணிக்கிறார் என்றே பொருள். அது எதிர்காலத்தில் பலவகையான புனைவுகளை உருவாக்கும். அவருக்கும் யுதிஷ்டிரனுக்கும் நடுவே மணிமுடிக்கான போர் நிகழ்ந்தது என்றுகூட சொல்லப்படலாம்” என்றார் சுரேசர். “ஏனென்றால்

இந்நிகழ்வின் முழு மங்கலத்தை சற்றேனும் குறைக்கவே ஒவ்வொரு எதிர்த்தரப்பும் முயலும். நம்மை எதிர்ப்பவர்கள் பலர். தோல்வியடைந்த அரசர்கள், வெல்லப்பட்ட பழைய வேத மரபினர், ஷத்ரியர் முழு வெற்றிகொள்வதை விழையாத அசுரரும் அரக்கரும் நிஷாதரும் கிராதரும் என. எதிரிகள் சூழ்ந்திருப்பது நன்று. அது நம்மை செயலூக்கம் கொண்டவர்களாக்குகிறது. ஆனால் மறைந்திருக்கும் எதிரிகள் நம்மை ஐயம்நிறைந்தவர்களாக ஆக்கிவிடுகிறார்கள்.”

“அதைவிட இன்னமும் உருவாகாத எதிரிகள் இடர்மிக்கவர்கள். உருவாகாதவர்களை எங்கே தேடுவது?” என்று சுரேசர் தொடர்ந்தார். “இன்று நம்முடன் இருப்பவர்களிடமே அந்நிறைவுக்கு எதிரான உளநிலைகள் எழலாம். எந்த மங்கலநிகழ்விலும் அந்நிகழ்வின் பகுதியாக இருப்பவர்களிலேயே சிலர் அதன் முழுமையை குலைக்க ஏதேனும் செய்வதை காணலாம். நிகழ்வில் ஏதேனும் குறை காண்பார்கள். நிகழ்வில் தங்கள் இடம் குறைபட்டுவிட்டதாக எண்ணிக்கொள்வார்கள். பல தருணங்களில் நிகழ்வின் மங்கலத்தில் பிறர் குறைவுசெய்வதாக குற்றம்சாட்டி அம்முழுமையை தாங்கள் அழிப்பார்கள். அதைவிட சிலருடைய ஆழுளத்தில் உறையும் தெய்வங்கள் அவர்களின் கைகளையும் கால்களையும் தாங்கள் எடுத்துக்கொள்ளும், அவர்கள் பொருந்தாதன இயற்றுவார்கள், ஒவ்வாதன சொல்வார்கள். நான் அஞ்சிக்கொண்டிருப்பது அதைத்தான். எவரிடமிருந்து என்ன எழும் என்று என்னால் இப்போது எத்தனை உளம்கூர்ந்தாலும் சொல்லமுடியவில்லை. அதற்கான வாய்ப்பை அரசர் ஐவரில் எவரும் அளித்துவிடலாகாது என்பதையே மீளமீள உறுதிசெய்துகொண்டிருக்கிறேன்.”

யுயுத்ஸு ஒருகணம் எண்ணிவிட்டு “ஐயம்வேண்டாம், மூத்தவர் பார்த்தன் அரசவைக்கு வருவார். வேள்வியில் பங்கும் கொள்வார்” என்றான். “அது இளைய யாதவரின் ஆணை. இது அவருடைய சொல்லின் வெற்றி. அதில் தன்னால் ஒரு குறைவு நிகழ அவர் விரும்பமாட்டார். சில நாட்களிலேயே பார்த்தன் நகர்புகுவார்.” சுரேசர் “எனில் நன்று” என்றார். “மெய்யாகவே இச்சொல் ஆறுதல் அளிக்கிறது. ஆனால் இன்று என்ன செய்வது? இன்றைய கொண்டாட்டம் குறைவிலாது நிகழ்ந்தாகவேண்டும்.” யுயுத்ஸு “நாம் ஏன் அவருக்கு மாற்றாக காண்டீபம் நகர்புகுவதாக இந்நிகழ்வை நடத்தலாகாது?” என்றான். “அதை நான் எண்ணினேன். ஆனால் அவர் தன் வில்லை பிரியப்போவதில்லை” என்றார் சுரேசர். “தேவையில்லை. காண்டீபம் என இன்னொரு வில் தேரிலிருக்கட்டும்” என்றான் யுயுத்ஸு.

“அதை நாம் செய்யலாகாது. நாம் பொய்யுரைப்பதல்ல அதிலுள்ள சிக்கல். காண்டீபத்திற்கு நிகராக ஒன்றை நாமே தெய்வங்கள் முன் காட்டிவிடலாகாது” என்று சுரேசர் சொன்னார். யுயுத்ஸு பெருமூச்சுவிட்டான். “எதையேனும் ஒன்றை செய்தாகவேண்டும், நமக்கு பொழுதும் இல்லை. ஒவ்வொன்றும் அலையென அணுகுந்தோறும் பேருருக்கொண்டு வந்து அறைகின்றது” என்று சுரேசர் சொன்னார். “இந்த அறையிலிருந்தால் என் எண்ணங்கள் நான்கு சுவர்களையும் முட்டிமுட்டி திரும்பி வருகின்றன. வெளியே சென்றால் திறந்தவெளிக்காற்றில் பட்டுச்சால்வை என என் அகம் பறந்தலைகிறது.”

ஏவலன் வந்து தலைவணங்கி சம்வகை வந்திருப்பதை சொன்னான். “அவள் வருவது ஒரு நன்னிமித்தம். அவளால்

நாம் எண்ணாதனவற்றை சொல்லமுடியும்” என்றார் சுரேசர். “அவள் வெறும் படைத்தலைவியே” என்று யுயுத்ஸு சீற்றத்துடன் சொன்னான். அச்சீற்றம் ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை. சுரேசர் சிரித்தபடி “அவள் நகரின் மக்கள்திரளுடன் கலந்து அலைபவள். அவர்களில் ஒருத்தியென உணர்பவள்” என்றார். “கவசமணிந்த உடலுக்குள் இருப்பவள் சூதர்குலத்தவள் என்பதை மறக்கவேண்டியதில்லை.” யுயுத்ஸு “ஆம்” என்றான். அவனுள் எழுந்த சீற்றம் ஏன் என அவன் உணர்ந்தான். அவளை பிறிதொரு ஆண்மகன் புகழ்ந்ததை கேட்டதனால். ஆனால் அதை சுரேசரும் உடனே உணர்ந்துகொண்டிருந்தார். அது அவனுக்கு சற்றே நாணத்தை எழுப்பியது. ஆகவே தன் முகத்தை இறுக்கி வைத்துக்கொண்டான்.

சம்வகை வந்து தலைவணங்கினாள். கழற்றி கையில் வைத்திருந்த தன் தலைக்கவசத்தை பீடத்தில் வைத்தாள். சுரேசர் “உங்கள் தலைகளில் ஒன்றை கழற்றி அப்பால் வைப்பதுபோல் தோன்றுகிறது” என்றார். சம்வகை சிரித்தபடி “அந்தத் தலையின் எடையைப் பற்றி நீங்கள் அறியமாட்டீர்கள்” என்றாள். “எப்போதும் இது தேவையா என்ன?” என்று யுயுத்ஸு சற்று எரிச்சலுடன் கேட்டான். “இது என் அடையாளமாக ஆகிவிட்டிருக்கிறது” என்று சம்வகை சொன்னாள். “இது உங்களை ஒரு தெய்வச்சிலைபோல் ஆக்குகிறது” என்று சுரேசர் சொன்னார். “இது இல்லையேல் நீங்கள் வெறும் பெண்… இது உங்கள் குரலையும் இரும்பாலானதாக மாற்றிக்காட்டுகிறது.”

சம்வகை “ஆம், இதன் ஆணைகளை எவராலும் இங்கே மீறமுடியவில்லை” என்றாள். “நான் துயிலச்செல்கையில் இந்தக் கவசத்தை என் அறைக்குள் விட்டுவிட்டுச் செல்கிறேன்.

நானே அங்கிருக்கும் உணர்வை இது அளிக்கின்றது. இன்று இதைப்போலவே எட்டு கவசங்களைச் செய்து வாங்கியிருக்கிறேன். அவற்றை அணிந்தபடி சுதமையையும் சுஷமையையும் பிற துணைக்காவல்தலைவியரையும் நகரில் உலவச் சொல்லியிருக்கிறேன். நானே ஒன்று பலவாகி இந்நகர் முழுக்க நிறைந்திருப்பதுபோல உணர்கிறேன்” என்றாள் சம்வகை. “யாதேவி, சர்வபூதேஷு சக்தி ரூபேண சம்ஸ்திதா” என்றார் சுரேசர். சம்வகை புன்னகைத்தாள்.

“நாங்கள் பேசிக்கொண்டிருந்தது இளையவர் பார்த்தன் இன்று நகர்புகப்போவதில்லை என்பதைப்பற்றி…” என்றார் சுரேசர். “ஆம், அறிவேன். அதைப்பற்றி பேசவே வந்தேன்” என்றாள் சம்வகை. “நாம் என்ன செய்யமுடியும்? மக்கள் இன்று கொண்டாட்டத்தில் இருக்கிறார்கள்…” என்று சுரேசர் சொன்னார். “நாம் அதை நுரையடங்க விட்டுவிடலாகாது.” சம்வகை “நாம் செய்வதற்கு ஒன்றே உள்ளது. மக்களின் கொண்டாட்டம் மேலும் மேலுமென எழவேண்டும். கொண்டாட்டம் நீடிக்கவேண்டுமென்றால் அது கூடிக்கொண்டே இருந்தாகவேண்டும்” என்று சொன்னாள். “நாம் குறையாமல் செய்ய என்ன வழி என எண்ணிக்கொண்டிருக்கிறோம்” என்றார் சுரேசர்.

“அதற்கு ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது” என்றாள் சம்வகை. சுரேசர் “அதைத்தான் உங்களிடம் எதிர்பார்த்தேன்” என்றார். “அமைச்சரே, வருபவர் இந்திரனின் மைந்தர். அவரை எதிர்கொள்ள இந்திரன் செல்லட்டும். அங்கிருந்து இந்திரன் திரும்பி வரட்டும். தெருக்களில் இந்திரன் ஊர்வலமாக செல்லட்டும். மைந்தரின் வெற்றியை இந்திரன் நகருக்கு அறிவிக்கட்டும். இந்திரவிழா தொடங்கட்டும். இந்திரவிழவின் நிறைவில் அர்ஜுனன் நகர்புகுவார் என அறிவிப்போம்” என்று

சம்வகை சொன்னாள். சுரேசர் “இந்திரவிழா எனில்...” என்றார். “காமன் விழாவேதான். கள்ளும் காமமும் பெருகட்டும்... இந்திரன் ஆலயத்தில் மீளச்சென்று அமைவதுவரை இந்நகரில் ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவே எதுவும் மீறல் அல்ல, எதுவும் பிழையும் அல்ல. அதுவே தொல்வழக்கம்.”

சுரேசர் “நாம் ராஜசூயம் பற்றிய அறிவிப்பை வெளியிடவிருக்கிறோம். அதுவே மெய்யான கொண்டாட்டம்” என்றார். “இந்தக் காமக்கொண்டாட்டம் நிறைவடையட்டும். இதன் நிறைவில் மக்கள் சோர்வுறுவார்கள். தனிமை கொள்வார்கள். உடல்நிறைந்ததும் உடலைக் கடக்கும் விழைவு எழுகிறது. அப்போது வேள்விச்செய்தியை அறிவித்தோமென்றால் மக்கள் அதை நோக்கி மேலும் ஆவலுடன் வந்தணைவார்கள். இப்போது நாம் வேள்விச்செய்தியை அறிவித்தால் அது ஓர் அரசச்சடங்காகவே இருக்கும். இக்கேளிக்கைக்குப் பின் அறிவித்தால் மக்கள் அதை ஒரு மீளும் நிகழ்வென கொண்டாடுவார்கள். ஒரு தூய்மைச்சடங்காக” என்றாள் சம்வகை.

“ஆம், அவ்வாறுதான் எனக்கும் படுகிறது” என்று சுரேசர் சொன்னார். யுயுத்ஸு “அர்ஜுனன் கிழக்கின் மேருமலையில் இருந்து இந்திரனுக்குரிய அடையாளமாக பொன்மூங்கில் ஒன்றை கொண்டுவருவதாக சொல்லப்பட்டது” என்றான். சுரேசர் ஊக்கத்துடன் எழுந்து “ஆம், பொன்மூங்கில். அது கிழக்கின் அடையாளம். இந்திரனுக்குரிய மரம்... அதை நகர்புகச் செய்வோம். அதை இந்திரனின் ஆலயத்திற்கு முன் நட்டு நிலைநிறுத்தும் சடங்கு இங்கே நிகழட்டும்... அதுவே இந்திரவிழாவாக ஆகட்டும்” என்றார். யுயுத்ஸு “இந்திரவிழா நன்று. முன்னரும் இந்திரவிழா இங்கே நிகழ்ந்துள்ளது.

அவையனைத்துமே பெருங்களியாட்டுக்கள். இந்திரவிழா கிழக்கிலும் தெற்கிலும் பெரிதாகக் கொண்டாடப்படுவது. இந்த மக்கள் ஏற்கெனவே அதை அறிந்திருப்பார்கள்” என்றான்.

சுரேசர் “மேலும் இங்குள்ள இவர்கள் பல வண்ணத்தவர். பல வகையினர். இவர்களை ஒன்றெனச் சேர்த்து கலக்குவது போன்றது இந்திரவிழா. நமக்கு இன்று தேவை அதுவே. கலங்கி உருகி ஒன்றாகும் திரள். அஸ்தினபுரியின் குடிகள் என்னும் அடையாளமன்றி பிற அனைத்தும் கரைந்தழியவேண்டும். இன்றும் அவர்கள் தனித்தனியாகவே வாழ்கிறார்கள். தங்கள் உள்ளத்தின் முனைகளால் மட்டுமே தொட்டுக்கொள்கிறார்கள். இந்திரன் பாரதவர்ஷத்தை மந்தர மலை என கலக்கியவன், அமுதெழச் செய்தவன் என்கின்றன நூல்கள். அவ்வண்ணமே இங்கும் நிகழட்டும்” என்றார். யுயுத்ஸு புன்னகைத்தான்.

சம்வகை “இந்திரன் மீண்டும் பீடம் அமர்வது வரை இந்திரவிழா நிகழவேண்டும் என்பது வழக்கம்” என்றாள். “ஆகவே நமக்கு வேண்டிய பொழுதிருக்கிறது. நாம் எவரையேனும் அனுப்பி பார்த்தனை உளம் வளையச் செய்து இங்கே அழைத்துவரலாம். அவர் வந்து பொன்மூங்கிலை நட்டதும் விழா நிறைவுகொள்கிறது. அதன்பின் மறுநாள் தூய்மைச்சடங்கு நிகழலாம். அதற்கு அடுத்த நாள் வேள்வியறிவிப்பு, அதற்கு மறுநாள் பெருங்கொடைவிழாவுடன் வேள்வி தொடங்கட்டும்” என்றாள். “நன்று, இதுவே உகந்தது” என்றார் சுரேசர். யுயுத்ஸு “ஆம், பொருத்தமானதாகவே இருக்கிறது” என்றான். “உண்மையில் இத்தனை தெளிவாக நான் வகுப்பதே இல்லை” என்றார் சுரேசர். “இல்லை அமைச்சரே, நான் சொல்வன தங்கள் உள்ளத்தில் உள்ள சொற்களையே.

அவற்றை எவரேனும் சொல்லி செவியில் விழவேண்டும் என தங்கள் உளம் கோருகிறது” என்றாள் சம்வகை.

சுரேசர் புன்னகைத்து “எல்லாம் தெளிவாகிவிட்டது. நான் ஆணைகளை பிறப்பிக்கிறேன்” என்றார். சம்வகை எழுந்துகொண்டு “நானும் என் பணிகளுக்கு மீளவேண்டியிருக்கிறது” என்றாள். சுரேசர் “இளவரசர் யுயுத்ஸு இப்போதே கிளம்பி துரோணரின் குருநிலைக்கு செல்லட்டும். அங்கே இளையவர் பார்த்தனையும் இளைய யாதவரையும் பார்த்து அனைத்தையும் பேசி முடிக்கட்டும். அவருடைய சொல்வன்மையை நான் நம்புகிறேன். அதைவிட அவரில் எழும் மூத்த பேரரசர் திருதராஷ்டிரரின் சாயலை நம்புகிறேன். அவருடைய சொற்களை இங்கு எவரும் தட்டமுடியாமலாவது அதனால்தான்” என்றார். யுயுத்ஸு புன்னகைத்தான்.

இடைநாழியில் யுயுத்ஸுவுக்காக சம்வகை காத்து நின்றிருந்தாள். அவன் அவள் நிற்பதை பார்த்தபின் மெல்ல நடந்தான். அவள் தனக்காகக் காத்துநிற்பது அவனை உவகைகொள்ளச் செய்தது. அப்படி அவளுக்காக அந்தப் பொதுவான இடைநாழியில் காத்து நின்றிருக்க தன்னால் இயலாது என அவன் எண்ணிக்கொண்டான். பெண்கள் நாணம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் காதல் கொள்கையில் அவர்கள் நாணமிழந்து துணிவுகொள்கிறார்கள். ஆண்கள்தான் நாணத்தை அடைகிறார்கள். அவன் நடைதளர அவள் அருகே சென்று நின்றான். அவளிடம் நகையாட்டாக ஏதேனும் சொல்லவேண்டும் என விழைந்தான். ஆனால் “இந்தக் கவசம் உன்னை ஒரு படைக்கருவிபோல காட்டுகிறது” என்றுதான் அவனால் சொல்லமுடிந்தது.

ஆனால் அவள் அதை ஒரு காதற்சொல் எனவே எடுத்துக்கொண்டாள். பெண்கள் சொற்களை நோக்குவதே இல்லை போலும். நீ குரங்குபோல் இருக்கிறாய் என்று சொன்னால்கூட மகிழ்ந்துவிடுவார்கள். அவன் புன்னகைத்தான். “உன்னை சுரேசர் இந்நகரை ஆளும் அரசி என எண்ணுகிறார்” என்றான். அச்சொற்களும் அவனை மீறி வந்தன. அப்போது ஏன் அவரைப் பற்றிய குறிப்பு வரவேண்டும்? ஏன் என்பதை அவன் நாவிலெழுந்த அடுத்த வரிகள் காட்டின. “அவர் உன்னை வழிபடுகிறார்.” அவள் அதை பெருஞ்சிரிப்புடன் எடுத்துக்கொண்டாள். “ஆம், நான் சொல்வன எல்லாமே அவருக்கு அரிதாகத் தெரிகின்றன. ஆனால் அனைத்தையும் அவரிடமிருந்தே கற்றுக்கொள்கிறேன்.”

அவன் எரிச்சல்கொண்டான். “அவர் நுண்ணுணர்வு கொண்டவர். ஆனால் அது அந்தண நுண்ணுணர்வு. அது இக்கட்டில்லாதபோது கூர்கொள்ளும். இக்கட்டுகளில் பின்வாங்கிவிடும். அந்தணர் சொல்லை ஷத்ரியர் அறவுரைக்கு மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும். களநிலையில் அதற்கு பின்னெடையெனத் திகழும் இடம் மட்டுமே அளிக்கப்படவேண்டும்.” அவள் அவனுடைய எரிச்சலை புரிந்துகொள்ளவில்லை. மேலும் சிரித்து “அது நான் முடிசூடி அமர்ந்து எதிரிகளை களத்தில் வெல்லும்போது நிகழட்டும். இப்போது நான் வெறும் படைத்தலைவி மட்டும்தானே?” என்றாள். அவன் தளர்ந்தான். அவளால் தன்னை புரிந்துகொள்ள முடியவில்லையா? அல்லது இத்தருணங்களில் பெண்கள் பேதையாகிவிடுகிறார்களா? ஆனால் உண்மையில் பெண்கள் இத்தருணங்களில் பலமடங்கு கூர்கொள்கிறார்கள். இவள் என்னுடன் விளையாடுகிறாள்.

“அவர் உன்னை மிகையாக மதிப்பிடுகிறார்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஏனென்றால் அவருக்கு உன்னை தன் உருவாக்கம் என்று முன்வைக்கவேண்டியிருக்கிறது. காலடியில் கிடந்த கல்லில் இருந்து பெண்ணை எழுப்பிய ராகவராமன்போல தன்னை காட்டிக்கொள்கிறார்.” அவள் “அது மெய்யாகவும் இருக்கலாமே” என்றாள். அவன் கடும் சீற்றம்கொண்டான். அவளுடைய சிறிய சிரிக்கும் கண்களைப் பார்த்ததும் அவன் உள்ளம் எரிந்து எழுந்தது. அவ்விசையில் அவன் ஒன்றை கண்டுகொண்டான். அத்தனை மகளிருக்கும் அவர்களை எண்ணி பொறாமைப்படும் ஆண்கள் மகிழ்ச்சி அளிக்கிறார்கள். அவன் அவளுடைய அந்த மகிழ்ச்சியை அவ்வண்ணமே கலைக்க எண்ணினான். “என் துணைவியர் இன்று நகர்புகவிருக்கிறார்கள்” என்றான்.

நினைத்தது போலவே அவள் முகம் அணைந்தது. “ஆம், அறிவேன்” என்றாள். “அவர்கள் திரும்பிவரப் போவதில்லை என்று சொல்லிச் சென்றவர்கள். இப்போது இங்கே என் இடம் மிகையாகி வருவதை உணர்ந்து வந்துகொண்டிருக்கிறார்கள்.” அவள் முகம் மேலும் இருண்டது. “ஆம், அவர்கள் இங்கு வந்தால்தான் இளவரசியர். அவர்களின் தந்தையர் அவர்களை அரசியல் கருவியென்றே பயன்படுத்துவார்கள்” என்றாள். அவன் அவள் முகத்தை நோக்கியதும் துயர்கொண்டான். ஏன் அன்பின் தருணங்களையெல்லாம் துயர்மிக்கதாக்கிக் கொள்கிறோம்? இனிமையை வேண்டுமென்றே தள்ளித்தள்ளி அகற்றுகிறோம்? “ஆனால் அவர்கள் அஸ்தினபுரிக்கு அயலவர்” என்று அவன் சொன்னான். “அவர்கள் இருவரிடமும் எனக்கும் உளம் செல்லவில்லை.”

அவள் முகம் மலரவில்லை. “நான் செல்லவேண்டியிருக்கிறது. நீங்கள் இங்கிருந்தே கிளம்புகிறீர்களா?” என்றாள். “ஆம்” என்று அவன் சொன்னான். “நான் இங்கிருந்தே சென்றால் மட்டுமே உரிய பொழுதில் சென்றடைய முடியும். கிழக்கு வாயில் வழியாக செல்ல முடியாது. வடக்குவாயில் வழியாக வெளியே சென்று காட்டினூடாக சுற்றிக்கொண்டு செல்லவேண்டும். ஆனால் ஊடுபாதைகள் உள்ளன, எனக்கு அவை நன்கு தெரியும். இன்னும் மூன்று நாழிகைக்குள் இளைய யாதவரை பார்ப்பேன்.” அவள் இயல்பான குரலில் “நன்று, நினைத்தது நிகழட்டும்” என்றாள். ஆனால் அவள் விழிகளில் துயர் தெரிந்தது.

யுயுத்ஸு உளம்கனிந்தான். அவன் குரலும் நெகிழ்ச்சி கொண்டது. அச்சொற்கள் எண்ணாமல் அவன் நாவிலெழுந்தன. எண்ணியிருந்தால் அவற்றின்பொருட்டு அவன் நாணம் கொண்டிருப்பான். “இன்று இப்படி உன் முகத்தையும் விழிகளையும் நோக்கக் கிடைத்தது நன்று. உன் குரலின் இனிமை நெடுந்தொலைவு என்னுடன் வரும்” என்றான். அவள் கண்களில் மீண்டும் ஒளி எழுந்தது. அது அவனை மகிழச்செய்தது. “நான் எனக்கு துணை என எவரையும் இப்புவியில் எண்ணவில்லை. என் ஆற்றலை மட்டுமே பகிரக்கூடிய உள்ளம் எனக்கு மெய்யான துணை அல்ல. என் ஐயங்களையும் தோல்விகளையும் சிறுமைகளையும் பகிர உகந்த உள்ளமே துணையென்றாக முடியும். அது நீயே” என்றான்.

அவள் விழிகள் கனிந்தன. “அனைவருக்கும் அவ்வாறுதான்” என்றாள். “சம்வகை, என்னால் இக்கொண்டாட்டங்களில் முழுதாக உளம்செலுத்த முடியவில்லை. என்னை ஏதோ

ஒன்று ஒவ்வாமைகொள்ளச் செய்கிறது” என்றான். அவள் அவன் கையைத் தொட்டு “அதை நான் உணர்கிறேன்” என்றாள். “உனக்கு அந்த ஒவ்வாமை உள்ளதா?” என்றான். “இல்லை, நான் அதை உணர்கிறேன்” என்று அவள் சொன்னாள். “புதிய வேதத்தால் மேலெழுந்தவள் நான். ஆகவே எல்லாவற்றையும் எனக்கான வாய்ப்புகளாகவே கருதுகிறேன். ஆனால் உங்கள் உளநிலை எனக்கு புரிகிறது.”

யுயுத்ஸு “அது வெளித்தெரிந்தால் பொறாமை என்பார்கள். அல்லது சூதனின் காழ்ப்பு என்பார்கள்” என்றான். “ஏன் வெளித்தெரியவேண்டும்?” என்று அவள் கேட்டாள். “அவ்வண்ணம் இங்கு ஒவ்வொருவரின் உள்ளேயும் ஏதேதோ இருக்கலாம்...” அவன் “ஆம்” என்றான். “இது அனைவருக்குமான காலம். அந்தக் காலம் உங்களையும் மேலெழச் செய்யும். உங்களிடம் நீங்கள் ஆழத்தில் விழையும் அனைத்தும் வந்துசேரும்.” அவன் திடுக்கிட்டு “ஆழத்தில் விழைவன என்றால்?” என்றான். “அனைத்தும்” என அவள் அவன் விழிகளை நோக்கி சொன்னாள். அவன் உடல் நடுக்கு கொண்டது. ஆனால் உள்ளம் எடையிழந்தது. “அது பெரும்பழி அல்லவா?” என்றான். “இல்லை, எழும் யுகத்தின் நெறி அது” என்று அவள் சொன்னாள்.

அவன் அவள் விழிகளையே நோக்கிக்கொண்டிருந்தான். அவள் சிரித்து “ஐயம் வேண்டாம். அது இளைய யாதவரின் சொல்” என்றாள். அவன் நீள்மூச்செறிந்தான். தணிந்த குரலில் “என்னையே அருவருத்துக்கொண்டிருந்தேன்” என்றான். “எதற்கு?” என்று அவள் கேட்டாள். “விழைவே ஷத்ரியர்களை உருவாக்குகிறது. விழைபவர் ஷத்ரியர் ஆகிறார்.” அவன் “ஆம்” என்றான். “அது சிசுபாலனுக்கு இளைய யாதவர் சொன்னது”

என்று அவள் மேலும் சொன்னாள். அவன் மீண்டும் நீள்மூச்செறிந்தான். “நன்று, நான் கிளம்புகிறேன். இப்போது தெளிந்திருக்கிறேன்.” அவள் அவன் கையை மீண்டும் தொட்டு “நலம் கொள்க!” என்றாள். அவன் அவள் விழிகளை நோக்கி புன்னகை செய்தான். அவளும் புன்னகைத்தாள்.

அவன் கிளம்பிச்சென்றபோது முகம் மலர்ந்திருந்தான். உள்ளம் எடையில்லாமல் சூழ்ந்திருந்த அனைத்தின் மேலும் பரவிக்கொண்டிருந்தது. வடக்குப்பெருமுற்றத்தில் முன்பு பெருங்கதை இருந்த இடத்தில் அனுமனின் கல்லாலயம் எழுந்துவிட்டிருந்தது. அப்பால் யானைக்கொட்டில்கள் மீண்டும் யானைகளால் நிறைந்திருந்தன. அவற்றில் ஒன்று அவன் மணத்தை அறிந்து பிளிறியது. பிற யானைகளும் திரும்பி நோக்கி உறுமலோசை எழுப்பின. புராணகங்கைக்கு வெளியே பழைய காந்தாரக் குடியிருப்புகள் மீண்டும் ஊர்கள்போல் நீண்டு எழுந்துவிட்டிருந்தன. பழைய வீடுகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. புதிய இல்லங்கள் எழுந்திருந்தன. அவற்றில் யவனர்களும் சோனகர்களும்தான் குடியிருந்தனர். பாலைநிலத்தவர்களே இப்பசுங்காட்டை இத்தனை விரும்ப முடியும். இங்கு அவர்களே இப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும். ஏனென்றால் இங்கிருந்தால்தான் கனவுகளில் அவர்களின் வெம்மை நின்றெரியும் வறுநிலம் வந்து விரியும்.

அவன் சிரித்துவிட்டான். புரவியை பெருநடையாக்கி கடந்துசென்றபோது ஒரு கணம் சகுனியின் நினைப்பு வந்தது. அங்கே அக்குடியிருப்புகளை நோக்கும்போது ஒருகணம்கூட அவரை நினைவுகூரவில்லை. அதற்குள் அனைவரும் மறந்துவிட்டிருக்கிறார்கள். நிலம் அனைத்தையும் செரித்துக்கொள்கிறது. எஞ்சாமல் ஆக்கிவிடுகிறது. என்றும்

புதிதாக திகழ்கிறது. இனி அனைத்தும் சொல்லிலேயே திகழும். சொல் என்றும் பழையது. மண்ணில் வாழும் மானுடருக்கு சொல் மட்டுமே பழையது.

# களிற்றியானை நிரை - 67

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 17



யுயுத்ஸு துரோணரின் குருநிலையைச் சென்று சேர்ந்தபோது உச்சிப்பொழுதாகிவிட்டது. அவன் வழியிலேயே காய்களைத் தின்று நீர் அருந்தியிருந்தான். எனினும் பசித்துக் களைத்திருந்தான். அவனைக் கண்டதுமே அங்கிருந்த யாதவ இளைஞன் "நீங்கள் சற்று ஓய்வெடுக்கலாம். தங்கள் குடிலுக்கு உணவை கொண்டுவரும்படி ஆணையிடுகிறேன்" என்றான். யுயுத்ஸு "என் வருகையை இளைய யாதவருக்கு அறிவிக்கவேண்டும். எனக்கு நெடும்பொழுது ஓய்வு தேவைப்படாது. சற்றே முதுகை நீட்டிக்கொண்டாலே போதும்" என்றான். "அவர்களிடம் நான் அரசமந்தணச் செய்தியுடன் வந்திருப்பதாகச் சொல்க!"

அவனுக்கு பெரிய கொப்பரையில் கிழங்குகளும் கீரையும் சேர்த்து சமைக்கப்பட்ட கஞ்சி வந்தது. உடன் உண்பதற்கு சுட்ட ஊன்துண்டுகள். அவை சிவந்து நெய்க்குமிழிகள் பொரிய சூடாக முனகிக்கொண்டிருந்தன. உண்டு முடித்து சிறுகுடிலில் பசுஞ்சாணி மெழுகிய திண்ணையில் தர்ப்பைப்புல் பாயில் படுத்தபோது ஒரு கணம் திரும்ப அஸ்தினபுரிக்கே செல்லவேண்டாம் என்னும் எண்ணம் யுயுத்ஸுவுக்கு ஏற்பட்டது. கங்கையிலிருந்து குளிர்காற்று அலையலையாக

எழுந்து வந்துகொண்டிருந்தது. உச்சிப்பொழுதுக்கே உரிய மயங்கும் பறவைக்குரல்கள். நெடுந்தொலைவு வரை கொண்டுசெல்பவை ஓசைகள். கண்களை மூடி ஓசைகளை கேட்கத் தொடங்கினாலே உள்ளம் மிக விரிந்த நிலப்பகுதியை உணரத் தொடங்கிவிடுகிறது. மிகமிக அப்பால் ஏதோ பறவை இன்குழலோசை ஒன்றை எழுப்பிக்கொண்டிருந்தது. அதற்கும் அப்பால் ஏதோ நாயின் ஓசை. பறவையின் குழலோசை சுழன்று சுழன்று அவனை ஆட்கொண்டது. அவன் ஆழத்திலிருந்தே எழுவது போலிருந்தது அது.

இனிமை இனிமை இனிமை என உள்ளம் நிறைவுகொண்டது. இருத்தலைவிட இனிதாவதொன்றும் இல்லை. எதையும் சென்று எய்தாமல் எதையும் எண்ணிக்கொள்ளாமல் எவருக்கும் எதையும் நிறுவத் தேவையில்லாமல் வெறுமனே இருத்தலைப்போல் நிறைவளிப்பது வேறொன்றுமில்லை. அஸ்தினபுரி ஒரு பெரும் பொய். அங்குள்ள அரசியல்சூழ்ச்சிகள் பொய். பாரதவர்ஷமே மாபெரும் பொய். மெய்யென்றிருப்பது உடலே. அதன் எளிய இன்பங்களே. நல்லுணவு. நல்ல உறக்கம். நன்னீராடல். நல்லகாற்று. வானின் கீழ் இருத்தல். மண்ணின்மேல் இருத்தல். அவன் துயில்கொள்ளத் தொடங்கியதை அவனே அறிந்தான். நல்ல துயில் வந்தணையும் இடத்திலேயே நல்ல எண்ணங்கள் முளைக்க முடியும். வாழ்க்கையின்மேல் நம்பிக்கை கொண்ட பெருநோக்குகள் எழ முடியும். துயிலணையாத இடங்களில் இருப்பவை முட்கள். கால முட்கள். ஆணவ முட்கள்.

அவன் விழித்துக்கொண்டபோது எண்ணியதைவிட பொழுது பிந்திவிட்டிருந்தது. உள்ளம் பதற்றம் கொண்டது. எடுத்த பணியை தவறவிட்டுவிட்டோமா? இன்றே இளைய

பாண்டவருடன் பேசிமுடித்துவிட வேண்டும். நாளையாயினும் அவர் நகர்புகவேண்டும். நாளை கிளம்பி வருவதற்கு அவரிடம் இன்று சொல்பெற்று இரவுக்குள் அவன் மீண்டுவிட வேண்டும். அவன் ஆடை திருத்தி முகம் கழுவி கிளம்பியபோது துயில்வதற்கு முந்தைய எண்ணங்களை நினைவுகூர்ந்து புன்னகை செய்தான். ஆனால் ஒன்றை உணர்ந்தான். அவன் வந்தபோதிருந்த பதற்றம் குறைந்திருந்தது. நம்பிக்கை உருவாகிவிட்டிருந்தது. அந்த இனிய எண்ணங்களின் அடியோட்டம் நெஞ்சுக்குள் இருந்துகொண்டேதான் இருந்தது.

குறுங்காட்டின் விளிம்பில் ஒரு பாறையில் இளைய யாதவர் அருகே அர்ஜுனன் அமர்ந்திருந்தான். அவர்கள் பேசிக்கொண்டிருக்கவில்லை என்பதை யுயுத்ஸு கண்டான். அவர் இசைமீட்டிக்கொண்டிருந்திருப்பாரோ என நினைத்தான். ஆனால் அவருடைய குழல் இடைக்கச்சையில்தான் இருந்தது. ஏன் அவ்வாறு எண்ணினோம் என்று பின்னர் வியந்தான். அவர்களின் முகங்களில் அந்தக் கனிவு நிறைந்திருந்தது. யாதவ மாணவன் “அவர்களிடம் செல்க! ஆணை பெற்றுவிட்டேன்” என்று சொல்லி தலைவணங்கி திரும்பிச் சென்றான். யுயுத்ஸு அவர்களை நோக்கி நடந்தான். அவர்கள் அவன் வருவதை அறிந்திருந்தாலும் திரும்பி நோக்கவில்லை. ஆனால் அவர்களின் நோக்கை உணர்ந்தவனாக அவன் நடைதளர்ந்தான்.

அவர்கள் தன்னை வேண்டுமென்றேதான் நோக்கவில்லையா? இல்லை, அவர்கள் இருந்த ஒருமையில் அவனுக்கு இடமில்லையா? அவனுக்கு கசப்பு ஒன்று ஊறி எழுந்தது. பெரும் பொறாமை அது எனத் தெரிந்தது. அத்தகைய நட்பை அடைந்தவன் அதற்குப் பின் இப்புவியில் அடைவதற்கென்ன உள்ளது? காதல்கள் அதற்கு ஈடாகுமா? தந்தையும் அன்னையும்

அளிக்கும் அன்பு நிகராகுமா? எதுவுமில்லை. ஒன்றே எஞ்சுவது. ஆசிரியர் மாணவன் என்னும் உறவு. இங்கு நண்பனே ஆசிரியனாக அமர்ந்திருக்கிறான். அவன் பெருமூச்சுவிட்டான். அதை அடைவதற்குரிய தகுதி ஒன்றுண்டு. எஞ்சாமல் தன்னை அளிப்பது. அதை ஆணவமில்லாதவர்களே அடையமுடியும்.

ஆணவமில்லா நிலை எவருக்கும் இல்லை. மானுடக்கீழோரிடம்கூட ஆணவமே நிறைந்திருக்கிறது. ஆணவத்தைக் கடந்தோரிடம் மட்டுமே அந்த ஆணவமழிந்த நிலை உருவாகும். அதற்கு தன்னில் நிறையவேண்டும். தான் எனும் எல்லையை கண்டடையவேண்டும். தானெனத் தருக்கிச் சென்றடையும் உச்சமேது என்று புரிந்துகொண்டு மீளவேண்டும். இளமையிலேயே தன் திறனின் எல்லையை சென்று கண்டவனுக்குரியது அந்நிலை. அது வில்லுடன் பிறந்த விஜயனுக்கு இயல்பாகலாம். தொட்டுத்தொட்டு தன்னைப் பயின்று தானென்று உணர்ந்து சென்றடைந்து மேலும் நோக்கி ஏங்கி ஏங்கி நின்றிருக்கும் எளியோருக்குரியது அல்ல. ஆசிரியனாதல்கூட எளிது, மாணவனாதலே கடினம்.

அவன் அருகணைந்து வணங்கினான். இளைய யாதவர் திரும்பி நோக்கி புன்னகைத்தார். அவருடைய புன்னகை எப்போதுமே அவனை உளம்பொங்கச் செய்வது. அது அவனுக்காக மட்டுமே எழும் ஒன்று என்று தோன்றச் செய்வது. பால்பற்கள் எழுந்த குழவிக்குரிய கண்கள் ஒளிவிடும், முகமே மலரும் புன்னகை. அவன் “நான் இத்தருணத்தில் இங்கு வரும் பேறு பெற்றேன்” என்றான். அவர் “உன்னை உண்மையில் இவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தன்னை விடமாட்டார்கள் என அறிந்திருந்தான். அவர்கள் பொருட்டு உன்னைத்தான் சுரேசர் அனுப்புவார் என்றான்” என்றார். அர்ஜுனன் அவனை நோக்கி

புன்னகை செய்து “சொல்ல வந்ததை சொல்! அங்கே மக்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள். நான் செல்லாவிட்டால் விழவு முழுமையடையாது. அரசரும் உடன்பிறந்தவரும் நான் வந்தாகவேண்டும் என்கிறார்கள். அரசர் நோயுற்றிருக்கிறார், நான் செல்வது அவருடைய நோயை அவிக்கும். வேறென்ன?” என்றான்.

யுயுத்ஸு சிரித்துவிட்டான். “என் பணியை எளிதாக்குகிறீர், மூத்தவரே” என்றான். “ஆனால் அதை நான் நாலாயிரம்முறை மீண்டும் மீண்டும் சொல்வதாக எண்ணிக்கொள்ளுங்கள்.” அர்ஜுனன் வெடித்து நகைத்து இளைய யாதவரிடம் “இவனிடம் மூத்தவரிடம் இருக்கும் எல்லா சாயல்களும் உண்டு. ஒன்று கூடுதலாக உண்டு என்றால் அது நகையாட்டு” என்றான். “அதை நான் கௌரவ மூத்தவரிடமிருந்து பெற்றேன்” என்றான் யுயுத்ஸு. “ஆம், கௌரவ அவை சிரிப்பும் நகையாட்டுமாக செல்வது என அறிந்துள்ளேன்” என்றான் அர்ஜுனன். “மூத்தவரே, நீங்கள் இங்குதான் வந்திருக்க முடியும் என நான் அறிந்துள்ளேன். இங்கு நீங்கள் வந்ததே எவ்வகையிலும் முறையானதும்கூட. உங்கள் ஆசிரியர் இங்கிருக்கையில் வேறெங்கும் நீங்கள் நிறைவுகொள்ளவும் முடியாது” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆனால் அங்கு நீங்கள் செய்யவேண்டுவனவற்றை செய்த பின் இங்கு மீண்டீர்கள் என்றால் நிறைவுடன் இருப்பீர்கள். நான் கூற வந்தது அதை மட்டுமே.”

“முடிவில்லாத நடிப்பு, அது எனக்கு சலிப்பூட்டுகிறது” என்றான் அர்ஜுனன். “ஆம், அதையே சற்றுமுன் கங்கைக்கரைக் காற்றேற்று துயில்கொள்கையில் நானும் உணர்ந்தேன்” என்றான் யுயுத்ஸு. “ஆனால் அது உங்கள் கடமை. உங்கள்

மூத்தவர்கள் எதிர்பார்க்கையில் அதை நீங்கள் செய்தே ஆகவேண்டும். எவ்வகையிலும் தவிர்க்க உங்களுக்கு உரிமை இல்லை.” அர்ஜுனன் “நான் என்னால் இயன்றதை செய்துவிட்டேன். இனிமேலும் நடிப்பதில் பொருளில்லை. எங்கோ ஓர் இடத்தில் இதை நான் நிறுத்திக்கொண்டே ஆகவேண்டும்” என்றான். “நேற்று அங்கிருந்தவர்கள் என்னை இளமை முதல் அறிந்தவர்கள். அவர்கள் முன் அவ்வாறன்றி நான் தோன்றமுடியாது. இவர்கள் முன்னால் அவ்வாறு நான் தோன்றினேன் என்றால் அது மீண்டும் ஒரு தொடக்கம். போதும், என் விழைவின்மையை நீயே அரசரிடம் தெரிவித்துவிடு” என்றான்.

“நீங்கள் அஸ்தினபுரியின் முதன்மை முகம். அங்கிருப்போர் உங்களை அவ்வண்ணமே அறிந்திருக்கிறார்கள்” என்றான் யுயுத்ஸு. “நான் இறுதி முடிவை எடுத்துவிட்டேன். நீ பேசி என்னை மாற்றிவிட முடியாது” என்றான் அர்ஜுனன். “நான் இளைய யாதவர் அருகே இருக்க விழைகிறேன், அதில் எந்த மாற்றமும் இல்லை.” இளைய யாதவர் “நான் நகருக்குள் வருவதாக இல்லை. இன்றிருக்கும் நிலையில் நான் எந்நகருக்குள்ளும் நுழையக்கூடாது. நான் துவாரகையால் வெளியேற்றப்பட்டவன்” என்றார். “உங்களை மாற்றி அழைத்துச்செல்ல முடியும் என நான் நினைக்கவில்லை. என் எல்லைகளை நான் அறிவேன்” என்றான் யுயுத்ஸு. அர்ஜுனன் “இளையோனே, நான் இளைய யாதவர் அருகேதான் இருக்கப்போகிறேன். அவருடன் இருக்கையில் மட்டுமே நிறைவை அடைகிறேன். நான் ஆற்றிய பணிகளுக்கு எதையேனும் என் மூத்தவர் அளிப்பாரென்றால் இதையே கோருவேன்” என்றான்.

“ஆனால் உங்கள் மூத்தவரின் விழைவு…” என யுயுத்ஸு தொடங்க “அவர் தன் விழைவை உன்னிடம் கூறினாரா? எனக்குரிய ஆணை என எதையேனும் விடுத்தாரா?” என்று அர்ஜுனன் கேட்டான். “இல்லை” என்றான் யுயுத்ஸு. “எனில் சென்று அவரிடம் கேள். நான் இளைய யாதவரை விட்டுவிட்டு என் விழைவுக்கு மாறாக அஸ்தினபுரிக்குள் நுழைந்தாகவேண்டும் என அவர் ஆணையிடுகிறாரா என்று” என்றான் அர்ஜுனன். “அவர் இளைய யாதவரின் விழைவுக்கு மாறாக ஆணையிடமாட்டார் என நான் அறிவேன்” என்றான் யுயுத்ஸு. “எனில் என்ன எஞ்சுகிறது? நாம் பேசிக்கொள்ள ஏதுமில்லை. நான் வரவியலாது” என்று அர்ஜுனன் சொன்னான். யுயுத்ஸு “நான் என் தூதை சொல்லிவிட்டேன். அறுதி முடிவுகளுடன் பேசும் ஆற்றல் எனக்கில்லை. நான் எளியோன்” என்றான். பெருமூச்சுடன் கைகளை மடியில் சேர்த்துவைத்து அமர்ந்துகொண்டான். குறுங்காட்டிலிருந்து காற்று இலையோசையுடன் வந்து அவர்களைத் தழுவி கடந்துசென்றது.

இளைய யாதவர் அவனிடம் “இளையோர் கொண்டு வந்த தனிப்பரிசுகள் என்னென்ன?” என்றார். யுயுத்ஸு அவரை திரும்பிப் பார்த்தான். அவர் அவற்றைப் பற்றி அறிந்திருப்பார் என்றே அவனுக்கு தோன்றியது. அவனுக்கு அவர் கேட்பதன் நோக்கம் புரியவில்லை. இருந்தாலும் சொல்லத் தொடங்கினான். ஒவ்வொருவரின் பரிசைப் பற்றியும் யுதிஷ்டிரன் அவற்றுக்கு அளித்த எதிர்வினை பற்றியும் அவன் சொல்லிக்கொண்டிருந்தபோது அர்ஜுனன் ஆர்வமற்று காட்டை பார்த்துக்கொண்டிருந்தான். இளைய யாதவர் அவ்வப்போது சிரித்தும் ஊடுவினாக்கள் எழுப்பியும் அவன் சொல்வதை கேட்டார். பின்னர் அர்ஜுனனிடம் “விந்தைதான், மூன்று

திசைகளிலிருந்தும் ஏறத்தாழ ஒரே பரிசு வெவ்வேறு வகையில் வந்திருக்கிறது" என்றார். யுயுத்ஸு திகைத்து அவரை பார்த்தான். அவருக்கு அப்பரிசுகளைப் பற்றி தெரியவில்லை என்று தோன்றியது. விளக்கியபோது அவர் கூர்ந்து கேட்டதுபோலத்தான் தோன்றியது.

அர்ஜுனன் உளம்குவியாமல் "அப்படியா?" என்றான். இளைய யாதவர் "நீ கூட அதேபோல எதையாவது ஒன்றை கொண்டுசென்று கொடுக்கலாம். இப்பரிசுகளுக்கு ஓர் ஒழுங்கு உள்ளது. நால்வரும் நான்கு திசைகளிலிருந்து நான்கு பரிசுகளை அரசருக்கு கொடுக்கிறார்கள். நான்குவகை வினாக்கள், நான்கு விடைகள். சூதர்கள் கதை சொல்ல உகந்தவை. நீ செல்லாவிட்டால் கதை அறுந்து நின்றிருக்கும்" என்றார். "நான் அவ்வகையில் எதையும் கொண்டுவரவில்லை" என்று அர்ஜுனன் எரிச்சலுடன் சொன்னான். "எதையாவது கொண்டுவந்திருப்பாய். நன்கு எண்ணிப்பார்" என்ற இளைய யாதவர் "இல்லையேல் கொண்டுவந்த எதையேனும் அவ்வாறு அரும்பொருளாக ஆக்கிக்கொள்ளலாம்" என்றார். "விளையாடாதீர்கள், யாதவரே" என்றான் அர்ஜுனன். "நீ கூறியது நினைவுக்கு வருகிறது. மணிபூரகநாட்டின் மறுஎல்லையில் மாமேருவின் அடிவாரத்தில் இருந்த ஊர்களின் தெய்வங்களைப்பற்றி சொன்னாய். அவற்றில் ஒன்று உன்னை தேடிவந்ததைப்பற்றி…" என்றார்.

யுயுத்ஸு புரிந்துகொண்டான். புன்னகையுடன் அர்ஜுனனிடம் "எதை கண்டீர், மூத்தவரே?" என்றான். அர்ஜுனன் எரிச்சல் விலகாதவனாக "எங்குமுள்ளவைதான். அங்குள்ள சிற்றூர்கள் எல்லாமே தொல்தெய்வங்களால் நிறைந்திருக்கின்றன" என்றான். "பாரதவர்ஷம் முழுக்க அத்தனை தொல்குடிச்

சிற்றூர்களிலும் எண்ணித்தீராத தெய்வங்கள் உள்ளன. முதல் நோக்கில் அவை வேறுபட்டவைபோலத் தோன்றும். ஆனால் அனைத்தும் ஒன்றே. விண்ணில் ஒரு சொல் ஒலிக்க அதை மண்ணில் ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு வகையில் சொல்லிக்கொள்வதுபோல. தவளைகளும் கிளிகளும் விலங்குகளும் மானுடரும். அவை வெவ்வேறு ஒலிகள். ஆனால் எங்கோ அவை ஒன்று என்றும்படுகின்றன.” அவனை பேசவைக்க யுயுத்ஸு விழைந்தான். “அவ்வாறு சொல்லிவிடமுடியுமா என்ன? நாம் பொதுமையை நோக்கும் விழிகொண்டிருந்தால் பொதுமை நம் கண்களுக்குபடுகிறது” என்றான்.

சற்றே சரிந்து அமர்ந்திருந்த அர்ஜுனன் எழுந்தான். “இவ்வாறு சொல்லாடுவது எளிது. நான் அதை விழையவில்லை. நான் கூறுவது நானே கண்டது” என்றான். “கீழைநிலத்தில் நான் கண்ட தெய்வங்கள் அனைத்துமே நீத்தாரின் வடிவங்கள்தான். நீத்தார் பல்வேறு பறவைகள், உயிரினங்களின் வடிவில் மானுடர் முன் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அவ்வடிவிலேயே வழித்தோன்றல்களால் வழிபடப்பட்டு தெய்வங்களாகியிருக்கிறார்கள்.” அவன் பேசும் உளநிலையை அடைந்துவிட்டான் என்று யுயுத்ஸு உணர்ந்தான். “நாங்கள் கிழக்கே காமரூபம் வரைதான் சென்றோம். அதற்கு அப்பால் படைகொண்டுசெல்ல எங்களுக்கு பொழுதில்லை. ஆகவே நான் ஓர் அறைகூவலை விடுத்தேன். கிழக்கிலிருக்கும் ஒவ்வொரு நாட்டு அரசனும் தன் கப்பத்தை என்னிடம் கொண்டுவந்து அளிக்கவேண்டும். அவ்வாறு அளிக்காதவர்கள் எதிரிகளென கருதப்படுவார்கள். அடுத்த மூன்றாண்டுகளுக்குள் அவர்கள் மேல் படைகொண்டு வருவேன் என்று.”

கிழக்கே இருந்த அனைத்து நிலங்களில் இருந்தும் மன்னர்களும் குடித்தலைவர்களும் எங்களுக்கு பரிசில்களை கொண்டுவந்து அளித்தனர். பரிசிலளிக்க வருபவர்கள் தங்கள் குடிக்கோல்களுடன் அரசகுடியைச் சேர்ந்த ஒருவரை அனுப்பவேண்டும் என்று நான் ஆணையிட்டிருந்தேன். காமரூபத்தைச் சேர்ந்த துரூமன் என்னும் அமைச்சன் என்னுடன் சேர்ந்துகொண்டான். அவன் என்னிடம் அவ்வண்ணம் கோல்களுடன் வருவதில் பொருளில்லை, அவர்கள் தங்கள் குடித்தெய்வங்களில் ஒன்றை கொண்டுவந்து என்னை வாழ்த்தவும் வேண்டும் என ஆணையிடும்படி சொன்னான். ஆகவே அவ்வாணைகளையும் இட்டேன். அதன்பின் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தெய்வங்கள் என்னை தேடிவந்தன. விந்தையான தோற்றங்கள் கொண்டவை. ஆனால் பெரும்பாலானவை விலங்குகளின், பறவைகளின், பூச்சிகளின் வடிவம்கொண்டவைதான். ஒரு நிலையில் அது ஓர் இனிய விளையாட்டாக ஆகியது.

அப்போதுதான் பாரதவர்ஷத்தின் எல்லைக்கு அப்பாலிருந்த மேருநிலத்தைச் சார்ந்த ஒருவன் என்னிடம் வந்தான். அவன் அங்கிருந்த தொல்குடிகளைச் சேர்ந்த பூசகன். அவனுடன் எவரும் வரவில்லை. அவன் என்னிடம் அவர்களின் குடி எனக்கு அடிபணியவோ பரிசில் அளிக்கவோ போவதில்லை என்றான். ஏனென்றால் அவர்கள் தங்கள் தெய்வங்களிடம் ஆணை கோரியிருக்கிறார்கள். தெய்வங்கள் ஆணை மறுத்திருக்கின்றன. அச்செய்தியை எனக்கு அறிவிக்கவே அவன் குடி அவனை அனுப்பியிருக்கிறது. முதலில் எனக்கு சீற்றம் எழுந்தாலும் உடனே சிரிப்பும் எழுந்தது. அவனுடைய குடி மிகமிகச் சிறிது என்று தெரிந்தது. அது என் படைப்பிரிவில் ஒன்றை ஒருநாள்கூட எதிர்த்து நிற்க முடியாது. நான்

அவர்களின் நம்பிக்கையை எண்ணி வியந்தேன். அதை மேலும் சீண்டி நகையாட விழைந்தேன்.

“சொல்க, உங்கள் தெய்வங்கள் எவை? அவை எவ்வகைப்பட்டவை? அவை என்னை முன்னர் அறியுமா?” என்று அவனிடம் கேட்டேன். “அறியா எனில் அவற்றுக்கு நான் என்னை அறிவிக்க என்ன செய்யவேண்டும்?” அவன் பெயர் ஹைமன். அதன் பொருள் பனி. அவன் என்னிடம் அவர்களின் தெய்வங்களைப் பற்றி சொன்னான். மண்ணில் பிறந்தவர்களுக்கு பலவகையான இறப்புகளை தெய்வங்கள் அளித்திருக்கின்றன. கனிகள் மரங்களிலிருந்து உதிர்வதுபோல. கனிந்து, பின் அழுகி, காம்பு இற்று உதிர்கின்றனர் மானுடர். இனிமையும் வண்ணமும் சிறந்த உயரிய கனியை மட்டும் தெரிவுசெய்து காம்புகளில் பால் வடிய தெய்வங்கள் பறித்துக்கொள்கின்றன. இளமையிலேயே கொடிய சாவுகொண்டவர்கள் தெய்வங்களால் பலியெனக் கொள்ளப்பட்டவர்கள். மலைகளிலிருந்து விழுபவர்கள், இடிவிழுந்து கருகுபவர்கள், நாகநஞ்சு ஏற்பவர்கள். அவர்கள் தெய்வங்களாகிறார்கள். அவர்களை நாத் என்கின்றனர்.

நாதர்கள் விண்நிறைந்த தெய்வங்களின்பொருட்டு இப்புவியை ஆள்கின்றனர். அவர்களில் முப்பத்தேழு நிழல்வடிவ நாதர்கள் புவியை மண்ணில் ஊர்ந்தும் புதைந்தும் கட்டுப்படுத்துகின்றனர். அந்த முப்பத்தேழுபேரின் ஒளிவடிவங்கள் விண்ணில் பறந்தும் மரங்களின் மலர்களில் குடிகொண்டும் மானுட வாழ்க்கையை நடத்துகின்றன. மேருநிலத்து மக்களின் அனைத்துச் சிற்றூர்களின் நடுவிலும் நாதர்களின் ஆலயங்கள் உள்ளன. மேலடுக்கில் விண்ணோரும் கீழடுக்கில் மண்ணோரும் அமர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு மலர்கள்

சூட்டப்படுகின்றன. இனிய நறுமணப்புகை எழுப்பப்படுகிறது. படையல் என தேங்காய்கள் அளிக்கப்படுகின்றன. அவர்கள் அவ்வூர்களை காக்கின்றனர். அவ்வூரின் அனைத்து நிகழ்வுகளையும் வழிநடத்துகின்றனர். அவர்களின் காலம், பருவமாறுதல்களினூடாக அவர்களால் நடத்தப்படுகிறது.

நாதர்களின் முதல்வன் திங்க்யான் என அவர்களால் அழைக்கப்படுகிறான். திக்ஞானன் புவியையும் விண்ணையும் இணைப்பவன். அதனூடாக இங்குள்ள வாழ்க்கையின் நிகர்நிலைகளை பேணுபவன். அவனுடைய இளையவள் ஆஹ்றி என அவர்களால் கூறப்படுகிறாள். திக்ஞானனும் ஆகுதியும் முன்பொரு நாள் சூதாடினார்கள். சூதுக்களத்தில் கருக்கள் என அவர்கள் சந்திரனையும் சூரியனையும் கோள்களையும் விண்மீன்களையும் வைத்தனர். அந்த ஆட்டத்தின் முடிவில் ஆகுதி தோல்வியடைந்தாள். தோல்வி முழுமையடைவதற்கு முன்னரே அவள் விண்மீன்களை கைகளால் அள்ளி வீசி எறிந்து ஆட்டக்களத்தை கலைத்தாள். சினமடைந்த திக்ஞானன் தன் மின்படைவாளால் ஆகுதியின் தலையை வெட்டினான்.

எரிந்தபடி அந்தத் தலை மண்மேல் விழவந்தது. அந்தத் தலையின் எரியெனும் குழல் நெடுந்தொலைவுக்கு எழுந்து பறந்தது. அவளுக்குப் பின்னால் மின்னி இடியோசையுடன் எழுந்த திக்ஞானன் நாதர்களிடம் “பிடியுங்கள்… பிடியுங்கள் அதை!” என்று கூவினான். நாதர்களில் ஒருவனான கொல்லன் மின் மகாகிரி அதை பிடித்துக்கொண்டான். “ஒருபோதும் அந்தத் தலை மண்ணை தொடலாகாது. மண்ணை அது தொடும்போது புவி அழியும். நினைவில் கொள்க!” என்று திக்ஞானன் ஆணையிட்டான். மகாகிரி தன் கை சுடும்வரை அந்தத்

தலையை வைத்திருந்தான். அதை உடனே அடுத்த நாதனிடம் அளித்தான். அவர்கள் அதை கைமாறிக்கொண்டே இருக்கின்றனர். அவர்கள் அதை இன்றுவரை நிலம்தொட விடவில்லை. ஆகவே இப்புவியில் மானுட வாழ்க்கை நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

என்னைக் காணவந்த பூசகனாகிய ஹைமன் சொன்னான் “எங்கள் குடியினர் உங்களுக்குப் பணிந்தாகவேண்டுமா என்று எங்கள் குடித்தெய்வங்களிடம் கேட்டோம். நாங்கள் கேட்டபோது அந்த எரிதலையை மிந்தா என்னும் அரசமைந்தன் வைத்திருந்தான். அவனிடமிருந்தது சொல் அளிக்கும் உரிமை. அவன் என்னிடம் சொன்னான். பூசகனே, நீ உசாவுவது நன்று. நம் நிலத்தை ஆள விழையும் அயலவன் அதற்குரிய தகுதிகொண்டவனாக இருக்கவேண்டும். தெய்வங்களுக்கு உகந்தவனே நம் குடியின்மேல் கோல்கொள்ள முடியும். அவனை நீ சென்று அறிந்து வருக! நான் அவ்வாணையைப் பெற்று உங்களிடம் வந்தேன்.” நான் அப்போதும் அதை ஒரு வேடிக்கையாகவே எடுத்துக்கொண்டேன். “நன்று, என் தகுதியை நான் எவ்வண்ணம் நிறுவவேண்டும்?” என்று கேட்டேன்.

அவன் தன் இடையில் ஒரு மூங்கில்குழலை வைத்திருந்தான். நமது வேய்குழல்களைவிட சிறியது. இரு பகுதிகளாக இருந்தது. அதை இணைத்து அவன் ஓர் இசையை எழுப்பினான். அது விண்ணுலகத்தின் ஒலியை மண்ணில் ஒலிக்கும் காலவின்கா என்னும் பறவையின் ஓசையை எழுப்புவது என்று அவன் சொன்னான். காலவின்கையின் குரலை எழுப்பினால் அதை கேட்கும் முதல் வானம்பாடியில் அந்த தெய்வப்பறவை எழும் என்று சொல்லி அதை ஊதலானான். கிழக்குப் பகுதிகளுக்கே உரிய கொஞ்சும் இசை.

சுழன்று சுழன்று இறங்கும் புகைபோன்ற பண். சற்றுநேரத்தில் அருகே மரக்கிளையின் இலைச்செறிவுக்குள் அந்த இசையை ஒரு வானம்பாடி திரும்பப் பாடியது. "அதுதான், காலப்பறவை வந்துவிட்டது" என்று அவன் சொன்னான்.

"வானம்பாடிகள் குரல்களை திரும்பச் சொல்வதொன்றும் புதிதல்ல" என்று நான் சொன்னேன். "அல்ல, இது காலப்பறவை. இதற்கு மூன்றுகாலமும் தெரியும்" என்று அவன் சொன்னான். "இது நீங்கள் சொல்லும் எல்லா சொற்களையும் திரும்பச் சொல்லும். ஒரே ஒரு சொல்லைத் தவிர. அச்சொல்லையே நீங்கள் சாவின் போது இறுதிக்கணத்தில் சொல்வீர்கள். உங்கள் உதடுகள் அச்சொல்லில் உறைய உயிர்நீப்பீர்கள்" என்று அவன் சொன்னான். "எங்கள் நிலத்தை ஆள்பவர் தன் சாவைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். தன் வாழ்வின் மெய்மையை அறிந்தவரே தன் சாவை அறிந்தவர். அவருக்கு அச்சொல் தெரிந்திருக்கும். எவர் ஒரு சொல்லை உரைத்து அச்சொல்லை அந்த வானம்பாடி மீளச் சொல்லவில்லையோ அவரே மேருநிலத்தை ஆளும் தகைமைகொண்டவர். தெய்வங்களுக்கு உகந்தவர். அவரை வணங்குக! அவருக்கு அடிபணிந்து கோல் அளித்து அழைத்துவருக! என்று தெய்வம் கூறியது. ஆகவேதான் வந்தேன்."

"நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று யுயுத்ஸு கேட்டான். "அது ஒரு சூழ்ச்சியாகக்கூட இருக்கலாம். இப்புவியில் சொற்கள் முடிவிலாக் கோடி. எவ்வொலியையும் அவ்வண்ணமே திரும்பச் சொல்பவை வானம்பாடிகள். மானுடச் சொற்களை மட்டுமல்ல மரங்கொத்தியின் ஓசையைக்கூட அவை அவ்வண்ணமே எழுப்புகின்றன. ஒருவன் தான் அறிந்த சொற்கள் அனைத்தையும் வானம்பாடியிடம்

சொல்லிக்கொண்டிருப்பான் என்றால் வாழ்க்கை முடிந்துவிடும்.” அர்ஜுனன் “ஆம், ஆகவே நான் அவனை செல்லவிட்டேன்” என்றான். “குறைந்தது ஒரு நல்ல கதையையும் ஓர் அழகிய சூழ்ச்சியையும் அவர்களால் உருவாக்க முடிந்தது அல்லவா?” யுயுத்ஸு “ஆம், மெய்தான்” என்றான்.

“ஆனால் அந்தக் குழலை நான் வாங்கிக்கொண்டேன். அவனே அதை எனக்கு அளித்தான். பாரதவர்ஷத்தில் எவர் காலப்பறவையை வரவழைத்து அதனிடமிருந்து தன் அறுதிச்சொல்லை உறுதிசெய்துகொள்கிறாரோ அவர் எங்கள் நிலத்திற்குரியவர் என்று அவன் சொன்னான்” என்றான் அர்ஜுனன். யுயுத்ஸு “அது எங்கே?” என்றான். “என்னிடமே உள்ளது. நான் சற்றுமுன் காட்டிலிருக்கையில் அதை மீட்டி வானம்பாடியை வரவழைத்தேன். அதில் காலப்பறவை எழுந்தது. ஆனால் நான் ஒரு சொல்லையும் அதனிடம் கேட்கவில்லை. அதன்முன் என் மொழி திகைத்து நின்றுவிட்டது.” யுயுத்ஸு “ஏன்?” என்றான். “அதை நீயே உணர்வதுதான் வழி” என்றான் அர்ஜுனன். யுயுத்ஸு ஆர்வத்துடன் “காட்டுக!” என்றான்.

அர்ஜுனன் தன் இடைக்கச்சைக்குள் இருந்து ஒரு சிறுகுழலின் இரு துண்டுகளை எடுத்து ஒன்றோடொன்று பொருத்தினான். அதை உதடுகளில் வைத்து இசைத்தான். மெல்லிய கூரிய இசைத்துணுக்கு வானம்பாடியின் ஓசைபோலவே இருந்தது. சற்றுநேரத்தில் வானம்பாடி ஒன்று அங்கே மறுகூவல் விடுத்தது. அர்ஜுனன் “இளையோனே, உன் சொற்களை நீ சொல்லிப் பார்க்கலாம்” என்றான். யுயுத்ஸு திகைத்து பின் இளைய யாதவரிடம் திரும்பி “தாங்கள் கூறி நோக்கினீர்களா?” என்றான். அவர் “என் சொல்லை நான் நன்கறிவேன்” என்றார்.

யுயுத்ஸு அந்த மறுமொழியால் திகைத்தான். பின்னர் “எவர் எதனடிப்படையில் தன் சொற்களை அதனிடம் கோரமுடியும்?” என்றான். “மிக விருப்பமான சொற்களா? மிக வெறுக்கும் சொற்களா? விழைந்தனவா? வென்றனவா? தெய்வங்களா அன்றி இருளிருப்புகளா? எதைக்கொண்டு தெரிவுசெய்வது?” என்றான்.

இளைய யாதவர் உரக்க நகைத்து “எது மிகமிகமிக பொருளில்லாமலிருக்கிறதோ, எது எல்லாவற்றையும் வெற்றுக்கேலிக்கூத்தென்று ஆக்கி கடந்துசெல்கிறதோ, அத்தகைய சொல்” என்றார். யுயுத்ஸு அவரை வியப்புடன் நோக்கினான். “என் வரையில் அதுவே உண்மை” என்றார். புன்னகை அணைய “அனைவருக்கும் அவ்வாறு ஆகவேண்டுமென்பதில்லை” என்றார். “எவரும் இதனிடம் ஒரு சொல்லும் உசாவத் துணியமாட்டார்கள். அச்செயலின் முடிவின்மையும் பொருளின்மையும் முகத்தில் அறைய உளமழிந்து அமர்ந்திருப்பார்கள்.” இளைய யாதவர் “யுதிஷ்டிரன் என்ன செய்வார் என நினைக்கிறாய்?” என்றார். யுயுத்ஸு அவரை நோக்கிய பின் “என்னால் சொல்லக்கூடவில்லை. அவர் எதையேனும் கேட்கவும்கூடும்” என்றான்.

அர்ஜுனன் “ஆம், நான் அவருக்கு இப்புற்குழலை அளிக்க விழைகிறேன். அவர் என்ன செய்வார் என்று அறிய வேண்டும்” என்றான். எழுந்துகொண்டு “நாம் செல்வோம். நான் இதை அரசருக்கு அளிக்கிறேன். இதுதான் நான் கீழைநாட்டிலிருந்து அவருக்காகக் கொண்டுவந்த அரும்பொருள்” என்றான். யுயுத்ஸு “அவர் இதை உசாவிநோக்காமலேயே அப்பால் வைத்துவிடுவார் என்றே தோன்றுகிறது” என்றான். “எனில் மேலும் நன்று. அவருக்கு அவர் வெல்லவே முடியாத அகமும் புறமும் சற்று எஞ்சியிருக்கிறது என்று காட்டுவோம்... நான்

கிளம்பி வருகிறேன்” என்றான் அர்ஜுனன். “நன்று, நான் இச்செய்தியுடன் இப்போதே கிளம்புகிறேன். உங்களை அழைத்துவர அரசணிப்படையினர் அனுப்பப்படுவார்கள்” என்றபடி யுயுத்ஸு எழுந்துகொண்டான். “ஆகுக!” என்றான் அர்ஜுனன்.

யுயுத்ஸு திரும்பி குறுங்காட்டை நோக்கி “அந்தப் பறவை நம் சொல்லுக்காகக் காத்து அங்கே அமர்ந்திருக்கிறது” என்றான். “ஆம்” என்றார் இளைய யாதவர். “அச்சுறுத்துகிறது அவ்வெண்ணம்” என்றபடி யுயுத்ஸு திரும்பிக்கொண்டான். அர்ஜுனன் காட்டை நோக்கியபடி “என்னை கவர்ந்தபடியே இருக்கிறது. ஆனால் தயக்கமும் அளிக்கிறது” என்றான். யுயுத்ஸு தலைவணங்கி அங்கிருந்து நடந்தான். தப்பிஓடுபவன்போல விசைகூட்டினான். சற்றுமுன் உச்சிமயங்கலில் அந்தப் பறவையின் மெல்லிய இசையை கேட்டோமா என எண்ணிக்கொண்டான். அதில் ஒரு சொல் இருந்ததா? மிகமிக இனிய ஒரு சொல்?

# களிற்றியானை நிரை - 68

### பகுதி ஆறு : இடந்திகழ் எரிமுலை – 18



அர்ஜுனன் நகர்நுழைவு முடிந்து அரண்மனையை அடைந்தபோது களைத்து தளர்ந்துவிட்டிருந்தான். அவன் அஸ்தினபுரியின் அணிப்படையினருடன் கோட்டைமுகப்பை அடைந்தபோது முதற்கதிர் எழத் தொடங்கியிருந்தது. அவ்வேளையிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவனை எதிர்நோக்கி கோட்டைமுகப்பின் பெருமுற்றத்தில்

செறிந்திருந்தனர். உள்முற்றத்தில் அவனுடைய தேர் செல்வதற்கான பாதையை அமைக்கும்பொருட்டு நூற்றுக்கணக்கான புரவிவீரர்களை அணிநிரத்தி வேலி ஒன்றை அமைத்திருந்தாள் சம்வகை. ஆனால் அந்த வேலி மக்கள்திரளின் உந்தலால் உலைந்தாடிக்கொண்டிருந்தது. மேலும் மேலும் படைகளை அங்கே நிறுத்தவேண்டியிருந்தது. அவர்கள் நீர்நிறைந்த ஏரியின் கரை என விம்மிக்கொண்டிருந்தனர். நகரின் அத்தனை தெருக்களிலிருந்தும் மக்கள் பெருகி மையச்சாலை நோக்கி முட்டிமோதி உந்தி திணறிக்கொண்டிருந்தனர். காற்று நிறைந்த தோற்பை என கோட்டை வெடித்துவிடும் என தோன்றியது.

அர்ஜுனனின் கொடி தெரிந்ததும் கோட்டை மாபெரும் முரசென மாறி முழக்கமிட்டது. ஓசையின் உச்சத்தில் செவி செயலிழக்க வெற்று அசைவுகளாக நகரம் நுரைகொந்தளித்தது. முந்தையநாள் பகல்முதல் தொடங்கிய கொண்டாட்டம் அது. இந்திரவிழவு குறித்து யுயுத்ஸு நன்கறிந்திருந்தான். அது நகரை அதன் அனைத்துச் சங்கிலிகளையும் அவிழ்த்து தளைகளை விடுவித்து அதன் பித்துகளுக்கு விட்டுவிடுவதுதான். அன்று எதுவும் நிகழும். எதையும் எவரும் ஆளமுடியாது. அதன் பித்தில் ஆடியவன்தான் அவனும். அவை அவன் நினைவில் கொந்தளிப்பான கனவு என நீடித்தன. எப்போதேனும் கனவிலெழுகையில் அச்சமும் கிளர்ச்சியும் அளித்தன. ஆனால் அன்று அவன் கண்டது எவ்வகையிலும் எண்ணியிருக்க முடியாததாக இருந்தது. நகரம் அதன் வெறியால் உடைந்து தெறித்துவிடும் என, அதன் விசையால் சுழன்று வானிலெழுந்துவிடும் என தோன்றியது.

அர்ஜுனன் காமரூபத்திலிருந்து இந்திரனின் அடையாளமாகக் கொண்டுவந்த பொன் மூங்கில் வெள்ளித் தேரில் நகர்புகுந்ததும் அந்தக் களியாட்டம் தொடங்கியது. இந்திரனின் ஆலயத்திலிருந்து சிலை அணியூர்வலமாக எடுத்துக்கொண்டுவரப்பட்டு செண்டுவெளியின் கிழக்கு மூலையில் அமைக்கப்பட்ட மண்மேடையில் நிறுவப்பட்டது. அதன் முன் போர்விளையாட்டுக்களும் படைக்கலப் போட்டிகளும் தொடங்கின. நகரெங்கும் சூதர்களின் நடனங்களும் பாடல்களும் நிகழ்ந்தன. மெல்லமெல்ல பெண்கள் நகரில் நிறைந்தனர். சாலைகளில் அவர்களின் நடனங்களும் விளையாட்டுக்களும் தொடங்கின. மதுக்களியாட்டு என அவை மாறின. காமக்களியாட்டுகளாயின. அனைத்து எல்லைகளும் மீறின. இரவெல்லாம் நகரம் எரியெழுந்ததுபோல் சுடர்ந்தது. கூவி ஆர்ப்பரித்தது. விடிந்தபோது அது அணையுமெனத் தோன்றியது. ஆனால் கருக்கிருள் கடந்ததும் புது வெறியுடன் மீண்டும் எழுந்தது.

அர்ஜுனன் நகருக்குள் நுழைந்ததும் அத்தனை வேலிகளும் ஒரே கணத்தில் உடைந்தன. அவன் ஊர்ந்த தேரை புரவிகளை கழற்றிவிட்டு அப்படியே தூக்கி மேலெடுத்தனர். மக்கள்திரளின் ஒழுக்கின் மேல் அவன் மிதந்து அலைமோதினான். அவனை அவர்கள் மலர்மழையால் மூடினார்கள். அவன் நகரெங்கும் அலைந்து திரிவதை காவல்மாடம் மேலிருந்து யுயுத்ஸு நோக்கினான். “என்ன செய்வது?” என்று சம்வகை கேட்டாள். “ஒன்றும் செய்யமுடியாது. அவர் அரண்மனைக்கு வந்துசேரவேண்டியதுதான்” என்று யுயுத்ஸு சொன்னான். “அவருடைய பாதுகாப்பு…” என்று சம்வகை சொல்ல “அவர் இம்மக்கள்திரளால் நசுக்குண்டு கொல்லப்பட்டால் அதுவல்லவா வீடுபேறு?” என்றான் யுயுத்ஸு. சம்வகை அவன் உணர்ச்சியை

புரிந்துகொள்ளவில்லை. ஆனால் அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. அவள் நின்று தவித்தாள். அமர்ந்தும் எழுந்தும் சொல்லெடுத்தும் சொல்லடங்கியும் உலவிக்கொண்டிருந்தாள். எவரிடமென்றில்லாமல் சினம்கொண்டாள். பின் செயலோய்ந்து அமர்ந்தாள். யுயுத்ஸு அவளை வேடிக்கையுணர்வுடன் நோக்கிக்கொண்டிருந்தான்.

அரசக்காவலர் ஆணைகளைப் பெறுவதை நிறுத்திவிட்டிருந்தனர். ஆணைகள் முழங்கிய போதிலும் அந்த நகர்ப்பெருமுழக்கத்தில் அவை மறைந்தன. எதையும் செய்யமுடியாது என உணர்ந்த பின் செயலற்றிருந்த காவலர் மெல்லமெல்ல நகரின் வெறியால் தாங்களும் ஈர்க்கப்பட்டனர். அதில் இறங்கி கரைந்தழிந்தனர். “நூலறுந்த பட்டம். இது எங்கேனும் சென்றமையவேண்டும். அதுவரை செய்வதற்கொன்றுமில்லை” என்று சுரேசர் சொன்னார். சம்வகை அரண்மனையில் நிலையிலாது உலவியபடி “பகல் வெளுத்துவிட்டது. அவரை நகரின் அத்தனை தெருக்களுக்கும் கொண்டுசென்றுவிட்டார்கள். அவர் அவர்களின் தலைக்கு மேலேயே மிதந்துகொண்டிருக்கிறார்” என்றாள். சுரேசர் “ஓர் இடத்தில் இது நின்றுதான் ஆகவேண்டும்” என்றார். “அவர் அரசருக்கு சிறப்புப் பரிசொன்று கொண்டுவந்திருக்கிறார் என்றார்கள். இப்போது அது அவர் கையில் இருக்கிறதா என்ன?” என்றாள் சம்வகை. யுயுத்ஸு “அதை அவர் விடமாட்டார்” என்றான்.

யுதிஷ்டிரன் அரண்மனையின் உப்பரிகையில் வந்து நின்று நகரிலெழுந்த கொந்தளிப்பை நோக்கினார். “என்ன அது? இளையோன் வருகையா?” என்றார். “ஆம், அரசே. அர்ஜுனன் நகர்புகுகிறார்” என்று யுயுத்ஸு சொன்னான். “இதுவரை

இதைப்போல் ஒரு வரவேற்பு எவருக்கும் அளிக்கப்பட்டதில்லை.” அவன் மிகமிகக் கூர்மையாக சொற்களைத் தெரிவுசெய்து “பேரரசி திரௌபதிக்கு வந்த கூட்டத்தைவிட ஏழுமடங்கு. நகரில் நிற்க இடமில்லை...” என்றான். ஆனால் அவன் எண்ணியதுபோல யுதிஷ்டிரனின் முகம் மலரவில்லை. கண்கள் சுருங்க கூர்ந்து நோக்கிக்கொண்டு நின்றார். “நகரைச் சூழ்ந்திருக்கும் சிற்றூர்கள் அனைத்திலுமிருந்தும் மக்கள் இங்கே வந்துவிட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே பார்த்தனை ஒருகணம் பார்ப்பதொன்றையே கொண்டாட்டமாகக் கொண்டிருக்கிறார்கள்” என்றான்.

யுதிஷ்டிரன் “நேற்றே இங்கு இந்திரவிழவு தொடங்கிவிட்டதல்லவா?” என்றார். “ஆம்” என்று யுயுத்ஸு சொன்னான். “அவர்கள் அதைத்தான் கொண்டாடுகிறார்கள். கட்டின்மையை, காமத்தை” என்றார் யுதிஷ்டிரன். மீண்டும் கண்களைச் சுருக்கி நோக்கிய பின் “இந்நகரை இவ்வண்ணமே விட்டுவிட முடியாது. ஒரு பகலுக்குள் இந்திரவிழா கட்டுக்குள் வந்தாகவேண்டும் என்று நெறியிருக்கிறது” என்றார். யுயுத்ஸு ஒன்றும் சொல்லாமல் நின்றான். யுதிஷ்டிரன் தன் அறைக்கு மீண்டபடி “இளையோன் அரண்மனைக்கு வந்ததும் அவன் என்னை வந்து பார்க்கட்டும்” என்றார். யுயுத்ஸு “ஆணை” என்றான். அவர் தொய்ந்த தோள்களுடன், தளர்ந்த நடையுடன் சென்றார். அவன் நகரை உப்பரிகையில் நின்று மீண்டும் நோக்கிக்கொண்டிருந்தான். அது மெல்ல அடங்கத்தொடங்குவதை உணர்ந்தான். அதற்குரிய விழிச்சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை. ஓசையோ பெருகிக்கொண்டிருப்பதாகவே தோன்றியது. ஆனால் அது குறைந்துகொண்டிருக்கிறது என அகம் சொன்னது.

அவன் யுதிஷ்டிரனின் அறைவாயிலை அடைந்தபோது அங்கே மருத்துவர்கள் இருவர் நின்றிருந்தனர். “முதன்மை மருத்துவர் அரசரை நோக்கிக்கொண்டிருக்கிறார். அரசர் இருமுறை வாயுமிழ்ந்திருக்கிறார். அவருக்கு கடுமையான நடுக்கும் தலைச்சுற்றலும் இருக்கின்றன” என்றார் ஒருவர். “அவர் இளையவரை உடனே தன்னை வந்து பார்க்கும்படி ஆணையிட்டிருக்கிறார். அவரால் பார்க்க இயலுமா?” என்று யுயுத்ஸு கேட்டான். “அவர் எவரையும் பார்ப்பதனால் ஏதுமில்லை. அவருடைய உள்ளம் அலைமோதிக்கொண்டிருக்கிறது. அவரை சந்திப்பவர்கள் அதை உணர்ந்திருந்தால் மட்டும் போதுமானது” என்றார் மருத்துவர். “நன்று, அதை நான் இளையவரிடம் சொல்கிறேன்” என்று யுயுத்ஸு சொன்னான். அவன் படியிறங்கும்போது மிகவும் களைத்திருந்தான். காட்சியும் ஓசையுமே அக்களைப்பை அளிக்கக்கூடுமா? அவற்றினூடாக அவனும் அத்திரளுடன் களியாட்டம் இடுகிறானா என்ன?

கீழே சுரேசரின் அறையில் சம்வகை இருந்தாள். “அலையடங்கிக்கொண்டிருக்கிறது” என்று அவன் சொன்னான். “எவ்வண்ணம் எனத் தெரியவில்லை. இன்னும் சற்றுநேரத்தில் நகர் அமையத்தொடங்கிவிடும்.” சம்வகை “ஆம், அதை நானும் கருதினேன்” என்றாள். “எவ்வண்ணம்?” என்று அவன் கேட்டான். “நகரின் சில பகுதிகளில் இடம் ஒழிந்து தெரிகிறது” என்றாள். அவன் களைப்புடன் அவளருகே பீடத்தில் அமர்ந்தான். “சம்வகை, நீ அரசரின் துயர் எதனால் என்று எண்ணுகிறாய்?” என்று அவன் கேட்டான். “அதை ஆய்வுசெய்வது என் பணி அல்ல” என்றாள். “எனக்காக சொல். நான் அதை அறிய விழைகிறேன்” என்றான். “அவர் சில விடையில்லா வினாக்களால் வேட்டையாடப்படுகிறார்” என்று அவள்

சொன்னாள். “அவருக்குத் தேவை என்ன என அவரே அறியவில்லை. ஆணவ நிறைவா? வெற்றியா? தனிமையா? எதையும் அவரல்ல, எவரும் சொல்லிவிட முடியாது.”

அவள் சொல்வது சரி என அவன் உணர்ந்தான். பெருமூச்சுடன் “உண்மையில் அவர் நோயுறும்போது நானும் சற்றே நோயுறுகிறேன்” என்றான். அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். சுவர்களில் மோதி அலைப்புற்ற நகரின் பெருமுழக்கம் குறைந்துகொண்டே சென்றது. ஒருகட்டத்தில் அதன் சரிவிறக்கத்தை தெளிவாகவே உணரமுடிந்தது. ஒற்றன் அருகே வந்து “இளையவர் அர்ஜுனன் அரண்மனையை அணுகிக்கொண்டிருக்கிறார். வணிகர்தெருவிலிருந்து அவரை கொண்டுவருகிறார்கள்” என்றான். யுயுத்ஸு பெருமூச்சுவிட்டான். “நான்காவது காவல்மாடத்தை அவர் அணுகிவிட்டார்” என்று அடுத்த செய்தி வந்தது. யுயுத்ஸு எழுந்துகொண்டு “நான் சென்று அவரை எதிர்கொள்கிறேன். அவர் களைத்திருப்பார்” என்றான். “ஆம். அவரால் எழுந்து நிற்கவே முடியாது என நினைக்கிறேன்” என்று சம்வகை சொன்னாள்.

அர்ஜுனன் அரண்மனைக்குள் ஆயிரக்கணக்கான மக்களால் தூக்கிக்கொண்டு வரப்பட்டான். அரண்மனை முகப்பின் முற்றத்தில் அத்திரள் அலைசுழித்தது. அவன் அதில் ஒதுங்கும் நெற்றுபோல வந்து முதல்தளத்தின் சாளரவிளிம்பின் மேல் தொற்றிக்கொண்டான். அவனை நோக்கி மக்கள் கூச்சலிட்டனர். ஆடைகளை தூக்கி வீசினர். அவன் சாளரம் வழியாகவே முதல்மாடிக்கு சென்றான். யுயுத்ஸு மேலே ஓடினான். இடைநாழியை அடைந்த அர்ஜுனன் அங்கேயே விழுந்துவிட்டான். அவன் உடலெங்கும் புளித்த வீச்சத்துடன்

மது நாறியது. உலர்ந்த மதுவின் பிசுக்கின்மேல் மலர்ப்பொடியும் மலரிதழ்களும் மஞ்சளரிசியும் ஒட்டியிருந்தன. அவன் குழல்கற்றைகள் பிடிபடிந்து நார்நாராக தொங்கின. உடலில் வியர்வை வழிந்தபோது மலர்ப்பொடி உருகி இறங்கியது. யுயுத்ஸு அருகணைந்து “நீங்கள் நீராடலாம், மூத்தவரே” என்றான். ஆனால் அவன் விழிமூடித் துயிலத் தொடங்கிவிட்டிருந்தான்.

அர்ஜுனன் இரண்டுநாழிகைப் பொழுதே துயின்றான். விழித்து எழுந்து நீராடி ஆடைமாற்றி அவன் ஒருங்கி அமர்ந்திருந்தபோது யுயுத்ஸு அவனை நாடி வந்தான். அவன் அத்தனை விரைவாக ஒருங்கியிருப்பான் என அவன் நினைக்கவில்லை. “தங்களை எழுப்பலாம் என்றே வந்தேன், மூத்தவரே” என்றான். “நெடும்பொழுது துயில்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை” என்றான் அர்ஜுனன். நகரம் அதற்குள் முற்றாக அடங்கிவிட்டிருந்தது. ஓசையின்மை செவிகளை அறைந்தது. “செல்வோம், தங்களுக்காக அமைச்சர் காத்திருக்கிறார்” என்று யுயுத்ஸு சொன்னான். “ஆம், செல்லவேண்டியதுதான்” என அர்ஜுனன் நடந்தான். யுயுத்ஸு உடன் நடந்தபடி “மூத்தவர் சற்று உடல்நலக்குறைவுடன் இருக்கிறார். இந்தக் களியாட்டின் முழக்கம் அவர் நோயை கூட்டியிருக்கிறது, ஆனால் அவரை நாம் சந்திப்பதில் பிழையில்லை என்றனர் மருத்துவர்” என்றான்.

அவர்களை எதிர்நோக்கி சம்வகை இடைநாழியில் காத்து நின்றிருந்தாள். “இவளை இப்போது படைத்தலைவியாக ஆக்கிவிட்டீர்கள் என்று அறிந்தேன்” என்றான் அர்ஜுனன். “ஆம், அரசே. இவள் ஆட்சியில்தான் இந்நகர் இன்று இருக்கிறது”

என்றான் யுயுத்ஸு. அர்ஜுனன் சம்வகையை நோக்கி புன்னகைத்து “நன்று… அவளுடைய கவசங்கள் ஒளிர்கின்றன” என்றான். சுரேசர் இடைநாழியில் எதிரே வந்தார். முகமன் உரைத்து வணங்கினார். “நானும் உடன்வரவேண்டுமென்றால் வருகிறேன்” என்றார். “இது விந்தையான ஓர் விளையாட்டு, அமைச்சரே. நீங்களும் உடனிருக்கலாம்” என்றான் அர்ஜுனன். “நாம் ஒரு காவியத்தின் பகுதியை நடிக்கவிருக்கிறோம்” என்று நகைத்தான். யுயுத்ஸு “இந்நான்கு பகுதிகளும் ஒன்றே என்று இளைய யாதவர் சொன்னார். எனக்கு அது அப்போதும் புரியவில்லை, இப்போதும் குழப்பமாகவே உள்ளது” என்றான். அர்ஜுனன் நகைத்து “அது அவர் வழக்கம். எண்ண எண்ண சென்றடையமுடியாத சிலவற்றை சொல்லிவிடுவார். அவை சில தருணங்களில் அவர் வேண்டுமென்றே நம்மை குழப்பும்பொருட்டு சொன்னவையாகவே இருக்கும்” என்றான்.

யுதிஷ்டிரனின் அறைவாயிலில் நின்ற ஏவலனிடம் சுரேசர் உள்ளே அரசர் எவ்வண்ணம் இருக்கிறார் என உசாவி அறிந்தார். அர்ஜுனனிடம் “செல்வோம். நன்றே நிகழுமென எதிர்பார்ப்போம்” என்றார். “ஏன் அவ்வாறு எதிர்பார்க்கவேண்டும்?” என்று அர்ஜுனன் கேட்டான். சுரேசர் நகைத்து “ஏனென்றால் இது நான்காவது பரிசு. கதை இங்கே முடிவடைந்தாக வேண்டும்” என்றார். ஏவலன் வந்து அவர்கள் உள்ளே செல்லலாம் என அறிவித்தான். சுரேசர் “அரசரிடம் நீங்களே பேச்சை தொடங்கலாம். அவர் நோயுற்றிருந்தாலும் சில தருணங்களில் நிறையவே பேசுவார்” என்றார். அர்ஜுனன் “நானே பேசுகிறேன். இன்று அவர் நிறைய பேசமாட்டார் என நினைக்கிறேன்” என்றான்.

அவர்கள் அறைக்குள் நுழைந்தபோது யுதிஷ்டிரன் மல்லாந்து படுத்திருந்தார். சுரேசரும் யுயுத்ஸுவும் சம்வகையும் சுவர் அருகே பணிந்து நிற்க அர்ஜுனன் அருகே சென்று அவர் கால்களைத் தொட்டு வணங்கினான். “உங்கள் ஆணைப்படி கீழ்த்திசையை வென்று மீண்டிருக்கிறேன், மூத்தவரே. நமது வேள்விப்பரி கொட்டில் சேர்ந்துவிட்டது. நான்கு புரவிகளும் கொட்டில் நிறைத்து நின்றுள்ளன. பாரதவர்ஷத்தை நாம் நமது முன்னோரின் கொட்டிலில் கொண்டுவந்து கட்டிவிட்டிருக்கிறோம்” என்றான். யுதிஷ்டிரன் முனகினார். பின்னர் கையை ஊன்றி புரண்டு படுத்து “ஆம், நாம் இனி ராஜசூய அறிவிப்பை செய்யவேண்டியதுதான். எவருக்கும் மறுகுரல் இருக்காது என நினைக்கிறேன். நான்கு திசைகளிலிருந்தும் அந்தணர் வந்து கூடிவிட்டனர். வேள்விக்குரிய அனைத்தும் சேர்ந்துவிட்டன” என்றார். அர்ஜுனன் “ஆம், தாங்கள் மும்முடிசூடி அமரவேண்டிய பொழுது அணைகிறது” என்றான்.

யுதிஷ்டிரன் “எனக்கு நீ தனிப்பரிசு என எதை கொண்டுவந்தாய்?” என்றார். “ஏனென்றால் பிற மூவரும் அவ்வண்ணம் அரிய பரிசுகளை கொண்டுவந்தனர். எனில் நீயும் கொண்டுவந்தாகவேண்டும். இங்கே நாம் அனைத்தையும் சூதர்களுக்காகவும் காவிய ஆசிரியர்களுக்காகவும் நடித்துக்கொண்டிருக்கிறோம்” என்றார். அர்ஜுனன் புன்னகைத்து “நான் கொண்டுவந்ததும் மெய்யாகவே காவிய ஆசிரியர்கள் விழையும் பரிசுதான், மூத்தவரே” என்றான். “கீழைநிலம் இந்திரனுக்குரியது. நான் காமரூபத்துக்கு அப்பால் செல்லவில்லை என்றாலும் என் ஆணையை மேருநிலம் வரை செலுத்தினேன். அங்கிருந்து இப்பரிசு கிடைத்தது. உண்மையில் இதை பரிசு என்று சொல்லமுடியாது. இது ஓர் அறைகூவல்.

அறைகூவல் எனக்கல்ல, தங்களுக்கு. ஆகவே இதை தங்களுக்காகவே கொண்டுவந்தேன்” என்றான்.

ஆனால் யுதிஷ்டிரன் ஆர்வம்கொண்டவராகத் தெரியவில்லை. “அது என்ன? ஏதேனும் தீச்சொல்லோ மெய்ச்சொல்லோ படிந்த அருமணியா?” என்றார். “எதுவானாலும் அது ஒரு கதை. நான் கதைகளுக்குள் வாழ்பவனாக ஆகிவிட்டிருக்கிறேன்.” அர்ஜுனன் “ஆம் மூத்தவரே, கதைதான்” என்றான். “அக்கதையை சற்று விரிவாகவே நான் சொல்ல நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்” என்றபின் சொல்லத் தொடங்கினான். அவன் கதை சொல்லும்போது சிறுவனாகவே மாறிவிடுவதை யுயுத்ஸு கண்டான். கதைக்குரிய அசைவுகள் அவன் உடலில் எழுந்தன. கதையின் மெய்ப்பாடுகள் அவன் முகத்தில் தெய்வங்களை, பூசகர்களை, தொலைநிலத்துக்குடிகளை, பெண்களை, குழந்தைகளை கொண்டுவந்து காட்டிச்சென்றன. அவன் வழியாக அனைத்தும் நிகழ்ந்து முடிந்தது. எந்த நடனக்கூத்தனும் அவனுக்கு நிகரல்ல என்ற எண்ணத்தையே யுயுத்ஸு அடைந்தான்.

யுதிஷ்டிரனும் அக்கதையால் கொண்டுசெல்லப்பட்டிருந்தார். கதை முடிந்ததும் அவர் நீள்மூச்செறிந்தார். அர்ஜுனன் “இதுதான் அந்தப் புற்குழல். இதை மீட்டி அந்த வானம்பாடியை இங்கு கொண்டுவர முடியும்” என்றான். பின் சாளரத்தருகே சென்று நின்று அதை இசைத்தான். அதற்குள் இருந்து ஒரு வானம்பாடி வெளியே எழுந்ததுபோல ஓசை பிறந்தது. மன்றாட்டு என, கொஞ்சல் என அது ஒலித்தது. சற்றுநேரம் கழித்து வெளியே மரக்கிளையில் வானம்பாடி ஒன்று அவ்வோசைக்கு மறுமொழி அளித்தது. “காலப்பறவை எழுந்துள்ளது, மூத்தவரே. அதனிடம் அது மீளச்சொல்லாத

சொல் என்ன என்று நீங்கள் கேட்கலாம்” என்றான் அர்ஜுனன். “உண்மையில் நீங்கள் கேட்டு அச்சொல்லை அறிந்துகொண்டீர்கள் என்றால் உங்களையும் உங்கள் ஊழையும் அறிந்துகொண்டிருக்கிறீர்கள் என்று பொருள். அந்தத் தொலைநிலம் உங்களால் ஆளப்படும். அதை அறியாதவரை அந்நிலம் உங்களுக்கு அயலானது. உங்கள் மும்முடி அந்த வகையில் குறையுடையதே.”

யுதிஷ்டிரன் அவனை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார். பின்னர் புன்னகைத்து “அதை நீ இளைய யாதவரிடம் கேட்டாயா?” என்றார். “ஆம், அவருக்கு அவருடைய அறுதிச்சொல் தெரியும்” என்றான். “அனைவருக்கும் தெரியும்” என்றார் யுதிஷ்டிரன். “அதை பல்லாயிரம் சொற்களால் மறைத்திருப்பார்கள். பல்லாயிரம் கோடி சொற்களால் திசைதிருப்பியிருப்பார்கள். அந்தச் சொற்களையெல்லாம் அள்ளி அகற்றி அச்சொல்லை மீட்பதுதான் அறைகூவல்.” அர்ஜுனன் “இது உங்கள் அறையில் இருக்கட்டும், மூத்தவரே. உங்கள் சாளரத்துக்கு வெளியே அந்தப் பறவை உங்களுக்காக எப்போதும் காத்திருக்கட்டும். உங்களுக்கான சொல் என்ன என்பதை தனிமையில் நீங்கள் அதனிடம் உசாவலாம்” என்றான்.

யுதிஷ்டிரன் அவனை வெறுமனே நோக்கிக்கொண்டிருந்தார். “நாம் அறுதிசெய்து வைத்திருக்கும் சொற்களை ஒவ்வொன்றாகச் சொல்லலாம் என்கிறர்கள், மூத்தவரே. மறுக்கப்படும் ஒவ்வொரு சொல்லும் நம் வாழ்க்கையின் ஒரு பகுதியை நம்மிடமிருந்து வெட்டி வீசுகிறது. எஞ்சுவதே நம் வாழ்க்கை என்றாகிறது. உசாவிச் செல்லச் செல்ல மிகமிகக் குறைவாகவே நம்மிடம் எஞ்சும் என்கிறார்கள். அல்லது

எதுவுமே எஞ்சாது. நாமறிந்த ஒரு சொல்கூட எஞ்சாது, அவ்வெறுமையில் எஞ்சும் ஒரு சொல்லே பிரம்மம் நாம் இங்கே வரும்போது நமக்கு அளித்தது. நாம் அதை சென்றடையும்போது ஒரு வட்டம் முழுமையடைகிறது” என்று அர்ஜுனன் சொன்னான். “உண்மையில் ஊழ் எனப்படுவது அந்தச் சொல் நோக்கி நம்மை தள்ளிச்செல்லும் நிகழ்வுகளின் பெரிய வலை அன்றி வேறல்ல.”

“நல்ல பரிசு” என்று யுதிஷ்டிரன் கண்களை மூடியபடி சொன்னார். “இதை கொண்டுவந்து எனக்கு அளிக்க உனக்கு ஓர் இரக்கமின்மை தேவை. இன்றும் உன்னிடம் அது எஞ்சியிருப்பது நிறைவளிக்கிறது.” அர்ஜுனன் “அது எனக்கு எதிரான இரக்கமின்மையும்கூட அல்லவா?” என்றான். யுயுத்ஸு அவர்களிடையே நிகழ்ந்த அந்த உரையாடலை கேட்டுக்கொண்டிருந்தான். அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று அவனுக்கு புரியவில்லை. “இளையோனே, எந்த உலகியலாளனும் அந்தச் சொல்லை அப்பறவையிடமிருந்து கேட்டு அறியமுடியாது. அதை அறியவேண்டுமென்றால் நான் இவையனைத்தையும் துறந்து செல்லவேண்டும். ஆனால் மெய்யாகவே இது எனக்கு தேவைப்படும். அதுவரை நான் காத்திருக்கிறேன்” என்றார். “ஆனால் இது உடனடியாகத் தேவைப்படுவது நம் பிதாமகருக்கு. அவர் இன்னமும் குருக்ஷேத்ரத்தில் தன் இறுதிச்சொல்லுக்காக காத்துக் கிடக்கிறார். அவர் மண்நீங்காமல் இங்கே நான் முடிசூட முடியாது. அவர் தேடியிருப்பது இச்சொல்லைத்தான் போலும். இந்தக் குழலுடன் தூதனை அவரிடம் நான் அனுப்புகிறேன்” என்றார்.

அர்ஜுனன் “ஆம், ஒருவேளை இது இங்கு வந்ததே அதன்பொருட்டுதான் போலும்” என்றான். “நன்று, நீ நாளை அவையமரவேண்டும். ஓய்வெடு” என்று சொல்லி யுதிஷ்டிரன் கண்களை மூடிக்கொண்டார். சுரேசர் செல்வோம் என்று உதட்டை அசைத்து சொன்னார். அர்ஜுனன் அவரை மீண்டும் வணங்கிவிட்டு வெளியேறினான். வெளிவந்ததும் “அவர் இதை கையாலும் தொடவில்லை” என்று யுயுத்ஸு சொன்னான். “அவ்வாறுதான் நான் எதிர்பார்த்தேன்” என்று அர்ஜுனன் சொன்னான். “அவர் ஆடலை விழைபவர். இதை அவர் தொடுவதற்கு முன் பல்லாயிரம் முறை தன் நெஞ்சுக்குள் ஆடியிருப்பார்.” அவர்கள் ஓசைகள் தொடர அஸ்தினபுரியின் அரண்மனையின் இடைநாழிகள் வழியாக நடந்தனர். அர்ஜுனன் சுவரோவியங்களைப் பார்த்தபடி நடந்தான். பாண்டுவின் ஓவியத்தின் முன் நின்றான். இணைசேர்ந்து நின்றிருந்த மான்களை நோக்கி அம்பு கூர்வைக்கும் பாண்டுவை நோக்கி அவன் நின்றபோது விழிகள் சுருங்கின.

“அந்த மான்களின் இறுதிச்சொல் என்னவாக இருந்திருக்கும்?” என்று அவன் தனக்குத்தானே என கேட்டான். சுரேசர் “அது ஒரு தீச்சொல் என்கிறார்கள். அஸ்தினபுரியின்மேல் விழுந்த தெய்வப்பழி அது. அனைத்து அழிவுகளுக்கும் அதுவே வழிவகுத்தது” என்றார். அர்ஜுனன் பெருமூச்சுடன் “ஆம்” என்றான். “ஆனால் அது பழிச்சொல்லாக இருக்காது. இன்பத்தின் உச்சத்திலெழுந்த முனகலாகவே இருந்திருக்கும். இன்பத்திலேயே உயிர்விடுவதைப்போல் அரியது வேறென்ன?” என்றான். நடந்தபடி “அச்சொல் பாண்டுவின் நெஞ்சிலேயே பழிச்சொல் என திரிந்து நஞ்சுகொண்டிருக்கவேண்டும்” என்றான். யுயுத்ஸு அவன் சொல்வதென்ன என்று தெரியாமல் உடன் நடந்தான்.

# களிற்றியானை நிரை - 69

## பகுதி ஏழு : பெருசங்கம் – 1

சுதமன் பதற்றத்துடன் இடைநாழியினூடாக ஓடினார். பிறகு ஏன் அப்படி ஓடுகிறோம் என்று உணர்ந்து நின்று மூச்சுவாங்கிக்கொண்டார். ஆனால் உள்ளம் விசைகொண்டிருக்கையில் உடலை நிலைகொள்ளச்செய்ய முடியவில்லை. அவரால் எங்கும் அமரவோ படுக்கவோ முடியவில்லை. துயிலில் உடல் பல பக்கங்களிலாக தள்ளியது. நீர் நிறைந்த கலத்தை தூக்கிக்கொண்டு செல்வதுபோல தள்ளாடினார். ஆனால் படுத்தால் ஒரு நாழிகைகூட துயில்கொள்ள முடியவில்லை. துயில் கலைந்த பின் ஒரு கணம்கூட படுக்கையில் நீடிக்க முடியவில்லை.

அவருடைய உள்ளத்தில் மகிழ்ச்சியே இல்லை என்று தோன்றியது. செய்யவேண்டியவை குறித்த பதற்றம், செய்யவிட்டுப்போனவை பற்றிய அச்சம், செய்துகொண்டிருப்பவற்றின் முடிவின்மை குறித்த கொந்தளிப்பு ஆகியவை கலந்து அவர் அகமொரு பெருங்கூச்சலாக இருந்தது. ஆனால் நின்று எண்ணும்போது அதுவே மகிழ்ச்சி என்று தோன்றியது. இந்தப் பரபரப்புகள் ஓய்ந்து அஸ்தினபுரி மீண்டும் தன் இயல்பமைதியில் நிலைகொள்ளுமென்றால் வாழ்க்கையே பொருளில்லாததாக ஆகிவிடக்கூடும்.

அவர் எதிர்ப்படுபவரிடமெல்லாம் எதையாவது கூவி ஆணையிட்டார். ஆணையிட்டு அகன்ற பின் திரும்ப ஓடிவந்து மீண்டும் ஆணையிட்டார். ஆணைகளை அவர்கள்

மறந்துவிடுவார்களோ என்னும் ஐயத்துடன் ஓடிச் செல்கையில் இன்னொருவரைக் கண்டு அவரிடம் இன்னொரு ஆணையை இட்டார். ஒவ்வொருவரிடமும் அவர் சொல்லவேண்டியவை பெருகிக்கிடந்தன. ஒவ்வொன்றும் அறுந்து துடித்துக்கொண்டிருந்தது. பல்லாயிரம் முனைகளாலான ஒரு கூடையை அவர் முடைந்துகொண்டிருந்தார். ஒவ்வொன்றையும் பற்றி எடுத்து பின்னி முடைந்து அதன் வடிவை முழுமைசெய்யவேண்டும்.

அவரால் அதை எண்ணிநோக்கவே முடியவில்லை. உள்ளம் மலைத்து அப்படியே செயலற்றது. மறுகணமே அதை எண்ணக்கூடாது என ஒழிந்தார். அதை திரும்பி நோக்கவேகூடாது. மொத்தப் பணியையும் எண்ணுபவனால் பெருஞ்செயல்களை ஆற்றமுடியாது. செயலின் விளைவையும் எதிர்கால மதிப்பையும் கருதுபவன் சோர்வடைவான். இன்று இக்கணம் நான் ஆற்றும் செயல்மட்டுமே நான். வேறேதுமல்ல. அதில் முழுமையாகத் திகழ்வதே செய்யக்கூடுவது. முழுமை இருப்பது எதிர்காலத்தில். செயல் என அனைத்தும் திகழ்வது நிகழ்காலத்தில் மட்டுமே.

ஆனால் அது இயலவில்லை. அவர் நான்கு திசையிலும் சிதறித்தெறித்துக்கொண்டிருந்தார். மூன்று காலங்களிலும் ஒரே தருணத்தில் திகழ்ந்தார். எங்கும் இல்லாமலும் இருந்தார். எதிரே வந்த காவலனிடம் “பிரீதர் எங்கே? நான் அவரை கேட்டதாக சொன்னேனே? உடனே என்னை வந்து சந்திக்கவேண்டும் என்று சொல்லியிருந்தேனே?” என்றார். அவன் திகைத்து “என்னை யானைக்கொட்டிலுக்கு செல்லும்படி சொன்னீர்கள். நான் வேள்விக்குரிய நூற்றெட்டு

யானைகளையும் நோக்கி வந்து செய்திசொல்லவேண்டும் என்றீர்கள்” என்றான்.

சுதமன் சீற்றத்துடன் “யானைகளைப்பற்றி என்ன கவலை இப்போது? அதற்கு இன்னமும் ஏழு நாட்கள் இருக்கின்றன. இப்போது…” என்றபின் கைவீசி “செல்க, உடனடியாக சாரதனை நான் சந்திக்கவேண்டும் என்று சொல்க!” என்றார். “தாங்கள் பிரீதரை சொன்னீர்கள்” என்றான் ஏவலன். “சொன்னதை செய். எதிர்ப்புச்சொல் எனக்கு உகந்ததல்ல, தெரிகிறதா?” என்று கூச்சலிட்ட பின் சுதமன் இடைநாழியினூடாக ஓடத்தொடங்கினார். ஓடும்போதுதான் அவர் இயல்பாக இருப்பதாகத் தோன்றியது.

மேற்கு முற்றத்தை அடைந்து இறங்கி காற்று தூசும் சருகுத்தூளுமாகச் சுழன்றுகொண்டிருந்த வெளியில் நின்றபோதுதான் எதற்காக அங்கே வந்தோம் என்னும் உணர்வை அடைந்து திகைப்புடன் திரும்பி அரண்மனையை பார்த்தார். பதைப்புடன் மீண்டும் அரண்மனை நோக்கி செல்ல காலெடுத்தபோது எதன் பொருட்டு அங்கே வந்தோம் என நினைவுக்கு வந்துவிட்டது. அவர் கைதூக்கி கூவியபடியே ஓடினார். “தேர்… தேர் வருக!” அவரை தொலைவிலேயே நோக்கிக்கொண்டிருந்த தேர்வலன் தேரைப் பூட்டி அவர் அருகே வந்தான். “மூடா, நான் முற்றத்திற்கு வந்தால் தேரை கொண்டுவரமாட்டாயா?” என்று சுதமன் சீறினார். “நீங்கள் இன்று பலமுறை இவ்வாறு முற்றத்திற்கு வந்த பின் திரும்பி ஓடியிருக்கிறீர்கள், உத்தமரே” என்றான் தேர்வலன். “செல்க! தேவையற்ற பேச்சு வேண்டாம்” என்றார் சுதமன்.

தேர்வலன் தேரை மெல்ல செலுத்தியபடி “எங்கே?” என்றான். “அதை நான் ஏறியதுமே நீ கேட்டிருக்கவேண்டும்… புரவிகள்

இருக்குமிடத்திற்கு” என்றார். “எந்தப் புரவிகள்?” என்று அவன் மேலும் தணிந்த குரலில் கேட்டான். “அஸ்வமேதப் புரவிகள்... வேறெங்கே செல்வேன்? நான் என்ன குதிரைச்சூதனா? அறிவிலி” என்று சுதமன் கூவினார். தேர் விசைகொண்டதும் அவர் அகம் சற்றே அடங்கியது. இருபுறமும் அணிகொண்டிருந்த அஸ்தினபுரியை நோக்கியபடி பீடத்தின் விளிம்பில் அமர்ந்திருந்தார்.

நகரின் அத்தனை கட்டடங்களும் புதுச்சுண்ணமும் பல்வண்ணமும் கொண்டு பொலிந்தன. கூரைகள் புதிய அரக்கும் மெழுகும் பூசப்பட்டு அன்று எழுந்தவை போலிருந்தன. சாலையோரங்களில் எல்லாம் தோரணங்கள். அடிக்கடி வளைவுகள். ஆங்காங்கே பந்தல்கள். ஆனால் அனைத்தையும்விட நகரை அணிசெய்தது எங்கும் பெருகியிருந்த திரள்தான். மக்களின் முகங்களெல்லாம் ஒன்றே எனத் தோன்றின. அனைத்தும் மகிழ்ச்சியில் வெறிப்பு கொண்டிருந்தன. தேவையில்லாமலேயே அனைவரும் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள். அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். எறும்புவாய் என வீடுகளுக்குள் இருந்து வெளியே வந்தனர், அதேயளவு மக்கள் உள்ளே சென்றனர்.

எங்கும் மலர்மணமும் குங்குமமும் சந்தனமும் கொம்பரக்கும் புனுகும் கஸ்தூரியும் கலந்த மணமும் நிறைந்திருந்தன. வெயிலில் அவை ஆவியென்றாகி வந்து முகத்தை அறைந்தன. “காடு பூத்தால் அத்தனை பூக்களும் ஒன்றே என்றாகிவிடுகின்றன” என்று ஒரு சூதன் விழவெழுந்த நகரைப் பாடியதை அவர் நினைவுகூர்ந்தார். விழாவில் களிவெறிகொள்ள மக்களுக்கு எவரும் சொல்லிக்கொடுக்க

வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தனிமையால், அத்தனிமையில் வெளிப்படும் தங்கள் சிற்றுருவால் உளம் நைந்து போயிருக்கிறார்கள். அவர்கள் விழைவது ஒன்றெனத் திரள்வதை, பேருருக் கொள்வதை. கைபெருகி கால்பெருகி கண்பெருகி உடல்பெருகி உளம் ஒன்றாகி திகழ்வதை.

அவர் விழிகள் பெருகியவர்போல் ஆனார். உடலெங்கும் விழிகள். விழிகள் மேலும் மேலும் ஆற்றல்கொண்டன. இல்லங்களுக்குள் பெண்களின் களியாட்டை காணமுடிந்தது. இருள்மூலைகளில் நிகழும் காமக்கொண்டாட்டங்களைக்கூட காணமுடிந்தது. இந்திரவிழா அவிழ்த்துவிட்ட முடிச்சுகளை மீண்டும் கட்டி இறுக்க முடியவில்லை. நகரில் பிறிதொரு பெருநிகழ்வு எழுந்தால் மட்டுமே அவ்வுளநிலை மாறமுடியும். அதற்கு வேள்வியறிவிப்பு எழவேண்டும். வேதச்சொல் தெருக்கள் தோறும் முழங்கவேண்டும். மக்கள் இப்போதிருக்கும் உடலுக்குள் இருந்து பிறர் என வெளிவருவார்கள்.

தேர் வணிகச்சாலையினூடாகச் சென்றது. அவ்விழாவிலும் வணிகர்கள் விற்றுக்கொண்டே இருந்தனர். ஆடைகள், அணிகள், நறுமணப்பொருட்கள், இன்னுணவுகள், மங்கலப்பொருட்கள். ஒவ்வொன்றும் கடைகளின் முகப்பில் குவிக்கப்பட்டிருந்தன. அவற்றை அறிவிக்கும் கொடிகள் படபடத்தன. வாங்குவோரை அறைகூவும் கொம்புகளும் சங்குகளும் குழல்களும் முழங்கின. வாங்குபவர்கள் தோளோடு தோள்முட்டி ததும்பிக்கொண்டிருந்தனர். விலைகூறி கூச்சலிட்டனர். நறுமணப்பொருட்களை எடுத்து ஒருவரோடு ஒருவர் வீசிக்கொண்டாடினர். வழக்கமாக தனியிடங்களில் மட்டுமே மது விற்கப்பட்டது. அப்போது கடைவீதிகள் முழுக்க பெரிய கலங்களில் மதுவை கூவிக்கூவி விற்றுக்கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொன்றிலும் எத்தனை வகை! நூற்றுக்கணக்கான விலங்குகளின் தோல்களால் ஆன ஆடைகள். விலைமிக்க இமையக் கவரிமானின் வெண்மயிர் செறிந்த நுரையாடைகள், மான்தோல் ஆடைகள், புலித்தோலாடைகள், தென்னகத்திலிருந்து வந்த செந்தழல்போன்ற மயிர்கொண்ட மலையணில் ஆடைகள். புரவிவால் வண்ணம் கொண்ட ஆசுரநாட்டு மரவுரிகள், செவ்வண்ணமும் நீலவண்ணமும் பூசப்பட்ட மரவுரிகள். முகிலாலானவை போன்ற, நீர்க்குமிழியாலானவை போன்ற, இளம்பாளையாலானவை போன்ற, தளிராலானவை போன்ற பட்டுகள். பல்வேறுவகை படைக்கலங்கள்.

உடைவாள் பிடிகளில் அருமணிகள் மின்னிக்கொண்டிருந்தன. வகைவகையான மலர்ச்செதுக்குகள், மரப்பட்டைச் செதுக்குகள், நாகச்செதில் செதுக்குகள், முதலைப்பொருக்கு செதுக்குகள் கொண்ட வாளுறைகள். குறுவாள்கள், குத்துக்கத்திகள், எறிவாள்கள், எய்வாள்கள், வளைவாள்கள், சுழிமுனைவாள்கள், ஐம்முனை நகப்பிடிகள், உகிர்முனை கைப்பொருத்துக்கள். மானுடனுக்கு இப்புவியிலுள்ள அனைத்துத் தோல்களையும் தன்னுடையதாக்கவேண்டும். வண்ணத்துப்பூச்சியாகவேண்டும். புலியாகவேண்டும்.

கோட்டையைக் கடந்து தேர் சென்றதையே அவர் அறியவில்லை. கோட்டை வெண்ணிறத் திரைச்சீலை என பகலொளி பரவிய வானில் மறைந்துவிட்டிருந்தது. அதில் நிழல்கள் ஆடிக்கொண்டிருந்தமையால் விழிமயக்களித்த பெருங்கூட்டத்தில் தானும் கரைந்துவிட்டிருந்தது. கோட்டைக்குள்ளும் வெளியிலும் ஒரேபோல பெருந்திரள் அலைகொண்டது. திரும்பி நோக்கியபோது நகர் இருப்பதே

தெரியவில்லை. வெண்ணிறக் கோட்டைக்கு அப்பாலிருந்து எழுந்த ஒலியலைகளும் அதிலாடிய நிழல்களும் அங்கே முடிவிலா மக்கள்வெளி இருப்பதாகவே தோன்றச்செய்தன.

சென்ற பல மாதங்களாகவே கண்கள் மக்கள்திரளுக்கு பழகிவிட்டிருந்தன. திரள் நாளென பொழுதென கணமென பெருக கண் அதை அறியாமல் ஏற்று ஒப்பி எப்போதும் எங்கும் மக்களின் திரள் கொப்பளிப்பை மட்டுமே நோக்குவதாக மாறி எப்போதேனும் அசைவற்று நிலைத்த ஓரிடத்தைப் பார்க்கையில் சற்று துணுக்குறல் உருவாகியது. கண்களை எப்போது மூடினாலும் உள்ளே காட்சியலைகள் எழுந்தன. இரவு துயிலில் எழும் கனவுகளில்கூட பெருந்திரள் அலையடித்தது. அத்தனை சொற்களிலும் திரளில் இருந்து கூச்சலிடும் தன்மை அமைந்தது. தனித்து ஒருவரை பார்த்தால்கூட அவர் திரளில் ஒரு துளியென உள்ளம் உணர்ந்தது.

நகருக்குள் பொதுமக்கள் நுழைவதற்கு மேற்குவாயிலும், வெளியே செல்வதற்கு வடக்குவாயிலும், அரசச்செய்தியாளரும் பிறரும் வெளியே செல்வதற்கு தெற்குவாயிலும் ஒதுக்கப்பட்டிருந்தன. நகரைச் சூழ்ந்திருந்த காடு அகன்று விலகிச் சென்றுவிட, அங்கே குடியிருப்புகளும் சாலைகளும் உருவாகி வந்துவிட்டிருந்தன. முச்சந்தி முனைகளில் சிறு சந்தைகள் எழுந்தன. அங்கே ஆலயங்கள் உருவாயின. உருவாகிவிட்டிருந்த ஆலயங்கள் நாள்தோறும் வளர்ந்து செழித்துப் படர்ந்தன. ஒருநாள் விட்டு மறுநாள் ஒரு வழி சென்றால் அங்கே ஓர் ஆலயம் எழுந்துவிட்டிருந்தது. அவற்றுக்கென எந்த நெறியையும் அரசால் அமைக்க முடியவில்லை. “அது தெய்வங்களின் பாதை. அவற்றின்

விழைவு. நம் ஆணைகளை அவை செவிகொள்ளப்போவதில்லை” என்றார் சுரேசர்.

பலநூறு குடித்தெய்வங்கள். பாரதவர்ஷம் எங்கிலுமிருந்து அவை பிடிமண் என, அடையாளப்பொருள் என, நுண்சொல் என கொண்டுவரப்பட்டு அஸ்தினபுரியின் நிலத்தில் நிறுவப்பட்டன. பீடங்களில் களிமண் உருவங்களாக, மரச்செதுக்குகளாக, கல்லுருளைகளாக, நடுகற்களாக, விழிக்கற்களாக அவை நின்றன. ஒவ்வொரு தெய்வமும் முதல் நோக்கில் துணுக்குறச் செய்தது. ஒவ்வொன்றும் புதியதாகவும், கூடவே ஏற்கெனவே சற்று தெரிந்ததாகவும் இருந்தது. “இந்த தெய்வம் எது?” என்று வினவி அதன் கதையை, இயல்பை அறிந்து முன்னரே தெரிந்த தெய்வமொன்றுடன் அதைப் பொருத்தி வகுத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

“பாரதவர்ஷம் தெய்வங்களின் நிலம். ஏதோ ஆணையை ஏற்றுக் கிளம்பியதுபோல எல்லா தெய்வங்களும் இன்று இங்கே வந்து சேர்ந்துவிட்டிருக்கின்றன” என்று சுரேசர் சொன்னார். “தெய்வங்கள் புது நிலத்தில் மிக எளிதாக வேர்விடுகின்றன. பல்லாயிரமாண்டுகளாக அங்கேயே நிலைகொண்டவை என தோன்றச் செய்துவிடுகின்றன.” அவரே அதை உணர்ந்தார். ஐந்தாறு முறை பார்த்த பின் ஓர் இடத்தின் அடையாளமாகவே அந்த தெய்வங்கள் உருமாறின. அவை இருக்குமிடம் அவற்றால் பெயர் பெற்றது. இன்னும் சில ஆண்டுகளில் அவற்றின் தொன்மை கதைகளால் நிறுவப்படும் என்று அவர் எண்ணிக்கொண்டார். ஆழுளம் உணரும் ஆழம் என்பதனால் அதை சித்தம் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளும்.

அனலிலும் புனலிலும் காற்றிலும் சொல்லிலும் எழுந்து எங்கும் நிலைகொள்ளாத தெய்வங்கள் பல்லாயிரம். பூசைக்கென

எழுந்து பூசைபெற்று அக்கணமே மறைபவை. மானுடரில் எழுந்து மானுடரைக் கடந்த நிலைப்பேறைப் பெற்று உறைபவை. கல்லிலும் மண்ணிலும் மரத்திலும் உருப்பெறும் தெய்வங்கள் மேலும் பல்லாயிரம். அத்தனை தெய்வங்கள் மானுடருக்கு தேவைப்படுகின்றன. “முன்பும் இங்கு பல்லாயிரம் தெய்வங்கள் இருந்தன. அவை சொல்லில் எழுந்தவை. இவை மண்ணில் இருந்து எழுந்த தெய்வங்கள்” என்றார் சுரேசர். “இனி இவை சொல்லுக்குள் சென்று பீடம் கொள்ளும். அங்கே முளைவிட்டு பெருகிப்பரவும். சொல் பெறும் தெய்வம் தன் ஆற்றலை சொல்லை ஆள்பவனுக்கு அளித்துவிடுகிறது.”

ஒவ்வொருநாளும் சுதமன் வெவ்வேறு பூசனைமுறைகளை பார்த்தபடி சென்றார். வெறியாட்டு எழுந்த பூசகன் முழுக் காளைக்கன்றை வாயில் கவ்வி அப்பால் தூக்கி வீசுவதை கண்டார். பல்லால் கடித்து மரக்கிளையில் தொங்கிக்கிடக்கும் வேலனைக் கண்டு உடல் நடுங்கி பின்னடைந்தார். வறுமுலை மூதன்னையின் நாவில் கேளாச் சொல் என நடுங்கும் தெய்வ ஆணையை கண்டார். துள்ளி அதிரும் வேல்கள். ஒளிர்நாவென திளைக்கும் வாள்கள். சுழலும் தடிகள். கருவறைக்குள் இருளில் அமர்ந்திருந்தன சில தெய்வங்கள். முச்சந்தியில் உச்சிவெயிலில் வெறித்து நோக்கி இருந்தன சில தெய்வங்கள்.

நகருக்கு மேற்கே முன்பு அடர்காட்டுக்குள் இருந்த ஓர் கலிதேவனின் ஆலயம் ஒவ்வொருநாளும் மக்கள் செல்லத்தொடங்கி தானே எழுந்து அணுகி சாலையோரத்திற்கு வந்ததுபோல தெளிவடைந்தது. அங்கு செல்வதற்கான படிகள் அமைந்த பாதை உருவாகியது. கலிதேவனுக்கு உகந்த நீலமலர்களுடன் கரிய ஆடை அணிந்து மக்கள் நீண்ட நிரைகளாக அப்பாதையில் வளைந்து ஏறிச்சென்றனர்.

கலிதேவனை புகழ்ந்து பாவலர் இயற்றிய செய்யுட்கள் ஒவ்வொருநாளும் புதிதாகக் கிளம்பி வந்தன. “எழும் யுகம் கலிக்குரியது. இனி நெறிகளை ஆள்பவன் அவனே. விழைவின் அரசன், வஞ்சத்தின் தலைவன், வெற்றிக்குரியவன், அனைத்து தெய்வங்களுமென்றாகி நின்று இப்புவியை இனி நடத்தவிருப்பவன்.” அவ்வழியே தேரில் செல்கையில் அச்சிறு குன்று ஒரு வண்டு என ரீங்கரிப்பதை கேட்கமுடிந்தது.

பெரும்பாலும் பெண்கள் அங்கே சென்றுகொண்டிருந்தனர். அத்தனை பெண்கள் செல்வது ஏன் என்று அவர் சுரேசரிடம் கேட்டார். அனைவருக்கும் கலிமேல் அத்தனை ஈடுபாடு எப்படி வந்தது? கலி எதிர்மறை உணர்வுகளின் தேவன். எழும் யுகம் பொருளுக்குரியது. விழைவின், உடைமையின், களிப்பின், துறப்பின் காலகட்டம். ஆகவே திருட்டின், காப்பின், ஐயத்தின், அச்சத்தின் சூழல். அன்று கலியே வழிபடப்படுவார். “உடைக்குள் பொன்னை ஒளித்துவைத்திருப்பவனை எப்படி கண்டுபிடிப்பாய் என நான் முன்பு ஒரு கள்வனிடம் கேட்டேன். அவன் தெய்வத்தை தொழுவதைப் பார்த்தாலே போதும் என்று அக்கள்வன் மறுமொழி சொன்னான்” என்றார் சுரேசர்.

சுதமன் சூழ நிறைந்திருந்த மக்களை நோக்கிக்கொண்டே சென்றார். நோக்க நோக்க ஒரே சொல்லை மீளமீள கேட்பது போலிருந்தது. ஒரே சொல் வளர்ந்துகொண்டே செல்வதுபோலவும் இருந்தது. சொற்களில் இருந்து சென்றடையக் கூடியவை பல. சொற்களில் இருந்து சென்றடையக் கூடியது இன்னொரு சொல் என்றிருந்தால் சொல் பயனில்லாததாகிறது. சொல் மானுடரிடம் விளையாடுகிறது. சொல்லை பகடையென வைத்து களத்தில் முடிவில்லாது நம்மை தோற்கடிக்கின்றன தெய்வங்கள்.

விழைவெனும் சொல் உடைமையெனும் சொல்லை சென்றடைகிறது. உடைமையெனும் சொல் ஆணவமெனும் சொல்லை.

இந்த மக்கள் எவர்? இவர்கள் இன்மையில் இயல்பாக இருந்தவர்களாக இருக்கலாம். இருத்தலையே நிறைவெனக் கொண்டவர்களாக வாழ்ந்திருக்கலாம். நிறைவையே மகிழ்ச்சியாக அறிந்திருக்கலாம். மகிழ்ச்சியைப்போல சிறந்த ஆடையும் அணிகலனும் ஒப்பனையும் வேறில்லை. இப்போது இவர்கள் ஒவ்வொருவரும் எதையேனும் வைத்திருக்கிறார்கள். அனைவருக்கும் இல்லங்கள் அமைந்திருக்கின்றன. இல்லங்களுக்குள் அவர்கள் அமர்ந்து சொல்லாடுவதை, இல்லமுகப்புகளில் மைந்தரும் சுற்றமுமாக அமர்ந்திருப்பதை அவர் பார்த்துக்கொண்டு செல்வதுண்டு. ஒவ்வொரு இல்லத்திலும் ஒரு துண்டு வாழ்க்கை நிகழ்ந்துகொண்டிருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித்தன்மைகொண்டதாக இருக்கும்.

அஸ்தினபுரியை நாடி வந்தவர்கள் ஒருவர்கூட இல்லமின்றி தெருவில் தங்கியிருக்கலாகாது என்று யுதிஷ்டிரன் ஆணையிட்டிருந்தார். ஆகவே மொத்த நகரமும் தன்னைத்தானே கட்டி எழுப்பிக்கொண்டிருந்தது. சிதல்புற்று என நகர் வளர்ந்தது. நுரையெனப் பெருகியது. முகிலென மேலோங்கியது. வந்தவர்களுக்கு இருந்தவர்கள் இல்லம் செய்து அளித்தனர். வந்தவர்கள் இருப்பவர்கள் ஆகி வருபவர்களுக்கு இல்லம் செய்தனர். நகரம் ஒரு பெரும்பரப்பாகி அதன் நடுக்குமிழியாக பழைய அரண்நகர் அமைந்திருந்தது. ஒவ்வொருவரிடமும் சற்றேனும் பொன் இருந்தது. வந்தவர் அனைவருக்கும் உகந்த தொழில்

அமைந்தது. அதற்கு பொன் ஊதியமாக கிடைத்தது. நகரமெங்கும் உணவும் கள்ளும் மலிந்து கிடந்தன. எனவே பொன் பொன் எனவே அவர்களிடம் சேர்ந்தது. அவர்கள் அதைக்கொண்டு வாங்கத்தக்க பொருட்களின் நுண்வடிவம். அவற்றை வாங்கும் தருணத்து இன்பத்தின் பருவடிவம்.

சேர்க்கச் சேர்க்க அவர்கள் மேலும் மேலும் பொன்விழைவு கொண்டவர்கள் ஆனார்கள். கனவுகளை கைகளால் தொடமுடிகிறது. எண்ணி எண்ணி அடுக்கமுடிகிறது. மடியில் முடிந்துகொள்ள, இல்லத்தில் புதைத்துவைக்க முடிகிறது. பொன் அவர்கள் கையில் வளர வளர அவர்களின் ஆடை மாறியது. நடை மாறியது. சொற்களும் விழிகளும் மாறுபட்டன. தெய்வங்கள் மாறலாயின. குடித்தெய்வங்கள் அவர்களின் ஊர்களிலும் இல்லங்களிலும் தென்மேற்கு மூலைகளில் ஒடுங்கின. காக்கும்தெய்வங்களை அவர்கள் நாடினர். மேலும் மேலும் ஆற்றல்கொண்ட தெய்வங்களை. கொல்வேல் தேவர்படைத்தலைவனை. அவன் வழிநடத்தும் ஆயிரத்தெட்டு அன்னையரை. கொற்றவையை. அறுதியாக கலியை.

பிற தெய்வங்கள் அனைத்தையும்விட கலியே அவர்களின் அகத்தை நன்கறிந்தவன் என்று அவர்கள் உணர்ந்தனர். “கலி மூன்று தெய்வங்களுக்கும் மைந்தன். இருளில் இருந்து எழுந்தவன், எனவே இருளை அறிந்தவன், ஒளியை நோக்கி செல்ல பிறிதொரு வழித்துணை இல்லை” என்றனர் சூதர். நகரில் காகங்கள் திரும்பிவந்தன. நகரில் வறுமை எழுந்தபோது அவை மறையலாயின. துரியோதனன் களம்பட்டபோது அவை முற்றாக அகன்றன. கலிதேவனை வழிபடும் சொற்களால் அவர்கள் காகங்களை அழைத்தனர். நகரை அவற்றிடம் ஒப்படைத்தனர்.

நகரில் காகங்கள் பெருத்துவிட்டிருப்பதை எவரும் அறியவில்லை. நகரம் மக்கள்திரளால் ஓசையிட்டுக்கொண்டிருந்தமையால் அவற்றின் ஓசை மறைந்துவிட்டிருந்தது. ஆனால் ஒருநாள் இரவில் நிலவில் வானமெங்கும் காகங்கள் பறந்துகொண்டிருந்ததை சுதமன் கண்டார். அவர் முதலில் அவை வௌவால்கள் என நினைத்தார். பின்னர் அவை பறக்கும் சிறகசைவைக்கொண்டு காகங்கள் என தெளிந்தார். மறுநாள் அவர் அதை சொன்னபோது அமைச்சுநிலையில் இருந்த இளைய அமைச்சர்கள் அனைவருமே அதை சொன்னார்கள். நகரில் வெவ்வேறு இடங்களில் அவர்கள் அச்சுறுத்தும் அளவுக்கு காகங்கள் பெருகிநிறைந்திருந்ததை கண்டிருந்தனர்.

“அங்காடி முகப்பில் ஒருநாள் காலையில் நான் என்ன இது இந்த இடம் இத்தனை இருண்டிருக்கிறது என எண்ணிக்கொண்டு தேரில் சென்றேன். ஒருகணத்தில் உண்மை நெஞ்சை அறைய திகைத்துவிட்டேன். அந்த இடம் முழுக்க காகங்கள். காகங்கள் அசையவில்லை. தேருக்கான வழியை மட்டுமே அவை விட்டன. பெரும்பாலானவை ஓசையிடவோ எழுந்தமரவோ இல்லை…” என்றான் ஒருவன். “ஆம், நானும் கண்டேன். தெற்குக்காட்டில் மரங்களில் இலைகளை மறைக்கும் அளவுக்கு காகங்கள்…” என்றான் இன்னொருவன். நகர்ச்சதுக்கச் சூதன் “இது காகங்களின் ஆலயம் என்று அறிக! காலம்சமைக்கும் கலியின் அருள் எழுந்த நகர் இது” என்று பாடினான். “கருமையே எழும் யுகத்தின் நிறம். எல்லா வண்ணங்களும் சென்றடையும் வண்ணம் அது.”

கலியின் காகக்கொடியை முதலில் வணிகர்கள் தங்கள் கடைகளிலும் இல்லங்களிலும் நிறுவினர். பின்னர்

பெரும்பாலான மக்கள் தங்கள் இல்லங்களின் முகப்பில் காகச்சின்னத்தை பொறித்துக்கொண்டனர். காகத்தின் படம் பொறித்த வெள்ளி முத்திரைகள், நீலப்பட்டு துணிகள், பலகைகள் கடைகளில் விற்கப்பட்டன. காகம் பொறிக்கப்பட்ட செம்புக் கணையாழிகளை பெரும்பாலும் அனைவருமே அணிந்திருந்தனர்.

“நால்வருணமும் திரிந்து அனைவருமே வைசியர் என்றான காலகட்டம் இது” என்றார் அந்தணராகிய மர்க்கர். “அவ்வண்ணம் ஒன்று எழும் என்று நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. அன்று வேதச்சொல்லும், முனிவரின் ஊழ்கமும், அரசனின் அறமும், மறவரின் வீரமும், புலவரின் சொல்லும்கூட பொன்னால் அளவிடப்படும். மூத்தோரின் மதிப்பும் அன்னையரின் அன்பும் மகளிரின் காதலும்கூட பொன்னுக்கு நிகர்வைக்கப்படும். அது எழுந்துவிட்டதென்பதை இந்நகர் காட்டுகிறது.”

சுதமன் துயின்றுவிட்டிருந்தார். சற்றுநேரம்தான், ஆனால் அவர் அதற்குள் தன்னுள் நெடுந்தொலைவு சென்று மீண்டார். அவர் அங்கே துரியோதனனை கண்டார். இரவில் நீர் என கன்னங்கருமையாக மின்னிய அரியணையில் துரியோதனன் அமர்ந்திருந்தான். அவன் வலப்பக்கம் சகுனி நின்றிருந்தார். துரியோதனனின் காலடியில் சிறிய சிற்பங்களாக நூற்றுவர் தம்பியர் நின்றிருந்தனர். அப்போதுதான் துரியோதனன் நான்கு கைகளுடன் கல்லுடல் கொண்டு தெய்வம் என கருவறைப் பீடத்தில் அமர்ந்திருப்பதை சுதமன் கண்டார்.

துரியோதனன் தன் வலது மேற்கையில் முப்புரிவேலும் இடது மேற்கையில் பாசச்சுருளும் ஏந்தியிருந்தான். கீழ் வலக்கை அஞ்சலும் இடக்கை அடைக்கலமும் காட்டியது. காலுக்குக்

கீழே பீடத்தில் காகம் பொறிக்கப்பட்டிருந்தது. துரியோதனனின் கண்கள் உயிருடன் இருந்தன. அவன் நட்புடன் புன்னகைத்தான். "அரசே, நான் சுதமன். உங்கள் அவையில் எந்தை அமைச்சராக இருந்தார்" என்று சுதமன் சொன்னார். "நான் உங்களை இளமைந்தனாக அரசவையில் கண்டிருக்கிறேன்." துரியோதனன் புன்னகைத்து "உங்கள் குடி பெருகுக, உத்தமரே" என்றான். "நான் எளியோன். இந்நகரில் ஒரு சிறு துளி. உங்கள் அடிதொழுபவன்" என்றார் சுதமன்.

தேர் உலுக்கி நிற்க அவர் இறங்கி திகைத்து நின்றார். எங்கு வந்திருக்கிறேன்? பின்னர் இடமுணர்ந்தார். அஸ்தினபுரிக்கு வடகிழக்கே கங்கைவளைவு வரை பரந்திருந்த காட்டுக்குள் வேள்விக்கென ஒரு நகர் அமைக்கப்பட்டிருந்தது. அவர் அதன் முற்றத்தை அடைந்துவிட்டிருந்தார்.

# களிற்றியானை நிரை - 70

**பகுதி ஏழு : பெருசங்கம் – 2**



மரத்தடிகளை நட்டு பலகை அறைந்து மூன்றாள் உயரத்தில் சுற்றுவேலியிடப்பட்ட வேள்விநகரில் எழவிருக்கும் ராஜசூயவேள்விக்கான வேள்விச்சாலை கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. எண்கோண வடிவிலான பந்தல். எட்டு கோபுரவாயில்கள். எட்டு வாயிலுக்கும் வந்து சேர்ந்த அகன்ற பாதைகளில் பலகைகளை அறைந்து பொருத்திக்கொண்டிருந்தார்கள். வெவ்வேறு கொட்டுவடிகள் மரங்கொத்திகள் என ஓசையிட்டுக்கொண்டிருந்தன.

வேள்விச்சாலையைச் சுற்றி இரு பிறைவடிவங்களில் குடில்நிரைகள் இருந்தன. அவை ஒருபக்கம் வேள்வி நிகழ்த்த வரும் அந்தணர்கள் தங்குவதற்குரியவை. மறுபக்கம் வேள்வியை வாழ்த்த வரும் முனிவர்களுக்கு உரியவை. அவையனைத்திலும் பணி முடிந்துவிட்டிருந்தாலும் மேலும் பணி நடந்துகொண்டிருந்தது. வேள்விக்கு முந்தையநாள் வரை அங்கே பணிகள் நிகழ்ந்துகொண்டிருக்கும். அந்தணர்களும் முனிவர்களும் உணவு சமைப்பதற்குரிய புது மண்கலங்களை கொண்டுவந்து அடுக்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குரிய மரவுரி ஆடைகளும் தோலாடைகளும் ஏவலர்களின் தலைகளில் சுமைகளாக சென்றுகொண்டிருந்தன.

ஒவ்வொரு குடிலும் மையக்குடிலைச் சுற்றி மாணவர்கள் தங்குவதற்குரிய விரிவான திண்ணைகளுடனும் பின்பக்கம் ஏவலர் தங்குவதற்குரிய சிறு துணைக்குடில்களுடனும் அமைக்கப்பட்டிருந்தன. அந்தப் பிறைகளில் இருந்து பின்பக்கம் விரிந்துசென்ற சிறிய பாதைகள் வேள்விநகரின் அப்பால் அமைந்திருந்த ஏவலர்களின் குடில்தொகைகளைச் சென்று சேர்ந்தன. அதை ஒட்டியே நெய்ப்பசுக்களின் கொட்டில்களும் புரவிக்கொட்டகைகளும் அமைந்திருந்தன. மையச்சாலையில் இருந்து அங்கே வந்துசேர தனிச் சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே விறகுவண்டிகள் மாடுகளால் இழுக்கப்பட்டு எடைமிக்க சகட ஓசையுடன் நிரைநிரையெனச் சென்றுகொண்டிருந்தன.

வேள்விச்சாலையின் தேவைக்கென கங்கைக்குச் சென்றுசேரும் சிற்றாறுகளில் ஒன்று அணைகட்டி நிறுத்தப்பட்டு மரப்பலகைகளால் அமைக்கப்பட்ட ஓடை வழியாக கொண்டுவரப்பட்டிருந்தது. அது அங்கே ஒரு குளத்தை

நிறைத்து மறுபக்கம் பொங்கி சரிவில் சிறு அருவியென விழுந்து அப்பால் சென்றது. மரத்தாலான கரைகளும் அடித்தளமும் அமைக்கப்பட்ட குளத்தில் தூய நீர் அலைகொண்டது. அதைச் சூழ்ந்து நீரை அள்ளித்தேக்கும் பொருட்டு கங்கைப்படகுகளை மண்பீடங்களில் பொருத்தும் பணி நடந்துகொண்டிருந்தது.

வேள்விச்சாலை அரக்கு பூசப்பட்ட மரப்பலகைகளால் கூரையிடப்பட்டிருந்தது. கூரையின் பணி அப்போதும் முடியவில்லை. அங்கிருந்து கொட்டுகழிகளும் முழைக்கழிகளும் ஓசையிட்டன. அந்தத் தாளம் வெவ்வேறு ஒழுங்குகளில் மாறிமாறி ஒலித்தது. ஓர் உரையாடல்போல் அது தோன்றியது. கீழிருந்து அவர்களுக்கு உதவியவர்கள் கைகளில் வெவ்வேறு வண்ணத் துணிகளை அசைத்து குறிமொழியை பயன்படுத்தினர். அவர்கள் தங்கள் கழிகளையும் உளிகளையும் தூக்கி அசைத்தும் சுழற்றியும் மறுமொழி உரைத்தனர். மிக அப்பால் மணியோசை கேட்டது. பெரிய உருளிகள், நிலைவாய்கள், குட்டுவங்கள் தட்டுவண்டிகளில் ஏற்றப்பட்டு அத்திரிகளால் இழுத்துக்கொண்டு செல்லப்பட்டன.

கூரைமேல் அமர்ந்திருந்த தச்சர்கள் உருக்கிய அரக்குடன் சுண்ணமும் தேன்மெழுகும் கலந்து உருவாக்கிய குழம்பைக் கொண்டு பலகையின் இணைப்புகளை ஒட்டிக்கொண்டிருந்தனர். கீழே பல இடங்களில் பெரிய இரும்பு உருளிகளில் அரக்கும் மெழுகும் கலந்த கலவை கொதித்து குமிழிவெடித்து கமறும் கெடுமணப்புகையை எழுப்பியது. அதில் சுண்ணத்தைக் கொட்டி நீண்ட சட்டுவங்களால் கிளறிக்கொண்டிருந்தார்கள். அக்குழம்பை அள்ளி இரும்புச் சட்டிகளில் ஊற்றி கயிறு சுற்றப்பட்டிருந்த சகடங்களைச் சுற்ற அவை எழுந்து மேலே

சென்றன. அங்கு நின்றவர்கள் அவற்றைத் தூக்கி சிறிய மரக்கொப்பரைகளில் கொண்டுசென்று தச்சர்களிடம் அளித்தனர். கூரைவிளிம்புகளில் அரக்குத்துளிகள் வழிந்து வந்து சொட்டி உறைந்து மணிகள்போல் நின்றிருந்தன.

சுதமன் ஒரு திறந்த வாயிலினூடாக வேள்விச்சாலைக்குள் எட்டிப்பார்த்தார். உள்ளே காடுபோல பல்லாயிரம் மூங்கில் தூண்கள் செறிந்து நின்றிருந்த மண்தரையை எடைமிக்க உருளைக்கற்களால் இடித்து செறிவாக்கிக்கொண்டிருந்தனர். மூங்கில் தூண்களுக்கு மேல் பலவகையில் வளைக்கப்பட்ட மூங்கில்களை பின்னிப் பின்னி உருவாக்கிய கூரைக் கட்டமைப்பு மாபெரும் வலை போலிருந்தது. அதன்மேல் வெவ்வேறு இடங்களில் மூங்கில் பணியாளர்கள் தொற்றி அமர்ந்திருந்தனர். கீழிருந்து அவர்களுக்குத் தேவையான உளிகளும் கத்திகளும் கயிறுகளும் கம்பிச்சுருள்களும் கயிறுகளால் கட்டப்பட்டு மேலிழுக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான நாகங்கள் கீழிருந்து அப்பொருட்களைக் கவ்வி மேலே கொண்டுசெல்வதுபோலத் தோன்றியது.

சுதமன் வேள்விச்சாலையை சுற்றிக்கொண்டு பின்னால் சென்றார். ஒரு நீண்ட கோட்டைபோல அதன் சுவர் அவரருகே வந்துகொண்டே இருந்தது. அவரைக் கண்டதும் ஏவலர்தலைவன் வந்து தலைவணங்கினான். அவனிடம் ஆணைபெற்றுக்கொண்டிருந்தவர்கள் தலைவணங்கி நின்றனர். சுதமனால் அவன் முகத்தை நினைவுகூர முடியவில்லை. “ஆநிரைகள் அனைத்தும் வந்துவிட்டனவா? மீண்டுமொருமுறை நேரில் வந்து பார்த்துச்செல்லும்படி பேரமைச்சர் சுரேசரின் ஆணை” என்றார். அதற்குள் அவன் பெயர் நினைவுக்கு வந்துவிட்டது, மாகேயன்.

மாகேயன் “ஆம், அனைத்தையும் கொட்டிலில் பேணிக்கொண்டிருக்கிறோம். மூன்று பசுக்களுக்கு ஓர் ஆயன் என அமர்த்தியிருக்கிறோம். அத்தனை பசுக்களின் உடல்நிலையையும் காலையிலும் மாலையிலும் நோக்கி எனக்கு அறிவிக்கவேண்டும் என ஆணையிட்டிருக்கிறேன்” என்றான். சுதமன் “அறிவிப்புகள் நன்றாகவே இருக்கும். ஆனால் நேரில் சென்றால் நிலைமைகள் எப்போதுமே வேறாக இருப்பதை காணலாம். ஆகவேதான் என்னை நேரில் சென்று பார்க்கும்படி பேரமைச்சர் சுரேசர் சொல்லியிருக்கிறார்” என்றார். அமைச்சர் பெயர் உருவாக்கும் அதிர்வை அவர் கண்டார். அதன் பொருட்டே அப்பெயரைச் சொல்கிறோம் என அவர் அறிந்திருந்தார்.

“நீங்களே நேரில் பார்க்கலாம், உத்தமரே. நான் இரண்டு நாளுக்கு ஒருமுறையேனும் நேரில் பார்த்துவிடுகிறேன்” என்றான் மாகேயன். “பார்க்கிறேன். பசுக்களுக்கு நோய்கள் ஏதும் வந்துவிடக்கூடாது. அத்தனை பசுக்களும் அன்றலர்ந்த வெண்தாமரைகள்போல் இருக்கவேண்டும் என்பது நூல்நெறி” என்றார். மாகேயன் தலையசைத்தான். அவன் வெயிலுக்கு கண்களை சுருக்கியிருந்தமையால் கவலைகொண்டவன் போலவும் சுதமனின் பேச்சு புரியாதவன் போலவும் தோன்றினான்.

“முன்பு ஒருமுறை பிரக்ஜ்யோதிஷத்தில் பசுக்களில் நான்கு நோயுற்றமையால் வேள்வி தொடங்கவில்லை... அன்றிலிருந்து இதில் முழு நோக்கையும் செலுத்துகிறார்கள்” என்றபடி அவர் நடக்க மாகேயன் உடன் வந்தான். அப்போதுதான் சுதமனுக்குத் தோன்றியது, சென்ற சிலநாட்களாக என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்று. வெவ்வேறுவகையில்

வேள்வி நின்றுவிடுவதை கற்பனையில் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அவர் மட்டுமல்ல, சுரேசரும் அனைவரும் அதைத்தான் செய்கிறார்கள். அந்த வழியை மூடுகிறார்கள், பிறிதொன்றை தேடுகிறார்கள். ஒரு வழியைக் கண்டடைந்து அதை மூடும்போது நிறைவடைகிறார்கள். அந்நிறைவுக்காகவே மீண்டும் அதை தேடுகிறார்கள். பல்லாயிரம் முறை பல்லாயிரம் வழிகளில் இவ்வேள்வி நின்றுவிட்டிருக்கிறது உள்ளங்களில்.

சுதமன் பசுக்கொட்டில்கள் அமைந்த மேட்டுநிலம் நோக்கி பலகையால் அமைக்கப்பட்ட சரிவான பாதையில் ஏறிச்சென்றார். அங்கே மூங்கில் நட்டு தட்டிகளால் இரண்டாள் உயரத்தில் அமைக்கப்பட்டிருந்த பெரிய வேலிச்சுவருக்கு உள்ளே பசுக்கொட்டில் இருந்தது. அதன் முகப்பு கொட்டில்களுக்குரிய தொன்மையான வடிவில் வாயிலுக்குக் குறுக்கே மேடையுடன் அமைக்கப்பட்டிருந்தது. அமுதகலக் கொடியும் பசுக்கொட்டில் என அறிவிக்கும் கொம்புமுத்திரை கொண்ட கொடியும் மேலே பறந்தன. அணுகும்போதே பசுக்களின் ஓசையும் சாணியும் சிறுநீரும் கலந்த மணமும் வரத்தொடங்கின.

கொட்டிலின் பக்கவாட்டில் அமைந்த கொட்டகையில் பச்சைப்புல் கட்டுகள் குவிக்கப்பட்டிருந்தன. ஏவலர் அவற்றை உள்ளே கொண்டு சென்றுகொண்டிருந்தனர். கொட்டிலுக்குள் பகலிலும் குந்திரிக்கப் புகையின் நீலப்படலம் எஞ்சியிருந்தது. மூங்கில்களில் இரவில் எரிந்து அணைந்திருந்த பந்தங்களுக்குக் கீழே எண்ணைக்கறை மரவுரி விழுந்துகிடப்பதுபோலத் தெரிந்தது. கொட்டில்காவலனாகிய மர்க்கன் எழுந்து வந்து தலைவணங்கினான். “எப்படி இருக்கின்றன பசுக்கள்?” என்று

சுதமன் கேட்டார். மர்க்கன் “அனைத்தும் நலமாக உள்ளன” என்றான்.

சுதமன் கொட்டில்கள் வழியாக நடந்தார். பசுக்கள் அசைபோட்டுக்கொண்டு படுத்திருந்தன. அழிகளிலிருந்து புல்லை எடுத்து மென்றன. மணியோசைகள் ஒலித்துக்கொண்டிருந்தன. கால்மாற்றி நின்று திரும்பி அவரை நோக்கின. “இரவும் பகலும் கொட்டில்களிலேயே அவை நிற்கலாகாது. பசுநிலம் காணாதொழிந்தால் அவை உளச்சோர்வு கொள்ளக்கூடும்” என்றார். “ஆம் உத்தமரே, ஒவ்வொருநாளும் ஒருநாழிகைப்பொழுது அவற்றை அருகே காட்டுக்குள் நடக்க கூட்டிச்செல்கிறோம்” என்றான் மர்க்கன். இரு ஆயர்கள் வந்து இணைந்துகொண்டனர். சுதமன் “ஆனால் அவற்றை அயலார் நோக்கவேண்டியதில்லை. மானுட விழிகளில் தீய விசைகள் உண்டு” என்றார். “எவரும் நோக்குவதில்லை. அவை உலவிவருவதற்கான வழி நன்கு வகுக்கப்பட்டுள்ளது” என்றான் மர்க்கன்.

“பசும்புல் மட்டும்தானா உணவு?” என்று சுதமன் கேட்டார். அவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் வந்தபோதும் அதை கேட்டார் என அப்போது நினைவு வந்தது. “இல்லை, பருத்திக்கொட்டையும் சிறிதே புண்ணாக்கும் கொடுப்பதுண்டு… உணவு முதுஆயர்கள் எழுவரால் ஒவ்வொருநாளும் நோக்கி வகுக்கப்படுகிறது” என்றான் மர்க்கன். “இவற்றின் சாணி இங்கே போடப்படுவதில்லை அல்லவா?” என்றார். அதையும் பலமுறை கேட்டிருந்தார். “இல்லை, உத்தமரே. அதை உடனுக்குடன் அள்ளி வண்டிகளில் ஏற்றி நெடுந்தொலைவு கொண்டுசெல்கிறோம்” என்றான் மர்க்கன்.

கன்றுகள் தனியாக கட்டப்பட்டிருந்தன. சிறுகன்றுகள் மூங்கில் வளைப்புக்கள் கட்டப்படாமல் விளையாட விடப்பட்டிருந்தன. அன்னைப்பசுக்கள் தலையைச் சரித்து அவ்வப்போது கன்றுகள் நலமாக உள்ளனவா என நோக்கிக்கொண்டன. அவர் கன்றுகளை நோக்கியபடி நின்றார். பின்னர் “இவை இப்போது பால் கறப்பதில்லை அல்லவா? கன்றுகளுக்கு குடிக்கக் கொடுப்பதுதானே?” என்றார். “அவைதான் அருந்துகின்றன. ஆனால் முழுக்க அருந்தினால் அவற்றின் வயிறு புளித்துவிடுகிறது. அவை ஓடியாடவேண்டும்... கூட்டமாக நின்றால் விளையாடாமலிருக்க அவற்றால் இயலாது” என்றான் மர்க்கன்.

வேள்விக்கு ஆயிரத்தெட்டு வெண்காராம் பசுக்கள் தேவை என்றனர் வேள்வி கணித்த அந்தணர். நாடெங்கிலும் இருந்து அவை தேடிக் கொண்டுவரப்பட்டிருந்தன. அனைத்துமே இரண்டு கன்றுகளுக்குமேல் ஈனாதவை. நகம்போல் சிவந்த கொம்புகளும், இளநிற மூக்கும், செம்மையோடிய கண்களும், வெளிர்வண்ணக் குளம்புகளும் கொண்ட பால்வெண்ணிறப் பசுக்கள். காம்புகளும் நாக்கும் மட்டும் கருமையானவை. நெற்றியில், நெஞ்சில், விலாவில், பின்புறம் என ஐந்து சுழிகளும் அமைந்தவை. வாயில் புளிப்புவாடையும் சாணியில் அமிலவாடையும் இல்லாதவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்தெட்டு பசுக்களும் அவற்றுக்கு ஏதேனும் குறை வருமென்றால் இடமாற்றம் செய்யத்தக்க நூற்றெட்டு பசுக்களும் அக்கொட்டிலில் இருந்தன. மேலும் ஆயிரத்தெட்டு பசுக்கள் கங்கைக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்தன. தேவையென்றால் அவற்றை படகில் நான்கு நாழிகையில் வேள்விச்சாலைக்கு

கொண்டுவந்துவிடமுடியும். அவற்றைத் தவிர ஆநீர் கொள்வதற்குரிய நூறு கன்னிப்பசுக்கள் பிறிதொரு கொட்டிலில் தனியாக பேணப்பட்டன. சாணியில் உருளை மாறாதவை, ஆனால் ஐந்து காம்பும் எழுந்தவை என்பது அவற்றுக்கான இலக்கணம்.

அவர் பசுக்களின் வால்கள் சுழல்வதை நோக்கியபடி நடந்தார். "ஆயர்களின் கைகள் ஒவ்வொருநாளும் மூலிகை எண்ணையால் தூய்மை செய்யப்படுகின்றன" என்று மர்க்கன் சொன்னான். "நன்று" என்று அவர் சொன்னார். கூடுதலாக அங்கே என்ன செய்யவேண்டும் என அவருக்கு தெரியவில்லை. சுரேசர் அவரை எதற்கு அனுப்புகிறார் என அவர் உணர்ந்திருந்தார். அவர் தன் கண்களில் ஒன்று என அவரை அங்கே செலுத்துகிறார். எண்ணியிராதபடி எவரேனும் வந்து நேரில் நோக்கக்கூடும் என்ற அச்சத்தை ஒவ்வொருவரிடமும் உருவாக்குகிறார்.

அவர் யானைக்கொட்டிலுக்கு எவரை அனுப்பினோம் என எண்ணினார். பின்னர் அவ்வெண்ணத்தை அப்படியே கடந்து "நெய்ப்பசுக்கள் எவ்வண்ணம் உள்ளன?" என்றார். மாகேயன் "அவை இங்கில்லை, கங்கைக்கு அப்பால்" என்றான். "ஆம், அறிவேன்" என்றார் சுதமன். "அவற்றை தாங்கள் பார்க்கவேண்டும் என்றால்…" என்று மாகேயன் தயங்க "தேவையில்லை, வெறுமனே கேட்டேன்" என்றபின் சுதமன் தன் தேர் நோக்கி சென்றார். கன்னிப்பசுக்களையும் சென்று பார்த்துவிட்டுச் செல்லலாம். ஆனால் அதற்கு நீண்ட பொழுது ஆகும். அவர் செல்லவேண்டிய இடங்கள் மேலும் பல இருந்தன.

வேள்விச்சாலையிலிருந்து கங்கைவரை நீண்ட பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. கங்கைக்குள் ஆயிரக்கணக்கான செம்புக்கலங்களில் நெய் நிறைக்கப்பட்டு வாய்வட்டம் உருக்கிய ஈயத்தால் மூடப்பட்டு நீருக்குள் இறக்கப்பட்டிருக்கும். நீருள் குளிர்ந்து காத்திருக்கும் அனல். அவர் அவ்வெண்ணத்தால் விந்தையான ஓர் உளச்சுமையை அடைந்து பெருமூச்சுவிட்டார்.

சுதமன் மீண்டும் கோட்டைவாயிலுக்குள் நுழைந்தபோது அவர் களைத்திருந்தார். தேரிலேயே சற்று துயின்றார். அத்துயிலில் அவர் அவளை கண்டார். ஓர் ஆலமரத்தின் அடியில் வேர்முடிச்சின்மேல் கால்களை மடித்து தெய்வச்சிலை என அமர்ந்திருந்தாள். கீழிருந்து வேர்கள் எழுந்து அவள் உடலை மூடியிருந்தன. அவள் கூந்தல் பரவி நிலமெங்கும் ஓடியிருந்தது. அவர் முகத்தில் ஆலமர விழுதுகள் முட்டின. அவர் அவற்றை தள்ளித் தள்ளி விலக்கிச் சென்றபோது அவை அவள் கூந்தலிழைகள் என உணர்ந்தார். “தேவி!” என்றார். அவள் அவரை பார்க்கவில்லை. அவள் அமர்ந்திருந்த வேர்கள் அனைத்தும் நாகங்கள் என நெளிந்தன.

கோட்டைக்குள் நுழைந்தபோது எழுந்த ஒலிமாறுபாடு அவரை எழுப்பியது. “இடப்பக்கம் திருப்புக!” என அவர் ஆணையிட்டார். தேர் கோட்டையை ஒட்டிய படைக்கலநிலைகள் வழியாகச் சென்றது. புதியதாக அமைக்கப்பட்டிருந்த கற்பலகைச்சாலையில் ஓசையின்றி நீரோடையிலெனச் சென்றது. கோட்டைக்கு இணையாக அமைக்கப்பட்டிருந்த நூற்றெட்டு அன்னையரின் ஆலயங்கள் அனைத்திலும் விளக்குகள் எரிந்தன. அன்னையர் வெள்ளிவிழிகளுடன்,

பொன்முடிகளுடன், அவரவர்களுக்குரிய வண்ணங்களில் பட்டு ஆடையுடன் சாலையை நோக்கி அமர்ந்திருந்தனர்.

கோட்டையை ஒட்டி தாழ்வான குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒருவர் அமர்ந்துகொள்ளும் அளவுக்கே உயரமானவை. அவற்றின் கூரையும் கல்லால் ஆனது. ஆகவே அவற்றின் மேல் ஏறி கோட்டைக்கு செல்லமுடிந்தது. உள்ளே வீரர்கள் படுத்துத் துயின்றபடியும் அமர்ந்து சொல்லாடியபடியும் தென்பட்டனர். சாலையின் மறுபக்கம் மரத்தாலான பாடிவீடுகள் ஒன்றன்மேல் ஒன்று என அடுக்கப்பட்ட பெட்டிகள்போல ஏழு நிலைகளாக எழுந்திருந்தன. அவை முழுக்க படைவீரர்கள் செறிந்திருந்தனர். அஸ்தினபுரியின் படை பலமடங்கு பெருகியிருந்தது. காவல்படையே மும்மடங்காகிவிட்டிருந்தது.

கோட்டைச் சாலையில் இருந்து பிரிந்து விலகிச் சென்ற சாலை முழுக்கமுழுக்க படைகளுக்கு மட்டுமே உரியது. அதன் நுழைவாயிலிலேயே காவலர் இருந்தனர். அவருடைய தேரின் கொடியைக் கண்ட பின்னரும் நிறுத்தி அவர் முகத்தை நோக்கிய பின்னரே உள்ளே செல்ல ஒப்பம் அளித்தனர். அவர் கல்தரையில் தேர்ச்சகடம் உருளும் ஓசை உடன்வர அங்கிருந்த காவலர்களை நோக்கியபடி சென்றார். அவர்களில் யவனரும் பீதரும் தென்னவரும் கீழைநிலத்தவரும் கலந்திருந்தனர். குருதி வேறுபட்டவராயினும் சொல் ஒன்றால் மட்டும் அஸ்தினபுரிக்கு கட்டுப்பட்டவர்கள். இனி குருதியின் இடத்தை சொல்லே எடுத்துக்கொள்ளும் போலும் என எண்ணிக்கொண்டார்.

படைக்கலங்கள் முட்புதர் என செறிந்து நின்ற படைப்பிரிவு ஒன்று அடுத்த வாயிலில் அவரை தடுத்து மீண்டும் ஒருமுறை கூர்ந்து நோக்கி செலவொப்பியது. மூன்றாவது வளையம்

தடித்த மரத்தடிகள் ஊன்றப்பட்டு பலகைகள் அறைந்து வேலியிடப்பட்டிருந்தது. உள்ளே சென்றதும் அவர் ஒருவகை அமைதியிழப்பை உணர்ந்தார். கடுமையான காவல் என்பது கடுமையான சூழ்கையும் கூடத்தான். அவர் தேரிலிருந்து இறங்கியதும் இரண்டு யவனக் காவலர் அவர் உடைகளையும் கச்சையையும் தொட்டு நோக்கி ஏற்பறிவித்த பின்னரே அடுத்த கதவு திறந்தது.

உள்ளே நான்கு திசைப்புரவிகளும் நான்கு கொட்டில்களில் நின்றிருந்தன. மையமாக அமைந்த முற்றத்தின் நடுவே அஸ்தினபுரியின் அமுதகலக் கொடி பறக்கும் உயர்ந்த கம்பம். அதன் நான்கு மூலைகளில் கொட்டில்கள். ஒவ்வொன்றிலும் அந்த திசைக்குரிய தேவனின் கொடி ஒருபக்கமும் அத்திசை வென்ற பாண்டவ வீரனின் கொடி மறுபக்கமும் பறந்தது. ஒவ்வொரு கொட்டிலுக்கு அருகிலும் இரு குடில்களில் ஒன்றில் படைக்கலம் ஏந்திய காவலர்களும் இன்னொன்றில் அப்புரவியைப் பேணும் சூதர்களும் இருந்தனர்.

கொட்டில்தலைவரான யாமகேது அருகே வந்து பணிந்தார். “நான்கு புரவிகளும் நலமாக உள்ளன அல்லவா?” என்று சுதமன் கேட்டார். முடிந்தவரை அதை குரல் நிமிர்வுடன் கேட்கவேண்டும் என விழைந்தார். ஆனால் அவர் விழிகளை நோக்கி அதை கேட்கமுடியாது என்பதனால் நோக்கை முற்றம் நோக்கி பதித்திருந்தார். யாமகேது “நலமாக உள்ளன. ஒவ்வொரு நான்கு நாழிகைக்கும் ஒருமுறை அவற்றின் நலம் உசாவப்படுகிறது. உரிய உணவு அளிக்கப்படுகிறது. மருத்துவர்களே வந்து உழிச்சில் நிகழ்த்துகிறார்கள்” என்றார்.

கொட்டில்களின் திறப்புகள் அனைத்திலும் பட்டுநூலால் ஆன வலை கட்டப்பட்டு கொசுக்களும் ஈக்களும் உள்ளே

செல்லாமல் தடுக்கப்பட்டிருந்தன. கொட்டில்களுக்குள் கூரையிலிருந்து வண்ணம்பூசப்பட்ட ஈச்சையோலையால் ஆன விசிறிகள் தொங்க அதை வெளியே இருந்து இருவர் இழுத்து காற்றுவீசச் செய்துகொண்டிருந்தனர். புரவிகளுக்குரிய மூலிகைப்பூச்சும் தைலமும் மணத்தன. கொட்டில்களுக்குள் புகைந்துகொண்டிருந்த குந்திரிக்கம் நீலத் துகில்போல அலையடித்தபடி வெளியே சென்றுகொண்டிருந்தது.

சுதமன் ஒவ்வொரு கொட்டகையாக நின்று உள்ளே நின்றிருந்த புரவிகளைப் பார்த்தபடி சென்றார். தெற்குத் திசைப்புரவியின் கொட்டிலின்மேல் எமனுக்குரிய எருமைக் கொடியும் சகதேவனின் அன்னப்பறவைக் கொடியும் பறந்தன. அவருடைய மணத்தை உணர்ந்த புரவி எடைமிக்க குளம்புகளை எடுத்து வைத்து நின்ற இடத்திலேயே ஓடுவதுபோல காலெடுத்து வைத்தது. அதன் பிட்டம் துடித்து அதிர்ந்தது. அதன் தூக்கிய பின்இடதுகாலுக்கு அடியில் பெரிய லாடத்தின் வடிவம் தெரிந்தது. உள்ளே இருந்த சூதன் எழுந்து தலைவணங்கினான்.

சுதமன் நடந்து சென்றபடி கிழக்குக்கு உரிய இந்திரனின் மின்படைக் கொடி பறக்கும் கொட்டகையை பார்த்தார். அர்ஜுனனின் குரங்குக் கொடி அருகே பறந்தது. "புரவிகளுக்குரிய அணிகலன்களை அனுப்பிவைப்போம். அவற்றை நீங்களே வந்து பெற்றுக்கொள்ளவேண்டும். புரவிகளை அணிசெய்பவர்களுக்கு நேரில் நின்று வழங்கவேண்டும்" என்று அவர் சொன்னார். "அணிசெய்வோர் வேறு… அவர்களை. அணிச்சூதர்கள் என்போம்" என்று யாமகேது சொன்னார். "அவர்களின் கல்வியும் நெறியும் வேறு. அவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை. அவர்கள்

அணிச்சூதர்களின் ஒரு பிரிவு. அவர்களுடைய கல்வியை சமையக்கல்வி என்பர்.”

இடைமறித்து “ஆம், அறிவேன்” என்று எரிச்சலுடன் சுதமன் சொன்னார். “உங்கள் நினைவுக்காக சொல்கிறேன்... புரவிகள் எவ்வண்ணம் அணிசெய்யப்பட்டிருக்கவேண்டும் என்று முறையாக வகுக்கப்பட்டுள்ளது. அதை பட்டுத்திரையில் ஓவியங்களாக வரைந்து அளித்திருக்கிறார்கள். அணிசெய்பவர்கள் அதை நோக்கி அவ்வண்ணமே செய்யவேண்டும்.” யாமகேது “ஆம் அந்தணரே, அவ்வண்ணமே செய்வோம். அவ்வாணையை நீங்கள் அணிச்சூதர்களிடம் அறிவிக்கவேண்டும்” என்றார். சுதமன் எரிச்சலுடன் அவரை நோக்கி ஏதோ சொல்ல நாவெடுப்பதற்குள் எதையோ பார்த்துவிட்டார். அவர் பதறி “என்ன? என்ன அது?” என்று கூவி பின்னடைந்தார்.

“ஒரு நெளிவு... நாகம்!” என்று ஓர் ஏவலன் கூவினான். “நாகமா? இங்கா?” என்று கூவியபடி யாமகேது முன்னால் ஓடினார். அதற்குள் அவரும் பார்த்துவிட்டார். “ஆ! நாகம்... நாகம்... ஓடி வருக! ஓடி வருக!” என்று கூவினார். அங்கிருந்த ஏவலர்கள் கையில் கிடைத்த தடிகளுடன் அப்பகுதியை சூழ்ந்துகொண்டார்கள். கிழக்குத் திசைப் புரவி நிலையழிந்து துள்ளி கொட்டிலின் சிறிய இடத்திற்குள் சுற்றி வந்து கனைத்தது. அதன் செவிகள் விடைத்து முன்கோட்டியிருக்க மூக்குத்துளைகள் விரிந்து அசைந்தன. உடலெங்கும் மயிர்கள் எழுந்து மென்பரப்பாகும்படி மெய்ப்பு அடைந்து அது நடுங்கிக்கொண்டிருந்தது.

அனைவரும் கூடி கூச்சலிட்டபடி ஓடினர். கைக்குக் கிடைத்த கழிகளை எடுத்துக்கொண்டனர். புரவிகளின் தசைகளை

உருவிவிடுவதற்குரிய மரவுரிக்குவை ஒன்று கொட்டிலின் அருகே கிடந்தது. அதை ஏவலர் நீண்ட கழிகளால் அகற்றினார்கள். ஒவ்வொரு மரவுரிக்குவையாக அகல அகல சூழ்ந்திருந்தவர்கள் எச்சரிக்கை கொண்டு உறுமல்களையும் ஓசைகளையும் எழுப்பினர். ஒரு மரவுரிக்கு அடியில் நாகத்தின் சுருள்கள் தெரிந்தன. அது கழி பட்டதும் சீறி படமெடுத்தது. பெரிய அரசநாகம். அதன் தலை இடையளவு உயரம்கொண்டு எழுந்து நின்றது. மணி கோத்தது போன்ற செதில்கள் அசைய கழுத்தின் வெண்ணிறமான வளைகோடு நெளிந்தது. நா பறக்க மணிவிழிகளுடன் அது நோக்கியது.

வீரர்களில் ஒருவன் சற்றே அசைய அத்திசை நோக்கி பாய முற்பட்டது. “அடியுங்கள்…” என்று யாமகேது கூவ இருவர் கூச்சலிட்டபடி தடியுடன் பாய்ந்தனர். நாகம் அவர்கள் மேல் பாய்வதுபோல முன்னெழுந்தது. அவர்கள் பின்னடைந்த கணம் அது தன் உடலைச் சொடுக்கிச் சுழற்றி வெற்றுத்தரைக்குள் புகுந்ததுபோல் மறைந்தது. “மரவுரிகளை அகற்றுக!” என்று யாமகேது கூவினார். மூங்கில்களால் மரவுரிகளை அகற்றினர். அடியில் ஒரு சிறிய நிலப்பிளவு தெரிந்தது. கைவிரல்கள் உள்ளே செல்லக்கூடுமா என ஐயுறச் செய்யும் அளவுக்கு சிறிது. ஆனால் அது உள்ளேதான் சென்றிருந்தது. உள்ளே இருளுக்குள் அதன் விழிமணிகளை காணமுடியும் என்பதுபோல தோன்றியது. அந்நிலப்பிளவே ஒரு விழி எனத் தெரிந்தது.

யாமகேது “தீயிடலாம்… தீ” என்று கூவினார். சுதமன் “வேண்டாம்” என்றார். “புரவிகள் உள்ள இடம்… நாம் இத்தனை பாதுகாப்பாக வைத்திருக்கும்போது…” என்று யாமகேது சொல்லத்தொடங்க “எந்தப் பாதுகாப்பும் நாகங்களை தடுக்காது…

வேண்டாம்” என்று சுதமன் சொன்னார். “ஆனால்... இவை வேள்விப்பரிகள்” என்று யாமகேது மேலும் சொல்ல “என் ஆணை... அது விலகிச்செல்லட்டும்” என்றார் சுதமன். யாமகேது “என் கடமை எச்சரிப்பது” என்றார். “அது உள்ளே போகும் வழி இருக்கும்” என்றார் சுதமன். “தோண்டிப் பார்ப்போம்” என்றார் யாமகேது. “எதுவரை?” என்று சுதமன் கேட்டார். யாமகேது திகைப்புடன் நோக்கினார். “செல்க!” என்று சுதமன் கைகாட்டினார்.

யாமகேது தலைவணங்கி அகல, ஏவலர் முணுமுணுத்தபடி விலகினர். “அது இங்கேயே இருந்திருக்கிறது.” “காலடியில் உள்ளது நாகர்களின் உலகம்.” “அதன் எதிரி கீழ்த்திசைவென்ற பார்த்தன்.” “அப்புரவி ஏன் அதன் மணத்தை அறியவில்லை?” “அதற்கு தன்னை சுருட்டிக்கொள்ளத் தெரியும். தன் மணத்தையும் சுருட்டிக்கொள்ளும். உடலைப் பந்தாக்கி ஒரு விதைபோல ஆகி மண்ணில் கிடக்கும். நம் கால்களில் இடறவும் கூடும்.” “இங்கே கிடக்கும் இக்கூழாங்கற்கள் எல்லாமே நாகங்கள்தான். அவை நாகமென ஆகும் தருணம் அமையவில்லை.”

சுதமன் தன் உடலில் அதுவரை இருந்த எல்லா இறுக்கமும் விலக களைப்பும் சோர்வும் எடை என வந்து அழுத்துவதை உணர்ந்தார். கால்களும் கைகளும் அழுத்தமான பிசினில் சிக்கியிருப்பதுபோலத் தோன்றியது. அவர் தன் தேரை நோக்கி சென்றார். தேர் ஒருங்கட்டும் என தொலைவிலேயே கைகாட்டினார்.

# களிற்றியானை நிரை - 71

## பகுதி ஏழு : பெருசங்கம் – 3

சுதமன் அரண்மனைக்குள் நுழைந்ததுமே நேராக சுரேசரின் அறைக்குத்தான் சென்றார். சுரேசர் தன் அறையில் ஆணைகளை பிறப்பித்துக்கொண்டிருந்தார். நீண்ட நிரைகளாக நின்றிருந்த சிற்றமைச்சர்களும் அலுவலர்களும் அவரிடம் சென்று ஆணைகளைப் பெற்று விலகினர். எழுத்தர்களிடமும் கற்றுச்சொல்லிகளிடமும் உரிய ஓலைகளை பெற்றுக்கொண்டு வெளியே சென்றனர். சுதமன் வந்ததை சுரேசர் பார்த்துவிட்டிருந்தார். அவருடைய பதறிய முகத்தையும் அவர் பார்த்து புரிந்துகொண்டார். ஆனால் அவரால் அந்த அலுவலில் இருந்து விடுபட இயலவில்லை.

சுதமன் ஆணைகளை செவிகொண்டு அங்கேயே நின்றார். அவ்வாணைகள் வழியாகவே அப்பெருநகரம் அவர் சித்தத்தில் விரிந்தது. நகரின் எப்பகுதியின் மக்கள் எந்த நாளில் வேள்விச்சாலைக்கு வரலாம் என்று சுரேசர் வகுத்திருந்தார். ஒவ்வொரு குடியிலும் குடித்தலைவர் எழுவர் மட்டுமே பந்தலுக்குள் அமர ஒப்பப்படுவார்கள். எஞ்சியோர் வெளியே பெருமுற்றத்தில் அமர்ந்து வேதச்சொல்லை செவிகொள்ளலாம். அவிமிச்சம் பெற்று திரும்பிச் செல்லலாம். வேள்விப்புகையால் தலைதொட்டு வாழ்த்தப்படலாம்.

ஒவ்வொருநாளும் ஆண்களுக்கு முன்காலையும் பின்னிரவும் அளிக்கப்பட்டது. பெண்களுக்கு முன்உச்சிப்பொழுது முதல் முதல்மாலைப் பொழுதுவரை. ஒவ்வொருவரும் அணியவேண்டிய ஆடைகளும் அணிகளும் வகுக்கப்பட்டிருந்தன. பட்டும் பருத்தியும் மட்டுமே

அணியப்படவேண்டும். முனிவர்களன்றி எவரும் மரவுரி அணியலாகாது. தோலாடைகளையும் கம்பளி ஆடைகளையும் எவருமே அணிய ஒப்புதல் இருக்கவில்லை. வேளாண்குடிகள் பச்சை நிறமான ஆடைகள். ஆயர்குடியினர் மண் நிறம். மச்சர்கள் நீல நிறம். ஷத்ரியர் செந்நிறம். வைசியர் மஞ்சள். அந்தணர் வெண்மை. கருநிற அடை அணிய எவருக்கும் உரிமை இருக்கவில்லை.

ஒவ்வொருவரும் அவரவருக்குரிய குடிமுத்திரைகளை நெஞ்சில் பதக்கம் என அணிந்திருக்கவேண்டும். எவரும் தலையணிகள் என எதையும் அணிந்திருக்கலாகாது. பெண்கள் தலையில் மலர்சூடிக்கொள்ளலாம், அணிசெய்து கொண்டிருக்கலாகாது. ஆண்கள் மேலாடைகளை அணிந்திருக்கக் கூடாது. மலர்மாலைகளை தோளில் அணிந்திருக்கலாம். சந்தனம், குந்திரிக்கம் போன்ற மரத்திலெழும் நறுமணங்களுக்கு ஒப்புதல் உண்டு. விலங்கிலெழும் நறுமணங்களான கஸ்தூரி, கோரோசனை, புனுகுக்கு ஒப்புதல் இல்லை.

ஒவ்வொரு குடியினரும் தங்களை முறையாக அறிவித்து பதிவுசெய்து நாளும் பொழுதும் வகுத்துக்கொள்ள வேண்டும். வேள்விச்சாலைக்கு அவர்கள் வருகையில் தங்கள் குடியையும் குலத்தையும் அறிவிக்கும் கொடிகளை ஏந்தியிருக்கவேண்டும். சங்கும் மணியும் அன்றி வேறெந்த இசைக்கலங்களும் வேள்விநகருக்குள் முழக்கப்படலாகாது. வேதமுதல்வர்களாகிய தெய்வங்களையும் வேள்விக்காவலனாகிய அரசனையும் அன்றி எவரையும் வாழ்த்தி சொல்லெடுக்கலாகாது. அந்த நெறிகள் ஒவ்வொன்றையும் மீண்டும் மீண்டும் அறிவிக்கவேண்டியிருந்தது.

அறிவிக்குந்தோறும் அவற்றில் ஐயம் எழுந்துவந்தது. விலங்கிலெழும் நறுமணத்திற்கு ஒப்புதல் இல்லை என்று அறிவிக்கப்பட்டதுமே தென்கலிங்கக் கடற்கரையிலிருந்து பெயர்ந்துவந்த மச்சர்குடிகளில் ஒன்று சிப்பியில் இருந்து எடுக்கப்படும் ஒரு நறுமணத்திற்கு ஒப்புதல் உண்டா என்று வினவியது. ஆகவே விலங்கு என்பது அசைவுயிர் என மாற்றப்பட்டது. எனில் மண்ணிலிருந்து எடுக்கப்படும் உப்புகளை நறுமணமென அணியலாமா என்ற வினா எழுந்தது. நறுஞ்சுண்ணம் அணிய ஒப்புதல் இல்லை என்பதனால் அகழ்வுப்பொருட்களில் இருந்து எடுத்த எவையும் ஒப்பப்படாது என்று தெளிவுறுத்தப்பட்டது.

நகரமெங்கும் முந்நூறு அன்னநிலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குரிய அடுமனைகளும் அருகிலேயே கட்டப்பட்டிருந்தன. அவற்றுக்குரிய களஞ்சியங்களும் அருகிலேயே அமைக்கப்பட்டு அங்கிருந்து அடுமனைக்கு தனியான சாலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அடுமனைக்கும் வெவ்வேறு ஆட்சியாளர்கள் பொறுப்பளிக்கப்பட்டிருந்தனர். பத்து ஆட்சியாளர்களுக்கு ஒரு தலைவர். அவர்கள் அனைவருக்கும் பெருஞ்சூதர் சுபாகரர் கோன்மை கொண்டிருந்தார்.

அதேபோலவே களஞ்சியப்பொறுப்பாளர்களும் நிறுவப்பட்டு அவர்களுக்கு அமைச்சர் சம்பூதர் தலைமைகொண்டிருந்தார். இருவருடைய அறைகளும் அரண்மனையின் வலப்பக்கம் அருகருகே என அமைந்திருந்தன. அங்கே ஒவ்வொரு கணமும் தூதுப்புறாக்கள் வந்தமர்ந்து எழுந்து பறந்துகொண்டிருந்தன. செய்திவீரர்கள் புரவிகளில் வந்திறங்கி மீண்டுசென்று அவர்களின் முற்றம் நீர்ச்சுழி என சுழன்றுகொண்டிருந்தது.

களஞ்சியங்களின் இருப்பை அறிவிக்கும் பலகை ஒன்று சம்பூதரின் முன் அமைந்திருந்தது. ஒரு சூதர் அதன் முன் நின்று அவருக்கு வரும் செய்திகளை அதில் வரைந்துகொண்டே இருந்தார். களஞ்சியம் நிறைந்து ஒழிந்து நிறைந்துகொண்டே இருந்தது. அவர் அதை நோக்கி பதற்றமும் ஆறுதலும் கொண்டார்.

நகரின் போக்குவரத்தை ஒழுங்குசெய்யும் பொறுப்பு இளம்படைத்தலைவியான நிஷாகரிக்கு அளிக்கப்பட்டிருந்தது. நகரின் திரளை மேலிருந்து நோக்கும் பொருட்டு நூறு காவல்கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குமேல் இருந்த காவல்வீரர்கள் வெவ்வேறு வண்ணக்கொடிகளை அசைத்து நகரின் தெருக்களின் செய்திகளை அறிவிக்க, அரண்மனையின் மேலிருந்த காவல்மாடத்தில் அமர்ந்திருந்த பதினெட்டு ஓவியர்கள் அச்செய்தியின் அடிப்படையில் நகரின் தெருக்களை வரைந்தனர். சாலைகளில் நெரிசல்களை ஏழு வண்ணங்களில் அவர்கள் காட்டினர்.

அந்த ஓவியப்பலகையை நோக்கி நிஷாகரியின் அறைமுகப்பில் இருந்த ஓவியப்பலகையை வரைந்துகொண்டிருந்தான் இன்னொரு ஓவியன். நிஷாகரி எப்போது விழிதூக்கினாலும் அவள் கண்முன் நகரம் தெரிந்துகொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு தெருவையும் அவள் அங்கிருந்தே கண்டாள். தன் அறையிலிருந்தே நகரின் நெரிசலை ஆட்சிசெய்தாள். “அங்காடித்தெருவில் ஏன் அத்தனை திரள்? அவர்களை அங்கிருந்து அகற்றுக!” என அவள் ஆணையிட்டால் அந்த ஆணை உடனே கொடியசைவாக மேலே சென்றது. கொடிகளினூடாகவே சென்று சேர்ந்து

அக்கணமே அங்காடித்தெருவை நோக்கி குதிரைப்படைப்பிரிவு ஒன்று சென்றது.

நெருப்புக்காவலுக்கு தனி அமைச்சு செயல்பட்டது. நகரமெங்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூங்கில்மேடைகளில் கங்கையின் பெரிய படகுகள் ஏற்றிவைக்கப்பட்டு அவற்றில் நீர் ஊற்றி நிரப்பப்பட்டிருந்தது. அத்திரிகளும் காளைகளும் மேலும் நீரை மேலே ஏற்றிக்கொண்டிருந்தன. எங்கேனும் அனல் எல்லைமீறுமென்றால் அருகிருக்கும் படகிலிருந்து நீரை அள்ளி ஊற்றி அணைக்க அந்த மேடைகளுக்குக் கீழேயே எரிகாவலர் இருந்தனர். அவர்களுக்கு ஒளிவிடும் செந்நீலநிறத்தில் தலைப்பாகைகளும் ஆடைகளும் அளிக்கப்பட்டிருந்தன.

“அனைவர் தலைக்கும் மேலாக ஓர் ஏரி நின்றிருக்கிறது இன்று” என்று சூதன் இளிவரல் பாடினான். “அஸ்தினபுரியின் மேல் நாம் மழைமுகிலை சமைத்துள்ளோம்!” எரிகாவலர்கள் பதின்மர்குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். பத்து குழுக்களுக்கு நூற்றுவனும் பத்து நூற்றுவருக்கு ஆயிரத்தவனும் இருந்தனர். ஆயிரத்தவர்களை ஆள படைத்தலைவி பிராதை அமர்த்தப்பட்டிருந்தாள். “இங்கே பணியாற்றாமலிருக்கும் பொருட்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறாய் நீ” என்று அவளை சுரேசர் ஏளனம் செய்தார். அவள் பதற்றத்துடன் தன் முகவாய் வியர்வையை துடைத்து “ஆம், அமைச்சரே” என்றாள்.

நகரெங்கும் குடிநீர் வழங்குவதற்கான பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஊற்றுநிலைகள் அதற்கான அமைச்சால் ஆளப்பட்டன. கழிப்பறைகளுக்குரிய அமைச்சு அதற்கு அருகே அமைந்திருந்தது. கங்கையின் ஓரமாகவே வேள்விக்கு வரும் அரசர்கள் தங்குவதற்கான மாளிகைகள் மென்மரத்தால் கட்டப்பட்டன. ஒவ்வொரு மாளிகையுடனும் ஒரு படகுத்துறை

இணைக்கப்பட்டிருந்தது. பொருட்கள் வந்துசேரவும் பயணிகள் வந்திறங்கவும் வெவ்வேறாக நூற்றெட்டு படித்துறைகள் கங்கைக்கரையில் அமைக்கப்பட்டன. அங்கிருந்து வேள்விச்சாலைக்குச் செல்ல தனியாக அரசப்பாதை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. அப்பணிகளை துணையமைச்சரான புண்டரீகர் நோக்கி நடத்தினார்.

ஒவ்வொன்றும் தனித்தனியாக பிரிந்துகொண்டே இருந்தன. விலங்குகளைப் பேணும்பொருட்டு அமைக்கப்பட்டிருந்த அமைச்சின் பொறுப்பு படைத்தலைவர் பஞ்சஜித் தலைமையில் அமைந்திருந்தது. அது ஏழாக மேலும் பிரிக்கப்பட்டது. யானைகள், புரவிகள், காளைகள், பசுக்கள், அத்திரிகள், கழுதைகள், வேட்டைநாய்கள் என ஒவ்வொரு விலங்குக்கும் தனித்தனியான துணையமைச்சுகள் உருவாயின. அவற்றில் புரவிகளுக்குரிய அமைச்சு மேலும் ஐந்தாக பிரிக்கப்பட்டது. படைப்புரவிகள், பயணப்புரவிகள், பணிப்புரவிகள், அரசுப்புரவிகள், அணிப்புரவிகள் வெவ்வேறு பணித்தலைமைகளால் புரக்கப்பட்டன.

பிரியும்தோறும் பணிகள் எளிதாயின. ஆனால் ஒருங்கிணைப்பு மெல்லமெல்லத்தான் உருவாகி வந்தது. ஒவ்வொருநாளும் எழுந்து வந்துகொண்டிருந்த புதிய இடர்களைக் கண்டு சுதமன் சலிப்படைந்தார். சுரேசர் சிரித்தபடி “எந்த அமைப்பை உருவாக்கினாலும் முதலில் இடர்கள் எழுந்து வரும். முறையீடுகள் பெருகும். அவை நன்று. அந்த இடர்களுக்கு நாம் அளிக்கும் செல்வழிகள், அம்முறையீடுகளுக்கு நாம் காணும் தீர்வுகள் வழியாகத்தான் இவ்வமைப்புக்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான நெறிகள் உருவாகி வருகின்றன. இத்தனை சிக்கல்கள் எழுவதென்பது இந்த அமைப்புக்கள்

செயல்படுகின்றன என்பதற்கான சான்று. சிக்கல்கள் பெருகப்பெருக நெறிகள் பெருகும். நெறிகள் அமையுந்தோறும் சிக்கல்கள் குறையும். பின்னர் ஆணைகளின்றியே இவை இயங்கலாகும். ஆகவே நாம் இப்போது செய்துகொண்டிருப்பது ஆளும் பணி அல்ல அமைக்கும் பணி" என்றார்.

சுரேசரிடம் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை முறையிட்டனர். ஒவ்வொருவருக்கும் தங்கள் கோன்மையின் எல்லை என்ன என்பதே சிக்கலாக இருந்தது. அவர்களின் பணியெல்லை அக்கோன்மை எல்லையைக் கடந்து விரிந்திருந்தது. ஆகவே அவர்கள் இன்னொருவரின் பணியெல்லைக்குள் தலையிட்டனர். அது ஆணவமோதலாகியது. ஆணைக்குழப்பங்களை உருவாக்கியது. மேல்கீழ் அடுக்கை குலைத்தது. ஒருவருடன் ஒருவர் ஒத்திசைந்தே ஒவ்வொன்றையும் செய்யவேண்டியிருந்தது. ஆனால் இசைவு என்பதற்கும் பணிதல் என்பதற்கும் இடையே நுட்பமான வேறுபாடே இருந்தது.

சுரேசர் ஒவ்வொன்றுக்கும் தெளிவான ஆணைகளை பிறப்பித்தார். ஒருவரின் கோன்மையின் எல்லையை இன்னொருவர் கடப்பதாக இருந்தால் அதை முறைப்படி அவருடைய ஒப்புதலைப் பெற்று செய்க, அதை ஒரு பணிக்கென மட்டுமே செய்க, எப்போதைக்குமென கொள்ளாதொழிக, ஒவ்வொரு செயலையும் முறைப்படி பதிவுசெய்க என்று அவர் மீள மீள சொல்லிக்கொண்டிருந்தார். தன் நோக்கத்தை தெளிவுற உணர்த்தாமல் பிறிதொருவரின் எல்லைக்குள் நுழைவது ஒழிக என ஆணையிட்டார்.

அவர் இறுதியாக இட்ட ஆணை நீர்நிலைகளில் இருந்து தன் கட்டுப்பணிக்கு ஓடை ஒன்றை வெட்டிக்கொண்ட

ஆட்சியாளருக்கு. அவர் அதை நீர் மேலாட்சி செய்பவரிடம் சொல்லவில்லை. “நீரின்றி எப்படி எழுப்புவது?” என்று அவர் மீளமீள கேட்டுக்கொண்டிருந்தார். நெறிகளை சுரேசர் மீண்டும் ஒருமுறை அவரிடம் சொன்னார். அவர் முகம் அதை விளங்கிக்கொண்டதுபோல காட்டவில்லை. “ஆணை” என்று மட்டும் சொல்லி விலகினார். சுரேசரின் தொண்டை அடைத்திருந்தது. அவர் சற்றே இளைப்பாறினார். ஓர் ஏவலன் அவருக்கு சுக்கு போடப்பட்ட இளவெந்நீரை அளிக்க அதை அருந்தினார்.

அவர் சாய்ந்துகொண்டதும் சுதமன் அருகே சென்று நின்றார். “சொல்க!” என்றார் சுரேசர். “நான் புரவிக்கொட்டிலுக்கு சென்றிருந்தேன்” என்றார் சுதமன். “அங்கே முழுமையான காவல் இருந்தது. ஆனால் நான் அங்கே ஓர் அரசநாகத்தை கண்டேன்.” நிகழ்ந்ததை அவர் சுருக்கமாக சொல்லி முடித்தார். சுரேசர் முகவாயைத் தடவியபடி அதை கேட்டுக்கொண்டிருந்தார். அவர் விழிகள் மங்கலடைந்திருந்தன. “நாகங்களை தடுக்க இயலாது. அந்நிலையில் அவற்றின்மேல் ஒரு போர் தொடங்குவதில் பொருளில்லை” என்று சுதமன் சொன்னார். “ஆனால் நாம் அவற்றை அஞ்சியாகவேண்டும். அவர்கள் நம்மை அழிக்குமிடத்திலேயே இன்றும் இருக்கிறார்கள்.”

“என்ன செய்யலாம் என நினைக்கிறீர்?” என்றார் சுரேசர். “அவர்களுக்கான இடத்தை நாம் அளித்தாகவேண்டும். அவர்களின் காண்டவப் பெருங்காட்டை நாம் அழித்துவிட்டோம். அவர்கள் வாழ்ந்த நகர்கள் பெரும்பாலும் அழிந்துவிட்டன. அவர்களுக்கு என்ன தேவை என்று அரசர் உசாவவேண்டும். அவர்கள் நிறைவுறும் பிழைநிகர்ச்

செயல்பாடுகளை இயற்றவேண்டும். இந்த வேள்வியின்போதே அது நிகழவேண்டும்” என்றார் சுதமன். சுரேசர் “ஆம், அதை நான் எண்ணிக்கொண்டிருந்தேன்” என்றார். “நான் இந்த அரண்மனையிலேயே இருமுறை நாகங்களை பார்த்துவிட்டேன்.”

சுதமன் “நாம் அரசரிடம் சொல்வோம். நாம் அவர்களை வெல்ல இயலாது. அவர்களின் உலகம் நம் காலடிக்குக் கீழே இருக்கிறது” என்று சொன்னார். சுரேசர் “அரசர் அதை எவ்வண்ணம் ஏற்றுக்கொள்கிறார் என்று அறியேன். ஆனால் நம் பணி அதை அவரிடம் சொல்வதே” என்றார். சுதமன் “நகரில் சார்வாகர்கள் ஊடுருவியிருக்கிறார்கள். நகர்ச்சதுக்கங்களிலேயே அவர்கள் நிறைந்திருக்கிறார்கள். காபாலிகர்களும் காளாமுகர்களும் மாவிரதர்களும் பாசுபதர்களும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் நம் மீது வஞ்சமோ பகையோ கொண்டிருந்தால்கூட அவர்களைப் பணிந்து அவர்களின் வாழ்த்துக்களையே பெற்றுக்கொண்டிருக்கிறோம். நாகர்களையும் அவ்வண்ணமே கருதவேண்டும்” என்றார்.

சுரேசர் எழுந்துகொண்டு “வருக, நாம் அரசரிடம் நேரிலேயே பேசுவோம்!” என்றார். சுதமன் திகைத்து “நானா! அரசரிடம் நான்...” என்று சொல்ல “நீர் வரவேண்டும். இறுதியாக பாம்பைக் கண்டவர் நீர்” என்றார் சுரேசர். ஒற்றன் ஒருவன் தலைவணங்கினான். “சொல்க!” என்றார். “அரசர்களுக்கு தூதுசெல்லவேண்டிய அந்தணர்களின் நிரையை அறுதிசெய்திருக்கிறார் இளவரசர் யுயுத்ஸு. அதை தாங்கள் ஒருமுறை நோக்குவது நன்று” என்றான். “ஆம், அதை இன்றே

முடிவுசெய்யவேண்டும்” என்றபின் சுரேசர் “வருக” என்று நடந்தார். தயக்கத்துடன் சுதமன் உடன் சென்றார்.

யுதிஷ்டிரனின் அறைக்குள் ஏற்கெனவே பலர் இருந்தனர் என்பது கதவு திறந்தபோது எழுந்த உரையாடல் ஓசையிலிருந்து தெரிந்தது. அவர்களையும் உள்ளே வரும்படி அவர் ஆணையிட்டார். உள்ளே நுழைந்ததும் சுரேசர் தலைவணங்கி நிற்க “அமர்க”! என்று கைகாட்டிவிட்டு யுதிஷ்டிரன் சகதேவனிடம் திரும்பினார். அப்பால் நகுலன் அமர்ந்திருந்தான். நான்கு அரசத்தூதர்கள் அச்சிறிய அறைக்குள் இருந்தனர். யுதிஷ்டிரன் ஏற்கெனவே சீற்றத்துடன் சொல்லிக்கொண்டிருந்ததை மேலும் சீற்றத்துடன் தொடர்ந்தார்.

“எதுவும் பழைய முறைப்படி நடந்தாகவேண்டும் என்பதில்லை. முறைமை என்பது உளம்கோணாதபடி அனைத்தும் நிகழவேண்டும் என்பதற்காகவே… வரவிருக்கும் அரசர்களின் படிநிலை என்ன என்பதை அவர்கள் முடிவுசெய்யவேண்டியதில்லை. அவர்கள் அதை நமக்கு அறிவிக்கவும் வேண்டியதில்லை. இந்த மச்சநாட்டு அரசன் மந்தரன் என்ன சொல்கிறான்? அவன் நம் அவைக்கு வந்து வேள்விமண்டபத்தில் அமரவேண்டும் என்றால் நாம் அவனை பணியவேண்டுமா என்ன?” என்றார்.

நகுலன் சுரேசரை நோக்கிவிட்டு “அவ்வாறல்ல. அவன் சொல்வது மச்சர்குலத்தில் அவனுக்கு ஒரு முன்நிலை முன்பே உள்ளது என்று. அதை கருத்தில்கொண்டு நாம் அவனை அழைத்திருக்கவேண்டும் என்கிறான்” என்றான். “ஆனால் அவனைவிட பிரஜங்கன் மேலும் பெரிய படைவல்லமை

கொண்டவன். அவனை நாம் இரண்டாம்நிலையில் வைக்க முடியாது.” யுதிஷ்டிரன் “ஏன்? எவரை எங்கே வைப்பதென நாம் முடிவுசெய்வோம். அவன் வரவில்லை என்றால் அவனை கட்டி இழுத்துவர நம் படைகள் செல்லட்டும். முடிசூடி வர மறுத்தான் என்றால் தளையிடப்பட்டு நகர்நுழையட்டும்” என்று கூவினார்.

சகதேவன் “மூத்தவரே, இந்த வேள்வியை நடத்துவதைப் பற்றிய பேச்சு அல்ல இது. இங்கே நாம் பாரதவர்ஷத்தை ஒருங்கிணைத்து எப்படி ஆட்சி செய்யப்போகிறோம் என்பதைப் பற்றியது. இவர்கள் பாரதம் முழுக்க பரவியிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் ஆற்றல்பெற்று எழுந்து கொண்டிருக்கிறார்கள். வரும்காலம் முழுக்க இவர்களுடன் நாம் போரிட்டுக்கொண்டே இருக்கமுடியாது. போர் வழியாக எவரும் எந்த நாட்டையும் நிறுவி நிலைநாட்ட இயலாது” என்றான். “இவர்கள் நம்மை தலைமை என ஏற்கவேண்டும். அதற்கு இவர்களுக்கு நாம் பயனுள்ள சிலவற்றை அளிக்கவேண்டும், அவர்கள் நமக்கு அதற்கு விலையாகவே ஏற்பை அளிப்பார்கள்.”

“படை இன்றி ஏற்பில்லை” என்றார் யுதிஷ்டிரன். “ஆம், ஆகவேதான் நாம் தலைமைகொள்கிறோம்” என்றான் சகதேவன். “ஆனால் படையை மட்டும் கொண்டு ஏற்பை உருவாக்க முடியாது. இவர்கள் நம்மை ஏற்பது நாம் புதிய வேதத்தின் காவலர்கள் என்பதனால். இவர்களை நாம் இனிவரும் வரலாற்றில் நிலைநிறுத்துவோம் என்பதனால். சென்ற யுகத்தில் பரசுராமரின் மழு இயற்றியதை இன்று இளைய யாதவரின் ஆழி இயற்றுகிறது. எழுகின்றன பலநூறு புதிய ஆட்சியாளர்களின் குடிகள். அவர்களை நாம்

ஒருங்கிணைக்கவேண்டும் என்றால் அவர்களுடன் ஒருபோதும் நாம் பூசலிடக்கூடாது.”

“அவர்கள் நம்மை அஞ்சவேண்டும். ஆனால் எதிர்க்கக் கூடாது. நாம் அவர்களில் ஒருவரை வெல்லலாம், தண்டிக்கலாம். ஆனால் அது பிறரிடம் அச்சத்தை மட்டுமல்ல வஞ்சத்தையும் உருவாக்கும். வஞ்சம் அச்சத்தை கடக்கச் செய்யும் ஆற்றல் கொண்டது. வஞ்சமில்லாத அச்சமே நீடிப்பது” என்று சகதேவன் சொன்னான். “அவர்களில் ஒருவரை நாம் அழித்தால்கூட அந்த நிலை தங்களுக்கும் எதிர்காலத்தில் அமையும் என அவர்கள் அஞ்சுவார்கள். அதன்பொருட்டு திட்டமிடுவார்கள். தங்களை ஒருங்கு திரட்டிக்கொள்வார்கள். இன்று அவர்கள் திரளவில்லை. அவ்வாறு திரண்டார்கள் என்றால் பாரதவர்ஷம் முழுக்க செலுத்தும் படையாற்றல் நம்மிடம் இல்லை, எவருக்கும் அது அமையமுடியாது.”

யுதிஷ்டிரன் சலிப்புடன் “என்ன செய்யவேண்டும் என்று சொல்” என்றார். சகதேவன் “பூசல் நிகழவேண்டும் என்றால் அவர்களுக்குள் நிகழட்டும். பிரஜங்கன் மந்தரனை சிறைப்பிடித்து அழைத்துவரட்டும்” என்றான். “ஆம், அதைச் செய்ய ஆணையிடுகிறேன்” என்றார். “அவர்கள் பூசலிட்டால் நாம் இன்னொருவரைக்கொண்டு இருவரையும் வெல்வோம்.” சுரேசர் உள்ளே நுழைந்து “ஒரு சொல், அரசே” என்றார். “சொல்க!” என்று யுதிஷ்டிரன் திரும்பினார். “அதை மறுதிசையில் செய்யலாமே? மூத்த குடியினனான மந்தரன் சென்று ஆற்றல்மிக்கவனாகிய பிரஜங்கனை முறைப்படி வேள்விக்கு அழைத்துவரட்டும். மந்தரனுக்கு உரிய மதிப்புடன் அரசரின் ஓலை செல்லட்டும், பிரஜங்கனை அரசர் பொருட்டு அவரே சென்று அழைத்துவரவேண்டும் என்று.”

யுதிஷ்டிரன் "ஏன், அதனால் என்ன?" என்றார். "அரசே, மந்தரன் நாடுவது குடிப்பெருமை. அரசரே தன் பொருட்டு அவனிடம் செல்லும்படி சொன்னால் அவன் அதை இழப்பதில்லை. பிரஜங்கனுக்குத் தேவை, குடியின் மெய்யான தலைமை. அதை அவனும் பெறுகிறான்" என்றார் சுரேசர். சகதேவன் "அதுவே உகந்தது. அவர்கள் தாங்களே தங்கள் அமைப்பை உருவாக்கிக்கொள்ளவேண்டும். தங்கள் முறைமைகளை அவர்களே நிலைநாட்டவேண்டும். நாம் அந்த அமைப்பும் முறைமையும் நமக்கு உகந்ததாக உள்ளனவா என்று மட்டும் நோக்கினால் போதுமானது, இல்லையென்றால் அவர்களின் விசையைக்கொண்டே அதை நமக்குரிய வகையில் சற்றே திருப்பிக்கொண்டால் மட்டும் போதும்" என்றான்.

நகுலன் "அவர்கள் ஏற்கெனவே குலமுறைகளையும் நெறிகளையும் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றியமைப்பதென்றாலும் அவர்களே செய்யவேண்டும். நாம் அதில் நம் ஆற்றலை செலுத்தலாகாது" என்றான். யுதிஷ்டிரன் "எனில் அவ்வாறே அகுக!" என்றார். சகதேவன் "ஆணைகளை பிறப்பிக்கிறோம்... செல்க!" என்றான். அவர்கள் ஒவ்வொருவராகச் சென்றபின் யுதிஷ்டிரன் திரும்பி சுதமனை நோக்கினார். "இவர் துணையமைச்சர் அல்லவா?" என்றார். "ஆம்" என்று சுரேசர் சொன்னார். "இவர் இன்று ஒரு செய்தியுடன் வந்தார். நான் ஏற்கெனவே அறிந்த செய்திதான். ஆனால் இதை அவர் வந்து சொன்னபோதுதான் நான் முடிவை எடுத்தேன்" என்றார். "சொல்க!" என்று யுதிஷ்டிரன் சொன்னார். நகுலன் தன்னை கூர்ந்து நோக்குவதைக் கண்டு சுதமன் திகைத்து தலைகுனிந்தார்.

சுரேசர் “சொல்க!” என்றார். சுதமன் திடுக்கிட்டு சூழ நோக்கியபின் எச்சில் விழுங்கி “நான் வேள்விப்பரிச்சாலையில் இன்று ஓர் அரச நாகத்தை கண்டேன்” என்றார். சொல்லவேண்டிய அனைத்தையும் சொல்லிவிட்டதை உணர்ந்து வாய் உலர்ந்து நின்றார். யுதிஷ்டிரன் விழிகளைச் சுருக்கி “அங்கே காவல் இல்லையா?” என்றார். “காற்றுக்கும் நாகத்திற்கும் காவல் இல்லை என்பார்கள்” என்று சுதமன் சொன்னார். “நாகர்கள் நுழைய முடியாத இடம் என ஒன்றில்லை. அந்த நாகம் தற்செயலாக வந்திருக்கலாம். ஆனால் அது இளையவர் பார்த்தனின் பரியின் அருகே சென்றமை எனக்கு ஐயத்தை உருவாக்குகிறது.” சுரேசர் “நானும் அவ்வண்ணமே எண்ணுகிறேன்’ என்றார்.

நகுலன் “அந்தக் குதிரை நாகத்தின் மணத்தை உணரவில்லையா?” என்றான். “இல்லை” என்றார் சுதமன். “எனில் அது வெறும் நாகம் அல்ல” என்று நகுலன் சொன்னான். “அது இலக்கு கொண்டது.” யுதிஷ்டிரன் “நாம் என்ன செய்யமுடியும்? பாரதவர்ஷத்தையே வென்றிருக்கிறோம். நாம் இவர்களை வெல்லமுடியாதா என்ன?” என்றார். “முடியாது, தெய்வங்கள்கூட நாகர்களை வெல்லமுடியாது” என்று நகுலன் சொன்னான். “என்ன செய்வது? சொல்லுங்கள், அவர்களை அடிபணியவேண்டுமா? மைந்தரையும் தந்தையரையும் உற்றாரையும் இழந்து நாம் பெற்ற அனைத்தையும் அவர்களுக்கு அளித்து முடிகீழே வைக்கவேண்டுமா?”

சுரேசர் “தொல்கதைகள் அனைத்தும் காட்டுவது ஒன்றே, நாகர்களை வெல்லலாம், ஆனால் அழிக்கமுடியாது” என்றார். “அவர்களை வென்றபின் நம்முடன் சேர்த்துக்கொள்ளலாம். ஆழியமைந்தவனின் படுக்கைபோல, அனல்வண்ணனின்

அணிபோல, ஆறுமுகனின் அடித்துணைபோல, அன்னையின் விரல் ஆழிபோல நம்முடன் அவர்களும் இருக்கவேண்டும், அது ஒன்றே வழி.” யுதிஷ்டிரன் “அவர்களா, இங்கா?” என்றார். சுரேசர் “ஆம், இங்குதான். அவர்களுக்கான இடத்தை அளித்தாகவேண்டும்” என்றார். “எப்படி? அவர்களை நாம் அழித்திருக்கிறோம். அவர்களின் வஞ்சம் நம்மைச் சூழ்ந்துள்ளது” என்றார் யுதிஷ்டிரன்.

“ஆம், ஆனால் குருக்ஷேத்ரம் அனைத்து வஞ்சங்களும் எரிந்தணைந்த சிதை. அவர்களுக்கும் அவ்வாறே. அவர்களுடன் நாம் பேசுவோம். அவர்களுக்குரியனவற்றை அளிப்போம்.” யுதிஷ்டிரன் “எப்படி, எவரினூடாக?” என்றார். “இரு வழிகள் நமக்குள்ளன” என்றார் சுரேசர். “மூன்றாமவரின் துணைவி உலூபியின் குலம் இன்றும் நமக்கு அணுக்கமானது. நாகர்களின் தலைமையை அவர்களுக்கு அளிப்போம். அரவானுக்கு நம் நகரில் ஒரு ஆலயம் எழட்டும். அதற்கு உலூபியின் குடியினர் வந்து அவர்களின் முறைப்படி பூசனை செய்யட்டும். அந்த ஆலயமே அவர்களுக்குரியதாகட்டும். அரசர் தன் மணிமுடியுடன் சென்று அவர்களின் தெய்வத்தின் முன் பணியட்டும்... அந்த ஆலயம் வழியாக இந்த நகரில் அவர்கள் விழையும் இடத்தை அளிக்கமுடியும்.”

யுதிஷ்டிரன் “ஆம், அது ஒரு வழிதான்” என்றார். “அரவானின் இளையோன் நாகர்குலத்து அரசனாக மணிமுடி சூடட்டும். அவனுக்கு நம் அவையில் ஷத்ரியர்களுக்கு நிகரான இடத்தை அளிப்போம். அவன் குலத்துடன் உறவுகொள்ளும் நாகர் குலங்கள் அனைத்தும் நமக்கு குருதியுறவு கொண்டவை என அறிவிப்போம்” என்று சுரேசர் தொடர்ந்தார். “நம் குடியில் இருந்தே அவனுக்கு இளவரசியரை அளிக்க முடிந்தால் மேலும்

நன்று.” யுதிஷ்டிரன் புன்னகைத்து “அதைத்தான் நிஷாதருக்கும் அரக்கருக்கும் அசுரருக்கும் ஏற்கெனவே செய்துகொண்டிருக்கிறோம்” என்றார். “ஆம், அதை நான் குருதிப் பங்கீடு என்பேன். இன்று நாம் செய்யவேண்டியது அதையே” என்றார் சுரேசர்.

“நமக்கு இன்னொரு தொடர்பும் உள்ளது. அங்கநாட்டரசர் கர்ணன் நாகர்களின் தலைவன் என்று இன்று போற்றப்படுகிறார். நாகபாசன் என அவரை அவர்கள் ஆலயம் அமைத்து வழிபடுகிறார்கள். நம் ஆலயங்கள் அனைத்திலும் நாகபாசனுக்கு கருவறைகள் அமையட்டும். நம் அரசகுடியின் பூசனைக்குரியவராக அவர் ஆகுக! நம் வேள்வியில் அரசகுடியின் மூதாதையருக்கு அளிக்கப்படும் அவியன்னப் படையலில் நாகபாசனுக்கும் ஒரு பங்கு அளிக்கப்படட்டும்.”

யுதிஷ்டிரன் “அது வழக்கம்தான்… மூத்தவர் எங்கள் முன்னோர் நிரையில் அமர்ந்திருப்பவர்” என்றார். “அது நாகபாசன் என்னும் பெயரால் அளிக்கப்படவேண்டும்” என்று சுரேசர் சொன்னார். “அதை அங்கநாட்டை ஆளும் கர்ணனின் கடைமைந்தரே முன்னின்று செய்யட்டும். அங்கநாட்டு அவையில் நாகர்குலத்தார் எவரும் இடம்பெறலாம் என நாம் அறிவிக்கலாம். காண்டவக் காடு குறித்த வஞ்சத்தால் நம் அவையில் அமரத் தயங்குபவர்கள் அவர் அவைக்கு செல்லட்டும்.”

யுதிஷ்டிரன் வாய்விட்டு நகைத்து “அதாவது அனைத்து இடங்களிலும் நான் முடிதாழ்த்தவேண்டும்” என்றார். “ஆம் அரசே, தாழ்த்துவதனூடாகவே இனி உங்கள் முடி உயரமுடியும்” என்றார் சுரேசர். “நான் குருக்ஷேத்ரத்தில் பெற்ற

வெற்றியை இவ்வண்ணம் அனைத்துக் குலங்களுக்கும் பகிர்ந்தளிக்கிறேன், நன்று!” என்றார் யுதிஷ்டிரன்.

சுரேசர் “அதுவும் மெய்யே” என்றார். “வெற்றி என்பது செல்வம், அதை பகிர்ந்தே ஆகவேண்டும். இதோ ராஜசூயத்தின்போது நாம் கொண்ட செல்வம் அனைத்தையும் பகிர்ந்தளிக்கவிருக்கிறோம். அதற்கு முன் நீங்கள் சூடிய மணிமுடியை பங்கிடுவோம். ஐயம் வேண்டாம், பகிரப்பகிர முடிபெருகும். அது அரசியல்நெறி” என்றார். யுதிஷ்டிரன் “ஆம், அவ்வண்ணம் கற்றிருக்கிறேன்” என்றார். சுரேசர் தலைவணங்கி எழுந்துகொண்டார். சுதமனும் தலைவணங்கினார். யுதிஷ்டிரன் அவரிடம் தனிப்பட்ட முறையில் புன்னகைக்க அவர் உள்ளம் மலர்ந்தது. அறையை விட்டு வெளியே வந்தபோது அவர் இனிய பெருமூச்சைவிட்டு உடல்தளந்தார்.

# களிற்றியானை நிரை - 72

### பகுதி ஏழு : பெருசங்கம் – 4



சுதமன் தன் அறைக்கு மீண்டபோது உளநிறைவால் முகம் மலர்ந்திருந்தார். இடைநாழியினூடாக தனியாக மெல்லிய குரலில் தானறிந்த பழம்பாடல் ஒன்றை முனகியபடி நடந்தார். அவரை வழியில் கண்ட சம்வகை “என்ன, முகமெங்கும் மகிழ்ச்சி?” என்றாள். “இனி செய்யவேண்டியதொன்றும் இல்லை. அனைத்தும் அவற்றுக்குரிய இடங்களில் சென்றமைந்துவிட்டன” என்று சுதமன் சொன்னார். “இன்னும் சிக்கல்கள் உள்ளன, ஆனால்

அனைத்தும் முறையமையும் என்னும் நம்பிக்கை வந்துவிட்டது.”

ஆனால் சம்வகை “அது ஓர் உளமயக்கு. நாம் செய்த ஒரு பணி சரியாக அமைந்துவிட்டதென்றால் இங்கே அனைத்தும் சரியாக அமைந்துவிட்டது என்னும் நிறைவை நாம் அடைந்துவிடுகிறோம். எதிலாவது ஒரு பிழையை கண்டடைந்து அதை சீரமைத்துவிட்டோம் என்றால் பலநூறு பிழைகளை விட்டுவிடுகிறோம்” என்றாள். சுதமன் எரிச்சலுடன் “இது முடிவேயில்லாத அலைபாய்தல். இந்த அலைபாய்தல் நமக்கு தேவையாகிறது. எங்கோ ஏதோ இடர் இருந்துகொண்டிருக்கிறது என்று எண்ணிக்கொண்டால்தான் நாம் நமக்குரிய மைய இடத்தில் நிறைந்து அமைய முடியும். இடர் இல்லையென்றாலும் உருவாக்கிக் கொள்வோம்” என்றார்.

சம்வகை சிரித்து “இருக்கலாம். ஆனால் என் உள்ளம் அப்படித்தான் எண்ணிக்கொண்டிருக்கிறது. அது பிழையாக இருந்தால் நன்று. ஆனால் பொய்யான நிறைவால் எதையேனும் நான் தவறவிட்டுவிட்டேன் என்றால் அதன்பொருட்டு வருந்தவேண்டியிருக்கும்” என்றாள். சுதமன் “மெய்தான்” என்றார். “ஆனால் எனக்கு இப்போது ஒரு பெரிய நிறைவு உருவாகியிருக்கிறது. இதில் திளைக்க விழைகிறேன். ஆகவே இதை தவறவிட விரும்பவில்லை” என்றார். சம்வகை “நாம் இருவரும் இரு வழிகளில் செல்பவர்கள்” என்றாள்.

சுதமன் சற்று தணிந்தார். “இதுவரை பலவகையான இடர்களை நான் எண்ணி கணக்கிட்டுக்கொண்டிருந்தேன். ஷத்ரிய அரசே மீண்டும் எழுகிறது என்னும் ஐயமும் கலக்கமும் கொண்ட நிஷாதரும் கிராதரும் அரக்கரும் அசுரரும் சிலர் இருந்தனர். அவர்கள் ஏதேனும் செய்யலாம் என்று தோன்றிக்கொண்டே

இருந்தது. நாகர்களை உண்மையாகவே அஞ்சிக்கொண்டிருந்தேன், ஆகவே அவர்களைப் பற்றி எண்ணவே இல்லை. இப்போது எல்லாமே சரியாக அமைந்துவிட்டது. இங்கே இனி புறக்குடியினரோ நாகர்களோ எந்த இடரையும் செய்யப்போவதில்லை. ஐயமே வேண்டியதில்லை” என்றார்.

“ஏனென்றால் அனைவரையும் அணைத்து அருகமையச் செய்யும் வழிமுறையையே அரசர் கைக்கொள்ளவிருக்கிறார். இந்த நகரம் இனி அனைவருக்கும் உரியதென்றாகும். இங்கே எவரும் எதிரியில்லை என்ற நிலை வரும். ஆகவே எந்த அச்சமும் தேவையில்லை.” அதை சொல்லி முடித்தபோதே அதிலிருந்த பொய்மை தெரிய அவர் முகம் சிவந்தார். விழிகளை திருப்பிக்கொண்டு “மெய்யாகவே அவ்வண்ணம்தான் நிகழும்... தெய்வங்கள் நம்முடன் இருக்கும்” என்றார்.

சம்வகை புன்னகைத்து “அவ்வண்ணமென்றால் நன்று” என்றாள். “எனில் சொல்க, நீங்கள் எதிர்பார்ப்பது என்ன வகையான இடர்?” என்று அவர் கேட்டார். “அதை அறிந்தால் உடனே அதை தீர்க்கச் சென்றிருக்கமாட்டேனா?” என்றாள் சம்வகை. “நான் கருதும் இடர் என்ன என்று எவ்வகையிலும் என்னால் எண்ண முடியவில்லை. ஆனால் ஏதோ ஓர் இடர் எங்கோ உள்ளது என்று தோன்றிக்கொண்டே இருக்கிறது” என்றாள்.

“ஏன்?” என்று அவர் கேட்டார். “இந்த மங்கலம், இந்த அழகு, இந்த ஒழுங்கு... இவ்வண்ணம் ஒரு முழுமை நிகழமுடியாது. இதை இதற்குள் இருப்பவர்களுடைய ஆழத்தில் வாழும் தெய்வங்களே விழையா...” என்றாள். சுதமன் தளர்ந்து “அதற்கு நாம் செய்வதற்கொன்றும் இல்லை...” என்றார். “ஆம்” என்றபின் சம்வகை தலைவணங்கி அப்பால் சென்றாள். அவர்

அவளுடைய கவசஉடை எடையுடன் அசைந்து செல்வதை நோக்கிக்கொண்டு நின்றார். அவருடைய ஊக்கம் சற்று குறைந்தது. ஆனால் உடனே அது மீண்டும் எழுந்தது. மீண்டும் அவர் முனகியபடி நடந்தார். அந்த மெட்டு அவருக்குள் நாவுக்காக காத்து நின்றிருந்தது. பழைய சூதர்பாடல். “எதிரிகள் அகல்கிறார்கள். ஏனென்றால் நான் எதிர்ப்பை துறந்துவிட்டேன்.”

அவர் தன் அறைக்குச் சென்று சற்று ஓய்வெடுத்தார். துயிலில் இனிய கனவுகள் வழியாக சென்றார். காலையில் விழித்தபோது அவர் முகம் மலர்ந்திருந்தது. அதைக் கொண்டே அவர் கனவுகளை நினைவுகொண்டார். ஆனால் எவையும் தெளிவாக உருத் தெரியவில்லை. எழுந்து நீராடி ஆடை மாற்றி அவர் சுரேசரின் அரண்மனைக்கு சென்றார். அங்கே இரவென்று ஒன்று நிகழ்ந்ததாகவே தெரியவில்லை. சுரேசர் அப்போதுதான் தன் அறைக்கு துயிலச் சென்றிருப்பதாக சொன்னார்கள்.

சுரேசர் அவருக்கு ஏழு ஆணைகளை இட்டிருந்தார். அந்த ஓலையை அவர் ஒருமுறை புரட்டி நோக்கிவிட்டு நடந்தார். மிக மெல்ல இறகுபோல அரண்மனையின் இடைநாழிகளின் வழியாக சென்றார். ஆங்காங்கே கூச்சலிட்டபடி ஓடிக்கொண்டிருப்பவர்களை கண்டதும் புன்னகைத்தார். அவர்களின் விசை அளித்த கோணலான அசைவுகள் சிரிப்பூட்டின. அவர்கள் நூல்பாவைகளை குரங்குகள் இழுப்பதுபோல அசைகிறார்கள் என எண்ணியதும் அவர் வாய்விட்டு சிரித்துவிட்டார்.

அவரை நோக்கி ஓடிவந்த காவலர்தலைவனாகிய யௌளனன் “அமைச்சரே, காவல்படையினர் அனைவருக்கும் உரிய ஆணைகள் சிலவற்றை தலைவி சம்வகை அளித்திருக்கிறார். ஆனால் இங்கே காவலர்தலைவியர் என எவருமில்லை”

என்றான். அவன் சொல்ல வருவதை செவிகொள்ளாமல் சுதமன் "முதலில் உன் உடலை நிலையாக நிறுத்துக! சொற்களின் பொருளை உள்ளம் வாங்குக..." என்றார். "மேலும் நீ இதை சொல்லவேண்டியவன் நான் அல்ல. நான் ஆட்சித்துறை அமைச்சன்" என்றபின் மேலும் நடந்தார். அரண்மனையின் அறைகளிலிருந்தெல்லாம் ஓசைகள் எழுந்துகொண்டிருந்தன. அப்போதுகூட பழுதுநீக்கும் பணி முடிந்திருக்கவில்லை. ஒரு தூணின் வெண்கலப் பட்டையை அப்போதுதான் பொருத்திக்கொண்டிருந்தார்கள்.

சுதமன் அரசவை மண்டபம் நோக்கி சென்றார். அவரைக் கண்டதும் அங்கிருந்த சிற்றமைச்சன் வித்யோதன் அவரை நோக்கி ஓடிவந்தான். "உத்தமரே, இங்கே எனக்கு ஆணைகள் வந்துகொண்டே இருக்கின்றன. நான் செய்யவேண்டியதென்ன என்று தெரியவில்லை. நோக்குக! இந்த அவைக்கூடம் மிகத் தொன்மையானது. ஆகவே மிகச் சிறியது. இங்கே வந்தமரக்கூடும் அரசரின் நிரை மிகப் பெரியது. எவருக்கு எங்கெங்கே பீடம் என சொல்கிறார்கள். இங்கே அத்தனைபேர் அமரமுடியாது" என்றான்.

சுதமன் "நீ சொன்னதே அதற்கான மறுமொழி. இது மிகமிகத் தொன்மையான கூடம். ஹஸ்தியும் அவர் வழிவந்தவர்களும் அமர்ந்து நாடாண்ட அரியணை. அவர்கள் சூடிய மணிமுடியும் கோலும். அதை மாற்ற முடியாது. வேள்விக்குப் பின் பெரிய அவைக்கூடம் அமைக்கப்படலாம். அப்போதுகூட தொன்மையான நிகழ்ச்சிகள் இங்கேதான் நிகழும்" என்றார். "ஆனால் இடம் வேண்டாமா? நீங்கள் இந்த வெற்று அவையை நோக்கினால் இது பெரிதென்றே தோன்றும். வரவிருக்கும்

அரசர்களின் நிரையை நோக்கினால்...” என்று வித்யோதன் சொன்னான்.

சுதமன் “அதை சுரேசர் நோக்குவார். நம் பணி அதுவல்ல. அரியணை துலக்கப்பட்டுவிட்டதா?” என்றார். “அருமணி துலக்குவோர் எழுவர் நேற்றிலிருந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான் வித்யோதன். சுதமன் அப்போதுதான் அவைமேடையில் அரியணைகளை துலக்கிக்கொண்டிருப்பவர்களை கண்டார். அவர்கள் அரியணையின் பொற்செதுக்குகளையும் அருமணிப் பதிப்புகளையும் துடைத்துக்கொண்டிருந்தனர். “திரும்பத் திரும்ப ஒன்றையே செய்துகொண்டிருக்கிறார்கள். துலங்கிவிட்டது, ஒளிவந்துவிட்டது என்று தோன்றும். ஆனால் துலக்கத்துலக்க ஒளி மிகுந்தபடியே செல்வதையும் காணமுடிகிறது” என்றான் வித்யோதன்.

சுதமன் அந்த அரியணையின் காட்சியால் விழிமயங்கி அசைவிலாது நின்றார். அது ஒரு மாபெரும் மலர்போலிருந்தது. மஞ்சள் மலர். செம்மணிகள் பதிக்கப்பட்டது. அவர் உள்ளம் விம்மியது. அது கோன்மையின் அடையாளம் அல்ல. பல்லாயிரம் படைக்கலங்களால் காக்கப்படும் மையம் அல்ல. வேதச்சொல்லும் அல்ல. அதற்கும் அப்பால் மேன்மையேறிய ஒன்று அதில் இருந்தது. அதை வடிவமைத்த பொற்கொல்லனின் கைகளில் அமைந்து ஒரு தெய்வம் தன்னை எழுப்பிக்கொண்டிருக்கிறது. அது சொல்லுக்கு ஆழத்தை அளிப்பது. வெறும் கோலை காவல்தெய்வமென நிலைநிறுத்துவது.

அவர் பிற அந்தணச் சிறுவர்களைப்போல குருநிலையில் நூல்நவிலச் சென்றபோதே அரியணைகள், மணிமுடிகள்,

செங்கோல்கள் குறித்த இளிவரலைத்தான் முதலில் கற்றுக்கொண்டார். அவை நிலம்நாடுவோர், தான்தான் என தருக்குவோர், விழைவுக்கு அப்பால் ஏதுமற்றோர் தங்களை தெய்வமென்று அமர்த்திக்கொள்ளும் பொருட்டு உருவாக்கிக் கொண்டவை. அவை எளிய மானுடரை ஆணவம் கொண்டவர்கள் ஆக்குகின்றன. பிறரை கொன்று அழிக்கவும் தன்னைத்தானே அழித்துக்கொள்ளவும் செய்கின்றன.

“அந்தணனின் பணி என்பது காட்டுயானை என கட்டற்று நாற்புறமும் திமிறும் அந்த ஆற்றலை கட்டுப்படுத்துவது. செவிகளில் சொற்களாக, துரட்டியின் கூர்முனையாக அதை ஆள்வது” என்று அவருக்கு கற்பிக்கப்பட்டது. “அறிவின்மைக்குத் துணைநிற்கும் அறிவையே அமைச்சுப்பணி என்கிறோம்” என்று அவருடைய ஆசிரியர் கணபத்ரர் வகுப்பில் சொன்னார். அவரும் உடனிருந்தோரும் நகைத்தனர். “அறிவின்மையை எதுவும் அறிவென ஆக்கிவிடாது. அறிவின்மையின் தீங்கை தணிக்கலாம், அதன் விசையை குறைக்கலாம், மீறி அது இழைக்கும் தீங்குகளை சொல்லால் நிகர்செய்யலாம்.” அத்தனை மாணவர்களுக்கும் அதுவே ஆழப் பதிந்தது. அது மானுடத்திரளை உண்டு ஒளிகொள்ளும் ஒரு கொடுந்தெய்வம் என்றே அவரும் எண்ணியிருந்தார்.

ஆனால் அங்கு நின்று அந்த அரியணையை நோக்கிக்கொண்டிருந்தபோது அவர் வெளியே அலைகொண்டிருந்த மக்களின் ஓசையை கூடவே கேட்டார். அங்கிருந்தபடி அது அவ்வோசையை ஆள்கிறது. எத்தனை தலைமுறைகளாக, எத்தனை எத்தனை ஆண்டுகளாக! ஏனென்றால் அது அம்மக்களுக்கு காவல். வெளியே இருந்து வரும் எதிரிகள் முன் அது எல்லை வரம்பென்றாகி

அவர்களைச் சூழ்ந்துகொண்டு காக்கிறது. உள்ளிருந்தே எழும் சிதைவுகள் சிதறல்கள் மீறல்களுக்கு முன் மையமென்று அமைந்து அவர்களை தொகுக்கிறது.

அது இல்லையேல் குலங்கள் இல்லை, குடிகள் இல்லை, நாடுகள் இல்லை, உறவுகள் இல்லை, எந்தச் சொல்லும் பயனுறுமதிப்பு கொள்வதில்லை. அதை எளியோர் உயிர்கொடுத்து காக்கிறார்கள். அவர்கள் அதை தங்கள் விழிதொடு தெய்வமென்றே எண்ணுகிறார்கள். அதன்மேல் அமர்பவனுக்கு அது ஆணையிடுகிறது. அவனை நடத்துகிறது. அவன் மீறிச்செல்வான் என்றால் அவனை வீழ்த்தி தன் காலால் நசுக்கிவிடுகிறது. சுதமன் மெய்ப்புகொண்டார். அதை வித்யோதன் உணர்கிறானா என்று திரும்பி நோக்கி மேலாடையை சீர்செய்துகொண்டார்.

வித்யோதன் உரக்க தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான் “இன்று மாலையே வேள்விக்கான அறிவிப்பு எழக்கூடும் என்றார்கள். இன்று உச்சிப்பொழுதுக்குப் பின் நாள் குறித்திருக்கிறார்கள். ஆணையோலையை தெய்வங்கள் முன் படைத்து சொல்பெற்று அமைச்சுநிலைக்கு அனுப்ப அந்தியாகிவிடும். அமைச்சுநிலையில் இருந்து முறையான ஆணை எழவேண்டும். அதன் பின்னரே அது முரசுகளில் எழும்…” சுதமன் தலையசைத்தார். வித்யோதன் “சற்று முன்னர் இளைய அரசர்கள் அரியணையை நோக்க வந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டதை கேட்டேன். நாளை காலையிலேயே இங்கே பெருங்கொடையாட்டு தொடங்கிவிடும்… கருவூலத்தைத் திறந்து பொன் அனைத்தையும் அள்ளி அளிப்பார் அரசர்” என்றான்.

சுதமன் “ஆம்” என்றார். அவர் விழிகள் அரியணைகளிலேயே நிலைகொண்டிருந்தன. வித்யோதன் குரல் தாழ்த்தி “ஆனால்

இவ்வண்ணம் முழுச் செல்வத்தையும் அளித்தாகவேண்டும் என்பதனாலேயே பெரும்பகுதிச் செல்வங்களை ஆங்காங்கே நிறுத்திவைத்துவிட்டுத்தான் நால்வரும் நகர்புகுந்தார்கள் என்று சொல்லி கேள்விப்பட்டேன். அவ்வண்ணமே இருக்கமுடியும். கருவூலம் ஒழிந்த பின் எதிரிகள் படைகொண்டுவந்தால் அதை எவ்வண்ணம் எதிர்கொள்வது?” என்றான்.

சுதமன் அப்பேச்சை தவிர்க்க விழைந்தார். “மணிமுடி எங்கே?” என்றார். “அது கருவூலத்தின் இரும்பறைகளுக்குள்ளேயே மெருகூட்டப்படுகிறது” என்றான் வித்யோதன். “நன்று, நான் அதையும் ஒருமுறை நோக்கவேண்டும்” என்றபின் சுதமன் திரும்பி அவைக்கூடத்தை பார்த்தார். அத்தனை இருக்கைகளும் பழுது நீக்கப்பட்டிருந்தன. அவற்றில் அமர்ந்திருக்கும் பாரதவர்ஷத்தின் அரசர்களை அவர் கண்டார். திரும்பி நோக்கியபோது அரியணையில் அமர்ந்திருக்கும் யுதிஷ்டிரனையும் திரௌபதியையும் கண்டார்.

“காலையில் பெருங்கொடை தொடங்கினால் கருவூலம் முற்றொழிவதுவரை கொடை நடந்துகொண்டே இருக்கவேண்டும் என்பது நெறி… எத்தனை நாட்களாயினும்” என்றான் வித்யோதன். “ஆனால் இங்கே மக்கள் கொந்தளிப்பதை நோக்கினால் ஒரு பகலுக்குள்ளேயே கருவூலம் ஒழிந்துவிடும்… அரசகுடியினர் ஐவரும் அரசியும் முனிவருக்கும் அந்தணருக்கும் பாணருக்கும் புலவருக்கும் கொடையளிக்கிறார்கள்… எளியோருக்கு அரசமுத்திரை பதித்த பொன்னை அமைச்சர்கள் வழங்குவார்கள். கொடையளிப்பதற்கென்றே முதிய அந்தணர் நூற்றுவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.”

வித்யோதன் அந்த அவைக்கூடத்தில் இருந்து அவன் அறிந்த அனைத்தையும் சொல்லும் விழைவுகொண்டிருந்தான். சுதமன் அவனிடம் கையசைவால் விடைபெற்று கருவூலம் நோக்கி சென்றார். மேலும் சொல்லும் விழைவு ததும்பிய உடலுடன் வித்யோதன் அவருடன் சற்றுதூரம் வந்தான். அவன் அகன்று சென்றதும் சுதமன் சலிப்புடன் தலையசைத்தார். உள்ளத்தை உணராமல் வெளியே ஒலிக்கும் மொழிபோல எரிச்சலூட்டுவது வேறில்லை. அவர் கருவூலம் நோக்கிய பாதையில் தனியாக நடக்கையில் தன் அகம் விந்தையான இனிமை ஒன்றில் திளைப்பதை உணர்ந்தார்.



சுதமன் முன்பு கருவூலத்தின் நாட்செலவுப் பகுதியிலும் தொல்பொருட்களின் அறையிலும்தான் பணியாற்றியிருந்தார். அருஞ்செல்வப் பகுதிக்கு அடிக்கடி வந்ததில்லை. ஆயினும் காவலர் அவரை நன்கறிந்திருந்தனர். ஆகவே வெறும் தலையசைவுகளுடன் அவர் படிகளில் இறங்கிச் சென்றார். கருவூலத்தின் மையக்கூடத்தில் இடைவரை உயரமான எட்டு குவைகளாக பொற்காசுகளைப் போட்டு சூழ அமர்ந்து சிறிய பட்டுக் கிழிகளில் கட்டிக்கொண்டிருந்தார்கள். சுதமன் அவர்களை பார்த்தபடி நின்றார்.

அங்கிருந்த வணிகர் குலத்தைச் சேர்ந்த துணையமைச்சனான சூஷ்ணன் அவர் அருகே வந்து “கொடையளிக்கவேண்டிய பொருட்கள். அனைவருக்கும் சீராக கிடைப்பதற்காக இந்த ஒழுங்கை செய்திருக்கிறோம். குடியினர் ஒவ்வொருவருக்கும் ஏழு பொற்காசுகள், பதினெட்டு வெள்ளிக்காசுகள். குடித்தலைவர்களுக்கு பத்துமடங்கு” என்றான். “பாணர்களுக்கும் அந்தணர்களுக்கும் முனிவர்களுக்கும் கிழிகள் இல்லை.

அவர்களுக்கு அளக்காது அளிக்கவேண்டும் என்பது நெறி. ஆகவே வெறும் கைகளால் பொன்னையும் வெள்ளியையும் குனிந்தே நோக்காமல் அள்ளி அள்ளி மும்முறை வழங்கவேண்டும்.”

சுதமன் அந்த பொற்குவைகளை நோக்கிக்கொண்டு நின்றார். “இவை பல நாடுகளிலிருந்து வந்தவை. நூற்றில் ஒருபங்குகூட அஸ்தினபுரியின் நாணயங்கள் இல்லை” என்று சூஷ்ணன் சொன்னான். “பொன்னும் வெள்ளியும் மட்டும்தானா?” என்றார் சுதமன். “இல்லை, அந்தணர் முனிவர் பாணர் புலவர் நால்வருக்கும் அளிக்கப்படும் பொன்னுடனும் வெள்ளியுடனும் அருமணிகளும் கலந்திருக்கும். அவற்றை அளவும் கணக்கும் பார்ப்பதில்லை.” சுதமன் “படைவீரர்களுக்கு?” என்றார். “மறவர் கொடைபெறுவது நெறி அல்ல. ஆகவே அவர்களுக்குரிய பொன் ஊதியமாக இன்றே வழங்கப்படுகிறது. ஏற்கெனவே அனைத்துப் படையினருக்கும் உரிய செல்வம் இங்கிருந்து சென்றுவிட்டது. இன்னமும்கூட செல்லவேண்டியிருக்கும்.”

சுதமன் “மணிமுடி எங்கு துலக்கப்படுகிறது?” என்றார். “தேவயானியின் மணிமுடி பழுதடைந்திருந்தது. அதை சீரமைக்கும் பணி சிலநாட்களுக்கு முன்னரே தொடங்கி நேற்று நிறைவடைந்தது. ஹஸ்தியின் மணிமுடியை ஒளிதுலக்கினர். அதுவும் முடிந்துவிட்டது. வருக!” என்று சூஷ்ணன் அவரை அழைத்துச் சென்றான். அவர்கள் கருவூலத்தின் இடைநாழிகளினூடாகச் சென்றனர். இடைநாழி முழுமையாக தூய்மைசெய்யப்பட்டு உரிய வெளிச்சம் கொண்டு இனிய பாதையாக மாறியிருந்தது.

தர்ப்பைக்கற்றைகளும் பொற்குடங்களுமாக அந்தணர் குழு ஒன்று ஏவலர்களால் வெளியே அழைத்துச் செல்லப்பட்டது.

“அவர்கள் எவர்?” என்று சுதமன் கேட்டார். “அவர்கள் இங்குள்ள தெய்வங்களுக்கு பூசனை செய்ய வந்தவர்கள். இக்கருவூலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தெய்வங்கள் குடிகொள்கின்றன” என்றான் சூஷ்ணன். “நூற்றுக்கணக்கான தெய்வங்களா? நானறிந்து இங்கிருப்பவை மாமன்னர் ஹஸ்தி இந்தக் கருவூலத்தை கட்டியபோது நிறுவிய எட்டு திருமகள்கள், தேவகணத் தலைவனாகிய யானைமுகனும் குபேரனும் என பத்து தெய்வங்கள் மட்டுமே” என்றார்.

“அது பொதுவாக அறியப்பட்டது. இங்குள்ள தெய்வங்கள் எவை எவை என தொன்மையான சுவடிகளிலிருந்து படித்து எடுத்தார்கள். வெவ்வேறு காலகட்டங்களில் இங்கே சிறுதெய்வங்கள் நிலைநிறுத்தப்பட்டிருக்கின்றன. படைகொண்டுசென்று எதிரிமன்னர்களின் முடிகளை கொண்டுவந்தபோது உடன்வந்த தெய்வங்கள், சில அருமணிகளுடன் வந்த சில தீயவிசைகளை ஆளும்பொருட்டு நிமித்திகர் நிலைநிறுத்திய தெய்வங்கள். சில அருமணிகளே தெய்வங்கள். கருவூலம் ஒழியும்போது அத்தெய்வங்கள் நிலையழிந்துவிடலாகாது என்றனர். ஆகவே முறையான பூசனைகளினூடாக அவர்களை நிலைக்கோள் அடையச்செய்கிறார்கள் அந்தணர்கள்.”

கருவூலத்தின் உள்ளறைகளில் இருந்து மணியோசையும் வேதச்சொல்லும் ஒலித்தன. “இப்போது வேதச்சொல்லுக்கும் அவிப்படையலுக்கும் ஆட்படும் தெய்வங்கள். இரவெழுந்த பின் குருதிகோரும் தெய்வங்களுக்குரிய பலிச்சடங்குகள் உண்டு” என்றான் சூஷ்ணன். “இங்கே ஒவ்வொன்றும் புதிதாக தோன்றிக்கொண்டிருக்கின்றன” என்றார் சுதமன். “இல்லை

உத்தமரே, அவை கண்டடையப்படுகின்றன” என்று சூஷ்ணன் புன்னகைத்தான்.

கருவூலத்தின் உள்ளறையைத் திறந்து அவரை சூஷ்ணன் உள்ளே அழைத்துச் சென்றான். உள்ளே விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. மெல்லிய காற்றுச் சுழற்சி இருந்தது. மணிமுடியிருக்கும் அறை ஆலயக் கருவறைபோல அமைக்கப்பட்டிருந்தது. அங்கே அணையா விளக்கு எரியும் என்பதை சுதமன் அறிந்திருந்தார். அறையின் நடுவே அரசமேடையில் ஹஸ்தியின் மணிமுடியும் தேவயானியின் மணிமுடியும் இரு பொற்பீடங்களில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றுக்குக் கீழே அருமணிகள் அனலென மின்னும் செங்கோல் பிறிதொரு பீடத்தில் இருந்தது. அருகே அரசரின் உடைவாள் பொன்னிறமான நாகம்போல் செதுக்குகள் செதிலென ஒளிர அமைந்திருந்தது. அதைச் சூழ்ந்து பலவகையான படைக்கலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இருபுறமும் ஏழு திரியிடப்பட்ட நிலைவிளக்குகள் எரிந்தன.

“இங்கே திருமகள் ஒழியலாகாது என ஆணை. ஒவ்வொருநாளும் இவற்றுக்கு கோயில்தெய்வங்களுக்கு நிகரான ஐம்பொருள் பூசனையும் படையலும் உண்டு” என்றான். “ஐம்பொருட்கள் என்னென்ன?” என்று சுதமன் கேட்டார். “தேவயானியின் முடிக்கு கொற்றவைக்குரிய கான்மங்கலங்கள் ஐந்து. ஹஸ்தியின் மணிமுடிக்கு காற்றுத்தேவனுக்குரிய ஐந்து நிலமங்கலங்கள்” என்றான் சூஷ்ணன்.

சுதமன் அந்த மணிமுடிகளை நோக்கியபடி நின்றார். “நாளை அந்தியில் அவை கூடவிருக்கிறது என்றார்கள்... இன்று வேள்விக்கு நாள்குறிக்கும் சடங்கு மேலே நிகழ்ந்துகொண்டிருக்கிறது... அந்தணர் அவைகூடி

வகுத்தவற்றை அவர்கள் அரசருக்கு அறிவிக்கிறார்கள்... நாளை அரசி திரௌபதி தன் நீள்குழல் முடிந்து அரியணையில் அமர்கிறார். யுதிஷ்டிரன் வஞ்சம் முடித்து கோலேந்துகிறார். இந்நகரில் அறுதிவெற்றி ஒன்று நிகழ்ந்துள்ளது. அறுதிவெற்றியை திருமகள் விரும்புகிறாள் என்பார்கள். இனி இங்கே செல்வம் கொழிக்கும். செல்வமிருக்கும் இடத்தில் கலைகளும் சொல்லும் பெருகும்.”

ஒவ்வொருவரும் சற்றே நிலையழிந்திருப்பதாக சுதமன் எண்ணினார். அவரும்கூட அவ்வண்ணமே இருக்கக்கூடும். அவர் பெருமூச்சுவிட்டார். “பேரரசி குந்தி இங்கில்லை என்பதை நேற்று பலரும் பேசிக்கொண்டனர். அவர்கள் தன் முதிரா இளமையில் விழைந்தது, இன்று அது நிகழ்கையில் எங்கோ இருக்கிறார்.” சூஷ்ணன் அவருடைய எதிர்வினையை எதிர்பார்த்தான். அது எழாதபோது “அப்படிப் பார்த்தால் மூத்தவர் என இங்கே எவருமில்லை. இங்குள்ள எல்லா விழிகளும் புதியவை” என்றான்.

சுதமன் “நான் கிளம்புகிறேன்” என்றார். “நீங்கள் பேரமைச்சர் சுரேசரிடம் சொல்லலாம், இங்கே அனைத்தும் முறையாகவே உள்ளன. எதிலும் குறைவில்லை. ஆணைகள் ஒவ்வொன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளன” என்று சூஷ்ணன் சொன்னான். சுதமன் நடந்தபோது அவன் வெளியேவந்து அறைக்கதவை மூடினான். அதன் ஓசை சங்கொலிபோல எழுந்தது.

அவருடன் வந்தபடி “நீடுகாலம் நோன்பிருந்தவற்றை அடையும்போது மானுடர் நிறைவடைவதில்லை என்று நேற்று ஒரு புலவர் பாடினார். ஏனென்றால் அடையும் எதுவும் இழந்தவற்றுக்கு நிகராவதில்லை என்றார். எனக்கு அது மெய் என்று சில தருணங்களில் தோன்றுகிறது. இவர்கள்

அடைந்திருப்பவை எல்லாமே தங்கள் மைந்தரின் குருதியை அளித்து அல்லவா?” என்றான் சூஷ்ணன்.

சுதமன் திரும்பி நோக்கினார். சூஷ்ணன் மெய்யாகச் சொல்ல விழைந்தது அதுவே என்று தெரிந்தது. அதை மறைக்கும்பொருட்டே வேறு சிலவற்றை சொல்லிக்கொண்டிருந்திருக்கிறான். அவர் சம்வகையின் சொற்களை நினைவுகூர்ந்தார். “நான் நகரை ஒருமுறை சுற்றிவந்து அனைத்து ஆலயங்களையும் பார்வையிடவேண்டும் என்று சுரேசரின் ஆணை” என்றார். “ஆம், அத்தனை தெய்வங்களும் நிறை செய்யப்படவேண்டும். இது தெய்வங்கள் அனைத்தும் விழிதிறந்து எழும் பொழுது” என்றான் சூஷ்ணன்.

# களிற்றியானை நிரை - 73

### பகுதி ஏழு : பெருசங்கம் – 5

சுதமன் நகருக்குள் செல்ல விரும்பவில்லை. உப்பரிகையில் நின்று அவர் நகரை நோக்கிக்கொண்டிருக்கையில் ஓர் அச்சத்தை உணர்ந்தார். அவ்வச்சம் எதனாலென அவருக்கு தெரியவில்லை. உயரமான பாறையில் நின்று கீழே கொந்தளிக்கும் கடலை பார்ப்பதுபோல தோன்றியது. மீண்டும் தன் அறைக்குச் சென்று தன் கைகளுக்குள் நிற்கும் சிறு அலுவல்களில் மூழ்கிவிடவேண்டும் என்று விழைந்தார். உப்பரிகையிலிருந்து விழுந்துவிடுவார் என்று அஞ்சியவர்போல அவர் கைப்பிடிகளை பற்றிக்கொண்டார்.

அவர் நெடுநாட்களாக விழைந்தது தலைகால் புரியாமல் வெறிகொண்டு வேலை செய்வதை, வேலையின் முடிவில் அடையும் இனிய களைப்பின் நிறைவை, தானே என நின்று ஆற்றும் பொறுப்புகளை, பிறர் மேல் ஆணைகளைச் செலுத்தும் இடத்தை, அதன் தோரணைகளை, மிடுக்கை. ஒவ்வொருமுறை அஸ்தினபுரியின் அமைச்சர்களை பார்க்கையிலும் ஒருநாள் அதைப்போல தானும் தலைஎழுந்து விழிகூர்ந்து மஞ்சலில் அமர்ந்து செல்லவேண்டும் என்று கனவுகண்டார். அவர்களின் பாவனைகளை கூர்ந்து நோக்கினார். அவர்களிடம் சலிப்பும் கூர்மையும் ஒன்றெனக் கலந்திருந்தன. அவர்கள் விலகியவர்கள் போன்ற உடலசைவுகளும் உள்ளே ஊடுருவிக்கலக்கும் ஆணைகளும் கொண்டிருந்தனர்.

ஆனால் அவர் அஸ்தினபுரியின் அலுவல்பணிக்கு வந்தபின் அவருக்கு பொறுப்பான பணி ஏதும் அளிக்கப்படவில்லை. அவர் முதலில் அலுவலர்கணக்குப் பொறுப்புக்கு அமர்த்தப்பட்டார். நாளெல்லாம் ஊழியர்களின் பெயர்களையும் நிலைகளையும் ஓலைகளில் பொறித்து ஓலைத்தொகைகளை கட்டுகளாக்கி அக்கட்டுகளை மேலும் கட்டுகளாக்கி அவற்றை பேழைகளில் இட்டு அப்பேழைகளுக்கு எண்களிட்டு அடுக்கினார். பெயர்கள் கூட திரும்பத்திரும்ப வந்தன. எதைச் செய்தாலும் ஏற்கெனவே பலமுறை செய்ததுபோலத் தோன்றியது. அரைத்துயிலிலேயே அதை செய்யமுடிந்தது. ஆகவே எப்போதும் அவர் உடலில் துயில் இருந்துகொண்டிருந்தது.

அதன்பின் அவருக்கு பணிமேம்பாடு அளிக்கப்பட்டது. கருவூலத்தின் கணக்கர். அங்கே நுழைகையில் அவர் கிளர்ச்சி அடைந்திருந்தார். கருவூலத்தின் செல்வக்குவைகளுக்கு அவரே பொறுப்பு என்று. ஆனால் அவர் அங்கே குறைவாகவே

செல்வங்களை பார்த்தார். கருவூலச்செல்வங்கள் எங்கோ இருக்க அவை பொறிக்கப்பட்ட ஓலைகளை கணக்கிட்டு அடுக்குவதையே அங்கும் அவர் மீளமீளச் செய்யவேண்டியிருந்தது. முன்பு அவர் மானுட முகங்களை நாளும் பார்க்கமுடிந்தது. கருவூலத்திற்குச் சென்றபின் அவர் காலடியில் நிலம் மறைய ஆழ்ந்து புதைந்தார். தன்னை ஒரு சிறு வேர் என உணர்ந்தார். எவருமே பார்க்காத, ஓசையோ வண்ணமோ இல்லாத ஒரு ஆழ்வு மட்டுமே. அவர் உடல் வெயில் படாமல் வெளிறியது. ஒளி காணாது விழிகள் மங்கலாயின. அமர்ந்து அமர்ந்து உடல் குடம் போலாயிற்று.

"நான் விழைவதெல்லாம் ஒரு புரவியின் வாலை பிடித்துக்கொண்டு ஓடுவதை… அது என்னை கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் கொண்டு செல்லட்டும். பள்ளங்களில் தள்ளி கொன்றாலும் சரி… இப்படி அமர்ந்து அமர்ந்து துருப்பிடிப்பதைவிட அது மேல்" என்று அவர் தனக்கே சொல்லிக்கொண்டார். அவரிடம் உரையாட அங்கே எவருமில்லை. அவரே தன்னுடன் தான் பேசிக்கொண்டிருந்தார். அவர் தன்னுடன் பேசும் ஒருவனை தன் எதிரில் உருவாக்கிக்கொண்டார். அவனிடம் மீண்டும் மீண்டும் தன் விழைவை, தயக்கத்தை, சலிப்பை பற்றி சொல்லிக்கொண்டார்.

அறுந்து விழுந்ததுபோல ஒரே நாளில் அவர் அஸ்தினபுரியின் பெருஞ்சுழலுக்குள் வந்தார். வந்த அன்றே நூறுபேரை சந்தித்தார். ஆயிரம் ஓலைகளை படித்தார். அஸ்தினபுரியை இருமுறை சுற்றிவந்தார். திரும்பிச்சென்று தன் அறையை அடைந்தபோது மஞ்சத்தில் குழைந்து விழுந்து அக்கணமே துயின்றார். பின்னிரவில் உள்ளம் விழித்துக்கொள்ள எழுந்தபோது களைப்பு முழுமையாக அகன்றிருந்தது. உள்ளம்

ஊக்கம் கொண்டிருந்தது. வெல்வதற்கு இதோ உலகம் எதிரே விரிந்திருக்கிறது. நீராடி ஆடைமாற்றி அலுவல் அறைக்குச் செல்கையில் அவர் சிறுவன்போல ஓடிக்கொண்டிருந்தார்.

ஆனால் மிகச் சில நாட்களிலேயே அவருக்குத் தெரிந்தது, அத்தகைய இடைவிடாத உழைப்பின் முதல் விளைவு என்பது அகம் என ஒன்றில்லாமல் ஆவதுதான் என. அவருள் ஓடிக்கொண்டே இருக்கும் சொற்பெருக்கு முற்றாக மறைந்தது. அவர் தன்னை தான் என உணர்ந்தே பல நாட்களாகின்றன என திகைப்புடன் ஒருமுறை எண்ணிக்கொண்டார். அகம் அற்ற ஒருவராக ஆகிவிட்டிருந்தார். இனிய பகற்கனவுகள் முழுமையாகவே அகன்றுவிட்டிருந்தன. அவருக்குள் எழுந்த எல்லா கனவுகளும் வெளியே அவர் செய்துகொண்டிருந்தவற்றின் நீட்சியாக, விடுபடல்களின் நிரப்புகைகளாக மட்டுமே இருந்தன. அவர் மீண்டுசெல்ல ஏங்கினார். தித்திக்கும் பகற்கனவுகளுடன், இனிய கதகதப்பான அவற்றின் அணைப்புடன் தனித்திருக்க ஏங்கினார்.

அவரைத் தேடிவந்த ஏவலன் பின்னால் நின்றான். சுதமன் திரும்பி அவனை பார்த்தார். “அமைச்சர் சுரேசரின் அழைப்பு” என்று ஏவலன் சொன்னான். சுதமன் பெருமூச்சுடன் கிளம்பினார். அந்த சில கணங்கள் மட்டுமே அவருக்கு ஓய்வு. இனி எப்போதாவது அவர் தன்னை தான் நோக்கி அமர்ந்திருக்கும் கணம் வாய்க்குமா? அதற்கு வாய்ப்பே இல்லை என்று பட்டது. அஸ்தினபுரி பெருஞ்சுழி ஒன்றின் கண் என ஆகிவிட்டிருக்கிறது. அதற்கு இனி ஒரு கணமும் ஓய்வில்லை. அவர் இடைநாழியினூடாக நடக்கும்போது அங்கே ஏவலர்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருப்பதை கண்டார்.

அவர்களின் காலடிகளும் பேச்சொலிகளுமாக அந்த அரண்மனை முழக்கமிட்டுக்கொண்டிருந்தது.

சுரேசர் அறையில் வழக்கம்போல சுழற்றிச் சுழற்றி பறக்கச்செய்யும் அலுவல்களின் உச்சவிசையில் இருந்தார். அவர் வணங்கியபோது கையை வீசி அமரச் சொல்லிவிட்டு அவர் அருகே நின்றிருந்த தொலையமைச்சர் சுபதத்தரிடம் “அது எதிர்பார்த்ததுதான். துவாரகை இந்த விழாவில் கலந்துகொள்ள மறுக்கும். மதுராவும் இங்கே வர வாய்ப்பில்லை. ஆனால் இது ராஜசூயம், நாம் எவரை எவ்வண்ணம் அழைத்தோம், எவரை விட்டுவிட்டோம் என்பதெல்லாம் காவியங்களில் பதிவாகும். சொல்லில் நிலைகொள்ளும்” என்றார். சற்று குரல் தழைய “கிருஷ்ணை சுயோதனரின் மகள். அவர் தன் தந்தை கொல்லப்பட்டதை இன்னும் மறக்கவில்லை, எவ்வகையிலும் அச்செயலில் இருந்த அறமீறலை ஏற்கவில்லை” என்றார்.

சுபதத்தர் “செய்தியை நான் முழுமையாக அறிவிக்கக்கூட அரசி காத்திருக்கவில்லை. சீற்றத்துடன் அரியணையிலிருந்து எழுந்துவிட்டார். திரும்பிச் செல்க, திரும்பிச் செல்க என்று கூச்சலிட்டார். அது பழிபடிந்த முடி. அதன் நிழலும் நமக்குத் தேவையில்லை என்று கூறியதுமே குரல் உடைய அழுதார். நான் மேற்கொண்டு ஒரு சொல்லும் உரைக்கவில்லை. அரசர் சாம்பனும் ஒன்றும் சொல்லவில்லை. அவையிலிருந்தோர் அனைவரும் எழுந்துவிட்டனர். அமைச்சர்கள், குடித்தலைவர்கள் அத்தனைபேரும் சீற்றத்துடன் முழக்கமிட்டனர். வேண்டியதில்லை, அஸ்தினபுரியுடன் எந்த உறவும் வேண்டியதில்லை என்று அமைச்சர் ஒருவர் கூவினார். ஒருநாள் நாம் படைகொண்டு செல்வோம். அஸ்தினபுரியை

அழிப்போம் என்று குடித்தலைவர் ஒருவர் கூச்சலிட்டார். அரசி திரும்பிச் சென்றுவிட அரசர் என்னிடம் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை அந்தணரே என்றார். நான் தலைவணங்கி எழுந்துகொண்டேன்" என்றார்.

"அது தெரிந்துதான் நாம் அழைப்பை அனுப்பினோம். அவ்வழைப்பின் மெய்மை ஒன்றே. அவர்கள் இங்கே எந்நிலையில் வைக்கப்படுவார்கள் என்பது. அவர்கள் வரவில்லை என்றாலும் அவர்களுக்கு நாம் அனுப்பியது முதன்மை ஷத்ரிய அரசுகளுக்கு நிகரான அழைப்பு என்னும் செய்தி இந்நேரம் அத்தனை ஷத்ரியர்களுக்கும் சென்றிருக்கும். அது நாம் இளைய யாதவருக்கு அளிக்கும் மறுமதிப்பு. இது அவருடைய வெற்றி, இவையனைத்தும் அவர் நமக்களித்த கொடை. யாதவர்களுடையதே இந்த நாநிலம் இன்று" என்றார் சுரேசர். சுபதத்தர் "மதுவனத்திலிருந்து ஒருவேளை அரசர் வரக்கூடும். விருஷ்ணிகளில் ஒரு சாராருக்கு இது அவர்களின் வெற்றி என்னும் எண்ணம் உள்ளது" என்றார்.

சுரேசர் "ஆம், இது விருஷ்ணிகளின் வெற்றி என்று அவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் எவருமே அதை இன்று வெளிக்காட்டிக்கொள்ள முடியாது. அவர்களில் மூத்தோர் பலராமரின் சொல்காத்திருக்கிறார்கள். இளையோர் சாம்பன் முதலிய அரசர்களின் ஆணையில் இருக்கிறார்கள். நாம் செய்யக்கூடுவதொன்றும் இல்லை" என்றார். சுபதத்தர் "நான் எண்ணிக்கொண்டேன், அவர்கள் இத்தருணத்தில் அஸ்தினபுரியுடன் நின்றால் இன்னும் பல நூற்றாண்டுகாலம் பாரதவர்ஷமே நம்மிடம்தான் இருக்கும்" என்றார். சுரேசர்

புன்னகைத்து “ஊழ் வகுக்கும் வழியே இன்று அவர்களின் நிலைப்பாடு என எழுகிறது” என்றார்.

சுபதத்தர் “நம் இளவரசர் அங்கே நன்கு தேறியிருக்கிறார். அவருடைய நிலையை அரசரிடம் விளக்கும்பொருட்டு அங்கிருந்து ஒரு மருத்துவரையும் அழைத்துவந்துள்ளேன்” என்றார். “இளவரசரை நானே நேரில் பார்த்தேன். நன்கு உடல் கொண்டுவிட்டார். சில மாதங்களுக்கு முன் கையளவே இருந்தார் என்றபோது நம்பவே முடியவில்லை” என்றார். சுரேசர் “அது இவ்வகை குழந்தைகளின் இயல்பு. அவை உயிர்வாழும் வேட்கை கொள்கின்றன. பெரிய தீயை விட சிறிய தீ பற்றி எரிந்து ஏறும் வெறிகொண்டது என்பார்கள்” என்றபின் புன்னகைத்து “யார் கண்டார், அவர் அவருடைய பாட்டியைப்போல பெருந்தோள் கொண்ட மாமல்லராக வளரவும் கூடும்” என்றார்.

சுபதத்தர் “மைந்தனுக்கு ஐம்படைத்தாலி அணிவிக்கும்வரை அங்கேயே இருப்பது நல்லது என்பது மருத்துவர் கூற்று” என்றார். அவர் அப்போதுதான் சுதமனை பார்த்தார். சுரேசர் தலையசைக்க எழுந்து தலைவணங்கினார். சுதமன் “ஆணை எதிர்பார்த்து வந்தேன்” என்றார். சுரேசர் “செய்திகளை ஒன்றுவிடாமல் அரசருக்கும் அரசிக்கும் கூறுக, சுபதத்தரே! அனைத்தும் முறைப்படி செல்கிறது என்பது நிறைவளிக்கிறது” என்றார். “ஆம், இவ்வண்ணமே மங்கலமாகுக!” என்றபின் சுபதத்தர் வெளியே செல்ல சுரேசர் சுதமனிடம் சற்று பொறுக்கச் சொல்லிவிட்டு திரும்பி அப்பால் நின்ற ஒற்றர்தலைவன் சிம்மசேனனை அருகே வரசொன்னார். சொல்க என கைகாட்டினார்.

சிம்மசேனன் “ஒற்றர் செய்திகளை தொகுத்திருக்கிறேன்... ஆரியவர்த்தத்திலும் தென்னகத்திலும் கிழக்கிலும் யவனத்திலும் நாம் அழைத்துள்ள அரசர்களில் எவருமே வருவதற்கு மாற்று தெரிவிக்கவில்லை. வரிசை முறைமை குறித்து சில மாற்றுச்சொற்களை சொன்னவர்கள் கீழ்க்கலிங்கன், அமராவதியின் அரசன், பல்லவன் மூவரும் மட்டுமே. அவர்களுக்கு விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அமைச்சரின் கூடுதல் சொல் ஒன்றும் தேவைப்படலாம். வரவிருக்கும் அரசர்களின் பெயர்கள், வரும் நாள், உடன்வருவோர் பெயர்கள் ஆகியவை தனியாக தொகுக்கப்பட்டுள்ளன. அவை சிற்றமைச்சரிடம் அளிக்கப்படும்” என்றான். சுரேசர் சுதமனை நோக்க அவர் எழுந்து அப்பால் விலகி நின்றார். சிம்மசேனன் தாழ்ந்த குரலில் சுரேசரிடம் பேசி முடித்தான்.

அவன் சென்றபின் சுரேசர் திரும்பி சுதமனை அருகழைத்தார். “நீங்கள் உடனே கிளம்பியாகவேண்டும், அமைச்சரே” என்றார். “இன்று இரவுக்குள் நீங்கள் குருக்ஷேத்ரத்தை சென்றடையலாம். நாளை முதற்பொழுதில் அங்கிருக்கவேண்டும்.” சுதமன் தலைவணங்கினார். “அரசர் ஒரு புற்குழலை அளித்திருக்கிறார். அது அரசர் பீஷ்ம பிதாமகருக்கு அளிக்கும் பரிசு. உண்மையில் அதை அவரிடம் அளிக்கவே நீங்கள் செல்கிறீர்கள். ஆனால் இங்கே ராஜசூயம் நிகழும் செய்தியை முறைப்படி அறிவிக்கும்பொருட்டு நீங்கள் செல்வதாகவே அரசமுறைப் பதிவு இருக்கும். உங்களிடம் அரசரின் திருமுகச்செய்தி அளிக்கப்படும். முறைப்படி பட்டோலையை பீஷ்மரிடம் படித்துக்காட்டி நற்சொல் பெற்று திரும்புக!” சுதமன் தலைவணங்கினார்.

சுரேசர் “அந்தப் புற்குழல் எத்தகையது என்பது உடனிருக்கும் ஓலையில் சொல்லப்பட்டிருக்கும். அதை பீஷ்ம பிதாமகர் முன் படித்துக்காட்டலாம். அவர் ஆணையிட்டபடி செய்யலாம்” என்றார். சுதமன் அப்போதும் அது என்ன என்று எண்ணம் ஓட்டவில்லை. அஸ்தினபுரியில் அவரறியாத சடங்குகள் நடந்துகொண்டே இருந்தன. நகரில் வந்துகுடியேறிய அனைவருடைய சடங்குகளையும் நகர் ஏற்றுக்கொண்டுவிட்டிருந்தது. ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு செயலுக்கும் முற்றிலும் மாறுபட்ட பல சடங்குகள் இருந்தன. அவை அனைத்தையுமே அவர்கள் செய்தார்கள். நாளடைவில் அவை உருகி இணைந்து ஒன்றாகக்கூடும். சுரேசர் “ஆணை பெற்றதும் உடனே இங்கு மீள்க! உமது செய்தியுடன்தான் இங்கே ராஜசூயம் தொடங்கும்” என்றார்.

சுதமன் கிளம்பும் வரை ஒரு நிலையின்மையில் இருந்தார். குருக்ஷேத்ரம் என்னும் சொல் அவரை துன்புறுத்தியிருந்தது. அந்நகரில் அச்சொல்லைப்போல ஈட்டி என வந்து குத்தும், நஞ்சென உடலில் ஊறிப்பரவும் பிறிதொன்றில்லை. இவ்வளவுக்கும் அங்கிருப்போரில் குருக்ஷேத்ரப் போரை சொல்லால் அன்றி வேறெவ்வகையாலும் அறிந்தோர் மிகச் சிலரே. பெரும்பாலானவர்கள் அதனால் இழப்பை அடைந்தவர்கள் அல்ல, ஈட்டியவர்கள் என்றே சொல்லலாம். ஆயினும் அனைவரும் அச்சொல்லை சித்தத்திலிருந்து விலக்க முயன்றனர். அச்சொற்களின்மேல்தான் அந்தப் பெருவிழவே அள்ளிக்கொட்டி மூடப்பட்டிருந்தது.

ஆனால் கிளம்பும் கணத்தில் அந்நகரின் பித்துவெறியில் இருந்து அகன்று செல்லப்போகிறோம் என்னும் எண்ணம் அவருக்கு உவகையை அளித்தது. ஓரிரு கணங்களிலேயே அவ்வெண்ணத்தை ஒரு கொண்டாட்டமாக வளர்த்துக்கொண்டார். அன்றிரவே சென்று மறுநாள் உச்சிப்பொழுதுக்குள் மீளப்போகிறோம் என்பதையே உளம்பதியச் செய்யாமல் என்றென்றுமென கிளம்புகிறோம் என நடித்துக்கொண்டார். விரைவாகச் செல்லும் விசைத்தேரில் ஏறிக்கொண்டு நகரின் சாலைகள் வழியாக சென்றார். நகர்ச் சாலைகளில் ஒன்று மட்டும் அரசுப்போக்குவரத்துக்காக முற்றிலுமாக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதிலும் தேர்களும் புரவிகளும் நெரிசலிட்டு சென்றுகொண்டிருந்தன. குளம்படியோசைகள் மொத்த நகரமே இடிந்து இடிந்து சரிவதுபோல ஒலித்துக்கொண்டே இருந்தன.

அவர் ஒரு குறுக்குச் சாலையை கடக்கும்போது அப்பால் முச்சந்தியில் ஒரு கூட்டத்தை பார்த்தார். தேர் உயரமான தட்டு கொண்டிருந்தமையால் அவர் கூட்டத்தின் நடுவில் நின்றிருந்த பெரிய சடைமகுடம் கொண்டவரை கண்டுவிட்டார். “நிறுத்துக!” என்றார். “அவர் சார்வாகர் அல்லவா?” தேர்வலன் கடிவாளத்தை இழுத்து தேரை ஓரமாக நிறுத்திவிட்டு “ஆம் அமைச்சரே, நகரிலெங்கும் அவர்கள் தென்படுகிறார்கள். தங்கள் கருத்துக்களை முச்சந்திகளில் கூவிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான். சுதமன் நெஞ்சம் படபடப்பதை உணர்ந்தார். “அவர்கள் பேசுவதை நான் இதுவரை கேட்டதில்லை” என்றார். “அவர்களை நகருள் நுழைய ஒப்புவதில்லை அல்லவா?”

“அவர்கள் நுழையலாகாது என்று முறைமையோ ஆணையோ ஏதுமில்லை. ஆனால் அவர்கள் ஒற்றர்கள் அல்ல என்று உறுதி

செய்யவேண்டும் என்பது பொதுவான நடைமுறை. ஆகவே அவர்களை தடுத்து நிறுத்தி ஒற்றர்கள் என கூறி திருப்பி அனுப்பிவிடுவார்கள் காவலர்” என்று தேர்வலன் சொன்னான். “பொதுவாக அவர்கள் நகருள் நுழைவதை மக்களும் விரும்புவதில்லை. அவர்கள் மங்கலமற்றவர்கள் என்னும் எண்ணம் உள்ளது. குடியை அழிப்பவர்கள், திருவை பழிப்பவர்கள், அரசை எதிர்ப்பவர்கள், தெய்வங்களுக்கு ஒவ்வாதவர்கள். அவர்கள் நோக்கு பட்டால் விதைநெல் பதராகும் என்கின்றனர் வேளிர். அவர்கள் சொல் கேட்டால் பசுக்கள் கருவழியும் என்கின்றனர் ஆயர். அவர்கள் உடல்தொட்ட காற்று பட்டால் பசும்பொன் கருமைகொள்ளும் என்கின்றனர் வணிகர்.”

சுதமனின் நெஞ்சத்துடிப்பு மேலும் கூடியது. “அங்கே செல்வோம்” என்றார். தேர்வலன் “நாம் சென்றுவிடுவதே உகந்தது, அதை சொல்வது என் கடன்” என்றான். “அந்தணர்கள் அவர்களை விழிகொண்டு நோக்குவதே பழி அளிப்பது. பஞ்சகவ்யத்தால் உடல்கழுவி, வேதச்சொல் கொண்டு உளம்கழுவி, ஒருநாள் உணவொழிந்து தூய்மைப்படவேண்டும் என்று நெறி உள்ளது. அத்தனை குலங்களிலும் அவர்களை மைந்தர்கள் நோக்கலாகாது என்னும் நம்பிக்கை உண்டு. அவர்கள் உளம்கட்டும் நுண்சொல் அறிந்தவர்கள். மைந்தர்களை அவர்கள் விழியொடு விழி நோக்கிவிட்டால் அவர்களின் உள்ளங்களுக்குள் ஊடுருவிவிடுவார்கள். அவர்களுக்கு தடைகளேதுமில்லை, ஆகவே சார்வாகர் என்னும் சொல்லையே அன்னையர் அஞ்சுகிறார்கள். தந்தையர் அவர்களை எண்ணி எண்ணி கவலைகொள்கிறார்கள்.”

தேர்வலன் அவர்களைப்பற்றிப் பேச மேலும் விழைந்தான். “அவர்களிடமிருக்கும் சொற்களெல்லாம் நஞ்சில் புடமிட்டவை என்கிறார்கள். மீனெறி துரட்டிமுனை என அவர்களின் நோக்கு இளமைந்தரின் உள்ளங்களில் தைத்து கோத்துவிடும். அவர்கள் மைந்தர்களை இழுத்துச்சென்றுவிடுவார்கள். சென்றவர்கள் பின் மீள்வதில்லை. எந்தச் சொல்லும் எவர் விழிநீரும் அவர்களை சென்றடைவதில்லை. அரசும் முடியும் குலமும் குடியும் அவர்களிடமிருந்து ஒழிகின்றன. அவர்களின் தெய்வங்கள் கைவிட்டு அகல்கின்றன. அவர்களை அதன்பின் சார்வாகர் கூடிய சுடுகாடுகளில் சாம்பல் பூசி, பெருச்சாளி கோவணம் அணிந்து, சடைமுடிக்கற்றையுடன் சார்வாகர்களாகவே காணமுடியும்.”

“சார்வாகன் என்று ஒரு மைந்தன் சென்றுவிட்டால் அவனுக்கு நீரும் அன்னமும் அளித்து பலியிட்டு இறந்தோன் என்று சடங்குகளை முடிப்பதே வழக்கம். இல்லையேல் அவன் சொல்லும் தெய்வப்பழியும் அவன் ஈட்டும் குலப்பழியும் அக்குடிக்கே வந்துசேரும்…” சுதமன் மெய்ப்பு கொண்டார். “விந்தை என்னவென்றால் அவர்கள் பழிப்பது முதன்மையாக அந்தணர்களை. ஆனால் அவர்கள் முதன்மையாக நாடுவதும் அந்தண இளைஞர்களையே. அதோ அந்தச் சார்வாகர்கூட முதற்பிறப்பில் அந்தணராக இருக்கவே வாய்ப்பு மிகுதி…” அவரை நோக்கி புன்னகைத்து “நீங்கள் அஞ்சுவது தெரிகிறது, உத்தமரே. அவர்முன் செல்லாமலிருந்தால் போதும். அவர் நோக்கை நாம் காணாமலிருந்தால் நம்மை அவர் ஒன்றும் செய்ய முடியாது” என்றான் தேர்வலன்.

சுதமன் “நான் அவர் சொற்களை கேட்டாகவேண்டும்” என்று தேரிலிருந்து இறங்கிக்கொண்டார். “உத்தமரே, தங்களுக்கு

அரசகடமைகள் உள்ளன” என்றான் தேர்வலன். “ஆம், அரைநாழிகைப் பொழுது. அவ்வளவுதான். அதனாலொன்றுமில்லை” என்றார் சுதமன். “உத்தமரே, இது எவ்வகையிலும் உகந்தது அல்ல” என்று தேர்வலன் சொன்னான். “நான் அந்தணன். அறிபவை அனைத்தையும் அறிந்து கடந்தாகவேண்டியதை குலப்பொறுப்பாகக் கொண்டவன். அவருடையதும் மெய்வழிகளில் ஒன்றே. நான் கற்ற அரசுசூழ்தல் நூல்கள் அனைத்திலும் சார்வாக மெய்மை என ஒரு தரப்பு கற்பிக்கப்பட்டுள்ளது. சார்வாகம் அறியாமல் அரசுக்கல்வி நிறைவுறுவதில்லை என்றே சொல்வார்கள். ஆனால் நான் கற்றது சார்வாகமா அன்றி சார்வாகப் பழிப்பா என எனக்கே ஐயமுள்ளது. அதை அவரிடமிருந்தே கேட்டு அறிந்துகொள்கிறேன்” என்றார்.

தேர்வலன் “அவர்கள் வேதப்பழிப்பு கொண்டவர்கள். வைதிகரின் நோன்பை முறித்து நெறியை அழிப்பவர்கள்” என்றபடி அவருக்குப் பின்னால் வந்தான். தன் சொற்களாலேயே சுதமன் மேலும் தூண்டுதல் கொண்டுவிட்டார் என்பதை அவன் உணர்ந்துவிட்டிருந்தான். தானறிந்த ஒன்றை சொல்லிவிடவேண்டும் என்னும் எழுச்சியால் பிழை இழைத்துவிட்டோம் என பதற்றம் கொண்டிருந்தான். “சம்புகரே, வேதமறிந்தவன் வேதப்பழிப்பையும் அறிந்திருக்கவேண்டும். அவர்கள் முறிக்கும்படி என் நோன்பு இருக்குமென்றால் அது நோன்பே அல்ல. அவர்கள் அழித்தால் அழியுமென்றால் அது நெறியும் அல்ல” என்றபின் சுதமன் முன்னால் நடந்தார்.

தேர்வலன் தத்தளிப்புடன் தேர் அருகே நின்றுவிட்டிருந்தான். சுதமன் தயக்கமான காலடிகளுடன் நடந்தார். செல்லச்செல்ல அவர் காலடிகள் விசைகொண்டன. அப்போது பெருமுரச

ஓசையை கேட்டார். நின்று செவிகொண்டார். சற்று அப்பால் முரசமேடையில் அது ஓசையிட்டது. அது அமைந்ததும் நகரமே முற்றாக அடங்கியது. கடல் கற்பரப்பாக ஆனதுபோல. முரசறைவோனின் அருகே நின்ற நிமித்திகன் “வெற்றி எழுக! விளங்குக மங்கலம்!” என்று கூவினான். அவன் குரல் தெளிவாக ஓங்கி ஒலித்தது. உரத்த குரல் எழுப்புவதற்கு குலமுறையாகவே பயின்றவன். அது பெண்குரலோ என ஐயுறச்செய்யும் வெண்கலத்தன்மை கொண்டிருந்தது.

“எழுக தெய்வங்கள்! மகிழ்க மூதாதையர்! பொலிக திசைத்தேவர்கள்! விளங்குக ஐம்பெரும் பருக்கள்! ஆகுக பெருமங்கலம்!” என்று அவன் கூவினான். “அறிக குடியினரே, யயாதியின் கொடிவழிவந்தவர், குருவின் குலத்தவர், ஹஸ்தியின் முடிசூடியவர், பிரதீபரின், சந்தனுவின், விசித்திரவீரியரின், பாண்டுவின் மைந்தர், அஸ்தினபுரியையும் இந்திரப்பிரஸ்தத்தையும் ஆள்பவர், பாரதவர்ஷத்தின் முதன்மைப் பேரரசர் யுதிஷ்டிரனின் அறிவிப்பு இது!” முரசு மீண்டும் ஒருமுறை முழங்கி அமைந்தது.

“கேளுங்கள், விண்ணளந்த மணிவண்ணனைப்போல தன் நான்கு கைகளையும் நான்கு புறமும் வீசி பேரரசர் யுதிஷ்டிரன் பாரதவர்ஷத்தை வென்றார். பனிபடு நெடுவரை வடக்கும், உருகெழு குமரியின் தெற்கும் கரைபொரு தொடுகடல் குணக்கும் தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும் கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதல் கட்டின் நீர்நிலை நிவப்பின் கீழும் மேலது ஆநிலை என இத்தொல்நிலத்தை முழுதும் வென்ற முதல் மன்னர் என்றானார். அவருடைய வேள்விப்புரவிகள் எதிர்ப்படைக்கலம் ஒன்றுகூட நில்லாமல் வென்று திறைச்சுமை கொண்டு திரும்பி நகரணைந்துள்ளன.

அவை வெல்க! அவற்றின் குளம்புகள் பட்ட இந்நிலம் வெல்க! வெற்றிவேல் வீரவேல்!” முரசுகள் ஒலிக்க கூடவே நகரின் முழக்கமும் எழுந்தது. “வெற்றிவேல் வீரவேல்!” வெற்றிவேல் வீரவேல்!”

அறிவிப்பாளன் தொடர்ந்தான். “பரிவேள்வியின் நிறைவில் அரசநிறைவுவேள்வி இயற்றப்படவேண்டும் என்பது நெறி. இப்பெருநகரில் அரசப்பெருவேள்வி இதோ முறைப்படி அறிவிக்கப்படுகிறது. நாளை வான்கதிர் வடக்குமுகம் கொள்ளும் முதல் நாளில் எழுகதிர் வேளையில் வேள்விக்கு கால் நாட்டப்படும். வேள்விப்பந்தல் ஏற்கப்படும். வேள்விக்களிறும் வேள்விக்காளையும் வேள்விப்பசுவும் மங்கலம் செய்யப்படும். வேள்விமரம் நடப்படும். நாளை உச்சிப்பொழுதுக்குப் பின் பெருங்கொடையாட்டு தொடங்கும். கருவூலம் முற்றொழிய ஈந்து தன் கையொழிந்து தெய்வங்கள் முன் தன்னை நிறுத்துவார் அரசர். அதன்பின் வேள்விச்செல்வத்தை மட்டும் ஈட்டிக்கொண்டு மும்முடி சூடி அரியணை அமர்வார். வேதம் மழையென குளிர்ந்திறங்கும். அன்னமென பெருகிநிறையும். கன்றென பெற்றுபரவும். பொன் என ஒளிசூடும். மணியென விழிகொள்ளும். அனைத்து மங்கலங்களுமாகி இந்நகரை நிறைக்கும். ஆம், அவ்வாறே ஆகுக!”

மீண்டும் பெருமுரசம் முழக்கமிட அஸ்தினபுரியின் வாழ்த்தோசையும் உவகைக்கூச்சலும் உடலை அறைந்து அனைத்துப் புலன்களையும் மூடியது. சுவர்கள் அதிர்ந்தன. கற்தூண்கள் துடிதுடித்தன. விழிநோக்கை ஒலி மறைத்தது. பின்னர் மெல்ல மீண்டபோது சுதமன் மூச்சுத்திணறிக்கொண்டிருந்தார். விழுந்துவிடாமலிருக்க

ஒதுங்கி கற்தூணை பிடித்துக்கொண்டு நின்றார். மீண்டும் தேருக்கே சென்றுவிடலாமா என்று எண்ணினார். திரும்பி காலடி எடுத்து வைக்கவிருந்தபோது சார்வாகரின் பெருஞ்சிரிப்பொலியை கேட்டார். சிரிக்கும் அம்முகத்தையும் கண்களையும் அருகெனக் கண்டார். திரும்பி அவரை நோக்கி நடந்தார்.

# களிற்றியானை நிரை - 74

### பகுதி ஏழு : பெருசங்கம் – 6

சார்வாகர் உரக்க நகைக்கத் தொடங்கிவிட்டிருந்தார். அவர் எதையோ நோக்கி நகைக்கிறார் என்று அங்கிருந்தோர் எண்ணினார்கள். அவர் நோக்கு எங்கும் பதியாமை கண்டு குழம்பி ஒருவரை ஒருவர் நோக்கிக்கொண்டு அணுகினார்கள். சுதமன் அவருடைய நகைப்பை கண்டார். தன்னை நோக்கி அவர் நகைப்பதாகத் தோன்றியது. அங்கிருந்தோரில் அரசவைத்தோற்றம் கொண்டவர் அவர் மட்டிலுமே. சுதமன் சுற்றிலும் நோக்கிவிட்டு தன் மேலாடையை எடுத்துச் சுழற்றி தலைப்பாகைபோல் அணிந்துகொண்டார். முப்புரிநூல் தெரிய அதை தோளினூடாகக் கழற்றி இடையில் சுற்றிக்கொண்டார்.

ஓசையில்லா நடையுடன் சென்று கூட்டத்தின் பின்னணியில் நின்றார். தன்னருகே விழிகள் பதற நின்றுகொண்டிருந்த அந்தண இளைஞனை பார்த்தார். அவன் உடலே வெம்மைகொண்டிருப்பதாகத் தோன்றியது. அவருடைய நோக்கைக் கண்டு அவன் அஞ்சியதுபோல விழிவிலக்கினான். அங்கிருந்து செல்லப்போவதுபோல் ஓர் அசைவு அவன்

உடலில் ஏற்பட்டது. சுதமன் அவனை ஆறுதல்படுத்துவதுபோல புன்னகைத்தார். அவன் மேலும் அஞ்சி பின்னடைந்தான். இருவரின் தோளினூடாக சுதமன் எட்டிப்பார்த்தார். சார்வாகர் உரக்க பேசிக்கொண்டிருந்தார். எப்போது பேசத்தொடங்கினார்?

அவரால் முதலில் அவருடைய மொழியை புரிந்துகொள்ள முடியவில்லை. அது கீழ்நிலையோர் பேசும் மொழி. அதன் ஒலி மேலும் இழுபட்டு ஒரு நகைப்பு அத்தனை சொற்களிலும் கலந்திருப்பதுபோலத் தெரிந்தது. "நாற்குலங்களே, எண்பெருங்குடிகளே, எளியோரே, கேளுங்கள். இது மெய்யான சொல். நீங்கள் கேட்கும் ஒவ்வொரு சொல்லும் உங்களிடம் விற்கப்படும் பொருள் என நினைவுகூருங்கள். நீங்கள் பெறுவனவற்றுக்கு ஏழுமடங்கு விலை அளிக்கிறீர்கள். காணா விலை, அறியா விலை. குருதியுண்ணும் அட்டையென ஒட்டியிருக்கின்றன அச்சொற்கள் உங்கள் நெஞ்சில். உங்களுக்குள் புகுந்த தீய தெய்வங்கள் என ஆட்டிவைக்கின்றன உங்களை."

"இதோ இத்தெருவில் நின்றிருக்கிறேன். தன்னந்தனியன். அடைய ஏதுமில்லாதோன். ஆகவே காக்கவும் பொறுப்பில்லாதோன். இந்த மண்ணில் இருந்து ஒரு பொடிப் புழுதியைக்கூட எடுத்துச் செல்லாதவன். அறிக, நான் கொள்வதொன்றுமில்லை இப்புவியில்! எனவே கோருவதும் ஏதுமில்லை. நான் அளிக்க வந்தவன். என் சொற்களை செவி கொள்க! அவை உங்கள் சித்தத்தில் வளர்க! அவை உங்கள் வழியென்று உணர்ந்தால் கொள்க, அல்லவென்றால் தள்ளுக! நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்." தன் இடையிலிருந்த பெருச்சாளித்தோல் கோவணத்தை தொட்டுக்காட்டி "இங்கிருந்து என் உடலில்

ஒட்டியிருப்பதென்றால் இது ஒன்றே. இதுவும் என்றுமுள ஒட்டு அல்ல” என்று கூறி அதையும் உருவி அப்பால் வீசிவிட்டு ஆடையற்ற உடலுடன் நின்றார். மண்ணும் சாம்பலும் மூடிய நெடிய கரிய உடல். திரிதிரியாக தோளில் படர்ந்திருந்த சடைக்கற்றைகள். “இது கொடை. கொடைபெற்று விதைக்கும் நெல் நூறுமேனி பெருகும் என்று அறிந்தவர்களே எழுக! கொள்க, இரு கை நீட்டி இச்செல்வத்தைப் பெறுக!”

சுதமன் அந்தக் கூட்டத்தையே நோக்கிக்கொண்டிருந்தார். ஒவ்வொருவரின் விழிகளும் ஒவ்வொரு உணர்வைக் காட்டின. பெரும்பாலானவற்றில் பதற்றமும் ஐயமும் தத்தளிப்பதுபோலத் தோன்றியது. அவர்கள் தங்கள் உடலை அங்கே நிறுத்தி, அதை ஒரு மறைவென்று ஆக்கி, அதற்குப் பின்னால் ஒளிந்திருப்பதுபோல. அவர்களின் விழிகள் இரு சிறு துளைகள். அப்பாலிருந்து அவர்கள் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது ஒரு கிளர்ச்சியூட்டும் நிகழ்வு. அதை எப்படி பிறரிடம் சொல்லிக்கொள்வது என கற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதை உடனுக்குடன் அகத்தே சொல்லென சமைத்துக்கொள்ளவும்கூடும். பிறருக்கில்லாத ஓர் நிகழ்வு தனக்கு நிகழ்ந்துள்ளது. அந்நிகழ்வை சென்று தொடுமளவுக்கு தான் துணிச்சல் கொண்டவனாக இருந்திருக்கிறேன்.

சார்வாகர் எவரையுமே நோக்கியதாகத் தெரியவில்லை, எவரிடமும் என அவர் பேசவுமில்லை. அவர் அங்கில்லாத ஒருவரை நோக்கி பேசுவது போலிருந்தது. அல்லது அங்குள்ள மானுடர் அனைவரையும் ஒன்றெனத் திரட்டிய பேருருவம் ஒன்றுடன் பேசிக்கொண்டிருப்பதுபோல. “எளியோரே, உழைத்து உண்போரே, வரிசெலுத்தி அரசுகளை அமைப்போரே,

அவர்களுக்கு கோட்டையும் அரண்மனையும் கட்டுவோரே, அவர்களுக்கு அணிகளும் ஆடைகளும் செய்வோரே, அவர்களுக்கு ஏவல் செய்வோரே, அவர்பொருட்டு களம்படக் காத்திருப்போரே, அவர்களைப் பாடி புகழ்சேர்ப்போரே, அவர்களுக்கு வேதச்சொல் சமைத்தளித்து வீதம் பெறுவோரே, கேளுங்கள். இதோ உங்களுக்கான சொல். வருக, இதோ உங்களுக்கான மாற்றில்லா மெய்!”

அவருக்கு அச்சொற்களைச் சொல்வதில் ஒரு பயிற்சி இருந்தது. ஒவ்வொரு சொல்லிலும் சவுக்கின் சொடுக்கு எழுந்தது. முச்சந்திகள் தோறும் கூவிக்கூவி நாவுக்குப் பழகிய சொற்கள் அவை. ஆகவே ஒன்றுகூட குறி தவறவில்லை. அவர் சூழ்ந்திருப்போரின் விழிகள் மாறிவிட்டிருப்பதை கண்டார். “அதோ ஒலிக்கிறது உங்கள் பேரரசனின் வேள்விமுரசம். அது உங்களுக்கு கூறுகிறது அவன் மும்முடி சூடுவான் என்று. அவன் அனுப்பிய நான்கு திசைப்புரவிகள் நானிலம் வென்று மீண்டன என்று. அவன் குடி பெருமைகொண்டது என்று. அவன் பெயர் என்றும் வாழும் என்று. அவன் கொடிவழி இங்கே என்றுமிருக்கும் என்று. மானுடச்சருகுகளே, புல்விதைகளே, அதனால் உங்களுக்கு என்ன? நான் கேட்கிறேன், அதனால் உங்களுக்கு என்ன? நீங்களே உசாவுக, அதனால் உங்களுக்கு என்ன?”

“அவன் படைகள் கொண்டுவந்த பெருஞ்செல்வத்தை கைநீட்டிப் பெறுகையில் கேட்டுக்கொள்ளுங்கள், எங்கிருந்து வந்தது அது என்று. உங்களைப்போன்ற தொலைநிலத்து மாந்தர்ப்பெருந்திரள் வயல்களில் பயிரிட்டு, வெறுநிலங்களில் ஆபுரந்து, கடல்களில் அலையாடி ஈட்டியது அது. அதை ஒருவன் வரியெனப் பெற்றான். பிறிதொருவன் கப்பம் எனக் கொண்டான். இங்கே

ஒருவன் அறம் என அளிக்கிறான். நாளை ஒருவன் வேள்விக்கொடை எனப் பெறுவான். நாணில்லையா உங்களுக்கு? உடன்பிறந்தானைக் கொன்று அவன் ஊனை உண்டு வாழும் கீழ்மை அல்லவா இது? பிள்ளைக்கறி தின்னும் பெருமுதலையின் வாழ்வல்லவா இது?”

“இரத்தல் இழிது. இரவலரே, திருடனிடம் இரத்தல் இழிதினும் இழிது. நாணுக, உங்கள் கைகள் இரக்கும் பொருட்டு எழும் என்றால்! மண்வெட்டி பிடித்த கைகள், ஆநிலைக் கோலேந்திய கைகள், மழுவும் உளியும் ஏந்திய கைகள், தறியோட்டும் கைகள் ஏற்க விரியும் எனில் குலமகள் தன் இடைப்பிளவை கடைவிற்க விரிப்பதற்கு நிகர் அது. உங்கள் குடித்தெய்வங்கள் அமைதியிழக்கும். உங்கள் குடிமூத்தோர் நினைவுள் எழுந்து வந்து பழிப்பர். உங்களுள் தோன்றி உங்கள் ஆழம் நாணுறும். உங்கள் குருதியில் முளைக்கும் மைந்தர் உங்கள் நினைவுக்கென கீழ்மைகொள்வர். பசியினால் சாகக்கிடப்பினும் அழுகிய பொருள் உண்ணார் அறிவுடையார். இதோ சுவைநாடி மலம் உண்ண எழுந்திருக்கிறீர்கள், மானுடரே. சிறுமை கொள்க உங்களுக்காக! காறி உமிழ்க உங்கள் நிழல்கள் மேல்!”

சுதமனின் உடல் நடுக்கு கொள்ளத் தொடங்கியது. சார்வாகர் எப்போதுமே தடையற்றுப் பேசுபவர்கள் என அவர் அறிந்திருந்தார். ஆனால் அவ்வண்ணம் ஒருவர் அஸ்தினபுரியின் தெருவில் நின்று பேசமுடியும் என அவர் எண்ணியிருக்கவே இல்லை. அங்கிருந்தோர் அனைவருமே அவ்வண்ணமே உணர்கிறார்கள் என அனைவரின் உடல்களிலும் எழுந்த தவிப்பு காட்டியது. அவர்கள் அங்கிருந்து அகன்றுசென்றுவிட விழைந்தார்கள். ஆனால் அச்சொற்கள் அவர்களை கட்டிவைத்தன. அங்கிருந்து உடனே அகல்பவன்

அச்சொற்களுக்கு தன்னை இலக்காக்கிக்கொள்கிறான். அதை அங்கே வெளிக்காட்டுகிறான். அங்கே அச்சொற்களை எதிர்கொள்ள உகந்த ஒரே வழி அது எவரிடமோ சொல்லப்படுவதென்ற நடிப்புடன் அங்கே நின்றிருப்பது மட்டுமே.

“உணவை மெல்கிறீர்கள். உண்பனவற்றை செரிக்கிறீர்கள். உங்கள் குருதியும் தசையுமென ஆக்கிக்கொள்கிறீர்கள். எஞ்சியதை கழிக்கிறீர்கள். ஒவ்வாதனவற்றை உமிழ்கிறீர்கள். மானுடரே, சொற்களை மட்டும் விழுங்குவதென்ன? அவற்றை உள்ளே கல்லென இரும்பெனச் சுமந்தலைவதென்ன?” என்று சார்வாகர் கூவினார். “யானையை ஆள்கிறான் சிறுமானுடன். ஏன் என்று அறிவீர்களா? அவன் அதை எதனால் கட்டி வைத்திருக்கிறான்? அந்த எடைமிக்க இரும்புச் சங்கிலியாலா? அந்தக் குத்துக்கம்பாலும் துரட்டியாலுமா? அவன் அளிக்கும் சிற்றுணவாலா? அவ்வப்போது செவிபற்றி துதிக்கை தடவி அளிக்கும் எளிய அன்பினாலா? சொற்களால்! சொற்களால்! சொற்களால்!” இரு கைகளையும் மேலே தூக்கி சார்வாகர் சுழன்றார். “உணர்க, சொற்களால்! அறிக, சொற்களால்! தெளிக, சொற்களால்! வெறும் சொற்களால்!”

அன்றொரு யானையிடம் சொல்லாடினேன். அதனிடம் கேட்டேன், உன் அளவிறந்த ஆற்றல் எப்படி இச்சிறு மானுடனுக்கு அடிமையென்றானது என்று. உன்னில் திகழும் கருங்காடு எப்படி இந்நகர் கோட்டையில் அடுக்கப்பட்ட பாறைகளைப்போல் மாறியது என்று. அதன் சிறுவிழிகளில் துயரைக் கண்டேன். அவை கலங்கி வழிய செவி பின்னடைய அது உடல் தணித்தது. அறியேன், நான் உயிர்வாழ வேறு வழியில்லை. எனக்கு இங்குதான் உணவும் துயிலிடமும்

காப்பும் அமைந்துள்ளன. இங்கிருந்து சென்றால் நான் அப்பெருவெளியில் திசையிழந்து அலமறுவேன். அக்காற்றில் கரைந்தழிவேன் என்றது. அதன் விழிகளை நோக்கி நகைத்து அதனிடம் சொன்னேன் “கரிய பேருருவே, காட்டின் விதையே, முகில்வடிவே, உன்னை கட்டியிட்டிருப்பது சொல் என அறிவாயா? பருவடிவம் கொண்டெழும் பெருவிசைகளை கட்டும் அருவமென்றமைந்த அதன் வல்லமையை அறிவாயா?”

அதனிடம் நான் சொன்னேன் “அது ஒலிகளின் தொகை. ஒவ்வொரு ஒலித்துளிக்கும் பொருள் என சிலவற்றை ஏற்றி அதை சொல்லென்றாக்குகிறார்கள். அச்சொற்களுக்கெல்லாம் பொருள் அளிக்கும் காணாப் பெருவெளி என நின்றிருப்பதே மொழி என்றறிக! மதகரியே, மொழியால் கட்டுண்டவன் நீ.” அது செவி முன்மடித்து, நீர்விழிகள் மின்ன என்னை நோக்கியது. நான் அதனிடம் சொன்னேன் “நீ சிறுகுழவியாக இவர்களிடம் வந்தாய். இவர்கள் உன்னிடம் சில சொற்களை சொன்னார்கள். தழை என்றனர். தளை என்றனர். கவளம் என்றனர். கந்து என்றனர். நீர் என்றனர். நில் என்றனர். குனி என்றனர். கொட்டில் என்றனர்.”

அதனிடம் நான் “ஒவ்வொரு சொல்லுடனும் பிறிதொன்றை சேர்த்தனர். ஆணைக்கு அடிபணிதலே அன்னம் என்று உன் நெஞ்சில் பதியச் செய்தனர். பணிக என்று அவர்கள் ஆணையிடுகையில் நீ உன் பேருடல் குறுக்கி நிலம்படிகிறாய். உன் உள்ளத்தில் இனிய தழைகளின் மணம் எழுகிறது. கல்லை தூக்குக என அவர்கள் கூவுகையில் இனிய குளிர்நீர் என பொருள்கொண்டு நீ துதிக்கை நீட்டி சுமை எடுக்கிறாய். என்னை மேலேற்றுக என்று அவர்கள் சொல்கையில் நீ அன்னக் கவளம் என பொருள்கொள்கிறாய். அவர்கள் உன்

மத்தகத்தின் மேல் அமர்ந்து காதுகளை காலால் உதைத்துச் செல் என கூவுகிறார்கள். ஆம், இனிய கரும்பு என நீ காலெடுத்து வைக்கிறாய்” என்றேன். “அமைக என்கிறார்கள். நீ அதை வலி என்று புரிந்துகொள்கிறாய். நில் என்கிறார்கள் நீ அதை கால்நகத்தில் துரட்டியின் கூர் என எடுத்துக்கொள்கிறாய்.”

யானை திகைத்தது. “ஆம், இச்சொற்களுக்கெல்லாம் நான் அளிக்கும் பொருள் வேறு. அவர்கள் அவற்றைக்கொண்டு என்னை பிறிதொன்றை செய்யவைக்கிறார்கள்.” நான் அதன் காதுமடலை பற்றிக்கொண்டேன். “ஒன்று செய்க, அவ்வொலிகளில் இருந்து உன் அகம் அதற்கு அளிக்கும் பொருளை விலக்கிக் கொள்க! அதற்கு அவர்கள் அளிக்கும் பொருளையே கொள்க! குனி என்றால் உன் எழுமத்தகம் தாழ்த்துவதேதான். பணி என்றால் உன் கால்களை மண்பட மடிப்பதேதான். தூக்கு என்றால் துதிக்கையில் எடை சுமப்பதேதான். வேறொன்றில்லை.” யானை என்னிடம் “ஆம், வேறொன்றில்லை” என்றது. “அவ்வாறே, மொழியின் பொருள் செயல் மட்டுமே” என்றேன். “ஆம் ஆம் ஆம்” என்றது அந்த வேழம்.

அன்று மாலை மெலிந்த சிற்றுடல்கொண்ட பாகன் அதனருகே வந்தான். யானையிடம் துரட்டியை நீட்டி “பணிக!” என்றான். அது அசைவிலாது செவிமடித்து நின்றது. “பணிக!” என அவன் ஆணையிட்டான். “எடு காலை!” அது சொல்கொள்ளவில்லை. அவன் துரட்டியால் அதன் நகத்தை கிழித்தான். அது அவனை பின்காலால் மெல்ல தட்டியது. அவன் எலும்பு முறிந்து அக்கணமே உயிரிழந்தான். தன் கால்தளையை உடைத்தது யானை. துதிக்கை தூக்கி பிளிறியது. அக்கணமே தொலைவில்

நீலநிற அலைகள் எனத் தெரிந்த தன் தொல்மலைகளை கண்டுகொண்டது. பின்னர் அதை எதனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

எளியோரே, துயருறுவோரே, கட்டுண்டவரே, கேளுங்கள். சொல்லுக்கு அது எழுப்பும் செயல் மட்டுமே தற்பொருள் என்று கொள்ளுங்கள். சொல்லுக்கு அது விளைவிக்கும் பயன் மட்டுமே பிறபொருள் என்று கொள்ளுங்கள். கடமை என்பது துயரளிக்கும் என்றால் அச்சொல்லின் பொருள் துயரமே. கடமை என்பது சாவில் நிற்கும் என்றால் அச்சொல் குறிப்பது சாவை மட்டுமே. பற்று என்பது தளைப்படுத்தும் என்றால் அது அவ்வாறே. மலராத மெய்யறிவு கொண்டவர்களே, அரசு என்பது அச்சுறுத்துகிறது என்றால் அது அச்சமன்றி வேறல்ல. அரசன் என்பவன் வரிகொள்வான் என்றால் அவன் ஏந்திய கை அன்றி பிறிதல்ல. காவல் என்பது படைக்கலம். நெறி என்பது தண்டனை. அவை என்பது மேல்கீழ் அடுக்கு. குலம் என்பது எல்லை. குடி என்பது சிற்றெல்லை.

உங்கள் உள்ளம் அளிக்கும் பொருளென்பது உங்களுக்குள் முலைப்பாலுடன் புகட்டப்பட்டது. நஞ்சு உங்கள் மூதன்னை அருந்திய சுனையில் கலக்கப்பட்டிருந்தது. அவள் குருதிவழியாக கொடிவழிகளில் ஊறி உங்களுக்கு வந்தது. உங்கள் மைந்தருக்கு அதை அளிக்காதீர். உங்கள் நெஞ்சு கூறும் பொருளை நோக்கி அகன்றுசெல்க கீழ்மையே என்று ஆணையிடுங்கள். துலாவின் மறுதட்டில் எது வைக்கப்படுகிறதோ அதுவே உங்களுக்கு மெய்யாக அளிக்கப்படுகிறதென்று உணர்க! அன்னம் கொடுத்து வெற்றுச் சொல் பெறுகிறீர்கள். அரும்பொன் கொடுத்து பொருளிலாக்

கனவை பெறுகிறீர்கள். கொடுப்பதற்கு நிகர் எனக்கு வேண்டும் என்று கேளுங்கள். அதுவே விடுதலையின் முதற்சொல்.

நான்கு சொற்கள், நான்கு திசைகளென உங்களைச் சூழ்ந்துள்ளன. அறம், பொருள், இன்பம், வீடு. எங்கு திரும்பினாலும் அதில் முட்டிக்கொள்கிறீர்கள். அவை உங்களுக்குக் காவலென உணர்கிறீர்கள், எல்லை என அறிவதில்லை. இதோ இந்தக் கோட்டை என. இது வெண்மையாக்கப்பட்டுள்ளது, இல்லாமலாக்கப்படவில்லை. நான்கு சொற்கள், மானுடரே, நான்கு சொற்கள். நான்கு சொற்களால் தளைக்கப்பட்டிருக்கிறீர்கள். நான்கு சொற்களால் வகுக்கப்பட்டிருக்கிறீர்கள். நான்கு சொற்களுக்குள் உங்கள் அகச்சொற்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அலைகள் எழுந்து எழுந்து அறைவதெல்லாம் அவற்றின் மேலேயே. கொந்தளித்துக் கொப்பளிப்பதெல்லாம் அதற்குள்ளேயே.

நான்கு சொற்கள், அறம் பொருள் இன்பம் வீடு. இளமையில் நா பழகியதும் அளிக்கப்படுகிறது அறம். அன்பில் குழைத்து அன்னத்துடன் கலந்து ஊட்டப்படுகிறது. செய் என்று, செய்யாதே என்று, சரி என்று, தவறு என்று, நன்மை என்று, தீமை என்று, உளது என்று இலது என்று, அன்று என்று ஆம் என்று. நீங்கள் மண்ணில் நிறுத்தப்படவில்லை. அறத்தில் நிறுத்தப்படுகிறீர்கள். நீரிலாடவில்லை, அறத்திலாடுகிறீர்கள். அன்னமென உண்டு, மூச்சென உயிர்த்து, ஒளியெனக் கண்டு, மணமென முகர்ந்து நீங்கள் களித்தது அறத்தையே. அறம் எனும் சொல். மானுடரே, தெய்வமெனத் திரட்டி உங்கள் முன் நிறுத்தப்பட்டிருப்பது அறமென்னும் சொல்லே.

பின்னர் கால் வளர்ந்து கை வளர்ந்து நீங்கள் வெளியே இறங்கினீர்கள். பொருள் என உங்களிடம் கூறினார்கள்.

உழைக்க, சுமைதூக்க, ஏவல்செய்ய, போரிட உங்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் அது. பொருளென்னும் சொல் உங்களை ஆட்டுவித்தது. அறமும் பொருளும் முரண்படக் கண்டு திகைத்தீர்கள். பின்னர் அறமனைத்தும் பொருளென்று உருமாறக் கண்டீர்கள். பொருளே அறமென்றமைந்தவர் வெல்வதை அறிந்தீர்கள். பொருளில் அமர்ந்தீர்கள். பொருளுக்கென விழிநீரும் வியர்வையும் சிந்தினீர்கள், குருதிகொடுத்தீர்கள். அப்பொருளுக்குப் பொருள் என்ன என்று கேட்டீர்கள். அதற்கு இன்பம் என்று மறுமொழி பெற்றீர்கள். அவ்வின்பம் எப்போதும் துளித்துளியாகவே கிடைப்பது ஏன் என வினவினீர்கள். மேலும் இன்பம் என விழைவுகொண்டீர்கள். அதன்பொருட்டு மேலும் பொருள் மேலும் பொருள் என தூண்டப்பட்டீர்கள். மேலும் உழைப்பு மேலும் அடிபணிதல் மேலும் அலைச்சல் என சிக்கிக்கொண்டீர்கள். மேலும் வியர்வை மேலும் விழிநீர் மேன்மேலும் குருதி.

விந்தையான முரண்பாடு, உலகோரே! மிகமிக நுட்பமான பொறி அல்லவா இது? மேலே சிவந்திருக்கிறது இன்கனி. நீங்கள் சிக்கிக்கொண்டிருப்பதோ சேறு. துள்ளி எழுந்தோறும் அமிழ்கிறீர்கள். மேலும் விழைவுகொண்டு எழுகிறீர்கள். இன்பவிழைவே துன்பமென விளையும் இந்தச் சூழ்ச்சியை என்றேனும் எண்ணியிருக்கிறீர்களா? மூழ்கி மூழ்கி இனி எழவியலாதென்றமைகையில் உங்களுக்கு சொல்லப்படுகிறது வீடுபேறு. விடுக, விழைவதனைத்தையும் விட்டு அகல்க, அதுவே பேரின்பம் என்று. இன்பமென வந்தவையெல்லாம் துன்பத்தின் நடிப்புருக்களே என்று. இன்பத்தைத் துறத்தலே இன்பத்தை அடையும் வழி என்று. நன்று, விட்டவர் அடைந்த இன்பம் ஏது என்றால் விடுதலின் இன்பம் என்கிறார்கள். நன்று

நன்று. துறந்தோர் அடையும் பேறு என்னவென்றால் துறவுப்பெருமை என்கிறார்கள். நன்று நன்று மிக நன்று!

விட்டவர் அடைவதெல்லாம் வேறெங்கோ என்பவர் உண்டு. மண்ணை துறந்தால் விண்ணை அடையலாம். அங்கிருப்பதோ இம்மண்ணில் அவர்கள் துறந்தவை அனைத்தும் என்கிறார்கள். துறப்பது அடைவதற்காகவே. அடைவதெல்லாம் துறப்பதற்காகவே என்று அதற்கு பொருள் சொல்கிறார்கள். இங்கிருப்பவை எல்லாம் நீங்கள் அமைத்தவை. இந்தக் கோட்டை, இந்த அங்காடி, இந்த அரண்மனை, இந்தப் பெருமுரசங்கள், ஓங்கிப்பறக்கும் இக்கொடி. ஆனால் இவை அளிக்கும் இன்பங்களை நீங்கள் விழையலாகாது எனப்படுகிறது. அவற்றை நீங்கள் இங்கே விரும்பித்துறந்தால் வேறெங்கோ வேறெவ்வகையிலோ பெறலாம். எளியோரே, இந்த சொற்பசப்புக்கு, இந்தச் சூழ்ச்சிக்கு எப்படி உடன்பட்டோம்? எப்படி உளம் அளித்தோம்?

அறிக, உங்களுக்கு அறம் என பொருள்படும் சொல் வேறு எவருக்கோ இன்பம் என்று பொருள்படுகிறது! உங்களுக்குப் பொருள் என்று நின்றிருக்கும் சொல் உங்கள்மேல் நின்றிருக்கும் சிலருக்கு இன்பம் என்று பொருள் அளிக்கிறது. நீங்கள் இன்பம் என எண்ணுவது அவர்களுக்கு உரிமை என்று பொருள்படுகிறது. நீங்கள் வீடுபேறு என நினைப்பது அவர்களுக்கு வேடிக்கை என்று பொருள்படுகிறது. எண்ணுக மூடரே, எழுந்து நின்று இதோ உரைக்கிறேன். மலையேறி நின்று தொலைவு கண்டவனின் சொல் இது. விடுபட்டபின் திரும்பி சிறையை நோக்கி சொல்லப்படுவது இது. நான்கு மெய்ப்பொருட்களும் பொய். இன்பம் ஒன்றே மெய். இன்பம் அன்றி ஈட்டுவன பிறிதில்லை.

“சார்வாகா, மூடா, சதுர்வித புருஷார்த்தமும் பொய் என்கிறாயா?” என்று ஓர் அந்தணன் கூவினான். அவன் கையில் தர்ப்பை இருந்தது. அவன் தன்னை அங்கே காட்டாமல் திரளில் மறைந்து நின்றிருந்தான். அவனை மீறி முன்னெழுந்துவிட்டிருந்தான். “பொய் மட்டுமல்ல அறிவிலி, ஏமாற்றும் கூட. கன்னம் வைத்து இல்லம் நுழையும் கள்வனின் கையிலிருந்து எழும் துயில்மயக்குப் பொடி அது.” அந்தணன் உடைந்த குரலில் பதறும் கைகளை வீசியபடி முன்னெழுந்தான். “பெரும்பழிகொண்டவனே, கீழ்மகனே” என்று கூவினான். “வேதம் பொய்யா? வேதம் பொய்யென்றா சொல்கிறாய்?” சார்வாகர் உரக்க நகைத்து “அது அக்கள்வனின் கையிலிருக்கும் கடப்பாரை” என்றார்.

“கீழ்மகனே!” என்று கூவியபடி அந்தணன் முன்னால் பாய அவனை அவன் தோழர் இருவர் பற்றி இழுத்துச் சென்றனர். “வாருங்கள் சுரஜரே, இவன் யார்? இரந்துண்டு வாழும் இழிமகன். இவனிடமா சொல்லெடுப்பது?” என்றான் ஒருவன். “அந்தணனே, நீ மட்டும் என்ன உழுதுண்டு வாழ்கிறாயா?” அவன் சீற்றத்துடன் “வேதம் பழித்த வீணனே, உன் நாவை அறுப்பேன். ஈயமுருக்கி ஊற்றுவேன்!” என்று கூவினான். அவனை சுரஜன் பிடித்துக்கொண்டான். “சதமுகரே, என்ன இது? சேற்றுப்பன்றியுடன் மற்போரிடவா செல்கிறீர்கள்? வருக, நமக்கு நம் இடம் உள்ளது” என்றான். “செல்க, உங்களிடம் சொல்ல என்னிடம் சொல் இல்லை. நான் களஞ்சியத்தாரிடமும் காவலரிடமும் பேசுகிறேன், கள்வரிடம் அல்ல” என்றார் சார்வாகர். சுரஜன் “உன்னை கொல்வோம். உன் குருதி காண்போம்!” என்று கைநீட்டி கூவினான். “கொல், வந்து கொல். என்னை கொன்றால் நீயும் என்னைப்போல் ஆகிவிடுகிறாய்” என்றார்.

அவர்கள் ஒருவரை ஒருவர் இழுத்துக்கொண்டு விலகிச் சென்றார்கள். சுதமன் அவர்கள் செல்வதை நோக்கிக்கொண்டிருந்தார். ஒருவரின் கால் இடற இன்னொருவர் தூக்கிக்கொண்டார். அவர்கள் ஏன் வந்துநின்று இதை கேட்டார்கள்? சார்வாகர் அவர்களை நோக்கி சிரித்து “இது உங்களுக்காகவும்தான் அந்தணர்களே, தொழிலென்று எரியோம்புதலைக் கொண்டிருக்கும் எளியோர் நீங்கள்” என்றார். அவர்கள் அவர் குரல் கேட்காதபடி விரைந்து ஓடினார்கள். கூடியிருந்தவர்கள் சிரித்தனர். ஒரு சிலர் அவர்களை அச்சுறுத்தும்பொருட்டு ஓசைகளை எழுப்பினர். களிமகன் ஒருவன் கையில் மொந்தையுடன் அவர்களைத் தொடர்ந்து ஓடினான். காலடி கேட்டு அவர்கள் மேலும் விசைகொண்டு ஓடினர்.

சார்வாகர் தொடர்ந்தார். கேளுங்கள் மானுடரே, நான்கு விழுப்பொருட்கள் என்பது பொய். மானுடனுக்கு விழுப்பொருள் ஒன்றே. அது இன்பம். உண்ணுங்கள், குடியுங்கள், உற்றாருடன் மகிழ்ந்திருங்கள். அதுவே இன்பம். காதலில் ஆடுங்கள், கலைகளில் திளையுங்கள், கணந்தோறும் கற்றுக்கொள்ளுங்கள், அதுவே பேரின்பம். அவ்வின்பத்தை பிறருக்குத் துன்பமில்லாமல் அடைவதற்குரிய நெறிகள் மட்டுமே அறம். அவ்வின்பத்தை அடைவதற்குரியது மட்டுமே பொருள். வந்த வாழ்வில் விழைந்ததை அடைந்து நிறைவுகொள்ளலே வீடுபேறு. ஆகவே இன்புறுங்கள். குற்றவுணர்வின்றி இன்பத்தில் திளையுங்கள்.

மகிழ்ந்திருங்கள். மானுடன் மகிழ்வதையே இங்குள்ள அனைத்தும் விரும்புகின்றன என்று உணருங்கள். இல்லையேல் நீரில் தண்மையும், காற்றில் நறுமணமும்,

கனிகளில் இனிமையும், அன்னத்தில் சுவையும் அமைந்திருக்காது. விண்ணிலிருந்து ஒளி மண்மேல் பொழிந்திருக்காது. வண்ணங்களும் வடிவங்களுமென இப்புடவி பெருகி நம்மை சூழ்ந்திருக்காது. அறத்தின்பொருட்டு இன்பத்தை இழந்தோர் அறத்தையும் இழந்தவரே. பொருளின் பொருட்டு இன்பத்தை இழந்தோர் பொருளை வீணடித்தோரே. வீடுபேற்றின் பொருட்டு இன்பத்தை இழந்தோர் வெறுமையை விலைகொடுத்து பெற்றுக்கொண்டவரே. அறிக, ஐயமின்றி அறிக, அறிந்து தெளிக, எச்சமின்றி தெளிக, எண்ணித் தலைசூடுக, இன்பம் ஒன்றே விழுப்பொருள்! மானுடருக்கு இப்புவியில் அளிக்கப்பட்டுள்ள ஆணை இனிதிருத்தல் மட்டுமே!

அவர் தன் யோகக்கோலைத் தூக்கி “நிலைநிறுத்தப்பட்டது இவ்வுண்மை. நின்று பொலிக இவ்வுண்மை! நீடு வாழ்க இவ்வுண்மை! ஆம், அவ்வாறே ஆகுக!” என்றார். பின்னர் எவரையும் நோக்காமல் அங்கிருந்து திரும்பி நடந்தார். அங்கிருந்தோர் ஒவ்வொருவரும் அவர்களை ஒன்றாகக் கட்டியிருந்த சரடு மறைய தனித்தனியாக ஆனார்கள். ஒருசிலர் மெல்லிய குரலில் பேசிக்கொண்டனர். சிலர் பொருளின்றி சிரித்தனர். சிலர் தலைதாழ்த்தி எடைமிக்க காலடிகளுடன் நடந்தனர். சுதமன் அந்த இளைஞனை நோக்கினார். அவன் வெறிபடிந்த கண்களுடன், உலர்ந்த உதடுகளுடன் நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். சுதமன் தன் மேலாடையை அவிழ்த்து தோளில் இட்டபடி தேர் நோக்கி சென்றார்.

# களிற்றியானை நிரை - 75

**பகுதி ஏழு : பெருசங்கம் – 7**

சுதமன் குருக்ஷேத்ரத்தை அணுகியபோது காலை வெயில் ஏறிவிட்டிருந்தது. அவர் கங்கையினூடாக படகில் சென்று யமுனைக்குள் நுழைந்து காலையில் படித்துறையில் இறங்கி அங்கிருந்த அஸ்தினபுரியின் காவல்மாடத்திலிருந்து விரைவுத்தேர் ஒன்றை பெற்றுக்கொண்டு குருக்ஷேத்ரம் நோக்கி சென்றார். செல்லும் வழி போருக்கான பொருட்கள் கொண்டுசெல்லப்படும் பொருட்டு அமைக்கப்பட்டு விரிவான நெடுஞ்சாலையாக ஆகியிருந்தது. அங்கே போடப்பட்டிருந்த பலகைகள் மண்ணில் மூழ்கியிருந்தாலும் தேரின் சகடத்தைத் தாங்கி உருளச்செய்தன. அந்த ஓசையில் சூழ்ந்திருந்த காடு கலைந்தெழுந்து ஓசையிட்டது.

இருபுறங்களிலும் இருந்து பசுமை பெருகி வந்து சாலையை மூடத் தொடங்கியிருந்தது. தளிர்க்கொடிகள் தேரில் தொட்டுத் தொட்டு ஒடிந்தன. வேர்கள் பலகை விளிம்புகள் மேல் கவ்வி எழுந்துவிட்டிருந்தன. தன்மேல் குத்தி இறக்கப்பட்ட ஆணியை இழுத்து உடலாக்கிக்கொள்ளும் அடிமரம்போல. காட்டுக்குள் உயிரசைவு நிறைந்திருந்தது. இரண்டு இடங்களில் சாலைக்குக் குறுக்கே நரிகள் ஓடின. காடுகளுக்குள் மீண்டும் பறவையோசைகளும் சிற்றுயிர் சருகுகளை உலைத்து ஓடும் அரவங்களும் நிறைந்திருந்தன. அப்பாதையில் அவர் ஒருவரைக் கூட எதிரில் பார்க்கவில்லை. யமுனைக்கரைக்குப் பின் காவல்மாடங்கள் என ஏதுமில்லை. குருக்ஷேத்ரத்தை அஸ்தினபுரி கைவிடத் தொடங்கிவிட்டது என அவர் புரிந்துகொண்டார்.

இன்னும் சின்னாட்களில் இந்தப் பெருஞ்சாலை முழுமையாகவே காட்டுக்குள் மறையும். இந்த தடித்த

மரப்பலகைகள் மண்ணுக்குள் மூழ்கி வேர்களால் கவ்வப்படும். குருக்ஷேத்ரத்திற்கு எவரும் செல்லப்போவதில்லை. அதன் மறுஎல்லையிலிருக்கும் சமந்த பஞ்சகத்திற்குச் செல்லும் பிருகு குலத்து முனிவர்களுக்கும் அனற்குலத்து ஷத்ரியர்களுக்கும் அலைந்து திரியும் யோகிகளுக்கும் வேறு பாதைகள் உள்ளன. குருக்ஷேத்ரம் முற்றாக மறக்கப்பட்டுவிடலாம். அப்படியொரு இடம் உண்மையில் இருந்ததா என்னும்படி. சொல்லில் மட்டும் திகழலாம். சொல்லில் பெருகி கதையென்று ஆகி கதையென்றானமையாலேயே மெய்யல்ல என்றாகி நின்றிருக்கலாம்.

அவர் காட்டைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். அவர் குருக்ஷேத்ரத்தை பார்த்ததே இல்லை. போர் தொடங்குவதற்கு முன்னர்தான் அவரை அமைச்சுப்பணிக்கு எடுத்தார்கள். அப்போது அமைச்சுப்பணிக்கு ஏராளமானவர்கள் தேவைப்பட்டனர். அந்தணர், அமைச்சுக்கல்வி முடித்தவர் என்றாலே பணியாணை அளிக்கப்பட்டது. மெல்லமெல்ல போர் ஒருங்குவதை அவர் பார்த்துக்கொண்டிருந்தார். அன்றெல்லாம் நாளும் செவியில் விழுந்த பெயர் குருக்ஷேத்ரம். அங்கே களம் ஒருங்குகிறது, தெய்வங்கள் திரள்கின்றனர், அங்கே முடிவாகவிருக்கின்றன அனைத்தும். பாரதவர்ஷமே அந்நிலத்தை மையமெனக்கொண்டு சுழன்றுகொண்டிருந்தது. அவர் அஸ்தினபுரியில் இருந்தாலும் குருக்ஷேத்ரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தார். அங்கிருந்த ஒவ்வொருவரும் உடனிருந்தனர் அங்கே.

படைகள் போருக்குக் கிளம்பிச்சென்றன. பின்னர் ஒரே நாளில் குருக்ஷேத்ரம் வெறும் சொல்லென்றாகியது. அச்சொல்

நாள்தோறும் பொருட்செறிவுகொண்டது. போர் நீளநீள அதன் பொருள் மாறிக்கொண்டே இருந்தது. செயல்மையமென, வரவிருக்கும் யுகத்தின் விழியெனத் திகழ்ந்தது, அறத்தின் ஆடற்களமென மாறியது. வீரத்தின் விளைவயல் ஆகியது. பின்னர் ஆறாப் பெரும்புண் என்று பொருள்கொண்டது. அச்சொல்லே துயரளித்தது. உகிர்களும் பற்களும் இரக்கமற்ற விழிகளும் கொண்டு ஒவ்வொருவரையும் வேட்டையாடியது. அதிலிருந்து தப்பி நகர்மக்கள் சென்றுகொண்டே இருந்தனர். அந்தணர் திரள் திரளாக நகர் நீங்கினர். பலர் தங்கள் குடியறம் துறந்து கான் புகுந்தனர்.

ஓரிரு நாட்களிலேயே தலைக்குமேல் இருந்த அனைவருமே சென்றுவிட அவர் மேலெழுந்து வந்தார். தலைமுறைகள் தோறும் முன்னகர்ந்து சென்றடைய வேண்டிய இடங்களை பறந்துசென்று தொட்டார். அதற்குள் நகரிலிருந்து குருக்ஷேத்ரம் என்னும் சொல்லே மறைந்துவிட்டிருந்தது. தெருக்கள்தோறும் போர்க்காட்சிகளை சூதர்கள் பாடிக்கொண்டிருந்தனர். ஆனால் அவற்றை கேட்டவர்கள் அனைவருமே அப்போரை அறியாதவர்கள். அதில் எதையும் இழக்காதவர்கள். அங்கே தன் குலக்குருதியில் ஒருதுளியேனும் சிந்த நேர்ந்தவர்கள் அச்சொல்லை பிறிதொருமுறை செவிகொள்ளவில்லை.

சுரேசர் ஆணையிட்டபோது அவர் செவிக்கு அது வெறும் சொல்லென்றே திகழ்ந்தது. செல்ல ஓர் இடம், ஓர் ஊர். அவர் அந்நிலத்தை பார்த்திருக்கவில்லை என்பதுகூட அப்போது உறைக்கவில்லை. வரும்வழியில் சார்வாகரின் சொற்கள் அவர் செவிகளை நிறைத்தன. ஆனால் தேர் கங்கைநோக்கி செல்லச்செல்ல அவர் அச்சொற்களை காற்றில் உதறிக்கொண்டே வந்தார். கங்கையில் படகிலேறி அமர்ந்ததும்

துயின்றுவிட்டார். விழித்துக்கொண்டபோது சார்வாகரின் நினைவு அகலே எங்கோ சென்றுவிட்டிருந்தது. அவருடைய தோற்றமும் விழிகளும்கூட மங்கலான ஓவியமாகவே எழுந்தன. படகு யமுனையை அடைவது வரை அவர் எதைப்பற்றியும் எண்ணவில்லை. கரையோரக் காட்சிகளிலேயே உளம்தோய்ந்திருந்தார். பின்னர் உணர்ந்தார், அவர் மகிழ்ந்துகொண்டிருந்தது அக்காட்சிகளில் அல்ல, அங்கிருந்த அமைதியில் என்று. ஆறு கரைதொட்டு ஒழுக மரக்கூட்டங்கள் தங்கள் நிழல்களுடன் இணைந்து உறைந்தவைபோல் இருந்தன. மாபெரும் ஓவியத்திரைச்சீலை ஒன்றில் சிற்றுயிர் என அவர் ஊர்ந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது.

அசைவின்மை அவர் உள்ளத்தையும் அசைவின்மை கொள்ளச் செய்தது. உண்மையில் அப்படி அல்ல என்று பின்னர் எண்ணினார். முதலில் அந்த அசைவின்மையில் அவருடைய சொற்கள் கொந்தளிக்கும் உள்ளம் சென்று அறைந்து அறைந்து சிதறிக்கொண்டிருந்தது. அவர் விழிகள் அந்தப் பரப்பில் அசைவுகளுக்காகத் தேடி சிறு சிறு அசைவுகளை கண்டடைந்தன. பின்னர் மெல்லமெல்ல சலித்தது உள்ளம். விழி சோர்ந்தது. ஒட்டுமொத்தமாக வெறுமனே நோக்கி அமர்ந்திருந்தார். உள்ளம் புறவுலகை தானென ஆக்கிக்கொண்டது. மெல்ல அமைதியடைந்து இன்மையென்றாகியது. அந்த ஊழ்கநிலை அவர் இருப்பை இனிக்கச் செய்தது. இனி நான் திரும்பப்போவதில்லை. இது கிளம்புதல் மட்டுமே. இது பறந்தெழல். இது துறவு.

மீண்டும் அவர் அகமசையப் பெற்றது குருக்ஷேத்ரம் என்னும் சொல் வளரத் தொடங்கியபோதுதான். சூழ்ந்திருந்த காட்டிலிருந்து குளிர் என வந்து அது தொட்டது. குருக்ஷேத்ரம்.

எப்படி இருக்கும் அந்நிலம்? குருதிபெருகிய நிலம். எரிபரந்து கருகிய நிலம். நாகர்நிலம். அறவெளி. எத்தனையோ சொற்கள், காட்சிகள். ஆனால் எவையுமே அதன்மேல் ஒட்டவில்லை. அது வேறெங்கோ வேறெவ்வகையிலோ இருந்தது. அவர் சென்று காணப்போகும் அந்நிலம் முற்றிலும் பிறிதொன்றாகவே இருக்கப்போகிறது. முற்றிலும் அறியப்படாததாக. அவருக்கு மட்டுமாக எழுவதாக. தன்னை காட்டிவிட்டு அவ்வண்ணமே மூடிக்கொள்வதாக.

குருக்ஷேத்ரம் அணுகுவது நெடுந்தொலைவிலேயே தெரியும் என அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவ்வண்ணம் எந்தத் தடயமும் தெரியவில்லை. பின்னர்தான் கைவிடப்பட்ட காவல்மாடங்களை கண்டார். அவை கொடிகள் படர்ந்தேறி பட்டமரங்கள்போல உருமாறிவிட்டிருந்தன. சில இடங்களில் யானைகளால் குத்திச் சரிக்கப்பட்டிருந்தன. ஒருகணத்தில் கண்களுக்குள் ஒளி பீறிட்டு நிறைவதுபோல் உணர்ந்து கைகளால் மூடிக்கொண்டார். பின்னர் உணர்ந்தார், அவர் குருக்ஷேத்ரத்துக்குள் நுழைந்துவிட்டிருந்தார். தேர்ப்பாகன் "அணைந்துவிட்டோம், உத்தமரே" என்றான். "காங்கேயரின் படுகளத்திற்குச் செல்க" என்று சுதமன் சொன்னார்.

குருக்ஷேத்ரத்தை இருபக்கமும் வெறித்தபடி அவர் சென்றார். அது ஒரு கடல் வற்றிய அடித்தளம் போலிருந்தது. சேறு உலர்ந்த குவைகள், மேடுகள், அலைகள் என செம்மண்பரப்பு வந்துகொண்டே இருந்தது. உயிரசைவே இல்லை. அல்லது இச்செம்மண் ஒரு பெரும்போர்வை. இதற்கு அடியிலுள்ளன அனைத்தும். போர்த்தப்பட்டு, அழுத்தி மூடப்பட்டு, அவை காத்திருக்கின்றன. அவர் சூழ விழியோட்டி எதையேனும் வடிவென அடையாளம் காணமுடியுமா என்று பார்த்தார்.

வெறும் மண். விழியறிந்த எதையும் காட்டாத வடிவங்கள். சோர்ந்து அவர் தேர்த்தட்டில் அமர்ந்துவிட்டார்.

“நரிகளும் நாய்களும் நிறைந்திருக்கும் என நினைத்தேன்” என்றான் தேர்ப்பாகன். “நீர் இங்கே வருவதில்லையா?” என்று சுதமன் கேட்டார். “இல்லை, நான் புதியவன்…” என்று பாகன் சொன்னான். “இங்கே எவருமே வருவதில்லை, உத்தமரே.” “அவரை எவர் பார்த்துக்கொள்கிறார்கள்?” என்று சுதமன் கேட்டார். “அவரை கங்கர்கள் பார்த்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு காடு வழியாக வேறொரு கழுதைப்பாதை உள்ளது. அவர்களுக்கும் நமக்கும் எந்தச் சொல்லுறவும் இல்லை.” சுதமன் “அவர்கள் நம்முடன் எதையுமே பகிர்வதில்லையா?” என்றார். “அவர்கள் பேசும் மொழியே வேறு” என்றான் பாகன்.

குருக்ஷேத்ரம் அவர் நினைத்திருந்ததுபோல இல்லை என்பது உண்மைதான் என்று சுதமன் எண்ணிக்கொண்டார். அது எவ்வண்ணமிருக்கும் என எண்ணினேன்? விழிநிறைப்பதாக, உளம்பதறச் செய்வதாக. அல்ல, சொல்பெருகச் செய்வதாக. இங்கிருந்து மீண்டால் சிலநாட்களேனும் என்னுள் சொற்கள் எழுந்து குவியவேண்டும். ஒரு காவியத்தை நான் எழுதவேண்டும். பிறர் அறியாத சில அதில் இருக்கவேண்டும். அவர் புன்னகைத்துக்கொண்டார். அந்த எளிய ஆர்வமே மானுடரை புதிது தேடச் செய்கிறது. அறிந்த ஒன்று என் உடைமை. அது என்னை வேறுபடுத்துகிறது, அறியாதோரிலிருந்து மேலெழச் செய்கிறது. அதன்பொருட்டு நான் என் அடித்தளத்தை புரட்டிப்போடுவனவற்றையும் அறிய முற்படுவேன்.

அப்போது ஓர் அலை என சார்வாகரின் சொற்கள் அவர் செவிகளில் வந்தறைந்தன. குருதி. அவர் குருதியைப்பற்றி ஏதோ சொன்னார். ஆம், குருதியைப்பற்றித்தான். ஆனால் வேறொன்று. சொற்களுக்கு பொருளேற்றம் நிகழ்வதைப் பற்றி. குருதி என்றால் குலம், மரபு, மைந்தன், பற்று. குருதியென்றால் உயிர்க்கொடை, வீரம், வெற்றி. அல்ல, குருதி என்றால் குருதி மட்டுமே. குருதி அன்றி வேறேதுமில்லை. அதை உணர்ந்தவர்கள்தான் அஸ்தினபுரியை விட்டு அகன்றனர். குருக்ஷேத்ரத்தை முற்றிலுமாக மறந்தனர். எப்போதும் அப்படித்தான். தாங்கள் புழங்கும் சொற்களின் பொருட்கள் மாறிவிடும்போது மானுடர் திகைக்கிறார்கள். வெறுமைகொள்கிறார்கள். துறந்துசெல்கிறார்கள்.

நெடுந்தொலைவிலேயே படுகளம் தெரிந்தது. அதைச் சூழ்ந்து நாலைந்து தாழ்வான குடில்கள் இருந்தன. மூங்கிலால் ஆன வேலி கட்டப்பட்டு அவற்றின் எல்லைக்கழிகளில் கங்கர்களின் துள்ளும்மீன் கொடி பறந்துகொண்டிருந்தது. அவர்களின் தேர் அணுகுவதை குடிலில் இருந்து ஒருவன் வந்து எட்டிப்பார்த்தான். ஒரு கொம்பு ஒலித்தது. தேர் அணுகுந்தோறும் படுகளத்தின் காட்சி பெருகி அருகணைந்தது. சுதமன் பதற்றம் ஓய்ந்து நீள்மூச்செறிந்தார்.

சுதமன் படுகளத்தைச் சூழ்ந்து அமைக்கப்பட்டிருந்த மூங்கில்வேலியை அணுகியபோது அங்கே வந்து நின்ற கங்கர்கள் அவரை முறைப்படி வாழ்த்தி வரவேற்றனர். அவர் தேரிலிருந்து இறங்கி தன்னை அறிமுகம் செய்துகொண்டார். அவர்களில் மூத்தவர் முன்னால் வந்து “என் பெயர் மிருகாங்கன். இந்த குழுவிற்குத் தலைவன். நாங்கள் இங்கே

முறைவைத்து பிதாமகரை பேணுகிறோம்” என்றார். “பிதாமகர் உடல்நலம் குன்றாமல் குறையாமல் அவ்வண்ணமே இருந்துகொண்டிருந்தது. நேற்று காலை முதல் முற்றிலும் அமைதியாகிவிட்டார். நோயென ஏதுமில்லை. வலி மிகுவதாகவும் தெரியவில்லை. ஆனால் நாடிகள் அடங்கிவருகின்றன. உடல் பெரும்பகுதி குளிர்ந்துவிட்டிருக்கிறது” என்றார்.

“இதை அஸ்தினபுரிக்கு தெரிவித்தீர்களா?” என்று சுதமன் கேட்டார். “இல்லை” என்று மிருகாங்கன் சொன்னார். “எவருக்கும் தெரிவிக்கலாகாது, இங்கே எவருமே வரக்கூடாது என்பது பிதாமகரின் ஆணை. கங்கர்குலத்திற்குக்கூட அவருடைய இறப்பை அன்றி எதையுமே தெரிவிக்கலாகாது என்று கூறியிருந்தார்.” சுதமன் “நான் அரசரின் ஆணைப்படி அவரை பார்க்கவந்தேன்” என்றார். “அவர் இங்கே இருக்கும் நிலையை அவர்கள் மறந்துவிட்டிருப்பார்கள் போலும்” என்று மிருகாங்கன் சற்று கசப்புடன் சொன்னார். “இப்போது ஒரு சொல்லும் உணரும் நிலையில் அவர் இல்லை. எங்கள் குரல் மட்டுமல்ல மருத்துவர் குரலையும் அவர் கேட்கவில்லை. நேற்று உச்சிக்குப்பின் உணவோ நீரோ பெற்றுக்கொள்ளவுமில்லை. மெய்யுரைப்பதென்றால் எஞ்சும் ஒரு சில நாடிகள் அணைவதற்காகக் காத்திருக்கிறோம்.”

சுதமன் “என் கடனை நான் செய்யவேண்டும். அஸ்தினபுரியின் செய்தியை அவரிடம் நான் கூறுகிறேன். அரசர் அவருக்கு ஒரு பரிசிலும் அளித்திருக்கிறார்” என்றார். மிருகாங்கன் சிரித்துவிட்டார். “பரிசா, அவருக்கா?” என்றார். “எனக்கு உரைக்கப்பட்டது அது” என்ற சுதமன் “உள்ளே செல்வோம். நான் மருத்துவரிடமும் பேசவேண்டும்” என்றார். மிருகாங்கன்

“இப்போது அங்கே மருத்துவர் அவர் நாடியை நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முடிவெடுக்கட்டும், நீங்கள் எப்போது அவரை சந்திக்கலாம் என்று. நீங்கள் வந்துசேர்ந்த செய்தி அவர்களுக்கு சொல்லப்படும்” என்றார். சுதமன் “நன்று, நான் காத்திருக்கிறேன்” என்றார்.

மிருகாங்கன் “சற்று அமர்ந்து இளைப்பாறுக! இன்நீர் அருந்துக! இந்தப் பயணம் களைப்பூட்டுவது” என்றார். சுதமன் அவருடன் சென்று குடிலின் மூங்கில் பீடத்தில் அமர்ந்தார். இளையவர் இன்நீர் கொண்டுவந்து தந்தார். சுதமன் அதை அருந்தியபடி “அவர் தன்னிலையுடன் இருந்தாரா?” என்று கேட்டார். “பிதாமகர் நேற்று முன்னாள் வரை அவ்வப்போது ஓரிரு சொற்கள் பேசிக்கொண்டுதான் இருந்தார். நாம் பேசுவதை செவிமடுப்பார், சொற்கள் உளம்செல்வது விழிகளில் தெரியும்” என்று இளைய கங்கர் சொன்னார். “எங்கள் குலத்தவர் குருக்ஷேத்ரப் போரில் கலந்துகொள்ளலாகாது என்று பிதாமகர் ஆணையிட்டிருந்தார். நாங்கள் போரில் கலந்துகொள்ள விழைந்தோம். போருக்கு கிளம்புவதற்கு சித்தமானோம். உண்மையில் ஓராண்டாக படைப்பயிற்சியும் முடித்தோம். ஆனால் பிதாமகரிடமிருந்து ஆணை வந்தது, போரை ஒழியும்படி. எங்கள் போர் இது அல்ல என்று அவர் சொல்லியிருந்தார். எங்களுக்கு பெருத்த ஏமாற்றம். ஆனால் அவருடைய ஆணையை நாங்கள் மீறமுடியாது.”

“அவரே எங்கள் குலமூதாதை. அவர் உயிருடனிருக்கையிலேயே எங்கள் ஊரில் அவர் தெய்வமென கோயில்கொண்டு பலிபெற்றுக்கொண்டும் இருந்தார்” என்று மிருகாங்கன் சொன்னார். “அவர் இப்போரில் களம்படுவார் என்று எங்களுக்கு சொல்லியிருந்தார். களத்தில் அவரை

நாங்கள் வந்து காணவேண்டும் என்றும் கங்கர்நிலத்திலேயே அவருடைய உடல் கங்கர்முறைப்படி எரியூட்டப்படவேண்டும் என்றும் கூறியிருந்தார். ஆகவே அவர் களம்விழுந்தார் என்னும் செய்தியை அறிந்ததுமே நாங்கள் அங்கிருந்து கிளம்பிவிட்டோம். இங்கு வந்தபோது போர் முடிந்துவிட்டிருந்தது. அவர் வெறும்களத்தில் வானை நோக்கியபடி அம்புப்படுக்கைமேல் கிடந்தார்.”

“நாங்கள் அவரை சூழ்ந்துகொண்டோம். அவரை காவல் காத்தோம். அவர் உடலை இங்கிருந்து அகற்றமுடியாது என்பதனால் அவர் உயிர்விடுவதற்காக இங்கே காத்து அமர்ந்தோம். ஆனால் அவர் இப்படி மாதக்கணக்காக இங்கே கிடப்பார் என நாங்கள் எவ்வகையிலும் எண்ணவில்லை. அவருடைய உடல்நிலை மாறுதலே இல்லாமல் நீடித்ததும் என்ன செய்வதென்று குலக்குழு கூடி உசாவினோம். அவர் விழைவதுவரை இங்கே இவ்வண்ணமே அவருடைய இருத்தல் நீடிக்கட்டும். எங்கள் குலத்தவர் சூழ்ந்து அவருடன் உரையாடிக்கொண்டிருப்போம் என்று முடிவுசெய்தோம்.”

“ஆனால் அவரிடம் என்ன பேசுவதென்று எங்களுக்கு தெரியவில்லை. எங்கள் உரையாடல் எங்களுக்குள் நிகழ்வதாக ஆகிவிடலாகாது என உணர்ந்தோம். அவருக்கு உகந்தவற்றைப் பேச எண்ணினோம். எங்கள் குலச்செய்திகளை சொன்னோம். அவர் அதை விழையவில்லை. அஸ்தினபுரியிலும் இந்திரப்பிரஸ்தத்திலும் நிகழ்வன எதையும் அவர் செவிகொள்ளவில்லை. ஒருமுறை எங்கள் குடிமூத்தவர் ஒருவர் எங்கள் குலக்கதை ஒன்றை சொன்னார். கங்கர்குலத்தவளாகிய கௌதமி என்னும் முதுமகளின் கதை அது. அவள் மைந்தன் நாகம் கடித்து நஞ்சேறி இறந்தான்.

அவள் துயருற்றிருக்கையில் அர்ஜுனகன் என்னும் வேடன் அவளிடம் அந்நாகத்தை சுருக்கிட்டு பிடித்துக் கொண்டுவந்து அளித்து நீ உன் பழியை தீர்த்துக்கொள் என்றான். அவள் அவனிடம் வாழ்வின் நெறியை சாவு எவ்வண்ணம் வகுக்கிறது என்று விரித்துரைத்தாள்.”

“அந்நெறிநூலைக் கேட்டதும் பிதாமகர் எதிர்வினையாற்றினார். மெல்ல முனகி விழிதிறந்து அந்நூலில் கூறப்பட்ட நெறித்தொகை முதன்மையான ஒன்று, அதை முறைப்படுத்திச் சொல்க என எங்களுக்கு ஆணையிட்டார். நாங்கள் எங்கள் குலப்பாடகரை வரவழைத்து அதை பாடலாக சொல்கோத்தோம். மீண்டும் அவர் முன் அதை ஓதியபோது அவர் விரும்பி கேட்டார். முகம் மலர்ந்து ஆம் ஆம் ஆம் என்று மும்முறை சொன்னார். அதை எங்கள் குலத்திற்குக் கொண்டுசென்று பிதாமகரின் சொல் பெற்ற நெறிநூல் என அறிவித்தோம். அதன்பின் இல்லறத்தை வகுத்துரைக்கும் சுதர்சனனின் கதையை அவர் முன் பாடினோம். அதையும் அவர் ஏற்றருளினார்.”

“அதன்பின் கண்டுகொண்டோம், பிதாமகர் நாடுவது நெறிநூல்களையே என்று. ஆகவே எங்கள் குடியின் ஊர்கள் அனைத்திற்கும் தூதனுப்பி பாடகர்களை வரச்சொன்னோம். அவர்கள் பிதாமகர் முன் அமர்ந்து நெறிநூல்களை பாடச்செய்தோம். அவர் சொல் சொல் எனக் கேட்டு ஏற்றார். ஒரு சொல்லில் உடன்பாடில்லை என்றால்கூட உடலை அசைத்து எதிர்வினையாற்றினார். கால்கட்டைவிரல் அசைந்தால் அச்சொல் மாற்றப்படவேண்டும். கைகளின் கட்டைவிரல் அசைந்தால் அந்நெறியே மாற்றப்படவேண்டும்.

தலை அசைந்தால் அந்நூலே ஒவ்வாதது. முகம் மலர்ந்து ஆம் என்று உரைத்தால் அந்நூல் அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.”

“அவ்வண்ணம் இங்கே சென்ற மாதங்களில் உயர்ந்த கதைகளினூடாக வாழ்வின் பொருளையும் மீட்பின் வழிகளையும் உசாவி வகுத்துரைக்கும் இருநூற்றெண்பத்திரண்டு நெறிநூல்கள் அவர் முன் ஓதப்பட்டன. எங்கள் குலநெறிகள் முடிந்ததும் வேறு குலங்களில் இருந்து நெறிநூல்களை கொண்டுவரச்சொன்னோம். பின்னர் அயல்நிலங்களில் இருந்தும் தொலைநாடுகளில் இருந்தும் நெறிநூல்களுடன் பாணர்களை அழைத்து வரச்சொன்னோம். இங்கே குடிகள் நடுவிலும் அரசவைகளிலும் பேசப்படும் அனைத்து நூல்களும் அவர் முன் வந்தாகவேண்டும் என்பது நாங்கள் வகுத்துக்கொண்ட நெறி.”

“அந்த முந்நூற்று எண்பத்தெட்டு நூல்களில் பிதாமகர் ஏற்றுக்கொண்ட நூல்கள் இருநூற்றுஎழுபத்திரண்டு.” நேற்று முன்நாள் இங்கே இளைய யாதவர் வந்திருந்தார். அவர் உரைத்ததே அறுதியான நெறிநூல்” என்றார் மிருகாங்கன். திகைப்புடன் சுதமன் “இளைய யாதவரா? இங்கா?” என்றார். “ஆம், அவர் வருவார் என பிதாமகர் எதிர்பார்த்திருந்தார் எனத் தோன்றியது. காலையில் தனியாக நடந்து வந்தார். அவரை தொலைவிலேயே கண்டுவிட்டோம். அவருடைய வருகையை உரைக்கும்பொருட்டு உள்ளே சென்றோம். அப்போது பிதாமகர் புன்னகை புரிந்துகொண்டிருந்தார்” என்றார் இளம் கங்கர்.

“அவரை அழைத்து வா என்று பிதாமகர் ஆணையிட்டார். அவர் உள்ளே சென்று அமர்ந்தார். இருவரும் பேசிக்கொள்ளவில்லை. அல்லது இருவரும் எவ்வகையிலோ

பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள். இளைய யாதவர் நூல் ஒன்றை சொல்லத் தொடங்கினார். அதை அருகமர்ந்து நாங்கள் ஏடுபெயர்த்தோம். ஒவ்வொரு சொல்லுக்கும் தலையசைத்து அதை பிதாமகர் ஏற்றார். இளைய யாதவர் நூலுரைத்து முடித்ததும் பிதாமகர் கைகளைக் கூப்பியபடி இளைய யாதவரிடம் யாதவரே என் முன் வந்து நிலைகொள்க என்றார். இளைய யாதவர் அவ்வண்ணமே சென்று நின்றார். நீர் எவரோ அவ்வண்ணமே தோன்றுக என்றார் பிதாமகர். இளைய யாதவர் புன்னகைத்ததை கண்டேன்.”

“பீஷ்ம பிதாமகர் மெய்ப்பு கொண்டார். அவர் உடல் துடிப்பு எழுந்து அடங்கியது. விழிநீர் வழிய அவர் பாடல் என ஒன்றை சொன்னார். அவ்வண்ணம் ஒரு செய்யுளை அவர் சொல்வார் என நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே எவரும் எழுதிக்கொள்ளவில்லை. பின்னர் நாங்கள் ஒவ்வொருவரும் நினைவுகூர்ந்த சொற்களைக்கொண்டு அப்பாடலை மீட்டமைத்தோம். இளைய யாதவர் அவரை வாழ்த்திவிட்டு ஒரு சொல்லும் உரைக்காமல் நடந்து விலகினார். பிதாமகரின் சொற்கள் அடங்கின. விழிகள் மூடின. எல்லா நரம்புகளும் ஓயத்தொடங்கின. கால்விரல்களிலிருந்து உடல் குளிர் அடையலாயிற்று” என்றார் இளைய கங்கர்.

“இந்த இருநூற்றுஎழுபத்திரண்டு நெறிநூல்களையும் ஒற்றை நூல்தொகை என எழுதிச்சேர்க்கலாம் என எங்கள் குலக்குழு முடிவு செய்தது” என்று மிருகாங்கன் சொன்னார். “அவற்றை இப்போது தொகுத்து ஏடுகளில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். பிதாமகர் உரைத்த இறுதிப்பாடல் அந்நூல்களை நிறுவுகிறது என்பதனால் இப்போது நிறுவுசொல் என்றே அந்நூல்கள்

கருதப்படுகின்றன. அனுசாசன நிரை என்றே அவற்றுக்கு பெயர் இட்டிருக்கிறோம்” என்றார் இளம் கங்கர்.

மிருகாங்கன் “பிதாமகர் ஏற்பையும் மறுப்பையும் எவ்வண்ணம் நிகழ்த்துகிறார் என்பது எங்களுக்கு திகைப்பூட்டுவதாகவே இருந்தது. அவர் முதன்மை நெறிநூல்கள் பலவற்றை மறுத்து விலக்கினார். கேட்டதுமே மெய்யென்று தோன்றுபவை. கிருதயுகத்தின் ஒளிபடிந்தவை. அவர் ஏற்ற நூல்கள் பல எளியவை, கிராதரும் நிஷாதரும் கடைக்கொள்பவை. தொன்மையான அசுரப்பேரரசர்களும் அரக்கர்குடித்தலைவர்களும் வகுத்த நூல்களும் அவற்றில் உண்டு. எங்கள் குழப்பம் மிகுந்தபடியே வந்தது. ஆனால் மறுசொல்லின்றி செவிகொண்டோம். முறைப்படி இவற்றைத் தொகுத்தபோதுதான் உணர்ந்தோம், இந்நூல்களினூடாக எழுவது எழும் கலியுகத்திற்கான நெறி என்று” என்றார்.

“கிருதயுகத்திலும் திரேதாயுகத்திலும் துவாபர யுகத்திலும் இருந்து எவையெல்லாம் கலியுகத்திற்கு வந்துசேரவேண்டுமோ அவற்றை மட்டுமே பிதாமகர் கொண்டார். எவை கலியுகத்தில் மாற்றாக பொருள்படாதமையுமோ அவற்றை. கலியுகத்திற்கான நெறிகளை மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் கண்டடைந்தார். அவை ஒன்றென ஆக்கப்பட்டதே இந்த நிறுவுசொல் என்னும் நூல்தொகை. எழுயுகத்திற்கான அறம் பொருள் இன்பம் வீடு என நான்கையும் அறுதிபடச் சொல்லும் பிறிதொரு நெறிநூல் இல்லை என்று துணிந்தோம்” என்றார் மிருகாங்கன்.

“பிதாமகரின் அந்த அனுசாசனப் பாடல் என்ன?” என்றார் சுதமன். “பாடுக!” என்றார் மிருகாங்கன். இளம் கங்கர் கைகூப்பி கண்மூடி அந்தப் பாடலை சொன்னார்:

நன்மை தீமைகள்

அசைவன அசையாதவை

அனைத்தும் அவனே என்று அறிக!

நிகழ்வனவும் வருவனவும்

அனைத்தும் அவனே எனத் தெளிக!

உடல்கொண்டோருக்கு

இறுதிக்கணத்தில் காலவடிவம் என எழுபவன்

நாம் அறியாதன அனைத்தும் ஆன முழுமை

சிறந்தவை நலம் அளிப்பவை

இன்ப துன்பங்களும்

எண்ணித்தொட முடியாத அவனே என உணர்க!

அவனைவிட மேலான ஒன்றில்லை

சொல்லப்பட்ட இவையனைத்தும் அவனே

சொல்லப்படாதவையும் அவனே

புடவிப்பெருக்கின்

தோற்றமும் துலக்கமும் மறைவும் அவனே

பழுதற்றவன்

மேலானவன்

வீடுபேற்றை விரும்புபவனுக்கு பற்றுக்கோல் ஆனவன்

அழிவற்றவனாகிய நாராயணன்.

அறிக நெஞ்சே!

பணிக!

ஆம் அவ்வாறே ஆகுக!

சுதமன் தலைகுனிந்து அச்சொற்களை மீண்டும் உளம் மீட்டியபடி அமர்ந்திருந்தார். இளம் கங்கர் “இறுதியாக ஒரு நாகசூதன் வந்தான். ஒரு அரசப்பெருநாகம் வெடிப்பிலிருந்து கிளம்பி தொலைவில் அணுகி வருவதைக் கண்டதும் அஞ்சி அதை எவ்வகையிலாவது தடுத்து நிறுத்த முடியுமா என்று பார்த்தோம். அதை நோக்கி ஓடியபோது அது மறைந்தது. எவ்வண்ணம் மறைந்தது என்று எண்ணி சூழ நோக்கியபோது அந்த நாகசூதன் வேலிவாயிலில் நின்றிருக்கக் கண்டோம். அருகே வந்து அவனைத் தடுப்பதற்குள் அவன் உள்ளே சென்றுவிட்டான். நாங்கள் அவனைத் தொடர்ந்து உள்ளே சென்றோம்” என்றார். சுதமன் திகைப்புடன் ஏறிட்டுப் பார்த்தார். மிருகாங்கன் தொடர்ந்தார்.

“பிதாமகர் அப்போது தனிமையில் கிடந்தார். அவன் அவர் அருகே அமர்ந்திருந்தான். அவர்கள் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் அவர்களுக்குள் ஓர் உரையாடல் நிகழ்ந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது. அவர்கள் ஒருவரை ஒருவர் உணர்ந்தபடி அங்கே திகழ்ந்தனர். ஒருநாழிகைப்பொழுது. அதன்பின் அவன் எழுந்துகொண்டான். பெருமூச்சுடன் வணங்கிவிட்டு திரும்பிச் சென்றான். அவன் வெளியே வந்தபோது அவன் விழிகளை கண்டோம்.

நாகவிழிகள், இமையா மணிகள். அவன் எங்களை அறியவே இல்லை. அவன் இந்தத் திறந்தவெளியில் இறங்கிச் சென்று மறைந்தான். அவன் நாகமென ஆகி மறைவான் என எண்ணி காத்திருந்தோம். அவன் காட்டின் எல்லைவரை தெரிந்தான். பின்னர் மறைந்துவிட்டான்.”

உள்ளிருந்து இளம் மருத்துவன் வெளிவந்து “அரசத்தூதர் எவர்?” என்று கேட்டான். சுதமன் எழுந்து “நான், ஆங்கிரீச குலத்தவனும் சாமவேதியனுமாகிய சுமங்கலரின் மைந்தன் சுதமன். அரசச்செய்தியுடன் வந்தவன்” என்றார். “அவரை நீங்கள் சந்திக்கலாம். உங்கள் சொல்லை அவர் செவிகொள்வார் என்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை, ஆனால் இன்னும் சற்றுநேரத்திற்குள் மட்டுமே நீங்கள் அவரை சந்திக்க முடியும்” என்றான் மருத்துவன். சுதமன் “அவர் உடல்நிலை…” என்றார். மருத்துவன் “அவர் உடல்நிலை முடிவை அடைந்துவிட்டது. அறிந்திருப்பீர், சூரியன் வடக்குமுகம் கொள்ளும் பொழுதில் உயிர்துறக்க அவர் எண்ணியிருந்தார். வடக்குமுகம் இன்னும் ஒரு நாழிகையில் தொடங்கும்” என்றான்.

சுதமன் நெஞ்சு அதிர “ஆம், அதைப்பற்றிக்கூட அங்கே பேசிக்கொண்டார்கள்” என்றார். “வடக்குமுகம் தொடங்குவதற்குள் தூதுச்செய்தியை கூறுக! கூறும் நிறைவு உங்களுக்கு அமையட்டும்” என்றான் மருத்துவன். “என் பரிசு…” என்றார் சுதமன். “அமைச்சரே, நீங்கள் இதற்குள் உணர்ந்திருப்பீர் என எண்ணினேன். நீங்கள் அவருடைய சாவுச்செய்தியை கொண்டுசெல்லும்பொருட்டே அனுப்பப்பட்டிருக்கிறீர். மகரசங்கராந்தியை ஒட்டியே ராஜசூயம் அங்கே எழவிருக்கிறது. அவர்களுக்கும் தெரியும், இது இன்று இங்கே நிகழும் என்று” என்றார் மிருகாங்கன்.

# களிற்றியானை நிரை - 76

## பகுதி ஏழு : பெருசங்கம் – 8

சுதமன் உள்ளே நுழைந்தபோது நடுங்கிக்கொண்டிருந்தார். அவர் கைகள் கூப்பியிருந்தன. கால்கள் குழைந்தன. பதற்றத்தில் முதலில் உள்ளே என்ன திகழ்கிறதென்பதையே அவர் கண்கொள்ளவில்லை. பின்னர்தான் அந்த வேலிவட்டத்திற்குள் ஓர் உயரமான படுக்கையில் மெலிந்து ஒடுங்கிய நீண்ட உடல் மிதந்ததுபோல் கிடப்பதை கண்டார். அதன் பின்னரே அது அம்புப்படுக்கை என்று உணர்ந்தார். அம்புகள் அவர் உடலை தொடாமல் தாங்கியிருப்பதுபோல, அவர் காற்றில் மிதந்து நிற்பதுபோல் தோன்றியது.

அவர் முகமும் தோளும் தோல் மட்கியதுபோல ஒளியிழந்திருந்தன. உடலில் எங்கும் தசையே இருப்பதாகத் தெரியவில்லை. உடலெங்கும் அம்புகள் பதிந்து பொருக்கோடி சிறு புற்றுகள்போல் எழுந்திருந்தன. தாடியும் தலைமுடியும் பெரும்பாலும் உதிர்ந்திருந்தன. கைகளில் நகங்கள் வளர்ந்து சுருண்டிருந்தன. கால்களின் நகங்களும் அவ்வாறே வளர்ந்து சுருள முடியும் என்பதை சுதமன் அப்போதுதான் உணர்ந்தார். அவர் முள்ளில் வந்து படிந்த சருகு போலிருப்பதாக அவர் எண்ணிக் கொண்டார்.

அவர் உடலில் உயிர் இருப்பதாகத் தெரியவில்லை. சுதமன் வானை நோக்கினார். கதிர் வடமுகம் எழுவது நாளை. நாளை முதல்தான் ராஜசூய விழா தொடங்குகிறது. ஆனால் இன்றே

அந்நாள் இலக்கணப்படி தொடங்கிவிட்டது. இன்னும் ஒரு நாழிகை. ஆனால் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டிருந்தார். இல்லை, உயிர் இருப்பதாகவே அகம் சொல்கிறது. எந்தத் தடயமும் இல்லை, ஆனால் உள்ளம் அவ்வாறே ஆணையிடுகிறது. அவர் முகத்தை கூர்ந்து நோக்கினார். மூச்சு ஓடுவது தெரியவில்லை. நெஞ்சக்குழி அசைவற்றிருந்தது.

அவர் என்ன செய்வதென்று அறியாமல் தயங்கி மருத்துவர்களை பார்த்தார். “சொல்லுங்கள்” என்று முதிய மருத்துவர் சொன்னார். “அவருக்கு கேட்குமா?” என்று சுதமன் கேட்டார். அவர் “இனி சொல்ல முடியாது” என்றார். சுதமன் மேலும் மூச்சை இழுத்துத்தான் தன் சொற்களை கண்டடைந்தார். “பிதாமகரே, நான்…” அவரால் தன்னை அறிமுகம் செய்துகொள்ள முடியவில்லை. அக்கணத்தில் அச்சொற்கள் பொருளில்லாதவை என்று தோன்றின. “அந்தணனாகிய நான் அஸ்தினபுரியின் அரசர் யுதிஷ்டிரனின் ஆணைப்படி இங்கு வந்துள்ளேன்” என்றார்.

“அஸ்தினபுரியின் இளையவர் நால்வரும் நான்கு வேள்விப்பரியுடன் சென்று பாரதவர்ஷத்தை வென்று மீண்டிருக்கிறார்கள். அதன் நீட்சியாக நாளை எழவிருக்கும் கதிர்மாறு நாளில் அஸ்தினபுரியில் ராஜசூய வேள்வி நிகழவிருக்கிறது. தந்தையெனும் நிலையில் தங்களுடைய அருட்சொல் கோரப்படுகிறது” என்றார். அவர் இமைகள் அசைவதை கண்டார். அவர் “ம்” என்றார். அச்சொல் அவர் வாயிலிருந்து எழுவதா என சுதமன் ஐயுற்றார். அவரிடமிருந்தே எனத் தெளிந்ததும் பெருமூச்சுவிட்டார். “என்னிடம் அஸ்தினபுரியின் அரசர் ஒரு பரிசை அளித்து அனுப்பியிருக்கிறார். அது கீழ்த்திசையிலிருந்து இளையவர்

அர்ஜுனனால் கொண்டுவரப்பட்டது. தங்களுக்குரியது அது என அரசர் கருதினார். உடன் ஒரு செய்தியோலையும் அளிக்கப்பட்டுள்ளது.”

அவருடைய இமைகள் அசைந்தன. சுதமன் திரும்பி நோக்கினார். மருத்துவர்கள் வியப்படைந்ததுபோல் தெரியவில்லை. கங்கர்களிடமும் வியப்பு தென்படவில்லை. அவர் ஓலையை எடுத்து உரத்த குரலில் படித்தார். அதன்பின் தன் இடையிலிருந்து அந்த புற்குழலை எடுத்தார். பீஷ்மரின் முகத்தில் புன்னகை தெரிந்தது. சுதமன் அது விழிமயக்கா என திகைத்தார். திரும்பி அனைவரையும் நோக்கினார். புன்னகையேதான். ஆனால் உதடுகளில் தசைகளில் எந்த மாறுதலும் நிகழவில்லை. மூடிய விழிகள் மட்டும் அசைந்துகொண்டிருந்தன. ஐயமே இல்லை, புன்னகைதான்.

அவர் அந்த புற்குழலை வாயில் வைத்து “நான் இதை மீட்டலாமா?” என்றார். “ம்” என்று பீஷ்மர் சொன்னார். சுதமன் இப்போது அவர் குரலே என உறுதிகொண்டார். அவர் உள்ளம் மலர்ந்தது. விந்தையான, அரிதான ஒரு நிகழ்வை அவர் நிகழ்த்தவிருக்கிறார். அதனுடாக அவர் அரியவராக ஆகப்போகிறார். அவரிடம் சொற்கள் பெருகும். அவரைச் சூழ்ந்தமர்ந்து அதை கேட்பார்கள். இன்னும் நெடுங்காலம். அவர் பிறவியின் பொருளே அந்நிகழ்வை கண்டவர், நிகழ்த்தியவர் என்பதாக இருக்கலாம். அவர் அதை தன் உதடுகளில் வைத்து மூச்சை செலுத்தினார்.

அதன் கூரிய ஒலி எழுந்தபோதுதான் குருக்ஷேத்ர வெளியெங்கும் ஒரு பறவையின் அசைவைக்கூட காணமுடியவில்லை என்பதை அவர் நினைவுகூர்ந்தார். காடு மிக அப்பால் பச்சை நிழல்வரம்பு என தெரிந்தது. அங்கே

காற்று ஓடும் ஒலிகூட இங்கே கேட்கவில்லை. வெற்றுச் செம்மண் அலைவெளிக்குமேல் பறவைகளின் நிழல்கள் கூட இல்லை. அங்கே பறவைகள் உண்பதற்கு ஏதுமில்லை போலும். எனில் எந்தப் பறவை இதை கேட்கும்? அவர் மீண்டும் மீண்டும் மீட்டி குழல் தாழ்த்தி செவிகூர்ந்தார். பின்னர் மீண்டும் ஒரு முறை மீட்டினார். ஒலி சுழன்று சுழன்று கலைந்து அமைந்தது.

அப்போது ஒரு வானம்பாடியின் குரல் கேட்டது. அது தன் குழலில் இருந்து எழுந்தது என முதலில் எண்ணினார். பின்னர் அவர்களில் எவரேனும் அவ்வொலியை எழுப்புகிறார்களா என்று நோக்கினார். ஆனால் அதற்குள் அவர் அப்பறவையை பார்த்துவிட்டார். அது மூங்கில்மேல் வந்தமர்ந்தது. பாடியபடி எழுந்து இன்னொரு மூங்கில்மேல் அமர்ந்தது. மேலும் எழுந்து காற்றில் தாவி சிறகடித்து அருகே வந்து அமர்ந்து சிறகு பிரித்து அடுக்கி கூவியது. “ம்?” என்றார் பீஷ்மர். சுதமன் பேசாமல் நின்றார். அவர் உதடுகள் அசைந்தன. மிருகாங்கன் உரக்க “பிதாமகரே, நீங்கள் அப்பறவையிடம் உசாவலாம்” என்றார்.

சுதமன் அந்தப் பறவையை பார்த்தார். அது தன் விழிமயக்கல்ல, மெய்யாகவே அங்கே ஒரு வானம்பாடி வந்து அமர்ந்திருக்கிறது. மென்மையான மண்சாம்பல் நிற உடல். சிறிய தலை. அதன்மேல் ஏந்திய பூ என கொண்டை. பீஷ்மர் மெல்ல முனகினார். மிருகாங்கன் அருகணைந்து அவர் வாயருகே செவியை வைத்து சொற்களை கேட்டார். பறவையை நோக்கி “யயாதி” என்றார். பறவை “யயாதி” என்றது. பீஷ்மர் அதை கேட்டார். அவர் முகம் கூர்மைகொண்டு பின் தளர்ந்தது. சற்றுநேரம் கழித்து பீஷ்மரின் உதடுகள் அசைந்தன. மீண்டும் செவிகொடுத்து திரும்பி மிருகாங்கன் “புரு!” என்றார்.

பறவை அதை திரும்பச் சொல்லவில்லை. சிறகடித்து எழுந்து அமர்ந்தது.

மீண்டும் “புரு” என்றார் மிருகாங்கன். பறவை எழுந்து அமர்ந்தது. “புரு” என்றார் மிருகாங்கன். பறவை எழுந்து சிறகடித்து வீசியெறியப்பட்டதுபோல் காற்றில் தாவி அலைகளில் எழுந்தமைந்து அப்பால் பறந்தது. அது மறைவது வரை நோக்கிவிட்டு மிருகாங்கன் “அது கூறவில்லை, பிதாமகரே” என்றார். பீஷ்மரின் முகத்தில் புன்னகை உறைந்திருந்தது. விழிகள் அசைவிழந்திருந்தன. மிருகாங்கன் “பிதாமகரே…” என்றார். சுதமன் சற்று அருகே சென்றார். மிருகாங்கன் “மருத்துவரே” என அழைத்தார்.

மருத்துவர் அப்பால் நின்று “விலகுக!” என்றார். மிருகாங்கன் விலக அவரை நோக்கி சுதமனும் விலகினார். மருத்துவர் பீஷ்மரின் கையைப் பற்றி நாடியை நோக்கினார். கழுத்திலும் நெஞ்சிலும் கைவைத்து இரு நாடிகளை நோக்கியபின் “பொழுது கணக்கிடுக நிமித்திகரே, பிதாமகர் மண்நீங்கினார்!” என்றார். சுதமன் தன் நெஞ்சு அதிர்வதை கேட்டுக்கொண்டு நின்றார். அவர்கள் எவரும் பதறவில்லை. அந்த நிகழ்வை பலமுறை நெஞ்சுக்குள் ஒத்திகை பார்த்திருப்பார்கள் என்று தெரிந்தது. ஒவ்வொருவரின் பணியும் நன்கு வரையறை செய்யப்பட்டிருந்தது. பழகிய சடங்கு என அனைத்தையும் இயற்றினர்.

மிருகாங்கன் வெளியே சென்று மெல்லிய குரலில் ஏதோ கூற அங்கே நின்றிருந்த இளைய கங்கர் வலம்புரிச் சங்கை எடுத்து வான் நோக்கி அண்ணாந்து மும்முறை ஊதினார். தொடர்ந்து கொம்புகள் மும்முறை ஒலித்தன. மிக அப்பால் ஒரு முரசு ஒலியெழுப்பியது. முரசொலியினூடாக செய்தி அஸ்தினபுரியை

இன்னும் சற்றுநேரத்தில் சென்றடையும் என சுதமன் உணர்ந்தார். நிமித்திகர் "மிகச் சரியாக வடக்குமுகம் தொடங்கிய கணம்" என்றார். மிருகாங்கன் சென்று பீஷ்மரின் கால்களைத் தொட்டு சென்னி சூடினார். மருத்துவர்களும் நிமித்திகர்களும் அவரை கால் வணங்கினர். கங்கர்கள் நிரையென வந்து வணங்குவதை அவர் நோக்கி நின்றார். மிருகாங்கன் "வணங்குக, அந்தணரே!" என்றார். சுதமன் சென்று பீஷ்மரின் கால்களில் தலை வைத்து வணங்கினார்.

சுதமன் மூச்சை இழுத்து வெளியே விட்டபடி தளர்ந்த காலடிகளுடன் வெளியே வந்து நின்றார். மிருகாங்கன் அருகே வந்து "அரசருக்கு செய்தி சொல்லுங்கள். கிளம்புங்கள்" என்றார். "பிதாமகர்…" என்று சுதமன் சொல்ல "அவரை இன்னும் மூன்று நாழிகையில் கங்கநாட்டுக்கு கொண்டு செல்வோம். கொண்டு செல்வதற்குரிய அனைத்தும் நெடுநாட்களாகவே ஒருக்கப்பட்டு காத்திருக்கின்றன. எங்கள் குடிக்கு செய்தி முரசொலியாக சென்றுவிட்டது" என்றார்.

"அரசரிடம் ஒப்புதல் பெறவேண்டாமா? அவருடைய முதற்குருதி, அவருடைய தந்தை" என்றார் சுதமன். "இல்லை, அஸ்தினபுரிக்கு எங்கள் குலம் அளித்த கொடை, அதை நாங்கள் மீட்டுக்கொள்கிறோம்" என்று மிருகாங்கன் சொன்னார். "அவர் தன்னை கங்கையின் சிறுதுணையாறு ஒன்றின் கரையில் நிலைநாட்டவேண்டும் என ஆணையிட்டிருக்கிறார். அங்கே அவருக்கான ஆலயம் அமையும். எங்கள் குடிமுற்றங்களில் அவர் என்றுமென அமர்ந்திருப்பார். எங்கள் கொடிவழிகளால் வணங்கப்படுவார்."

சுதமன் தளர்ந்து காலோய்ந்து குடிலை சென்றடைந்தார். அங்கே பாய்மேல் உடலை எடையுடன் அமர்த்தினார். பின்னர்

கால்களை நீட்டிக்கொண்டார். விடாயை உணர்ந்து எழுந்து நீர் அருந்தினார். மீண்டும் எழுந்து அமர்ந்தார். குடிலில் இருந்து மரக்குடுவைகளில் மூலிகைத்தேனை கொண்டு சென்றனர். சுதமன் எழுந்துகொண்டு “என்ன செய்கிறீர்கள்?” என்றார். “எங்கள் நிலத்திற்கு பிதாமகரைக் கொண்டுசென்று சேர்க்க நான்கு நாட்களாகும். ஆகவே உடலை பதப்படுத்தவேண்டும். தேனும் மெழுகும் கொண்டு பதப்படுத்தும் எங்கள் குடிமருத்துவர் இங்குதான் சென்ற பல மாதங்களாக இருக்கிறார்” என்றார்.

உள்ளே மூலிகையின் மணம் எழுந்தது. அது கசப்பு என மூக்குக்கு சொன்னது. சுதமன் “நான் கிளம்புகிறேன்” என்றார். அப்பாலிருந்து முரசொலி எழுந்தது. அதை ஒரு கங்கன் செவிகோட்டி கேட்டு மீள் கொம்பொலி எழுப்பினான். மிருகாங்கன் அருகே ஓடிவந்து தாழ்ந்த குரலில் கங்கர்மொழியில் ஏதோ சொன்னார். சுதமன் “என்ன?” என்று கேட்டார். “விந்தைதான், ஆனால் இத்தகைய விந்தைகள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன” என்று மிருகாங்கன் சொன்னார்.

“பீஷ்ம பிதாமகர் இளமையில் கங்கையின் ஒரு கிளையாற்றை அம்புகளால் அறைந்து அணைகட்டி நிறுத்தியதாக கதை சொல்வார்கள். அங்கே இன்று காலை மெய்யாகவே அணை ஒன்று உருவாகியிருக்கிறது. மானுடர் சமைத்த அணை அல்ல. நீரணில்கள் அதை உருவாக்கியிருக்கின்றன. நீர் தேங்கி மேலேறியிருக்கிறது. பிதாமகரின் ஆலயம் அமையவேண்டிய இடம் அது. காலையில் அதை பார்க்கச் சென்றவர்கள் அந்த அணையைக் கண்டு வியந்து ஊருக்கு ஓடிவந்து செய்தி

சொன்னார்கள். அச்செய்தி கிளம்பியதுமே அவர் விண்புகுந்த செய்தி அவர்களை சென்றடைந்திருக்கிறது.”

சுதமன் பெருமூச்சுவிட்டார். “நான் கிளம்புகிறேன்” என்றார். பின்னர் எழுந்துகொண்டு தேரை நோக்கி சென்றார். தேர்ப்பாகன் தேரின் அடியிலேயே அமர்ந்திருந்தான். “செல்வோம்” என்று சொல்லி சுதமன் ஏறிக்கொண்டார். தேர்ப்பாகன் ஏறி அமர்ந்த பின் “இச்செம்மண் பரப்புக்கு அடியில் எலும்புக்கூடுகள் நிறைந்துள்ளன, உத்தமரே” என்றான். “நான் ஒரு கைப்பிடி மண்ணை அகற்றிப் பார்த்தேன். சிரித்த முகம் கொண்ட மண்டை ஓடு. எதை எண்ணி நகைத்தானோ இறைவனே அறிவார்.”

சுதமன் அவன் சொற்களை செவிகொள்ளவில்லை. “இங்குள்ள அத்தனை வெடிப்புகளிலும் நாகங்கள் நெளிகின்றன. அவை நாக உலகுக்கான நுழைவாயில்கள். நாம் நாகங்களுக்குமேல் சென்றுகொண்டிருக்கிறோம்.” சுதமன் தன்னைச் சூழ்ந்து முரசொலிகள் சென்று கொண்டிருப்பதை கேட்டார். தளர்ந்து தேர்த்தட்டில் படுத்துக்கொண்டார்.

சுதமன் தேரில் விழித்துக்கொண்டபோது யமுனைக்கரையை அடைந்திருந்தார். “உத்தமரே, படித்துறை” என்று தேரோட்டி சொன்னான். அவர் இறங்கிக்கொண்டு காற்றில் பறக்கும் சால்வையுடன் நின்றார். யமுனையின் கரிய நீர் அந்திவெளிச்சத்தில் ஒளிகொண்டிருந்தது. அதை நோக்கியபடி நின்றபோது அவர் ஓர் உள எழுச்சியை அடைந்தார். நேராக படகு நோக்கி சென்று அதன் பலகை வழியாக ஏறி உள்ளே சென்று அமர்ந்தார். படகோட்டி அவரிடம்

“கிளம்புவோமா, உத்தமரே?” என்றான். “கிளம்புக, கீழ்நோக்கி! மகதத்திற்கு” என்றார். “அல்லது அதற்கும் கீழே. அஸ்தினபுரிக்கு அல்ல.”

“உத்தமரே…” என்று அவன் அழைத்தான். “செல்க! செல்க!” என்று சுதமன் கூவினார். “விரைக, விரைக!” படகோட்டி “நாம் அஸ்தினபுரிக்கு திரும்பிச் செல்லவேண்டும், அரசாணை அது” என்றான். “என் பணி முடிந்துவிட்டது” என்று சுதமன் சொன்னார். “நான் இனி எதற்கும் கட்டுப்பட்டவன் அல்ல. என்னை எவரும் இனி எதிர்பார்க்கப்போவதில்லை. செல்க!” படகோட்டி “ஆனால் நான் அஸ்தினபுரியின் எல்லைவரை மட்டுமே வரமுடியும்” என்றான். “நன்று! எனில் என்னை அடுத்த துறைமேடையில் இறக்கிவிடுக!” அவன் “உத்தமரே” என்றான். “இது என் ஆணை” என்றார் சுதமன். “அவ்வாறே” என படகோட்டி தலைவணங்கினான்.

படகு நீரலைகளை மெல்ல கிழித்தபடி சென்றுகொண்டிருந்தது. அதன் துடுப்புகள் நீரை துழாவும் ஒலி மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. மீன்கள் தாவுவது போலவும் நீரை மறந்து நினைவு நிலத்தை அடையும்போது ஏதோ விலங்கு நீரை நக்கி குடிப்பது போலவும் அவ்வோசை உளமயக்கு அளித்தது. இருபுறமும் காடுகள் இருள்கொள்ளத் தொடங்கியிருந்தன. பறவைக்கூட்டங்கள் சுழன்று சுழன்று மரக்கூட்டங்களின் மேல் இறங்கின. அல்லது பறந்தெழுகின்றனவா? வானில் செந்நிற முகில்கள் அணைந்துகொண்டிருந்தன. ஓசை கணம் கணமென மாறியது. ஒளி துளித்துளியென அணைந்தது. காலம் உறைந்ததுபோல் நின்றிருந்தது.

அந்தியை அவர் பார்த்தே நெடுநாட்களாகிறது என்று உணர்ந்தார். விழிகளே தான் என அவர் நோக்கிக்கொண்டிருந்தார். அஸ்தினபுரியை முற்றாக மறந்துவிட்டிருந்தார். அது நினைவிலெழுந்தபோது கைமறதியாக எங்கோ வைத்துவிட்டதை எண்ணிக்கொண்டதுபோல் அகம் துணுக்குற்றது. அஸ்தினபுரி என்னும் ஒன்று தன்னுள் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். கோட்டை, முகமுற்றம், நெடுஞ்சாலை, அங்காடி, காவல்மாடங்கள், அரண்மனை என்றுதான் நினைவுக்கு வந்தன. அவர் மீள மீள அஸ்தினபுரியை நினைத்துக்கொண்டே இருந்தார். எங்கு சென்றது அது? இத்தனை விரைவில் அகன்றுவிடுமா?

ஒரு கணத்தில் உள்ளம் முரசறைவு என அதிர்ந்தது. அவர் அறிந்த அனைத்தும் அவ்வண்ணம் விலகிச் செல்லலாம். அவர் பிறந்த குடி, அவருடைய அடையாளமென்றான குலம். அவர் கற்ற நூல்கள், சேர்த்துக்கொண்ட அறிதல்கள் அனைத்தும் மறைந்துவிடக் கூடும். அவர் திரும்பி வரவே முடியாதாகலாம். ஒருபோதும் மீளமுடியாத எழுகையா இது? எழுந்த பறவையின் கால்களுக்குக் கீழ் மரம் நிழலென்றாகி மறைந்துவிடும் என்றால்? ஆனால் கிளம்புபவர்கள் எவராயினும் மீண்டு வருவதில்லை. மீள்கையில் விட்டுச்சென்றவை அங்கிருப்பதில்லை.

அவர் அஞ்சி உடல்நடுங்கினார். கைகளை கோத்துக்கொண்டார். “செல்க செல்க செல்க” என தனக்குத்தானே ஆணையிட்டுக்கொண்டார். ஆனால் அவர் உடலில் காய்ச்சல் என வெப்பம் ஏறியது. செல்லுமிடம் அடியிலாதது. அறிந்திராத எதுவும் முடிவிலாததே. அறிவு எனும் ஒளிவட்டத்திற்குள்

இச்சிறுவாழ்க்கை. அறியாதவை இருள்வெளியென விண்மீன் பெருக்கென சூழ்ந்திருக்கின்றன. அங்கே செல்லும் ஒரு துளி எங்கு சென்று விழும்? முடிவிலியில், அடியிலில். அச்சொல்லே அச்சுறுத்தியது. முடிவிலி, அடியிலி. இன்மை. அங்கே காத்திருப்பது இன்மை மட்டுமே. இருப்பென நான் திரட்டிவைத்திருப்பன அனைத்தும் அஸ்தினபுரியில் நான் ஈட்டியவை. அவை அழிந்துவிட்ட பின் எவ்வண்ணம் எஞ்சுவேன்?

அவர் எழுந்து நின்று கைநீட்டி “போதும், நிறுத்து. நிறுத்து படகை!” என்றார். படகோட்டி “உத்தமரே…” என்றான். “மீளவும் அஸ்தினபுரிக்கு… திரும்புக… அஸ்தினபுரிக்கே செல்க!” படகோட்டி “ஆணை” என்றான். சுக்கானை திருப்பி படகை ஒருபக்கமாக துழாவி நீர்ப்பரப்பின் மேலேயே வளைத்தான். படகு ஒழுக்கில் செல்கிறது. ஒருவேளை அதனால் திரும்ப முடியாமலேயே போகலாம். அது இவ்வொழுக்கிலேயே சென்று மறையலாம். நான் ஏற்கெனவே என் அஸ்தினபுரியிலிருந்து அறுந்து உதிரத்தொடங்கிவிட்டிருக்கலாம். “விரைக விரைக!” என்று அவர் கூவினார். “விசைகொள்க! விரைவுகொள்க!”

படகு திரும்பி எதிர்த்திசை நோக்கி செல்லத் தொடங்கியதும் அவர் உளம்சோர்ந்து அமர்ந்தார். பெருமூச்சுகளாக விட்டுக்கொண்டிருந்தார். அங்கே அஸ்தினபுரி காத்திருக்கும். கனிந்த அன்னைபோல, உணவுடன் இன்சொல்லுடன். அவர் அமர்ந்தெழுந்த பீடங்கள் அங்கே இருக்கும். அவற்றில் அவர் உடல்பதிந்த மென்மையான தடம் இருக்கும். அவர் உடலின் இனிய வெம்மை எஞ்சியிருக்கும். அவர் ஈட்டிய அனைத்தும் அங்குதான் இருந்துகொண்டிருக்கும். அவர் எதையும் இழக்கவில்லை. இழப்பதைப்போல அறிவின்மை வேறில்லை.

எனில் எதன்பொருட்டு இழக்கத் துணிந்தேன்? ஏனென்றால் அச்சார்வாகரின் சொல். எனக்கு மகிழ்வளிப்பதை செய்யும்படி சொன்னார். அதுவே அறமும் பொருளும் வீடுபேறும் என்றார். எனக்கு அந்நகர் மகிழ்வளிக்கவில்லை என எண்ணிக்கொண்டேன். என் மகிழ்வு விடுதலையில் இருப்பதாக கற்பனை செய்தேன். அவ்விடுதலை என் எல்லைகளுக்கு அப்பால் இருப்பதாக சொல்லிக்கொண்டேன். அறிவின்மை, அறிவின்மையின் எல்லை. சார்வாகரே, நீர் அறிவிலி. நீர் மாய நீர் தேடி அலைந்து சாகும் ஊழ்கொண்ட பேதை. தன் மெய்யான மகிழ்வு எது என்று அறிந்தவர் இங்கு எவர்? ஆணவத்தைக் கடந்து சோம்பலைக் கடந்து தனிமையைக் கடந்து மெய்யான மகிழ்ச்சியை சென்றடைய எத்தனைபேரால் இயலும்?

ஆயிரத்தில் ஒருவரால். அவருக்கு மகிழ்ச்சி அக்கணமே தேடிவந்துவிடும். அவரே துறவி. அவரே படிவர். எஞ்சியோர் மகிழ்வு இது என்று தேடிச் சென்று அல்ல என்று அடைந்ததுமே தெளிந்து மேலும் தேடிச்சென்று அறியாமலேயே அணைந்துவிட ஊழ்கொண்டவர்கள். எளியோர், கீழோர், கட்டுண்டோர், கனியாது உதிரும் ஊழ்கொண்டோர். அவர் விம்மி அழத்தொடங்கினார். அழுந்தோறும் விம்மல்களும் விசும்பல்களும் ஏறி ஏறி வந்தன. படகோட்டி ஒரு சொல் பேசாமல் அவர் அழுவதை நோக்கிக்கொண்டிருந்தான். விண்ணகம் மீன்களால் பெருகியிருந்தது. காற்றுவெளியில் குளிரலைகள் நிறைந்திருந்தன. துடுப்புகளை நாவாக்கி ஆறு ஒற்றைச் சொல்லை மீளமீள சொல்லிக்கொண்டிருந்தது. தன் தேம்பல் ஓசையை தானே கேட்டு அவர் அழுதுகொண்டிருந்தார்.

அவர் அழுது அழுது ஓய்ந்து படகில் மல்லாந்து படுத்தார். உடல் எடையற்றிருந்தது. மெல்லிய இனிமை உள்ளத்தில் நிறைந்திருந்தது. சீழ்கட்டிய கட்டி உடைந்தபின் எழும் மெல்லிய எரிச்சலின் தண்மை. அவர் தன்னைக் கடந்து ஒழுகிக்கொண்டிருந்த விண்மீன்களை நோக்கிக்கொண்டிருந்தார். அவை எங்கோ என பெருகிச் சென்றன.

# களிற்றியானை நிரை - 77

**பகுதி எட்டு : அழியாக்கனல்**-1**

தீக்ஷணன் வீட்டுக்கு வந்தபோது இரவு பிந்திவிட்டிருந்தது. அவன் அன்னை வாயிற்படியிலேயே அமர்ந்திருந்தாள். அவன் அவளை தொலைவிலேயே பார்த்தான். மையச்சாலை ஒளியில் மூழ்கி சிவந்த நதி என அலைகொண்டிருந்தபோதிலும் அவன் வாழ்ந்த தெரு அரையிருளில் இருந்தது. மையச்சாலையின் ஒளி கசிந்து அதன் இரு முனைகளிலும் பரவியிருந்தது. அவனுடைய வீடு முற்றிருளில் ஒற்றை பிறைவிளக்குச் சுடர் விழியென திகழ்ந்திருக்க கதவுகள் வாய்திறந்து அமைந்திருந்தது. அத்தெருவில் அவ்வேளையில் மானுடர் எவருமே இருக்கவில்லை. முற்றாக கைவிடப்பட்டதுபோல் அது கிடந்தது.

சாலையின் மையத்தில் இருந்த கற்தூண்மேல் பீதர்நாட்டு பளிங்கு விளக்கு புன்னைக்காய் எண்ணையில் எரிந்துகொண்டிருந்தது. பின்னிரவில் அதன் பளிங்குச் சுவர்கள் கருமைகொண்டு ஒளி மங்கியிருந்தன. தூணுக்குக் கீழே

சிந்திய செந்நீர் என வெளிச்சம். சாலையின் முழக்கத்தையும் பரபரப்பையும் கண்டு அஞ்சிய தெருநாய்கள் அங்கே அடைக்கலம் புகுந்திருந்தன. அவை அந்த ஒளிவட்டத்திற்கு அப்பால் இருளில் வெவ்வேறு மூலைகளில் உடல்களை சுருட்டிக்கொண்டு படுத்திருந்தன. காவல்பொறுப்பிலிருந்த நாய்கள் மட்டும் ஒளிப்பரப்பை நோக்கியபடி முன்கால்களை ஒன்றன்மேல் ஒன்று போட்டு விழிகள் இருளில் கங்குகள்போல் மின்ன அமர்ந்திருந்தன. அவற்றின் கண்களுக்கு நடுவே அந்த ஒளிப்பரப்பு ஒழிந்த கூத்துமேடை எனத் தெரிந்தது.

பிறைவிளக்கு அன்னையின் தலைக்குப் பின்னால் இருந்தது. அவளுடைய கூந்தலிழைகள் செந்நிறமாக சுடர்விட்டன. அவள் நிழலுருவெனத் தெரிந்தாள். தீக்ஷணன் இல்லத்தை அணுகுந்தோறும் நடைதளர்ந்தான். அன்னையின் தோற்றம் அவனுக்கு கசப்பூட்டியது. அவன் இல்லம் திரும்பியது அன்னைக்காகத்தான். நகரில் அலைந்துகொண்டிருந்தபோது அன்னை காத்திருப்பாள் என்ற எண்ணம் குளிர்ந்த ஊடுருவலென அவன் வயிற்றில் புகுந்தது. அதை தவிர்க்க முயன்று தெருக்களின் கொண்டாட்டங்களில் திளைக்க முற்பட்டபோதிலும் அது அவனுள் உறுதியாக வளர்ந்தது. ஒரு கட்டத்தில் அதன் எடையை தாளமுடியாமல் ஆகியது. ஆகவே அவன் திரும்பிவந்தான். ஆனால் அன்னையின் காத்திருப்பைக் கண்டதுமே அவளை வசைபாடி சிறுமைசெய்யவேண்டும் என்ற வெறி எழுந்தது. சினத்தில் அவன் உடல் நடுங்கியது. படிகளில் ஏறும்போது அவன் காலடியோசையில் அது எதிரொலித்தது.

தீக்ஷணன் அவளிடம் ஒரு சொல்கூட பேசாமல் திண்ணையில் ஏறி உள்ளே சென்றான். அன்னை எழுந்து உள்ளே வந்தாள்.

அவள் உடலின் எலும்புகளின் ஓசை கேட்டது. அவன் தன் சிற்றறைக்குள் சென்று மஞ்சத்தில் அமர்ந்துகொண்டான். அன்னை அவனருகே வந்து நின்றாள். அவன் நிமிர்ந்து நோக்காமல் அமர்ந்திருந்தான். அன்னை தாழ்ந்த குரலில் "அன்னம் கொண்டுவருகிறேன்" என்றாள். "வேண்டாம்" என்று அவன் சொன்னான். "நான் உண்டுவிட்டே.ன்." அன்னை சிலகணங்கள் பொறுத்து "நான் அறிவேன், நீ உண்ணவில்லை" என்றாள். அவன் சீற்றத்துடன் எழுந்து "நான் உண்ணவில்லை என நீ அறிந்தாயா? நான் சொல்வது பொய்யா? நிறுவவேண்டுமா நான்? என் நெஞ்சைப் பிளந்து பார்க்கவேண்டுமா உனக்கு?" என்று கூவினான். அன்னை தலைகுனிந்து நின்றாள். அவளுக்குப் பின்னால் விளக்கின் ஒளியிருந்தமையால் முகம் தெரியவில்லை. ஆனால் விழிநீர் உதிர்வது தெரிந்தது.

அவன் அவளுடைய மெல்லிய விசும்பலோசையை கேட்டான். "ம்" என்றான். பின்னர் மீண்டும் "ம்" என்றான். அன்னை "ஏன் இப்படி இருக்கிறாய்? என்ன ஆயிற்று உனக்கு? இந்த நகரே கொண்டாடிக்கொண்டிருக்கிறது" என்றாள். "நானும் கிளம்புகிறேன். நானும் கொண்டாடிவிட்டு வருகிறேன்..." என்று அவன் பற்களைக் கடித்தபடி சொன்னான். "மூக்குவார கள்ளருந்துகிறேன். பரத்தையரிடம் ஆடிவிட்டு மீள்கிறேன். நிறைவா உனக்கு?" அன்னை ஒன்றும் சொல்லவில்லை. அவன் அவளையே நோக்கிக்கொண்டிருந்தான். விழவொழிந்த ஆலயம் என்னும் சொல் நெஞ்சில் எழுந்தது. எந்த நூலில் வரும் ஒப்புமை? அவன் உள்ளம் தணிந்தது. "செல்க, பால்கஞ்சி மட்டும் கொண்டுவருக!" என்றான். அன்னை பெருமூச்சுடன் திரும்பிச் சென்றாள்.

அவன் கண்களை மூடிக்கொண்டான். நகரின் கொந்தளிப்பான அசைவுகளும் ஒளிப்பெருக்கும் கண்களுக்குள் எஞ்சியிருந்தன. அவன் பெருமூச்சுவிட்டு கண்களைத் திறந்து எதிர்ச்சுவரை பார்த்துக்கொண்டிருந்தான். சுவரிலிருந்த காரை பெயர்ந்த வடுக்கள் ரிஷிகளின் முகங்களாயின. அவன் அவற்றை விழிதொட்டு விழிதொட்டு சந்தித்தான். உரு அடைந்தன, விழி கொண்டன, நோக்கு தெளிந்தன, சொல்கொண்டன. அவன் அவற்றையே நோக்கிக்கொண்டிருக்க அன்னை கஞ்சிக்குடுவையுடன் வந்து நின்றாள். அவள் காலடியோசை கேட்டு அவன் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான். அக்கலயத்தை வாங்கி ஒரே மூச்சில் அருந்தினான். “சுடும்... வெம்மை மிக்க கஞ்சி” என அன்னை பதறுவதற்குள் குடுவையை திரும்ப அளித்துவிட்டான். அன்னை அவனை திகைப்புடன் பார்த்தாள்.

அவன் எழுந்து சென்று குறுந்திண்ணையில் இருந்த சிறுகலத்து நீரில் வாய் கழுவி வந்தான். மீண்டும் மஞ்சத்தில் அமர்ந்தான். “படுத்துக்கொள்... துயில்க!” என்று அன்னை சொன்னாள். அவன் மஞ்சத்தில் படுத்து கண்களை மூடிக்கொண்டான். மிக அருகே வந்து கூர்கொண்டது ரிஷிமுகம். கணாதரின் முதிய விழிகள் அவனை நோக்கின. “அறிவது எதை, மெய்மை என ஒன்றுண்டு என்றால் அதற்கு ஏன் இத்தனை விளக்கங்கள்?” அவன் “புரியவைக்க” என்றான். “அல்ல, பிழைப்புரிதல்களை களைய” என்றார். “ஒவ்வொரு மெய்மையையும் அடைந்த அக்கணமே மானுடர் மறுக்கத்தொடங்குகிறார்கள். அவர்களின் அன்றாடத்திற்கு ஏற்ப திரிக்கிறார்கள். அந்த மறுப்புக்கும் திரிப்புக்கும் எதிராகத்தான் இத்தனை விளக்கங்கள் தேவைப்படுகின்றன.” அவன் “ஆம்” என்றான். “ஏன் அவற்றை மறுக்கிறார்கள்?” என்று அவர் மீண்டும் கேட்டார். அவன் அவர் விழிகளையே நோக்கிக்கொண்டிருந்தான்.

“ஏனென்றால் அம்மெய்மைகள் முழுமையானவை அல்ல. அவை ஒருபக்கம் உண்மை என்றிருக்கையில் மறுபக்கம் பொய்யென்றும் போதா என்றும் தோற்றம் கொள்கின்றன.” அவன் “ஆம்” என்றான். “ஏன்? ஏன் மெய்மைகள் அவ்வண்ணம் இருக்கின்றன?” அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர் உரக்க நகைத்து “அவை அடையப்படும்போதே அவ்வண்ணம்தான் வந்தணைந்தன… மூடா, நீரிலல்ல நதியிலல்ல அழுக்கு, அள்ளிய கைகளில்தான்” என்றார். அவன் பெருமூச்சுவிட்டான். “கைகள் கறைபட்டவை. தன்னுணர்வால், விழைவால், அச்சத்தால் கட்டுண்ட உள்ளத்தில் வந்தமைகையில் மெய்மை தன்னை சிதைத்துக்கொள்கிறது. வளைக்குள் சென்று சுருண்டமையும் நாகம் பத்திவிரிக்க இயலாது.”

அவன் அவர் சொல்வதையே நோக்கிக்கொண்டிருந்தான். “அச்சத்திலிருந்து, விழைவிலிருந்து, தன்னுணர்விலிருந்து விடுதலை கொள்பவனுக்கு மட்டுமே மெய்மையை அள்ளும் அகக்கலம் அமைகிறது. அஞ்சியவனுக்கு அளிக்கப்படும் மெய்மை படைக்கலமும் கோட்டையும் என்றாகும். விழைவுகொண்டவனுக்கு அது கருவூலமென்றாகும். தன்னுணர்வு கொண்டவனிடம் சொற்குவை என்றாகும். தன்னந்தனி நிற்பது, தானொன்றறிந்து இன்னும் ஒருவருக்கு இயைவிக்கும் மெய்மை என்பது தனியர்களுக்குரியது. தன்னிலும் பிரிந்து தனித்தோர். தனியென்று தருக்கினோர். தானன்றி பிறிதொன்று தன்னைக் கடந்ததை அன்றி ஒன்றை ஏற்காதோர்.”

அவன் புரண்டு படுத்து பெருமூச்சுவிட்டான். அவன் அறைச்சுவர்கள் முழுக்க அவர்கள்தான். பிரஹஸ்பதியின் வழித்தோன்றல்கள். சுக்ரர், கபிலன், கௌதமன், தீக்ஷணன்,

பரமேஷ்டி, அஜிதகேசகம்பளன். அவர்களின் சொற்களால் சூழப்பட்டு அங்கே அவன் துயின்று விழித்தான். அவர்களிடமிருந்து தப்பும்பொருட்டு கிளம்பிச் சென்றான். அவர்களை இழந்த வெறுமை தாளாது திரும்பி வந்தான். அவன் எழுந்து அமர்ந்தான். நீர்க்குடுவையை அரையிருளிலேயே கைநீட்டி எடுத்து குளிரக்குளிர குடித்தான். தாடியில் வழிந்த நீரை துடைத்தபின் மீண்டும் படுத்துக்கொண்டான். பெருமூச்சுவிட்டான். இவ்விரவில் தீரா நோய்கொண்டவர்கள் மட்டுமே படுக்கைகளில் முடங்கிக்கிடப்பார்கள். வலியுடன் இயலாமையுடன். நான் கொண்டதும் நோய்தான் போலும்.

சுவரில் எழுந்த இளமையான படிவர்முகம் ஒன்று அவனை அணுகியது. “மெய்யென்று ஒன்றிருந்தால் எல்லா வழிகளும் அங்கேதான் செல்லும். அதை எண்ணித் தொட்டு எடுக்கமுடியும். நோக்க முடியும். கைகளால் தொட்டு அடையமுடியும். நாம் நோக்கவில்லை என்றாலும் அங்கிருக்கும். நாம் அனைவருமே மறைந்தாலும் தான் எஞ்சியிருக்கும்.” அவன் அவரையே நோக்கிக்கொண்டிருந்தான். “மெய்மை ஒன்றே. பகலொளிபோல் தெளிவானது. நாளுமென நாம் அறிவது. நம் அன்னமும் நலமும் அழகும் ஆவது. அதை மறுக்கவும் தாண்டவுமே பிற மெய்மைகள் சமைக்கப்பட்டன. அதிலிருந்து அள்ளப்பட்டு அதனாலேயே ஒளியூட்டப்பட்டு அதன்மேலேயே போடப்பட்டன. யானையை மறைக்க நெற்றிப்பட்டமும் கவசமும்போல் பிறிதொன்று உதவுவதில்லை.” அவர் வாய்விட்டுச் சிரித்தார். “ஏனென்றால் அவை மேலும் சிறந்த யானை என தங்களை காட்டுவன. மேலும் ஆற்றல்கொண்டவை, மேலும் அழகியவை.”

அவன் எழுந்து சென்று தன் அறையின் மூலையில் இருந்த சிறிய பெட்டியை திறந்தான். அதற்குள் அவன் தன் மரவுரி ஆடைகளை வைத்திருந்தான். ஒவ்வொன்றாக எடுத்து வெளியே வைத்து உள்ளிருந்து தொன்மையான ஏட்டுச்சுவடி ஒன்றை எடுத்தான். பழுப்பேறி மண் ஓடுகள் என்றே தோன்றின. விளக்கைத் தூண்ட அவன் தயங்கினான், அது அன்னையை எழுப்பிவிடக்கூடும். சாளரத்தருகே சென்று அமர்ந்து வெளியே இருந்து வந்த மெல்லிய வெளிச்சத்தில் அச்சுவடிகளை படித்தான். விழிகளுக்கு எழுத்துக்கள் தெளியவில்லை. கண்களை மூடி விரலால் தொட்டுத் தொட்டு எழுத்துக்களை படித்தறிந்தான். விழிகளால் படிப்பதைவிட அவ்வண்ணம் படிக்கையில் சொற்கள் மேலும் கூர்மைகொள்கின்றன. ஆணிகளை அறைவதுபோல இறங்கி அமைகின்றன.

அவன் பலமுறை படித்த நூல். பிரஸ்னசமுச்சயம், ஆயிரம் வினாக்கள் மட்டுமே அடங்கியது. ஒவ்வொரு வினாவுக்கு நடுவிலும் சொல்லில்லாமல் விடை அளிக்கப்பட்டுள்ளது என்பார்கள். அவ்விடையிலிருந்தே அடுத்த வினா எழுகிறது. ஆகவே ஒரு வினாவின் விடையை அடைந்த பின்னரே அடுத்த வினாவை சென்றடைய முடியும். சில இடைவெளிகள் எளிதில் தாண்டக்கூடியவை. சிலவற்றின் நடுவே அடியிலியென ஆழம். அச்சமூட்டும் இருள். ஆனால் அவ்விருளே அவ்விரு வினாக்களின் விளிம்புகளையும் ஈர்ப்பு மிக்கதாக்குகிறது. அவன் வாயிலருகே அன்னையின் நிழலசைவை உணர்ந்தான். அச்சுவடிக்கட்டை தன் ஆடைக்குள் மறைத்துக்கொண்டான். அவளை திரும்பி நோக்காமல் அமர்ந்திருந்தான்.

“வேண்டாம், மைந்தா. சொல்வதை கேள். அச்சுவடிகளை படிக்காதே. அவற்றை வீசிவிடு... வேண்டாம். அன்னைசொல் கேள். உனக்காகவே நான் இதுவரை வாழ்ந்தேன். இங்கு தனிப்பெண் எதிர்கொள்ளும் துயர்களை நீ அறியமாட்டாய். நான் ஒவ்வொரு முள்முனையிலாக தவம் செய்து இங்கு வந்திருக்கிறேன். உன்னை கண்ணீரால் நீராட்டி வளர்த்திருக்கிறேன்.” தீக்ஷணன் திரும்பி அவளை நேர்நோக்கி வெறுப்புடன் உதடுகளைச் சுழித்து “அதற்கு நான் என்ன செய்யவேண்டும்? அடிமையென உனக்கு தொண்டு செய்யவேண்டுமா?” என்றான். அன்னை உடனே விசும்பினாள். “நீ அச்சுவடிகளை படிக்காதே. அவற்றை வீசிவிடு. அவற்றை படித்துத்தான் உன் தந்தை என்னைவிட்டு கிளம்பிச் சென்றார். உன்னையும் இழந்தால் என் உலகமே அழிந்துவிடும்.”

அவன் அவளை நோக்கி இகழ்ச்சியுடன் “உன் உலகைப் பேணும் பொறுப்புதான் எனக்கு வாழ்க்கை, அல்லவா?” என்றான். அவளால் அதற்கு மறுமொழி சொல்ல முடியவில்லை. “வேண்டாம், மைந்தா...” என்றாள். “செல்க! செல்க!” என்றபடி தீக்ஷணன் எழுந்தான். கைவீசி “என்னை தனிமையில் விடு... என்னை விட்டுவிடு...” என்று கூவினான். அவன் குரல் உடைந்து ஒலித்தது. “என்னை உன் காலடியில் நாயென கட்டியிட நினைக்கிறாய். என்னை உன் அடிமையென எண்ணுகிறாய்... நீதான் என் தளை. என் சிறை நீ.” அன்னை உதடுகளை இறுக்கிக்கொண்டு ஓசையின்றி அழுதாள். அவன் அந்த அழுகையோசைகளை அன்றி எதையும் கேட்க முடியாதவனாக அமர்ந்திருந்தான். அவை கூசவைத்தன, சிறுமைகொள்ளச் செய்தன, ஆகவே சீற்றத்தை எழுப்பின. எதையோ கிழித்துக் கிழித்து வீசிக்கொண்டிருப்பதுபோன்ற அழுகை.

அவன் வெளியே சென்றுவிடலாம் என்று எண்ணினான். ஆனால் அஸ்தினபுரியின் ஓசையும் ஒளியும் அவன் நினைவிலெழுந்து உடலை கூசவைத்தன. மீண்டும் மஞ்சத்தில் அமர்ந்தான். பின்னர் வெறியுடன் தலையை ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டான். விம்மலும் கேவலுமாக அழத்தொடங்கினான். அன்னை ஓடிவந்து அவன் கைகளை பற்றினாள். அவன் அவளை உதறி அகற்ற முயல கைகளை இறுகப்பற்றி இறக்கி அவன் மடிமேல் அமைத்து அழுத்திக்கொண்டாள். “உனக்கு என்னவேண்டும்? எதற்காக இத்தனை துயரம் அடைகிறாய்? சொல், உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? நான் சாகிறேன். நான் செத்தால் நீ மகிழ்ச்சியாக இருப்பாயா?”

அவன் அவளை பெருகிப் பெருகி உடலையே ஆட்கொண்ட கசப்புடன் நோக்கிக்கொண்டிருந்தான். அந்த உணர்வுகள் மிகை. அந்தச் சொற்கள் மிகை. ஆனால் காலந்தோறும் அத்தனை பெண்களும் அத்தருணத்தில் அத்தகைய சொற்களையே சொல்லிவந்திருக்கிறார்கள். அவர்கள் வேறொன்று அறியார். அவன் அவள் முகத்தை நோக்கி “நான் இந்நகரை வெறுக்கிறேன். இந்த வீட்டை வெறுக்கிறேன். இந்த மக்களை, என் சுற்றத்தை, உன்னை வெறுக்கிறேன்” என்றான். “ஏனென்றால் இவையனைத்துமே பொய். பொய்யை உண்டு பொய்யை உயிர்த்து பொய்யில் திளைக்கிறீர்கள் நீங்கள். இந்தப் பொய் என்னை தொட்டாலே கூசுகிறேன். எண்ணி எண்ணி அருவருக்கிறேன்.”

அவள் அவன் கையை உலுக்கி “வேண்டாம், இப்படியெல்லாம் நினைக்காதே. இது உன்னை தூக்கிக்கொண்டு சென்றுவிடும்” என்றாள். “ஆம், இங்கிருந்து சென்றுவிடவே எண்ணுகிறேன்.

இவையனைத்தையும் ஒருகணம்கூட எண்ணாமல் அகன்றுவிடவேண்டும் என்று விழைகிறேன்” என்றான். அவள் “மைந்தா… மைந்தா, என் உயிர் நீ. என் வாழ்க்கையின் பொருள் நீ” என்றாள். மீண்டும் அவன் உடல்கூசினான். ஏதோ கூத்துப்பாடலின் வரிபோல அத்தனை தொன்மையானது, பழகியது, ஆகவே செயற்கையானது அச்சொற்றொடர். அவ்வழுகையும் அந்த முகமும்கூட அத்தனை குமட்டலை உருவாக்கின. “எழுந்துசெல். நீ என் தளை. உன்னை உதறினாலன்றி எனக்கு விடுதலை இல்லை” என்றான்.

அவள் கண்களில் ஒருகணம் வந்து மறைந்த சீற்றம் அவனுக்கு நிறைவை அளித்தது. “சினமடைகிறாய் அல்லவா? அதைத்தான் எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் அது உண்மையானது, இந்த அழுகையும் புலம்பலும் பொய். எனக்கு பொய் குமட்டுகிறது” என்றான். அவள் உடலுக்குள் அவள் இன்னொன்றாக மாறுவதை அவனால் உணரமுடிந்தது. அவள் குரல் மாறிவிட்டிருந்தது. “உன் தந்தையும் இப்படித்தான் என்னிடமிருந்து கிளம்பிச் சென்றார். நீயும் செல். சென்று எதை அடையப்போகிறீர்கள் நீங்கள்?” என்று அவள் கூவினாள். அவள் முகம் வெறுப்பில் வலிப்பு கொண்டிருந்தது. “நான் சொல்கிறேன், நீயும் உன் தந்தையும் உன்னைப் போன்றவர்களும் எதையும் அடையப்போவதில்லை. ஏனென்றால் நீங்கள் தன்மையம் கொண்டவர்கள். ஆணவம் நிறைந்தவர்கள். அந்த ஆணவம் பெருகி அழுகி சீழ்கட்டி துடிக்கும்போது சூழ இருப்பவர்களை புழுக்கள் என நினைக்கிறீர்கள். அவர்களுக்கு மேல் தலைதூக்கி நின்று மானுடப்பதர்களே என அழைக்க விரும்புகிறீர்கள். நீங்கள் நாடுவது அதை மட்டுமே. உன் தந்தை அதன்பொருட்டே கிளம்பிச் சென்றார். நீயும் அதற்காகவே செல்கிறாய்.”

அவள் எழுந்து விசையுடன் தன் அவிழ்ந்த குழலை சுழற்றிக் கட்டினாள். “செல், சென்று ஆடையில்லாமல் மண்பூசிய உடலுடன் சுடுகாட்டில் வாழ்ந்துகொள். சடை நீட்டி பேயுருக் கொள். மானுடர் விழைவன அனைத்தையும் விலக்கு. மானுடர் அருவருப்பும் அச்சமும் கொள்வன அனைத்தையும் செய். நான் நான் என தருக்கு. முச்சந்திகளில் சென்று நின்று மானுடமே என அறைகூவு. அதுதானே நீ விழைவது?” அவன் நடுங்கத் தொடங்கினான். அவளுடைய சீற்றம் முதலில் அவனுக்கு அளித்த தண்மை அகன்று அவன் அகம் கொதிக்கத்தொடங்கியது. “மூடு வாயை” என்று கூவினான்.

“நான் வாயை மூடிக்கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். பிறர் துயர் அறிய முடியாத உங்களைப் போன்றவர்கள் இப்புடவியில் ஒரு சிறுதுளியைக்கூட அறிய முடியாது. நான் உன்னை அறிவேன், ஏனென்றால் நான் என்றும் உன்னுடன் இருக்கிறேன். அணுக்கத்தால் அறிகிறேன். நீ என்னை துளியும் அறியமாட்டாய். ஏனென்றால் நீ என்னை விலக்கவே எண்ணிக்கொண்டிருக்கிறாய். விலகிச்சென்று அறிவது எங்ஙனம்? ஒவ்வொன்றாக விலக்கிச் சென்று இன்மையை அறிவதைப்போல் பேதைமை வேறென்ன? இருப்பதை அறிய வந்தாயா? இன்மையை அறிவதென்றால் அவ்வறிவின் பயன்தான் என்ன?”

அவன் “செல்க!” என்றான். “செல்க! செல்க! செல்க!” என்று கூச்சலிட்டான். அவள் வஞ்சத்துடன் அவனை பார்த்தாள். “உன் தந்தையை ஆயிரம் முறை நான் தீச்சொல்லிட்டிருப்பேன். அவர் என்னை நீங்கிச் சென்றமையால், எனக்களித்த துயரால் எதையுமே அறியலாகாது என்று. வெறுமையைச் சென்றடைந்து அழியவேண்டும் என்று. அத்தீச்சொல்லையே

உனக்கும் அளிக்கிறேன். நீ எதையும் அறியப்போவதில்லை. நீ அடைவதென ஏதுமில்லை. கெடுக உன் அறிவு!” அவள் மூச்சிரைக்க திரும்பிச் சென்றாள். அவன் கூடவே சற்று எழுந்து கைநீட்டி எதையோ சொல்ல எண்ணி பின் ஒழிந்து தளர்ந்து அமர்ந்தான்.

சுவர்களில் இருந்து முகங்கள் எழுந்து வந்தன. அஜிதகேசகம்பளனின் முகம். “அதுவே மிகப் பெரிய மாயை. அது விழிநீரால், அறச்சீற்றத்தால், பழிச்சொல்லால் உன்னை அள்ளிக்கொள்ளும். ஆயிரம் கைகள், பல்லாயிரம் நாவுகள், பலகோடி கலங்கிய விழிகள் கொண்டது. வென்றெழுக!” அவன் “ம்” என்றான். “நோக்குக, இங்குள்ள ஒவ்வொன்றையும் அறியவே நீ வந்தாய்! ஆனால் கொள்ள எண்ணினால், பேண விழைந்தால், வெல்ல முனைந்தால் நீ அவற்றை உரியது என்றும் அல்லது என்றும் பிரித்துக்கொள்கிறாய். நன்றென்றும் தீதென்றும் அழகென்றும் அல்லவென்றும் ஆயிரம் பிரிவினைகளை நிகழ்த்திக்கொள்கிறாய். இங்கிருந்து அறியமுயல்வோர் பாதியையே அறிய முடியும். பாதியறிதல் என்பது முழுப் பொய்யே” என்றார்.

“நீ விடுவது இப்பொருட்களை அல்ல, இவ்வுறவுகளை அல்ல, இவ்வுலகையும் அல்ல. நீ விடுவது இவற்றுடன் நீ கொண்டுள்ள உறவையே. விலக்கம் பயிலவே விட்டுச் செல்கிறாய். விலகிய பின் அணுகி வந்து அறிக! அவ்வறிவே மெய்யென்று உணர்க!” அவன் பித்துவிழிகளால் நோக்கிக்கொண்டிருந்தான். பரமேஷ்டி அவன் முன் எழுந்தார். “உன் அன்னை உன்னை அறிந்துள்ளாளா என்ன? அவள் அறிந்த நீயா உன் மெய்? நீ அவளை அறிந்ததற்கு மறுபக்கம் அது. இரண்டும் பாதியறிதல்களே. வெறுப்பதை அறியமுடியாதென்று

அறியாதோர் எவருமிலர். எனில் விரும்புவதை மட்டும் எவரால் அறியமுடியும்?” அவன் முன் கபிலர் எழுந்தார். “இங்குள்ளோர் கொள்ளும் பெருந்துயரே அதுதானே? விரும்பியவர்களுக்காக அவர்கள் உயிர்வாழ்கிறார்கள். விரும்புவதனால் அவர்கள் அவர்களை அறிவதுமில்லை. ஆகவே அறியாதோருக்காக வாழ்வை அளிக்கிறார்கள். அறியமுடியாமையின் பெருந்துயரில் உழல்கிறார்கள்.”

அவன் எழுந்துகொண்டு தன் சால்வையை எடுத்தான். அறையைவிட்டு வெளியே செல்ல முனைந்தபோது அன்னை ஓடிவந்து அவனை தடுத்தாள். “அன்னை சொல் கேள். மைந்தா, வேண்டாம். வேண்டம், செல்லாதே!” என்றாள். “நீ செல்லுமிடம் எனக்கு நன்றாகவே தெரிகிறது, வேண்டாம். நான் சொன்னதை எல்லாம் மறந்துவிடு. அவை அடிவயிற்று நெருப்பால் எழுந்த சொற்கள். நீ என் தெய்வம், என் மூதாதை வடிவம். என் கொடிவழிகளின் முகம். நீ இன்றி எனக்கு உலகமே இல்லை.” அவன் “விலகு” என்றான். “மைந்தா மைந்தா” என அவள் அவன் கையை பிடித்தாள். அவன் அவளை உதறி படியிறங்கினான்.

அவள் அவனுக்குப் பின்னால் ஓடிவந்தாள். “நான் சொன்னவை எல்லாம் பொய்யுணர்வுகள். உன்னைச் சீண்டும் பொருட்டு சொன்னேன். உன் பாதை செல்லுமிடம் வெறும் இருள். அன்னை அதை நன்கறிவேன். மைந்தா, அன்பன்றி வேறேதும் இப்புவியில் ஒரு பொருட்டல்ல. அதுவன்றி இன்பமும் வேறில்லை.” அவன் நின்று திரும்பி “எனில் நீ துயரடைவது அன்பால் அல்லவா? ஆணவத்தாலா?” என்றான். அவள் திகைத்து நின்றாள். “நீ மகிழ்வுறுகிறாயா? துயர்கொண்ட அன்னையென்னும் மாற்றுருவை நடித்து நிறைவடைகிறாயா?”

அவள் கசப்புடன் சிரித்தாள். “அணுக்கமானவர்களை துன்புறுத்தும் கலையை நாம் குழவிப்பருவத்திலேயே கற்றுக்கொள்கிறோம்” என்றாள். “ஆனால் நீ அறிவாய் மெய்யை. நான் ஐயமின்றி சொல்கிறேன். நீ செல்லும் பாதை வெற்று ஆணவத்தாலானது. அடியிலா இருளை அன்றி எதையும் அளிக்காதது. வேண்டாம். நில், அன்னையின் ஆணை இது நில்!” அவன் அவளை திரும்ப நோக்காமல் நடந்தான். அவள் தெருவருகே நின்றுவிட்டாள். நன்று, அவள் பெண். பெண்கள் தெருவுக்கு அப்பால் வரமாட்டார்கள். வீதிவரை மங்கை, காடுவரை மைந்தர். அவன் புன்னகைத்துக்கொண்டான்.

இம்முறை அவன் விளக்கொளியின் கீழ் சென்றுவிட்டான். அங்கே காவல்நின்றிருந்த நாய் ஒன்று அவனைக் கண்டு திடுக்கிட்டு பின்னகர்ந்து கூச்சலிட்டது. பின்னர் அனைத்து நாய்களும் ஊளையிட்டு அழுதன. அவன் ஒளியில் சிவந்த உடலுடன் அங்கே நின்று தன்னைச் சூழ்ந்து ஓசையிடும் பதைப்பு மிக்க விழிகளை கண்டான். பின்னர் மையச்சாலை நோக்கி சென்றான்.

# ளிற்றியானை நிரை - 78

**பகுதி எட்டு : அழியாக்கனல்**-2**

மீண்டும் அஸ்தினபுரியின் பெருந்தெருவை அடைந்தபோது முதலில் தீக்ஷணன் அமைதியடைந்தான். திரளுக்குள் தன்னை பொருத்திக்கொண்டான். அவன் கைகளும் கால்களும் கைகால் அலைகளில் இணைந்தன. தோள்கள் தோள்களுடன் பிணைந்தன. அவனுக்கான இடம் அங்கே

ஏற்கெனவே செதுக்கப்பட்டிருந்தது. மிச்சமில்லாமல் கரைந்தழியும் உணர்வை அடைந்தான். ஆனால் சற்றுநேரத்திலேயே அவன் பிரிந்து படியலானான். அவன் அடித்தளமென அமைந்திருக்க அவனுக்குமேல் அலைகள் சுழித்துக்கொண்டிருந்தன. ஓசைகள், வண்ணங்கள், உடல்கள். அவன் மேல் உடல்கள் முட்டியபோதெல்லாம் அவன் துணுக்குற்றான். உடல் அதிர்ந்து சீறித் திரும்பினான். ஆனால் அங்கே எவரும் எதையும் காணவில்லை. எவரும் இன்னொருவர் அங்கிருப்பதை உணரவில்லை.

அவன் தன்னை பிரித்துக்கொள்ள முயன்றான். தன்னை இழுத்து இழுத்து சேர்த்துக்கொண்டான். கைகளையும் கால்களையும் ஆடையையும் இழுத்துக்கொண்ட பின்னரும் திரளில் ஏதோ எஞ்சியிருந்தது. அவன் பெருமூச்சுடன் மாளிகை ஒன்றின் சுவரோரமாக நின்றான். பின்னர் அதன் சிறு திண்ணையில் ஏறிக்கொண்டான். திரண்டு சுழித்து அலைகொண்டு நின்று புரண்டு கரைததும்பி சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவராலும் அந்தப் பெருக்கில் இருக்க இயல்கிறது. அவர்கள் அப்பொய்மையில் திளைக்க முடிகிறது. அதுவே இன்பமென்றால் மெய்யென்ற ஒன்றுக்கான தேடல் எதற்காக?

ஆனால் அவர்கள் அதில் திளைக்கவில்லை. அதைவிடப் பெரிய ஒன்றுக்கு அதை நிகர்வைக்க முயல்கிறார்கள். ஆகவேதான் துலாத்தட்டை இப்படி அழுத்திக்கொள்கிறார்கள். மிடிமையை, இழிவை, சாவை, வெறுமையை இவற்றைக்கொண்டு நிகர்செய்கிறார்கள். அவை மெய். இவையனைத்தும் பொய். பாறையை முகில்கொண்டு நிகர்செய்ய முயல்கிறார்கள். பாறையை மறைக்க முடியும்.

சற்றுநேரம். ஒரு காற்று எழும் வரை. பகலொளி வெளிக்கும் வரை. ஆனால் அவர்களுக்கு வேறு வழியில்லை. அவர்களுக்கு இதுவாவது எஞ்சியிருக்கிறது. ஆனால் நான் அறிந்தாகவேண்டும். அந்தப் பாறையின் நிகர் எடை எது என. மாயை இன்றி, பொய் இன்றி, நேர்விழிகாளால் அறிந்தாகவேண்டும்.

அவன் நின்றிருந்த அந்தத் திண்ணையை ஒட்டியிருந்த சிறிய வாயில் திறந்தது. உள்ளிருந்து ஒருவன் எட்டிப்பார்த்து "இன்னும் திரள் சென்றுகொண்டிருக்கிறது" என எவரிடமோ சொன்னான். கதவு மூடப்பட்டது. இந்தப் பெருக்கில் இவர்கள் அறைமூடி அமர்ந்து என்ன செய்கிறார்கள்? மதுவா, வேறேதும் மூலிகைக் களிமயக்கா? எதுவானாலும் அதில் நான் ஒன்ற முடியும். என்னைப்போல் வண்டல் எனப் படிந்தவர்கள் இவர்கள். அவன் அக்கதவை மெல்ல சுண்டினான். உள்ளிருந்து தாழ் விலக்கும் ஓசை கேட்டது. முன்பு திறந்தவன் இம்முறையும் திறந்தான். "யார்?" என்றான். தீக்ஷணன் "செய்தியுடன் வந்துள்ளேன்" என்றான். "என்ன செய்தி?" என்றான் அவன். "விழவு குறித்த செய்தி." அவன் உள்ளே நோக்கி "எவனோ விழவு குறித்த செய்தியுடன் வந்திருப்பதாக சொல்கிறான்" என்றான். "களிமகனா? சூதாடியா?" என்றார் உள்ளிருந்தவர். "அல்ல" என்றான் திறந்தவன். "வரச்சொல்" என்றார் உள்ளிருந்தவர். கதவு திறந்து அவனை உள்ளே எடுத்துக்கொண்டது.

உள்ளே விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. தரை முழுக்க சுவடிக்கட்டுக்கள் செறிந்திருந்தன. நடுவே எழுவர் அமர்ந்து சுவடிகளை அடுக்கி கட்டிக்கொண்டிருந்தனர். மூவர் முதியவர்கள், இருவர் மிக இளையோர். இருவர் நடு

அகவையினர். அனைவருமே அந்தணர்கள். “யார் நீர்?” என்று முதியவர் கேட்டார். தீக்ஷணன் சூழலை உடனே புரிந்துகொண்டான். “நான் கௌசிக குலத்து சுகேசரின் மைந்தனாகிய தீக்ஷணன். அதர்வவேதத்தவன். அதை மீறும் நூல்களை கற்றவன். இங்கே சுவடிகள் ஆய்வுசெய்யப்படுவதை அறிந்தேன். இங்கு இருக்க விழைந்தேன்” என்றான். அவர் அவனை கூர்ந்து நோக்கி “இது வேதம் உசாவும் இடம் அல்ல. மெய்நூல் பேசுவதற்குரிய இடமும் அல்ல. நாங்கள் நெறிநூல்களை தேர்பவர்கள்” என்றார்.

“ஆம், நான் நெறிநூல்களில் மெய்நூல்கள் எவ்வண்ணம் செயல்படுகின்றன என்று ஆராய்பவன்” என்று தீக்ஷணன் சொன்னான். அவர் “என் பெயர் ஜங்காரி. விஸ்வாமித்ரரின் மைந்தரான ஜங்காரி முனிவரின் வழிவந்த குருமரபு என்னுடையது” என்றார். “நான் கையில் வைத்திருக்கும் இச்சுவடி ஒரு நெறிநூலைச் சார்ந்தது. இது இவ்வாறு உரைக்கிறது. இது எந்நூல் என சொல்லமுடியுமா? எங்கேனும் கேள்விப்பட்டிருக்கிறீரா?” என்றபின் இளம் மாணவனிடம் அச்சுவடியை நீட்டி “படி” என்றார்.

அவன் உரத்த குரலில் அச்சுவடியை படித்தான். “தெய்வத்தை நான் கண்டதில்லை. தெய்வத்தை ஏற்க சான்றுகளும் இல்லை. தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் முன்னை வினைப்பயனால் அல்லவா அந்த நிலையை அடைந்தனர்? செயல் விளைவை உருவாக்குமென்பதை ஐயமறக் காண்கிறோம். மானுடர் பிறந்து மாய்கிறார்கள். மறக்கப்படுகிறார்கள். அவர்களின் செயல்களோ விளைவுகளாக எஞ்சுகின்றன. விளைவுகள் செயல்களாகி மீண்டும் நீள்கின்றன. முன்னைவினை நிகழ்வினை வருவினை ஈட்டியிருக்கும்

வினை என நான்குவகையான நிலைகள் இவ்வண்ணம் உருவாகின்றன. ஆகவே வேதச்சொல்லுக்கு அடுத்தபடியாக உலகியலில் துயரறுத்து மீட்புகொள்ளச் செய்யும் செயல்நிலைகளை சொல்லியிருக்கின்றனர் மூதாதையர்."

தீக்ஷணன் "இது பராசர கீதை என்னும் தொல்நூல். இது முன்னர் மிதிலையை ஆண்ட அரசமுனிவரான ஜனகர் பராசர முனிவரிடம் கோரியபோது அவர் உரைத்தது" என்றான். ஜங்காரி புன்னகைத்து "நன்று, உம் விழிகளைக் கண்டபோதே எண்ணினேன். அமர்க!" என்றார். தீக்ஷணன் அவரை வணங்கிய பின் அமர்ந்தான். "என்ன நிகழ்கிறது இங்கே? இச்சுவடிகள் எவை?" என்றான். அவர் "நான் தென்புலத்தின் விஜயபுரியிலிருந்து வருகிறேன். ஷத்ரியகுடியில் பிறந்தவன்" என்றார். "இங்கே பாரதவர்ஷத்தின் மாபெரும் ராஜசூய வேள்வி நிகழவிருக்கிறது. அதில் நூறு நாட்கள் நூறு நெறியவைகள் கூடவிருக்கின்றன. அவற்றில் பாரதவர்ஷத்தின் முதன்மை நெறிநூல்கள் அனைத்தும் அரங்கேற்றப்பட்டு அறிஞர்களால் முழுதுற உசாவப்பட்டு ஏற்புடையவை அஸ்தினபுரியின் அரசரின் ஒப்புதலுக்கு அளிக்கப்படும். மும்முடி சூடிய பேரரசரின் கோலால் நிலைநிறுத்தப்படும் நூல்களே இனி பாரதவர்ஷத்தை ஆட்சி செய்யும்" என்றார்.

அவன் "இவையனைத்தும் நெறிநூல்களா?" என்றான். "ஆம், இவற்றில் தொல்நூல்கள் முதல் அண்மையில் புலவர்கள் யாத்தவை வரை உள்ளன. நாங்கள் நூறுநெறிநூல்களை அவை முன் வைக்கிறோம். இவ்வண்ணம் நூற்றுக்கணக்கான அறிஞர் குழுக்கள் தங்கள் நெறிநூல்களை முன்வைப்பார்கள். நூல்வேறுபாடும் சொல்மாறுபாடும் களைந்து தூயநூல் அறுதி செய்யப்படும். அந்நெறிகளின் நேற்றைய நிலையும் இன்றைய

நடப்பும் நாளைய விளைவும் முழுதுற ஆய்வுசெய்யப்படும். அதன்பின் அரசருக்கு அவை தன் ஏற்பையும் அதன் அடிப்படைகளையும் அளிக்கும். மறுக்கப்படும் நூல்களுக்கு மேல் நிகழ்ந்த சொல்லாடல்கள் தொகுத்து அளிக்கப்படும்” என்றார் ஜங்காரி. “இச்சடங்கு ராஜசூயத்தை ஒட்டி வழக்கமாக நிகழ்வதுதான். இதை சாந்தி தர்ப்பணம் என்பார்கள். இந்நூல்களை சாந்திகிரந்தங்கள் என்று அடையாளப்படுத்துவார்கள்.”

“இதுவரை பாரதவர்ஷத்தில் இருபத்தெட்டு அமைதிக்கொடை நிகழ்வுகள் நடந்துள்ளன. இருபத்தெட்டு அமைதிநூல் தொகைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த வேள்வியே இதுவரை நிகழ்ந்தவற்றில் தலையாயது, இன்னும் பல தலைமுறைக்காலம் பாரதவர்ஷத்தை ஆளவிருப்பது. ஆகவே இந்த அமைதிநூல்தொகையில் ஒரு சிறந்த நூல்கூட தவறவிடப்படக் கூடாது என முடிவுசெய்திருக்கிறோம்” என்று இன்னொரு புலவர் சொன்னார். “யாக்ஞவல்கிய மரபைச் சேர்ந்தவனாகிய நந்திசேனன் நான். எங்கள் குருநிலையின் ஏழு நூல்கள் இங்குள்ளன. நீங்கள் வருகையில் நாங்கள் எங்கள் முதலாசிரியர் ஊழிவெள்ளத்தைப் பற்றி கூறிய செய்திகளை ஏடுகளுடன் ஒப்பிட்டுக்கொண்டிருந்தோம்.”

ஜங்காரி “இங்கே நாரதர், யாக்ஞவல்கியர், வசிட்டர், பராசரர், கபிலர் என முதன்மையான முனிவர்களின் சொற்களெல்லாம் உள்ளன. ஏடுகளை ஒப்பிட்டு முடித்துக்கொண்டிருக்கிறோம். செய்யச்செய்யப் பெருகும் பணி இது. நூலறிந்தோர் எவர் வந்தாலும் பணிக்கு போதியவர்கள் இல்லை என்பதே நிலை” என்றார். “அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு நிலைகளும் இங்கே முற்றாக வகுக்கப்பட்டுவிடும். அவை

குறித்த உசாவல்கள் என்றுமிருக்கும். ஆனால் இங்கு இவ்வண்ணம் தொகுக்கப்பட்டவற்றுக்கு மேலெழுந்தே எவரும் சொல்லெடுக்க முடியும்.”

தீக்ஷணன் ஒரு சுவடியை எடுத்து புரட்டினான். இந்திரனுக்கும் மாந்தாதாவுக்கும் அரசநெறி பற்றி அமைந்த உரையாடல் அது. அவன் அந்நூலை முன்னரே பயின்றிருந்தான். அதை கீழே வைத்துவிட்டு பிறிதொரு சுவடியை எடுத்தான். க்ஷேமதர்சி என்னும் முனிவருக்கும் காலகவ்ருக்ஷீயருக்குமான உரையாடல். உலக நிலையாமை, யாக்கை நிலையாமை, அறம் நிலையாமை, அறிதல் நிலையாமை என்னும் நால்வகை நிலையாமைகளை பற்றியது. அவன் அச்சுவடியை மீண்டும் அடுக்கிவிட்டு “நான் அறியாத நூல். கேள்விப்பட்டதே இல்லை” என்றான்.

“அத்தகைய பல நூல்கள் இங்குள்ளன. பல நெறிநூல்கள் சிற்றூர் முதியவர்கள் சொல்லும் கதைகளின் வடிவில் உள்ளன. இதோ இந்நூல் பௌரிகன் என்பவன் நரியாக மாறிய கதையை சொல்கிறது. நரிகளுக்கும் புலிகளுக்குமான உரையாடல்… நாம் எண்ணிப் பார்க்கவே முடியாத நூல்களெல்லாம் உள்ளன. இன்னும் விந்தையானவை இங்கு நிகழவிருக்கும் அவைகளில் எழுந்து ஒலிக்கக்கூடும். பாரதவர்ஷத்தின் அத்தனை மூலைகளில் இருந்தும் அறநூல்கள் இங்கே வந்தாகவேண்டும் என்று மாமன்னர் யுதிஷ்டிரன் ஆணையிட்டிருக்கிறார். அசுரர் அரக்கர் நிஷாதர் கிராதர் என எவருமே விடுபட்டுவிடக்கூடாது. யவனரின் நெறிகளும் பீதரின் நெறிகளும் சோனகர் காப்பிரிகளின் நெறிகளும் கூட உசாவப்படுகின்றன. நெறிநூல் என்பது காட்டில் மழைபெய்ய தாழ்ந்த நிலத்தில் சுனை

உருவாவதுபோல மக்களிடமிருந்து இயல்பாக உருவாகி வரவேண்டும் என்றார்.”

தீக்ஷணன் “இதில் சார்வாக மரபின் நெறிநூல்கள் உள்ளனவா?” என்றான். “அவர்கள் நெறிவகுக்கலாகாது என்பவர்கள். ஆனால் அவர்களின் பொருள்நோக்கு அணுகுமுறையின் முதன்மை ஆசிரியரான பிரஹஸ்பதி முனிவரின் நூல்கள் ஆறு இங்குள்ளன. இதோ இது இந்திரனுக்கும் பிரஹஸ்பதிக்குமான உரையாடல்.” தீக்ஷணன் அந்நூலின் சில வரிகளை படித்தான். “நான்கு விழுப்பொருட்களுக்கும் அடிப்படை ஒன்றே, அவை ஒன்று பிறிதுக்கு பயன்படவேண்டும். பொருளுக்கும் இன்பத்திற்கும் உதவாத அறமும், இன்பத்துக்கும் அறத்துக்கும் உதவாத பொருளும் அவை மூன்றுக்கும் உதவாத வீடுபேறும் பயனற்றவையே.” அவன் “எதன் அடிப்படையில் இவற்றில் சில தெரிவுசெய்யப்படுகின்றன” என்றான்.

“நெறிநூல்களெல்லாம் ஸ்மிருதிகள், அவை சுருதிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படவேண்டும் என்பது தொல்நெறி” என்று ஜங்காரி சொன்னார். “இங்கே நெறிநூல்கள் அனைத்திற்கும் மையமென அமைந்திருக்கப்போவது பெறுநூலான யாதவகீதை. அதுவே இச்சகடத்தின் அச்சு. அதைக்கொண்டே இவையனைத்தையும் தொகுக்கவிருக்கிறோம். இந்த அமைதி நூல்கள் அதன்மேல் சென்று அமையும். அங்கே குருக்ஷேத்ரத்தில் பீஷ்ம பிதாமகரால் தெரிவுசெய்யப்பட்டு நிலைக்கோள் பெற்ற நிறுவுநூல்களும் யாதவரால் ஒப்பப்பட்டவை. அவையும் அதன்மேல் நின்றிருக்கும். சங்கும் ஆழியும் ஏந்திய விண்முதல்வன் என புதிய வேதம் இந்நெறிநூல்களால்

பொலிவுபெறும். அதுவே ஐந்தாம் வேதம் என்றும் நாராயணவேதம் என்றும் வரும் யுகத்தில் வழுத்தப்படும்.”

“பிதாமகர் பீஷ்மரின் நெறிநூல்களுக்கு இனி இங்கே என்ன பொருள்?” என்றான் தீக்ஷணன். ஜங்காரி “ஏன்?” என்றார். “பீஷ்மரை இங்குளோர் இன்று வெறுக்கிறார்கள்” என்று தீக்ஷணன் சொன்னான். “அவர் சூதர்பாடல்களில் இன்று எதிர்மானுடராகவே காட்டப்படுகிறார்.” ஜங்காரி “ஆம், நானும் பல பாடல்களில் அவ்வாறே அவரை பாடக்கேட்டேன்” என்றார். “இது எழும் யுகத்தின் பெருங்களியாட்டக் காலம். இன்று எல்லா பறவைகளும் எல்லா பூச்சிகளும் ஒற்றைச் சிறகில் பறக்க முயல்கின்றன. ஆகவே எல்லா பறத்தலும் சுழல்களும் கூத்தாட்டமும் என்றே உள்ளன. நிலைமீண்டு புடவிநெறியின் இயல்பறிந்து அமைகையில் பீஷ்மரை மீண்டும் கண்டடைவார்கள்” என்றார்.

“அவர் பெண்பழி சூடியவர் என்பதை மறுக்க முடியுமா? இன்றும் அங்கே கங்கைக் கரையில் அம்பையன்னையின் சிலை குருதிப்பலி கொண்டு அமர்ந்திருக்கிறது. அரசியின் விழிநீர் விழுந்த அவை இங்கே காத்திருக்கிறது” என்றான் தீக்ஷணன். ஜங்காரி “ஆம், பெண்பழி கொண்டவர்தான் அவர். அதன்பொருட்டே அங்கே களத்தில் தன் குலம் முழுதழிவதை கண்டார். அவர் படுகளத்தில் கிடந்து அனைத்தையும் மீண்டுமொருமுறை எண்ணி தொகுத்துக்கொள்ள வகுத்தன தெய்வங்கள்” என்றார். “அவர் அங்கே களத்தில் குருதியாலும் விழிநீராலும் சொல்லாலும் எண்ணத்தாலும் அமைதியாலும் தன்னை மீட்டுக்கொண்டார். விண்புகுந்தார். எட்டு வசுக்களில் எட்டாவது வசு என சென்று அமைந்தார்.”

“ஒவ்வா செயலொன்றைச் செய்தவர் இயற்றிய நெறிநூலுக்கு என்னதான் மதிப்பு இருக்கமுடியும்?” என்று தீக்ஷணன் கேட்டான். ஐங்காரி “ஆனால் அவர் பிறிதென்ன செய்திருக்க முடியும்? இளையவரே, அவர் வாழ்ந்தது துவாபர யுகத்தில். அவரிடமிருந்தவை கிருதயுகத்தில் விளைந்து திரேதாயுகத்தில் கனிந்த விழுப்பொருட்கள். விழுப்பொருட்கள் மானுடரிடம் இல்லை, மானுடர் விழுப்பொருட்களின் ஊர்திகள் மட்டுமே” என்றார். அவரிடம் தணிந்த குரலில் ஏற்ற இறக்கம் இல்லாமல் பேசும் வழக்கம் இருந்தது. அது அவருடைய சொற்களுக்கு ஆழ்ந்த உறுதிப்பாட்டை அளித்தது. அவனை கூர்ந்து நோக்கி அவர் சொன்னது, அவனுக்கு அப்பாலிருக்கும் எவரிடமோ என ஒலித்தது.

“கிருதயுகத்திற்கு முன்பிருந்தது தமோயுகம். அன்று வானில் ஒளியிருந்தது, மண்ணில் அது பரவவும் செய்தது, சொல்லில் ஒளி எழுந்திருக்கவில்லை. எங்கும் வழிகாட்டுவதாக மானுடச் சொல் உருப்பெறவில்லை. அன்று நிலம் சேறுபோல் நெகிழ்வுகொண்டிருந்தது. மரங்கள் அதில் வேர்மிதக்கும் பாசிகள் என ஒழுகின, மலைகள் அதில் மிதந்தலைந்தன என்கின்றன தொல்நூல்கள். எதற்கும் எந்த உறுதிப்பாடும் இல்லாமலிருந்தது. சொல்லுக்கு உறுதியளிப்பது எது? சொல்லுக்குப் பொருளாவது எதுவோ அது. அவை இயற்கையும், தெய்வங்களும் மட்டுமே. வான் எட்டாத் தொலைவிலிருந்தது. மண் நெகிழ்ந்திருந்தது. தெய்வங்கள் அறியமுடியாமையில் அமைந்திருந்தன. எஞ்சியது ஒன்றே, குருதி. இந்த விதையிலெழுந்தது இந்த மரம், இவள் கருவிலெழுந்தது இந்த மகவு, இவனுக்கு இவன் தந்தை என்னும் மாற்றமுடியாத மெய்மை. அது அனைத்தையும்

இணைக்கும் ஒன்று, எந்நிலையிலும் மாறாமல் அமையும் ஒன்று. ஆகவே அதை தலைக்கொண்டனர் முன்னோர்.”

“சொல்லுக்குப் பொருள் அளிக்கும் முதல் பருவடிவ உண்மை குருதியே” என ஜங்காரி சொன்னார். “குருதி தொட்டு நெறிகூட்டுக என்றன தொல்நூல்கள். அத்தனை சொற்களும் அத்தனை நெறிகளும் குருதியால் சான்றுரைக்கப்படவேண்டும், குருதியால் ஆவணப்படுத்தப்படவேண்டும் என்றன. குருதி அளித்து தெய்வங்களை விண்ணிலிருந்து இறக்கி இங்கே நிலைநிறுத்தினர். தெய்வங்கள் தங்கள் பீடமென நிலத்தை உறுதியாக்கின. தொல்நெறிகள் அனைத்துக்கும் அடிப்படையானது குருதியே. ஒவ்வொரு மானுடனின் வாழ்வும் சாவும் அவன் குருதியால் முற்றாக வகுக்கப்பட்டது. ஒவ்வொருவரின் அடையாளமும் குருதியால் பொறிக்கப்பட்டது. நன்றும் தீதும் குருதியால் முடிவுசெய்யப்பட்டது. பீஷ்மர் அறிந்தது அதைத்தான், மலைக்கங்கர்களிடமிருந்து அவர் கொண்டு வந்தது அதையே. அம்பையின் முன் அவர் அக்குருதியின் சொல்லுடன் நின்றார். அவையில் அக்குருதியின் அமைதியுடன் அமர்ந்திருந்தார்.”

ஜங்காரி தொடர்ந்து சொன்னார். “துரியோதனனையும் யுதிஷ்டிரனையும் பிதாமகர் நன்கறிவார். குடிகளின் உள்ளத்தை மேலும் அறிவார். தூதுவந்து அவை நின்றவன் எவன் என மிகமிக நன்றாகவே அறிவார். எனினும் குருதியால் நிலைகொண்ட நெஞ்சும் குருதியின் பாதையில் ஒழுகும் அறமும் கொண்ட அவர் வேறு என்ன செய்திருக்கமுடியும்? கூறுக! தொல்குருதிநெறியை அறிந்த எவரும் அவர் எண்ணியதையே தானும் எண்ணக்கூடும். குருதியால் முடிக்குரியவர் துரியோதனன் மட்டுமே. அவருக்கு

துணைநின்று, அந்த முடி நிலைக்க போரிடுவதே அவர் செய்வது.”

தீக்ஷணன் சீற்றத்துடன் “அவையில் பெண்சிறுமை செய்யப்படுவதை நோக்கி அமர்ந்திருப்பதும் கூடவா?” என்றான். “ஆம்” என்றார் ஜங்காரி. “நாம் கொண்டிருக்கும் நெறிநூல்களில் தொன்மையான அனைத்துமே நிலமும் பெண்ணும் வல்லமையால் கொள்ளப்படவேண்டியவை என்றே சொல்கின்றன. வெல்லப்படவேண்டியவை, வெல்பவனுக்குப் பரிசென ஆகவேண்டியவை. ஆகவே எதிரியின் கையில் சிறப்பு கொள்ளப்படக்கூடாதவை. நம் தொல்மூதாதையர் நிகழ்த்திய அத்தனை போர்களிலும் எரிபரந்தெடுத்தல் நடைபெற்றிருக்கிறது. நகரங்களும் காடுகளும் எரியூட்டப்பட்டிருக்கின்றன. ஊருணிகள் யானைகளால் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஊற்றுகள் நஞ்சூட்டப்பட்டிருக்கின்றன. ஏரிகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. அறிக, தொல்வேதம் வணங்கிய தலைவனாகிய இந்திரன் நகரங்களை எரிப்பவன், ஏரிகளை உடைப்பவன் என்றே போற்றப்பட்டிருக்கிறான்.”

தீக்ஷணன் பெருமூச்சுவிட்டான். ஜங்காரி புன்னகைத்து “தெய்வத்தின் முழுதுருவை நோக்குவதை ஒப்பவே கடினமானது அறத்தின் முழுதுருவை காண்பது. அதுவும் முடிவில்லா தோற்றப்பெருக்கு கொண்டது, எண்ணற்ற செயல்வடிவு கொண்டது” என்றார். “தொல்நூல்களை கற்றிருந்தால் அறிந்திருப்பீர். இங்கிருந்தவை பெண்கோன்மைகள். அன்னையர் ஆட்சியை வென்று அடைந்தவையே அனைத்தும். ஆகவே பெண்ணை சிறைப்பிடித்தல் அன்றைய அறம். வெல்லமுடியாத பெண்ணை

சிறுமைசெய்தலும் இங்கு இயல்பென்றே நடந்தன. இளையவரே, இங்குள்ள நகரங்கள், படைகள், அரண்மனைகள், அரசவைகள், கொடைகள், நெறிகள், அறங்கள் அனைத்தும் பெண்ணை வென்று அடையப்பெற்றவையே. பெண்சிறுமை நிகழாத ஒரு தொல்நூலேனும் நீர் கற்றவற்றில் உண்டா?”

தீக்ஷணன் சொல்மலைத்து அமர்ந்திருந்தான். “பீஷ்மரின் நெறிகளின்படி மணிமுடி சூடி அமர்ந்தமையாலேயே அரசி திரௌபதி படைகொண்டு சென்று வெல்லத்தக்கவர். வென்றெடுத்த அரசர்களை அவைச்சிறுமை செய்து மாண்பழித்து அரசரென அல்லாமல் ஆக்குதல் தொல்வழக்கம். ஆகவே தொல்நெறியை மீறி எதையும் துரியோதனனும் துச்சாதனனும் செய்துவிடவில்லை. துரோணரும் கிருபரும் மற்றும் அவையமர்ந்த மூத்தோரும் அவ்வண்ணமே எண்ணினார்கள்” என்றார் ஐங்காரி. “பீஷ்மர் நின்ற தொல்நெறிகளின் தளத்தில் முனிவர் முனிவரால், அந்தணர் அந்தணரால், அரசர்கள் அரசர்களால் வெல்லப்படத்தக்கவர்கள். அரசர்களுக்கு உரியவர்களே குடிகளனைத்தும். குடிகளுக்கென உரிமைகளும் உணர்வுகளும் ஏதுமில்லை. ஒவ்வொரு குடிக்கும் உளமுண்டு, தன்னிலை உண்டு, விழைவுகளும் உண்டு என்பது இன்று எழுந்த ஐந்தாம் வேத நெறி.”

“ஒவ்வொரு உயிரும் ஆத்மாவே என்பதும் ஆத்மாவனைத்தும் பிரம்மவடிவமே என்பதும் தன்னை தான் அறிந்து தன்முழுமையில் தானமைய ஒவ்வொரு உயிர்த்துளிக்கும் முற்றுரிமை உண்டு என்பதும் நாராயணவேதத்தின் மெய்ச்சொல்.” அவர் பேசி நிறுத்தியதும் அறைக்குள் அமைதி நிலவியது. அங்கிருந்த சுவடிகளை நோக்கியபடி தீக்ஷணன் அமர்ந்திருந்தான். பொருளில்லாது ஏடுகளை அடுக்கி

கலைத்தான். ஜங்காரி சொன்னார் “தொல்நெறிகள் மூன்று யுகங்களாக நாளுமெனப் பெருகி குவிந்திருக்கின்றன. அவற்றிலிருந்து எழும் யுகத்திற்கு உகந்தவற்றை பிதாமகர் பீஷ்மர் தெரிந்து தொகுத்து தன் சொல்லுறுதியை அளித்து நிறுவியிருக்கிறார்.”

“நாராயணவேதத்தின் அறுதியை அவர் படுகளத்தில் உணர்ந்தார். ஆகவே அவர் சொற்கள் மூதாதையரின் ஆணைகளென்றாகின்றன. கிருதயுகத்தில் இருந்து எழுந்து வந்து நாராயணவேதத்தை தொடுபவை அவை. இங்கே எழும் அறத்தின் சொற்கள் என தொடங்கி வரும் காலங்களின் முடிவிலிநோக்கி செல்பவை இங்கே நாங்கள் தொகுக்கும் அமைதிநிறைவின் சொற்கள். யாதவர் நாவிலெழுந்து இனியென்றும் புவிக்கு ஒளிகாட்டும் மூன்றாம் சுடரெனத் திகழப்போகும் தெய்வப்பாடலின் இரு வடிவங்கள் இவை என்று கொள்க!”

இன்னொரு புலவர் “சாந்தியும் அனுசாசனமும் இரு சிறகுகள் என்று ஆகுக! கூட்டுத்தவம் முடித்து எழுக நாராயணவேதம்” என்று வாழ்த்துச் சொல்வரியை சொன்னார். தீக்ஷணன் பெருமூச்சுவிட்டான். “இந்த வேள்வியில் எழும் தொழுகைச்சொல் இது. இனி இச்சொல்லே இங்கு இந்த யுகமெங்கும் திகழும், ஆம் அவ்வாறே ஆகுக!” என்றார் ஜங்காரி. அங்கிருந்தோர் “ஆம், அவ்வாறே ஆகுக!” என்றனர். தீக்ஷணன் எழுந்துகொண்டான். “நீர் கற்பதற்குரிய அனைத்தும் இங்குள்ளன” என்றார் ஜங்காரி. “ஏன் எழுகிறீர்? எங்கு செல்கிறீர்?” தீக்ஷணன் மறுமொழி சொல்லவில்லை. இளையவர் “அவர் நால்வேத வைதிகர் போலும்” என்றார். “அல்ல, நான் வேதமின்மையை நோக்கி செல்ல விழைபவன். இவ்வேதங்கள்

அனைத்தும் கோட்டையும் அரண்மனையும் என மாறுவன. வாளும் வில்லும் வேலும் என்றாவன. பொன்னும் மணியும் என்று உருக்கொள்வன. வியர்வையும் கண்ணீரும் குருதியும் உண்டு நிலைகொள்வன. இல்லை என நீங்கள் எவரேனும் சொல்லலாகுமா?” என்றான்.

ஜங்காரி “அவ்வாறே” என்றார். “எச்சொல்லும் அவ்வாறே இங்கு நிலைகொள்ள முடியும். சொல் தன்னை பொருளென்று ஆக்கிக்கொள்ளாது செயலென நிகழமுடியாது. செயலே புவியை ஆள்கிறது. அறமிலா எதிரிக்கு எதிராக படைக்கலம் என எழாது, குருதி குடித்து தருக்காது நிற்குமென்றால் அச்சொல் பதர் என்றே பொருள்படும். இச்சொல்லும் அவ்வாறே நிலைகொள்ளும்” என்றார். “என்றேனும் இச்சொல் எடைமிகுந்து மானுடரால் தாளமுடியாதபடி ஆகுமென்றால் அன்றும் இன்று இவ்வண்ணம் இவரிலெழுந்த ஒன்று மண்கீறி எழும். விண்தொட எழுந்து நிற்கும். அதையும் சொல்கிறது இந்த மெய்வேதம். நன்று காக்க, தீது ஒழிக்க, அறத்தை நிலைநிறுத்த யுகங்கள் தோறும் எழுகிறேன் என்று.”

தீக்ஷணன் தலையை அசைத்தான். “மீளமீள ஒன்றே நிகழ்கிறது. மானுடமென்னும் இச்சிற்றுயிரை எத்தனை முறை தூக்கி எங்கே போட்டாலும் அது தானறிந்த ஒன்றையே வரைகிறது. நேற்று வேதம் ஏன் வன்மைகொண்டது, வழிமறந்தது? அது நிகழ்ந்தமைக்கான ஏதுக்கள் கண்டடையப்படாதபோது இன்று ஒரு வேதம் மானுடத்திற்கு அளிக்கப்படுவதனால் என்ன பயன்?” ஜங்காரி “இத்தகைய வினாக்களால் பயனில்லை. அன்றைய சிறுவயலுக்கு முள்வேலி போதுமென்றிருந்தது. இன்றிருப்பது யானைகளை

புறம்நிறுத்தும் பெருங்கோட்டை தேவையென்றாகும் பெருவேளாண்மை” என்றார்.

தீக்ஷணன் குனிந்து அவர் விழிகளை நோக்கி “உத்தமரே, உங்கள் அகம் நோக்கி வினவுகிறேன். குருதிகோராத வேதம் என்று ஒன்று உண்டா?” என்றான். அவர் “எவர் குருதி என்பதே வினா. பலிக்குருதியும் பகைக்குருதியும் படாமல் படைக்கலங்கள் செயல்பட முடியாது” என்றார். “வெறும் சொற்கள்” என்றான் தீக்ஷணன். “நான் கிளம்புகிறேன்” என அவன் கதவை நோக்கி சென்றான். “நீர் சார்வாகரா?” என்று இளைஞன் ஒருவன் கேட்டான். அவனை நோக்காமல் “இல்லை, என்னால் அவர்களையும் ஏற்க முடியவில்லை” என்றான் தீக்ஷணன். “நீர் ஏற்பது எதை?” என்று ஜங்காரி கேட்டார். “அறியேன். நான் மறுப்பதென்ன என்று மட்டும் அறிந்துகொண்டிருக்கிறேன், ஒவ்வொன்றையும் மறுத்து மறுத்தே அதை அறிகிறேன். ஏற்பது என ஒன்றைக் கண்டால் அங்கே நின்றுவிடுவேன்.” இளம் புலவன் ஏதோ சொல்ல முயல ஜங்காரி அவனை கைநீட்டித் தடுத்து “உம்மிடம் சொல்லாடுவதில் பொருளில்லை. நீரே கண்டடைக… நலம் சூழ்க!” என்றார். தீக்ஷணன் தலைவணங்கி வெளியே சென்றான்.

# களிற்றியானை நிரை - 79

**பகுதி எட்டு : அழியாக்கனல்**-3**

தீக்ஷணன் வெளியே நெரிந்த கூட்டத்தில் இறங்கியதுமே அவனை அது அள்ளிச் சென்றது. அவன் தன்னை மறந்து அதில் ஒழுகினான். அது எத்திசை நோக்கி செல்கிறது என

அவனால் உணரமுடியவில்லை. அஸ்தினபுரியின் அரண்மனைக் கோட்டை தெரிந்ததும் அவன் “அரண்மனையா!” என்றான். அருகே நடந்த ஒரு முதியவன் “ஆம், பெருங்கொடையாட்டு. பொன் பெறும் நாள்!” என்றான். தீக்ஷணன் அப்போதுதான் அதை உணர்ந்தான். “நூற்றெட்டு கொடை மையங்கள். நீங்கள் எவரென்று கூறி உரியவற்றில் இணையலாம்.” அவன் மறுமொழி சொல்லாமல் சென்றான். அவன் சென்ற நிரை பலவாகப் பிரிந்தது. அவன் தன்னியல்பாக ஏதேனும் ஒன்றில் இணைந்தான். பிரிந்து மீண்டும் வேறொன்றில் ஒழுகினான்.

சாலைகள் எங்கும் மக்கள். பெரும்பாலானவர்கள் களிவெறி கொண்டிருந்தனர். கைதட்டி பாடியபடி ஆடினர். பெண்கள்கூட நிலையழிந்திருந்தனர். கள்மொந்தைகள் பலர் கைகளில் இருந்தன. ஒருவன் தன் கையிலிருந்த வெள்ளிக்காசுகளை சுழற்றி வீசி கூச்சலிட்டான். “எடுத்துக்கொள்ளுங்கள்... இரவலரே, எடுத்துக்கொள்ளுங்கள்... இதோ! இதோ!” ஆனால் எவரும் குனிந்து அதை அள்ளவில்லை. ஏனென்றால் கூட்டம் முட்டி நெரித்துக்கொண்டிருந்தது. அவன் கண்கள் சிவந்து நீர் வழிந்துகொண்டிருந்தது. அவன் நெடும்பொழுதாக குடித்துக் கொண்டிருந்திருக்கவேண்டும்.

அங்கே ஓர் இசை நிறைந்திருப்பதை அதன் பின்னர்தான் தீக்ஷணன் உணர்ந்தான். எவரும் இசைக்கவில்லை, ஆனால் அக்கூட்டமே அவ்விசையில் பொருந்தியிருந்தது. அதற்கேற்ப அசைந்துகொண்டிருந்தது. அந்த இசை அதன் அசைவிலிருந்தே பிறந்தது. அந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெவ்வேறு மொழிகளில் தங்களுக்குள் பேசிக்கொண்ட, கூவி ஆர்ப்பரித்த, சிரித்துக் கொப்பளித்த ஓசை இணைந்து முழக்கமென்றாகி

அந்த இசையாக அமைந்தது. அதனுடன் வெவ்வேறு இசைக்கலன்கள் சேர்ந்துகொண்டன. முழவுகள், பறைகள், கொம்புகள், குழல்கள், மணிகள். அந்நகரமே ஓர் இசைக்கலன் என்றாகி அந்த இசையை உருவாக்கிக்கொண்டது. தன் செவிகள் நிகழ்த்தும் மயக்கா அது என தீக்ஷணன் எண்ணினான். காதை மூடுவதுபோல் கண்களை பலவாறாக மூடித்திறந்தான். அது வான் என காற்று என மண் என அங்கே நின்றிருந்தது. அது நீர், இந்த மக்கள் அதில் மீன்கள்.

அந்த இசை அவன் உடலுக்குள்ளும் நிறைந்திருந்தது. அவன் நரம்புகள் அதை முழக்கின. அவன் வயிற்றில் அது கார்வைகொண்டது. பின்னர் அவன் உணர்ந்தான், வெவ்வேறு முரசுமாடங்களில் அமைந்த பெருமுரசுகளின் தாளமே அதை உருவாக்குகிறது என. அந்தச் சீரான பெருநடைத் தாளம் அனைத்து ஒலிகளையும் தொகுத்து ஒருங்கமைத்தது. பின்னர் அந்தத் தாளம் அங்கிருந்தோர் அனைவருள்ளும் சென்றது. அவர்களின் அசைவுகளை அது ஆண்டது. அவர்களின் ஓசைகளை அது வகுத்தது. அவர்கள் எழுப்புவதெல்லாம் இசையே என்றாக்கியது. இசை என்பது தாளம் அமைந்த ஓசை.

அவன் அதை தனக்குத்தானே என சொல்லிக்கொண்டான். தாளம் என்பது ஒழுங்கைமைந்த ஓசை. ஒழுங்கு. அதை நாடுகிறது உள்ளம். இந்த ஒழுங்கின்மையின் பெருக்கு ஓர் ஒழுங்குக்குள் அமைந்திருக்கிறது. ஒழுங்கின்மையின் தாளம், அல்லது தாளத்தின் ஒழுங்கின்மை. இவர்கள் கட்டின்றி விடப்படவில்லை. அந்தத் தாளத்தால் இவர்கள் ஆளப்படுகிறார்கள். அதை எழுப்புபவர்கள் சற்றே விசைகூட்டினால் இவர்களை வெறிகொள்ளச் செய்யமுடியும். ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கச் செய்யமுடியும்.

மெல்லமெல்ல தளரவைத்து இவர்களை நாணறுந்த ஆட்டப்பாவைகள் என நிலம்படியச் செய்யமுடியும். ஆனால் அது இவர்களை தாங்கியிருக்கிறது. இவர்களை ஒன்றெனத் திரட்டுகிறது.

அரண்மனை கண்ணெதிரே சுடர்கொண்ட மலை என எழுந்து தெரிந்தது. அதன் விளிம்புகள் அனைத்திலும் நெய்விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. அவற்றைச் சுற்றி பீதர்நாட்டு பளிங்குக் குமிழி இருந்தமையால் காற்றில் சுடர்கள் அசைவுகொள்ளவில்லை. சாளரங்கள் செம்பிழம்புகளெனத் தெரிந்தன. “அரண்மனையே பற்றி எரிவதுபோல!” என்று ஒரு முதியவன் சொன்னான். “இன்னும் சற்றுநேரத்தில் அங்கே கைப்பிடிச் சாம்பல் மட்டுமே எஞ்சும் என்பதுபோல.” துணுக்குற்று தீக்ஷணன் அவ்வாறு சொன்னவனை விழிகளால் தேடினான். அவன் முகம் தெரியவில்லை. இன்னொருவன் அவனை நோக்கி புன்னகைத்தான். அவர்களில் எவரும் அவ்வாறு சொல்லியிருக்கக் கூடும் என்பதுபோல.

அவன் சற்று அப்பால் சார்வாகரை பார்த்துவிட்டான். தன் யோகக்கோலுடன் அவர் தனித்துச் சென்றுகொண்டிருந்தார். ஆடையில்லாத மண்படிந்த உடல். நிமிர்ந்த தலையில் சடைக்கொண்டை. தோளில் புரண்ட சடைத்திரிகள். நாணேற்றிய வில் என நடை. அவரை காவலன் ஒருவன் தடுத்தான். அவர் ஏதோ சொன்னதும் அவன் தலைவணங்கினான். அவர் அப்பால் சென்று அங்கு நின்றிருந்த நீள்நிரை ஒன்றில் இணைந்தார். அவரை அந்த நிரை நெற்றை ஓடை என இழுத்துச் சென்றது. அவர் அதில் செல்வதை நோக்கி அவன் சித்தமற்று நின்றான். பின் துடிப்பு கொண்டு தன் நிரையிலிருந்து பிரிந்து அவரை நோக்கி சென்றான்.

தீக்ஷணன் சார்வாகரை அனுப்பிய அதே காவலனிடம் சென்று “நான் சார்வாக முனிவரின் மாணவன், அவருடன் வந்தேன். திரளால் விலக்கப்பட்டேன்” என்றான். “அவர் யார்?” என்று அவன் கேட்டான். “முனிவர், அவரை பார்த்தால் தெரியவில்லையா? சார்வாகர்” என்றான் தீக்ஷணன். “அவர் இங்குள்ள மங்கலங்கள் எதையும் பேணவில்லை. இன்று அரசரின் முன் மங்கல ஆடையின்றி எவரும் செல்லலாகாது என நெறி” என்றான் காவலன். “தவத்திற்சிறந்த மங்கலம் இல்லை. அறியமாட்டாயா நீ?” என்று அவன் சொன்னான். இன்னொரு முதிய காவலன் “ஆனால் சார்வாகர்கள் கொடை பெறுவதில்லையே?” என்றான். காவலர்தலைவன் “ஆம், அவர்கள் அதை வைத்து என்ன செய்வார்கள்?” என்றான். தீக்ஷணன் “அவர் கொடுக்கவும் செல்லலாம் அல்லவா?” என்றான். அவர்கள் திகைத்தனர். “ஆணையிடுக, நான் செல்லவேண்டும்!” என்றான் தீக்ஷணன். காவலர்தலைவன் குழப்பமாக நோக்கிய பின் “செல்க!” என்றான்.

தீக்ஷணன் நிரையில் சேர்ந்துகொண்டான். அது உந்தி உந்தி முன்னகர்ந்தது. எரித்துளி என சார்வாகர் தனித்துத் தெரிந்தார். அவரைச் சூழ ஒரு வெற்றிடம் உருவானது. அந்நிரைக்கு இணையாக அந்தணர் நிரை ஒன்று வந்துகொண்டிருந்தது. அவர்கள் அவரைக் கண்டு திடுக்கிட்டனர். ஒருவரை ஒருவர் அழைத்து அவரை சுட்டிக்காட்டினர். அத்தனை அணுக்கமாக அவர்கள் அவரை முன்பு கண்டிருக்கவில்லை என்று தெரிந்தது. அவர் தன் கையில் அந்த யோகக்கழி அன்றி எதையும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தன்னை நோக்குவதை அவர் உணர்ந்ததாகவும் தெரியவில்லை.

அங்கிருந்த ஒவ்வொருவரின் உடலிலும் மெல்லிய ததும்பல் இருந்தது. அவர்களின் உடல்நீர் உள்ளே அந்தத் தாளத்தைப் பெற்று அதற்கேற்ப அலைகொண்டபடி இருந்தது. விரல்நுனிகளில், தோளசைவுகளில், கால்நிலைகளில் அந்தத் தாளத்தை பார்க்க முடிந்தது. அதிலிருந்து விலக அவன் எண்ணினான். ஆனால் நிலமே அந்தத் தாளத்தை எழுப்பிக்கொண்டிருந்தது. பெரும் மரக்கலம் ஒன்றில் என, கடலின் அலைவை அது அத்தனைபேரிலும் நிகழ்த்துவதுபோல. அவன் சார்வாகரை நோக்கினான். அவர் நிலைக்கோள் கொண்டிருந்தார். அந்தத் தாளத்தின் துளிகூட நிகழா உடலுடன் சென்றார்.

அந்தணர்களும் புலவர்களும் அடங்கிய நான்கு நிரைகளும் நகர்ந்துசென்று வெண்பட்டுப் பந்தலுக்குள் நுழைந்தன. அதன் மூங்கில்கள் தோறும் பீதர்நாட்டு பளிங்குக் குமிழ்கள் உள்ளிருக்கும் நெய்ச்சுடரால் ஒளிகொண்டிருந்தன. ஆயிரம் நிலவுகள் நிரை வகுத்தது போன்ற கண்ணை நிறைக்கும் தண்ணொளி. பரவிய ஒளி நிழல்களை கரைத்திருந்தமையால் அவர்கள் அங்கே விந்தையான சுடர்கள் என அசைந்தனர். நகரின் ஓசைகள் அகன்று சென்றன. மிக அப்பால் மங்கல இசை ஒலித்துக்கொண்டிருந்தது. அங்கே பெரிய அடுக்கு விளக்குகள் எரியும் ஒளி, ஒளிக்குள் மேலும் ஒளியென எழுந்து தெரிந்தது.

அந்தணர்கள் உரக்கப் பேசியபடி ஒருவரை ஒருவர் உந்தினர். முன்னால் சென்றவர்களை நோக்கி கூச்சலிட்டனர். சிலர் வசைபாடினர். பெரும்பாலானவர்கள் அயல்நிலத்து அந்தணர். உருவாகிவரும் குலங்களில் வேதச்சடங்கு ஒன்றை நம்பி அலைந்தவர்கள். ஆகவே வறுநிலையிலேயே வாழ்வை

கழித்தவர்கள். அவர்களின் கண்களுக்கு நெடுந்தொலைவில் எங்கோ இருந்த கொடைப்பீடம் படவில்லை. ஆகவே பதற்றம் கொண்டனர். கொடை பெற்றுக்கொண்டவர்கள் மறு பாதையினூடாக வெளியே சென்றனர். “கொடுக்கிறார்களா? மெய்யாகவே இங்கேதானா?” என்று ஒருவர் கேட்டார். “இங்குதான்” என்று ஒருவர் மறுமொழி சொன்னார்.

கேட்டவர் நிறைவடையாமல் காலில் எம்பி நுனிவிரலில் நின்று “ஒன்றும் தெரியவில்லை. இது வேறு எதற்காகவாவது அமைந்த நிரையாக இருக்கலாம்...” என்றார். “இங்குதான், வேறெதற்கு இங்கே நிரைவகுக்கப்போகிறார்கள்?” என்றார் மறுமொழி சொன்னவர். அவர் பதற்றத்துடன் “ஒன்றும் தெரியவில்லை. ஒருவேளை வேறெங்காவது கொடுக்கப்பட நாம் இங்கே நின்று பொழுதை வீணடிக்கிறோம் போலும்” என்றார். அவரே அருகே நின்ற ஒருவரிடம் “உத்தமரே, இது அந்தணர்களுக்கு பெருங்கொடை அளிக்கப்படும் இடம் அல்லவா?” என்றார். “ஆம், இவ்விடம்தான்” என்றார் அவர்.

“இங்கே ஒன்றும் தெரியவில்லை” என்றார் கேட்டவர். “சற்று தொலைவு செல்லவேண்டும்.” இன்னொருவர் மெல்லிய உடலும் நீள்முகமும் கொண்டவர். குழிந்த கண்களுடன் ஒட்டிய கன்னங்களுடன் அன்னம்காணாதவர் போலிருந்தார். “என்ன நிகழ்கிறது அங்கே? கொடுக்கிறார்களா? இந்த நிரை முன்னகரவே இல்லையே?” அவர் ஒன்றும் சொல்லவில்லை. இன்னொருவர் முதியவர். எரிச்சலுடன் “நிரை சற்றுப் பெரியது... இங்கு நின்றால் எல்லை தெரியாது” என்றார். “என்ன கொடுக்கிறார்கள்?” என்றார் மெலிந்தவர். பருத்த உடல்கொண்ட ஒருவர் “என்னவானால் என்ன? கொடுப்பதை

மறுக்கப்போவதில்லை, மேலும் கோரவும் தகுதியில்லை. பேசாமல் நில்லும்” என்றார்.

மெலிந்தவர் படபடப்புடன் “வாங்கியவர்கள் எங்கு செல்கிறார்கள்? அவர்களிடம் உசாவி அறியலாமென்றால் இங்கே அவர்கள் எவருமில்லை” என்றார். “அவர்கள் மறுவழியே வெளியே செல்கிறார்கள்.” முதலில் கேட்டவர் “அவர்கள் சுற்றுவழியாக மீண்டும் இங்கு வந்து நின்றிருக்க மாட்டார்களா என்ன?” என்றார். “அவ்வாறு எவரும் இங்கு செய்வதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் மூதாதையரையும் குலத்தொழிலையும் எண்ணி உறுதிகொண்ட பின்னரே பொருள் பெறுகிறார்கள்.” “நாம் வேதம் சொல்லவேண்டுமோ?” என்றார் மெலிந்தவர். எவரும் மறுமொழி சொல்லவில்லை.

அவர் அமைதியிழந்து வேட்கைகொண்ட கோழிபோல கீழ்த்தாடை பதைக்க சுற்றும் நோக்கி “இத்தனை பெருந்திரள்... இவர்களுக்கெல்லாம் கொடுத்தபின் நாம் செல்லும்போது இல்லை என்று சொல்லிவிடப்போகிறார்கள்” என்றார். மீண்டும் எட்டிப்பார்த்து “இத்தனைபேர் இருப்பதை கணக்கிட்டு பொருளை பங்கிடுகிறார்களா? கருவூலத்தில் உள்ளது என்று எண்ணி அள்ளிக்கொடுத்துவிட்டு இறுதியில் வந்தவர்களை விட்டுவிடப்போகிறார்கள்” என்றார். அவரை பிறர் எரிச்சலுடன் பார்த்தனர். அவர்களும் அந்தப் பதற்றத்தை உள்ளூர கொண்டிருந்தனர் எனத் தெரிந்தது.

“ஆனால் எவருக்கேனும் கொடுக்காமல் விட்டுவிட்டால் அது பழி. அஸ்வமேதம் நிறைவடையாது” என்றார் மெலிந்தவர். பருத்தவர் “இது அஸ்வமேதமல்ல, ராஜசூயம். மேலும் அனைவருக்கும் கொடுத்தாகவேண்டும் என நெறியேதுமில்லை. கருவூலம் ஒழியக் கொடுக்கவேண்டும் என்றுதான் நெறி”

என்றார். மெலிந்தவர் சீற்றம் கொண்டார். “எவர் வகுத்த நெறி அது? கொடுத்தால் அனைவருக்கும் கொடுக்கவேண்டும்... சிலருக்குக் கொடுத்து சிலருக்கு இல்லை என்றால் அவர்கள் வயிறெரிந்து தீச்சொல் இடமாட்டார்களா என்ன?”

சிறிய விழிகள் கொண்ட பருத்து உயர்ந்த அந்தணர் ஏளனம் மின்னும் விழிகளுடன் “நீர் தீச்சொல்லிடுவீரா?” என்றார். “அதாவது நான் இங்கே காலையிலேயே வந்துவிட்டேன். என் தோழர்தான் மடைப்பள்ளிக்குச் சென்று உண்போம் என அழைத்துச் சென்றார். அங்கிருந்து எங்களை வேதம் ஓத அழைத்துச் சென்றுவிட்டார்கள். வருவதற்குள் பிந்திவிட்டது. வேதம் ஓதுவது பிழையா? அதன்பொருட்டு எங்களுக்கு பொன் மறுக்கப்படுமென்றால்...” அவர் கையை மேலே தூக்கினார். “தெய்வங்கள் மீண்டும் வஞ்சம் கொள்கின்றன என்றே பொருள். நடுக்கடலிலும் நாய் நக்கியே குடிக்கமுடியும் என்பார்கள்...”

அவருடைய தொண்டை இடறியது. “நான் என் கையால் இதுவரை பொன்னை தொட்டதில்லை. ஒருமுறைகூட... மெய்யாகவே பொன்னை தொட்டதில்லை. எனக்கு மனையாட்டி குடி என ஏதுமில்லை... வேதம் மட்டுமே வாய்ப்பொருள் என இதுவரை வாழ்ந்தேன்... மிக நம்பி இங்கே வந்தேன்.” அவர் அழத்தொடங்கினார். “நான் எங்கு சென்றாலும் துரத்திவருகிறது என் வறுமை. அது என் ஊழ். அதை நான் மீறமுடியாது. இப்பிறவி இவ்வண்ணமே ஒழியும்போலும்.” அவர் மேலாடையால் முகத்தை துடைத்துக்கொண்டார்.

ஒருவர் தீக்ஷணனிடம் “அவர் யார்?” என்று சார்வாகரை சுட்டிக் காட்டி கேட்டார். “அறியேன்” என்று அவன் சொன்னான். “அவருக்கு மாணவனாக உள்ளே வந்தீர் அல்லவா?” என்றார் அவர். “அல்ல, நான் தனியாகத்தான் வந்தேன்” என்று தீக்ஷணன்

சொன்னான். “அவர் ஒரு முனிவர்” என்றான் ஓர் இளைஞன். “அவன் எப்படி இந்த நிரையில் வந்தான்? அவனிடம் மட்கிய ஊனின் கெடுமணம் அல்லவா எழுகிறது?” என்றார் ஒரு முதியவர். “அவர்கள் அவ்வாறுதான்... புறநிலங்களில் தங்குபவர்கள்” என்றான் இளைஞன். “அவர்களின் நெறிகளென்ன என்று நாம் அறியோம். பாரதவர்ஷத்தில் துறவுக்கும் தவத்திற்கும் எல்லையில்லா வழிகள் உண்டு என்பார்கள்.”

“அதற்காக ஆடையில்லாதவனை எப்படி அகத்தே ஒப்பினார்கள்?” என்றார் முதியவர். “இது மாமங்கல நிகழ்வு. மங்கலங்களில் முதன்மையானது ராஜசூயம்.” இளைஞன் “ஆனால் அவர் புறநெறி சார்ந்த முனிவர். கடுநோன்பு கொண்டவர். அஸ்தினபுரியில் இன்று அனைவருக்கும் நுழைவொப்புதல் உண்டு. அனைத்து நிலை முனிவர்களுக்கும் இந்நிரையில் இடமுண்டு” என்றான். முதியவர் “அவன் இரவலன்... உளநிலை மயங்கியவன். அன்றி களிமகன்” என்றார். “சார்வாகர்கள் அவ்வாறுதான் இருப்பார்கள்” என்று இளைஞன் சொன்னான். “சார்வாகர்களா? யார் அவர்கள்?” என்றார் முதியவர். “நானும் இங்கு வந்துதான் கேட்டேன். அவ்வண்ணம் ஒரு சாரார் இருக்கிறார்கள். வேதமறுப்பாளர்கள், வேள்விமறுப்பாளர்கள், அரசுமறுப்பாளர்கள், குலமறுப்பாளர்கள்.”

கிழவர் திகைப்புடன் சூழ நோக்கிய பின் நம்பிக்கையின்றி “அவ்வண்ணம் ஒரு தரப்பா? அசுரர்களா?” என்றார். “வேதங்களில் அவர்களும் உண்டு என்கிறார்கள். அவர்களின் முதலாசிரியர் பிருஹஸ்பதி முனிவர். அவர்களின் நெறிவந்த பலர் உண்டு என்கின்றனர் புலவர்” என்றான் இளையவன். “அவர்களின் கொள்கை என்ன?” என்றார் முதியவர். “அவர்கள் நான்கு விழுப்பொருட்களை மறுக்கிறார்கள். இன்பம் ஒன்றே

விழுப்பொருள் என்கிறார்கள்” என்றான் இளையவன். அவர் வெறுப்புடன் உரக்க நகைத்து “அவன் கூறும் இன்பம் என்பது காட்டுப்பன்றிகளுடன் சேற்றில் உழல்வதுபோலும்” என்றார். “வேதவெறுப்பும் ஒரு மெய்யறிவுத்தரப்பு என்று எப்போது ஆயிற்று இங்கே? எனில் இனி வேள்வியை அழிக்கும் அரக்கர்களின் தரப்பும் இங்கு வந்து அவையமர்ந்திருக்குமா என்ன?”

நிரையின் முன்பக்கம் ஓசைகள் எழுந்தன. பல அந்தணர்கள் சார்வாகரை நோக்கி கூச்சல் எழுப்பினர். சிலர் திரும்பி நோக்கி காவலரை அழைத்தனர். காவலர்களும் சார்வாகரை நோக்கி திகைத்தனர். ஆனால் அவரை வெளியேற்ற முடியாது என்றும் உணர்ந்தனர். அங்கிருந்து ஒருவர் முன்னகர்ந்தே வெளியேற முடியும். ஆகவே “வாயை மூடுங்கள்... அந்தணர்கள் அமைதியாகுக! அவர் முனிவர். அரசரின் விருந்தினர்” என்று காவலர்தலைவன் கூவினான். “மறுத்துரை செய்வது அரசப்பழி... அதற்கு இங்கு தண்டனை உண்டு.” அவன் பலமுறை அவ்வாறு கூவியபோது அந்தணர்கள் அடங்கினர். சினத்துடன் ஒருவரிடம் ஒருவர் உறுமலாகவும் முனகலாகவும் பேசிக்கொண்டனர். அந்த ஓசைகள் இணைந்து ஒற்றை முனகல் என அங்கே நிறைந்திருந்தன.

சார்வாகர் விழிகளில் இருந்து மறைந்துவிட்டிருந்தார். தீக்ஷணன் தவிப்புடன் நோக்க திரளுக்கு அப்பால் ஒளி பெரிதாகத் தெரிந்தது. அங்கே தொங்கிய வெண்பட்டுத் திரைகளெல்லாம் தழல்கள் என காற்றில் நின்றாடின. ஒரு சிறு மேடேறி திரும்பி அங்கே சென்றுகொண்டிருந்தது நிரை. தீக்ஷணன் ஒருகணம் எண்ணினான், உடனே குனிந்து பிறர்

கால்களினூடாக ஊடுருவிச் சென்றான். "ஏய், யாரது? எங்கே செல்கிறாய்?" என்றெல்லாம் கூச்சல்கள் கேட்டன. அவன் எழுந்தபோது அவனுக்கு முன்னால் சார்வாகர் நின்றிருந்தார். அவன் இருவரை விலக்கி அவருக்குப் பின்னால் சென்று நின்றான். அவர் அவ்வண்ணம் அவன் அருகே வந்ததை உணரவில்லை. நிமிர்ந்த தலையுடன் தனக்கு முன்னால் நின்றிருந்த இரு இளமுனிவர்களைக் கடந்து அரசமேடையை நோக்கி சென்றார்.

வெண்பட்டுத் திரைச்சீலைகள் சூழ வெண்பட்டாலான கூரைக்குவையுடன் அமைக்கப்பட்டிருந்தது அரசமேடையின் பந்தல். பொன் என மின்னிய பித்தளை விளிம்புகள் கொண்ட எடைமிக்க பீடங்களை அடுக்கி அதை சற்றே மேலெழுப்பியிருந்தனர். அதன்மேல் யுதிஷ்டிரன் அருமணிகளும் பொற்செதுக்குகளும் கொண்ட பீதர்நாட்டு பளிங்குக்குமிழ் விளக்குகளின் செவ்வொளியில் அனல் என மின்னிய அரியணையில் அமர்ந்திருந்தார். அதில் அருமணிகள் விழிகள் என நோக்கு கொண்டிருந்தன. அவருக்கு இருபக்கமும் பீமனும் அர்ஜுனனும் நகுலனும் சகதேவனும் நின்றிருந்தனர். அவர்களுக்கு வலப்பக்கம் யுயுத்ஸு பதற்றத்துடன் நின்று பின்பக்கம் நோக்கி ஆணைகளை இட்டான். முன்பக்கம் நோக்கி கைகளை வீசி கூட்டத்தை கட்டுப்படுத்தினான்.

யுதிஷ்டிரன் மெல்லிய பொற்கம்பிகளால் முடையப்பட்டு அருமணிகள் பதிக்கப்பட்ட மணிமுடியை அணிந்திருந்தார். அதுதான் ஹஸ்தியின் மணிமுடி என தீக்ஷணன் எண்ணிக்கொண்டான். அருமணிகள் பதித்த நகைகள் அவர் உடலெங்கும் மின்னிக்கொண்டிருந்தன. அவரை அவன் சிலமுறை சாலைகளில் தேரில்செல்பவராகக் கண்டதுண்டு.

ஒவ்வொருமுறையும் துணுக்குறலையே அடைவான். அனைத்திலிருந்தும் உளம்விலகிய, எரிச்சல்கொண்ட, முதியவர் என்று தோன்றும். அரசர் என்றல்ல குடித்தலைவர் என்றுகூட அவரை எண்ணிக்கொள்ள முடியாது. அப்போது அவர் பேரரசர் எனத் தோன்றினார். அவரை அவ்வண்ணம் காட்டுவது அந்த அருமணிகளும் நகைகளுமா? எனில் அரசர் என்பது அவைதானா?

யுதிஷ்டிரனின் பின்னால் அமர்ந்து சூதர்கள் மங்கல இசையும் வாழ்த்தொலியும் எழுப்பினர். நிரையாகச் சென்றவர்கள் மங்கல இசை எழுந்ததும் சென்று அவர் முன் நின்றனர். அவர்களுக்கு மும்முறை கைநிறைய அள்ளி பொன்னும் வெள்ளியும் அளித்து கைகூப்பினார். அவர்கள் அதை தோல்கிழியிலோ பட்டுச்சால்வையிலோ பெற்றுக்கொண்டு அவரை வாழ்த்தி நல்லுரை கூறினர். உடனே பின்னின்று சூதர்கள் வாழ்த்தொலி எழுப்பினர். அதைக் கேட்டதும் பரிசில்பெற்றவர் புறம் காட்டாமல் பின்னடி வைத்து விலகி அப்பால் இறங்கிச் செல்லவேண்டும். அவர்கள் கீழிறங்க இரு வீரர்கள் உதவினர். அவர்கள் அவ்வண்ணமே பட்டுத்திரைக்குள் மறைந்து இயல்பாக நடந்து அகல வழி அமைக்கப்பட்டிருந்தது. அப்பால் வேறொரு மண்டபத்தில் பேரரசி திரௌபதி பெண்களுக்கு கொடை வழங்கிக்கொண்டிருந்தாள் என தீக்ஷணன் அறிந்தான். அங்கு இங்கிருப்பதைவிட பலமடங்கு பெரிய நிரை இருந்துகொண்டிருக்கும்.

பரிசில்பெற்ற அந்தணர் ஒருவர் மேலும் பல சொல்ல விழைந்தார். அவர் வாழ்த்தியதும் இசையும் வாழ்த்தொலிகளும் எழுந்து செவிமூடின. அவர் உரக்க உரக்க சொல்ல முயல அமைச்சர்கள் இருவர் அவர் கைபற்றி மெல்ல

விலக்கினர். அவர் கண்ணீரும் பதைப்புமாக ஏதோ சொன்னபடியே பின்னடி வைத்து பட்டுத்திரைக்குள் மூழ்கி மறைந்தார். வந்தவர்களிடமிருந்து தீய தெய்வங்கள் யுதிஷ்டிரனை அணுகாமலிருக்கும் பொருட்டு அந்த மண்டபத்தின் கூரைகளில் பல்வேறு செப்புத் தகடுகளும் மூலிகைவேர்களும் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அங்கே ஒரு மூலையில் மூலிகையிட்ட நீர்க்கலம் கொதித்தது. இன்னொரு மூலையில் குந்திரிக்கம் புகைந்தது. அக்காட்சியை செவ்வொளி பரவிய மென்புகையும் ஆவியும் மறைத்து விண்ணிலென திகழச்செய்தன.

யுதிஷ்டிரன் முகம் மலர்ந்திருந்தார். அந்தச் செயலின் முடிவில்லாத சுழற்சி அவருள் ஊழ்கநிலையை உருவாக்கியிருந்தது எனத் தோன்றியது. கனவிலென அவர் அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அவ்வண்ணம் பற்பல ஆண்டுகள் அவரால் அள்ளிக்கொடுத்தபடியே இருக்கமுடியும் எனத் தோன்றியது. அருகணைந்தபோதுதான் தீக்ஷணன் அப்பால் நீண்ட தெய்வபீடம் அமைக்கப்பட்டு அங்கே ஹஸ்தி முதலிய முன்னோரின் நினைவாக செம்பட்டு சுற்றப்பட்ட பொற்குடங்களும் உடைவாள்களும் மாலையிடப்பட்டு பூசெய்கை இயற்றப்பட்டு கொலுவைக்கப்பட்டிருப்பதைக் கண்டான்.

இசையொலி எழ ஏவலன் கையசைத்து சார்வாகரை மேலே வரச்சொன்னான். அவரைக் கண்டதும் பீமனின் முகத்தில் ஒரு மெய்ப்பாடு எழுந்தது. அது என்னவென்று எண்ணக்கூடவில்லை. தீக்ஷணன் எல்லைகடந்து அவர் அருகே செல்லமுயன்றான். ஆனால் வீரன் அவனை கைநீட்டித் தடுத்தான். யுதிஷ்டிரன் முகத்தில் எந்த மாறுதலும்

தெரியவில்லை. அவர் சார்வாகரை அறியவே இல்லை. வழக்கமான புன்னகையுடன் வணங்கி கைநிறைய பொருளை அள்ளி நீட்ட சார்வாகர் தன் வெறுங்கையை நீட்டினார். யுதிஷ்டிரன் ஒருகணம் திகைத்தபின் அந்தக் கையில் பொருளை வைத்தார். அர்ஜுனன் முன்னகர்ந்து ஏதோ சொல்ல முயல சகதேவன் அவன் கையை தொட்டான். சார்வாகர் அந்தப் பொருளை மூக்கருகே கொண்டுசென்று முகர்ந்துவிட்டு தரையிலிட்டார்.

யுதிஷ்டிரன் திகைப்புடன் “என்ன?” என்றார். கீழே நோக்கி “ஏன் கீழே போட்டீர், உத்தமரே?” என்றார். “அவற்றில் குருதி நாறுகிறது” என்றார் சார்வாகர். பீமன் முன்னகர்ந்து கைநீட்ட அவனை விலக்கிவிட்டு யுதிஷ்டிரன் மாறாப் புன்னகையுடன் “வேறு பொருள் தருகிறேன், கொள்க!” என்றார். சார்வாகர் கைநீட்ட இன்னொரு கலத்திலிருந்து பொன்னை அள்ளி அவர் கைகளில் இட்டார். அவர் அதையும் முகர்ந்து நோக்கி முகம் சுளித்து கீழே போட்டார். யுதிஷ்டிரன் முகத்தில் மிகச் சிறிய சுளிப்பு ஒன்று தோன்றியது. பீமன் “யார் இவர்? எவர் இவரை உள்ளேவிட்டது?” என்றான். சகதேவன் “மூத்தவரே” என்றான். யுதிஷ்டிரன் புன்னகை மீண்டு “பிறிதொன்று பெற்றுக்கொள்க, முனிவரே!” என இன்னொரு குவையிலிருந்து அள்ளினார்.

“யுதிஷ்டிரா, குருதி நாறாத பொன் உன் கருவூலத்தில் உண்டா?” என்றார் சார்வாகர். யுதிஷ்டிரனின் கைகள் நடுங்கின. அவர் முகம் துடிப்பதை தீக்ஷணன் கண்டான். அவர் கையிலிருந்து பொன்னும் வெள்ளியும் கீழே சிதறின. ஒரு கால் செயலிழந்தவர்போல அவர் சரிந்து விழப்போக யுயுத்ஸு அவரை பிடித்துக்கொண்டான். பீமன் உரத்த குரலில் “யார் இவர்? பாரதவர்ஷத்தின் பேரரசரிடம் இப்படிப் பேச

ஒப்புதலளித்தவர் எவர்? இத்தருணத்தின் மங்கலத்தை அழிக்க இவரை ஏவியவர் எவர்?” என்று கூவினான். அர்ஜுனன் சீற்றத்துடன் முன்னால் வந்து “கொண்டுசெல்லுங்கள் இவரை!” என்று ஆணையிட்டான். யுயுத்ஸு சற்று தடுமாறிவிட்டான். அவன் என்ன செய்வதென்று அறியாமல் அப்பால் நின்றிருந்த சுரேசரை நோக்க அவர் அவனை நோக்கி வந்தார்.

ஆனால் அக்கணத்தில் தனக்குப் பின்னால் செறிந்திருந்த அந்தணர் நிரையில் ஓர் உடைவு உருவாவதை தீக்ஷணன் கேட்டான். சீற்றம்மிக்க ஓலங்களுடன் அந்தணர் பெருகி எழுந்து வந்து சார்வாகரை பிடித்துக்கொண்டனர். அவரை அள்ளித் தூக்கிக்கொண்டு சென்றனர். அவரை ஒரு மாபெரும் யானையின் துதிக்கை சுழற்றி எடுத்து கொண்டுசெல்வதுபோலத் தோன்றியது. ஓலங்களும் அலறல்களுமாக அதுவரை அங்கே நிறைந்திருந்த இசை சிதறி அழிந்தது. தீக்ஷணன் கைநீட்டிக் கூச்சலிட்டபடி அந்தத் திரளில் பாய்ந்து சார்வாகரை நோக்கி செல்ல முயன்றான். ஆனால் அதன் விளிம்பு விலகு சுழல் என அவனை தூக்கித் தூக்கி அப்பால் வீசியது. அவன் வெறியுடன் அலறியபடி எழுந்து பாய்ந்து மீண்டும் எங்கோ சென்று விழுந்தான். “நெய்! நெய்!” என எவரோ கூவினார்கள். அச்சொல் தீக்ஷணன் எண்ணத்தை வந்து தொடுவதற்கு முன்னரே உடல் உறையச் செய்தது.

விளக்குகளுக்கு ஊற்றுவதற்காக வைக்கப்பட்டிருந்த பெரிய நெய்க்குட்டுவம் காற்றில் சருகென எழுந்தது. கைகளின் அலைகளினூடாக மிதந்துசென்றது. அவன் நெய்யின் குமட்டும் வாடையை உணர்ந்தான். தீ பற்றிக்கொள்ளும் ஓசை. ஒரு பெருநாகம் இரையைக் கவ்வும் ஒலி அவ்வண்ணம்தான் இருக்கும்போலும். மிக மெல்லிய ஒலி. ஆனால்

அனைவருக்கும் அது கேட்டது. கூச்சலிட்டபடி அவர்கள் சிதறி நாற்புறமும் விலகினார்கள். உடலெங்கும் அனலெரிய சார்வாகர் கற்தரையில் கைகளை விரித்தபடி சுழன்றார். அவரிடமிருந்து ஓசையேதும் எழவில்லை. ஒரு தொன்மையான தெய்வச்சடங்குபோல அவர் சுழன்று சுழன்று எரிகொண்டார்.

தீ தன் தழல்கிழிசல்களை உதறிக்கொண்டு காற்றில் எழுந்து புகை விசிறியது. சார்வாகரின் உடலில் சுற்றப்பட்டிருந்த நெய்யில் நனைந்து ஊறிய மரவுரியிலிருந்து நீலநிறமாக கனல் கிளம்பிக்கொண்டிருந்தது. அந்தணர் பலர் கண்களையும் செவிகளையும் மூடிக்கொண்டு வெறிகொண்டு கதறினர். சிலர் கால் தளர்ந்து கற்தரையில் விழுந்தனர். அவர்கள்மேல் கால்தடுக்கி பிறர் விழுந்தனர். கையூன்றி எழுந்த தீக்ஷணன் கால் தளர்ந்து பின்னால் விழுந்தபோது பிற உடல்கள் அவனை தாங்கிக்கொண்டன. அவன் புரண்டு எழுந்து நோக்கியபோது அந்தணர் சிலர் வெறிக்கூச்சலிட்டு கைவீசி நடனமிடுவதை கண்டான். சிலர் அப்பாலிருந்து மேலும் நெய்க்கலங்களைக் கொண்டு வந்து எரிந்துகொண்டிருந்த சார்வாகரின் மேல் ஊற்றினார்கள். களிவெறிகொண்ட முகங்கள். பித்தெழுந்த விழிகளும் வலிப்புகொண்டது போன்ற சிரிப்புகளுமாக அவை அந்த அனலில் அலையடித்தன.

யுயுத்ஸுவும் படைவீரர்களும் நீண்ட கழிகளை வீசியபடி அந்தத் திரளைப் பிளந்து அருகணைந்தனர். படைவீரர்கள் அந்தணர்களை விலங்குகளை என மூங்கில்கழிகளால் அறைந்து விலக்கினர். வெறிகொண்டு ஆடிக்கொண்டிருந்தவர்கள் அந்த அடிகளை வாங்கிக்கொண்டு தலையிலும் முகத்திலும் குருதி வழிய கூத்தாடினர்.

விழுந்தவர்கள் எழுந்து ஓடினர். அடித்து அடித்து விலக்கி வீரர்கள் சார்வாகரை அணுகியபோது அவர் கரிய கற்தரையில் உடல் உருகிப் படிந்திருக்க நீலச்சுடர்கள் வெடித்து வெடித்து எழ அசைவில்லாது எரிந்துகொண்டிருந்தார். சூழ வழிந்து பரவியிருந்த நெய் எரிந்தபடி அனலென வழிந்தது. யுயுத்ஸு ஓடிவந்து குனிந்து சார்வாகரை நோக்கினான். பின்னர் திரும்பி கைகாட்ட அவனுடைய செய்தியை ஏதோ கொம்பு ஒலிபெயர்த்தது.

வெறியாட்டமிட்ட அந்தணர்கள் ஒவ்வொருவராக இருண்ட வானிலிருந்து அவர்களை கட்டித்தூக்கியிருந்த சரடுகள் அறுந்து அறுந்து கைவிட நிலத்தில் விழுந்தனர். சிலர் கைகளை ஊன்றி வானை நோக்கி விம்மி விம்மி சிரித்தனர். சிலர் கேவி அழுதனர். சிலர் மண்ணில் முகம்படிய படுத்தனர். எஞ்சியோர் எழுந்து விலகி ஓட அரண்மனை முற்றம் நீர் விலகிய குளத்தின் அடிப்பரப்பு என தெரிந்தது. மட்கிய மரங்கள், பாறைகள் என மானுடர். கொம்போசை எழுந்தது. புரவிகளின் குளம்படிகள் அணுகி வந்தன.

தீக்ஷணன் கையூன்றி எழுந்து நின்றான். உடல் தளர இருமுறை தள்ளாடி விழுந்தான். மீண்டும் எழுந்து நின்றான். குதிரைகளின் உடல்கள் காட்சியை மறைத்தன. எங்கோ பெருமுரசம் ஒலித்துக்கொண்டிருந்தது. அவன் கால்களை விரித்து நின்று சார்வாகரை பார்த்தான். அவர் உடல் உருவழிந்துவிட்டிருந்தது. தசை உருகி எரிந்துகொண்டிருந்த செந்தழலுக்குள் மண்டையோடு தெரிந்து மறைந்தது. அவனுக்கு ஒருகணத்தில் குமட்டலெழுந்து வாய் நிறைந்தது. உடல் உலுக்க குனிந்து வாயுமிழ்ந்தான். மீண்டும் மீண்டும்

வாயுமிழ்ந்து நிமிர்ந்தபோது அவன் விழிகளிலிருந்து நீர் வழிந்துகொண்டிருந்தது.

தள்ளாடும் காலடிகளுடன் அவன் நடந்தான். அவன் அகம் சிலைத்திருந்தது. மக்கள் வெவ்வேறு சிறு குழுக்களாக திரண்டுவிட்டிருந்தனர். புரவிவீரர்கள் அவர்களை மீண்டும் நிரைகளாக ஆக்கும்பொருட்டு ஆணைகளை கூவிக்கொண்டிருந்தனர். தீக்ஷணன் தன் காலடியில் ஏதோ தட்டுப்படுவதை உணர்ந்தான். நாகம் என கால் சொல்ல அகம் துணுக்குற்றது. குனிந்து நோக்கியபோது அது சார்வாகரின் யோகதண்டு எனத் தெரிந்தது. அவன் அதை தன் கையில் எடுத்துக்கொண்டான்.

# களிற்றியானை நிரை - 80

### பகுதி ஒன்பது : கலியன்னை

ஆதன் முதற்புலரியிலேயே விழித்துக்கொண்டான். அவன் ஒரு கனவு கண்டான். விழித்தும் அக்கனவிலேயே இருந்தான். மீண்டும் அதிலேயே மூழ்கினான். அதில் அவன் ஒரு செம்மண்சாலையினூடாக நடந்து சிற்றூர் ஒன்றை நோக்கித் திரும்பும் சிறிய பாதையைக் கண்டு தயங்கி நின்றான். பின்னர் அந்த ஊரை நோக்கி திரும்பினான். மரக்கூட்டங்களுக்குமேல் எழுந்து தெரிந்த குன்றின் முடியை புதர்களுக்கு அப்பாலிருந்து மெல்ல தலைதூக்குவதாகவே எண்ணினான். மிகப் பெரிய ஒரு விலங்கு. அவன் அதையே நோக்கிக்கொண்டிருந்தான். அதை

முன்னரே கண்டிருக்கிறோம் எனத் தோன்றியது. பின் அதை நோக்கி அவன் நடந்தான்.

அந்தக் குன்றை அடைந்து அதன் சரிவுகளில் மேலேறிச் சென்றான். செல்லும் வழியெங்கும் சித்தர்களின் நிறைவிடங்கள் தெரிந்தன. அவன் மேலே சென்றபோது சோறு வேகும் மணத்தை உணர்ந்தான். அப்பால் மரத்தடியில் ஒரு கலத்தில் சோறு வெந்துகொண்டிருந்தது. அவன் அதை நோக்கி சென்றான். அனல் அப்போதும் எரிந்துகொண்டிருந்தது. கொதிக்கும் அன்னநீர் மூடியைத் தூக்கி சீறியது. அவன் விழிசுழற்றி நோக்கியபோது அப்பால் இரு கால்களை கண்டான். புதர்களுக்கு நடுவே ஒருவர் விழுந்து கிடந்தார். மிக முதியவர். அருகணைந்து அவர் முகத்தைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். வெண்தாடியும் மீசையும் நீள்சடைகளும் கொண்டிருந்தார்.

அவனை சுக்ரன் எழுப்பினான். “பூசகரே, செய்தி... செய்தி வந்துள்ளது” என்றான். அவன் எழுந்து அமர்ந்தான். அரைநாழிகைப் பொழுதுகூட அவன் துயில்கொண்டிருக்கவில்லை. “என்ன? யார்?” என்றான். சுக்ரன் “அரண்மனையில் இருந்து பேரரசி இங்கே வழிபட வரவிருக்கிறார். ஆணை வந்துள்ளது” என்றான். “பேரரசியா? இங்கா? அவ்வண்ணம் மரபில்லையே?” என்றான் ஆதன். “இந்த ஆலயமே மரபு மீறியமைந்தது அல்லவா? கலியின் ஆலயத்திற்கு அன்றாடப் பூசெய்கை எங்காவது உண்டா?” என்றான் சுக்ரன். “அவர் வருவது நன்று. இனி இங்கே ஒருநாளும் ஆளோயாது. எழுக, ஒருங்குக!”

ஆதன் “எவர் வந்து சொன்னார்கள்?” என்றபடி எழுந்துகொண்டான். கரிய மேலாடையை சீரமைத்தபடி அவன்

மண்சரிவில் இறங்கி ஆலயமுற்றம் நோக்கி சென்றான். ஆலயமுற்றம் மரங்கள் வெட்டப்பட்டு புதர் களையப்பட்டு பலகைகள் பரப்பி பெரிதாக்கப்பட்டிருந்தது. கரிய கற்களால் ஆன ஆலயத்தின்மேல் படர்ந்திருந்த கொடிகள் நீக்கப்பட்டிருந்தன. அங்கே ஒவ்வொருநாளும் பல்லாயிரம்பேர் வந்தனர். அவர்களுக்கான குடில்கள் கீழ்ச்சரிவெங்கும் அமைந்தன. குடிநீர் ஊற்றுக்கள். இளைப்பாறுவதற்கான மஞ்சங்கள். அவர்கள் வரத்தொடங்கியபோதே அங்கே இருந்த நரிகளும் ஓநாய்களும் கீரிகளும் விலகிச் சென்றுவிட்டன.

ஆனால் காகங்கள் மரங்களின்மேல் செறிந்தே இருந்தன. அவை பிற இடங்களைப்போல கீழே நோக்கி கூச்சலிடுவதில்லை. இலைகளுக்குள் கரிய நிழல் என அவை அமைந்திருந்தன. விழிகள் கரிய மணிகள் என துறித்து நோக்கின. பெரும்பாலும் அவை ஓசையே எழுப்புவதில்லை. சருகுகள் உதிர்வதுபோல மண்ணிறங்கி அன்னமும் பிறவும் உண்டு மேலெழுந்தன. அவற்றின் ஓசையின்மையே அவ்விடத்தின் மீதான அச்சத்தையும் ஈர்ப்பையும் உருவாக்குவதாக இருந்தது.

அரண்மனையிலிருந்து வந்தவனை ஆதன் அறிந்திருந்தான். குள்ளமான உருவம்கொண்டவனாகிய ஒற்றன் யாமன் அவனைக் கண்டதும் அருகே வந்து “எனக்கும் சற்றுமுன்னர்தான் செய்தி வந்தது. பேரரசி பெருங்கொடையாட்டு முடிந்து ஆடைமாற்ற அணியறைக்கு வரும் வழியில் என்னை அழைத்து ஆணையிட்டார். பெருநிகழ்வாக இது அமையவேண்டியதில்லை, ஆகவே அறிவிப்பும் திரளும் இருக்காது. ஆனால் எல்லா ஒருக்கங்களும் முழுமை பெற்றிருக்கவேண்டும். ஆகவே

விரைந்து வந்தேன்” என்றான். ஆதன் “இங்கே தனியாக ஏதும் செய்யவேண்டியதில்லை. இங்குள்ள சடங்குகள் மிக எளியவை” என்றான். “பேரரசி வரும்போது மக்கள்திரள் இருக்கலாகாது. இப்போதே திரளை நிறுத்திவிட்டிருப்பார்கள். அதற்கான ஆணை சென்றுவிட்டது” என்றான் யாமன்.

ஆதன் “அங்கே ஏதோ விரும்பாதன நிகழ்ந்தது என்று கேட்டேன்” என்றான். “ஆம், ஒரு சார்வாகர். அவர் நிகழ்வில் ஒரு மங்கலமின்மையை நிகழ்த்த விழைந்தார். அதை அவர் விழைந்தபடி அந்தணர் நிகழ்த்தி முடித்தனர்” என்றான் யாமன். “அரசர் மயங்கி விழுந்துவிட்டார். ஆனால் அதை ஈடுகட்டிவிட்டனர். அவர் எழுந்து வரும்வரை இளையோர் பெருங்கொடையை நிகழ்த்தினர். இளைப்பாறிய பின் அரசரும் வந்து சேர்ந்துகொண்டார். ஆனால் அவர் நோயுற்றிருந்தார் என்று எனக்குப்பட்டது.” ஆதன் அவனை நோக்காமல் தவிர்த்து தன் இடைப்பட்டையைக் கட்டியபடி “அரசி நிலையழிந்துள்ளாரா?” என்றான்.

“இல்லை, உண்மையில் அரசி அச்செய்தியை அறிந்திருந்தாரா என்றே ஐயம் தோன்றியது. அவரிடம் அது சொல்லப்பட்டபோது ஒருகணம் கூட அவர் விழிதாழ்த்தவில்லை. அவர் செயலில் சிறு தயக்கம்கூட நிகழவில்லை.” ஆதன் ஒன்றும் சொல்லவில்லை. “ஆனால் அவர் இங்கு வர முடிவெடுத்தது அதனாலாக இருக்கலாம்” என்று யாமன் தொடர்ந்தான். “அவருக்கு இன்று பல பணிகள் உள்ளன. முதற்கதிர் எழுவதற்குள் எல்லா ஆலயநெறிகளும் முடிந்து அவையெழுந்தருளவேண்டும்... இன்று வேள்விதொடக்கம்.” ஆதன் “எனில் அவர் உடனே கிளம்பியாகவேண்டும்” என்றான். “அவர் வந்துகொண்டிருக்கிறார்” என்றான் யாமன். “அறைக்குச்

சென்று அணிகளைக் களைந்த பின் வரவேண்டும். இங்கே எவரும் பொன்னோ மணியோ பட்டோ அணிந்து வரலாகாது” என்று ஆதன் சொன்னான்.

“தென்னவரே, அரசி திரௌபதி அரியணை அமர்ந்தபோதும் அணிகளின்றியே இருந்தார்” என்று யாமன் சொன்னான். “அரியணை ஏற அவர் தன் அறையிலிருந்து வெளியே வந்தபோது பேரரசிக்கு இளமை திரும்பிவிட்டதுபோல் தோன்றியது. என் விழிமயக்காக இருக்கலாம். ஆனால் முப்பதாண்டுகள் அகவை குறைந்துவிட்டது போலிருந்தார். முகத்திலிருந்த சுருக்கங்கள் எல்லாம் அகன்றுவிட்டிருந்தன. கன்னங்களிலும் தோள்களிலும் கருங்கல் மெருகு. நடையில் இளமையின் மிடுக்கு. குரல்கூட மாறிவிட்டிருந்தது. அவை எல்லாம்கூட என் கற்பனைகளாக இருக்கலாம், ஆனால் விழிகளில் எழுந்த ஒளி. அது இளமையால் மட்டுமே அமைவது.”

ஆதன் ஆர்வத்துடன் நின்றுவிட்டான். யாமன் தொடர்ந்தான். என்னிடம் பேரரசர் கேட்டார், அரசி எவ்வண்ணம் இருக்கிறார் என்று. நான் அவர் இளமைக்கு மீண்டுவிட்டதை சொன்னேன். அவர் நகைத்து “நன்று! நன்று!” என்றார். “அரசி கிளம்பிக்கொண்டிருக்கிறாரா?” என்று கேட்டார். “கிளம்புகிறார்” என்று நான் சொன்னேன். “அணிசெய்துகொண்டிருப்பார், பொழுதாகும்” என்று சொல்லி உரக்கச் சிரித்தார் அரசர். அரசரை நான் முதல்முறையாக அத்தனை உவகையுடன் பார்க்கிறேன். அவர் எதையோ கொண்டாடிக்கொண்டிருந்தார். அவருடன் இருந்தவர்கள் அந்த மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ளவில்லை. அவர் அதற்குள் இருந்தார்.

அப்போதுதான் பீஷ்ம பிதாமகர் விண்புகுந்த செய்தி வந்தது. அது அவரை சற்று அணையச் செய்தது. யுயுத்ஸு “அது நாம் எண்ணியதுதானே, மூத்தவரே?” என்றார். “ஆம், ஆனால்…” என்றார். “அவர் காத்திருந்த பொழுது” என்று சகதேவன் சொன்னார். நான் பேரரசியைப்பற்றிய ஆணைக்காக காத்து நின்றிருப்பதை அவர்கள் மறந்துவிட்டிருந்தனர். “அமைச்சரை அழைத்துவருக! அவருக்கான நீத்தார்கடன்கள் என்னென்ன என்று அறிந்தாகவேண்டும்” என்றார் அரசர். என்னிடம் திரும்பி “அரசி ஒருங்கியதும் வந்து சொல்” என்றார். நான் தலைவணங்கி வெளியே வந்தேன். அமைச்சர் சுரேசர் ஓடி வருவதைக் கண்டேன்.

அரசியின் அறைக்குச் சென்றபோதுதான் அரசி அணிகளேதுமின்றி, வெண்ணிறப் பருத்தியாடை மட்டுமே அணிந்து குழலை கட்டிச் சரித்து கிளம்பிவிட்டிருப்பதை கண்டேன். ஒரு பொன்துளிகூட உடலில் இல்லை. ஆனால் இளங்கன்னி எனப் பொலிந்தார். அவர் கிளம்பிவிட்டார் என்னும் செய்தியைச் சொல்ல நான் திரும்பி அரசரிடம் சென்றேன். அங்கே சுரேசர் இருந்தார். அரசர் “அரசி ஒருங்கிவிட்டாரா?” என்றார். “கிளம்பிவிட்டார். ஆனால் அணிகளேதும் பூணவில்லை” என்றேன். “அணிகளேதுமின்றியா?” என்றார். அவர் முகம் சுருங்கியது. “ஆம் அரசே, ஒரு பொன்மணிகூட இல்லாமல்” என்றேன். “மணமங்கலத்தைக்கூட நாரில்தான் அணிந்திருக்கிறார்.”

அரசர் என்னை கூர்ந்து நோக்கினார். பின்னர் திரும்பி சுரேசரிடம் “ஆவன செய்க… நான் கிளம்பவேண்டும்” என்றபின் என்னை பார்த்தார். “செல்க” என்றார். திரும்பி சகதேவனிடம் “அனைத்து அணிகளும் வரட்டும்… மாமன்னர் ஹஸ்தி

முதலானவர்கள் அணிந்த அருமணிகள் ஒன்றுகூட குறையலாகாது. இன்று நான் என் மூதாதையரின் முழுவுருவென அரியணை அமர்வேன்” என்றார். நான் திரும்ப வந்தபோது பேரரசி அவைக்குச் சென்றுவிட்டதை அறிந்தேன். பின்னால் சென்று பீஷ்மர் விண்புகுந்த செய்தியை சொன்னேன். அதற்குள் செய்தியுடன் சுரேசரே வந்துவிட்டிருந்தார். பீஷ்ம பிதாமகரின் விண்புகுகையை நகரில் முரசுகள் அறிவிக்கவேண்டும் என்றும், அவர் நிறுவுகை செய்த நூல்களை அஸ்தினபுரி தன் நெறிகளென ஏற்கும் என்றும் அரசர் அறிவித்திருப்பதாக சொன்னார். அரசி இயல்பாக நன்று என்று சொல்லி அவைநோக்கி நடந்தார்.

கீழே கொம்பொலி கேட்டது. யாமன் “அவர்தான், அணுகிக் கொண்டிருக்கிறார்” என்றான். “நான் சென்று அவரை வழிகாட்டி அழைத்துவருகிறேன்” என கிளம்பினான். ஆதன் “நான் திருச்சிலையை ஒருக்குகிறேன்” என்றபடி சென்று கோயிலுக்குள் நுழைந்தான். கலிதேவனின் சிலை நீலப்பட்டாடை அணிந்து விழிகள் நீலத்துணியால் கட்டப்பட்டு அமர்ந்திருந்தது. புதிதாக அதன் காலடியில் இருபுறமும் இரு சிறிய கருங்கற்களாக துரியோதனனும் சகுனியும் நிறுவப்பட்டிருந்தனர். ஆதன் நெய்விளக்குகளை எண்ணைவிட்டு தூண்டினான். சூழ எரிந்த பந்தங்களில் எண்ணை துலக்கும்படி ஏவலர்களுக்கு ஆணையிட்டான். இசைச்சூதர்களை அணுகி வந்து ஒருங்கி நிற்கும்படி கைகாட்டினான். அவர்கள் அப்போதுதான் துயில்கொள்ளும்பொருட்டு அமர்ந்திருந்தனர். துடித்து எழுந்து வந்து நின்றனர்.

அவன் மேலே நின்று நோக்கிக்கொண்டிருந்தான். கீழிருந்து விளக்குகளின் நிரை ஊர்ந்து வந்தது. அது இருளை எரித்துக்கொண்டே வருவதுபோல கற்பனை செய்தான். அங்கிருந்து கொம்புகளின் ஓசையும் ஆணைகளும் எழுந்தன. மையச்சாலையில் வந்த ஒளிநிரை புதிதாக அமைக்கப்பட்ட பாதை நோக்கி திரும்பியது. முகப்பில் அஸ்தினபுரியின் அமுதகலக்கொடியும் இந்திரப்பிரஸ்தத்தின் மின்கொடியும் பாஞ்சாலத்தின் விற்கொடியுமாக மூன்று கொடிவீரர்கள் வந்தனர். தொடர்ந்து பூசனைப்பொருட்களுடன் சேடியர் நிரை. அதன்பின் முழவும் கொம்புமாக சூதர்கள். தொடர்ந்து வந்த திரௌபதியை அவன் நிழலுருவெனக் கண்டான். அந்த அசைவிலேயே அவளிருந்த இளமையை அவனால் உணர முடிந்தது. அவளருகே படைத்தலைவி சம்வகை கவச உடையணிந்து வந்தாள்.

அவர்கள் வளைந்து வளைந்து ஏறிவந்த சாலையில் மேலே வந்தனர். பந்தங்களின் ஒளியை கடக்கையில் திரௌபதி தெரிந்து அணைந்தாள். அவள் உடலில் நகைகள் என ஏதுமில்லை. வெண்ணிற ஆடை, வெண்மேலாடை. முடிந்து கொண்டையாக்கி தோளில் தழைந்த குழல். அவளுடைய காலடிகள் இளம்புரவியின் மிடுக்குடன் இருந்தன. அவள் ஆலயமுற்றத்தை அணுகியதும் ஆதன் கையில் நிறைகலத்துடன் சென்று எதிர்கொண்டான். நீரை மாவிலையால் தொட்டு அவள்மேல் தெளித்து வரவேற்றான். அவள் விழிகள் ஆலயத்தை மட்டுமே நோக்கிக்கொண்டிருந்தன. அங்கே பிறர் இருப்பதையே அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சம்வகை கையசைத்து அவனிடம் பூசனை நிகழட்டும் என ஆணையிட்டாள்.

ஆதன் அவளை ஆலயமுகப்புக்கு அழைத்துச்சென்றான். அவன் கைகாட்டியதும் சூதர் இசை முழக்கினர். அவன் ஆலயத்திற்குள் மண்டியிட்டு நுழைந்து அமர்ந்தான். ஏவற்பெண்டுகள் மலர்த்தாலங்களையும் பூசனைப்பொருட்களையும் அளித்தனர். நீல மலர்கள், அரிசி, கரிய பட்டாடை. அவன் தாலங்களை கலிதேவனின் முன் பரப்பினான். உள்ளிருந்து மலர் கொண்டுவந்து பேரரசியிடம் நீட்டினான். அவள் அதை சம்வகைக்கு கொடுக்கும்படி கண்காட்டினாள். அவன் அளித்த மலரை சம்வகை பெற்றுக்கொண்டாள். அவன் மீண்டும் கருவறைக்குள் நுழைந்து கலிதேவனைப் போற்றும் தொல்பாடலை உரைத்தபடி பூசனையை தொடர்ந்தான்.

கரியவனே, கண்ணற்றவனே

கண்ணே கருவிழியே உடலானவனே

காகக் கொடியும் கழுதை ஊர்தியும்

சிறக்க அமர்ந்திருப்பவனே

எழுயுகத்தோனே, எதிரற்றவனே

அறத்தின் ஊர்தியே

எழுக, எழுக, இங்கெழுக!

எழுக உன் குளம்படிகள்!

எழுக உன் கனைப்பொலிகள்!

எழுக உன் இருள்வண்ண ஒளி!

இந்தப் பொழுதில் எழுக

உன் முடிவிலாத கருணை!

தேவனே,

அருள்கொண்டவனே

நீ அறிவாய்

மானுடரின் எளிமையை

அவர்களின் ஆணவத்தை

விழைவை வஞ்சத்தை

தனிமையை

பிறதெய்வங்கள் உணராத அனைத்தையும்

நீ அறிவாய்

நீயே எங்களுக்கு துணைவன்

எங்களை ஆளும் இறைவன்

எங்களுக்கு பாதையாகுக!

எங்களுக்கு ஒளியாகுக!

எங்கள் வழிச்சொல் ஆகுக!

உடனிருந்து அருள்க!

எளியோரின் எளிமையால்

உன்னை வழிபடுகிறோம்

தீயோரின் தீமைகளை

உனக்குப் படைக்கிறோம்

கீழோரின் கீழ்மைகளால்

உன்னை நீராட்டுகிறோம்

அறிந்த தேவனே

அறியாத தெய்வங்களைவிட அணுக்கமானவன்

நீயன்றி எங்களுக்கு

இன்று உற்றான் எவருமில்லை

எழுயுகத்தோனே

இனி நீயன்றி அடைக்கலம் பிறிதில்லை

அவன் தீயாட்டும் சுடராட்டும் மலராட்டும் காட்டினான். கலிதேவனின் மூடிய விழிகளுக்குக் கீழே என்றும் அவன் காணும் புன்னகையை உணர்ந்தான். சுடர்கொண்டு காட்டும்போது திரௌபதியை நோக்கினான். பந்த வெளிச்சம் மேனிமென்மையில் மிளிர அவள் விழிமூடி கைகூப்பி நின்றிருந்தாள்.

[**களிற்றியானைநிரை நிறைவு]**